13¼ X 16½

J

①

TA VAISN 26.

500 SHEETS

Account Book Paper

Stocked in the following Sizes:—

13¼″ x 16½″	17″ x 27″	18″ x 22½″
22″ x 29″	15⅝″ x 20⅛″	

H12 T2218

No complaint concerning this ream will be
the Mills and the consignment is kep

No. 1.

S. Bhashyam Aiyangar

Singaperumal Koil

9.6.30

Price 5.12.0

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

பெரிய திருமொழி

க, உ, ௩, பத்துக்கள்.

இந்த க்ரந்தம்

பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளையருளிச்செய்த

வ்யாக்யாநத்துடனும்,

அப்பு அரும்பதத்துடனும்,

உரையுடனும்,

தர்க்க தீர்த்தரான ஸ்ரீமான்

சிங்கப்பெருமாள்கோவில்-மாடபூசி-ராமாநுஜாசார்யராலும்,

ஸ்ரீமான் புதுப்பட்டு-திருவேங்கடாசார்யராலும்,

நாநாதேசாநீத அநேக ஸ்ரீகோசங்களின் ஸஹாயத்தினல்

பரிசோதிப்பிக்கப்பட்டு,

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையாரால்,

பராங்குச திருவவதாராதி ௫௦௦அ-வது ஸம்வத்ஸரமான

கீலகஸம்வத்ஸரத்தில்,

காஞ்சீபுரம்

ஸ்ரீகீதாசார்ய அச்சுக்கூடத்தில்,

அச்சிட்டு ப்ரசுரம்செய்யப்பட்டது.

1908.

விஜயதேதராம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்).

இச்சபையில் தமிழ்லிபியில் அச்சிட்ட க்ரந்தங்கள்.

தனிஸ்லோகம் ஸவ்யாக்யாநம், ப்ரதிபத தாத்பர்ய ஸஹிதம்		3	4	0
பாரதாதி தனிஸ்லோகம்	,, ,,	0	5	0
ராமசரமஸ்லோகம்	,, ,,	0	3	0
துஷ்கரஸ்லோகடிப்பணி		0	5	0
யதிதர்ம ஸமுச்சயம்		1	2	0
முதல் திருவந்தாதி	,, அரும்பத ப்ரதிபத ஸஹிதம்	1	2	0
இரண்டாம் திருவந்தாதி	,, ,, ,,	0	12	0
மூன்றாம் திருவந்தாதி	,, ,, ,,	0	11	0
நான்முகன் திருவந்தாதி	,, ,, ,,	0	14	0
திருவிருத்தம்	,, அரும்பத ப்ரதிபத தாத்பர்ய ஸஹிதம்	3	12	0
திருவாசிரியம்	,, ,,	0	6	0
பெரிய திருவந்தாதி	,, ப்ரதிபத ஸஹிதம்	0	14	0
திருவெழுகூற்றிருக்கை	,, ,,	0	6	0
சிறிய திருமடல்	,, ,,	0	9	0
பெரிய திருமடல்	,, ,,	0	10	0
திருக்குறுந்தாண்டகம்	,, ,,	0	5	0
திருநெடுந்தாண்டகம்	,, ,,	2	0	0
பெரியதிருமொழி க-உ-௩. பத்துக்கள்	,,	5	12	0
இராமாநுச நூற்றந்தாதி உரையுடன்		0	15	0
பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்த்ரம் தாத்பர்ய ஸஹிதம்		0	14	0
ஷண்மததர்சிநி		0	3	0

இப்படிக்கு,

கராலபாடி - ஆழ்வாரய்ய,

கார்யதர்சி- தநாதிகாரி.





ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

திருமங்கையாழ்வாரருளிச்செய்த பெரிய திருமொழியின்

தனியன்கள்.

(திருக்கோட்டியூர்நம்பி அருளிச்செய்தது.)

మూలమ్.—కలయామి కలిధ్వంసం కవిం లోకదివాకరమ్।
యస్య గోభిః ప్రకాశాభి రావిద్యం నిహతం తమః॥

மூலம்.—கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம்।
யஸ்ய கோபி: ப்ரகாசாபி ராவித்யம் நிஹதம் தம:॥

பதவுரை.—யஸ்ய - யாதொருத்தருடைய, ப்ரகாசாபி: - விளங்காநின்றுள்ள, கோபி: - கிரணம் (உக்தி)களினாலே, ஆவித்யம் - அஜ்ஞாநப்ரயுக்தமான,

தமஃ - அந்தகாரமானது, நிஹதம் - போக்கப்பட்டதோ, (தம் - அப்படிப்பட்டவராய்,) கலித்த்வம்ஸம் - கலிதோஷத்தை நசிப்பிக்குமவராய், லோகதிவாகரம் - நாட்டாருக்கு ஸூர்யனான (அர்த்தப்ரகாசகரான), கவிம் - பரகாலகவியை, கலயாமி - த்யாநம் செய்கிறேன்.

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த வ்யாக்யாநம்.

அவதாரிகை.—(- கலயாமி கலித்த்வம்ஸம்) திருமொழிமுதலான திவ்யப்ரபந்தோபகாரத்துக்குத் திருமங்கையாழ்வாரைத் திருவடிதொழும்படி சொல்லுகிறது.

வ்யாக்யாநம்.—(- கலயாமி கலித்த்வம்ஸம்) "கலிகன்றி" என்று நிரூபகத்தையுடையரான பரகாலகவியை, கலயாமி - "ப்ரணமாமி" என்கிறது. (- லோகதிவாகரம்) ஆதித்யன், பாஹ்யாந்தகாரத்தைப் போக்கும்; இவர் நாட்டார்க்கு பாஹ்யாப்யந்தராந்தகாரங்களிரண்டையும் போக்குவர் (- யஸ்யகோபிஃ) யாதொருத்தருடைய, (க) " - யத்கோஸஹஸ்ரம்" என்கிற மறையாயிரங்களினாலே; அவைதான் (- ப்ரகாசாபிஃ) என்று - (உ) * நடைவிளங்கு தமிழ்மாலையாய்(ந) *நெஞ்சுக்கிருள்கடிதீபமாயிருக்கும்; இப்படி ப்ரகாசகங்களான ஸ்ரீஸூக்திகளினாலே, (ச) * அறிவிலாமனிசருடைய ஆவித்யதமஸ்ஸூ நிஹதமாயிற்று என்பது யாதொன்று, அத்தாலே அவரை (கலயாமி) என்கிறது ... ... *

(எம்பெருமானாருளிச்செய்தது.)

மூ.—வாழிபரகாலன் வாழிகலிகன்றி
வாழிகுறையலூர் வாழ்வேந்தன் - வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

ப - உ.—பரகாலன் - சத்ருக்களுக்கு ம்ருத்யுவானவர், வாழி - வாழ்ந்தருள வேணும்; கலி - கலியினால் வரும்தோஷத்தை, கன்றி - போக்குமவர், வாழி—; குறையலூர் - திருக்குறையலூரில், வாழ் - நித்யவாஸம்பண்ணும், வேந்தன் - ராஜாவானவர், வாழி—; மாயோனை - ஆஸ்சர்ய குணசேஷ்டிதங்களையுடைய ஸர்வேஸ்வரன்பக்கல், வாள்வலியால் - தன்வாளின்வலியைக் காட்டி, மந்திரம் - பெரியதிருமந்த்ரத்தை, கொள் - உபதேசிக்கப்பெற்றவராய், மங்கையர் - திருமங்கையிலுள்ளார்க்கு, கோன் - நிர்வாஹகராய்,

(க) சடகோபாஷ்டகம் - ச. (ந) திருமொழித்தனியன்.
(உ) பெருமாள்திரு - க - கக. (ச) திருமாலை - கந.

தூயோன் - (உள்ளும்புறம்புமொக்க) சுத்தியையுடையரான ஆழ்வாருடைய, சுடர் - ஒளியையுடைத்தாய், மானம் - பெரியதான, வேல் - வேலானது, வாழி - வாழ்ந்திடுக. ... ... *

அவ.—(வாழிபரகாலன்) எம்பெருமானுக்குத்திருமதிள்போலே அரணாயிருப்பதான ஆறுப்ரபந்தங்கள் செய்தருளின ஆழ்வாருடைய திருநாமங்கள் பலவற்றையும் சொல்லி அவரை வாழ்த்துகிறது-இதில். (க) "ப்ரத்யக்ஷகுரவஸ்ஸ்துத்யா:" - ப்ரத்யக்ஷகுரவஸ்ஸ்துத்யா:" என்னக்கடவதிறே. ஆழ்வார்கள் அர்ச்சாவதாரமாய் எப்போதும் எல்லார்க்கும் ப்ரத்யக்ஷராயிறே யிருப்பது.

வ்யா.—(வாழிபரகாலன்) பகவத் த்விட்டுக்களான ப்ரதிகூலர்க்குக் காலனானவர் வாழி. (வாழிகலிகன்றி) கலிதோஷநிவாரகர் வாழி. (குறையலூர் வாழ்வேந்தன் - வாழி) திருக்குறையலூரை அவதாரஸ்த்தலமாக வுடையராய், அதுவாழும்படிக்கு அத்தை நோக்குகிற ராஜாவென்னுதல்; அங்கே வாழுகிறவ ரென்னுதல். (மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன், தூயோன் சுடர்மானவேல் - வாழியரோ) என்று - ஆழ்வாரையும், அவர்திருக்கையில் வேலையும் ஒருகாலே ஆசாஸித்தபடி. (மாயோனை) (உ) * அரங்கத்தரவணையிற் பள்ளிகொள்ளும் மாயோனையிறே வாள்வலியால் மந்திரங் கொண்டது. (௩) * தென்னரங்கன்றன்னை வழிபறித்த வாளனிறே. (௪) * கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டவரிடத்திலேயிறே மந்திரப்பொருள்கைக்கொண்டது. § மந்திரத்தைப்பற்றியிறே மந்திரங்கொண்டது. (மங்கையர்கோன்) திருமங்கைமன்னனிறே. (தூயோன்) "தூய்மை" என்னும் பாஹ்யாப்யந்தரசுத்தியையுடையவர். (௫) "அங்கமலத்தடவயல்சூழாலிநாட னருள்மாரியரட்டமுக்கி யடையார்சீயம் கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கைவேந்தன் கொற்றவேல் பரகாலன் கலியன்" என்று தாமே தந்திருநாமங்களைக் கூறினாரிறே. (சுடர்மானவேல்) தேஜோரூபமான, மானவேல்-பெரியவேல். திருமங்கைமன்னனெடுக்கும்படியான வேல், (வாழியரோ). இத்தால் - ஆழ்வாரோபாதி

(க)
(உ) பெரு - திரு - க - எ.
(௩) இயற்சாத்து.
(௪) நா - தி - கக - ௬.

§ மந்திரத்தை - வேதப்ரதிபாத்யனை ஸர்வேஸ்வரனை.
(௫) திருமொ - ௩ - ௪ - ௧0.

ஆயுதமும் ஆசாஸ்யமென்றபடி. (க) "நின்கையில்வேல்போற்றி" என்னக்கடவதிறே. இதுதான் (உ) * கொற்றவேலாகையாலே வெற்றிவேலாயிருக்கும்; அத்தாலே-இதின் விஜயத்தை வேண்டுகிறது.

(கூரத்தாழ்வானருளிச்செய்தது.)

மூ.—நெஞ்சுக்கிருள்கடிதீபம் அடங்கா நெடும் பிறவி
நஞ்சுக்கு நல்லவமுதம் தமிழ்நன்னூல்துறைகள்
அஞ்சுக் கிலக்கியம் ஆரணசாரம் பரசமயப்
பஞ்சுக்கனலின்பொறி பரகாலன் பனுவல்களே.

ப - உ.—பரகாலன் - ப்ரதிபக்ஷத்துக்குக் காலனான ஆழ்வா ரருளிச்செய்த பனுவல்கள் - பாட்டுக்களானவை, நெஞ்சுக்கு - மநஸ்ஸிலுண்டான, இருள் - அஜ்ஞாநத்தை, கடி - போக்கவல்ல, தீபம் - விளக்காயும், அடங்கா - ஒன்றாலும் அடங்காதே, நெடு - நெடுகிப்போருகிற, பிறவி - பிறப்பாகிற, நஞ்சுக்கு - விஷத்தைமாற்றுகைக்கு, நல்ல - ஸ்லாக்யமான, அமுதம் - அம்ருதமாயும், நல் - விலக்ஷணமான, தமிழ்நூல் துறைகள் - த்ராவிடசாஸ்த்ர மார்க்கமான, அஞ்சுக்கு - (எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்கிற) பஞ்சலக்ஷணங்களுக்கும், இலக்கியம் - லக்ஷ்யமாயும், ஆரணம் - வேதத்தின், சாரம் - ஸாரமாயும், பரசமயம் - இதரமதங்களாகிற, பஞ்சுக்கு - பருத்திக்கு, அனலின் பொறி - நெருப்புப்பொறியாயும் இருக்கும் ... *

அவ.—(நெஞ்சுக்கிருள் கடிதீபம்) இதில், ஆழ்வார் திவ்யப்ரபந்த வைபவம் சொல்லுகிறது.

வ்யா.—(நெஞ்சுக்கிருள்கடிதீபம்) என்று நெஞ்சுக்கிருளாவது-மநோமாலிந்யமான அஜ்ஞாநம். (ங) * மனனகமலமிறே. (ச) * ஞானக்கலையாகையாலே அத்தை நிராகரிக்கும் (ரு) * ஞானச்சுடர்விளக்காயிருக்கும்.

(அடங்காநெடும் பிறவி நஞ்சுக்கு நல்லவமுதம்) ப்ரதிக்ரியையொன்றாலுமடங்காதே நெடுகிப் போருகிற ஜந்மமாகிற நஞ்சுக்கு, நல்லவமுதம் - அந்தவிஷத்தை மாற்றுகைக்கு நிர்விஷமான அம்ருதம். ஸம்ஸாரவிஷத்துக்கு அம்ருதமாயிறே (சா) * திருமால் திருநாமமிருப்பது. திருமங்கையாழ்வார் திவ்யப்ரபந்தம், ஸம்ஸாரநிவர்த்தகமான திருமந்த்ரார்த்தத்தை ப்ரதிபாதிக்குமதாயிறே யிருப்பது.

(தமிழ்நன்னூல்துறைகளஞ்சுக்கிலக்கியம்) த்ராவிடசாஸ்த்ரம், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என்கிற விலக்ஷண

(க) திருப்பா - உச. (உ) திருமொ - ங - ச - க0.
(ங) திருவாய் - க - க - உ. (ச) திருவாய் - க - கூ - அ.
(ரு) உ - தி - க. (சா) திருமொ - கூ - க0 - சா.

மான பஞ்சலக்ஷணத்தோடே கூடியிறே யிருப்பது. அன்றிக்கே, தமிழுக்கு எழுத்து முதலான அஞ்சுலக்ஷணத்தையும் அறுதியிடுவதான நன்னூலென்று - ஒரு சாஸ்த்ரமுண்டு, அத்தைச் சொல்லிற்றுதல்; ஏவம்விதமான த்ராவிட சாஸ்த்ரமார்க்க பஞ்சகத்துக்கு, (இலக்கியம்) "இலக்கணவிலக்கியம்" என்றிறே அவர்கள் சொல்லுவது; அதுக்கு லக்ஷ்யமாய்ப் படிமாவாயிருக்கும். இத்தைப்பார்த்து லக்ஷணம்கட்டலாயிருக்கை.

கேவலம் தமிழுக்கு லக்ஷ்யமாயிருக்கை யன்றிக்கே, ஆரணசாரமுமாயிருக்கும்;-வேதஸாரமுமா யிருக்குமென்றபடி. திருமந்த்ரார்த்தமிறே இதில்ப்ரதிபாதிப்பது. (க) "நாராயணாவென்னும் நாமம்" என்று உபக்ரமித்து, (உ) "பேசுமின் திருநாம மெட்டெழுத்தும்" என்றும், (ங) "நின்திரு வெட்டெழுத்துங் கற்று - நானுற்றது முன்னடியார்க் கடிமை" என்றும், (ச) "இமையோர் தலைவருடைய திருநாமம் நங்கள் வினைகள் தவிர வுரைமின் நமோநாராயணம்" என்றும், (ரு) "நரநாரணனாயுலகத்தற நூல் சிங்காமைவிரித்தவன்" என்றும், (சு) "நாட்டினாய் - என்னை - காட்டினாய்" என்றும், (எ) "மந்திரத்தை மந்திரத்தால் மறவாது" என்றும், (அ) "பேராளன் பேரோதும்" என்றும், (கூ) "நாராயணாவோ மணிவண்ணா" என்றும் திருமந்த்ரார்த்த விசாரமேயிறே முடிய நடந்து போருகிறது. ஆகையால், (ஆரணசாரம்) என்கிறது. ஸகலவேத ஸங்க்ர ஹதயா தத்ஸாரமாயிறே திருமந்த்ரந்தா னிருப்பது.

(பரசமயப்பஞ்சுக் கனலின்பொறி) பரஸமயமாகிற தூலராசிக்குக் காலாநலகணமாயிருக்கை. (க0) * வெள்ளியார் பிண்டியார் போதியாரென்றிவ ரோதுகின்ற கள்ள நூல்களை (கக) * செம்மைப்பனுவல் நூலாலேயிறே இவர்கழித்துத் தள்ளுவது * பரசமயக் குறும்பறுத்தவரிறே.

இதெல்லாமாவதெதுதானென்ன ; (பரகாலன் பனுவல்களே) (கஉ) * மருவலர்த முடல்துணிய வாள்வீசும் பரகாலன் பனுவல்

(க) தி - மொ - க - க - க. (எ) தி - நெ - ச.
(உ) ,, - க - அ - கூ. (அ) தி - மொ - எ - ச - ச.
(ங) ,, - அ - க0 - ங. (கூ) சிறிய திரு -
(ச) ,, - சு - க0 - கூ. (க0) தி - மொ - கூ - எ - கூ.
(ரு) ,, - க0 - சு - ச. (கக) ,, - க0 - ச - க0.
(சு) ,, - க0 - சு - க. (கஉ) ,, - ங - கூ - க0.

களே இவற்றைச் செய்துமுடிக்கும். அவரும்வேண்டா, அவர் ஸ்ரீஸூக்திகளே யமையும் இந்தக்கார்யங்களைச் செய்கைக்கென்கை. இவரதிகரித்த கார்யத்துக்குக் கையும்வாயு மொத்திருக்கிறபடி யிது வாயிற்று.... ... ...

(எம்பாரருளிச்செய்தது.)

மூ.—எங்கள்கதியே இராமாநுசமுனியே
சங்கைகெடுத்தாண்ட தவராசா - பொங்குபுகழ்
மங்கையர்கோ னீந்த மறையாயிர மனைத்தும்
தங்குமனம் நீ யெனக்குத்தா.

ப - உ.—எங்கள் - எங்களுக்கு, கதியே - அடைக்கலமாயிருக்குமவரே! இராமாநுசமுனியே - இராமாநுசன் என்னும் திருநாமத்தையுடையராய் (ஆத்மாக்களின் ரக்ஷணத்தில்) மநநம் பண்ணுமவரே! சங்கை - வேத சாஸ்த்ரங்களில் ஸம்சயங்களை, கெடுத்து - போக்கி, ஆண்ட - (எல்லாரையும்) அடிமைகொண்டவராய், தவம்-தபஸ்ஸில் மிக்கோரானயதிகளுக்கு, ராசா - ராஜாவாயிருக்கு மவரே!, பொங்கு - மிகுந்த, புகழ்-யசஸ்ஸையுடைய, மங்கையர் - திருமங்கையிலுள்ளார்க்கு, கோன் - ராஜாவான ஆழ்வார், ஈந்த - அருளிச்செய்த, மறை - வேதரூபமான. ஆயிரம் - ஆயிரம் பாட்டாயிருக்கிற பெரியதிருமொழி ப்ரபந்தமும், அனைத்தும் - மற்றுமுள்ள ப்ரபந்தமும், தங்கும் - தரித்திருக்கும்படியான, மனம் - மநஸ்ஸை, எனக்கு - அடியேனுக்கு, நீ - தேவரீர், தா - தந்தருளவேணும். ... ... *

அவ.—இனி, இவ்வாழ்வாரைப்போலே பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸித்து வைதிகமார்க்கத்தை நடத்தியும், உகந்தருளின நிலங்களை உத்தரித்தும், தத்ப்ரதிபாதகமான இவர் ஸ்ரீஸூக்தியை வர்த்திப்பித்தும் போருமவரிறே உடையவர்; அத்தைப்பற்ற, இவ்வாழ்வார் திவ்யஸூக்தியான திருமொழியாயிரமும் என்ஹ்ருதயத்திலே நிலைநிற்கும்படி உபகரித்தருளவேணுமென்று எம்பெருமானாரை அர்த்திக்கிறது - இதில்.

வ்யா.—(எங்கள்கதியே) அகதிகளான வெங்களுக்குக் கதியாயிருக்கிறவரே! (இராமாநுசமுனியே) (க)*சதுரக்ஷரியாய்,மோக்ஷைகஹேதுவான திருநாமத்தை யுடையருமாய், ஆத்மரக்ஷணத்திலே மநநம்பண்ணுமவரே! (சங்கைகெடுத்தாண்ட) (உ)"த்வத³ந்ய: ஸம்ஶயஸ்யாஸ்ய ச்சே²த்தா ந ஹ்யுபபத்³யதே" "த்வதந்யஸ்ஸம்சயஸ்யாஸ்ய ச்சேத்தாநஹ்யுப

(க) ஆழ்வான்முக்தகம்- (உ) கீதை - ௬ - ௩௯.

பத்யதே" என்றும், (க) "தத்துவநூல் கூழற்றது" என்னும்படி வேதாந்தசாஸ்த்ரத்தை நிஸ்ஸம்சயமாகப் பண்ணி மநஸ்ஸில் ஸம்சயங்களைப் போக்கி, எல்லாரையும் அடிமையாக ஆண்ட.. (தவராசா) யதிராஜா! என்றபடி. அன்றிக்கே, தவம் என்று - சரணாகதி தர்மமாய்,அத்தை வ(ர்)த்திப்பிக்கிறராஜா என்றுமாம். (உ)*தவநெறியிறே. (பொங்குபுகழித்யாதி) அதிஸம்ருத்தமானயசஸ்ஸையுடைய திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வாருடைய, வேதரூபமாய் ஆயிரம்பாட்டாயிருக்கிற பெரியதிருமொழி ப்ரபந்தமெல்லாவற்றையும். அன்றிக்கே, (ஆயிரமனைத்தும்) என்று - ஆயிரத்தையும், மற்றும் அவர் அனைத்து ப்ரபந்தத்தையும் என்றுமாம். (தங்கும் மனம் நீயெனக்குத்தா) (ங) "கண்ணநின்றனக்கும் குறிப்பாகில் கற்கலாம்" என்கிற திவ்யஸூக்தியைத் தரிக்கும்படியான மநஸ்ஸைத் தந்தருளவேணும். (ச) "குறையல் பிரானடிக்கீழ்விள்ளாத வன்ப னிராமாநுசன்" என்றும் (ரு) "நீலன்றனக்குலகிலினியான்" என்றும், (சு) "கலிமிக்கசெந்நெற்கழனிக் குறையல்கலைப்பெருமா னொலிமிக்க பாடலையுண்டுதன்னுள்ளந் தடித்து" என்றும், எம்பெருமானாரைச் சொல்லக்கடவதிறே; அத்தாலே அவரை அபேக்ஷிக்கிறது ...... *

மூ.—*மாலைத்தனியே வழிபறிக்கவேணுமென்று
கோலிப்பதிவிருந்த கொற்றவனே - வேலை
அணைத்தருளுங்கையா லடியேன்வினையைத்
துணித்தருளவேணும் துணிந்து.

ப - உ.—மாலை - ஸர்வேச்வரனை, தனிவழியே - தனிவழியிலே, பறிக்கவேணுமென்று - கொள்ளைகொள்ள வேணுமென்று, கோலி - முயன்று, (திருவரசினடியிலே) பதிவுஇருந்த - பதுங்கிக்கொண்டிருந்த, கொற்றவனே - ராஜாவான திருமங்கை மன்னனே! வேலை - வேல் என்னும் ஆயுதத்தை, அணைத்தருளும் - அணைக்கும்படியான, கையால் - திருக்கையாலே, அடியேன் - சேஷபூதனான வென்னுடைய, வினையை - பாபங்களை, துணிந்து - துணிவையுற்று, துணித்தருளவேணும் - வெட்டிக் களைந்தருளவேணும்... *

அவ.—(மாலைத்தனியே) இதில், ப்ரபந்தாந்வய ப்ரதிபந்தகங்களை ப்ரபந்த கர்த்தாவே (ச்) சேதிக்கவேணு மென்கிறது.

(க) இரா - நூ - கூரு. (ச) இரா - நூ - உ.
(உ) தி - மொ - உ - ரு - ங. (ரு) ,, - கஎ.
(ங) தி - மொ - எ - க௦ - க௦. (சு) ,, - அஅ.
* இத்தனியன் ஸோமாசியாண்டானருளிச்செய்ததாகச் சொல்லுவர்.

வ்யா.— (மாலைத்தனியே வழிபறிக்க வேணுமென்றுகோலி) ஸர்வாதிகனைத் தனிவழியிலே வழிபறிக்க வேணுமென்று உத்யோகித்து. ததநுகுணமாகத் திருவரசினடியிலே (பதிவிருந்த) மேலே கோடிவைத்துப் பார்ப்பித்த. (கொற்றவனை) ராஜாவே! பறிகொடுக்குமவன் (க) *தெய்வத்துக்கரசு, பறிக்குமவர் ஆலிநாட்டரசு, பறிக்குமிடம் மரங்களுக்கரசிடம்; இப்படியாயிற்று பறிக்கப் பதிவிருந்தபடி. (வேலையணைத்தருளும் கையால்) * வெட்டிப்பறிக்க வெடுத்தணைத்த வேலாலே. (அடியேன் வினையை) (உ) "அடியேன் நான்" என்று அவனுக்கு அடிமையான உமக்கு அடியேனான அடியேன் வினையை. உமக்கடியோமாகைக்கும் வினைக்கும் என்ன சேர்த்தியுண்டு? (ங) "என்பெய்வினையைக் கிட்டிக்கிழங்கொடு தனனருளென்னுமொள்வாளுருவி வெட்டிக்களைந்த விராமாநுசன்" என்கிறபடியே. (அடியேன்வினையை - துணிந்து - துணித்தருளவேண்டும்) வழிபறிக்கத் துணிந்தாற்போலே * வினையைத்துணிக்கத் துணியவேணும். என்வினையைப் போக்கவேணும் என்று நீர் துணிந்தாலாயிற்றுப் போவது. (ச) "பண்டைவல்வினை பாற்றியருளினான்" என்னும்படி பண்ணவேணும் ... ... *

தனியன் வ்யாக்யாநம் ஸம்பூர்ணம்.

பிள்ளைலோகம்ஜீயர் திருவடிகளே சரணம்.

(க) தி - மொ - ௰ - எ - க. (ங) இரா - நூ - கூங.
(உ) ,, - கக - அ - எ. (ச) க - சி - எ.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பெரியதிருமொழிக்கு

பெரியவாச்சான்பிள்ளையருளிச்செய்த வ்யாக்யாநத்தின்

அரும்பதவிளக்கம்.

அவதாரிகை.

அபாரகருணாம்ருதஸாகரரான பெரியவாச்சான்பிள்ளை, தம்முடைய பரமக்ருபையாலே, பெரியாழ்வார், தாமருளிச்செய்த திருப்பல்லாண்டில் (க) *மல்லாண்டதிண்டோளனைப் பல்லாண்டுபாடியும், அவனுடைய திருவவதாரம் தொடக்கமான திவ்யசேஷ்டிதங்களை யநுபவித்தும், அதுக்குமடியான ராமகுணாநுபவம்பண்ணியும், அவை காலாந்தரத்திலநுபவங்களாகையாலே, (உ) "வடதிசை மதுரை" இத்யாதிப்படியே அர்ச்சாவதாரங்களை பஹுப்ரகாரேண அநுபவித்துக்கொண்டுவந்து, திருவேங்கடமுடையானிடத்தில் திருவுள்ளத்தைமூட்டி யநுபவித்துப் ப்ரபந்தசேஷத்தைத் தலைக்கட்டினபடியையும்; அவர் பெண்பிள்ளையான ஆண்டாள், (ங) *நந்தகோபன் குமரனையே ஆசைப்பட்டு, ஆழ்வார்களையுணர்த்திக்கொண்டு அவர்களை § அடியொத்திப்போய் (ச) *நப்பின்னை கொங்கைமேல்வைத்துக்கிடந்த மலர்மார்பனையுணர்த்தித் தாம்வந்த காரியத்தை ஆராயச்சொல்லி அவனைப்போற்றித் தம்முடைய மநோரதத்தை விண்ணப்பம்செய்துவிட, அது அநுகாரத்தால் பிறந்ததாகையாலே மனப்பாலமுது செய்தவோபாதியாய்க்கலங்கி காமன்காலிலே விழுந்து தவண்டு, (ரு) *படாதனபட்டுக், (சு) *கருக்கண்டு, தரித்துத் திருவேங்கடமுடையானைக்குறித்துத் தூதுவிட்டு, பெரியபெருமாளைக் † கிலாய்த்து பாவபந்தம் தலைநிரம்பித் தேற்றுவாரில்லாதபடி கலங்கினவளவிலே, தைவயோகத்தாலே தம்முடைய ஆசார்யபரதந்த்ரதாஜ்ஞாநம் தலையெடுத்துத் தரித்திருக்கச்செய்தேயும் அநுபூதவிஷயமஹிமாவினால் பிறந்ததெளிவும் அகிஞ்சித்கரமாய்க் கண்டல்லது தரிக்கமாட்டாதே, (எ) "இங்கேபோதக்கண்டீரே" என்று தேடிச்சென்று, (அ) "வீதியாரவருவானை விருந்தாவனத்தே கண்டோமே" என்று காட்சியோடே தலைக்கட்டினபடியையும்; குலசேகரப்பெருமாள், இவ்விருவரளவுமன்றியே, முந்துறமுன்னம் (கூ) *வெண்ணெயுண்டவாயனான பெரியபெருமாளிடத்தில் (க0) "என்றுகொலோ கண்குளிரக்

(க) தி-பல்-க. (உ) பெரி-திரு-ச-எ-கூ. (ங) தி-பா-க. து. (ச) தி-பா-கக. (ரு) தி-வாய்-எ-ரு-உ. (சு) நா-தி-சு- (எ) நா-தி-கச-க. (அ) நா-தி-கச-ரு. (கூ) அமல-க0.

§ அடியொத்தி-அநுஸரித். † கிலாய்த்து-வெறுத்து. (க0) பெரு-தி-[illegible]-க.

காணுநாளே" என்று § பேரவாகரைபுரண்டு, அவ்வளவன்றியே (௧) * அணியரங்கன் திருமுற்றத் தடியாரளவும் மாலேறிய பெரும்பித்தராய், திருமலையில் திர்யக்ஸ்த்தாவரஜந்மங்களை ஆசைப்பட்டு, அநந்தரம் அர்ச்சாவதாரத்துக்கடியான ராமக்ருஷ்ணாவதாரங்களையும் ப்ராஸங்கிகமாக அநுபவித்து, அவ்வநுபவத்தைத் திருச்சித்திரகூடத்திலே யநுபவித்து, அடியிலேபிறந்த பரமபக்தியோடே தலைக்கட்டினபடியையும்; திருமழிசைப்பிரான்; கீழ்ச்சொன்னவர்கள்போலே பா(ஞ)வநாமாத்ரத்திலே யநுபவித்தபடியன்றியே, அர்ச்சாவதாரங்கள்தான் "பைந்நாகப்பாய்சுருட்டிக்கொள்" என்று நியமிக்கும்படி தமக்குக் கைபுகுந்தபடியாலே (௨) * தெளிந்தசிந்தையராய் அவனுடைய ஸர்வப்ரகாரவைலக்ஷண்யங்களை லோகோஜ்ஜீவநார்த்தமாகத்திருச்சந்தவிருத்தத்தாலே வெளியிட்டருளின க்ரமத்தையும்; இவர் தம்மைப்போலே பல அர்ச்சாஸ்த்தலங்களிலே மண்டியிருக்கையன்றிக்கே (௩) "மற்றொன்றும்வேண்டா" என்று பெரியபெருமாளையே ஸ்ரோதாவாக்கித் தம்முடைய இன்சொற்களைச்சொல்லி உகப்பித்தும் அவரைப் பள்ளியுணர்த்தியும் போந்த தொண்டரடிப்பொடியாழ்வாருடைய பா(ஞ)வவ்ருத்தியிருந்த வகையையும்; திருப்பாணர்தாம், இவர்களித்தனைபேரிலுங்காட்டில் வைலக்ஷண்யந்தோற்றப் பெரியபெருமாளாலே விஷயீக்ருதராய், பரப்பறப் பத்துப்பாட்டாலே, விஷ்ணுசித்தர் தொடக்கமானரோபாதி மற்றொருவரையநுகரித்தும், கலங்கி தேவதாந்தரங்கள் காலில்விழுந்தும், தூதுவிட்டும், காணாமல் தடுமாறியும், கண்டுதெளிந்தும், பரோபதேசம் பண்ணப்போந்தவர்களை நிந்தித்துத் தமக் கெம்பெருமானிரங்காமையைச் சொல்லி (௪) "அம்மஓ கொடியவாறே" என்று இளைத்துத், தாமேபோய்ப் பள்ளியுணர்த்தியும் செய்யாதே ஆபாத (ஞ) சூடம் ஸாக்ஷாத்கரித்தநுபவியாநின்றுகொண்டு, ஸ்ரீலோகஸாரங்கமஹாமுநிகள் திருத்தோளிலே எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோகப், பெரியபெருமாள் ஸாயுஜ்யத்தை இவ்விபூதியிலே கொடுக்கையாலே அந்தவநுபவத்தைப்பெற்றுத், திருவேங்கடமுடையானையும் பெரியபெருமாளோடு ஒருசேர்த்தியாக அநுபவித்துக்கொண்டு, (௫) "மற்றொன்றினைக் காணாவே" என்று தலைக்கட்டினதன்மையையும்; இவர்களித்தனைபேரும் ப்ரதமாவதியிலே மண்டினாராய், இவர்களித்தனைபேருக்கும் ப்ராப்யசரமாவதி(ஞ)யாக (௬) * அடியார்க்காட்படுமது உத்தேஶ்யமாகையாலே அவ்வர்த்தத்திலே நிஷ்டரான ஸ்ரீமதுரகவிகள், (௭) * வாய்த்ததிருமந்திரத்தின் மத்திமமாம் பதம்போலவான * கண்ணிநுண்சிறுத்தாம்பாலே ப்ரதிபாதித்த ஆழ்வாருடையப்ராப்யத்வப்ராபகத்வங்களையருளிச்செய்து (௮) * தென்

§ பேரவா-பெரியஆசை.
(௧) பெரு-திரு-௧-௧௦.
(௨) பெரி-திரு-௪-௬-௭.
(௩) தி-மா-தனி.
(௪) தி-மா-௩௭.
(௫) அமல-௧௦.
(௬) திருப்பள்ளி-௧௦.
(௭) உப-ரத்-௨.௬.
(௮) க-சி-௧௧.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த

பெரியதிருமொழி வ்யாக்யாநம்.

ப்ரவேசம்.

†இவ்வாழ்வாராகிறார் - ஆத்மாவை வெய்யிலிலேவைத்து உடம்பை நிழலிலேவைத்துப் போந்தாரொருவ ராயிற்று. ஆத்மாவை வெய்யிலிலே வைக்கையாவது - பகவத்விஷயத்தில் முதலிலே இழியாமை; உடம்பை நிழலிலே வைக்கையாவது-அநாதிகாலம் விஷய ப்ரவணராய் அதுவே யாத்ரையாய்ப் போருகை. நிழலாவது தான் பகவத்விஷயமிறே. (க)[𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌤𑌰𑍁𑌚𑍍𑌛𑌾𑌯𑌾 - வாஸுதேவதருச்சாயா]

குருகூர் நகர்நம்பிக் கன்பரானமையையும் திருவுள்ளம்பற்றி, இந்த திவ்ய ப்ரபந்தங்களுக்கு உத்தரோத்தரமுண்டான அதிசயங்களுக்கு அநுகுணமான ஒரு சேர்த்தியாலே இவையித்தனைக்கும் அடைவே வ்யாக்யாநம் செய்தருளி; இவ்வளவன்றியே, இவை யித்தனையாலும் திருமந்த்ரத்தில் ப்ரணவ நமஸ்ஸுக்களி னர்த்தங்கள் ப்ராதாந்யேந ப்ரதிபாதிக்கப்படுகையாலே, தத்ஸ்த்தாநீயமான முதலாயிரத்தைத் திருவுள்ளத்தில்வைத்துக்கொண்டு த்ருதீய பதஸ்த்தாநேயான திருமொழிக்கு வ்யாக்யாநம் செய்தருள நினைத்தருளினார்.

இத்திருமொழிக்கு வக்தாவான திருமங்கைமன்னன், * கண்ணிநுண் சிறுத்தாம்பில் பாகவத நிஷ்ட்டையைக்காயிகபர்யந்தமாகவநுஷ்ட்டித்து (உ) "வாள்வலியால் மந்திரங்கொண்டு, (ந) * நின் திருவெட்டெழுத்தும் கற்று-நான்-உற்றது முன்னடியார்க் கடிமை" என்று வாய்விட்டும்போந்தா ரொருவராகையாலே கீழ்ச்சொல்லப்பட்ட வர்களில் விலக்ஷணரிறே என்று இவருடைய வைலக்ஷண்யத்தைத் திருவுள்ளம்பற்றி இதுக்கு வ்யாக்யாநம் செய்தருளக்கோலி; ஸர்வேஸ்வரன், இவ்வாழ்வார் பக்கலுண்டான ஸ்வவிஷயாத்வேஷமும், இவரநுபவித்த விஷயங்களினுடைய அல்பீயஸ்வமுமே இவரை மீட்கைக்குப்பரிகரமாகவும், இவருடைய ரஸிகத்வத்தைத் தம்முடைய வாசியறிகைக்குப்பற்றாசாகவுமெண்ணி இவரை நிர்ஹேதுககடாக்ஷவிஷயமாக்கித் தன் ஸ்வரூபாதிகளை அறிவிப்பித்தானென்னும் வக்த்ரு வைலக்ஷண்யத்தையும், ஸ்வரூபாதிகளை யறிகைக்கு அவன் காட்டிக்கொடுத்த திருமந்த்ரத்தையநுஸந்தித்தாரென்னும் ப்ரதிபாத்ய வைலக்ஷண்யத்தையும், ததர்த்தப்ரதிபாதகதயாவந்த ப்ரபந்த வைலக்ஷண்யத்தையுமருளிச்செய்வதாகத் தாமிவருடைய பூர்வ வ்ருத்தத்தை யருளிச்செய்கிறார், (இவ்வாழ்வாராகிறார்) இத்யாதியாலே. "ஸ்ரிய:பதியாய்" என்று துடங்கி "விஜாதீயனை நம்மால்முடியாது, ஸஜாதீயரைக்கொண்டே காரியங்கொள்வோம், என்று ஆழ்வாரைத் திருவவதரிப்பித்தான்" என்றிவ்வளவு முபந்யஸித்துப், பின்னை (இவ்வாழ்வாராகிறார்) என்று துடங்கி அநுஸந்திப்பது என்றும் சொல்லுவர்கள். (ச) "𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌾𑌸𑍌 - 𑌵𑌸𑌤𑌿, ஸர்வத்ராஸௌ - வஸதி" என்கிற நிருக்தியை உட்

(க) (உ) தி-மொ-தனி- (ந) தி-மொ-அ-கo-ந. (ச)

†பார்த்த பார்த்த விடமெல்லாம் நிழலாயிருக்கை. †எங்கு மொக்க நிழல்செய்த இந்நிழலிலல்லது புறம்போதுங்க நிழலின்றிக்கே யிருக்கை. [நாதிசீதா நகர்மதா] அற வவ்வலிடுதல் வேர்த்தல் செய்யாதிருக்கை. [நரகாங்காரசமநீ] † தானே யேறிட்டுக்கொண்ட நரகமாகிற பெருநெருப்பையும் அவிக்க வற்று. [ஸாகிமர்த்தம் ந ஸேவ்யதே] ப்ராப்த மன்றென்ன வொண்ணாது, துக்கநிவர்த்தக மன்றென்ன வொண்ணாது; † "வயிறு நோவாநின்றது, சவி" என்பாரைப்போலே † அநிச்சை சொல்லுகை வாங்கு மித்தனையிறே யுள்ளது. †அர்த்தத்தில் மாறுட்டமில்லை; ப்ரதிபத்தியில் மாறுட்டமேயுள்ளது. இந்நிழலிலே யிருந்துவைத்து "ஒதுங்கிற்றிலேன்" என்பாரைச் செய்யலாவ தில்

கொண்டருளிச்செய்கிறார், (பார்த்த) இத்யாதி. (க) "ஸமஸ்தஞ்ச-அத்ர-வஸதி- ஸாஸ்தஞ்ச - அத்ர - வஸதி" என்றதைப்பற்றவருளிச்செய்கிறார், (எங்கு மொக்க) இத்யாதி. (உ) "ஏதேவை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்யபரமாத்மநஃ- ஏதேவை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்யபரமாத்மநஃ" என்கிறபடியே, ஸாம்ஸாரிகலோக மெல்லாம் நரகதுக்க ஸமமென்று திருவுள்ளம்பற்றி, அதுதானும் சேதநர் மாத்ரமாய்வருமதானையாலே அவ்வர்த்தத்தை யருளிச்செய்கிறார், (தானே) இத்யாதி. கேவலநரகமாகில் அதுக்குப் ப்ராயஸ்சித்தாதிக்ரியை சாமகமா யிருக்குமே; (ஈ) * வாஸுதேவதருச்சாயையைச் சொல்லவேண்டாவிறே. இப்படி ஸேவியாதிருக்கைக்கு நிமித்தந்தானென்னென்ன; அருளிச்செய்கிறார், (வயிறு) இத்யாதி. சிறுபிள்ளைகள், விளையாட்டில் பராக்காலே "உண்ண வா" என்றழைத்தால், "எனக்கு வயிறுநோகிறது, வேண்டா" என்று பசியாநிற்கச்செய்தேயும் சொல்லுவர்கள்; அதுக்குமேலே மாதாபிதாக்கள் நிர்ப்பந்தித்தழைக்கப்புக்கால், "நீங்களே சவியுங்கோள் - அதாவது - வையுங்கோள், நான் ... உண்ண வருகிறதில்லை" என்று அஸௌக்யம் ஸூசிப்பிக்குமாபோலே, ஈஶ்வரன் ஸர்வத்ர இருந்து ஹிதம்செய்யவந்தாலும் விஷயப்ராவண்யத்தாலே நிஷேதிப்பர்களென்றுகருத்து. (அநிச்சைசொல்லி) வேண்டாமையைச்சொல்லி என்கை. இந்தஸ்லோகத்துக்கு ருஷியினுடைய அபிப்ராயத்தோடு ஒரு தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார், (அர்த்தத்தில்) இத்யாதி வாக்யத்வயத்தாலே. ஆக, இவ்வாழ்வாரும் பகவத்ப்ரவணராகை யன்றிக்கே விஷயப்ரவணராயிருந்தாரென்று பூர்வவ்ருத்தம்சொல்லிற்றாயிற்று. இப்படியிருக்கு மிவரை ஈஶ்வரன் திருத்தின ப்ரகாரமென்னென்ன; அத்தை

(க) (ஈ)

(உ)

லையே. †"இவர் கண்ணால் காண்கிற விஷயங்களுக்கு அவ்வருகறியா திருக்கிறாராகில், நம்மையும் அவ்விஷயங்களோபாதி இவர்கண்ணுக் கிலக்காக்கினால் விரும்பாதொழியாரிறே" என்றுபார்த்து, உகந்தருளின நிலங்களிலேவந்து ஸந்நிதிபண்ணி இவரை விஷயீகரித்துத் தன்படிகளை அடையக் காட்டிக்கொடுத்துத், தன்னாலல்லது செல்லாதபடிபண்ணி இவரை அநுபவிப்பித்து, இங்கேயிருந்தே பரமபதத்திலுள்ளார்படி யாம்படிபண்ணி, அத்தேசப்ராப்தியையுமிவர்க்குப் பண்ணிக்கொடுத்தானென்கிறது - † இப்ப்ரபந்தங்களெல்லாவற்றாலும்.

†இவர்பக்கல் அத்வேஷமும் விஷயங்களினுடைய†லாகவமுமே இவரை மீட்கைக்குப் பரிகரமாகவும், இவருடைய ரஸிகத்வமே தன் வாசியறிகைக்குப் பற்றாசாகவும், "அநாதிகாலம் பண்ணின பாபாம்சத்தை நம்க்ருபைக்கு விஷயமாக்குவோம்" என்றுபார்த்து, இவர் விஷயங்களின் வாசியறிந்து தன்னை யறிகைக்குக், †கிழிச்சீரை யோடே தநத்தைக் கொடுப்பாரைப் போலே தனக்கு வாசகமான திருமந்த்ரம் முன்னாகத் தன் ஸ்வரூபரூப குணவிபூதிகளை அடங்கக்காட்டிக் கொடுக்கக், கண்டநுபவித்து, "அயோக்யனான வென்னை அதுதானே ஹேதுவாக விஷயீகரித்தான்" என்று க்ருதஜ்ஞராகையாலே ஒருகால் சொன்னதை ஒன்பதின்கால் சொல்லிக் கூப்பிடுகிறார்.†பகவத்விஷயத்தில் நேர்கொடு நேர் செய்யலாவதொன்றில்லை, செய்யவேண்டுவது மொன்றில்லை; பண்ணின உபகாரத்துக்குக் க்ருதஜ்ஞராமித்தனையே வேண்டுவது, அசித்வ்யாவ்ருத்தி தோற்ற. ... ... *

அருளிச்செய்யாநின்றுகொண்டு ப்ரமாணமும்காட்டுகிறார், (இவர்கண்ணால்) இத்யாதி. (இப்ப்ரபந்தங்களெல்லாவற்றாலும்) என்றது - ஆறுப்ரபந்தங்களாலு மென்றபடி. அர்ச்சாவதார ப்ராவண்யாதிகள் இப்ப்ரபந்தங்களிலே யுண்டாகையால் ஈஸ்வரன் இவற்றைக்காட்டித் திருத்தினது அர்த்தஸித்தம்.

இவரைத்திருத்துகைக்கு நிமித்தத்தையும், முதல் திருமொழியின் தாத்பர்யத்தையு மருளிச்செய்கிறார், (இவர்பக்கல்) இத்யாதி. (லாகவம்) என்றது- அல்பாஸ்த்திரத்வாதிகள். (கிழிச்சீரை) த்ரவ்யமிருந்த புடைவை. க்ருதஜ்ஞரானால் ப்ரத்யுபகாரம் பண்ணாதே கூப்பிடுவானென்னென்ன; அருளிச் செய்கிறார். (பகவத்) இத்யாதி.... ... ... *

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

திருமங்கையாழ்வாரருளிச்செய்த

பெரிய திருமொழி.

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோ
டவர்தரும் கலவியே கருதி
ஓடினே னோடி உய்வதோர் பொருளா
லுணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன்நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். (க)

பதம்.	உரை.
பெருந்துயர்	மிகுந்த துன்பத்துக்குக்கொள்கலமாய்
இடும்பையில்	துன்பங்களுக்கெல்லாம் ஹேதுவான சரீரத்திலே
பிறந்து	உண்டாய்
கூடினேன்	சரீரமென்றும் ஆத்மாவென்றும் பகுத்தறியக் கூடாதபடி ஒன்றாய்ப்பொருந்தினேன்;
கூடி	இப்படி நெடுங்காலம் பொருந்தியிருந்து
இளையவர்	யுவதிகளான ஸ்த்ரீகள்,
தரும்	கொடுக்கிற, [யே
கலவியே	ஸம்ஶ்லேஷத்தை
கருதி	நினைத்து
அவர் தம்மோடு	அவர்கள்போன அடிவழியே
ஓடினேன்	பின்தொடர்ந்து ஓடினேன்;
ஓடி	இப்படி ஓரிடத்திலும் கால்தாழாதே விஷயங்கள்தோறும் விசேஷம் தேடிக்கொண்டோடி
மனத்தால்	விஷயங்களிலே சென்ற சிந்தையாலே
வருந்தினேன்	து:க்கத்தை அநுபவித்தேன்; பின்பு,
வாடினேன்	(கொள் கொம்பில்லாக் கொடிபோலே) வாடிப்போந்தேன்;
வாடி	வாட்டத்தையுடையனாயிருந்து
உய்வது	உஜ்ஜீவநத்துக் குடலான
ஓர்பொருளால்	ஒரு நல்ல அர்த்தத்தாலே-(ஸர்வேஶ்வரன் க்ருபையாலே)
உணர்வு எனும்	ஜ்ஞாநமாகிற
பெரும்	பெரிய
பதம்	ஸ்த்தாநத்தை [து
தெரிந்து	இருந்தபடியே அறிந்து
நாடினேன்	"பகவத்விஷயம் நன்று, ஸம்ஸாரம் தீது" என்று ஆராய்ந்தேன்;
நாடி	ஆராய்ந்து
நான்	திருநாமம் சொல்லுகைக்கு யோக்யதையில்லாத நான்
நாராயணா என்னும்	நாராயணா என்கிற
நாமம்	திருநாமத்தை
கண்டு கொண்டேன்	காணப்பெற்றேன். ()

வ்யா. —†முதற்பாட்டு.—நம்மாழ்வார், ஸர்வேஶ்வரனை ஸாக்ஷாத்கரித்தவநந்தரம் தாம்பெற்ற பேறறியாதே (க) "இக்கின்றசீர்மை இனியாமுறுமை" என்று கீழ்நின்ற நிலையை அநுஸந்தித்தாற்போலே, இவரும், பகவத்விஷயீகாரம் பிறந்தபின்பு தாம்கீழ்நின்ற நிலையையெல்லாம் அநுஸந்தித்து †(வாடினேன்) என்கிறார்.

(வாடினேன்) † கொம்பை இழந்ததளிர்போலே; † ஆஶ்ரயத்துக்கு அழிவில்லாமையாலே. இன்னும் நோக்குவோம் என்னில்; நோக்குகைக்கு யோக்யதை யுண்டென்கை. (உ)†"𑌅𑌨𑌨𑍍𑌯𑌾 𑌰𑌾𑌘𑌵𑍇𑌣𑌾𑌹𑌮𑍍 - அநந்யாராகவேணாஹம்" என்கிற பிராட்டியோடொத்த ப்ராப்தி ஸகலாத்மாக்களுக்கு முண்டானபின்பு இப்ப்ராப்தியை யுணர்ந்தால் அநாதிகால மிழந்தவர்க்கு "வாடினேன்" என்னத் தட்டில்லை யிறே. (ங)†[𑌯𑌶𑍍𑌚 𑌰𑌾𑌮𑌂 𑌨 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍𑌤𑍁-யஶ்ச ராமம் நபஶ்யேத்து.] "𑌰𑌾𑌮𑌮𑍍 - ராமம்" என்றது - கண்ணுக்குவகுத்த விஷயத்தை; காணுதிருக்கிறன் யாவனொருவன். †[𑌯𑌃-யஃ] †எத்தனையேனு முயர்ந்தவனுகவுமாம். [𑌤𑍁 - து.] †இது தப்பினும். †தப்பாதது தப்பினல் வருமது இவ்வளவன்று என்கைக்காக விசேஷிக்கிறது.

அரு.—முதற்பாட்டு—(வாடினேன்) இத்யாதி. தம்மை அவன் கடாக்ஷித்தால் அவனை யநுபவிக்கு மத்தனைபோக்கிப், பூர்வ வ்ருத்தத்தைத் தாம் சொல்லுவானென்னென்ன; அருளிச்செய்கிறார், (நம்மாழ்வார்) இத்யாதி. (வாடினேனென்கிறார்)என்றது - பூர்வவ்ருத்தத்துக்கெல்லாமுபலக்ஷணம்.

உலர்ந்தேனென்னுதே, "வாடினேன்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (கொம்பை) இத்யாதி. (ஆஶ்ரயத்துக்கு)-ஆத்ம ஸ்வரூபத்துக்கென்றபடி. (ச) "வாடிவாடுமிவ்வாணுதல்" என்கிறபடியே, பிராட்டி விஷயத்தில் சொல்லத்தக்க வார்த்தையைத் தாமிப்போது சொல்லக்கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார், (அநந்யா) இத்யாதி. தாய்மார் "வாடிவாடும்" என்று சொன்னார்களேயாகிலும், இவர்தாம் அவ்விஷயத்தில் இவ்வார்த்தையைச் சொல்லித் தம்மைத்தாமே நிந்தித்துக்கொள்ளக் கூடுமோவென்ன; த்ருஷ்டாந்தமுகேந வருளிச்செய்கிறார், (யஶ்சராமம்) என்றுதொடங்கி, (வாடினேனென்றல்லது வார்த்தையில்லையிறே) என்னுமளவும். "யஃ" என்று மேலெடுத்த ப்ரதீகத்தை, (விஷயத்தை) என்ற வநந்தரம் அநுஸந்தித்துக்கொள்வது. ப்ராதாந்யே ச (ஞ) காரமென்றருளிச்செய்கிறார், (எத்தனையேனு முயர்ந்தவன்) இத்யாதி. (இது) என்றது-தன்னுடைய ஸேவையின்கை. (தப்பாதது) - பெருமாளுடைய கடாக்ஷம். "ராமஶ்ச" என்றந்வயித்து, அதிக்ரு

(க) தி - வி - க.
(ங) ரா - அ - கள - உச.
(உ) ரா - ஸு - உக - கரு.
(ச) தி - வாய் - உ - ச - க.

[यञ्च रामो न पश्यति - யஞ்ச ராமோ நபஶ்யதி] †எத்தனையேனும் சிறியாரும் இவர் கண்பார்வைக் கிலக்காகாதாரில்லை. [यम् - யம்] எத்தனையேனும் சிறியவனென்கிறது. †எத்தனையேனும் சிறியாரிறே இவர் கண்ணிற்பார்வைக் கிலக்காவார். (க) †"யாருமோர் நிலைமையனென வறிவரிய வெம்பெருமான் யாருமோர் நிலைமையனென வறிவெளிய வெம்பெருமான்" ப்ரஹ்மாதிகளுடைய ஜ்ஞாநத்துக்கும் அவிஷயமாயிருக்கும். ஓரிடைச்சிக்கும் வேடனுக்கும் கைபுகுந்திருக்கும். †எத்தனையேனு முயர்ந்தவனாகிலும் பெருமானுடைய ஒருநாளைப் புறப்பாடு காணானாகில் அவன் பெரியனல்லன்; எத்தனையேனும் சிறியனானவன் பக்கலிலும் தப்பாது அவருடைய பார்வை; தப்புகிறான் யாவனொருவன், அவன் அவஸ்துக்களோடு மெண்ணப்படான்; எண்ணப்படாமையில்லை எண்ணப்படும் - எல்லாரும் நிந்தித்து "சீ சீ" என்னப்படும். இவனை நிந்திப்பார் வஸிஷ்டாதிகள் தொடக்கமானார் நால்வரிருவரோ வென்னில்; [निन्दितस्स्ववसेल्लोके - நிந்திதஸ்ஸவஸேல்லோகே] [लोके-निन्दितः - லோகே - நிந்திதஃ] இவனை நிந்திக்கைக்குரிய ரல்லாதாரில்லை. †விஷயப்ரவணனானவன், இப்போது பழியாய் மேல் நரகமா யிருக்கச்செய்தே, தான் "நல்லது செய்கிறோம்" என்றிருக்குமிறே; அப்படி தான் "நல்லது செய்கிறோம்" என்றிருக்குமோ வென்னில்; [स्वात्माप्येनं विगर्हते - ஸ்வாத்மாப்யேநம்விகர்ஹதே] தானும் தன்னை நிந்தித்துக் கொள்ளும். † திருக்கைத்தல மிழந்தவன் "இற்றைப் புறப்பாடு காணப்பெறாத நாம் கர்ப்பூரமும் எலுமிச்சங்காயும் பெற்றோமாகில் முடிந்து பிழைக்கலாயிற்று" என்றிருக்குமிறே; ஒருநாளைப் புறப்பாடிழந்தார் வார்த்தை யிதுவானால், அநாதிகால மிழந்தவர்க்கு "வாடினேன்" என்றல்லது வார்த்தை யில்லையிறே. (வாடினேன்) என்றவிது தான் எவ்வவஸ்தையைப் பற்றச்சொல்லுகிறவார்த்தை? விஷய ப்ரவணராய்ப் போந்தபோது அவற்றை யநுபவித்துக்களி

ஷ்டனையும் கடாக்ஷிக்குமவரென்கிற ப்ராதாந்யத்தை விவக்ஷித் தருளிச்செய்கிறார், (எத்தனையேனும் சிறியாரும்) இத்யாதி. "யம்" என்றது நிக்ருஷ்டவிஷயமாவானென்னென்ன; அருளிச்செய்கிறார், (எத்தனையேனும்) இத்யாதி. உத்க்ருஷ்டரைக் கடாக்ஷியாமல் நிக்ருஷ்டரைக் கடாக்ஷிப்பரென்னுமதுக்கு ஸம்வாதம், (யாரும்) இத்யாதி. பூர்வார்த்தத்தில் தாத்பர்யத்தை யருளிச்செய்யா நின்றுகொண்டு, "நிந்திதஃ" இத்யாதிக்கவதாரிகை யருளிச்செய்கிறார், (எத்தனையேனும்) இத்யாதி வாக்யஷட்கத்தாலே. மேலுக்கவதாரிகை, (விஷய) இத்யாதி. ஆழ்வார்தம்மை நிந்தித்தமைக்குப் பின்னையுமொரு த்ருஷ்டாந்தம், (திருக்கைத்தலம்) இத்யாதி.

(க) தி - வாய் - க - ங - ச.

த்துப் போருகையாலே வாட்டமில்லை; பகவத்விஷயத்தில் † கை வைத்தபின்பு தானே வாட்டமில்லை; ஸ்வரூப ஜ்ஞாநம்பிறந்து பூர்வ வ்ருத்தத்தை யநுஸந்தித்தபோதைவார்த்தை. † ப்ராப்திஸமயத்திலிறே பூர்வவ்ருத்தத்தை ஸ்மரியாதொழிவது, (க) "நோபஜநம் ஸ்மரந்-நோபஜநம்ஸ்மரந்" என்னு‡மளவில் வந்ததில்லையிறே; † ஜ்ஞாநலாபவேளையாகையாலே பூர்வவ்ருத்தந்தானிவர்க்கு ப்ரத்யக்ஷம் போலேயிறே தோற்றுகிறது.

†(வாடி) என்கிற இவ்வநுபாஷணம், இரண்டிடத்திலும் †பொருள்பெற்றுக் கிடக்கிறது;-† அநாதிகாலம் இவ்விழவு ப்ரவ்ருத்தமாய்ப் போந்ததென்றும், மேலே ஓரநர்த்தத்தை விளைத்ததென்றும் தோற்றுகிறது;-†விஷயப்ராவண்யம் காதாசித்கமாய் அநுதாபம் பிறந்து மீளுகையன்றிக்கே அநாதிகாலமிதுவே யாத்ரையாய்ப் போந்ததென்றும், இவ்வளவன்றிக்கே இதுக்குமேலே விளைந்த தோரநர்த்தத்தைச்சொல்ல வொருப்படுகையும் தோற்றுகிறது. மேல்விளைந்த அநர்த்தந்தானேதென்னில்; (வருந்தினேன் மனத்தால்) மாநஸமான க்லேசத்தை யநுபவித்துப் போந்தேன். †இந்த்ரியங்கள் விஷயங்களிலே ப்ரவணமாய், அவற்றை யநுபவிக்கக்கோலி அவற்றை

(கைவைத்த) - இச்சரீரத்தோடே பகவதநுபவம் பண்ணின. (வாட்டமில்லை) என்றவநந்தரம், எங்கே என்னில் என்றுசேஷம். ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தால் பூர்வவ்ருத்தஸ்மரணம் வருவானென்னென்ன; அருளிச்செய்கிறார், (ப்ராப்தி) இத்யாதி வாக்யத்வயத்தாலே. வாடினேன் - விஷயப்ரவணனாய்க் கெட்டேனென்னுமது இவ்வாழ்வார்க்குச்சேராது, விஷயபரராயிருந்தபோது களிப்புண்டாகையாலே கெட்டேனென்னக்கூடாமையாலே; இப்போது விஷயபரதை யில்லாமையால் ஸுதராம் கெட்டேனென்னக் கூடாது என்னும் சங்கையிலே யருளிச்செய்கிறார், (ஜ்ஞாந) இத்யாதி. முன்புற்றவிஷயஸங்கம் இப்போது ப்ரத்யக்ஷம்போலே விசதமாகத் தோற்றுகையாலே இப்போது க்லேசம் பிறக்கையாலே சொல்லுகிறாரென்று கருத்து.

"வாடினேன், "வருந்தினேன்" என்னுமளவும் பௌர்வாபர்யம் தோற்றியிருக்கவும் "வாடி" என்ற ல்யபந்தமான புநருக்திக்கு ப்ரயோஜநம் காட்டுகிறார், (வாடி) இத்யாதி. இத்தால் - கீழ் "வாடினேன்" என்றதுக்குச் சிரகாலஸம்பந்தமும், மேலேவருகிறதுக்கு அத்யந்தஸந்நிஹிதத்வமும் தோற்றுவிக்கையாலே, அதுக்கு ப்ரயோஜந முண்டென்றதாயிற்று. (பொருள்) - ப்ரயோஜநம். சிரகாலஸம்பந்தத்தையும் மேலே ஸந்நிஹிதமாக ஓரநர்த்த முண்டென்னு மத்தையு முபபாதிக்கிறார், (அநாதி) இத்யாதி. கீழ்வாக்ய விவரணம், (விஷய) இத்யாதி. சப்தார்த்தமருளிச்செய்து, மாநஸமான க்லேசத்துக்கு மூன்றுஹேதுக்களைக்காட்டா நின்றுகொண்டு, தாத்பர்ய மருளிச்செய்கிறார், (இந்த்ரியங்கள்) இத்யாதி வாக்யத்வயத்தாலே.

(க) சாந்தோ - அ - கஉ - ங. ‡ (பா) மளவும்.

லபியாமையாலும், லபித்தாலும் அவற்றி லநுபவிக்கலாவதொன்றில்லாமையாலும், மாநஸமான க்லேசத்தை யநுபவித்துப் போந்தேன்; ஸர்வேந்த்ரியங்களுக்கும் கந்தமான மநஸ்ஸை ‡ ப்ரத்யகர்த்த ப்ரவணமாக்க மாட்டாமையாலே, மாநஸமான க்லேசத்தை யநுபவித்தேன். இத்தால் சொல்லிற்றாயிற்று - சப்தாதி விஷயங்களிலே ப்ரவணனாய்த் திருவடிகளை யொருநாளும் நினைக்கப் பெற்றிலேனென்றபடி. (பெருந்துயரிடும்பையிற் பிறந்து) †விஷயங்களிலே ருசியைப்பிறப்பித்து வாஸநையை யுண்டாக்கி, ராகத்வேஷங்களைமிகுத்து, † இதிலுண்டான அவித்யாகர்மங்களும் சரீராரம்பஹேதுவாகவந்து பிறந்தேன். துயரென்று - து:க்கம்; இடும்பை யென்றும் - து:க்கம்; இத்தால் - சரீரந்தான் து:க்காயதநமுமாய் து:க்கஹேதுவுமா யிருக்குமென்கை. து:க்காயதநமுமாய் மேலே அநேக து:க்கங்களை விளைக்கவும் வற்றாயிருக்கை.

†"பெருந்துய ரிடும்பையிற் பிறந்து கூடி, வாடினேன்" என்றதிலே, முதலிலே, "வாடினேன்" என்பானென் னென்னில்; †சர்மஸம்பந்தம் அநாதியாய், அசித்ஸம்ஸர்க்கமும் ப்ரவாஹரூபேண நித்யமா யிருக்கையாலே, நடுவே யொன்றைப் பிடித்துச சொல்லுகிறார். (பிறந்து;) ... மரணங்களில்லாத ஆத்மா "செத்தான், பிறந்தான்" என்று வ்யவஹாராஸ்பதமாகையாலே. (கூடினேன்) நித்யமாய் ஏகரூபமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய் பகவச்சேஷமான ஆத்மாவை "[illegible], [illegible]-தேவோஹம், மநுஷ்யோஹம்" என்ன

---

‡ப்ரத்யகர்த்தமென்றது - ஜீவேஶ்வரத்வங்களை. சரீரத்தை "பெரிதான துயர்" என்றும் "இடும்பை" என்றும் இப்படி லக்ஷணயாவருளிச் செய்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (விஷயங்களிலே) இத்யாதி. இதில்-சரீரத்தில்.

அர்த்தஸ்வபாவத்தாலே, முந்துற "பெருந்துயர் இடும்பையில்பிறந்து கூடினேன், கூடி இளையவர்தம்மோடு அவர்தருங் கலவியேகருதியோடினேன், ஓடி மனத்தால் - வருந்தினேன், வருந்தி வாடினேன், வாடி உய்வதோர் பொருளால் - நாடினேன், நாடி நான் நாராயணாவென்னும் நாமம் - கண்டுகொண்டேன்" என்றந்வயித்தர்த்தம் சொல்லலாயிருக்க, இருந்தபடியே அந்வயித்து அர்த்தம் சொல்லுகை சேருமோ வென்னும் சங்கையை யநுவதிக்கிறார், (பெருந்துயர்) இத்யாதி. "கூடி" என்றது - கீழ்ப்பதங்களையும் மேல்பதங்களையும் அர்த்த ஸ்வபாவத்துக் கநுகுணமாக எடுக்கவேண்டும் பதங்களுக்கும் உபலக்ஷணம். இத்தைப் பரிஹரிக்கிறார், (கர்ம) இத்யாதி. இப்போது ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்து கீழ்ப்பட்டப்ரமாதங்களை அநுஸந்திக்குமவர்க்கு சரீரஸம்பந்தாதிகள் ப்ரவாஹதோ நித்யங்களாகையாலே, ஒன்றை யிட்டுக் க்ரமேண வருளிச்செய்கிறாரென்று கருத்து. "கூடினேன்" என்றதுக்கு ஒருகாலாவதி சொல்லாமையாலே பலித்த வர்த்தமருளிச்செய்கிறார்,

லாம் படியானபடி. (கூடினேன்) †அசித்ஸம்ஸர்க்கந்தான் ஸத்தா ப்ரயுக்த மென்னலாம்படி பொருந்தினபடி. (கூடினேன்) என்கையாலே - †இதுதான் ஆத்மாவுக்கு ஸ்வரூபமன்று, ஔபாதிகம், - வந்தேறி என்னுமிடம் தோற்றுகிறது. †ராஜபுத்ரன் வழிபோகாநிற்க வேடர்கையிலே யகப்பட்டாற்போலேயிறே ஆத்மாவுக்கு அசித்ஸம்ஸர்க்கந்தான் வந்தபடி. †அயஃபிண்டத்தை அக்நியினருகே வைத்தால் அக்நி பரமாணுக்கள் ஸூக்ஷ்மரூபேண அதிலே ஸங்க்ரமித்தாதல் வாஸனையாலே யாதல் அதினுடைய ஔஷ்ண்யஸ்வபாவத்தையும் நிறத்தையும் பஜித்து அதுதா னென்னலாமா போலே, இவ்வாத்மாவும்அசித்ஸம்ஸர்க்கத்தாலே அதுதானென்னலாம்படி அசித்கல்பமானபடி. † பரமாணுப்பற்று சிவப்பு மாறினாலும் வாஸனையாலே சுடும்.

(கூடி) †சரீரவிஸ்லேஷம் அஸஹ்யமாம்படி பொருந்தினபடி. †ஜ்ஞாநம் பிறந்தால் சரீர விஸ்லேஷந்தான் ப்ரார்த்தித்துப் பெறவேண்டும்படியானபடி. †கூடிஎன்கையாலே-அநாதிகாலம் இத்தோடே

(அசித்ஸம்ஸர்க்கந்தான்) இத்யாதி. சிலநாள் பிரிந்தவற்றுக் கன்றோ கூடுகை யென்னலாவது, ஸத்தாப்ரயுக்தம் என்னுமாபோலே யிருந்தால் இச்ஶப்தம் ப்ரயோகிக்கப்போமோவென்ன; அருளிச்செய்கிறார், (இதுதான்) இத்யாதி. பின்பொருநாள்வரையிலே கழியக்காண்கையாலே ஜ்ஞாநம் பிறந்த விவர் "கூடினேன்" என்னலாமே என்று கருத்து. "வந்தேறி" என்னுமத்தை த்ருஷ்டாந்தமுகேந விவரிக்கிறார், (ராஜபுத்ரன்) இத்யாதி. இப்படி ஔபாதிகமானால் "தேவோஹம்" என்று தத்ஸ்வரூபமாக ப்ரமிக்கக் கூடுமோ வென்ன; அருளிச்செய்கிறார், (அயஃபிண்ட) இத்யாதி. வாஸனையாலேயாதல் சிரகால ஸம்பந்தத்தாலே யாதலென்றபடி. வாஸனையாலே "அதுதான்", என்னலாம்படி யென்னுமதெங்கே யென்ன; அருளிச்செய்கிறார், (பரமாணு) இத்யாதி.

"கூடினேன்" என்றதுக்கு "தேவோஹம்" என்று தாதாத்ம்ய ப்ரமம் வரும்படி கூடினேனென்று தாத்பர்ய மருளிச்செய்து, அதுக்குச் சரீரவிஸ்லேஷமஸஹ்யமாம்படி கூடினேனென்று தாத்பர்யாந்தரம் விவக்ஷித்து, அநுபாஷணத்துக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (சரீர) இத்யாதி. சரீரவிஸ்லேஷ மஸஹ்யமாவதெப்போதென்ன; அருளிச்செய்கிறார், (ஜ்ஞாநம்) இத்யாதி. முந்தின தாத்பர்யத்திலே அநுபாஷணத்துக்கு ப்ரயோஜநத்தை யருளிச்செய்கிறார், (கூடியென்கையாலே) இத்யாதி. இரண்டாம் தாத்பர்யத்திலே ப்ரயோஜநம் - சரீரவிஸ்லேஷ மஸஹ்யமான மாத்ரமன்றிக்கே ஸ்த்திதிஹேதுவானவன் எகயத்நம் பண்ணும்படிகூடி மேலுமார்த்தம் விளைத்துக்கொண்டமையை ஸூசிப்பிக்கைகயென்று கண்டுகொள்வது.

பொருந்திப்போந்தமையும் இதுக்குமேலே ஓரநர்த்தம் விளைந்ததென்றும் தோற்றுகிறது.

மேல்விளைந்த அநர்த்தந்தானென்னென்னில்; (இளையவர் தம்மோடவர்தரும் கலவியே கருதியோடினேன்) (இளையவர்) "சப்தாதிவிஷய ப்ராவண்யம் அநர்த்தம்" என்று ஆராயவுமொட்டாதே, பகவத்விஷயத்தில நன்மையையறிந்து அதில § மூளவுமொட்டாதே பருவத்தையிட்டுப் † பகட்டித்துவக்குவர்கள். (தம்மோடு) (க) †"𑌛𑌾𑌯𑌾𑌵𑌾𑌸𑌤𑍍𑌵𑌮𑌨𑍁𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍-சாயாவாஸத்வமநுகச்சேத்" என்கிறதுவுமெல்லாமிங்கே;-†நல்லதொரு பூமாலைகண்டால் தன் தலையிலே வைத்தல் தன்னையொருவனுக நினைத்திருத்தல் செய்யாதே அவர்கள் போன அடிவழியேபோமித்தனை. (உ)†"𑌯𑍇𑌨𑌯𑍇𑌨𑌧𑌾𑌤𑌾𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌤𑍇𑌨𑌤𑍇𑌨 𑌸𑌹𑌾𑌗𑌚𑍍𑌛𑌤𑌿-யேநயேநதாதாகச்சதி தேநதேநஸஹகச்சதி" என்கிறதுவுமெல்லாமிங்கே. (அவர்தரும்கலவி)†கிட்டினபோது சிரித்து வார்த்தைசொல்லியிருந்து, "இனி யிவன்கைப்பட்டான்" என்றறிந்தால் தங்களைக்கொண்டு எழவாங்கியிருப்பர்கள். (கலவியேகருதி) அநுபவித்து என்பது அநுபாவ்யந்தானுண்டாகிலிறே, இவனுடைய மநோரதமேயாகையாலே (கருதி) என்கிறது. †மநோரதந்தான் மாறுதிறே, அதுக்கடியானபாபம் கிடக்கையாலே. †அநுபவிக்கலாவதொன்றில்லாவிட்டால் மீளவிறே யடுப்பது, அவர்கள் இருய்க்கவிருய்க்க "நன்மையுண்டு" என்று மேன்மேலென மநோரதம் செல்லாநிற்குமாயிற்று, †அதுக்கடியானபாபம் கிடக்கையாலே. †ஒருவிஷயத்திலநுபவிக்கலாவதொன்றில்லாவிட்டால் மீளலாமிறே; அத்தைவிட்டு மற்றொன்றறியப்போய் அதிலுமொன்றும் காணவிட்டால் பின்னையுமவ்வருகே போகாநிற்குமத்தனையிறே. (ஓடினேன்) †விஷயங்கள் தன்னில் அரைக்ஷணம் கால்தாழப்பண்ணவல்லதொரு

(பகட்டி) - அஜ்ஞாநத்தை விளைத்து. "தம்" என்றத்தாலே தோற்றின ப்ராதாந்யத்தை விவக்ஷித்தருளிச்செய்கிறார், (சாயா) இத்யாதி. விவரணம், (நல்லது) இத்யாதி. ப்ரமாணாந்தரகதநமுகேந பரிஹரிக்கிறார், (யேந) இத்யாதி. "கலவியே கருதி" என்னலாயிருக்க, "அவர்தரும்" என்று விசேஷித்தவருடைய ஹார்த்தபாவம், (கிட்டின) இத்யாதி. தௌர்லப்யம் தோற்ற விசேஷித்தாரென்று கருத்து. "கலவியே கருதி" என்ற ஏவகாரத்தாலே - வேறொன்றைக்கருதுகை தோற்றுமையாலே யருளிச்செய்கிறார், (மநோரதம்) இத்யாதி. ஹேத்வந்தரம், (அநுபவிக்க) இத்யாதி. இருய்க்கைக்கு ஹேது, (அதுக்கடியான) இத்யாதி. மேலுக்கவதாரிகை, (ஒருவிஷயத்தில்) இத்யாதி. போனேன் என்னாதே "ஓடினேன்" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார், (விஷயங்கள்) இத்யாதி வாக்யத்வயத்தாலே. ஒருவிஷயத்தை

§ (ப) பொருந்தவுமொட்டாதே.

(க) மூலஸம்ஹிதை. (உ) ப்ரமஸம்ஹிதை.

விஷயந்தானில்லையிறே; போகோபகரணம் கொண்டுபுக்கு ஸ்நாநத்துக்கீடாகப் புறப்படும் விஷயமிறே. †இவற்றின் தோஷத்தைத் தானுமறிந்து, அத்தை மறைக்கைக்கீடான போகோபகரணங்கள் கூட்டிக்கொடுத்திறே தானுமநுபவிக்கப்புகுவது. ப்ரத்யக்ஷ பரிஞ்சித்கரமாகிறவிஷயமிறே. †இவற்றினுடைய தோஷந்தான் சாஸ்த்ரங்கொண்டறியவேண்டாதே கண்ணாலே காணலாம்படி யிருக்கச்செய்தே, கண்டு மீளவொண்ணாதபடி யிருக்கிறதிறே! § †விஷயப்ராவண்யமாவது-பாம்புபடத்தை விரித்துக்கொண்டுநின்றால் அது அள்ளிக்கொள்ளப்புகுகிறதறியாதே அதின்நிழலிலே யொதுங்கத்தேடுமாபோலே யிருப்பதொன்றிறே. † உயிர்க்கழுவிலேயிருந்தவன் பிபாஸையும் வர்த்தித்துத் தண்ணீரும் குடித்துப்பிறக்கும் ஸுகம்போலே யிறே விஷயாநுபவத்தால் பிறக்கும் ஸுகமாகிறது. துஃக்கங்களிலே ஒன்றை ஸுகம் என்று நிர்வசித்துக்கொள்ளுகிறானித்தனையிறே. (க) "ஸுகதுஃகலக்ஷண-ஸுகபாவைசலக்ஷணு" என்கிறவதுவேயிறே ஸுகம். (ஓடி) †முன்பெல்லாமிப்படியேயாய்ப் போரச்செய்தே ஒரு நன்மையுண்டாயிற்றென்று தோற்றுகிறது. ஸர்வசக்தி "ரக்ஷிப்போம்" என்று கைநீட்டி யெடுக்கப்பார்த்தாலும், எட்டாதபடி கைகழியப்போனேன்.

(உய்வதோர்பொருளால்) †விஷயங்களிலே கைகழியப்போய் ஓடி இளைத்துவிழுந்தவிடத்திலே, "இனி இவன்தானாக மீளமாட்டான்" என்று அதுதானே ஹேதுவாக ரக்ஷிக்க ஒருப்பட்ட ஸர்வேஶ்வரன்-க்ருபையாலே. †உஜ்ஜீவநோபாயமாயிருப்பதொரு நல்ல ஆர்

யநுபவித்து ஸ்நாநத்துக்குப் புறப்படும்படி கண்டால் ஓடக்கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார், (இவற்றின்) இத்யாதி. வ்யாக்யாதாவினீடுபாடு, (இவற்றினுடைய) இத்யாதி. த்ருஷ்டதோஷமன்றிக்கே மேலு மநர்த்தகரமென்கிறார், (விஷய) இத்யாதி. இப்படி தோஷ பூயிஷ்டமானதிலே இவன் ப்ரமிப்பானென்னென்ன; அருளிச்செய்கிறார், (உயிர்க்கழு) இத்யாதி வாக்யத்ரயத்தாலே. "ஓடி" என்கிற அநுவாதத்தாலே - கீழே "ஓடினேன்" என்றவிடத்தில் யாத்ருச்சிகஸுக்ருதாதிகள் ப்ரஸங்கிக்க வொண்ணாதபடியோடுகையை ஸூசிப்பிக்கை அதுக்குப்ரயோஜநமென்றும், லயப்பாலே - ஓரிடத்தில் இளைப்பாய்விழுந்தமை தோற்றுகையால் அதுவே மேல் அவன் க்ருபைக்கு ஹேதுவாகிறதென்றும் விவக்ஷித்தருளிச்செய்கிறார், (முன்பெல்லாம்) இத்யாதி வாக்யத்வயத்தாலே.

"ஓடி" என்றது ஹேதுவானமையைக் காட்டா நின்றுகொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார் (விஷயங்களிலே) இத்யாதி. சப்தார்த்தம், (உஜ்ஜீவந)

---

§ (பா) விஷயப்ராவண்யந்தான் ஆடுகிற பாம்பின்நிழலிலே யொதுங்கி விடாய்தீர நினைக்குமோபாதியிறே. (க) வி - பு -

த்தத்தாலே. நல்ல அர்த்தமென்கிறது - பகவத்க்ருபையை, கௌரவத்தாலே "உய்வதோர்பொருள்" என்று மறைத்துச்சொல்லுகிருர்; நாலாம்பாட்டிலே, "ஆழியானருளே" என்று, அதுதன்னைத் தெரியவருளிச்செய்வர். †நம்மாழ்வார், அவ்வளவு போகப்பொருமை நடுவே "மயர்வறமதிநலமருளினன்" என்ருரிறே. (க) "நானே நாநாவிதநரகம் புகும் பாவம் செய்தேன்" என்றும், (உ) †"பாவியேனைப் பலநீகாட்டிப் படுப்பாயோ" என்றும் நானே விநாசத்துக்கிடான பரிகரம்தேடிக்கொள்ள, எனக்கு உஜ்ஜீவிக்கலாவதொரு உபாயமுண்டாயிற்று, (ங)† *அஸங்நேவவானவென்னை (ங) "స న్తమేనమ్-ஸந்தமேநம்" என்னப்பண்ணிற்ருரு நல்ல அர்த்தமுண்டாயிற்று. (உணர்வெனும் பெரும்பதம்) (ச) †[విజ్ఞానం యదిదం ప్రాప్తమ్-விஜ்ஞாநம் யதிதம்ப்ராப்தம்]†கிடக்கைப்பாயிலே வெள்ளம் கோத்தாற்போலே. (பெரும்பதம்) "அவன்ருன் வேண்டா, தத்விஷய ஜ்ஞாநமேயமைையும்" என்னும்படி இதினுடைய பெருமை. (திரிந்து) †விஷயங்கள்

இத்யாதி. நாலாம்பாட்டிலே அருளைச்சொன்னுல் முதற்பாட்டிலும் அதுவேயாகவேணுமோவென்ன; அருளிச்செய்கிருர், (நம்மாழ்வார்) இத்யாதி. இத்தால் - ஏககண்டராகையாலே இதுவே விவக்ஷிதமென்று கருத்து. "பலநீகாட்டி" என்னுமதில் த்ருஷ்ட்டியின்றிக்கே, "பாவியேனை" என்றதிலே நோக்காக வருளிச்செய்கிருர், (பாவியேனை) இத்யாதி. இத்தால் - "உய்வது" என்னும் அம்சத்துக்குக் கருத்து சொல்லிற்ருயிற்று. "ஓர்" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிருர், (அஸங்நேவ) இத்யாதி. உணர்வாகிற பெரியபதம் - ஸ்த்தாநம் என்று சப்தார்த்தமாய், இத்தைப் பதமாகச்சொன்னருண்டோவென்ன; அருளிச்செய்கிருர், (விஜ்ஞாநம்) இத்யாதி. "స్థానమార్జితమ్ - ஸ்த்தாநமார்ஜிதம்" என்றதிலேநோக்கு. "విజ్ఞానం యదిదం ప్రాప్తం యదిదం స్థాన మార్జితమ్ । జన్మాన్తరేపి మే దేవ మాభూత్తస్య పరిక్షయః-விஜ்ஞாநம்யதிதம்ப்ராப்தம் யதிதம்ஸ்த்தாநமார்ஜிதம் । ஜந்மாந்தரேபிமேதேவ மாபூத்தஸ்யபரிக்ஷயః" అస్యార్థః- యత్ - వేదాన్తప్రసిద్ధమ్, విజ్ఞానమ్, ప్రాప్తమ్- అయత్నలబ్ధమ్, ఇదమేవార్జితమ్-సంపాదయితుమాశాసితమ్, స్థానంయత్, తస్యజన్మాన్తరేపి పరిక్షయోమాభూదితి. அஸ்யார்த்தః - யத் - வேதாந்தப்ரஸித்தம், விஜ்ஞாநம், ப்ராப்தம் - அயத்நலப்தம், இதமேவார்ஜிதம்-ஸம்பாதயிதுமாசாஸிதம், ஸ்த்தாநம்யத், தஸ்யஜந்மாந்தரேபி பரிக்ஷயோமாபூதிதி. ப்ராப்தம் - தானேவந்ததென்று அர்த்தம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிருர், (கிடக்கை) இத்யாதி. "திரிந்து" என்றதுக்கு - மீண்டு என்று அர்த்தமாய், ஹேதுபூர்வகமருளிச்செய்கிருர், (விஷயங்கள்) இத்யாதி. இந்தபாடத்திலே "ஓடி - திரிந்து" என்றந்வயிப்பது.

(க) க - கூ - உ. (ங) தை - ஆந - கூ.
(உ) தி - வாய் - சா - கூ - கூ. (ச) ஜி - ஸ்தோ - கக.

தான் ஸாவதியாகையாலே அவற்றிலநுபவிக்கலாவதொன்றில்லாமை முட்டிமீண்டேன். (தெரிந்து) என்று பாடமாகில், ஜ்ஞாநம் பிறந்தவாறே எல்லாம் இருந்தபடியேதெரிந்தது. ஆகையாலே, முன்பெல்லா மிருட்சியாய்ப் போந்தமை தோற்றுகிறது. (நாடினேன்) ஜ்ஞாநம்பிறந்தவாறே, "நாம் கீழ் பட்டதென்? மேல் படப்புகுகிறதென்?" என்னுமாராய்ச்சி பிறந்தது.

(நாடி) †இதரவிஷயங்களைப் பெறவேணும் என்று புத்திபூர்வமே ப்ரவர்த்தித்தாலும் அநர்த்தாவஹமாமத்தனைபோக்கிப் பலிப்பதொன்றில்லை; பகவத்விஷயத்தில் ஆராய என்றிழிந்தமாத்ரத்திலே பல (ஃப) வ்யாப்தியுண்டு. (நான்) †"ஓடினேன்" என்றநான். ராவணபவநத்திலே நெடுநாள் அவனெச்சில்தின்று வளர்ந்தவன் ஒருமுழுக்கிடாதே ராமகோஷ்டிக்கு ஆளானாற்போலே. † வேல்வெட்டிநம்பியார்,பிள்ளைகிழக்கே§முக்காதமாற்றிலே யெழுந்தருளியிருக்கச் செய்தே, ஒரு † திருக்கார்த்திகையிலே "புறம்பே சிலரைக்கேட்டால் † 'எளியன்' என்றிருப்பர்கள், இதுபரிஹரிக்க வல்லாருமில்லை; இத்தைச் சொல்லிவரக் காட்டவேணும்" என்று ஓராள்கொடுத்து வரக்காட்டினார்; அது என்னென்புதென்னில்; "பெருமாள் கடலைச் சரணம்புகுகிறவிடத்தில் ப்ராங்முகத்வாதி நியமோபேதராய்க்கொண்டு சரணம்புக்கார், இதரோபாயங்களோபாதி ப்ரபத்தியும் ஸஹாயாந்தரஸாபேக்ஷமோ?" என்றுவரக்காட்ட; "அந்த உபாயத்துக்கு உடன்வந்தியாயிருப்பதொன்றன்று, உபாயபரிக்ரஹம்பண்ணினவருடைய ஸ்வபாவத்தாலேவந்தது, ராக்ஷஸஜாதீயராவார் தண்ணியராய் அநதிகாரிகளாயிருக்க, அவர்களிலே யொருவனை ஸ்ரீவிபீ

(அவன்முன் மீளமாட்டான்) என்று கீழேயருளிச்செய்தது - "தெரிந்து" என்றபாடத்தைப் பற்றவென்று கண்டுகொள்வது.

"நாடி" என்ற அநுபாஷணத்துக்கும் - கீழே "நாடினேன்" என்றதுக்குக் கீழ்ப்பட்டதிலே அபுத்திபூர்வகப்ரவ்ருத்தியான வளவன்றிக்கே புத்திபூர்வகமாக ப்ரவர்த்தித்தாலும் ப்ரயோஜநமில்லாமையை நன்றாக விசாரித்தமைதோற்றவும், "கண்டுகொண்டேன்" என்னு மதுக்குஹேதுவாகவும் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (இதர) இத்யாதி வாக்யத்வயத்தாலே. "கண்டுகொண்டேன்" என்ற உத்தமனாலே தோற்றுகிறவும், "நான்" என்றதுக்கு பாவமருளிச்செய்கிறார், (ஓடினேன்) இத்யாதி. இத்தால் - பகவத்விஷயத்திலிழிவார்க்கு அதிகாரஸம்பத்திதேடவேண்டா என்று பலிக்கையால், இதுக்கு ஸம்வாதமருளிச்செய்கிறார், (வேல்வெட்டி) இத்யாதி. (திருக்கார்த்திகை) - ஸ்வாமி உத்ஸவகாலம். (எளியனென்றிருப்பர்கள்)-லகூ (லகு) கரிப்பர்கள்.

---

§ முக்காதமாறு - முக்காதவழி.

மூ.—ஆவியே யமுதே யெனநினைந் துருகி,
யவரவர் பணைமுலை துணையாப்
பாவியே னுணரா தெத்தனை பகலும்
பழுதுபோ யொழிந்தன நாள்கள்
தூவிசே ரன்னம் துணையொடும் புணரும்
சூழ்புனற் குடந்தையே தொழுது, என்
நாவினா லுய்ய நான் கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம். (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆவியே	என்ப்ராணனே!	என	என்று இப்படி அநேகங்களைச்சொல்லி
அமுதே	எனக்கு அம்ருதம் போலேபோக்யமானவளே!	நினைந்து	அவர்கள்தரும் சிற்றின்பத்தைநினைத்து

ஷணாழ்வானிறே, (க) "ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி-ஸமுத்ரம் ராகவோராஜாசரணம்கந்துமர்ஹதி" என்று இவர்க்கு உபதேசித்தான், அவன்பக்கல் நியதி கண்டிலோம், இவர்பக்கலிலே நியதி கண்டோம்". இத்தால் சொல்லிற்றாயிற்றென்னென்றால்; அநதிகாரியானவனுக்கு அதிகாரம் ஸம்பாதிக்கவேண்டா, அதிகாரியானவனுக்கு அநதிகாரம் ஸம்பாதிக்கவேண்டா, நின்றநிலையிலே அதிகாரிகளாமித்தனை; ஸர்வாதிகாரமென்றபடி. (கண்டுகொண்டேன்) தநமிழந்தவனுக்கு தநலாபம்போலேயிருக்கையாலும் தாய(தாய)ப்ராப்தமாயிருக்கையாலும். (நான்கண்டுகொண்டேன்) கெடுத்தவன்தானே கண்டாற்போலேயிருக்கை. (நாராயணா) ப்ரணவமாதல் நமஸ்ஸாதல் சதுர்த்தியாதல் கூட்டாமையாலே, † திருவிடையாட்டத்திலே யிழியவமையும், பல (ஃல) பர்யந்தமாகைக்கு ஸாங்கமாகவும் வேண்டாவென்கிறது. (என்னும்நாமம்) "என்னும்" என்கிறது, பலகால் ஆதரித்துச்சொல்லுகிற அநந்யபரமான நாராயணநுவாகப்ரஸித்தி. நாமம் என்கையாலே இருந்தபடியே உத்தேஸ்யம், இச்சை பிறந்தபோதே காலம், சொல்லுவோமென்றவன் அதிகாரி என்கிறது. "திருமந்த்ரம் சொல்லும்போது ப்ரயதராய்க்கொண்டு சொல்லவேணுமோ வேண்டாவோ?" என்று ஜீயர் பட்டரைக்கேட்க, "வேண்டா" என்றருளிச்செய்தார். "கங்கையாடப்போமவனுக்கு நடுவே யொரு உவர்க்குழியிலே முழுகிப்போகவேணுமோ? இந்நன்மையெல்லாமுண்டாக்கப்புகுகிறது, கீழயோக்யதை யித்தனையும் போக்கமாட்டாதோ?" என்றருளிச்செய்தார். ... ... (க)

(திருவிடையாட்டம்)-ஐஸ்வர்யம்; நாராயணசப்தார்த்தமான உபயவிபூத்யைஸ்வர்யத்திலே நானுமொருவனென்றறியவமையுமென்றபடி. (†)

(க) ரா - யு - கக - ௩௦.

உருகி	நீர்ப்பண்டம் போலே கரைந்து [ய
அவரவர்	அவ்வவஸ்த்ரீகளுடை
பணை	பெருத்த
முலை	ஸ்தநங்களை [டு
துணையா	ரக்ஷகமாகக்கொண்
பாவியேன்	பாபியான நான்
உணராது	"ஸர்வேஸ்வரனே நமக்கு ரக்ஷகன்" என்று அறியமாட்டா
எத்தனைபகலும்	காலமெல்லாம் [தே
நாள்களும்	திநங்களெல்லாம்
பழுதுபோய் ஒழிந்தன	வ்யர்த்தமாய்க் கழிந்துபோயின;
தூவி	சிறகினுல்
சேர்	அநுரூபமான
அன்னம்	ஹம்ஸமானது
துணையொடும்	தன்பேடையோடு
புணரும்	ஸம்ஸ்லேஷித்து வர்த்திக்கு மதுவாய்
புனல்	ஜலத்தால்
சூழ்	சூழப்பட்டிருப்பதான
குடந்தை	திருக்குடந்தையில் ஆராவமுதாழ்வாரை
தொழுது	ஸேவித்து
நான்	விஷயப்ரவணனுயிருந்த நான் [க
உய்ய	உஜ்ஜீவிக்கும்படியா
நாராயணு என்னும் நாமம்	நாராயணு என்னும் திருநாமத்தை
என்நாவினுல்	என்னுடையநாவாலே
கண்டுகொண்டேன்	புகழ்ந்து காணப்பெற்றேன். (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு.—அநாதிகாலம் "பகவத்தத்வமென்றொன்றுண்டு" என்றுமறியாதே விஷயப்ரவணராய்ப்போருகையாலே, "வாடினேன்" என்றும் "இளையவர் கலவியேகருதி யோடினேன்" என்றுமிறே, கீழ்ச்சொல்லி நின்றது, அதிலநுபவித்த வகைகளையும், காலமடங்க வ்யர்த்தமே போயிற்றென்றும் சொல்லி, இப்படி †போனகாலமும் வ்யர்த்த மாகாதபடியான திருநாமத்தைக் காணப்பெற்றேனென்கிருர்.

(ஆவியேயமுதே) (க) †"ஆவியேயமுதே யலைகடல் கடைந்தவப்பனே" என்றும், (உ) "ஆவியேயமுதே யென்னையாளுடைத் தூவியம் புள்ளுடையாய்" என்றும் பகவத்விஷயத்திலே சொல்லக்கடவ வார்த்தையையாயிற்று இங்கேசொல்லிற்று, வருத்தவிஷயத்திலே சொல்லக்கடவவார்த்தையை அப்ராப்தவிஷயத்திலே சொன்னேன். †தா(ர)ரகத்வமும் கண்ணழிவற்று போக்யதையும் கண்ணழிவற்றிருப்பது பகவத்விஷயமேயிறே; தாரகமன்றிக்கே பாதகமுமாய், போக்யதை யின்றிக்கே† பீபத்ஸ்யமுமாயிருக்கிற விஷய[illegible]

அரு.—இரண்டாம்பாட்டு.—(ஆவியே) இத்யாதி (போனகால[illegible] ர்த்தமாகாதபடி.) என்றதுக்கு (ந) "சென்றநாள் செல்லாத [illegible] லெங்கள்மாலென்றநாளெந்நாளும் நாளாகும்" என்கிறபடியே போனகாலத்தையும் நல்லநாளாக்கும்; பாட்டின் நுனியிலே தாத்பர்யத்தை வ்யக்தமாக வருளிச்செய்கிருரென்று கண்டுகொள்வது.

விஷயாநுபவத்தின் வகைகளைச்சொல்லுகிறவர் "ஆவியேயமுதே" என்று இவ்வகைசொன்னதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிருர், (ஆவியே) இத்யாதி. தாத்பர்யாந்தரம், (தாரகத்வம்) இத்யாதி. (பீபத்ஸ்யமுமாய்) என்றது-ஹேயய

(க) தி - வாய் - அ - க - க. (ந) ந - திருவ - கஎ.
(உ) தி - வாய் - ந - அ - எ.

யாயிற்று வார்த்தைசொல்லிப்போந்தது. (க) †"த்வஂஜீவிதந்த்வமஸி மே ஹ்ருதயஂ மதீயஂ-த்வம் ஜீவிதம்த்வமஸிமேஹ்ருதயம் மதீயம்" என்றிறே சொல்லிப்போந்தது. (எனநினைந்து) †"இப்புடைகளில் நினைப்பது அநேகத்தையிறே" என்றாயிற்று ஜீயர் அருளிச்செய்வது. †பிள்ளை "இங்ஙன் நினைந்து வாய்விடமாட்டாதே (உ) 'நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துருகும்' என்று இங்ஙனே சொல்லலாமோ" என்று ஜீயர்க்கு விண்ணப்பம்செய்ய, † "நீர் இவரிலும் பக்தராயிருந்தீர்" என்றருளிச்செய்தார்.

(எனநினைந்துருகி) இங்ஙனே அநுஸந்தித்து நீர்ப்பண்டம்போலே மயங்கிக்கிடப்பர். எத்தனை விஷயங்களிலே இப்படி கால்தாழ்ந்து போந்ததென்னில்; (அவரவர்) காலம் அநாதி, ஆத்மா நித்யன், பரிக்ரஹித்த சரீரங்களுக்கு எல்லையில்லை, அவ்வோ சரீரங்கள்தோறும் விஷயங்களுக்கும் எண்ணில்லை ; அவ்விஷயங்கள் தோறும் கால்தாழ்ந்திறேபோந்தது ; ஆகையாலே (அவரவர்) என்னுமித்தனை (பணைமுலை) ஒருத்தன் நோவுபட்டான் என்றால், "பிறபாடரானோம், உதவப்பெற்றிலோம்" (ங) "ஹீ ரேஷாஹி மமாதுலா-ஹ்ரீரேஷாஹிமமாதுலா" (ச) "நத்யஜேயஂ"- நத்யஜேயம்" என்னுமவனன்றே; "இளிம்பனாயிருந்தானகப்பட்டான், இனி இவன்கையிலுள்ளதடங்க நம்மது" என்று அதுவே எருவாகப் ‡பணைக்குமாயிற்று; †"நம்மைப் பெறவேணுமென்று உருகினான்" என்றால் இரங்கி உடம்புகொடுக்குமத்தனை நீர்மையில்லையே! (பணைமுலைதுணையா) த்வங்மாம்ஸ மேதோஸ்த்தி மயமான க்ரந்தியைப்பற்றி (ரு) "தயரதற்கு மகன்றன்னையன்றிமற்றிலேன் தஞ்சமாகவே" என்றிருக்குமாபோலேயிறேயிருப்பது. † "இப்போது சாபலத்தாலே விரும்புகிறோம்"

முமாய் என்றபடி. ஒரு நாயிகாவிஷயத்திலே ஒருவன் சொல்லுமத்தை ஸம்வாதமாகக்காட்டுகிறார் (த்வம்) இத்யாதி. ஜீவிதமென்றது - ஆவியே என்றதுக்கு ஸத்ருசம். ஹ்ருதயமென்றது - ஹ்ருதயாபிமதை என்றபடி. "என" என்றது - அநேகங்களை யென்றதாய், அருளிச்செய்கிறார், (இப்புடைகளில்) இத்யாதி. "என" என்றது - என்று என்றாய், அதுதானும் - சொல்லவென்றதாய், அருளிச்செய்கிறார், (பிள்ளை) இத்யாதி. (நீர் இவரிலும் பக்தராயிருந்தீர்) என்றது - ஆழ்வார் பகவத்விஷயரஸ்யதையாலே இப்படியருளிச்செய்தார், நீரவரைக்காட்டிலும் ரஸிகராயிருந்தீரென்றபடி.

(பணைக்குமாயிற்று) பெருக்குமாயிற்றென்றபடி. தங்களிலே யொதுங்கியிருந்தவனுக்கு ஹாநிவந்தால் இதுவே ஹேதுவாகப்பணைக்கைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (நம்மை) இத்யாதி. ஈஶ்வரனைப்போலே த்ருஷ்டாத்ருஷ்ட பலஸாதநமென்னுமத்தை விவரிக்கிறார் (இப்போது) இத்யாதி.

(க)
(உ) ரா - ஆ - கO - கூ.
(ங) ரா - யு - கஅ - ங.
(ச) திவாய் - ங - சு - அ.

என்றிருக்கையன்றிக்கே†அத்ருஷ்ட்டத்தையும் இதுதானே தருவது போலே யாயிற்று ஆதரிப்பது. அத்ருஷ்ட்டத்தை மறந்தபடி. (க) † "துன்னுகுழல் கருநிறத்தென் துணையே" என்றிருக்கு மத்தை யிறே இங்கே நினைப்பது.

(பாவியேன்)†நித்யமாய் ஏகரூபமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய் ஈஶ்வரனுக்கு ஸ்ரீகௌஸ்துபத்தோபாதியா யிருக்கிற ஆத்மவஸ்து படும் எளிவரவேயிது. (உணராது)†இவ்விஷயத்துக்கு நம்மை வகுத்தது என்று உணரமாட்டாதே. (எத்தனைபகலும் பழுதுபோயொழிந்தன நாள்கள்) எத்தனைகாலமுண்டு இப்படி வ்யர்த்தமே போகிறது. †காலமடங்க வ்யர்த்தமே போயிற்று; †அணைக்கு அவ்வருகு பட்ட நீரோபாதியிறே.(உ)†"வயோஸ்யாஹ்யதி வர்த்ததே - வயோஸ்யாஹ்யதி வர்த்ததே". (பழுதுபோயொழிந்தன நாள்கள்) † இளையபெருமாளைப்போலே கண்ணுறங்கவும் அவஸரமின்றிக்கே போகக்கடவ காலம் அநர்த்தத்தோடேபோயிற்றது. †கைங்கர்யத்தோடே அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லக்கடவகாலம் பழுதே போயிற்றது.

(தூவிசேரித்யாதி) இப்படி கைகழிந்தது, உகந்தருளின நிலங்களிங்கே யாகையாலே ஸ்வரூபம் பெற்றுமீண்டது. தூவி - சிறகு †சிறகால்வந்த அழகையுடைத்தாய் அன்னம் ஸஹசரத்தோடேபுணர்ந்து வர்த்திக்கிறதேசம். ஸர்வபூதசரண்யமானதேசம்;-†அன்னத்தோடு ஸர்வதாஸாம்யம் சொல்லலா யிருக்கையாலே, பெரிய பிராட்டியாரோடே ஆராவமுதாழ்வார் ரமித்து வர்த்திக்கிறதேசம்.

(அத்ருஷ்ட்டத்தையும்)என்றது-அத்ருஷ்ட்டஸுகத்தையுமென்றபடி. ரம்பா ஸம்போகாதிகளும் இதுவே என்று எண்ணி, வேறே அத்ருஷ்ட்டஸுகத்தையும் மறந்திருக்குமென்று கருத்து. அவரவர்துணையா என்னாதே "பணமுலைதுணையா" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (துன்னுகுழல்) இத்யாதி.

ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்து அநுதபிக்கும்தசையிலே "பாவியேன்" என்னக்கூடாமையால், இதுக்லேசஸூசகமான பாசுரமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (நித்யமாய்) இத்யாதி. (இவ்விஷயத்துக்கு)-பகவத் விஷயத்துக்கு. "எத்தனைபகலும் - நாள்களும் - பழுதுபோயொழிந்தன" என்று அந்வயமாய் பலித்த அர்த்தம், (காலமடங்க) இத்யாதி. "போய்" என்றதுக்கு பாவம், (அணைக்கு) இத்யாதி. போனகாலத்துக்கு க்லேசித்தாருண்டோவென்ன; அருளிச்செய்கிறார், (வயோஸ்யாஹ்) இத்யாதி. "பழுது" என்ற பத ப்ரயோகத்துக்குக் கருத்தருளிச்செய்கிறார், (இளைய) இத்யாதி. கீழ்வாக்யவிவரணம், (கைங்கர்ய) இத்யாதி.

"சேர்" என்றது - அநுரூபமென்றாய் அருளிச்செய்கிறார் (சிறகால்) இத்யாதி. சரண்யமான தேசமானமையை உபபாதிக்கிறார், (அன்னத்தோடு) இத்யாதி.

(க) தி - நெ கசு.   (உ) ரா - யு - ரு - ரு.

சரண்யவஸ்து குறைவற வர்த்திக்கிறதேசம். பொறுப்பாருமுண்டாய்ப் பொறுப்பிப்பாரு முண்டாகையாலே குறைவற்றதேசம். (சூழ்புனல்) அசேதநமான ஜலமும் அங்கேவந்தால் ஒருகால் சூழவாிற்றுப் போவது. தாபார்த்தர்க்கு ஶ்ரமஹரமானதேசம். (குடந்தைமேயதொழுது) (க) "அவசாஃ ப்ரதிபேதிரே - அவசாஃ ப்ரதிபேதிரே" என்கிறபடியே தம்பக்கல் ஒருகினைவின்றிக்கே யிருக்க, தொழுதுகொண்டிற்கக்கண்டார். (என்நாவினால்) † "ஆவியேயமுதே" என்ற என்நாவினால். † "இப்ப்ரஜையைப் பெற்றுவாழ்ந்தேன்" என்பாரைப்போலே. †கரணம் இன்றுபெற்ற பேற்றுக்குப் பாங்காயிருக்கையாலே, வேறொரு சரீரபரிக்ரஹம் பண்ணினாலும், என்நா என்னலாமிறே, †இதரரை ஸ்தோத்ரம் பண்ணித்திரிந்த இவ்வுடம்போடே. (உய்யநான் கண்டுகொண்டேன்) (உ) †"மறந்தமதியின் மனத்தால் இரங்கினைத்தனையும்" என்றநான், உஜ்ஜீவிக்கும்படி கண்டுகொண்டேன். (கண்டுகொண்டேன்) †திருமந்த்ரத்தினுடைய அர்த்தத்தை அநுஸந்தித்தால் அது ஸ்வரூபமா யிருக்குமாபோலே, சப்தத்தைச் சொல்லுகையும் ஸ்வரூபமாயிருக்குமிறே. இப்படி ப்ராப்தமா யிழந்ததைக் காணப்பெற்றே னென்கை. (நாராயணாவென்னும்நாமம்.) (ங) †"நாவாயிலுண்டே" †என்னுமத்தை. நாவாயிலுண்டானால் (ங) * ஓவாதது †உரைக்குமுரையிறே.

[நாவாயிலுண்டே] இது முந்துறமுன்னம் தேடிப்போக வேண்டாவே. [நமோநாராயணாவென் றோவாதுரைக்கு முரையுண்டே] ஓவாதுரைக்கும் உரையாிறது - உச்சிவீடு விடாதே சொல்லவேணுமென்கிறதன்று; எட்டு அக்ஷரமாகையாலே நடுவே இளைக்கவேண்டாதே சொல்லி யிளைப்பாறலாமென்கை. ஸஹஸ்ராக்ஷரீமாலா மந்த்ரமாய் "இதுகற்பதில் நரகத்தைப் புக்குப்போகவமையும்" என்னும்படி யிராதொழிகை. (என்னும் நாமம்) †முன்பு இழந்தகாலமும்

"என்" என்றது நைச்யத்திலேயாக்கியருளிச்செய்கிறார், (ஆவியே) இத்யாதி. கொண்டாட்டமாகத் தாத்பர்யாந்தரம், (இப்ப்ரஜையை) இத்யாதி. ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தபின்பு பூர்வவ்ருத்தமுடையனாகையைக் கொண்டாடலாமோவென்ன; (கரணம்) இத்யாதி. நா சரீரைகதேசமாகையாலே, (இதரரை ஸ்தோத்ரம்பண்ணித் திரிந்தவிவ்வுடம்போடே) என்றது. மதிப்ரஷ்டனான நான் என்றர்த்தாந்தரம், (மறந்த) இத்யாதி. ஸ்வரூபஜ்ஞனானால் அர்த்தாநுஸந்தாநமொழிய சப்தாநுஸந்தாநம் கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார் (திருமந்த்ரத்தினுடைய) இத்யாதி. திருநாமம் சொல்லுகை உஜ்ஜீவநஹேதுவென்னுமதுக்குப்ரமாணம்காட்டுகிறார், (நாவாயில்) இத்யாதி. (என்னுமத்தை) என்றது - என்கிற பாட்டைஎன்கை. அநந்தரம், "கண்டுகொள்வது," என்று பூரிப்பது. உரைக்குமுரையிறே திருமந்த்ரமென்றபடி.

"என்னும்நாமம்" என்று பாவநத்வப்ரஸித்தியைப்பற்ற வருளிச்செய்கிறார், (முன்பிழந்தகாலமும்) இத்யாதி. கதகாலம் நல்லநாளாகுமோவென்ன;

(க) (உ) சு - உ - உ. (ங) க - திரு - கூ.

மூ.— சேமமே வேண்டித் தீவினை பெருக்கித்
தெரிவைமா ருருவமே மருவி
ஊமனர் கண்ட கனவிலும் பழுதா
யொழிந்தன கழிந்த வந் நாள்கள்
காமனார் தாதை நம்முடை யடிகள்
தம்மடைந் தார் மனத் திருப்பார்
நாமம் நா னுய்ய நான் கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம். (௩.)

பதம்.	உரை.	பதம்	உரை.
சேமமே	க்ஷேமத்தையே	அடிகள்	ஸ்வாமியாய்
வேண்டி	விரும்பி, (அதற்குவேண்டும் ஸத்கர்மங்களைச் செய்யாதே)	தம்	தம்மையே
		அடைந்தார்	சரணாகப்பற்றினவர்களுடைய
தீவினை	பாபங்களை	மனத்து	நெஞ்சில்
பெருக்கி	அதிகரிக்கச்செய்து	இருப்பார்	நீங்காதிருப்பவரான ஸர்வேஶ்வரனுக்கு
தெரிவைமார்	ஸ்த்ரீகளுடைய		
உருவமே	வடிவழகையே		
மருவி	நினைத்து	நாமம்	வாசகமான
கழிந்த	வீணாயொழிந்த	நாராயணா என்னும்	நாராயணா என்கிற
அந்நாள்கள்	அந்தக்காலமெல்லாம்		
ஊமனார்	ஊமைகள்	நாமம்	திருநாமத்தை
கண்ட	பார்த்த	நான்	விஷயசபலனாய்த்திரிந்தநான்
கனவிலும்	கனவிலுங்காட்டில்		
பழுதாய்	வ்யர்த்தமாய்	உய்ய	உஜ்ஜீவிக்கும்படி
ஒழிந்தன	போயின; ஆதலால்	நான்	உஜ்ஜீவநத்தில் கைகழிந்தநான்
காமனார்	மந்மதனுக்கு		
தாதை	ஜமப்பனாய் [ர்க்கும்	கண்டு கொண்டேன்	காணப்பெற்றேன்.
நம்முடை	நம்போல்வாரெல்லா		

வ்யர்த்தமாகாதபடியான திருநாமத்தைக் காணப்பெற்றேன். (க)

[சென்றநாள்செல்லாத செங்கண்மாலெங்கள்மாலென்றநா ளெந்நாளும் நாளாகும்] செங்கண்மா லெங்கள்மாலென்பது ஒருநாளுண்டாகில்; [சென்றநாள் செல்லாத - எந்நாளும் நாளாகும்] †திருமந்த்ரத்தைச் சொல்லுகைக் குறுப்பாகையாலே போனகாலமும் நல்லகாலமாய், செல்லுகிற காலமுந்தானே நல்லகாலம். திருமந்த்ரம் சொன்னால் மேல்தானே ஓரநர்த்தம் விளையாதிறே. ... (உ)

அருளிச்செய்கிறார். (திருமந்த்ரத்தை) இத்யாதி. (திருமந்த்ரத்தை) என்ற வநந்தரம், "ஒருநாள்" என்று சேஷம். ஆக, ஒருநாள் திருமந்த்ரத்தை அநுஸந்தித்தால் அநாதிகாலமுண்டான ப்ராதிகூல்யங்களெல்லாம், உருமாய்ந்து போகையாலும் மேல் ஆநுகூல்யங்களை விளைக்கையாலும், வர்த்தமாநகாலத்தில் ரஸ்யதாதி சயத்தால் வந்த ஏற்றத்தாலும், ஸர்வகாலமும் ஸார்த்தகமாயிற்றென்று கருத்து. "செல்லாத" என்று பவிஷ்யத்காலத்தைச்சொல்லுகிறது. ... ... (உ)

வ்யா—மூன்றாம்பாட்டு.—(சேமமேவேண்டி) † "சத்ருக்களால் ராஜாக்களுள்ளிட்டாரால் நமக்கொரு நலிவு வாராதொழியவேணும், † எல்லாராலும் † ரக்ஷைபெற்றுச்செல்லவேணும்" என்றாயிற்று நெஞ்சால் நினைத்திருப்பது. (தீவினைபெருக்கி) †ரக்ஷையே பெற்றுச் செல்லவேணுமென்றிருந்தால், அது ஸபலமாம்படியான ஸத்க்ரியையைப் பண்ணாதே பாபத்தையாயிற்றுக் கூடுபூரிப்பது. (தெரிவைமாருருவமே மருவி) † நல்லத்தை வேண்டியிருக்குங் காட்டில் அதுவாராதே செய்ததின்பலமிறே வருவது; பண்ணிவைத்த பாபங்கள் கொடுபோய் விஷயங்களிலே மூட்டும். (உருவமே மருவி) அகவாயிலிழியில் த்யஜிக்கலாமிறே. அகவாய் நஞ்சாய் ஸ்வகார்யபரராயிறே யிருப்பது;அகவாயிலே யிழியில் அநாத்மகுணம் கண்டுமீளலாயிருக்குமிறே;†வடிவில் தோஷங்களை மறைத்திறேவைப்பது.(மருவி) அத்தையே சுபாஶ்ரயமாக மநநம் பண்ணியாயிற்றிருப்பது.

(ஊமனார்கண்டகனவிலும் பழுதாய்) ஊமனார் - ஊமைகள். §(ஊமைகண்ட கனவிலும் பழுதாய்;) ஊமை கண்ட கனா வாய்விடமாட்டானித்தனை, நினைத்திருக்கும்; அங்ஙனுமன்றியே, நெடுநாள் அநுபவித்துப் போந்த விஷயங்களில் போயிருந்து, அநந்தரம் நினைத்திருக்கைக்கு மொன்று மின்றிக்கே யிருக்கை. அங்ஙனன்றியே, ஊமைகண்டகனா வாய்விடமாட்டிற்றிலனாகிலும் நினைத்திருக்கலாம், இவை நினைக்கில் பயாவஹமாகையாலே நினைக்கவுமொண்ணாதென்கை. †ஸ்ம்ருதி விஷயமாவதொன்றில்லை, ஸ்ம்ருதி விஷயமாயி

மூன்றாம்பாட்டு.—(சேமமே) இத்யாதி. கீழ்ப்பாட்டிலே "பழுதுபோயொழிந்தன" என்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக உபபாதித்துக்கொண்டு பின்னையும் சிறிதுகளை அநுஸந்தித்து அநுதபிக்கிறாரென்று ஸங்கதியை உட்கொண்டு வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (சத்ருக்களால்) இத்யாதி. சேமம் என்றது-க்ஷேமமென்றாய், அதுதானும் ஸ்த்திதபரிபாலநமாய், இத்தைச்சொன்னது அபூர்வார்த்த ப்ராப்திரூபமான யோகத்துக்கு முபலக்ஷணமென்று திருவுள்ளம்பற்றி இவ்விரண்டும் ப்ரார்த்யமாகையாலே சேமபதார்த்தம் கீழருளிச்செய்து, யோகபதார்த்தமருளிச்செய்கிறார், (எல்லாராலும்) இத்யாதி. (ரக்ஷைபெற்று) என்றது-இஷ்டத்தையடைந்தென்றபடி. இப்படி சரீரரக்ஷணம் சொன்னது ஆத்மரக்ஷணத்துக்கு முபலக்ஷணமாக்கி யருளிச்செய்கிறார், (நல்லத்தை) இத்யாதி. அகவாய்போலே வடிவிலும் தோஷமில்லையோவென்ன; அருளிச்செய்கிறார், (வடிவில்) இத்யாதி.

நிஸ்ஸாரத்வமும் பயாவஹத்வமுமான பழுதாகையை நிகமிக்கிறார் (ஸ்ம்ருதி) இத்யாதி.

---

§ குண்டலிதம் க்வாசித்கம்.

ற்றதுண்டாகில் பயாவஹமாயிருக்கும். (ஒழிந்தன கழிந்தஅந்நாள்கள்)(க)[[illegible] நமே துঃக்கம்ப்ரியா தூரே நமே துঃக்கம் ஹ்ருதேதிவா। ஏததேவாநுசோசாமிவயோ ஸ்யாஹ்யதி வர்த்ததே] ப்ரியையானவள் தூரவிருந்தாளென்று வெறுத்திருக்கிறோ மல்லோம், அது நாலு பயணமெடுத்துவிடத் தீரும்; வலியரக்ஷஸ்ஸாலே அபஹ்ருதையென்று வெறுத்திருக்கிறோமல்லோம்,அது அவன் றலையையறுக்கத்தீரும்; நமக்கு சோகநிமித்தமிதுவே- [[illegible] -வயோஸ்யாஹ்யதி வர்த்ததே'] போனகாலத்தை அம்பாலே மீட்க ஒண்ணாதே!

†நீர் பற்றிச்சொல்லுகிற விஷயத்துக்கு இந்த தோஷங்களில்லையோவென்ன, (காமனார் தாதை) உருவமே மருவிலும் †பசைபோரும், உடம்பைப்பற்றிலும் †ஊதியம் போரும். §தன்வடிவாலே †நாட்டையடையப் பகட்டித்திரியு மவனுக்கும் உத்பத்தி ஸ்தாநம். †தன்கையில் நாட்டார் படுவதடங்க அவன்றான் இவன்கையிலே படும். (உ) "[illegible] - ஸாக்ஷாந்மந்மதமந்மதঃ". (நம்முடையடிகள்) கீழில் விஷயங்களுக்குச் சொன்ன குற்றமில்லாததுவேயன்று இதுக்குவாசி, அவை அப்ராப்தவிஷயம், இது ப்ராப்தவிஷயம். (நம்முடையடிகள்) ஸர்வஸ்வாமி.

(தம்மடைந்தார் மனத்திருப்பார்) வடிவைக்காட்டித் துவக்கிக் கையிலுள்ளதடங்க அபஹரித்து உடம்புகொடாதே எழவாங்கி யிருக்கையன்றிக்கே, ஆசாலேசமுடையார் நெஞ்சுவிட்டுப் போயிருக்கமாட்டாதவன். †கலவிருக்கையான பரமபதத்தையும் விட்டு நெஞ்சே கலவிருக்கையாகக் கொள்ளும். (தம்மடைந்தார் மனத்திருப்பார் நாமம்)†இவ்வர்த்த மித்தனைக்கும் வாசகமான திருநாமம். தேஹகுணமும், ஸர்வஸ்வாமித்வமும், ஸௌலப்யமும், வாத்ஸல்யமுமிறே இதுக்கு அர்த்தமாயிற்றது. (நானுய்ய நான் கண்டுகொண்டேன்) (ந) "[illegible] - அஸந்நேவ" என்று முடியும்படியான

மேலுக்கவதாரிகை (நீர்பற்றி) இத்யாதி. (பசை)-ஸாரம். (ஊதியம்போரும்)-வ்ருத்தியுமுண்டாமென்றபடி. [illegible]-காமயதீதிகாமঃ" என்ற வ்யுத்பத்தியை யுட்கொண்டு அருளிச்செய்கிறார், (நாட்டை) இத்யாதி. காமனுக்குத் தாதை என்றதாலே - காமன் அழகுக்குத் தோற்றுப் பிள்ளையானானென்று தோற்றுகையாலே அருளிச்செய்கிறார், (தன்கையில்) இத்யாதி.

"மனத்தேயிருப்பார்" என்று ஸாவதாரணமாக்கி, பரமபதத்திலிருப்பு இல்லையோவென்ன; அருளிச்செய்கிறார், (கலவிருக்கையான) இத்யாதி. (இவ்வர்த்தமித்தனைக்கும்) என்றது-"காமனார்" இத்யாதி பதத்ரயார்த்தமித்த

(க) ரா-யு-கூ-கூ. (உ) பாகவதம்-க0-ந உ-உ. (ந) தைத்தி-ஆந-

§ "நாட்டைபடையத் தன்வடிவாலே" என்று அரும்பதத்துக்குப்பாடம்.

மூ —வென்றியே வேண்டி வீழ்பொருட் கிரங்கி
வேற்கணார் கலவியே கருதி
நின்றவா நில்லா நெஞ்சினையுடையே
னென்செய்கேன் நெடுவிசும்பணவும்
பன்றியா யன்று பாரகம் கீண்ட
பாழியா னாழியா னருளே
நன்று நானுய்ய நான் கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம். (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வென்றியே	ஜயத்தையே		களது
வேண்டி	அபேக்ஷித்து [ள	கலவியே	ஸம்ஶ்லேஷத்தையே
வீழ்	நசிக்குந்தன்மையுள்	கருதி	நினைத்து
பொருட்கு	தநத்துக்கு	நின்றவாநில்லா	ஒன்றிலும் நிலைபெற்றிராத
இரங்கி	துக்கித்து		
வேல்கணார்	வேல்போன்ற கண்ணையுடைய ஸ்த்ரீ	நெஞ்சினை	நெஞ்சை
		உடையேன்	உடையநான்

நான் உஜ்ஜீவிக்கும்படி கண்டுகொண்டேன். (நான் கண்டுகொண்டேன்) †இனிக்காட்சி†யில்லையோ! என்னும்படி கை கழிந்தநான், உத்தேஶ்யஸித்தி உண்டாகப்பெற்றேன். †“இனிஸத்தை உண்டாகமாட்டாது, காட்சியுண்டாகமாட்டாது” என்னும்படியான நான் உஜ்ஜீவிக்கவும்பெற்று, காணவும் பெற்றேனென்கிறார். †(நானுய்யநான்) என்று இருகால் சொல்லுகிறது - லாபத்தால் வந்த ப்ரீதிக்குப்போக்குவிட்டுச் சொல்லுகிறார். (நாராயணாவென்னும் நாமம்) (க)†“𑌶𑌾𑌨𑍍𑌤𑍋 𑌦𑌾𑌨𑍍𑌤 𑌉𑌪𑌰𑌤𑌸𑍍𑌤𑌿𑌤𑌿𑌕𑍍𑌷𑍁𑌃 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 - சாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷுஸ்ஸமாஹிதோ பூத்வாத்மந்யேவாத்மாநம் பஶ்யேத்” என்று சமதமாத்யுபேதர் சொல்லக்கடவ திருநாமத்தைச் சொல்லப்பெற்றேன். †“சேமமே வேண்டித் தீவினைபெருக்கித் தெரிவைமாருருவமே மருவி” என்று அநாத்மகுணோபேதனாய்ப் போந்த நான் ஆத்மகுணோபேதர் பெறும் பேற்றைப்பெற்றேன். (௫)

ணைக்குமென்றபடி. இரண்டாம் நானுக்கர்த்தம், (இனி) இத்யாதி. (இல்லையோ) என்றது - இல்லையே என்றபடி. கீழிரண்டு வாக்யத்தில்சொன்ன தாத்பர்யத்தையும் கூட்டி ஒரு நானுக்கே கருத்தாக வருளிச்செய்கிறார், (இனிஸத்தை) இத்யாதி. ஆனால் இருகால் சொல்லுவானென்னென்னும் சங்காநுவாதபூர்வகம் பரிஹரிக்கிறார், (நானுய்ய) இத்யாதி. “மனத்திருப்பார் நாமம் நான் கண்டுகொண்டேன்” என்று அந்வயித்திருக்கவும், “நாராயணாவென்னும் நாமம்” என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார், (சாந்தஃ) இத்யாதி. “நான் கண்டுகொண்டேன்” என்று அநுஷங்கித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (சேமமே) இத்யாதி. ... ... (௫)

(க) ப்ருஹதா - கூ - ச:

என்செய்கேன்	என்ன செய்வேன்; (உன்னைப் பெறுகைக்கு ஈடான ஓர்உபாயமும் செய்யவல்லேனல்லேன்)	கீண்ட	உத்தரித்த
		பாழியான்	மிடுக்கையுடையனுன
		ஆழியான்	ஸர்வேஸ்வரனது
		அருளே	க்ருபையாலே
		நான்	விஷயப்ரவணனுய்ப் போந்த நான்
அன்று	பூமியைப்ரளயம் கொண்டஅந்நாளிலே	நன்று	செவ்வையாக
		உய்ய	உஜ்ஜீவிக்கும்படி
		நாராயணு என்னும்நாமம்	நாராயணு என்ற திருநாமத்தை
நெடு	உயர்ந்த		
விசும்பு	ஆகாசத்தை	நான்	அபிமாநியாயிருந்த நான்
அணவும்	தழுவும்படிவளர்ந்த		
பன்றியாய்	வராஹரூபங்கொண்[டு	கண்டுகொண்டேன்	அறியப்பெற்றேன். ()
பாரகம்	பூமியை		

வ்யா.—நாலாம்பாட்டு.—(வென்றியேவேண்டி) † பிதாவாகவுமாம், ஆசார்யனுகவுமாம், வென்றியேயாயிற்று இவன் வேண்டியிருப்பது. † தன்னை யொழிந்தாரைக் கீழ்ப்படுத்தித்தான் மேலாகவாயிற்று வேண்டியிருப்பது. † தோல்வி குணமாம் விஷயத்திலே யாயிற்று வெல்ல நினைத்திருப்பது. (வீழ்பொருட்கிரங்கி) † கையில் சிறிது அர்த்தமுண்டாய் அத்தாலேயிறே இவனொருவனையும் மதியாதிருப்பது. அது அஸ்த்திரமானபடியாலே அபஹ்ருதமா யிருக்கு

அரு.—நாலாம்பாட்டு.—(வென்றியே) இத்யாதி. கீழிற்பாட்டிலே * சேமமேவேண்டித் தீவினைபெருக்குகைக்கு ஹேது அர்த்தேஷணையாதல் தேஹாத்மாபிமாநமாதலென்று காட்டாநின்றுகொண்டு, திருமந்த்ரத்தைக் கண்டுகொண்டதுக்கு ஹேதுவையும் முக்தகண்டமாக வருளிச்செய்கிறுரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

(க) "𑌅𑌰𑍍𑌥𑌾𑌤𑍁𑌰𑌾𑌣𑌾𑌂 𑌨 𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌨 𑌬𑌨𑍍𑌧𑍁𑌃-அர்த்தாதுராணும் நகுருர் நபந்து:" என்கிறபடியே இவனுடைய அர்த்தாபிமாநத்தால்வந்த மேனுணிப்பைச்சொல்லுகிறதென்று தாத்பர்யம் திருவுள்ளம்பற்றி,வென்றி-ஜயமாய், ஸ்வோத்கர்ஷம் மேலிட்டதென்று அர்த்தமாய், இது அநுதாபஹேதுவானபடியை அருளிச்செய்கிறுர், (பிதா) இத்யாதி. இவ்வர்த்தம், "வென்றியே" என்கிற ஸாமாந்யநிர்த்தேசத்தாலே ஸூசிதமாகிறதென்னுமத்தைக் காட்டுகிறுர், (தன்னை) இத்யாதி. இது அதிக்ரூரதோஷமானமையை உபபாதிக்கிறுர்,(தோல்வி) இத்யாதி. வீழ்கையே - போகையே ஸ்வபாவமான, பொருட்கு-தநத்துக்காக, இரங்கி-க்லேசித்து, என்று சப்தார்த்தமாய், ஹேதுபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறுர், (கையில்) இத்யாதி வாக்யத்ரயத்தாலே. இரண்டு

(க)

றிறே, அத்தையிழந்து கூப்பிடாநிற்கும். † கௌரவ்யரா யிருப்பார் பக்கல் அபிமாநம் பண்ணக்கடவதன்றிக்கேயிருக்க அபிமாநம் பண்ணிவர்த்தித்ததுக்குமேலே இரங்கக்கடவதல்லாததுக்கு இருந்து கண்ணீர்பாய நிற்கும். † அங்ஙனன்றிக்கே, தேஹாத்மாபிமாநத்தை பண்ணித் தன்னையெல்லார்க்கும் மேலாகநினைத்துப் போந்ததுவேயன்றியே, அஸ்த்திரமான உடம்பை "நித்யமாகவேணும்" என்று சோகியாநிற்குமென்னவுமாம். (வேற்கணார் கலவியேகருதி)†கையில் அர்த்தமுண்டானகாலம் பார்யையைச் † செங்கற்சீரைகட்டிக் கூப்பிட்டுத்திரியவிடுமவன், அர்த்தமிழந்து கூப்பிடாநின்றால், அல்லாதாரோடொக்க இவளும் வினவப்புகுருமே; இவளைக்கண்டவாறே "அவ்வர்த்தத்தையெல்லாம் இட்டு ஒரு பணியாகப்பூட்டிக் காணப்பெற்றிலோம்" என்று மநோரதியாநிற்கும். கெடுத்தபொன்னை இப்போது பூட்டத்தேடும். (நின்றவாநில்லா நெஞ்சினையுடையேன் என் செய்கேன்) ‡ ஊர்வசீ ஸாலோக்யத்துக்கு நாடடங்க ஸாதநாநுஷ்டாநம் பண்ணுநிற்க, நேர்கொடுநேர் அவள்தான்வந்து உபஸ்த்தாநம்பண்ணி முன்னேநிற்க அர்ஜுநன் நமஸ்கரித்துக்கடக்க நின்றானிறே விரக்தியாலே; இப்படிப்பட்டவன், (௧) "తస్యాహం నిగ్రహం మన్యే వాయోరివ సుదుష్కరమ్-தஸ்யாஹம் நிக்ரஹம்மந்யே வாயோரிவஸுதுஷ்கரம்" என்று ப்ரதிகூலவாயுவைப்பிடித்துக் கூடுகட்டிலும் என் நெஞ்சைப்பிடிக்கப்போகாது என்றானிறே. † § ஒருவிஷயங்களிலே அரைக்ஷணம் கால்தாழாத நெஞ்சையுடையேனான நான், இந்நெஞ்சைப் பரிகரமாகக்கொண்டு உன்னைப் பெறுகைக்கீடான உபாயாநுஷ்டாநம் பண்ணவென்பதொன்றுண்டோ? உன்னை இழக்

பதங்களாலும் பலித்த அர்த்தத்தைத் தொகுத்தருளிச்செய்கிறார், (கௌரவ்யராய்) இத்யாதி. அபிமாநம் அர்த்தாபிமாந கார்யமென்றபடி. வெற்றிக்கு ஹேது-தேஹாத்மாபிமாநமென்றும், பொருள் - தேஹாத்மாபிமாநம் என்றும், பதத்வயத்துக்கு அர்த்தாந்தரமருளிச்செய்கிறார், (அங்ஙனன்றிக்கே) இத்யாதி. கலவிசெய்தென்னாதே "கருதி" என்கையாலே-அம்மநோரதமாத்ரந்தான் அர்த்தமிழந்தபோது மற்றவிஷயத்தில் நிஷ்ப்பலமாகையாலே, பார்யாவிஷயமாக்கித் தாத்பர்யமருளிச்செய்கிறார், (கையிலர்த்தம்) இத்யாதி. இது முந்தின தாத்பர்யத்துக்குச்சேரும், பொருள் - சரீரமென்றபக்ஷத்தில், "வேற்கணார்" என்றது-ஸர்வவிஷயமாகக் கண்டுகொள்வது. (செங்கற்சீரைகட்டி)-காவிப்புடைவையுடுத்து. "நெஞ்சைப்பிடிக்க ஒண்ணாது" என்ற அர்ஜுநனுடைய உட்கருத்தை யருளிச்செய்கிறார், (ஒருவிஷயங்களிலே) இத்

§ ஒருவிஷயத்திலே என்றால்ஸ்வரஸம். (௧) கீதை - ௬ - ௩௪.
‡ இக்கதை - பாகவதத்தில் ௯-ஸ்க-௧௪-அத்யாயத்தில் காண்க.

கைக்குறுப்பாமித்தனே. (என்செய்கேன்) † அர்ஜுநனுக்குப் பதினெட்டு ‡ ஓத்திலும், சோகத்தை உத்பாதித்தாற்போலே, † கண்டதெல்லாம் இவர்க்கு பயாவஹமாயிருக்கிறபடி.

நீரிப்படியிருந்தீராகில் உமக்குப் பேற்றுக்கு † அடி எத்தாலேயென்றிருந்தீரென்ன; † ப்ரளயங்கொண்ட பூமி தன்னுடைய ரக்ஷணத்தில் அஸமர்த்தமாய் அத்தைரக்ஷித்தான் யாவனொருவன், அவனாலேயென்கிறார். (நெடுவிசும்பணவும் பன்றியாயன்று பாரகங்கீண்டபாழியான் ஆழியானருளே) ப்ரளயங்கொண்டபூமிக்கு ஸ்வரக்ஷணத்திலந்வய முண்டாமன்றிறே விஷயங்கொண்ட நெஞ்சையுடையேனான நான் எனக்கு ஹிதசிந்தைபண்ணுவது. ஆகாசாவகாசம் வெளியடையும்படி விம்மவளர்ந்தவன், ரக்ஷ்யத்தினளவில்லாதபடியாயிற்று ரக்ஷகனானவன் வடிவைப்பாரித்தபடி. பூமி ப்ரளயத்திலே புக்கு முடிந்துபோகப் புக்கவாறே, நீருக்கும் சேற்றுக்கும் இறாயாத மஹாவராகமானான். ஜலஸம்ருத்தி காணப் பணைக்கும் வடிவைக்கொண்டான் (க) [மாசுடம்பில் நீர்வாராமானமிலாப் பன்றியாம்] "மஹிஷியுடம்புபேணாதே (க) * பாசிதூர்த்தது" என்றவாறே, காந்தனானதானும் உடம்புபேணாதே, மாசேறின உடம்பையுடையனானான். (மானமிலா) ஈஶ்வரத்வாபிமாநம் § பின்னாட்டாதபடி யிருக்கை. யாயாம்ருகத்தைக் கண்டபோது இனத்தில்மான்கள்வந்து மோந்துபார்த்து "விஸஜாதீயம்" என்று கடக்கப்போயிற்றினவிறே. அங்ஙனன்றியே (உ) "ఆత్మానం మానుషంమన్యే-ஆத்மாநம் மாநுஷம்மந்யே" என்கிறது † இங்குமநுவர்த்தித்தபடி. (பாரகங்கீண்ட) பூமிப்பரப்படங்க அண்டபித்தியோடே புக்குச்சேர்ந்தத்தை ஒட்டுவிடுவித்து எடுத்த. (பாழியான்) மிடுக்கையுடையவன். (ஆழியான்) † ரக்ஷிக்குமிடத்து ஒருபரிகராபேக்ஷையில்லை; ஒருபரி

யாதி. த்ருஷ்டாந்த பூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார், (அர்ஜுநனுக்கு) இத்யாதி. (கண்டதெல்லாம்) விஷயங்களெல்லாமென்றபடி.

(அடி) என்றவநந்தரம், எது என்றும்; உமக்குப் பேறு என்றும், அத்யாஹரிப்பது. இப்படி ப்ரஶ்நத்வயம் கண்டுகொள்வது. பூர்வார்த்தத்தை யெல்லாமுட்கொண்டு இப்பதத்துக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார், (ப்ரளயங்கொண்ட) இத்யாதி. (இங்குமநுவர்த்தித்தபடி) என்றது - "ஆத்மாநம் வராஹம்மந்யே" என்று அநுவர்த்தித்தபடி. "பாழியான் - ஆழியான்" என்ற பதத்வயத்துக்கும் க்ரமேண பாவமருளிச்செய்கிறார், (ரக்ஷிக்கும்) இத்யாதி வாக்யத்வயத்தாலே. அடியேது என்ற ப்ரஶ்நத்துக்கு உத்தரமானபடியை

---

‡ ஓத்து - அத்யாயம். (க) நா-தி-கக-அ.

§ பின்னாட்டுகை - அநுஸரிக்கை. (உ) ரா-யு-௧௨௦-௧௨.

மூ.—கள்வனே னானேன் படிறு செய் திருப்பேன்
கண்டவா திரிதந்தே னேலும்
தெள்ளியே னானேன் செல் கதிக் கமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன்
உள்ளெலா முருகிக் குரல் தழுத் தொழிந்தேன்
உடம்பெலாம் கண்ணநீர் சோர
நள்ளிரு ளளவும் பகலும் நா னழைப்பன்
நாராயணா வென்னும் நாமம். (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கள்வனேன் ஆனேன்	ஆ (இதற்குமுன், அவனுடைமையான ஆத்மாவைக்) களவுகண்டேன்;	திரிதந்தேனேலும்	சால்தாழ்ந்துபோந்தேனாகிலும்
படிறு	மிக்கதீம்பை	திருஅருள்	(அவன்) கடாக்ஷத்தை
செய்து இருப்பேன்	எப்போதும் செய்துகொண்டிருப்பேன்;	சிக்கென	த்ருடமாக
கண்டஆ	கண்டவிஷயங்கள்தோறும்	பெற்றேன்	அடைந்தேன்; (அத்தாலே)
		தெள்ளியேன் ஆனேன்	(அவன்சேஷி, நாம் சேஷபூதர் என்னும்) விவேகமுடையேனானேன்;

கரங்கொண்டு ரக்ஷிக்கப் பார்த்தானாகில் அதுக்கீடான பரிகரமுடையவன். †(அருளே) அபிமாநம் பண்ணக்கடவதல்லாத விஷயங்களிலே அபிமாநம் பண்ணியும், சோகிக்கக்கடவதல்லாததுக்கு சோகித்தும், நரகாவஹமான விஷயங்களை அநுபவிக்க மநோரதித்தும், "நின்றவாநில்லா நெஞ்சினையுடையேன்" என்று இப்படிகைகழிந்தவென்னை, "இனி இவன் தானாகமீளமாட்டான்" என்று அதுவே ஹேதுவாக எடுக்க ஒருப்பட்ட ஸர்வேஶ்வரன் க்ருபையாலே. அருளேயென்னவுமாம், அருளாலே யென்னவுமாம். (நன்றுநானுய்ய) "வென்றியேவேண்டி வீழ்பொருட்கிரங்கி வேற்கணார்கலவியே கருதி" என்றுபோந்தவன் சுத்தனானான் என்று தெரியாதபடி, அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தனும்படியானேன். (நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்) "வென்றியேவேண்டி வீழ்பொருட்கிரங்கி" என்று அபிமாநமும் லோபமுமிறே சொல்லிற்று; இப்படி போந்தநான், அமாநித்வாத்யாத்ம குணோபேதர்பெறும் பேற்றைப் பெற்றேன். (ச)

யருளிச்செய்கிறார், (அருளே) இத்யாதி. சப்தநிர்வாஹபேதமொழிய அர்த்தபேதமில்லை. முந்தினபக்ஷத்தில் மூலத்தில் "அருளே" என்ற வநந்தரம், அடியாக என்று அத்யாஹரித்து அந்வயம் கண்டுசொல்வது. ... ... (ச)

செல்	(அர்ச்சிராதிமார்க்கத்தாலே) செல்லக்க	கண்ணநீர் சோர	ஆநந்தபாஷ்பம் பெருகும்படியாக
கதிக்கு	பரமபதத்துக்கு [டவ	நள்	செறிந்த
அமைந்தேன்	ஆளாம்படி பூர்ணனேன்; (பின்பு)	இருளளவும்	ராத்ரிமுழுதும்
		பகலளவும்	பகல்முழுதும்
உள் எலாம்	உள்ளேயுண்டான (எலும்பும் நரம்புமான) எல்லாம்	நாராயணாவென்னும்நாமம்	நாராயணஎன்கிற திருநாமத்தை
		நான்	அடியேன்
உருகி	நீராய்க்கரைந்து	அழைப்பன்	அழைக்கப்பெற்றேன்.
குரல்	த்வநி		
தழுத்து ஒழிந்தேன்	தழுதழுக்கும்படியானேன்;		
உடம்புஎலாம்	சரீரமெங்கும்		

கண்டஆறு என்பது கண்டஆளனவும் எல்லாம்என்பது எலாம் எனவும்கிடக்கிறது. (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (கள்வனேனானேன்) † விறகு களவு கண்டவனிற்காட்டில் ரத்நாபஹாரம் பண்ணினவனுக்குப் பாபம் ப்ரசுரமாயிருக்கும்; சூத்ரதநத்தை அபஹரித்தவனிற்காட்டில் ப்ராஹ்மணதநத்தை அபஹரித்தவனுக்குப்பாபம் † விஞ்சியிருக்கும்; த்ரவ்யங்களில்தலையான ஆத்மவஸ்துவையாயிற்று அபஹரித்தது, ஸர்வேஶ்வரனுடைமையையாயிற்று "என்னது" என்றுபோந்தது. (படிறுசெய்திருப்பேன்) † மிடறுதின்றால் † சொறிய வொண்ணாதாற்போலே, §பஶ்யதோஹரனானேன்.- † நான் தேஹாத்மாபிமாநம் பண்ணிப்போந்ததுவேயன்றிக்கே, "ஈஶ்வரசேஷம் இவ்வாத்மவஸ்து" என்றிருப்பானோராஸ்திகனுண்டாகில், "தேஹாதிரிக்தமாயிருப்பதொருவஸ்துவாவதென்? ஈஶ்வரனாவதென்?" என்று காணக்காண

அரு.—அஞ்சாம்பாட்டு. — (கள்வனேன்) இத்யாதி. கீழ்ப்பாட்டிலே "வென்றியேவேண்டி" இத்யாதிகளுக்கெல்லாம் மூலம் தேஹாத்மாபிமாநமேயென்று திருவுள்ளம்பற்றி அத்தை இப்பாட்டிலே யருளிச்செய்கிறாரென்றும், ஆழியானருளாலே தாமுஜ்ஜீவித்த ப்ரகாரங்களை அருளிச்செய்கிறாரென்றும் ஸங்கதியையுட்கொண்டு "கள்வனேனானேன்" என்று பரிதபிக்கைக்குக் களவு க்ரூரதமமாகவேண்டுகையாலே, அத்தை நிரூபிக்கிறார், (விறகு) இத்யாதி. (விஞ்சியிருக்கும்) என்றவநந்தரம், ஆகையாலே என்றுசேஷம். படிறு - தீம்பாய், அத்தை, செய்வேனென்னாதே, "செய்திருப்பேன்" என்கையாலே, தடையறச்செய்துகொண்டிருப்பேனென்று, அதுக்கு ஸத்ருஷ்டாந்த தாத்பர்ய மருளிச்செய்கிறார், (மிடறு) இத்யாதி. (சொறியவொண்ணாதாற்போலே) என்றது - சொறிந்து போக்கவொண்ணாதாற்போலேயென்கை. பஶ்யதோஹரத்வந்தன்னை விவரிக்கிறார், (நான்) இத்யாதி. "கண்டவா" என்ற

§ பஶ்யதோஹரன் - பார்த்துக்கொண்டிருக்கும்போதே களவுசெய்பவன்.

ப்பறித்தேன். (கண்டவாதிரிதந்தேனேனும்) †முன்னடிதோற்றமை யாலே கைவந்தபடி பரிமாறினேனித்தனைபோக்கி, சாஸ்த்ரங்கள் "ஆகாது" என்றத்தை அறிந்தும் மீண்டிலேன். (க) [ந்ருபஸு:-ந்ருபசு:] அல்லாதவற்றோடு பரிமாறுமத்தை ஜநகிபக்கலிலேயும் பரிமாறத் தேடும்.

(தெள்ளியேனானேன்) இப்படியிருக்கச்செய்தே, ஸாராஸார விவேகம்பண்ணிச் செய்யக்கடவது செய்து அல்லாதது தவிர்ந்து போருவாரைப்போலே, விவேகமுடையேனானேன். (செல்கதிக்க மைந்தேன்) நித்ய ஸம்ஸாரியாகைக் குறுப்பானவற்றைச்செய்து போந்தநான், "இனியவன் ஸம்ஸாரத்துக்கு ஆளாகமாட்டான், பரம பதத்துக்காளாமத்தனை" என்னும்படி சமைந்தேன். † செல்லக்கடவ கதியுண்டு - பரமபதம், அங்குத்தைக்கு ஆளாம்படி பூர்ணனு னேன். † "கண்டவாதிரிதந்தேன்" என்றீர், "தெள்ளியேனானேன்," என்றீர், வ்யாஹதபாஷணமாயிருந்ததீ! என்ன; (சிக்கெனத் திருவ ருள்பெற்றேன்) இனிமீளாதபடி அருளைப்பெற்றேன்.

நீர் †பெற்றபேறுதானென்னென்ன; (உள்ளெலாமுருகிக்குரல் தழுத்தொழிந்தேன்) உள்ளெலும்பும் நரம்புமற உருகி, அதுதான் த்வநியில் † தழுதழுப்பிலேதெரியும்படியானேன். (உடம்பெலாம் கண்ணநீர்சோர) (உ) "ஆஹ்லாதசீதநேத்ராம்பு: புலகீக்ருதகாத்ரவாந்" - ஆஹ் லாதசிதநேத்ராம்பு: புலகிக்ருதகாத்ரவாந்". உடம்படங்க † பஞ்சஸ ரமும் த்ரிஸரமுமிட்டாற்போலே கண்ணநீர் வெள்ளமிட்டபடி. (நள்ளிருளளவும் பகலும் நானழைப்பன் நாராயணா வென்னும் நா மம்) † விஷயாநுபவம்பண்ணிக் களித்திருக்கும்போதோடு, விஷயா நுபவம் பண்ணுகைக்கு அர்த்தார்ஜநம்பண்ணும் போதோடுவாசியற எனக்குத்திருநாமம் சொல்லுகையே யாத்ரையாகப்பெற்றேன். (ரு)

துக்குக்கேட்பார் வ்யாவர்த்யராகையாலே, அத்தையருளிச்செய்கிறார், (முன் னடி) இத்யாதி.

சப்தார்த்தம், (செல்லக்கடவ) இத்யாதி. மேலுக்கவதாரிகை, (கண்ட வா) இத்யாதி.

* திருவருள்பெற்றத்தாலே நீர்பெற்றதான * தெள்ளியேனாகையும் * செ ல்கதிக்கமைகையுமாகிற பேறு எங்ஙனே? என்னும் ப்ரஸ்நத்தை அநுவதிக்கி றார், (நீர்) இத்யாதி. (தழுதழுப்பிலே) - சத்சதஸ்வரத்திலே. அஞ்சுமுத்துத் தாவடமொன்றாயிருக்குமது-(பஞ்சஸரம்) என்றது. விழ என்னாதே, "சோர" என்றத்தாலே பலித்த அர்த்தமிதுவென்று கொள்வது. "நள்ளிருளளவும்" என்றதுக்கு, "நள்" என்று சப்தவிசேஷமாய், அது எழுந்த மத்யராத்ரத்திலு மென்று சப்தார்த்தமாய், காலத்தை இப்படி அருளிச்செய்தவருக்கு உட்கருத் தருளிச்செய்கிறார், (விஷய) இத்யாதி. (ரு)

(க) ஸ்தோ - ८ - ருஅ. (உ) விஷ்ணுதத்வம்.

மூ.—எம்பிரா னெந்தை யென்னுடைச் சுற்ற
மெனக்கர சென்னுடை வாணாள்
அம்பினா லரக்கர் வெருக்கொள நெருக்கி
யவருயிர் செகுத்த வெம் மண்ணல்
வம்புலாஞ் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகா ளுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். (௬)

பதம்.	உரை.
நம்பிகாள்!	(பகவத்குணாநுபவத்தாலே) பூர்ணராயிருப்பவர்களே!
எம்பிரான்	எனக்கு உபகாரகனாய்
எந்தை	எனக்குத்தமப்பனாய்
என்னுடைச்சுற்றம்	எனக்கு எல்லாஉறவுமுறையுமாய்
எனக்கு அரசு	என்னை ஆண்டவனாய்
என்னுடைவாழ்நாள்	என்னுடைய ஆயுஸ்ஸாய்
அரக்கர்	ராக்ஷஸர்கள்
வெருக்கொள	அஞ்சும்படியாக
அம்பினால்	பாணங்களினாலே
நெருக்கி	நெருங்கப்பண்ணி
அவர் உயிர்	அவர்கள் ப்ராணனை
செகுத்த	முடித்த
எம் அண்ணல்	எம்ஸ்வாமியான ஸர்வேஸ்வரன் நித்யவாஸம்பண்ணுமதாய்
வம்பு	பரிமளம்
உலாம்	வீசாநின்றுள்ள
சோலை	பொழிலையும்
மா	நீண்ட
மதிள்	மதிளையுமுடைய
தஞ்சைமாமணிக்கோயிலே	தஞ்சைமாமணிக்கோயிலையே
வணங்கி	ஸேவித்து
நான்உய்ய	(உங்களைப்போலே) நானும் உஜ்ஜீவிக்கும்படி
நாராயணா என்னும்நாமம்	நாராயணாவென்கிற நாமத்தை
கண்டுகொண்டேன்	அறியப்பெற்றேன். ()

வ்யா.—ஆறும்பாட்டு.-இத்தை நீர்போர ஆதரியாநின்றீர், இது தனக்கு அர்த்தமென்னென்னச் சொல்லுகிறார். † இதினுடைய பாடத்தைஜபித்து அத்தாலே பலம்பெறவிருத்தல், இத்தாலே பாபத்தைப்போக்கிக் கர்மயோகத்துக் குடலாக்குதல் செய்கையன்றிக்கே

அநு.—ஆறும்பாட்டு.—(எம்பிரான்) இத்யாதி. "நம்பிகாள்" என்றபதம் விஷயாந்தரபரரைச் சொல்லுமளவில், இதுக்கு-அர்த்தஜிஜ்ஞாஸையாலே கேட்டார்களென்றும், பகவத்பரரானபோது, இவருடைய அதிகாரசோதநார்த்தம் ப்ரஸ்நம்பண்ணினார்களென்றும் கண்டுகொள்வது. இவ்வர்த்தத்தை யருளிச்செய்கைக்குத் தானுட்கருத்தை யருளிச்செய்கிறார், (இதினுடைய) இத்யாதி.

அர்த்தாநுஸந்தாநத்தாலே பேறு என்றுதமக்குப் பக்ஷமாகையாலே அர்த்தத்தைச்சொல்லுகிறார். நம்மாழ்வாரும், திருமந்த்ரம் ஓரிடத் திலேப்ரஸ்துதமானால் முன்னேயாதல் பின்னேயாதல் அர்த்தத் தைச் சொல்லிப்போருவர் அர்த்த ப்ராதாந்யம்தோற்ற, ஜ்ஞாநம் மோக்ஷமாகவேண்டுகையாலே.

(எம்பிரான்) எனக்கு உபகாரகன். (எந்தை) எனக்கு ஜநகன். (என்னுடைச்சுற்றம்) என்குடற்றுடக்கான எல்லா வுறவுமுறையு மானவன். (எனக்கரசு) என்னை † வன்னியமறுத்து ஆண்டவன். (என்னுடைவாணாள்) என்னுடைய ஆயுஸ்ஸு. (அம்பினாலரக்கர் வெருக்கொளநெருக்கி அவருயிர் செகுத்தவெம்மண்ணல்) ஸங்கல் பத்தாலன்றிக்கே அம்பாலே ராக்ஷஸ ரஞ்சும்படி நெருக்கி அவர்களு யிரைமுடித்த என் ஸ்வாமி, ஸ்வாமித்வத்தோடே தலைக்கட்டிற்றாய் நின்றது. †இத்தால் சொல்லிற்றாயிற்று (க) "మాతా పితా భ్రాతా నివాస శ్శరణం సుహృద్గతిర్నారాయణః - மாதாபிதா ப்ராதாநிவாஸஶ்ஶரணம்ஸு ஹ்ருத்கதிர்நாராயணः" என்கிறபடியே.

இதுதான் உமக்குவந்தபடி என்னென்ன; (வம்புலாம்சோலை மாமதிள் தஞ்சை மாமணிக்கோயிலே வணங்கி) † நித்யவஸந்தமான சோலையையும் மாமதிளையுமுடைத்தான தஞ்சைமாமணிக்கோயிலே வணங்கிவந்தது, "எல்லாவுறவுமுறையும் தானே" என்றுதோற்றும் படி அவன்வந்துநிற்கிற ஸௌலப்யத்தை அநுஸந்திக்கையாலே வந் தது. (நம்பிகாள்) பகவத்வ்யதிரிக்த விஷயங்களைப்பற்றி தேஹபோ ஷணபரராயிருக்கிற வவர்களைச்சொல்லிற்றாதல்; பகவத்குணாநு பவம்பண்ணி அத்தாலே பூர்ணராயிருக்கிற வவர்களைச்சொல்லிறு தல். (உய்ய நான் கண்டுகொண்டேன்) நீங்களெல்லாம் புறம்பே போய் க்லேசப்படாநிற்க நானுஜ்ஜீவிக்கும்படி காணப்பெற்றேனெ ன்னுதல்; நீங்களுஜ்ஜீவிக்கும் விரகறிந்து கரையேறினாற்போலே நானும் கரையேறப்பெற்றேனென்னுதல். (நாராயணாவென்னும் நா மம்) ஸர்வவிதபந்துவுமவனே என்கிற அர்த்தத்துக்கு வாசகமான திருநாமத்தைக்காணப்பெற்றேன். (௬)

(வன்னியம்) - குறும்பு. (இத்தால்-நாராயணः என்கிறபடியே - சொல் லிற்றாயிற்று) என்று வாக்யத்தை அந்வயித்துக்கொள்வது.

ததீயமானகோயிலையே வணங்கி என்றும் கோயிலிலே யிருக்கிறவனை யென்று லக்ஷணையாக்கியும் இரண்டர்த்தமருளிச்செய்கிறார், (நித்ய) இத் யாதி வாக்யத்வயத்தாலே ... ...(௬)

(க) ஸுபாலோபநிஷத் -

மூ.—இற்பிறப் பறியீ ரிவ்ரவ ரென்னீ
ரின்னதோர் தன்மையென் றுணரீர்
கற்பகம் புலவர் களைகணென் றுலகில்
கண்டவா தொண்டரைப் பாடும்
சொற்பொரு ளாளீர் சொல்லுகேன் வம்மின்
சூழ்புனற் குடந்தையே தொழுமின்
நற்பொருள் காண்மின் பாடிநீ ருய்மின்
நாராயணா வென்னும் நாமம். (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உலகில்	இப்பூமியிலுள்ளார்க்கு	பாடும்	கவிபோற்றிசெய்யுமவராய்
தொண்டரை	இழிதொழில்செய்து திரியுமவர்களை	சொல்	சப்தத்துக்கும்
இல்	(அவர்களுடைய) க்ருஹவைலக்ஷண்யத்தையும்	பொருள்	அர்த்தத்துக்கும்
		ஆளீர்	நிலவரானநீங்கள்
		வம்மின்	வாருங்கள்;
பிறப்பு	ஜந்மவைலக்ஷண்யத்தையும்	சொல்லுகேன்	(ப்ராப்தவிஷயத்தை நீங்களுமிழக்கவொண்ணாதபடி) சொல்லுகிறேன்;
அறியீர்	அறியாதவராய்		
இவர்	இப்போது ஸம்பந்நரான இவர்கள்		
அவர்	முன்பு தரித்ரராயிருந்த அவர்கள்	நீர்	என்னோடொத்தநீங்கள்
என்னீர்	என்று அறியமாட்டாதவராய்	புனல்	ஜலத்தாலே
		சூழ்	சூழப்பட்ட
தன்மை	இவர்கள் ஸ்வபாவம்	குடந்தை	திருக்குடந்தையிலெழுந்தருளியிருக்குமாராவமுதனை
இன்னதுஎன்று	இப்படிப்பட்டதொன்றுஎன்று		
உணரீர்	அறியமாட்டாதவராய்க்கொண்டு	தொழுமின்	ஸேவியுங்கள்;
கற்பகம்!	வேண்டிற்றெல்லாம் தரும் கல்பவ்ருக்ஷம்போலே உதாரரானவர்களே!	நாராயணா என்னும்	"எல்லாவுறவுமுறையுமவனே" என்கிற அர்த்தத்துக்கு வாசகமான
		நாமம்	திருநாமத்தை
புலவர்	கற்றோர்க்கு	பாடி	வாயாரச்சொல்லி
களைகண்!	ரக்ஷகரே!	உய்மின்	உஜ்ஜீவியுங்கள்;
என்று	என்றுசொல்லி	நல்பொருள் காண்மின்	இது பரமார்த்தங்கிடீர். (எ)
கண்டவா	நெஞ்சில்தோற்றின்படியே		

அநு.—ஏழாம்பாட்டு.—(இற்பிறப்பு) இத்யாதி. கீழிற் பாட்டிலே "நம்பிகாள்" என்று தோஷபூர்ணரைச்சொன்னபக்ஷத்துக்கு அநுகுணமாக, இப்பாட்டிலே விசேஷஜ்ஞரைவிட்டு, "சொற்பொருளாளீர்" என்று விசேஷிக்

வ்யா.—ஏழாம்பாட்டு.--†அல்லாதார்தானிழக்கிறூர் அவிசேஷஜ்ஞராகையாலே, விசேஷஜ்ஞராய் என்னோடு†ஸஜாதீயராய்க் கவிபாடித்திரிகிற நீங்களிழக்கிற தென்னென்கிறூர்.

(இற்பிறப்பறியீர்) †அவர்கள் கார்ஹஸ்த்யத்தில் நின்றநிலை அறியிகோள், அவர்கள் ஜந்மமறியிகோள்.(இவரவரென்னீர்)†பண்டு தரித்ரனாய் க்லேசப்பட்டுப் போந்தானொருத்தன் இப்போது ஜீவிக்கப்புக்கால் "இது இவனளவன்றிக்கே யிருந்தது; இது வேறே யொருவனடியாகவேணும்" என்று அறியமாட்டாதே,ஶ்ரிய꞉பதியைப்போலே பிறப்பேபிடித்து ஸ்ரீமானாய்ப்போந்தானாக நினைத்திருப்புதிகோள். அன்றிக்கே, (இவரவரென்னீர்) என்று ஒருசொல்லாய், ஒருவர்வாசியு மறியீரென்னருமாம். (இன்னதோர் தன்மையென்றுணரீர்) இவனுக்குள்ளவளவு இது என்றறியமாட்டீர்.

(கற்பகம்) †"நினையாதே கொடுக்கும்" என்புதிகோள். (புலவர்களைகணென்று) விசேஷஜ்ஞரா யிருப்பார்சிலர் அர்த்தித்துவந்தால் ஒளித்துப்போமவனை, "எங்களுக்கு நிர்வாஹகன்" என்பர்கள். (உலகில் கண்டவா தொண்டரைப்பாடும்) †லோகத்தில் நீசவர்த்திகளாய் த்திரிவாரைக் கண்டவா பாடும் - ப்ரதிபந்நங்களைச் சொல்லித்திரிகிற. (சொற்பொருளாளீர்) சப்தத்துக்கும் அர்த்தத்துக்கும்

கையாலே பலித்தஸங்கதியையருளிச்செய்கிறூர், (அல்லாதார்) இத்யாதி. (ஸஜாதீயராய்) என்றது - ஸத்ருசராயென்றபடி. கீழே "நம்பிகாள்" என்று - பகவத்ப்ரவணரானபோது,அவர்களைப்பார்த்து வார்த்தைசொன்னவர், க்ருபையாலே லோகத்திலே கண்வைத்து உபதேசிக்கப்பார்த்தாராய், அதிலே "சொற்பொருளாளீர்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறூர், (அல்லாதார்) இத்யாதி என்று கண்டுகொள்வது.

"இல் - அறியீர், பிறப்பு அறியீர்" என்று சப்தார்த்தமாய், அத்தையருளிச்செய்கிறூர், (அவர்கள்) இத்யாதி வாக்யத்வயத்தாலே. இவர் - இப்போது ஸம்பந்நரானவர்கள்,அவர்-முன்பு தரித்ரராயிருந்தார் என்னீரென்று சப்தார்த்தமாய், பலிதார்த்த மருளிச்செய்கிறூர், (பண்டு) இத்யாதி வாக்யத்வயத்தாலே.

(நினையாதே) என்றது-தேயவஸ்துவின் உத்கர்ஷத்தைநினையாதே என்றபடி; ஸ்வப்ரயோஜநத்தை நினையாதே என்றுமாம்; யாசகனுடையகுறைகளை நினையாதே என்றுமாம். உலகில் தொண்டரை - ப்ருத்யக்ருத்யம் பண்ணுமவரை, கண்டவாபாடுமென்றர்த்தமாயருளிச்செய்கிறூர், (லோகத்தில்) இத்யாதி.

மூ. கற்றிலேன் கலைக ளைம்புலன் கருதும்
கருத்துளே திருத்தினேன் மனத்தைப்
பெற்றிலே னதனால் பேதையேன் நன்மை
பெருநிலத்தா ருயிர்க் கெல்லாம்
செற்றமே வேண்டித் திரிதருவேன் தவிர்ந்தேன்
செல்கதிக் குய்யுமா றெண்ணி
நற்றுணையாகப் பற்றினே னடியேன்
நாராயணா வென்னும் நாமம். (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கலைகள்	சாஸ்த்ரங்களை	கருத்துள்	விஷயங்களிலே
கற்றிலேன்	(ஓராசார்யனிடத்தில்) அப்யஸித்தேனல்லேன்;	மனத்தை	மநஸ்ஸை
		திருத்தினேன்	வலியமூட்டிப்போந்தேன்;
		அதனால்	இப்படிபோருகையாலே
ஐம்புலன்	ஐந்து இந்த்ரியங்கள்		
கருதும்	நினைக்கிற	பேதையேன்	அறிவிலியானநான்

கிலவரானநீங்கள். †சொல்லுடைமைக்கு உங்களிற் காட்டிலில்லை, ப்ரமேயஜ்ஞாநமுடையார் உங்களத்தனையில்லை.

(சொல்லுகேன்வம்மின்) உங்கள் ப்ரமேய ஜ்ஞாநத்துக்கும் சொல்லுடைமைக்கும் பாத்தம் போரும்படியான விஷயத்தை நான் காட்டித்தரவாருங்கோள். (சூழ்புனல் குடந்தையே தொழுமின்) ஓராறும் படைவீடும் வேணுமே உங்களுக்குக் கவிபாடும் போது. ஆறும் மலையும் படைவீடும் உள்ளிட்ட பரிகரங்களும்வேணுமே. (நற்பொருள் காண்மின்) நன்றான அர்த்தத்தைக் கண்டு கொள்ளுங்கோள். †பேறும் தானேயாய் தன்னைத்தருவதும் தானேயாயிருக்கை. (பாடிநீருய்மின் நாராயணாவென்னும் நாமம்) வாச்யங்களில் தலையானத்தைக் காட்டித்தந்தேன், அதுக்கு வாசகமான திருநாமத்தைப்பாடி உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார் (க)†"யஃபரஸ்ஸ மஹேஶ்வரஃ - யஃபரஸ்ஸமஹேஶ்வரஃ" என்றதிறே † இதினுடைய † ஸங்க்ரஹத்தை. வாசகங்களில் தலை அகாரம், வாச்யங்களில் தலை † கீழ் நான்சொன்னது.

தாத்பர்யார்த்தம், (சொல்லுடைமைக்கு) இத்யாதி.

நன்மையை விவரிக்கிறார், (பேறும்) இத்யாதி. நாராயணபதம் நற்பொருளுக்கு வாசகமென்னுமதுக்கு ப்ரமாணத்தை யருளிச்செய்கிறார், (யஃ) இத்யாதி. (இதினுடைய) என்றது - நாராயணபதத்தினுடைய வென்றபடி. (ஸங்க்ரஹத்தை) - அகாரத்தை. (கீழ்நான்சொன்னது) என்றது "நற்பொருள்" என்றதென்றபடி ... ... (எ)

(க) தைத்தி - நாரா - உச.

நன்மை	நல்லநினைவை
பெற்றிலேன்	பெறுதவனானேன்;
பெரு	பெரிய
நிலத்து	பூமியில்
ஆர்	நிரம்பியிருக்கிற
உயிர்க்குஎல்லாம்	எல்லாப்ராணிகளுக்கும்
செற்றமே	ஹிம்ஸைபண்ணும் உபாயத்தையே
வேண்டி	நினைத்து
திரிதருவேன்	திரிந்துக்கொடுபோந்தேன்; (இப்படிநெடுங்காலம் திரிந்தேனாகிலும், அவன்கடாக்ஷத்தாலே)
தவிர்ந்தேன்	இவையெல்லாம் போகப்பெற்றேன்;
செல்கதிக்கு	(அர்ச்சிராதி மார்க்கத்தாலே) செல்லக்கடவ பரமபதத்துக்குப்போய்
உய்யும்ஆறு	உஜ்ஜீவிக்கும் வகையை
எண்ணி	நினைத்து
அடியேன்	சேஷபூதனானநான்
நாராயணாஎன்னும்நாமம்	நாராயணா என்கிற திருநாமத்தை
நல்துணையாக	நல்லஸஹாயமாக
பற்றினேன்	அவலம்பித்தேன். ()

வ்யா.—எட்டாம் பாட்டு--† எங்கள் பூர்வவ்ருத்தத்தைப் பார்த்தால், நீர் சொல்லுகிற அர்த்தத்துக்கு நாங்கள் தேசிகராகவல்லோமோவென்ன; கெடுவிகாள்! நானன்றோ இவ்விஷயத்துக்கு யோக்யனாய் உங்களுக்கு உபதேசிக்கும்படியானேன், ஆனபின்பு இவ்விஷயத்துக்கு ஆளாகாதாருண்டோ? என்கிறார்.

(கற்றிலேன் கலைகள்) ஓராசார்யனைப் பின்சென்று அவனுச்சரிக்க அநூச்சாரணம் பண்ணிப்போராமையாலே, சாஸ்த்ரீய ஜ்ஞானமுண்டாயிற்றதில்லை. (ஐம்புலன் கருதும் கருத்துளே திருத்தினேன் மனத்தை) மநஸ்ஸைப் பரவிஷயமாக்கி, விஷயங்களிலே ப்ரவணமாகிற பாஹ்யேந்த்ரியங்களுக்காதாசித்கமாயாகிலும்விஷயங்களில்நின்றும்மாற்றி ப்ரத்யக் விஷயமாக்கினால் நல்வழி போகைக்குறுப்பாமிறே; ஶ்ரோத்ராதீந்த்ரியங்கள் விஷயங்களிலே யிழிந்து தான் நினைத்தவழியே கொடுபோக, மநஸ்ஸையும் அதுக்கு உறுப்பாக்கிப் போந்

அந.—எட்டாம்பாட்டு.—(கற்றிலேன்) இத்யாதி. "வாடினேன்" என்று துடங்கி பூர்வ வ்ருத்தத்தை அநுஸந்தித்துச்சென்று, கீழ் இரண்டுபாட்டிலே அத்தை விட்டவர், மீளவும் பூர்வ வ்ருத்தத்தை யருளிச்செய்கைக்கு ஸங்கதி யருளிச்செய்கிறார், (எங்கள்) இத்யாதி. "பாழியானாழியானருளே" என்று ஆழ்வார் * மயர்வற மதிநல மருளப் பெற்றவராகையாலே அவருடைய பூர்வ வ்ருத்தமெல்லாம் அகிஞ்சித்கரமாயிற்றென்று கருதி, ப்ரஶ்நம்பண்ணினார்களென்று கருத்து. அநுதாபஶூந்யனாயிருந்த என்னிடத்திலே யருளினவன், நாங்கள் தேசிகராக வல்லோமோ" என்னும் உங்களிடத்தில் அருளக்குறையில்லை என்று உத்தரத்துக்குக் கருத்து.

தேன். (திருத்தினேன் மனத்தை) விஷய ப்ரவணரானவர்கள் "விஷய ப்ராவண்யம் போராது" என்று ஔஷதஸேவை பண்ணியிருப்பார்களிறே, அப்படியே, விஷயங்களிலே மநஸ்ஸை வலிய மூட்டிப் போந்தேன். (பெற்றிலே னதனால் பேதையேன் நன்மை) † சாஸ்த்ரீய ஜ்ஞாநமுமின்றிக்கே விஷய ப்ரவணனாய்ப் போருகையாலே அறிவு கேடனாய் ஹிதசிந்தை பண்ணப்பெற்றிலேன். (பெருநிலத் தாருயிர்க் கெல்லாம் செற்றமே வேண்டித் திரிதருவேன்)† எனக்கொரு நன்மை ஸம்பாதியாமையே யன்றிக்கே, பரஹிம்ஸை பண்ணும் விரகே சிந்தித்துப் போந்தேன். † எல்லாரையும் ஹிம்ஸித்து நான் ஜீவிக்கும் விரகேபார்த்துப்போந்தேன். † "ஒருவனுக்கு பகவத் ஸம்பந்தமுண்டு இல்லை என்று தனக்கே அறியலாம்" என்று பலகாலும் அருளிச்செய்வர் ஜீயர். ஒருவன் நோவுபடக்கண்டால் "ஐயோ!" என்று இரக்கம்பிறந்திருக்கில், "நமக்கு பகவத் ஸம்பந்தமுண்டு" என்றறியலாம்; "அத்தனையும் வேணும்" என்றிருந்தானாகில், "நமக்கு பகவத் ஸம்பந்தமில்லை" என்றிருக்கலாம். † பெருநிலத்து ஆருயிர்க் கெல்லாமென்னுதல்; பெருநிலத்தாருயிர்க்கெல்லாமென்னுதல். (தவிர்ந்தேன்) † ஹேது வறிந்திலேன், தவிர்ந்துகொடு நிற்கக்கண்டேன். (க) "உய்வதோர் பொருள்" என்றும், (உ) "ஆழியானருள்" என்றும், (ங) "சிக்கெனத்திருவருள் பெற்றேன்" என்றும் கீழ்ச்சொன்னீரே. (செல்கதிக் குய்யுமாறெண்ணி) † செல்லக்கடவ கதியுண்டு - பரமபதம், அங்கே புக்கு உஜ்ஜீவிக்கும்படியை மநோரதித்து. (நற்றுணையாகப் பற்றினேனடியேன்) அம்பியைக்கட்டிக்கொண்டு ஆற்றி விழிவாரைப்போலே யன்றிக்கே (ச) "பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்-பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்

"அதனால் - பேதையேன் நன்மை - பெற்றிலேன்" என்று அந்வயித்தருளிச் செய்கிறார், (சாஸ்த்ரீய) இத்யாதி. "செற்றமே" என்ற ஏவகாரத்தாலே ஸ்வஜீவநம் வ்யாவர்த்திக்கிறதென் றருளிச்செய்கிறார், (எனக்கு) இத்யாதி. பரஜீவநம் வ்யாவர்த்யமென்று தாத்பர்யாந்தரம், (எல்லாரையும்) இத்யாதி. பரஹிம்ஸை அநர்த்தகரமென்னுமத்தை ஐதிஹ்யமூலேந உபபாதிக்கிறார், (ஒருவனுக்கு) இத்யாதி. பெருநிலத்து - மஹாப்ருதிவியில், ஆர் - நிரம்பியிருக்கிற வென்றும், பெருநிலத்தாரான உயிர்க்கெல்லாமென்றும் சப்த நிர்வாஹம் காட்டுகிறார், (பெரு) இத்யாதி வாக்யத்வயத்தாலே. (ஹேதுவறிந்திலேன்) என்றது - என்னிடத்திலொரு ஹேதுவறிந்திலேனென்றபடி. "செல்கதிக்கு" என்றவநந்தரம், போய் என்று சேஷபூரணம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார், (செல்ல) இத்யாதி. (அ)

(க) க - க - க -
(உ) க - க - ங -
(ங) க - க - ரு.
(ச)

மூ.—குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்
பெற்றதாயினு மாயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். (கூ)

பதம்.	உரை.
நாராயணா என்னும்நாமம்	நாராயணா என்கிற திருநாமமானது
குலம்	(தன்னை அநுஸந்தித்தவர்களுக்கு) உயர்ந்தகுலத்தை
தரும்	கொடுக்கும்;
செல்வம்	ஐஸ்வர்யத்தை
தந்திடும்	தரும்;
அடியார்	சேஷபூதரானவர்கள்
படு	அநுபவித்தேகழிக்க வேண்டிய
துயராயின எல்லாம்	துக்கம்என்று பேர்பெற்ற எல்லாவற்றையும்
நிலந்தரம்செய்யும்	தரைமட்டமாக்கிவிடும்;
நீள்விசும்பு	பரமபதத்தை
அருளும்	கொடுக்கும்
அருளொடு	க்ருபையோடுகூட
பெருநிலம்	கைங்கர்யமாகிறபெரியஸ்த்தாநத்தையும்
அளிக்கும்	தரும்;
வலம்	(தன்னை அநுபவிக்கைக்கீடான) சக்தியையும்
தரும்	கொடுக்கும்;
மற்றும்	இன்னமுள்ள எல்லா ஹிதங்களையும்
தந்திடும்	செய்துகொடுக்கும்;
பெற்றதாயினும்	சரீரத்தையுண்டாக்கின தாயாரைக்காட்டிலும்
ஆயின	ஹிதமாயுள்ள ஸ்வரூபஜ்ஞாநவிகாஸத்தை
செய்யும்	பிறப்பிக்கும்;
நலம்தரும்	கைங்கர்யஸ்ரீயைத்தருவதான
சொல்லை	திருநாமத்தை
நான்	இப்படியிருப்பதொன்றுண்டு என்றறியாதநான்
கண்டுகொண்டேன்	காணப்பெற்றேன். ()

ருதம்” என்னுமத்தைப் பற்றினேன். அக்கரைப்படுத்திவிடுமத்தைப் பற்றினேன். (நாராயணாவென்னும் நாமம்) அக்கரைப்படுத்தும் வஸ்துவுக்கு வாசகமான திருநாமம். (க) “மத்பக்தம் ந-யாமி பரமாம் கதிம்” என்னக்கடவதிறே. (அ)

(க) வராஹசரமம்.

வ்யா.—ஒன்பதாம் பாட்டு.-†அநாதிகாலம் விஷய ப்ரவணனாய் பகவத் விஷயத்தில் விமுகனாய்ப்போந்த நான், விஷயங்கள்தான் †ஸாவதியாய் †மீண்டவளவிலே, ஸர்வேஶ்வரன் தன் க்ருபையாலே கைக்கொண்டானென்கிற அர்த்தத்தை "உய்வதோர் பொருளால்" என்கிறத்தாலே சொன்னார் †முதற்பாட்டில்; காலமடங்க வ்யர்த்தமே புறம்பே போக்கினேன் என்றார் இரண்டாம்பாட்டில்; †ரக்ஷையேவேண்டி அதுக்கு விருத்த(ஞ)மான துஷ்கர்மங்களைப் பண்ணி விஷய ப்ரவணனாய் காலத்தை யடங்க நிஷ்ப்ரயோஜநமாகப் போக்கின நான் போக்யனுமாய் ப்ராப்தனுமான ஸர்வேஶ்வரனையும் அவனுக்கு வாசகமான திருநாமத்தையும் காணப்பெற்றேனென்றார் மூன்றாம்பாட்டில்; தர்மியாய் சோகிக்கக்கடவதல்லாத விஷயங்களுக்குச் சோகித்து விஷய ப்ரவணனாய் அநாத்ம குணங்களால் குறைவற்ற நான், அமாநித்வாத்யாத்மகுணோபேதர் பெறும் பேற்றைப்பெற்றேனென்றார் நாலாம்பாட்டில்; ஆத்மாபஹாரத்தைப் பண்ணி பஶ்யதோஹரனாய், ஸர்வேஶ்வரனொருவனுளன் என்றிருப்பா ருண்டாகில் §உக்த்யாபாஸங்களாலே இல்லை செய்து போந்த நான், ஆத்ம ஸமர்ப்பணம்பண்ணி என்றுமிதுவே யாத்ரையாய்ப் போருவார் பெறும்பேற்றைப் பெற்றேனென்றார் அஞ்சாம் பாட்டில்; "இதுக் கர்த்தமென்? இதுவந்தபடி யென்?" என்ன, அர்த்தத்தையும் சொல்லி, ஸம்ஸாரிகளெல்லா மிங்ஙனே க்லேசப்படாநிற்க †நானிப் பேற்றைப் பெற்றேனென்றார் ஆறும்பாட்டில்; அல்லாதா ரிழக்கிறார்கள் ‡ (அவிசேஷஞ்ஜராகையாலே); என்னோடு ஸஜாதீயராய் விஶேஷஜ்ஞராய்க் கவிபாடித் திரிகிற நீங்களிழ

அரு.—ஒன்பதாம்பாட்டு.—(குலந்தரும்) இத்யாதி. நிகமம் அணித்தானவாறே இத்திருமொழியில் பாட்டுத்தோறும் சொன்ன ப்ரமேயங்களை புத்தி ஸௌகர்யார்த்தம் அநுவதியாநின்றுகொண்டு ஸங்கதி யருளிச்செய்கிறார், (அநாதி) இத்யாதி. (ஸாவதியாய்) என்றது-அல்பமாயென்றபடி. இது-"விஷயங்கள் தன்னில் அரைக்ஷணம் கால்தாழப்பண்ண வல்லதொரு விஷயந்தானில்லையிறே" என்றருளிச் செய்ததைப்பற்ற. (மீண்டவளவிலே) என்றது - ஒரு விஷயத்தில் நின்றும் மீண்டு விஷயாந்தரத்தில் போகாதே ஓடி இளைத்தவளவிலே என்கை. (முதற்பாட்டில்) என்ற வநந்தரம், அருளப்பெற்றவராகையாலே என்றுகூட்டுவது. இரண்டாம்பாட்டில் காலம் வ்யர்த்தமே போக்கினத்தை யெல்லாம் மூன்றும் பாட்டில் அநுவதித்துக்கொண்டு, தாம் பெற்ற பேற்றை அருளிச்செய்தா ரென்கிறார், (ரக்ஷையே) இத்யாதி. (நானிப்பேற்றை) என்ற வநந்தரம், "தஞ்சைமாமணிக் கோயிலே வணங்கி" என்று கூட்டுவது.

§ (பா) யுக்த்யாபாஸங்களாலே.   ‡ குண்டலிதம் க்வாசித்கம்.

வாதே கொள்ளுங்கோளென்றார் ஏழாம்பாட்டில்; "நீர் சொல்லு கிற அர்த்தத்துக்கு நாங்கள் தேசிகராக வல்லோமோ" என்ன, கெடுவிகாள்! நானன்றோ இவ்விஷயத்துக்கு நிலவனாய் உங்களுக்கு ங்கூட உபதேசிக்கிறேன், ஆனபின்பு பகவத் விஷயத்துக் காளாகா தாரில்லை என்றார் எட்டாம்பாட்டில்; "நீர் திருநாமத்தைப்போர ஆதரியா நின்றீர், இதென்ன பலத்தைத் தரவற்று" என்ன, திரு நாம பலத்தைச்சொல்லுகிறார் இப்பாட்டில்.

(குலந்தரும்) †ஜந்மவ்ருத்தங்களால் குறைய நின்றானொருத்த னுக்கு பகவத் ஸம்பந்தமுண்டானால், இவற்றாலுயர்ந்தானொருத் தன், இவை யிரண்டிலு மிவனுக்குத் தாழ்வுண்டாகவும், தானுயர்ந் தானாகவும் † நினைத்திருக்கவுங்கூடக் கூசவேண்டும்படியாயிற்று பக வத் ப்ரபாவமிருப்பது. † ஆகிலும், பெண்கொடுத்தல் கொள்ளுதல் செய்கிறாரில்லை, அதுக்கடி †ஜாதி நிபந்தநமாகை. †ஶ்லாகை †குண நிபந்தநம்; (க) "ஶ்லாக்யஸ்ஸகுணீநஃ- ஸ்ஶ்லாக்யஸ்ஸகுணீதந் யஸ்ஸகுலீநஃ" என்னக்கடவதிறே. § †கண்டதெல்லாம் தர்மஸந்தே ஹம் பண்ணக்கடவ தர்மபுத்ரன், பகவத் ப்ரத்யாஸத்தியாலும் அச ரீரி வாக்யத்தாலும் விதுரரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்காரம் பண்ணினானிறே; ருஷிகள், தர்மவ்யாதன் மாம்ஸவிக்ரயம் பண் ணிக்கை யொழியுந்தனையும் பார்த்துநின்று தர்மஸங்கடங்கள் கேட் டுப்போனார்களிறே. இங்ஙனன்றாகில் பஞ்சமவேதமான மஹா பார தத்திலே யெழுதக்கூடாதிறே. †கைசிக கதையிலே வந்தவாறே, விலக்ஷணனாயிருப்பானொரு ப்ராஹ்மணனாசார வைகல்யத்துக்கு பகவத் ஜ்ஞாநமுடையா னொரு பாடுவானமேல பரிஹாரம் † இருந்ததிறே.

குலத்தையும் அதுக்கீடான வ்ருத்தத்தையும் தருமென்று சப்தார்த்தம் விவக்ஷித்து ஹேதுவருளிச் செய்கிறார், (ஜந்ம) இத்யாதி. (நினைத்திருக்கவும் கூட) என்றது - தாழ்ந்த சொலவும் தாழ்வுக்கு ஸூசகமான செயலும் செய் யக்கூடாதென்றபடி. இப்படி உத்க்ருஷ்டரானால் கொடுத்துக்கொள்ள வேண் டாவோவென்ன; அருளிச்செய்கிறார், (ஆகிலும்) இத்யாதி. (ஜாதிநிபந்தநம்) என்றது - ப்ராஹ்மணஜாதியிலே பிறந்தவன் அதிலே கொடுத்துக்கொள்ளக் கடவனென்று சரீர ஸம்பந்தத்துக்குச் சொன்ன சாஸ்த்ர நிபந்தநமென்றபடி. கொள்வினை கொடுப்பினை யில்லாவிட்டால் ஶ்லாக்யதை எங்ஙனே யென்ன; அருளிச்செய்கிறார், (ஶ்லாகை) இத்யாதி. (குண நிபந்தநம்) என்றது - பக வத் ப்ரஸாதத்தாலே வந்த சேஷத்வ ஜ்ஞாந நிபந்தந மென்றபடி. சரீர ஸம்பந் தம் தவிர த்ரிவித கரணத்தாலும் பகவத் ப்ரத்யாஸந்நரை ஆதரிக்கைக்கு ப்ர மாணம் காட்டுகிறார், (கண்டதெல்லாம்) இத்யாதி வாக்யத்ரயத்தாலே. ப்ரமா ணாந்தரம், (கைசிக) இத்யாதி. (இருந்ததிறே) வராஹபுராணத்திலே என்று

(க) [யாநத்தில்காண்க.

§ இக்கதையை ஸ்ரீவசநபூஷணம் - உ௲௦ - உ௲௧ - வது வாக்ய வ்யாக்

†ஸ்ரீவிபீஷணாழ்வான், ராவணனைப்பார்த்து, "பெருமாளைச் சரணம் புகு" என்று சொல்ல, (க) "𑌤𑍍𑌵𑌾𑌂 𑌤𑍁 𑌧𑌿𑌕𑍍 𑌕𑍁𑌲𑌪𑌾𑌂𑌸𑌨𑌮𑍍 - த்வாந்துதிக் குலபாம்ஸநம்" என்று நீ இக்குடிக்கு உடலல்ல என்றானிறே. ராவணனுக்கு வார்த்தைசொல்லுகிற விடத்தில், (உ) "𑌨𑌿𑌶𑌾𑌚𑌰-நிசாசர" என்று அவனை ராக்ஷஸனாகவும், தான் அல்லனாகவும் சொன்னான். இவனேயன்றிக்கே, (ந) "𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌂𑌬𑌲𑌾𑌬𑌲𑌮𑍍 - ராக்ஷஸாநாம்பலாபலம்" என்று பெருமாள்தாமு மருளிச் செய்தார். ஆகையாலே, பகவத் ஸம்பந்தம் ஸ்பர்சவேதியா யிருந்தது.

(செல்வம் தந்திடும்) ராவண ஸம்பந்தமற்றவாறே, (ச) "𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌗𑌤𑌶𑍍𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍-அந்தரிக்ஷகதஶ்ஶ்ரீமான்" என்று ராமஸம்பந்தத்தாலே வந்த ஸ்ரீ குடிபுகுந்தது. அன்றிக்கே, † அதுதன்னையே சொல்லிற்றாகவுமாம், (ரு) "𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌮𑌯𑌾 𑌲𑌙𑍍𑌕𑌾 - பரித்யக்தா மயா லங்கா" என்று இவன்றானே கைவிடச்செய்தே, ராவண ஸம்பந்தமற்றவாறே, ராமஸம்பந்தத்தாலே லங்கைஶ்வர்யமும் முடியும் அவன் றலையிலே வந்திருந்ததிறே. (சு) "நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்றன்னையே தான்வேண்டும் செல்வம்" என்னக்கடவதிறே. உன்னையே யுகந்து நிலைநில்லாத ஸம்பத்தை வேண்டேன் என்றிருப்பாரை அது கைவிடாதாப்போலே என்கிறார், † தாம்விடச் செய்தே தம்மை அது கைவிடாதபடியாலே. † அங்ஙனன்றியே, உன்னையுகந்து நிலைநின்ற ஐஶ்வர்யத்தைக் காற்கடைகொண்டு நீயே யமையுமென்றிருக்குமவனை மோக்ஷஶ்ரீ கைவிடாதாப்போலே யென்றுமாம்.

(அடியார் படுதுயராயின வெல்லாம் நிலந்தரம் செய்யும்) அடியாருண்டு - தனக்கு அஸாதாரணரானவர்கள்; படுதுயருண்டு - (எ) "𑌅𑌵𑌶𑍍𑌯𑌮𑌨𑍁𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 - அவஶ்ய மநுபோக்தவ்யம்" என்று அநுபவ விநாஶ்யமான கர்மங்கள்; அவற்றையெல்லாம், (நிலந்தரம் செய்யும்) நிலத்தோ டொக்கப்பண்ணும் - வெறுந்தரையாக்கும்-கே

சேஷம். இதிஹாஸ ஶ்ரேஷ்டத்தில் ப்ரமாணங்களை யருளிச்செய்கிறார், (ஸ்ரீவிபீஷணாழ்வான்) இத்யாதி.

(அது தன்னையே) என்றது-லங்கைஶ்வர்யந்தன்னையே என்றபடி. (தாம்) என்றது - குலசேகராழ்வாரை, "நீள் செல்வம்" என்றது - விபரீத லக்ஷணையாலே அஸ்த்திரைஶ்வர்யத்தைச் சொல்லுகிறதென்று கீழ் அருளிச்செய்து, "நீள்" என்றத்தாலே நித்யைஶ்வர்யமென்று யோஜநாந்தர மருளிச் செய்கிறார், (அங்ஙனன்றியே) இத்யாதி.

(க) ரா-யு-கசு-கரு.
(உ) ரா-யு-கசு-உஅ.
(ந) ரா-யு-கக-எ.
(ச) ரா-யு-கசு-கஎ.
(ரு) ரா-யு-சகூ-ரு.
(சு) பெரு-திரு-ரு-க.
(எ)

வலபூதலமாக்கும். அங்ஙனன்றியே, நிலமென்று - அவன் வர்த்திக்கிற இடமாய், தரமென்று - தரணமாய், இடைக்குறைத்தலாய், இவன் பக்கல் நின்றும் கர்மங்கள்தானே நமக்கிருப்பிடமன்றென்று போம்படி பண்ணுமென்றுமாம். (க) "[illegible] - யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோமஹீயதே । நதத்ரஸஞ்சரிஷ்யந்தி வ்யாதிதுர்ப்பிக்ஷதஸ்கராঃ" (உ) "சும்மெனாதே கைவிட்டோடித்தூறுகள் பாய்ந்தனவே" (ங) "† கோலாடு † குறுகப்பெறா." அங்ஙனன்றியே, நிலமென்று - ப்ருதிவ்யாதி பூதங்களாலே ஆரப்த்தமான சரீரமாய், இவன் பண்ணின கர்மங்களைச் சரீரத்தளவாக்கும், பக்திமானுக்கு ப்ராரப்த்த கர்மாவதியா யிருக்கும்; இவ்வர்த்தாநுஸந்தாநத்தைப் பண்ணி ப்ரபந்நனானவனுக்கு இஶ்ஶரீராவதியா யிருக்கும். (நீள்விசும்பருளும்) விரோதி நிவ்ருத்தியாகிறது - சரீராவதியிறே; அவ்வளவன்றியே, பரமபதத்தையும் கொடுக்கும். (அருளொடு பெருநிலமளிக்கும்) அருளோடேகூட பெரிய நிலமுண்டு - பெரிய ஸ்த்தாநம் - கைங்கர்யமாகிற பெரியபதம்; அத்தைத்தரும். (வரந்தரும்) (ச) "ஒழிவில்காலம்" என்று இவனுக்கு ப்ரார்த்தநீயமான கைங்கர்யத்தைக்கொடுக்கும். (வலந்தரும்) என்றாலும், அது தன்னையே காட்டும். அங்ஙனன்றிக்கே, (வலந்தரும்)என்று (ரு) "[illegible] - யஆத்மதா பலதா" என்று தன்னையும் கொடுத்துத் தன்னை யநுபவிக்கைக்கீடான சக்தியையும் கொடுக்கும். நித்ய ஸம்ஸாரியாய் இன்று சென்றவனுக்கும், நித்யாநுபவம்பண்ணுகிற நித்யஸூரிகளோடொக்க அநுபவிக்கைக்கீடான சக்தியையும் கொடுக்கும்.

அங்ஙனன்றிக்கே, (அருளொடு பெருநிலமளிக்கும் வலந்தரும்) தன்னை ஆஶ்ரயித்தவர்தங்களளவன்றிக்கே, தங்களோடு ஸம்பந்தித்தார்க்கும், தங்களருளோடேகூட, பெரிய நிலமுண்டு - பரமபதம், அத்தைக்கொடுக்க வல்லராம்படியான ப்ரஸாதத்தைப்பண்ணும்.

(மற்றும் தந்திடும்) இவனுக்கு ஹிதமாய் இவனறியாத வற்றையும் தானே கொடுக்கும்; "இவன் கார்யம் தானறிந்தானே, நாம

(கோலாடு) என்றது - கோல் நடமாடும் தேசமாய், அத்தால் - ஆஜ்ஞை நடக்குமிடத்தி லென்றபடி. (குறுகப்பெறா) - கிட்டப்பெறாது. "பெருநிலம்" என்ற பதத்துக்கர்த்தமான கைங்கர்யத்துக்குப் ப்ரார்த்தநீயதை, "வரம்" என்றத்தாலே சொல்லுகிறதென் றருளிச்செய்கிறார், (ஒழிவில்) இத்யாதி.

(க)
(உ) பெரி-திரு-ரு-ச-ங.
(ரு)
(ங) பெரி-திரு-ரு-ச-ச.
(ச) தி-வாய்-ங-ங-க.

ண்ரே கடவோம்'' என்று தானே கொடுக்கும். § கோவிந்தஸ்வாமி, தன்னைக் கண்டவநந்தரம் "நான்கூடப் போருவேன்" என்ன; அவனுடைய முன்புத்தை நினைவையறிந்து, "நீ யிங்கேயிருந்து சிறிதுநா ளநுபவித்து வா'' என்று போனானிறே. (பெற்றதாயினு மாயினசெய்யும்) மாதாவானவள், சரீரத்துக்கு உத்பாதகையாமளவிறே; ஆத்மாவுக்கு ஸ்வரூபமான ஜ்ஞாநவிகாஸத்தைப் பிறப்பிப்பான் † அவனேயிறே. (க) "శరీరమేవ మాతాపితరౌ జనయతః - சரீரமேவ மாதாபிதரௌ ஜநயதஃ'' என்று, விரோதியான சரீரத்தை உத்பாதித்து விடுமளவிறே அவர்கள் செய்வது; (உ)"స హి విద్యాతస్తం జనయతి తచ్ఛ్రేష్ఠం జన్మ - ஸஹிவித்யாதஸ்தம் ஜநயதி தச் ச்ரேஷ்ட்டம் ஜந்ம'' என்று ஜ்ஞாநப்ரதனாவான் அவனேயிறே,

(நலந்தரும் சொல்லை) அர்த்தாநுஸந்தாந மொழியவே பாடத்தைச்சொன்ன மாத்ரத்திலே பக்தியைப் பிறப்பிக்கு மென்னுதல்; †நலமென்று வ்ருத்தமாய், கைங்கர்யத்தைத் தருமென்னுதல். †ஆகையாலே கைங்கர்யத்துக்கடியான ருசியைப் பிறப்பிக்குமென்னுதல்; கைங்கர்யம் தருமென்னுதல். (நான் கண்டுகொண்டேன்) இப்படியிருப்பதொன்றுண்டு என்றறியாத நான் காணப்பெற்றேன். (நாராயணா வென்னும் நாமம்) (ங)† "నమో నారాయణాయేతి మన్త్రస్సర్వార్థసాధకః-நமோநாராயணாயேதி மந்த்ரஸ் ஸர்வார்த்தஸாதகஃ'' என்னுமத்தை. (கூ)

மூ. மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர்
மங்கையார் வாள் கலிகன்றி
செஞ்சொலா லெடுத்த தெய்வ நன்மாலை
யிவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்

(அவனேயிறே) என்றது - மந்த்ரப்ரதனான ஆசார்யனிறே என்கை. இத்தால், மந்த்ர ஸ்வரூபஜ்ஞாநத்தை யுண்டாக்கு மென்றதாயிற்று.

"அருளொடு பெருநில மளிக்கும் வலந்தரும்" என்றதுக்கு மோக்ஷப்ரதத்வரூப சக்திப்ரதாநம் அர்த்தமான பக்ஷத்திலே, "நலம்" என்றதுக்கு அர்த்தமருளிச் செய்கிறார், (நலமென்று) இத்யாதி. (ஆகையாலே) என்றது-ஸ்வரூபஜ்ஞாந ஜநகமாகையாலே என்றபடி. இவ்வாக்யத்வயமும் கீழ்ச்சொன்ன அர்த்தத்துக்கு விவரணமென்று கொள்வது. "என்னும்" என்கிற ப்ரஸித்தியை இப்பாட்டு ப்ரமேயத்துக்குச்சேர வருளிச்செய்கிறார், (நம) இத்யாதி. (க)

---

§ இக்கதையை ரு-ப, அ-தி, ரு-பா, "மாகமாநிலனும்" என்கிறபாட்டின் வ்யாக்யாநத்தில்காண்க.

(க) (உ) (ங)

துஞ்சும் போதழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா வென்னும் நாமம். (கO)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஞ்சு	மேகங்கள்	நல்	விலக்ஷணமான
உலாம்	ஸஞ்சரியாநின்றுள்ள	மாலை	சொன்மாலையான
சோலை	சோலையையும்	இவைகொண்டு	இத்திருமொழியாலே
வண்டு	வண்டுகள்	துஞ்சும்போது	சரீராவஸாநத்திலே
அறை	சப்தியாநின்றுள்ள	அழைமின்	கூப்பிடுங்கள்;
மாநீர்	மிக்கஜலத்தை யுமுடைய	துயர்வரில்	வ்யஸநங்கள் நேரிடும்காலத்திலும்
மங்கையார்	திருமங்கையிலுள்ளார்க்கு ரக்ஷகமான	நினைமின்	இத்தையே மநநம்பண்ணுங்கள்;
வாள்	வாளையுடையராய்	துயரிலீர்	வ்யஸநமற்றநீங்கள்
கலிகன்றி	கலிதோஷத்தைப் போக்கினஆழ்வார்	சொல்லிலும்	சொன்னாலும்
		நன்றாம்	நன்மையைத்தரும்;
செம்சொலால்	செவ்வியசொல்லாலே	நாராயணா என்னும்நாமம்	நாராயணாஎன்கிற திருநாமமானது
எடுத்த	எல்லார்க்கும் தெரியும்படி அருளிச்செய்ததாய்	நம்முடை	நம்முடைய
		வினைக்கு	பாபங்களுக்கு
தெய்வம்	அப்ராக்ருதமாய்	நஞ்சுதான்கண்டீர்	விஷமாயிராநின்றது கிடீர்! (கO)

வ்யா—பத்தாம்பாட்டு—(மஞ்சுலாஞ் சோலை) மேகங்கள் உலாவும்படியான ஓக்கத்தை யுடைத்தான சோலை. † (வண்டறை) என்கிறது - சோலைக்கு விசேஷணமாகவுமாம்; மாநீர்க்கு விசேஷணமாகவுமாம் ஜலத்தினுடைய ரஸ்யதையாலே "ஈக்கள் வண்டொடு மொய்ப்ப" என்று ஆற்றுவரவுகளிலே சொல்லுவர்களாயிற்றுத்தமிழர். (மங்கையார் வாள் கலிகன்றி) பகவத் ஸம்பந்தத்தை யுணர்ந்தவர்

அரு.—பத்தாம் பாட்டு.—(மஞ்சுலாம்) இத்யாதி. "வண்டறை" என்றது, வண்டுகள் சப்தியாநிற்கிற என்றாய், அது சோலைக்குச் சொல்லுகை லோகஸித்தமென்றும், நீருக்குச் சொல்லுகை கவிஸமயஸித்தமென்றும் விவக்ஷித்தருளிச்செய்கிறார், (வண்டறை) இத்யாதிவாக்யத்வயத்தாலே.

கள் பகவத் ‡ பலமே பலமாயிருக்குமாபோலே, திருமங்கையிலுள்ளார் இவர் கையில் †வாளே தங்களுக்கு பலமாகவாயிற்று நினைத்திருப்பது.

(செஞ்சொலா லெடுத்த) அதிக்ருதாதிகாரமாய், ஸம்ஸ்க்ருதமாய், தெரியாத சப்தங்களாலே சொன்ன அர்த்தங்களை வ்யக்தமாக எல்லார்க்கும் தெரியும்படி செவ்விய சொல்லாலே சொன்ன. (தெய்வ நன்மாலை) அப்ராக்ருதமாய், (க) "கேட்டாரார் வானவர்கள்" என்று நித்யஸூரிகள் கேட்டு அநுபவிக்கலாம்படி யிருக்கிற, மாலை - தொடை... (இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர் துஞ்சும்போ தழைமின்) சரீராவஸாநத்தில் யமவஶ்யதைக்கு அஞ்சாதே இத்திருநாமங்களைச் சொல்லுங்கோள். (துயர்வரில் நினைமின்) இவ்வருகுண்டான வ்யஸநங்கள் வந்தபோதும், இத்தையே சொல்லுங்கோள். (துயரிலீர் சொல்லிலும் நன்றாம்) "சரீரத்தோடே யிருந்தால் இவையெல்லாம் வருகை ப்ராப்தமன்றோ" என்று இத்தை மதியாதே அநந்யப்ரயோஜநரா யிருப்பார்க்கு ஸ்வயம் ப்ரயோஜநம். (நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு) நம்முடைய பாபங்களுக்கு †§ ஆற்றவொண்ணாத நஞ்சு. (நாராயணா வென்னும் நாமம்) (உ) † "எனக்கென்றும் தேனும் பாலு மமுதுமாய திருமால் திருநாமம் நானும் சொன்னேன் நமரு முரைமின் நமோ நாராயணம்" என்று நமக்கு இனிய திருநாமமே பாபத்துக்கு நஞ்சு; ‡ அல்லாதன வெல்லாம் ஸம்ஸாரத்திலே வேர்பற்றுகைக்குறுப்பாயிருக்கும். இதினுடைய அர்த்தாநுஸந்தாநமே ஸம்ஸாரத்தை வேரறுப்பது என்னுமிவ்வர்த்தத்தை யெல்லாரும் புத்திபண்ணி யிருக்கலாகாதோ? (க0)

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

(வாளே தங்களுக்கு பலமாக) என்றதுக்கு - வாள்வலியால் மந்திரங்கொண்டு உபதேசித்து ரக்ஷிக்கையாலும் நிர்வாஹகராகையாலுமென்று கருத்து.

(ஆற்றவொண்ணாத) - ஸஹிக்கக்கூடாத. "என்னும்" என்றது - போக்யதாதிசயத்தாலே யென்றருளிச்செய்கிறார், (எனக்கு) இத்யாதி. "கண்டீர்" என்றதுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார், (அல்லாதன) இத்யாதி. ... (க0)

ஜீயர் திருவடிகளேசரணம்.

(க) தி - வாய் -க0-டு-சக. (உ) சு - க0-சு.

‡ (பா) ஸம்பந்தமே. § (பா) காற்றவொண்ணாத-அப்ரதிக்ரியமான.

முதற்பத்து-முதல்திருமொழி முடிந்தது.

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

முதற்பத்து - இரண்டாந்திருமொழி - வாலி

மூ.—வாலிமாவலத்தொருவனதுடல்கெட
வரிசிலைவளைவித்தன்று
ஏலநாறுதண்டடம்பொழிலிடம்பெற
விருந்தநல்லிமயத்துள்
ஆலிமாமுகிலதிர்தரவருவரை
யகடுறமுகடேறிப்
பீலிமாமயில்நடஞ்செயுந்தடஞ்சுனைப்
பிரிதிசென்றடைநெஞ்சே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
நெஞ்சே	மநஸ்ஸே!	இருந்த	ஓலக்கம்கொடுத்துக் கொண்டிருக்கிற
அன்று	ஸுக்ரீவன் சரணம்புகுந்தவன்று	நல்	விலக்ஷணமான
வாலி	வாலிஎன்னும் பேரையுடையனாய்	இமயத்துள்	ஹிமவானில்
மா	மிக்க	ஆலி	சிறுதுளியையுடைய
வலம்	பலம்பொருந்திய	மாமுகில்	மஹாமேகங்கள்
ஒருவனது	ஒப்பற்றவனுடைய	அதிர்தர	முழங்காநிற்பதுமாய்
உடல்	சரீரம்	பீலி	தோகையையுடைய
கெட	சிதறும்படி	மா	பெரிய
வரி	அழகிய	மயில்	மயில்களானவை
சிலை	வில்லை	அரு	தாவியேறவரிதான
வளைவித்து	சரங்கள்பாயும்படி வளைத்து; (இன்று)	வரை	மலைகளிலே
		அகடு	கீழ்வயிறு
		உற	தழுவும்படியாக [ல்
ஏலம்	பரிமளம்	முகடு	அவற்றின் சிகரங்களி
நாறு	வீசாநிற்பதாய்	ஏறி	போய்ஏறி
தண்	குளிர்ந்து	நடம்செயும்	ஆடாநிற்பதுமாய்
தடம்	பரந்த	தடம்	பரந்த
பொழில்	உத்யாநவநங்களிலே	சுனை	சுனைகளையுடைய
இடம்பெற	விசாலமாக (ஸர்வேஸ்வரன்)	பிரிதி	திருப்பிரிதிஎன்கிறதிவ்யதேசத்தை
		சென்றுஅடை	போய்கிட்டப்பாராய்.

அநு.—வாலிப்ரவேசம். கீழ்த்திருமொழியிலே, (க) "குடந்தையேதொழுது" என்றும், (உ) "தஞ்சைமாமணிக்கோயிலேவணங்கி" என்றும் தமக்குத் திருமந்த்ரலாபம் உகந்தருளின நிலத்திலெம்பெருமானாலே வந்ததாக அநுஸந்தித்துத் திருமந்த்ரம் பெற்றமையை அருளிச்செய்தவர், இனி, மேல் திருமொழிகளிலே அர்ச்சாவதாரமே தமக்குப் ப்ராப்யமாக வநுஸந்திக்கைக்குக் கருத்து - திருமந்த்ரார்த்தமான ஸ்வாமித்வ ஸௌலப்யங்களை உகந்தருளின நிலங்களிலே கண்டநுபவிக்கவேணுமென்கை யென்று விவக்ஷித்து,

(க) க-க-எ- (உ) க-க-கூ-

வ்யா.—†ஸம்ஸாரஸ்வபாவத்தையும், தம்முடைய இதரவிஷய ப்ராவண்யத்தையும் அநுஸந்தித்தருளினவிவர், அந்நோவுபாடே ஹேதுவாகத் தன் நிர்ஹேதுக க்ருபையாலே என்னை விஷயீகரித்துத்தன்†ஸ்வாமித்வத்தையும் எனக்குக் காட்டித் தந்தானென்றார் கீழில் திருமொழியில்; (க) † "அம்பினாலரக்கர் வெருக்கொள நெருக்கி" என்று ராமாவதாரம் ப்ரஸ்துதமாயிற்று, திருமந்த்ரமும் ப்ரஸ்துதமாயிற்று. † இத்திருமந்த்ரத்துக்கு அர்த்தமாகிறதுதான் ஸ்வாமித்வஸௌலப்யமிறே. கர்ஷகனானவன் பயிர்த்தலையிலே குடில் கட்டிநோக்குமாபோலே, ரக்ஷ்யமிருந்தவிடத்தே வந்து ரக்ஷிக்கையிறே ஸௌலப்யம். உகந்தருளின நிலங்களிலேவந்து ஸந்நிதிபண்ணி இத்தைநோக்குகையாலே உடையவனென்று ஸ்வாமித்வப்ரகாசகமுமாயிருக்கிறது. † எதிர்த்தலை பாராதேவந்து அவஸரப்ரதீக்ஷனாய் அந்தர்யாமிரூபத்தாலே யிருக்கிற விருப்பு, ஸ்வாமித்வகார்யமிறே. அவ்வளவன்றிக்கே, கண்ணாலே கண்டநுபவிக்கவேணும் என்று அபேக்ஷைபிறந்தவன்று அப்போதே அநுபவிக்கலாம்படி கோயில்களிலேவந்து நிற்கிற விதுக்கு மேற்படவில்லையிறே ஸௌலப்யத்துக்கு. ஸம்பந்தஜ்ஞாநம் பிறந்தவநந்தரம் அநுபவாபேக்ஷை பிறந்தால், அப்போதே இவ்வுடம்போடே யடிமைசெய்யலாம்படியிராதிறே பரமபதத்தில்; "அநுபவிக்கவேணும்" என்று அபேக்ஷை பிறந்தபோதே அவ்வுடம்போடே அநுபவிக்கலாம்படி யிருக்குமிறே உகந்தருளினநிலங்களிலே. † இப்படி ஸௌலப்யத்துக்கெ

வ்ருத்தவர்த்திஷ்யமாண கதநமுகேந ஸங்கதி யருளிச்செய்கிறார், (ஸம்ஸார) இத்யாதி. (ஸ்வாமித்வத்தையும்) என்றசகாரம் ஸௌலப்யத்தை ஸமுச்சயிக்கிறது. (க) "எம்பிரானெந்தை" என்கிறபாட்டு திருமந்த்ரார்த்த ப்ரதிபாதகமாகையாலே அது உயிர்ப்பாட்டாய், அதிலே "எம்பிரான்" இத்யாதியால் ஸௌலப்யமும், "அண்ணல்" என்றத்தால் அதுக்கு ஹேதுவான ஸ்வாமித்வமும் ப்ரஸ்துதமான வளவன்றிக்கே, ராமாவதாரமும் திருமந்த்ரமும் ப்ரஸ்துதமாயிற்றென்று அவற்றையும் அநுவதிக்கிறார், (அம்பினால்) இத்யாதி. காட்டித்தந்த ஸ்வாமித்வ ஸௌலப்யங்களை அர்ச்சாவதாரத்தில் கண்டநுபவிக்கிறாரென்னுமத்தை உபபாதிக்கிறார், (இத்திருமந்த்ரத்துக்கு) இத்யாதி. உடைமையைநோக்கும் ஸ்வாமித்வ ப்ரகாசமெங்ஙனேயென்ன; அருளிச்செய்கிறார், (எதிர்த்தலை) இத்யாதி. மேல்திருமொழிகள் அநேகத்தோடும் ஸங்கதியை யருளிச்செய்து, அவ்யவஹிதமானத்தோடு அருளிச்செய்கிறார், (இப்படி) இத்யாதி. "ராமாவதாரம் ப்ரஸ்துதமாயிற்று" என்று வ்ரு

(க) க-க-சா-

ல்லேயான உகந்தருளின நிலங்களெங்கும் புக்கநுபவிக்கக்கோலி; அதில் இப்பாஷை நடையாடுமிடத்துக் கெல்லேயாயிருக்குமிறே திருமலே, அவ்வளவிலே நில்லாதிறே இவருடைய ஆசையானது, ஆகையாலே உகந்தருளின நிலங்களுக்கு எல்லேயான ஹிமவானில் திருப்பிரிதியளவும்சென்று அவ்விடத்தையநுபவிப்பதாகத் § திருவுள்ளத்தோடே கூட்டுகிருர். †கீழ்த்திருமொழியிலே, "அம்பிஞலரக்கர் வெருக்கொள நெருக்கி" என்று ராமாவதாரமுகத்தாலே விரோதிநிரஸநம் ப்ரஸ்துதமிறே; அவ்வழியாலே,மஹாராஜர் †வெறுவியருமாய், தனியருமாய் ஜ்யேஷ்டனாலே நெருக்குண்டு நோவுபட்டிருக்க, அவர் அபேக்ஷியாதிருக்கச்செய்தேயும் (க) "ஸராமோவாநரேந்த்ரஸ்ய" என்கிறபடியே - தாமே அவரிருந்த விடத்தேசென்று அவர் விரோதியைப்போக்கி யுபகரித்தாற்போலே, அவன்ருனே நம்முடைய குறைகளேயுமெல்லாம் தீர்த்து உபகரிக்கைக்காக இங்கே திருப்பிரிதியிலேவந்து எழுந்தருளியிருந்தான், நெஞ்சே! அங்கேசென்று கிட்டப்பாராய் என்று திருவுள்ளத்தோடே கூட்டுகிருர். †முன்பெல்லாம் கண்ணுக்கிலக்கான விஷயங்களிலே ப்ரவணராய்ப்போந்தார்; பகவத்ஜ்ஞாநம் பிறந்தபின்பும் அவ்வாஸநை அநுவர்த்தித்து, கண்ணுக்குவிஷயமான உகந்தருளின நிலங்களிலே புக்கநுபவிக்கிருர்; (உ) "தானுகந்த ஊரெல்லாம்" என்னக்கடவதிறே.

முதற்பாட்டு.—(வாலி) இத்யாதி. வாலியென்று பேராய்,மஹாபலத்தில் வந்தால் தன்னே எண்ணிஞல் இரண்டாம்விரலுக்கு ஆளில்லாதபடி அத்விதீயனுயிருக்கிறவனுடைய உடலானது சிந்தும்படியாக தர்சநீயமான வில்லேவளேத்து. †வாலியு மழிகையும் கிடக்கச்செய்தே, அக்கையும் வில்லும் சேர்ந்த சேர்த்தியும் தர்சநீயதையும்

த்தகீர்த்தநத்துக்கு ஸங்கதிதன்னே முதற்பாட்டைக் கடாக்ஷித்தருளிச்செய்கிருர், (கீழிற்றிருமொழியிலே) இத்யாதி. (வெறுவியர்) தரித்ரர். "திருமந்த்ரமும் ப்ரஸ்துதமாயிற்று" என்றத்தாலே திருமந்த்ரத்துக்கு பரத்வாதிகளெல்லாம் அர்த்தமாயிருக்க, ஏகதேச அர்ச்சாவதாரங்களிலேதானே போவானென்னென்ன; ரஸோக்திமுகேந வருளிச்செய்கிருர், (முன்பெல்லாம்) இத்யாதி.... ... ...

முதற்பாட்டு. — (வாலி) இத்யாதி. தம்முடைய விரோதிகளேப் போக்குகைக்கு உறுப்பாக வாலிவதம்சொல்லவேண்டிஞல், உடல்கெடுத்து என்னலாமே, "வரிசிலேவளேவித்து" என்னுமதுக்குக் கருத்தென்னென்ன; அருளிச்செய்கிருர், (வாலியும்) இத்யாதி. "சாபே க்ருஹீத் - சாபே க்ருஹீத்

§ திருவுள்ளத்தோடுகூட்டுகை-திவ்யதேசத்தைத் திருவுள்ளத்துக்கு விஷயமாக்குகை.

(க) ரா-கி. (உ) தி-நெ-சு.

அநுபவிக்கிறாராயிற்று இவர். (க) "ஶத்ருநாஶநே - சத்ருநாசநே" என்கிறது கிடக்க, (க) "ஶக்ரசாபநிபே - சக்ரசாபநிபே" என்கிறத்தை அநுபவிக்கிறார். †உகப்பாரோடு உகவாதாரோடு வாசியற இரண்டுதிறத்தாரையும் அழிக்குமாயிற்று. [ஶக்ரசாபநிபே-சக்ரசாபநிபே] இத்யாதி. இந்த்ரதநுஸ்ஸுபோலே அநுகூலர்க்கு வைத்த கண்மாறுதே கண்டுகொண்டிருக்கவேண்டும்படி தர்சநீயமாயிருக்கும். [க்ருஹீத்வா - க்ருஹீத்வா] † விற்பிடித்தபிடியிலே ப்ரதிகூலர் முடிந்துபோம்படியுமாயிருக்கும். † அநுகூலரை அழகாலே யழியச்செய்யும். ப்ரதிகூலரை அம்பாலே யழியச்செய்யும்.

(உ)† [எரிசிதறும்சரத்தால்] (ங) "தீப்தபாவகஸங்காஶை: - தீப்தபாவகஸங்காசை:" என்கிறபடியே தொடுத்துவிடும்போதாயிற்று அம்பென்று அறியலாவது: தைக்கும்போது உடம்பிலே நெருப்பைச் சொரிந்துகொண்டாயிற்று தைப்பது. [இலங்கையினை] § அந்தகனுங் கூடப்ரவேசிக்க அஞ்சும்படியான ஊரை. [தன்னுடை வரிசிலைவாயிற்பெய்து]ஸர்ப்பம் நாவாலே விழுங்குமாபோலே யாயிற்று அது அம்பாலே க்ரஸிக்கும்படி, வில்லுக்கு வாய் அம்பிறே. வாயான அம்பிலே புகும்படி ப்ரவேசிப்பித்து. [வாய்க்கோட்டம் தவிர்த்து] வாயில், கோடுதலுண்டு - விலங்குதல், அத்தைத்தவிர்த்தானாயிற்று. (ச) "நநமேயம் - நநமேயம்" என்றிருந்த இருப்பைத் தவிர்த்தானாயிற்று. (ச)† [கஸ்யசித் - கஸ்யசித்] இவர் தம்மை இதரஸஜாதீயராக்கிவைக்கையாலே மநுஷ்யரென்றே யிருந்தான், இவரேயன்றிக்கே ஈஸ்வரன் என்று சொல்லுகிற அவன்றான் வந்தால்தான் வணங்குவனோ? ஸ்வரூபம் கைபுகுந்தால் (ரு) "நமஇத்யேவவாதிந:-

வா" - என்றது - ஆயுதமாகையாலே விரோதிநிரஸநம் அர்த்தலப்யமாயிருக்கவும், ஶத்ருநாஶநே-சத்ருநாசநே" என்று விசேஷித்ததுக்கும், "ஶக்ரசாபநிபே-சக்ரசாபநிபே" என்று வர்ணிக்கைக்கும் ருஷிகொண்டாடுகிறானென்று தாத்பர்யமருளிச்செய்கிறார், (உகப்பாரோடு) இத்யாதி. சக்ரசாபநிபங்களான சாபங்களை சத்ருநாசகமாம்படி க்ருஹீத்வா என்று அர்த்தம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார், (விற்பிடித்த) இத்யாதி. வில்லானது சத்ருநாசகமான வழியை யுபபாதிக்கிறார், (அநுகூலரை) இத்யாதி. இங்கு (அநுகூலரை) இத்யாதி த்ருஷ்டாந்தார்த்தம்.

ப்ரதிகூலரை அம்பாலே யழித்தாரோவென்ன; அருளிச்செய்கிறார், (எரி) இத்யாதி. எடுத்தபாசுரத்துக்குப் ப்ரமாணபூர்வகமர்த்த மருளிச்செய்கிறார், (தீப்த) இத்யாதி. "நநமேயம்-நநமேயம்" என்றது அதிக்ரூரமானபடியை யருளிச்செய்கிறார், (கஸ்ய) இத்யாதி. "வாயில்கோடுதல்" என்றவாக்

(க) ரா-கி-ௗ-கூ. (ங) ரா-யு-கசு-௨௨. (ரு)
(உ) பெரி-திரு-ச-ங-அ. (ச) ரா-யு-ஙசு-கக. § அந்தகன்-யமன்.

நம இத்யேவ வாதிநஃ” என்றுயிற்று இருப்பது; “மம” என்றிருக்கையாயிற்று ஸ்வரூபவிரோதி. †அநுகூலபாஷணம் பண்ணுகைப்ராப்தமாயிருக்க “எனக்கு” என்றபேச்சில் விலங்குதலைத்தவிர்த்தானாயிற்று. (உகந்தவரையன்) ஈரரசுதவிர்த்தபின்பு உகந்தபடி. இவன்றான் “எனக்கு” என்றிருக்குமத்தைத் தவிர்த்தோமாகில் இனி நம்மதேயன்றே! என்று இனியனானான். இவன் “என்னது” என்றிருக்குமது தவிர்ந்தால், பின்புள்ளதடையத் திருவிடையாட்டமாயிருக்குமிறே. (அரையன்) இவன்பக்கல் ஆல்பாநுகூல்யமமைகிறது உடையவனாகையிறே; இவன் ப்ராதிகூல்யத்தில்நின்றும் நிவ்ருத்தனானவளவுகொண்டு உகக்கும்படியாயிற்று ஸ்வாபாவிகஸம்பந்தமிருப்பது. (அன்று) அன்று † அங்ஙனே செய்தான், இன்று இங்கே வந்திருந்தான்.

(ஏலம்) இத்யாதி. † வினையுள்ளபோதாயிற்றுத் தன்னைப்பேணாதே மேல்விழுந்து வ்யாபரிப்பது, அதுபோனவாறே ராஜபுத்ரனாய்ச் செல்வப்பிள்ளையாய் வளர்ந்த ஸௌகுமார்யம் வந்து முகங்காட்டுமிறே; அதுக்கீடாகவிருக்கிற விடமாயிற்று. † அன்றிக்கே, “அம்புக்குச்செல்லாதவிடத்தை ஆஸநத்தாலே திருத்துவோம்” என்று பார்த்து வந்திருந்தபடியாகவுமாம்; சத்ருக்களை அழிக்கவொண்ணுவிட்டால் “அவர்களோடே எதிரிட்டுக்கொள்வோமல்லோம்” என்று பார்த்து, எடுத்துவிட்டு ஆஸநத்தாலே பக்நாபிமாநராக்குமாபோலே. (ஏலம்நாறு) † விட்டுப்போந்தவிடத்தை விஸ்மரிக்கும்படி பண்ணும் தேசமாயிற்று. (க) “[illegible] - அதிகம் புரவாஸாச்ச” (உ) “[illegible] - ஜஹௌ சதுஃக்கம் புரவிப்ரவாஸாத்” † படைவீட்டில் விசேஷேண உண்டான ப்ரக்ருஷ்ட-

---

யத்தை விவரிக்கிறார், (அநுகூல) இத்யாதி. (அங்ஙனேசெய்தான்) - வாலியைக்கொன்றானென்றபடி.

(வினை)-யுத்தம். அத்யந்தப்ராதிகூல்யமில்லாதவர்களை வசீகரிக்கைக்கு போக்யமான தேசத்திலே ஸ்த்தாயியாயிருப்போமென்று வந்தானாகத் தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார், (அன்றிக்கே) இத்யாதி. எடுத்துவிடும் ராஜாக்கள் நீரும்நிழலும் பார்த்திருக்குமாபோலே யிருந்தானென்று கருத்து. நீரும் நிழலும் பார்த்திருக்குமிடத்திலே பரிமளத்தைச் சொல்லுவானேனென்னென்ன; அருளிச்செய்கிறார், (விட்டு) இத்யாதி. விட்டுப்போந்தவிடம் திருவயோத்யை. “[illegible] - அதிகம் புரவாஸாத்” என்ற பெருமாளுக்கு விப்ரவாஸமானது, புரத்தில்நின்றும் புறம்பேவந்ததுக்கம்போலே அதிசயமாகச் சொல்லவொண்ணாதென்று அதுக்கு அர்த்தமருளிச்செய்கிறார், (படைவீட்டில்)

(க) ரா-அயோ-கூ௫-க உ. (உ) ரா-அயோ-௫கூ-௩அ.

வாஸத்தால் வந்த துக்கமடையப்போம்படியாயிற்று இங்குத்தை வாஸம். † பரிமளத்தையுடைத்தாய் ஶ்ரமஹரமாய் பரப்பையுடைத்தாயிருந்துள்ளபொழில். (இடம்பெற) இடம்பெறவிருக்கையாவது - எல்லார்க்கும் காட்சிகொடுக்கைக்கீடாக ஓலக்கமிருக்கை. நித்யஸூரிகளுக்கு ஓலக்கம் கொடுக்கையன்றிக்கே நித்யஸம்ஸாரிகளுக்கும் ஓலக்கம் கொடுத்துக்கொண்டிருக்கை. அவதாரகாலத்தில் காணப்பெறாதாரெல்லார்க்கும் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிற விடமாயிற்று. (நல் இமயத்துள்) ஒருகாரியப்பாடொழியவேயும் வர்த்திக்கவேண்டும்படியான தேசமாயிற்று.† தன்னநுக்ரஹத்தாலே வர்த்தித்தானாகவேண்டாதே, தேசவாஸந்தானே உத்தேஶ்யமாகப் போரும்படி யிருக்கை.

(ஆலி) இத்யாதி. ஸ்ரீவைகுண்டத்தில் வாத்யகோஷங்களோடும் நித்யஸூரிகள் (க) "அஹமந்நமஹமந்நம் - அஹமந்நமஹமந்நம்" என்று களிக்குமத்தோடும் போதுபோக்கியிருக்குமவன், அவ்விழவு தீர, அவை தன்னையுங்கூட மறக்கும்படி, மேகங்கள் கோஷிக்க, மயில்கள் ஆட, அதுகண்டு போதுபோக்கிக்கொண்டிருக்கிற விடமாயிற்று † வினையற்றுப் பிராட்டியோடேகூட எழுந்தருளி யிருக்கையாலே மேகத்வநிதான் அநுகூலமாயிருக்குமிறே. (ஆலி) இத்யாதி. † சிறுதுளியையுடைத்தான மஹாமேகங்களானவை நீர்க்கநத்தாலே முழங்க. †ஆலிமாமுகிலதிர்தர பீலிமாமயில் நடஞ்செய்யுமாயிற்று; வாத்யங்கள்வாய்த்தால் கூத்தாடுவாருடம்பு பேசாதிராதிறே; காலுக்கீடாகவாய்த்தவாறே ஆடுவாரைப்போலே, அவைமுழங்க இவை ஆடாநிற்குமாயிற்று. (அருவரை) இத்யாதி. ஒருவரால் தாவியேறவரிதான மலைகளிலே. ப்ரீதியாலே ஏறில் ஏறுமத்தனையாயிற்று; அவற்றிலே கீழ்வயிறுனைது தழுவும்படியாக சிகரத்திலே

இத்யாதி. இத்தால் - மிகவுமதிகமாகப் புரத்திலேயிருக்கையாலே யதேஷ்டமாகப் பிராட்டியோடே ஸஞ்சரிக்கவொண்ணாதே மாதாபிதாக்களுக்கு அஞ்சிக்கிடந்த துக்கம் தீர்ந்தது திருச்சித்திரகூடத்திலேயானாற்போலே, திருப்பிரிதியிலே யிருந்தானென்றதாயிற்று. சப்தார்த்தம், (பரிமளத்தை) இத்யாதி. சப்தார்த்தம், (தன்னநுக்ரஹத்தாலே) இத்யாதி.

வாலிவதம்பண்ணினவர் வந்து வர்த்திக்கிறாராகில் மால்யவானிற்போலே மேகத்வநி பாதகமாகாதோவென்ன; அருளிச்செய்கிறார், (வினையற்று) இத்யாதி. வாலிவதம் ராவணவதத்துக்கு உபலக்ஷணமென்று திருவுள்ளம். சப்தார்த்தம், (சிறுதுளி) இத்யாதி. மயில்நடம்செய்கைக்கு அதிர்தருகை ஹேதுவானமையைக் காட்டுகிறார், (ஆலிமாமுகில்) இத்யாதிவாக்யத்தாலே.

(க) தை - ப்ருகு - கo - சு.

மூ —கலங்கமாக்கடலரிகுலம்பணிசெய்ய
அருவரையணைகட்டி
இலங்கைமாநகர்பொடிசெய்தவடிகள்தா
மிருந்தநல்லிமயத்து
விலங்கல்போல்வன விறலிருஞ்சினத்தன
வேழங்கள்துயர்கூரப்
பிலங்கொள்வாளெயிற்றரியவைதிரிதரு
பிரிதிசென்றடைநெஞ்சே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நெஞ்சே	ஓமநஸ்ஸே!	விலங்கல்போல் வன	மலைபோன்றனவாய்
மாக்கடல்	மஹாஸமுத்ரம்		
கலங்க	கலங்கும்படி	விறல்	மிடுக்கையுடையன
அரிகுலம்	குரங்குக்கூட்டம்	இரும்	மிக்க [வான
பணி	அடிமையை [லே)	சினத்தன	கோபத்தையுடைய
செய்ய	பண்ணவும், (அத்தா	வேழங்கள்	யானைகளானவை
அரு	சலிப்பிக்கவொண்ணாத	துயர்கூர	மிக பயப்படும்படி
வரை	மலைகளைக்கொண்டு	பிலம்	குஹைகளை
அணைகட்டி	ஸேதுபந்தநம்பண்ணி	கொள்	இருப்பிடமாகவுடையனவாய்
மா	பெரிய		
இலங்கைநகர்	லங்காபுரியை	வாள்	வாள்போன்ற
பொடிசெய்த	சூர்ணமாக்கின	எயிறு	பற்களையுடைய
அடிகள்தாம்	ஸர்வஸ்வாமி [கிற	அரிஅவை	ஸிம்ஹங்களானவை
இருந்த	நித்யவாஸம் பண்ணு	திரிதரு	ஸஞ்சரியாநிற்கிற
நல்இமயத்து	விலக்ஷணமான ஹிமவானிலே;	பிரிதி	திருப்பிரிதியை
		சென்றுஅடை	போய்சேரப்பாராய்.

போயேறி, சிகரத்திற் பரப்படங்கலும் தன் தோகையாலே பரப்பி மயிலானது ஆடாநிற்குமாயிற்று. ராமாவதாரத்தில் விஜயங்கண்டு வாநரஜாதியாக ஆடினத்தை இவ்விருப்பைக்கண்டு மயில்கள் ஆடாநிற்குமாயிற்று. (பிரிதிசென்றடைநெஞ்சே) சைதந்யத்தில் குறையநின்றாரும் அத்தேசத்தைப்ராபித்து ப்ரீதிக்குப் போக்குவிட்டுச் சில வ்யாபாரங்களைப்பண்ணுகிற தேசமானபின்பு, சைதந்யத்தில் குறையற்றிருந்த நீ அத்தேசத்தைச்சென்று ப்ராபிக்கப்பாராயென்கிறார். சைதந்யத்தில் குறையநின்றாரோடு குறைவற்றாரோடு வாசியற நிலவராய் அடிமைசெய்யும்படியாயிற்று விஷயஸ்வபாவம் - துரும்பெழுந்தாடுமாயிற்று.

அகடு - கீழ்வயிறு. தோகையின்கநத்தாலே பறக்கக்கூடாமல் அகடுறவென்றுகருத்து. ... ... (௧)

வ்யா.—இரண்டாம்பாட்டு-† தம்மிழவைப் பரிஹரித்த ப்ரஸங்கத்தாலே மஹாராஜரிழவைப் பரிஹரித்தபடியைப்பேசினர் முதற்பாட்டில்; மஹாராஜரிழவைப் பரிஹரித்தபின்பிறே பெருமாள் தம்மிழவைப் பரிஹரித்துக்கொண்டது; அந்த க்ரமத்திலே ராவணவதம்பண்ணினபடியைப்பேசுகிருர்.

(கலங்கவித்யாதி) † ஈஸ்வரன் தன் ஸங்கல்பத்தை நெகிழகின்ருல் பதார்த்த ஸ்வபாவங்கள் மாருடுமோபோலேயாயிற்று, சக்ரவர்த்தித்திருமகன் முனிந்தாலிருக்கும்படியும். † ஒருவரால் கலக்கவொண்ணுத கடல் கலங்கும்படியாகவும், நித்யஸூரிகள் செய்யும் அடிமையை இடக்கை வலக்கை வாசியறியாத குரங்குகள் செய்யும்படியாகவும், நீரிலாழக்கடவ மலைகள் மிதந்து அணையாய் நிற்கும்படியாகவும் பண்ணினுயிற்று. (மாக்கடல்கலங்க) (க) "அப்ரமேயோ மஹோததி: - அப்ரமேயோ மஹோததி:" என்கிற கடல்கலங்கிக் கீழ்மண் கொண்டு மேல்மண்ணெறியும்படியாக. (அரிகுலம்பணிசெய்ய) †அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான திருவடி, திருவநந்தாழ்வான், ஸ்ரீஸேநாபதியாழ்வான் துடக்கமானர் செய்யக்கடவ கைங்கர்யத்தை †ஸம்ஸாரிகளுக்கும் பின்னே எண்ணவேண்டும்படி இடக்கை வலக்கை வாசியறியாத வாநரஜாதிசெய்யும்படியாக.†சரீரஸம்பந்தமற்று ஒரு தேசவிசேஷத்திலேபோனல் செய்யும் அடிமையைத், தாழ்ந்த ஜந்மத்திலே பிறந்து இந்த சரீரத்தோடே செய்யும்படியாக. (அருவலரயணைகட்டி) ஒருவரால் எல்லைகாணவொண்ணுத மலைகளைக் கொண்டு அணைகட்டி. (இலங்கை) † ப்ரஹ்மாதிகளும் ‡நெஞ்சுளுக்கி

அரு.—இரண்டாம்பாட்டு. — (கலங்கமாக்கடல்) இத்யாதி. (தம்மிழவைப் பரிஹரித்த) என்றது, (உ) "பன்றியாயன்று பாரகங்கீண்டபாழியானுழியானருளே - நானுய்ய" என்னுமத்தைப்பற்ற.

கடல்முதலான பதார்த்தங்கள் ஸ்வபாவங்களை மாருடிக்கலங்கவும் கைங்கர்யம்பண்ணவும் மிதக்கவும்கூடுமோவென்ன; அருளிச்செய்கிருர், (ஈஸ்வரன்) இத்யாதி. முனிவால்மாருடினபடியேதென்ன; அருளிச்செய்கிருர், (ஒருவரால்) இத்யாதி. "பணி" என்ற பதவாஸனையாலே பலித்த அர்த்தத்தை யருளிச்செய்கிருர், (அஸ்ப்ருஷ்ட) இத்யாதி. (ஸம்ஸாரிகளுக்கும்) என்றது - தேஹபோஷணபரரான மநுஷ்யர்க்குமென்றபடி. நித்யஸூரிகளேயொழிய இங்குள்ளார் செய்யக்கூடாதோவென்ன; அருளிச்செய்கிருர், (சரீர) இத்யாதி. (ங)"ஆத்மாநம்மாநுஷம்மந்யே-ஆத்மாநம்மாநுஷம்மந்யே" என்றுகொண்டே யிருக்குமவர் கட்டளைப்பட்ட லங்காநகரத்தைப் பொடிசெய்தமையைப்பற்ற ஈடுபாடாகத் தாத்பர்யமருளிச்செய்கிருர், (ப்ரஹ்மாதிகளும்) இத்

(க) ரா-யு.கக-ங்க. (உ) க-க-ச- (ங) ரா-யு-கஉ0-கஉ.

‡ நெஞ்சுளுக்கி-பயப்பட்டு.

யிருக்கும் ஊரை § மனிச்சுக்குலையாதபடி நின்று துகளாம்படிபண்ணின ஸ்வாமிகள். † ராவணன் பட்டுக்கிடக்க அவன்பார்வை "ஆதித்ய கிரணங்க ளிங்குப்புகுந்து ஸஞ்சரியாநின்றன கிடாய்" என்றுளிறே, அப்பரிபவம் பொறுமை பிணமெழுந்திருக்கும் என்று. (க) [ப்ராப்தே பரிபவே நவே। அத்யவை நிர்ப்பயா லங்காம்] † இதுக்கு முன்பில்லாததொன்று இப்போது உண்டாயிற்றுகிடாய். முன்பு நெல்லுலர்த்தவேண்டுவது ஸஞ்சரித்துப் போமித்தனையாயிற்று † ராவணபயத்தாலே; இப்போது நிர்ப்பயமாய்க்கொண்டு உலாவா நின்றன. (இலங்கைமாநகர்) (உ) †"லங்காம் ராவணபாலிதாம்" பெண்பெண்டுகளுக்கும் நோக்கலாம்படியாயிற்று ஊரரண். வெளிநிலத்திலும் சிலர் புகுராதபடி பண்ணவல்லனாயிற்று உணர்ந்து நோக்குகிறான். † விரோதி நிரஸநஸ்வபாவனான தான் வந்திருக்கப்பெற்றபடியாலே ஸர்வஸ்வாமி யென்னுமிடம் தோற்றியிருக்குமாயிற்று. (இருந்த) என்று - வேறோரிடத்திலே இருப்பாய் இங்கே வருவது போவதாகையன்றிக்கேயாயிற்று இருப்பது. † இப்படி கொள்கொம்புமுடிற்றென்றால் ஆஸநத்தாலே வெல்வதாகப்பார்த்து இவ்விடந்தன்னையே இருப்பாக்கினானாயிற்று. † விரோதி நிரஸநம்பண்ணின ஶ்ரம

யாதி. "நெஞ்சுளுக்குமூர்" என்னுமத்தை உபபாதக்கிறார், (ராவணன்) இத்யாதி. ஸூர்யனஞ்சினது ப்ரஹ்மாதிகளுக்கு முபலக்ஷணமென்று கருத்து. உத்தரார்த்தே ப்ரமாணம் - (க) "உத்திஷ்ட கிம் ஶேஷே ப்ராப்தே பரிபவே நவே। அத்யவை நிர்ப்பயாம் லங்காம் ப்ரவிஷ்டாஸ்ஸூர்யரஶ்மய:" உத்திஷ்டட்டோத்திஷ்ட்டகிம்சேஷே ப்ராப்தே பரிபவேநவே । அத்யவை நிர்ப்பயாலங்காம் ப்ரவிஷ்டாஸ்ஸூர்யரஶ்மய:॥" என்ற ஶ்லோகம். இஶ்லோகத்துக்கர்த்தம். (இதுக்கு) இத்யாதி. (ராவணபயத்தாலே) என்றதுக்கு-ராவணனென்று பேர்பெற்ற உன்னுடையபயத்தாலேஎன்று மந்தோதரீ வாக்யத்துக்கு பாவம் கண்டுகொள்வது. "ப்ரஹ்மாதிகள் நெஞ்சுளுக்கும்படியாயிருக்குமூர்" என்னுமதுக்கு புந:ப்ரதீகக்ரஹண பூர்வகம் ப்ரமாணம்காட்டுகிறார், (லங்காம்) இத்யாதி. மனிச்சுக்குலையாதபடி பொடிசெய்தால், "அடிகள்" என்று ஸ்வாமித்வம் சொல்லும்படி எங்ஙனே யென்ன; தாத்பர்யமருளிச்செய்கிறார், (விரோதி) இத்யாதி. போவதுவருவதாகவன்றிக்கே இருக்கைக்கு ப்ரயோஜநந்தன்னை யருளிச்செய்கிறார், (இப்படி) இத்யாதி. கொள்கொம்பானது நட்டுக்கொண்டிருக்குமாபோலே, வணங்காதிருக்கையாய், (ங) "நகமேயம்" என்றிருக்கையைச்சொல்லுகிறது. * ஏலநாறுதண்டடம்பொழிலான ஹிமவானிலே ஶ்ரமமாறவென்றுசொல்லிவைத்து, இங்கே திருத்துகைக்காக என்கிறதெப்படி யென்ன; அருளிச்செய்கிறார், (விரோதி) இத்யாதி.

§ மனிச்சுக்குலையாதபடி-மநுஷ்யபாவம்-பௌருஷம் குலையாதபடி.
(க) ரா-யு-ககச-அஉ. (உ) ரா- (ங) ரா-யு-ஙகூ கக.

மாறுகைக்கு இருந்தவிடந்தானே நங்கார்யம் செய்கைக் குடலாய் விட்டது.

(விலங்கலித்யாதி) † அங்குத்தையானைகளிருக்கும்படி. † மலை கால்கொண்டு நடந்தாற்போலே வடிவைக்காணவே பயாவஹமாய் †யி ருப்பனவாய். †அப்பரப்பில் †அச்சமொன்றுமில்லையாயிற்று †ஒரு வரால் தகையவொண்ணாத மிடுக்கையும் மிக்க சினத்தையுமுடைய ஆனைகளானவை. (துயர்கூர) † நித்யதுஃக்கிகளாய்க்கொண்டு பயத் தை † வ்யுத்பத்தி பண்ணும்படியாக. கூர - மிக. † பயமில்லாமை லோகவிஸஜாதீயமாயிருக்குமாபோலே, பயமுண்டானாலும் இதர விஸஜாதீயமாயிருக்கும்படி. † இவைதுயர்கூர, இவற்றுக்கெதிரிக ளானவை பண்ணும் வ்யாபாரமென்னென்னில்; (பிலங்கொள் இத்யாதி.) பிலங்களிலே வர்த்திப்பனவாய், வாள்போலேயிருக்கிற எயிற்றையுடைய ஸிம்ஹங்களானவை ஸஞ்சரியாநிற்குமாயிற்று. †யஜ்ஞசத்ரு, இந்த்ரசத்ரு, ப்ரஹ்ம சத்ரு என்றாற்போலே சொல்லு கிற பையல்களைப்போலே யிருந்துள்ள மிடுக்கையுடையவை மிக்க பயத்தையுடையவாம்படி அவை ஸ்வைரஸஞ்சாரம் பண்ணாநிற்கு மாயிற்று. † பெருமாள் கடலை யணைசெய்து அவ்வணையின்மேலே கையும் வில்லுமாய்க்கொண்டு தெற்கு வடக்காக உலாவ லங்கை

"வேழங்கள்" என்னுமளவுக்கும் தொகுத்தபாவம், (அங்குத்தை) இத்யாதி. மதித்துக்கிடக்கிறனவென்கை. "விலங்கல் போல்வன" என்றதுக்கு சப்தார் த்தம், (மலை) இத்யாதி. (இருப்பனவாய்) என்று ஸமாப்தமாக நிறுத்தினது, வேழங்களுக்கு விசேஷணமென்று தோற்றுகைக்காக. ஆனைகள் மலைகள் போலேவளர்ந்து மதித்திருக்கைக்கு ஹேதுவென்னென்ன; அருளிச்செய்கி றார், (அப்பரப்பில்) இத்யாதி. (அச்சமில்லை) - பயாவஹமான ம்ருகம் இல்லை. "விறல்" இத்யாதிக்கு சப்தார்த்தம், (ஒருவரால்) இத்யாதி. இப்பாட்டில் யஜ்ஞசத்ருமுதலானார் நிர்ப்பயராயிருக்க (௧) "யோ வேத நிஹிதம் கு - ஹாயாம்பரமே வ்யோமந்" என்ற பரமபதத்தில்நின்றும்வந்து சக்ரவர்த் தித்திருமகன் நடையாடின பின்பு பயஸ்வரூபத்தை அவர்களறிந்தார்களெ ன்று தாத்பர்யம் விவக்ஷித்து, அதுக்கு த்ருஷ்டாந்ததயா ப்ரஸக்தமான வேழ ங்களும் முன்பு ஸிம்ஹஸஞ்சாரமற்று மதித்துத்திரிந்தன, பின்புகுஹையில் நின்றும் ஸிம்ஹங்கள் நடையாட, அந்த தஃக்கத்தை ப்ராபித்தன என்று தாத்பர்ய மருளிச்செய்கிறார், (நித்ய) இத்யாதி, (வ்யுத்பத்திபண்ணும்படியாக)- முந்துறமுன்னம் அறியும்படியாக. அடைய என்றதே. "மிக" என்றதுக்கு, "ஆனைக்கும் தனக்குத் தக்கவாதம்" என்னுமாபோலே, ஆதிக்யே தாத்பர்ய மென்றருளிச்செய்கிறார், (பயம்) இத்யாதி. மேலுக்கவதாரிகை, (இவை) இத் யாதி. "கலங்க" இத்யாதியைக் கடாக்ஷித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (யஜ்ஞசத்ரு) இத்யாதி. கீழ்வாக்யவிவரணம், (பெருமாள்) இத்யாதி. (முழுக்

(௧) தை-ஆநந்த-௧-௧.

மூ.—துடிகொள் நுண்ணிடைச் சுரிகுழல் துளங்கெயிற்
றிளங்கொடி திறந்து ஆய
ரிடிகொள் வெங்குர லினவிடை யடர்த்தவ
னிருந்த நல்லி மயத்து
கடிகொள் வேங்கையின் நறுமல ரமளியின்
மணியறை மிசை வேழம்
பிடியி னோடு வண் டிசைசொலத் துயில்கொளும்
பிரிதிசென் றடை நெஞ்சே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துடிகொள்	உடுக்கைபோன்ற	வெம்	க்ரூரமான
நுண்	ஸூக்ஷ்மமான	குரல்	த்வநியையுடைத்தாய்
இடை	இடையையும்	இனம்விடை	கூட்டமாய்வந்த ஏழு ருஷபங்களையும்
சுரி	சுருண்ட		
குழல்	மயிர்முடியையும்	அடர்த்தவன்	நிரஸித்தஸர்வேஶ்வரன்
துளங்கு	விளங்காநின்றுள்ள		
எயிறு	பற்களையுமுடைய	இருந்த	நித்யவாஸம்செய்கிற
இளங்கொடி திறத்து	பாலலதைபோன்ற நப்பின்னைப் பிராட்டிக்காக	நல்	நன்றான
		இமயத்து	ஹிமவானிலே,
		வண்டு	வண்டுகளானவை
ஆயர்	இடையரதாய்	இசைசொல	பாடவும்
இடிகொள்	இடிபோன்ற	கடிகொள்	பரிமளத்தையுடைய

† முழுக்காயாகச் செத்துக்கிடந்தாற்போலே யாயிற்று, ஸிம்ஹங்கள் ஸ்வைர ஸஞ்சாரம்பண்ண ஆனைகள் முழுக்காயாக அவிந்துகிடக்கும்படி. † ஜ்ஞாநாஜ்ஞாநங்கள்கொண்டு கார்யமில்லை, அங்கு வர்த்திக்குமவையடைய வீரரஸோத்தரமாயாயிற்றிருப்பது. (௨)

காயாக) - முழுக்காக. அதாவது - எல்லாருமாக வென்றபடி. குஹையில்நின்றும் புறப்பட்ட ஸிம்ஹங்கள் ஆனைகளின்மேலே பாய்கை ஸ்வதஃப்ராப்தமாயிருக்க, அச்சமுறுத்தித் திரியாநிற்குமென்னக் கூடுமோவென்ன; சக்ரவர்த்தித்திருமகன் வீரரஸம்தோற்ற ஸஞ்சரிக்குமது, அவர்கள் பயப்பட்டு சரணமடையவேணுமென்னும் நினைவாலேயானாற்போலே இவையும் ஸஞ்சரிக்கின்றனவென்று விவக்ஷித்து, திர்யக்குக்களுக்கு இந்நினைவு கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார், (ஜ்ஞாந) இத்யாதி. கர்மக்ருதஜ்ஞாநாதிகள் அப்ரயோஜகம், சக்ரவர்த்தித்திருமகனோட்டை ஸஹவாஸத்தாலே இவையும் வீரரஸம்தோற்ற ஸஞ்சரிக்குமென்று கருத்து. (௨)

வேங்கையின்	வேங்கைமரத்தினது	வேழம்	மதயானையானது
நறும்	அழகிய	பிடியினோடு	தன்பேடையோடே
மலர்	புஷ்பம்நிறைந்த	துயில்கொளும்	உறங்குகிற
அமளியில்	படுக்கையில்	பிரிதி	திருப்பிரிதியை
மணி	இந்த்ரநீலமணிமயமான	சென்று	கிட்டி
		நெஞ்சே	ஓமநஸ்ஸே!
அறைமிசை	பாறைகளின்மேலே	அடை.	ஆஸ்ரயிக்கப்பாராய்.

வ்யா.—மூன்றும்பாட்டு. † கீழ்ப்பாட்டில்-பிராட்டிக்காக லங்கையை யழியச்செய்தபடி சொல்லிற்று, நப்பின்னைப் பிராட்டிக்காக ருஷபங்களை யடர்த்தபடி சொல்லுகிறது - இதில்.

(துடி இத்யாதி) † ருஷபங்களினுடைய க்ரௌர்யம்பார்த்து மீளவொண்ணாதபடியான நப்பின்னைப்பிராட்டியுடைய அவயவசோபையையும் பருவத்தையும் சொல்லுகிறது. †விஷயமிதுவானால் †கருமாரிபாயவேண்டாவோ; இவற்றுக் கநந்தரம் லபிக்கப்புகுகிறது இவளையாகையாலே, இவற்றினுடைய வெம்மை பார்க்கவொண்ணாதாயிற்று. † துடிபோலேயிருக்கிற § நேரிய இடையையுடையளாவது; †இவளிடையை யாசைப்பட்டாயிற்று (க) *†கோட்டிடையாடிற்று. † ஒருகொம்புக்காக இரண்டு கொம்பின்நடுவே விழுந்தான். சுருண்ட குழலையுடையளாவது; இருளிலே சந்த்ரனுதித்தாற்போலே விளங்காநின்றுள்ள, எயிறுண்டு - தந்தபங்க்தி, அத்தையுடைய

அரு.—மூன்றும்பாட்டு.—(துடிகொள்) இத்யாதி. கீழிற்பாட்டில் "பெருமாள் தம்மிழவைப் பரிஹரித்துக்கொண்டது" என்றதுதான், பிராட்டியைப் பெறுகையாலே; இப்பாட்டில் நப்பின்னைப்பிராட்டியைப் பெற்றபடியை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதியருளிச்செய்கிறார், (கீழித்யாதி.)

நப்பின்னையை இப்படிவர்ணித்தது விடைகளை யடர்க்கையிலே ஹேதுவென்றது தோற்றத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (ருஷபங்களினுடைய வித்யாதி). உபபத்தியருளிச்செய்கிறார், (விஷயமித்யாதி வாக்யத்வயத்தாலே). (கருமாரிபாய்கை) - பஸ்சிம காஞ்சீநகரமத்யே குளத்திலே நட்டிருக்குமிரண்டு வயிரக்கூச்சு நடுவே உயரவிருந்து குதிக்கை. ஆக வ்ருஷபங்களினுடைய கொம்புகளின் நடுவே விழுந்தானென்றதாயிற்று. துடி-த்ருடி-த்ர்யணுகமாய், அத்தை உபமாநமாகக் கொள்ளாநிற்பதாய், அதளவு, நுண்-ஸூக்ஷ்மமான இடையையுடையளாய் என்று சப்தார்த்தந் தன்னையருளிச்செய்கிறார், (துடிபோலே யித்யாதி). துடி - வாத்யவிசேஷமாகவுமாம். (உடையளாவது) என்று உடைத்தாயிருக்கிறாளென்றபடி. சாடுமுகேந இவ்விசேஷணத்துக்கு ப்ரக்ருதோபயோகம் காட்டுகிறார், (இவளித்யாதி). (கோடுகளுடைய) கொம்புகளுடைய, இடையிலே, (ஆடுகை) - விழுகை. இங்கேதோன்றின பாசுரத்துக்கு அர்த்தமருளிச்செய்கிறார், (ஒருகொம்புக்காகவித்யாதி). "ஆயர்

§ நேரிய - ஸூக்ஷ்மமான. (க) தி - வி - உக.

ளாவது. (இளங்கொடிதிறத்து) (௧) "𑌪𑌤𑌿𑌸𑌂𑌯𑍋𑌗𑌸𑍁𑌲𑌭𑌂 𑌵𑌯𑌃-பதிஸம்யோகஸுலபம்வய:" என்கிறபடியே ஒரு கொள்கொம்பு தேட்டமான பருவத்தையுடையளாவது; இப்படியிருக்கிற நப்பின்னைப்பிராட்டி யிடையாட்டமாக - அவளுக்காக. (ஆயரித்யாதி) இடையருடைய, இடியோடொத்திருப்பதாய் வெவ்விதான த்வநியையுடைய ருஷபங்கள் † ஒன்றிரண்டன்றிக்கே ஏழையும் நிரஸித்த, † லங்கையில் விரோதியைப்போக்கின க்ரமம் போராதாயிற்று இங்கு. அவளோடணைகைக்கு † அவதியாகையாலே † ஊட்டியாக நெரித்தானாயிற்று. (இருந்தநல்லிமயத்து) ருஷபங்களை நிரஸித்து நப்பின்னைப்பிராட்டியை லபித்து அவளும்தானுமாக வர்த்திக்கிற தேசமாயிற்று. பரமப்ரணயியானவன்வந்து வர்த்திக்கிற தேசமாயிற்று. † நப்பின்னைப்பிராட்டிக்கு உதவினாற்போலே ஆஸ்ரிதர்க்கெல்லா முதவுகைக்காக வந்திருக்கிற தேசமாயிற்று.

(கடியித்யாதி) பரிமளத்தையுடைத்தான வேங்கையினுடைய நறுமலரமளியுண்டு - செவ்வியிலேயுதிர்ந்த பூக்களாலுண்டான படுக்கை; அதிலே, மணியறைமிசை - † ஸம்போகத்துக்கு ஏகாந்தமான இருண்ட நீலப்பாறைகளையுடைத்தான † முழைஞ்சுகளிலே, † களிற்றுணையானது, பிடியோடேகூட. மணியறை - மாணிக்கப்பாறை.

தம் கொம்பினுக்கே" என்றதிலேநோக்கு. கொம்பு - ஸ்த்ரீயென்று ஸ்வபாவார்த்தம். "இனம்" என்று கூட்டமாகச்சொன்னதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (ஒன்றிரண்டித்யாதி). "இனம்" என்று, விசேஷிக்கையாலே ஒருகாலே நிரஸித்தமை தோற்றுகையாலே பலிதார்த்தமருளிச்செய்கிறார், (லங்கையிலித்யாதி). (அவதியாகையாலே) - எல்லைநிலமாகையாலே என்கை. அத்தால் - காரணமாகையாலே என்கை. (ஊட்டியாக நெரித்தான்) என்றது - கழுத்தையெல்லாம் பிடித்து நெரித்தானென்றபடி. தாத்பர்யாந்தரம், (நப்பின்னையித்யாதி). ஆக, அவளோடேகூடி க்ரீடிக்கவந்த தேசமென்றுதல், அவளுக்கு உதவினாற்போலே தமக்கு உதவவந்த தேசமென்றுதல், இரண்டு தாத்பர்யம் சொல்லிற்றாயிற்று.

மணி - இந்த்ரநீலங்களாகிற, அறை - பாறை, மிசை - அதிலேயென்று சப்தார்த்தமருளிச்செய்கிறார், (ஸம்போகேத்யாதி). (முழைஞ்சுகளிலே) என்றது - "போகிகளுக்கு உள்ளுச்செல்லவேணும்" என்றதைப்பற்ற. புஷ்பங்கள் நிறைய உதிரவேண்டுகையாலே வேங்கைகளொன்றுக்கொன்று கூடிக்கொண்டு க்ருஹம்போலேயிருக்குமென்று கருத்து. (களிற்றுணை) - புருஷகஜம். "அறை" என்றவிடத்தில், ஐகாரம் சாரியையாய், அற - மிக்க, என்றர்த்தமாய். "அற - மணிமிசை" என்று அந்வயித்து அர்த்தாந்தரமருளிச்

---

(௧) ரா - அயோ - ௧௧௮ - ௩௪.

மூ.—மறங்கொ ளாளரி யுருவென வெருவர
ஒருவன தகல் மார்வம்
திறந்து வானவர் மணிமுடி பணிதர
இருந்த நல்லிமயத்துள்
இறங்கி ஏனங்கள் வளைமருப் பிடந்திடக்
கிடந்தரு கெரிவீசும்
பிறங்கு மாமணி யருவியொ டிழிதரு
பிரிதி சென்றடை நெஞ்சே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மறம்	கோபத்தை	இருந்த	ஸர்வேஶ்வரன் நித்யவாஸம்பண்ணுகிற
கொள்	ஏறிட்டுக்கொண்ட	நல்	நன்றான
ஆள் அரி	நரஸிம்ஹத்தினுடைய	இமயத்துள்	ஹிமவானில்
உரு என	வடிவைச்சொல்லவே	ஏனங்கள்	பன்றிகளானவை
வெருவர	பயப்படும்படியாக	இறங்கி	குனிந்து
ஒருவனது	அஸத்ருசனை ஹிரண்யனுடைய	வளை	வளைந்த
அகல்	அகன்ற	மருப்பு	கொம்புகளாலே
மார்வம்	மார்வை	இடந்திட	(ரத்நபர்வதங்களை) பிளந்துபோகட (அவை)
திறந்து	பிளந்து,		
வானவர்	தேவர்களுடைய		
மணி	மாணிக்கமயமான	அருகு	ஸமீபத்திலே
முடி	கிரீடங்கள்	கிடந்து	இருந்து
பணிதர	(திருவடிகளிலே) வணங்கும்படி	எரிவீசும்	ஒளிவீசாநிற்பனவாய்
		மா	பெருத்து

அறை - பாறை. †அறவிலக்ஷணமான † பாறையென்றுமாம். (வண்டித்யாதி) சிலராஜபுத்ரர் துடைகுத்தவிட்டு உறங்குமாபோலே. †விரோதியான ருஷபங்களைப்போக்கி நப்பின்னைப்பிராட்டியோடே பரமரஸிகன் வர்த்திக்கிற தேசமாகையாலே அங்குத்தை திர்யக்குக்களும் ஶ்ருங்காரரஸ ப்ரதாநமாயிருக்கும். †இவை போகத்திலே அந்வயித்து பலாநுபவம்பண்ணி வர்த்தியாநிற்குமாயிற்று. (ரு)

செய்கிறார், (அறவித்யாதி). (பாறை) என்றது, அர்த்தாத்ஸித்தம். வண்டிசை பாட என்னாதே, "சொல" என்று கவிசொல்லுகையைச்சொல்லுகையாலே அப்படி கவிசொல்லுகைக்கீடான ஶ்ருங்காரரஸம் இவற்றுக்குண்டோவென்ன; அருளிச்செய்கிறார், (விரோதியானவித்யாதி). பரமரஸிகன் வர்த்திக்கையாலே யானைகளும் அவனைப்போலே போகத்திலே அந்வயித்து,ஏாநப(ஃ)லாநுபவம் பண்ணிக்கொண்டு (க) * கள்ளநித்திரை கொள்ளாநிற்குமென்று தாத்பர்யமருளிச்செய்கிறார், (இவையித்யாதி). ... ... (ரு.)

(க) பெரி - திரு - ரு - க - எ.

பிறங்கு	விளங்காநின்ற	பிரிதி	திருப்பிரிதியிலே
மணி	மாணிக்கங்கள்	சென்று	போய்
அருவியொடு	மலைவெள்ளத்துடன்	நெஞ்சே	ஓமநஸ்ஸே!
இழிதரு	உருண்டுவிழுகிற	அடை	கிட்டப்பாராய். (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. — † அப்பருவத்தில் பாலனுக்கு உதவினபடி சொல்லுகிறது. †ப்ரணயிநிக்கு உதவின க்ரமம் பற்றுதாயிற்று ஆஶ்ரித விரோதிகளைப்போக்குமிடத்தில்.

(மறங்கொளாளரி) †நீர்மையேயா யிருக்கக்கடவ தான் மறமேயோ ப்ரக்ருதி என்னும்படி, † நரஸிம்ஹத்தினுடைய மறந்தானொரு வடிவுகொண்டாற்போலே யிருக்கை. †(க) "ஃபீஷணம்-பீஷணம்" என்றும், (க) "ம்ருத்யு ம்ருத்யும்-ம்ருத்யும்ருத்யும்" என்றும் சொல்லுகிறபடியே வடிவுதானே பயாவஹமாயிருக்கை. (உருவெனவெருவர) கைதொட்டுப் பிளக்கவேண்டாதே நரஸிம்ஹத்தினுடைய பேரைச்சொல்லவே ஆஸுரவர்க்கம் அஞ்சும்படியாயிற்று இருப்பது. †ஒரு வ்யாபாரம்பண்ணவேண்டாதே தோற்றரவிலே பிணமாம்படி

அரு.—நாலாம்பாட்டு.—(மறங்கொளித்யாதி). நப்பின்னைப்பிராட்டிக்கு உதவினாற்போலே ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு உதவினபடியைச் சொல்லுகிறதென்று ஸங்கதியருளிச்செய்கிறார், (அப்பருவத்திலித்யாதி). அப்பருவமென்று - கீழ் - "இளங்கொடி" என்றத்தைப் பராமர்சிக்கிறது. (உ) "பதி ஸம்யோக ஸுலபம் - பதிஸம்யோகஸுலபம்" என்னும்படியான பருவத்திலே விரோதிகளைப்போக்கி உதவினாற்போலே தன்னைக்காணாவிடில் முடியும்படியான தசையிலேவந்து தோற்றி விரோதியைப்போக்கி உதவினானென்று கருத்து. சில ஸ்ரீகோசங்களிலே (ஆபத்திலே) என்று பாடமுண்டு. நப்பின்னைப் பிராட்டிக்கு உதவினாற்போலே உதவினபடியைச் சொல்லுகைக்கு ப்ரயோஜநமென்னென்ன; அருளிச்செய்கிறார், (ப்ரணயிநிக்கித்யாதி). கீழிற்பாட்டில் "இனவிடையடர்த்தவன்" என்று காயிகவ்யாபாரத்தைச்சொல்லி, இங்கே "உருவென வெருவர" என்று பேர்சொல்லவே பிணமாம்படி பயாவஹத்வம் சொல்லுகையாலே, ப்ரணயிநியிடத்தில் ஸ்நேஹத்திலும் ஆஶ்ரிதரிடத்தில் ஸ்நேஹம் விஞ்சியிருக்குமென்னும் அதிசயந்தோற்ற வருளிச்செய்தாரென்று கருத்து.

மறத்தையேறிட்டுக்கொண்ட ஆளரியென்று சப்தார்த்தமாய் தாத்பர்யமருளிச்செய்கிறார், (நீர்மையேயித்யாதி). மறந்தானே வடிவுகொண்ட ஆளரி என்று அர்த்தாந்தரமருளிச்செய்கிறார், (நரஸிம்ஹத்தினுடைய வித்யாதி). இதுக்கு நரஸிம்ஹாநுஷ்டுப்பிலே ப்ரமாணம் காட்டுகிறார், (பீஷணமித்யாதி). "உருவென" என்று - முழுச்சொல்லாய், தோற்றரவிலே என்றர்த்தமாய், இரண்டாமர்த்தமருளிச்செய்கிறார், (ஒருவ்யாபாரமித்யாதி). பேர்

(க) ந்ருஸிம்ஹாநுஷ்டுப். (உ) ரா - அயோ - ககசு-௩௪.

யாயிற்று இருப்பது. (உருவெனவெருவர) வடிவென்கிற உக்தியிலே அஞ்ச. † (க) [எங்ஙனேயுய்வர் தானவர்நினைந்தால்] † ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைப்போலே அநுகூலராய் "இது நமக்காகக் கொண்ட வடிவு" என்றிருப்பார் பிழைக்குமத்தனைபோக்கி, எதிரிகளாயிருப்பார் சிந்தித்தால் முழுக்காயாய் அவிந்துபோமத்தனை போக்கி உஜ்ஜீவிக்க விரகுண்டோ? †(உ) "கொண்ட சீற்றமொன்றுண்டு" என்கிறபடியே அச்சீற்றத்தைத் தஞ்சமாக நினைத்திருப்பார்க்கிறே பிழைத்துப்போகலாவது. (ஒருவனது) அம்மறத்தில்வந்தால் நரஸிம்ஹத்தினளவன்றிக்கே, தன்னை எண்ணினால் பின்னை இரண்டாம் விரலுக்கு ஆளில்லாதபடி அத்விதீயனானவனுடைய. † நரஸிம்ஹத்தை யெண்ணி அநந்தரம் தன்னையெண்ணலாம்படியாயிற்றிறே; அப்படி தன்னை எண்ணினால் அநந்தரம் எண்ணலாவாரில்லாதபடியிருக்கை. (அகல்மார்வம் திறந்து) "ஈஶ்வரனொருவனுளன்" என்று அவனுடைய ஸத்பாவத்தை யிசையாதொழிகைக்கு ஹேது-உடம்பு தடித்து ருதிரக்களிப்பாலே யாயிற்று. †காவற்காட்டில் துஷ்டம்ருகங்களுக்கு †ஊட்டியிட்டு வளர்க்குமாபோலே, திருவுகிருக்கு இரைபோரும்படி தேவதைகளுடைய வரங்களாலே அகலப்பண்ணின மார்வை. (திறந்து) † களிப்பாலே போக்குக்காணாமை சுழிக்கிற ரக்த வெள்ளத்துக்கு ஒருவழிகண்டு திறந்துவிட்டாற்போலே, திருவுகிரையிட்டுத் திறந்துவிட்டானாயிற்று; வரபலத்தாலே மூலையடியே திரிகையாலே, ருதிரமானது, கடல்கிளரச்செய்தே கரையை அதிக்ரமிக்கமாட்டாதாற்போலே யிருக்கிறவதுக்கு ஒருவழி கண்டுவிட்டானாயிற்று; வெள்ளத்துக்கு ஒருபள்ளங்கண்டு விடுவாரைப்போலே. †ஒருசிறுக்கனுக்குத் தமப்பன் பகையாக உதவின அவதாரமிறே. இத்தால் சொல்லிற்றாயிற்று - விரோதி அணித்தாந்தனையும் தான் அண்ணியனாயுதவுமவனென்கை. தமப்பன் பகையாக உதவுமவன்

சொன்னமாத்ரத்திலே அஞ்சக்கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார், (எங்ஙனேயித்யாதி). பாசுரார்த்தம், (ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானை யித்யாதி). அநுகூலர் நினைத்துப் பிழைக்கைக்கு ஸம்வாதம், (கொண்டசீற்றமித்யாதி). பூர்வவாக்ய விவரணம், (நரஸிம்ஹத்தையித்யாதி). ருதிரக்களிப்புவருகைக்கு ஹேதுகதந பூர்வகம் "திறந்து" என்று அநாயாஸக்ருத்யம் தோற்றச்சொன்னதுக்குக் கருத்தருளிச்செய்கிறார், (காவற்காட்டிலித்யாதி). (ஊட்டி) - திண்டி - (களிப்பாலே) - ரக்தத்தின் மிகுதியாலே. நரஸிம்ஹாபதாநத்தை யநுஸந்தித்த ஆழ்வார்க்குக் கருத்தை யருளிச்செய்கிறார், (ஒருசிறுக்கனுக்கித்யாதி வாக்யத்ர

(க) ௫ - எ - ௫. (உ) ௫ - அ - ௬.

அவனிலண்ணியனன†தான் தனக்குப்பகையானல் உதவச்சொல்ல வேண்டாவிறே.

(வானவரித்யாதி) †முன்பு சத்ருவான ஹிரண்யனுக்கு அஞ்சி முடியும் வாங்கிப்பொகட்டு †மநுஷ்யராய் வேற்றுருக்கொண்டு திரிந்தவர்கள், இப்போது தந்தாம் ஸ்வரூபங்களும் பதங்களும் பெறுகையாலே "எங்களுக்குக் குடியிருப்புப் பண்ணித்தந்தது" என்று, அந்த உபகாரஸ்ம்ருதியாலே, † "ஒருவர்காலில் வணங்கோம்" என்று இறுமாந்திருக்கக்கடவவர்கள், தங்கள் முடிகளானவை திருவடிகளிலே தட்டும்படி விழுந்து எழுதிக்கொடுக்கும்படி யிருந்த. (நல்லிமயத்துள்) நன்றான ஹிமவானில். †"பூமியில் கால் பாவோம்" என்றிருக்கக்கடவதேவஜாதி, அம்மேன்மையையடையப்பொகட்டு பக்நாபிமாநமாய் வந்து ஆஶ்ரயிக்கும்படி யிருக்கிற விலக்ஷணமான ஹிமவானில்.

(இறங்கிஏனங்கள்) †அங்குத்தை வராஹங்கள் நரஸிம்ஹத்தின் போலியாயாயிற்றுச் செருக்கியிருப்பது; மலைகுனிந்தாற்போலே தலை சாய்க்கையரிதாம்படியாயிற்று வராஹங்களினுடைய இறுமாப்பு இருப்பது; அப்படியிருக்கிறஇவை இறங்கி, வளைந்த கொம்புகளாலே தம்செருக்குக்குப்போக்குவீடாக மாணிக்கப்பாறைகளை யிடந்து பொகட்டுத் தான் போகாநிற்குமே, அவையங்கேகிடந்து †ஜ்வலியாநிற்குமாயிற்று. (பிறங்குமாமணி) அவைதான் ஒருபாறை மாத்ரமாயிருக்கையன்றிக்கே ஒருமலைபோலேயாயிற்றுக்கிடப்பது. †பெருத்து ஶ்லாக்யமாயிருந்துள்ள மாணிக்கங்களானவை. (அருவி

யத்தாலே). (தான் தனக்குப்பகையானல்) என்றது - "ஈஶ்வரோஹம் - ஈஶ்வரோஹம்" என்று ஸ்வரூபநாசத்தை விளைத்துக்கொண்டாலென்றபடி.

கீழ்ப்பதங்களைக் கடாக்ஷித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (முன்பித்யாதி). (மநுஷ்யராய்) என்றது - இப்போது "வானவர்" என்கையாலே பலிதம். "மணிமுடி" என்கையாலே பலிதம், (ஒருவரித்யாதி). நன்மையை உபபாதிக்கிறார், (பூமியிலித்யாதி).

நரஸிம்ஹம் தன்னுடையமறத்தாலே பர்வதம்போன்ற ஹிரண்யனுடைய மார்வையிடந்து ரக்தவெள்ளம் ப்ரவஹிக்கப்பண்ணுமாபோலே, வராஹங்கள் ரத்நபர்வதங்களைப்பிளந்து பொகட அத்தால்வந்த ரக்திமை அருவியிலே கலக்கையாலே ரக்தவெள்ளம்போலேயாயிற்று என்று தாத்பர்யம் விவக்ஷித்தருளிச்செய்கிறார், (அங்குத்தையித்யாதி). "பிறங்கு" என்றதினர்த்தம், (ஜ்வலியாநிற்கும்) என்றது. "மா" என்றது - பெருமையாதல், ஶ்லாக்யதையாதலென்று விவக்ஷித்து, ஏகப்ரகாரேண வருளிச்செய்கிறார், (பெருத்தித்யாதி). மணிப்பாறைஸ்த்தாநம் - மாம்ஸகண்டங்கள். ... ... (ச)

மூ.—கரைசெய் மாக்கடல்கிடந்தவன் கனைகழ
லமரர்கள் தொழுதேத்த
அரைசெய் மேகலை யலர்மகளவளொடு
மமர்ந்த நல்லிமயத்து,
வரைசெய் மாக்களிறிளவெதிர் வளர் முளை
யளை மிகு தேன் தோய்த்துப்
பிரசவாரி தன்னிளம்பிடிக்கருள் செயும்
பிரிதி சென்றடைநெஞ்சே, (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கனை	(ஆபரணங்கள்) சப்தியாநின்றுள்ள	அலர்மகளவளொடும்	தாமரைப்பூவிற்பிறந்த பெரியபிராட்டியோடே [ற
கழல்	திருவடிகளை	அமர்ந்த	பொருந்தி வர்த்திக்கி
அமரர்கள்	ப்ரஹ்மாதிகள்	நல்	விலக்ஷணமான
தொழுது	ஸேவித்து	இமயத்து	ஹிமவானில்,
ஏத்த	ஸ்துதிக்கும்படியாக,	வரைசெய்	மலைபோலேயிருக்கிற
கரைசெய்	தானே கரைசெய்து கொண்டிருக்கிற	மா	பெரியவடிவையுடை
மா	பெரிய	களிறு	யானைகளானவை [ய
கடல்	திருப்பாற்கடலிலே	இளம்	இளையதான
கிடந்தவன்	சாய்ந்தருளின ஸர்வேஶ்வரன்,	வெதிர்	மூங்கிலின் [ள
அரை	திருவரையிலே	வளர்	ஓங்கிவளராநின்றுள்
செய்	சாத்தப்பட்ட	முளை	முளைகளை (ப்பிடுங்கி)
மேகலை	திருப்பரியட்டத்தை யுடையளான	அளை	முழைஞ்சுகளில்
		மிகு	நிறைந்திருக்கிற
		தேன்	தேனிலே
		தோய்த்து	தோய்த்து
		பிரசம்	தேன்கூண்டோடே

யித்யாதி) அங்கேவர்ஷித்து வெள்ளங்கோக்குமே, பின்னையவ்வெள்ளந்தான் மலைகளைப்பேர்த்தாற்போலே அவற்றையு முருட்டிக்கொண்டுவந்து இழியுமாயிற்று.

ஆக, இத்தால்-நரஸிம்ஹமானது ஹிரண்யனுடைய மார்வைப் பிளந்து குடல்மாலையை ‡ ஒப்பித்தவநந்தரம் ருதிரவெள்ளமானது கொழித்துக் கொடுபுறப்பட்டாற்போலே யாயிற்று, நாநாவான தாதுக்களையுடைத்தான ஸ்தலங்களிலே வர்ஷித்த வர்ஷஜலமானது அவ்வவ தாதுவிசேஷங்களாலே கலங்கி ஒருவரால் சலிப்பிக்கப் போகாத ரத்நபாறைகளை யுருட்டிக்கொடு வந்திழிகிறபோதிருந்தபடி ... ... (ச)

‡ ஒப்பிக்கை - அலங்கரிக்கை.

வாரி	(அத்)தேனை	பிரிதி	திருப்பிரிதியிலே
தன் இளம்பிடிக்கு	தன்னுடைய சிறுகுட்டிகளுக்கு	சென்று	போய்
அருள்செயும்	கொடுக்கிற	நெஞ்சே!	ஓமநஸ்ஸே!
		அடை	கிட்டப்பாராய். (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு.—†அவ்வவதாரங்களுக்கடியாகத்திருப்பாற்கடலிலே வந்து கண்வளர்ந்தருளினபடியை யநுஸந்திக்கிறார்.

(கரைசெயித்யாதி) †ஆபரணங்களாலே அலங்க்ருதமான திருவடிகளை, "இவ்வழகைக் காணவேணும்" என்று ஆசைப்பட்டுப் பெறாதே யிருக்கிற ப்ரஹ்மாதிகள், ஸ்ரீ வைகுண்டத்திலே சென்று தங்களுக்குக்கிட்டவொண்ணாமையாலே காணப்பெறார்களிறே; அவர்கள் அவ்விழவுதீரக் கண்டநுபவிக்கும்படியாகத் திருப்பாற்கடலிலே வந்து சாய்ந்தானாயிற்று. தானே தனக்குக்கரையைச்செய்துகொடுநிற்கிற கடலென்னுதல்; அதாகிறது - கரையையதிக்ரமிக்க மாட்டாதிறே ஈஶ்வராஜ்ஞையாலே; அன்றிக்கே, †ஒருகாலத்திலே §கரைகட்டப்பட்ட கடலென்னுதல், † ஸாம்யத்தைப்பற்றச்சொல்லலாமிறே; † கரைசெய்கைக்காக-கரையேற்றுகைக்காக, மாக்கடல் கிடந்தவன் - பெரியகடலிலே கிடந்தவன். (கனைகழல்) ஆபரணத்வநியையுடைத்தானவென்னுதல்; †செறியப்பட்டவென்னுதல். (அரைசெயித்யாதி) ஓரிடத்திலே படுக்கையாயிருக்க வேறோரிடத்தை போகத்துக்கு ஏகாந்தஸ்த்தலமாகக்கொண்டு விரும்பியிருப்பாரைப்போலே, திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறவன் இங்கே வந்திருந்தானாயிற்று. †மாதாபிதாக்கள் கூடவிருந்து ப்ரஜையினுடைய ஹிதசிந்தை பண்ணுமாபோலே, பிராட்டியுந்தானுமாய் வந்திருந்தானாயிற்று. திருவரையிலே செய்யப்பட்ட மேகலை யுண்டு, திருப்பரியட்டம், அத்தையுடையளாய் போக்யதைகவேஷையான பெரியபிராட்டியா

அரு.—அஞ்சாம்பாட்டு.—(கரைசெயித்யாதி). கீழே ராமக்ருஷ்ணவதாரங்களை அநுஸந்தித்து, இப்பாட்டில் க்ஷீராப்த்திசாயியை அநுஸந்திக்கைக்கு ஸங்கதியருளிச்செய்கிறார், (அவ்வவதாரங்களுக்கித்யாதி).

"கனைகழலமரர்கள் தொழுதேத்த கரைசெய்மாக்கடல் கிடந்தவன்" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி, ஹேது பூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார், (ஆபரணங்களாலே யித்யாதி வாக்யத்வயத்தாலே). (ஒருகாலத்திலே)-ராமாவதாரத்திலே. க்ஷீராப்த்தியிலே ஸேதுபந்தநம் செய்ததில்லையேயென்ன; அருளிச்செய்கிறார், (ஸாம்யேத்யாதி). இவ்விரண்டுயோஜனையிலும் தனக்கு விதேயமான கடலென்று பலிதார்த்தம் கண்டுகொள்வது. ப்ரஹ்மாதிகளை ஸம்ஸாரத்தில்நின்றும் கரையேற்றுகைக்காகவென்று மூன்றாம் தாத்பர்யமருளிச்செய்கிறார், (கரைசெய்கை யித்யாதி). (செறியப்பட்ட)என்றது-ஆபரணங்களாலே நெருங்கப்பட்டவென்றபடி. இமயத்தில் வருகைக்கு ஹேத்வந்தரமருளிச்செய்கிறார், (மாதேத்யாதி). திருப்பரியட்டத்தை வர்ணிப்பானென்

§ கரைகட்டுகை - திருவணைகட்டுகை.

ரோடே பொருந்தி வர்த்திக்கிற விலக்ஷணமான ஹிமவானில். † பரியட்ட வாய்ப்பை யநுபவிக்கு மிதுக்கு மேற்பட மற்றொன்றில் போகவொட்டா தாயிற்று இதிலழகு. [கனைகழலமரர்கள் தொழுதேத்த கரைசெய் மாக்கடல் கிடந்தவன் - அரைசெய் மேகலையலர் மகளவளொடுமமர்ந்த நல்லிமயத்து.]

(வரைசெய்மாக்களிறு) மலையை †வகுத்தாற்போலே யிருக்கிற பெரிய வடிவையுடைய ஆனைகளானவை, இளவெதிருண்டு-இளையதான மூங்கில்; †அது, தன்னுடைய பருவத்தினளவன்றிக்கே முளைத்தபோதே அண்டபித்தியிலே சென்று தட்டும்படி வளர்ந்திருக்குமாயிற்று; †அத்தைத்தன் செருக்காலே அநாயாஸேநவாங்கி, (அளைமிகுதேன் தோய்த்து) †வங்குகளிலே நிறைந்திருந்துள்ள தேனிலே தோய்த்து. ராஜாக்களுக்கு போக்யத்ரவ்யங்கள் குறைவற்றிருக்குமாபோலே, தேன்குறை வற்றிருக்குமாயிற்று. † பிரசமென்று-தேன் கூட்டுக்கும், மதுகரங்களுக்கும் பேர். வாரியென்று - அவற்றினுடையதேன், அதிலே வளர்ந்த மூங்கில்முளைகளைக்கொடுபுக்குத்தோய்த்து, அதில் § பருக்கைதட்டாதபடி † அதின்வாயிலே பிழியுமாயிற்று. பருக்கைதட்டு மாகில் மிடற்றுக்குக்கீழிழிச்சமாட்டாதாயிற்று; அதுக்கடி-இளம்பிடியாகை. †தேனில் ரஸம் பெறுகைக்காக அதிலே தோய்த்துப், பின்னை அதில்கந்தலுண்டு - கோது, அதுதட்டாதபடி

னென்ன; (பரியட்டேத்யாதி).

(வகுத்தாற்போலே) - ஆனையாகப்பண்ணினாற்போலே. இளையதானமூங்கில் என்றபோதே வளர்முளையாகை அர்த்தஸித்தமாயிருக்க, விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார், (அதுவித்யாதி). அண்டபித்தியிலே தட்டும்படியானத்தைப் பிடுங்கித் தேனிலேதோய்க்கும்படி யெங்ஙனேயென்ன; "வரைசெய்மா" என்கிற பதங்களையுட்கொண்டருளிச்செய்கிறார், (அத்தையித்யாதி). அளை-முழைஞ்சுகளிலே, மிகுத்ததேனென்று சப்தார்த்தமருளிச்செய்கிறார், (வங்கித்யாதி). (வங்கு) - முழைஞ்சு. பிரசங்களினுடைய - வண்டுகளினுடைய, வாரி - உண்ணத்தக்கதேனை, அருள்செய்யுமென்றாதல்; பிரசத்தோடே - தேன்கூண்டோடே, வாரியை அருள்செய்வாரைப்போலே அருள்செய்யுமென்றாதல் தாத்பர்யம் விவக்ஷித்து, சப்தநிர்வாஹம் காட்டுகிறார், (பிரசமித்யாதி). த்ருஷ்டாந்தமாகச் சொன்னபக்ஷத்திலே, (அதின்வாயிலே) என்றவநந்தரம், பிரசத்தோடே பிழியுமாபோலே என்று கூட்டுவது. தேனோடே இளமுளையைக் கொடுத்தால் - அதில் படுக்கையாம்படி அதிஸூகுமாரமான பிடி யென்று கருத்து. ஆனால் வெறுமனே தேனைக்கொடுப்பித்தாலாகாதோ? முளையைத் தோய்ப்பானேனென்னென்ன; அருளிச்செய்கிறார், (தேனிலித்யாதி).

---

§ பருக்கை - கோது.

மூ.—பணங்களாயிரமுடைய நல்லரவணைப்
பள்ளிகொள் பரமாவென்று
இணங்கி வானவர் மணிமுடி பணிதர
விருந்த நல்லிமயத்து
மணங்கொள் மாதவி நெடுங்கொடி விசும்புற
நிமிர்ந்தவை முகில் பற்றிப்
பிணங்குபூம்பொழில் நுழைந்து வண்டிசை சொலும்
பிரிதிசென்றடைநெஞ்சே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வானவர்	தேவர்கள்	முடி	(தங்கள்)தலைகளாலே
இணங்கி	திரளவிருந்து	பணிதர	ஸேவிக்கும்படியாக
ஆயிரம்பணங்கள் உடைய	ஆயிரம்படங்களையுடையனாய்	இருந்த	எழுந்தருளியிருக்கிற
நல்	(சேஷத்வமாகிற)நன்மையையுடைய	நல்	நன்றான
அரவு	திருவநந்தாழ்வான	இமயத்து	ஹிமவானிலே;
அணை	திருப்பள்ளியிலே[கிற	மணம்கொள்	பரிமளத்தையுடைய
பள்ளிகொள்	கண்வளர்ந்தருளுகிற	மாதவி	குறுக்கத்தியினுடைய
பரமா	ஸர்வாதிகனே!	நெடு	நீண்ட
என்று	என்று ஸ்துதித்து	கொடி அவை	கொடிகளானவை
மணி	நவரத்நங்களிழைத்த கிரீடம்தரித்த	விசும்புஉற	ஆகாசத்தை அளாவு
		நிமிர்ந்து	வளர்ந்து [ம்படி
		முகில்	மேகங்களை
		பற்றி	தாவி

பிழியும்; அதிலுண்டான பருக்கையுங் கூடப்பொருதபடியாயிற்று இதினுடைய ப்ரக்ருதிமார்த்தவமிருக்கும்படி, † திர்யக்குக்களுக்கும் தன்னுடைய ரக்ஷ்யத்தினுடைய ரக்ஷணமே யாத்ரையாயிருக்குமாயிற்று.

† ப்ரஹ்மாதிகளுடைய ரக்ஷணத்துக்காகத் திருப்பாற்கடலிலேசாய்ந்து அவர்களை ரக்ஷிக்குமாபோலே யாயிற்று, திர்யக்குக்களுக்கும் ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணமே யாத்ரையாயிருக்கும்படி; பெரிய பிராட்டியாரும் தானுமாய் ஸம்ஶ்லேஷித்து வர்த்தியாநிற்குமவன், அந்த ஸம்ஶ்லேஷாநந்தரமாக மதுபாநகோஷ்டியாய்ச் செல்லாநிற்கு மிறே; அதுக்கு உபலக்ஷணம். ... ... (௫)

இப்படி வர்ணித்ததுக்கு உட்கருத்தையருளிச்செய்கிறார், (திர்யக்குக்களுக்கு மித்யாதி).

பாட்டுக்கெல்லாம் தொகுத்து பாவமிரண்டுவிதமாக வருளிச்செய்கிறார், (ப்ரஹ்மாதிகளுடைய வித்யாதி). இதில் முந்தினபாவத்துக்கு "கரைசெய் மாக்கடல்" முதலடியிலே நோக்கு; இரண்டாவதுக்கு "அரைசெய்மேகலை" இத்யாதி இரண்டாமடியிலே நோக்கு. ... ... (௬)

பிணங்கு	சுற்றிவலிக்கையினாலே	இசைசொலும்	ஆலாபித்துப் பாடாநின்றுள்ள
பூ	பூக்கள் அலராநின்ற	பிரிதி	திருப்பிரிதியிலே
பொழில்	சோலைகளிலே	சென்று	போய்
வண்டு	வண்டுகளானவை	நெஞ்சே	ஓநெஞ்சமே!
நுழைந்து	ப்ரவேசித்து	அடை	கிட்டப்பாராய். (௬)

வ்யா.—ஆறும்பாட்டு.—† அப்படி திருப்பாற்கடலிலே சாய்ந்தருளினவன் இங்கேவந்தெழுந்தருளியிருக்கிறபடியையநுஸந்திக்கிறார். † ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாயிருக்க அங்குநின்றும்எங்களுடைய கூக்குரல் கேட்கைக்காகத்திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினதேவரீர் எல்லார்க்கு மொக்க அநுபவிக்கலாம்படி இங்ஙனே யெழுந்தருளி யிருப்பதே! என்பர்களாயிற்று.

(பணங்க ளாயிர முடைய நல்லரவணைப்பள்ளிகொள்பரமாவென்று) † ஆறுகள் குளங்கள் நிரம்பினால் அதிகஜலத்துக்குப் போக்கு விடுகைக்குப் பல வாய்த்தலைக ளுண்டாமாபோலே பகவதநுபவஜநித ஹர்ஷத்துக்குப் போக்குவிடுகைக்குப் பலதலைகளையு முடையனாயிருக்கிற திருவநந்தாழ்வா னோட்டை ஸ்பர்சத்தாலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வாதிகனே! என்பர்களாயிற்று. பிராட்டியை எனக்கென்னுதல், திருவநந்தாழ்வானைப் படுக்கையாகப் பெறுதல் செய்யும் தத்வமாயிற்று ஸர்வாதிகமாவது. † உச்வாஸ நிஶ்வாஸங்களாலே ஸர்வேஶ்வரனுக்குத் தூங்குமெத்தைபோலே அசைந்துவாராநிற்குமாயிற்று. †யசோதைப்பிராட்டி க்ருஷ்ணனைத்தன் மடி

அரு.—ஆறும்பாட்டு.—(பணங்களித்யாதி). இமயத்திலிருக்கிறவனை ப்ரஹ்மாதிகள் அநந்தசாயித்வேந ஸ்துதித்தத்தாலே பலித்தவர்த்தத்தைச் சொல்லாநின்றுகொண்டு ஸங்கதியருளிச்செய்கிறார், (அப்படியித்யாதி). இமயத்திலிருக்கு மர்ச்சாவதாரத்தை க்ஷீராப்திசாயித்வேந அநுஸந்தித்தால் ஏற்றம் சொல்லிற்றாயிற்றோவென்ன; அருளிச்செய்கிறார், (ஸ்ரீவைகுண்டமித்யாதி). இத்தால் - தேவதிர்யங் மநுஷ்யர்களெல்லார்க்கும் முகங்கொடுக்கையாலே ஸௌலப்யாதிசயம் சொல்லிற்றென்றபடி.

"நல்லரவணை" இத்யாதியைச்சொல்லவே அநந்தசாயித்வத்தால் வந்த ஏற்றம்தோற்றுமே, "பணங்களாயிரமுடைய" என்று விசேஷிப்பானென்னென்ன; அதுக்கு ப்ரயோஜநமருளிச்செய்கிறார், (ஆறுகளித்யாதி). தாங்கள் ஸ்துதிக்க இழிந்தவர்களாகையாலே தங்களைப்போலே சதுர்முக பஞ்சமுகராகையன்றிக்கே ஸஹஸ்ரமுகனாகப்பெற்றதே! என்றீடுபடுகிறார்களென்று கருத்து. நல்லதான அரவணை என்று விவக்ஷித்து நன்மையை யருளிச்செய்கிறார், (உச்வாஸேத்யாதி). எம்பெருமானை யேத்துகைக்கு ஸஹஸ்ரமுகமுண்டாகப்பெற்றானென் றீடுபட்டதை ஸநிதர்சநமாக உபபாதிக்கிறார், (யசோதையித்யாதி).

யிலே கொண்டிருந்து தாலாட்டுமாபோலே, ஸர்வேஶ்வரனைத்தன் மடியிலே சாயவிட்டுக் கொண்டிருந்து ஏத்தாநிற்குமாயிற்று. †"திருவநந்தாழ்வான் மடியிலும், திருவடி சிறகின் கீழும், †ஸ்ரீஸேநாபதியாழ்வான் பிரம்பினுள்ளுங்காண் இத்தத்வம் வளருவது" என்று பட்டரருளிச் செய்யும்வார்த்தை †வ்ருத்த மந்த்ரிகள் ராஜபுத்ரர்களை வைத்து நடத்துமாபோலேயாயிற்று அவர்கள் நடத்தும்படி. அவர்களாலே நியாம்யனாயிற்று இருப்பது; (க) *வானிளவரசிறே; (உ) †[ப்ரக்ருஷ்ட விஜ்ஞாநபலைகதாமநி-ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பலைகதாமநி] ஸர்வேஶ்வரனும் பிராட்டியுமாய்ச் சாய்ந்தால்அவர்கள் நினைவுக்குப் பாங்காகக் குழைந்து கொடுக்கைக்கீடானஜ்ஞா நாதிக்யத்தையும், இருவருமாய்த் துகையாநின்றால், "ஒருசேதநன்" என்று கூசாதே படுக்கை என்று துகைக்கலாம் படியானதா(ர)ரண ஸாமர்த்யத்தையுமுடையனாயிருக்கை. †சேஷியானவன் ஸர்வாதிகனா யிருக்கச்செய்தே தன்னை ஆஶ்ரிதபரதந்த்ரனாக்கி வைக்குமாபோலே,சேஷபூதனும் தன்னுடைய ஸர்வவ்யாபாரங்களையும் சேஷிக்கு உறுப்பாக்கி வைக்கக்கடவனிறே இளையபெருமாளைப்போலே. (நல்லரவணை) † அத்தலைக்கே உறுப்பாயிருக்கை. சேஷபூதனுக்கு நன்மையாவது-எனக்கென்னு மதன்றிக்கே சேஷிக்கே யுறுப்பாயிருக்கையிறே.

(ங)†[பாவஜ்ஞேந க்ருதஜ்ஞேந தர்மஜ்ஞேநச லக்ஷ்மண। த்வயா புத்ரேண தர்மாத்மா நஸம்வ்ருத்த: பிதாமம-பாவஜ்ஞேந க்ருதஜ்ஞேந தர்மஜ்ஞேநச லக்ஷ்மண। த்வயாபுத்ரேண தர்மாத்மா நஸம்வ்ருத்த: பிதாமம.] [பாவஜ்ஞேந-பாவஜ்

ஸ்தோத்ரம்பண்ணுகையாலும், ஸ்பர்சமுகத்தாலும் திருவநந்தாழ்வானுக்கு யசோதைப் பிராட்டியோடு ஸம்பந்தம் கண்டுகொள்வது. சேஷசாயித்வம் பரத்வஸூசகமென்னுமதுக்கு ஸம்வாதம்காட்டுகிறார், (திருவநந்தாழ்வானித்யாதி). (சிறகின் கீழும்) என்றது - (ச) "யஸ்தேவிதாநம் வ்யஜநம்த்ரயீமய:- யஸ்தேவிதாநம் வ்யஜநம்த்ரயீமய:" என்றத்தைப்பற்ற. பிரம்பின்கீழே வர்த்தித்தால் நியந்த்ருத்வம் போகாதோவென்ன; (வ்ருத்தமந்த்ரிகளித்யாதி). இவன் படுக்கையாயிருக்கைக்கு அவர்கள் நினைவறிந்து பரிமாறுகைக்கீடான ஜ்ஞாநசக்திகளுண்டோவென்ன; அருளிச்செய்கிறார், (ப்ரக்ருஷ்டேத்யாதி). ஜ்ஞாநசக்திகளுண்டாயிருக்க அசேதநமான படுக்கையாகக்கூடுமோவென்ன; (சேஷியானவனித்யாதி). நன்றான அரவு என்றர்த்தாந்தரம், (அத்தலைக்கே யித்யாதி).

இளையபெருமாள் தான் சேஷிக்கே யுறுப்பாயிருந்தாரோ வென்ன; அருளிச்செய்கிறார், (பாவஜ்ஞேநேத்யாதி),

(க) பெரி - திரு - ங-கூ-ங.
(உ) ஸ்தோ - ர - ஙக.
(ங) ரா - ஆர - கு - உக.
(ச) ஸ்தோ - ர - சக.

ஞேந] (க) "க்ரியதாம்" என்று †சொல்லுகிறவரிறே இளையபெருமாள். இப்படிசெய்யவல்ல நீர் நம்மைக் கேட்டதென்னென்கிறார். †பர்ணசாலையைச் சமைத்த வநந்தரம் சொல்லுகிறவார்த்தையிறே. [பாவஜ்ஞேந-பாவஜ்ஞேந]†அல்லாதவை சொன்னாலும், தாமும் பிராட்டியுமாய் ஏகாந்தமாயிருக்கு மிடங்கள் சமைக்கும்படி இளைய பெருமாளுக்குப் பெருமாளருளிச் செய்யாரிறே; நெஞ்சாலே நினைக்குமித்தனையிறே; இந்நினைவறிந்து செய்தார். [க்ருதஜ்ஞேந-க்ருதஜ்ஞேந] †அதுவேயன்றிக்கே செய்து போரும்படி யறிந்துசெய்தார். †அறுபதினாயிரமாண்டு ஜீவித்தசக்ரவர்த்தி நெடுநாள் மலடுநின்று பிள்ளை பெற்றவனாகையாலே "இவர் என் நினைந்திருக்கிறாரோ" என்று நினைவை ஆராய்ந்தும், "இவர்க்கு எத்தாலே என்ன குறை வருகிறதோ" என்று பொருந்து மிடங்கள் பார்த்தும் அவன் செய்து போருமடைவு அறிவராயிற்று. [தர்மஜ்ஞேந-தர்மஜ்ஞேந] நினைவறிந்தாலும், செய்து போருமடைவு அறிந்தாலும், தானும் ராஜபுத்ரனான பின்பு "எனக்கும் ஓரிருப்பிடம் வேண்டாவோ" என்றிருக்கு மவனுக்கு இது செய்யவொண்ணாதிறே; அங்ஙனன்றிக்கே "அத்தலையில் தாதர்த்யமே நமக்கு ஸ்வரூபமான பின்பு பின்னை அத்தலைக்குறுப்பாகச்செய்து போருமதே நமக்கு வகுத்தது" என்று அத்தலைக்காகச்செய்யுமத்தையே தமக்குக்கர்த்தவ்ய மென்றிருப்பர். [த்வயேத்யாதி-த்வயேத்யாதி]- தாமுள்ளவன்று தாமுளராய், தாம்போனவன்றைக்கும் உம்மை வைத்துப்போனாரே என்கிறார். [புத்ரேண- புத்ரேண] "புத்" என்று ஒரு நரகவிசேஷமாய், அதில் புகாதபடி நோக்கும் என்றாயிற்றுப் புத்ரனென்றுபேராகிறது; ஐயர்க்கு, நம்முடைய அபிமதஸித்தியின்றிக்கே யொழிலுகதனக்கு மேற்பட நிரய மில்லையிறே; அவர்க்கு அதுவராதபடி நோக்குகிறீர் நீரிறே. [தர்மாத்மா-தர்மாத்மா] சக்ரவர்த்தி ப்ரஸ்துதனானவாறே "நம் அய்யரை யொப்பாருண்டோ? அவரு மொருவரே ! தாமிருந்தநாள் தாம் வேண்டுவன

(சொல்லுகிறவரிறே) என்றது - சொல்லப்படுகிறவரிறே என்றபடி. இப்படிபாவஜ்ஞரென்று கொண்டாடினது எந்தகார்யத்தைக்கொண்டென்ன; அருளிச்செய்கிறார், (பர்ணசாலையை யித்யாதி). ஆனால் (க) "க்ரியதாம்" என்று நியமிக்கவன்றோ செய்தார், "பாவஜ்ஞேந" என்பானென்னென்ன; அருளிச்செய்கிறார், (அல்லாதவையித்யாதி). க்ருதம்-க்ருதியை, ஜ்ஞாநாதி-ஸாங்கமாக அறிவனென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (அதுவேயித்யாதி). த்ருஷ்டாந்தபூர்வகம் விவரிக்கிறார், (அறுபதினாயிரமித்யாதி).

(க) ரா - ஆர - கரு - எ.

எனக்குச்செய்து தாம்போன வன்று நமக்கு வேண்டுவன செய்கைக்கு உம்மைப் பெற்றுத் தண்ணீர்ப்பந்தல் வைத்துப் போவதே! [𑌮𑌮-மம] இருவர்க்கும் பிதாவானமை ஒத்திருக்கச்செய்தே, "மம" என்கிறாராயிற்று, அவர் நமக்குச் செய்யுமவை நீரிருந்துசெய்கையாலே நாமவரை யிழந்திலோம், நீரிழந்தீராகிலித்தனையிறே. (க) †"𑌅𑌹𑌂𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்கிறவிடத்திலே, சேஷியுடைய வ்யாபாரமும் புகாதாகில் "𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 - ஸர்வம்" என்னவொண்ணாதிறே.

(அரவணை) நாற்றம் குளிர்த்தி தொடக்கமானவை ஜாதிப்ரயுக்தமாகவே யுண்டாயிருக்குமிறே. (பரமா) இப்படுக்கையிலே சாய்ந்தவனாயிற்று தனக்கு அவ்வருகொருவரையுடையனல்லாதவனாகிறான். (இணங்கி) க்ராமணிகளைப்போலேயாயிற்று தேவர்களும்; † ப்ரஹ்மஹத்யை சொல்லிப்பழியிடுவாரும், தலையை யறுப்பாரும், தலையை யறுப்புண்பாருமாயிறே யிருப்பது; இப்படியிருக்கிறவர்கள், கிண்ணகத்தி லிழிவாரைப்போலே ஒருமிடறா யாஸ்ரயிப்பர்களாயிற்று. † தேவர்களடங்கலும் திரண்டு இறுமாப்பாலே "வணங்கோம்" என்றிருக்குமது தவிர்ந்து பக்நாபிமாநராய்த் திருவடிகளிலே தலைகள்பட வணங்கும்படி யாயிற்று அங்கெழுந்தருளி யிருக்கிறது. † பரத்வத்தில் வணங்காதாருமெல்லாம் சீலம்கண்டு வணங்கும்படியாகவிருக்கிற தேசமாயிற்று.

(மணங்கொளித்யாதி) பரிமளப்ரசுரமாய் அதுக்கோ ராஸ்ரயம் வேணுமென்று கல்பிக்கவேண்டும்படியாயிற்றுத் தானிருப்பது. † மணத்தை யுடைத்தான மாதவியுண்டு-குறுக்கத்தி, அதினுடைய, நெடுங்கொடியானது - ஸ்ரத்தையாலே வளர்ந்த கொடியானது; (விசும்புறநிமிர்ந்து) ஆகாசாவகாசத்தை வெளியடைத்துக்கொண்டு மேகபதத்தளவும் சென்று அத்தை மூடப்படருமாயிற்று. (அவையித்யாதி), ஆகாசத்திலே † முகடுருவ வளர்ந்தால் ஒரு கொள்

சேஷியான பிதாசெய்யுமத்தை சேஷபூதர் செய்யக்கூடுமோ வென்ன; அருளிச்செய்கிறார், (அஹம்ஸர்வமித்யாதி).

வ்ருத்ராஸுரனை இந்த்ரன் கொல்லுகையாலே ப்ரஹ்மஹத்யை பண்ணினனென்று சொல்லுவரென்றருளிச் செய்கிறார், (ப்ரஹ்மஹத்யையித்யாதி). கீழ்வாக்யவிவரணம், (தேவர்களித்யாதி). "நல்லிமயத்து" என்ற நன்மைக்குத்தாத்பர்யம், (பரத்வத்திலித்யாதி).

மணந்தானே மாதவியை வ்யாபித்துக்கொண்டதென்று ஒருதாத்பர்யமருளிச்செய்து, மணத்தைக்கொண்டிருக்கிற என்றர்த்தாந்தரமருளிச்செய்கிறார், (மணத்தையித்யாதி). (முகடுருவ)-ஸாந்த்ரமாகவென்றபடி. பிணங்கு

(க) ரா - அயோ - நுக - உடு.

மூ.— கார் கொள் வேங்கைகள் கனவரை தழுவிய
கறிவளர் கொடிதுன்னிப்
போர் கொள் வேங்கைகள் புனவரை தழுவிய
பூம் பொழிலிமயத்துள்
ஏர்கொள் பூஞ்சுனைத்தடம் படிந்தின மல
ரெட்டு மிட்டிமையோர்கள்
பேர்களாயிரம் பரவி நின்றடிதொழும்
பிரிதி சென்றடை நெஞ்சே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நெஞ்சே	ஓமநஸ்ஸே !	தழுவிய	வர்த்திக்கிற
கார்கொள்	மேகத்தைஆக்ரமித்த	போர்கொள்	யுத்தோந்முகமான
வேங்கைகள்	வேங்கைமரங்களை	வேங்கைள்	வேங்கைப் புலிகளையு
தழுவிய	அணவியிருப்பதாய்		டைத்தாய்
கனம்	பரந்த [ண்டான	பூ	(எப்போதும்) அலரா
வரை	தாழ்வரைகளிலே யு		நின்றுள்ள
கறி	மிளகினுடைய	பொழில்	சோலையையுடைய
வளர்	வளர்ந்த	இமயத்துள்	இமயமலையிலே
கொடி	கொடிகளானவை [ய்	இமையோர்கள்	ப்ரஹ்மாதிதேவர்கள்
துன்னி	நெருங்கியிருப்பதுமா	ஏர்கொள்	அழகையுடைத்தாய்
புனம்	கொல்லைநிலங்க ளிலு	பூ	பூத்திருந்துள்ள
வரை	சிறுமலைகளிலே [ள்ள	சுனை	தடாகங்களின்

கொம்பு அபேக்ஷிதமாயிருக்குமே, அப்போதாகக் கொள்கொம்பு கொடுப்பாரில்லையே, அவ்வளவிலே மேகங்கள் வந்து கிட்டுமே, அவற்றைச்சென்று பற்றும்; அவை வாயுப்ரேரித மாய்ப் போகத்து டங்கும்; கொடியானது இங்கேயிசிக்கும், இவ்வாயாஸத்தால் வந்த அலசுதலிலே பூக்களலரா நிற்கும், அப்பூவிலே மதுபாநம் பண்ண நினைத்த வண்டுகளானவை அம்மேகத்துக்கும் கொடிக்கும் நடுவே நுழைந்து புக்கு மதுபாநத்தைப் பண்ணிக்களித்து அச்செருக்குக் குப்போக்குவிட்டு ஆளத்திவைத்து இசைசொல்லாநிற்கும்; அச் சோலையடைய மதுபாநம் பண்ணிக்களித்து ப்பாடுகிற வண்டுகளி னுடைய இசை ஆரவாரமாயிருக்கும். † பெரியபிராட்டியாராகிற கொடி "ப்ரஜைகளை ரக்ஷிக்கவேணும்" என்றிசிக்க, "செய்கிறோ மிறே" என்று அவனிசிக்க, உள்ளடைய தேவர்கள் ஸ்தோத்ரம் பண்ணுகிற ஆரவாரமாயிருக்கும். (சு)

தலுக்கு அங்கேயிசிக்க, இங்கேயிசிக்க என்று பொருளாய், அலர்மகளைக்கொ டியாகவும் எம்பெருமானை முகிலாகவும் புஷ்பங்கள் ப்ரஸாத விசேஷங்களா கவும் வண்டுகள் தேவகணங்களாகவும், ஒருரூபகம் திருவுள்ளம் பற்றி, இப் படி வர்ணித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார், (பெரியவித்யாதி). ... (சு)

தடம்	துறைகளிலே	பேர்களாயிரம்	ஆயிரம் திருநாமங்களையும்
படிந்து	தீர்த்தமாடி		
இனம்	ஓரினமான	பரவிநின்று	வாயில்வந்தபடிசொல்லி
மலரெட்டும்	(செங்கழுநீர்முதலிய) எட்டுமலர்களையும்	அடிதொழும்	ஸேவியாநின்றுள்ள
இட்டு	ஸமர்ப்பித்து	பிரிதி	திருப்பிரிதியில்
		சென்று அடை	போய் ஆஶ்ரயி. (எ)

வ்யா.— ஏழாம்பாட்டு.—†புஷ்பாஞ்சலி பண்ணித்தேவர்கள் தொழாநிற்பர்க†ளாயிற்று.

(கார்கொள்வேங்கைகள்)†காரென்று-மேகமாய், கார்கொள்வேங்கைகளென்று-மேகபதத்தளவும் செல்லவளர்ந்த வேங்கைகளென்னுதல்; அன்றிக்கே நாநாவர்ணமாயாயிற்று வேங்கைகள் தானிருப்பது, அத்தாலே நீலவேங்கை என்னுதல். (கனவரைதழுவிய) சுற்றிலுண்டான தாழ்வரைகளிலே யுண்டான கறியினுடைய வளர்ந்த கொடியானது - மிளகினுடைய வளர்ந்தகொடியானது, நெருங்கப் படர்ந்துகிடக்கு மாயிற்று. (போரித்யாதி). † வெளிநிலங்களில் சிறுமலைகளடையப்பெரிய சீற்றத்தையுடைய யுத்தோந்முகமான வேங்கைப்புலிகள் நெருங்கிக் கிடக்குமாயிற்று. (பூம்பொழிலிமயத்துள்) † இதுவாயிற்றுச்சோலையிருக்கும்படி.

(ஏரித்யாதி) † தர்சநீயமாம்படி பூத்திருந்துள்ள தடாகங்களின் கரைகளிலே படிந்து. (இனமலரெட்டுமிட்டு) § (அஹிம்ஸாதி

அரு.— ஏழாம் பாட்டு.— (கார் கொளித்யாதி). கீழ்நாலாம் பாட்டிலே, தேவர்கள் விபவத்திலே பணிந்தார் களென்றும், அஞ்சாம் பாட்டிலே, அவதாரகந்தமான க்ஷீராப்தி நாதனை ஸ்துதித்தார்களென்றும், ஆறும்பாட்டிலே, அந்த க்ஷீராப்திநாதனே ஹிமவானிலே அர்ச்சாவதாரமாக இருக்கிறு னென்று அங்கே ப்ரணமம் பண்ணினார்களென்றும் அருளிச்செய்தாராய்; இப்பாட்டிலே, அர்ச்யஞைகயாலே, அர்ச்சநம் பண்ணுகிறார்களென்று ஸங்கதியை யுட்கொண்டு, "இனமலரெட்டு மிட்டு" என்றபதத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார், (புஷ்பாஞ்சலியித்யாதி). (ஆயிற்று) என்றவநந்தரம், "அத்தையருளிச்செய்கிறார்" என்றுசேஷம்.

காரை-மேகத்தைக், கொள்ளாநின்றுள்ள வேங்கைகளையுடைத்தான கனவரையைத்தழுவின, கறியுண்டு-மிளகு, அதினுடையவளர்கொடியாலே துன்னியிருக்கிறதாயென்றும்; கார்-கருமையை யுடைத்தான, வேங்கைகளென்று மருளிச்செய்கிறார், (காரென்றித்யாதி). புனமென்று-கொல்லையாய், அவ்விடத்திய வரைகளைத்தழுவின வேங்கைப்புலிகளையுடைத்தான இமயமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (வெளிநிலங்களிலித்யாதி). (இதுவாயிற்று) நித்ய வஸந்தமாய், பூத்தேயிருக்கும்படியாயிற்றென்றபடி.

ஏர் - அழகைக், கொள்ளாநிற்கிற, பூஞ்சுனை யென்றருளிச்செய்கிறார், (தர்சநீயேத்யாதி). இனமலர்போலே போக்யமான திருவஷ்டாக்ஷரத்தையும்

§ குண்டலிதம் க்வாசித்கம்.

மூ.— இரவுகூர்ந்திருள்பெருகிய வரைமுழை
இரும்பசியது கூர
அரவ மாவிக்கு மகன் பொழில் தழுவிய
வருவரை யிமயத்து
பரமனுதி யெம்பனிமுகில் வண்ணனென்
றெண்ணி நின்றிமை யோர்கள்
பிரமனேடு சென்றடிதொழும் பெருந்தகைப்
பிரிதி சென்றடை நெஞ்சே (அ)

களான புஷ்பங்கள் எட்டு மிட்டு) செங்கழுநீர், செண்பகம், இருவாட்சி, பாதிரி, புன்னை, குறுக்கத்தி, கருமுகை, தாமரை என்றுற்போலே ப்ரதாநமா யிருப்பன எட்டுமாதல்; அஷ்டாங்கப்ரணமத்தைச் சொல்லிற்றுதல், அத்தைமலரென்னும்படி யென்னென்னில்; பூவோபாதி அவனுக்கு ஸ்ப்ருஹா விஷயமாயிருக்கு மாகிலாமிறே, (க) "சொன்மாலை" என்னுமாபோலே. † அன்றிக்கே, கீழிற்றிருமொழியிலே திருமந்த்ரம் ப்ரஸ்துதமாகையாலே திருவஷ்டாக்ஷரத்தைச்சொல்லிற்றுதல். (இமையோர்களித்யாதி) ப்ரஹ்மாதிகளானவர்கள் திருநாமங்களை அடைவுகெடச்சொல்லி ஆஶ்ரயியாநின்றுள்ள பிரிதிசென்றடைநெஞ்சே! கீழ் திருமந்த்ரமானபோது, (பெயர்களாயிரம்) என்னும்படி எங்ஙனே யென்னில்; (உ) "பேராயிரங்கொண்டதோர் பீடுடையன்" என்று, (உ) "நாராயணன்" என்றதிறே; இத்தால் நிரூபிதவஸ்துவுக்கு விசேஷணங்களாயிறே அல்லாதவை யிருப்பது, † தர்மிக்கு நிரூபகமிதிறே. † மலைத்தாழ்வரைகளடங்க மிளகுகொடிகளாலே நெருங்கிக்கிடக்கும், வெளிநிலத்தில் சிறுமலைகளடங்கலும் பாதகவர்க்கங்கள் நெருங்கிக்கிடக்கும், உள்ளெல்லாம் நாட்டுக்கு ஆஶ்ரயணீயராயிருக்கிறவர்களுடைய ஸ்தோத்ர கோஷத்தாலே நெருங்கிக்கிடக்கும். ... ... (எ)

கொண்டென்று மூன்றும் தாத்பர்யமருளிச்செய்கிறார்,(அன்றிக்கேயித்யாதி). திருமந்த்ரம் நிரூபகமாயிருக்குமோவென்ன; அருளிச்செய்கிறார், (தர்மிக்கித்யாதி). ஸாஷ்டாங்கப்ரணமமாகவும் திருவஷ்டாக்ஷரமாகவும் சொன்ன விரண்டுயோஜனைகளிலும், கீழ்ப்பாட்டிலே தூளீதர்சநம் போலே ப்ராதமிக ப்ரணமமாய், இப்பாட்டிலே ஸமந்த்ரகமாகவும் ஸப்ரகாரமாகவு மாஶ்ரயித்தார்களென்று ஸங்கதிகண்டுகொள்வது. இப்பாட்டி லிப்படிவர்ணித்தவர்க்குத்தாத்பர்யத்தையருளிச்செய்கிறார், (மலையித்யாதி). இத்தால், பாரதந்த்ர்யத்தாலே ஸ்த்ரீப்ராயரான ப்ரபந்நஜநங்களெங்கும் வ்யாபித்தார்களென்

(க) க - திரு - க. (உ) தி - வாய் - க - ரு - க.

பதம்.	உரை.	பதம்,	உரை.
இரவு	ராத்ரியே	எம்	எங்களுக்கு
கூர்ந்து	விஞ்சியிருப்பதாய்	பணி	குளிர்ந்திருந்துள்ள
இருள் பெருகிய	இருளேயாயிருக்கிற	முகில்	மேகம்போன்ற [னே
வரைமுழை	மலைமுழைஞ்சுகளி	வண்ணன்	வடிவையுடையவ
இரும்பசியது	பெரியபசியானது[லே	என்று எண்ணி	என்று இப்படி சொல்
கூர	மிக,	நின்று	லாநின்றுகொண்டு
அரவம்	மலைப்பாம்புகள்	இமையோர்கள்	தேவர்களானவர்கள்
ஆவிக்கும்	கொட்டாவி விடாநி	பிரமனோடு	ப்ரஹ்மாவுடன்கூட
	ன்றுள்ள	சென்று	போய்
அகன் பொழில்	உட்சோலையோடு	அடிதொழும்	ஆஸ்ரயிக்கத்தக்க
தழுவிய	கூடியதாய்	பெரும்தகை	மிகுந்த பெருமையை
அரு	எறவரிதான [ய		யுடைய
வரை	தாழ்வரையையுடை	பிரிதி	திருப்பிரிதியிலே
இமயத்து	ஹிமவானிலே,	சென்று	போய்
பரமன்	ஸர்வாதிகனே!	நெஞ்சே	மநஸ்ஸே!
ஆதி	ஜகத்காரணபூதனே!	அடை	கிட்டப்பாராய். (அ)

வ்யா.—எட்டாம் பாட்டு. (இரவித்யாதி). † சோலைச் செறிவாலே பகற்போது காணவொண்ணாமையாலே ராத்ரியே விஞ்சியிருக்கும். † பகல் † விரவாத ராத்ரியாயிருக்கும். † ஹேது மாறாமையாலே கார்யமும் மாறாதிறே. †ஆதித்ய கிரணங்கள் புகுந்து பரம்பாது பகலாயே யிருக்கிற † அதுவும். (இருள் பெருகிய வரைமுழை) இருளேயாயிருக்கிற மலைமுழைஞ்சுகளிலே. †வயிரம் பற்றினவிருளேயாயிருக்கை. † நெடுநாள் ராஜ்யம் பண்ணினாைப்போலே †அடிப்பட்டிருக்குமாயிற்று இருளும். ஆக, ராத்ரியாய் அத்தாலே இருள்

றும், விரோதிஜநங்க ளடங்கநின்றார்களென்றும், தர்மாநிகள் வந்து ஆஸ்ரயிப்பர்களென்றும் கருத்தநுஸந்தித்ததாயிற்று. ... ... (எ)

அரு.—எட்டாம்பாட்டு.—(இரவித்யாதி). கீழ்ப்பாட்டுக்களிலே "வானவர்" என்றும் "அமரர்கள்" என்றும், "இமையோர்கள்" என்றும் ஸாமாந்யேந வருளிச்செய்தத்தை,இப்பாட்டிலே, "பிரமனோடு" என்று விசேஷிக்கிறாரென்று ஸங்கதி யுட்கொண்டு வாக்ய தாத்பர்யமருளிச்செய்கிறார், (சோலையித்யாதி). ராத்ரியே விஞ்சியிருக்கையை உபபாதிக்கிறார், (பகலித்யாதி). (விரவாத)-கூடாத. (ஹேது) என்றது சோலைச்செறிவென்கை. ஆனால் பகல் தானில்லையோவென்ன; அருளிச்செய்கிறார், (ஆதித்யேத்யாதி). (பகலாயேயிருக்கிறவதிலேயும் ஆதித்ய கிரணங்கள் புகுந்து பரம்பாது) என்று அந்வயிப்பது. (அதுவும்) என்றது - அத்தையுமென்றபடி, "பெருகிய" என்ற பதவாஸநையாலே யருளிச்செய்கிறார், (வயிரமித்யாதி). இத்தை த்ருஷ்டாந்த பூர்வகம் விவரிக்கிறார், (நெடுநாளித்யாதி). (அடிப்பட்டிருக்கை) வேர்

மிக்கிருந்துள்ள மலைமுழைஞ்சுகளிலே. (இரும்பசியது கூர) வெளி கண்டு புறப்பட்டு வ்யாபரிக்கப் பெருமையாலே பெரிய பசியானது மிக. † நித்யஸூரிகள் அந்நபாநாதிகளொழியத் தரிக்குமதுவு முத்தேஶ்யமாய் அவர்கள் தாங்களு முத்தேஶ்யராயிருக்குமாபோலே, அந்தஸர்ப்பங்களினுடைய பசியும் திர்யக்ஜாதிக்கு மவ்வருகாயிருக்கிற ஸர்ப்பங்கள் தானு முத்தேஶ்யமாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. ஏதேனுமாக அந்நிலத்திலுள்ள தாமித்தனையே வேண்டுவது இவர்க்கு ஆதரிக்க. (அரவமாவிக்கும்) ஆவிக்கையாவது-பசியாலே கொட்டாவி கொள்ளுகையாகவுமாம். அன்றிக்கே, ப்ராணிக்கையாய்-மூச்சுவிடுகையாய், அதாவது - சோலையின் பரிமளத்தோடே கூடின † காற்றை யாஶ்வஸித்துத் தரியாநிற்கும். வாயுவை யிறே அவை பக்ஷிப்பது. † முக்தர் † ஸத்யகாமாதிகளையுடையராயிருக்குமாபோலே அங்குத்தை ஸர்ப்பங்கள் ஸஞ்சாரயோக்யதையில்லாமையாலே கிடந்தவிடத்தே கிடந்து மணத்தை ஆக்ராணம் பண்ணித் தரியாநிற்கும். அகன்பொழிலுண்டு - அகவாயில் பொழில் - உட்சோலை, அது அணைந்திருந்துள்ள அருவரையிமயத்து.

(பரமனித்யாதி) † ஸர்வஸமாஶ்ரயணீயன் வந்து வர்த்திக்கிற தேசமாகையாலே நமக்கு ஆஶ்ரயணீயஸ்த்தலமான பின்பு, நெஞ்சே! அங்கேசென்று கிட்டப்பாரா யென்கிறார். ஸர்ப்பங்களோடு ப்ரஹ்மாதிகளோடு வாசியற எல்லார்க்கு மாஶ்ரயணீயமான தேசமாயிற்று. (பரமனித்யாதி) † ஆஶ்ரயிக்கிற ப்ரஹ்மாதிகளுடைய பாசுரமிருக்கும்படி. † ஸர்வாதிகனாய், ‡ தனக்கு அவ்வருகொருவருமில்லாதபடி யிருக்கிற, † ஸர்வேஶ்வரன்; † ஸர்வாதிகனு

பாய்ந்திருக்கை, ஊர்ஜிதமாயிருக்கையென்றபடி. பகவத்ப்ரவணரான விவர்க்ஷூத்ர ஜந்துக்களிருக்கும்படியை வர்ணிக்கை சேருமோவென்ன; அருளிச்செய்கிறார், (நித்யஸூரிகளித்யாதி வாக்யத்வயத்தாலே). (காற்றை) என்றவநந்தரம், "பக்ஷித்து" என்று சேஷம். (முக்தர்) என்றவநந்தரம், "இருந்தவிடத்தேயிருந்து" என்றுசேஷம். (ஸத்யகாமாதிகளை) என்றவநந்தரம், "அநுபாவ்யங்களாக" என்று சேஷம்.

பூர்வார்த்தத்தைக் கடாக்ஷித்து, உத்தரார்த்தத்துக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (ஸர்வேத்யாதி வாக்யத்வயத்தாலே). "ஈஶ்வரோஹம்" என்றிருக்கிறவர்கள் இப்படி சொன்னார்களென்று ஈடுபாடுதோற்றவருளிச்செய்கிறார், (ஆஶ்ரயிக்கிற வித்யாதி). "பரமன்" என்றதினர்த்தம், (ஸர்வாதிகனாய்) என்றது. பரோமாயஸ்மாதிதியோகார்த்தம், (தனக்கித்யாதி). இவ்விரண்டாலும் பலித்தது, (ஸர்வேஶ்வரன்) என்றது. (ஸர்வாதிகனுகிலும்)

மூ.— ஓதி யாயிர நாமங்க ளுணர்ந்தவர்க்
குறு துய ரடையாமல்
ஏத மின்றி நின் றருளும் நம் பெருந்தகை
யிருந்த நல்லிமயத்துத்
தாது மல்கிய பிண்டி விண் டலர்கின்ற
தழல்புரை யெழில்நோக்கிப்
பேதை வண்டுக ளெரியென வெருவரு
பிரிதிசென் றடை நெஞ்சே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆயிரநாமங்கள்	(தன்னுடைய) ஆயிரந்திருநாமங்களையும்	உணர்ந்தவர்க்கு	(அவனே ரக்ஷகனென்னும்) ஜ்ஞாநம்பிறந்தவர்க்கு,
ஓதி	சொல்லி, (அத்தாலே)	உறு	வரக்கடவதான்

கிலும் † பெற்றதாயால் விடவொண்ணுதாப்போலே விடவொண்ணுதபடியான ப்ராப்தியையுடையவன்; விஷயங்களை விரும்புகிறது ஒரு ப்ராப்திகொண்டன்றிறே, கீழ்ச்சொன்னவை யிரண்டுமில்லையாகிலும் விடவொண்ணுதபடி ஶ்ரமஹரமான வடிவையுடையவன். ஆக, ஸர்வாதிகன், ஜகத்காரணபூதன், தர்சநீயமான வடிவையுடையவன். (என்றெண்ணி யித்யாதி) இப்படி சொல்லாநின்றுகொண்டு, தேவர்கள் தங்களுக்குக் † கண்காட்டியான ப்ரஹ்மாவோடே சென்றுஶ்ரயிக்கும்படி † மஹாப்ரபாவமான பிரிதி சென்றடை நெஞ்சே! † சிறியார் பெரியாரென்று வாசியின்றிக்கே எல்லார்க்கும் உத்தேஶ்யமானதேசம். சிறியார்க்கு வாசியுண்டு;- ஸர்ப்பங்கள் கிடந்தவிடத்தே கிடந்து அபிமதம் பெற்று புஜியாநிற்கும்; ப்ரஹ்மாதிகள் தங்களதிகாரார்த்தமாக ஆஶ்ரயித்துத்தட்டித்திரிவர்கள். புறம்படைய சோலைச் செறிவாலே வந்த விருட்சிமிக்கிருக்குமாபோலே, உள்ளடைய ஆஶ்ரயிக்கிற தேவதைகளுடைய நெருக்கு மிக்கிருக்கும்; ஆனபின்பு நீயுமத்தேசத்தை யாஶ்ரயிக்கப்பாராயென்கிறுர். இத்தால், அங்குண்டான ஸர்ப்பங்கள் அச்சோலையில் பரிமளத்தைக் காற்றுவழியாலே பருகித் தரியாநிற்கும்; ப்ரஹ்மாதிகளானவர்கள் (க) "ஸர்வகந்த:" ஸர்வகந்த:" என்கிற வஸ்துவை அநுபவித்துத் தரிப்பர்கள். ... ... (அ)

என்ற வநந்தரம், அல்லறுகிலும் என்று கூட்டுவது. (பெற்றதாயால்) என்றது பெற்றதாயாகையாலே யென்றபடி. (கண்காட்டி) - நிர்வாஹகன். * பெருந்தகையினர்த்தம், (மஹாப்ரபாவமான) என்றது. "சென்றடை" என்று தாம் நியமிக்கைக்குக் கீழ்ச்சொன்னதெல்லாம் ஹேதுவென்னுமது தோற்ற உட்கருத்துக்களை யருளிச்செய்கிறுர், (சிறியாரித்யாதி). ... ... (அ)

(க) சாந்தோ-ரு-கச-உ.

துயர்	பாபங்கள்	பிண்டி	அசோகபுஷ்பங்கள்
அடையாமல்	(அவர்களைக்) கிட்டாதபடியாகவும்	விண்டு	விரிந்து
ஏதம்இன்றி	(தன்னை ஆஶ்ரயிப்பார்க்கு) ஒருவருத்தமும் வாராதபடியாகவும்	அலர்கின்ற	அலருகிற
		தழல்புரை	நெருப்புப்போன்ற
		எழில்	அழகை
		பேதை	அறிவில்லாத
		வண்டுகள்	வண்டுகளானவை
நின்றருளும்	எழுந்தருளியிருக்கிற	நோக்கி	பார்த்து (அவற்றை)
நம்	நம்ஸ்வாமியான	எரியென	நெருப்பென்றுநினை
பெருந்தகை	மஹாப்ரபாவன்	வெருவரு	பயப்படுகிற [த்து
இருந்த	வந்துவர்த்திக்கிற	பிரிதி	திருப்பிரிதியிலே
நல்	விலக்ஷணமான	சென்று	போய்
இமயத்து	ஹிமவானிலே,	நெஞ்சே	மநஸ்ஸே!
தாது	தாதுகள்	அடை	கிட்டப்பாராய். (கூ)
மல்கிய	மிக்கிருந்துள்ள		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு.—(ஓதியாயிர நாமங்க ளுணர்ந்தவர்க்கு) † ஆயிரம் திருநாமங்களையும் வாயாலே சொல்லி அவற்றினுடைய அர்த்தாநுஸந்தாநம் பண்ணு கின்றுள்ளவர்களுக்கு. † ஒரு திருநாமத்தைச் சொல்லி, அவ்வளவில் பர்யவஸிக்கமாட்டாதே ஆயிரம் திருநாமங்களையு மடைவுபடச் சொல்லி, அந்நாமத்வாரா நாமியானவனை மநநம்பண்ணுகின்றுள்ளவர்களுக்கு. (உறுதுய ரடையாமல்) † உறக்கடவதாய் நிற்கிற பாபங்கள் ப(ஂ)லாநுபவத்துக்கு இவனைத் துடராதபடியாக. (க) "𑌅𑌵𑌶𑍍𑌯𑌮𑌨𑍁𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂-அவஶ்ய மநுபோக்தவ்யம்" என்றும், (க) "𑌨𑌾𑌭𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑍍𑌷𑍀𑌯𑌤𑍇-நாபுக்தம் க்ஷீயதே" என்றும், சொல்லுகிறபடியே அநுபவித்தாலல்லது நசியாத பாபங்கள் ப(ஂ)லாநுபவத்துக்கு வந்து கிட்டாதபடியாக. †ஒரு பிசாசம் சவங்

அரு.—ஒன்பதாம்பாட்டு.—(ஓதியித்யாதி). கீழ்ப்பாட்டிலே, ஸர்வஸமாஶ்ரயணீயஸ்த்தலமாகையாலே சென்றடை என்னு நின்றீர், நமக்குக் கிட்டவொட்டாத பாபங்களிருக்க எங்ஙனே சென்றடைகிறதென்றும், ஸர்வாதிகனை நம் அயோக்யதை பாராதே கிட்டத்தான் கூடுமோவென்றும் திருவுள்ளத்துக்குக் கருத்தாக இப்பாட்டருளிச்செய்கிறார் என்று ஸங்கதியையுள்ளேவைத்துக்கொண்டு, வாக்யார்த்த மருளிச்செய்கிறார், (ஆயிரமித்யாதி). திருமந்த்ரம் போராதோ, ஆயிரநாமம் சொல்லவேணுமோ வென்ன; அருளிச்செய்கிறார், (ஒரு திருநாமத்தை யித்யாதி). "உறுதுயர்" என்றத்தால் அநுபவ விநாஶ்யமான பாபங்களென்றருளிச்செய்கிறார், (உறக்கடவதாயித்யாதி). திருநாமம் சொன்னவர்களுக்கு உறுதுயரடையாமல் போனவிடத்துத்துக்கு ஐதிஹ்ய மருளிச்செய்கிறார், (ஒரு பிசாசமித்யாதி). (பிசாசம்) கண்டா

(க)

களை பக்ஷியாநிற்க நடுவு வா யொழிந்த வளவிலே (க) "𑌨𑌰𑌕𑌾𑌰𑍇 𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 𑌪𑌰𑌾𑌯𑌣-நரகாரே ஜகந்நாத நாராயண பராயண" என்று சொல்ல; (உ) "𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌖𑍍𑌯𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍-ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந்" என்று ஸ்வாநுபவம் பண்ணி அந்யபரதை யற்றிருக்கிற வளவிலே, இத்தைக் கேட்டு (ந) "𑌕𑌸𑍍𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌃 𑌕𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 கஸ்ய முக்தி: கரேஸ்த்திதா" என்று நம்பேரைச் சொல்லி நம்மை யெழுதிக்கொண்டவனார்தான்? என்றானிறே. ஏதமென்று - து:க்கமாய் வருத்தத்தை நினைக்கிறது. † இத்திருநாமத்தைச் சொன்னால் இத்தை யுடையவன் செவிப்படும்படி அண்ணியனாய் நிற்கை ஆஶ்ரயிப்பார்க்கு வருத்தமின்றிக்கே யொழிகைக் குடலாயிருக்குமிறே; இவர்களுக்கு வருத்தமில்லாதபடி யிருக்கும். (உறுதுயரித்யாதி) (ச) † "வாக்குத்தூய்மையிலாமையினாலே மாதவா உன்னை வாய்க் கொள்ளமாட்டேன்" என்று அசித்ஸம்ஸர்க்கத்தை யநுஸந்தித்து "நாமங்குத்தைக்கு யோக்யராய்ப் பரிமாறுகையாவதென்?" என்று, தன் அயோக்யதையை யநுஸந்திக்கைக்கு அவகாசமில்லாதபடி ஆஶ்ரயணீயனை தான் ஸந்நிஹிதனாகையாலே ஆஶ்ரயிப்பார்க்கு ஒரு வருத்தமும் வாராதபடி யிருக்கிற மஹாப்ரபாவன் வந்து வர்த்திக்கிற விலக்ஷணமான ஹிமவானில்.

(தாதித்யாதி) தாது மிக்கிருந்துள்ள அசோக புஷ்பமானது விட்டலருகிற போதை அக்நிகல்பமான எழிலைப்பார்த்து. (பேதை வண்டுகள்) § (அசோகபுஷ்பங்களை) நித்யாநுபவம் பண்ணாநிற்கச்செய்தேயும் நித்யமாக ப்ரமிக்கவல்ல மௌக்த்யத்தையுடைய வண்டுகளாயிற்று. † தானும் நித்யவாஸம் பண்ணாநிற்கச் செய்தே, அதுவும் நாள்தோறு மலரா நிற்கச்செய்தே, எப்போது மொக்க "இது நெருப்பு, நெருப்பு" என்று ப்ரமிக்கும்படியாயிருக்கும். † முன்னாள் "இது அக்நி" என்று சங்கித்து விசாரித்து, "அன்று" என்று நிர்ணயித்துப் பிற்றை நாள் "அதன்று" என்றிருக்க மாட்டாதே, "நெருப்பு" என்றஞ்சி யிராநிற்கும்; அதுக்கடி † பய நிவ்

கர்ணன். இவன் ருத்ரன் பக்கலில் நின்றும்போய் குபேரன் பக்கலிலே திருநாமங்களை உபதேசித்துக்கொண்டானென்று ப்ரஸித்தி. ஏதம்-து:கமானால், அத்தையிட்டு வருத்தத்தைச் சொன்னதுக்கு ப்ரயோஜநமென்னென்ன; அருளிச்செய்கிறார், (இத்திருநாமத்தை யித்யாதி). உறுதுயர் அயோக்யதாநுஸந்தாநமென்று தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார், (வாக்குத்தூய்மை இத்யாதி).

"வெருவரு," வெருவாநிற்கும் என்ற வர்த்தமாந பலிதார்த்தம், (தானுமித்யாதி) கீழ்வாக்ய விவரணம், (முன்னாளித்யாதி). (பயநிவ்ருத்தியும் நித்ய

(க)
(உ)
(ந)
(ச) பெரி-திரு-ங-க-க.
§ குண்டலிதம் க்வாசித்கம்.

ருத்தியும் நித்யமாய், பயமும் நித்யமாயிருக்கையாலே.

இதுக்கு த்ருஷ்டாந்தமாகத் திருவெள்ளறைத் திருமொழியிலே ஒருபாட்டருளிச்செய்வர்-(க) [ஆங்கு மாவலிவேள்வியில்-சென்று-இரந்து] மஹாபலியினுடைய யஜ்ஞ வாடத்திலே தன்னை யர்த்தியாக்கிச்சென்று. [அகலித்யாதி] பூமிப்பரப்படைய வாங்குகிறவன்று, † அவனை எதிரிட்டுக்கொண்டு வாங்குகை யன்றிக்கே அவனேறிட்டுக் கொண்டிருக்கிற ஔதார்யத்துக்கு அநுரூபமாக வாங்கினான்; ராவணாதிகளைப்போலே தலையறுக்கவேண்டிற்றில்லை ஔதார்யமென்றொரு குணலேசம் கிடக்கையாலே; "இவன் கொடுக்க உகந்திருந்தான்" என்று தன்னை இரப்பாளனாக்கி † அவனோடிசையக் கொண்டான். † தன்னதான பூமியையிறே அவன் தந்தானாகக் கொண்டது. † ஆக, நம்முடைய ஆத்மஸமர்ப்பணம்போலேயிருப்பதொன்றிறே அவனுடைய தாநமும். (௨) [𑌅𑌥𑌵𑌾 𑌕𑌿𑌨𑍍𑌨𑍁 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿 - அதவா கிந்நுஸமர்ப்பயாமி] அநந்தரம் அநுசயிக்க வேண்டும்படியிறே இதுதானிருப்பது. † விழுக்காட்டில் ஆத்மஸமர்ப்பணத்தோடு ஆத்மாபஹாரத்தோடு வாசியற்றிறேயிருப்பது; † ஆகையிறே உபாயநைரபேக்ஷ்யம் சொல்லுகிறது. [பரம நிற்பணிந்தெழுவேனெனக்கருள் புரியே.] ஸர்வாதிகனே! உன்னை வணங்கி யுஜ்ஜீவிக்கிற வெனக்கு ப்ரஸாதத்தைப் பண்ணியருளவேணும். † ஆஶ்ரயணத்

மாய்) என்றது-மதுவைப் பாநம் பண்ணுகையாலே பூவென்று நினைவுண்டாகா நிற்கச்செய்தேயுமென்றபடி.

"பாங்கினால் கொண்ட" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (அவனையித்யாதி வாக்யத்ரயத்தாலே). (அவனோடிசையக் கொண்டான்) என்றது-அவன் கொடுக்கிறவனும் தான் வாங்குகிறவனுமாயிருந்து கொண்டானென்றபடி. இதுக்கு ஜ்ஞாபகமென்னென்ன; அருளிச்செய்கிறார், (தன்னதானவித்யாதி). ப்ரஸங்காத் ஸ்வரூபசிக்ஷை பண்ணுகிறார், (ஆக) என்று துடங்கி, (நைரபேக்ஷ்யம் சொல்லுகிறது) என்னுமளவும், அநுசயிக்கும்படி இது குற்றமோவென்ன; அருளிச்செய்கிறார், (விழுக்காட்டிலித்யாதி). அவனதான வஸ்துவைத் தன்னதென்று அபிமாநித்தது ஸ்வரூபவிருத்தமானாற்போலே, அவன் வஸ்துவை அவனுக்குக் கொடுத்தேனென்றிருக்கையும் ஸ்வரூபத்துக்குச் சேராதென்றபடி. (ஆகையிறே) என்றது-ஆத்மாபஹார துல்யமாகையாலேயிறேயென்றபடி. துல்யமன்றாகில் அதுவுமொரு ஸாதநமாகக் கூடுகையாலே, வைஷம்ய நைர்க்ருண்ய பரிஹாரார்த்தமாக அபேக்ஷித்திருக்குமீஶ்வரனுக்கு, * ஏகசப்தத்தில் சொல்லுகிற ஸாதநாந்தரநைரபேக்ஷ்யம் ஜீவியாதென்று கருத்து. வணங்கினாலருளவேணுமென்கிற நிர்ப்பந்தமென்னென்ன; அருளிச்செய்கிறார், (ஆஶ்ரயணத்துக்கித்யாதி). "ஓங்கு பிண்டி

(க) ரு-ங-கூ. (௨) ஸ்தோ-ர-ருங.

துக்கு ப(ஃ)லவ்யாப்தி யுண்டிறே. [ஓங்கித்யாதி] ஆகாசமிட மறும்படி வளர்ந்து பரப்பு மாறப்பூத்த அசோகத்தினுடைய சிவந்த பூக்களிலே மதுபாநார்த்தமாக வண்டுகள் ஸஞ்சரிக்க, தர்சநீயமான குயில்களானவை “இவை நெருப்பிலே புக்கன” என்றே நிஸ்சயித்து, அது தன்னைத்தட்டாதபடி மாவிலேபோயேறிக் கூப்பிடாநிற்கு மாயிற்று. சிவந்தபூப் பூவாத மாத்தேடி யேறுகின்று. [மிழற்றும்] எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி கூப்பிடாநிற்கும். † இவற்றினுடைய தயநீய தசையைக்கண்டு இன்னதென்று பாசுரமிட்டுச் சொல்லமாட்டாதே கடக்க நின்று, “தர்மஹாநிகிடிகோள்!” என்பாரைப்போலே அவ்யக்தமாகக் கூப்பிடாநிற்கும். (படப்பை) இதாயிற்று ஊரில் கொடித்தோட்டங்களிருக்கும்படி.

இத்தால், அவனுடைய ஸர்வாதிகத்வத்தையும், அவனை யநுபவிப்பதாகச் சொல்லுகிற தங்களுடைய ஸம்ஸாரித்வத்தையு மநுஸந்தித்து “நாம்சென்று கிட்டுகை யாவதென்!” என்று துணுக்குத் துணுக்கென்னா நிற்பர்கள் † ப்ரஹ்மாதிகள்; இவ்வண்டுகளானவை புஷ்பஸாமாந்யத்தைக்கொண்டு மதுபாநார்த்த மாக மேல்விழாநிற்பது, அக்நியென்று கிட்டமாட்டாதே இருய்த்து வெருவுவதாகாநிற்குமாயிற்று. † அன்றிக்கே, ஆஸ்ரயிப்பார்க்கு, (க) “ [illegible] -“அதஸோ பயம் கதோபவதி” என்னு மிதுவு முண்டாய், † § போக்யதையால் வந்த பயம் என்று முண்டாயிருக்குமென்னுதல் - † ஆஸ்ரயணீயவஸ்து ஸுலபமாகையாலே ஆஸ்ரயிப்பார்க்குத் தந்தாமுடைய அநுபவ விநாஸ்யமான பாபங்களை யநுஸந்

யின் செம்மலரேறி வண்டுழிதர மாவேறித்தீங்குயில் மிழற்றும்” என்ற ஸமபிவ்யாஹாரத்தாலே பலித்ததாத்பர்யத்தை யருளிச்செய்கிறார், (இவற்றினுடைய வித்யாதி).

ப்ராஸங்கிகமான பாட்டுக்கு வ்யாக்யாநம் செய்தருளி, இப்பாட்டிலே “உறுதுயர்” என்றதுக்கு அயோக்யதாநுஸந்தாநமாகத் தாத்பர்யம் சொன்ன பக்ஷத்துக்கநுகுணமாக, இப்பாட்டுக்கு ஹார்த்தபாவ மருளிச்செய்கிறார்,(இத்தாலித்யாதி வாக்யத்வயத்தாலே). (ப்ரஹ்மாதிகள்) என்றது - “பிரமனோடு” என்று கீழ்ப்பாட்டில் ப்ரஸ்துதரை, இப்பாட்டில், “ஓதியாயிர நாமங்களுணர்ந்தவர்” என்றது என்று திருவுள்ளம். “உறுதுயர்” என்றது பாபங்களான பக்ஷத்திலே, பாட்டுக்குக் கருத்தருளிச்செய்கிறார், (அன்றிக்கே யித்யாதி). (போக்யதையால் வந்த பயம்) என்றது-அநுபவிக்கமாட்டாமையால் வந்த பயமென்றபடி. பாட்டுக்கெல்லாம் தொகுத்த பாவத்தை யருளிச்செய்து தலைக்கட்டுகிறார், (ஆஸ்ரயணீயவஸ்துவித்யாதி). அவனைக் கண்டால்

(க) தை-ஆந-எ-உ.

§ போக்யதையால் வந்தபயம்-போக்யதையால் அஸ்த்தாநேசங்கிக்கை.

மூ.—கரிய மாமுகில் படலங்கள் கிடந்தவை
முழங்கிடக் களிறென்று
பெரிய மாசுணம் வரையெனப் பெயர்தரு
பிரிதி யெம் பெருமானை,
வரிகொள் வண்டறை பைம்பொழில் மங்கையர்
கலியன தொலிமாலை
அரிய வின்னிசை பாடு நல் லடியவர்க்
கருவினை யடையாவே. (க0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
கரிய	கறுத்த
மாமுகில்	மஹாமேகங்களின்
படலங்கள் அவை	கூட்டங்களானவை
கிடந்து	ஓரிடத்திலேயிருந்து
முழங்கிட	த்வநிக்க (அந்தத்வநியைக்கேட்டு)
பெரிய	பெருத்த
மாசுணம்	மலைப்பாம்புகள்
களிறுஎன்று	(தங்களுக்கு இரையான)யானைகள் (வருகிறன)என்று நினைத்து
வரையென	மலைபோலே [யான
பெயர்தரு	அசைந்து வரும்படி
பிரிதி	திருப்பிரிதியில் நித்யவாஸம்பண்ணுகிற
எம்பெருமானை	ஸர்வேஸ்வரன் விஷயமாக,
வரிகொள்	வரியையுடைய

பதம்.	உரை.
வண்டு	வண்டுகளானவை
அறை	த்வநியாநின்றுள்ள
பை	பரந்த [தான
பொழில்	சோலையையுடைத்
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு நியாமகரான
கலியனது	ஆழ்வாருடைய
ஒலி	ஒலியுடைத்தாய்ப் அருளிச்செய்த
மாலை	தொடையாய்
அரிய	ஒருவர்க்குமறிய வொண்ணாததாய்
இன்	மதுரமாய்
இசை	இசையையுடைய பாட்டுக்களை [ய்
பாடும்	அப்யஸிக்கிறவர்களா
நல்	விலக்ஷணரான
அடியவர்க்கு	பாகவதர்களை
அருவினை	மஹாபாபங்கள்
அடையா	கிட்டமாட்டா. (க0)

த்து பயப்படவும் வேண்டா; அசோக புஷ்பத்தை அக்நியாகக் கொண்டு வண்டுகளஞ்சுகிற அச்சம் நித்யமாய்ச்செல்லா நிற்கும். ()

வ்யா.—பத்தாம்பாட்டு. — (கரியவித்யாதி) கழுத்தே கட்டளையாக நீரைப்பருகுகையாலே கறுத்த நிறத்தையுடைத்தான மஹா

தங்கள் வினைகளஞ்சவேண்டா, அங்குத்தை ஸுமநஸ்ஸுக்களுடைய ராக விசேஷத்தைக்கண்டால் தங்களுக்குதில்லாமையாலே சென்றணுகவஞ்சும்படியாயிருக்குமென்றதாயிற்று. ... ... (க)

மேகங்களுடைய ஸமூஹங்களானவை, முகந்த நீர்க்கனத்தாலே பேர்ந்துபோகமாட்டாதே கிடந்தவிடத்தேகிடந்து முழங்க. †நீர்குறையும்படி வர்ஷித்து வெளுத்தது மன்றிக்கே கறுத்து, அதுதான் மேகசகலமுமாயிருக்கையன்றிக்கே மாமுகிலாய், அவைதான் ஒன்றிரண்டன்றிக்கே ஸமூஹங்களுமானவை, முகந்த நீர்க்கனத்தாலே கால்வாங்கிப்போகமாட்டாதே வாயுவாலும் ப்ரேரிக்கவொண்ணாதபடி கனத்து அவை கிடந்தவிடத்தே கிடந்து, கர்ப்பகேத(நீக)த்தாலே முக்குவாரைப்போலே முழங்குமாயிற்று. (களிறென்று) நிறத்தினுடையவும் அதிருகிறத்வநியினுடையவும் ஸர்வதா ஸாம்யத்தாலே யானையென்று. (பெரிய மாசுணம்) பெரிய வடிவையுடைத்தாயிருக்கிற மலைப்பாம்புகளானவை. ஆனையைவிழுங்கும்படியாயிற்றுபெருமை யிருப்பது. (வரையெனப்பெயர்தரு) அம்மலைப்பாம்புகளானவை அவற்றுக்கஞ்சி மலைபோலே பேர்ந்து போய் புற்றிலே † புகாநிற்குமென்று; (க) "காருடைய மின்னென்று புற்றடையும்" என்றும், (உ) "பரந்ததலையுடையநாகம் வாரணத்தை யஞ்சியொளிக்கும்", என்கிறப்ரஸித்தியாலும், இப்படி "புற்றிலே யடையும்" என்றருளிச்செய்வர் ஜீயர்: "இதுவோ இதுக்கருளிச்செய்யும்படி ?" என்று பிள்ளைகேட்டருள; "நீரிப்படி கேட்கும்போது ஒன்றை நினைத்தல்லது கேளீர், அத்தைச்சொல்லும்" என்ன; "பெயருகையாகிறது தான்போக்குவரத்து இரண்டுக்கும் ஸாதாரணமாயாயிற்றிருப்பது; இனித்தான் மலைக்குச் † சிறப்புச்சொல்லு மவர்கள் 'மலைப்பாம்புகள் ஆனையை விழுங்கும்' என்னக்கடவர்கள், ஆகையாலே, கரியமாமுகில் படலங்கள் கிடந்து முழங்குகிறவற்றைப் பெரிய மாசுணமானது ஆனையாகப் புத்திபண்ணி ஆமிஷார்த்தமாக மலை பேர்ந்தாற்போலே கால்வாங்கிவந்து கிட்டாநிற்குமாயிற்று என்றுமே" என்ன; "அதுவேயிறே பொருள்" என்று போரக்கொண்டாடியருளினார் என்றருளிச்செய்வர். ஆகையிறே, பெரியமாசுணமென்றது; - ஆனையைவிழுங்கும்படியாயிற்று இதினுடைய பெருமையிருப்பது.

(வரிகொளித்யாதி) வரியையுடைத்தாய் தர்சநீயமாயிருந்துள்ள வண்டுகளானவை மதுபாநம் பண்ணிக்களித்து த்வநியாநின்றுள்ள

அரு.—பத்தாம்பாட்டு.—(கரிய வித்யாதி). வ்யாவர்த்தகங்களைக் காட்டாநின்றுகொண்டு விவரிக்கிறார். (நீர்குறையும்படி யித்யாதி). (புகாநிற்குமென்று) என்ற வநந்தரம், "கூட்டுவது" என்றசேஷம். (சிறப்பு) - உத்கர்ஷம்.

(க) க - திரு - ௩௮. (உ)

பரந்த பொழிலையுடைத்தான திருமங்கையிலுள்ளார்க்கு நியாமகரான ஆழ்வார் ஒலியுடைத்தாம்படிசொன்ன தொடையாயிற்று. (அரிய இன்னிசை) "திருமங்கையாழ்வார் தம்திருவாயாலே அரியவின்னிசை என்பதே!" என்றருளிச்செய்வர். † ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் சிலரோடே பிணங்கி, கையில் தாளத்தைய பொகட்டு, "வாலிமாவலத்தை என்னோடே † இசைசொல்லிப்போ" என்றாராம். வாதுபாட்டாகப் பாடுமது என்று ப்ரஸித்தமிறே. † இயலிலுமிழியலாம், பொருளிலுமிழியலாம்; † இசையிலொருவர்க்கு மிழியவொண்ணாது. † அருமையால் நினைக்கிறது † பெருமையை; இனிமையால் நினைக்கிறது † சுவைப்பாட்டை. (அரிய) † அருமை பெருமைகளையும் சுவைப்பாட்டையுமுடைத்தாயிருக்கை. (நல்லடியவர்க்கு) இத்தைப் பாடுமவர்களாயிற்று, ஸர்வேஶ்வரனுக்கு அந்தரங்கராகிறார். (அருவினை) அவர்களைப் பாபங்கள் வந்து கிட்டாது. † ஸர்ப்பங்களானவை மேகங்களை ஆமிஷமாக புத்திபண்ணி மேல்விழுமாபோலே, இத்தை அப்யஸித்தவர்கள் பக்கலிலே ஸர்வேஶ்வரன் போக்யதாபுத்திபண்ணி அவர்களுடையவிரோதிகளைப்போக்கி விஷயீகரிக்க, அவனாலே விஷயீக்ருதராகப் பெறுவர்கள். † இப்பாசுரத்தைச்சொன்னவர்களை அச்சொல்வழியே ஸர்வேஶ்வரன் அவர்களையே எல்லாபோக்யமுமாக வந்துகிட்டும்; நடுவு பாபங்களுக்கு ஒதுங்க நிழலில்லாமையாலே யோடிப்போம்.()

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

இசையினுடைய அருமைக்கு ஒரு ஸம்வாத மருளிச்செய்கிறார், (ஆழ்வாரித்யாதி). (இயல்) சப்தம். (இசை) ராகம். அர்த்தாந்தரம் (அருமையாலித்யாதி). (பெருமை) அதிசயம். (சுவைப்பாட்டை) ரஸ்யதையை. இரண்டர்த்தத்தையும் தந்த்ரேண கூட்டி சப்தார்த்த மருளிச் செய்கிறார், (அருமையித்யாதி). பாட்டுக்கெல்லாம் தொகுத்த பாவம், (ஸர்ப்பங்களித்யாதி). ஸர்வேஶ்வரன் போக்குவானாகில் "வினையடையாவே" என்று இவற்றுக்குக் கர்த்ருத்வம் சொல்லுகைக்கு ப்ரயோஜநமென்னென்ன; அருளிச்செய்கிறார் (இப்பாசுரத்தை யித்யாதி). ... ... (ம)

ஜீயர் திருவடிகளே சரணம்.

முதற்பத்தில் இரண்டாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றும் திருமொழி - முற்றமூத்து.

மூ.—முற்ற மூத்துக் கோல் துணையா முன்னடி நோக்கிவளைந்து
இற்ற கால்போல் தள்ளி மெள்ள விருந்தங் கிளையாமுன்
பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலை யூடுயிரை
வற்ற வாங்கி யுண்ட வாயான் வதரி வணங்குதுமே. (௧)

பதம்.	உரை.
முற்றமூத்து	மிகவும்கிழத்தனத்தை யடைந்து
கோல்	ஒன்றுகோலை
துணையா	ஸஹாயமாகக்கொண்டு
முன்அடி	முன்னே இடவேண்டும் அடியை
வளைந்துநோக்கி	தலைகவிழ்ந்துபார்த்து
இற்றகால்போல்	முறிந்தகால்போலே
தள்ளி	தடுமாறி
அங்கு	ஓரிடத்தில்
மெள்ள	மந்தமாக
இருந்து	உட்கார்ந்து
இளையாமுன்	(இப்படி) இளைப்புவந்துமேலிடுவதற்கு முன்னே,
பெற்றதாய்போல்வந்த	பெற்றதாயின் வடிவுகொண்டுவந்த
பேய்ச்சி	பூதனையுடைய
பெருமுலையூடு	பெரியமுலைவழியே
உயிரை	(அவள்) ப்ராணனை
வற்ற	வறண்டுபோம்படி
வாங்கி	உறிஞ்சி
உண்ட	அமுதுசெய்த
வாயான்	திருப்பவளத்தை யுடையஸர்வேஶ்வரனெழுந்தருளியிருக்கிற
வதரி	ஸ்ரீபதரியை
வணங்குதும்	வணங்குவோம். (௧)

வ்யா.—தம் திருவுள்ளத்தைக்குறித்து "திருப்பிரிதியை ஆஶ்ரயி" என்று உபதேசித்தார்; அது தம்த்வரைக்கீடாக த்வரித்ததில்லை; கெடுவாய்! நாமிருக்கிறவிருப்பில் பொல்லாங்கு கண்டாயே, கடுக ஒருக்ஷணம் முற்பட்டதடலாக ஆஶ்ரயிக்கப்பாராயென்கிறார். †கீழே திருமந்த்ரத்தை அநுஸந்தித்தார்; அநந்தரம் மந்த்ரப்ரதிபாத்யமான வர்த்தத்தை அநுஸந்தித்தார்; மந்த்ரத்ரஷ்டாவானவனிருந்த தேசத்தை ஆஶ்ரயிப்போமென்கிறார். † திருமந்த்ரந்தன்னை அநுஸந்திப்பார்க்கு ப்ரதிபாத்யமானவஸ்துவோபாதி, ருஷிசந்தோ(ஃந்தோ) தேவதைகளென்ன, பீஜசக்திகளென்ன, சோஷணதாஹநாதிகளை

அநு.—முற்றமூத்து ப்ரவேசம.—கீழ்த்திருமொழியோடே யொரு ஸங்கதி யருளிச்செய்து, "வதரிவணங்குதுமே" என்றதைக் கடாக்ஷித்துக் கீழிரண்டு திருமொழிகளோடு ஸங்கதி யருளிச்செய்கிறார், (கீழே யித்யாதி). திருமந்த்ரம் ப்ரஸ்துதமானால் மந்த்ரத்ரஷ்டாவை யநுஸந்திக்கவேணுமோ வென்ன; அருளிச்செய்கிறார், (திருமந்த்ரந் தன்னை) என்று தொடங்கி (விஶ்வாஸம் பிறக்கைக்காக) என்று மளவும். உபாஸகனுக்குத் திருமந்த்ராநுஸந்தா

ன்ன, இவையெல்லாம் அநுஸந்தேயமாகக்கடவது. அதுவேண்டு வானென்னென்னில்; (க) “நமோநாராயணாயவென்று - பரமாத்தும னைச் சூழ்ந்திருந்தேத்துவர்” என்று இம்மந்த்ராநுஸந்தாநம்பண் ணுவார் நித்யஸூரிகளாய், அவர்களுடைய யாத்ரையாயிற்று இது; அத்தையிறே குணத்ரயாத்மிகையான ப்ரக்ருதிவஶ்யனானவிவன் அநுஸந்திக்கப்பார்க்கிறது; ஆகையாலே, ஒருபாவநையாலே அவர் களோபாதியாகத் தன்னுடைய சரீரத்தையும் பாவித்து அநுஸந் திக்கைக்காக சோஷணாதிகள் வேண்டுகிறது. இனி ருஷி ச(ஃ)ந்தோ தேவதைகளை யநுஸந்திக்கிறது - இம்மந்த்ரத்திலுண்டான ஆதராதி சயத்தாலே, பீஜசக்திகளை அநுஸந்திக்கிறது, மோக்ஷப்ரதமென்று அவ்வழியாலே இவனுக்கிதில் விஶ்வாஸம் பிறக்கைக்காக.

†கீழே “பிரிதிசென்றடைநெஞ்சே” என்றார்; “க்ரமத்திலே செய்கிறோம்”என்றாறியிருந்தது நெஞ்சு; “கெடுவாய்! ப்ரக்ருதி ஸம் ஸ்ருஷ்டராயிருப்பார்க்கு, ‘அப்படிச்செய்கிறோம்’ என்றாறியிருக் கப்போமோ? அப்ராக்ருத சரீரபரிக்ரஹம் பண்ணினார்க்கன்றோ? “பின்னைச்செய்கிறோம்” என்றாறியிருக்கலாவது” என்று இங்ஙனே ப்ரக்ருதியினுடைய அஸ்த்திரதையையும், விஷயங்களினுடைய தண்ணிமையையும், பற்றப்படுகிற விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தையும் சொல்லி, இருந்தபடி இதுவானபின்பு † ஒருகைகால் முறியவாகிலும் ஒருக்ஷணம் முற்பட்டதுடலாக ஆஶ்ரயிக்கப் பாராய்! என்று திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறார்.

†(முற்றமூத்து) ஹிமவானில் திருப்பிரிதியை ஆஶ்ரயியென்று திருவுள்ளத்தைக்குறித்து உபதேசித்தார்; அது தம்த்வாக்கு அநு

நம் பண்ணுமிடத்தில் ருஷிசந்தோதேவதைகள் வேண்டுமாபோலே ஆழ்வார்க்கு மந்த்ரத்தினுடைய உத்தேஶ்யதையாலே மந்த்ர ப்ரதனிருந்த தேசமுத்தேஶ்யமென்று கண்டுசொல்வது என்றருளிச்செய்வர்.

கீழ்ச்சொன்ன மூந்தின ஸங்கதியைப் பாட்டில் தாத்பர்ய கதநபூர்வகம் விஸ்தரிக்கிறார், (கீழேயித்யாதி). (ஒருகைகால் முறிய வாகிலும்) என்றதுக்கு-முறியும்படியாகிலும் ஓடி ஆஶ்ரயி என்று ஶ்லைஷ்ட்யத்திலே தாத்பர்யமாதல், கேவல சரணசைதில்யம் பிறப்பதற்கு முன்னே யென்று தாத்பர்யமாதல்கொள்வது.

கீழிற்றிருமொழியிலே, “பிரிதிசென்றடைநெஞ்சே” என்றவது அதிதூர தேசமென்றஞ்சித்திமிர்த்திருக்க; ஸந்நிஹிதமாக வதரியிலே வந்தான், அங்கே கடுக ஆஶ்ரயி என்று ஸங்கத்யந்தரம் சொல்லுகைக்கு ப்ரதீகக்ரஹணம் பண்ணுகிறார், (முற்றமூத்து) என்று.

(க) திருப்பல் - கஉ.

ரூபமாக மேல்விழாதே திமிர்த்திருந்தது; (௧) "𑌮𑌨 𑌏𑌵 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 - மநஏவ மநுஷ்யாணாம்" என்று பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் ஹேது மநஸ்ஸிறே. இது பகவத்விஷயத்தில் மேல்விழுகிறதில்லை, இனி பழையதுவேயிறே நமக்குகிலே, இனி அவன்றான் விரோதியான இவ்வுடம்போடே தன்னையாஶ்ரயித்துப் பெறலாம்படிக்கீடாக இங்கேவந்து ஸந்நிஹிதனானன்; இனி இந்த விரோதியான ப்ரக்ருதிதான் தேஹமாயும் இந்த்ரியங்களாயும் சப்தாதிவிஷயங்களாயுமிறே விரோதியாவது; அநுபாவ்யவிஷயங்களில் ப்ரதாநபோக்யங்களாவன - ஸ்த்ரீகளிறே; அவர்கள் தாங்களாகிறார் - தங்களைக்கொண்டு அருமைப்படுத்தி இவன் ஸர்வஸ்வத்தையுமபஹரிக்கு மத்தனைபோக்கி, இவனுக்குத் தங்களுடைய உடம்புகொடுக்கக் கடவர்களன்றிக்கே, கொடுத்தார்களாகில் அதுதன்னில் அநுபாவ்யமொன்றில்லாதபடி அல்பமாய் அஸ்த்திரமாய் அநர்த்தாவஹமாய் துராராதமாயிறே யிருப்பது; இனி தேஹமாகிறதுதான், ஏகரூபமாயிருப்பதொன்றல்லாமையாலே, அவை தன்னுடைய அநுபவயோக்யமுள்ளது சிறிதுநாளாய், பின்பு அதுவுங்கூட இல்லாதபடியிறே யிருப்பது; இந்த்ரியங்களாகிறவிவை, (௨) "𑌆𑌨𑌨𑍍𑌦𑌯𑌾𑌤𑌿 - ஆநந்தயாதி" என்கிறபடியே - இவனுக்கு நிரதிசயாநந்தத்தைப் பண்ணிக்கொடுக்கும் பகவத்விஷயத்துக்குடலாகையன்றிக்கே ஸந்நிஹிதமான க்ஷுத்ரவிஷயங்களிலே மூட்டி துக்கத்தை விளைக்கக்கடவதாய், பின்பு தானுண்டாயிருக்கச்செய்தேயும் இக்கார்யந்தன்னையும் செய்யமாட்டாதபடியாயிறே யிருப்பது; இப்படியிருக்கையாலே, இவ்வசித்து தனக்கே பாங்காயிருக்கிறநாளிலே அவனை யாஶ்ரயித்துத் தன்னைக் கழித்துக்கொள்கைக்கு உடலாயிருப்பது மோராகாரமுண்டு; அவன்றானும் இது பாங்கானபோதே தன்னை யாஶ்ரயிக்கலாம்படி இங்கே ஸ்ரீபதரியிலேவந்து ஸந்நிஹிதனானன்; ஆனபின்பு இது அநுகூலமானபோதே அவனை யாஶ்ரயித்து இத்தைக் கழிப்பித்துக்கொள்வோமென்று பார்த்து அதிலே ஒருப்படுகிறார்.

†பட்டரை ஒருவ்யாபாரி, "'இது அல்பம் அஸ்த்திரம்' என்று இத்தை த்யாஜ்யமாக நினைத்திராநின்றார்கள் சிலர், 'காண்கிற வுடம்புக்கவ்வருகில்லை' என்று இது தன்னிலே போக்யதாபுத்தி பண்

சரீரந்தனக்கே ஆநுகூல்யமும் ப்ராதிகூல்யமும் கூடுமோவென்ன; கூடுமென்னுமதுக்கு ஸம்வாதமருளிச்செய்கிறார், (பட்டரையித்யாதி).

(௧) வி - பு - ௬ - ௭ - ௨௮. (௨) தை - ஆந - ௨ - ௭ - ௧.

ணிபிராநின்றார்கள் சிலர், ஒன்றைப்பற்றி இவையிரண்டும் நடக்கிறபடி யெங்ஙனே" என்று கேட்க, "பாக்யாதிகர்க்கு இதினுடைய தோஷதர்சநத்தைக்கொண்டு கைவிடுகைக்குமுடலாய், பாக்யஹீநர்க்கு இதிலே போக்யதாபுத்திபண்ணி அநர்த்தப்படுகைக்கு முடலாம்படி அவ்வவருடைய புண்யபாபங்களையிட்டு அதுக்கநுரூபமாகக் காணுமித்தைப்பண்ணிற்று" என்றருளிச்செய்தார். (க) †[बाल्ये क्रीडनकासक्ताः - பால்யேக்ரீடநகாஸக்தாః] பால்யத்தில் லீலோபகரணங்கொண்டு போதுபோக்கித்திரியும், அல்பம் வெளிச்செறிப்புப்பிறந்தவாறே விஷயங்கள் வந்துகைக்கொள்ளும்,பின்னையுமவைதன்னையுமநுபவிக்கவொண்ணாதபடி மூப்புவரும், ஆனபின்பு இது பாங்கானநாளிலே ஒருக்ஷணம் முற்பட்டதுடலாக பகவத் ஸமாஶ்ரயணம்பண்ணவடுக்கும் என்னுகின்றதிறே.

முதற்பாட்டு.—(முற்றமூத்து) பரிணமித்ரவ்யத்துக்குப் பரிணமபரம்பரைகள் வரத்தவிராதிறே; இனி ஒரு அவஸ்த்தைக்கு அவகாசமில்லாதபடி கழியமூத்து (கோல்துணையா)‡முன்பு தன்னையெல்லார்க்கும் அபாஶ்ரயமாகவிறே நினைத்திருப்பது; ஒரு பரமசேதநனைப் பற்றுகிறானுமன்றே. † ஜீயர் ஸந்யஸித்தருளுகிறவன்று, "தண்டதாரணம்பண்ணுகிற ‡ மந்த்ரம், 'நீயெனக்கு மித்ரமாய் எல்லாரக்ஷணங்களும் பண்ணவேணும்' என்றாயிற்றிருப்பது, அத்தைக்கேட்டு, 'ஒருஸர்வஜ்ஞன் ஸர்வசக்தி பரமசேதநனை ஓராசார்யன் முன்னாக இவ்வார்த்தை சொல்லிவைத்து இத்தையும் இவ்வார்த்தைசொல்லும்படியான இவ்வாஶ்ரம ப்ராப்திதானென்' என்றிருந்தேன்காண்" என்றருளிச்செய்வர். (முன்னடிநோக்கி வளைந்து) முன்பு இறுமாப்பாலே தரைபாராதேயிறே திரிவது. சோழர்கள் வெற்றிலே சிலரிடவன்றிக்கே தாங்களே யெடுத்திறேதின்பது, "தலைகவிழ்ந்துவாங்கில் சிலரை வணங்கிற்று" என்னும் துர்மாநத்தாலே (உ) "द्विधा भज्येयम् - த்விதாபஜ்யேயம்" என்பது § இயற்றி

ஒருதேஹத்திலிரண்டு ஆகாரம் கூடுமென்னுமதுக்கு ப்ரமாணமும் காட்டுகிறார், (பால்யேத்யாதி).

முதற்பாட்டு.—(முற்றவித்யாதி). மிகவும் மூத்தவனுக்குக்கோல்பிடிக்கை ஸ்வதஸ்ஸித்தமாயிருக்கவு மருளிச்செய்ததுக்குக் கருத்து - துணையாகாதத்தைத் துணையாக்கினானென்று தோற்றுகைக்காகவென்று பலித்த தாத்பர்யங்களை யருளிச்செய்கிறார், (முன்பித்யாதி). பரமசேதநன்தவிர வேறொன்று ரக்ஷகமன்றென்னுமதுக்கு ஸம்வாதம், (ஜீயரித்யாதி). மந்த்ரம் (௩) "सखा मे गोपाय - ஸகாமேகோபாய" என்றது.

(க)
§ இயற்றி - சக்தி -

(உ) ரா - யு - ௩௬ - கக.
(௩)

மூ—முதுகு பற்றிக் கைத்தலத்தால் முன்னொரு கோலூன்றி
விதிர் விதிர்த்துக் கண்சுழன்று மேற்கிளைக் கொண்டிருமி
இதுவென்னப்பர் மூத்தவா றென்றிளையவரேசாமுன்
மதுவுண் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கைத்தலத்தால்	கையாலே	மூத்தஆறு	கிழத்தனத்தை யடைந்தபடி
முதுகுபற்றி	முதுகைப்பிடித்தும்		
முன்ஒருகோல்	முன்னே ஒருகொம்பை	இது என்	இதென்ன- (இவ்வளவதிகமா!)
ஊன்றி	ஊன்றிக்கொண்டும்	என்று	என்றுசொல்லி
விதிர்விதிர்த்து	உடம்பு நடுங்கியும்	ஏசாமுன்	ஏசுவதற்குமுன்னே,
கண்சுழன்று	கண்கள்சுழலமிட்டும்	மது	பூவில்தேனை
மேல்கிளைக்கொண்டு	மேலானத்வநியோடே	உண்	பானம்பண்ணா நின்றுள்ள
		வண்டு	வண்டுகள்
இருமி	இருமல்மேலிட்டும்,	பண்கள்பாடும்	ராகங்களைப்பாடுகிற
இளையவர்	சிறுவர்கள்	வதரி	ஸ்ரீபதரியை
அப்பர்	பெரியவர்	வணங்குதும்	வணங்குவோம். (உ)

யுண்டானநாளிலே; செயலற்றால் செய்யலாவதில்லையிறே. (இற்றகால்போல்தள்ளி) முறிந்தகால்போலே தடுமாறி. (மெள்ளவிருந்து) †ஸ்த்திதியிலுண்டான அருமையாலே இருக்கவொருப்படும். ஒரு மஹாபாரதத்துக்குவேண்டும் ‡ நேர்த்திபோருமாயிற்று ஒருகாலிருந்தாலுய்த் தலைக்கட்ட. (அங்கிளையாமுன்) இருந்த ஆயாஸந்தான் பொறுமை இளைக்குமாயிற்று. அக்லேசம் வருவதற்குமுன்னே,

(பெற்றதாயித்யாதி) தாய்வடிவுகொண்ட பூதனையுடைய பெரியமுலைவழியே ப்ராணனும் பாலோடொக்கவற்றும்படியாக புஜிக்குமவனுடைய. அன்றிக்கே, பேய்வற்றும்படி முலையூடு உயிரையுண்டவாயானென்னவுமாம். † பால்நேரானவாறே ப்ராணனும் நேராயிற்று.

இத்தால், அநுகூலம்போலேதோற்றி ப்ரதிகூலமான ப்ரக்ருதியைக் கழித்துக்கொள்ளப்பார்க்கில், தாய்வடிவைக்கொண்டு அநுகூலரைப்போலே வந்து ப்ரதிகூலமான பூதனையை நிரஸித்தவன் திருவடிகளைப்பற்ற வடுக்குமென்கிறார். ... ... (க)

(ஸ்த்திதியில்) என்றது - நிற்கையிலென்றபடி.

(பேய்வற்றும்படி) என்றது - பேயின்சரீரம்வற்றும்படியென்றபடி. முலையூடு பாலையுண்ணக்கூடுமித்தனைபோக்கி ப்ராணனை யுண்ணக்கூடுமோ, வென்ன; அருளிச்செய்கிறார், (பாலித்யாதி). பால்நேர்பட்ட வளவிலே இவனுடைய அகடிதகடநாஸாமர்த்யத்தாலே ப்ராணனும் நேர்பட்டது, ஆகையாலே உண்ணக்கூடுமென்று கருத்து. ... ... (க)

‡ நேர்த்தி-நேர்தல்-ப்ரயாஸம்.

மூ.—உறிகள்போல் மெய்ந்நரம் பெழுந்தூன் தளர்ந் துள்ளமெள்கி
நெறியை நோக்கிக் கண்சுழன்று நின்று நடுங்காமுன்
அறிதியாகில் நெஞ்ச மன்பா யாயிர நாமம்சொல்லி
வெறிகொள் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே.(௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மெய்	சரீரத்திலுள்ள	உறிகள்போல்	உறிகளைப்போலே
நரம்பு	நரம்புகளானவை	எழுந்து	மேலேகிளம்பி

வ்யா.—இரண்டாம்பாட்டு. (முதுகுபற்றிக் கைத்தலத்தால்) †தௌர்ப்பல்யத்தாலே முதுகுநோமே, ஒருகையாலே அத்தைப்பற்றும். (முன்னொருகோ லூன்றி) முன்பு விழாமைக்காக ஒருகோலை ஊன்றுமாயிற்று. இரண்டருகும் கப்புக்கால் கொடுக்கவேண்டும்படியிறே யிருப்பது. (விதிர்விதிர்த்து) சரீரமெங்குமொக்க நடுங்குமாயிற்று. (கண்சுழன்று) † ஓரோ அவயவங்களுக்குப் பிறக்கும் விகாரங்கள் சொல்லுகிறது. (மேற்கிளை) மேற்கென்று - மேலாய், † மேலிளைப்புக்கொண்டென்னுதல்; அன்றிக்கே, மேலானகிளையை - உச்சமான த்வநியைக்கொண்டிருமி. (இதுவென்னப்பர் மூத்தவாறு) † இதுதான் எல்லாரும் மூக்கக்கடவதிறே, இத்தனை † கழிய மூக்கலாகாது என்பர்களாயிற்று, அப்பர் - என்று - † ப்ரக்ருதி, அதின்மேலே †மூப்பு. (இளையவர்) அவர்களுக்கும் அது வ்யவஸ்த்திதமாய் தங்களுக்கும் † இவை வ்யவஸ்த்திதமானாற்போலேயிருக்க ஏசாநிற்பர்கள். (மதுவுண்டித்யாதி) ஒருபண்ணைப் பாடுகையன்றிக்கே வண்டுகள் மதுபாநமத்தமாய் எல்லாப்பண்களையும் பாடாநிற்கும். (வதரி) † ஆக, இக்க்லேசத்தைத் தவிர்க்குமளவே யன்றிக்கே நிரதிசயாநந்தத்தைப் பெற்றுக் களிக்கலாம்படியான தேசமாயிற்று. ... (உ)

அரு.—இரண்டாம்பாட்டு.—(முதுகித்யாதி). முற்றமூத்த ப்ரகார விசேஷத்தை விவரிக்கிறாரென்று ஸங்கதிஸ்பஷ்டமென்று வ்யாக்யாநம் செய்தருளுகிறார், (தௌர்ப்பல்யேத்யாதி). கண்சுழலுகை - உபலக்ஷணமாய், ஸர்வாவயவ விகாரங்களும் சொல்லுகிறதென்கிறார், (ஓரோவித்யாதி). (மேலிளைப்புக்கொண்டு) என்றது, மேல்ஶ்வாஸம் பிறக்கும்படி க்லேசம் கொண்டென்றபடி. "அப்பர்மூத்தவாறு என்," என்னலாயிருக்க, "இது" என்றத்தால் பலிதார்த்தம், (இதுதானித்யாதி). (கழியமூக்கை) கேவலம் சிதிலாவயவனாகை. (ப்ரக்ருதி) என்றது, ஸ்வபாவதஃ மூத்தமையைச் சொல்லுகிறதென்றபடி. (மூப்பு) என்றது - மூப்பையும் சொல்லுகிறதென்றபடி. இத்தால் கழிய மூத்தமையைச் சொல்லிற்றாயிற்று. (இவை) என்றது - இளமையும் ஏசுகையுமென்றபடி. வண்டுகளைப்போலே நமக்குமவனை வணங்கினால் ஆநந்திக்கலாமென்னு முட்கருத்தை யருளிச்செய்கிறார், (ஆகவித்யாதி) .. ... (உ)

ஊன்	மாம்ஸம்	அறிதி ஆகில்	ஜ்ஞாந முடையயானல்
தளர்ந்து	கட்டுக்குலைந்து	அன்பாய்	(ஸர்வேஶ்வரன் பக்கல்) பக்தியையுடையையாய்
உள்ளம்	ஹ்ருதயம்	ஆயிரநாமம்	(அவனுடைய) ஆயிரம்திருநாமங்களையும்
எள்கி	சிதிலமாய், (தூரப் போவதற்சாக)	சொல்லி	உச்சரித்து
நெறியை நோக்கி	வழியைப்பார்த்து (அவ்வாயாஸத்தாலே)	வெறிகொள்	பரிமளப்ரசுரமான
கண்சுழன்று	கண்ணுஞ் சுழலையிட்டு	வண்டு	வண்டுகள்
நின்று	(போகமாட்டாதே) நின்று	பண்கள்	இசைப்பாட்டுக்களை
நடுங்காமுன்	நடுங்கும்காலம் வருவதற்குமுன்னே,	பாடும்	பாடாநின்றுள்ள
		வதரி	ஸ்ரீபதரியை
நெஞ்சம்	மநஸ்ஸே!	வணங்குதும்	வணங்குவோம். (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (உறிகளித்யாதி) † மெய்யில் - சரீரத்தில், நரம்புகளானவை; † பால்யத்தில்மறைந்து கிடந்தவை, சரீரம் பசையறஉலர்ந்தபடியாலே உறிபோலே மேலே † §புடைக்குமாயிற்று. அதுக்குறுப்பாக, (ஊன்தளர்ந்து) மாம்ஸம்க்ஷயித்து. (உள்ளமெள்கி) அத்தாலே ஹ்ருதயமீடுபட்டு. (நெறியையித்யாதி) போக்கைநினைக்குமே, தூரப்போகநினைக்கிறானைகயாலே வழியைப் பார்க்குமே, நெடுகப்பார்த்த ஆயாஸம் பொறாமை கண்சுழலும், பின்பு அடிபேர்ந்திடமாட்டாதே நின்று நடுங்குமாயிற்று. (அறிதியாகில் நெஞ்சம்) ஜ்ஞாநப்ரஸரத்வாரமாகில்; அவன் பக்கலிலே அன்பையுடையையாய், சிலவற்றைச்சொல்லி மீளவேண்டாதபடி † பாங்கான வளவிலே ஆயிரம் திருநாமங்களையும்சொல்லி. (வெறியித்யாதி) பரிமளத்தை வகுத்தாற்போலே யிருக்கிற வண்டுகள் முக்தர் ஸாமகாநம் பண்ணுமாபோலே அநுபவத்துக்குப் போக்குவிட்டுப் பாடுகிறனவாயிற்று. ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு.—(உறிகளித்யாதி) விதிர்விதிர்த்துக்கண்சுழலுகைக்கு ஹேதுகதநமுகேந மூப்பை வர்ணிக்கிறாரென்று ஸங்கதியை யுட்கொண்டு பதவ்யாக்யாநம் செய்தருளுகிறார், (மெய்யிலித்யாதி). "எழுந்து" என்றபதவாஸனை, (பால்யத்திலித்யாதி). (புடைக்கும்) - பரம்பும். "நெஞ்சம்" என்றது - அண்மை விளியாய், அதாவது - ஸமீபத்தே யழைக்கையாய், ஸம்போதநமென்று கண்டுகொள்வது. (பாங்கான வளவிலே) என்றது - வ்ருத்த(த்த)னால் திருநாமங்களை முடியச்சொல்லமாட்டாதே, சில சொல்லி நடுவே மீளவேண்டாத பால்யத்திலே என்றபடி. ... (௩)

§ புடைக்கும் - கிளம்பும்.

மூ.—பீளைசோரக் கண்ணிடுங்கிப் பித்தெழ மூத்திருமித்
தாள்கள்நோவத் தம்மில் முட்டித் தள்ளிநடவாமுன்
காளையாகிக் கன்றுமேய்த்துக் குன்றெடுத் தன்றுநின்றான்
வாளைபாயும் தண்டடம் சூழ் வதரி வணங்குதுமே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண் இடுங்கி	கண்கள்நெருங்கி	அன்று	(இந்த்ரன் கல்வர்ஷத்தை வர்ஷித்த) அக்காலத்திலே
பீளை	கண்ணழுக்கு [ம்		
சோர	புறப்படும்படியாகவு		
பித்து	பித்தம் [ம்	குன்று	கோவர்த்தந மலையை
எழ	மேலிடும்படியாகவு	எடுத்து	குடையாகவெடுத்து
மூத்து	கிழத்தனத்தை யடைந்து	நின்றான்	(ஏழுநாள்) தரித்து நின்றவனுடைய
இருமி	இருமி	வாளை	மத்ஸ்யங்கள்
தாள்கள்	கால்கள் [க்கி	பாயும்	குதித்துப்பாயா நின்றுள்ள
தம்மில் முட்டி	ஒன்றோடொன்று தா		
நோவ	நோம்படியாக	தண்	குளிர்ந்த
தள்ளி	தடுமாறி	தடம்	தடாகங்கள்
நடவாமுன்	நடப்பதற்குமுன்னே,	சூழ்	சூழ்ந்திருப்பதான
காளையாகி	யுவாவாய்க்கொண்டு	வதரி	ஸ்ரீபதரியை
கன்றுமேய்த்து	கன்றுகளை மேய்த்து	வணங்குதும்	வணங்குவோம். (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. (பீளைசோரக்கண்ணிடுங்கி) † கண்ணானது ஸங்கோசத்தைபஜித்து; பசையற்றபடியாலே பீளைபாய்ந்து. (பித்தெழ) † கழிய மூத்து. † ஸ்க்காலித்யம் பிறக்கும்படிமூத்து. (தாள்களித்யாதி) † ஒருசஸ்த்ராதிகளாலாதல் மற்றொன்றிலே இடறியாதலன்றிக்கே, காலோடு காலரைந்துநோவ. தாள்கள்-தம்மில்முட்டி-நோவவென்றபடி. † பின்னையும் சாபலத்தாலே போகத்துடங்குமே; † தடுமாறிநடப்பதுக்குமுன்னே. (காளையாகி) † தன்னையாம்

அரு.—நாலாம்பாட்டு.—(பீளையித்யாதி). போக்கிலே யொருப்பட்டு நெறியைநோக்கிநின்று நடுங்காநின்றாலும் - (க) "ఆశైకా తరుణాయతే- ஆசைகாதருணயதே" என்கிறபடியே, போகநினைத்த விஷயத்திலே ஆசாதிசயத்தாலே போமவனுடையபடியை வர்ணித்தருளுகிறாரென்று ஸங்கதியைத் திருவுள்ளம்பற்றி, "கண்ணிடுங்கிப்பீளைசோர" என்றந்வயமுகேந தாத்பர்ய மருளிச்செய்கிறார், (கண்ணானதித்யாதி). பித்து - பைத்யமாய், அது எழும்படியாக மூத்தென்று சப்தார்த்தமாய், பலிதார்த்தம், (கழியமூத்தென்று). விவரணம், (ஸ்க்காலித்யமித்யாதி). "தம்மில்" என்றதுக்கு வ்யாவர்த்ய மருளிச்செய்கிறார், (ஒருவித்யாதி). மேலுக்கவதாரிகை, (பின்னையுமித்யாதி). சப்தார்த்தம், (தடுமாறியித்யாதி). மூப்பை நிந்தித்துக்கொண்டு வருகிற ப்ரகரணத்திலே "காளையாகி" என்று, - அவனுடைய யௌவநத்தை யருளிச்செய்தவருக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார், (தன்னை யித்யாதி). "கன்று" என்றதுக்

(க)

மூ.—பண்டு காம ரானவாறும் பாவையர் வாயமுதம்
உண்டவாறும் வாழ்ந்த வாறு மொக்க வுரைத்திருமித்
தண்டுகாலா வூன்றியூன்றித் தள்ளி நடவாமுன்
வண்டுபாடும் தண்டுழாயான் வதரி வணங்குதுமே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பண்டு	பால்யத்தில்	தண்டு	தடியை
காமரானஆறும்	ஸ்த்ரீகள்தன்னை விரும்பியிருந்தபடியையும்	காலா	காலாகக்கொண்டு
பாவையர்	(அந்த) ஸ்த்ரீகளுடைய	ஊன்றிஊன்றி	(அசக்தியினால் ஓரிடத்திலேயே) பலதரமும் ஊன்றி
வாய்	வாயிலுள்ள	தள்ளி	இளைத்து
அமுதம்	அம்ருதத்தை	நடவாமுன்	நடப்பதற்குமுன்னே,
உண்டஆறும்	புஜித்த படியையும்	வண்டுபாடும்	வண்டுகள்பாடுகிற
வாழ்ந்தஆறும்	சிற்றின்பத்தினால்ஸுகித்த (அழிந்த)படியையும்	தண்	குளிர்ந்த
ஒக்க	ஒருபடிப்பட	துழாயான்	திருத்துழாய் மாலையையுடையஸர்வேஸ்வரனது
உரைத்து	சொல்லி(அவ்வாயாஸத்தாலே)	வதரி	ஸ்ரீபதரியை
இருமி	(நடு நடுவே) இருமி	வணங்குதும்	வணங்குவோம். (ரு)

ரயித்தார்க்குத் தன்னோடு ஸாம்யாபத்தியைக்கொடுக்குமவன். நித்ய யுவாவாகலாம். (கன்றுமேய்த்து) † ரக்ஷ்யவர்க்கத்தில் † வரையாதே ரக்ஷிக்குமவன். (குன்றெடுத்தன் றுநின்றான்) அரியனசெய்து நோக்குமவனாயிற்று. (வாளையித்யாதி) தனக்கென்ன ஒரு †யோக்யதை யில்லாத பதார்த்தங்களும் களித்துவர்த்திக்கும் தேசமாயிற்று. (ச)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பண்டுகாமரித்யாதி) † தனக்கென்ன யோக்யதையுள்ளநாள் நிஷித்தங்களையே முன்னடிதோற்றாதே யநுஷ்டித்துப்போரும்; பின்பு பகவத்ஸமாஸ்ரயணம் பண்ணுமாகி

குத் தாத்பர்யம், (ரக்ஷ்யேத்யாதி). (வரையாதே) தரதமபாவம் பாராதே. (யோக்யதை யில்லாத) என்றது-பகவத்ஸமாஸ்ரயணத்துக்கு ஜ்ஞாநாதியோக்யதையில்லாதவென்றபடி.... ... ... (ச)

அரு.—அஞ்சாம்பாட்டு.—(பண்டுகாமரித்யாதி). தாள்கள் தம்மில் முட்டிநோவத்தள்ளி நடக்குமவனைப் பார்த்து, "நீ இங்ஙனே இளைத்து நடக்கப் புகாநின்றாய்" என்று சிலர் வினவ, அவர்களைக் குறித்து இவன் சொல்லுமத்தையும் நடக்கும் ப்ரகாரத்தையு மருளிச்செய்கிறாரென்று ஸங்கதியையுட் கொண்டு, "அவன் சொல்லும்போது காலம் குறுகிற்று, ஹிதம் சொல்லுவாருண்டோ" என்னவேண்டியிருக்க துர்வ்ருத்த கீர்த்தநம் பண்ணவேண்டுவதே! என்று ஈடுபாட்டிலே தாத்பர்யமாக வருளிச்செய்கிறார், (தனக்கென்னவித்யாதிவாக்யத்ரயத்தாலே). "பாவையருடைய வாயமுதமுண்டவா

மூ.—எய்த்தசொல்லோ டீளையேங்கி யிருமி யிளைத்துடலம்
பித்தர்போலச் சித்தம்வேறாய்ப் பேசி யயராமுன்
அத்தனெந்தை யாதிமூர்த்தி யாழ்கடலைக் கடைந்த
மைத்தசோதி யெம்பெருமான் வதரி வணங்குதுமே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எய்த்த	பலஹீநமான	ஈளை	கோழையாலே
சொல்லோடு	பேச்சுடன்	ஏங்கி	இளைத்து

லும், (க) "வணக்கொடுமாள்வது வலம்" என்கிறபடியே நன்மைச் சூடலாய்த் தலைக்கட்டுமிறே, அதுவும்செய்யாதே, சேஷித்தநாள் வ்ருத்தகீர்த்தநத்தைப்பண்ணிச் செத்துப்போமாயிற்று. (பண்டித்யாதி) முன்புதான் ஸ்த்ரீகளுக்கு ஸ்ப்ருஹாவிஷயமாய்ப் போந்தபடியையும், அவர்களுடைய § வாகம்ருதத்தை புஜித்தபடியையும். †அன்றிக்கே, அவர்கள் தாங்கள் ஆதரித்து மேல்விழத்தானிருந்தபடியாகவுமாம். (வாழ்ந்தவாறும்) (உ) † "இன்னம் கெடுப்பாயோ" என்கிறபடியே - இப்போது கேடாகவிறே தாம் நினைக்கிறது. (ஒக்கவுரைத்திருமி) † இவற்றைச் சொல்லத்துடங்குமே, அநந்தரம் இருமல்வருமே, பின்னையும் சாபலத்தாலே விட்டகுறையிலே சொல்லத்துடங்குமே, ஆக இருமுவது சொல்லுவதாகாநிற்கும். (தண்டுகாலா) † காலால்கொள்ளுங் காரியத்தை ஒருதண்டாலே யாயிற்றுக் கொள்வது.†(ஊன்றியூன்றி) பிள்ளையழகிய மணவாளவரையர் இதுக்கு பட்டரருளிச்செய்தாராகச் சொன்னபடி. "ஒருகால் சரீரம் ஸ்த்திதிக்கவேண்டுமளவும்ஊன்றமாட்டானே, தன்கையில் மிடுக்கில்லாமையாலே, பலகாலித்தை யெடுத்தெடுத்து இடாநிற்கும்" என்று. (தள்ளியித்யாதி) தடுமாறிநடப்பதுக்குமுன்னே. (வண்டித்யாதி) "அன்று, இன்று" என்னவேண்டாதே என்றுமொக்க அநுபவமே யாத்ரையாகச்செல்லும்தேசம். சிலநாள் அநுபவித்துப் பின்பிருந்து வ்ருத்தகீர்த்தநம் பண்ணவேண்டா. ... ... (ரு)

றும்" என்று கீழருளிச்செய்து, பாவையர் தாங்கள் தன் வாயமுதமுண்டவாறுமென்று அர்த்தாந்தரமருளிச்செய்கிறார், (அன்றிக்கே யித்யாதி). "வாழ்ந்தவாறும்" என்றது - விபரீத லக்ஷணையாய், கெட்டவாறு மென்றாக்கியருளிச்செய்கிறார், (இன்னமித்யாதி). "உரைத்திருமி" என்னாதே, "ஒக்க" என்கையாலே, பலித்தவர்த்த மருளிச்செய்கிறார், (இவற்றை யித்யாதிவாக்ய சதுஷ்டயத்தாலே). தாள்கள் தம்மில் முட்டிநொந்தபடியாலே தண்டைக்காலாக்கிக்கொண்டு நடக்கத்துடங்குமென்றருளிச்செய்கிறார், (காலாலித்யாதி). "ஊன்றியூன்றித் தள்ளி நடக்கும்" என்று பூர்வர்கள் நிர்வாஹமாய், ஒருகால் தானூமூன்றச் சக்தியில்லாமையால் அங்கேதான் பலகாலூன்றுமென்று பட்டர்நிர்வாஹத்தை யருளிச்செய்கிறார், (ஊன்றியித்யாதிவாக்யத்வயத்தாலே. ()

(க) தி - வாய் - க - ரு - அ.
§ வாகம்ருதே. (உ) தி - வாய் - சு - க - அ.

இருமி	இருமலாலேவருந்தி	ஆழ்	அகாதமான
உடலம்	சரீரம்	கடலை	ஸமுத்ரத்தை
இளைத்து	மிகவும் மெலிந்து	கடைந்த	கடைந்தவனாய்
பித்தர்போல	பைத்தியம்பிடித்தவர்களைப்போலே	மைத்த	கறுத்த [னாய்
சித்தம்வேறாய்ப் பேசி	ஒன்றைநினைத்து மற்றொன்றைப்பேசி	சோதி	தேஜஸ்ஸை யுடைய
அயராமுன்	தளருவதற்குமுன்	எம்பெருமான்	என்னை அடிமைகொண்ட ஸர்வேஸ்வரனுடைய
அத்தன்	ஸ்வாமியாய் [பே,	வதரி	ஸ்ரீபதரியை
எந்தை	எனக்குப்பிதாவாய்	வணங்குதும்	ஆஸ்ரயிப்போம். (௬)
ஆதிமூர்த்தி	ஜகத்காரண பூதனாய்		

வ்யா.—ஆறாம்பாட்டு. (எய்த்தசொல்லோடு) † துடங்கி எய்க்கையன்றிக்கே முந்துறவே எய்த்தாயிற்றுச் சொல்லுவது; அதுதான் அநந்தரம் ஈளையோடே கொடுபோய்ச் சேர்க்கும். (எங்கி) † அதினநந்தரமாக இளைப்புவந்து கைக்கொள்ளுமாயிற்று, (இருமி இளைத்து உடலம்) † அதுதான் இருமலுக்குப் பூர்வக்ஷணவர்த்தியாயிருக்குமிறே. இருமி, அத்தாலே சரீரம்போர இளைக்குமாயிற்று. (பித்தர்போலச் சித்தம்வேறாய்ப்பேசி) † நினைவொன்றும் சொல்லொன்றுமாயிருக்குமாயிற்று. † பித்தேறினாரைப்போலே நெஞ்சால் நினைப்பதொன்றாய் வாயால் சொல்லுமதொன்றாயிருக்குமாயிற்று. (சித்தம் வேறாய்ப் பேசியயராமுன்) † இப்படி பேசுகையுங்கூட வரிதாம்படி அயர்வோடே தலைக்கட்டும்; இப்படி மோஹிப்பதற்கு முன்பே. (அத்தனித்யாதி) வகுத்தஸ்வாமியானவன், எனக்கு ஹிதகாமனானவன், ஜகத்காரணபூதனான † ஸர்வேஶ்வரன். (ஆழ்கடலைக்கடைந்த)

அரு.—ஆறாம்பாட்டு.—(எய்த்தவித்யாதி). இருமியிருமி யுளைக்கத்துடங்கினவளவிலே கண்டுவினவினவன் விட்டுநடக்குமே, இவன் துடங்கின வார்த்தையை விடமாட்டாதே தன்னில் தான் சொல்லுமே, அத்தை வர்ணித்தருளுகிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

இருமியிருமி யுரைத்தத்தால் இளைப்பு வருகையாலே எய்த்த சொல்லாயிற்றென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (துடங்கியெய்க்கையித்யாதி). எய்த்து - இளைத்து. ஈளை - கோழை. எங்குதல் - பொருமுதலாய், அத்தால்வந்த இளைப்பைச்சொல்லுகிறதென்கிறார், (அதினித்யாதி), இப்படிப்பட்ட இளைப்பும் இருமலுக்கு ஹேதுவாய்விடுமென்கிறார், (அதுதானித்யாதி). போர இளைத்தவாறே நினைத்தபடிசொல்லவும் வல்லனல்லனென்று தாத்பர்யமருளிச்செய்கிறார், (நினைவித்யாதி). சப்தார்த்தம், (பித்தேறினாரையித்யாதி). (இப்படி பேசுகையும் கூட) என்றது - அபுத்யா சொல்லுமதுவும் கூடவென்றபடி. மூர்த்திசப்தம் - ஸ்வரூபவாசகமாய், (ஸர்வேஸ்வரன்) என்கிறது. ... (௬)

மூ.—பப்ப அப்பர் மூத்தவாறு பாழ்ப்பது சீத்திரளை
யொப்ப ஐக்கள் போதவுந்த வுன்தமர் காண்மினென்று
செப்பு நேர் மென் கொங்கைநல்லார் தாம்சிரியாதமுன்னம்
வைப்பும் நங்கள் வாழ்வுமானான் வதரி வணங்குதுமே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சீத்திரளை ஒப்ப	சீயின்திரட்சிபோல	தாம்	(முன்பு ஆதரித்துப் போந்த) தாங்களே (இப்போது அருகிருந்தவர்களைப் பார்த்து) [வர்
ஐக்கள்	கோழையானது	உன்தமர்	உன்னோடு உறவுள்ள
போதஉந்த	மிகவும்தள்ள, (அதைக்கண்டு)	காண்மின்	இவர்படியைப்பாருங்
செப்புநேர்	செப்புப்போன்ற	என்று	என்றுசொல்லி [கள்
மெல்	ம்ருதுவான [ராய்	சிரியாத முன்னம்	ஹாஸ்யம்பண்ணுவதற்குமுன்னே,
கொங்கை	ஸ்தநங்களை யுடைய	நங்கள்	நமக்கு
நல்லார்	தான்தனக்கு ஹிதபரராக நினைத்திருந்த ஸ்த்ரீகள்	வைப்பும்	நிக்ஷேபதநமும்
பப்ப	பப்ப(ஊ ஊ)	வாழ்வும்ஆனான்	வாழ்ச்சியுமானவனுடைய
அப்பர்	கிழவர்	வதரி	ஸ்ரீபதரியை
மூத்தஆறு	கிழத்தனத்தை அடைந்தபடி	வணங்குதும்.	ஆஸ்ரயிப்போம். (எ)
பாழ்ப்பது	சாலப்பொல்லாது (என்றுசொல்லி)		

ஆரியனசெய்தும் அபேக்ஷிதம்செய்துகொடுக்குமவன். (மைத்தசோதி) அபேக்ஷிதம் செய்யாவிடிலும் விடவொண்ணாத வடிவழகையுடையவன்; வெளுத்தல் சிவத்தல் செய்கையன்றிக்கே கண்ணுக்குக் குளிர்ந்ததேஜஸ்ஸையுடையவன். (எம்பெருமான்) அவ்வடிவழகைக்காட்டி என்னையடிமை கொண்டவனுடைய வதரியை யாஸ்ரயிப்போம். (கூ)

வ்யா.—ஏழாம்பாட்டு.—(பப்ப)க்ஷேபோக்தியில் †இவருடைய அநுகாரமிருக்கிறபடி. பப்ப (ஊ ஊ) - என்றபடி. (அப்பர்மூத்தவாறு) எல்லார்க்கும் மூப்புவருகை தவிராதிறே; இத்தனைகழிய மூக்கலாமாகாதே! என்பர்களாயிற்று. மூப்பை †ப்ரக்ருதியாக்கி அதிலே மூத்தபடியாகவாயிற்றுச் சொல்லுவது. (பாழ்ப்பது) இது சால

அநு.—ஏழாம்பாட்டு.—(பப்பவித்யாதி). இப்படி எய்த்துக்கிடந்தவன் ஆயுஸ்ஸேஷத்தாலே மெள்ளத்தெளிந்து கந்தவ்யஸ்தலத்திலே செல்ல, அங்கே இவனுக்கு உத்தேஸ்யர் இவனை க்ஷேபிக்கும்படியைச் சொல்லுகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

(இவருடைய) என்றது - இப்பாட்டிலே ப்ரஸ்துதரான ஸ்த்ரீகளுடையவென்றபடி. (ப்ரக்ருதி யாக்கி) - ஸ்வபாவமாக்கி. போதஉந்த - போரத்தள்ள.

மூ.—ஈசிபோமி னீங்கிரேன்மி னிருமி யிளைத்தீர் உள்ளம்
கூசியிட்டீ ரென்றுபேசும் குவளையங் கண்ணியர்பால்
நாசமான பாசம்விட்டு நன்னெறி நோக்கலுறில்
வாசம்மல்கு தண்டுழாயான் வதரி வணங்குதுமே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
போமின்	போங்கோள்,		தீர், (நாங்களிப்படி
ஈசி	சீ! சீ		சொல்வதைக் கே
ஈங்கு	இங்கு [சோள்,		ட்டு,
இரேன்மின்	இராதே கொள்ளுங்	உள்ளம்கூசியிட்டீர்	ஹ்ருதயம் கூசினீர்
இருமி	இருமலாலே		
இளைத்தீர்	சரீரம்கட்டுக் குலைந்	என்றுபேசும்	என்றுசொல்லுகிற

ப்பொல்லாது; அறப்பொல்லாததாயிருந்ததீ! இவ்வசித்ஸம்ஸர்க்கம் என்று வெறுப்புக்குடலாயிற்று. (சீயித்யாதி) பூயபிண்டம்போலே ஶ்லேஷ்மாவானது போரத்தள்ள. சீத்திரளையொப்பஜக்கள் போதஉந்த, பப்ப! அப்பர் மூத்தவாறு! பாழ்ப்பது! என்பர்கள். (உன்தமர்காண்மினென்று) இவன்பக்கல் யௌவநமும் கையில்†வீசமுமுள்ளவன்று, எல்லாருமொக்க "என்தமர், என்தமர்" என்பர்கள்; கையில்வீசமும் போய் இவனோட்டை ஸம்பந்தம் நமக்கு அவத்யாவஹம் என்று தோற்றும்படி யௌவநமும்போனவாறே, "உன்னுடையவன்" என்றும் மற்றையவளும் "உன்னோடேயன்றோ அவனுக்குறவு" என்றும் தங்களோடே தொற்றறச்சொல்லிப் பிணங்காநிற்பர்கள். (செப்பித்யாதி) இவனைக்கொண்டு போதுபோக்குகைக்காக முலைக்கச்சை நெகிழ்த்தி முலையினுடைய ஸந்நிவேசத்தைக் காட்டுவர்கள். இவன் கண்ணை§விடுத்து எழப்பார்க்கும்; †அத்தைக் கண்டு, †பிள்ளாய்! இவன் இவற்றோடு என்ன உறவுண்டாய்ப்பார்க்கிறான்" என்று சிரிப்பர்களாயிற்று. †செப்புநேர்மென் கொங்கைநல்லார் - அப்பரென்று சிரியாதமுன்னமென்னுதல். பண்டு தன் ஸர்வஸ்வத்தைதநேர்ந்திறே ஸ்மிதம்பெறுவது; இப்போது இவரிருப்புக் கண்டுவிட்டுச் சிரிப்பர்களாயிற்று. (வைப்பும்நங்கள் வாழ்வுமானான்) பரிக்ரஹித்தவன்றே ஸாதநமுமாய், பின்னை ப்ராப்யனுமானவன் வர்த்திக்கிற வதரிவணங்குதும். ஒருநாள் ஆதரித்து ஒருநாள் சிரியாதவனாயிற்று. (க) "അമൃതം സാധനം സാധ്യം-அம்ருதம் ஸாதநம்ஸாத்யம்" என்னக்கடவதிறே. ... ... (எ)

(வீசம்) மாகாணிப்பணம், தங்கள் பருவத்தைக்காட்டிச் சிரிக்கும் ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார், (அத்தையித்யாதி). (பிள்ளாய்) என்றது - பெண்பிள்ளா யென்றபடி. இவன் மூப்பைக்கண்டு சிரிப்பார்களென்றருளிச்செய்கிறார், (செப்புநேரித்யாதி). ... ... (எ)

(க) § (பா) விழித்து.

குவளை	குவளைமலர்போலே	வாசம்மல்கு	பரிமளம்நிறைந்த
அம்	அழகிய	தண்	குளிர்ந்த
கண்ணியர்பால்	கண்ணையுடைய ஸ்த்ரீகள்பக்கலிலே	துழாயான்	திருத்துழாயை யுடைய ஸர்வேச்வரன் நித்யவாஸம் பண்ணுகிற
நாசமானபாசம்	விநாசத்தை விளைக்கும் ஸங்கத்தை		
விட்டு	தவிர்ந்து	வதரி	ஸ்ரீபதரியை
நல்நெறிநோக்கல்உறில்	நல்வழி போகப்பார்க்கில்,	வணங்குதும்	வணங்குவோம். (அ)

வ்யா—.—எட்டாம்பாட்டு. (ஈசிபோமின்) † நடவும்; சீ, சீ, என்றபடி. (போமின்) போகீர் என்பர்கள். என்றவாறே இருக்கச் சொல்லிற்றாகக்கொண்டு இருக்குமிறே † பழையவாஸனையாலே. (ஈங்கிரேல்மின்) நீரிருக்கிறவிடந்தன்னை அறிந்திலீரோ, உமக்கு இங்குத்தை இருப்பில் ஓரந்வயமில்லைகாணும், போம், என்பர்கள். "என்தான்? எனக்கு ப்போகவேண்டுகிற ஹேதுவென்?" என்னுமே; (இருமி இளைத்தீர் - உள்ளம் கூசியிட்டீர்) என்பர்கள். இருமலாலே போர இளைத்தீர், உம்மை அறிவீரே, "இவர்கள் முன்னே இப்படி படுவோமே!" என்று எங்கள் ஸந்நிதியை யநுஸந்தித்து ஹ்ருதயம் கூசினீர் என்று சொல்லுகிற. (குவளையங்கண்ணியர்பால்) †இவனுடைய எளிவரவு காண்கைக்காக ஸாதரமாகப்பார்ப்பர்களாயிற்று. † அருநஞ்சாகிலுமாகிறது; ஆரமுதாகிலுமாகிறது, இவர்கள்தான் பார்க்கப்பெற்றோமிறே! என்று இவனுடைய பாவ பந்தத்துக்குடலாயிருக்குமாயிற்று. (நாசமானபாசம்விட்டு) ஏதே

அரு.—எட்டாம்பாட்டு.—(ஈசியித்யாதி). செப்பு நேர்மென் கொங்கை நல்லார் முலைக்கச்சை நெகிழ்த்துவது சிரிப்பதானவாறே, இவன் தன் ப்ராப்யம் கைபுகுந்தது என்று அங்கேயிருக்கத்துடங்குமே, அநந்தரம் அவர்கள் பண்ணும் பரிபவத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

முந்துற முன்னம் "ஈசி" என்னவொண்ணாமையாலே "போமின்" என்ன, போகாமையாலே "ஈசி" என்கிறார்களென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (நடவும்) என்று. (பழையவாஸனையாலே) என்றது - ப்ரணயரஸத்தாலூடிக்கொண்டு போகச்சொல்லுவது இருக்கைக்காகவே சொல்லுவர்களே, அந்த வாஸனையாலே யென்றபடி. "ஈங்கிரேன்மின்" என்றபின்பும் பாசம் வருகைக்கு ஹேதுத்வேந, "குவளையங்கண்ணியர்" என்றதென்னுமிடம் தோற்றவருளிச்செய்கிறார், (இவனுடைய வித்யாதி). பேச்சாலே ஆசையறுத்திருக்கவும் கண்ணாலே வளைத்துவைத்தால் ஸங்கம் வரும்படியை உபபாதிக்கிறார், (அருநஞ்சாகிலுமித்யாதி). ... ... (அ)

மூ —புலன்கள்நைய மெய்யில்மூத்துப் போந்திருந்துள்ள மெள்கிக்
கலங்க வைக்கள் போதவுந்திக் கண்டபிதற் றுமுன்
அலங்கலாய தண்டுழாய் கொண்டாயிர நாமம்சொல்லி
வலங்கொள் தொண்டர் பாடியாடும் வதரி வணங்குதுமே. ()

பதம்.	உரை.
மெய்யில்	சரீரத்தில்
புலன்கள்	இந்த்ரியங்கள்
நைய	சிதிலமாம்படி
மூத்து	கிழத்தனமடைந்து
போந்து	ஏகாந்தமான விடந் தேடிப்போய்
இருந்து	(அங்கே) இருந்து
உள்ளம் எள்கி	நெஞ்சுகலங்கியும்
கலங்க	(வாதபித்தஶ்லேஷ்மங்கள்) வேறுபட (அத்தாலே)
ஐக்கள்	கபமானது
போத உந்தி	போரத்தள்ளியும் [ம்
கண்ட	கண்டத்தை யெல்லா
பிதற்றுமுன்	வாயில்வந்தபடி சொல்லுவதற்கு முன்னே,
வலம்கொள்	ப்ரதக்ஷிணம்(தடக்கமான அநுகூலவ்ருத்திகள்) பண்ணுகிற
தொண்டர்	சேஷபூதரான ஸ்ரீவைஷ்ணவர்கள்
அலங்கலாய	மாலாரூபமான
தண்துழாய்	குளிர்ந்ததிருத் துழாயை
கொண்டு	கையில்ஏந்திக் கொண்டு
ஆயிரம்நாமம்	(அவனுடைய) ஆயிரம்திருநாமங்களையும்
சொல்லி	உச்சரித்து
பாடி	காநம்பண்ணி
ஆடும்	நர்த்தநம்பண்ணுகிற
வதரி	ஸ்ரீபதரியிலெழுந்தருளியிருக்கும்ஸர்வேஶ்வரனை
வணங்குதும்	ஸேவிப்போம். (௯)

னும் தசையிலுமிவனைவிடாதே விநாசத்தைப்பலிப்பிக்கும்படியான ஸங்கமாயிற்று. ஹேயவிஷயத்தில்ஸங்கம் விநாசத்தைப் பலிப்பிக்குமிறே. அத்தைத்தவிர்ந்து, நல்வழிபோகப்பார்க்கில்; தன்னை ஆஶ்ரயித்தார்க்குக்கொடுத்து ஆதரிக்கைக்காக மாலையிட்டிருக்கிறவனதானவதரியை வணங்குதுமே. (அ)

வ்யா —ஒன்பதாம்பாட்டு.—(புலனித்யாதி) சரீரத்தில் இந்த்ரியங்களானவை, ஸந்நிவேசமும் கிடக்கச்செய்தே தந்தாமுடைய விஷயங்களைப் பரிக்ரஹிக்கவும் மாட்டாதே, சிதிலமாம்படிமூத்து. (போந்திருந்து) அல்லாதாரோபாதி காண்பனகாணவும் கேட்பன கேட்கவும் பெறுமையாமலே † ஆள்நடையாடாத விடந்தேடிப்போந்

அ ந.—ஒன்பதாம்பாட்டு.—(புலனித்யாதி) "ஏங்கிரேன்மின்" என்று சொன்னதே பலித்து விடுகையாலே அவஸாதம் விஞ்சி விஜநப்ரதேசத்திலே பிதற்றும்படியை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

குவளையங்கண்ணியர் 'ஏங்கிரேன்மின்" என்றபின்பு, ஸ்வஜநத்தோடு பரஜநத்தோடு பொருந்தாதே தனியே இடந்தேடிப் பிதற்றுகை ப்ராப்தமாகையாலே, (ஆள்நடையாடாதவிடந்தேடி) என்றது.

மூ—வண்டு தண்டே னுண்டுவாழும் வதரி நெடுமாலைக்
கண்டல்வேலி மங்கைவேந்தன் கலிய னொலிமாலை
கொண்டுதொண்டர் பாடியாடக் கூடிடில் நீள்விசும்பில்
அண்டமல்லால் மற்றவர்க் கோராட்சி யறியோமே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வண்டு	வண்டுகள்		யுடையஇப்பத்துப்
தண்தேன்	குளிர்ந்ததேனை		பாட்டையும் கொ
உண்டு	பானம் பண்ணி		ண்டு
வாழும்	களித்துவர்த்திக்கிற	தொண்டர்	சேஷபூதரானவர்கள்
வதரி	ஸ்ரீபதரியில்எழுந்தரு	பாடி	கானம்பண்ணி [றில்
	ளியிருக்கும் [மாக	ஆடக்கூடிடில்	நர்த்தநம்பண்ணப்பெ
நெடுமாலை	ஸர்வாதிகன் விஷய	நீள்விசும்பிலல்	பரமபதத்தையொழிய
கண்டல்	தாழைகளை	லால்	
வேலி	வேலியாகவுடைய	மற்று	வேறு
மங்கை	திருமங்கைக்கு	ஓர் அண்டம்	ஒருலோகத்தில்
வேந்தன்	ராஜாவான	அவர்க்கு	அவர்களுக்கு
கலியன்	ஆழ்வாரருளிச்செய்த	ஆட்சியறியோம்	ஆளுகையில்லை. (௧௦)
ஒலிமாலை கொ ண்டு	சப்த ஸந்தர்ப்பங்களை		

திருந்து. (உள்ளமெள்கி) "நாம்பட்டதோ!" என்று ஹ்ருதயமானது ஈடுபட்டு. (கலங்கவித்யாதி.) † தோஷத்ரயமும்தலையெடுத்தவாறே ஸ்லேஷ்மாவானது போரத்தள்ளுமாயிற்று. (கண்டபிதற்றுமுன்) பின்னை † ப்ரதிபந்நங்களைப் பிதற்றுவதுக்குமுன்னே. (அலங்கலாய) அங்குத்தைக்குச் சாத்தியருளுகைக்கீடான மாலையான திருத்துழாயைக்கொண்டு. (ஆயிரநாமம்சொல்லி) கண்டபிதற்றும்ம † அவ்வழியே இந்த்ரியத்துக்கு அடைத்ததிருநாமம் சொல்லி, (௧) "நாவாயிலுண்டே" இத்யாதிப்படியே. (வலங்கொளித்யாதி) அநுகூலவ்ருத்திகளைப் பண்ணாநின்றுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள், சாத்துகைக் கீடானமாலைகளையும்மந்தி, திருநாமங்களையும் சொல்லி, பாடுவதாடுவதாகா நிற்பார்கள்; அத்திரளிலேபுக்கு அவர்களிலே யொருவராயாஸ்ரயிப்போம். (௯)

(தோஷத்ரயம்) வாதபித்த ஸ்லேஷ்மவிகாரங்கள் - "கண்ட" என்றது - கண்டத்தை யென்றாய், (ப்ரதிபந்நங்களை) என்றது. (அவ்வழியே) என்றது- ப்ரதிபந்நங்களைச் சொன்னநாவாலே யென்றபடி. இந்த்ரியத்துக் கடைத்தது திருநாமம் என்னுமதுக்கு ஸம்வாதம், (நாவாயிலித்யாதி). [மெய்யில் - புலன்கள் நையமூத்தித்யாதி, - வலங்கொள் தொண்டர் அலங்கலாய தண்டுழாய் கொண்டாயிரநாமம் சொல்லி பாடியாடும் வதரிவணங்குதும்] என்று அந்வயம். ... ... (௯)

(௧) ௧ - திரு - ௯.

வ்யா.—பத்தாம்பாட்டு. (வண்டுதண்டேனித்யாதி) †ஸர்வபதார்த்தங்களுமுத்தேஶ்யலாபத்தாலே களித்துவர்த்திக்கும் தேசமாயிற்று. இப்படியிருக்கிற ஸ்ரீவதரியிலே வந்திருக்கிற ஸர்வாதிகனைக் கவிபாடிற்று. (கண்டல்வேலி) கண்டலென்று தாழை. கடல்அணித்தாகையாலே தாழைகளுண்டாயிருக்குமிறே. பூத்ததாழைகளை வேலியாக உடைத்தான திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வாருளிச்செய்தமாலை. (கொண்டுதொண்டர் பாடியாடக்கூடிடில்) இவற்றைக்கொண்டு, (க) "வழுவிலாவடிமைசெய்யவேண்டும்"என்றிருக்கிறவர்கள் பாடுவதாடுவதாகக் கூடிடில். நீள்விசும்பு என்கிறது - உபரிதநலோகங்களினுடைய ஸமுதாயத்தை; அதில், (அண்டமல்லால்)பரமபதமல்லது, மற்று அவர்க்காட்சி யதியோமென்னுதல்;அன்றிக்கே, நீள்விசும்பென்கிறது - பரமபதமாய், அதிலல்லால் மற்றோரண்டமவர்க்கு ஆட்சியாக வதியோமென்னுதல். † ப்ரக்ருதிப்ராக்ருதங்களில் இவர் அருளிச்செய்த தோஷம் ப்ரத்யக்ஷித்து அநுபவியாநின்றோம், அவ்வோபாதி பகவத்விஷயமாக விவரருளிச்செய்ததும் மெய்யாயிருக்குமிறே; ஆனபின்பு, இவர்விடச்சொன்னவற்றைவிட்டு இவர்பற்றச் சொன்னவற்றைப் பற்றுகையிறே சேதநராயிருப்பார்க்குச் செய்யவடுப்பது. (௧0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு.—(வண்டுதண்டேனித்யாதி) வண்டு, வானை. - தொண்டர்களைக் கீழே யருளிச்செய்கையாலே, இதிலே வண்டைச்சொன்னது உபலக்ஷணமென்றருளிச்செய்கிறார், (ஸர்வபதார்த்தங்களுமித்யாதி). இத்தை அப்யஸித்தமாத்ரத்திலே, பரமபதமுண்டாகக் கூடுமோவென்ன; இது அர்த்தவாதமன்றோ வென்ன; அருளிச்செய்கிறார், (ப்ரக்ருதியித்யாதி).

ஜீயர் திருவடிகளே சரணம்.

முதற்பத்தில் மூன்றாந்திருமொழி முடிந்தது.

(க) தி - வாய் - ௬ - ௬ - க.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

முதற்பத்து - நாலாந்திருமொழி - ஏனமுனாகி.

மூ.—ஏனமுனாகி யிருநிலமிடந்தன்
  றிணையடியிமையவர் வணங்கத்
தானவனாகம் தரணியிற்புரளத்
  தடஞ்சிலை குனித்தவென் தலைவன்
தேனமர் சோலைக் கற்பகம் பயந்த
  தெய்வநன்னறு மலர்கொணர்ந்து
வானவர் வணங்கும் கங்கையின் கரைமேல்
  வதரியாச் சிராமத்துள்ளானே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	(பூமியை ப்ரளயம் கொண்ட) அக்காலத்திலே	குனித்த	வளைத்தருளின
இமையவர்	ப்ரஹ்மாதிகள்	என் தலைவன்	என்ஸ்வாமியான நாராயணன்,
இணை அடி	சேர்த்தியழகையுடைய திருவடிகளை	தேன் அமர்	தேன்மிக்குள்ள
வணங்க	ஆஸ்ரயிக்கும்படியாக	சோலை	சோலைசெய்திருந்து
முன்	வராஹகல்பத்தின் ஆதியிலே	கற்பகம்	கல்பவ்ருக்ஷமானது
ஏனமாகி	பன்றிரூபங்கொண்டு	பயந்த	உண்டாக்கின
இருநிலம்	பரப்புடைத்தான பூமியை	தெய்வம்	திவ்யமாய்
இடந்து	குத்தியெடுத்து	நல்	விலக்ஷணமாய்
தானவன்	தநுவம்சத்தில்பிறந்த ராவணனுடைய	நறு	பரிமளமுடைய
ஆகம்	சரீரமானது	மலர்	புஷ்பங்களை
தரணியில்	பூமியிலே	வானவர்	தேவர்கள்
புரள	புரளும்படி	கொணர்ந்து	கொண்டுவந்து (ஸமர்ப்பித்து)
தடம்	பெரிய	வணங்கும்	ஆஸ்ரயிக்கும்படியாக
சிலை	வில்லை	கங்கையின் கரைமேல்	கங்காதீரத்திலுள்ள
		வதரியாச்சிராமத்து	பதரிகாஸ்ரமத்திலே
		உள்ளான்	எழுந்தருளியிருக்கிறான்.

அநு.—ஏனமுனாகிப்ரவேசம்.—கீழ்த்திருமொழியிலே, மந்த்ரப்ரதனான நாராயணன் வர்த்திக்கிறதேசத்தை யாஸ்ரயிப்போமென்று திருவுள்ளத்துக்குச்சொல்ல, நமக்கு ஸச்சிஷ்ய லக்ஷணங்களறிந்தன்றோ ஆஸ்ரயிக்கவடுப்பது என்றாறியிருக்க; அக்குறைதீர்ந்தாரு யெழுந்தருளியிருக்கும் தேசமான பதரிகாஸ்ரமத்தை ஆஸ்ரயிப்போமென்றருளிச்செய்கிறாரென்று ஸங்கதி

வ்யா.—ஏனமுனாகி ப்ரவேசம்.—†ஸ்ரீபதரியென்றும் பதரிகாஶ்ரமமென்றும் இரண்டு திருப்பதியாய், அதில் இங்குத்தை யிருப்பாகிறது-ப்ரஜைஃயினுடைய ரக்ஷணத்துக்குறுப்பாகத் தாய் † குடிநீர்குடிக்குமோபாதி இவைதன்னை வழிப்படுத்துகைக்குறுப்பாகத்தான் தபஸ்ஸுபண்ணி ஹிதகாமனாயிருக்கிறவிடமாய், சென்று ஆஶ்ரயிக்கும் நந்துறையே துறையாக, ஆஶ்ரயணீயனானவன் தன்குறையறுத்துக்கொண்டிருக்கிற விடமாயிருந்தது; ஆனபின்பு, நாமங்கேபோய் ஆஶ்ரயிப்போமென்று திருவுள்ளத்தோடேகூட்டுகிறார். இந்த திருவுள்ளத்தைக் குறித்தருளிச் செய்கிறவிடமுண்டோ வென்னில்; கீழே (க) "வதரிவணங்குதும்" என்றும், (உ) "அறிதியாகில் நெஞ்சம்" என்றும், சொல்லிக் கொடுபோந்து, இதிலும், (ந) "துணிவினி யுனக்குச்சொல்லுவன் மனமே" என்று - முடியத்திருவுள்ளத்தைக் குறித்துச் சொல்லிற்றாயிறே யிருக்கிறது. † கீழ் தாம்பெற்றதாகச் சொல்லி அர்த்தாநுஸந்தாநம் பண்ணிப்போந்த மந்த்ரப்ரதனான நாராயணன் வந்திருக்கிறதேசமா † யிருக்குமிறே.

முதற்பாட்டு. — (ஏனமுனாகி யித்யாதி) (முன் ஏனமாகி) வராஹகல்பத்தினுடைய ஆதியிலே, அண்டபித்தியிலே புக்குச்சேர்ந்து பரப்புடைத்தான பூமியை; † அத்தை யெடுக்கைக்கீடான செருக்கையுடைய மஹாவராஹமா யெடுத்துக்கொண்டு. (அன்றிணை யடியிமையவர்வணங்க) அப்போது அந்த †உளைமயிர்களிலே யொதுங்கிக்கிடந்த ப்ரஹ்மாதிகள், சேர்த்தியழகையுடைத்

தன்னை யருளிச்செய்கிறார், (ஸ்ரீபதரியித்யாதி). (குடிநீர்) - கஷாயம். இத்தால், (ச) "சிஷ்யனாய்நின்றது - சிஷ்யனிருக்குமிருப்பு நாட்டாரறியாமையாலே அத்தையறிவிக்கைக்காக" என்கிறபடியே, சேதநரை வழிப்படுத்துமென்றதாயிற்று. கீழ் மூன்று திருமொழியில் ப்ரமேயத்தையு மநுவதித்து ஸங்கதியை ஸ்ப்புரிப்பிக்கிறார், (கீழித்யாதி). (இருக்குமிறே) என்றவநந்தரம், "இங்கு தான் வர்த்திக்கிற தேசத்தைச்சொல்லுகிறது" என்று சேஷம்.

முதற்பாட்டு. (ஏனமுனாகியித்யாதி) நிலத்துக்கிருமை சொல்லுகையாலே பலித்தவர்த்தம், (அத்தையித்யாதி). (உளைமயிர்) - பிடரிமயிர். (ரு) "𑌨𑌮𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌵𑌰𑌾𑌹𑌾𑌯 𑌲𑍀𑌲𑌯𑍋𑌦𑍍𑌧𑌰𑌤𑍇 𑌮𑌹𑍀𑌮𑍍 । 𑌖𑍁𑌰𑌮𑌧𑍍𑌯𑌗𑌤𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌮𑍇𑌰𑍁𑌃 𑌖𑌣𑌖𑌣𑌾𑌯𑌤𑍇-நமஸ்தஸ்மைவராஹாய லீலயோத்தரதேமஹீம் | குரமத்யகதோயஸ்ய மேருः கணகணாயதே" என்கிறபடியே வளர்ந்த திருமேனியாகையாலே, உபரிதநலோகவர்த்திகள் உளைமயிரிலேயிருக்கை ப்ராப்தமென்று கருத்து.

(க) க-ந-க. (உ) க-ந-ந. (ந) க-ச-ச (ச) முமுக்ஷுப்ப-க. (ரு)

மூ.—கானிடையுருவைச் சுடுசரந்துரந்து
கண்டுமுன்கொடுந் தொழிலுரவோன்
ஊனுடையகலத் தடுகணை குளிப்ப
வுயிர்கவர்ந்துகந்த வெம்மொருவன்

தான திருவடிகளை யாஶ்ரயிக்க. (க) † “సుకవికట సటాసఙ్కటైః-ஸுக விகடஸடாஸங்கடை:” என்னக்கடவதிறே. (தானவனித்யாதி) † இப்போது, தானவனென்கிறது - ராவணனை. (உ) “தையலாள் மேல் காதல்செய்ததானவன் வாளரக்கன்” என்னக்கடவதிறே. தநு (దను)வினுடைய வம்சஜனென்று தானவனென்கிறதாதல், ஆஸுரமான வ்யாபாரங்களை யுடையவனென்றுதல். † ராவணனுடைய, வராதிகளாலே பூண்கட்டி யிருக்கிற சரீரமானது அம்பு தைச்சு பூமியிலே புரளும்படியாக. (தடஞ்சிலையித்யாதி.) (ங) “మహాధనుః-மஹத்தநு:” என்கிறபடியே, அளவுடைத்தான வில்லைவளைத்த. (என்தலைவன்) வீரரஸத்தில் ப்ரதாநனான என்னுயன்.

(தேனமரித்யாதி) ராவணனுடைய மிடுக்காலே கல்பகவ்ருக்ஷத்தினுடையபூவைப் பணிப்பூவிட்டுத் திரிவர்களாயிற்று தேவர்கள் முன்பு; அவன் தலையறுப்புண்டவாறே, அத்தை ப்ராப்த விஷயத்திலே யாக்கினர்களாயிற்று. தேன்மிக்குச்சோலைசெய்திருந்துள்ள கல்பகமானது உண்டாக்கின, திவ்யமாய், விலக்ஷணமாய், செவ்வியை யுடைத்தான பூக்களைக்கொண்டு, தேவர்கள் ஆஶ்ரயிக்கும்படியாக, கங்காதீரத்திலே ஸ்ரீபதரிகாஶ்ரமத்திலே வந்து ஸந்நிஹிதனானன். ... ... (க)

உளைமயிரிலே யிருக்கைக்கு ப்ரமாணம், (ஸுகவியித்யாதி). ஸுகவிகளுக்கு, கடகல்பமாய் - வர்ண்யத்வேந ஆஸ்ரயமாயிருக்கிற, ஸடைகளிலே - பிடரிமயிர்களிலே, ஸங்கடை: - நெருங்கியிருக்கிறவர்களாய் என்றர்த்தம் கண்டுகொள்வது. ப்ரமாணத்திரட்டிலேயானால் (ச) “ఉత్తిష్ఠతస్తస్య జలార్ద్రపక్షైర్మహావరాహస్య మహీం ప్రగృహ్య । విధున్వతో వేదమయం శరీరం రోమాన్తరస్థా మునయస్స్తువన్తి-உத்திஷ்டதஸ்தஸ்ய ஜலார்த்ரகுக்ஷேர்மஹாவராஹஸ்யமஹீம் ப்ரக்ருஹ்ய। விதுந்வதோவேதமயம் சரீரம் ரோமாந்தரஸ்த்தா முநயஸ்ஸ்துவந்தி” என்கிற வசநத்தை யெடுத்திருக்கிறது. “சிலைகுனித்து” என்கையாலே ஹிரண்யாக்ஷனைச் சொல்லவொண்ணாதென்றருளிச்செய்கிறார், (இப்போதித்யாதி). தநுவம்சம் ராவணனுக்கு மாத்ருவம்சமாகையாலே, ஸமபிவ்யாஹார தாத்பர்யம், (ராவணனுடையவித்யாதி). “வணங்கும்படி - நிலமிடந்து” என்றந்வயம் ... ... (க)

(க) (உ) உ - உ - உ. (ங) ரா - (ச) வி - பு - க - ச - உகூ.

தேனுடைக்கமலத் தயனொடு தேவர்
சென்றுசென்றிறைஞ் சிடப்பெருகு
வானிடைமுதுநீர்க்கங்கையின்கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கானிடை	காட்டில்	எம்ஒருவன்	ஒப்பற்றபலமுடையனான என்ஸ்வாமி,
உருவை	மாயாம்ருகத்தை	தேன்உடை	தேனையுடைத்தான
கண்டு	பார்த்து	கமலத்து	திருநாபிகமலத்திற் பிறந்த
சுடுசரம்	சுடக்கடவ அம்பை	அயனொடு	ப்ரஹ்மாவோடேகூட
துரந்து	(அதின்மேலே)விட்டு	தேவர்	தேவர்கள்
முன்	ஸுக்ரீவன் சரணம்புகுந்தவன்று	சென்றுசென்று	நான்நான் என்று இழிந்து
கொடும்தொழில்	க்ரூரமான செயலையும்	இறைஞ்சிட	ஆஶ்ரயணத்துக்குறுப்பாக ஸ்நாநம்பண்ண (அத்தாலே)
உரவோன்	மிடுக்கையுமுடைய வாலியினது	வானிடை	ஆகாசத்திலேயாய்
ஊன்உடை	மாம்ஸம்நிறைந்த	முதுநீர்	பழையதானஜலம்
அகலத்து	மார்விலே	பெருகு	மிக்குவருகிற
அடுகணை	கொலையம்பானது	கங்கையின்கரைமேல்	கங்கைக்கரையிலே
குளிப்ப	அழுந்தும்படி பண்ணி	வதரியாச்சிராமத்துள்ளான்	பதரிகாஶ்ரமத்திலெழுந்தருளியிருக்கிறான். (உ)
உயிர்	(அவன்)ப்ராணனை		
கவர்ந்து	அபஹரித்து		
உகந்த	ப்ரீதனான		

வ்யா — இரண்டாம்பாட்டு. (கானித்யாதி) தன்னிலமான காட்டிலே ஸஞ்சரிக்கிற, உருஉண்டு - மான் - மாயாம்ருகம், அத்தைக்கண்டு. (சுடுசரம் துரந்து) ஒருவர்க்கும் தோற்றாதபடி மறைவது தோற்றுவதாய்த் திரிகிற அத்தைக்கண்டு, பொறுக்கவொண்ணாதபடியான அம்பைவிட்டு; முன்பு. (கொடுந்தொழிலித்

அ௩.—இரண்டாம்பாட்டு.(கானிடையித்யாதி)கோ(஘்ஸ)ரமான ஸம்ஸாரப்ரளயத்தில் நின்றும் தம்மையெடுத்தபடியாலே,ப்ரஸ்துதமான வராஹாவதாரபதாநத்தில் பூமிப்பிராட்டிக்கு உபகரித்தவளவன்றிக்கே பெரியபிராட்டியார்க்காக ராவணவதம்பண்ணினமையை யநுஸந்தித்தார் கீழ்ப்பாட்டில்; அதுக்கடியான மாயாம்ருக நிரஸநாதிகளை யருளிச்செய்கிறாரிப்பாட்டில் என்று ஸங்கதி கண்டுகொள்வது.

“பன்றியாய்” என்று முதல்திருமொழியிலே ப்ரஸ்துதமானத்தை, “ஏனமுனாகி” என்று ஸ்ப்புரிப்பித்தாரென்று திருவுள்ளம், “வாலிமாவலத்தொரு

மூ.—இலங்கையும் கடலுமடலரும் துப்பி
　　னிருநிதிக்கிறைவனும் அரக்கர்
குலங்களும் கெட முன் கொடுந்தொழில்புரிந்த
　　கொற்றவன் கொழுஞ்சுடர் சுழன்ற
விலங்கலி லுரிஞ்சி மேல் நின்ற விசும்பில்
　　வெண் துகில் கொடியென விரிந்து
வலந்தரு மணிநீர்க் கங்கையின் கரைமேல்
　　வதரியாச்சிராமத்துள்ளானே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இலங்கையும்	லங்கையும்	புரிந்த	பண்ணின [வரன்,
கடலும்	ஸமுத்ரமும்	கொற்றவன்	ராஜாவானஸர்வேஶ்
அடல் அரும்	(ஒருவராலும்) வெல்ல ஒண்ணாத	கொழு	விளங்காநின்றுள்ள
		சுடர்	ஸூர்யன்
துப்பில்	பலத்தையுடையனாய்	சுழன்ற	சுழலவருகிற
இருநிதிக்குஇறைவனும்	சங்கநிதிபத்மநிதிகளுக்குஸ்வாமியானராவணனும்	விலங்கலில்	மேருபர்வதத்திலே
		உரிஞ்சி	தாக்கி
		மேல்நின்ற	மேலே யிருக்கிற
அரக்கர் குலங்களும்	ராக்ஷஸஜாதியும்	விசும்பில்	ஆகாசத்திலே
		வெள்	வெளுத்தநிறத்தையுடைத்தாய்
கெட	நசிக்கும்படியாக		
முன்	ராமாவதாரத்தில்	கொடித்துகிலென	த்வஜத்தில் கட்டப்பட்ட வஸ்த்ரம்போ
கொடு	கொடிய		
தொழில்	வ்யாபாரங்களை	விரிந்து	பரந்து [லே

யாதி) †க்ரூரமான செயலையுடையனான வாலியுடைய †தசைந்து அகன்றிருந்துள்ள மார்விலே கொலையம்பானது அழுந்தும்படி பண்ணி, அவ்வழியாலே அவனுடைய ப்ராணனை யபஹரித்து, "மஹாராஜர்விரோதி போகப்பெற்றோம்" என்று உகந்த அத்வி தீயமான பலத்தையுடையவன்.

(தேனித்யாதி) திருநாபிகமலத்தை உத்பத்திஸ்த்தாநமாகவுடைய ப்ரஹ்மாவோடே தேவர்களானவர்கள், அஹமஹமிகயா இழிந்து, ஆஶ்ரயணத்துக்குறுப்பாக ஸ்நாநம் பண்ணப்புக்கவாறே ஒன்றால் குறைதல் நிறைதல் செய்யாதே ஏகரூபமாயிருக்கக்கடவ ஜலம் பெருகுமாயிற்று; திருவடிகள் †ஸஹ்யமாகையாலே. (வானிடைமுதுநீர்) ஆகாசத்திலேயாய்ப் பழைதான நீரென்றபடி. (௨)

வன்" என்றத்தை ஸ்மரிக்கிறாரென்று விவக்ஷித்து, உரவோன் - மிடுக்கையுடைய வாலி என்றருளிச்செய்கிறார், (க்ரூரேத்யாதி). (தசைந்து) - மாம்ஸளமாய். "அடு" கொல்லுகிற. (ஸஹ்யமாகையாலே) - திருக்காவேரிக்கு ஸஹ்யபர்வதம் உத்பத்தி ஸ்த்தாநமானாற்போலேயாகையாலே. ... (௨)

மூ.—துணிவினி யுனக்குச்சொல்லுவன் மனமே
தொழுதெழு தொண்டர்கள் தமக்குப்
பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும்
பேரருளாளனெம்பெருமான்
அணிமலர்க்குழலாரரம்பையர்துகிலு
மாரமும் வாரிவந்தணிநீர்
மணிகொழித்திழிந்த கங்கையின் கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (ச)

வலம்தரும்	(வேகத்தாலே) பலத்தையுடைத்தாய்	பதம்.	உரை.
மணி	தெளிந்திருக்கிற	மனமே	நெஞ்சே!
நீர்	ஜலம்நிறைந்த	இனி	இப்போது
கங்கையின்கரைமேல்வதரியாச்சிராமத்துஉள்ளான்	கங்காதீரத்திலுள்ள ஸ்ரீபதரிகாச்ரமத்திலே நித்யவாஸம் பண்ணுகிறான். ()	உனக்கு	விஷயவைலக்ஷண்யமறியாதவுனக்கு
		துணிவு	உறுதியான ஒருவார்த்தையை
		சொல்லுவன்	சொல்லுகிறேன்;

வ்யா.—மூன்றாம்பாட்டு. (இலங்கையுமித்யாதி) ஒருவராலழிக்கவொண்ணாதபடியான லங்கையும், அதுக்கும் அகழாம்படியிருக்கிற கடலும், ஒருவராலடர்க்கவரிய ஸாமர்த்யத்தையுடையனாய், ஜ்யேஷ்டனான வைச்ரவணனை வென்று வாங்கின சங்கநிதி பத்மநிதிகளையுடையனாயிருக்கிற ராவணனும், அவனுக்கு பலமான ராக்ஷஸஜாதியாகவும் மண்ணுண்ணும்படியாக, பண்டு க்ரூரமான வ்யாபாரங்களைப் பண்ணினராஜாவானவன். (க) "𑌇𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑍂𑌣𑌾𑌮𑌿𑌯𑌂 𑌭𑍂𑌮𑌿𑌸𑍍𑌸𑌶𑍈𑌲𑌵𑌨𑌕𑌾𑌨𑌨𑌾-இக்ஷ்வாகூணாமியம் பூமிஸ் ஸசைலவநகாநநா" என்னக்கடவதிறே.

(கொழுஞ்சுடரித்யாதி) † ஆதித்யனானவன் சுழலவாராநின்றிருந்துள்ள மேருவிலே †தாக்கி, மேல் நின்ற, விசும்பிலே - ஆகாசத்திலே, வெளுத்த நிறத்தையுடைத்தான கொடியாடையை விரித்தாற்போலே இதுவந்து விழும்போதை நீர்த்தெளிவிருக்கும்படி. (வலந்தருமணிநீர்) வேகத்தாலே மிடுக்கையுடைத்தாய்த் தெளிவையுடைத்தாயிருக்குமாயிற்று. ... ... (ங)

அரு.—மூன்றாம்பாட்டு. (இலங்கையித்யாதி). வாலிவதாநந்தரபாவியாய் முதற்பாட்டில் ப்ரஸ்துதமான ராவணவதத்தை ஸப்ரகாரமநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

மேருவாகிற த்வஜஸ்தம்பத்திலே வெளுத்ததுகிலாலே கொடியைக் கட்டிவிட்டாற்போலே ஸ்வச்சமான நீரையுடைத்தான கங்கையென்றருளிச் செய்கிறார், (ஆதித்யனித்யாதி). "உரிஞ்சி" என்றதினர்த்தம், (தாக்கி)என்றது.

(க) ரா - கி - கஅ - சு.

தொண்டர்கள் தமக்கு	ஆஶ்ரிதர்க்கு
பிணி	விரோதியா யுள்ளவற்றை
ஒழித்து	போக்கி
அமரர்	நித்யஸூரிகளுடைய
பெருவிசும்பு	பரமபதத்தை
அருளும்	தந்தருளுமவனாய்
பேர் அருளாளன்	பரமக்ருபாவானான
எம்பெருமான்	ஸர்வேஶ்வரன்,
அணிநீர்	தர்சநீயமான ஜலமானது
மலர்	புஷ்பங்களாலே
அணி	அலங்கரிக்கப்பட்ட
குழலார்	மயிர்முடியையுடையரான
அரம்பையர்	அப்ஸரஸ்ஸுக்களுடைய
துகிலும்	பரியட்டங்களையும்
ஆரமும்	ஹாரங்களையும்
வாரிவந்து	திரட்டிக்கொண்டும்
மணி	ரத்நங்களை
கொழித்து	தள்ளிக்கொண்டும்
இழிந்த	வந்திழிகிற
கங்கையின்கரைமேல்	கங்கைக்கரையிலுள்ள
வதரியாச்சிராமத்து	ஸ்ரீபதரிகாஶ்ரமத்தில்
உள்ளான்	எழுந்தருளியிருக்கிறான், (அவனை)
தொழுது	ஆஶ்ரயித்து
எழு	உஜ்ஜீவிக்கப்பார்.(ச)

வ்யா. — நாலாம்பாட்டு. (துணிவினியுனக்குச் சொல்லுவன் மனமே தொழுதெழு) †இப்போது உனக்கு உறுதியாக ஒரு நல்வார்த்தை சொல்லுகிறேன் நெஞ்சே! கேள்; சொல்லச்செய்தே பின்னையும் சொல்லாததின் பலமேயாகாமே, நீயவனைத்தொழுது உஜ்ஜீவிக்கப்பாராய். நீர் உறுதியாகச் சொல்லுங்காட்டில், அவன் நம்விரோதியைப்போக்கி நன்மையைத் தருமோவென்ன; (பிணியித்யாதி) † நம் விரோதியையும் போக்கிப் பரமபதத்தையும் நமக்குத் தரும். † ஒருகாலாஶ்ரயித்தமாத்ரத்திலே, நம் விரோதியைப்போக்கி நித்யஸூரிகளிருப்பை நமக்குப் பண்ணித்தரும் பெரிய க்ருபாவானான ஸர்வேஶ்வரன்.

அரு.—நாலாம்பாட்டு. (துணிவினியித்யாதி). அவதாரத்துக்கு ப்ரதாநப்ரயோஜநமான ராவணவதத்தைக் கீழ்ப்பாட்டிலே யருளிச்செய்தவாறே, அதிமாநுஷமான செயலாகையாலே, (க) * அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றினமையும் திருவுள்ளத்திலேதோற்ற, அந்தப்ரஸங்கத்திலே அவனுடைய மோக்ஷப்ரதத்வத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

இனியுனக்கு - துணிவாக - சொல்லுவன் என்று அந்வயித்தருளிச்செய்கிறார், (இப்போதித்யாதி). "தொண்டர்கள் தமக்குப் பெருவிசும்பருளும், மனமே தொழுதெழு" என்றவர்க்கு விவக்ஷிதமான உட்கருத்தை யருளிச்செய்கிறார், (நம் விரோதியையித்யாதி). வாக்யார்த்தத்தை யருளிச்செய்கிறார், (ஒருகாலித்யாதி).

(க) பெரு - திரு - கம - கம.

மூ.—பேயிடைக்கிருந்துவந்த மற்றவள்தன்
பெருமுலை சுவைத்திடப் பெற்ற
தாயிடைக்கிருத்த லஞ்சுவனென்று
தளர்ந்திட வளர்ந்த வென்தலைவன்
சேய்முகட்டுச்சி யண்டமும் சுமந்த
செம்பொன் செய் விலங்கலி லிலங்கு
வாய்முகட்டிழிந்த கங்கையின் கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (ரு)

பதம்.	உரை.
வந்த	தாய்போல்வந்த
பேய்	பூதனையுடைய
இடைக்குஇருந்து	மடியிலிருந்து
மற்று	அதுக்குமேலே,
அவள்தன்	அவளுடைய
பெருமுலை	பெரியமுலையை [டு)
சுவைத்திட	உண்ண;(அதைக்கண்
பெற்றதாய்	பெற்றதாயானயசோதைப்பிராட்டியானவள் [லே,
இடைக்கு	(பூதனையின்) மடியி
இருத்தல்	பொருந்தியிருக்கும் இருப்பை(க்கண்டு)
அஞ்சுவன்	பயப்படாநின்றேன்
என்று	என்றுசொல்லி

பதம்.	உரை.
தளர்ந்திட	கூசி(ப்பரிந்துவளர்க்க)
வளர்ந்த	வளர்ந்தருளின [ன்,
என்தலைவன்	என்ஸ்வாமியானவ
சேய்முகடு	உயர்ந்தசிகரத்தின்
உச்சி	உச்சியிலே
அண்டம்	அண்டத்தை
சுமந்த	தரிக்கிற
செம்பொன்செய்விலங்கலில்	சிவந்தபொன்னால்செய்யப்பட்ட மேருபர்வதத்திலே
இலங்கு	விளங்காநின்றுள்ள
வாய்	இடமுடைத்தான
முகடு	சிகரத்தில்நின்றும்
இழிந்த	வந்துவிழுகிற
கங்கையின்கரைமேல்வதரியாச்சிராமத்துள்ளான். (ரு)	

(அணியித்யாதி) † க்ருஷ்ணன்படியாயிற்று ஜலத்தினுடைய செருக்கு மிருப்பது. மலராலே யணியப்பட்ட குழலையுடையரான அப்ஸரஸ்ஸுக்களுடைய பரியட்டத்தையும் ஹாரத்தையும் வாரி †அணிகிற நீரென்னுதல்; அழகிய நீரென்னுதல். இவற்றைத் திரட்டிக்கொண்டு தர்சநீயமான நீரானது ரத்நங்களைக் கொழித்துக் கொண்டு வந்திழியாநின்றுள்ள வதரியாச்சிராமத்துள்ளானை; தொழுதெழு - என்கிறவிது இத்திருமொழிக்கெல்லாம் க்ரியை. (ச)

வஸ்த்ராபஹரணத்துக்கு ப்ரஸித்தி க்ருஷ்ணனிடத்திலே யாகையாலே அத்தை த்ருஷ்டாந்தீகரித்துக்கொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார், (க்ருஷ்ணனித்யாதி). (அணிகிறநீர்) என்றது - கரையை அலங்கரிக்கிற நீரென்றபடி. ... ... (ச)

ரு.—தேரணங்கல்குல் செழுங்கயற்கண்ணி
திறத்தொருமறத்தொழில் புரிந்து
பாரணங்கிமிலேறேழும் முன்னடர்த்த
பனிமுகில் வண்ணனெம்பெருமான்
காரணந்தன்னால் கடும்புனற்கயத்த
கருவரை பிளவெழக்குத்தி
வாரணங்கொணர்ந்த கங்கையின் கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முன்	பூர்வகாலத்தில்	செழு	அழகிய [ற
தேர்	தேர்த்தட்டானது	கயல்	கயல்மத்ஸ்யம்போன்
அணங்கு	வருந்தி ஒப்பாகாநின் றுள்ள [ளாய்	கண்ணிதிறத்து	கண்களையுடைய நப் பின்னைப் பிராட்டி க்காக
அல்குல்	நிதம்பத்தையுடைய		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பேயித்யாதி) (வந்த - பேயிடைக்கு இருந்து) †யசோதைப்பிராட்டியுடைய வடிவைக்கொண்டுவந்த பூதனையுடைய மடியிலேயிருந்து, † அதுக்குமேலே அவளுடைய பெரிய முலையையுண்டிட. (பெற்றதாயித்யாதி) †இத்தைக்கண்ட யசோதைப்பிராட்டியானவள், நாம் மடியிலேவைத்து முலைகொடுத்துப் போந்த வாஸனைகொண்டு இவன், கண்ட பாதகராய் நம்மை அநுகரித்துவந்தார்மடியிலே பொருந்தி அவள் முலையுண்கிறதென்று கூசி அவள் பரிந்துவளர்க்க வளர்ந்தவென்தலைவன்.

(சேயித்யாதி) ஓங்கியிருந்துள்ள சிகரத்தினுடைய உச்சியிலே அண்டத்தைத்தரிக்கிற சிவந்தபொன்னாலே செய்யப்பட்ட மேருவிலே விளங்காநின்றுள்ள †இடமுடைத்தான சிகரத்தில் நின்றுமிழிந்த கங்கையின்கரைமேலே வதரியாச்சிராமத்திலேவந்து ஸந்நிஹிதனானான். ... ... (ரு)

அரு.—அஞ்சாம்பாட்டு. (பேயிடைக்கித்யாதி) துகில்வாரிவந்ததென்னும் ப்ரஸங்கத்திலே க்ருஷ்ணனுடைய வஸ்த்ராபஹரணபதாநத்தில் செருக்கும் ஸ்ம்ருதமாய் அதுக்குஹேதுவாக யசோதைப்பிராட்டி வளர்த்தபடியை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

"வந்த" என்று விசேஷிக்கைக்குத் தாத்பர்யம், (யசோதையித்யாதி). "மற்று" என்றதினர்த்தம், (அதுக்குமேலே) என்றது. பெற்றதாய் மடியிலே வைக்க அஞ்சினாளென்றால், "மேலே வளர்ந்த" என்னக்கூடாமையாலே, அதுக்கீடாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (இத்தையித்யாதி). மிகவும்பரிவோடே வளர்த்தாளென்று கருத்து.

"வாய்" என்றதினர்த்தம், (இடமுடைத்தான) என்றது. ... ... (ரு)

மறம்	கோபத்தையுடைய	காரணந்தன்னுல்	பகீரதன்செய்த் தபஸ்ஸே ஹேதுவாக,
ஒருதொழில்	ஒருசெயலே	கடு	அதிகவேகத்தையுடைய
புரிந்து	செய்து,	புனல்கயத்த	ஜலத்தைத்தகைந்த
பார்	பூமியிலுள்ளார்	கருவரை	பெரியமலேயானது
அணங்கு	நோவும்படியான	பிளவுஎழ	பிளக்கும்படி
இமில்	கருத்துக்களேயுடைய	குத்தி	தோண்டி
ஏறுஏழும்	ருஷபங்கள்ஏழையும்	வாரணம்	(அங்குண்டான) யானைகளை
அடர்த்த	நிரஸித்தவனுய்	கொணர்ந்த	தள்ளிக்கொண்டுவந்திழிகிற
பனி	குளிர்ந்த	கங்கையின்கரைமேல்வதரியாச்சிராமத்துள்ளான். (ரு)	
முகில்	மேகம்போன்ற		
வண்ணன்	திருநிறத்தையுடையவனுய்		
எம்பெருமான்	எனக்குஸ்வாமியான		

வ்யா —ஆரும்பாட்டு. (தேரித்யாதி) தேரானது†வருந்தியொப்பாகாநின்றுள்ள, அல்குலே யுடையளாய் - நிதம்ப ப்ரதேசத்தையுடையளாய்; அணங்கென்று - நோவுபடுகைக்குப்பேர். தேர்த்தட்டை நிதம்பத்துக்கு ஒப்பாகச் சொல்லக்கடவர்கள். அழகிய கயலோடொத்த கண்களையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக, மறத்தையுடைத்தாயிருப்பதொரு செயலைச்செய்து, பூமியாக நோவுபடும்படியான † கருத்துக்களையுடைய ருஷபங்களேழையும் நிரஸித்து, அநந்தரம் விரோதிபோகப்பெற்ற ஹர்ஷத்தாலே, குளிர்ந்த மேகம்போலேயிருந்துள்ள வடிவையுடையனுய், அவ்வடிவாலே யென்னை அநந்யார்ஹனுக்கினவன்.

(காரணமித்யாதி) பகீரதன் கங்கையை யவதரிப்பிக்கிறபோது நடுவழியிலே ஒருமலைதகைந்துகொடுநின்றதாய் அத்தை யிரண்டு பிளவாம்படி குத்தி யானைகளையு முருட்டிக்கொண்டு இவ்வருகே போந்து இழிந்ததாகச் சொல்லக்கடவது, அதுக்கடி யென்னென்றால், (காரணந்தன்னால்) தன்னுடைய தபோபலத்தாலே, பஸ்ம

அரு.—ஆரும்பாட்டு. (தேரணங்கித்யாதி) வளர்ந்தபின்பு நப்பின்னையைத் திருமணம்புரிந்தமையை நினைத்தநுபவிக்கிருரெஸ்று ஸங்கதி கண்டுகொள்வது.

(வருந்தியொப்பாகாநின்றுள்ள) என்றதுக்கு - அணங்கென்று-நோவாய், அத்தாலே, மிகவும் ஸத்ருசமன்றென்று பலித்ததென்று கருத்து. மறத்தை- வ்ருஷபங்களினிடத்தில் கோபத்தை, "இமில்" என்றதினர்த்தம், (கருத்துக்களை) என்றது.

மூ.—வெந்திறல்களிறும் வேலைவாயமுதும்
விண்ணொடு விண்ணவர்க்கரசும்
இந்திரற்கருளி எமக்குமீந்தருளுமெந்தை
யெம்மடிகளெம்பெருமான்
அந்தரத்தமரரடியிணைவணங்க
ஆயிர முகத்தினாலருளி
மந்தரத்திழிந்த கங்கையின் கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (எ)

பதம்.	உரை.
வெம்திறல்	மிகுந்தமிடுக்கையுடைய
களிறும்	ஐராவதமென்கிற யானையையும், [டான
வேலைவாய்	திருப்பாற்கடலிலுண்
அமுதும்	அம்ருதத்தையும்
விண்ணொடு	ஸ்வர்க்கத்துடன்
விண்ணவர்க்கு அரசும்	தேவர்களுக்கு ராஜாவாயிருக்குமிருப்பையும்
இந்திரற்கு	இந்த்ரனுக்கு
அருளி	கொடுத்து
எமக்கும்	(அநந்யப்ரயோஜநரான) எங்களுக்கும்
ஈந்தருளும்	(தன்னைக்) கொடுத்தருளுமவனாய்
எந்தை	எனக்குப்பிதாவாய்
எம்அடிகள்	எமக்குஸ்வாமியாய்
எம்பெருமான்	எனக்குசேஷியானவன்,
அந்தரத்து	ஸ்வர்க்கத்திலுள்ள
அமரர்	தேவர்கள்
அடியிணை	திருவடிகளை
வணங்க	ஆஶ்ரயிக்கும்படி,
ஆயிரம்முகத்தினாலருளி	ஆயிரம்முகங்களால் புகவேணும் என்று ஸர்வேஶ்வரன் திருவுள்ளமாயருள்,
மந்தரத்து	மந்தரபர்வதத்தில் நின்றும்
இழிந்த	வந்திழிந்த
கங்கையின்கரைமேல் வதரியாச்சிராமத்துள்ளான். (எ)	

மாய்க்கிடந்த தன்னுடைய பாட்டன்மாருடைய சுத்யர்த்தமாகக் கங்கையைப் பெறவேணுமென்று தபஸ்ஸுபண்ணினானிறே, அந்தகாரணத்தாலே, †பழமையாலே வந்த†மிடுக்கையுடைய †ஜலத்தை யுடைத்தான, கருவரையானது இரண்டு பிளப்பாம்படி குத்தி அங்குண்டான ஆனைகளைத்தள்ளிக்கொண்டு வந்திழிகிற. அன்றிக்கே, அம்மலை தகைந்த வளவிலே இந்த்ரனை நோக்கி தபஸ்ஸுபண்ணினாய், பின்னை அவன் தன் சதுர்த்தந்தியை யிடுவித்து அம்மலை இரு பிளவாம்படி குத்துவித்து பின்னை அவ்வானைகொண்டுவந்ததாக ஒரு ப்ரமாண ப்ரஸித்தியுண்டு; அத்தைச்சொல்லிற்றாகவுமாம். (கூ)

(பழமை) - ஸ்வபாவம், அத்தாலே வந்தமிடுக்கு - அதிவேசம். (ஜலத்தை யுடைத்தான) என்றது - கங்கைக்கு விசேஷணம். ... ... (கூ)

மூ.—மான்முனிந்தொருகால் வரிசிலை வளைத்த
மன்னவன் பொன்னிறத்துரவோன்
ஊன்முனிந்தவனதுடலிருபிளவா
உகிர்நுதி மடுத்து அயனரனைத்
தான் முனிந்திட்ட வெந்திறற்சாபம்
தவிர்த்தவன் தவம்புரிந்துயர்ந்த
மாமுனி கொணர்ந்த கங்கையின் கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (அ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (வெந்திறலித்யாதி) †ஐராவதத்தையும் கடலிலம்ருதத்தையும் ஸ்வர்க்கத்தையும் அத்தோடேகூட தேவர்களுக்கு ராஜாவாயிருக்கு மிருப்பையும் இந்த்ரனுக்குக் கொடுத்தருளி, எனக்குத் †தன்னைத்தந்தருளின. (எந்தை) எனக்கு ஜநகன், எனக்கு ஸ்வாமி, இவற்றாலே என்னை அநந்யார்ஹனாக்கினவன்.

(அந்தரத்தமரரித்யாதி) †ஸ்வக்கத்தில் தேவர்கள் திருவடிகளை யாஶ்ரயிக்க, ஒருமுகஞ்செய்துவந்து புகில் கடல் பொறாதென்று பார்த்து, "ஆயிரம் முகத்தினாலே போய்ப்புகு" என்று ஸர்வேஶ்வரன் திருவுள்ளமாயருள, அப்படி மந்தரபர்வதத்தில் நின்றும் வந்திழிந்ததாயிற்று. †அன்றிக்கே, கங்கைதன்னை யாஶ்ரயிக்க அதுதானருளுகையாகவுமாம்; (ஆயிரமுகத்தினால்) மேருவிலே யிழிந்து மந்தரத்திலே யிழிந்து, ஹிமவானிலே யிழிந்து, இங்ஙனே பலவகைகளாலே வரும்படியைச் சொல்லக்கடவதிறே. (ஏ)

அரு.—ஏழாம்பாட்டு. (வெந்திறலித்யாதி) நப்பின்னைப்பிராட்டிக்குத் தன்னைக் கொடுத்தவளவன்றிக்கே ப்ரயோஜநாந்தரபரனுக்கும் அபேக்ஷித ஸம்விதானம் பண்ணினானென்று அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி யுட்கொண்டு வாக்யார்த்தமருளிச்செய்கிறார், (ஐராவதத்தையுமித்யாதி). "எமக்கும்" என்றத்தால் - களிறுமுதலானவற்றைத் தமக்குத் தந்தானென்று தோற்றினாலும் இது இவர் ப்ரக்ருதிக்குச்சேராதென்று விவக்ஷித்து, (தன்னை) என்று அத்யாஹரித்தருளிச்செய்கிறார், (எனக்கித்யாதி).

(க) "நாளுநந்திருவுடையடிகள் தம்நலங்கழல் வணங்கி" என்கிறவிடத்தில் "வணங்கி" என்கிறவிது - வினையெச்சமாய், வணங்கவென்று அர்த்தமாயிருக்கிறதென்று வ்யாக்யாநம் செய்தாற்போலே, இங்கே, "அருளி" என்றத்தை, அருள என்றாக்கி, இம்முகத்தினால் புகு என்று அத்யாஹாரமும் திருவுள்ளம்பற்றி ஒருயோஜனையருளிச்செய்கிறார், (ஸ்வர்க்கத்திலித்யாதி). இந்த யோஜனையில், "அடியிணை" என்றத்துக்கு ஸ்வாரஸ்யமுண்டென்று திருவுள்ளம். "அருளி" என்ற பதஸ்வாரஸ்யத்தைப்பற்ற யோஜநாந்தரம், (அன்றிக்கேயித்யாதி). இந்தயோஜனையில், "மந்தரம்" என்று - பஞ்சமியன்றிக்கே ஸப்தமியாய், அது உபலக்ஷணமென்று கருத்து. ... ... (ஏ)

(க) தி - வாய் - க - ரு - அ.

பதம்.	உரை.
ஒருகால்	பஞ்சவடியிலிருக்கும் போது
மான்	மானனமாரீசனை
முனிந்து	கோபித்து
வரி	அழகிய
சிலை	வில்லை [த்த
வளைத்த	(அவன்மேலே) வளை
மன்னவன்	ராஜாவாய்,
பொன்நிறம்	பொன்போலும் நிறத்தையும்
உரவோன்	மிடுக்கையுமுடைய ஹிரண்யனுடைய
ஊன்	மாம்ஸத்தை
முனிந்து	சீறி
அவனது	அவனுடைய
உடல்	சரீரமானது
இருபிளவா	இரண்டுகூறும்படி
உகிர் நுதி	நகங்களின் நுனியை
மடுத்து	ப்ரவேசிப்பித்தவனாய்

பதம்.	உரை.
அயன்தான்	ப்ரஹ்மா, தானே
அரனை	ருத்ரனை
முனிந்து	கோபித்து
இட்ட	கொடுத்த
வெம்திறல்	மிகவும்க்ரூரமான
சாபம்	சாபத்தை [ரன்,
தவிர்த்தவன்	போக்கினஸர்வேஸ்வ
தவம்புரிந்து	தபஸ்ஸுபண்ணி
உயர்ந்த	(அத்தாலே) ப்ரஹ்மர்ஷியான
மாமுனி	விஸ்வாமித்ரன்
கொணர்ந்த	(பெருமாளையும் இளையபெருமாளையும்) எழுந்தருளப்பண்ணிக்கொண்டு சென்ற

கங்கையின்கரைமேல்வதரியாச்சிராமத்துள்ளான். (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (மான்முனிந்தித்யாதி) †பெருமாளை, "இம்மானைப் பிடித்துத்தரவேணும்" என்று பிராட்டியருளிச்செய்ய, அவரும் அதின்பின்னே தொடர்ந்துபோனவிடத்து மாயாம்ருகமாகையாலே அது பிடிதராதே யொழிய, அத்தைச்சீறி, அதின் மேலே தர்சநீயமானவில்லை வளைத்த செருக்கன். (பொன்னிறத்துரவோனித்யாதி) பொன்போலே யிருந்துள்ள நிறத்தையும் மிடுக்கையுமுடையனானவன், ஹிரண்யனென்றபடி; அவனுடைய துர்மாநத்தாலே வளர்ந்த மாம்ஸத்தைச் சீறி, அதுக்கு ஆஸ்ரயமான உடலானது இருபிளவாம்படி திருவுகிரினுடைய நுனியைமாட்டி.

(அயனித்யாதி) † பிராட்டிதிறத்தில்செய்யுமத்தை ஒரு சிறுக்

அரு.—எட்டாம்பாட்டு. (மானித்யாதி). இந்திரற்கருளின வளவன்றிக்கே அநந்யையானவளுக்கும் அர்ப்பகனுக்கும் பிச்சையாண்டிக்கும் கூடக்கையாளாய் அபேக்ஷிதங்கள் செய்யுமவனென்று சீலகுணாநுஸந்தாநம் பண்ணுகிறாரென்று ஸங்கதி.

"ஒருகால் மானைமுனிந்து - வரிசிலைவளைத்த மன்னவன்" என்று அந்வயம் விவக்ஷித்து ஸஹேதுகமாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (பெருமாளை யித்யாதி) "ஒருகால்" ஒருகாலவிசேஷத்திலே.

(பிராட்டி) இத்யாதி வாக்யத்துக்கு - அபிமதையாய் நித்யாநபாயினிக்

மூ.—கொண்டல் மாருதங்கள் குலவரை தொகுநீர்க்
குரைகடலுலகுடனனைத்தும்
உண்டமாவயிற்ருேனெண்சுடரேய்ந்த
உம்பரு மூழியு மானன்
அண்டமூடறுத்தன்றந்தரத்திழிந்தங்
கவனியாளலமரப் பெருகும்
மண்டுமாமணிநீர்க்கங்கையின் கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானே. (கூ)

கன் விஷயத்திலே செய்தான்; அவன் விஷயத்தில் செய்ததை தூர்மாகியானருத்ரன் விஷயத்திலே செய்தானாயிற்று. † முற்பட இவன் செருக்கித் திரிகிறது பொறுக்கமாட்டாமை, "செய்திடுவானுக்கு" என்று "என் தலையையறு" என்று அநுமதிபண்ணிப் பின்னையும் தானே இவனை, "இப்படிசெய்தான்" என்று (க) "[illegible]-கபாலீத்வம் பவிஷ்யஸி" என்று பழியிட்டானாயிற்று. பெற்றதமப்பன்பகையாக, அவனிலண்ணிய வுறவாயுதவுமவனாயிற்று.

(தவமித்யாதி) தவம்புரிந்துயர்ந்த மாமுனிகொணர்ந்தவென்கிறது-விஶ்வாமித்ரனை. அவன் க்ஷத்ரியனாயிருக்கச்செய்தேயும் தபோபலத்தாலே ப்ரஹ்மர்ஷியானனிறே. அவன் பெருமானையும் இளையபெருமானையும் நடத்திக்கொண்டுவந்தது அக்கரையே யாகையாலே அத்தைச் சொல்லிற்ருகவுமாம். †தபஸ்ஸைச்செய்து உயர்ந்தவென்றபடி. இதுக்கு, ஸ்ரீ பராங்குசதாஸர், † "ஜீயா! 'மாமுனி புகன்ற' என்று பாடபேதத்தைப் பண்ணி அதினுடைய ப்ரபாவத்தைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடு போந்தானிறே, அத்தைச் சொல்லிற்ருகவுமாமே" என்ன; †" அதுக்கு நமக்கு ப(ப)லம் போராது" என்றருளிச்செய்வர். அன்றிக்கே, பகீரதன்றன்னையே சொல்லுகிறதாய், அவன் கொடுவந்த கங்கையென்னுதல். (அ)

ருக்கையாளானமையைக்காட்டிலும் ஆசாலேசமுடைய ப்ரஹ்லாதன் சொலவுக்குக் காரியம்செய்ததேற்றம், அதிலும் அரன்சாபம்தீர்த்த தேற்றமென்று ஈடுபாட்டிலே தாத்பர்யம். "அயன்தான் முனிந்திட்ட" என்கையாலே முனிகைக்கு யோக்யதையில்லாமை தோற்றுகையாலே, அத்தையருளிச்செய்கிருர், (முற்படவித்யாதி).

சப்தார்த்தம், (தபஸ்ஸையித்யாதி). (ஜீயா) என்றது - நம்பிள்ளையைப் பூஜ்யோக்தியாலே ஸம்போதித்தபடி. (அதுக்கு நமக்குபலம்போராது) என்றதுக்கு - ஆழ்வார் திவ்யஸூக்தியைத் திருத்திப் பாடபேதம் பண்ணுகைக்கு நபம்போராதென்று நம்பிள்ளையருளிச்செய்தாரென்றுகருத்து.... ...(அ)

(க) மா - பு -

பதம்.	உரை.	பதம்.	உரை.
கொண்டல்	மேகங்களையும் [ம்	அன்று	பகீரதன் கங்கையை அவதரிப்பிக்கிறபோது
மாருதங்கள்	வாயுஸமூஹத்தை யு		
குலவரை	குலபாவதங்களையும்		
தொகுநீர்	ஜலஸம்ருத்தியையுடைத்தாய்	அண்டம்	ப்ரஹ்மலோகத்தை
		ஊடு அறுத்து	இடைவெளியாக்கிக் கொண்டு
குரை	சப்தியாநின்றுள்ள		
கடல்	ஸமுத்ரங்களையும்	அந்தரத்து	ஆகாசத்தில்நின்றும்
உலகுஉடன்	பூமியுடன்	இழிந்து	கீழிழிந்து
அனைத்தும்	மற்றுமுள்ள பதார்த்தங்களையும்	அவனியாள்	ஸ்ரீபூமிப்பிராட்டியானவள்
உண்ட	அமுதுசெய்தருளின	அலமர	(பொறுக்கமாட்டாதே) வருந்தும்படி
மா	பெரிய [னுய்		
வயிற்றோன்	திருவயிற்றையுடைய	பெருகும்	ப்ரவஹிக்குமதாய்
ஒள்	ப்ரகாசிக்கிற	மண்டி	நெருங்கி
சுடர்	சந்த்ரஸூர்யர்களை	மா	நிறைந்து
ஏய்ந்த	உடைய	மணி	தெளிந்த [ன
உம்பரும்	மேலுலகங்களையும்	நீர்	ஜலத்தையுடைத்தா
ஊழியும்	கல்பங்களையும்	கங்கையின்கரைமேல்வதரியாச்சிரமத்துள்ளான். (கo)	
ஆனான்	ப்ரகாரமாகவுடையனாயிருக்கிற ஸர்வேஸ்வரன்,		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (கொண்டல் மாருதங்கள்) மேகங்கள், † வாயுஸ்கந்தம், குலபர்வதங்கள், ஜலராசியையுடைத்தாய், கோஷியாநின்றுள்ள கடல், லோகங்களோடே ஸர்வபதார்த்தங்களையும் வைக்கப்பட்ட. (மாவயிற்றோன்) † இவற்றை வயிற்றிலே வைத்தவிடத்திலும் இவைதானளவுபட்டு வயிறே†பெருத்திருக்கை. (க) "வல்வயிற்றுப் பெருமான்" என்னக்கடவதிறே. (ஒண்சுடரித்யாதி) சந்த்ர ஸூர்யர்களையுடைத்தான உபரிதந லோகத்தையும், காலவிசேஷமான ப்ரளயகாலத்தையும், தான் என்று சொல்லலாம்படியானான். இவை ப்ரகாரமாகத்தான் ப்ரகாரியாய் நின்றான்.

அரு.—ஒன்பதாம்பாட்டு. (கொண்டலித்யாதி) அரனைவெந்திரச் சாபம் தவிர்த்த வளவேயோ, ஸர்வவிஷயமாக ஆபத்ஸகனன்றோ என்றநுஸந்திக்கிறரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

(வாயுஸ்கந்தம்) என்றது - வாயுஸமூஹமென்றபடி. "மா" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம். (இவற்றையித்யாதி). (பெருத்திருக்கை)-மாஹாத்ம்யத்தையுடைத்தாயிருக்கை. (உ) "ಅಣ್ಡಾನಾಂ ತ್ವದುದರಮಾಮನನ್ತಿ ಸನ್ತಃ-அண்டாநாம்த்வதுதரமாமநந்திஸந்த:" என்ற ச்லோகமநுஸந்தேயம். ... (கூ)

(க) தி - வாய் - (உ) வர - ஸ்த - சக.

மூ.—வருந்திரை மணிநீர்க்கங்கையின் கரைமேல்
வதரியாச்சிராமத்துள்ளானைக்
கருங்கடல் முந்நீர்வண்ணனை யெண்ணிக்
கலியன் வாயொலிசெய்தபனுவல்
வரஞ்செய்த வைந்துமைந்தும் வல்லார்கள்
வானவருலகுடன் மருவி
இருங்கடலுலகமாண்டு வெண்குடைக்கீ
ழிமையவ ராகுவர்தாமே. (ய)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வரும்	பெரிய வேகத்தோடே வருகிற	வரம்செய்த	பகவத்ப்ரஸாதத்தாலேபண்ணின
திரை	அலைகளையுடைத்தாய்	ஐந்தும் ஐந்தும்	இப்பத்துப் பாட்டுக்களையும்
மணி	தெளிந்த [ன		
நீர்	ஜலத்தை யுடைத்தா	வல்லார்கள்	அர்த்தத்தோடு சொல்லவல்லவர்கள்
கங்கையின்கரைமேல்	கங்கைக்கரையி லுள்ள	இரு	பெரிய
வதரியாச்சிராமத்து	ஸ்ரீபதரிகாஶ்ரமத்திலே [மவனாய்	கடல்	கடலாலேசூழப்பட்ட
		உலகம்	இப்பூமியை
உள்ளானை	நித்யவாஸம்பண்ணு	வெள்	வெளுத்த (இருந்து
கரு	கறுத்து	குடைக்கீழ்	குடைநிழலின் கீழே
முந்நீர்	மூன்றுவகைப்பட்ட நீரையுடைத்தான	ஆண்டு	செங்கோல்செலுத்தி (பின்பு)
கடல்வண்ணனை	கடல்போன்ற திருநிறத்தையுடையஸர்வேஶ்வரனை	வானவர்	இந்த்ராதி தேவர்களுக்குநிர்வாஹகனான ப்ரஹ்மாவினுடைய
எண்ணி	அநுஸந்தித்து		
கலியன்	ஆழ்வார் [ச்செய்த	உலகு உடன்	ஸத்யலோகத்தையும்
வாய்	திருவாக்காலே யருளி	மருவி	கிட்டி (அநுபவித்து)
ஒலிசெய்த	சப்தஸந்தர்ப்பமான	இமையவர் ஆகுவர்	நித்யஸூரிகளோடு ஒருகோவையாகப் பெறுவர் ...(கo)
பனுவல்	பாட்டுக்களாய்		

(அண்டமித்யாதி) அண்டமுண்டு - ப்ரஹ்மலோகம், அதின் நடுவே வழிகண்டுபோந்து, அதுக்கு இவ்வருகில் அந்தரிக்ஷத்திலே போந்திழிந்து, எல்லாவற்றையும் பொறுக்கக்கடவ அவனியாளுண்டு-பூமி, அவள் பொறுக்கமாட்டாதே தடுமாறும்படி பெருகுமாயிற்று. (மண்டுமாமணிநீர்) எங்குமொக்கப்பரந்து பெருநீராய் அதடையத் தெளிந்திருப்பதான கங்கையின் கரையிலே. (கூ)

வ்யா.—பத்தாம்பாட்டு. (வருமித்யாதி) பெரிய வேகத்தோடே வருகிற, திரைகளையுடைத்தாய்த் தெளிந்த ஜலத்தையுடைத்தான கங்கையின் கரைமேலே ஸ்ரீபதரிகாஶ்ரமத்திலே யிருக்கிற ஸர்வேஶ்வரனைக் கவிபாடிற்று. (கருங்கடல் முந்நீர்) முந்நீரான கருங்கடல். ஆற்றுநீர், ஊற்றுநீர், வர்ஷஜலமான மூன்றுவகை நீரையுடைத்தாய்க் கறுத்த நிறத்தையுடைய கடல்போலே யிருக்கிற நிறத்தையுடையவனை அநுஸந்தித்து ஆழ்வாரருளிச்செய்த பாட்டுக்கள்†இவைதான். (வரச்செய்த) பகவத் ப்ரஸாத லப்தமான பத்துப்பாட்டையும் வல்லவர்கள். அன்றியே, வரிஷ்ட்டமான பத்துப்பாட்டையுமென்னுதல்.

(வானவரித்யாதி) † பெரியகடல் சூழ்ந்த பூமியை ஏகாதபத்ரமாக நடத்திப் பின்பு ப்ரஹ்மபதத்தை நிர்வஹித்து அநந்தரம் நித்யஸூரிகளோடொருகோவையாகப் பெறுவர். இத்தால் சொல்லிற்றாயிற்று - இவனபிஸந்திபண்ணினவற்றையெல்லாம் தருமென்றபடி.

"அறிவுடையார் அபுருஷார்த்தமென்று காற்கடைக்கொண்ட ஐஶ்வர்யத்தை, (க) 'வேண்டேன் மனைவாழ்க்கை' என்றும், (உ) †'போந்தேன்' என்றும், வீதராகராய்ப் போந்தவிவர், இப்போது ஐஶ்வர்யத்தைப் ப(ஃ)லமாகச் சொல்லுவானென்?" என்று ஜீயர் பட்டரைக்கேட்க,†"திருமங்கையாழ்வா ரவதரித்தபின்பு, த்யாஜ்யமான ஐஶ்வர்யமும் பரமபுருஷார்த்தத்துக்குள்ளே புக்குப்போயிற்றுக்காணும், †'ஈஶ்வரனே யாகவுமாம், நித்யஸூரிகளேயாகவுமாம், ராஜா

அநு.—பத்தாம்பாட்டு. (வருந்திரையித்யாதி). (இவைதான்) என்று வ்யாக்யாதாவாக்யமாதல். "பனுவல்" என்ற ஆழ்வார் கருத்தாதல்.

அர்த்தக்ரமத்தைப்பற்ற, "இருங்கடலுலகம் வெண்குடைக்கீழ் ஆண்டு வானவருலகுடன்மருவி இமையவர் ஆகுவர்தாமே" என்றந்வயித்தருளிச்செய்கிறார், (பெரியவித்யாதி).

(போந்தேனென்றும்) என்றவநந்தரம், "துறந்து" என்றுசேஷம். (க) "வேண்டேன் மனைவாழ்க்கையை" என்னுமவர்தாமே ஐஶ்வர்யத்தைப் பலமாகச்சொல்லுகையாலே ஓராகாரத்தாலே த்யாஜ்யமானது ஆகாராந்தரேண உபாதேயமாயிற்றென்று விவக்ஷித்து, பட்டர் பரிஹரித்தமையை யருளிச்செய்கிறார். (திருமங்கையாழ்வாரித்யாதி). உள்ளேபுக்கபடி எங்ஙனேயென்ன; (ஈஶ்வரனேயித்யாதி). ஈஶ்வரபதார்த்தமாகவுமாம், பாகவதபதார்த்தமாகவுமாம், ராஜத்ரவ்யமாகவுமாம், ததீயர்க்குவிநியோகமானாலதுவே புரு

(க) க - க - க. (உ) சு - ரு - ச.

வாகவுமாம், பறித்து பாகவதசேஷமாக்கலாமாகில்' என்றுமிவரிருப்பது'' என்றருளிச்செய்தாராம். ... ... (ம)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஷார்த்தமென்றிருப்பரென்றபடி. ஈஸ்வரபதார்த்தத்தை பாகவத சேஷமாக்கினால் அது அவனுக்கு உகப்பாகையாலும், ராஜத்ரவ்யத்தைப்பறித்து பாகவத சேஷமாக்கினால் ப்ரத்யவாயமின்றிக்கே ஸ்வரூபாநுரூபமாகையாலும் அவைகூடிற்றேயாகிலும் பாகவதபதார்த்தத்தைப்பறித்து பாகவதர்க்குக் கொடுக்கக்கூடுமோவென்னில்; அவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களென்றறியாதே பறித்தானாகிலும் தோஷமுண்டாகையாலே அதுவே பாகவதவிஷயத்திலே விநியோகமானால் அந்ததோஷம் வராதென்று கருத்தாகவுமாம், ஸம்பந்நராய்ச் சிலரிருந்தால் நிரவகாசராயிருப்பார்க்கு அவர்கையில்நின்றும் பறித்துக்கொடுத்தால், அவர்கள் பாகவதசேஷமாயிற்றே என்று உகப்பராகையாலே, தோஷமில்லை என்று கருத்தாகவுமாம். இங்ஙனன்றாகில், பாகவத ஸ்வத்தையெடுத்து பாகவதர்க்குக் கொடுக்கைக்குச் சாஸ்த்ரம் இசையாதிறே. ப்ரஹ்மபதத்தளவும் சொன்னது ஐஸ்வர்யத்துக்கு மேலெல்லையாகையாலே.

ஜீயர் திருவடிகளே சரணம்.

முதற்பத்தில் - நாலாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

முதற்பத்து - ஐந்தாந் திருமொழி - கலையும்.

மூ.—கலையும் கரியும் பரிமாவும் திரியும் கானம் கடந்துபோய்ச் [சிலையும் கணையும் துணையாகச்சென்றான்வென்றிச்செருக்களத்
மலைகொண் டலைநீ ரணைகட்டி மதிள்நீ ரிலங்கை வாளரக்கர்
தலைவன் தலைபத் தறுத்துகந்தான் சாளக்கிராமமடைநெஞ்சே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
சிலையும்	வில்லையும்	மதிள்	மதிளையும்
கணையும்	அம்புகளையும்	நீர்	கடலாகிற அகழையுமுடைய
துணையாக	ஸஹாயமாகக்கொண்டு	இலங்கை	லங்கையை(த் தனக்குநகரமாக) உடையனாய்
கலையும்	மான்களும்	வாள்	வாளையுடையனாய்
கரியும்	யானைகளும்	அரக்கர் தலைவன்	ராக்ஷஸர்க்குத் தலைவனான ராவணனுடைய
பரிமாவும்	குதிரைகளும்	தலைபத்து	பத்துத்தலைகளையும்
திரியும்	ஸஞ்சரிக்கிற	அறுத்து	சேதித்து
கானம்	காட்டை	உகந்தான்	உகந்தஸர்வேஶ்வரன் நித்யவாஸம் பண்ணுகிற
கடந்து	தாண்டி	சாளக்கிராமம்	ஸ்ரீஸாளக்ராமத்தை
போய்	நெடுந்தூரம்போய்	நெஞ்சே!	ஓமநஸ்ஸே!
வென்றி	ஜயத்தையுடைத்தான போரைவிளைக்கக்கடவ	அடை	கிட்டப்பாராய் (க)
செருக்களத்து	யுத்தபூமியிலே		
சென்றான்	புகுந்தவனாய்		
அலை	அலையையுடைய		
நீர்	ஸமுத்ரத்தை		
மலைகொண்டு	மலையால்		
அணைகட்டி	ஸேதுபந்தநம்பண்ணி		

வ்யா.—கலையும் ப்ரவேசம் - † ஸௌபரிபோகத்துக்குறுப்பாக அநேகம் வடிவுகொண்டாற்போலே, ஆஶ்ரிதரை யநுபவிக்கைக் குறுப்பாக உகந்தருளின நிலங்களெங்கும்புகுந்து ஸந்நிதி பண்ணினானாயிற்று அவன்; † இனி இவர்தாமும், (க) *தானுகந்த ஊரெல்

அரு.—கலையும் கரியும் ப்ரவேசம்.—கீழ்நாலு திருமொழிகளாலும் தமக்குண்டான மந்த்ரலாபத்தையும் மந்த்ரார்த்தத்தையும் நரநாராயணரூபேண அவதரித்துத் திருமந்த்ரத்தை வெளியிட்டதேசத்தில் தமக்குண்டான ப்ராவண்யத்தையு மருளிச்செய்தாரேயாகிலும், ஸாளக்ராமம் துடக்கமான திவ்யதேசங்களை விரும்புவானென்னென்கிற சங்கையிலே, இவர்விரும்புகைக்கு ஹேதுவை யருளிச்செய்யக்கோலி, அதுக்குறுப்பாக, அவன்பலபடியிருக்கைக்கு ஹேதுவையருளிச்செய்கிறார், (ஸௌபரியித்யாதி). அவன் பலபடி யிருந்தால் இவர்தாம் பலபடி அநுபவிக்கைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார், (இனியித்யாதி). விஷயமொன்றாயிருக்க, எங்கும் தனித்தனியேபுக்க

(க) தி - நெ - கூ.

லாம் தன் தாள்பாடி எங்கும் புக்கநுபவிக்கையிலேயாயிற்று அபேக்ஷைபண்ணியிருப்பது.† ஒருவிஷயத்தை யநுபவிக்கப்புக்கால் அவ்விஷயத்தில் அவயவங்கள்தோறும் ஸ்ப்ருஹை பண்ணுமாபோலேயாயிற்று இவரெங்கும் புக்கநுபவிப்பதாகப் பாரிக்கிறதும், †ஆக- விரோதி நிரஸநசீலனுமாய், † ஆஸ்ரிதஸம்ஸ்லேஷைகஸ்வபாவனுமாய், † ப்ரஹ்மாதிகளாபந்நராமன்று அவ்வாபத்துக்களைப்போக்கி அவர்களுக்கு துஃகநிவர்த்தகனாயிருக்கிறவன்; † நித்யஸூரிகளோடு தன்பக்கல் ருசியுடையாரோடு கேவலப்ராஹ்மணரோடு வாசியற ஸர்வஸமாஸ்ரயணீயனாய்க்கொண்டு ஸ்ரீஸாளக்ராமத்திலேவந்து ஸந்நிஹிதனானான், அங்கேபோயவனையாஸ்ரயிப்போமென்று திருவுள்ளத்தோடே கூட்டுகிறார். † கோஸலஜநபதமாகப் பெருமாளதாயிருக்குமாபோலே, ஒரு மண்டலமாகத்தனக்கு † விஷயமாகக்கொண்டு ஸந்நிஹிதனாய்க்குறைவற வர்த்திக்கிறதேசமாயிற்று.

முதற்பாட்டு. (கலையித்யாதி) † கலைமுதலானவைகளே வர்த்

நுபவிக்கவேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார், (ஒருவிஷயத்தை யித்யாதி). (ஆக) என்றது - ஆகையாலே என்றபடி. (க) "ஊரான்குடந்தை யுத்தமன்" என்றத்தைப்பற்ற, (ஆஸ்ரிதஸம்ஸ்லேஷைகஸ்வபாவனுமாய் என்றது. (உ) "வெந்தாரென்பும்" என்கிற பாட்டைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார், (ப்ரஹ்மாதிகளித்யாதி). கபாலவிமோசநம்வேதாபஹரணாதிகளுக்கு முபலக்ஷணமென்று திருவுள்ளம். (ங) "தொண்டாமினமும்" என்கிறபாட்டைப் பற்ற, (நித்யஸூரிகளோடித்யாதி). கீழ்ச்சொன்னவரெல்லாரு மாஸ்ரயிக்கும்படி இடமுடைத்தாயிருக்குமோ வென்ன; (கோஸலேத்யாதி). மலையாகையாலே ஒரு மண்டலப்பரப்பு பெருத்திருக்குமென்று கருத்து. (விஷயமாக) வாஸஸ்த்தாநமாக.

முதற்பாட்டு. (கலையுமித்யாதி). "தானவனாகம் தரணியிற்புரள" என்றும், "இலங்கையும் கடலும்" என்றும். கீழ்த்திருமொழியிலே ப்ரஸ்துதமான ராமசரித்ரந்தான்,(ச) "తాదృశో నను బహువిధ రాఘవస్యే య స్తావకం చరితమన్వహ మన్వభుఙ్క్త । సోత్రైవహ స్తహనుమాన పరమాం విముక్తిం బుద్ధ్యా విధూయ చరితం తవ సేవతేస్మ - தாத்ருக்குணோநுபபூவிதராகவத்வேயஸ்தாவகம்சரிதமந்வஹமந்வபுங்க்த। ஸோத்ராவஹந்த ஹநுமாந்பரமாம் விமுக்திம் புத்யாவிதூய சரிதம் தவஸேவதேஸௌ" என்கிறபடியே நித்யாநுபாவ்யமாய்த் தவச்கவற்றாகையாலே அத்தை யநுபவிக்கிறாரென்று அவதாரிகையிட்டுக்கொள்வது.

காடானபோதே ம்ருகம்முதலானவை யுண்டாயிருக்குமே, அவற்றை யிட்டு விசேஷிப்பானென்னென்ன; அருளிச்செய்கிறார், (கலையித்யாதி).

(க) க-ரு-ச. (உ) க-ரு-அ. (ங) க-ரு-க. (ச) அதிமாநுஷஸ்த-ஙஉ.

திக்கக்கடவதான காட்டைக்கடந்துபோய். (சிலையும் கணையும் துணையாகச் சென்றான் வென்றிச் செருக்களத்து) (க) † "देव नैनवनं गत्वा- தேவநேநவநம்கத்வா" என்கிறபடியே, படைவீட்டில்நின்றும் காட்டிலே புகுகையன்றிக்கே, காட்டில்நின்றுமாயிற்றுக் காட்டிலே வந்துபுகுந்தது; அப்படியே இங்கும், துஷ்டஸத்வப்ரசுரமான காட்டைக்கழிந்து பின்னை யுத்த பூமியிலேயாயிற்று வந்துபுகுந்தது. †கலைகளையும் ஆனைகளையும் குதிரைகளையுமுடைத்தாயிருக்கிற காட்டைக்கடந்துபோய் வென்றிச் செருக்களத்திலேவந்து புகுந்தான். அங்குபோய்ப்புகுகிறவிடத்துத் துணையாரென்னில்; (சிலையும் கணையும் துணையாக) வில்லு மம்பும் துணையாகவாயிற்றுப் போயிற்று. †லக்ஷ்மணாதிகளோவென்னில்; † அவர்களையும் ஓரவயவவிசேஷங்களாக நினைத்திருந்தாரித்தனை போக்கி, தனித்தொரு துணையாக நினைத்திருந்திலராயிற்றிவர். † முதலிகளடங்கலும் பெருமாளுக்கு

இத்தால், விஜநவநத்திலே யெழுந்தருளுவதே! என்றீடுபடுகிறானொருத்தியாயிற்று. கரியைப்பற்றவும் கலையை முற்படவெடுத்தது - இவர்கள் நிலையைக் கொலைத்தது கலையென்று, (உ) "கானிடையுருவை" என்கிற பாட்டிலே ப்ரஸ்துதமான மாயாம்ருகத்தின் தௌஷ்ட்யத்தைப்பற்ற. "அரக்கர் தலைவன் தலைபத்தறுத்துகந்தான்" என்னவே, செருக்களத்துக்குப்போகை அர்த்தஸித்தமாயிருக்கவு மருளிச்செய்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (தேவநேநேத்யாதி வாக்யத்வயத்தாலே). இத்தால் - நடுவிலாய்ச்சிக்காகக் காட்டிலேப்போனாலும் அவ்வளவிலே மீண்டுவரப்பெறாதே ஸீதாவியோகவ்யாஜேந யுத்தரங்கத்திலே போகவேண்டிற்றே! என்றீடுபாடு தோற்றுகிறதென்றதாயிற்று. கீழ் தாத்பர்யங்களையருளிச்செய்து, சப்தார்த்தமருளிச்செய்கிறார், (கலைகளையுமித்யாதி). "சிலையும் கணையும் துணையாக" என்ற பதஸ்வாரஸ்யத்தாலே, செருக்களத்துக்சென்றது - கரவதவ்ருத்தாந்தமாகச் சொல்லலாயிருந்ததேயாகிலும், "கானம்போய்" என்னாதே, "கடந்து" என்றபதஸ்வாரஸ்யத்தாலே லங்கையில் யுத்தரங்கமேயாகவேணுமென்று விவக்ஷித்து, ஆனால் தநுர்பாணங்களே துணையென்னக்கூடுமோ? என்கிற சங்கையை உத்க்ஷேபிக்கிறார், (லக்ஷ்மணாதிகளோவென்னில்) என்று. ஆதிசப்தத்தாலே ஸுக்ரீவ மாருதி விபீஷணர்களைச் சொல்லுகிறது. இளையபெருமாள் (௩) "रामस्य दक्षिणो बाहुः - ராமஸ்ய தக்ஷிணோபாஹு:" என்னும்படி யிருக்கையையும், ஸுக்ரீவர் ஏகக்ரீவராய்ப்போந்தபடியையும், ஸ்ரீவிபீஷணாழ்வானை இக்ஷ்வாகுவம் ஶ்யராக நினைத்தபடியாலே ராமபாஹு ஸ்த்தாநாபிஷிக்தரானபடியையுமுட்கொண்டு பரிஹரிக்கிறார் - (அவர்களையு மித்யாதி). (முதலிகளடங்கலும்) என்றது - மற்றுமுள்ள வாநரமுதலிகளெல்லாரு மென்றபடி.

(க) ரா-பா-க-௩௦. (உ) க-ச-உ. (௩) ரா-யு - உஅ - உரு.

†குழைச் சரக்காணுர்களாமித்தனையிறே; (க) "రామలక్ష్మణగుప్తాసా - ராமலக்ஷ்மணகுப்தாஸா". (வென்றிச்செருக்களத்து) † நலியவேணு மென்னு மபிஸந்தியுண்டாய் நலியாத ம்ருகங்களைத் தப்பிப்போனுல் பின்னையும் போய்ப்புகுமிடம் யுத்தபூமியாயிற்று. † வென்றியை யுடைத்தான போரைவிளைக்கக் கடவ யுத்தபூமியிலே.

† அங்குப்போய்ப்புக்கபின்பு செய்த சேஷ்டிதங்களைச் சொல்லுகிறதுமேல். (மலையித்யாதி) பெரிய க்ஷோபத்தை யுடைத்தான கடலை, † நீரிலே ஆழக்கடவ மலைகளைக்கொண்டு அணையாகக்கட்டி, மதிளையும், அதுக்ககழான கடலையுமுடைய லங்கையைக்கலவிருக்கையாகவுடையனுமாய், † ஒருதேவதையை யாஶ்ரயித்து அதின் பக்கலிலே ஒருவாளைப்பெற்று அது தனக்கு † அரணாக நினைத்திருப்பானுய், துர்வர்க்கத்துக்கெல்லாம் நியாமகனுயிருக்கிற ராவணனுடையதலைகள் பத்தையும் அறுத்து, † "தேவர்களும் தந்தாமுடைய குடியிருப்புப்பெற்றுர்கள், ருஷிகளும் தந்தாமுடைய ஆஶ்ரமங்களிலேயிருந்து தபஸ்ஸுபண்ணப்பெற்றுர்கள்" என்று உகந்தவன், அப்படிஆஶ்ரித விரோதியைப்போக்கிப் பிற்பட்டார்க்குமுதவுகைக்காகவந்து வர்த்திக்கிற ஸ்ரீஸாளக்ராமத்தையாஶ்ரயிக்கப்பாராய் நெஞ்சே! என்கிறுர். (க)

(குழைச்சரக்கு) குழையென்று - பையாய், பையில் சரக்குப்போலே ரக்ஷ்யமென்றபடி. "வென்றி" என்று விசேஷிக்கையாலும் - காட்டைப்பற்றவும் பாதகத்வத்திலாதிக்யம் ஸூசிதமாகிறதென்கிறுர். (நலியவேணுமித்யாதி). நலியவேணுமென்றபிஸந்தியில்லாத ம்ருகங்களுள்ள காட்டைத்தப்பிப்போகப்பெற்றுல் நலிகைக்கு இப்போது வரப்புகுகிறுரென்று விஜிகீஷுக்களிருக்கு மிடத்தில் புகவேண்டிற்றே என்று கருத்து. சப்தார்த்தம், (வென்றியையித்யாதி).

மேலுக்கவதாரிகை, (அங்கித்யாதி). "செருக்களத்து சென்றுன்" என்றது - ஸமுத்ர தீரத்திலே படையெடுத்துவிட்டபோதே போய்ப் புக்கது ஸித்தவத்கரித்தருளிச்செய்தாரென்று திருவுள்ளம்பற்றி ஸமுத்ரத்தில் ஸேதுபந்தநத்தையும் அங்குப்புக்குச்செய்த செயலாக வருளிச்செய்தாரென்று கண்டுகொள்வது. (ஒருதேவதை) ருத்ரன். (அரணாக) ரக்ஷகமாக. (உ) "సహిదేవైరుదీర్ణస్య రావణస్యవధార్థిభిః। అర్థితో మానుషేలోకే జజ్ఞే విష్ణుస్సనాతనః - ஸஹிதேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி: । அர்த்திதோ மாநுஷேலோகே ஜஜ்ஞேவிஷ்ணுஸ்ஸநாதந:" என்றும், (ரு) "తేవయం భవతారక్ష్యా భవద్విషయవాసినః - தே வயம் பவதா ரக்ஷ்யா பவத்விஷயவாஸிந:" என்றும் சொல்லுகிறபடியே இவர்களுக்காக ராவணன் தலையை அறுத்தானுகையாலே வந்தவுகப்பை யருளிச்செய்கிறுர், (தேவர்களுமித்யாதி). (க)

(க) ரா - யு - (உ) ரா - அயோ - க - எ. (ரு) ரா - ஆ - க - உ0.

மூ.—கடஞ்சூழ் கரியும் பரிமாவு மொலிமான் தேரும்காலாளும் [தான்
உடன்சூழ்ந் தெழுந்த கடியிலங்கை பொடியா வடிவாய்ச் சரந்துரந்
இடஞ்சூழ்ந் தெங்கு மிருவிசும்பி லிமையோர் வணங்க மணங்கமழு
தடஞ்சூழ்ந் தெங்கு மழகாய சாளக் கிராம மடைநெஞ்சே. [ம்

பதம்.	உரை.	பதம்.	உரை.
கடம்சூழ்	மதஜலத்தையுடைய	இரு	பரப்பையுடைத்தான
கரியும்	யானைகளும்	விசும்பில்	ஸ்வர்க்கத்தில் வஸிக்கிற
பரிமாவும்	குதிரைகளும்		
ஒலி	சப்தியாநின்றுள்ள	இமையோர்	தேவர்கள்
மாத்தேரும்	மஹாரதங்களும்	இடம்எங்கும்	பூமிப்பரப்பெல்லாம்
காலாளும்	பதாதிகளும்	சூழ்ந்து	பரவி [ய்
உடன்சூழ்ந்து	ஒன்றாகத்திரண்டு	வணங்க	ஆஶ்ரயிக்கத்தக்கதா
எழுந்த	கிளர்ந்துதோற்றின	மணம்	(செங்கழுநீர் முதலிய புஷ்பங்களின்) வாஸனையை
கடி	அரணையுடைத்தான		
இலங்கை	லங்கையிலுள்ள துர்வர்க்கமானது	கமழும்	வீசாநின்றுள்ள
பொடியா	சூர்ணமாம்படியாக	தடம்	தடாகங்களாலே
வடி	கூரிய	சூழ்ந்து	சூழப்பட்டு [லும்
வாய்	வாயையுடைத்தான	எங்கும்	எல்லாப்பக்கங்களி
சரம்	பாணங்களை	அழகாய	அழகை யுடைத்தாயிருக்கிற
துரந்தான்	ப்ரயோகித்த சக்ரவர்த்தித்திருமகன்		சாளக்கிராமம் அடைநெஞ்சே!(௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. † ராவணனை நிரஸித்தபடியைச் சொல்லிற்று முதற்பாட்டில்; † அதுக்குறுப்பாக அவனுடைய முதல்நாளைப் படையெழுச்சி சொல்லுகிறது இதில்.

(கடஞ்சூழித்யாதி) ருஷிதான் படையெழுச்சியைச் சொன்ன † க்ரமத்திலே சொன்னாரிவரும். † மதஜலத்தையுடைத்தாய் † மலை

அரு.—இரண்டாம்பாட்டு. (கடஞ்சூழித்யாதி) அரக்கர்தலைவன் தலைபத்தறுத்தபின்பு இலங்கைபொடியாம்படி சரந்துரந்தானென்னுமது கூடாமையாலே, தாத்பர்ய மருளிச்செய்கிறார், (ராவணனை யித்யாதி). (அதுக்குறுப்பாக) - நிரஸநத்துக்குறுப்பாக, இத்தால் - படையெடுத்து வந்திருந்து அம்பு கோத்தானுகையாலே தலையறுத்துவிட்டாரென்று கருத்து.

(க்ரமத்திலே) என்றது - ரதகஜதுரகபதாதிகளாகிற சதுரங்கஸேனையைச் சொல்லும் க்ரமத்திலே யென்றபடி. "கடம்" என்றதினர்த்தம், (மதஜலத்தை) என்றது. ஆனைகளை வர்ணிக்கிறவிடத்திலே, (க) "விலங்கல் போல்வன" என்று வர்ணிக்கையாலே அது இங்குவிவக்ஷிதமென்றருளிச் செய்கிறார், (மலையித்யாதி). மதஜலமுண்டாவது ஒருவயோவிசேஷத்திலே

(க) க - உ - உ.

ரு.—உலவு திரையும் குலவரையு மூழிமுதலா வெண்டிக்கும்
நிலவும் சுடரு மிருளுமாய் நின்றான் வென்றி விறலாழி [றும்
வலவன் வானோர் தம்பெருமான் மருவா வரக்கர்க் கெஞ்ஞான்
சலவன் சலஞ்சூழ்ந் தழகாய சாளக்கிராம மடைநெஞ்சே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உலவு	ஸஞ்சரியாநின்றுள்ள	வென்றி	ஜயத்தையும்
திரையும்	அலையையுடைய கடலும்	விறல்	மிடுக்கையுமுடைய
குலவரையும்	(மேருமுதலான) ஏழு குலபர்வதங்களும்	ஆழி	திருவாழியை
ஊழிமுதலா	காலம்முதலாக	வலவன்	வலத்திருக்கையிலுடையனாய்
எண்டிக்கும்	எட்டுத்திக்கிலுள்ளபதார்த்தங்களும்	வானோர்தம்	ப்ரஹ்மாதிகளுக்கு
நிலவும்	சந்த்ரனும்	பெருமான்	ஸ்வாமியாய்
சுடரும்	ஸூர்யனும்	எஞ்ஞான்றும்	எக்காலத்திலும் [தன்னை]
இருளும்	அந்தகாரமுமாகிய இவற்றுக்கு	மருவா	(தன்னை) ஆஸ்ரயியா
ஆய்	ப்ரகாரியாய்	அரக்கர்க்கு	ராக்ஷஸர்கள்விஷயத்தில்
நின்றான்	நின்றவனாய்	சலவன்	சத்ருவான ஸர்வேஸ்வரன் நித்யவாஸம் பண்ணுமதாய்

வடிவுகொண்டு நடந்தாற்போலேயிருக்கிற ஆனைத்திரளும், அதுக்கநந்தரம் குதிரைத்திரளும், கோஷத்தை யுடைத்தாயிருந்துள்ள † பெரியதேர்களும், காலாளும், இவையடைய ஒன்றாகத்திரண்டு பெரிய கிளர்த்தியோடே தோற்றின அரணுடைத்தான லங்கை, (க) "ஜ்வாலஸமந்விதேதி - ஸ்மசாநஸத்ருசீபவேத்" என்கிறபடியாய்ப் பொடிபடிக்கிடாக, † வடித்தவாயையுடைத்தான சரத்தை நடத்தினையிற்று. (இடமித்யாதி) பூமியிலவகாசமுள்ள விடமெங்கும் பரந்துகொண்டு பரப்புடைத்தான ஸ்வர்க்கத்தில் தேவர்கள் †ஆஸ்ரயிக்க பரிமளப்ரசுரமான தடாகங்களையுடைத்தாய் எங்குமொக்க தர்சநீயமாயிருக்கிற ஸ்ரீஸாளக்ராமத்தை யாஸ்ரயிக்கப்பார். ... (உ)

யாகையாலே அப்போதையில் மஹத்வம் த்யோதிதமென்றுகருத்து. மாத்தேர் என்னும் வல்லொற்று மெல்லொற்றாய், மாந்தேர் என்றாய், அதுதானும் குந்தம் என்னுமது குன்றம் என்று கிடக்கிறாப்போலே "மான்றேர்" என்று கிடக்கிறதென்று திருவுள்ளம்பற்றி, (பெரியதேர்களும்) என்றது. "மால்" என்று பெருமையாய், (உ) "வன்றாளினிணைவணங்கி" என்கிற விடத்தில், வலிமையையுடைய தாளென்றவோபாதி, "மான்றேர்" என்று மாலானதேரென்கிறதென்றாகவுமாம். கடி - கட்டுடைமையாய், அரணையுடைத்தாயென்றபடி. (வடித்த) கூரிடப்பட்ட. (ஆஸ்ரயிக்க) என்றவநந்தரம் "தக்கதாய்" என்று சேஷம். சரந்துரந்தான், அவனுக்கிடமாயிருக்கிற சாளக்கிராமம் என்றந்வயம். ... ... (உ)

(க) ரா - ஸு - உசு - உசு. (உ) பெரு - திரு - கூ - க.

சலம்	ஜலத்தாலே	அழகாய	அழகாயிருந்துள்ள
சூழ்ந்து	சூழப்பட்டு		சாளக்கிராமமடைநெஞ்சே! (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (உலவித்யாதி) ஸஞ்சரியாநின்றுள்ள திரையையுடைத்தாய் - † பெரிய கோஷத்தையுடைத்தான கடலும் மலையும் † தொடக்கமாக. (ஊழிமுதலா எண்டிக்கும்) காலோபலக்ஷித மான ஸகலபதார்த்தங்களுமான † எட்டுத்திக்கும், சிலநாள் வர்த்திக் கக்கடவராயிருக்கிற சந்த்ர ஸூர்யர்களும், அதுக்கெதிரான இருளு மாய், அதடைய "தான்" என்கிற சொல்லாலே சொல்லலாம்படி தனக்கு ப்ரகாரமாகவுடையனாய் நின்றான். இத்தால் - ஜகதாகார னாய் நிற்கும்நிலை சொல்லிற்று; மேல் அஸாதாரண திவ்யவிக்ரஹயு க்தனான நிலையைச் சொல்லுகிறது. (வென்றியித்யாதி) † ஆஸ்ரித ரக்ஷணத்துக்குப்பரிகரமான திருவாழியை வலவருகேயுடையவன். (வானோர்தம்பெருமான்) ப்ரஹ்மாதிகளுக்கு ஆஸ்ரயணீயனானவன். (மருவா) † கண்வளர்ந்தருளும்போதும் தன்னோடுபொருந்தாத அஸுரவர்க்கத்துக்கு, (௧) "அவுணர்க்கென்றும் சலம்புரிந்து" என்கிறபடியே சாத்ரவத்தையுடையனா யிருக்குமவன்; ஏவம்வித னானவன்வந்து ஸந்நிதிபண்ணுகிற ஜலஸம்ருத்தியை யுடைத்தாய் தர்சநீயமாயிருக்கிற. ... . (௩)

அரு.—மூன்றாம்பாட்டு- (உலவுதிரையுமித்யாதி) இப்படி படையெழுச் சியோடேவந்த ராவணனை நிரஸித்தவநந்தரம் (௨) "[Grantha text]-தமஸ:பரமோதாதா சங்கசக்ரகதாதர:" என்றும், (௩) "[Grantha text]-பவாந்நாராயணோதேவ:" என்றும் பெருமாளுடைய பரத்வம் ஸ்ப்புடதரமாகச்சொல்லப்படுகையாலே, இவரும் அந்த ப்பரத் வத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

பலிதம், (பெரியவித்யாதி). (தொடக்கமாக) என்றவநந்தரம், "பெருப் பெருத்த பதார்த்தங்களும்" என்று சேஷம். (எட்டுத்திக்கும்) - எட்டுத்திக் கிலுள்ள பதார்த்தங்களும். "நிலவு" - சந்த்ரன். "வென்றி" ஜயத்தையும், "விறல்" - அதுக்குறுப்பான மிடுக்கையுமுடைய, "ஆழி" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (ஆஸ்ரிதேத்யாதி). "எஞ்ஞான்றும் - மருவா வரக்கர்க்கு - சலவன்," என்றந்வயம் விவக்ஷித்தருளிச்செய்கிறார், (கண்வ ளர்ந்தித்யாதி). இத்தால், நித்ராஸமயத்திலும் ப்ரதிபக்ஷத்தின்மேலே சீற்ற முடையவரென்று, (௪) "[Grantha text]- காலாக்நிஸத்ருச: க்ரோதே" என்னும் குணாதிசயம் சொல்லிற்று. ... ... (௩)

(௧) தி - நெ - ௬. (௩) ரா - யு - ௧௨௦ - ௧௩.
(௨) ரா - யு - ௪௧௪ - ௧௫. (௪) ரா - பா - ௧ - ௧௮.

மூ.—ஊரான் குடந்தை யுத்தம னொருகா லிருகால் சிலைவளையத்
தேரா வரக்கர் தேர்வெள்ளம் செற்றான் வற்றா வருபுனல்சூழ்
பேரான் பேராயிர முடையான் பிறங்கு சிறைவண் டறைகின்ற
தாரான் தாரா வயல்சூழ்ந்த சாளக் கிராம மடை நெஞ்சே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஊரான்	திருவூரகத்தைத் தனக்கு வாஸஸ்தானமாக வுடையவனாய்	புனல்	ஜலத்தாலே
குடந்தை	திருக்குடந்தையில் கண்வளர்ந்தருளுகிற	சூழ்	சூழப்பட்ட
உத்தமன்	புருஷோத்தமனாய்	பேரான்	திருப்பேர்நகரில் நித்யவாஸம்பண்ணுமவனாய்
ஒருகால்	கரன்முதலானோர் எதிர்த்தபோது	ஆயிரம்பேர் உடையான்	அநேகம் திருநாமங்களையுடையனாய்
சிலை	வில்லினுடைய [ம்	பிறங்கு	நெருங்கி யிருந்துள்ள
இருகால்	இரண்டுகோடியையு	சிறை	சிறகுகளையுடைய
வளைய	வளைத்து (த்தம்முடைய வல்லமையைக் காட்ட)	வண்டு	வண்டுகளானவை
தேரா	(இவனை நம்மால்வெல்லமுடியாது என்று) ஆராய்ந்தறிய மாட்டாத	அறைகின்ற	ஆளத்திவைத்துப் பாடாநின்றுள்ள
அரக்கர்	ராக்ஷஸருடைய	தாரான்	திருத்துழாய் மாலையையுடையனான ஸர்வேஶ்வரன் எழுந்தருளியிருக்குமதாய்
தேர்வெள்ளம்	ரதஸமூஹங்களை	தாரா	தாரா என்னும் ஜலபக்ஷிகள்நிறைந்த
செற்றான்	சிந்நபிந்நமாம்படி பண்ணினவனாய்	வயல்	வயல்களாலே
வற்றா	வற்றுதலின்றிக்கே	சூழ்ந்த	சூழப்பட்ட
வரு	மேல்மேலும் வெள்ளமிடாநின்றுள்ள	சாளக்கிராமம்	அடை நெஞ்சே! (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. † அதுக்கும்முன்னே யுண்டான கரவத வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறது.

(ஊரான்) திருவூரகத்தைத் தனக்கிருப்பிடமாக வுடையவன். (குடந்தையுத்தமன்) † அவர்கள் † அபேக்ஷை யின்றிக்கேயிருக்க ஆஶ்

அரு.—நாலாம்பாட்டு. (ஊரானித்யாதி). கீழ்ச்சொன்ன ராவணவதந் தான் வாநரவீரர்களும் தாங்களுமாய்ச் செய்ததாகையாலே அதிலுமத்புதமாகத்தனியே நின்று வென்ற வீரரஸந்தன்னை யநுஸந்திக்கிறாரென்று விவக்ஷித்து, "தேர்வெள்ளம்" என்ற பதத்திலே நோக்காக அவதாரிகை யருளிச்செய்கிறார், (அதுக்குமித்யாதி).

(அவர்கள்) திருக்குடந்தையிலுள்ளார். (அபேக்ஷை) ரக்ஷாபேக்ஷை.

அடுத்தார்த்தெழுந்தாள் பிலவாய்விட்டலறவவள் மூக்கயில்வாளால்
விடுத்தான்விளங்குசுடராழிவிண்ணோர்பெருமான் நண்ணார்முன் [க்
கடுத்தார்த்தெழுந்தபெருமழையைக்கல்லொன்றேந்தியினநிரைக்கா
தடுத்தான் தடஞ்சூழ்ந் தழகாய சாளக் கிராம மடைநெஞ்சே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அடுத்து	கிட்டி	அயில்	கூர்மைபொருந்திய
ஆர்த்து	சப்தித்துக்கொண்டு	வாளால்	வாளாலே
எழுந்தாள்	கிளர்ந்தசூர்பணகையானவள்	விடுத்தான்	(இளையபெருமாளைக் கொண்டு), அறுத்தவனாய்
பிலம்	குஹைபோன்ற		
வாய்விட்டு	வாயைத்திறந்து	விளங்கு	மிகவும் ப்ரகாசியாநின்றுள்ள
அலற	கூப்பிடும்படி		
அவள்	அவளுடைய	சுடர்	ஒளியையுடைத்தான
மூக்கு	மூக்கை		

ரி.தரக்ஷணத்துக்காகத் தானே திருக்குடந்தையிலே வந்து சாய்ந்தருளின நீர்மையிலேற்றத்தை யுடையவன். அன்றிக்கே, (திருக்குடந்தை - ஊரான் - உத்தமன்) என்றும் சொல்லவுமாம். (ஒருகால்) ஒருகால்.(இருகால் சிலைவளைய)†வில்லிரண்டுகோடியும் வளையும்படியாக. †ராவணன் வளையாமையாலே வில்லைவளைத்தான். (தேராவரக்கரித்யாதி) †"சக்ரவர்த்தித் திருமகனிறே நமக்கெதிரியாய் வருகிறான்" என்று மதிக்கவறியாத ராக்ஷஸருடைய தேர்வெள்ளத்தை அழியச் செய்தானாயிற்று. (வற்றாவித்யாதி) நின்ற நீர் வற்றக்கடவதன்றிக்கே மேன்மேலே வாராநின்றுள்ள புனலையுடைத்தாயிருக்கிற திருப்பேரைத் தனக்கு வாஸஸ்தாநமாகவுடையவன். (பேராயிரமுடையான்) தன்குண சேஷ்டிதங்களுக்கு வாசகமான அநேகம் திருநாமங்களையுடையவன்.†அந்நாம த்வாரா அநுபவிக்கும் வடிவைச்சொல்லுகிறது. (பிறங்கித்யாதி) நெருங்கியிருந்துள்ள சிறகையுடைத்தான வண்டுகளானவை மதுபாநம்பண்ணி†அறையாநின்றுள்ள மாலையையுடையவன். (தாராவித்யாதி) ஊரடங்கலும் மநுஷ்யர்குடியிருப்பு நெருங்கியிருக்குமாபோலே, தாராவாகிற பக்ஷிகளாலே நெருங்கியிருந்துள்ள வயலாலே சூழப்பட்டிருந்துள்ள சாளக்கிராமமடை நெஞ்சே! ... ... (௪)

"கால்" என்று - வில்லின் நுனியாய், அருளிச்செய்கிறார், (வில்லித்யாதி). (ராவணன்) என்றது - உபலக்ஷணமாய், (க) "ந நமேயம்" என்னத்தக்க க(ஷ)ராதிகளைச் சொல்லுகிறது. "தேரா" என்று - விசாரியாதவென்றாய் தாத்பர்யமருளிச்செய்கிறார், (சக்ரவர்த்தித்திரு மகனிறேயித்யாதி). மேலுக்கவதாரிகை, (அந்நாமத்வாரேத்யாதி). (அறையாநின்றுள்ள) சப்தியாநின்றுள்ள. ... ... (௪)

(க) ரா - யு - ௩௬ - ௧௧.

ஆழி	திருவாழியையுடையனாய்	நிரைக்கா	பசுக்களை ரக்ஷிக்கைக்காக
விண்ணோர்	நித்யஸூரிகளுக்கு	கல்லொன்று	கோவர்தநம் என்னும் ஒருமலையை
பெருமான்	நிர்வாஹகனாய், [டே	ஏந்தி	தரித்து
கடுத்து	பெரியவேகத்தோ	தடுத்தான்	மறுத்தவன் நித்யவாஸம்பண்ணுமதாய்
ஆர்த்து	சப்தித்துக்கொண்டு	தடஞ்சூழ்ந்து	தடாகங்களாலே சூழப்பட்டு
எழுந்த	தோற்றின	அழகாய	அழகாயிருந்துள்ள
பெருமழையை	மஹாவர்ஷத்தை,	சாளக்கிராமமடைநெஞ்சே! (ரு)	
நண்ணார்முன்	எதிரிட்ட இந்த்ராதிகள் முன்னே		
இனம்	கூட்டமாயுள்ள		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. † அதுக்குமுன்னான சூர்பணகை நிரஸநத்தை அருளிச்செய்கிறார்.

(அடுத்து) மேல்விழுந்துவந்துகிட்டி. (ஆர்த்தெழுந்தாள்) ஆரவாரத்தைப் பண்ணிக்கொண்டு †கிளர்ந்துவந்து தோற்றினவள், பிலம்போலேயிருக்கிற வாயைத்திறந்துகூப்பிட, அவளுடைய மூக்கை. (அயில்) கூர்மை-கூரிய §திருக்குற்றுடைவாளைவாங்கிப் போக்கினான். (விளங்கித்யாதி) கையும்திருவாழியுமான சேர்த்தியழகைக் காட்டி நித்யஸூரிகள் கார்யத்தை நிர்வஹித்துக்கொண்டு போருகிறவன், (நண்ணாரித்யாதி) †சத்ருக்கள்முன்பே, இந்த்ரனுடைய அபி

அரு.—அஞ்சாம்பாட்டு. (அடுத்தார்த்தித்யாதி). தேராவரக்கர் தேர்வெள்ளத்தை நிரஸிக்கைக்குக் காரணமென்னென்கிற சங்கைக்குப் பரிஹாரந் தோற்ற அவதாரிகையருளிச்செய்கிறார், (அதுக்கித்யாதி).

(கிளர்ந்துவந்து தோற்றினவள்) என்கையாலே-பிராட்டிபக்கல் அபசாரப்பட்டபடி தோற்றுகிறது. அவள் மூக்கைப்போக்கினவர்இளையபெருமாளேயாகிலும், (க) "ராமஸ்ய தக்ஷிணோபாஹு:-ராமஸ்ய தக்ஷிணோபாஹு:" என்கிறபடியே அவயவபூதராகையைப்பற்றப் பெருமாள் போக்கினாரென்னத் தட்டில்லை. இப்படி மஹர்ஷிகளுக்கு உபகாரகனானவளவன்றிக்கே ஜ்ஞாநாதிகரானஸூரிகளுக்கும் அஜ்ஞங்களான பசுக்களுக்கு முபகரிக்குமவனென்று திருவுள்ளத்தில் தோற்றி யருளிச்செய்கிறாரென்று "விளங்கு சுடர்" இத்யாதி பாட்டு சேஷத்துக்கவதாரிகை கண்டுகொள்வது. (சத்ருக்கள் முன்பே) என்றது - எதிரிட்டுவந்த இந்த்ராதிகள் முன்பேயென்றபடி. யத்வா, நந்தவ்ரஜத்திலுள்ளாரென்றாய், இந்த்ரனுக்குக்ரோதநீயத்வம் சொல்லவுமாம்.

§ குற்றுடைவாள் - சிறிதான அரையிலுள்ள கத்தி. குறு - உடைவாள்,
(க) ரா - யு - உஅ - உரு.

௬.—தாயாய் வந்த பேயுயிரும் தயிரும் விழுது முட னுண்ட
வாயான் தூய வரியுருவிற் குறளாய்ச் சென்று மாவலியை
ஏயா னிரப்ப மூவடிமண் ணின்றே தாவென் றுலகேழும்
தாயான் காயா மலர்வண்ணன் சாளக் கிராம மடைநெஞ்சே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாயாய்வந்த	தாய்வடிவுகொண்டு வந்த	இன்றே	இப்போதே
பேய்	பூதனையுடைய	மூவடிமண்தா என்று	மூன்றுஅடிநிலம் தரவேணும்என்று
உயிரும்	ப்ராணனையும்	இரப்ப	யாசிக்க, (அவன் நீர் வார்த்துத்தந்த உடனே)
தயிரும்	தயிரையும்		
விழுதும்	வெண்ணெயையும்		
உடன்உண்ட	ஒக்க அமுதுசெய்த	உலகுஏழும்	ஏழுலோகங்களையும்
வாயான்	திருப்பவளத்தையுடையனாய்	தாயான்	தாவி அளந்துகொண்டவனாய்
ஏயான்	யாசிக்கத்தகாததான்	காயாமலர்	காயாம்பூப்போன்ற
தூய	பரிசுத்தமாய்	வண்ணன்	திருநிறத்தையுடைய ஸர்வேஶ்வரன் நித்யவாஸம் பண்ணுகிற
வரி	அழகாயிருந்துள்ள		
உருவின்	ரூபத்தையுடைய		
குறளாய்	வாமநனாய்க்கொண்டு		
மாவலியை	மஹாபலிபக்கலிலே	சாளக்கிராமமடைநெஞ்சே!	
சென்று	போய்		

ஸந்திபூர்வகமாக வருகிறதாகையாலே பெரிய †வேகத்தோடே கோஷித்துக்கொண்டு தோற்றின மஹாவர்ஷத்தைக் கோவர்த்தநகிரியைத்தரித்துப் பண்ணின உபகாரத்தையுமறியாதே ஸ்வரக்ஷணத்துக்குப்பரிகரமுமில்லாத பசுக்களை நோக்குகைக்காகத் தடுத்தானாயிற்று. தடாகங்களாலே சூழப்பட்ட தர்சநீயமான. (௫)

வ்யா.—ஆறும்பாட்டு. (தாயாயித்யாதி) தாய்வடிவைக்கொண்டுவந்த பூதனையுடைய உயிரையும், யசோதைப்பிராட்டியுடைய தயிரையும், வெண்ணெயையுமொக்க அமுதுசெய்த திருப்பவளத்தையுடையவன். † அநுகூலஸ்பர்சமுடைய த்ரவ்யமும் ப்ரதிகூல

"கடுத்து" என்றதினர்த்தம், (வேகத்தோடே) என்றது. "கடுகவர" என்னக்கடவதிறே. ... ... (௫)

அ௩.—ஆறும்பாட்டு. (தாயாயித்யாதி). பசுமேய்க்கும் பருவத்திற் செய்த கோவர்த்தநோத்தரணத்திலு மாஶ்சர்யாவஹமாகையாலே சைசவத்தில் சரிதத்தை யநுஸந்தித்துக்கொண்டு க்ருஷ்ணாவதாரத்தோடு§தோள் தீண்டியான வாமந வ்ருத்தாந்தத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"தயிரும் விழுதும்" என்றது த்ருஷ்டாந்ததயா என்னுமது தோற்ற உட்கருத்தை யருளிச்செய்கிறார், (அநுகூலேத்யாதி). அநுகூலஸ்பர்சமுள்

§ தோள்திண்டியான - ஸமாநமான.

மூ.—ஏனோ ரஞ்ச வெஞ்சமத்து ளரியாய்ப் பரிய விரணியனை
ஊனா ரகலம் பிளவெடுத்த வொருவன் றானே யிருசுடராய்
வானாய்த் தீயாய் மாருதமாய் மலையா யலைநீ ருலகனைத்தும்
தானாய்த் தானு மானான்றன் சாளக் கிராம மடைநெஞ்சே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏனோர்	சத்ருக்களான அஸுரர்கள்	ஊன் ஆர்	மாம்ஸம் நிறைந்த
அஞ்ச	பயப்படும்படியாக	அகலம்	மார்வை
வெம்	க்ரூரமான	பிளவு எடுத்த	கிழித்துப்பொகட்ட
சமத்துள்	யுத்தத்திலே	ஒருவன்	ஒப்பற்ற பலத்தையுடையனாய்,
அரியாய்	நரஸிம்ஹமாய்க் கொண்டு	தானே	இப்படிப்பட்டவன் தானே
பரிய	தடித்தசரீரத்தை யுடையனான	இருசுடராய்	சந்த்ரஸூர்யர்களாயும்
இரணியனை	ஹிரண்யனுடைய		

ருடைய ப்ராணனு மொக்க தாரகமாகவளர்ந்தவன். (தூயவித்யாதி) † கண்ணழிவற்ற வாமநவேஷத்தையுடையனாய், † அம்புக்குச் செல்லாதவிடத்தை அழகாலே வசீகரிக்கும்படியான வாமநவேஷத்தையுடையனாய்க்கொண்டு சென்று. (ஏயானிரப்ப) (க) "𑌗𑍋𑌸𑌹𑌸𑍍𑌰𑌪𑍍𑌰𑌦𑌾𑌤𑌾𑌰𑌮𑍍 - கோஸஹஸ்ர ப்ரதாதாரம்" (உ) † "𑌦𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍 -தத்யாந்நப்ரதி க்ருஹ்ணீயாத்" என்று இரப்புத்தகாததான் சென்றிரக்க. (மாவலியையேயானிரப்ப) † "கொடேன்" என்றே அபிஸந்தி பண்ணியிருந்த அவன் பக்கலிலே இரப்பனென்னவுமாம். மூவடிமண் இப்போதே தரவேணுமென்று வேண்டிக்கொண்டு, அவனநுமதிபண்ணின வநந்தரம் மறுமநஸ்ஸூப்படுவதுக்குமுன்னே வளர்ந்து லோகங்களேழையு மளந்துகொண்டவன். (தாயான்) தாவினவன். (காயாமலர் வண்ணன்) அவ்வடிவைக்கொண்டாயிற்று பூமியை யளந்தது. ... ... (சு)

ளது தாரகமானாற்போலே ப்ரதிகூலருடைய ப்ராணனும் தாரகமாவதே என்று கருத்து. இத்தால், ப்ரதிகூல நிரஸநமிவனுக்கு ஜந்மஸித்தமென்றதாயிற்று. (கண்ணழிவற்ற) என்றதுக்கு விவரணம், (அம்புக்கித்யாதி). தூய- பரிசுத்தமான, வரி - அழகையுடைத்தான, உருவின் - ரூபத்தையுடைய, குறளாயென்று சப்தார்த்தம். (ஏயான்) ஏய்கை - பொருந்துகையாய், இரப்புப் பொருந்தாதவனென்றருளிச்செய்கிறார், (கோஸஹஸ்ரேத்யாதி). இப்பக்ஷத்தில், "மாவலியையேயானை தானிரப்ப, தூயவரியுருவிற் குறளாய்ச்சென்று மூவடிமண்ணின்றேதாவென் றுலகேழும்தாயான்" என்றந்வயம். அடைவே அந்வயமாய், "இரப்ப" என்றத்தை இரப்பனென்று உத்தமனாக்கி ஏகாரமவதாரணார்த்தமாக யோஜநாந்தரமருளிச்செய்கிறார், (கொடேனித்யாதி). (சு)

(க) ரா - யு - உக - எ. (உ) ரா - ஸு - ருரு - உசு.

மூ.—வெந்தா ரென்பும் சுடுநீறும் மெய்யிற் பூசிக் கையகத்தோர்
சந்தார் தலைகொண் டுலகேழும் திரியும் பெரியோன் தான்செ[ன்று,என்
எந்தாய்சாபம்தீரென்னஇலங்கமுதுநீர்திருமார்வில்
தந்தான் சந்தார் பொழில்சூழ்ந்தசாளக் கிராம மடைநெஞ்சே.

வானாய்	ஆகாசமாயும்
தீயாய்	அக்நியாயும்
மாருதமாய்	காற்றாயும்
மலையாய்	மலைகளாயும்
அலைநீர்	அலையையுடைய ஸமுத்ரத்தால் சூழப்பட்ட
உலகுஅனைத்து[ம்	எல்லாலோகங்களும்
தானாய்	தான் என்னலாம்படி நின்றவனாயும்
தானுமானான்றன்	அஸாதாரண விக்ரஹயுக்தனாயுமிருக்கிற ஸர்வேஶ்வரன் எழுந்தருளியிருக்கிற சாளக்கிராமமடைநெஞ்சே. (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (ஏனோரித்யாதி) சத்ருக்களான ஆஸுர ப்ரக்ருதிகளஞ்சும்படியாக யுத்தத்திலே நரஸிம்ஹமாய். (பரிய விரணியனை) துர்மாம்ஸத்தாலே தடித்த ஹிரண்யனை. † "உடம்பை யொழிய ஆத்மாவுமொன்றுண்டு, அத்தையுடையானொருவனுண்டு, அவனைப்பெறவேணும்" என்னும் †மென்மையும் கலந்துவளர்ந்த உடலன்றே! மாம்ஸ ப்ரசுரமாயிருக்கிற மார்வைப்பிளவுசெய்த அத்விதீயன்; அப்படிப்பட்டவன்தானே சந்த்ரஸூர்யர்களுக்கு அந்தராத்மதயாபுக்கு இவர்கள் தா னென்னலாம்படியாய், ஆகாசமாய் தேஜ:பதார்த்தமாய், வாயுதத்வமாய், கார்யகோடியில் மலையாய், கடல்சூழ்ந்த பூமியடைய "தான்"என்னலாம்படி ஜகதாகாரனாய்நின்றநிலையைச்சொல்லுகிறது.(தானுமானான்)அஸாதாரண திவ்ய விக்ரஹயுக்தனாயிருக்கிறவன். ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (ஏனோரித்யாதி). கீழ்ப்பாட்டில் த்ரிவிக்ரமாபதாநம் ப்ரஸ்துதமாகையாலே அது தானும் வ்யாப்திக்கு ப்ரத்யபிஜ்ஞாபகமாகையாலே ஸ்ம்ருதமான வ்யாப்திக்கும் (க) "எங்குமுளன்" என்ற சிறுக்கன்வார்த்தையை மெய்யாக்கின நரஸிம்ஹாவதாரம் ப்ரயோஜகதயா ஸ்ம்ருதமாய் அத்தையருளிச்செய்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

"பரிய" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார், (உடம்பையித்யாதி). (மென்மையும்கலந்து) என்றது - பகவத்பரனுடம்புபோலே நினைந்துநைந்து க்ருசமாயிருக்குமதுவும் கலந்தென்றபடி. இங்ஙனன்றாகில், "ஊனாரகலம்" என்றபோதே பருத்திருக்கை அர்த்தஸித்தமிறே, இப்படி விசேஷிக்கவேண்டாவிறே என்று திருவுள்ளம். ... ... (எ)

(க) தி - வாய் - உ - அ - கூ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெந்தார்	தஹநம்பண்ணப் பட்டவர்களுடைய	சென்று	(ஸர்வேஸ்வரன்பக்கல்) போய்
என்பும்	எலும்பையும்	என்எந்தாய்	எனக்குஹிதபரனானவனே!
சுடுநீறும்	(அந்த சரீரங்களைக்) கொளுத்தின சாம்பலையும்	சாபம்	இந்தசாபத்தை [ம்
		தீர்	போக்கியருளவேணு
மெய்யில்	தன்னுடம்பில்	என்ன	என்றுப்ரார்த்திக்க,
பூசி.	ஸம்பத்திப்பித்துக் கொண்டும், [ய்	இலங்கு	விளங்காநின்றுள்ள
சந்துஆர்	துளைகளையுடைத்தா	திருமார்வில்	தன்திருமார்விலுண்டான
ஓர்	ஒருவராலும்நிறைக்கவொண்ணாத	அமுதுநீர்	அம்ருதஜலத்தை
		தந்தான்	தெளித்துப்போக்கினவன்நித்யவாஸம் பண்ணுமதாய்
தலை	ப்ரஹ்மகபாலத்தை		
கையகத்து	கையிலே		
கொண்டு	ஏந்திக்கொண்டு [ம்	சந்து	சந்தநவ்ருக்ஷங்கள்
உலகேழும்	ஸப்தலோகங் களிலு	ஆர்	நிறைந்த
திரியும்	திரியுமவனாய்	பொழில்	சோலைகளாலே [ன
பெரியோன்முன்.	பெருமைபாவித்திருக்கும் ருத்ரன்	சூழ்ந்த	சூழப்பட்டிருப்பதா
			சாளக்கிராமமடைநெஞ்சே! (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (வெந்தாரென்பும்) வெந்தவர்களுடைய எலும்பும் அதுசுட்டசாம்பலும் உடம்பிலேபூசி, கையிலே, சந்துகளார்ந்திருந்துள்ள தலையைக்கொண்டு. † எல்லாநரம்புகளும் வந்துகூடின விடத்திலேயிறே சே(ஷே)தித்தது. (உலகித்யாதி)† கூறு செய்தவூரிலே கையும் †கைத்தலையுமாய்த் திரிவாரைப்போலே, ஈஸ்வராபிமாநியாய்த் தன்னாஜ்ஞை நடத்திப்போந்த விடத்திலே கையுமோடுமாய்த் திரிந்த துர்மாநியானவன் சென்று "என் ஸ்வாமீ! என்னுடைய சாபத்தைப்போக்கவேணும்" என்ன. (திருமார்வில் -

அரு.—எட்டாம்பாட்டு. (வெந்தாரித்யாதி). கீழ்த்திருமொழியிலே (க) "ஊன்முனிந்தவன துடலிருபிளவா வுகிர்நுதிமடுத்து" என்று - அர்ப்பகனை ரக்ஷித்த ந்ருஸிம்ஹாபதாநாநந்தரம் அரன்சாபம் தவிர்த்தது ப்ரஸ்துதமான படியாலே, இங்கும் கீழ்ப்பாட்டில் நரஸிம்ஹாவதாரம் ப்ரஸ்துதமாகையாலே * வெந்திறற்சாபம் தவிர்த்தபடியை ஸவிஸ்தரமநுஸந்திக்கிறரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

சந்துகள் - நரம்புகள். தலையென்னவமைந்திருக்க "சந்தார்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறர், (எல்லாநரம்புகளுமித்யாதி). இத்தால், ப்ராணவியோகம்பிறக்கும்படி மர்மத்திலே சே(ஷே)தித்தானுகையாலே தோஷாதிக்யம் விவக்ஷிதமென்று கருத்து. (கூறுசெய்த) - பங்காண்ட, (கைத்தலை) - கைவிலங்கு. ... ... (அ)

(க) க - ச - அ -

மூ. தொண்டா மினமு மிமையோரும் துணை நூல் மார்வி னந்தணரும்
அண்டா எமக்கே யருளாயென் றணையும் கோயி லருகெல்லாம்
வண்டார் பொழிலின் பழனத்து வயலி னயலே கயல்பாயத்
தண்டாமரைகள் முகமலர்த்தும்சாளக் கிராம மடைநெஞ்சே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொண்டாம் இனமும்	அவனுக்கே எல்லா கைங்கர்யங்களும் செய்துபோரும் ஸ்ரீவைஷ்ணவர்களுடையதிரளும்	அருகுஎல்லாம்	ஸமீபஸ்த்தலங்களெங்கும்
இமையோரும்	நித்யஸூரிகளும் [த	வண்டு	வண்டுகளாலே
துணை நூல்	இரண்டு பூணூல்தரித்	ஆர்	நெருங்கப்பட்டிருந்துள்ள
மார்வின்	மார்பினையுடைய	பொழிலின்	சோலையிலுண்டான
அந்தணரும்	ப்ராஹ்மணரும்	பழனத்துஅயல்	நீர்நிலங்களின் சுற்றுப்புறத்திலுள்ள
அண்டா	அண்டங்களுக்கெல்லாம் நிர்வாஹகனானவனே!	வயலின்	வயலில்நின்றும்
எமர்க்கு	எங்கள்விஷயத்திலே	கயல்	மத்ஸ்யங்களானவை
அருளாய்	க்ருபைசெய்தருளவேணும்	பாய	(அந்த நீர்நிலங்களிலே) பாய
என்று	என்றுசொல்லி	தண்	குளிர்ந்த [ளானவை
அணையும்	ஆஶ்ரயிக்கிற	தாமரைகள்	தாமரைமொட்டுக்க
கோயில்	கோயிலினுடைய	முகம்அலர்த்தும்	முகவிகாஸத்தையடையாநின்றுள்ள
			சாளக்கிராமமடைநெஞ்சே! (௯)

இலங்கமுதுநீர் - தந்தான்) விளங்காநின்றுள்ள திருமார்வில் அம்ருதரூபமான ஜலத்தைக்கொடுத்து அவனுடைய சாபமோக்ஷத்தைப் பண்ணினவன். (சந்தார்பொழில்) சந்தநத்தாலே நிறைந்தபொழிலாலேசூழப்பட்ட. ... ... (அ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (தொண்டாமினமும்) (க) "வழுவிலாவடிமை செய்யவேண்டு நாம்" என்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய திரளும், நித்ய ஸூரிகளும், கேவல ப்ராஹ்மணரும். (உ)†"𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍇 -𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 -வித்யா விநயஸம்பந்நே - ப்ராஹ்ம

அரு.—ஒன்பதாம்பாட்டு. (தொண்டாமித்யாதி) கீழ்ப்பாட்டுக்களெல்லாவற்றாலும் ராமக்ருஷ்ணாதிரூபேண அவதரித்துச்செய்தவற்றையெல்லாம் ஸ்ரீஸாளக்ராமத்திலே தார்ம்யைக்யத்தாலே யநுபவித்தாராய், இனி ஸ்ரீஸாளக்ராமத்தையே ஸர்வருமாஶ்ரயிக்கும்படியைச் சொல்லுகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

(௩) "𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 - ப்ரஹ்மவித் ப்ராஹ்மண:" என்கிறந்யாயத்தாலே "தொண்டாமினமும்" என்கிற ஸாமாந்யோக்திக்குள்ளே அந்தணருமந்த: ப்ரவிஷ்டராயிருக்கத் தனித்தருளிச்செய்ததுக்கு த்ருஷ்டாந்தகதநமுகேந தாத்பர்யமருளிச்செய்கிறார், (வித்யேத்யாதி) "𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍇

(க) தி-வாய்-௩-௩-க. (உ) கீதை-ரு-௧அ. (௩)

மூ — தாரா வாரும் வயல்சூழ்ந்த சாளக் கிராமத் தடிகளைக்
காரார் புறவின் மங்கைவேந்தன் கலிய னொலிசெய் தமிழ்மாலை
ஆரா ருலகத் தறிவுடையா ரமரர் நன்னாட் டரசாளப்
பேரா யிரமு மோதுமின்க ளன்றி யிவையே பிதற்றுமினே. ()

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
உலகத்து	இந்தலோகத்திலே	பேர்ஆயிரமும்	(அவனுடைய) ஆயிரம் திருநாமங்களையும்
அறிவுடையார் ஆரார்	அறிவுடையவர்கள் எல்லாரும்	ஓதுமின்கள்	சொல்லப்பாருங்கள்;
அமரர்	நித்யஸூரிகளுடைய தாய் [பதத்தை	அன்றி	அப்படி சொல்லமாட்டீராகில், [சள்
நல்நாடு	விலக்ஷணமான பரம	தாரா	தாரா என்னும் பக்ஷி
அரசாள	அரசாளும்படி	ஆரும்	நிறைந்த

ணே" என்று பிரித்தாரிறேபாஷ்யகாரர். (அண்டா) † தேவனே, எங்களுக்காஶ்ரயணீயனானவனே! † எங்களுக்கருளவேணும் என்று தனித்தனியே சொல்லாநின்றுகொண்டு சேருகிற கோயிலருகெல்லாம். (வண்டாரித்யாதி) வண்டுகளாலே † மிடையப்பட்டுள்ள பொழிலிலுண்டான, பழனமுண்டு - நீர்நிலங்கள், அதினுடைய ‡ பர்யந்தங்களிலுண்டான வயலிலேநின்று கயலானது நீர்நிலங்களிலே வந்து பாய. (தண்டாமரைகள் - முகமலர்த்தும்) † கூத்தாடுமவர்கள் வாய்க்க அடியிட்டால் ஸதஸ்யராயிருப்பார் தம்முகவிகாஸத்தாலே கொண்டாடுமாபோலே, தாமரைகள் முகமலர்த்துமாயிற்று. ... (கூ)

బ్రాహ్మణే గవి హస్తిని । శుని చైవ శ్వపాకే చ పణ్డితాః సమదర్శినః - வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி ! சுநிசைவஶ்வபாகேச பண்டிதாஸ்ஸமதர்சிந:" என்கிற வசநத்தில் "విద్యావినయసంపన్న కేవల బ్రాహ్మణగోహస్తిశ్వశ్వపాకాదిషు - வித்யாவிநயஸம்பந்ந கேவலப்ராஹ்மண கோஹஸ்திஶ்வஶ்வபாகாதிஷு" என்று வித்யாவிநயஸம்பந்நன் தொண்டுபடுகைக்கு ஹேது - ஜ்ஞாநாதிகளென்றும், நூலையே துணையாகவுடைய த்விஜனைக் கேவல ப்ராஹ்மணனென்றும் பிரித்தருளிச்செய்தாரென்றும் உட்கருத்து; கவாதிபதங்களிலே விசேஷணமிடாமையாலும், வித்யாவிநயஸம்பந்நே" என்றதுக்கு ப்ரதிகோடி சொல்லவேண்டுகையாலும் பிரித்தாரென்று கண்டுகொள்வது, அண்டத்தை - ஆகாசத்தை, உடையவன், அண்டனென்றாய், பலிதார்த்தம். (தேவனே) என்று "எமக்கு" என்றபதத்தை, "அண்டா" என்றவிடத்தில் அநுஷங்கித்து, அத்தால் பலிதமருளிச்செய்கிறார், (எங்களுக்கித்யாதி). (மிடைய) - நெருங்க. "அயலேயானவயல்" என்றந்வயித்து (பர்யந்தங்களிலுண்டான) என்றது. வண்டுகள் கா(ഗா)யகராகவும், கயல்கள் நர்த்தகராகவும் கமலங்கள் கண்டுகக்குமவர்களாகவும் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார், (கூத்தாடுமவர்களித்யாதி). ... ... (க)

வயல்	வயல்களாலே	வேந்தன்	அரசனான
சூழ்ந்த	சூழப்பட்ட	கலியன்	ஆழ்வார் [படி
சாளக்கிராமத்து	ஸ்ரீஸாளக்ராமத்திலேவந்துகிட்டி நிற்கிற [மாக	ஒலி	ஒலியையுடைத்தாம்
அடிகளை	ஸர்வஸ்வாமிவிஷய	செய்	அருளிச்செய்த
கார்ஆர்	மேகங்கள்நிறைந்திருந்துள்ள	தமிழ்மாலை இவையே	த்ராவிடசப்தஸந்தர்ப்பரூபமான இப்பத்துப்பாட்டையே
புறவின்	சூழலையுடைய	பிதற்றுமின்	அடைவுகெடச்சொல்லப்பாருங்கோள்.
மங்கை	திருமங்கைநாட்டுக்கு		

வ்யா. — பத்தாம்பாட்டு. (தாராவித்யாதி) † தாராக்களாலே நிறைந்திருந்துள்ள வயல்சூழ்ந்த ஸ்ரீ ஸாளக்ராமத்திலேவந்து ஸந்நிஹிதனான ஸர்வஸ்வாமியைக் கவிபாடிற்று. (காராரித்யாதி) மேகங்களினுடைய † நிரந்தரஸஞ்சாரத்தையுடைத்தான பர்யந்தத்தையுடைய திருமங்கைக்கு ராஜாவான ஆழ்வார். ஒலியுடைத்தாம்படியாகச் சொன்னதொடை. (ஆராருலகத்தறிவுடையார்) லோகத்தில் அறிவுடையராயிருப்பாரார்; நித்யஸூரிகளுடைய நல்நாடு - பரமபதம், அத்தை, (க) "ஆண்மின்கள் வானகம்" † என்கிறபடியே தாங்களிட்ட வழக்காம்படி நடத்த, ஆயிரம் திருநாமங்களையும் வாயாலே சொல்லப்பாருங்கோள்; அங்ஙனன்றிக்கே, (இவையே பிதற்றுமினே) இவற்றையே அடைவுகெடச்சொல்லப்பாருங்கோள். (உ) † "𑌸𑌙𑍍𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑍇𑌜𑍍𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥𑌂 𑌵𑍇𑌦𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌸𑌮𑍀𑌰𑌯𑍇𑌤𑍍" - ஸங்கீர்த்தயேஜ்ஜகந்நாதம் வேதம் வாபிஸமீரயேத்". (கO)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (தாராவித்யாதி) தொண்டாமினம் முதலானார் வர்த்திக்கை ஆஶ்சர்யமல்லாமையாலே, பக்ஷிவிசேஷங்கள் திவ்யதேசத்தைப் பற்றிக் கிடப்பதே என்று ஈடுபட்டு விசேஷிக்கிறாரென்று திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார். (தாராக்களாலேயித்யாதி). ஸமுத்ரதீரமாகையாலே (நிரந்தர ஸஞ்சாரத்தை) என்றது. இத்தால், பரமோதாரரான ஸ்ரீமஹாபாகவதர்வர்த்திக்கும் தேசத்தில் வர்த்திக்குமவரென்று ஆப்ததமத்வம் ஸூசிதமாயிற்று. (என்கிறபடியே) என்றவநந்தரம், "அவர்கள்தான்" என்றுசேஷம்; அங்ஙனன்றாகில், கீழ் - (அத்தை) என்றதுக்கு அந்வயமில்லை. ஆயிரந்திருநாமங்களைச் சொல்லுங்கோள், கூடாவிட்டால் இப்பத்துப்பாட்டையும் சொல்லுங்கோளென்றாற்போலே சொன்னவிடமுண்டோவென்ன; அருளிச்செய்கிறார், (ஸங்கீர்த்தயேதித்யாதி). ... ... (கO)

ஜீயர் திருவடிகளே சரணம்.

முதற்பத்தில் ஐந்தாந்திருமொழி முடிந்தது.

(க) தி - வாய் - கO - கூ - சு. (உ)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

முதற்பத்து - ஆறுந்திருமொழி - வாணிலா.

மூ.—வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள்
மாதரார் வனமுலைப் பயனே
பேணினே னதனைப் பிழையெனக் கருதிப்
பேதையேன் பிறவி நோ யறுப்பான்
ஏணிலே னிருந்தே னெண்ணினே னெண்ணி
இளையவர் கலவியின் திறத்தை
நாணினேன் வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய். (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நைமிசாரணியத்துள்	நைமிசாரண்யத்திலெழுந்தருளியிருக்கிற	கருதி	நினைத்து [தியை
எந்தாய்	என்ஸ்வாமீ! [கிற	பிறவிநோய்	ஸம்ஸாரமாகிற வ்யா
வாள்நிலா	ஒளிபொருந்தியிருக்	அறுப்பான்	போக்கிக்கொள்ளுகைக்காக
முறுவல்	மந்தஹாஸத்தையும்	எணிலேன் இருந்தேன்	எண்ணாதிருந்தேன்;
சிறுநுதல்	சிறியநெற்றியையும்	எண்ணினேன்	(இதற்குமுன்பு) நின்றநிலையை யாராய்ந்தேன்; [து
பெரு	பெருத்த	எண்ணி	(இப்படி) அநுஸந்தித்
தோள்	தோள்களையுமுடையரான	இளையவர்	யுவதிகளுடைய
மாதரார்	ஸ்த்ரீகளுடைய	கலவியின் திறத்தை	ஸம்ஶ்லேஷவிஷயத்தை
வனம்	அழகிய	நாணினேன்	லஜ்ஜித்தேன்
முலையே	ஸ்தநங்களையே	நாணி	லஜ்ஜித்தவனாய்
பயன்	பரமப்ரயோஜநமாக	உன்	உன்னுடைய
பேணினேன்	ஆதரித்துக்கொண்டு போந்தேன்;	திருவடி	திருவடிகளை
பேதையேன்	அறிவுகேடனானநான்	வந்து	கிட்டி
அதனை	அத்தை	அடைந்தேன்	சரணமபுகுந்தேன்.
பிழையென	தப்பென்று		

வ்யா.—வாணிலாமுறுவல்ப்ரவேசம்.—†திருவுள்ளத்தைக்குறித்து, "உகந்தருளின நிலங்களை ஆஶ்ரயி" என்று பலகாலும் சொல்லிக்கொண்டு போந்தார் கீழ்; அதுவும் அப்படியே செய்வதாக வொருப்பட்டது; அநந்தரம், தாம் தம்முடைய நிகர்ஷத்தை யநு

அநு.—வாணிலாமுறுவல் ப்ரவேசம்,—கீழஞ்சு திருமொழிகளாலும் மந்த்ரமந்த்ரார்த்தங்களை லபித்த ஆழ்வார், தன்னெஞ்சும் தம்மோடொருமிடறானவாறே மந்த்ரவிவரணமான த்வயத்தில் பூர்வகண்டார்த்தாநுஷ்டாநம்பண்ணுகிறார் என்று ஸங்கதிதோற்ற வருளிச்செய்கிறார், (திருவுள்ளத்தையித்யாதி).

ஸந்தித்துத் தம்முடைய பூர்வவ்ருத்தத்தையும், விஷயப்ராவண்யத்தையும், ஆர்த்தவிஷயத்தில் "ஐயோ!" என்னாதே போந்தபடியையும், பரஹிம்ஸையே யாத்ரையாய்ப் போந்தபடியையும், இவற்றையடைய முன்னிட்டு, (க)"ராவணோ நாம துர்வ்ருத்த:" என்று ஸ்ரீ விபீஷணாழ்வான் ஆகாசத்திலே நின்று ஸ்வநிகர்ஷத்தைச்சொல்லி சரணம் புக்காற்போலே, இவரும் தம்முடைய அநந்யகதித்வத்தை விண்ணப்பம்செய்து திரு நைமிசாரண்யத்திலேநிற்கிற ஸர்வேஸ்வரன் திருவடிகளிலே †பெரிய பிராட்டியார் முன்னிலையாகச் சரணம்புகுகிறார்.

முதற்பாட்டு. (வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள் மாதரார் வனமுலைப் பயனே பேணினேன்) இது என்னுடைய பூர்வவ்ருத்த மிருந்தபடி என்கிறார். † விஹிதங்களை யநுஷ்டித்து சமதமாத்யாத்மகுணோபேதராயிருப்பாரிறே †இதுக்கதிகாரிகள், அதில் நான் செய்துநின்ற நிலை இதுவென்கிறார்.

(வாணிலாமுறுவல்) ஒளியானது நிலாவாநின்றுள்ள - வர்த்தியாநின்றுள்ள, முறுவலென்னுதல்; அன்றிக்கே, ஒளியானது இதுக்கிலக்கானாருடைய நெஞ்சுவிட்டுப் போகாதே வர்த்தியாநின்றுள்ள முறுவலென்னுதல். நுதல்-நெற்றி; அதுவும் சிறுத்திருக்கை; இல்லையாகில் பும்ஸ்த்வகந்தியாயிருக்குமிறே. (பெருந்தோள்) போக்தாவி னளவல்லாதபடி போக்யதை கரைபுரண்டதோள். (மாதராரித்யாதி) † ஒளிநிலாவாநின்றுள்ள முறுவலையும் அளவுபட்டநுதலையும் போக்யதாப்ரகர்ஷத்தையுடைத்தான தோள்களையுமுடையரான ஸ்த்ரீகளுடைய † ஸந்நிவேசத்தழகை யுடைத்தாயிருக்கிற மாம்ஸ

(உ) "தேனுடைக்கமலத் திருவினுக்கரசே" என்றத்தைப்பற்ற (பெரிய பிராட்டியார் முன்னிலையாக) என்றது.

முதற்பாட்டு. (வாணிலாவித்யாதி) ப்ரபத்தி ஸர்வாதிகாரமன்றோ, பூர்வவ்ருத்தத்தை யநுஸந்தித்து அநுதப்தஹ்ருதயராய் அவற்றையெல்லாம்விட்டு வந்தாஸ்ரயிக்கவேணுமோவென்ன; அருளிச்செய்கிறார், (விஹிதங்களையித்யாதி வாக்யத்வயத்தாலே). பூர்வவ்ருத்தம் ப்ரபத்திக்கு விரோதியென்றநுஸந்தித்தாரல்லர், ஸாதநாந்தரங்களுக்கு விருத்தங்களைச்செய்து போந்தேனாகையாலே உபாயாந்தர சூந்யனென்று தம்முடைய அநந்யகதித்வத்தை முன்னிடுகிறாரென்று கருத்து. (இதுக்கு) என்றது - இந்தபகவத்விஷயத்தில் முமுக்ஷுவாயிழிகிறதுக்கென்கை. அதாவது - பக்தியென்றபடி.

கீழ் சிலபதங்களுக் கர்த்தமருளிச்செய்து, வாக்யார்த்தமருளிச்செய்கிறார், (ஒளியித்யாதி). "வனம்" என்றதினர்த்தம், (ஸந்நிவேசத்தழகு)என்றது.

(க) ரா - யு - கஎ - கஉ. (உ) க - கூ - கூ.

க்ரந்தியையே ப்ரயோஜநமாக ஆதரித்துக்கொடுபோந்தேன். (பயனே பேணினேன்) † அவ்வருகில் அத்ருஷ்டமாகவும் நினைத்திருப்பது இது தன்னையேயாயிற்று. † தங்களுடைய அவயவசோபையாலே இவனை யகப்படுத்தி, இவன் கையிலுள்ள ஸர்வஸ்வத்தையுமபஹரித்து "இவனகப்பட்டான்" என்றறிந்தவாறே பின்னை இவன் நினைத்தபடி தங்களைக்கொடுக்கக்கடவரல்லாத ஸ்த்ரீகளுடைய மாம்ஸக்ரந்தியையே ப்ரயோஜநமென்று ப்ரமித்து ஆதரித்துப் போரப் பேணினேன். † அது தன்னில் அநுபாவ்ய மொன்றில்லையே; அதிலே † குவாலுண்டாக நினைத்து ஆதரிக்கிற இவன் ப்ரமமேயிறேயுள்ளது. (அதனைப்பிழையெனக்கருதி) இப்படி நெடுநாளாதரத்துக்கு விஷயமாய்ப்போந்தது இன்றாகப்பிழை என்று நெஞ்சிலே பட்டது; † விஷயப்ரவணனானவன் "நீ அவற்றை விடு" என்றால் விடானிறே; † இவர்க்கிப்போது இவைதன்னை விடுகைக்கு † உவாத்து இவைதானேயாயிற்று. அதாகிறது - அவர்களுடைய அநாத்மகுணங்களை அநுஸந்தித்தவாறே கடுகவிட்டுக்கொடு நிற்கலாமிறே. இன்று தப்பென்றுவிட்டுக்கொடு நிற்கவேண்டுமிவற்றையாயிற்று நெடுநாள் ப்ரயோஜநமாக புத்திபண்ணிப்போந்தது. (பேதையேன்) இன்று பிழையென்று கைவிடவேண்டும்படியான இத்தை அநாதிகால மாதரித்துப்போரவேண்டின ஹேதுவென்னென்ன; (பேதையேன்) அறிவுகேடு எத்தைப்பண்ணாதுதான்.

(பிறவியித்யாதி) † இப்படி யறிவுகேடனாகையாலே "ஸம்ஸாரமாகிறது அல்பம், அஸ்த்திரம், து:க்காவஹம், ஆனபின்பு இத்தைத் தவிர்த்துக் கொள்ளவேணும்" என்னும் மநோரதத்தை யுடையே

"பயனே" என்றவிடத்தில் ஏகாரத்தை "முலை" என்றவிடத்திலே கீழேயருளிச்செய்து, "பயனே" என்றவிடத்திலேதானேயாக்கி அத்ருஷ்டம் வ்யாவர்த்யமாக அர்த்தாந்தரமருளிச்செய்கிறார், (அவ்வருகிலித்யாதி). முதல்யோஜனைக்கு விவரணம், (தங்களுடையவித்யாதி). அது போக்யமாயன்றோவிருப்பது, ப்ரமித்தேனென்பானேன்னென்ன; அருளிச்செய்கிறார், (அது தன்னிலித்யாதி வாக்யத்வயத்தாலே). (குவால்) ஆதிக்யம். இன்றுபிழையென்று கருதுகிறவர், அப்போது ஆதரிப்பானென்னென்ன; அருளிச்செய்கிறார், (விஷயப்ரவணனானவனித்யாதி). அன்றுசொன்னாலும் விடாதவர் இப்போது பிழையென்று கருதுகைக்கு ஹேதுவேதென்ன; அருளிச்செய்கிறார் (இவர்க்கித்யாதி). (உவாத்து) - உபாத்யாயன்.

"பேதையேன்" என்றது-கீழுக்கும் ஹேதுவானவளவன்றிக்கே, மேலுக்கும் ஹேதுவென்னாநின்றுகொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார், (இப்படியித்யாதி). "சேன்" என்றாற்போலே "ஏன்" என்று உயர்த்தியாய் அநுகூல

னன்றிக்கே யிருந்தேன். (எணிலேன்) † இத்தைத்தவிர்த்துக் கொள்ளுகைக்கீடான உயர்த்தியை யுடையேனல்லேனென்னுதல். (இருந்தேன்) "நன்று" என்றநுஸந்தித்துப் போந்தவித்தைத் "தண்ணிது" என்றுவிட்டாரே, அநந்தரம் உத்தேஶ்யபூமியிலேபோய்ப் புகப்பெற்றிலரே, நடுவில் நிலையையாயிற்று இருந்தேனென்கிறது. (க) "ஓடினேன்" என்றவிவர் இருக்கைக்கவகாசமில்லை. (உ) "ఖస్థ ఏవ వ్యతిష్ఠత" "கஸ்த்த ஏவவ்யதிஷ்ட்டத" என்னுமாபோலே. (எண்ணினேன்) "நாம் முன்புசெய்து போந்ததென், நாம்தாமார், இனிச்செய்துவர்த்திக்கவடுப்பதென்" என்று ஆராயத்துடங்கினேன்.

(எண்ணி) இப்படிஅநுஸந்தித்து. (இளையவர் கலவியின் திறத்தை நாணினேன்) தங்கள் பருவத்தாலே இதினுடைய தண்மை நெஞ்சிற்படாதபடியாக மறைத்துக் கொடுபோருகிறவர்களுடைய கலவி † யிடையாட்டத்தை இப்போது லஜ்ஜித்தேன். † ஆண்பிள்ளைச்சோறுள்ளியை ஸ்த்ரீயென்று பின்துடருமாபோலே யிருப்பதொன்றிறே சப்தாதிவிஷயங்களிலே போக்யதாபுத்தி பண்ணிப் பின்துடருகையாகிறவிது. வெளிச்செறிப்புப்பிறந்தவநந்தரம் லஜ்ஜித்துக் கைவாங்கவேண்டுமத்தையிறே நெடுநாள் ஆதரித்துப் போந்தது. (வந்துன் திருவடியடைந்தேன்) நெடுநாள் ப்ரயோஜநம் என்றாதரித்து ஒருநாளாக லஜ்ஜித்துக் கைவாங்கவேண்டும்படியன்றிக்கே, என்றுமொக்க ப்ரயோஜந ரூபமான திருவடிகளிலே வந்து சரணம்புகுந்தேன். (நைமிசாரணியத்துளெந்தாய்) அவன் பக்கல் ப்ரயோஜநமுள்ளன வாங்கிப் பின்னைக் கைவிடுமாகில் இவனுக்கல்லாதாரில் வாசியில்லையிறே, அங்ஙனன்றிக்கே நிருபாதிக பந்துவாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் வகுத்தஸ்வாமியாய்,

---

வ்ருத்தியால்வந்த உயர்த்தியைச் சொல்லுகிறதென்கிறார், (இத்தையித்யாதி). "இருந்தேன்" என்றதுக்கு-அங்குமன்றிக்கே இங்குமன்றிக்கே யிருந்தேனென்று விஷாதத்திலேயாக்கிக் கீழருளிச்செய்து, பிழையெனக் கருதியிருந்தேன் - நிர்ப்பரனாயிருந்தேனென்னும் தாத்பர்யாந்தரத்தை யருளிச்செய்கிறார், (ஓடினேனித்யாதி). முந்தின அர்த்தத்துக்கு த்ருஷ்டாந்தம், (கஸ்தஇத்யாதி).

(இடையாட்டத்தை) என்றவநந்தரம், "கண்டு" என்றுசேஷம். நாணுகைக்கு ஹேதுவென்னென்ன; அருளிச்செய்கிறார், (ஆண்பிள்ளையித்யாதி). (சோறுள்வி) - சோற்றுக்கு நிர்வாஹகை; சோறுக்குகிறவளென்றபடி. (ஆண்பிள்ளைச்சோறுள்வி) என்றது-ஸ்த்ரீவேஷங்கொண்ட புருஷனென்றபடி. [பயனேபேணினேன், பேதையேன்பிறவிநோயறுப்பானேணிலேன் - அதனைப் பிழையெனக்கருதி - இருந்தேன், எண்ணினேன், எண்ணி-எந்தாய்] என்றந்வயம். ... ... (க)

(க) க - க - க.   (உ) ரா - யு - சள - அ.

மூ.—சிலம்படியுருவில் கருநெடுங் கண்ணார்
திறத்தனா யறத்தையே மறந்து
புலன்படிந் துண்ணும் போகமே பெருக்கிப்
போக்கினேன் பொழுதினை வாளா
அலம்புரி தடக்கை யாயனே மாயா
வானவர்க் கரசனே வானோர்
நலம்புரிந் திறைஞ்சும் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத் துளெந்தாய். (௨)

பதம்.	உரை.
நைமிசாரணியத் துளெந்தாய்!	
சிலம்பு	சிலம்பையணிந்து
உருவில்	அழகாயிருந்துள்ள
அடி	பாதங்களையும்
கருநெடு	கறுத்துநீண்ட
கண்ணார்திறத்தனாய்	கண்களையுமுடைய ஸ்த்ரீகள் பக்கலிலே ஆஸக்தனாய்
அறத்தை	தர்மரூபியான உன்னை
மறந்தே	சற்றேனும்நினையாமல்
புலன்	இந்த்ரியங்கள்
படிந்து	பொருந்தி
உண்ணும்	அநுபவிக்கிற
போகமே	போகத்தையே
பெருக்கி	மேன்மேல் பெருகச்செய்து
பொழுதினை	காலத்தை
வாளா	வ்யர்த்தமாக

பதம்.	உரை.
போக்கினேன்	கழித்துவிட்டேன்;
அலம்புரி	கலப்பையாகிற ஆயுதம்தரித்த
தடம்	பரந்த
கை	திருக்கைகளையுடையனாய்
ஆயனே	இடைச்சாதியில் திருவவதரித்தவனே!
மாயா	ஆஸ்சர்யச்செய்கையுடையவனே!
வானவர்க்கு	தேவர்களுக்கு
அரசனே	தலைவனானவனே!
வானோர்	நித்யஸூரிகள்
நலம்புரிந்து	அன்பையுடையராய்க்கொண்டு
இறைஞ்சும்	ஆஸ்ரயியாநின்றுள்ள
திருவடி	(தேவர்) திருவடிகளை
அடைந்தேன்	அடைக்கலமாகக்கிட்டினேன். (௨)

இவன்றான் நெடுநாளை யிழவையநுஸந்தித்து வெறுத்தால், "பிழை புகுந்ததாகில் அதுக்குப் பரிஹரிக்கைக்கு நானிருந்தேன், செய்யலாவதுண்டோ!" என்றெடுத்து முகத்தைத்துடைத்துக் குளிர முகந்தருமவனாயிருந்தான். ... ... (௧)

வ்யா.—இரண்டாம்பாட்டு. † திருவடிகளிலே விழுந்து சரணம் புக்கவாறே முன்புதாம் செய்துபோந்தபடிகளடங்கலும் தோன்றிற்று; அத்தாலே, "போக்கினேன் பொழுதினை †வாளா" என்கிறார்.

அரு.—இரண்டாம்பாட்டு. (சிலம்படியித்யாதி). கீழ்ப்பாட்டிலே அவன் திருவடிகளிலே விழுந்தபடியை அநுஸந்தித்தவாறே, முன்பு விஷயாந்தரங்களிலே விழும்படிகள் தோற்றி அத்தை யநுஸந்தித்து அநுதபிக்கிறாரென்று ஸங்கதியருளிச்செய்கிறார், (திருவடிகளிலேயித்யாதி). (வாளா) வ்யர்த்தமாக.

(சிலம்படி) சிலம்பையுடைய அடியாயிற்று. (உருவில்) † அது தன்னிலே செம்பஞ்சையு மிட்டுவைப்பர்களாயிற்று இவனைத் துவக்குகைக்காக. (கருநெடுங்கண்ணார்) கறுத்துப் பரப்பை யுடைத்தாயிருந்துள்ள கண்களாலே நோக்குவர்களிவனை; † இவன் இதிலே துவக்குண்டு காலிலே விழுந்து பின்னை அவர்கள் தங்களைவிட்டு அவர்களுடைய கதா (𑌗𑌦𑌾) கந்த (𑌗𑌨𑍍𑌧) முள்ளதேசத்திலே † அணுவாய்த்துத் திரியுமாயிற்று. (அறத்தையேமறந்து) † ஸ்த்ரீகளுக்கு வழிபறித்திடுமது மறக்கவொண்ணாதே; தன்னுடைய உஜ்ஜீவநத்துக்கு உபாயமானத்தையேயாயிற்று வருந்தி மறப்பது. (புலனித்யாதி) † கொண்டி திரியும் பசுப்போலே இந்த்ரியங்கள் தான் விஷயங்களிலே மண்டியாயிற்றிருப்பது முதல் தன்னிலே; அதுக்குமேலே விஷயஸந்நிதியுள்ள விடத்திலே வர்த்தித்து, இந்த்ரியங்களுக்கு விஷயங்களிலே போக்யதாபுத்தியைப் பிறப்பித்து, அவை அவற்றிலே மேல்விழுந்து புஜிக்கும்படி அத்தால் வந்த போகத்தையே பெருக்கி. (போக்கினேன்) † பகவத் விஷயத்திலே அடிக்கழஞ்சுபெற்றுச் செல்லக்கடவகாலத்தை வ்யர்த்தமேபோக்கினேன்.

(அலம்புரிதடக்கை யாயனே) இவன்கையிலுள்ளத்தை அபஹரிக்கை யன்றிக்கே, இவனுக்கு "அமையும்" என்னும்படி ஸர்வஸ்வத்தையும் கொடுக்குமவனாயிற்று. அலமென்னக்கொடுக்கும் தடக்கையை யுடையவனென்னுதல். அலமென்றது - ஹலமென்றபடியாய், கலப்பையைத் தரித்த திருக்கையை யுடையவனென்னுதல் (மாயா) இவன் ஒருநாள் திருவடிகளிலே விழுந்தால் பின்னை இவனுடைய நெடுநாளை யிழவு மறக்கும்படி முகங்கொடுக்கும்படிக்கடியான ஆஸ்சர்யகுணசேஷ்டிதங்களை யுடையவனே! (வானவர்க்கரசனே)

"உரு" என்று அழகாய், லாக்ஷாரஸத்தால் வந்த வழகைச்சொல்லுகிறதென்கிறார், (அதித்யாதி). சிலம்படியில்விழுகைக்கு ஹேது கண்ணழகென்று விவக்ஷித்து, அதுக்கும் "திறத்தனாய்" என்றதுக்கும் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (இவனித்யாதி). (அணுவாய்க்கை) அதுவேபோதுபோக்காகை. அதுவேகாலக்ஷேபமாயென்றபடி. "அறத்தையே" என்ற ஏவகாரதாத்பர்ய கதநமுகேந தாத்பர்ய மருளிச்செய்கிறார், (ஸ்த்ரீகளுக்கித்யாதி). "போகமே பெருக்கி" என்னவமைந்திருக்க, "புலன்படிந்துண்ணும்" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார், (கொண்டிதிரியுமித்யாதி). கொண்டி திரிகை - பட்டிமேய்கை. "போகமே" என்ற ஏவகாரதாத்பர்யம், (பகவத்விஷயத்திலேயித்யாதி). (உ)

மூ.—சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து
சுரிகுழல் மடந்தையர் திறத்துக்
காதலே மிகுத்துக் கண்டவா திரிந்த
தொண்டனேன் நமன்றமர் செய்யும்
வேதனைக் கொடுங்கி நடுங்கினேன் வேலை
வெண்டிரை யலமரக் கடைந்த
நாதனே வந்துன் திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்து ளெந்தாய். (௫)

பதம்.	உரை.
வெள்	வெளுத்த
திரை	அலைகளையுடைய
வேலை	திருப்பாற்கடலை
அலமர	கலங்கும்படி
கடைந்த	மதநம்பண்ணின
நாதனே	ஸ்வாமியே!
நைமிசாரணியத்துள்	நைமிசாரண்யத்தில் (வந்து)
எந்தாய்!	எனக்கு உபகாரகனானவனே!
சூதினைப்பெருக்கி	பெருக்கச்சூதாடியும்
களவினைத்துணிந்து	களவுகாண அத்யவஸித்தும்
சுரி	சுருண்ட
குழல்	மயிர்முடியையுடைய
மடந்தையர்திறத்து	ஸ்த்ரீகள்பக்கலிலே
காதல்மிகுத்து	மிகுந்த ஆசையையுடையனாய்
கண்டவா	கண்ணுக்குத்தோற்றினவிஷயங்களிலே
திரிந்த	யதேச்சமாகநடந்து
தொண்டனேன்	(அவர்களுக்கு) பரிசர்யை பண்ணிப்போந்தநான்
நமன்தமர்	யமபடரானவர்கள்
செய்யும்	பண்ணுகிற
வேதனைக்கு	ஹிம்ஸையினைத்து
ஒடுங்கி	அவயவங்களெல்லாம் தம்தம்நிலைகுலைந்து
நடுங்கினேன்	நடுங்கினவனாய்
உன்திருவடி	தேவரீர்திருவடிகளிலே
வந்து அடைந்தேன்.	வந்து சரணம்புகுந்தேன். (௫)

ப்ரஹ்மாதிகளுக்காஶ்ரயணீயனாயுள்ளவனே! (வானோரித்யாதி) நித்யாநுபவம்பண்ணுகிற நித்யஸூரிகள், இதுக்கு முன்பொருநாளும் கண்டறியாதாப்போலே யிருக்க ஸ்நேஹத்தைச்செய்து ஆஶ்ரயியாநின்றுள்ள திருவடிகளிலே வந்து சரணம்புகுந்தேன். (நைமிசாரணியத்துளெந்தாய்) பரமபதத்திலே நித்யஸூரிகளுக்கநுபாவ்யனாய்க்கொண்டு அவர்களுக்கு ஓலக்கம் கொடுத்துக்கொண்டிருக்கக்கடவ நீ எனக்கு உன் திருவடிகளிலே வந்து சரணம் புகலாம்படி ஸந்நிஹிதனாகையாலே சரணம்புகுந்தேன். ... (௨)

அரு.—மூன்றும்பாட்டு. (சூதினையித்யாதி.) கீழ்ப்பாட்டிலே கண்ணழகுக்குத் தோற்றுக்காலிலே விழுந்து அவர்கள் நெஞ்சுருகாவிட்டாலும் அவர்கள் கதா (ஞ) ஸம்பந்தமுள்ள தேசத்தை விரும்பி ததுபாய சிந்தை பண்ணி த்ரவ்யார்ஜநமுகேந அவர்களைக் கிட்டி போகத்தைப் பெருக்கினபடியைச் சொல்லி, “வாளா” என்றருளிச்செய்தார், இதில் த்ரவ்யார்ஜநம் பண்ணின

வ்யா.—மூன்றாம்பாட்டு. † "போக்கினேன்பொழுதினைவாளா" என்றார்; † சிலவற்றைச் செய்திறே போதுபோக்குவது, செய்தபடி தானெங்ஙனே யென்ன; அதுதன்னைச் சொல்லுகிறார்.

(சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து) பகலெல்லாம் சூதுபொருது, தோற்றவன் குறைவறக்கொடுக்கக் கண்டவாறே "இவன் பக்கலிலே கனக்கவுண்டாகையிறே இவன் தருகிறது" என்று ராத்ரியில் களவுகாண அத்யவஸிப்பது இவன் க்ருஹத்திலேயாயிற்று. ஆக, காணவும்கொண்டு காணாதபடியும் கொள்ளுமாயிற்று. † இவைதான் நிஷித்தாநுஷ்டாநமாகையாலே, இவை தன்னையே சொல்லிற்றாகவுமாம். †அன்றிக்கே, ஆஸ்திக்ய முடையனாயிருப்பானொருவன், "கெடுவாய்! ஈஶ்வரனென்பானொருவனுண்டு காண்" என்றால், நாஸ்திக்யத்தாலே பஶ்யதோஹரனாய், "ஈஶ்வரனாகிறவனார் ? என்றும் ஆத்மாபஹாரம் பண்ணியுமாயிற்றுப் போந்தது. (சுரிகுழலித்யாதி) இப்படி த்ரவ்யார்ஜநம் பண்ணினால் அது கொண்டுகொள்ளும் கார்யத்தைச் சொல்லுகிறது. (க) "விரிகுழலாரிற்பட்டு" என்கிறபடியே மயிர்பேணாதே யிருக்கில் அதிலே ஈடுபடுவர், மயிர்சுழன்று முடித்திருக்கில் அதிலே யீடுபடுவர், ஏதேனுமாக அவர்களிருந்தபடியமையுமாயிற்று இவர்க்கீடுபடுகைக்கு; (உ) "என்னையுன்செய்கை நைவிக்கும்" என்னுமாபோலே. (கண்டவாதிரிந்த) (ரு) "ந்ருபஶு: ந்ருபசு:" என்னுமாபோலே, கண்ணுக்குத் தோற்றின விஷயங்களில், இவை சாஸ்த்ரங்கள் நிஷேதித்தவிடம் என்று மீண்டறிவதில்லை. தோற்றினபடி மூலையடியே திரிந்த வித்தனை. (தொண்டனேன்) தொண்டனாகிறான் - பரதந்த்ரன். அது அப்ராப்த விஷயங்களிலே யானபோது அபகர்ஷஹேதுவாகக்கடவது; ப்ராப்தவிஷயங்களிலேயானபோது, உத்கர்ஷ ஹேதுவாகச்சொல்லக்கடவது.

படியைச் சொல்லுகிறாரென்று ஸங்கதியருளிச்செய்கிறார், (போக்கினேனித்யாதி). (சிலவற்றை) த்ரவ்யார் ஜநப்ரகாரங்களை.

சூதையும் களவையும் த்ரவ்யார்ஜநத்துக்கு சேஷமாக வருளிச்செய்து, யோஜநாந்தரமருளிச்செய்கிறார், (இவைதானித்யாதி). ஈஶ்வரனை வாதமுகத்தாலில்லை செய்கை-சூதென்றும், ஸ்வாநுபவத்தாலில்லை செய்கை களவென்றும் மூன்றாம் தாத்பர்யமருளிச்செய்கிறார், (அன்றிக்கே யித்யாதி). இவ்விரண்டு யோஜனையிலும் வாளா போதுபோக்கினப்ரகாரங்களேதென்ன; பின்னையும் சிலவற்றைச் சொல்லுகிறாரென்று ஸங்கதி.

(க) தி-மா-ருரு. (உ) தி-வாய்-ரு-கo-உ. (ரு) ஸ்தோ-ர-ருஅ.

மூ.—வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர்பொருள் தாரமென் றிவற்றை
நம்பினா ரிறந்தால் நமன்றமர் பற்றி
யெற்றிவைத் தெரியெழு கின்ற
செம்பினா லியன்ற பாவையைப்பாவீ
தழுவென மொழிவதற் கஞ்சி
நம்பனே வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசாரணியத் துளெந்தாய். (ச)

பதம்.	உரை.
நைமிசாரணியத்துள் எந்தாய்!	
நம்பனே	விஸ்வஸநீயனே!
வம்புஉலாம்	பரிமளம் வீசாநின்றுள்ள
கூந்தல்	குழலையுடையளான
மனைவியை	(தன்)பார்யையை
துறந்து	விட்டு
பிறர்பொருள்	பிறர்த்ரவ்யமும் [ம்
பிறர்தாரம்	பிறர்மனையாட்டிகளு
என்று இவற்றை	ஆகிய இவைகளை
நம்பினார்	விரும்பினவர்கள்
இறந்தால்	இறந்துபோனால்
நமன்தமர்	யமபடர்கள்
பற்றி	பிடித்துக்கொண்டு
எற்றி	ஹிம்ஸித்து

பதம்.	உரை.
வைத்து	ஓரிடத்திலே போகட்
செம்பினால்	செம்பாலே [டு
இயன்ற	செய்யப்பட்டதாய்
எரிஎழுகின்ற	நெருப்புப்பொறி வீசாநின்றுள்ள
பாவையை	ஒருஸ்த்ரீ ப்ரதிமையை (முன்னேநிறுத்தி)
பாவீ!	பாபீ! [டவாய்
தழுவு	(இத்தைத்) தழுவக்க
என மொழிவதற்கு	என்றுசொல்லுகிற சொற்களுக்கு
அஞ்சி	பயந்து
உன்திருவடிவந்து அடைந்தேன். (ச)	

(நமன்றமரித்யாதி) இப்படி முறைகெடவர்த்திக்கையாலே, யமபடர்பண்ணும் வேதனையையநுஸந்தித்து அஞ்சி, ஸர்வாவயவங்களுமொடுங்கி சரீரந்தான் எடுத்தெடுத்து அறையத்துடங்கும். (வேலை யித்யாதி). ப்ரயோஜநாந்தரபரர்க்காகக்கடலை நெருங்கக் கடைந்து அபேக்ஷிதஸம்விதாநம்பண்ணும்படியன்றோ இவ்வாத்மாவோடு தேவர்க்குண்டான ஸம்பந்தம். (வந்தித்யாதி) † ப்ரஹ்மாதிகளுக்கு ஆஶ்ரயணீயனாய்க் கொண்டு அவர்களுடைய கூக்குரல் கேட்கைக்காக அங்கே திருப்பாற்கடலிலே சாய்ந்தாற்போலே, எனக்கு வந்து சரணம் புகலாம்படி இங்கேவந்து ஸந்நிதி பண்ணியருளிற்றே. ... ... (ரு)

"வேலை வெண்டிரை - நாதனே" என்றநுஷங்கித்து அத்தை த்ருஷ்டாந்தமாகவிவக்ஷித்து, "நைமிசாரணியத்துளெந்தாய்" என்றதுக்குத் தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார், (ப்ரஹ்மாதிகளுக்கித்யாதி). (ரு)

வ்யா.—நாலாம்பாட்டு. † அத்தனையோ, இன்ன மேதேனும் செய்ததுண்டோவென்ன; இன்னமும் செய்தது † குவாலென்கிறார்.

(வம்பித்யாதி) † நித்யாபூர்வமான குழலையுடைய மனைவியை யென்னுதல், பரிமளத்தையுடைத்தான குழலென்னுதல், † அக்நி ஸாக்ஷியாகக் கைப்பிடித்த ஸ்த்ரீயையாயிற்று த்யஜிப்பது. † விஷயாந்தரங்களிலே ஸ்ப்ருஹையைப்பண்ணுமே; அவற்றில் வந்தால் வம்புலாங்கூந்தலாகவும் வேண்டாவாயிற்று. பிறரதாமித்தனையே யாயிற்று ஆதரிக்கைக்கு வேண்டுவது. பரதாரபரத்ரவ்யங்களை விரும்பினவர்களிறந்தால்.

(நமனித்யாதி) ஸர்வேஶ்வரன் தன்னோடொக்க † ஸமமாக ஆராய்ந்து கேட்பானொருவனாக விட்டவனாயிற்று, யமனாகிறான்; † அவன்றான் தன்னோடொப்பார் சிலரையாயிற்று வரவிட்டது; † அவர்கள் தாங்கள் ஒருகைக்கு ஆயிரம்பேராக வந்து பற்றுவர்களாயிற்று; பின்னை இவனுடம்பு தன்னோடே எற்றுவர்கள்; அநந்தரம் தங்கள் கைசலித்தவாறே பொகட்டு இட்டுவைப்பர்கள்; † "இவர் இத்தனைபோது ஸ்த்ரீகளை யொழிய இருக்கவல்லரோ! அவளை யழைப்பியும்" என்பர்கள்; இவனும் "நம்மை நலிவதெல்

அரு. — நாலாம்பாட்டு. (வம்புலாமித்யாதி). "சுரிகுழல்மடந்தையர் திறத்துக்காதல் மிகுதியாலே கண்டவாதிரிந்தேன்" என்றீர், அப்படி அபிமதைகளான ஸ்த்ரீகளை சாஸ்த்ரீயமாகக் கைப்பிடித்துக்கொண்டால் * நமன்றமர் வேதனைக்சேர்டுங்கவும் வேண்டாதே காதல் தீர்த்துக்கொள்ளலாமே, இதுக்கஞ்சுவானென், அஞ்சும்படி பின்னையும் செய்தவையுண்டேயென்னுமீஶ்வராபிப்ராயத்தை யருளிச்செய்கிறார், (அத்தனையோவித்யாதி).

வம்பு - புதுமை, உலாவாநின்றுள்ள - வர்த்தியாநின்றுள்ள, கூந்தலென்றொருயோஜனையருளிச்செய்கிறார், (நித்யேத்யாதி). இத்தால், வாரிமுடித்து வளர்க்கும் பருவமென்று கௌமாரம் தோற்றுகிறது. "மனைவி" க்ருஹிணி என்று, அந்தபதவாஸனை, (அக்நீத்யாதி). இத்தால், விஹிதபரித்யாகம் பண்ணினமையைச் சொல்லிற்று. பரதாரத்துக்கு விசேஷணமிடாதே அருளிச்செய்ததுக்குத் தாத்பர்யம், (விஷயாந்தரங்களிலே யித்யாதிவாக்யத்ரயமும்).

(ஸமமாக) என்றது - சேதநரிடத்தில் பக்ஷபாதமின்றிக்கேயென்கை, யமனைவிட்டு படரை நிரூபிக்கையாலே (க) "యచ్ఛీలస్స్వామీ తచ్ఛీలో దాసః- யச்சீலஸ்ஸ்வாமீ தச்சீலோதாஸ:" என்கிற வசநத்தையுட்கொண்டருளிச்செய்கிறார், (அவன்றானித்யாதி). பஹுவசநப்ரயோக தாத்பர்யம், (அவர்கள் தாங்களித்யாதி). கைசலிக்கநலிந்தபின் இவனைக்குறித்து, "பாவையைத்தழுவு" என்றுசொல்ல ப்ரஸக்தியுண்டோ. இவனயர்த்துக்கிடவாறேவென்ன; அருளிச்செய்கிறார், (இவரித்யாதி). "பாவீ!" என்று ஸம்போதித்தவர்களுடைய

(க)

மூ.—இடும்பையா லடர்ப்புண் டிடுமினோ துற்றென்
றிரந்தவர்க் கில்லையே யென்று
நெடுஞ்சொலால் மறுத்த நீசனே னந்தோ
நினைக்கிலேன் வினைப்பயன் றன்னைக்

லாம் நலிந்தார்களாகில் இனியவனை யழைக்கிறார்களித்தனையிறே” என்று குறுவிழிகொண்டு கிடக்கும்; (எரியித்யாதி) எரி எழாநிற்பதாய், செம்பாலே செய்யப்பட்ட பாவையை, பாவீ! தழுவு என்பர்களாயிற்று. †“கெடுவாய்! அவர்கள் †ஒழிச்சினவன்றாகிலும் அநுதாபம் பிறந்து உகந்தருளிற்றொரு திருவாசலிலே யொதுங்கினையாகில் இன்றெங்களுக்குக் கைசலியாதொழியலாயிற்று” என்பர்களாயிற்று. (மொழிவதற்கஞ்சி) † அவர்கள் பண்ணும் நலிவைப் பொறுக்கலாமாகாதே; க்ரூரமான பேச்சாயிற்று பொறுக்கப் போகாதது.

(நம்பனே வந்துன் திருவடியடைந்தேன்) ஏதேனும் தோற்றிற்றுச்செய்து திரிந்தார்க்கும் வந்து பற்றலாம்படி சரண்யனை நீ வந்து ஸந்நிஹிதனாகையாலே திருவடிகளிலே சரணம்புகுந்தேன். (நைமிசாரணியத்துளெந்தாய்) இவன் விஷயங்களில் ப்ரவணனாகிறது கண்ணுக்கிலக்காகையிறே; அவ்வோபாதி நம்மையும் கண்ணுக்கிலக்காக்கவே இவன் நம்பக்கலிலே ப்ரவணனுமென்று உன்னைக் கண்ணுக்கிலக் காக்கிக்கொடுவந்து நின்றாய். † நிஷேதவிதியும் கிடக்கச்செய்தே அப்ராப்தங்களில் ப்ரவணனாகிறது அவை கண்ணுக்கிலக்காகை § சுட்டியிறே; விதிவிஷயமுமாய் உத்தேஶ்யமான வஸ்து ஸந்நிஹிதமானால் இவன் விரும்பானோ என்று உன்னைக்கண்ணுக்கிலக்காக்கிவைத்தாய். ... ... (௪)

உட்கருத்தை (க) ‘నరకే పచ్యమానస్తు యమేన పరిభాషితః । కింత్వయా నార్చితో దేవః కేశవః క్లేశనాశనః - நரகேபச்யமாநஸ்து யமேநபரிபாஷித꞉ ; கிம்த்வயா நார்ச்சிதோதேவ꞉ கேசவ꞉ க்லேசநாசந꞉’’ என்கிற வசநத்தை யுட்கொண்டருளிச்செய்கிறார், (கெடுவாயித்யாதி). யமன்சொன்னவார்த்தை இவர்களும் சொல்லுவர்களென்று கருத்து. (ஒழிச்சினவன்றாகிலும்) என்றது - (உ) “ஏசிபோமினீங்கிரேன்மின்” என்று தள்ளிவிட்டவன்றாகிலுமென்றபடி. தழுவு என - தழுவுவதற்கஞ்சி என்னவேண்டியிருக்க, “மொழிவதற்கு” என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (அவர்களித்யாதி). “தழுவு” என்கிற சப்தஶ்ரவணத்தின்கொடுமை, தழுவி இளைப்பாறலாம்படியிருக்குமதென்கை.

இவர்தாம் “அஞ்சிவந்தடைந்தேன்” என்கையாலே-இப்படிசெய்துபோந்து வந்தேனென்னுமது அர்த்தஸித்தம்; ஆகையாலே (செய்தது சுவாவென்கிறார்) என்று அவதாரிகையருளிச்செய்தார். கண்ணுக்கிலக்காக்கினால் பற்றுகைக்குடலாமோவென்ன; அருளிச்செய்கிறார், (நிஷேதவிதியுமித்யாதி). ... (௪)

---

§ சுட்டியிறே - ஹேதுவாகவன்றோ. (க) (உ) க-௩-அ.

கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால்
படுவதோர் கொடுமிறைக் கஞ்சி
நடுங்கிநான் வந்துன் றிருவடி யடைந்தேன்
நைமிசாரணியத்து ளெந்தாய். (ரு)

பதம்.	உரை.
நைமிசாரணியத்துளெந்தாய்!	
இடும்பையால்	தாரித்ர்யத்தாலே,
அடர்ப்புஉண்டு	நெருக்குப்பட்டு[வும்)
துற்று	ஒருகவளம் (சோறுகி
இடுமின்	இடுங்கோள்
ஓ என்று	ஓ! என்று தங்கள் வறுமை தோற்றக்கூப்பிட்டு
இரந்தவர்க்கு	யாசித்தவர்களுக்கு
இல்லையேஎன்று	(உங்களுக்குக்கொடுக்கைக்கு ஒருபொருளும்) இல்லையேஎன்று [ல்
நெடுஞ்சொலால்	கடுஞ்சொல்லாலே
மறுத்த	தடுத்துச்சொன்ன
நீசனேன்	மிகத்தண்ணியனான
நான்	அடியேன்

பதம்.	உரை.
அந்தோ	ஐயோ!
வினைப்பயன்தன்னை	(கீழ்செய்த) பாபத்தின்பலத்தை
நினைக்கிலேன்	நினைக்கமாட்டாதவனாய்க்கொண்டு,
கடும்	க்ரூரமான
சொலார்	சொல்லையுடையராய்
கடியார்	க்ரூரமான செயலையுமுடையரான [ல்
காலனார்தமரா	யமபடராலே
படுவது	படக்கடவதாய்
ஓர்கொடு	மிகக்கொடியதாயிருந்துள்ள [து
மிறைக்கு	ஹிம்ஸையைநினைத்து
அஞ்சி	பயந்து
நடுங்கி	நடுக்கமுற்றவனாய்
உன்திருவடிவந்து அடைந்தேன். (ரு)	

வ்யா.—அஞ்சாம்பாட்டு. † அத்தனையோ, இன்னும் ஏதேனுமுண்டோவென்ன; . திருவுள்ளத்துக்குப் பொறுக்கவொண்ணாதவையுமெல்லாம் செய்துபோந்தேனென்கிறார்.

(இடும்பையாலடர்ப்புண்டு) தாரித்ர்யத்தாலே நெருக்குண்டு. (இடுமினோ துற்றென்றிரந்தவர்க்கு) † ஆரேனு மாகிலுமெல்லாருங்

அரு.—அஞ்சாம்பாட்டு. (இடும்பையித்யாதி). பரதாரபரத்ரவ்யாபஹாரம்பண்ணினேனென்னாநின்றீர். (க) "శ్లోకార్ధేన ప్రవక్ష్యామి యదుక్తం గ్రంథకోటిభిః । పరోపకారః పుణ్యాయ పాపాయ పరపీడనమ్ - ஶ்லோகார்த்தேநப்ரவக்ஷ்யாமி யதுக்தம்க்ரந்தகோடிபிஃ । பரோபகாரஃ புண்யாயபாபாய பரபீடநம்" என்கிறபடியறிந்து சிலர்க்கு ஸத்கரித்திருந்தீராகில், (உ) "ధర్మేణ పాపమపనుదతి-தர்மேண பாபமபநுததி" என்கிறபடியே கீழ்ச்சொன்ன பாபம்கழிந்து கொடுநிற்கும்; அதுகிடக்கிடீர், வேறேதேனுமுண்டாகில் சொல்லிக்காணுமென்னு மீஶ்வராபிப்ராயத்தை யருளிச்செய்கிறார், (அத்தனையோவித்யாதி).

"இடுமின்" என்கிற பஹுவசநத்தையும், "ஓ" என்கிற ஆர்த்யதிசய ஸூசக சப்தத்தையும், "துற்று" என்கிற ஏகவசநத்தையும் கடாக்ஷித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (ஆரேனுமித்யாதி). நிரதிசய புருஷார்த்தத்துக்

(க) (உ)

கூட எனக்கொருகால் வாயிலே யிடுகைக்கு வேண்டுவது தரவேணும் என்று, (க) † "முனியே" என்பாரைப்போலே கூப்பிடுமாயிற்று. துற்றுகிறது - ஒருகால் வாயிலேயள்ளியிடுமதாயிற்று. (துற்றென்றிரந்தவர்க்கு)† இப்படியே தயநீயமாம்படி சொல்லிக் காலேக்கட்டினவர்களுக்கு. (இல்லேயேயித்யாதி) †அவர்களுக்கு இல்லேயே! என்னும்போது சொல்லும் வார்த்தையிற் கொடுமையை † அநுஸந்தித்து, †"நாமிவனே யொன்றபேக்ஷித்துவர இவன் இல்லேயென்ற பாசுரத்தைக்கேட்டு இன்னமும் ஜீவிக்கவிருக்குமதில் இத்தனே நஞ்சு பெற்ருேமாகில் முடிந்து போகவாயிற்று" என்று காலதத்வமுள்ள தனேயும் அவன் நெஞ்சு புண்பட்டுக்கிடக்கும்படி சொன்ன கொடுமையைச் சொல்லுகிறதாயிற்று. (அந்தோ) என்கிருராயிற்று - மேல்வருகிற நலிவை அநுஸந்தித்து. (நினேக்கிலேன் வினேப்பயன்றன்னே) † கீழ் செய்த செயல்தானே யநுஸந்திக்க வரிதாயிருந்தபின்பு, அதின் பலமாய் வருமதுதானே யநுஸந்திக்கப் போகாதிறே.

(கடுஞ்சொலாரித்யாதி) வெட்டியசொல்லேயுடையராய் க்ரூரமான செயலேயுடையராயிருந்த யமபடராலே படக்கடவதான கொடிய §மிறுக்கை † அநுஸந்தித்து. (நடுங்கினான் வந்துன்திரு

காக, "ஆழ்வார், "முனியே! நான்முகனே!" என்று பெருமிடறுசெய்து கூப்பிடுமாபோலே, இவனும் தாரித்ர்யத்தாலே நெருக்குண்டு க்ஷுதா(தூ)ர்த்தனுய்பலரைக்குறித்து ஒருகபளத்தை யிடச்சொல்லிப் பெருமிடறுசெய்து கூப்பிடுமென்று கருத்து. "இடுமின்" என்றதே இரப்பாயிருக்கவும், "இரந்தவர்க்கு" என்கையாலே பலித்த அர்த்தம், (இப்படியேயித்யாதி). பரத்ரவ்யாபஹாரத்தாலே ஸம்பந்நராயிருக்கிறவளவிலே, பசித்தவன்வந்து "சோறிடு" என்ன; இவன் "இல்லே" என்ன; ஒரு "துற்றிடுமின்" என்ன, எல்லார்க்குமாகத்தான் "இல்லேயே" என்ன; "ஓ" என்று ஆர்த்தனுக ; தான் நெடுஞ்சொல்லாலே "இல்லே" என்ன; அவன்காலிலேவிழ; இவன் பால் மறுத்தபசு உதைத்துக்கொள்ளுமாபோலே உதைத்துக்கொண்டுபோன கொடுமையைத் திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டு தாத்பர்யமருளிச்செய்கிருர், (அவர்களுக்கில்லேயேயித்யாதி). (அநுஸந்தித்து) என்றவாநந்தரம், "நீசனேனென்கிருர்" என்று கூட்டுவது. அந்தக்கொடுமையின் சரமாவதி தன்னேக்காட்டுகிருர், (நாமிவனேயித்யாதி). பயன்என்னுதே, "பயன்றன்னே" என்ற ப்ராதாந்யமெத்தைப் பற்றவருளிச்செய்தாரென்ன; அருளிச்செய்கிருர், (கீழ்செய்தவித்யாதி).

நெடுஞ்சொலால் மறுத்ததுக்குத்தக்கபலமாக, "கடுஞ்சொலார் கடியார்" என்று விசேஷிக்கிருர் என்று கண்டுகொள்வது. மேலே பயகார்யமான நடுக்கத்தைச்சொல்லுகையாலே, "அஞ்சி" என்று தத்காரணமான அநுஸந்தானத்தைச் சொல்லுகிறதென்கிருர், (அநுஸந்தித்து) என்று. ... ... (ரு)

(க) தி - வாய் - கo - கo - க.
§ மிறுக்கு - ஹிம்ஸை.

மூ.—கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து
திரிந்து நாயினத்தொடும் திளைத்திட்டு
ஓடியுமுழன்று முயிர்களே கொன்றே
னுணர்விலே னாதலால் நமனார்
பாடியைப் பெரிதும் பரிசழித்திட்டேன்
பரமனே பாற்கடல் கிடந்தாய்
நாடிநான் வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசாரணியத்து ளெந்தாய். (ரூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பரமனே	எல்லாரிலும் உயர்ந்தவனே!	ஓடியும்	(பரஹிம்ஸைக்காக நெடுந்தூரம்)ஓடிச் சென்றும்
பாற்கடல்	க்ஷீராப்தியில்		
கிடந்தாய்	கண்வளர்ந்தருளுமவனே!	உழன்றும்	வருந்தியும்
		உயிர்கள்	ப்ராணிகளை
நைமிசாரணியத்துளெந்தாய்!		கொன்றேன்	கொன்றவனாய்
கோடிய	நல்விஷயங்களில் புகாத [ய்	உணர்விலேன்	ஜ்ஞானஹீனனாய்ப் போந்தேனான
மனத்தால்	மநஸ்ஸையுடையனா	நான்	அடியேன்
சினம்	(பிறர்க்குக்) கோபமுண்டாகத்தக்க	நாடி	ஆராய்ந்து
		உன்திருவடிவந்து அடைந்தேன்.	
தொழில்	செயல்களை	ஆதலால்	அத்தாலே [ன்
புரிந்து	செய்தவனாய்	நமனார்பாடியை	யமபுரமானநரகத்தி
நாயினத்தொடும்	நாய்முதலானவற்றோடுகூட	பரிசு	நிலைமையை
		பெரிதும்	மிகவும்
திரிந்து	வேட்டையாடி	அழித்து இட்டேன்.	அழித்துவிட்டேன்.
திளைத்திட்டு	களித்தவனாய்		

வடியடைந்தேன்) தேவர் திருவடிகளிலேவந்து சரணம்புகுந்தேன். (நைமிசாரணியத்து ளெந்தாய்) இரந்தார்க்கு இல்லையென்று மறுத்துப் போந்த வெனக்கு நானிரவாதிருக்க நீவந்து ஸந்நிஹிதனாயிற்றது எனக்கு உபகரிக்கைக்காக வன்றோ. இவற்றால் சொல்லிற்றாயிற்று - முன்பெல்லாம் தோன்றினபடிசெய்து திரிந்து அவற்றுக்கு வரும்பலத்தைக்கேட்டு பயப்பட்டுப் போக்கடிதேடி, புறம் பொருபுகல் காணாமையாலே தேவர் திருவடிகளிலே சரணம் புகுந்தேனென்கிறார். ... ... (ரு)

அரு.—ஆறும்பாட்டு. (கோடியவித்யாதி). த்ரவ்யலோபத்தாலே சிலரை ஸத்கரிக்கமாட்டிற்றிலீராகில், (க) "అహింసాప్రథమంపుష్పమ్ - அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம்" என்றும், (உ) "అహింసాప్రథమోధర్మః- அஹிம்ஸாப்ரதமோ

(க) (உ)

வ்யா.—ஆறும்பாட்டு. † அத்தனேயோ, இன்னும் செய்ததுண்டோவென்ன, § கைதொடனாய்க்கொன்றேபோந்தேனென்கிறார்.

(கோடிய மனத்தால்) † அநுகூலவிஷயத்திலும் நெஞ்சுவிலகியாயிற்றிருப்பது. (சினத்தொழில்புரிந்து) மறச்செயல் செய்து. (திரிந்துநாயினத்தொடும்திளைத்திட்டு)ஹிம்ஸ்ரபதார்த்தங்களோடே † வேட்டையாடித் திரிந்தபடியைச் சொல்லுதல், தண்ணியவர்களோடேகூடி விளையாடிக்களித்துத் திரிந்தபடியாதல். (ஓடியும்) "ஒருவனை ஹிம்ஸிக்கலாம், பதின்காத † மாறுபோகலாமோ" என்றால், தட்டுப்பாராதே அவ்வளவும் ஓடியும். (உழன்றும்) "ஹிம்ஸித்ததாம்போது சால†வருந்தவேணும்" என்றால் அப்படி வருந்தி வ்யாபரித்தும். (உயிர்களேகொன்றேன்) ப்ராணவிஶ்லேஷபர்யந்தமாக்கிப்போந்தேன்; புடைவையுரிந்துவிட்டிலேன். (உணர்விலேன்) ஸர்வேஶ்வரனொருவனுளன் என்னும் † இச்சாண்சந்தையும் நெஞ்சிற்படாதபோது செய்யாததுண்டோ?

† (ஆதலால் நமனார்பாடியைப்பெரிதும் பரிசழித்திட்டேன்) என்று † வக்ஷ்யமாணத்தை உத்தேசித்துச்சொல்லுகிறதாகவுமாம்; அன்றிக்கே - கீழோடே சேரவுமருளிச்செய்வர். யமனுடைய ஆஜ்ஞை நடவாதபடி அத்தை வென்றேன். யமபுரத்தைவென்றேனென்றபடி. அன்றிக்கே-கீழோடேயானபோது, "இவனை நலியவிவன் மாட்டான், வேறேயொருபடைவீடும் ஒரு புதுக் † கோமுற்றவனுதர்மஃ" என்றும் சாஸ்த்ரம் சொல்லிவைத்ததிறே; அதுண்டாகிலவற்றுக்கெல்லாம் வந்ததென்னென்னு முட்கருத்தை ஸூசிப்பிக்கிறார், (அத்தனேயோவென்று).

கோடுதல் - விலங்குதலாய், ஸர்வவிஷயத்திலும் விலங்கின மநஸ்ஸாலென்று சப்தார்த்தமாய், பலிதத்தை யருளிச்செய்கிறார், (அநுகூலேத்யாதி). இத்தால், ஒருகாலும் நெஞ்சேரமில்லையென்றதாயிற்று. "திளைத்திட்டு" என்றதின் பலிதார்த்தம், (வேட்டையாடி) என்றது. (ஆறு) - வழி. (வருந்தவேணும்) - ப்ரயாஸப்படவேணும். (இச்சாண்சந்தை) என்றது - இந்த ஸ்வல்பமான வாக்யமென்றபடி.

நமனாரானவர், பாடியை - தன்னூரை - நரகத்தை, பெரிதும், பெரியதாக்கும், அதாவது-பாபிகளைக்கூட்டி நியமிக்கும், பரிசு - ப்ரகாரத்தை, அழித்திட்டேனென்று வாக்யார்த்தம் விவக்ஷித்து, "ஆதலால்" என்றதுக் கர்த்தவ்யமருளிச்செய்கிறார், (ஆதலாலித்யாதிவாக்யத்வயத்தாலே). (வக்ஷ்யமாணத்தை) என்றது-"திருவடியடைந்தேன்" என்னுமது. இப்போது [உணர்விலேன் - பரமனே! பாற்கடல் கிடந்தாய்! நாடிநான்வந்துன் திருவடியடைந்தேன் - ஆதலால் நமனார் பாடியைப் பரிசழித்திட்டேன்] என்றந்வயம். (கோமுற்றவனும்) ராஜாவையும்.

§ கைதொடனாய் - கையாலேதொட்டு. ஹிம்ஸகனுக்கு ஸஹாயபூதனன்றிக்கே நானேகொன்றேனென்றபடி.

மூ.—நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும்
நீதியல்லாதன செய்தும்
துஞ்சினார் செல்லும் தொன்னெறி கேட்டே
துளங்கினேன் விளங்கனி முனிந்தாய்
வஞ்சனேனடியேன் நெஞ்சினிற் பிரியா
வானவா தானவர்க்கென்றும்
நஞ்சனேவந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசாரணியத்து ளெந்தாய். (எ)

பதம்.	உரை.
விளங்கனி	விளாவின்பழமாய்வ
	ந்த கபித்தாஸுர
	னை [வனே!
முனிந்தாய்	கோபித்து நிரஸித்த
வஞ்சனேன்	கபடியான என்னு
அடியேன்	டைய [து)
நெஞ்சினில்	ஹ்ருதயத்தில் (புகுந்
பிரியா	விடாதேயிருக்கிற
வானவா	நித்யஸூரிநிர்வாஹக
என்றும்	எப்போதும் [னே!
தானவர்க்கு	அஸுரர்களுக்கு
நஞ்சனே	ம்ருத்யுவானவனே!
நைமிசாரணியத்துள் எந்தாய்!	
நீதியல்லாதன	சாஸ்த்ரங்கள் "ஆகா
	து" என்றவற்றை

பதம்.	உரை.
நெஞ்சினால்	மநஸ்ஸாலே
நினைந்தும்	நினைத்தும்
வாயினால்	வாயாலே
மொழிந்தும்	சொல்லியும் [ந்து
செய்தும்	அநுஷ்டித்தும்போ
துஞ்சினார்	முடிந்தவர்கள்
செல்லும்	போகத்தக்க
தொல்	பழையதான
நெறி	நரகமார்க்கத்தை
கேட்டே	கேட்டமாத்ரத்திலே
துளங்கினேன்	நடுங்கினவனாய்க்
	கொண்டு
உன்திருவடிவந்து அடைந்தேன். (எ)	

மிடவேணும்" என்னும்படி பாபங்களையே பண்ணிப்போந்தே னென்னுதல். (பரமனே) ஒருஹேதுவின்றிக்கே யிருக்கச்செய்தே ஔதார்யம் பண்ணுமிடத்தில் உனக்கவ்வருகொருவரில்லாதபடி யிருக்கிறவனே! (பாற்கடல் கிடந்தாய்) அதுக்குறுப்பாக † அடுத் தணித்தாகத் திருப்பாற்கடலிலேவந்து சாய்ந்தருளினவனே! (நாடி நான் வந்துன்திருவடியடைந்தேன்) பரஹிம்ஸையே பண்ணித் தோற்றினபடி திரிந்து அதுக்கு வரும்பலத்தைக் கேட்டஞ்சி அநந் தரம் நமக்குப் புகலேதோ! என்று ஆராய்ந்து திருவடிகளிலே வந்து சரணம்புகுந்தேன். (நைமிசாரணியத்து ளெந்தாய்) நான் நாடிக்கிட்டினேனாக நினைத்திருந்தேன், நீ எனக்குமுன்பே நாடி †பூர் வஜனாய்த் திருநைமிசாரண்யத்திலே வந்து ஸந்நிஹிதனானாய். ... (சு)

(அடுத்து) அநுரூபமாய். (பூர்வஜனாய்) என்றதுக்கு "महापुरुष पूर्वज- மஹா புருஷ பூர்வஜ" என்கிறவசநத்திலே நோக்கு. ... ... (சு)

(க) ஜி - ஸ்தோ - க.

வ்யா —ஏழாம்பாட்டு. (நெஞ்சினாலித்யாதி) (நீதியல்லாதன- நெஞ்சினால் நினைந்தும், வாயினால் மொழிந்தும் - செய்தும்) †கீழெல்லாம் தாம்செய்த தப்புக்களைச் சொல்லிக்கொடுபோந்தார்; அவற்றையெல்லாம் †திரளச்சொல்லுகிறாராயிற்று. (நீதியல்லாதன) என்று † மநோவாக்காயங்கள் மூன்றாலும் நிஷித்தங்களையே யநுஷ்டித்துப்போந்தவர்கள் முடிந்தால் போம்வழியுண்டு - நரகத்துக்குப் போம்வழி, அத்தைக்கேட்டுத் துளங்கினேன். (தொல்நெறி) (க) "𑌜𑌗𑌤𑌃 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍇 𑌮𑌤𑍇 - ஜகதஶ்ஶாஶ்வதேமதே" என்று பரமபதத்துக்குப்போம் வழியோபாதி இதுவும் பழையதிறே; † இனி அதிலிதுக்குவாசி - ஆளொழுக்கறுமையிறே. (கேட்டே துளங்கினேன்) †அநுபவித்தன்றிக்கே, ஶ்ரவணவேளையிலே நடுங்கினேன். †அதின் பலத்தையும் புஜிக்குமத்தனையன்றோ வென்ன; (விளங்கனியித்யாதி) பலத்தையுதிர்த்தது, பக்வபலாநுபவம் பண்ணவேண்டாவென்று † கருத்து.

(விளங்கனிமுனிந்தாய்) † கனியாகிற அஸுரனை நிரஸித்தவனே! விரோதி நிரஸநஸ்வபாவனான நீ என் விரோதியையும் போக்கவேணுமென்கிறார். (வஞ்சனேனடியேன் நெஞ்சினிற்பிரியாவானவா) அடியேன் என்று அஹ்ருதயமாக நானொரு உக்திமாத்ரத்தைச்சொல்ல, அத்தை ஸஹ்ருதயமாக்கி, நித்யஸூரிகளுக்கே உன்னையநுபவிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கக்கடவ நீ என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து விடாதேயிருந்தாய். (தானவர்க்கித்யாதி) அஸுரவர்க்கத்துக்கு என்று மொக்க நஞ்சானவனே! உன் திருவடிகளிலேவந்து சரணம்புகுந்தேன். (நைமிசாரணியத்துளெந்தாய்) † நன்னெறி காட்டுகைக்கணித்தாக நீ வந்திருந்தாய். தொன்னெறிக்கெதிர்த்தட்டானத்தையாயிற்று நினைக்கிறது. ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (நெஞ்சினாலித்யாதி). ஸங்கதி ப்ரதர்சநம்பண்ணுகிறார், (கீழெல்லாமித்யாதி). (திரள) ஸங்க்ரஹமாக. வாக்யார்த்தம், (மநோவாக்காயங்களித்யாதி). "செல்லும்" என்ற விசேஷணலப்தார்த்தம், (இனி அதிலித்யாதி). "கேட்டே" என்ற ஏவகாரவ்யாவர்த்யம், (அநுபவித்தித்யாதி). நீதியல்லாதவற்றைக் கரணத்ரயத்தாலும் செய்தால் பலாநுபவம் பண்ணாதே தீருமோவென்னும் பகவதபிப்ராயத்தையநுவதித்து அதுக்குத்தரமாக விரோதியான பலங்களையுதிர்த்த நீ என் விரோதியானபலங்களையுமுதிர்க்கவேணுமென்னும் கருத்தாலே அந்த அபதாநத்தை யருளிச்செய்கிறாரென்கிறார்; (அதினித்யாதி). (கருத்து) என்றவநந்தரம், "எனக்கத்தைக் காட்டினாய்" என்று பூரித்துக்கொள்வது.

(கனியாகிறவஸுரனை) என்றது - அஸுராவிஷ்டமான வ்ருக்ஷைகதேசமாகையாலே. "இங்கு, எந்தாய்" என்றது - அபதே ப்ரவ்ருத்தனையும் ஸந்மார்க்கத்திலே ப்ரவர்த்திப்பிக்கும் பித்ருக்ருத்யத்தைப்பற்றவென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (நன்னெறியித்யாதி). ... ... (எ)

(க) கீதை - அ - உகூ.

மூ.—ஏவினூர் கலியார் நலிகவென் றென்மே
லெங்ஙனே வாழுமாறு ஐவர்
கோவினூர் செய்யும் கொடுமையை மடித்தேன்
குறுங்குடி நெடுங்கடல் வண்ணு
பாவினு ரின்சொல் பன்மலர் கொண்டுன்
பாதமே பரவி நான் பணிந்து என்
நாவினல் வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய். (அ)

பதம்.	உரை.
குறுங்குடி	திருக்குறுங்குடியிலெழுந்தருளி யிருக்கிறவனுப்
நெடு	பரந்து ஆழ்ந்த
கடல்	ஸமுத்ரத்தின்
வண்ணு	நிறம்போன்றவடிவழகை யுடையவனே!
நைமிசாரணியத்துளெந்தாய்!	
கலியார்	கலிகாலமானது
நலிக என்று	(இவனை) வ..த்துங்கோள் என்று
என்மேல்	என்பக்கல் [யும்
ஐவர்	அஞ்சு இந்த்ரியங்களை
ஏவினூர்	ஏவிற்று;
வாழும் ஆறுஎங்ஙனே	(அந்த இந்த்ரியங்கள்) ஜீவிக்கும்விரகு ஏதோ?

பதம்.	உரை.
கோவினூர்செய்யும்	ப்ரபலமான அவ்வைந்தும் பண்ணத்தக்க [ளை
கொடுமையை	க்ரூரமான செயல்க
மடித்தேன்	திருப்பிவிட்டவனுய்க்கொண்டு
என் நாவினல்	என் நாக்காலே
பா	நல்ல சந்தஸ்ஸுக்கள்
ஆர்	நிறைந்த
இன்சொல்	இனியசொற்களாகிற
பல்மலர்	பல புஷ்பங்களையும்
கொண்டு	ஸம்பாதித்துக்கொ
பரவி	வாழ்த்தி [ண்டு
உன்பாதமேபணிந்து,	தேவர் திருவடிகளிலே விழுந்து
உன்திருவடிவந்து நான்அடைந்தேன்.	

வ்யா.—எட்டாம்பாட்டு. (ஏவினூர் கலியார்) † கலியாரென்கிறூரா யிற்று கலிகாலத்துக் கஞ்சினபடியாலே. கலியாரானவர், நலியுங்கோள் என்று என்மேலே அஞ்சு இந்த்ரியங்களையும் ஏவினூர். (எங்ஙனே வாழுமாறு) † அவரெங்ஙனேஇனி ஜீவிக்கும்படி. என்

அந.—எட்டாம்பாட்டு. (ஏவினூரித்யாதி) "தொன்னெறிகேட்டேதுளங்கினேன்" என்று பூர்வவ்ருத்தத்துக்கஞ்சின ஆழ்வார் அவனுடைய விரோதிநிரஸநஸ்வபாவாநுஸந்தாநத்தைப் பண்ணினபடியாலே அச்சங்கெட்டுத் தாமப்போதிருந்தபடியைப்பேசுகிறூரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

கலியேவிற்று என்னுதே, பூஜ்யோக்திதோன்ற வருளிச்செய்ததுக்குத் தாத்பர்யம், (கலியாரித்யாதி.). "எங்ஙனே நான் வாழுமாறு" என்று க்லேசிக்கிறதாக அர்த்தம் விவக்ஷித்தால், மேலே "கொடுமையைமடித்தேன்" என்றது சேராமையாலே, அதுக்கநுகுணமாக வருளிச்செய்கிறூர், (அவரித்யாதி).

மூ.—ஊனிடைச்சுவர் வைத் தென்பு தூணுட்டி
யுரோம மேய்ந்தொன்பது வாசல்
தானுடைக்குரம்பை பிரியும் போதுன்றன்
சரணமே சரண மென்றிருந்தேன்
தேனுடைக்கமலத்திருவினுக்கரசே
திரை கொள் மாநெடுங்கடற்கிடந்தாய்
நானுடைத்தவத்தால் திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்து ளெந்தாய். (கூ)

பதம்.	உரை	பதம்.	உரை.
தேன்	மதுவை	கிடந்தாய்	கண்வளர்ந்தருளினவனே!
உடை	உடைத்தான		
கமலம்	தாமரைப்பூவை யிருப்பிடமாக உடைய	நைமிசாரணியத்துள்	திரு நைமிசாரண்யத்திலெழுந்தருளியிருக்கிற
திருவினுக்கு	பெரிய பிராட்டியார்க்கு		
அரசே	வல்லபனே!	எந்தாய்	பரமோபகாரகனே!
திரைகொள்	அலையையுடைத்தாய்	ஊன்	மாம்ஸத்தை
மா நெடு	பரந்து ஆழ்ந்த	இடை	நடுநடுவே
கடல்	திருப்பாற்கடலிலே	சுவர்வைத்து	சுவராகவைத்து

தான்? எவிற்ருகில் வந்ததென்னென்னில்; (ஐவரித்யாதி) மநஸ்ஸுக்கு சேஷமாய் இந்த்ரியங்கள், அதுபோன வழியே இவை போகக்கடவதாயிருக்க அது தவிர்ந்து, இவைதானிப்போது மநஸ்ஸைச்சுமை யெடுக்கத்தொடங்கிற்ருய்த்து; இவை தான் நினைத்தபடி செய்யும் க்ரூரமான செயல்களைத்திரிய விடுவித்தேன்.

ஆரைப்பற்றித்தான் நீரிவற்றைத்திரிய விடுவித்ததென்ன;(குறுங்குடிநெடுங்கடல் வண்ணு) திருக்குறுங்குடியிலே ஶ்ரமஹரமான வடிவைக்கொடுவந்து நீ ஸங்கிஹிதனுகையாலே. (பாவினுரித்யாதி)† †நல்லசந்தஶ்ஸ்ஸுக்கள் ஆர்ந்திருந்துள்ள இனிய சொற்களாகிற பலமலர்களையுங்கொண்டு அடைவு கெட ஸ்தோத்ரம் பண்ணித் திருவடிகளிலே விழுந்து. (என்நாவினுல்) அநர்த்தங்களை விளைக்கைக்குறுப்பானவற்றையே சொல்லிப்போந்த என் நாவாலே. (நைமிசாரணியத்துளெந்தாய்) ஸ்துத்யனுன நீ என்னுடைய ஸ்துதிக்கு விஷயபூதனுய்க்கொண்டு திரு நைமிசாரண்யத்திலே வந்து ஸங்கிஹிதனுய். ... ... (அ)

[என் நாவினுல்—பாவினுரின் சொல்பன்மலர்கொண்டு - பரவி - உன்பாதமேபணிந்து - வந்துன் திருவடியடைந்தேன்,] என்றந்வயம் விவக்ஷித்தருளிச் செய்கிருர், (நல்லவித்யாதி). ஸ்துதி ப்ரணுமபூர்வகமாஶ்ரயித்தேனுகையாலே கொடுமையையமடித்தேனென்று கருத்து. ... ... (அ

என்பு	எலும்பை	சரணமே	திருவடிகளே [ன்று
ஊன்நாட்டி	தூணாக நட்டு	சரணம்என்று	ரக்ஷகமாகவேணுமெ
உரோமம்	மயிராலே	இருந்தேன்	நினைத்திருந்தேன்;
மேய்ந்து	மூடப்பட்டதாய்	நானுடை	(இப்போது) என்னு
ஒன்பதுவாசல்	நவத்வாரங்களை		டைய [லே
உடை	உடைய [ளை	தவத்தால்	தபஸ்ஸான தேவரீரா
குரம்பை	குடிலாகிற இச்சரீரத்	திருவடி	தேவர் திருவடிகளை
பிரியும்போது	விட்டுப்பிரியுங்காலத்	அடைந்தேன்	கிட்டப்பெற்றேன்.
உன்றன்	தேவரீருடைய [தில்		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (ஊனிடைச்சுவர்வைத்து) மாம்ஸத்தை இடையிடையே சுவராகவைத்து; † அன்றிக்கே, மாம்ஸப்ரசுரமான † சரீரத்தைச் சுவராகவைத்து; எலும்பைத் † தூணாக நாட்டி ரோமத்தாலே மேய்ந்து. (ஒன்பது வாசல் தானுடைக்குரம்பை) (க) "नवद्वारे पुरे - நவத்வாரேபுரே" என்று எங்கேனும் புக்கு எங்கேனும் புறப்படலாம்படியிறே இச்சரீரந்தானிருப்பது. †ராஜபுத்ரன் ஒருகுடிலிலே யொதுங்கினாற்போலே, நித்யமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய் ஏகரூபமாயிருக்கிற ஆத்மவஸ்து கர்மத்தாலே ஜ்ஞாநஸங்கோசத்தைப் பிறப்பிப்பதான சரீரத்திலேயகப்பட்டதாயிற்று (பிரியும்போது) அதிலே புகுகைக்கொரு கர்மம்பண்ணிவைத்தவோபாதி அத்தைவிடுகைக்கு மொருகர்மம் பண்ணிவைக்குமே; அப்போதைக்கு, உன் திருவடிகளே புகல் என்று அத்யவஸித்தேன்.

நீரிப்படி நினைத்திருந்ததென்னபற்றாசுகொண்டுதானென்னில், (தேனுடைக்கமலத் திருவினுக்கரசே) புருஷகாரபூதையான பிராட்டியோடணைந்த வணைகையாலே† மறமானசெயல் செய்யமாட்டார்

அரு—.ஒன்பதாம்பாட்டு.(ஊனிடையித்யாதி). வடிவை சுபாஶ்ரயமாய்க்கொண்டு நீர்ஸ்துதிப்ரணாமபூர்வகமாஶ்ரயித்து, இந்த்ரியங்களை வென்றேனென்றீர்; ஆகில் அந்திமஸ்ம்ருதியும் பண்ணினீராகில் அபேக்ஷிதம் தானே கைகூடுகிறதென்ன; அங்ஙன் சொல்லவொண்ணாது, "உன்றன்சரணமேசரணமென்றிருந்தேன்" என்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது. இத்தால் - எப்போதைக்குமுன் திருவடிகளேயுபாயம், உபாயபலமாய் வந்தபேறுகளைச்சொன்னேனித்தனையென்றுகருத்து.

ஊனாலே - மாம்ஸத்தாலே, இடையை - நிறையையுடைய சரீரத்தையென்றர்த்தாந்தரம், (அன்றிக்கேயித்யாதி). (சரீரத்தை)என்றது - சரீரைகதேசத்தையென்றபடி. இங்ஙனன்றாகில், மாம்ஸாஸ்த்யாதிமயமான சரீரத்தைச்சொன்னால் எலும்பைத்தூணாகச்சொல்லாதிறே. "ஊனிடை" என்று முழுச்சொல்லென்றும் சொல்லுவர்கள். (தூணாக) என்றது - சுவரில் கூச்சுக்கால்களாகவென்றபடி. "மேய்ந்து" என்றது - செத்தையாலே மூடுகை. "குரம்பை" என்றபதவாஸனை, (ராஜபுத்ரனித்யாதி). குரம்பை - குடீரம்.

(க)

மூ.—ஏதம் வந் தணுகா வண்ண நாமெண்ணி
யெழுமினென் றிறைஞ்சுமெனறிமையோர்
நாதன் வந்திறைஞ்சும் நைமி சாரணியத்
தெந்தையைச் சிந்தையுள் வைத்துக்
காதலே மிகுத்த கலியன் வாயொலிசெய்
மாலை தான் கற்றுவல்லார்கள்
ஓதநீர் வையகமாண்டு வெண்குடைக்கீ
ழும்பரு மாகுவர்தாமே. (க0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏதம்வந்து	து:கங்கள் வந்து	நைமிசாரணிய	திரு நைமிசாரண்யத்
அணுகாவண்	கிட்டாதபடி	த்து எந்தை	தி லெழுந்தருளியி
ணம்		யை	ருக்கும் என்ஸ்வா
நாம் எண்ணி	நாம் மநோரதித்து		மியை
தொழுதும்	(அவனை) ஆஶ்ரயிப்	சிந்தையுள்வை	ஹ்ருதயத்தில் வைத்
	போம்	த்து	துக்கொண்டு
எழுமின்என்று	ஒருப்படுங்கோள் எ	காதல்மிகுத்த	(பகவத் விஷயத்தில்)
இமையோர்	தேவர்களும் [ன்று		ஆசை அதிசயித்த
நாதன்	அவர்களுக்கு நிர்வாஹ	கலியன்	ஆழ்வார்
[சும்	கனான இந்த்ரனும்	வாய்	அருளிச்செய்த
வந்து இறைஞ்	வந்து ஆஶ்ரயிக்கிற		

யென்னுமத்தாலே. †புருஷகாரபல(ஐல)த்தாலே. (திரையித்யாதி) ஶ்ரமஹரமான திருப்பாற்கடலிலேவந்து கண்வளர்ந்தருளினவனே! (மாநெடுங்கடல்)பரப்பிலு மாழத்திலுமாயிற்று. (நானுடையித்யாதி) †தம்முடையவ்ருத்தியிருந்தபடியடையக் கீர்த்தித்தாரிறேமுன்பே; இனி நானுடைத்தவமென்கிறது-அவன்றன்னை. †நான் பண்ணின தபஸ்ஸாலே திருவடிகளிலே வந்து சரணம் புகுந்தேன். (நைமிசாரணியத்துளித்யாதி) †ஜகத்ஸ்ருஷ்டிபண்ணியும் அவதரித்தும் உகந்தருளின நிலங்களிலே வந்து ஸந்நிஹிதனாயுமிறே ஸௌக்ருதத்தை உத்பாதிப்பது. ... ... (கூ)

(மறுபான செயல் செய்யமாட்டாய்) என்றது, கோபத்தால்வந்த தண்டனைபண்ணமாட்டா யென்றபடி. பலிதம், (புருஷகாரபலத்தாலே) என்றது. இத்தால், பூர்வகண்டத்தில் ஸ்ரீமத்பதார்த்தமநுஸந்திக்கப்பட்டது. “திரை” இத்யாதியாலே (க) “ஏஷ நாராயண: ஶ்ரீமாந் - ஏஷநாராயணஃஸ்ரீமாந்” என்கிறவசநத்தின்படியே நாராயணசப்தார்த்த மநுஸந்திக்கப்பட்டது. “உன்றன் சரணமே” என்று சரணாவதாரணமாக அநுஸந்தித்தவர் “நானுடைத்தவம்” என்னைக் கைக்கொண்டு க்ருததென்னென்னுமத்தை ஸநியாமகமாக வருளிச்செய்கிறார், (தம்முடையவித்யாதி). சப்தார்த்தம், (நானித்யாதி). அவனே தம்முடைய தபஸ்ஸென்னுமபடி அவன் பண்ணின வ்யாபாரமென்னென்ன; “எந்தாய்” என்றத்தையுட்கொண்டருளிச்செய்கிறார், (ஜகதித்யாதி).

(க) ஹரிவம்சம் - ககரு - கூஉ.

ஒலிசெய்மாலை	சப்தஸந்தர்ப்பங்களை	வெள்	வெளுத்த
கற்றுவல்லார்கள்	அர்த்தத்துடன் கற்கவல்லவர்கள்[டைய	குடைக்கீழ்	குடைநிழலின்கீழே
நீர்	ஜலஸம்ருத்தியையு	ஆண்டு	செங்கோல் செலுத்தி
ஓதம்	கடலாலேசூழப்பட்ட	உம்பரும்ஆருவர்	நித்யஸூரிகளோடும் ஒருகோவையாகப் பெறுவர்.
வையகம்	இப்பூமியை		

வ்யா.—பத்தாம்பாட்டு. (ஏதமித்யாதி) † து:க்கங்கள் வந்து கிட்டாதபடியை மநோரதித்து, அவனைத் தொழுதுஜ்ஜீவிப்போம், ஒருப்படுங்கோள் என்று, தேவர்களோடேகூட அவர்களுக்கு நிர்வாஹகனான இந்த்ரன் வந்தாஶ்ரயிக்கிற திருநைமிசாரண்யத்திலே வந்து ஸந்நிஹிதனான ஸ்வாமியை ஹ்ருதயத்திலேவைத்து. அன்றிக்கே, நித்யஸூரிகளோடே ஸ்ரீஸேநாபதி யாழ்வார் வந்து ஆஶ்ரயிக்கிறவென்னுதல். (காதலே மிகுத்த) பகவத்விஷயத்திலாசைமிகுந்துவருகிற ஆழ்வாரருளிச்செய்த சப்தஸந்தர்ப்பத்தை அர்த்தஸஹிதமாகக் கற்கவல்லவர்கள். †இருந்தவனுக்கு ஒதுங்க நிழல்பண்ணிக் கொடுத்தபடியாயிற்று. (ஓதநீர்வையகமாண்டு) † நித்யஸூரிகளோடொருகோவையாமதுதானே ஸித்தமிறே. அபேக்ஷையுண்டாகில், ஐஶ்வர்யத்தையும் நிர்வஹித்துப் பின்னை நித்யஸூரிகள் பதத்தைப் பெறுவர். ... ... (கo)

பேரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (ஏதமித்யாதி) "ஏதம் வந்தணுகா வண்ணம் நாமெண்ணி, தொழுதும், எழுமினோ" இத்பாத்யந்வயம் விவக்ஷித்தருளிச்செய்கிறார், (து:க்கங்களித்யாதி). இமையோர்நாதன், ஸ்ரீஸேநாபதியாழ்வானென்னும் பக்ஷத்தில், நாமுங்களுக்கு ஏதம்வந்தணுகா வண்ணமெண்ணிவந்தோம், தொழுதும், எழுமினோ என்றுசொல்லும்படியிருக்கிற நைமிசாரணியத்தெந்தை, என்றத்யாஹரித்து யோஜித்துக்கொள்வது. அன்றிக்கே, சீலாநுபவாலாபப்ரயுக்த ஏதமென்று விவக்ஷித்து முன்புத்தைப்போலே அந்வயித்துக் கொள்ளவுமாம். (இருந்தவன்) இத்யாதிவாக்யத்துக்கு, "சிந்தையுள் வைத்து" என்று தன்னெஞ்சிலிருந்தவனுக்குக் காதலாகிற நிழல்பண்ணிக் கொடுத்தாரென்று கருத்து. ஐஶ்வர்யத்தையும் பலமாக இவரருளிச்செய்கைக்கு, "இருங்கடலுலகமாண்டு," என்கிறபாட்டிலே யொருபரிஹாரமருளிச்செய்தாராய், இங்கே பரிஹாராந்தரமருளிச்செய்கிறார், (நித்யஸூரிகளோடித்யாதி). 'அன்றிக்கே, ஏகபரிஹாரமேயாய் பாகவதகைங்கர்யத்திலபேக்ஷயுண்டாகிலென்று சொல்லவுமாம்.... ... ... (கo)

ஜீயர் திருவடிகளேசரணம்.

முதற்பத்தில் - ஆறுந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

முதற்பத்து - ஏழாந்திருமொழி - அங்கண்.

மூ.—அங்கண்ஞால மஞ்ச வங்கோ ராளரியாய் அவுணன்
பொங்க வாகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதனிடம்
பைங்கணானைக் கொம்புகொண்டு பத்திமையாலடிக்கீழ்
செங்கணாளி யிட்டிறைஞ்சும் சிங்கவேழ் குன்றமே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அங்கு	ப்ரஹ்லாதன் ப்ரதிஜ்ஞைபண்ணின அவ்விடத்திலேயே	புனிதன்	பரிசுத்தனான ஸர்வேஶ்வரன் (வர்த்திக்கிற
அம்	அழகியதாய்	இடம்	ஸ்த்தாநமாவது, [ய
கண்	இடமுடைத்தான	செம்கண்	சிவந்தகண்களையுடை
ஞாலம்	பூமியெல்லாம்	ஆளி	ஸிம்ஹங்களானவை
அஞ்ச	பயப்படும்படி	பை	பசுமையையுடைய
ஓர்	அபூர்வமான	கண்	கண்களையுடைத்தான
ஆள் அரியாய்	நரஸிம்ஹ ரூபியாய் (த்தோற்ற) (அத்தைக்கண்டு)	ஆனை	யானைகளின்
		கொம்பு	கொம்புகளை
		கொண்டு	பறித்துக்கொண்டு
அவுணன்	ஹிரண்யாஸுரன்	பத்திமையால்	பகவத்பக்தியாலே
பொங்க	கிளர [த்தை	அடிக்கீழ்	திருவடிகளிலே
ஆகம்	(அவனுடைய) சரீரத்	இட்டு	ஸமர்ப்பித்து
வள்உகிரால்	கூர்மையுள்ளதிருவுகிரால்	இறைஞ்சும்	ஆஶ்ரயிக்கிற
		சிங்கவேழ்குன்றம்	சிங்கவேழ்குன்றமாம்.
போழ்ந்த	பிளந்துபொகட்ட		

அரு.—அங்கண்ப்ரவேசம்—கீழ்த்திருமொழியில் ஆழ்வார் தம்முடைய பூர்வவ்ருத்த கதநமுகேந அநந்யோபாயத்வத்தை முன்னிட்டு ஒருகாலைப் போலே ஒன்பதின் காலும் "திருவடியடைந்தேன்" என்று பெரியபிராட்டியார் புருஷகாரமாக ஆஶ்ரயித்தபடியை அநுஸந்தித்த ஈஶ்வரன் (க) "గోవిన్దేతి యదాక్రన్దత్ కృష్ణా మాం దూరవాసినమ్। ఋణం ప్రవృద్ధమివ మే హృదయాన్నాపసర్పతి-கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்|ருணம் ப்ரவ்ருத்தமிவமே ஹ்ருதயாந் நாபஸர்ப்பதி" என்னும்படியிருப்பானொகையாலே, இவரத்யவஸாயத்தளவு ஸஹிக்கமாட்டாதே, (உ) "ఉపమానమశేషాణాం సాధూనామ్-உபமாநமசேஷாணாம் ஸாதூநாம்" என்கிறபடி இவர்க்குப்போலியான சிறுக்கனுக்குதவி அவ்வடிவையெல்லார்க்கு மாக்கிக்கொண்டிருந்த சிங்கவேழ்குன்றத்திலிருப்பைக்காட்டக் கண்டநுபவிக்கிறாரென்று ஸங்கதி

(க) பார-உத்யோ-ருகூ-உஉ. (உ) வி-பு-க-கரு-சுருசு.

வ்யா.—அங்கண்ப்ரவேசம்.—(௧)†"ஒன்பதுவாசல்தானுடைக் குரம்பை பிரியும்போதுன்றன் சரணமே சரணமென்றிருந்தேன்" என்றுரே; நீரிப்படி ஒருதலையிலத்யவஸாயமாகச் சொல்லுகிற தென்தான்? இத்தலையில் செயலற்றவளவிலே ப்ரஹ்லாதனுடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே ப்ரதிஜ்ஞைபண்ணின விடத்திலேவந்து ஸந்நிதிபண்ணி அவனுடைய விரோதியைப்போக்கி உபகரித்திலோமோ, அதுதான் அக்காலமொன்றிலுமேயாய்ப் பிற்பட்டகாலத்தி லுள்ளார்க்கு இழக்கவேண்டாதபடி, (௨)†"உன்னைப் பிரமாணித்தார் பெற்றபேறு" என்கிறபடியே ஆஶ்ரிதரானாரெல்லார்க்குமாகச்செய்த செயலன்றோ. ஆனபின்பு உம்முடையபோல்வார்க்கு இழக்கவேண்டாதபடி சிங்கவேழ்குன்றிலேவந்து நீர் கிட்டி யநுபவிக்குமதுவே குறையாக நாம் வந்திருந்தோமே, இப்படியிருக்க, ஒருதலை யத்யவஸாயமேயாக நீர்சொல்லுவானேன்? என்று தான் சிங்கவேழ்குன்றிலேவந்து ஸந்நிதிபண்ணினபடியைக்காட்டிக்கொடுக்க; அங்கே புருஷகாரபூதையான †பிராட்டியாரோடேகூட வெழுந்தருளியிருக்கிற விருப்பையநுஸந்தித்து ஹ்ருஷ்டராய், உத்தேஶ்யனாயிருக்கிறவன் வந்திருக்கிற தேசமாகையாலே அங்குள்ளதடைய உத்தேஶ்யமாய், சிலரால்வந் தணுகவொண்ணாதபடி ஸுரக்ஷிதமாகவெழுந்தருளியிருக்கப்பெற்றது என்று† திருவுள்ளத்தோடே கூடிப்போயநுபவிக்கையிலே யொருப்படுகிறார்.

முதற்பாட்டு, (அங்கண்ஞாலமஞ்ச) அழகிதான இடத்தை யுடைத்தாயிருந்துள்ள பூமியாக அஞ்ச. நரஸிம்ஹமாயிற்றுத்தான் ஜகத்ரக்ஷணத்துக்காகவிறே; அங்ஙனேயிருக்கச்செய்தேயும் இதினுடைய†விளைவதறியாமையாலே ஜகத்தாக நடுங்கிற்றாயிற்று. இதை

தன்னை யருளிச்செய்கிறார், (ஒன்பதித்யாதி). (பிரமாணித்தார் பெற்றபேறு) என்றதுக்குத் தாத்பர்யம் - அன்று இந்த்ரனுக்குக் காரியம் செய்த நீ இன்று எனக்கும் செய்யவேணுமென்று வழக்குச்சொல்லிக் கார்யங் கொள்ளலாயிருக்கையாலே, அன்று ஓராஶ்ரிதனுக்குச் செய்தது இன்றெல்லார்க்குமாகச் செய்ததாமென்று. (பிராட்டியாரோடே)என்றது-(௩)"அல்லிமாதர்" என்றத்தைப்பற்ற. (௩) "நல்லநெஞ்சே!" என்றத்தைப்பற்ற, (திருவுள்ளத்தோடே) என்றது. இத்திருமொழியாலே உத்தரகண்டார்த்தமான ப்ராப்யாநுபவம் பண்ணுகிறாரென்று கருத்து.

முதற்பாட்டு. (அங்கணித்யாதி). (விளைவதறியாமையாலே) என்றது - ஆஶ்ரிதவிரோதியைப்போக்குகைக்காகக் கொண்ட சீற்றம் என்றறியாமை

(௧) ௧ - ௭ - ௩. (௨) உ திரு - ௬௧. (௩) ௧ - ௭ - ௬.

வ்வளவாய்த் தலைக்கட்டுகிறதோ என்றிருந்ததாயிற்று. (அங்கு) அவன் ப்ரதிஜ்ஞைபண்ணின அவ்விடந்தன்னிலே. (ஓராளரியாய்) இதுக்கு முன்போரிடத்திலும் கண்டறியாத நரஸிம்ஹமாய். (அவுணன்பொங்க)ஆஸுரப்ரக்ருதியான ஹிரண்யன் கிளர்ந்தானாயிற்று, †நரஸிம்ஹத்தைக் கண்டகாட்சியிலே. இதுக்குமுன்பொருவன்,"நான் எதிரி" என்று தோற்றக்கண்டறியானே, இவனுடையதோற்றரவிலே கிளர்ந்தானாயிற்று, அவனுடைய சரீரத்தைக் கூரிய திருவுகிராலே யிருபிளவாம்படி பண்ணின. சில அசித்பதார்த்தங்களை வகிர் செய்யுமாபோலேயாயிற்று†போழ்ந்தபடி.(போழ்ந்தபுனிதனிடம்) ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளில்வந்தால் ப்ரஹ்மாதிகளையேவித் தான்கடக்க விருக்கும்; அங்ஙனன்றியே, தானே கைதொட்டு வ்யாபரிக்கையாலே பிறந்த † சுத்தியைச்சொல்லுகிறது. அவனப்படி பின்புள்ளார்க்கு உதவுகைக்காக வர்த்திக்கிறஸ்த்தாநம்.

(பைங்கணித்யாதி) † ஹிரண்யனைக்கண்ட நரஸிம்ஹத்துக்குச் சீற்றம் மாறாதாப்போலே, ஆனைகளைக்கண்ட ஸிம்ஹங்களுக்கும் சீற்றம்மாறாதேயிருக்கும்படி. (பைங்கண்) ஜாத்யுசிதமான பசுமையையுடைத்தாயிருக்குமாயிற்று. (கொம்பு கொண்டு) ஆனையினுடைய மஸ்தகத்தைக்கிழித்து அதினுடைய கொம்பைப்பறித்து பகவத்பக்தியாலே திருவடிகளிலேயிட்டு ஆஶ்ரயியாநிற்கு மாயிற்று ஸிம்ஹங்களானவை. (க) "யதந்நஃ புருஷோபவதி - யதந்நஃ புருஷோபவதி" இறே. செங்கணாளி பைங்கணானைக்கொம்புகொண்டு பத்திமையாலடிக்கீழ் இட்டிறைஞ்சும். (செங்கணாளி) இவற்றுக்கானைகளின்மேலே சீற்றம்மாறாதே யிருக்கச்செய்தேயும், பகவத்பக்தி ஒருபடிப் பட்டுச்செல்லுமாயிற்று. சீற்றம் விக்ருதியாய், பகவத்பக்தி ப்ராக்ருதியாயிருக்குமாயிற்று. ... ... (க)

யாலே யென்கை. பூமியாக அஞ்ச ஹிரண்யன் கிளர்ந்ததுக்கு ஹேதுவென்னென்ன; அருளிச்செய்கிறார், (நரஸிம்ஹத்தை யித்யாதி). (போழ்ந்தபடி) பிளந்தபடி. (சுத்தியை) பாவசுத்தியை.

"செங்கணாளி" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம், (ஹிரண்யனையித்யாதி). (க) *வலிமிக்க சீயமான விராமாநுசனேடொப்பார், பரவாதிமத்தகஜங்கள் மேல் கொண்ட சீற்றத்தோடே யிருக்கச்செய்தேயும் பகவத்பக்தி குறைவற்றிருப்பரென்று ஸ்வாபதேசம்.... ... ...(க)

(க) ரா-அயோ-கஉ௱-௱௦. (உ) இரா - நூ - அஅ.

௬௨—அலைத்த பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியாய் அவுணன்
கொலைக் கையாளன் நெஞ்சிடந்த கூருகிராளனிடம்
மலைத்த செல்சாத் தெறிந்தபூசல் வன்துடிவாய் கடுப்பச்
சிலைக்கை வேடர் தெழிப்பறாத சிங்கவேழ் குன்றமே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அலைத்த	(சீற்றத்தாலே) நாவலையாநின்றுள்ள	மலைத்த	(வேடரால்) தகையப்பட்ட
பேழ்வாய்	பெரியவாயையும்	செல்	தீர்த்தயாத்ரைபோகிறவர்களுடைய
வாள்	ஒளிதங்கின	சாத்து	ஸமூஹமானது
எயிறு	பற்களையும்	எறிந்த	இட்ட
ஓர்	ஒப்பற்ற	பூசல்	யுத்தத்திலே
கோள்	மிடுக்கையுமுடைய	வல்	மிகவும் த்வநியாநின்றுள்ள
அரியாய்	ஸிம்ஹமாய்க்கொண்டு [பாவமான	வாய்	வாயையுடைத்தான
கொலை	கொல்லுகையே ஸ்வ	துடி	உடுக்கை
கையாளன்	கையையுடையனான	கடுப்ப	சப்திக்கவும்
அவுணன்	ஹிரண்யனுடைய	சிலை	வில்லை [ன
நெஞ்சு	மார்வை	கை	கையிலேயுடையரா
இடந்த	கிழித்துப்பொகட்ட	வேடர்	வேடருடைய
கூர்உகிராளன்	கூரிய திருவுகிரையுடைய ஸர்வேஸ்வரன் நித்யவாஸம்பண்ணுகிற	தெழிப்பு	ஆரவாரமானது
		அறாத	எப்போதும்மாறாத
			சிங்கவேழ்குன்றம். (௨)
இடம்	ஸ்த்தாநமானது,		

வ்யா—இரண்டாம்பாட்டு. (அலைத்த) சீற்றத்தாலே கடைவாய்களோடே நாக்கையெற்றிக்கொள்ளாநின்றுள்ள பெரியவாயையும், ஒளியையுடைத்தான எயிற்றையுமுடைய அத்விதீயமான †மிடுக்கையுடைத்தான ஸிம்ஹமாய். (அவுணன் கொலைக்கையாளன்) †நாட்டார் பரஹிம்ஸைபண்ணுவது தந்தாமுடையப்ரஜைகளுடைய ரக்ஷணத்துக்காகவிறே; இவனுக்கதுபோய் ப்ரஜையை ஹிம்ஸிக்குமது பலித்ததாயிற்று. †பரஹிம்ஸை பண்ணுகைக்கு தேவதைகள் பக்கலிலே வரம்பெற்று அதுதானே யாத்ரையாய்த்திரிகிற அஸுரனுடைய நெஞ்சை யிடந்த கூரிய திருவுகிரையுடையவன் வர்த்திக்கிற ஸ்த்தாநம்.

அரு.—இரண்டாம்பாட்டு. (அலைத்தவித்யாதி). *ஞாலமஞ்ச ஆளரியான ப்ரகாரத்தை வர்ணிக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"கோள்" என்றதினர்த்தம், (மிடுக்கை) என்றது. [கொலைக்கையாளனை அவுணன் - நெஞ்சிடந்த] என்றந்வயம். கொலையே ஸ்வபாவமாகவுடைய கையையுடையவனென்று சப்தார்த்தம். அத்தையுபபாதிக்கிறார், (நாட்டாரித்யாதி). வாக்யார்த்தம், (பரஹிம்ஸை யித்யாதி).

மூ.—ஏய்ந்த பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியாய் அவுணன்
வாய்ந்த வாகம் வள்ளுகிரால் வகிர்ந்த வம்மானதிடம்
ஓய்ந்தமாவு முடைந்தகுன்று மன்றியும் நின்றழலால்
தேய்ந்த வேயு மல்லதில்லாச் சிங்கவேழ் குன்றமே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏய்ந்த	வடிவுக்குத்தக்க	அரியாய்	நரஸிம்ஹ ரூபியாய்க் கொண்டு
பேழ்	பெருத்த	அவுணன்	ஆஸுரப்ரக்ருதியான ஹிரண்யனுடைய
வாய்	வாயையும்	வாய்ந்த	(நரஸிம்ஹத்துக்குத்) தகும்படி வளர்ந்த
வாள்	வாள்போன்ற	ஆகம்	சரீரத்தை
எயிறு	பற்களையும்	வள்உகிரால்	கூரியதிருவுகிராலே
ஓர்	ஒப்பற்ற		
கோள்	மிடுக்கையுமுடைய		

(மலைத்தவித்யாதி) †திரள் திரளாகத்தீர்த்த யாத்ரைபோகாநிற்பர்களே; அவர்களைப்பறிக்கைக்காக அங்குண்டான வேடர் வந்து மலைத்து மேல்விழுவர்கள்; இவர்களும் அவர்களோடே யெதிர்ப்பர்கள். (எறிந்தபூசல்) எறிதல் - இடுதல்; இட்டபூசல். அவர்கள் இவர்களைச்†சூறை கொள்ளுகிற பூசலிலே. (வன்துடிவாய்கடுப்ப) கேட்டபோதே முடியும்படியான த்வநியையுடைத்தாயிருக்கிற துடியானது †கடுப்ப. (சிலைக்கை) கையில் வில்லையுடையராயிருந்துள்ள வேடருடைய†ஆர்ப்பரவம்மாறாத தேசமாயிற்று; அவர்கள் கையில் பயாவஹமான துடியோசையும் பறிக்கிற ஆர்ப்பரவமுமேயாய்ச் செல்லாநிற்குமாயிற்று. †உகந்தருளின நிலங்களிலே யுள்ளதாகையாலே அவர்கள் கையில்துடியோசையோடு அவர்களைப்பறிக்கிற த்வநியோடு வாசியற உத்தேஶ்யமாயிருக்கிறதாயிற்று. நரஸிம்ஹத்தினுடையசீற்றத்தோடு அங்குள்ளாருடைய சீற்றத்தோடு அவர்கள் வ்யாபாரத்தோடு வாசியற்றிருக்கிறதாயிற்றிவர்க்கு. ... ... (உ)

மலைத்த-தகையப்பட்ட, செல்சாத்து-செல்லாநிற்கிற ஸமூஹமென்று சப்தார்த்தமாய், அத்தை வர்ணிக்கிறார், (திரளித்யாதி). சூறை-புடைவை. கடுப்ப-சப்திக்க. தெழிப்பு - என்றதினர்த்தம், (ஆர்ப்பரவம்) என்றது. தீர்த்தயாத்ரைபோகிறவர்களுடைய சூறைகொள்ளுகிற வேடரை இவர் வர்ணிப்பானென்னென்ன; அருளிச்செய்கிறார், (உகந்தருளின வித்யாதி). இத்தால்-(க) "யஸ்யாநுக்ரஹமிச்சாமி தஸ்ய வித்தம் ஹராம்யஹம்" - யஸ்யாநுக்ரஹமிச்சாமி தஸ்ய வித்தம் ஹராம்யஹம்" என்கிற ஈஶ்வரனோபாதி அவர்களும் கைம்முதல் வாங்கி அநந்யகதிகளாக்கிவிட்டு இவர்களுடைய ஸர்வஸ்வத்தையும் ஆளியைப்போலே அந்நரஸிம்ஹத்துக்குச் சேஷமாக்குமவர்களாகையாலே உத்தேஶ்யமாய் வர்ணித்தாரென்றதாயிற்று. ... ...(உ)

(க) கீதை -

வகிர்ந்த	அநாயாஸேநகிழித்து ப்பொகட்ட	குன்றும்	சிறுமலைகளும்
		அன்றியும்	அதுக்குமேலே
அம்மானது	ஸர்வேஶ்வரனுடைய	நின்று	தன்னிலேயுண்டான
இடம்	ஸ்த்தாநமானது,	அழலால்	நெருப்பாலே
ஓய்ந்த	(ஸாரமில்லாதநிலத்தில் ஸஞ்சரிக்கையாலே) ஓய்ந்துகிடக்கிற	தேய்ந்த	குறைக்கொள்ளியாய்க்கிடக்கிற
		வேயும்	மூங்கிலும்
		அல்லது	ஒழிய
மாவும்	ம்ருகங்களும்	இல்லா	வேறில்லாத
உடைந்த	(தீக்கதுவி) உடைந்த	சிங்கவேழ்குன்றம்.	(ந)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (ஏய்ந்தவித்யாதி) வடிவிற் பெருமைக்குத்தகுதியான பெரிய வாயையும்; வாள்போலேயிருந்துள்ள எயிறென்னுதல்; ஒளியையுடைத்தான எயிறென்னுதல். (ஓர் கோளரியாய்) மிகைக்கையுடைய அத்விதீய நரஸிம்ஹமாய், அவுணனுடைய - ஆஸுர ப்ரக்ருதியானவனுடைய, வாய்ந்த வாகமூண்டு - நரஸிம்ஹத்துக்குத் தகுதியாம்படி வளர்ந்த சரீரம், அத்தைக் கூரிய வுகிராலே வகிர்ந்த ஸர்வேஶ்வரனுடைய ஸ்த்தாநம்.

(ஓய்ந்தமாவும்) தளர்ந்து பசையற்ற நிலத்தின் ஸஞ்சாரத்தாலே அந்நிலத்துக்கடைத்த திர்யக்குக்களும் ஓய்ந்திருக்குமாயிற்று. (உடைந்தகுன்றும்) தொட்டாரோடே தோஷமாம்படி தீக்கதுவியுடைந்தகுன்றும், அதுக்குமேலே, தன்னிலேயுண்டான அழலாலே தேய்ந்த மூங்கிலுமல்ல தில்லாத சிங்கவேழ்குன்றமே. †தன்னிலேயுண்டான நெருப்பாலே தேய்ந்த வேய்களும் (க)*வண்டினமுரலுஞ்சோலையோபாதியாகத் தோற்றுகிறதாயிற்றிவர்க்கு. (உ) "அதுவிது வுதுவென்ன லாவனவல்ல" என்னக்கடவதிறே. † பிறர்க்குக் குற்றமாய்த் தோற்றுமவையும் உபாதேயமாய்த் தோற்றுகையிறே ஒருவிஷயத்தை உகக்கையாகிறது. ... ... (ந)

அந.—மூன்றாம்பாட்டு. (ஏய்ந்தவித்யாதி). இவரவன்வாயைப்பார்த்துக்கொண்டிருக்குமவராகையாலே மீளவுமவன் வாயை வர்ணிக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"மா" என்று நாலுகாலுடைய ஜந்துக்களாய், ம்ருகங்களைச் சொல்லுகிறது. தேய்ந்த - குறைக்கொள்ளியான. குறைக்கொள்ளியைக்கொண்டாடுவானென்னென்ன; அருளிச்செய்கிறார், (தன்னிலேயித்யாதி). அவன்ஸம்பந்தமுள்ளதெல்லா முத்தேஶ்யமாய்த் தோற்றுகைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார், (பிறர்க்கித்யாதி). ஆக, நரஸிம்ஹம் தன்னிலுண்டான கோபாக்நி

(க) தி - மா - கச. (உ) தி - வாய் - ரு - கய - உ.

மூ.—எவ்வும் வெவ்வேல் பொன்பெயரோனேதலனின்னுயிரை
வவ்வி ஆகம் வள்ளுகிரால் வகிர்ந்த வம்மானதிடம்
கவ்வு நாயும் கழுகு முச்சிப் போதொடு கால் சுழன்று
தெய்வ மல்லாற் செல்ல வொண்ணுச் சிங்க வேழ் குன்றமே.()

பதம்.	உரை.	பதம்.	உரை.
எவ்வும்	து:கத்தைப்பண்ணு நிற்பதாய்	நாயும்	நாய்களும் [ருகளும்
வெம்	க்ரூரமான	கழுகும்	(அப்படிப்பட்ட) கழு
வேல்	வேலையுடைய	உச்சிப்போதொடு	ஆதித்யனோடுகூட
ஏதலன்	சத்ருவான	கால்சுழன்று	கால் தடுமாறுமதாய்
பொன்பெயரோன்	ஹிரண்யனுடைய	தெய்வம் அல்லால்	தன்னை விரும்பித் தொழும் ஆஸ்ரிதர்க்கொழிய
இன் உயிரை	நற்சீவனை	செல்லவொண்ணு	சென்று கிட்டவொண்ணுத
வவ்வி	பரிக்ரஹித்து [தை		சிங்கவேழ்குன்றம். (௪)
ஆகம்	(அவனுடைய) சரீரத்		
வள்ளுகிரால்வகிர்ந்த	அம்மானதிடம்,		
கவ்வும்	கண்டாரையெல்லாம்) கவருமதான		

வ்யா. — நாலாம்பாட்டு. (எவ்வும் வெவ்வேல் பொன்பெயரோன்) கையும் வேலுமாயிருக்கிற விருப்பைக் கண்டகாட்சியிலே, அது உடம்பிலே தைத்தால் பிறக்கும் து:க்கமெல்லாம் பிறக்கும்படி யிருக்கை. எவ்வத்தைப்பண்ணுகின்றுள்ள வெவ்வியவேலை யுடைய, பொன் பெயரோனுண்டு, ஹிரண்யன். எவ்வம் - து:க்கம், ஏதலன் - சத்ரு. சிறுக்கனுக்கு சத்ருவானபோதே தனக்கும் சத்ருவாயிருக்கிறுனுயிற்று. † "சத்ருக்ருஹத்தில் புஜிக்கவுமாகாது" என்றுனிறே. பாண்டவர்களுக்கு சத்ருவானபோதே தனக்கும்

யாலே குன்றுபோன்ற ஹிரண்யன் நெஞ்சுடைந்து தத்ரத்யரான ராக்ஷஸராகிறதுஷ்ட ம்ருகங்கள் ஓய்ந்து கிடக்கிறபடிக்கு ஸ்மாரகமாய் இவர்க்கு உத்தேஸ்யமாய்த் தோற்றுகிறதென்றதாயிற்று. ... ... (௫)

அரு.—நாலாம்பாட்டு. (எவ்வுமித்யாதி). கீழ் "கோளரியாய்" என்றுமிடுக்கைச்சொன்னது உபபந்நமென்று தோற்ற சத்ருவான ஹிரண்யனை வர்ணிக்கிருரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

(௧) "ద్విషదన్నం నభోక్తవ్యం ద్విషన్తం నైవభోజయేత్ ।పాణ్డవాన్ ద్విషసే రాజన్ మమ ప్రాణాహి పాణ్డవాః - த்விஷதந்நம் நபோக்தவ்யம் த்விஷந்தம் நைவபோஜயேத் । பாண்டவாந் த்விஷஸே ராஜந் மமப்ராணாஹி பாண்டவா:" என்றவசநத்தை யுட்கொண்டு கீழ்ச்சொன்ன அர்த்தத்தை ஸாதிக்கிருர், (சத்ருக்ருஹத்திலித்யாதி).

(௧) பார - உத்.

மூ.—மென்ற பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியாய் அவுணன்
பொன்ற வாகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதனிடம்
நின்ற செந்தீ மொண்டு சூறை நீள்விசும் பூடிரியச்
சென்று காண்டற் கரிய கோயில் சிங்கவேழ் குன்றமே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மென்ற	(சீற்றத்தாலே) மெல்லாநின்றுள்ள	ஓர் அரியாய்	அத்விதீயநரஸிம்ஹமாய்
பேழ்வாய்	பெரியவாயையும்	பொன்ற	(அவ்வடிவைக்கண்டபோதே) நசித்த
வாள்	வாள்போன்ற		
எயிறு	பற்களையும்	அவுணன்	அஸுரனான ஹிரண்யனுடைய
கோள்	மிடுக்கையுமுடைய		

சத்ருவானபடி. அவனுடைய இன்னுயிரை அவன் விரும்பின வுயிரை. வவ்வி-பரிக்ரஹித்து. (க) "పపౌజనార్దనః క్రుద్ధః - பபௌ ஜநார்தநః க்ருத்தః" என்கிறபடியே.

(கவ்வுநாயும்) ஆரேனுமாகக் கண்டபோதே கவ்வியல்லது நில்லாத நாயும், அப்படி கவ்வும் கழுகும். (உச்சிப்போதொடு கால் சுழன்று) ஆதித்யனும் அந்நிலத்திலே வந்தவாறே கால்தடுமாறிச் சுழன்று வாராநிற்குமாயிற்று. உச்சிப்போதுண்டு - ஆதித்யன், அவனோடேகூட, கவ்வு நாயும் கழுகுமாகக்கால்சுழன்று வாராநிற்கு மென்னுதல்; அன்றிக்கே, உச்சிப்போதோடே, காலுண்டு - காற்று, அது சுழன்று வாராநிற்கும். †நில வெம்மையைச் சொன்னபடி. †அத்தேசத்தைச் சென்று ப்ராபிக்க ஆசைப்படுகிறவர், "தெய்வமல்லால் செல்லவொண்ணா" என்கிறாராயிற்று, நரஸிம்ஹத்தினுடைய அழகைக்கண்டு கண்ணெச்சில் படுவாரில்லையென்னுமத்தைப்பற்ற. (உ) "அந்தியம்போதிலரியுருவாகியரியை யழித்தவனைப்பல்லாண்டு" என்னு மவர்களிறே. †அநாஸ்ரிதர்க்குச் சென்று கிட்டவொண்ணாதாயிற்று. ஹிரண்யன்போல்வார்க்குச் சென்று ப்ரவேசிக்கப் போகாதாயிற்று. ... ... (ச)

உஷ்ணகிரணனான ஆதித்யனுக்கும் கால்தடுமாறும்படி யென்னென்ன; அருளிச்செய்கிறார், (நிலவெம்மையித்யாதி). தாம் கிட்ட வாசைப்படுகிறவர் "தெய்வமல்லால் செல்லவொண்ணா" என்னக்கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார், (அத்தேசத்தையித்யாதி வாக்யத்ரயத்தாலே). இங்கு "தெய்வம்" என்றதுக்கு (ங) "విష్ణుభక్తిపరో దేవః - விஷ்ணுபக்திபரோதேவः" என்கிறபடியே மங்களாசாஸநபரன்விநா ஆஸுரப்ரக்ருதிகளுக்குக் கிட்டவொண்ணாதென்று தாத்பர்யம் விவக்ஷித்தருளிச்செய்கிறார், (அநாஸ்ரிதர்க்கித்யாதி). (ச) "శీతో భవ హనూమతః - சீதோபவஹநூமதः" என்கிறபடியே அந்நில வெம்மைதானே குளிர்த்தியைக்கொடுக்குமென்று கருத்து. ... (ச)

(க) வி-பு-க-கக-உச. (உ) தி-பல்-சு. (ங) விஷ்ணுத- (ச) ரா-ஸு-ருடு-உகூ.

ஆகம்	சரீரத்தை	சூறை	சுழல்காற்றுண்டு
வள்உகிரால்	கூரியதிருவுகிராலே	மொண்டு	முகந்துகொண்டு
போழ்ந்த	இருபிளவாம்படிபண்ணின	நீள்விசும்பு ஊடு	பரந்த ஆகாசத்தினிடையிலே
புனிதன்	பாவசுத்தியையுடைய ஸர்வேஶ்வரனெழுந்தருளியிருக்கிற	இரிய	சிதறஓடுகையாலே
		சென்று	அருகேபோய்
இடம்	ஸ்த்தாநமானது,	காண்டற்கு	காண்கைக்கு
		அரிய	எல்லார்க்குமரிதாயிருக்கிற
நின்ற	குறைவற்றுக்கிடக்கிற	கோயில்	திருப்பதியான
செந்தீ	சிவந்த அக்நியை		சிங்கவேழ்குன்றமே. (ரு)

வ்யா. — அஞ்சாம்பாட்டு. (மென்றவித்யாதி) சீற்றத்தாலே மடித்த பெரியவாயையும், வாள்போலேயிருந்துள்ள எயிற்றையும் மிடுக்கையுமுடைய அத்விதீய நரஸிம்ஹமாய். (அவுணன்பொன்ற) நரஸிம்ஹத்தினுடைய தோற்றரவிலே பிணமானுனாயிற்று. (ஆகமித்யாதி) பின்னையும் சீற்றம் மாறாமையாலே பிணத்திலே வ்யாபரித்தானித்தனையாயிற்று. (புனிதனிடம்) பிறர்க்கு உபகரித்தானாயிருக்கையன்றிக்கே தன் விரோதியைப்போக்கின சுத்தியோகத்தை நினைக்கிறதாயிற்று.

(நின்றவித்யாதி) குறைவற்றுக்கிடக்குமாயிற்று அக்நி, அத்தை முகந்துகொண்டு,†சுழல்காற்று, பரப்பையுடைத்தான ஆகாசத்திலே, இரிய - அங்கே சிதறவோட, ஆர்ப்பரவத்தைப் பண்ணவென்னுதல்; (எரிய)என்று பாடமாகில் ஆகாசந்தானே இந்தளமாக எரியவென்றபடி. (சென்று) இப்படியிருக்கையாலே ஒருவர்க்கும் சென்று காண்கைக்கரிதாயிருக்குமாயிற்று. பரமபதத்தோபாதி இந்நிலத்துக்கும் நமக்கு பயப்படவேண்டா என்று ஹ்ருடராகிறார். ()

அரு.—அஞ்சாம்பாட்டு. (மென்றவித்யாதி). சக்ரவர்த்தித் திருமகன் விற்பிடித்தபிடியிலே அஸுரர் மண்ணுண்ணுமாபோலே, நரஸிம்ஹத்தின் வாயில் பிறக்கும் விக்ருதிகளிலேயும் நசிப்பர்களென்று திருவுள்ளம்பற்றி, ஏதலனின்னுயிரை வவ்வினதுக்கு ஹேதுவான *மென்ற பேழ்வாயை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

பொன்ற - நசித்த. மென்றவாயைக்காணவே பொன்றவாகமாயிற்றென்றுகருத்து.

“சூறை” என்றதினர்த்தம், (சுழல் காற்று) என்றது. “எரிய” என்ற பாடத்திலே, சூறைவீச அது நீள்விசும்பூடு “எரிய” என்றத்யாஹரித்துக் கொள்வது. ... ... (ரு)

மூ.—எரிந்தபைங்கணிலங்குபேழ்வாயெயிற்றொடிதெவ்வுருவென்று
இரிந்துவானோர் கலங்கியோட விருந்தவம்மானதிடம்
நெரிந்தவேயின் முழையுள் நின்று நீணெறி வாயுழுவை
திரிந்தவானைச் சுவடுபார்க்கும் சிங்கவேழ் குன்றமே. (சு)

பதம்.	உரை.
எரிந்த	சீற்றத்தாலே எரியாநிற்பதாய்
பை	பசுமையான
கண்	கண்களையும்
இலங்கு	விளங்காநின்றுள்ள
பேழ்வாய்	பெரிய வாயையுமுடைத்தாய்
எயிற்றொடு	பற்களோடு கூடியிருக்கிற (வடிவைக் கண்டு)
இது எவ்வுரு	இதுஎன்ன வடிவு
என்று	என்று அஞ்சி
வானோர்	தேவர்கள்
இரிந்து	அங்கேயிங்கேசிதறி
கலங்கி	கால்தடுமாறி
ஓட	ஓடும்படியாக
இருந்த	எழுந்தருளியிருந்த
அம்மானது	ஸர்வேஶ்வரனுடைய
இடம்	ஸ்த்தாநமானது,
நெரிந்த	ஒன்றோடொன்றுசேர்ந்திருந்துள்ள
வேயின்	மூங்கிலின்
முழையுள்நின்று	துளைவழியாக
உழுவை	புலிகளானவை,
நீள்நெறிவாய்	பெரிய வழியிலே
திரிந்த	ஸஞ்சரியாநின்றுள்ள
ஆனை	யானைகள் (போன)
சுவடு	அடையாளத்தை
பார்க்கும்	(கந்தாக்ராணத்தாலே) பாராநின்றுள்ள
	சிங்கவேழ்குன்றம். (சு)

வ்யா.—ஆறும்பாட்டு. (எரிந்தவித்யாதி). †சீற்றத்தாலே யெரியாநிற்பதாய் ஜாதிப்ரயுக்தமான பசுமையையுடைத்தான கண்ணையும், உஜ்ஜ்வலமாகாநின்றுள்ள பெரியவாயையும், எயிற்றையுமுடைய வடிவைக்கண்டு. (இதெவ்வுருவென்று) "இற்றைக்கு முன்பு கண்டறியாத தொன்றாயிராநின்றது, †இதென்னவடிவு!" என்றஞ்சி தேவர்களானவர்கள் § (ஆர்ப்பரவத்தைப்பண்ணி) † அங்கேயிங்கே

அரு.—ஆறும்பாட்டு. (எரிந்தவித்யாதி). *அங்கண்ஞால மஞ்சினவளவன்றிக்கே, (க) "నవాయుః పస్పన్దేయయతురథవాస్తం శశిరవీ దిశోనశ్యన్విశ్వాప్య చలదచలాసాచలకులా। నభశ్చప్రశ్చ్యోతిక్వధితమపి సాథోనరహరాత్వయి స్తమ్భే ఽభ్యుద్వపుషిసతి హేసున్దరభుజ -நவாயுஃ பஸ்பந்தே யயுரதவாஸ்தம் சசிரவீ திசோநஸ்யந்விஸ்வாப்யசலதசலா ஸாசலகுலா।நபஸ்ச ப்ரஸ்ச்யோதி க்வதிதமபிபாதோநரஹரெள த்வயிஸ்தம்பே சும்பத்வபுஷிஸதி ஹேஸுந்தரபுஜ" என்கிறபடியே-தேவர்களு மஞ்சும்படியானபடியை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

மூலத்திலே "எயிற்றொடு" என்றவநந்தரம், இருக்கிற வடிவைக்கண்டு என்றத்யாஹாரம் திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார், (சீற்றத்தாலேயித்யாதி). "இரிந்து" என்றதினர்த்தம், (அங்கே யிங்கே சிதறி) என்றது.

(க) ஸு - ஸ்த - கூடு.

மூ.—முனைத்த சீற்றம் விண்சுடப்போய் மூவுலகும் பிறவும்
அனைத்து மஞ்ச வாளரியா யிருந்த வம்மானதிடம்
கனைத்த தீயும் கல்லுமல்லா வில்லுடை வேடருமாய்த்
தினைத்தனையும் செல்ல வொண்ணாச் சிங்கவேழ் குன்றமே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
முனைத்தசீற்றம்	மிக்ககோபமானது	தீயும்	அக்நியையும்
போய்	இங்குநின்றும்போய்	கல்லும்	(அத்தாலேவேகிற)கற்களையும்
விண்சுட	ஆகாசத்தைச்சுடும்படியாகவும்	அல்லா	இவற்றிலுங்காட்டில் க்ரூரமாய்
மூவுலகும்	மூன்றுலோகங்களிலுள்ளவர்களும்	வில்	வில்லை (ன
பிறவும்	மற்றும்	உடை	கையிலேயுடையரா
அனைத்தும்	ப்ரஹ்மாதிலோகங்களிலுள்ளவர்களும்	வேடருமாய்	வேடர்களையுமுடைத்தாய்
அஞ்ச	பயப்படும்படியாகவும்	தினைத்தனையும்	(அநாஸ்ரிதர்களுக்கு) க்ஷணகாலமாகிலும்
அளரியாய்	நரஸிம்ஹரூபியாய்	செல்லவொண்ணா	கிட்டவொண்ணாத
இருந்த	எழுந்தருளியிருக்கிற	சிங்கவேழ்குன்றம்.	
அம்மானது	ஸர்வஸ்வாமியுடைய		
இடம்	ஸ்த்தாநமானது,		
கனைத்த	(எரியும்போது) த்வநியாநின்றுள்ள		

சிதறிக் கால்தடுமாறி ஒருவர்புக்கவிடத்திலே யொருவர்புகாதே யோடும்படியாயிருந்த ஸர்வேஶ்வரனுடைய ஸ்த்தாநம்.

(நெரிந்தவித்யாதி) நெருக்கத்தாலே ஒன்றோடொன்று இழைந்து நெரிந்திருந்துள்ள மூங்கில் துளைவழியே-அந்த† த்வாரத்தாலே, உழுவையுண்டு - புலி, அது நீணெறிவாயிலே - பெருவழியிலே, ஸஞ்சரியாநின்றுள்ள. (ஆனைச்சுவடுபார்க்கும்) ஆனையினுடைய மஸ்தகத்தைப்பிளந்து அத்தைப் பாநம்பண்ணுகைக்காக அவைபோகிற பெருவழியிலே அவற்றைச் † சுவடொத்தி நிற்குமாயிற்று. ஆஸுர ப்ரக்ருதிகளாயிருப்பாரை யழியச்செய்கைக்கு நரஸிம்ஹமடிச்சுவடொத்துமாபோலே. ... ...(சு)

(த்வாரத்தாலே) என்றவநந்தரம், "புறப்பட்டு" என்று சேஷம். இத்தால் - ஒன்றோடொன்று சேர்ந்திருந்துள்ள மூங்கில்களைத் தன் பலத்தாலே நீக்கி வெளிகண்டு புலி வெளிநிலத்திலே புறப்பட்டதென்று வம்சாபிவ்ருத்தியைச் சொல்லிற்றாயிற்று. (சுவடொத்திநிற்கும்) என்றதுக்கு-இங்கு கந்தாக்ராணம் பண்ணுநிற்குமென்று கருத்து. ... ... (சு)

மூ.—நாத்தழும்ப நான்முகனு மீசனுமாய் முறையா
லேத்த அங்கோ ராளரியா யிருந்த வம்மானதிடம்
காய்த்தவாகை நெற்றொலிப்பக் கல்லதர் வேய்ங்கழைபோய்
தேய்த்த தீயால் விண்சிவக்கும் சிங்கவேழ் குன்றமே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நா	நாவானது	அங்கு	அவ்விடத்திலே(அவர்களுக்கு ஸ்துத்யனுய்க்கொண்டு)
தழும்ப	தழும்பேறும்படியாக		
நான்முகனும்	நான்கு முகத்தையுடையப்ரஹ்மாவும்	ஓர் ஆளரியாய் இருந்த அம்மானதிடம்,	
ஈசனும்	ருத்ரனும்	காய்த்த	காய்கள் நிறைந்த
ஆய்	தந்தாமுடைய தரம் குலையாதபடியாக	வாகை	வாகைகளின்
		நெற்று	நெற்றுகள்
முறையால்	(அவன் சேஷி, நாம் சேஷபூதர் என்னும்) க்ரமத்தாலே	ஒலிப்ப	சப்திக்கும்படியாக
		கல் அதர்	கல்வழியிலேயுண்டான
ஏத்த	ஸ்தோத்ரம் பண்ண,	வேய்ங்கழை	குழல்மூங்கிலானது

வ்யா.—ஏழாம்பாட்டு. (முனைத்தவித்யாதி) மிக்கசீற்றமானது போய் அந்தரிக்ஷத்தைச்சுட. (மூவுலகுமித்யாதி) த்ரைலோக்யமும் ப்ரஹ்மாதிகளுடைய குடியிருப்பும் எங்குமொக்க அஞ்சும்படியாக; †ஆண்மையையுடைய வென்னுதல், †மநுஷ்யத்வமும் ஸிம்ஹத்வமும் கலந்திருக்கையைச் சொல்லிற்றுதல்.

(கனைத்த) த்வநியாநின்றுள்ள அக்நியும்-எரிகிறபோதை வெடிவெடென்கிற த்வநியையுடைத்தானவக்நியும், அதிலே வைக்கோல் போர்போலே வேகிறகல்லும். (அல்லாவித்யாதி) †இங்ஙனெரிகிற நெருப்பிலும் கல்லிலும் அடியிடலாம், அங்குத்தைவேடர் முகத்தில் விழிக்கவொண்ணுதாயிற்று, அவர்களுடைய க்ரௌர்ய மிருந்தபடி. (தினைத்தனையும்) †உகவாதார்க்குக் கண்ணாலே காணலாம்படி சென்று கிட்டிக் கண்ணெச்சில்படவொண்ணுதபடி யிருந்த தேசமாயிற்று. ... ... (எ)

அரு —ஏழாம்பாட்டு. (முனைத்தவித்யாதி). "எரிந்தபைங்கண்" என்றத்தால் தோற்றின சீற்றத்தின் எல்லைநிலத்தை யருளிச்செய்கிறுரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"ஆள்" என்றதினர்த்தம், (ஆண்மையை) என்றது. அதாவது-சேவகத்தனம். "ஆள்" என்றதுக்கர்த்தாந்தரம், (மநுஷ்யத்வ மித்யாதி).

"அல்லா," என்று விசேஷிக்கையாலே வேடர்க்கு ஆதிக்யம் தோற்றுகிறதென்கிறுர், (இங்ஙனித்யாதி). "தினைத்தனையும்" தினையென்று ஸூக்ஷ்மமான தாந்யமாய், எள்ளத்தனையென்னுமாபோலேயாய், பரிமிதகாலத்தைச் சொல்லுகிறதென்று விவக்ஷித்து, வாக்யத்துக்கு உட்கருத்தருளிச் செய்கிறுர், (உகவாதார்க்கித்யாதி). ... ...(எ)

போய்	ஆகாசத்தை யளாவும்படி ஓங்கி	தீயால்	நெருப்பாலே
தேய்த்த	தன்னிலே உராய்கையாலுண்டான	விண்	ஆகாசம்
		சிவக்கும்	சிவந்து கிடக்கிற
			சிங்கவேழ்குன்றம். (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (நாவித்யாதி). †நாவானது தழும்பேறும்படியாக, சதுர்முகனும், தேவர்களில் தலையான ருத்ரனும், முன்பு ஹிரண்யனுக்கஞ்சி மநுஷ்யவேஷங்கொண்டு திரிந்தவர்கள், அவன் பட்டபின்பு தந்தாமுடைய தரம்குலையாதபடி முறையாலே வந்து சேஷித்வப்ராப்தியாலே ஸ்தோத்ரம்பண்ண; அவர்களுக்கு ஸ்துத்யனாய்க்கொண்டு அவ்விடத்திலே இதுக்குமுன்பு அநுபவித்தறியாத நரஸிம்ஹமாய்க்கொண்டிருக்கிற ஸர்வேஶ்வரனுடைய ஸ்தாநம்.

(காய்த்தவித்யாதி) காய்த்தவாகைகளிலே நெற்றானது த்வநிப்ப. †பாலைநிலத்துக்கடைத்த வ்ருக்ஷங்களிவையுஞ்சொல்லக்கடவதிறே. (கல்லதர்வேய்ங்கழைபோய்) கழையென்று-மூங்கிலாய், அதரென்று-வழிக்குப்பேர். கல்வழியிலேயெழுந்த வேய்ங்கழையுண்டு-குழல் மூங்கில், அது அந்தரிக்ஷத்தளவும் வளர்ந்து தன்னிலே பிழைந்து அத்தாலேயுண்டான அக்நியானது, மேகத்தாலே ஆகாசம் கறுத்திருக்குமாபோலே இந்த நெருப்பாலே சிவந்து கிடக்குமாயிற்று. †இத்தால் - †அகவாயடங்க ப்ரஹ்மாதிகளுடைய ஸ்தோத்ரமாய்க்கிடக்கும்; †புறவாயடங்கலும் வாகை நெற்றினுடைய த்வநியாய்க்கிடக்கும். ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (நாத்தழும்பவித்யாதி). ஓராப்பகசிர்ப்பஜநத்தாலே விக்ருதியை யடைந்து ஹிரண்யனைக்கொன்றபடியை யநுஸந்தித்தாராய், பின்பு ப்ரஹ்மாதிகளாலே ஸ்துத்யனாயிருக்கும்படியை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"ஈசனுமாய்" என்கையாலே - முன்பு மநுஷ்யராயிருந்தமை ஸூசிதமாயிற்றென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார், (நாவானதித்யாதி).

(பாலைநிலத்துக்கு) நிர்ஜலதேசத்துக்கு. முனைத்த சீற்றம்போய் விண்சுடும்படி யிருந்த நரஸிம்ஹத்தின் சீற்றம் மாறுகைக்கு மெள்ள ப்ரஹ்மாதிகள் வந்துஸ்துதிக்குமாபோலே, விண்சிவக்கும்படியான மூங்கிலிலுண்டான அக்நிக்கு அஞ்சிக் காட்டுவாகைகள் ஸ்துதிக்கிறனவென்று விவக்ஷித்துக் கருத்தருளிச்செய்கிறார், (இத்தாலித்யாதி). (அகவாய்) என்கிறது - உள்ளிருக்கிற நரஸிம்ஹவிஷயத்திலே என்கை. (புறவாய்) என்றது - அந்த திவ்யதேசத்தைச் சுற்றிலுமுண்டான மூங்கில் விஷயத்திலென்கை. .... (அ)

மூ.—நல்லை நெஞ்சே நாந்தொழுதும் நம்முடை நம்பெருமான்
அல்லிமாதர் புல்கநின்ற வாயிரந் தோளனிடம்
நெல்லிமல்கிக் கல்லுடைப்பப் புல்லிலை யார்த்ததர்வாய்
சில்லி சில்லென் றொல்லறாத சிங்கவேழ் குன்றமே. (கூ)

பதம்.	உரை.	பதம்	உரை.
நம்முடை	நமக்கு ஆஸ்ரயணீயனாய்	உடைப்ப	உடையப்பண்ணும்படியாகவும்
நம்பெருமான்	நமக்கு ஸ்வாமியாய்	புல்இலை	பனையோலையானது
அல்லிமாதர்	தாமரைப்பூவையிருப்பிடமாகவுடையபெரியபிராட்டியார்	ஆர்த்து	ஓசைப்படும்படியாகவும்
		அதர்வாய்	வழியிலே (கள்
புல்க	கட்டிக்கொள்ளும்படி	சில்லி	சில்வீடென்னும்பக்ஷி
நின்ற	எழுந்தருளியிருக்கிற	சில்என்று ஒல் அறாத	சில்என்னும் ஓசைமாறாதபடியுமான
ஆயிரம்தோளன்	ஆயிரம் திருத்தோள்களையுடைய ஸர்வேஶ்வரனுடைய	சிங்கவேழ்குன்றம்;	
		நல்லைநெஞ்சே!	எனக்குப்பாங்கான நெஞ்சே!
இடம்	ஸ்தானமானது,		
நெல்லி	நெல்லிமரங்கள்	நாம்தொழுதும்	நாம் (அங்கேசென்று அவனைத்) தொழுதுஉஜ்ஜீவிப்போம்.
மல்கி	நிறைந்து		
கல்	கற்களை		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (நல்லைநெஞ்சே) எனக்குப்பாங்கான நெஞ்சே!. † ஸம்போதித்து, நெஞ்சே! நீயெனக்குப் பாங்காயிறே இப்பேறு†பெற்றது. (நாந்தொழுதும்) நாம்தொழுது உஜ்ஜீவிப்போம். இது - இத்திருமொழியிற் பாட்டுக்கெல்லாம் க்ரியாபதம். (நம்முடை நம்பெருமான்) † நித்யஸூரிகளுக்கநுபாவ்யனு

அரு.—ஒன்பதாம்பாட்டு. (நல்லைநெஞ்சேயித்யாதி). ‡ நான்முகனுமீசனுமேத்தச் செய்தேயும் சீற்றம்மாறாதேயிருக்கப் பிராட்டிபோய் ஸம்ஶ்லேஷித்துச் சீற்றத்தை மாற்றினபடியை யநுபவிக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

நல்லையானநெஞ்சே என்று விசேஷணமாக வொருயோஜனை யருளிச்செய்து, நெஞ்சே! நீ நல்லையென்று அந்வயித்து யோஜநாந்தரம், (ஸம்போதித்தித்யாதி). (பெற்றது) என்றவநந்தரம், "என்கிறாரென்றுமாம்" என்று கூட்டுவது. இங்ஙனன்றாகில், (ஸம்போதித்து) என்று சொல்லவேண்டாவிறே. நம்பெருமான் என்னவமைந்திருக்க, "நம்முடை" "என்று விசேஷித்தத்தாலே, தாம் நிரூபகரானமைதோற்றுகையாலே, அத்தைஸத்ருஷ்டாந்தமுபபாதிக்கிறார், (நித்யேத்யாதி). "அயர்வறுமமரர்கள்" என்னக்கடவதிறே.

மூ.—செங்கணாளியிட் டிறைஞ்சும் சிங்கவேழ் குன்றுடைய
எங்களீச னெம்பிரானை யிருந்தமிழ் நூற்புலவன்
மங்கையாளன் மன்னு தொல்சீர் வண்டறை தார்க்கலியன்
செங்கையாளன் செஞ்சொல் மாலை வல்லவர் தீதிலரே. (க0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
செம்	சிவந்த	உடைய	வாஸஸ்த்தாநமாக வுடையனாய்
கண்	கண்களையுடைய	எங்கள்	ஸம்ஸாரிகளான நம் போல்வார்க்கும்
ஆளி	ஸிம்ஹங்கள்	ஈசன்	ஸ்வாமியாய்
இட்டு	(திருவடிகளிலேஸமாராதநோபகரணங்களை) ஸமர்ப்பித்து	எம்பிரானை	எனக்கு உபகாரகனான ஸர்வேஸ்வரன் விஷயமாக
இறைஞ்சும்	ஆஸ்ரயியாநின்றுள்ள	இரு	பெரிய
சிங்கவேழ்குன்று	சிங்கவேழ் குன்றத்தை	தமிழ்நூல்	தமிழ்சாஸ்த்ரத்தில்

யிருக்குமாபோலே நமக்கும் ஆஸ்ரயணீயனாய்க் கொண்டுவந்து ஸந்நிதிபண்ணின ஸர்வேஸ்வரன். (அல்லியித்யாதி) ப்ரஹ்மாதிகளாஸ்ரயிக்க தேவர்கள் கலங்கி யோடப்புக்கவாறே, "ப்ரதிகூலநிரஸநத்துக்காக இவ்வடிவு கொண்டதுபோய் அநுகூலர் பக்கலிலேயும் வந்து பலிக்கு மளவாயிற்று!" என்று அந்தச்சீற்றத்தை ஆற்றுகைக்காகப் பெரிய பிராட்டியார் வந்து கட்டிக்கொள்ளுமாயிற்று. (ஆயிரந்தோளன்) இவளணைத்தால் இவளைக்கட்டிக்கொள்ள ஆயிரம் தோளுண்டாமாயிற்று.

(நெல்லியித்யாதி) நெல்லிகளானவை மிக்குக் கற்களையுடையப் பண்ணுமாயிற்று. நெல்லிமரங்கள் வேரோடிக் கற்களையுடையப் பண்ணும். (புல்லிலையார்த்து) மூங்கிலிலைகளானவை த்வநிக்கவென்னுதல், பனையோலை ஓசைப்படவென்னுதல். † அதர்வாயிலே - வழியிடத்திலே. சில்லியுண்டு - †சில்வீடு, அது சில்லென்னாநிற்குமாயிற்று - ஒரு சப்தாநுகாரத்தைப் பண்ணாநிற்குமாயிற்று. ஒல்லருத - த்வநிமாருத. ... ... (கூ)

ஹிரண்யனுடைய நெஞ்சிடந்தபோது அவனெலும்பு உடையும்படியும், அவனுடைய ஆர்த்துக்கொள்ளுகையும், அவன் ரக்தம் சில்லென்று புறப்படும்படியும், அத்தேசத்தைக் கண்ட உடனே ஸம்ருதிவிஷயமாகிறதென்னும் கருத்தாலே வர்ணிக்கிறாரென்றுகொள்வது. (சில்வீடு) என்றது - பக்ஷி விசேஷம். இப்படி நரஸிம்ஹாவதாராபதாநத்தில் த்வநிக்ஷஸூசகமான தேசமாகையாலே, "நாம் தொழுதும்" என்கிறாரென்று கருத்து. .... (கூ)

புலவன்	வல்லவராய் [வாய்
மங்கையாளன்	திருமங்கைக்கு ராஜா
தொல்மன்னு	அநாதியாய்நிலைநின்ற
சீர்	ஸ்ரீயையும்
வண்டு	வண்டுகள்
அறை	சப்தியாநின்றுள்ள
தார்	மாலையையும்
செங்கையாளன்	மிகவும் ஔதார்யத்தையுமுடையரான
கலியன்	ஆழ்வாரருளிச்செய்த
செம்சொல்மாலை	செவ்வியசொல்தொடையை
வல்லவர்	கற்கவல்லவர்கள்
தீதுஇலர்	பொல்லாங்கு இல்லாதவர் ஆவர். (௰)

வ்யா.—பத்தாம்பாட்டு. (செங்கணித்யாதி). வீரஸ்ரீயாலே சிவந்த கண்களையுடைய ஆளிகளானவை தங்களுக்கு ப்ரதிகூலமான ம்ருகங்களை யழியச்செய்து அவற்றைத் திருவடிகளிலே ஸமாராதநோபகரணமாகக்கொண்டுவந்து பொகட்டு ஆஸ்ரயியாநிற்குமாயிற்று. †ஸ்ரீ கண்டாகர்ணாழ்வான், "இது ப்ராஹ்மணவம்சம் - உத்தமம்"என்று, "இது புதிசு"என்றுணிறே. சிங்கவேழ்குன்றம் தனக்கு வாஸஸ்த்தாநமாகவுடையவன். ஸம்ஸாரிகளான நம்போல்வார்க்கும் சென்றாஸ்ரயிக்கலாம்படி யிருக்கிற உபகாரகனை. (இருந்தமிழ் நூற்புலவன்) ஒருவரால் கரைகாணவொண்ணாதபடியிருக்கிற தமிழ் சாஸ்த்ரோக்தமான படியைக்கரைகண்ட ஜ்ஞாநாதிக்யத்தையுடையவர். (மங்கையாளன்) திருமங்கைக்கு நிர்வாஹகரானவர். (மன்னு தொல்சீர்) நிலைநின்ற பாரதந்த்ர்ய ஸ்ரீயையுடையவராயிற்று. (க) "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந: - லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:" வண்டுகளானவை மதுபாநம்பண்ணி † அறையாநின்றுள்ள மாலையையுடைய ஆழ்வார். (செங்கையாளன்) † மஹோதாரன் - இப்ப்ரபந்தத்தைப்பிறர்க்கநுபாவ்யமாம்படி பண்ணித் தந்தவரிறே. (செஞ்சொல் மாலை வல்லவர்) அரிய அர்த்தத்தை உள்ளபடி காட்டவற்றான செவ்விய சொல்தொடை வல்லவர். (தீதிலரே) நரஸிம்ஹம் விரோதியைப் போக்குகையாலே அவர்களுக்குப் பொல்லாங்கு வாராதிறே...(கo)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (செங்கணாளியித்யாதி). (உ) "நவம்சவமிதம் புண்யம் வேதபாரகமச்யுத। யஜ்ஞசீலம் மஹாப்ராஜ்ஞம் ப்ராஹ்மணம் சிவமுத்தமம் - நவம்சவமிதம் புண்யம் வேதபாரகமச்யுத। யஜ்ஞசீலம் மஹாப்ராஜ்ஞம் ப்ராஹ்மணம் சிவமுத்தமம்"என்கிற வசநத்தையுட்கொண்டு உக்தார்த்தத்தை ஸமர்த்திக்கிறார், (ஸ்ரீகண்டாகர்ணாழ்வானித்யாதி). (அறையாநின்றுள்ள) - சப்தியாநின்றுள்ள. செம் - அழகான, கையை யாளுமவனென்று சப்தார்த்தம், (மஹோதாரன்) என்று. ... ... (கo)

ஜீயர் திருவடிகளே சரணம்.

முதற்பத்தில் ஏழாந்திருமொழி முடிந்தது.

(க) ரா - பா - கஅ - உகூ. (உ)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

முதற்பத்து - எட்டாந் திருமொழி - கொங்கு.

மூ.—கொங்கலர்ந்த மலர்க்குருந்த மொசித்த கோவலனெம்பிரான்
சங்குதங்கு தடங்கடல் துயில்கொண்ட தாமரைக்கண்ணினன்
பொங்குபுள்ளினை வாய்பிளந்த புராணர்தம்மிடம் பொங்குநீர்
செங்கயல் திளைக்குஞ் சுனைத் திருவேங்கட மடைநெஞ்சமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
சங்கு	சங்குகள்	புள்ளினை	பகாஸுரனுடைய
தங்கு	பொருந்தி	வாய்	வாயை
தடம்	பரந்திருந்துள்ள	பிளந்த	கிழித்துப்பொகட்டவனாய்,
கடல்	திருப்பாற்கடலில்	எம்பிரான்	எனக்குஉபகாரகனாய்,
துயில்கொண்ட	கண்வளர்ந்தருளுகிறவனாய்,	புராணர்தம்	புராணப்ரஸித்தனான ஸர்வேச்வரனுடைய,
தாமரைக்கண்ணினன்	தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடையனாய்,	இடம்	ஸ்தாநமாய்
கோவலன்	க்ருஷ்ணனாய்க்கொண்டு	பொங்குநீர்	மிக்க ஜலத்தையுடைத்தாய்
கொங்கு	பரிமளம்	செம்	சிவந்த
அலர்ந்த	வீசாநின்றுள்ள	கயல்	மத்ஸ்யங்களானவை
மலர்	புஷ்பங்கள் நிறைந்த	திளைக்கும்	களித்துவர்த்திக்கிற
குருந்தம்	(அஸுரா விஷ்டமான) குருக்கத்தியை	சுனை	சுனைகளையுடைய
		திருவேங்கடம்	திருமலையை
ஒசித்த	நிரஸித்தவனாய்,	நெஞ்சமே	மநஸ்ஸே!
பொங்கு	கிளர்ந்துவந்த	அடை	கிட்டப்பாராய்....(க)

அநு.—கொங்கலர்ந்த ப்ரவேசம்.—கீழ்த்திருமொழியிலே, (க) "நின்ற செந்தீமொண்டு சூறை நீள் விசும்பூடிரிய" என்றும், (உ) "கனைத்த தீயும் கல்லும்" என்றும், (ங) "தேய்த்த தீயால் விண்சிவக்கும்" என்றும் விரோதிகளுக்கு துஷ்ப்ரவேசமாயிருக்கும்படியை யநுஸந்தித்து, (ச) "நெஞ்சே! நாந்தொழுதும்" என்று அநுஸந்தித்தார்; இப்படி நிலவெம்மையை யநுஸந்தித்ததே ஹேதுவாக, பரமகாருணிகனான ஸர்வேச்வரன் இவரிடத்தில் தன்னுடைய படிகளைக் காட்டிக்கொடுக்கக், கண்டநுபவிக்கிறாரென்று ஸங்கதியுட்கொண்டருளிச்செய்கிறார், (விரோதியித்யாதி). (ரு) "பொங்குநீர் செங்கயல் திளைக்கும்சுனை" என்றிறே அநுஸந்திக்கிறது. குருந்தம், புள்,

(க) க - எ - ரு. (ங) க - எ . அ. (ரு) க - அ - க.
(உ) க - எ - எ. (ச) க - எ - கூ.

வ்யா.—கொங்குப்ரவேசம் †விரோதி நிரஸநசீலனாய், †ஆஶ்ரித ஸம்ஶ்லேஷஸ்வபாவனாய், †ஸர்வாந்தராத்மாவாயிருக்கிற †ஹரியானவன், வாயாலே திருநாமஞ்சொன்னானென்று ஒரு சிறுக்கனுக்குத் தமப்பன் பகையாக உதவிற்றொருவடிவைக்கொண்டுவந்து தோற்றி அவனுடைய விரோதியைப்போக்கி உபகரித்தவன், † அவனொருவனளவிலேயும் பர்யவஸிக்கையன்றிக்கே திருநாமம் சொன்னாரெல்லாருடைய ஸம்ஸாரது(டு)ரிதத்தைப்போக்குகைக்காகத் திருமலையிலே வந்து ஸந்நிஹிதனானான், நாமங்கேபோ யநுபவிப்போமென்று திருவுள்ளத்தோடே கூட்டுகிறார். † தமிழ்பாஷை நடையாடுகிறதுக்கும் எல்லையான நிலமாயிருக்குமிறே.

முதற்பாட்டு. (கொங்கலர்ந்த) பரிமளத்தை ப்ரவஹியாநிற்பதான மலரையுடைத்தான. (குருந்தமொசித்த) † அடியேபிடித்துத் தலையளவும் பூத்து தர்சநீயமாய் அஸுராவேசத்தாலே நலிவதாகத்தேடி நிற்க, "இதழகிதாயிருந்தது, முறித்துக் காரியங்கொள்ளுவோம்" என்று ஒசித்தானாயிற்று. (கோவலனெம்பிரான்)

பேய், மாமருதுகளை நிரஸித்தபடியைச் சொல்லுகையைப்பற்ற, (விரோதி நிரஸநசீலனாய்) என்றது. (க) "கோத்தங்காயர்தம்பாடியில் குரவை" இத்யாதியைப்பற்ற (ஆஶ்ரிதஸம்ஶ்லேஷஸ்வபாவனாய்) என்றது. (உ) "பாரும் நீரெரிகாற்றினோடு" இத்யாதியைப்பற்ற, (ஸர்வாந்தராத்மாவாய்) என்றது. (ங) "திண்டிறலரியாயவன்." என்றத்தைப்பற்ற, (ஹரியானவனித்யாதி). (ச) "பேசுமின்திருநாமம்" என்கிற பாட்டைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார், (அவனொருவனித்யாதி). திருமலையை அநுபவிக்கைக்கு நியாமகாந்தரம், (தமிழித்யாதி). இத்தால், - சிங்கவேழ்குன்றத்திலே தாமெழுந்தருளினால் அங்குள்ளார் வடுகராய் தாம்தமிழராகையாலே (ரு) *బోధయన్తః పరస్పరమ్ - போதயந்தஃ பரஸ்பரம் பண்ணுகைக்குச் சேரவிழாமையாலே, இத்திருமலையிலே இரண்டும் கலசியிருக்குமென்று அநுபவிக்கிறாரென்று கருத்து.

முதற்பாட்டு. (கொங்கித்யாதி). ஹிரண்யன்தான் *கொலைக்கையாளனாய் தன்னுடைய விரோதித்வந்தோற்றவிருந்தான், குருந்தம்முதலானவை ஆநுகூல்யந்தோற்றவந்து வஞ்சகங்களாயிருக்கையாலே அவனிலும் க்ரூரங்களென்று திருவுள்ளத்திலே தோற்றி அவற்றை யருளிச்செய்கிறாரென்று அவதாரிகையிட்டுக்கொள்வது.

அழித்த என்னாதே, "ஒசித்த" என்றதுக்கு வாஸநை, (அடியே பிடித்தித்யாதி). இத்தால் - மாயாம்ருகத்தை ம்ருகமென்று பிடிக்கத்தேடினாற்போலே பூத்தமரமென்றே பூவுதிராதபடி பேர்த்தானென்றதாயிற்று. குருந்

(க) க - அ - ச.
(உ) க - அ - எ.
(ங) க - அ - ரு.
(ச) க - அ - கக.
(ரு) கீதை - க௦ - கக.

மூ.—பள்ளியாவது பாற்கட லரங்க மிரங்க வன் பேய்முலை
பிள்ளையா யுயிருண்ட வெந்தை பிரானவன் பெருகுமிடம்[றும்
வெள்ளியான்கரியான் மணிநிறவண்ண னென்றெண்ணி நாடொ
தெள்ளியார் வணங்குமலைத்திருவேங்கட மடைநெஞ்சமே.()

பதம்.	உரை.	பதம்.	உரை.
வல்	வலியநெஞ்சுடைய	எந்தை	எனக்குநாதனாய்
பேய்	பூதனையுடைய[ளான	பிரான் அவன்	உபகாரகனான ஸர்வே
முலை	முலைகளானவை		ஶ்வரனானவன்
இரங்க	தானேசுரக்கும்படி	பள்ளியாவது	(கண்வளர்ந்தருளும்)
பிள்ளையாய்	சிறியகுழவிவடிவு		படுக்கையாவது
	கொண்டு [ணனை	பாற்கடல்	திருப்பாற்கடலும்
உயிர்	(அவளுடைய) ப்ரா	அரங்கம்	திருவரங்கமுமாம்;
உண்ட	அமுது செய்தருளின	பெருகும்	வளருகிற
	வனாய்	இடம்	ஸ்த்தாநமானது,

க்ருஷ்ணனாய் வந்தவதரித்துக்குருந்தைமுறித்தாற்போலே என் விரோதியைப்போக்கி எனக்கு உபகரித்தவன். † அதின் நினைவின்படி கார்யம் செய்கையன்றிக்கே என்னுடைய கார்யஞ்செய்த உபகாரகன். (சங்கித்யாதி) இவ்வவதாரத்துக்கடியாகத் திருப்பாற்கடலிலேவந்து ஸந்நிதிபண்ணினபடியைச் சொல்லுகிறது. சங்கென்றுபேர்பெற்றவையடையச் சேராநிற்பதாய், கண்வளர்ந்தருளுகைக்கீடான பரப்பையுடைத்தான திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினவன். (பொங்கித்யாதி) பெரியகிளர்த்தியோடே மிகைத்துவந்து தோற்றினபகாஸுரனை வாயைக்கிழித்து, இப்படி விரோதிகளைப்போக்குகை பழையதாகச் செய்துபோருகிறவர்வந்து வர்த்திக்கிற ஸ்த்தாநம். (பொங்கித்யாதி)†ஜலத்தினுடைய ஸம்ருத்தி கயலினுடைய களிப்புக்கீடாயிருக்குமிறே. இளமையாலே சிவந்த நிறத்தையுடைய கயல்களானவை களித்து வர்த்திக்கிற சுனைகளையுடைய திருமலையை அடைநெஞ்சே! என்கிறார் ....(க)

தொசித்ததே தமக்கு உபகாரமாக்கி அத்தால் அர்த்தாந்தர மருளிச்செய்கிறார், (அதின் நினைவித்யாதி). நீர்ப்பசையற்ற நிலமாகையாலே * ஓய்ந்த மாவாயிருந்தது, அதுக்கு ப்ரதிசீர்ஷமான நிலமென்று தோற்ற, "பொங்கு நீர்" என்கிறாரென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (ஜலத்தினித்யாதி). "சங்கு தங்குதடங்கடல் துயில்கொண்ட தாமரைக்கண்ணினன்" என்றத்தை முந்துற அநுஸந்தித்து, பாட்டு அநுஸந்திக்கை அந்வயம். ஆக, இப்பாட்டால்-திருமலை சென்றுகிட்டலாம் தேசமாகையாலே விரோதிகளநுகூலவேஷத்தாலே வந்தாலும் திருவேங்கடமுடையான் அவர்களை நிரஸிப்பனென்று சொல்லிற்றாயிற்று. ... ... (க)

தெள்ளியார்	அநந்யப்ரயோஜநர்	என்று எண்ணி	என்று (பலகாலும் இவ்வடிவுகளை) அநுஸந்தித்து
வெள்ளியான்	(க்ருதயுகத்தில்) வெளுத்தநிறத்தையுடையவன்	நாடொறும்	நாள்தோறும்
கரியான்	(கலியுகத்தில்)கறுத்த நிறத்தையுடையவன்	வணங்கும்	ஆஸ்ரயிக்கிற
மணிநிறவண்ணன்	(த்வாபரயுகத்தில்)நீலமணிபோன்றநிறத்தையுடையவன்	மலை	மலையான
		திருவேங்கடம்	திருமலையாம்;(அதை) நெஞ்சமே! அடை. (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (பள்ளியாவது பாற்கடலரங்கம்) ப்ரஹ்மாதிகளுக்காஸ்ரயணீயனாய்க்கொண்டுகண்வளர்ந்தருளுகிறது, திருப்பாற்கடல் படுக்கை; அவ்வளவும் சென்று கிட்டமாட்டாத ஸம்ஸாரிகளுக்காகக் கோயில். (இரங்கவித்யாதி) முலையை ஸ்பர்சித்தவளவிலே நெகிழ்ந்து முலை சுரக்கும்படியாகவென்னுதல்; அன்றிக்கே; அவள் கதறவென்னுதல். வன்மையையுடைத்தான நெஞ்சையுடைய பூதனையுடைய முலையைப் பிள்ளையாயே யுண்டானாயிற்று. † மௌக்த்யத்தாலே உயிருக்கும் முலைக்கும் வாசியறியாதே அமுது செய்தானாயிற்று. (எந்தை பிரானவன் பெருகுமிடம்) எனக்குக் குலநாதனான உபகாரகன் வர்த்தி(த்)க்கிறதேசம், பெருகுகை - வளருகை. அத்தால் - †வர்த்தி(த்)க்கையைச் சொன்னபடி. (வெள்ளியாணித்யாதி) கொண்ட கொண்ட வடிவெல்லா மிவர்க்கு உத்தேஸ்யமாயிருக்கிறதாயிற்று அவன் கொண்ட வடிவாகையாலே. க்ருதயுகத்தில் வெளுத்த நிறத்தையுடையனாய், கலியுகத்தில் கறுத்த நிறத்தையுடையனாய், த்வாபரயுகத்தில் வந்தவாறே ஸ்யாமமான நிறத்தையுடையனாயிருக்குமென்று இவ்வடிவுகளை யநுஸந்தித்து, தெள்ளியாருண்டு - † அநந்யப்ரயோஜநரானவர்

அநு.—இரண்டாம்பாட்டு. (பள்ளியித்யாதி). கீழ்ப்பாட்டில் க்ஷீராப்திசாயித்வம் பின்னாட்டி ஸ்ரீரங்கசாயித்வத்தையும் யசோதை தொட்டிற்கிடையையும் ஸ்மரிப்பிக்க அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

பிள்ளையாயுயிருண்ணக்கூடுமோ வென்ன; அருளிச்செய்கிறார், (மௌக்த்யத்தாலே யித்யாதி). (வர்த்திக்கையைச் சொன்னபடி) என்றதுக்கு- தொட்டிற்பிள்ளை பேயுயிருண்டபின்பு நிற்கக்கற்றது திருமலையிலே என்று கருத்து. (அநந்ய ப்ரயோஜநரானவர்கள்) என்றது - (க) "பாலினீர்மை செம்பொனீர்மை" இத்யாதியாலே அநுபவிக்கையே ப்ரயோஜநமாயிருந்த

(க) தி - ச - வி - சச.

மூ.—நின்றமாமருதிற்று வீழ நடந்த நின்மலன் நேமியான்
என்றும் வானவர் கைதொழுமிணைத் தாமரையடி யெம்பிரான்
கன்றிமாரிபொழிந்திடக் கடிதாநிரைக்கிடர் நீக்குவான்
சென்று குன்றமெடுத்தவன் திருவேங்கடமடைநெஞ்சமே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நின்ற	(அஸுராவேசத்தாலே)பேராதேநின்ற	எம்பிரான்	உபகாரகனாய்,
மாமருது	பெரியமருதமரம்	கன்றி	(இந்த்ரன்)கோபித்து
இற்றுவீழ	முறிந்துவிழும்படி	மாரி	மஹாவர்ஷத்தை
நடந்த	நடுவேபோன	பொழிந்திட	வர்ஷிப்பிக்க
நின்மலன்	நிர்மலமானமநஸ்ஸை யுடையனாய்,	ஆ	பசுக்களுடைய
நேமியான்	திருவாழியை(த்திருக் கையிலே) யுடைய[னாய்,	நிரைக்கு	திரள்களுக்குண்டான
வானவர்	நித்யஸூரிகள்	இடர்	துக்கத்தை
என்றும்	எப்போதும்	நீக்குவான்	போக்கி ரக்ஷிக்கைக்[காக
கைதொழும்	ஸேவித்துக்கொண்டிருப்பதாய்	கடிது	சடக்கென
தாமரை	தாமரைமலர்போன்ற	சென்று	போய்
இணையடி	இரண்டு திருவடிகளை யுடைய	குன்றம்	கோவர்த்தநமலையை
		எடுத்தவன்	குடையாகத்தரித்த ஸர்வேஶ்வரன் எழுந்தருளியிருக்கிற
		திருவேங்கடம் நெஞ்சமே! அடை. (உ)	

கள், நாடோறும் வணங்குவர்களாயிற்று நித்ய ஸூரிகளைப்போலே நித்யாநுபவம் பண்ணும் †மலையான. ... ... (உ)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (நின்ற) † அஸுராவேசத்தாலே பேராதே நின்ற, மாமருதுண்டு - பெரியமருது; † அவ்வருகே விழுந்த விது †இவ்வருகேயாயிற்றதாகில் செய்வதென்! என்று பயப்படவேண்டும்படியாயிருக்கிறதாயிற்று. அது முறிந்து விழும்படியாக.

திருமழிசைப்பிரான்போல்வார்களென்கை. (மலையான) என்றவநந்தரம், திருவேங்கடமித்யாதியைப் பூரிப்பது என்று திருவுள்ளம். ... ... (உ)

அரு.—மூன்றாம்பாட்டு. (நின்ற மாமருதித்யாதி). "பெருகுமிடம்" என்றத்தாலே - நிற்கக்கற்றவன் என்று தோற்றினவளவன்றிக்கே நடைகற்றுச்செய்தவற்றை யநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

மருதானபோதே நின்றிராதோ, "நின்ற" என்பானென்னென்ன; அருளிச்செய்கிறார், (அஸுரேத்யாதி). (நின்றமாமரம்) என்றும் பாடமுண்டென்று சொல்லுவர்கள். "மா" என்றதுக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார், (அவ்வருகேயித்யாதி). (இவ்வருகே) என்கையாலே, தாமும் க்ருஷ்ணனுமொரு ப்ரதேசத்திலே யிருந்தமை தோற்றுகிறது. "நின்மலன்" என்ற

ரு.—பார்த்தற்காயன்று பாரதம் கைசெய்திட்டு வென்ற பரஞ்சுடர்
கோத்தங் காயர்தம்பாடியில் குரவைபிணைந்த வெங்கோவலன்
ஏத்துவார்தம் மனத்துள்ளான் இடவெந்தைமேவிய வெம்பிரா
தீர்த்தநீர்த் தடஞ்சோலைசூழ் திருவேங்கடமடைநெஞ்சமே.[ன்

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	த்வாபராந்தத்தில்	கோத்துப்பிணைந்த	கைகோத்து ஆடினவனாய்,
பாரதம்	பாரதயுத்தத்திலே	ஏத்துவார்தம்	வாழ்த்துமவர்களது
பார்த்தற்காய்	அர்ஜுநனுக்காக	மனத்து	மநஸ்ஸில்
கைசெய்திட்டு	கையுமணியும்வகுத்து	உள்ளான்	விடாதே யிருக்குமவனாய்,
வென்ற	(துர்யோதநாதிகளை) ஜயித்து (அத்தாலே)	இடவெந்தை	திருவிடவெந்தையில்
		மேவிய	பொருந்தியிருக்கிற
பரஞ்சுடர்	மிக்க ஒளியையுடையனாய்,	எம்பிரான்	ஸ்வாமியுடையதாய்
		தீர்த்தம்	பாவநமான
ஆயர்தம்பாடியில்	திருவாய்ப்பாடியிலே	நீர்	ஜலத்தையுடைய
எங்கோவலன்	கோபகுலத்திலவதரித்து	தடம்	தடாகங்களாலும்
		சோலை	பொழில்களாலும்
அங்கு	அக்கோகுலத்தில்	சூழ்	சூழப்பட்டிருக்கிற
குரவை	குரவைக்கூத்தில்	திருவேங்கடமடைநெஞ்சமே! (ச)	

†நெஞ்சில்†நினைவின்றிக்கே அது முறியும்படிநடந்த சுத்தியையுடையவன். (நேமியான்) தான் கைதொட்டு வ்யாபரிக்கவேண்டா, தன்னையொழிய விரோதியைப் போக்குகைக்கீடான பரிகரமுண்டாயிருக்கச்செய்தே கிடீர் தான்வந்தகப்பட்டது. (என்றுமித்யாதி) நித்யஸூரிகள் ஒருநாடாகப் பரியவிருக்குமவன்கிடீர் தனியே புகுந்தகப்பட்டான். (கன்றியித்யாதி) பெரிய சீற்றத்தையுடையனாய்க்கொண்டு இந்த்ரனானவன் மேகங்களையேவ அவையும் அவன் கருத்தை யநுவர்த்தித்து மாரிபொழிந்திட. (ஆநிரைக்கிடர் நீக்குவான் கடிதுசென்று குன்றமெடுத்தவன்) ஸ்வரக்ஷணத்துக்குப் பரிகரமில்லாதவற்றின்மேலே ஒருதுளி விழுவதற்கு முன்பே அவற்றுக்கிடர் வாராதபடியாகக் கடுநடையிட்டுச்சென்று கோவர்த்தநத்தையெடுத்தவன். (திருவேங்கடமடைநெஞ்சமே) †ஒருமலையை யெடுத்துப் பரிஹரித்தவன் ஒருமலையிலே நின்று ரக்ஷிக்கப்பார்த்தான், அவனை யாச்ரயிக்கப் பார் நெஞ்சே யென்கிறார். ... ... (ரு)

பதவாஸனை, (நெஞ்சிலித்யாதி). (நினைவு) அஸாராவிஷ்டமென்கிற நினைவு. அன்று சென்று குன்றொன்றையேந்தினதும்,இன்று குன்றில் நின்றதும் என்றும் ஆச்ரிதர்க்காகவென் றருளிச்செய்கிறார்,(ஒருமலையையித்யாதி). ஒருமலை ஆதேயமாய், ரக்ஷணோபகரணமாய், திருமலை ஆதாரமாய் ரக்ஷணோபகரணமாயிற்று; என்றும் திருமலைபோலே காணும் ரக்ஷித்ததென்று திருவுள்ளம்.()

வ்யா.—நாலாம்பாட்டு. (பார்த்தற்காய்) பார்த்தனுக்காக. (அன்று பாரதம் கைசெய்திட்டு) பாரதஸமரத்திலே கையுமணியுமாக வகுத்துப்படைபொருத்தி. (வென்ற பரஞ்சுடர்) தோல்வி துர்யோதநாதிகள் தலையிலேயாய் வெற்றி †தன் தலையிலேயாம்படியாக வாயிற்று அவர்கள் விஷயத்தில் பண்ணின †ஓரம். (பரஞ்சுடர்) தர்மபுத்ரன்றலையிலே யபிஷேகத்தைவைத்து த்ரௌபதி குழல் முடித்தபின்பு திருமேனியில் பிறந்த ஔஜ்வல்யம். (க)†"ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் க்ருதக்ருத்ய:-ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் க்ருதக்ருத்ய:". (கோத்தித்யாதி) திருவாய்ப்பாடியிலே அங்கே குரவைக்கூத்திலே தன்னையுமொருவனாக இடையிலே தொடுத்து. (குரவை பிணைந்த வெங்கோவலன்) †குரவைக்கூத்தை மன்றிலேயாடி ஆஸ்ரிதர்க்கத்தைப் †பின்னிக்கொடுத்தவன். (ஏத்துவார்தம்மனத்துள்ளான்) குரவைக்கூத்தை யநுஸந்தித்து அதிலே ஈடுபட்டு ஏத்துமவர்களுடைய ஹ்ருதயத்தை விடாதே வர்த்திக்குமவன். (இடவெந்தை) பெரிய பிராட்டியார்க்காகத் திருவிடவெந்தையிலேவந்து ஸந்நிஹிதனானாற் போலேயாயிற்று ஏத்துமவர்கள் நெஞ்சுவிட்டுப் போகமாட்டாதபடி.(தீர்த்தநீரித்யாதி)†எல்லா ஸம்ருத்தியையும் பண்ணிக்கொடுக்க வற்றான ஜலஸம்ருத்தியையுடைத்தாய் ஶ்ரமஹரமாயிருந்துள்ள சோலையாலே சூழப்பட்ட. ... ... (ச)

அரு.—நாலாம்பாட்டு. (பார்த்தற்கித்யாதி) ஒருவ்ருக்ஷத்தையும் ஒரு பக்ஷியையும் பேயையும் மருதையும் வென்றவளவேயோ, அதிரத மஹாரதரான பீஷ்ம த்ரோணாதிகளை யெல்லாம் திரட்டிக்கொண்டு கிடந்த துர்வர்க்கத்தையும் வென்றான், அப்படிப்பட்டவன், அபலைகள் கைகளிலே யகப்பட்டுக்கூத்தாடுகிறானென்று அவனுடைய வீரஶ்ருங்காரரஸத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

(தன்தலையிலே) என்றது - தானென்கிற சொல்லுக்குள்ளேயான தர்மபுத்ராதிகள் விஷயத்திலே என்றபடி. (ஓரம்)பக்ஷபாதம். கீழ்ச்சொன்ன அர்த்தத்துக்கு த்ருஷ்டாந்தம், (ராக்ஷஸேந்த்ரமித்யாதி). "அபிஷிச்யச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் । க்ருதக்ருத்யஸ்ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோதஹ -அபிஷிச்யச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் | க்ருத க்ருத்யஸ்ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோதஹ." "எம்" என்றதுக்குத் தாத்பர்யம், (குரவையித்யாதி). (பின்னி) - பூர்ணமாகவென்றபடி. "தீர்த்தம்" என்ற பதம் பாவநத்வத்தைச் சொல்லுகையாலே அது உபலக்ஷணமாய், த்ருஷ்டாத்ருஷ்டஸகல பலப்ரதத்வத்தையும் சொல்லுகிறதென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (எல்லாவித்யாதி). ... ... (ச)

(க) ரா - பா - க - அகு.

மூ.—வண்கையானவுணர்க்குநாயகன்வேள்வியிற்சென்றுமாணியாய்
மண் கையா லிரந்தான் மராமர மேழு மெய்த வலத்தினான்
எண்கையானிமயத்துள்ளானிருஞ்சோலைமேவியவெம்பிரான்
திண்கைமா துயர்தீர்த்தவன் திருவேங்கடமடைநெஞ்சமே.(ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வண்கையான்	உதாரமானகையை யுடையனாய்	இமயத்து உள்ளான்	ஹிமவானில் (திருப்பிரிதியில்) எழுந்தருளியிருக்குமவனாய்,
அவுணர்க்கு	அஸுரர்களுக்கு		
நாயகன்	தலைவனான மஹாபலியினுடைய	இருஞ்சோலை	தெற்குத் திருமலையான திருமாலிருஞ்சோலையிலே [கிற
வேள்வியில்	யாகசாலையிலே		
மாணியாய்	ப்ரஹ்மசாரியாய்	மேவிய	நித்யவாஸம்பண்ணு
சென்று	போய்	எம்பிரான்	ஸர்வஸ்வாமியாய், (முதலையின் கையிலேயகப்பட்ட)
மண்	பூமியை		
கையால்	தன்கையாலே		
இரந்தான்	யாசித்தவனாய்,	திண்	பலிஷ்டமான
மராமரம்எழும்	ஏழுஸாலவ்ருக்ஷங்களையும்	கை	துதிக்கையையுடைய
		மா	ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய
எய்த	(ராமாவதாரத்தில்) ஒருபடிப்படப்போக்கின [ய்	துயர்	துக்கத்தை
		தீர்த்தவன்	போக்கின ஸர்வேஶ்வரன் ஸந்நிதிபண்ணியிருக்கிற
வலத்தினன்	மிடுக்கை யுடையனா		
எண்கையான்	அநேகம்திருக்கைகளையுடையனாய்	திருவேங்கடம்	அடைநெஞ்சமே! ()

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (வண்கையானித்யாதி) † உதாரனாயிருந்தானாயிற்று. ஆஸுரப்ரக்ருதிகளுக்குத் தலைவனாயிருந்தானேயாகிலும், ஔதார்யமென்றொருகுணம் கிடக்கையாலே அம்பாலேயழிக்கலாயிருந்ததில்லை. இவன்றான் கொடுக்க உகந்திருந்தான்; அவன் உகந்தவழியே வாங்குவோமென்று தன்னையிரப்பாளனாக்கி

அரு.—அஞ்சாம்பாட்டு. (வண்கையானித்யாதி). கீழே ஆஶ்ரிதர்க்காக தௌத்யஸாரத்யங்களைப் பண்ணினபடியாலே கையாளாக்கினபடி சொல்லிற்று; அவ்வளவன்றிக்கே, ஆஶ்ரிதர்க்காகத் தன்னை யிரப்பாளனாக்கியும், மழுவேந்திக்கொடுத்தும், பலவிடங்களிலேயும் அவஸரப்ரதீக்ஷனாய் அனைகுலையத் தலை குலைய வந்துதவினபடியை யநுபவிக்கிறாரென்று ஸங்கதிகண்டு கொள்வது.

மஹாபலிவண்கையானாயிருந்தது ஶ்ரிய:பதி மாணியாகைக்கு ஹேதுவென்னுமிடம் தோற்றவருளிச்செய்கிறார், (உதாரனாயித்யாதி).

வாங்கினனாயிற்று. (மாணியாய் மண் கையாலிரந்தான்) அவனு டைய யஜ்ஞவாடத்திலே இரப்பிலே தகணேறினவடிவைக்கொண்டு சென்று, தன்கையிலே †பருத்திபட்ட பன்னிரண்டும் பட்டபூமியை யிரந்தானாயிற்று. (மராமரம்) ஆஶ்ரிதரை விஶ்வஸிப்பித்தும் கார் யம் செய்து கொடுக்குமவன். (வலத்தினன்) மிடுக்கையுடையவன். (எண்கையான்) ஆஶ்ரிதவிரோதி நிரஸநத்துக்குறுப்பான திவ்யாயு தங்களைத் தரிக்கைக்கும் †பலதிருக்கைகளையுடையவனென்னுதல். அன்றிக்கே, திருவட்டபுயகரத்தைச் சொல்லிற்றாகவுமாம். (இமயத்துள்ளான்) ஹிமவானில் திருப்பிரிதியிலேவந்து ஸந்நிஹிதனானவன். (இருஞ்சோலையித்யாதி) ம்லேச்சபூமியான தெற்கில் திருமலையிலேவந்து ஸந்நிஹிதனானவன். (திண்கைமாதுயர் தீர்த்தவன்) ஸ்ரீகஜேந்த்ராழ்வான் முதலையாலே யீடுபட்டு ப்ரதிக்ரியை பண்ண மாட்டாத வளவிலே வந்து அவனுடைய துஃகத்தைப்போக்கி ரக்ஷித்தவன். (திண்கை) தன்னையொழிந்தவற்றையடைய இடர்படுத்துமவன்று னிடர்பட அத்தைப் பரிஹரித்தானென்கை. (திருவேங்கடம்) †ஸ்ரீகஜேந்த்ராழ்வான் வ்யாபாரம் ஓவுந்தனையும் பார்த்திருந்து,

(பருத்திபட்டபன்னிரண்டுபடுகை) யாவது-கொட்டைவாங்கிப், பன்னிச், சுருட்டி, நூலாக்கியும், பாவோடி, நெய்து, மடித்து, விற்றுப்பொகடும் படியும், தோய்த்து, உலர்த்தி, உடுத்துக், கிழித்துவிடும்படியும், சேதநர்க்கு வஶ்யமாகை. தார்ஷ்டாந்திகத்தில் - ஈஶ்வரன் தன்னில் விபக்தமாக்கி, பஞ்சீக்ருதமாக்கி, அண்டமாக்கி, தேவாதி சரீரங்களாக்கி, லோகவ்யவஸ்த்திதியுண்டாக்கி, அவாந்தரஸ்ருஷ்டியைப்பண்ணி, ரக்ஷித்து, ப்ரஹ்மாதிகளுக்காக்கி, ப்ரளயத்திலே யெடுத்து எயிற்றிலேவைத்து, வயிற்றிலேவைத்து, உமிழ்ந்து, பின்பு ஸம்ஹ்ருதமாக்கியும் செய்தபடிகளை யெண்ணிக் கண்டுகொள்வது. ஆக, இத்தால் - கேவலம் ஸ்வாதீநமானதென்றதாயிற்று. (க)“ త్వం నిర్మితా జఠరగా చ తవ త్రిలోకీ కిం భిక్షణాదియమృతే భవతా దురాపా । మధ్యే తథా తు న విచక్రమిషే జగచ్చేత్ త్వద్విక్రమైః కథమివ శ్రుతిరఞ్జితా స్యాత్ ॥ த்வம் நிர்மிதா ஜடரகாச தவ த்ரிலோகீ கிம் பிக்ஷணாதியம்ருதே பவதாதுராபா । மத்யே ததாதுநவிசக்ரமிஷே ஜகச்சேத் த்வத்விக்ரமைஃ கதமிவ ஶ்ருதிரஞ்சிதாஸ்யாத்” என்கிறதநுஸந்தேயம். (பலதிருக்கைகளையுடையவன்) என்றது - எண்கையான்” எண்ணப்பட்டகையானென்கிற சப்தார்த்தத்தைப் பற்ற. இத்தால் - (உ) “தோள்களாயிரத்தாய்” என்றத்தை நினைக்கிறது. “மா” என்று ஆனையாய், இப்போது இந்த அபதாநத்தையருளிச்செய்ததின் கருத்தைக் காட்டுகிறார், (ஸ்ரீகஜேந்த்ரோத்யாதி). ... ... (ரு)

(க) அதிமாநு - ஸ்த - கரு. (உ) தி - வாய் - அ - க - கo.

மூ—எண்டிசைகளு மேழுலகமும்வாங்கிப் பொன்வயிற்றிற்பெய்து
பண்டோராலிலைப்பள் ளிகொண்டவன்பான்மதிக்கிடர்தீர்த்தவ
ஒண்டிறலவுணனுரத்துகிர்வைத்தவன்ஒள்ளெயிற்றொடு [ன்
திண்டிறலரியாயவன்திருவேங்கடமடைநெஞ்சமே! (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எண்திசைகளும்	எட்டுத் திக்குக்களையும்	தீர்த்தவன்	போக்கினவனாய், [ய
ஏழுஉலகமும்	ஏழுலோகங்களையும்	ஒண்திறல்	மிக்கமிடுக்கை யுடை
பண்டு	மஹாப்ரளயத்தில்	அவுணன்	அஸுரனான ஹிரண்யனுடைய
வாங்கி	அமுதுசெய்து	உரத்து	மார்பிலே
பொன்	ஸ்லாக்யமான	உகிர்வைத்தவன்	திருவுகிரை வைத்துக் கிழித்தவனாய்,
வயிற்றில்	(தன்) திருவயிற்றிலே	ஒள்	ஒளிதங்கின
பெய்து	வைத்து	எயிற்றொடு	பற்களுடன்
ஓராலிலை	ஓராலந்தளிரிலே	திண்	சலியாத
பள்ளிகொண்டவன்	கண்வளர்ந்தருளினவனாய்,	திறல்	மிடுக்கையுடைய
பால்	பால்போன்ற (ப்ரகாசகனான)	அரியாயவன்	நரஸிம்ஹரூபியானவன்நித்யவாஸம்பண்ணுகிற
மதிக்கு	சந்த்ரனுக்குவந்த		
இடர்	க்ஷயத்தை	திருவேங்கடமடைநெஞ்சமே! (சு)	

பிற்பாடனனகுறைதீர ஆஶ்ரிதர்க்கு முற்பாடனாயுதவுகைக்காக வந்திருக்கிற தேசமாயிற்று. ... ... (ரு)

வ்யா.—ஆறாம்பாட்டு. (எண்டிசையித்யாதி) எட்டுத்திக்குக்களோடே கூடியிருந்துள்ள லோகங்களேழையும் வாங்கி ஸ்லாக்யமான திருவயிற்றிலேவைத்துப், பண்டு பவனாயிருப்பதொரு ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளின அகடிதகடநா ஸாமர்த்யத்தையுடையவன். (பால்மதிக்கிடர் தீர்த்தவன்) பால்மதியுண்டு - சந்த்ரன், அவனுக்கு தர்மிலோப பர்யந்தமாக ஓரிடர்வர, அது அவ்வளவாகாதபடி பரிஹரித்து அவனிடரைப் போக்கினவன். (ஒண்டிறலித்யாதி) மிக்கமிடுக்கை யுடையனாயிருந்துள்ள ஹிரண்யனுடைய வுரஸ்ஸிலே திருவுகிரைவைத்தவன்; அதுக்குறுப்பாக அழகிய திருவெ

அரு.—ஆறாம்பாட்டு- (எண்டிசைகளுமித்யாதி). மாணியாயிரந்துகொண்டத்தை யொரு சிறுபிள்ளையாயுண்டசமர்த்தும், மதிகெட்டுப்போகாதபடி நோக்கின சமர்த்தும், அரைகுலையத் தலைகுலைய வரவேண்டாதே * ஸமஸமய ஸமுத்பவம் திருவுள்ளத்திலேதோற்றியருளிச்செய்கிறாரென்று அவதாரிகையிட்டுக்கொள்வது.

மூ—பாரு நீ ரெரி காற்றினோ டாகாயமு மிவை யாயினான்
பேருமாயிரம் பேசநின்ற பிறப்பிலி பெருகுமிடம்
காரும் வார்பனி நீள் விசும்பிடைச் சோருமாமுகில் தோய்தர
சேருவார்பொழில்சூழெழில்திருவேங்கடமடைநெஞ்சமே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பாரும்	பூமியும்	பெருகும்	வளருகிற
நீர்	ஜலமும்	இடம்	ஸ்த்தாநமான து,
எரி	அக்நியும்	காரும்	மேகங்களும்
காற்றினோடு	வாயுவோடு	வார்பனி	மிக்கபனியும்
ஆகாயமும்	ஆகாசமும்	நீள்விசும்புஇடை	பெரியஆகாசத்தின்இடையிலே [தாய்
இவை	ஆகியபூதபஞ்சகமும்	சோரும்	சொரியும்படியிருப்ப
ஆயினான்	தானேயாயிருக்குமவனாய்,	மாமுகில்	பெரியமேகங்கள்
ஆயிரம்பேரும்	ஆயிரம் திருநாமங்களையும் [ம்படி	தோய்தர	படியும்படி
பேச	சொல்லியாஸ்ரயிக்கு	சேரு	தகுதியாக
நின்ற	நித்யவாஸம்பண்ணுமவனாய்,	வார்	நீண்ட
பிறப்பிலி	ஜந்மரஹிதனானஸர்வேஸ்வரன்	பொழில்	சோலையாலே
		சூழ்	சூழப்பட்டு
		எழில்	அழகையுடைத்தான
		திருவேங்கடமடைநெஞ்சமே ! (எ)	

யிற்றோடே கூட சலியாத மிடுக்கையுடைய நரஸிம்ஹமானவன். †திருமந்த்ரஞ்சொன்ன சிறுக்கனுக்கு உதவினவன், திருநாமம் சொன்னாரெல்லாருடையவும் ஸம்ஸாரதுரிதத்தைப் போக்குகைக்காக வர்த்திக்கிற திருமலையை யடையப்பாராய். ... (சு)

"பேசுமின்திருநாமம்" இத்யாதி பாட்டையுட்கொண்டு சிங்கவேழ்குன்றத்திலரியானவனோடொரு ஸாதர்ம்யத்தை வெளியிடாநின்றுகொண்டு, அரி என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (திருமந்த்ரமித்யாதி). "ஹரதீதி ஹரி:" என்கிற யோகார்த்தத்திலே நோக்கு. இத்தால், சிங்கவேழ்குன்றத்தில் ரூட்யாஹரிபதவாச்யன், யோகசக்த்யா திருவேங்கடத்திலே வாச்யனுயிருக்கிறானென்று ஸங்கதி ஸூசிதமாயிற்று. ... ... (சு)

அரு.—ஏழாம்பாட்டு. (பாரு நீரித்யாதி). கீழ்ப்பாட்டில், (க) * எங்குமுளன் கண்ணனென்றமகனைக்காய்ந்த ஹிரண்யநிரஸநார்த்தமாகத்தத்ஸமகாலத்திலே தோற்றின ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம் ப்ரஸ்துதமாகையாலே ஸ்ம்ருதமான ஜகதாகாரதையை அநுஸந்தித்து, திருநாமஞ்சொல்ல ஸஹியாத ஹிரண்யனைக்கொன்றவன் நின்றவிடமாகையாலே திருநாமங்கள் சொல்லலாம்படியுமிருக்கிறானென்றநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

(க) தி - வாய் - ௨ - அ - கூ.

வ்யா. — ஏழாம்பாட்டு. (பாரித்யாதி) பூதபஞ்சகத்தையும் சொல்லுகையாலே - ஜகதாகாரனாய் நிற்கும்படியைச்சொல்லிற்று. தான் கொடுத்த உடம்பைக்கொண்டு தன்னுடைய திருநாமத்தைச் சொல்லி ஆஶ்ரயிக்கலாம்படி நிற்கிறவன். (பிறப்பிலிபெருகுமிடம்) †அகர்மவஶ்யனாய் இதரவிஸஜாதீயனாய் ஜகத்தின்படியன்றிக்கேயிருக்கிறவன் வர்த்திக்கிறவிடம். (காரித்யாதி) †மேகங்களும், மிக்கபனியும் பெரிய ஆகாசத்தினிடையிலே சொரிவதாய், பெரிய மேகங்கள் †படியும்படி †நீண்டசோலை சூழப்பட்ட திருவேங்கடம்; †பெருகின மிக்கஜலத்தையுடைத்தாய், ஆகாசத்திலே வர்ஷிக்கிற மேகங்களானவை. (சேரும்) என்று பாடமானபோது, சேருகிற - ஸ்பர்சிக்கும்படி சேருகிற - கிட்டுகிற, பரந்த பொழிலாலே சூழப்பட்டு எழிலையுடைத்தான திருமலையை. காரும் - பெருகுகை. வார் - மிகுகை. ()

(க) "பிறந்தவாறும் வளர்ந்தவாறும்" என்று பிறப்புச் சொல்லியிருக்க "பிறப்பிலி" என்னக்கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார், (அகர்மேத்யாதி). "நீள் விசும்பிடை, காரும் - மேகமும், வார்பனியும் சோருமதாய், மாமுகில் தோய்தரும்படி சேருவார் பொழிலாலே சூழப்பட்டதுமாய், எழிலையுடைத்தான திருவேங்கடம்" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி ஒரு யோஜனையருளிச்செய்கிறார், (மேகங்களுமித்யாதி). பெரியவாகாசத்தினிடையிலேயிருக்கிற மேகங்களும் மிக்கபனியும் சோருவதாய் என்று வாக்யத்தை அந்வயித்துக்கொண்டு, திருவேங்கடத்துக்கு விசேஷணமாக்கிக்கொள்வது. இங்ஙனன்றாகில், மேகங்கள் சோருவதான பெரியமேகங்களென்னவொண்ணாதிறே. சோருவதாய் - சொரியும்படியிருப்பதாய். "தோய்தர" என்றதினர்த்தம், (படியும்படி) என்றது. (நீண்ட) என்றது-"சேருவார்" என்றதினர்த்தம். "சேருவார்" தகுதியாக நீண்டவென்றபடி. அன்றிக்கே, "காரும் வார்பனி" என்று ஸமஸ்தபதமாய், காராநிற்கிற - பெருகாநிற்கிற, வார்பனியானது மிக்க ஜலமானது, நீள் விசும்பிடைச் சொரியும்படி யிருப்பதான மாமுகிலானவை, தோய்தர - ஸ்பர்சிக்கைக்கு. சேரு - அநுரூபமான, வார்-நீண்ட, பொழில் சூழெழில் திருவேங்கடமென்று க்ரமேண ஒரு யோஜனையை விவக்ஷித்துத் தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார், (பெருகினவித்யாதி). "சேருமாமுகில்" என்றபாடாந்தரத்திலே, நீள்விசும்பிடைச் சேராநிற்கிற - நடந்துவாராநிற்கிற, மாமுகிலென்று சப்தார்த்தம். இப்போது, காராநிற்கிற வார்பனியையுடைத்தாயென்று விசேஷணமாக்கிக்கொள்வது. ... (எ)

(க) தி - வாய் - டு - ௪0 - க.

ஃ —அம்பர மனல் கால் நிலம் சலமாகி நின்ற வமரர்கோன்
வம்புலா மலர்மேல்மலி மடமங்கைதன் கொழுனனவன்
கொம்பினன்ன விடை மடக் குறமாதர் நீளிதணந்தொறும்
செம்புனமவை காவல்கொள் திருவேங்கடமடைநெஞ்சமே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
அம்பரம்	ஆகாசம்	மங்கைதன்	பெரியபிராட்டிக்கு
அனல்	அக்நி	கொழுனனவ	நாயகனுன ஸர்வேஸ்
கால்	காற்று	ன்	வரன் நித்யவாஸம்
நிலம்	பூமி [ங்களும்		பண்ணுமிடமாய்
சலம்	ஜலம் ஆகிய பஞ்சபூத	கொம்புஅன்ன	வஞ்சிக்கொம்புபோ
ஆகின்ற	தானேயாயிருக்குமவ	இடை	இடுப்பையும் [ன்ற
	னுய்,	மடம்	மடப்பத்தையுமுடை
அமரர்	நித்யஸூரிகளுக்கு	குறமாதர்	குறப்பெண்கள் [ய
கோன்	தலைவனுய்,	நீள்	உயர்ந்த
வம்பு	பரிமளம்	இதணம்தொறு	பரண்கள்தோறும் (இ
உலாம்	வீசுகிற [லே	ம்	ருந்து)
மலர்மேல்	தாமரைமலரின்மே	செம்	சிவந்த
மலி	பொருந்தியிருக்குமவ	புனமவை	கொல்லைநிலங்களை
	ளாய்	காவல்கொள்	காத்துக்கொண்டிருப்
மடம்	மடமென்னும் குணம்		பதான
	நிறைந்த	திருவேங்கடம் அடைநெஞ்சமே! (அ)	

வ்யா.—எட்டாம்பாட்டு. (அம்பரமித்யாதி) ஜகதாகாரனுய் நிற்கும்படியைச் சொல்லுகிறது. (அமரர்கோன்) இத்தால் - அஸாதாரணமான திவ்யவிக்ரஹயுக்தனுய், * அயர்வறு மமரர்களதிபதியாயிருக்கும்படியைச்சொல்லுகிறது. (வம்புலா) †நித்யஸூரிகள் ஓலக்கங்கொடுக்கப் பிராட்டியும் தானுமாய் பரமபதத்திலே யிருக்குமிருப்பைச்சொல்லுகிறது. † செவ்விமாருத மலரை வாஸஸ்த்தாநமாக

அநு.—எட்டாம்பாட்டு. (அம்பரமித்யாதி). கீழ்ப்பாட்டில் ப்ரஸ்துதமான ஜகதாகாரத்வமாத்ரமன்றிக்கே உபயவிபூதியோகத்தையு மநுஸந்தித்துக்கொண்டு, "(க) [illegible]-ஸ்ரியாஸார்த்தம்ஜகத்பதி:" என்கிறபடியே அங்கிருக்குமிருப்பை யநுபவிக்கிருரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"அமரர்கோன்" என்ற பதச்சேர்த்தியால் பலித்த அர்த்தத்தையருளிச்செய்கிருர், (நித்யேத்யாதி). வம்புலா - பரிமளமுலாவாநின்றுள்ள, மலர்மேல் மலி - ஸம்ருத்தையாயிருந்துள்ள, மடமங்கை - பவ்யதையையுடைய பிராட்டியென்று சப்தார்த்தமாய், வாக்யத்துக்குப் பலிதார்த்தமருளிச்செய்கிருர், (செவ்வியித்யாதி). வம்பு - புதுமையாய், அத்தாலே - செவ்வியென்றதென்

(க) பாஞ்சரா.

மூ.—பேசுமின் திருநாமமெட் டெழுத்தும்சொல்லிநின்றுபின்னரும்
பேசுவார்தம்மை யுய்யவாங்கிப் பிறப்பறுக்கும் பிரானிடம்
வாசமாமலர் நாறுவார் பொழில் சூழ்தருமுலகுக் கெல்லாம்
தேசமாய்த் திகழும்மலைத் திருவேங்கடமடைநெஞ்சமே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பேசும்	(எல்லாராலும்) உச்சரிக்கப்படுமதாய்	இடம்	ஸ்த்தாநமாய்,
இன்	(நாவுக்கு) இனிய	வாசம்	பரிமளத்தையுடைத்
திருநாமம்	திருநாமமான	மா	ஶ்லாக்யமான [தாய்
எட்டெழுத்தும்	எட்டுத் திருவக்ஷரத்தையும் [து	மலர்	புஷ்பங்கள்
சொல்லிநின்று	ஒருதரம்அநுஸந்தித்	நாறு	கமழாநின்றுள்ள
பின்னரும்	பின்னையும் [ஊ	வார்	பரந்த
பேசுவார்தம்மை	அநுஸந்திக்குமவர்க	பொழில்	சோலைகளாலே
உய்ய	உஜ்ஜீவிக்கும்படி	சூழ்தரும்	சூழப்பட்டிருப்பதாய்
வாங்கி	அங்கீகரித்து	உலகுக்குஎல்லாம்	எல்லா லோகங்களுக்கும்
பிறப்பு	(அவர்களுடைய)ஸம்ஸாரபந்தத்தை [ற	தேசமாய்	ஒளியைவிளைக்கத்தக்கதாய்
அறுக்கும்	போக்கித் தந்தருளுகி	திகழும்	விளங்குகிற
பிரான்	மஹோபகாரகன் பண்ணுகிற	மலை	மலையான
		திருவேங்கடம்	அடைநெஞ்சமே! ()

வுடைய பெரியபிராட்டியார்க்கு †வல்லபனானவன். (கொம்பித்யாதி) †வஞ்சிக்கொம்போடொத்த இடையையும் ஆத்மகுணங்களையுமுடையகுறமாதருண்டு - குறப்பெண்கள், ஒக்கத்தையுடைத்தான †பரண்கள்தோறும். (செம்புனம்) பாலை நிலமாகையாலே நிலப்ரயுக்தமான சிவப்பைச்சொல்லுதல். † தினைமுற்றி நுனிபழுத்த வளவிலே கிளிகள் †புருக்கள் கடியாதபடி நோக்குகிற திருமலையை. ... (அ)

னவுமாம், "கொழுனன்" என்றதினர்த்தம், (வல்லபன்) என்றது. இன்-சாரியைச்சொல்லாய், கொம்பன்னவென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (வஞ்சியித்யாதி). "இதணம்" என்றதினர்த்தம், (பரண்) என்றது. "செம்புனம்" என்றதுக்கு - கதிர்நுனி பழுக்கையாலேவந்த சிவப்பென்று யோஜநாந்தரமருளிச்செய்கிறார், (தினையித்யாதி). (புருக்கள்) - கபோதங்கள். ... (அ)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (பேசுமினித்யாதி). (க) "వైకుణ్ఠేతు పరేలోకే శ్రియాసార్ధం జగత్పతిః । ఆస్తే విష్ణురచిన్త్యాత్మా భక్తైర్భాగవతైస్సహ- வைகுண்டேது பரே லோகே ஶ்ரியாஸார்த்தம் ஜகத்பதிః ।ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மாபக்தைர்பாகவதைஸ்ஸஹ" என்கிறபடியே யிருக்குமிருப்பைக் கீழ்ப்பாட்டிலே

(க) பாஞ்சரா.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பேசுமினித்யாதி) †(பேசுவார் தம்மை யுய்யவாங்கிப் பிறப்பறுக்கும் பிரானிடம் - பேசுமின் திருநாமமெட்டெழுத்தும் சொல்லிநின்று) என்று - இத்தனையும் பரோபதேசமாய், (வாசமாமலர்) என்று - மேலித்தனையும் ஸ்வகதமாக வருளிச்செய்கிறுரென்றுமாம். †அன்றிக்கே, திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறுராகவுமாம். (பேசுமினித்யாதி)†ஓரதிகாரிஸம்பத்தி வேண்டாவிறே பெற்ற தாய் பேர்சொல்லுவார்க்கு; † அப்படியே, இடர்வந்தபோது எல்லாரு மொக்கச்சொல்லிக் கொடுபோரக்கடவதான இனியதிருநாமமான எட்டெழுத்தையும் சொல்லிநின்று. ஒருகால் சொன்னேமிறே என்று கைவாங்கியிருக்கை யன்றிக்கே, (பின்னரும்) பின்னையுமென்றபடி. வாயாலே திருநாமத்தைச் சொல்லுமவர்களுக்கு ஸத்தாஹாநிவாராமே அவர்களுஜ்ஜீவிக்கும்படி அங்கீகரித்துப், † பின்னையும் அவர்களுக்கு விரோதியான ஸம்ஸாரஸம்பந்தத்தை யறுத்துக்கொடுக்கு முபகாரகன் வர்த்திக்கிறஸ்த்தாநம்.

"அமரர்கோன்" இத்யாதியாலே அநுஸந்தித்தவர். (க) "త్యక్త్వా వైకుణ్ఠముత్త మమ్ । స్వామిపుష్కరిణీ తీరే రమయాసహ మోదతే - த்யக்த்வாவைகுண்ட முத்தமம் । ஸ்வாமிபுஷ்கரிணீதீரே ரமயாஸஹமோததே" என்றுவந்தபடியை யநுஸந்தித்து, அவன் வந்ததுக்கு ப்ரயோஜநத்தையருளிச் செய்கிறுர் என்று அவதாரிகை கண்டுகொள்வது.

"பேசுமின்" என்னுமது க்ரியாபதத்வேந ப்ரஸித்தமாகையைப்பற்ற ஒருயோஜனையருளிச்செய்கிறுர், (பேசுவாரித்யாதி). (திருநாம மெட்டெழுத்தும் சொல்லிநின்று பின்னரும் பேசுவார் தம்மையுய்யவாங்கிப் பிறப்பறுக்கும் பிரானிடம் - பேசுமின்என்று இத்தனையும் பரோபதேசமாய்) என்று வாக்யத்தை அந்வயித்துக்கொள்வது. ப்ரகரணஸ்வாரஸ்யத்துக்கு அநுகுணமாக, பேசுமதாய், இனியதிருநாமமென்று ஸமஸ்தபதமாக்கியருளிச்செய்கிறுர், (அன்றிக்கேயித்யாதி). பரோபதேசமென்னும் பக்ஷத்திலே, பஹுவசநப்ரயோகத்தாலே எல்லாரையும் சொன்னதுக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறுர், (ஓரதிகாரியித்யாதி வாக்யத்வயத்தாலே). பாட்டெல்லாவற்றையும் திருவுள்ளத்தைக்குறித்தருளிச் செய்கிறுரென்னும் பக்ஷத்திலே அர்த்தமருளிச்செய்கிறுர், (அப்படியே யிடரித்யாதி). அன்றிக்கே, இரண்டாம்யோஜனை தன்னிலே, "பேசும்" என்ற ஸாமாந்யோக்திக்குத்தாத்பர்யம், (ஓரதிகாரி) இத்யாதிவாக்யம் என்று கொள்ளவுமாம். "உய்யவாங்கி" என்றவநந்தரம், "பின்னரும்" என்றபதத்தை அநுஸந்தித்துக் கொண்டருளிச்செய்கிறுர், (பின்னையுமவர்களுக்கித்யாதி). ஸம்ஸாரவிமோசநமே திருவேங்கடத்தானுகை

(க)

மூ.—செங்கயல் திளைக்குஞ்சுனைத் திருவேங்கடத்துறைசெல்வனை
மங்கையர் தலைவன்கலிகன்றிவண்டமிழ்ச்செஞ்சொல்மாலைகள்
சங்கையின்றித் தரித்துரைக்கவல்லார்கள் தஞ்சமதாகவே
வங்க மா கடல் வையம் காவலராகி வானுலகாள்வரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
செம்	(இளமையாலே)சிவந்	கலிகன்றி	கலிதோஷத்தைப்
கயல்	மத்ஸ்யங்கள் [த		போக்கின ஆழ்வார்
திளைக்கும்	களித்துவர்த்திக்கிற	வண்	அழகிய
சுனை	சுனைகளையுடைய	தமிழ்	தமிழ்ப்பாஷையால்
திருவேங்கடத்து	திருமலையில்	சொல்	அருளிச்செய்த
		செம்	செவ்விய
உறை	நித்யவாஸம்பண்ணுகிற	மாலைகள்	சப்த ஸந்தர்ப்பங்களை
		தரித்து [ர்கள்	(நெஞ்சிலே) தரித்து
செல்வனை	ஸ்ரிய:பதிவிஷயமாக	உரைக்கவல்லா	சொல்லவல்லவர்கள்,
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு	தஞ்சமதாக	நிஶ்சயமாக [த
		வங்கம்	மரக்கலங்கள் நிறைந்
தலைவன்	ராஜாவாய்	மா	பெரிய

(௧) †"ஆக்கை புகாமையுய்யக்கொள்வான் நின்றவேங்கடம்" என்னக்கடவதிறே. (வாசமித்யாதி) பரிமளத்தை யுடைத்தாயிருந்துள்ள மலராலே கமழாநின்றுள்ள பரந்த பொழிலாலே சூழப்பட்டிருப்பதுமாய். (உலகுக்கெல்லாம் தேசமாய்த்திகழும்மலை) (௧) †"நீணிலத்துள்ளது" என்கிறபடியே பரமபதத்துக்குண்டான ஏற்றம் போலே திருமலையிங்கேயாகையாலே ஸம்ஸாரமுத்தேஶ்யமாம்படியிருக்கிறதாயிற்று. (௨) "திலதமுலகுக்காய்" என்னக்கடவதிறே. (௩) †"நிலமகள்தன் நெற்றிக்குத் திலதமாய்நின்ற" என்று இட்டுவைத்தான். ... ... (௯)

க்குப்ரயோஜநமென்னுமதுக்கு ஸம்வாதம், (ஆக்கையித்யாதி). உலகுக்கெல்லாம் தேஜஸ்கரமாய் ப்ரகாசிக்கும் மலையென்று சப்தார்த்தமாம். "சென்று கைதொழுவார்கள் தேவர்கள்" என்றபாசுரசேஷத்திலும் நோக்காகத்தாத்பர்ய மருளிச்செய்கிறார், (நீணிலத்தித்யாதி). திலதமாகப்பின்னையும் சொன்னாருண்டோவென்ன; தமிழனும் சொன்னானென்கிறார், (நிலமகளித்யாதி).()

(௧) தி - வாய் - ௯ - ௩ - ௮. (௩)
(௨) தி - வாய் - ௬ - ௧ - ௧௦.

கடல்	ஸமுத்ரத்தால்சூழப்பட்ட	ஆள்வர்	ஆளப்பெறுவர்; (இவ்வர்த்தத்தில்)
ஞவயம்	பூமிக்கு	சங்கையின்றி	ஸந்தேஹமின்றிக்கேயிருங்கோள். (கo)
காவலராகி	ரக்ஷகராய்க்கொண்டு		
வானுலகு	பரமபதத்தை		

வ்யா.—பத்தாம்பாட்டு. (செங்கயலித்யாதி) † முக்தர் என்று மொக்க பஞ்சவிம்சதி வார்ஷிகராய் பகவதநுபவமேயாத்ரையாய்க் களிக்குமாபோலே, யௌவநப்புகராலே சிவந்த நிறத்தையுடைய கயல்களானவை ஒன்றோடொன்று களித்து வர்த்தியாநின்றுள்ள சுனைகளையுடைத்தான திருமலையிலே நித்யவாஸம்பண்ணுகிற ஶ்ரியஃபதியை. (மங்கையர்தலைவன்) திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வார், † அழகிய தமிழில் செவ்வியசொல்லாலே செய்த தொடையை த்தரித்துச் சொல்லவல்லவர்கள், †நிஶ்சிதமாகவே,கடல்சூழ்ந்தபூமிக்கு ரக்ஷகராய், பின்பு நித்யவிபூதியும் தாங்களிட்ட வழக்காம்படி ஆகப்பெறுவர்கள். இது கூடுவதொன்றோவென்னில்; (சங்கையின்றி) இதில் சங்கைபண்ணவேண்டா.... ... ... (கo)

பேரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு,—பத்தாம்பாட்டு. (செங்கயலித்யாதி). "பொங்குநீர் செங்கயல் திளைக்குஞ்சுனை" என்று முதற்பாட்டிலே சொன்னவிசேஷணத்தை இங்கே நிகமத்திலேயுமருளிச் செய்தவருடைய உட்கருத்தையருளிச்செய்கிறார்,(முக்தரித்யாதி). இத்தால், தாமும் (க) "மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே" என்று மநோரதிக்கிறார் என்றதாயிற்று, "வண்" என்றதினர்த்தம், (அழகிய) என்றது. "தஞ்சமதாகவே" என்றதுக்குப் பலிதார்த்தம், (நிஶ்சிதமாகவே) என்றது. வானுலகாள்வர் சங்கையின்றி இருங்கோள் என்றுகூட்டிக் கொள்வது. (கo)

ஜீயர் திருவடிகளே சரணம்.

முதற்பத்தில் - எட்டாந்திருமொழி முடிந்தது.

(க) பெரு - திரு - ச - உ.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

முதற்பத்து - ஒன்பதாந்திருமொழி - தாயே.

மூ.—தாயே தந்தையென்றும் தாரமே கிளைமக்க ளென்றும்
நோயேபட்டொழிந்தே னுன்னைக் காண்பதோ ராசையினால்
வேயேய் பூம்பொழில்சூழ் விரையார் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாளென்னைக் கொண்டருளே.()

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேய்	மூங்கில்கள்	மக்களேயென்றும்	(மக்களல்லாதாரைப்) பிள்ளைகளென்றும் நினைத்து
ஏய்	நெருங்கியிருப்பதாய்	நோய்பட்டு ஒழிந்தேன்	அநர்த்தப்பட்டுப்போந்தவனாய்,
பூ	புஷ்பித்து [தான	நாயேன்	நாய்போலே மிகத்தண்ணியனான நான்
விரை ஆர்	பரிமளம்மிக்கிருப்ப	உன்னை	நிருபாதிகபந்துவான தேவரீரை
பொழில்சூழ்	சோலையாலே சூழப்பட்டிருக்கிற	காண்பது	காணவேணுமென்கிற
திருவேங்கடவா	ஸ்ரீ வேங்கடாத்ரியை நிரூபகமாக வுடையவனே!	ஓர் ஆசையினால்	ஒரு ஆசையாலே
தாயே என்றும்	(தாயல்லாதாளைத்)தாயென்றும்	வந்து	(தேவரீர் திருவடிகளிலே) வந்து
தந்தையென்றும்	(தந்தையல்லாதானைத்) தகப்பனென்றும்	அடைந்தேன்	சரணம்புகுந்தேன்;
தாரமேயென்றும்	(மனையாளல்லாதவளை) மனையாட்டியென்றும்	என்னை	தாஸபூதனானவென்னை
கிளையேயென்றும்	(பந்துக்களல்லாதவர்களை) பந்துக்களென்றும்	நல்கி	க்ருபைசெய்து
		ஆள்கொண்டருள்	அடிமைகொண்டருளவேணும். ......(க)

வ்யா.—தாயே தந்தை ப்ரவேசம்—திருமலையை ஆஶ்ரயியென்று திருவுள்ளத்தைக் குறித்து உபதேசித்தார் கீழ்; அப்படியே அதுவும் பாங்காய், தாமும் அநுபவிப்பாராய் திருமலையிலே வந்து புகு

அரு.—தாயே தந்தை ப்ரவேசம்.—கீழ்த்திருமொழியிலே - "திருவேங்கட மடைநெஞ்சமே!" என்று பலகால் சொல்லிக்கொண்டநுபவிக்க விழிந்தவர், இத்திருமொழியிலே, பூர்வவ்ருத்தத்தைச் சொல்லிக்கொண்டு சரணம் புகுருகைக்கு ப்ரஸங்கமென்னென்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார்,

ந்தார்; † ஸர்வ ஸ்வாமியாய் நிருபாதிகபந்துவுமானவ னிங்கேவந்து ஸந்நிஹிதனாகையாலே, தம்முடைய அபேக்ஷிதங்களெல்லாம் பெறலாமென்று, அக்ரூரன் (க) "మామక్రూరేతి వక్ష్యతి - மாமக்ரூரேதிவக்ஷ்யதி" என்று மநோரதித்துக் கொண்டுவந்தாற்போலேயும், † ஸ்ரீபுண்டரீகன் மநோரதம்போலேயும், இவரும் மநோரதித்துக்கொண்டு வந்தவிடத்தில், அப்படி எதிரேவருதல் அணைத்தல், ஓர் இன்சொல் சொல்லுதல், (உ) "క్రియతామ్ - க்ரியதாம்" என்று கைங்கர்யத்திலே ஏவுதல் செய்தருளக்காணுமையாலே மிகவும் நொந்து, நித்ய ஸந்நிதியுமுண்டாய், நினைத்தது செய்து தலைக்கட்டுகைக்கீடான சக்தியுமுண்டாய், ப்ராப்தியுமுண்டாயிருக்க, அபேக்ஷிதம் செய்யாதொழிகிறது செய்தருள நினையாமைக்கீடாயிருப்பதொரு ஹேது இத்தலையிலே யுண்டாகையிறே என்று † கைவாங்கினவர், பின்னையும் கைங்கர்யத்திலுண்டான சாபலாதிசயத்தாலே தவிரமாட்டாமை †மீண்டு, என்னுடைய பாபங்களைப் † பார்த்தால், அபந்துக்களை பந்துக்களாக நினைத்தும், போக்யமில்லாதவிடத்திலே போக்ய புத்தியைப்பண்ணியும், பரஹிம்ஸையைப் பண்ணியும், ஆர்த்த விஷயங்களிலே ஐயோ! என்னுதேயும், உன்னையொழியப் புறம்பே காலத்தைப்போக்கியும் போந்தேன், இங்ஙனே போந்தேனேயாகிலும், இப்போது தேவரையொழியச் செல்லாமையுண்டாய் வந்தேன், இத்தலைசேஷமாய், தேவர்சேஷியாய், விடவொண்ணுதபடியான ஸம்பந்தமுமுண்டாய், என் குற்றங்களைப் பொறுப்பிக்கைக்குப் பிராட்டி ஸந்நிதியுமுண்டானபின்பு, என் அபராதங்களைப் பொறுத்தருளி என்னுடைய ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைக்கொண்டருளவேணு

(ஸர்வஸ்வாமியித்யாதி). (க) "యోఽనన్తః పృథివీం ధత్తే శేఖరస్థితి సంస్థితామ్। సోఽవతీర్ణో జగత్యర్థే మామక్రూరేతి వక్ష్యతి - யோநந்த: ப்ருதிவீம் தத்தே சேகரஸ்த்திதி ஸம்ஸ்த்திதாம் | ஸோவதீர்ணோ ஜகத்யர்த்தே மாமக்ரூரேதி வக்ஷ்யதி" என்று ப்ரமாணசேஷம். (ஸ்ரீபுண்டரீகன் மநோரதம்) என்றது - திருக்கடன் மல்லையிலே ஸ்ரீபுண்டரீகனென்கிற ருஷி கடலைவற்ற இறைத்து க்ஷீராப்திசாயிக்குக் கைங்கர்யம்பண்ண நினைத்த நினைவென்றபடி. (கைவாங்கினவர்) என்றது - "நோயேபட்டொழிந்தேன்" என்றத்தைப்பற்ற. கீழே "திருவேங்கடமடை நெஞ்சமே" என்றவர் "நோயேபட்டொழிந்தேன்" என்றத்தாலே கைவாங்கினது அர்த்தஸித்தமென்று கருத்து. (மீண்டு) என்றதுக்கு (சரணம்புகுகிறார்) என்றத்தோடந்வயம். (பார்த்தால்) என்றதுக்கு, (போந்தேன்) என்றத்

(க) வி - பு - ரு - கள - கஉ. (உ) ரா - ஆ - கரு - எ.

மென்று, † பெரியபிராட்டியார் புருஷகாரமாகத் திருவடிகளிலே விழுந்து சரணம்புகுகிருர்.

இதுதான்(க)*வாணிலாமுறுவலிலே செய்ததன்ருேவென்னில்; ஸுகுமாரராயிருக்குமவர்கள் விடாய்த்தால் பலகாலும் முகத்திலே நீரையள்ளி யேறிட்டுக்கொள்ளுமாபோலே பலகாலும் ப்ரபத்திபண்ணும்படியாயிற்று இவருடைய மார்த்தவமிருப்பது. †ஒருகால் பெற்றிலோமென்று கைவாங்குமளவன்றிக்கே பெற்றவளவும் ப்ரபத்தி பண்ணுவராயிற்று. (உ) "నిపపాతవిభీషణః- நிபபாதவிபீஷணः" என்று அவன் திருவடிகளிலே விழுந்து சரணம்புக்காற்போலேயாயிற்று.

முதற்பாட்டு. (தாயேயித்யாதி) (ங) "మాతాపితా భ్రాతా-மாதாபிதாப்ராதா" (ச) "భ్రాతా భర్తాచ-ப்ராதாபர்த்தாச" (ரு) "ఏకైకఫలలాభాయ-ஏகைகபலலாபாய" என்கிறபடியே தேவரே ஸர்வவிதபந்துவுமா

தோடந்வயம். (சு) "எங்கள் மாதவனே!" என்றத்தைப்பற்ற, (பெரியபிராட்டியாரித்யாதி).

கீழ்த்திருமொழிகளில் தோற்றின பௌநருக்த்யத்தைப் பரிஹரித்து, இதில் பாட்டுத்தோறும் "வந்தடைந்தேன்" என்கைக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிருர், (ஒருகாலித்யாத) "పపాత - பபாத" என்ருதே" నిపపాత - நிபபாத" என்றத்தாலே - பலகால் சரணம் புக்கானென்று கருத்து.

முதற்பாட்டு.—(தாயேயித்யாதி). "தாயே" என்கிற விடத்தில், ஏகாரம் பிரிநிலை ஏகாரமாய், தாயாகாதவனைத்தாயே என்றிருந்தேனென்று தாத்பர்யமாய், இதுதானும் எல்லாப்பதங்களிலும் அநுவர்த்திக்கையால் ஒருவர்க்குமொருஸம்பந்தமும் வாஸ்தவமாக இல்லையென்று பலிக்கையாலே, வேங்கடவனே இவையெல்லாமாயிருப்பனென்று விவக்ஷித்து ப்ரமாணங்களையும் காட்டாநின்றுகொண்டு தாத்பர்ய மருளிச்செய்கிருர், (மாதேத்யாதி). (ங) "మాతాపితా భ్రాతా నివాసశ్శరణం సుహృద్గతిర్నారాయణః - மாதாபிதாப்ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயணः" என்றவிடத்திலும், (ச) "అహంతావన్మహారాజే పితృత్వం నోపలక్షయే - భ్రాతా భర్తాచ బన్ధుశ్చ పితాచ మమ రాఘవః"- அஹம்தாவந் மஹாராஜேபித் ருத்வம் நோபலக்ஷயே । ப்ராதா பர்த்தாச பந்துச்ச பிதாசமமராகவः" (ரு) "పితృ మాతృ సుత భ్రాతృ దార మిత్రాదయోపివా । ఏకైక ఫల లాభాయ సర్వ లాభాయ కేశవః" பித்ருமாத்ருஸுத ப்ராத்ரு தாரமித்ராதயோபிவா । ஏகைகபலலாபாய ஸர்வலாபாயகேசவः". என்றவிடத்திலும், "సర్వం వాక్యం సావధారణమ్ - ஸர்வம் வாக்யம் ஸாவதாரணம்" என்கிற ந்யாயத்தாலே நாராயண எவ என்று கொள்வது. మిత్రాదయోపివా-மித்ராதயோபிவா" என்கிறவிடத்திலே,

(க) க-கா. (ங) ஸுபாலோ-சு. (ரு)
(உ) ரா-யு-கக-உ. (ச) ரா-அ-ருக-ங0. (சு) க-க-க.

உகூ

யிருக்க, ஸோபாதிகபந்துக்களாய் இத்தலையில் †ப்ரயோஜநமுள்ள நாள் கொண்டு இவனுக்கு உதவவேண்டுமென்று தங்களைக்கொண்டு அகலநின்று அபகாரத்தையே பண்ணுமவர்களையேபந்துக்களென்று நினைத்து அநர்த்தப்பட்டேனென்கிறார். தாயேயென்றும் தந்தையேயென்றும் தாரமேயென்றும் †கிளேயேயென்றும் மக்களேயென்றும் புத்ரமித்ராதிகளையாசைப்பட்டு. (நோயேபட்டு) †இவன்பக்கலுபகாரங்கொள்ளலாமன்று†கொண்டு இவனுக்குஉதவவேண்டுமென்று அபகாரத்தைப்பண்ணித் தங்களைக்கொண்டு அகலநினைக்குமவர்களை பந்துக்களென்றுநினைத்தால், அவர்கள் பந்துக்ருத்யம்பண்ணக்காணுமையாலே க்லேசமேயிறே ஸித்திப்பது. இவன்பந்துக்களென்று நினைத்திருக்குமத்தனையிறே. அவர்கள்பக்கல் அதில்லையே. †வேறொரு வ்ருத்தாதிகளால்வேண்டாதே அவர்கள் தாங்களே க்லேசத்துக்குடலாயிறேயிருப்பது. (பட்டொழிந்தேன்) பட்டேனென்றபடியாகவுமாம். †அன்றிக்கே, நோயேபட்டு ஒழிந்தேன் - விட்டே

“வா” என்கையாலே பித்ருத்வாதிகளில்லை, உண்டானுலும் என்னும் அப்யுபகம்யவாதம் ஸூசிதமாகிறது. ஆக, இந்த ப்ரமாணங்களாலே மாத்ருத்வாதிகள் மற்றொருவர்க்குமில்லை, எம்பெருமானுக்கேயுள்ளதென்று சொல்லிற்றாயிற்று. (ஸோபாதிகபந்துக்கள்) என்றது-தன்னிச்சையாலே ஆரோபிதபந்துத்வவான்களென்றபடி; கர்மோபாதிகபந்துக்களென்னவுமாம். (கிளேயேயென்றும்) என்றது - ஸம்பந்திகளேயென்றுமென்றபடி. “தாயேதந்தை” இத்யாதிக்கு - ஸ்தநந்தய(ந்த்)யாவஸ்த்தாப்ரப்ருதியான இவனுடைய * பாந்தவாபாஸலோலத்வத்தை அடைவே யருளிச்செய்கையிலே தாத்பர்யமென்று திருவுள்ளம். இவன் “தாய்” என்று ஆதரித்தாஞகில் அவர்களாலே நோயேபடவேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார், (இவன் பக்கலித்யாதி). (கொண்டு) வாங்கிக்கொண்டு. இத்தால் - இவனுதரிக்கைக்குறுப்பாகத் தாங்களும் தாய்நினைவுகொண்டுவருமத்தனை போக்கி இவனுக்கு உதவுகைக்குறுப்பான தாய்தந்தையன்றிக்கே,பலியிடக்கொடுத்தும் தாங்கள்விற்றும் ஜீவிக்குமவர்களுண்டென்றதாயிற்று. “தாயே” இத்யாதிகளில் ஏவகாரங்களுக்குத் தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார்; (வேறொருவித்யாதி). இத்தால் - அவர்களுடைய அபகாரத்தாலே நோவுபடுகையன்றிக்கே அவர்கள் ஸ்வரூபமே நோய்க்கு நிதாநமென்று வ்யாவர்த்தகங்களென்றதாயிற்று. இப்பக்ஷத்தில், அவர்கள் நியதஸ்வபாவராகையாலே நினைத்து நினைத்து துக்கிக்கைக்குறுப்பாயிருப்பர்களென்று திருவுள்ளம். முழுச்சொல்லாக ஓரர்த்தமருளிச்செய்து, ... யா அர்த்தாந்தரம், (அன்றிக்கேயித்யாதி). அநாதியாக ஆ

னென்னவுமாம். †பகவத்குணங்கள் உத்தேஶ்யமென்றறியும்போது ஸதாசார்யோபதேசமும் சாஸ்த்ரமும்வேணும்; ஸம்ஸாரத்தில் த்யாஜ்யதையில் ப்ரத்யக்ஷமே †அமையுமிறே. இவைதானே உபாத்யாயர்களாகவாயிற்று விட்டது. (உன்னைக்காண்பதோராசையினால்) †ஸோபாதிகபந்துக்களை பந்துக்களென்று ப்ரமித்து அவர்கள் உதவவேண்டுமென்று உதவக்காணாமையாலே நிருபாதிகபந்துவான உன்னைக் காணவொண்ணாதோவென்னும்படியாய் உன்பக்கலிலே அவைதானே ஆசையைப்பிறப்பித்தன.

(வேயித்யாதி) †ப்ரயோஜநமுள்ளநாள்கொண்டு உதவவேண்டுமன்ருக அகலநிற்கையன்றிக்கே, முன்பெல்லாமகலநின்று கார்யவேளையிலேவந்து முகங்காட்டி உபகரிக்குமவனாயிருந்தாய்நீ. வேய்கள் ஏய்ந்திருப்பதாய். (பூம்பொழிலித்யாதி) (க) †"ஸர்வகந்த:" - ஸர்வகந்த:"என்கிறவஸ்து உள்ளேநிற்கிறதென்று தோற்றும்படியாயிற்றிருக்கிறது; †அப்பரிமளம்வழிகாட்டவந்தேன். (வேங்கடவா) †அவனுடையபாந்தவமும் சாபலமும் ப்ரத்யக்ஷிக்கலாயாயிற்றிருக்கிறது. அகர்மவஶ்யனாய் பரமபதத்திலே நித்யஸூரிகளுக்கு ஓலக்கம்கொடுத்திருக்குமவன், இவைநோவுபடுகிற ஸம்ஸாரத்திலே, ப்ரஜைவிழுந்தகிணற்றிலே ஒக்கவிழுந்து எடுக்கும் தாயைப்போலே இங்குவந்திருக்கிறது ரக்ஷிக்கைக்காகவிறே. (நாயேன்) நான் செய்துகொ

ரித்தே போந்தவனுக்கு இப்போது விடுகைக்கு நிமித்தமென்னென்ன; அருளிச்செய்கிறார், (பகவதித்யாதி). விசேஷதர்சநத்தால் அநாதி ப்ரமம் நிவ்ருத்தமாயிற்றென்று கருத்து. (அமையுமிறே) என்றவநந்தரம், ஆகையாலே என்று சேஷம். விடுகைக்கு ஹேதுவான வளவன்றிக்கே ஈஶ்வரவிஷய ராக(ராக)ஹேதுவுமாயிற்றனவென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (ஸோபாதிகேத்யாதி).

"உன்னை" என்று முன்னிலைதோற்றச்சொன்னபோதே ஸம்புத்தி தோற்றியிருக்கவும், "வேங்கடவா" என்று ஸம்போதித்தவர்க்கு உட்கருத்தையருளிச்செய்கிறார், (ப்ரயோஜநமித்யாதி). பூத்தபொழிலானபோது, விரையானது - பரிமளமானது, ஆர்ந்திருக்குமே, "விரையார்" என்று விசேஷிப்பானென்னென்ன; அருளிச்செய்கிறார், (ஸர்வகந்த இத்யாதி). இத்தால் - "விரையார்" என்று ஸர்வேஶ்வரனுடைய பரிமளம் பூர்ணமாயிற்றென்று கருத்து. இப்படி வர்ணித்ததுக்கு ப்ரக்ருதாநுகுண்யம் காட்டுகிறார், (அப்பரிமளமித்யாதி). "முகங்காட்டியுபகரிக்குமவனாயிருந்தாய் நீ" என்று கீழ்ச்சொன்ன அர்த்தம் பதரூடமானபடியை யுபபாதிக்கிறார், (அவனுடைய

(க) சாந்தோ - ௩ - கச.

மூ.—மானேய் கண்மடவார் மயக்கிற்பட்டு மாநிலத்து
நானே நாநாவித நரகம் புகும் பாவம் செய்தேன்
தேனேய் பூம்பொழில்சூழ் திருவேங்கட மாமலை யென்
ஆனாய் வந்தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தேன்	வண்டுகள்	பட்டு	அசப்பட்டு
ஏய்	நிறைந்த	மாநிலத்து	மஹாப்ருதிவியிலே
பூ	பூக்களையுடைய	நாநாவிதநரகம்	பலவிதமானநரகங்களிலும் [ன
பொழில்	சோலையாலே	புகும்	ப்ரவேசிக்கும்படியா
சூழ்	சூழப்பட்ட	பாவம்	பாபத்தை
திருவேங்கட மாமலை	திருமலையைவாஸஸ்த்தாநமாகவுடையனாய்	நானே	அடியேன் ஒருவனுமே
என் ஆனாய்	என்னுடையகுற்றங்களை ஆனைபோலே பொறுக்குமவனே!	செய்தேன்	பண்ணினவனாய்க்
மான் ஏய்	மான்போன்ற	வந்து	கிட்டி [கொண்டு
கண்	கண்களையும்	அடைந்தேன்	தேவரீர் திருவடிகளைச் சரணமாகப்பற்றினேன்; னை
மடவார்	மடப்பத்தையுமுடையஸ்த்ரீகளது	அடியேனை	சேஷபூதனனவென்
மயக்கில்	கண்மயக்கிலே	ஆள்கொண்டருள்	அடிமைகொண்டருளவேணும். (உ)

ண்டபடியைப்பார்த்தால் புறம்புத்தைக்கும் ஆகேன், தேவர்க்குமாகேன். புறம்பேபோகில் கல்லையிட்டெறிவர்கள், உள்ளேபுகுரில் தொட்டனவும் †தீண்டினவும் பொகடவேண்டிவரும். (வந்தடைந்தேன்) அநந்யகதித்வத்தாலே திருவடிகளிலேவந்து சரணம்புகுந்தேன். நீரேயிப்படிசெய்துகொண்டீராகில் இப்போது நம்மைச்செய்யச்சொல்லுகிறதென்னென்ன; (நல்கி) அந்தக்ஷேத்ரபதார்த்தத்தையே ராஜபுத்ரன் செருக்காலே †மேல்விழுமிறே. (ஆளென்னைக்கொண்டருளே) நீயே, ஸர்வவிதபந்துவுமென்று நினைத்து, (க) "𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 - அஹம்ஸர்வம் கரிஷ்யாமி" என்று நித்யஸூரிகளைக்கொள்ளுமடிமை என்னைக்கொண்டருளவேணும். (க)

வ்யா.—இரண்டாம்பாட்டு. பந்துக்களல்லாதாரை பந்துக்களென்று நினைத்திருந்தேன், அக்குற்றத்தைப்பொறுத்தருளவேணு

வித்யாதி). (தீண்டினவும்) என்றது - பரம்பராஸ்பர்சமுள்ளனவுமென்றபடி. (மேல் விழுமிறே) வேட்டைக்கு உபயுக்தமென்று அபிநிவிஷ்டனுமிறே. (க)

(க) ரா - அ - கூக - உரு.

மென்று சரணம்புகுந்தார் முதற்பாட்டில்; போக்யமல்லாதவற்றிலே போக்யதாபுத்திபண்ணிப்போந்தேன், அக்குற்றத்தைப்பொறுத்தருளவேணுமென்று சரணம்புகுகிறாரிதில்.

(மானேயித்யாதி) மானேய்ந்திருக்கிறநோக்கையுடைய. †அகவாய் நஞ்சாயிருக்கச்செய்தேயும் இவனையொழியச்செல்லாதாரைப் போலேயிருக்க நோக்குமவர்களாயிற்று. † அகவாயாராய்கைக்கீடானவளவில்லையே இவனுக்கு; கார்யபுத்யா ஆராயாநிற்கச்செய்தேயும் அநந்யப்ரயோஜனைகளாக நோக்குகிறார்களாகக்கொண்டு அதிலே துவக்குண்ணுமாயிற்று. (மடவார்) நாண், மடம், அச்சம், என்கிற இவற்றில் மடப்பத்தையுடையராயிருப்பர்களிறே.†அத்தாலே சொல்லுகிறது - ஸமஸ்தகல்யாணகுணாத்மகமான விஷயத்துக்குள்ளதெல்லாம் தங்களுக்குண்டாக நினைத்திருப்பது. (மாநிலத்தில் - நாநாவித - நரகம் - நானே - புகும் பாவம் செய்தேன்) சேதநபேதத்துக்கெல்லையில்லையிறே; அவர்களைக் கர்மாநுகுணமாக அநுபவிப்பிக்கைக்கு லோகங்கள்தோறும் பண்ணிவைக்கும் நரகங்களுக்கும் ஓரவதியில்லையிறே; அவையெல்லாவற்றுக்கும், நானொருவனுமே †தேவையறுக்கும்படியான பாபத்தைப்பண்ணினேன். ஈஶ்வரனுக்கு ஜகந்நிர்வாஹம் நடக்கவேண்டில் வேறே சிலநரகங்கள் ஸ்ருஷ்டிக்கவேணும்.†ஸ்ரீராமாயணத்திலே கைகேயியை "நீயென்ன நரகத்திலே புகக்கடவை" என்றுண்டு; அவ்விடத்தை வாசியாநிற்க, நம்பிள்ளை, "முன்பே ஸ்ருஷ்டமான நரகங்கள்போராதென்கிறதோ" என்ன; "அழகிதாகச்சொல்லிற்று" என்று ஜீயரருளிச்செய்தார்.

அரு. — இரண்டாம்பாட்டு. (மானேயித்யாதி). அழகில்மண்டியென்றுதே, "மயக்கிற்பட்டு" என்கைக்குக் கருத்தருளிச்செய்கிறார், (அகவாயித்யாதி). அவர்கள் கண்ணாலே மயக்கினால் இவன் கண்ணைக்காணாதே மயங்குவானென்னென்ன; அருளிச்செய்கிறார், (அகவாயித்யாதி வாக்யத்வயத்தாலே). நெஞ்சுநஞ்சாம்படியிருக்குமவர்களை, "மடவார்" என்று பவ்யதையே நிரூபகமாகச் சொல்லப்போமோவென்ன; அருளிச்செய்கிறார், (அத்தாலேயித்யாதி). (தேவையறுக்கும்படி) அதாவது - இன்னார்க்கின்னநரகம் என்று எல்லார்க்குமாகவிட்ட நரகத்தை எல்லாருடைய பாபங்களையுடையனாய் ஒருவர்க்குமில்லாதபடி பண்ணுகை. எல்லாநரகத்துக்கு மொருவனே விஷயமாகக்கூடுமோவென்ன; கூடுமென்னுமதுக்கு ஸம்வாதமாக ஐதிஹ்யமருளிச்செய்கிறார், (ஸ்ரீராமாயணத்திலே யித்யாதி).

மூ.—கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன்றிலாமையினால்
என்றேனு மிரந்தார்க் கினிதாக வுரைத்தறியேன்
குன்றேய் மேகமதிர் குளிர்மாமலை வேங்கடவா
அன்றே வந்தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
குன்று	மலைகளிலே	மலைவேங்கடவா	ஸ்ரீவேங்கடாசலத்தை நிரூபகமாகவுடையவனே!
ஏய்	தங்கியிருந்துள்ள	குறிக்கோள்	தேஹாத்மவிவேகம் முதலான ஜ்ஞானம்
மேகம்	மேகங்களானவை	ஒன்று	ஒன்றும்
அதிர்	முழங்காநிற்பதாய்	இலாமையினால்	பிறவாமையாலே
குளிர்	குளிர்த்திமாருததாய்		
மா	பெருமைமிக்க		

(தேனித்யாதி) தேனென்று-வண்டென்னவுமாம். (என்னுனாய்) † அவ்வானைவர்த்திக்கிறமலையிலுள்ளதுதன்னையே காட்சியாகக்கொடுக்கவமையும். †ஆனை-பெரியகுற்றங்களைக்காணுக்†கண்ணிட்டு,பொறுக்கவரியன செய்யவற்றாயிருக்கையும், ஸதா†தர்சநீயமாயிருக்கையும். (வந்தித்யாதி) "நாநாவிதநரகம்புகும்பாவம்செய்தேன்" என்ற நானேவந்தடைந்தேன். அந்நரகாநுபவம் பண்ணும்போதைக்லேசத்துக்கெதிர்த்தட்டான ஸுகைகதாநமாயிருக்கும் கைங்கர்யத்தை என்னைக்கொண்டருளவேணும். †காமுகனுக்கு அங்கநாபரிஷ்வங்கம் போலேரஸிக்குமிறே சேஷபூதனுக்குக் கைங்கர்யம்;(க)†"రమమాణాః-ரமமாணாః". ... ... (உ)

§ "மாமலையென்னுனாய்" என்ற ஸமபிவ்யாஹார லப்தார்த்தத்தையருளிச்செய்கிறார், (அவ்வானையித்யாதி). (ஆனை) என்றவநந்தரம், என்கிறது என்று சேஷம். (கண்ணிட்டு) என்றவநந்தரம், இருக்கையும் என்று சேஷம். (தர்சநீயமாயிருக்கையும்) என்றவநந்தரம், உண்டாகையாலே என்று பூரிப்பது. "ஆட்கொண்டருளே" என்றதுக்கு "அடியேனை" என்றது ஹேதுகர்ப்பமென்னுமிடந்தோற்றத் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (காமுகனுக்கித்யாதி). "ரஸிக்கும்" என்கைக்கு ப்ரமாணம் (ரமமாணாஇத்யாதி). "రమ్యమావసథంకృత్వా రమమాణావనేత్రయః। దేవగన్ధర్వ సఙ్కాశా స్తత్ర తే న్యవసన్సుఖమ్-ரம்யமாவஸதம்க்ருத்வா ரமமாணாவநேத்ரயঃ। தேவகந்தர்வஸங்காசாஸ்தத்ர தேந்யவஸந்ஸுகம்". ... ... (உ)

(க) ரா - பா - க - ௬உ.

§ (பா) "ஸ்வாமி, நாயன்" என்னுமல் "ஆனை" என்பானென்னென்ன; அருளிச்செய்கிறார், (அவ்வானையித்யாதி). ஆனையானது மலையிலே வர்த்திக்குமதாகையாலே அவன் மலையிலுள்ளது எதாகிலும், போருமென்று தாத்பர்யம். அவ்வானை என்ற திருவேங்கடமுடையானுக்கு ஆனையோட்டை ஸாம்யமருளிச்செய்கிறார், (ஆனைபெரியவித்யாதி).

பல்உயிரை	அநேகப்ராணிகளை	என்றேனும்	ஒருகாலத்திலும்
கொன்றேன்	ஹிம்ஸித்தேன்;	உரைத்தறியேன்	சொல்லியறியாதவனு அடியேன்
இரந்தார்க்கு	யாசித்தவர்களுக்கு	அன்றே	அப்போதே
இனிதாக	நல்லவார்த்தைகளாலே	வந்துஅடைந்தேன்; அடியேனை ஆட்கொண்டருள். (ரு)	

வ்யா.—மூன்றும்பாட்டு. †பந்துக்களல்லாதாரை பந்துக்களென்றும் போக்யமல்லாதார் பக்கலிலே போக்யதாபுத்திபண்ணியும் போந்தவளவேயோ, தேவர்திருவுள்ளத்துக்கு அஸஹ்யமாம்படி பரஹிம்ஸையே பண்ணிப்போந்தேனென்கிறார்.

(கொன்றேன்) மடிதடவி விட்டிலேன் - அர்த்தம் கொடுவந்தானாகில், †பின்துடர்த்தியறக்கொன்றுபறிக்கும்; வெறுங்கையனாகில், நான் †அவள்பக்கல் என்கொடுபோகக்கடவேனாக நீ வெறுங்கையே வந்தது என்று கொல்லுவன். (பல்லுயிரை) அநுதாபம்பிறந்ததில்லை, ப்ராயஸ்சித்தாதிகாரமுமில்லை. †அநுதாபமுண்டாகில் ஒன்றிரண்டளவிலே மீளுமிறே; அப்போதிறே ப்ராயஸ்சித்தாதிகாரமுமுள்ளது. †இப்போது இத்தைக் குற்றமாகச்சொல்லுகிற நீர் அன்று அது செய்வானென்னென்ன; (குறிக்கோளொன்றிலாமையினால்) †தேஹாதிரிக்தமாயிருப்பதோராத்மவஸ்து உண்டு, இதுசெய்யில் நரகாநுபவம் தப்பாதென்றுதல், அன்றிக்கே, இத்தையுடையானொருவனுளன், அவன் ஸர்வபூதஸுஹ்ருத்தாயிருப்பானொருத்தன், அவனுக்கிது அஸஹ்யமா†யிருக்குமென்று புத்தியிற்படாமையாலே செய்தேன்; †அவனைப்பார்த்தல், நாம் நின்றநிலையிது என்றுராய்தல்

அரு.—மூன்றும்பாட்டு. (கொன்றேனித்யாதி). கீழிரண்டுபாட்டோடும் ஸங்கதிதன்னை யருளிச்செய்கிறார், (பந்துக்களித்யாதி).

(பின்துடர்த்தியற) - தன்பின்னே துடர்ந்துவாராதபடி. (அவள் பக்கல்) *மானேய் கண்மடவாள் பக்கல். கீழ்வாக்யத்துக்கு விவரணம், (அநுதாபமுண்டாகி லித்யாதி). மேலுக்கவதாரிகை, (இப்போதித்யாதி). "குறிக்கோள்" ஜ்ஞானம். "ஒன்று" என்றது - ஒன்றும் என்றாய், அநேகமுண்டாகிலன்றோ ஒன்றும் என்னவேண்டுவதென்ன; அருளிச்செய்கிறார், (தேஹேத்யாதி). (இருக்குமென்று) என்ற வநந்தரம், ஆதல் என்று சேஷம். கீழ்பண்ணின ப்ரஶ்நத்துக்கு உத்தரமாம்படி தாத்பர்யமருளிச்செய்து, சப்தார்த்தத்தை யருளிச்செய்கிறார், (அவனையித்யாதி). இவற்றிலொன்றறிந்தால

செய்யாமையாலே †ஒருதலையறியிலும் பரஹிம்ஸையில் ப்ரவ்ருத்தி
யானிறே. †விஷயார்த்தமாக த்ரவ்யார்ஜநம்பண்ணுகிறநாளில் முன்
னடிதோற்றாமையாலே பரஹிம்ஸையைப்பண்ணிப்போந்தீராகில்
பின்பு த்ரவ்யங்களும் பெற்று அபிமதவிஷயங்களும் கைபுகுந்து
நீருமவளுமாய் ரஸித்திருக்கிறவளவில்தான் ஆர்த்தவிஷயத்தில்
ஐயோ! என்றீரோவென்ன,(என்றேனுமித்யாதி) †காத்திகைப்புதிய
துக்கும் நாமிடவேணுமென்னுதல், இவன் ஜீவிக்கவேணுமென்னு
தல், செருக்காலேயாதல். இட்டறியேனென்பது அதுக்கு ப்ரஸங்க
முண்டாகிலிறே. (இனிதாக) ஒருவனர்த்தித்துவந்தால், "இரப்பாள
னாய்வந்தவனுக்குக் குறைவறத்தரப்பெற்றிலேன்" என்றாறிவார்
த்தைசொன்னானாகில், "இவன்றான்செய்வதென், தன்வெறுமையா
லேயன்றோ தாரர்விட்டது" என்று அவனும் ஆறிப்போமிறே; அங்
ஙனன்றிக்கே, "நாமும் நம்தாரித்ர்யமுமாய்ப்பட்டதுபடாதே இவ
ன்வாயில் வார்த்தைகேட்கைக் கென்செய்ய அபேக்ஷித்தோம்" என்
று உள்ளதனையும் நெஞ்சு புண்படும்படியாயிற்று இல்லையென்பது.

(குன்றேய்மேகமதிர்) †குன்றிலேயென்னுதல். குன்றுபோலே
யென்னுதல்.†கனக்க நீரைமுகந்தால் ஓரிடத்திலேதங்கியிறேவர்ஷிப்
பது. (அதிர்) †இரவாதிருக்கச்செய்தேயும் இனிதாகச்சொல்லுவா
ரைப்போலேயாயிற்று முழக்கமிருப்பது. (அன்றேவந்தடைந்தே
ன்) அநுதாபம்பிறந்தாதல் ப்ராயஶ்சித்தம்பண்ணியாதலன்றிக்கே
கொன்றகை கழுவாதே உதிரக்கை கழுவாதே வந்து சரணம்புகுந்

மையுமோவென்ன, (ஒருதலையித்யாதி). மேலுக்கவதாரிகை. (விஷயேத்
யாதி). "என்றேனும், ஒருநாளாகிலும், இரந்தார்க்கினிதாகவுரைத்தறியேன்"
என்றதுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார், (காத்நகை யித்யாதி). இத்தால்
புண்யத்துக்காக வாதல், ஐயோ! என்றிரக்கத்தாலே யாதல் க்யாதிக்காக
வாதல், ஒருநாளும் சோறிட்டதில்லையே. நல்வார்த்தையுஞ் சொல்லியறி
யேனென்றதாயிற்று.

(குன்றிலே) என்றது - குன்றின் கொடுமுடியிலே யென்றபடி. அன்றி
க்கே, குன்றுகளிலே வர்த்திக்கக்கடவ மேகமென்றுகொள்ளவுமாம். இப்படி
விசேஷித்ததுக்கு ப்ரயோஜநம், (கனக்கவித்யாதி). பல்லுயிரைக்கொன்ற
வெனக்கு ப்ரதிகோடியாகப் பல்லுயிருக்கும் ஜீவநப்ரதாந சீலமாய், இனிதாக
வுரைத்தறியாத வெனக்கெதிராகப் பரமோதாரர்வர்த்திக்கிறதேசத்திலிருக்கும்
(௧)*ஸ்ரீவேங்கடாத்ரிசிகராலயகாளமேகத்தை ஸம்போதிக்கிறாரென்று உட்
கருத்தையுட்கொண்டு அதிர்ப்பதத்துக்குக் கருத்தருளிச்செய்கிறார், (இரவா

(௧) முக்தகம்.

மூ.—குலந்தா னெத்தனையும் பிறந்தே யிறந்தெய்த்தொழிந்தேன்
நலந்தா னொன்றுமிலேன் நல்லதோ ரறஞ் செய்துமிலேன்
நிலந்தோய் நீள்முகில்சேர் நெறியார் திருவேங்கடவா
அலந்தேன் வந்தடைந்தே னடியேனை யாள்கொண்டருளே.(௪)

பதம்.	உரை.
நிலம்	பூமியிலே
தோய்	படிந்த
நீள்முகில்	மஹாமேகங்கள்
சேர்	ஸஞ்சரிக்கிற
நெறி	வழியை
ஆர்	உடைத்தான
திருவேங்கடவா	ஸ்ரீ வேங்கடாத்ரிக்கு நிர்வாஹகனே ! [ம்
எத்தனை குலமும்	எல்லாக் குலங்களிலு
பிறந்து இறந்து	பிறப்பதுஇறப்பதாய்க்கொண்டு
எய்த்தொழிந் தேன்	இளைத்துப்போனவனாய்

பதம்.	உரை.
ஒருநலமும் இலேன்	ஒருநன்மையும் இல்லாதவனாய்
நல்லது	(பலத்தோடே கூடியிருப்பதாய்) நன்மையையுடைத்தான
ஓர் அறமும்	ஒரு ஸாதநாநுஷ்டானத்தையும்
செய்திலேன்	பண்ணப்பெறாதவனாய்க்கொண்டு
அலந்தேன்	(ஜந்மங்கள்தோறும் திரிந்து) க்லேசித்த அடியேன்

வந்து அடைந்தேன் ; அடியேனை ஆள் கொண்டருள். (௪)

தேன்; †என்செயலைப்பாராதே ஸ்வரூபத்தைப்பார்த்தடிமைகொண்டருளவேணும். †பூர்வவ்ருத்தத்தைப்பார்த்தால் பரஹிம்ஸையாகில் பண்ணிற்று, இப்போதொரு ஸாதநாநுஷ்டானம் பண்ணிவந்தாற்போலே யிருக்கச்சொல்லுகிறதென்னென்ன; அவனையே பார்த்துத் தம்மைப்பாராதே வார்த்தைசொல்லுகிறார். அவனைப்பார்த்தால், (௧) "अरिः प्राणान् परित्यज्य - அரிஃப்ராணாந்பரித்யஜ்ய" என்றிறேயிருப்பது. "प्राणानपि - ப்ராணாநபி" என்னுவிட்டது, † அவற்றைக்குவாலாக நினைத்திராமை. †காலிலேவந்துவிழுந்தவனை முன்புத்தை சாத்ரவம் பாராதே ரக்ஷித்தவிதோரேற்றமோ என்றிருக்குமவராயிற்று. (௫)

தித்யாதி). "அடியேனை" என்றதுக்கு பாவம், (என்செயலை யித்யாதி). "கொண்டருளே" என்ற இதுக்கு சங்காபரிஹாரரூபேண பாவ மருளிச்செய்கிறார், (பூர்வேத்யாதி). "आर्तो वा यदि वा दृप्तः परेषां शरणागतः । अरिः प्राणान् परित्यज्य रक्षितव्यः कृतात्मना - ஆர்த்தோவா யதிவா த்ருப்தஃ பரேஷாம் சரணாகதஃ । அரிஃ ப்ராணாந்பரித்யஜ்ய ரக்ஷிதவ்யஃ க்ருதாத்மநா". (அவற்றை) ப்ராணன்களை, ஆத்மநி பஹுவசநம். குவாலாக நினையாமைக்கு ஹேதுவென்னென்ன; அருளிச்செய்கிறார், (காலிலேயித்யாதி). (௫)

அரு.—நாலாம்பாட்டு. (குலமித்யாதி). "பல்லுயிரைக்கொன்றேன்" என்கைக்கு நீர்தாம் ஆசந்த்ரார்க்கஸ்த்தாயியாயிருந்தீரோவென்ன ; அதொன்

(௧) ரா - யு - ௧௮ - ௨௮.

வ்யா.—நாலாம்பாட்டு. (குலந்தானித்யாதி) † குலங்களெங்கும் பிறந்திறந்து திரிந்தேன். † அநுலோம † ப்ரதிலோமரூபத்தாலே பிறந்தபிறவிக்கு ஓரெல்லையில்லையாயிற்று. † எல்லா ஜந்மங்களிலும் புக்குப் பிறப்பதிறப்பதாய் இனி பிறக்கைக்கீடான கர்மவிசேஷமுண்டாகிலும் பிறக்கைக்கு க்ஷமனல்லாதபடி இளைத்தேன். (நலந்தானொன்றுமிலேன்) † இப்படி அநேகஜந்மங்கள் பிறந்து மரித்துப்போருகிறவிடத்திலும் நடுவேயொரு ஸுக்ருதமாதல் அதுக்கு பல(ஃல)மான ஜ்ஞாநமாதல் உடையேனாயிற்றிலேன். (நல்லதோரறம்செய்துமிலேன்) இப்போது நன்மைபிறக்கைக்கடியாக முன்புசெய்ததொன்றில்லையேயாகிலும், மேலொருநன்மை பிறக்கைக்கீடாக † இப்போது ஏதேனுமொரு ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணுகிறதுண்டோ வென்னில்; பல(ஃல)த்தோடே வ்யாப்தமாயிருப்பதொரு ஸாதநாநுஷ்ட்டாநம்பண்ணப்பெற்றிலேன்.

(நிலமித்யாதி) நிலத்திலே தோய்ந்த மஹாமேகங்களானவை போன அடிப்பாடு ஆர்ந்திருக்குமாயிற்று † கழுத்தே கட்டளையாக நீரைப்பருகி முகந்தநீர்க்கனத்தாலே கால்வாங்கிப்போகமாட்டாதே நகர்ந்து நகர்ந்து துளித்துத்துளித்துக்கொண்டு ஸஞ்சரிக்கிறமேகங்கள் போன அடிப்பாடு தெரியும்படியாயிருக்குமாயிற்று. (அலந்தேன் வந்தடைந்தேன்) ஜந்மபரம்பரைகளிலே அலந்து † மூசித்தேன். (அடியேனை) இனியொருஜந்மம் வருமென்றஞ்சி ஏங்கவேண்டாதபடியான தாஸ்யத்திலே என்னை மூட்டவேணும். ... (ச)

றுமில்லை, நான்பட்டபாட்டைக்கேளீரென்கிறார் என்று ஸங்கதிகண்டுகொள்வது.

"பிறந்தே" என்கிற எவகாரம் பிறவாமலிறப்பில்லாமையால் வ்யாவர்த்தகமன்றென்று பிறப்பினுடைய நைரந்தர்யஸூசகமென்று விவக்ஷித்து பலிதார்த்தமருளிச்செய்கிறார், (குலங்களித்யாதி). பிறப்பும் இறப்பும் விநா வேறு திரிகையில்லையென்றுகருத்து. "எத்தனையும்" என்ற பதத்துக்குத்தாத்பர்யம், (அநுலோமேத்யாதி). (அநுலோமம்) என்றது - உத்க்ருஷ்டவர்ணன் அபக்ருஷ்டவர்ணத்தில் விவாஹம்பண்ணின பெண்பிள்ளைவயிற்றில் பிறக்கை. (ப்ரதிலோமம்) என்றது - அபக்ருஷ்டவர்ணன் உத்க்ருஷ்டவர்ணத்தில் பரிக்ரஹித்த பெண்பிள்ளைவயிற்றில் பிறக்கை. வாக்யார்த்தகதநமுகேந, "எய்த்தொழிந்தேன்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (எல்லாவித்யாதி). "ஒன்றும்" என்றபதவாஸநை (இப்படியித்யாதி). "நலந்தானொன்றுமிலேன்" என்று சொல்லிவைத்து "நல்லதோரறஞ்செய்துமிலேன்" என்ன ப்ரஸக்தியுண்டோவென்ன; அருளிச்செய்கிறார், (இப்போதித்யாதி).

விவரணம். (கழுத்தேயித்யாதி). (மூசித்தேன்) க்லேசித்தேன். ... (ச)

மூ.—எப்பாவம் பலவு மிவையே செய்திளைத் தொழிந்தேன்
துப்பா நின்னடியே தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன்
செப்பார் திண்வரைசூழ் திருவேங்கட மாமலை யென்
அப்பா வந்தடைந்தே னடியேனையாட்கொண்டருளே. (௫)

பதம்.	உரை.
செப்புஆர்	செப்புப்போலேரக்ஷகமாய்
திண்	த்ருடமான
வரை	மலைகளாலே
சூழ்	சூழப்பட்ட
திருவேங்கடமாமலை	திருமலையைவாஸஸ்த்தாநமாகவுடையனாய்,
என்	(ஆஶ்ரிதனான) என்போல்வார்க்கு
அப்பா	உபகாரகனானவனே!
துப்பா	சக்தியையுடையவனே!

பதம்.	உரை.
எப்பாவம்பலவும்இவையே	பலவகைப்பட்டபாபங்களையே
செய்து	பண்ணி
இளைத்தொழிந்தேன்	(இவற்றுக்கு வரக்கடவபலங்களைக்கேட்டு) துக்கித்தவனாய்,
நின் அடி	தேவரீர்திருவடிகளை
தொடர்ந்து	பின்சென்று
ஏத்தவும்	பக்திபூர்வகமாகஆஶ்ரயிக்கவும்
கிற்கின்றிலேன்	சக்தியற்றவனாய்,

வந்து அடைந்தேன்; அடியேனை ஆள்கொண்டருள். ... ...(௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (எப்பாவமித்யாதி) அதிபாதகம், உபபாதகம், மஹாபாதகம் என்றாற்போலே சொல்லுகிற பஞ்சவிதமான பாபங்களை அநுஷ்டித்துப் பின்னை இவற்றுக்கு வரக்கடவ பலங்களைக்கேட்டு க்லேசப்பட்டேன். †இப்படி மஹாபாபங்களையே அநுஷ்டித்துக்கொடுபோராநின்றால் நடுவே யொருஸுக்ருதம் பிறந்து அத்தாலே என்பக்கலிலே ருசியுமுண்டாகப்பெற்றதாகில், (௧) "𑌨 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿 - நமேபக்த: ப்ரணஶ்யதி" என்கிறவார்த்தையை விஶ்வஸித்திருக்கலாமிறே. †மஹாபாபங்களைப் பண்ணினானாகிலும் புருஷோத்தம வித்யையுண்டாக அவனுக்குப்பாபவிமோசநமுண்டாகச் சொல்லாநின்றதிறே. (துப்பா) இப்பாபங்களைப்

அரு.—அஞ்சாம்பாட்டு. (எப்பாவமித்யாதி). இப்படியெல்லாக்குலங்களிலும் புக்குப்பிறக்கைக்கடியான பாபப்ராசுர்யத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"இவையே" என்கிற அவதாரணத்துக்குத் தாத்பர்யகதநமுகேந மேலுக்கவதாரிகையருளிச்செய்கிறார், (இப்படியித்யாதி). அல்பம் பகவத்ருசியுண்டானால் பாபங்கள்போமோ, இவ்வசநத்தை விஶ்வஸிக்கும்படியென்னென்ன; அருளிச்செய்கிறார், (மஹாபாபங்களையித்யாதி). வசநபலத்தாலே விஶ்வஸிக்கத்தட்டென்னென்றுகருத்து.

(௧) கீதை - ௯ - ௩௧.

மூ.—மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவுமாகாசமுமாம்
புண்ணாராக்கைதன்னுள் புலம்பித்தளர்ந்தெய்த்தொழிந்தேன்
விண்ணார்நீள்சிகரவிரையார்திருவேங்கடவா
அண்ணாவந்தடைந்தே னடியேனையாட்கொண்டருளே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
விண்	ஆகாசத்தை	காலாய்	வாயுவாயும்
ஆர்	அளாவும்படி	மஞ்சு	மேகங்கள்
நீள்	உயர்ந்த	உலாவும்	ஸஞ்சரியாநின்றுள்ள
சிகரம்	கொடுமுடிகளையும்	ஆகாசமுமாம்	ஆகாசமுமாகியபஞ்ச
விரை	பரிமளத்தையும்		பூதமயமானதாய்
ஆர்	உடைத்தான	புண்ஆர்	வ்ரணத்தோடொத்த
திருவேங்கடவா	திருமலையைவாஸஸ்த்	ஆக்கை தன்னுள்	தேஹத்திலே (யகப்ப
	தாநமாகவுடையவ	புலம்பி	கூப்பிட்டு [ட்டு)
	னே! [மானவனே!	தளர்ந்து	மெலிந்து
அண்ணா	எல்லாவுறவுமுறையு	எய்த்தொழிந்	மிகவும் இளைத்தவனு
மண்ணாய்	பூமியாயும்	தேன்	னவடியேன்
நீராய்	ஜலமாயும்	வந்தடைந்தேன்; அடியேனை ஆள்கொ	
எரியாய்	அக்நியாயும்	ண்டருள். ... ... (சு)	

போக்கி உன்னைப்பற்றினாரை ரக்ஷிக்கைக்கீடான சக்தியோகத்தை யுடையவனே! (நின்னடியே) பக்திபூர்வகமாக உன்திருவடிகளை வடிம்பிட்டாஸ்ரயிக்க க்ஷமனாயிற்றிலேன்.

(செப்பாரித்யாதி) அரணாகப்போரும்படியான திண்ணியவரைகளாலே சூழப்பட்ட திருமலையை வாஸஸ்த்தாநமாகவுடைய நிருபாதிகபந்துவானவனே! (அடியேனை) என்னுடைய பாபாநுகூலமாகவன்றிக்கே உன்னோடுண்டான நிருபாதிக பாந்தவாநுரூபமான கைங்கர்யத்தில் என்னை மூட்டவேணும். ... ... (ரு)

"செப்பு" என்று ஆபரணத்துக்குரக்ஷகமான பாத்ரமாய், அத்தாலே, (அரணாக)என்றது - திருமலைக்குப்புறமலை ரக்ஷகமாயிருக்கையாலே தம்முடைய ரக்ஷகவஸ்து ஸுரக்ஷிதமாயிருக்கப்பெற்றதென்று திருவுள்ளமென்றுகருத்து.

அரு.—ஆறும்பாட்டு. (மண்ணாயித்யாதி.) இப்படி அதிபாதகாதிகள் பண்ணுகைக்கடி - ஜ்ஞாநதிரோதாநகரமான ப்ராக்ருததேஹஸம்பந்தமென்று, அதுதன்னையநுஸந்தித்து க்லேசித்துச் சரணம்புகுகிறாரென்று ஸங்கதிகண்டு கொள்வது.

"அப்பாவந்தடைந்தேனடியேனையாட்சொண்டருளே" என்றத்தாலே - பித்ருபுத்ரஸம்பந்தமும் தம்முடைய ஸ்வாபாவிகாகாரமுமநுஸந்தித்தவர் பஞ்சபூதாத்மகமான புண்ணாராக்கையிலகப்பட்டமைக்கு ஸத்ருஷ்டாந்தமாகஹேது

மூ.—தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்துமிட்டேன்
பெரியே னாயினபின் பிறர்க்கேயுழைத் தேழையானேன்
கரிசேர் பூம்பொழில்சூழ் கனமாமலை வேங்கடவா
அரியே வந்தடைந்தே னடியேனை யாட் கொண்டருளே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கரி	யானைகள்	சூழ்	சூழப்பட்டு
சேர்	மிக்கிருப்பதாய்	கனம்	த்ருடமாயிருக்கிற
பூ	பூக்கள்நிறைந்த	மாமலை	பெரியமலையான
பொழில்	சோலையாலே		

வ்யா.—ஆரும்பாட்டு. (மண்ணாயித்யாதி)†ராஜபுத்ரன் வேடன் கையிலேயகப்பட்டுத் தன்னை வேடனாக ப்ரமிக்குமாபோலே, நித்யமாய் ஜ்ஞாநாநந்தலக்ஷணமாய் ஏகரூபமாய் ஈஶ்வரசேஷமான ஆத்மவஸ்து கர்மாநுகுணமாக அசித்தோடே ஸம்ஸ்ருஷ்டமாயிற்று. ஏகரூபமானவஸ்து உபசயாத்மகமான தேஹத்திலேயகப்பட்டது. (புண்ணாராக்கை) (க) *†புண்ணைமறையவரிந்திறே உடம்பிலேவைத்தது. அறிவுடையார், (உ) "शरीरं व्रणवत्पश्येत् - சரீரம்வ்ரணவத்பஶ்யேத்" என்று இதுதன்னையே வ்ரணமாகச்சொல்லாநின்றார்களிறே. தேஹத்திலே புக்ககப்பட்டு, பின்னை அங்கேகிடந்து கூப்பிட்டு, அதுதானும் மாட்டாதே தளர்ந்து, பின்னையிளைத்தேன்.

(விண்ணாரித்யாதி) நித்யஸூரிகள் வைகுண்டத்திற்போலே வந்தேத்தும்படியாக ஆகாசாவகாசத்தளவும் வளர்ந்த பெரியகொடுமுடிகளையுமுடைத்தாய், பரிமளப்ரசுரமான திருமலையை வாஸஸ்தாநமாகக்கொண்டுநிற்கிற. (அண்ணா,) கீழே "அப்பா" என்றார்; இங்கே அண்ணா என்னாநின்றார், * தாயே தந்தையென்றும் தாரமே கிளைமக்களென்றும்விட்ட உறவுமுறைக்கெதிர்த்தட்டான எல்லாவுறவுமுறையு மெம்பெருமானே யென்றாயிற்றிவரிருப்பது. (அடியேனை)†வெளிறுகழிந்தால் ஸம்பந்தம் நித்யஸூரிகளோடொத்திருக்குமிறே எனக்கும்; ஆனபின்பு அவர்களைக்கொண்டருளு மடிமையை என்னைக்கொண்டருளவேணும்.... ... ... (சு)

வருளிச்செய்கிறார், (ராஜபுத்ரனித்யாதி). தேஹம் புண்ணாகைக்கு ப்ரமாணங்களை ஸூசிப்பிக்கிறார்,(புண்ணையித்யாதி)."शरीरं व्रणवत्पश्येदन्नं तु व्रणलेपनम् । व्रणसेचनवत्पानं वस्त्रं तु व्रणपट्टवत् -சரீரம் வ்ரணவத்பஶ்யேதந்நந்து வ்ரணலேபநம் | வ்ரணஸேசநவத்பாநம் வஸ்த்ரந்துவ்ரணபட்டவத்" என்று ப்ரமாணசேஷம்.

(வெளிறு) அஸாரம். ... ... (சு)

(க) தி - வாய் - ரு - க - ரு. (உ) § (பா) ஸ்நாநம்.

வேங்கடவா	திருமலையைவாஸஸ்தானமாகவுடையவனே!	பெரியேன்ஆயினபின்	யௌவநத்தையடைந்தபின்பு
அரியே	ஸிம்ஹமே!	பிறர்க்கே	அயலார்க்கேவேண்டுமவற்றையே
பாலகனாய்	சிறுபிள்ளையானபோது	உழைத்து	தேடியிட்டு
தெரியேன்	ஜ்ஞாநஹீநனாயும்	ஏழையானேன்	சதிர்கெட்டுப்போன
பலதீமைகள்	(பின்பு) அநேகமான கொடியசெயல்களை		அடியேன், (இப்பொழுது)
செய்துமிட்டேன்	பண்ணிப்போந்தவனாயும்	வந்தடைந்தேன்; அடியேனைஆள்கொண்டருள் ... ... (எ)	

வ்யா.—ஏழாம்பாட்டு. (தெரியேனித்யாதி)(பாலகனாய்-தெரியேன்) †சிலநாள் அதிசைசவமாய் யுக்தாயுக்தங்களறியாதேகிடந்தேன். †அல்பம் அறிவு பிறந்தபின்பு, தோன்றினபடி பலதீமைகள்செய்து திரிந்தேன். (பெரியேனித்யாதி) அநந்தரம் யௌவநம் முகங்காட்டினவாறே, நல்லதொரு பூக்கண்டால் † என்தலையிலே வையாதே ஸ்த்ரீபரதந்த்ரனாய் அவர்களுக்கே ஆவன தேடி து:கப்பட்டுச் சதிர்கேடனாய் இளிம்பனானேன்.

(கரியித்யாதி) லீலார்த்தமாகஆனைகள்வந்து சேரப்பட்டு பூத்தபொழிலாலே சூழ்ந்து திண்ணியதாயிருக்கிற திருமலையைவாஸஸ்தாநமாகவுடையவனே! (அரியே) என்னுடைய ப்ரதிபந்தகத்தைப் போக்குகைக்கீடான † பராபிபவந ஸாமர்த்யத்தை யுடையவனே!

அந.—ஏழாம்பாட்டு. (தெரியேனித்யாதி) (௧) "విచిత్రా దేహసంపత్తి రీశ్వరాయ నివేదితుమ్- விசித்ராதேஹஸம்பத்தி ரீஸ்வராய நிவேதிதும்" என்றும், (உ) "శరీరమాద్యంఖలు ధర్మసాధనమ్ - சரீரமாத்யம்கலு தர்மஸாதநம்" என்றும் சொல்லுகிறபடியே ஆவஸ்யகமானத்தை "புண்ணாக்கை" என்று நீர் கர்ஹித்துக்கொண்டு வருவானென்னென்ன; அப்படியேயாமிறே உன் (௩)* பூவார்கழல்களிலே ஒரு பூவிடப்பெற்றேனாகில், அங்ஙனன்றிக்கே போனபடியைக் கேளாயென்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான், இளையபெருமாள், ப்ரபந்நஜநகூடஸ்தரான நம்மாழ்வார், இவர்களுக்கெல்லாம் ஆஜந்மஸித்தமான பகவத்ப்ராவண்யம் தலையெடுக்கக்காணாமையாலே தாம் அதிசைசவந்தொடங்கி வ்யர்த்தமே போக்கினபடியை யநுஸந்திக்கிறாரென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார், (சிலநாளித்யாதி). த்ருவன் அஞ்சுவயஸ்ஸிலே பகவத்பஜநம் பண்ணினபடியை யுட்கொண்டருளிச்செய்கிறார், (அல்பமித்யாதி). "பிறர்க்கே" என்கிற ஏவகாரவ்யாவர்த்யம், (என்தலையிலே) என்றது.

"அரி" என்று ஸிம்ஹமாய், அத்தாலே, (பராபிபவநஸாமர்த்யத்தை யுடையவனே) என்றது. (எ)

(௧) விஷ்ணுதத்வம். (உ) (௩) தி-வாய்-௯-௧௦-௪.

மூ.—நோற்றேன் பல்பிறவி யுன்னைக் காண்பதோ ராசையினால்
ஏற்றேன் இப்பிறப்பே யிடருற்றன னெம்பெருமான்
கோற்றேன் பாய்ந்தொழுகும் குளிர்சோலைசூழ் வேங்கடவா
ஆற்றேன் வந்தடைந்தே னடியேனையாட்கொண்டருளே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கோல்	கோல்களில்நின்றும்	ஏற்றேன்	(தேவரீர் கடாக்ஷத்துக்கு)யோக்யனானேன்; (அத்தாலே)
தேன்	மதுவானது		
பாய்ந்து	வழிந்து [ய்		
ஒழுகும்	வெள்ளமிடாநிற்பதா	உன்னை	தேவரீரை [ற
குளிர்	குளிர்த்தியையுடைய	காண்பது	காணவேணுமென்கி
சோலைசூழ்	பொழில்களாலேசூழப்பட்ட	ஓர்	ஒரு
		ஆசையினால்	ஆசையாலே
வேங்கடவா	திருமலையைவாஸஸ்தானமாகவுடையவனே! [ளுக்கு	இப்பிறப்பே	இந்த ஜந்மத்திலேயே
		இடருற்றனன்	(ஜந்மம் த்யாஜ்யமென்று)வருந்தினேன்;
எம்	ஆஶ்ரிதரான எங்க	ஆற்றேன்	(மாறிமாறிவரும்பலபிறவிகளை) ஸஹிக்கமாட்டாதவனாய்,
பெருமான்	மஹோபகாரகனே!		
பல்பிறவி	அநேகஜந்மங்களுண்டாம்படி		
		வந்தடைந்தேன்; அடியேனைஆள்கொண்டருள். ... ... (அ)	
நோற்றேன்	ஸாதநாநுஷ்டாநம் பண்ணிப்போந்த அடியேன்		

(ஆட்கொண்டருளே) பிறர்க்கேயுழையாமே ப்ராப்தவிஷயத்திலே கைங்கர்யத்தைக் கொண்டருளவேணும். ... ... (எ)

வ்யா.—எட்டாம்பாட்டு.—(நோற்றேன் பல்பிறவி) பல்பிறவி நோற்றேன். †எனக்குப் பலஜந்மங்களுண்டாகும்படியாகவாயிற்று

அ௫. எட்டாம்பாட்டு. (நோற்றேனித்யாதி). "பிறர்க்கேயுழைத் தேழையானேன்" என்றிருக்கிறநீர் திருமலையளவும்வந்து சரணம்புகுருகைக்கு நிதாநம்சொல்லிக்காணீரென்ன; நான் ஸம்ஸாரத்தைப் பெருக்கிக்கொள்ளச்செய்தே நீ சில ஸுக்ருதவிசேஷங்களைக் கதிர்பொறுக்கிக் கடாக்ஷித்தாயாக வேணுமென்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

"உன்னைக்காண்பதோராசையினால் - பல்பிறவிநோற்றேன்" என்று யதாஶ்ருதத்திலே தாம் ஸாதநாநுஷ்டாநம் பண்ணினமை தோற்றுகையால், அங்ஙனேயானால், "இடருற்றனன்" "ஆற்றேன் வந்தடைந்தேன்" என்கிற மேலிற்பதங்கள் சேராமையால், "பல்பிறவி" என்றவநந்தரம் உண்டாம்படி என்று அத்யாஹரித்து அர்த்தமருளிச்செய்கிறார், (எனக்கித்யாதி). "ஏற்றேன்

மூ.—பற்றே லொன்றுமிலேன் பாவமேசெய்து பாவியானேன்
மற்றே லொன்றறியேன் மாயனே எங்கள் மாதவனே
கற்றேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனை வேங்கடவா
அற்றேன் வந்தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாயனே	ஆஸ்சர்யகுணசேஷ்டிதங்களையுடையவனே!	கல்தேன்	மலைக்குஹையிலேயிட்டதேனானது
எங்கள்	எங்களுடைய (குற்றங்களைப்பொறுப்பிக்கும்)	பாய்ந்து ஒழுகும்	மிக்கு வெள்ளமிடாநிற்பதாய்
		கமலம்	தாமரைகள்நிறைந்த
		சுனை	அருவிகளையுடைய
மாதவனே	பெரியபிராட்டிக்கு வல்லபனானவனே!	வேங்கடவா	திருமலையில்நித்யவாஸம்பண்ணுமவனே!

நான ஸாதநாநுஷ்டாநம்பண்ணிற்று. இப்படிபிறந்து போராநிற்கச்செய்தே நடுவே யாத்ருச்சிகமாகவொரு ஸுக்ருதம்பிறந்தது, அத்தாலே உன்னைக் காணவேணுமென்றாசை பிறந்து, தேவர்க்காம்படி†யோக்யனானேன். † நீர் யோக்யரென்னுமிடமறிந்தபடி யெங்ஙனேயென்ன; (இப்பிறப்பே யிடருற்றனன்) இஜ்ஜந்மந்தன்னிலே, நாம் நின்றநிலை சாலப்பொல்லாதென்று என்நெஞ்சிலேபட்டது.

(கோல்தேனித்யாதி) கோல்களிலேவைத்த தேனானது பாய்ந்து வெள்ளமிட்டுக் குளிர்ந்த சோலையாலே சூழப்பட்ட திருமலையை வாஸஸ்த்தாநமாகவுடையவனே! (ஆற்றேன்) ஜந்மபரம்பரைகளுக்கு ஆற்றமாட்டாதே திருவடிகளிலேவந்து சரணம்புகுந்தேன். (அடியேனையித்யாதி) † எனக்காற்றாமையுண்டானால் பிறப்பேயாற்றாமையுடையவுன்னை, என்ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைத் தரவேணுமென்று ப்ரார்த்திக்கவேண்டுகிறதென்? † நான்ஆற்றாமையுடையேனாயிருந்தேன்; 'ஆற்றாமை பிறப்பதெப்போதோ! என்றுபார்த்து நிற்குமவனா †யிருந்தாய் நீ. ... ...(அ)

என்றதினர்த்தம், (யோக்யனானேன்) என்றது. "எல்" என்று - தகுதியாய், அத்தாலே பலித்தது இவ்வர்த்தம். நான் யாத்ருச்சிகாதிகளைத்திரட்டிக்கொண்டது நீ ரறிந்தஅத்தாலே என்னும் பகவதபிப்ராயத்தை யருளிச்செய்கிறார், (நீரித்யாதி).

நான் ப்ரார்த்திக்கை மிகையென்னுமத்தையறிந்தே என் செல்லாமையாலே ப்ரார்த்திக்கிறேனென்னு முட்கருத்தை யருளிச்செய்கிறார், (எனக்கித்யாதி). விவரணம், (நானாற்றாமையித்யாதி). (இருந்தாய்நீ) என்ற வநந்தரம் இங்ஙனே இருக்கச்செய்தேயும் ப்ரார்த்திக்கிறேனென்கிறார் என்று பூரிப்பது. ... ... (அ)

ஒன்றுபற்று ஒருவிதமான (ஸுக்ருதாதி) ஆதாரமும்
இலேன் இல்லாதவனாய்
பாவமேசெய்து பாபத்தையேபண்ணி (அத்தாலே)
பாவியானேன் பாபிஷ்டனாய்
மற்று உபாயாந்தரத்தை
ஒன்றும் ஏகதேசமும் [யேன்
அறியேன் அறியாதவனான அடி-
அற்றேன் தேவரீருக்கேஅற்றுத் தீர்ந்தவனாய்,
வந்து அடைந்தேன்; அடியேனையாட்கொண்டருள். ... ...(கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பற்றேலொன்றுமிலேன்) †பகவத்ஸம்பந்தத்தை யறுத்துக்கொண்டு கைகழியப்போன வஸ்துவுக்கு பகவத்ப்ராப்திக்கிடாகச் சொல்லலாவதொரு ஸுக்ருதமில்லை; அதில்லாமையாலே, பாபங்களையேபண்ணி, பின்னை நிரூபிக்குமிடத்தில் ஜ்ஞாநாநந்தாதிகளையொழிய பாபங்களையிட்டு நிரூபிக்கவேண்டும்படியானேன். (மற்றேலொன்றறியேன்) ப்ராப்திக்கிடான உபாயவிஷயஜ்ஞாநமில்லை. (க)†"అహమస్మ్యపరాధానా మాలయః - அஹமஸ்ம்யபராதாநாமாலய:."

(மாயனே) இங்ஙனேயிருந்துள்ளவர்களையும் ரக்ஷிக்கைக்கிடான ஆஸ்சர்யசக்தியுக்தனே! (எங்கள்மாதவனே) இப்படியிருப்பா

அரு.—ஒன்பதாம்பாட்டு. (பற்றேலித்யாதி) யாதருச்சிக ஸுக்ருதமடியாக நாமே யுமக்கு ஸம்ஸாரத்தில் பொருந்தாமையைப் பிறப்பித்தோமாகில் இனி அபேக்ஷிதஸித்திக்குடலான ஸாதநத்திலே நீரிழிகிறீர், அதுக்கு நம்மைச் சரணம்புகுவானென்னென்ன; கார்யபலத்தாலே யொருநன்மை ஸம்பாவிதமாகச் சொன்னே னித்தனைபோக்கி என்னைப்பார்த்தா லொருநன்மையுண்டாக ஸம்பாவிதமோ என்றுநின்றுகொண்டு, திருவயோத்யைக்குப் போகச் சொன்ன பெருமாளை (உ) "స భ్రాతుశ్చరణౌ గాఢం నిపీడ్య రఘునన్దనః । సీతామువాచాతియశా రాఘవం చ మహావ్రతమ్-ஸப்ராதுஸ் சரணௌ காடம் நிபீட்யரகுநந்தந: । ஸீதாமுவாசாதியசா ராகவஞ்ச மஹாவ்ரதம்" என்று பிராட்டியை முன்னிட்டுச் சரணம்புகுந்த இளையபெருமாளைப்போலே * அலர்மேல்மங்கையுறைமார்பனைச் சரணம்புகுகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

"பற்றேல்" என்றது - பற்றாகிலென்றாய், அதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (பகவதித்யாதி). உக்தார்த்தே ப்ரமாணம், (அஹமித்யாதி). "అహమస్మ్యపరాధానా మాలయోऽకిఞ్చనోऽగతిః । త్వమేవోపాయభూతో మే భవేతి ప్రార్థనామతిః । శరణాగతిరిత్యుక్తా సా దేవేऽస్మిన్ప్రయుజ్యతామ్ - அஹமஸ்ம்யபராதாநா மாலயோ கிஞ்சநோ கதி: । த்வமேவோபாயபூதோமேபவேதிப்ரார்த்தநாமதி: । சரணாகதிரித்யுக்தா ஸாதேவேஸ்மிந்ப்ரயுஜ்யதாம்."

(க) பாஞ்சரா -   (உ) ரா-அயோ-ருக-உ.

ழு —கண்ணா யேழுலகுக் குயிராய வெங் கார்வண்ணனை
விண்ணோர் தாம்பரவும் பொழில் வேங்கட வேதியனைத்
திண்ணார் மாடங்கள் சூழ் திருமங்கையர் கோன் கலியன்
பண்ணார் பாடல்பத்தும் பயில்வார்க்கில்லை பாவங்களே. (கO)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏழுலகுக்கு	ஏழுலோகங்களுக்கு	வேதியனை	வேதத்தாலேசொல்லப்படுமவனானஸர்வேஶ்வரன்விஷயமாக
கண்ணாய்	கண்போலேயும்	திண் ஆர்	திண்மையையுடைய
உயிராய்	ப்ராணன்போலேயுமிருக்குமவனாய்,	மாடங்கள்சூழ்	மாடங்களாலேசூழப்பட்ட
எம்	ஆஶ்ரிதரான எங்களையநுபவிப்பிக்கைக்கு	திருமங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு
கார்	மேகம்போன்ற	கோன்	ராஜாவான
வண்ணன்	திருநிறத்தையுடையனாய்,	கலியன்	ஆழ்வாரருளிச்செய்த
விண்ணோர் தாம்	நித்யஸூரிகளுங்கூட	பண் ஆர்	கானயுக்தமான
பரவும்	ஸ்துதிப்பதாய்	பத்துப்பாடலும்	பத்துபாட்டுகளையும்
பொழில்	சோலைகளையுடைய	பயில்வார்க்கு	அப்யஸிக்குமவர்களுக்கு
வேங்கடம்	திருமலையையிருப்பிடமாகவுடையவனாய்,	பாவங்கள்	ப்ரதிபந்தகங்கள்
		இல்லை	நசித்துப்போம்.

ருடைய குற்றங்களையும் பொறுப்பித்து ரக்ஷிக்கைக்கடியான பிராட்டியையுடையையாய் அத்தாலே ஸர்வாபாஶ்ரயபூதனானவனே! (கல் தேனித்யாதி) முழைஞ்சுகளிலேவைத்த தேன்களானவை நிறைந்து வழிந்து வெள்ளமிட்டு ஒழுகிவந்து சுனைகளிலே புகுர அங்கே தாமரைகள் அலருமாயிற்று. (அற்றேன்) தேவர்திருவடிகளிலே வ்யவஸிதனானேன். (அடியேனையாட்கொண்டருளே) †எனக்குப்புறம்பு பற்றில்லையென்றேனே, எனக்குப்பற்றான நீ லக்ஷ்மீபதியாயிருந்தாயே, ஆனபின்பு, என்னுடைய ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைக்கொண்டருளவேணும். ... ... (கூ)

வ்யா.—பத்தாம்பாட்டு. (கண்ணாயித்யாதி)†ஸகலலோகங்களுக்கும் த்ருஷ்டிபூதனாய், ஸத்தாஹேதுவான ப்ராணனாய், அதுக்குமேலே

பாட்டெல்லாம்கடாக்ஷித்துத்தாத்பர்யம், (எனக்கித்யாதி). ... (கூ)
அரு.—பத்தாம்பாட்டு. (கண்ணாயித்யாதி). "ஏழுலகுக்கு-கண்ணாய்" என்றந்வயித்தர்த்தம், (ஸகலேத்யாதி).

என்னை யநுபவிப்பிக்கைக்காக மேகம்போலே ஶ்ரமஹரமான வடிவையுடையனாய், ஏழுலகத்துள்ளாரோபாதி நித்யஸூரிகளு மொரு மூலையிலே புகுந்தேத்துகிற திருமலையை வாஸஸ்த்தாநமாகவுடைய வேதைகஸமதிகம்யனையாயிற்றுக் கவிபாடிற்று.

(திண்ணார்) (க)† "सर्वं च कुशलं ब्रूहि-ஸர்வம்சகுசலம்க்ருஹே" என்னும்படியாயிற்று. (பண்ணார்பாடல்) பண்மிகுந்திருக்குமாயிற்று; இவற்றையப்யஸிப்பார்க்கு ஒருபாபங்களும் வந்துகிட்டாது. பகவத்ப்ராப்திக்கு ப்ரதிபந்தகங்களடங்க ஓடிப்போம். †"பாவமே செய்து பாவியானேன்" என்று இவரும்சொல்லி ஈஶ்வரனும் அத்தைப்பொறுத்தபின்பு இவருக்குப்பாபமில்லையே. †ஸ்ரீவிபீஷணுழ்வானை (உ) "वध्यताम् - வத்யதாம்" என்றபோது அதுக்குவிஷயமானார் கூடவந்த நால்வரும் பின்னை அவத்யரானார்கள், அப்படியே இவருடைய பரிகரமாய் இவருடைய ப்ரபந்தத்தை அதிகரிக்கவே, இவர்கள் பாபங்களைப் போக்குமாயிற்று. ஈஶ்வரனுக்குத் தம் வ்ருத்தஹாநியைச் சொல்லிவைத்து அநந்தரம் "அடைந்தேன்" என்றதுக்குக் கருத்தென்னென்னில்; அதுசொன்னால் அவனிரக்கந்துக்கடியாமே, அவ்விரக்கம் ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்துக்குடலாம். ... ... (க0)

பேரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

இப்போது திண்ணார்மாடம்" என்கைக்குத்தாத்பர்யம், (ஸர்வமித்யாதி). (க) "पङ्कदिग्धस्तु जटिलो भरतस्त्वां प्रतीक्षते। पादुके ते पुरस्कृत्य सर्वं च कुशलं ब्रूहि-பங்கதிக்தஸ்து ஜடிலோபரதஸ்த்வாம்ப்ரதீக்ஷதே।பாதுகேதே புரஸ்க்ருத்ய ஸர்வஞ்ச குசலம் க்ருஹே." ஸ்ரீபரதாழ்வானார்த்திகண்டு பெருமாளெழுந்தருளுவரென்றுநிர்ணயித்து எல்லாரும் தேறிக்களித்திருந்தாற்போலே,ஆழ்வாரார்த்திகண்டு திருவேங்கடமுடையான் ப்ரஸந்நராகக்கடவரென்றுதேறித் திருமங்கையிலுள்ளார் களித்தார்களென்று இவ்வாக்யத்துக்குத் தாத்பர்யம். "திண்ணார்" என்றது - திருமங்கைக்கு விசேஷணம். ஆழ்வார்தாம் "பாவியேன்" என்றன்றோசொன்னார், அவர் ஸம்பந்தங்கொண்டு இவர்கள் பாபங்கள்போம்படியென்னென்ன; அருளிச்செய்கிறார்,(பாவமேயித்யாதி). இதுக்கு த்ருஷ்டாந்தம், (ஸ்ரீவிபீஷணேத்யாதி). "वध्यतामेष तीव्रेण दण्डेन सचिवैस्सह। रावणस्य नृशंसस्य भ्राता ह्येष विभीषणः - வத்யதாமேஷதீவ்ரேணதண்டேநஸசிவைஸ்ஸஹ। ராவணஸ்ய ந்ருசம்ஸஸ்யப்ராதாஹ்யேஷவிபீஷணஃ".

ஜீயர் திருவடிகளே சரணம்.

முதற்பத்தில் - ஒன்பதாந்திருமொழி முடிந்தது.

(க) ரா - யு - கஉஎ - ச. (உ) ரா - யு - கஎ - உஎ.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.
முதற்பத்து - பத்தாந் திருமொழி - கண்ணூர்.

மூ.—கண்ணார் கடல்சூ ழிலங்கைக் கிறைவன்றன்
திண்ணாகம் பிளக்கச் சரஞ் செல வுய்த்தாய்
விண்ணோர் தொழும் வேங்கடமா மலைமேய
அண்ணா அடியே னிடரைக் களையாயே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்ஆர்	இடமுடைத்தான	தொழும்	ஆஶ்ரயிக்கும்படி
கடல்சூழ்	ஸமுத்ரத்தாலே சூழப்பட்ட	மா	பெருமைபொருந்திய
இலங்கைக்கு	லங்கைக்கு	வேங்கடமலை	திருமலையிலே
இறைவன்றன்	தலைவனானராவணனுடைய	மேய	நித்யவாஸம்பண்ணும
திண்	த்ருடமான	அண்ணா	ஸர்வவிதபந்துவுமானவனே !
ஆகம்	சரீரமானது		
பிளக்க	பிளக்கும்படியாக	அடியேன்	சேஷபூதனானஎன்னுடைய
சரம்	அம்புகள்	இடரை	க்லேசத்தை
செல	செல்லும்படி	களையாய்	போக்கியருளவேணும். ... ... (க)
உய்த்தாய்	நடத்தினவனாய்		
விண்ணோர்	ப்ரஹ்மாதிதேவர்கள்		

வ்யா.—கண்ணார்ப்ரவேசம்.—† தம்முடைய வெறுமையைச் சொல்லிக் கைங்கர்யலாபத்துக்காகச் சரணம் † புக்கார்; † பாஷ்யகாரர் சரணம்புக்கவநந்தரம், † "ஸ்தூலஸூக்ஷ்மரூபையான ப்ரக்ருதியைக் கழித்துத் தரவேணும், † அஹங்காரமமகாரங்களைக்கழித்துத்தரவேணும், † விரோதியைப் போக்கித்தரவேணும், † பரபக்த்

அரு.—கண்ணார்கடல்சூழ்ப்ரவேசம்.—கீழ்த்திருமொழியில் இஷ்டப்ராப்தியை அர்த்தித்தார்; இதில் அநிஷ்டநிவ்ருத்தயை ப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கதியருளிச்செய்கிறார், (தம்முடையவித்யாதி). (புக்கார்) என்றவநந்தரம், விரோதிநிவ்ருத்தியை ப்ரார்த்திக்கிறாரிதில் என்றுசேஷம். இஷ்டப்ரார்த்தனையிலேதானே அநிஷ்டநிவ்ருத்திஸித்தியாதோ, தனித்தும் ப்ரார்த்திக்கவேணுமோவென்ன; த்ருஷ்டாந்தகதநமுகேநவிஸ்தரமாகப்ரமேயத்தையுமருளிச்செய்கிறார், (பாஷ்யேத்யாதி). (க) "మదీయానాది కర్మప్రవాహప్రవృత్తామ్ - மதீயாநாதிகர்மப்ரவாஹப்ரவ்ருத்தாம்" என்ற சூர்ணிகையினர்த்தம், (ஸ்தூலேத்யாதி). இதுக்குக்கீழில் (க) "అనాదికాల - அநாதிகால" இத்யாதி சூர்ணையில் ப்ரமேயம், (அஹங்காரேத்யாதி). இதுக்கும் பூர்வமான, (க) "మనోవాక్కాయైః - மநோவாக்காயை:" இத்யாதி சூர்ணிகாபலிதார்த்தம், (விரோதியைப்போக்கித்தரவேணும்) என்றது, இங்கே வ்யுத்க்ரமமாக வெடுத்ததுக்குக்கருத்து - ப்ரக்ருதிவஶ்யதையாலே அஹங்காரமமகாரங்களும் அவற்றாலே பகவதபசாராதிகளும் பிறக்குமென்கிறக்ரமம் தோற்றவேணுமென்கை. (பரபக்த்யாதிகளைப்

(க) கத்யத்ர - க.

யாதிகளைப் பிறப்பிக்கவேணும்" என்று அபேக்ஷித்தாற்போலே, விரோதிநிரஸநசீலனாய் † ஸர்வரக்ஷகனாய் † ஆஸ்ரிதஸ்பர்சமுள்ள த்ரவ்யத்தாலல்லது தரியாதவனாய் † ஆஸ்ரிதஸம்ஸ்லேஷைக ஸ்வபாவனாய் †ஸர்வஸுலபனாயுள்ள ஸர்வேஸ்வரனை, "என்னுடைய விரோதியைப் போக்கித்தரவேணும், உன்னாலல்லது செல்லாமையைப் பிறப்பிக்கவேணும்" என்றபேக்ஷிக்க; † உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் செய்கைக்கன்றோ நாமிங்கேவந்து நிற்கிறது என்று திருமலையில்†நிலையைக்காட்டி, அநந்தரம் இவர்†திருவுள்ளத்திலேவந்து இவர்க்கு †பரபக்த்யாதிகளைப் பிறப்பித்தானென்கிறது இத்திருமொழியில். † ப்ரபந்நனுக்குமுண்டுபக்தி, பக்திமானாகிற அதிகாரிக்குமுண்டு; (க) "నమస్యన్తశ్చమాం భక్త్యా - நமஸ்யந்தஸ்சமாம் பக்த்யா" என்று இரண்டிடத்திலும் சொல்லாநின்றதிறே.

பிறப்பிக்கவேணும்) என்றது-இவையில்லாமையும் கைங்கர்யவிரோதியாகையாலே; ஆகையிறே, ப்ரத்யுக்திரூபமான பகவதுக்த்யநுவாதத்திலே (உ) "పరభక్తి పరజ్ఞాన పరమభక్తి విఘ్నప్రతిహతోపి - பரபக்திபரஜ்ஞாந பரமபக்திவிக்நப்ரதிஹதோபி" என்று விரோதித்வந்தோற்ற வருளிச்செய்தது. (ஸர்வரக்ஷகனாய்) என்றது - (ந) "நீரார்கடலும்" என்றபாட்டைக்கடாக்ஷித்து.(ச) "உண்டாயுறிமேல்" என்றபாட்டின் ப்ரமேயம், (ஆஸ்ரிதேத்யாதி). (ரு) "மானேய்மடநோக்கி"என்ற பாட்டைப்பற்ற, (ஆஸ்ரிதஸம்ஸ்லேஷேத்யாதி).(சு) "கோணாகணையாய்" என்றத்தைப்பற்றவாதல். (எ) "எங்கள் நம்பீ" என்றத்தைப்பற்ற, (ஸர்வஸுலபனாய்) என்றது. (நிலையைக்காட்டி) என்றது - ஸ்ரீஹஸ்தமுத்ரையாலே காட்டினமையைப்பற்ற. (அ) "என்னெஞ்சிலுளான்" என்றத்தைப்பற்ற, (திருவுள்ளத்திலேவந்து) என்றது. (கு) "ஆயனடியல்லது மற்றறியேனே"என்கையைத் திருவுள்ளம்பற்றி, (பரபக்த்யாதிகளைப்பிறப்பித்தான்) என்றது. உபாஸகனுக்கன்றோபக்தி, ப்ரபந்நனுக்கும் வேணுமோவென்ன; அருளிச்செய்கிறார், (ப்ரபந்நனுக்கு மித்யாதி). "సతతం కీర్తయన్తో మాం యతన్తశ్చ దృఢవ్రతాః । నమస్యన్తశ్చమాం భక్త్యా నిత్యయుక్తా ఉపాసతే - ஸததம்கீர்த்தயந்தோமாம் யதந்தஸ்சத்ருடவ்ரதா:।சமஸ்யந்தஸ்சமாம்பக்த்யா நித்யயுக்தா உபாஸதே" "నమస్యన్తశ్చ - "நமஸ்யந்தஸ்ச" என்றது ப்ரபத்திபரமாகவுஞ்சொல்லுகிறது.

முதற்பாட்டு. (கண்ணூரித்யாதி). அபாரபாபஸாகரமத்யே*புண்ணூராக்கையாகிற லங்கையிலே அநந்யார்ஹனானவடியேன் அகப்பட்டு (கo) "ననమేయమ్ - நநமேயம்" என்கிற ஸ்வாதந்த்ர்யாபிமாநவிசிஷ்டமான மநஸ்ஸாலே

(க) கீதை-கூ-கச.   (ச) க-கo-ச.   (எ) க-கo-கூ.   (கப) ரா-யு-ஙரு-கக.
(உ) கத்யத்ர-க.   (ரு) க-கo-எ.   (அ) க-கo-சு.
(ந) க-கo-ந.   (சு) க-கo-ரு.   (கு) க-கo-அ.

மூ.—இலங்கைப் பதிக்கென் றிறையாய வரக்கர்
குலங்கெட் டவர்மாளக் கொடிப்புள் திரித்தாய்
விலங்கல் குடுமித் திருவேங்கடம் மேய
அலங்கல் துளப முடியா யருளாயே. (உ)

பதம்.	உரை.
இலங்கைப்பதிக்கு	லங்காநகரத்துக்கு
என்று	எக்காலத்திலும்
இறையாய	ராஜாக்களாய்
அரக்கர்குலம்	ராக்ஷஸஜாதீயரான
அவர்	அந்தமாலிமுதலியராக்ஷஸர்கள்
கெட்டு	தங்கள்நிலைமைகெட்டு
மாள	நசிக்கும்படி
கொடி	த்வஜமான
புள்	பெரிய திருவடியை (ஏறி)
திரித்தாய்	ஸஞ்சரிப்பித்தவனாய்
விலங்கல்	(சந்த்ர ஸூர்யர்கள்,) விலகிநடக்கும்படி உயர்ந்த
குடுமி	கொடுமுடியையுடைத்தாய்
திருவேங்கடம்	திருவேங்கடமென்னும்பேரையுடைய திருமலையிலே

முதற்பாட்டு. (கண்ணார்கடல்) கண்ணென்று - இடம். இடம் மிக்கிருந்துள்ளகடல். பூமியில் வர்த்திக்கும் பதார்த்தங்களிலு மேற்றமுண்டிறே கடலில்வர்த்திக்குமவை; அவற்றுக்கெல்லாம் வேண்டுமிடம் போந்திருக்கும். அன்றிக்கே, வைத்தகண் வாங்க வொண்ணாதபடி தர்சநீயமான கடலென்னவுமாம். அக்கடலை அகழாக வுடைத்தாகையாலே அரணுடைத்தாயிருக்கிற லங்கைக்கு நிர்வாஹகனாய், அத்தாலே†அபிமாநித்திருக்கிற ராவணனுடைய. (திண்ணாகமித்யாதி) ப்ரஹ்மாஸ்த்ராதிகள் வாய்மடியும்படி தேவதைகள் வரத்தாலே திண்ணிதான உடலானது பிளக்கும்படியாக அம்பு செல்லும்படியாக நடத்தினாய். (விண்ணோரித்யாதி) † ராவணனாலே குடியிருப்பிழந்த தேவதைகள் இப்போது வந்தாஶ்ரயிப்பர்களாயிற்று. ப்ரஹ்மாதிகளாஶ்ரயிக்கும் ஸ்வபாவனாய் திருமலையை வாஸஸ்த்தாநமாகக்கொண்டு ஸந்நிதிபண்ணின நிருபாதிகபந்துவே! (அடியேனித்யாதி) இங்குத்தையிருப்பு இடர் என்று என் நெஞ்சிற்பட்டபின்பு என்கைங்கர்ய விரோதியைப் போக்கியருளவேணும். (க)

அபஹ்ருதனாய்க் கிடக்கிறவடியேனிடரைக் களையவேணுமென்கிறாரென்று, அவதாரிகைகண்டுகொள்வது. (க) "దశేన్ద్రియానసంఘోరం యోమనోరజనీచరమ్। వివేకశరజాలేన శమన్నయతి యోగిరాట్ - தசேந்த்ரியாநநம்கோரம்யோமனோரஜநீசரம் । விவேகசரஜாலேந சமம்நயதியோகிராட்" என்னக்கடவதிறே.
"தன்" என்றதினர்த்தம், (அபிமாநித்திருக்கிற) என்றது. "தன்" என்றத்தாலே - அவன் மதிப்புத்தோற்றுகிறதிறே. ஸமபிவ்யாஹாரதாத்பர்யம், (ராவணனாலேயித்யாதி). ... ... (க)

(க)

மேய	நித்யவாஸம்பண்ணுமவனாய்,	முடியாய்	திருவபிஷேகத்தையுடையவனே!
துளபம்	திருத்துழாயாலாகிய	அருளாய்	க்ருபைசெய்து ரக்ஷித்தருளவேணும்.
அலங்கல்	மாலையாலேஅலங்கரிக்கப்பட்ட		

வ்யா.—இரண்டாம்பாட்டு. †ஆக,கீழ்ப்பாட்டிலும் இப்பாட்டிலும் - அவனுடைய விரோதி நிரஸநசீலதையைச்சொல்லி என் துக்கத்தைப் போக்கித் தரவேணுமென்கிறார்.

(இலங்கைப்பதிக்கித்யாதி) ராவணனுக்குமுன்பு குடியிருந்து போந்த மாலிப்ரப்ருதிகளை நிரஸித்தபடியைச்சொல்லுகிறது.†புற்றானது, என்றும் துஷ்டஸர்ப்பங்கள்மாறாதே போருமாபோலே,என்றுமொக்க ராக்ஷஸருக்குக் குடியிருப்பாயே யாயிற்றுப் போருவது. (குலங்கெட்டவர்மாள) பாதாளத்திலே புக்கு†ஒளிப்பாரும் பட்டுப்போவாருமாம்படி த்வஜமான பெரியதிருவடியைச் †சுழற்றிக்கொடு திரிந்தவனே!(க) ‘‘ఉద్ధూతాంపతాకాంసౌవర్ణైర్భ్రామయతిప్రభుః భూ-கீர்த்திபூதாம் பதாகாம் யோ லோகேப்ராமயதிப்ரபு:’’. (விலங்கலித்யாதி) †திருவேங்கடமென்று திருமலைக்குப் பேருண்டாகையாலே, தன்மேலே ஸஞ்சரிக்கிற சந்த்ராதித்யர்களுக்கு நேர்கொடுநேர் போகவொண்ணாதே விலங்கிப் போகவேண்டும்படி ஓங்கின சிகரத்தையுடைய. (அலங்கலித்யாதி) ரக்ஷணத்துக்கு மாலையிட்டு முடிசூடியிருக்கிற நீ இனி என் † விரோதியைப்போக்குகை யென்றொன்றில்லை, என்பக்கலிலே க்ருபையைப் பண்ணியருளவேணும். ... (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (இலங்கையித்யாதி). அநாத்யவித்யாகர்மவாஸநாநிவ்ருத்திகளையும் பண்ணித்தரவேணுமென்கிறாரென்று விவக்ஷித்து, ஆக இரண்டுபாட்டுக்கும் ஸமுதாயேந க்ரோடீகரித்து அவதாரிகையிடுகிறார், (ஆகவித்யாதி).

இலங்கையாகிற பதிக்கு-ஸ்த்தாநத்துக்கு, என்றும்-நியமேந ‘‘இறையாயவரக்கர்’’ என்கைக்கு, ராக்ஷஸரே ராஜாக்களாகவேணுமோவென்ன; அருளிச்செய்கிறார், (புற்றானதித்யாதி). இத்தால், ப்ராக்ருதமான சரீரமானால் விரோதிவர்க்கம் குறைவற்றிருக்குமென்றதாயிற்று. ‘‘கெட்டு’’ என்றதின் வாஸநை, (ஒளிப்பாரும்) என்றது. (சுழற்றிக்கொடு) - அதிலே யேறிசுசுழற்றிக்கொண்டு. ‘‘விலங்கல்’’ என்று பர்வதத்துக்கும்பேராகையாலே, ‘‘ திருவேங்கடம்’’ என்றத்தோடு பௌநருக்த்யம் வருமென்று, விலங்குதலை இங்குச்சொல்லுகிறதென்கிறார், (திருவேங்கடமித்யாதி). (விரோதியைப்போக்குகையென்றொன்றில்லை) என்றது - ஸவாஹநனாய்வந்து நிரஸிக்கும்படி எதிரம்புகோத்த விரோதியுண்டாய்ப்போக்க வேண்டுவதில்லை யென்கை. அருளவே உருமாயுமவைகிடீர் என்விரோதிகளென்று திருவுள்ளம். ... (உ)

மூ.—நீரார் கடலும் நிலனும் முழுதுண்டு
ஏரால மிளந்தளிர் மேல் துயி லெந்தாய்
சீரார் திருவேங்கட மாமலை மேய
ஆரா வமுதே யடியேற் கருளாயே. (௩)

பதம்.	உரை.
நீர்ஆர்	ஜலம்நிரம்பியிருக்கிற
கடலும்	ஸமுத்ரத்தையும்
நிலனும்	பூமியையும்
முழுது	மற்றுமுள்ளஎல்லாப்பொருள்களையும்
உண்டு	அமுதுசெய்து
ஏர்	அழகியதாய்
இளம்	மிகவும்இளையதான
ஆலந்தளிர்மேல்	ஆலந்தளிரிலே
துயில்	கண்வளர்ந்தருளினவனாய்
எந்தாய்	என்போல்வார்க்குரக்ஷகனாயிருக்குமவனே!
சீர்ஆர்	ஐஶ்வர்யம்மிக்கிருப்பதாய்
மா	பெருமைபொருந்திய
திருவேங்கடமலை	திருமலையிலே
மேய	நித்யவாஸம்பண்ணுமவனாய்
ஆரா	(காலமுள்ளதனையும் அநுபவித்தாலும்) த்ருப்திபிறவாத
அமுதே	அம்ருதம்போலே போக்யனானவனே!
அடியேற்கு	சேஷபூதனான அடியேன்விஷயமாக
அருளாய்	க்ருபைபண்ணவேணும். (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (நீராரித்யாதி).†ஸர்வரக்ஷகனாய் பூமிக்காக நிர்வாஹகனாயிருந்தபடியைச் சொல்லுகிறது.

(நீராரித்யாதி) ஜலராசியையுடைய கடலும், அதுக்கு உட்பட்ட பூமியும், இத்தையடைய வயிற்றிலேவைத்து. (ஏரித்யாதி) கண்வளர்ந்தருளுகைக்கீடான அழகையுடைய ஆலின் முகிழ்விரிந்த வளவானதளிரிலே கண்வளர்ந்து, அந்த அகடிதகடநாஸாமர்த்யத்தைக்காட்டி என்னை அநந்யார்ஹனாக்கினவனே! (சீராரித்யாதி) பரமபதத்திற்காட்டிலும் ஐஶ்வர்யம் மிக்குப்போலேகாணும் திருமலையிருப்பது. (ஆராவமுதே)†இவ்வம்ருதம் ஸ்வர்க்கத்திலல்லபோலேகாணுமிருப்பது. (அடியேற்கு) இதுவே போக்யமென்றிருக்கிறவென்னை இத்தை யநுபவிப்பித்தருளவேணும். ... ...(௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (நீரார்கடலுமித்யாதி). ஒருகடலுக்குட்பட்டலங்கையில் விரோதிகளை நிரஸநம்பண்ணினவளவேயோ, கடல்களையும் பூமியையும் ரக்ஷித்திலையோவென்கிறாரென்று ஸங்கதி யருளிச்செய்கிறார், (ஸர்வேத்யாதி).

"ஆரா" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார், (இவ்வம்ருதமித்யாதி). "திருவேங்கடம்மேய" என்ற ஸமபிவ்யாஹாரஸித்தமாகவுமாம்.

அரு.—நாலாம்பாட்டு. (உண்டாயித்யாதி). மண்ணையுண்டபிள்ளைக்கும், வெண்ணெயுண்டபிள்ளைக்கும், மண்ணையளந்தமாணிக்குமுள்ள ஸாதர்ம்யத்தாலே அத்தை அநுபவிக்கிறாரென்று ஸங்கதி கண்டு கொள்வது.

மூ.—உண்டா யுறிமேல் நறுநெய்யமுதாகக்
கொண்டாய் குறளாய் நில மீரடியாலே
விண்டோய் சிகரத் திருவேங்கடம்மேய
அண்டா அடியேனுக் கருள்புரியாயே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உறிமேல்	உறிகளிலேவைத்த	சிகரம்	கொடுமுடியையுடைய
நறுநெய்	நல்லநெய்யை [டு		
அமுதாக	அம்ருதமாகக்கொண்	திருவேங்கடம்	திருமலையிலே [ருய்
உண்டாய்	அமுதுசெய்தருளினவனே!	மேய	பொருந்தியிருக்குமவ
		அண்டா	அண்டாந்தர்வர்த்திகளான தேவர்களுக்கு நிர்வாஹகனானவனே! [க்கு
குறளாய்	வாமநாவதாரம் செய்		
நிலம்	பூமியை [தருளி		
ஈரடியாலே	இரண்டடியாலே		
கொண்டாய்	அளந்துகொண்டவனே!	அடியேனுக்கு	சேஷபூதனானவென
		அருள்புரியாய்	(உன்கைங்கர்யத்தை) க்ருபைசெய்தருளவேணும்...... (ச)
விண்தோய்	பரமபதத்தளவும்செல்லவோங்கின		

வ்யா.—நாலாம்பாட்டு, (உண்டாயித்யாதி) ஆஶ்ரிதஸ்பர்சமுள்ள த்ரவ்யத்தாலல்லது தரியாதானாய், †அவர்களுக்குத் தன்னைப் பேணாதே கார்யம்செய்யும்படி சொல்லுகிறது. உறிகளிலேசேமித்து வைத்த நறுநெய்யை அம்ருதமாகபுஜித்தாய். (கொண்டாயித்யாதி) ஸர்வாதிகனான நீ வாமநவேஷத்தைப் பரிக்ரஹித்து, பரப்புடைத்தான பூமியை இரண்டடியாலேகொண்டாய். (விண்டோயித்யாதி) பரமபதத்தளவும் செல்லவோங்கின சிகரத்தையுடைய திருமலையிலே பொருந்திநிற்கிறவனே! (அண்டா) †இடையனே! அன்றிக்கே, அண்டாந்தர்வர்த்திகளுக்கு நிர்வாஹகனானவனே! (அடியேனுக்கித்யாதி) †யசோதைப்பிராட்டியும் இந்த்ரனும்பெற்ற பேற்றினளவல்லாத என்னுடைய †கைங்கர்யத்தைத் தந்தருளவேணும். ... (ச)

(அவர்களுக்கு) இந்த்ராதிகளுக்கு. வெண்ணெயுண்டவாயனுக்குறுப்பாகவாதல் மண்ணைக்கொண்டகாலனுக்குறுப்பாகவாதல், "அண்டா" என்றதுக்கர்த்தமருளிச்செய்கிறார், (இடையனேயித்யாதி). அருளாயேயென்னாதே, "அருள்புரியாயே" என்றத்தாலே தா(டா)தவ்யத்தின் பெருமைதோற்றிற்றென்று தாத்பர்யமருளிச்செய்கிறார். (யசோதையித்யாதி). (கைங்கர்யத்தை) என்ற வநந்தரம், விரோதியைப்போக்கி என்றுசேஷம். ... ... (ச)

அரு.—அஞ்சாம்பாட்டு. (தூணாயித்யாதி). வாமநாவதாரத்தைக்காட்டிலும் அத்புதமான வேஷங்கொண்ட முன்புத்தை நரஸிம்ஹத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

மூ — தூணாயதனூடரியாய்வந்துதோன்றிப்
பேணாவவுணனுடலம் பிளந்திட்டாய்
சேணார்திருவேங்கடமாமலைமேய
கோணாகணையாய் குறிக்கொள்ளெனைநீயே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தூணாய்	வெறும்தூணையாயிருக்கிற	மா	பெருமைமிக்கிருந்துள்ள
அதனூடு	அதினுள்ளே	திருவேங்கடமலை	திருமலையிலே
அரியாய்	நரஸிம்ஹமாய்	மேய	பொருந்தி வர்த்திப்பவனாய்
வந்துதோன்றி	வந்தவதரித்து,	கோள்	மிடுக்கையுடைய
பேணா	மதியாத	நாகம்	திருவனந்தாழ்வானை
அவுணன்	ஹிரண்யனுடைய	அணையாய்	திருப்பள்ளியாகவுடையவனே!
உடலம்	மார்பை	எனை	அடியேனை
பிளந்திட்டாய்	இருபிளவாகக்கிழித்துப்பொகட்டவனே!	நீ	தேவரீர்
சேண் ஆர்	மிக்கவுயர்த்தியையுடைத்தாய்	குறிக்கொள்	திருவுள்ளம்பற்றியருளவேணும். (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (தூணாயித்யாதி) இனி†இரண்டுபாட்டாலே தமக்கு உபகரிக்க வொருப்பட்டபடி சொல்லுகிறாராய், † அதுக்குறுப்பாகத் திருமலையிலேவந்து நின்றபடியைச்சொல்லி அநந்தரம் திருவுள்ளத்தில் புகுந்தபடியைச் சொல்லுகிறார்.

(தூணாய்)†முன்பே நரஸிம்ஹத்தைவைத்துப் பண்ணிற்றென்ன வொண்ணாதாயிற்று. (க)† "அளந்திட்டதூணை" என்றாரிறே. (அதனூடு) அதினுள்ளே, நரஸிம்ஹமாய்வந்துதோற்றி. (பேணாவவுணன்) ஸர்வேஶ்வரனைப் பேணாதொழிகையாவது - ஆஶ்ரிதரை நலிகையாயிற்று. (உ) "ममप्राणाहि - மமப்ராணாஹி" என்றானே. ஓக்கம்மிக்கிருக்கிற திருமலையிலேநிற்கிற. (கோளித்யாதி) மிடுக்கையுடைய திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவனே!

(இனி இரண்டுபாட்டாலே) என்ற வநந்தரம் திருவனந்தாழ்வானோபாதி என்னையடிமை கொண்டு கைங்கர்யங்கொண்டருளவேணுமென்று ப்ரார்த்திக்க அவன் என்று இவ்வளவும் கூட்டிக்கொள்வது. இங்ஙனம் கூட்டாவிடில், இப்பாட்டிலும் நெஞ்சில்புகுந்தபடி சொல்லாமையால் சேராதிறே. (அதுக்கு) உபகரிக்கைக்கு.

"தூணாயதனூடு" என்றது தூணேயாயிருக்கிற வதிலே என்றர்த்தமாய், இப்படி விசேஷித்ததுக்குத் தாத்பர்யம், (முன்பேயித்யாதி). தூணாணமையில் புரையில்லை யென்கைக்கு ஜ்ஞாபகமென்னென்ன; அருளிச்செய்கிறார், (அளந்திட்டவித்யாதி).

(க) பெரி-திரு-க-எ-எ. (உ) பார-உத்யோ-

மூ.—மன்னு விம்மனிசப் பிறவியை நீக்கித்
தன்னாக்கித் தன்னின்னருள் செய்யும் தலைவன்
மின்னார் முகில்சேர் திருவேங்கடம்மேய
என்னானை யென்னப்பனென்னெஞ்சிலுளானே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மன்னு	நிலையில்லாத	சேர்	திரண்டுவர்த்தி கிற
இ	இந்த	திருவேங்கடம்	திருமலையிலே [னாய்,
மனிசப்பிறவியை	மநுஷ்யஜந்மத்தை	மேய	பொருந்தியிருப்பவ
நீக்கி	விடுவித்து	என்	என்னையநுபவிப்பிக்கைக்கு
தன்	தனக்கு	ஆனை	ஆனைபோலே அழகிய வடிவுடையனாய்,
ஆக்கி	ஆளாக்கிக்கொண்டு	என்	எனக்கு [வன்
தன்	தன்னுடைய	அப்பன்	மஹோபகாரகனான
இன்அருள்	பரமக்ருபையை	என்	என்னுடைய
செய்யும்	பண்ணுநிற்கும்	நெஞ்சிலே	மனஸ்ஸிலேயே
தலைவன்	தலைமையையுடைய	உளான்	நித்யவாஸம்பண்ணுகிறான். (௬)
மின்	மின்னலாலே [னாய்,		
ஆர்	நிறைந்திருந்துள்ள		
முகில்	மேகங்களானவை		

(க)"ప్రకృష్టవిజ్ఞాన బలైకధామని-ப்ரக்ருஷ்ட விஜ்ஞாநபலைகதாமநி." (குறிக்கொளித்யாதி) ப்ராப்தியொத்திருந்தபின்பு † அவன்பெற்றபேறு நானும் பெறுவேனாகத் திருவுள்ளம்பற்றவேணும். ... (௫)

வ்யா.—ஆறும்பாட்டு. †உம்முடையபக்கல் விலக்காமைக்கு அவஸரம்பார்த்திருக்கிற நாம் உம்மை இரக்கவிட்டுவைப்புதோமோ என்று இசைவுபெற்றவாறே, நெஞ்சிலேவந்து புகுந்தான்.

(மன்னுவித்யாதி) அஸ்த்திரமான இம்மநுஷ்ய ஜந்மத்தில் நின்றுமென்னை நீக்கி. (தன்னாக்கி) தன்னோடொக்கப்பண்ணி யென்னுதல்; தனக்காக்கியென்னுதல்; (உ)† "నిరఞ్జనః పరమం సామ్యముపైతి - நிரஞ்ஜநஃபரமம் ஸாம்யமுபைதி". (தன்னின்னருளித்யாதி) இவ்வளவும்செய்து பின்னையும் ஒன்றும் செய்யாதானாய்த் தன்பேறான

(அவன்பெற்றபேறு) - திருவனந்தாழ்வான்பெற்றபேறு. (௫)

அரு.—ஆறும்பாட்டு. (மன்னுவித்யாதி). கீழ்ப்பாட்டில், "குறிக்கொள்" என்றவர் இப்பாட்டில் "என்னெஞ்சிலுளானே" என்று தம்மிலே அநுஸந்திக்கைக்கு ஸங்கதியருளிச்செய்கிறார், (உம்முடையவித்யாதி).

"தன்னோடொக்கப்பண்ணி" என்றதுக்கு ப்ரமாணம், (நிரஞ்சநஇத்யாதி). * ஸ்ரீவேங்கடாத்ரிசிகராலயகாளமேகத்தோடுஸாம்யந்தோற்ற "மின்

(க) ஸ்தோ - ர - ௩௯. (உ) முண்ட - ௩ - க.

மூ.—மானேய் மடநோக்கி திறத்தெதிர் வந்த
ஆனேழ் விடைசெற்ற வணிவரைத் தோளா
தேனே திருவேங்கட மாமலைமேய
கோனே என்மனம் குடிகொண் டிருந்தாயே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மான்	மான்விழியை	தோளா	திருத்தோள்களையுடையவனே!
ஏய்	ஒத்திருப்பதாய்	தேனே	எனக்குத்தேன்போலேஇனியனே!
மடம்	அழகிதாயிருந்துள்ள	மா	பெருமைபொருந்திய
நோக்கிதிறத்து	திருக்கண்களையுடையளான நப்பின்னைப்பிராட்டிவிஷயமா[க	திருவேங்கடமலை	திருமலையிலே
எதிர்வந்த	பகைத்துவந்த	மேய	பொருந்தி வர்த்திக்கி[றவனாய்
ஆன்	பசுக்களுக்குள்ளே (இச்சைப்படிதிரியவிட்ட)	கோனே	என்னையடிமைகொண்டவனே!
ஏழ்விடை	ஏழுருஷபங்களையும்	என்	அடியேனுடைய
செற்ற	கொன்றவனாய்,	மனம்	மனஸ்ஸை
அணி	அழகுமிக்கிருப்பதாய்	குடிகொண்டு	வாஸஸ்தானமாகக் கொண்டு
வரை	மலைபோலேதிண்ணிதான	இருந்தாய்	நிலைபெற்றிராநின்றாய். (எ)

வருளைப்பண்ணும் தலைமையையுடையவன். (மின்னுரித்யாதி)† மேகமும் மின்னும் சேர்ந்தவிது, பிராட்டியுமவனும் சேர்ந்தாற்போலேயாயிற்றிருப்பது. (என்னானை) ஸதா தர்சநீயனாயிருக்குமவன். (என்னப்பன்) எனக்கு மஹோபகாரகனானவன். உமக்குப்பண்ணின உபகாரந்தானென்னென்ன; (என்னெஞ்சிலுளானே) என்னெஞ்சிலே வந்து புகுந்து†போகமாட்டுகிறிலன். ... ... (சு)

வ்யா.—ஏழாம்பாட்டு. (மானேயித்யாதி)†மானேய்ந்த நோக்கையுடையளாயிருக்கிற நப்பின்னைப்பிராட்டிக்கு ஸ்ப்ருஹாவிஷயமா

னார்" இத்யாதியை யருளிச்செய்தாரென்கிறார், (மேகமுமித்யாதி). "உளானே" என்கிற ஏவகாரலப்தார்த்தம், (போகமாட்டுகிறிலன்) என்றது. (சு)

அரு.—ஏழாம்பாட்டு. (மானேயித்யாதி). நெஞ்சிலே புகுந்துபோகமாட்டாதவளவேயோ, தன்வீர்யசுல்கத்தாலே லப்தையான நப்பின்னையும் தானுமாகக் குடியாயிருந்தானென்கிறாரென்று அவதாரிகை கண்டுகொள்வது.

"மானேய் - நோக்கிதிறத்து" என்றதுக்குத் தாத்பர்யம், (மானேய்ந்தவித்யாதி). அவள் தன் வீரவாசியைக்கண்டு ஆசைப்படும்படி என்று கருத்து

மூ.—சேய னணிய னென சிந்தையுள் நின்ற
மாயன் மணிவாளொளி வெண்ட ரளங்கள்
வேய் விண்டுதிர் வேங்கடமா மலைமேய
ஆயனடியல்லது மற்றறியேனே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சேயன்	(பற்றாதார்க்கு) மிகவும் தூரஸ்த்தனாய்	வேய்	மூங்கில்களானவை
அணியன்	(பற்றினார்க்கு,) மிகவும் ஆஸந்நனாய்	விண்டு	பிளவுபட்டு
		உதிர்	சிந்திக்கிடப்பதாய்
		ஒளி	ப்ரகாசத்தையும்
என	என்னுடைய	வெண்	வெண்மைநிறத்தையுமுடைத்தான
சிந்தையுள்	மநஸ்ஸிலே		
நின்ற	நித்யவாஸம்பண்ணுமவனாய்	தரளங்கள்	முத்துக்களையும்
மாயன்	ஆஸ்சர்யபூதனாய்	வாள்	ஒளியையுடைத்தான

யிருக்கைக்காக. †மானினுடைய நோக்குப்போலே முக்த்தமான நோக்கையுடையளாய், அவ்வளவன்றிக்கே †ம்ருதுவாயிருக்குமாயிற்று. (எதிர்வந்த) பகைத்துவந்த ருஷபங்களையுமழியச்செய்த. (அணிவரைத்தோளா) †நப்பின்னைப்பிராட்டிக்கு ஸ்ப்ருஹாவிஷயமாய், ருஷபங்களுக்கு இளகாத திண்ணிதான தோளையுடையவனே! (தேனே) நப்பின்னைப்பிராட்டிக்காகத் தன்னைப்பேணாதே ருஷபங்களின் மேலேவிழுந்து பண்ணினவ்யாபாரம், அநுஸந்திக்கிற தம்நெஞ்சுக்கு இனிதாயிருக்கிறபடி. (திருவித்யாதி) அத்தேன்குடிகொண்டவிடமாயிற்று. (கோனே) என்னை அடிமைகொள்ளுகைக்காகத் திருமலையிலேவந்து ஸந்நிஹிதனாய், உன்னுடைய நிரதிசயபோக்யதையைக்காட்டிஎன்னை அநந்யார்ஹமாக்கினவனே! (என்னித்யாதி) ருஷபங்களையழியச்செய்து நப்பின்னைப்பிராட்டியை லபித்து, அவளோடேகூட, (க) †“அரவத்தமளியினோடும்” என்கிறபடியேவந்து, இனி ஒருகாலும் பேரான் என்று தோற்றும்படியிருந்தானாயிற்று.()

நோக்கிலேமடப்பமுந்தோற்றுமென்று விவக்ஷித்து, வாக்யபலிதார்த்தம், (மானினுடையவித்யாதி). (ம்ருதுவாயிருக்கும்) என்றது - பவ்யதைதோற்றவிருக்குமென்றபடி. “அணி, வரை” என்கிற விசேஷணத்வயத்துக்கும் ப்ரயோஜநமருளிச்செய்கிறார். (நப்பின்னையித்யாதி). இத்தால், அவள் கண்ணாலேகாண இவன் தோளாலேதழுவினானென்றும், இவன் கண்ணழகுக்குத் தோற்றுத்தழுவ அவள் தோள் மிடுக்குக்குத் தோற்றாளென்றும் திருவுள்ளமென்று ஹ்ருதயம். “ஏழ் - ஆன் - விடை” ஆன்களுக்குள்ளே யதேச்சாவிஹாரம்பண்ணவிட்ட விடைகளையென்று சப்தார்த்தங்கண்டுகொள்வது. (அரவத்தமளி) சேஷனாகிறபடுக்கை. ... ... (எ)

(க) பெரி - திரு - ரு - உ - கo.

மணி	ரத்நங்களையுமுடைத்தாய் [ள்ள	ஆயன்	இடையனான க்ருஷ்ணனுடைய
மா	பெருமைமிக்கிருந்து	அடியல்லது	திருவடிகளையொழிய
வேங்கடமலை	திருமலையிலே [னாய்	மற்று	வேறொன்றையும்
மேய	பொருந்தியிருப்பவ	அறியேன்	ஒருபொருளாகமதித்தறியேன். (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. †ருஷபங்களையழியச்செய்து நப்பின்னைப்பிராட்டியைக் கைப்பிடித்துக்கொண்டு என்னுடைய ஹ்ருதயத்திலேவந்து புகுந்தபின்பு, இனி இக்†கார்ஹஸ்த்யத்துக்கு †எடுத்துக் கை நீட்டுகையொழிய †வேறெனக்கொன்றறியேனென்கிறார்.

(சேயனணியன்) அநாஸ்ரிதர்க்கு அத்யந்ததூரஸ்த்தனாய் ஆஸ்ரிதர்க்கு அத்யந்தம் ஆஸந்நனாயிருக்குமிறே. † இரண்டும், பாண்டவர்கள் விஷயத்திலும் துர்யோதநாதிகள் விஷயத்திலும் காணலாமிறே. உகப்பார்க்கு அவன்கையாளாயிருக்குமென்னுமிடம் நீர் † எங்கேகண்டு சொல்லுகிறீரென்ன ; (என சிந்தையுள் நின்றமாயன்) † நான் அபேக்ஷியாதிருக்க என்னுடைய ஹ்ருதயத்திலேவந்து புகுந்து நித்யவாஸம்பண்ணுகிற ஆஸ்சர்யபூதன். (மணியித்யாதி) வா

அரு.—எட்டாம்பாட்டு. (சேயனித்யாதி). ஆயனடியல்லது மற்றறியேனே என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை (ருஷபங்களையித்யாதி). (கார்ஹஸ்த்யத்துக்கு) இவ்விருவருடைய கார்யத்துக்கு. (எடுத்துக் கைநீட்டுகை) - பரிசாரக க்ருத்யம். (வேறெனக்கொன்றறியேன்) என்றது - * மன்னாவிம்மனிசப்பிறவியை நீங்கப்பண்ணுவித்துக்கொண்டு அவன் வர்த்திக்கிற தேசவிசேஷப்ராப்திமுதலானவை எனக்குப் புருஷார்த்தமாகத் தோற்றவில்லை இப்போதென்றபடி.

மேலுக்கவதாரிகை, (இரண்டுமித்யாதி வாக்யத்வயமும்). (எங்கேகண்டு) என்றதுக்கு - பாண்டவர்கள் விஷயத்தில் கண்டுசொல்லுகிறீரோவென்றபடி, இவ்வாழ்வார், "அடியேனையாட்கொண்டருளே," "அடியேனிடரைக்களையாயே," குறிக்கொள்ளெனைநீயே" என்றுகொண்டு, அவனிருக்கும்தேசத்தில் போகை உத்தேஸ்யமாய் அவ்விடத்தில் கைங்கர்ய தத்விரோதிப்ராப்தி பரிஹாரங்களையே ப்ரார்த்தியாநிற்கவும், அவன்றனக்கு இவர் நெஞ்சில் வருகை உத்தேஸ்யமாய் இவரந்தரங்கவ்ருத்திகளி லபேக்ஷையாலே மஹிஷீஸஹிதனாய் அவஸரம்பெற்றவாறே புகுந்து கொடுநின்றான், இதைக்கண்டு, "என சிந்தையுள் நின்ற மாயன்" என்கிறாரென்று விவக்ஷித்துத்தாத்பர்யமருளிச்செய்கிறார், (நானித்யாதி). இங்ஙனன்றாகில், கீழ் - ஸாமாந்யேந ப்ரார்த்தித்ததைத்தோற்றப் பாட்டுக்கள் பலவுண்டாகையாலே, நானபேக்ஷியாதிரு

மூ.—வந்தா யென்மனம் புகுந்தாய் மன்னி நின்றாய்
நந்தாத கொழுஞ்சுடரே எங்கள் நம்பீ
சிந்தா மணியே திருவேங்கடம் மேய
எந்தாய் இனி யானுன்னை என்றும் விடேனே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நந்தாத	விச்சேதமில்லாத	எந்தாய்	என்னுடைய பந்துவே!
கொழு	ஸம்ருத்தமான	வந்தாய்	(நானிருக்குமிடத்தில்) வந்துகிட்டினாய்;
சுடரே	ஔஜ்வல்யத்தையுடையவனே!	என்மனம்	என்னுடையஹ்ருதயத்தில்
எங்கள்	அபூர்ணரானஎங்களுடையகுறைகளைத் தீர்க்கவல்ல	புகுந்தாய்	ப்ரவேசித்தாய்;
நம்பீ	பூர்ணனே	மன்னிநின்றாய்	(என் ஹ்ருதயத்திலேயே) பொருந்தியிருந்தாய்;
சிந்தா	நினைத்தமாத்ரத்தில் (ஸகலமநோரதங்களையும்கொடுக்கவல்ல)	இனி	இனிமேல்
மணியே	ரத்நமே!	யான்	நான்
திருவேங்கடம்	வேங்கடாசலத்தில்	உன்னை	இப்படி உபகாரசனான உன்னை
மேய	பொருந்திவர்த்திக்கிறவே!	என்றும்	எப்பொழுதும்
		விடேன்	விடமாட்டேன். (கூ)

ளென்றும் ஒளியென்றும் - ஒளி; இவையிரண்டும் செய்வதென்னென்றால், † (மணிவான்ஒளிவெண்டரளங்கள்) ஒளியையுடைத்தான ரத்நம், ஒளியையுடைத்தாய் ‡நீர்மையையுடைத்தாயிருக்கிற முத்துக்களை, வேய்விண்டு உதிராநிற்குமாயிற்று-மூங்கில்களானவை முற்றி வெடித்து முத்துக்களைச்சொரியாநிற்குமாயிற்று; இப்படிப்பட்டதிருமலையை வாஸஸ்தாநமாகவுடைய. (ஆயன்) நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனென்னுமிடத்துக்கு ஸூசகமிறேயிது. (அடியித்யாதி) ‡இதரநிரபேக்ஷனவன் அநந்யகதியாய்க்கொண்டு என்பக்கலிலேவந்து புகுர ஸாபேக்ஷனான நான் அவனைவிட்டுப் போவேனோ. ? ... ... (அ)

க்க என்னக்கூடாது. ப்ரதீக க்ரஹணபூர்வகம் ப்ரஶ்நம் பண்ணுகிறார், (மணியித்யாதி). "வாள்" என்றது, * மணிவிசேஷணமாகவும், "ஒளி" என்றது * தரளத்துக்கு விசேஷணமென்றும், ப்ரத்யுத்தரமானமையைக்காட்டாநின்றுகொண்டு, ப்ரதீகக்ரஹணபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார், (மணிவாளொளியித்யாதி). "வாள் - மணி" என்றது * வேங்கடத்துக்கு விசேஷணம். * வெண்மையினர்த்தம், (நீர்மையையுடைத்தாய்) என்றது. ரத்நங்களும் முத்துக்களும் கொழிக்கிற தேசவாஸத்தால் பலித்தவர்த்தம், (இதரநிரபேக்ஷனவன்) என்றது. ... ... (அ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (வந்தாய்) ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாயிருக்க, இவரபேக்ஷியாதிருக்கச் செய்தேயும் †நானிருந்தவிடம் தேடிவந்து புகுந்தானாயிற்று வரவேண்டாமென்று விலக்கமாட்டாதேயிருந்தார், அதுவே பற்றாசாக ஹ்ருதயத்திலேவந்து புகுந்தான். (மன்னிநின்றாய்) முன்பு புகுரமாட்டாதேநின்றது உறவில்லாமையன்றிறே,இத்தலையி லிசைவு கிடையாமையிறே; இனிப் போகில் புகுர அரிதாமென்று அதுவே நிலையாக நின்றானாயிற்று. †இப்படியிருக்கிறவிடத்து, ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாக விருக்கக்கடவ நாம் இங்கே வந்து சிறைப்பட்டோமென்னும் இன்னாப்போடன்றிக்கே, இவர்பக்கலிலே புகுந்திருக்கப்பெற்றவிது பெறாப்பேறாய், தனக்குப் பண்டில்லாத ஐஶ்வர்யம் பெற்றானாய் உஜ்ஜ்வலனாகாநின்றானாயிற்று. (நந்தாதகொழுஞ்சுடரே) விச்சேத மில்லாத ஔஜ்ஜ்வல்யத்தையுடையவனே!. (எங்கள்நம்பீ) இப் †பாழும்தாறை ஒருபடிநிரப்புகை. (சிந்தாமணியே) † இவன் ஒன்றை எனக்கு என்றுநினைப்பதுகாண் நாமத்தைக் கொடுக்கைக்கு என்றிராநின்றானாயிற்று. †ஜ்ஞாநம் பிறந்தாலும். உபேக்ஷியாதரத்நம். (திருவேங்கடம் மேயவெந்தாய்) திருமலையிலேவந்து புகுந்து உன்னுடைய ஸ்வாமித்வத்தைக்காட்டி என்னை அநந்யார்ஹனாக்கினவனே!

அரு.—ஒன்பதாம்பாட்டு. (வந்தாயித்யாதி) "ஆயண்டியல்லது மற்றறியேன்" என்று தம்மிலே தாமநுஸந்திக்கவே, எம்பெருமான், இவர்மற்றொன்று சிலவற்றை ப்ரஸங்கித்தார், அவற்றையறிந்துவிட்டாராயருளிச்செய்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

(நானிருந்தவிடம்) * அஹமர்த்தமிருந்தவிடம். அன்றிக்கே, (இருக்கச்செய்தேயும்) என்றவநந்தரம், வந்தானாயிற்று என்றுபூரித்துக்கொண்டு, வ்யாக்யாத்ருவாக்யமாக்கிக்கொள்வது. (நானித்யாதி). "புகுந்தாய்" என்றதுக்கு ஆழ்வாருடைய ஹார்த்தபாவமென்று கண்டுகொள்வது. மேலுக்கவதாரிகாஸூசகமாக தாத்பர்யமருளிச்செய்கிறார், (இப்படியித்யாதி). (பாழும்தாறை) ஆழமானபள்ளத்தை. சிந்தாவிஷய பலப்ரதமான மணியென்றர்த்தமாக்கித் தாத்பர்யமருளிச்செய்கிறார், (இவனித்யாதி.) ஸர்வதாசிந்தாவிஷயமான மணியென்றர்த்தமாக்கி, த்யாஜ்யமான மணியுண்டோ இப்படி விசேஷிக்கைக்கென்ன; அருளிச்செய்கிறார், (ஜ்ஞாநமித்யாதி). (க) "ரத்நாநிதநதாந்யாநி" என்று ஜ்ஞாநிக்குத்யாஜ்யங்களுண்டிறே என்று திருவுள்ளம். அன்றிக்கே, சிந்துதல் - சிதறுதலாய், அதில்லாமணியென்றர்த்தமாக்கி, அத்தால் பலிதார்த்தம், (ஜ்ஞாநமித்யாதி) என்றுமாம். (நிற்கிற

(க) கத்யத்ர - க.

மூ.—வில்லார் மலி வேங்கட மாமலைமேய
மல்லார் திரடோள் மணிவண்ண னம்மானைக்
கல்லார் திரடோள் கலியன் சொன்னமாலை
வல்லாரவர் வானவ ராகுவர் தாமே. (கo)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

பதம்.	உரை.	பதம்.	உரை.
வில்லார்	வில்லையிடைவிடாமல்தரித்துநிற்கும் திருவேடுவர்கள்	கல்	கல்லோடு
மலி	மிக்கிருக்கிற	ஆர்	ஒத்ததாய்
வேங்கடமாமலை	திருமலையிலே	திரள்	திரட்சியையுடைய
மேய	பொருந்திவர்த்திப்பவனாய்	தோள்	தோள்களையுடைய
மல்ஆர்	மிடுக்குமிக்கதாய்	கலியன்	ஆழ்வாரான
திரள்	திரண்டிருந்துள்ள	சொன்ன	அருளிச்செய்த
தோள்	தோள்களையும்	மாலை	மாலாரூபமானஇப்பத்துப்பாட்டையும்
மணி	நீலரத்நம்போன்ற	வல்லாரவர்தாம்	பொருளோடேகற்கவல்லார்கள்
வண்ணன்	திருநிறத்தையுமுடையனான	வானவராகுவர்	நித்யஸூரிகளைப்போலேகைங்கர்யம்பண்ணப்பெறுவர்கள். (கo)
அம்மானை	ஸர்வேஸ்வரன்விஷயமாக		

(இனியித்யாதி)எனக்காக வந்து†நிற்கிறநிலையை விடாய், ஆனபின்பு நானுனக்காம்படி †பற்றின பற்று விடுவேனோ?(என்றும்) இத்தால், †பரபக்திபர்யந்தமாகப்பிறந்ததென்றபடி.†அரைக்ஷணமவனையொழியச் செல்லாமையுண்டாகையிறே பரபக்தியாவது; வ்யதிரேகத்தில் ஜீவியாதபடியானார். ... ... (கூ)

வ்யா.—பத்தாம்பாட்டு.(வில்லாரித்யாதி)†பரமபதத்திலே நித்யஸூரிகள் அஸ்த்தானே பயசங்கைபண்ணிப்பரியவிருக்குமவனிறே ஸம்ஸாரத்திலேவந்து ஸந்நிதிபண்ணினான்; ஸம்ஸாரமாகையாலே ஸ்த்தானே பயமாயிருக்குமிறேயிங்கு; ஆகையாலே, அங்குத்தைத் திருவேடுவர் எப்போதும் ஏறிட்டவில்லுந்தாங்களுமாய் உணர்ந்து

நிலையை) - திருமலையில் நிற்கிறநிலையை. (பற்றினபற்று) - என்னெஞ்சிலே நீ பற்றினபற்று. "என்றும்" என்றது - அல்பகாலவிவக்ஷயாவருளிச்செய்கிறார், (அரையித்யாதி). (பரபக்தி) என்றதுக்கு - பரமபக்தியிலேதாத்பர்யம். (க) "𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌲𑍇𑌷𑌭𑍀𑌰𑍁𑌤𑍍𑌵𑌂𑌪𑌰𑌮𑌾𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 புநர்விஶ்லேஷபீருத்வம் பரமாபக்திருச்யதே" என்னக்கடவதிறே. ... ... (கூ)

அரு.—பத்தாம்பாட்டு. (வில்லாரித்யாதி). வில்லைநிரூபகமாகவுடையவேடரால், மலி-ஸம்ருத்தமாயிருக்கிற, வேங்கடமென்று விசேஷித்ததுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (பரமபதத்திலேயித்யாதி). "திரள் - மாம்ஸள

(க)

நோக்குவர்களாயிற்று, ஸ்ரீகுஹப்பெருமாள் இராவெல்லாமுணர்ந்து நோக்கினாற்போலே. (மல்லாரித்யாதி) ஸிம்ஹம்கிடந்த முழைஞ்சை யாயிற்று இப்படியுணர்ந்து நோக்குகிறது. மிடுக்குமிக்கதோளை யுடைய தர்சநீயமான வடிவையுடையனான ஸர்வேஶ்வரனை. (கல்லாரித்யாதி) †இருவர்க்கு மரணாகப்போரும்படியாயிற்றுத் திருமங்கை யாழ்வார் தோள்மிடுக்கிருக்கும்படி. (வல்லாரித்யாதி) இவற்றை அப்யஸிக்க வல்லவர்கள், நித்யஸூரிகளுடைய நித்யகைங்கர்யமே தங்களுக்கு யாத்ரையாகப் பெறுவர்கள். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

மான. ஆர்தல் - பொருந்துதலாய், கல்லோடொத்ததோளென்று விசேஷிக்கைக்குத்தாத்பர்யம், (இருவர்க்குமித்யாதி). வேடர்க்கும் வேங்கடத்தானுக்கு மென்றபடி. ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

முதற்பத்தில் - பத்தாந்திருமொழி முடிந்தது.

ஆக, திருமொழி - ௧௦ - க்கு, பாசுரம் - ௧௦௦.

முதல்பத்து ஸம்பூர்ணம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி-உ-பத்து-க-திருமொழி

வானவர்ப்ரவேசம்.

(க) † "அடைந்தேனடியேனையாட்கொண்டருளே" என்றும், (உ) "இனியானுன்னையென்றும்விடேன்" என்றும், கைங்கர்ய லாபத்துக்காகத் திருவடிகளிலேவந்து சரணம்புக்கு, இக்கைங்கர்யந்தான் நித்யமாய்ச்செல்லவேணுமென்னும்படி அதிலே ப்ரேமம் பிறந்ததாய் நின்றது; நமக்கிப்படி இந்த ஸமாதிதான் பிறக்கைக்கடியென்னென்றுராய்ந்துபார்த்தார், உபகாரஸ்ம்ருதிக்காக; அத்தையாராய்ந்தவாறே, (ந) "மந ஏவ - மநஏவ" என்கிறபடியே-†நாட்டார் பாஹ்யராயும் குத்ருஷ்டிகளாயு மநர்த்தப்பட்டுப்போராநிற்க, நமக்குக் கைங்கர்யலாபத்துக்காகத் திருவடிகளிலே விழுந்து சரணம்புகுகையும், அதுதான் அவிச்சிந்நமாய்ச் செல்லவேணுமென்னும்படியான ருசிபிறக்கையும், இஸ்ஸம்ருத்திக்கடி இந்நெஞ்சிறேயென்று தந்திருவுள்ளத்தைக் குறித்து, உன்னாலே இந்தஸம்ருத்தியெல்லாமுண்டாயிற்றென்று †திருவுள்ளத்தோடே கூட்டி † இனியராகிறார்.

அரு.—வானவர் ப்ரவேசம்—முதற்பத்தால் - திருமந்த்ர லாபத்தையும், மந்த்ரார்த்தாநு ஸந்தாநம் செய்தருளினபடியையும், மந்த்ரம் விளைந்த நிலத்தில் தமக்குண்டான ப்ராவண்யத்தையு மருளிச்செய்து, மற்றும் ஸ்ரீஸாளக்ராம ஸ்ரீநைமிசாரண்ய ஸ்ரீஅஹோபில ஸ்ரீவேங்கடாசலங்களில் ப்ராவண்யத்தாலே அவற்றை அநுபவியா நின்று கொண்டு, தமக்கு பகவத் விஷயத்தில் ப்ரீதி காரித நித்ய கைங்கர்யமே புருஷார்த்த மென்று அறுதியிட்டாராயிற்று; இனி இரண்டாம் பத்தால் - திருவேங்கடம், திருவெவ்வுளூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருக்கடல் மல்லை, திருவிடவெந்தை, திருவட்டபுயகரம், ஸ்ரீபரமேச்சுர விண்ணகரம், திருக்கோவலூர், இவற்றிலே உகந்தெழுந்தருளி யிருக்கு மெம்பெருமான்களை அபிநிவேசாதிசயத்தாலே பாடாநின்று கொண்டு, தம்முடைய ஸ்வரூபந்தான் பாகவத சேஷத்வ பர்யந்தமா யிருக்கும்படியைச் சொல்லி, கீழ்ப்பத்தில் ப்ரார்த்தித்த கைங்கர்யந்தானும் அவன் நினைவாலே வரவேணு மென்கிற அர்த்தத்தை வெளியிட்டு அப்புருஷார்த்தத்தை § ஓடவைக்கிறா ரென்று இப்பத்துக்கு ஸங்கதி கண்டுகொள்வது.

கீழிரண்டு திருமொழிகளோடு ஸங்கதி யருளிச்செய்கிறார், (அடைந்தேனித்யாதி). (க) "பொங்குபோதியும்" (உ) "துவரியாடையர்" என்கிற பாட்டுக்களைக் கடாக்ஷித்து, (நாட்டாரித்யாதி). (ந) "என் நெஞ்ச மென்பாய்" என்றத்தைப்பற்றி, (திருவுள்ளத்தோடே கூட்டி) என்றது. (இனியராகிறார்). உபகார ஸ்ம்ருதி பண்ணி உகக்கிறாரென்கை.

§ ஓடவைக்கிறார்-நிஷ்கர்ஷிக்கிறார்.

(க) க-கூ-உ. (ந) வி-பு-சு- (ரு) உ-க-சு-
(உ) க-கO-கூ. (ச) உ-க-டு- (சு) உ-க-கூ-

மூ.—வானவர்தங்கள்சிந்தைபோலவென்னெஞ்சமேயினிதுவந்து
மானவர்தங்கள்சிந்தையமர்ந்துறைகின்றவெந்தை [மாதவ
கானவரிடு காரகிற் புகை யோங்கு வேங்கடமேவி மாண்குற
ளானவந்தணற்கின்றடிமைத்தொழில்பூண்டாயே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்நெஞ்சமே	எனக்குப்பாங்கானமநஸ்ஸே!	ஓங்கு	உயர்ந்த
		வேங்கடம்	திருமலையிலே
மா	மிக்க	மேவி	நித்யவாஸம் பண்ணுமவனாய்
தவம்	தபஸ்ஸையுடைய		
மானவர்தங்கள்	மநுஷ்யர்களுடைய	மாண்	அழகிய [ட
சிந்தை	நெஞ்சில்	குறளான	வாமநவேஷங்கொண்
அமர்ந்து	பொருந்தி [ற	அந்தணற்கு	ப்ராஹ்மணனான என்ஸ்வாமிக்கு,
உறைகின்ற	நித்யவாஸம்பண்ணுகி		
எந்தை	என்ஸ்வாமியாய்	வானவர்தங்கள்	நித்யஸூரிகளுடைய
கானவர்	வேடர்கள் [த	சிந்தைபோல	ஹ்ருதயத்திற்போலே
கார்	(வைரம்பற்றிக்)கறுத்	இனிது	இனிதாக
அகில்	அகில்மரங்களை(வெட்டி) [யாலுண்டான	உவந்து	உகந்துவந்து
		இன்று	இப்போது
இடு	(நெருப்பில்) இடுகை	அடிமைத்தொழில்	கைங்கர்யம்பண்ணுகையில்
புகை	புகையானது (போய்வ்யாபிக்கும்படி)	பூண்டாயே	அந்வயித்தாயே! (க)

வ்யா.—முதற்பாட்டு. (வானவரித்யாதி) நித்யஸூரிகள் ஹ்ருதயத்திற்போலே என்†ஹ்ருதயத்திலான.(மாதவமானவர் தங்கள்சிந்தையமர்ந்துறைகின்றவெந்தை) மஹாதபஸ்ஸையுடையராயிருக்கிற மநுஷ்யர்களுடைய ஹ்ருதயங்களிலே அநந்யப்ரயோஜநனாய்க்கொண்டு நித்யவாஸம்பண்ணுகிறஸ்வாமி. (கானவரித்யாதி) கானவருண்டு - அங்குத்தைத்திருவேடுவர், அவர்கள் தங்கள் †புனங்களிலுண்டான மரங்களைவெட்டித் திரளவிட்டு நெருப்பையிடுவர்கள்; அதுதானகில்மரமாகையாலே அகிற்புகையானது†போய் ஆகாசாவகாசத்தையிடமடைக்கும்படி ஓங்கின†சிகரத்தையுடைய திருமலையிலே பொருந்திவர்த்திக்கிற. (மாண்குறளாயவந்தணற்கு) தன்னுடைமையைப்பெறுகைக்குத் தன்னை இரப்பாளனாக்கினவற்கு. அந்தணற்கென்று - ப்ராஹ்மணற்கென்றபடி. மஹாபலிக்குக்கொடுத்தல்லது நிற்கவொண்ணாதபடி விநீதவேஷத்தோடே சென்றானாயிற்று. (மாண்குறளாயவந்தணற்கு, வானவர்தங்கள் சிந்தைபோல வென்னெஞ்சமே இனிதுவந்தடிமைத்தொழில்பூண்டாயே) நித்யஸூரிகளுடைய ஹ

ருதயம் பகவத்கைங்கர்யத்திலே ப்ரவணமாயிருக்குமாபோலே நீ அவன்திருவடிகளிலேஉகப்போடே அந்வயித்தாயே.†(மாணித்யாதி) † அவனடிமைகொள்வதாக வந்து இரந்துநிற்கிறபின்பு நீயுமவன் நினைவின்படியே போகப்பெறுவதே. ... ... (க)

அ௩.—முதற்பாட்டு. (வானவ ரித்யாதி). (க) "என்நெஞ்சிலுளானே" என்றும் (உ) "என்மனம் குடிகொண்டிருந்தாயே" என்றும், (௩) "என சிந்தையுள் நின்றமாயன்" என்றும், (ச) "என்மனம் புகுந்தாயே" என்றும் சொல்லுகிறபடியே அவன் தம்திருவுள்ளத்தி லமர்ந்து வர்த்திக்கிறமையை அநுஸந்தித்து இப்படி மஹாதபஸ்வி ஹ்ருதய கமல நிலயனாயிருக்கும் "அந்தணற்கு - அடிமை - பூண்டாயே" என்று நெஞ்சைக்குறித் தருளிச்செய்கிறா ரென்று அவதாரிகை கண்டு கொள்வது.

(ஹ்ருதயத்திலான) என்றது - எந்தைக்கு விசேஷணம். இப்பக்ஷத்தில் "இனிது உவந்து" என்றதுக்கு இனிதாக உகந்திருக்கிற என்று சப்தார்த்தமாக்கிக்கொள்வது. (புனங்களில்) - நிலங்களில். (போய்) என்றவநந்தரம், வ்யாபிக்கும்படியான என்று சேஷம், (சிகரத்தையுடைய) என்றது - அர்த்தஸித்தார்த்தம். யோஜநாபேதம், (மாணித்யாதி). இப்பக்ஷத்தில், "உவந்து" என்று - ல்யபந்தபதம், "மாண்குறள்" என்றதுக்குத் தாத்பர்யாந்தரம், (அவனித்யாதி). அதாவது - மண்ணிரக்க முன்பு மாண்குறளான வளவன்றிக்கே தம்மையடிமை கொள்ளுகைக்குத் தம்நெஞ்சி லிப்போதொரு வாமநவேஷங்கொண்டா னென்றிருக்கிறா ரென்கை. அன்றிக்கே, இப்போது இவ்வவதாரத்தை அநுஸந்திக்கைக்குத் தாத்பர்ய கதநரூபேண இவ்வாக்யம் ப்ரஸ்துதமான தென்று ஏகதாத்பர்ய மாகவுமாம். ... ... (க)

மூ. உறவுசுற்றமென்றொன்றிலாவொருவனுகந்தவர்தம்மைமண்மிசைப்
பிறவியே கெடுப்பா னதுகண்டென்னெஞ்சமென்பாய் [டத்
குறவர்மாதர்களோடு வண்டு குறிஞ்சி மருளிசைபாடும் வேங்க
தறவநாயகற்கின் றடிமைத்தொழில்பூண்டாயே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உறவு	(கர்மநிபந்தநமான) ப	மண்மிசை	பூமியில்
சுற்றம்	ஜ்ஞாதிகள் [ந்துக்கள்	பிறவி	ஜந்மத்தை
என்று	என்றுஇங்ஙனேயுள்	கெடுப்பான்	போக்குமவனாய்,
ஒன்று	ஒருஸம்பந்தத்தை [ள	குறவர்மாதர்களோடு	குறப்பெண்களோடே
இலா	உடையனல்லாத		
ஒருவன்	ஒப்பற்றவனாய்,	வண்டு	வண்டுகள் [ண்ணை
உகந்தவர்தம்மை	தானுகந்தவர்களுக்கு	குறிஞ்சிமருள்	குறிஞ்சியென்னும்ப
		இசைபாடும்	இசைத்துப்பாடுகிற

(க) க-க௦- (உ) க-க௦- (௩) க-க௦- (ச)

வேங்கடத்து	ஸ்ரீவேங்கடாத்ரியிலே நித்யவாஸம்பண்ணுகிற	அதுகண்டு	அவன்ஸ்வபாவத்தை அநுஸந்தித்து
அறவன்	பரமதார்மிகனான	என்நெஞ்சமென்ப	என்நெஞ்சுஎன்கிற நீன்பாய்
நாயகற்கு	ஸர்வேஶ்வரனுக்கு,	இன்று	இப்போது
		அடிமைத்தொழில்பூண்டாயே.	(உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு.—(உறவித்யாதி)†பந்துக்கள் ஜ்ஞாதிகளென்றிங்ஙனே கர்மநிபந்தநமாகச்சொல்லலாவதொரு உறவுடையனல்லாத அத்விதீயன். (உகந்தவரித்யாதி) †தான் சிலரையுகந்து அவர்பக்கலுகப்பாலே அவர்களுக்குப் பாபத்தைப்போக்குதல் †பல(ஃல)த்தைக் கொடுத்துவிடுதல் செய்கையன்றிக்கே ஸம்ஸாரஜந்மத்தைப்போக்கிக்கொடுக்கிற ஸ்வபாவத்தை†யநுஸந்தித்து. (உகந்தவர்) தன்னையுகந்தவர்க்கென்றுமாம். (என்னெஞ்சமென்பாய்) அவனைச்சொல்லுவதோ? உன்னைச்சொல்லுவதோ? உன்னை ஆரென்று சொல்லுவேன். †ஸம்பாவநாப்ரகாரமிருக்கிறபடி. என்னெஞ்சமே! என்றபடி. (குறவரித்யாதி) குறப்பெண்களோடேகூட வண்டுகளானவை குறிஞ்சி இந்தளமென்கிற பண்ணைப்பாடாநிற்கிற. (வேங்கடத்தறவநாயகற்கு) தண்ணீர்ப்பந்தலைவைத்து நம்மடிமை பெறுகைக்குத் தம்மை நமக்குத்தந்துகொடுநிற்கிற பரமதார்மிகன். †நம்மையடிமைகொள்வதாகத் திருமலையிலேவந்துஸந்நிதிபண்ணின பரமதார்மிகனுக்கு. (அடிமைத்தொழில்பூண்டாயே) அவன்திருமலையிலேவந்து நிற்கிறநிலையை நீயொருபடிஸபலமாக்கினாயே. (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (உறவித்யாதி). நெஞ்சானது, நீர்நம்மைக் கொண்டாடாநின்றீர், அடிமைத்தொழில் நமக்கு நித்யமாகக் கிடைக்குமோ, விரோதி விபூதியிலன்றோ நாமிருப்பதென்ன; அவனுடைய மோக்ஷப்ரதத்வத்தைச் சொல்லிக்கொண்டாடுகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

*தாயேதந்தையிலே அவனை ஸர்வவிதபந்துவாக அநுஸந்தித்தவர்தாமே உறவும் சுற்றமுமாயிருக்க அத்தை இல்லை யென்கிறதென்னென்ன; தாத்பர்யமருளிச்செய்கிறார், (பந்துக்களித்யாதி). "பிறவியே" என்கிற ஏவகாரவ்யாவர்த்யம் காட்டாநின்றுகொண்டு பாவ(ஃவ)மருளிச்செய்கிறார், (தானித்யாதி). (பலத்தை) - ஐஹிகாமுஷ்மிக பலத்தை. "அதுகண்டு" அத்தைக்கண்டு என்றாய், பலிதார்த்தம், (அநுஸந்தித்து) என்றது. (ஸம்பாவனை)-கொண்டாட்டம். "என்நெஞ்சம்" - அண்மைவிளி. அதாவது-ஸமீபஸ்த்தத்தையழைக்கை. கீழுக்கு விவரணம், (நம்மை யித்யாதி). ... ... (உ)

மூ.—இண்டையாயினகொண்டுதொண்டர்களேத்துவாருறவோடும்வா
கொண்டுபோயிடவுமதுகண்டென்னெஞ்சமென்பாய் [னிடைக்
வண்டுவாழ்வடவேங்கடமலைகோயில்கொண்டதனோடும்மீமிசை
அண்டமாண்டிருப்பாற்கடிமைத்தொழில்பூண்டாயே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்நெஞ்சமென்பாய்	எனக்குப்பாங்கான நெஞ்சே!	வண்டு	வண்டுகள்
இண்டையாயின	பூமாலைகளென்று பேர்பெற்றவற்றை	வாழ்	வாழாநின்றுள்ள
கொண்டு	ஏந்திக்கொண்டு [ற	வடவேங்கடமலை	திருமலையை
ஏத்துவார்	ஸ்தோத்ரம்பண்ணுகி	கோயில்கொண்டு	தனக்குவாஸஸ்த்தாநமாகக்கொண்டு
தொண்டர்கள்	சேஷபூதரையும்	அதனோடும்	அந்தத் திருமலையோடுகூடின லீலாவிபூதியோடு
உறவோடும்	அவர்கள்ஸம்பந்தமுடையாரையும்		
கொண்டுபோய்	இங்குநின்றும்கொடுபோய்	மீமிசைஅண்டம்	பரமாகாசமானநித்யவிபூதியையும்
வானிடை	பரமபதத்திலே	ஆண்டுஇருப்பாற்கு	ஆண்டுகொண்டிருக்கிறவனுக்கு
இட	வைக்க, [டு		
அதுகண்டு	அந்நீர்மையைக்கண்	அடிமைத்தொழில்பூண்டாயே. (௩)	

வ்யா.—மூன்றாம்பாட்டு.—(இண்டையித்யாதி). "இண்டை" என்று, பூமாலைக்குப்பேர். ஆக, பூமாலையென்றுபேர்பெற்றவற்றைக்கொண்டு, (க) "எண்டிசையுமுள்ள பூக்கொண்டேத்தி" என்கிறபடியே (தொண்டர்களேத்துவார்) பகவத்விஷயத்திலடிமை செய்யுமவர்கள் கையிலே பூமாலைகொண்டு வாயாலே ஏத்தாநின்றுகொண்டு, அடிமைசெய்கிறவர்களுடைய. (உறவோடும்வானிடைக் கொண்டுபோயிடவும்) அவர்களோடு ஸம்பந்திஸம்பந்திகளோடு †ஒருநாள்கார்யம்செய்தவர்களோடு வாசியற எல்லாரையுமாகக்கொண்டுபோய் நித்யவிபூதியிலேவைக்கும் நீர்மையையநுஸந்தித்து, என்நெஞ்சமே! † இங்குத்தையிருப்புத் தன்னையுமிழக்கிறோமோ? என்று†அஞ்சவேண்டியிருக்க அவ்வருகேபோயடிமைசெய்யவாசையையுடையையாவாயே நீ. (வண்டித்யாதி) வண்டுகளானவை மதுபாநத்தைப்பண்ணி மத்தமாய்க்கொண்டுவாழாநின்றுள்ள திருமலையைத் தனக்கு நித்யவாஸத்துக்கு ஸ்த்தாநமாகக்கொண்டு. (அதனோடும் மீமிசை அண்டமாண்டிருப்பாற்கு) † உபயவிபூதியுக்தனான ஸர்வேஶ்வரனுக்கு. "அண்டம்" என்று ஆகாசத்துக்குப்பேர். வெறு

(க) தி - வாய் -

மண்டமென்னில்; ஸ்வர்க்காதிகளிலுமேறுமென்று "மீமிசையண்டம்" என்று பரமபதத்தைச் சொல்லுகிறது. "மஹாகாசம், பரமாகாசம்" †என்னக்கடவதிறே. உபயவிபூதியுக்தனான ஸர்வேஶ்வரனுக்கு, (அடிமைத்தொழில்பூண்டாயே) அவாப்தஸமஸ்தகாமனானவனுடைய குறையை யொருபடி நிரப்பினாயே. †திருமலையிலேவந்து புகுந்து இவரை யடிமைகொள்வதற்குமுன்பு உபயவிபூதியோகத்தால்வந்த ஐஶ்வர்யத்தை யொன்றாக நினைத்திலன்காணுமவன். தநலுப்தன் ஒருகாசு விழுந்தவிடத்திலே கையெல்லாம் புழுதியாகத் தேடாநிற்குமிறே. ... ... (௩)

அ௩.—மூன்றாம் பாட்டு (இண்டை யித்யாதி). நித்ய விபூதியில் நித்ய கைங்கர்யத்தை யாசைப்படுகிற நெஞ்சை ஆதரத்தாலே மீளவும் கொண்டாடுகிறாரென்று ஸங்கதிகண்டு கொள்வது.

"உறவோடும்" என்கிற சகாரம் அநுக்த ஸமுச்சயமாக்கி அருளிச்செய்கிறார், (ஒருநா ளித்யாதி). "வானிடை - அடிமைத்தொழில்" என்கிற பதங்களைக் கடாக்ஷித்து, "என்பாய்" என்று கொண்டாடுகிறவருடைய ஹார்த்தபாவம், (இங்குத்தை யித்யாதி). (அஞ்சவேண்டியிருக்க)என்றது - லௌகிகரஞ்சாநிற்க என்றபடி. இத்தால் - இஹலோகபோகத்தை இழக்கவேணுமே என்று லௌகிகர் மோக்ஷத்துக்கு யத்நம் பண்ணார்களென்கை. "அதன்" என்றது - திருமலையாய், அது உபலக்ஷணமாய், லீலாவிபூதியைச் சொல்லுகிறது; அத்தை யருளிச்செய்கிறார், (உபயேத்யாதி). (என்னக்கடவதிறே)என்றவநந்தரம், ஆகையாலே என்று கூட்டுவது. இவரடிமை செய்யாவிட்டால் அவனுக்குக் குறையோவென்ன; அருளிச்செய்கிறார், (திருமலையிலே யித்யாதி). ... ... (௩)

மூ.—பாவியாதுசெய்தாயென்னெஞ்சமேபண்டுதொண்டுசெய்தாரை
மேவியாட்கொண்டுபோய்விசும்பேறவைக்குமெந்தை[மண்மிசை
கோவிநாயகன்கொண்டலுந்துயர்வேங்கடமலையாண்டுவானவற்
காவியாயிருப்பாற்கடிமைத்தொழில்பூண்டாயே. ... (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்னெஞ்சமே	என்மநஸ்ஸே!	மேவி	திருவவதரித்து
பாவியாது	தடுமாறாமல்	ஆள்கொண்டு	(அவர்களை) அடிமைகொண்டு
செய்தாய்	பண்ணினாய்;		
பண்டு	முன்பு	போய்	(இங்குநின்றும்அர்ச்சிராதிமார்க்கமாகக்) கொண்டுபோய்
தொண்டுசெய்தாரை	அடிமைசெய்துபோந்தவர்களை (உஜ்ஜீவிப்பிக்கைக்காக)	விசும்பேறவைக்கும்	பரமபதத்திலேவைக்குமவனாய்,
மண்மிசை	பூமியிலே		

கோவிநாயகன்	ஸ்ரீ கோபீஜநவல்லபனுய்	ஆண்டு	இரண்டுவிபூதியையுமரசாண்டு
எந்தை	எனக்குஸ்வாமியான	வானவர்க்கு	நித்யஸூரிகளுக்கு
கொண்டல்	மேகங்களை [வனுய்,	ஆவியாயிருப்பாற்கு	ப்ராணபூதனுயிருக்குமவனுக்கு,
உந்து	தள்ளாநிற்கிற		அடிமைத்தொழில்பூண்டாயே. (ச)
உயர்	உயர்த்தியையுடைத்		
வேங்கடமலை	திருமலையிலே[தான		

வ்யா.—நாலாம்பாட்டு. (பாவியாதித்யாதி). †"அத்தைச்செய்வோமோ? இத்தைச்செய்வோமோ?" என்றுஇங்ஙனே †அலமாவாக்கிடவாதே †கிருபியாதே †இப்படியிலே †அத்யவஸிப்பதே! †என்ன அலப்யலாபமோ! ஸம்ஸாரத்திலத்யவஸிப்பதே! †சப்தாதிகளை யநுபவித்திருப்புதோமோ? பகவத்கைங்கர்யம்பண்ணுவோமோ? என்றிங்ஙனே விசாரியாதே நீ இதிலே துணிவதே! உன்னுலேயிறே இப்பேறெல்லாம்பெற்றது. (பண்டித்யாதி) † மூன்பு அடிமைசெய்தவர்களைத் தான் ஸம்ஸாரத்திலேவந்தவதரித்து, "இவனென்†தோழன்" "இவனென் † மைத்துனன்" என்று சொல்லலாம்படி அவர்களோடேபொருந்தி அவர்களுக்குக் கைங்கர்யருசியைப்பிறப்பித்து, அடிமையைக்கொண்டு, அதுதானவிச்சிந்நமாய்ச்செல்லவேணுமென்று அதுக்குறுப்பாகப் †பரமபதத்திலே கொடுபோய்வைக்கும் ஸ்வாமி. (கோவிநாயகன்) ஸ்ரீகோபிமாருடன் கலக்குமாபோலே ஆஸ்ரிதரோடே பரிமாறுமவன், (கொண்டலுந்துயர்வேங்கடம்) மேகங்களைச்சென்றுதள்ளும்படி அவ்வளவும் வளர்ந்த சிகரங்களையுடைய திருமலையை வாஸஸ்த்தாநமாகக்கொண்டு. (வானவரித்யாதி) (உ) "ஜ்ஞாநீ த்வாத்மைவமேமதம்" என்கிறபடியே †ஜ்ஞாநிகளைத் தனக்காத்மபூதராகவுடையனுயிருக்கிறவனுக்கு †நீயுமாவியானுயோ. ... ... (ச)

அரு.—நாலாம்பாட்டு (பாவியாதித்யாதி). (உ) "துணிவினியுனக்குச் சொல்லுவன் மனமே தொழுதெழு தொண்டர்கள் தமக்குப் பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும் பேரருளாளன்" இத்யாதியாலே பலபடி உபதேசித்தவராயிருக்தீர், அத்தாலேயன்றே நான் மோக்ஷவிசாரம் பண்ணுகிறேன், என்னை நீர் பலகாலும் கொண்டாடுவதென் னென்னும் சங்கையிலே, நான் எத்தனை உபதேசித்தாலும் வாஸநாபலத்தாலே (ரு) "... உபதேசோ நிரர்த்தக:" என்னும்படி பண்ணுதே கடுக இசைந்தாயே என்று நெஞ்சைக் கொண்டாடுகிறு ரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

(க) கீதை-எ-கஅ. (உ) க-ச-ச. (ரு)

"பாவியாது" என்றது-பா(ஃபா)வியாதே என்றாய், நிரூபியாதே செய்தா யென்றொரு யோஜநை யருளிச்செய்கிறார், (அத்தை யித்யாதி). (அலமாவா க்கிடவாதே) - தடுமாறிக்கிடவாதே. இதுக்கு விவரணம், (நிரூபியாதே) என் றது. (இப்படியிலே) - இந்தப்ரகாரத்திலே. "செய்தாய்" என்றதின் பலி தார்த்தம், (அத்யவஸிப்பதே) என்றது. இத்தால்-அநாதிவாஸநாபல(ப³ல) த்தா லே விஷயங்களை விடமாட்டாதே என்னுபதேச பல(ப³ல)த்தாதே பகவத் விஷயத்தையும் விடமாட்டாதே கிடவாதே கடுக த்வரியாநின்றாயென்றதாயி ற்று. "பாவியாது" என்றது - நீட்டிக்கிடக்கிறதாய், ப(பு)வியாதது - ஸம்ப வியாத்து, செய்தாய் என்றர்த்தாந்தர மருளிச்செய்கிறார், (என்னவித்யாதி). இத்தால் - (க) "துணிவினியுனக்குச்சொல்லுவன்" என்னவே, நீ அந்த பக வத்விஷயத்திலே தானே துணிவதே! இது இந்த விபூதியில் கிடைப்பதொன் றோ என்றதாயிற்று. மூந்தினவர்த்தத்தை விவரிக்கிறார், (சப்தாதிகளையித் யாதி). அன்றிக்கே, அடிதொடங்கி ஏகார்த்தமேயாய், ஆழ்வாருடைய ஈடு பாட்டைப்பலவகையாக அருளிச்செய்கிறாரென்றுமாம். (முன்பு) - முற்கா லத்திலே, க்ருதாதிகளிலேயென்றபடி. (தோழன்) - ஸ்ரீகுஹப்பெருமாள்; மஹாராஜராகவுமாம். (மைத்துனன்) - அர்ஜுநன். இவன் ஸ்வர்க்கஸ்த்த ஞனேயாகிலும் மோக்ஷருசிபிறந்தால், அவனோடேதானே (உ) "மோக்ஷயி ஷ்யாமி - மோக்ஷயிஷ்யாமி" என்றவன் அவனுக்குக்கொடுக்க மாட்டாதே யிரானிறே; அத்தைப்பற்ற, (பரமபதத்திலேகொடுபோய்வைக்கும்ஸ்வாமி) என்றது. (ச) "தைவீஸம்பத்விமோக்ஷாய - தைவீஸம்பத்விமோக்ஷாய" என்கிற படியே, வானவர்கள் தேவர்களென்னத்தக்க ஜ்ஞாநிகளை ஆவியாகவுடைய வற்கென்றருளிச்செய்கிறார், (ஜ்ஞாநியித்யாதி). வானவர்க்காவியா யென்று அர்த்தம்கொள்ளுமளவில், ப்ரக்ருதத்துக்கு அத்யந்த மநபேக்ஷிதமிறே யென்று திருவுள்ளம். (நீயுமாவியானாய்) என்று - ஆதரவிஷயமானாயென்னு மர்த்தம்கூடாதிறே. ... ... (ச)

மூ.—பொங்குபோதியும்பிண்டியுமுடைப்புத்தர்நோன்பியர்பள்ளியு தங்கள்தேவரும்தாங்களுமேயாகவென்னெஞ்சமென்பாய் [ள்ளுறை எங்கும்வானவர்தானவர்நிறைந்தேத்தும்வேங்கடம்மேவிநின்றருள் அங்கணாயகற்கின்றடிமைத்தொழில்பூண்டாயே. (ரு)

(க) க-ச-ச. (உ) கீதை-கஅ-சசு. (ங) கீதை-

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்நெஞ்சமென்பாய்	என்னுடையமநஸ்ஸென்று அபிமாநிக்கலாம்படியானநீ,	தாங்களுமேயாக	தாங்களுமேயாகிவிடாநிற்கச்செய்தே,
பொங்கு	கொம்புங்கிளையுமாகப்பருத்துவாராநின்றுள்ள	எங்கும்	நாற்புறத்திலும்
போதியும்	அரசமரத்தையும்	வானவர்	தேவர்களும்
பிண்டியும்	அசோகவ்ருக்ஷத்தையும்	தானவர்	அஸுரர்களும்
உடை	தங்களுக்குத்தஞ்சமாகஉடைத்தான	நிறைந்து	நெருங்கி [ன்றுள்ள
புத்தர்	பௌத்தரும்	ஏத்தும்	ஸ்தோத்ரம்பண்ணாநி
நோன்பியர்	அமணரும்	வேங்கடம்	திருமலையிலே
பள்ளியுள்	தங்கள்தேவாலயங்க[ளிலே	மேவிநின்று	பொருந்தியிருந்து
உறை	வர்த்தித்த	அருள்	ஆஸ்ரிதரிஷ்டங்களைச்செய்தருளுமவனாய்
தங்கள்	தங்களுடைய	அங்கண்	அழகியதிருக்கண்களையுடையவனாய்
தேவரும்	தேவதையும்	நாயகற்கு	ஸர்வஸ்வாமியானவனுக்கு
		இன்றுஅடிமைத்	தொழில்பூண்டாயே.

அவ.—அஞ்சாம்பாட்டு. † "பாவியாது" என்று நீ இப்படி விசாரியாதே துணிவதே! என்று என்னைக்கொண்டாட வேண்டின ஹேதுவென்னென்ன; † விசாரிக்கவேண்டும்படி † எத்தனைவிஷயம் புறம்பே கிடக்கிறதென்கிறார்.

வ்யா.—(பொங்குபோதியும்) விஸ்த்ருதமாகாநின்றுள்ளவரசும். (பிண்டியும்) அசோகவ்ருக்ஷமும். இவையிரண்டையுமாயிற்றுத் தங்களுக்கு ப்ரதாநமாக நினைத்திருப்பது பௌத்தார்ஹதர்கள். (புத்தர் நோன்பியர்) பௌத்தரையும் அமணரையும் சொன்னபடி. (பள்ளியுள்ளுறை தங்கள் தேவரும் தாங்களுமேயாக) † அவர்கள் தங்களுடைய தேவஸ்த்தாநங்களிலே வர்த்தித்ததேவதைகளும் தாங்களுமாக.† அல்லாதாரடங்கலும் முக்தராம்படியாக வாயிற்று. (என்னெஞ்சமித்யாதி) † இவருடைய திருவுள்ளம் அவற்றை யநாதரித்து பகவத்விஷயத்திலே ப்ரவணமாயிற்றதென்றால் பின்னை லோகமாக அவற்றை அநாதரித்து இங்கே ப்ரவணமாம்போலேகாணும். (எங்குமித்யாதி) எங்குமொக்க தேவர்களும் அஸுரர்களும் நெருங்கி நின்றேத்தாநின்றுள்ள. அன்றிக்கே, "தானவர்" என்கிறது-ஸ்த்தாநத்திலுள்ளாராகவுமாம். (அங்கணாயகற்கு) அக்கண்ணிற்குளிர்த்திக்கிலக்காவதே! † அக்கண்ணழகிலே(க)"ஜிதம்-ஜிதம்" என்று எழுதிக்கொடுத்தாயாகாதே! (அடிமை) "ஜிதம்-ஜிதம்" என்று எழுதிக்கொடுத்தாருடைய வ்ருத்தியிலே அந்வயித்தாயோ? ... (ரு)

அரு—அஞ்சாம்பாட்டு (பொங்குபோதியுமித்யாதி). சப்தாதிகளுடைய அல்பாஸ்த்திரத்வாதி தோஷங்கள் ப்ரத்யக்ஷிக்கலாயிருக்க இவற்றை விட்டு

(க) ஜி - ஸ்தோ - க.

நித்யமான புருஷார்த்தத்திலே துணிந்ததுக்கே ச்ராம்சர்யப்படுகைக்குஹேது வென்னென்னில் என்கிற ப்ரச்நாநுவாதம்பண்ணி ஸங்கதியைக்காட்டுகிறார், (பாவியாதித்யாதி). ப்ரதிவசநம் தோற்றும்படி பா(ஷ்)வ மருளிச்செய்கிறார், (விசாரிக்கவித்யாதி). மதிகெட்டுப்போம்படி இத்தனை துர்க்கதிகளுண்டேயென்றுகருத்து. (எத்தனைவிஷயம்) - அஸங்க்யாத விஷயமென்றபடி.

"நோன்பியர்"-அஸத(த்)ஸ்யராய், அமணரைச்சொல்லுகிறது. "பள்ளி" அவர்களுடைய தேவதாலய மென்றருளிச்செய்கிறார், (அவர்களித்யாதி). "தாங்களுமேயாக" என்றதுக்கு - லோகமெல்லாமவர்களேயாய்க்கெட்டுப்போக என்று அவதாரிகையிலே அருளிச்செய்த தாத்பர்யம்தவிர, "தாங்களுமேயாக" - தாங்கள்மாத்ரமேயாம்படியென்று தாத்பர்யாந்தரம்விவக்ஷித்து, உட்கருத்தருளிச்செய்கிறார், (அல்லாதாரித்யாதி). இவ்வாக்யார்த்தத்தைத் தெரியவருளிச்செய்கிறார், (இவருடையவித்யாதி). தாத்பர்யாந்தரம், (அக்கண்ணழகிலேயித்யாதி). (இ)

மூ.—துவரியாடையர்மட்டையர்சமண்தொண்டர்கள்மண்டியுண்டுபி
தமருந்தாங்களுமேதடிக்கவென்னெஞ்சமென்பாய் [ன்னரும்
கவரிமாக்கணஞ்சேரும்வேங்கடங்கோயில்கொண்டகண்ணார்வி
அமரநாயகற்கின்றடிமைத்தொழில்பூண்டாயே. [சும்பிடை

பதம்.	உரை.	பதம்.	உரை.
துவரி	காவியேறின [ராய்	என்நெஞ்சமென்பாய்	என்னெஞ்சமானநீ,
ஆடையர்	வஸ்த்ரத்தையுடைய	கவரிமா	சவரிம்ருகங்களின்
மட்டையர்	மொட்டைத்தலையராய்	கணம்	திரள்களானவை
சமண்தொண்டர்கள்	க்ஷபணகமதத்தையாஸ்ரயிக்குமவர்கள்	சேரும்	வந்துசேருகிற
மண்டி	ஒருவர்க்கொருவர்மேல்விழுந்து	வேங்கடம்	திருமலையை
உண்டு	புஜித்து	கோயில்கொண்ட	வாஸஸ்த்தானமாகவுடையனாய்
பின்னரும்	பின்னையும்	கண்ஆர்	இடமுடைத்தான
தமரும்	தங்கள்பந்துக்களும்	விசும்புஇடை	பரமபதத்தில்வர்த்திக்கிற
தாங்களுமே	தாங்களுமாக	அமரர்	நித்யஸூரிகளுக்கு
தடிக்க	(கைவந்த படி புஜிக்கையாலே) உடம்பு பருத்துவாரா நிற்க,	நாயகற்கு	தலைவனானவனுக்கு
		இன்றுஅடிமைத் தொழில்பூண்டாயே.	

வ்யா.—ஆறும்பாட்டு. (துவரியித்யாதி) துவரூட்டியிருந்துள்ள சிவந்தவாடையையுடையராய், தலைமயிரைப்பறித்துப் பொகட்டிருக்கிற சமண்தொண்டருண்டு - அமணராகிறவர், அவர்கள் தாங்கள்†கண்டபடி மேல்விழுந்து புஜித்து, †அதுக்குமேலே, தங்க

ளோடொத்துத் தங்கள் தர்சநத்திலே ருசியுடையராய் அந்த வேஷ தாரணத்தையும் பண்ணியிருக்கிறவர்களும் கடவராயிருக்கிற தாங்களும் சரீரமானது தடிக்கும்படியாக. (என்னெஞ்சமென்பாய்) அவர்கள்செய்தபடிசெய்ய, வ்யாவ்ருத்தமான படியையுடைய உன்னைத் தானாரென்பன்? (கவரியித்யாதி)†கவரிகளையுடைத்தான†ம்ருகங்களுடைய திரள்வந்து சேருகிற திருமலையை வாஸஸ்தாநமாகவுடையவன். (கண்ணாரித்யாதி) இடம்மிக்கிருந்துள்ள விசும்புண்டு-த்ரிபாத்விபூதி, அதிலேயுண்டானஅநந்த வைநதேயாதிகளுக்கு நிர்வாஹகனானவனுக்கு. (அடிமையித்யாதி) அமணருடைய வ்யாபாரத்தை யநாதரித்து நித்யஸூரிகளுடைய யாத்ரைகளிலே அந்வயித்தாயே.

அரு—ஆரும்பாட்டு (துவரியித்யாதி). புத்தர்முதலானார்மாத்ரமன்றிக்கே வைராக்ய ஸூசகவேஷங்கொண்டு அத்யாயம் படிப்பார்படியைக்கேளாயென்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

(கண்டபடி) என்றது - கண்டவிடமெல்லாமென்றபடி. "பின்னரும்" என்றது - பின்னையும் என்றாய், அதினர்த்தம், (அதுக்குமேலே) என்றது. (கவரிகளை) - சாமரங்களை. "மா" என்றதினர்த்தம், (ம்ருகங்கள்) என்றது.

மூ.—தருக்கினாற்சமண்செய்துசோறுதண்டயிரினால்திரளைமிடற்றி
நெருக்குவாரலக்கணதுகண்டென் னெஞ்சமென்பாய் [டை
மருட்கள்வண்டுகள்பாடும்வேங்கடங்கோயில்கொண்டதனோடும்வா
அருக்கன்மேவிநிற்பாற்கடிமைத்தொழில்பூண்டாயே. [னிடை

பதம்.	உரை.	பதம்.	உரை.
தருக்கினால்	வீண்தர்க்கத்தாலே		என்னெஞ்சமென்பாய் !
சமண்	தங்களுடையக்ஷபணகஸித்தாந்தத்தை	வண்டுகள்	வண்டுகளானவை
செய்து	நிலைநிறுத்தி,	மருள்கள்	மருள்முதலான இசைகளை
தண்	ஶ்லாக்யமான	பாடும்	பாடாநின்றுள்ள
தயிரினால்	தயிரைச்சேர்த்துக்குழைத்த	வேங்கடம்	திருமலையை
சோற்றுத்திரளை	சோற்றின்திரளையை	கோயில்கொண்டு	வாஸஸ்தாநமாகக்கொண்டு
மிடற்றிடை	தங்கள்மிடற்றிலே	அதனோடும்	அத்தோடேகூட
நெருக்குவார்	(கண்பிதுங்கும்படி) நெருக்குமவர்கள்படுகிற	வானிடை	ஆகாசத்திலேஸஞ்சரிக்கிற
அதுஅலக்கண்	அந்ததுக்கத்தை	அருக்கன்	ஆதித்யனுக்கு
கண்டு	பார்த்து,	மேவி நிற்பாற்கு	அந்தராத்மாவாயுள்ள ஸர்வேஶ்வரனுக்கு
		அடிமைத்தொழில் பூண்டாயே. (எ)	

வ்யா —ஏழாம்பாட்டு. (தருக்கினூற்சமண்செய்து) கேவலதர்க்கத்தாலே தங்களுடைய ஸித்தாந்தத்தை ஸ்த்தாபித்து. (க)†“వేదశాస్త్రావిరోధినా । యస్తర్కేణానుసన్ధత్తే సధర్మం వేద నేతరః - வேதசாஸ்த்ராவிரோதிநா। யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே ஸதர்மம்வேதநேதர:”என்கிறபடியே ப்ரமாணாநுகூலதர்க்கங்கொண்டு அர்த்தத்தைநிர்வஹிக்கையன்றிக்கே, சுஷ்கமான கேவலதர்க்கங்கொண்டு அவைதிகமாக ஸித்தாந்தஸ்த்தாபநம்பண்ணி. (சோறித்யாதி)† வேகுஞ்சோறு என்றொன்றுண்டிறே அவர்கள் ஜீவித்துப்போருவது ; தயிருஞ்சோறுமாகக் குழைத்துத்திரட்டி வ்ரதத்துக்குறுப்பாகக் கண்பிதுங்கும்படி மிடற்றிலே நெருக்குவர்கள் ; அப்போது படும் அலக்கணுண்டு - து:கம், அத்தைக்கண்டு. (மருட்களித்யாதி) மருள் இந்தளமென்கிறபண்ணை வண்டுகள் பாடாநின்றதிருமலையை வாஸஸ்த்தாநமாகக்கொண்டு. (அருக்கன்மேவிநிற்பாற்கு) வைதிகராணராஸ்ரயிக்கும்படியாக ஆதித்யாந்தராத்மாவாய்க்கொண்டு நிற்கிறவனுக்கு. (அடிமைத்தொழில் பூண்டாயே) ஆதித்யாந்தராத்மாவாயிருக்குமென்று அநுஸந்தித்துப்போகையன்றிக்கே கண்ணாலே கண்டு அடிமைசெய்து அநுபவிக்கப்பெற்றாயே நீ. ... ... (எ)

அரு—ஏழாம்பாட்டு (தருக்கினலித்யாதி). “தமரும்தாங்களுமே” என்கைக்கு - தர்சநஸ்த்தாபகர்சிலரும் அதுக்குட்பட்டார் சிலருமா யிருக்கைக்கு நிமித்தந்தன்னை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

“சமண்” க்ஷபணகஸித்தாந்தம். விவரணம், (வேதேத்யாதி). (வேகுசோறு) - அவர்களுடைய ஸங்கேதம். (வெஞ்சோறு) என்றும் சில ஸ்ரீகோசங்களிலே யுண்டு. தயிரின்சோற்றை ரஸக்ரஹணம்பண்ணவொண்ணாமையாலே விழுங்குவர்கள். இத்தால் - அவர்களுடைய துராசாரம் சொல்லிற்றாயிற்று. ... ... (எ)

மூ-சேயனணியன்சிறியன்பெரியனென்பதுஞ்சிலர்பேசக்கேட்டிரு
தேயென்னெஞ்சமென்பாயெனக்கொன்றுசொல்லாதே [ந்
வேய்கள்நின்றுவெண்முத்தமேசொரிவேங்கடமலைகோயில்மே
ஆயர்நாயகற்கின்றடிமைத்தொழில்பூண்டாயே. [விய

(க) மநுஸ்ம்ரு.

பதம்.	உரை.
சேயன்என்பதும்	(பரமபதநாதனை ஆஶ்ரயியுங்கள் என்றால்) தூரஸ்தன் என்றுகுற்றஞ்சொல்லியும், (அர்ச்சாவதாரத்தைபஜியுங்கள் என்றால்)
அணியன்என்பதும்	ஆஸந்நன்என்றுஅநாதரித்தும், (கண்ணனைநண்ணுங்களென்றுவிபவத்தைக் காட்டினால்)
சிறியன்என்பதும்	எளிமையைச்சொல்லிக்கைவாங்கியும், (வ்யூஹத்தையும்அந்தர்யாமியையும்பற்றச்சொன்னால்)
பெரியன்என்பதும்	எட்டான்என்றுபெருமையைச்சொல்லிக்கைவாங்கியும், (இப்படி)
சிலர்	சிலபுத்திஹீநர்
பேச	சொல்லுவதை
கேட்டிருந்தே	கேட்டிருக்கச்செய்தேயும்
என்நெஞ்சமென்பாய்!	
எனக்கு	உன்னைக்கரணமாகவுடையஎனக்கு
ஒன்றுசொல்லாதே	ஒருவார்த்தைசொல்லாமலே
வேய்கள்நின்று	மூங்கில்களினின்றும்
வெள்	வெளுத்த
முத்தம்	முத்துக்கள்
சொரி	சொரிகிற
வேங்கடமலை	திருமலையை
கோயில்	வாஸஸ்தாநமாக
மேவிய	பொருந்தியிருக்குமவனாய்
ஆயர்	இடையர்க்கு
நாயகற்கு	தலைவனானவனுக்கு
இன்றுஅடிமைத்தொழில்பூண்டாயே.	

வ்யா—எட்டாம்பாட்டு. (சேயனித்யாதி) சிறியனென்பார் பெரியனென்பாராய்க்கொண்டு நாட்டார் ஸம்சயாத்மாவாய்க்கொண்டு அநர்த்தப்பட்டுப்போகாநின்றார். நீ அவர்களோடேகூடாதே †உன்னையுடையவனோடுங்கூடாதே அவன் திருவடிகளிலே அடிமையிலங்வயிப்பதே! (சேயன்) † தூரஸ்த்தனென்பர்கள் சிலர். (அணியன்) ஆஸந்நனென்பர்கள்சிலர். சிறியன் என்று அவனெளிமையைச் சொல்லிக்கைவாங்காநிற்பர்கள்சிலர். பெரியன் என்று - எட்டானென்று, அருமையைச் சொல்லிக்கைவாங்குவர்கள்சிலர். இப்படி தோற்றினார் தோற்றினபடிசொல்லுகிறவற்றைக் கேட்டுவைத்தேயும். என்னெஞ்சமென்பாய் அடிமைத்தொழில்பூண்டாயே! (எனக்கொன்றுசொல்லாதே) அவர்களோடுங்கூடாதே, உன்னையுடையேனுக்கு மொன்றும்சொல்லாதே, (வேயித்யாதி) வேய்களில்நின்றும் வெண்முத்தமேசொரிய, அவ்வொளி வழிகாட்ட வந்துபுகுந்தவித்தனையாயிற்று. (ஆயர்நாயகற்கு) (க) * தன்னை ராயிரம்பிள்ளைகளுக்குத் தலைவனானவனுக்கு. (உ) "இனவாயர்தலைவன்" என்னக்கடவதிறே. (அடிமை) வரையாதே ரக்ஷகனானவனுக்கு அடிமைசெய்கையிலே யொருப்பட்டாயே ... ... (அ)

(க) பெரி-திரு-ரு-க-க. (உ) தி-வாய்-ரு-சு-

அரு—எட்டாம்பாட்டு (சேயனித்யாதி). கீழ்மூன்றுபாட்டாலே பாஹ்யருடைய படியைச்சொல்லிநின்றார்; அவ்வளவன்றிக்கே, ஈஶ்வர ஸத்பாவமங்கீகரித்து குத்ருஷ்டிகளாய்க்கிடக்கு மவர்கள் படியைச்சொல்லிக்கொண்டு நெஞ்சைக்கொண்டாடுகிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது. குத்ருஷ்டிகளென்று - துர்மதிகளைச்சொல்லுகிறது.

(உன்னையுடையவனோடும்) - கரணதயா உன்னையுடைய வென்னோடுமென்றபடி. "எனக்கொன்று சொல்லாதே" என்றாரிறே. இத்தால், (க) "பிரிதிசென்றடைநெஞ்சே" என்றும், (உ) "வதரிவணங்குதும்" என்றும், (ங) "சாளக்கிராம மடைநெஞ்சே" என்றும், பலகாலும் நான் சொன்னதுக்கொரு மறுமாற்றம் சொல்லாதே என்றதாயிற்று, பரமபதநாதனை ஆஶ்ரயிக்கச் சொன்னால், "சேயன்" என்று குற்றம் சொல்லுவர்கள்; அதுதீர அர்ச்சாவதாரத்தை பஜியுங்கோளென்றால், "அணியன்" என்று ஆதரியார்கள்; கண்ணனை நண்ணுங்கோளென்று விபவத்தைக்காட்டினால், "சிறியன்" என்பர்கள்; வ்யூஹங்களையும் அந்தர்யாமியையும் பற்றச்சொன்னால், "பெரியன்" என்பர்கள்; எல்லாவற்றுக்கு மொருகுறைசொல்லிக்கொண்டிருக்கும்படியைக் கேட்டிருந்தும் இதிலே யொன்றாகிலு மெனக்கு ப்ரத்யுத்தரம் சொல்லாதே "அடிமை பூண்டாயே" என்று கொண்டாடுகிறார் என்று விவக்ஷித்துப்பதார்த்தங்கள் தன்னைக்காட்டுகிறார், (தூரஸ்த்தனித்யாதி). வேங்கடத்தில்நின்ற விபவத்திலீடுபட்டாயே நீ யென்று கருத்து. ... ... (அ)

மூ.—கூடியாடியுரைத்ததேயுரைத்தாயென்னெஞ்சமென்பாய்துணிந்துகேள்
பாடியாடிப்பலரும்பணிந்தேத்திக்காண்கிலார்
ஆடுதாமரையோனுமீசனுமமரர்கோனும்நின்றேத்தும்வேங்கடத்
தாடுகூத்தனுக்கின்றடிமைத்தொழில்பூண்டாயே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	என்நெஞ்சமென்பாய்!	பணிந்து	வணங்கி
கூடி	நாட்டாரோடுசேர்ந்து	ஏத்தி	ஸ்தோத்ரம்பண்ணி
ஆடி	(அவர்கள்புஜித்ததை) புஜித்து	காண்கிலார்	(பின்னையும் அவன் வைபவத்தை, உள்ளபடிகண்டறியமாட்டார்கள்;
உரைத்ததே	அவர்கள்சொல்லும் வார்த்தைகளையே	ஆடு	பெருமைபொருந்திய (அலர்ந்த)
உரைத்தாய்	சொல்லிப்போந்தாய்,		
துணிந்துகேள்	(என்சொல்லை) அத்யவஸித்துக்கேள்;	தாமரையோனும்	திருநாபீகமலத்திற்பிறந்தப்ரஹ்மாவும்
பலரும்	அநேகரும் [கொண்டு	ஈசனும்	ருத்ரனும்
பாடிஆடி	பாடுவதுஆடுவதாய்க்	அமரர்கோனும்	இந்த்ரனும்

(க) க-உ-க. (உ) க-ங-க. (ங) க-ரு-க.

நின்று	(தங்கள் தங்கள் அதிகாரத்துக்கு அநுகுணமாக) இருந்து	வேங்கடத்து	திருமலையிலே நித்யவாஸம்பண்ணுமவனாய்,
ஏத்தும்	ஸ்தோத்ரம்பண்ணாநின்றுள்ளவனாய்,	ஆடுகூத்தனுக்கு	(ஆப்ச்சியரோடு கூடக்) கூத்தாடினஸர்வேஶ்வரனுக்கு,
		இன்றுஅடிமைத்தொழில்பூண்டாயே.	

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (கூடியாடியித்யாதி). சப்தாதிவிஷயங்களிலே ப்ரவணராயிருப்பாரோடேகூடி, அவர்கள் புஜிக்கும் விஷயங்களிலே அவகாஹித்து, அவர்கள் விஷயங்களை புஜித்துச் சொல்லும்வார்த்தைகளையே சொல்லிப்போந்தாய். (துணிந்துகேள்) இப்போதவற்றைவிட்டு இவ்விஷயத்தில் ப்ராவண்யத்தை யுடையையாயிருக்கிறவுனக்கு † இன்னுமொரு நல்வார்த்தைசொல்லுகிறேன், அத்தைஅத்யவஸித்துக்கேள். (பாடிஇத்யாதி) பாடுவதாடுவதாய்க்கொண்டு பலரு மாஶ்ரயித்துப் பின்னையுங்காணப்பெறார்கள். அதுக்குமேலே ப்ரஹ்மாதிகளுந் தந்தாமுடைய அதிகாரார்த்தமாக வந்தாஶ்ரயியாகிற்பர்கள். (காண்கிலா) என்றுமாம். † இப்படி ஆஶ்ரயித்தவர்களுங்கூடக் காணப்பெறாதபடியான வேற்றத்தையுடைய ப்ரஹ்மாதிகளும் வந்தாஶ்ரயியாநின்றுள்ளவென்னுதல். (ஆடிதாமரையோன்) "ஆடி" என்று - பெருமையாய், அலர்ந்த தாமரையென்னுதல்; அன்றிக்கே, ஆடுகை - நடையாடுகையாய், அதிலே வர்த்திக்கிறவென்னுதல்; அன்றிக்கே, ஆடுகை - உண்டாகையாய், திருநாபிகமலத்தை உத்பத்திஸ்த்தாநமாகவுடையவனென்னுதல்; அன்றிக்கே, ஆடி - வெற்றியாய், வெற்றியையுடையவென்றுமாம். (ஆடுகூத்தனுக்கு) கூத்தாடிவிட்டசுவடெல்லாம் தோற்றுமாயிற்றுவடிவிலே. (க) "மன்றமரக்கூத்தாடிமகிழ்ந்தாயென்றும் வடதிருவேங்கடம்மேயமைந்தா வென்றும்" என்று சொல்லுகிறபடியே. (அடிமைத்தொழில்பூண்டாயே) பலருமவனையாஶ்ரயித்துப் பின்னையுங் காணப்பெறார்கள்; ப்ரஹ்மாதிகள் அநந்தரம் தந்தாமதிகாரார்த்தமாக வாஶ்ரயியாகிற்பர்கள், நீ இவ்விரண்டுகோடியிலுமன்றிக்கே அவன்பக்கலிலே அடிமை † புக்காயே. ... ... (கூ)

அரு—ஒன்பதாம்பாட்டு (கூடியித்யாதி). குற்றங்களைச்சொல்லி ஆஶ்ரயியாதவர்களன்றிக்கே ஸாதநாந்தர நிஷ்டராயாஶ்ரயிப்பாரும் ப்ரயோஜநாந்தரபரராயாஶ்ரயிப்பாருமாகப் பலருண்டு; அவர்களில் வ்யாவ்ருத்தையானாயேயென்று உகக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

(க) தி - நெ - கசு.

(இன்னமுமொரு நல்வார்த்தை) என்றதுக்கு, (க) "துணிவினியுனக்குச் சொல்லுவன்" என்கிறபாட்டிலே அவனைத்தொழச்சொல்லினதுக் கிசைந்து அப்படியேசெய்தாய், தொழுமவர்களுக்குள்ளே இரண்டு கள்ளவழி யுண்டு, அவற்றில் போகாதே தொழுகையே ப்ரயோஜநமாகத்தொழவேணுமென்னும் வார்த்தையைக்கேளென்றுகருத்து. இப்பாட்டிலே, "அடிமைத் தொழில் பூண்டாயே" என்றதுக்கு ஸித்தவத்கரித்து ஸ்துதிபண்ணினமையால் இவ்வர்த்தத்தை நன்றாக புத்திபண்ணென்று உபதேசிக்கையிலே தாத்பர்யமென்று கொள்ளவேணும். (காண்கிலா) என்றது - பாடாந்தரம். இப்போது, தாமரையோனுக்கும் ஈசனுக்கும் இந்த்ரனுக்கும் விசேஷணமென்று தாத்பர்ய மருளிச்செய்கிறார், (இப்படியித்யாதி). (புக்காயே) என்றவநந்தரம் இவ்வர்த்தத்தை நன்றாகக்கேள்என்று கூட்டுவது. ... ... (௯)

மூ.—மின்னுமாமுகில்மேவுதண் திருவேங்கடமலைகோயில்மேவிய
அன்னமாய் நிகழ்ந்த வமரர் பெருமானைக்
கன்னிமாமதிள்மங்கையர்கலிகன்றியின்றமிழாலுரைத்தவிம்
மன்னுபாடல்வல்லார்க்கிடமாகும்வானுலகே. (க௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

—∞—

பதம்.	உரை.
மின்னும்	மின்னுநிற்கிற
மாமுகில்	பெரியமேகங்கள்
மேவு	வந்துசேருகிற
தண்	குளிர்ந்த
திருவேங்கடமலை	திருமலையை
கோயில்	கோயிலாகக்கொண்டு
மேவிய	நித்யவாஸம்பண்ணுமவனாய்
அன்னமாய்	ஹம்ஸரூபியாய்
நிகழ்ந்த	திருவவதரித்தவனாய்
அமரர்	நித்யஸூரிகளுக்கு
பெருமானை	நிர்வாஹகனானவன் விஷயமாக,
கன்னி	கல்லாலேசெய்யப்பட்டதாய்
மா	பெரிய
மதிள்	மதிளையுடைத்தான
மங்கையர்	திருமங்கையிலுள்ளாருடைய
கலி	பாபத்தை
கன்றி	போக்கினஆழ்வார்
இன்	செவிக்கினிதான
தமிழால்	தமிழாலே
உரைத்த	அருளிச்செய்ததாய்
மன்னு	(எம்பெருமான்திருவுள்ளத்தில்) நிலை நிற்குமதான
இப்பாடல்	இத்திருமொழியை
வல்லார்க்கு	அப்யஸிக்குமவர்களுக்கு
வானுலகு	பரமபதம்
இடமாகும்	இருப்பிடமாகும் (க௦)

வ்யா —(மின்னுமாமுகிலித்யாதி) † கழுத்தேகட்டளையாகநீரைப்பருகித், தன்வடிவி லிருட்சிக்குத்தானே விளக்குப்பிடித்தாற்காட்டினாற்போலே மின்னோடே வருகிற மஹாமேகங்கள் வந்து சேருகிற

(க) க - ச - ச.

ஶ்ரமஹரமான திருமலையை வாஸஸ்தாநமாகக்கொண்டு நித்யவாஸம்பண்ணுகிற, ப்ரஹ்மாதிகள் வேதசக்ஷுஸ்ஸை மீட்டுக்கொடுக்கைக்காக அன்னமாய்வந்தவதரித்துப் பின்னையவர்களுக்கத்தை மீட்டுக்கொடுத்து அவ்வழியாலே அவர்களாஶ்ரயிக்கும்படி ஸுலபனாயிருக்கிற ஸர்வேஶ்வரனை. (கன்னியித்யாதி) † அரணாகப்போரும்படியாய் ஒருவராலழிக்கவொண்ணாதபடி பெரியமதிளையுடைத்தான திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரான ஆழ்வார் இன்தமிழாலே அருளிச்செய்த இப்பத்தும் பாடவல்லார்க்கு; † பாவகர்ப்பமான அர்த்தமாகையாலே வேதத்தோபாதி என்றுமொக்க நிற்குமாயிற்று. † வேதப்ரபாவம்போலேயாயிற்று. (இடமாகும்வானுலகே) பூண்டவடிமை நித்யமாய்ச்செல்லும் தேசத்தை இருப்பிடமாகவுடையராவர். ... ... (கO)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு (மின்னு மாமுகிலித்யாதி). தன் வடிவிலிருட்சிக்குத்தானே கைவிளக்குப்பிடித்துக்கொண்டு திரியும் மேகங்களைப்போலே தன்னையறிகைக்கு ஸாதநமான வேதசக்ஷுஸ்ஸைக் கொடுத்தவனென்று ப்ரக்ருதோபயோகம் திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டு வாக்யார்த்த மருளிச்செய்கிறார், (கழுத்தேயித்யாதி). கன்னி-கல்லாலே செய்யப்பட்டதென்று சப்தார்த்தமாய்த்தாத்பர்யமருளிச்செய்கிறார், (அரணித்யாதி). "மன்னு" என்று விசேஷித்ததுக்கு பாவம், (பாவகர்ப்பேத்யாதி). அதாவது - நெஞ்சும் தாமுமொத்துச்சொன்னதாகையாலே எம்பெருமான் திருவுள்ளத்தில் நிலைநின்றதென்றுகருத்து. (பாவகர்ப்பமான) சாடு. எம்பெருமான்பக்கலிலே பாவபந்தத்தோடே சொன்னதென்று ப்ரக்ருதார்த்தம். பா (ஃ) வத்தை - நெஞ்சை, கர்ப்பமான - தன்னுள்ளேயுடைத்தானவென்று ரஸம். வேதந்தானும் பரமபுருஷஹ்ருதயாந்தர்வர்த்தியா யிருக்குமிறே. கீழ்வாக்யத்தால் பலித்தவர்த்தம், (வேதேத்யாதி). ... ... (கO)

ஜீயர் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்தில் முதல் திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி - ௨ - பத்து - ௨ - திருமொழி - காஸையாடை ப்ரவேசம்.

அவ—† ஆஶ்ரிதவிஷயத்தில், பிராட்டி திறத்திற்பண்ணுமோரத்தைப்பண்ணும் ஸ்வபாவனுமாய், † அவர்கள் காலாலே காட்டுமத்தைத்தலையாலே செய்வானுமாய், † அகடிதங்களை கடிப்பிக்க வல்லனுமாய், ப்ரஹ்மாதிகளுக்கு அவிஷயமாம்படி பெரியவனுமாய், ஸர்வபூதஸுஹ்ருத்துமாய், ஸர்வஸஜாதீயனுமான ஸர்வேஶ்வரன், தனக்கு ஆஶ்ரிதர் பக்கலுண்டான இனிமையாலே, அவர்கள் சரீரஸம்பந்தமற்றுப் பரமபதத்திலே போனால் செய்யுமடிமையை (௧) * இண்டையாயினகொண்டு தமக்கேத்தலாம்படியாகத் திருவெவ்வுளிலே வந்து சாய்ந்தருளினபடியை யநுஸந்தித்து † இனியராகிறார்.

அரு—காஸை யாடை ப்ரவேசம்.—கீழ் நாலு திருமொழிகளாலே, திருவேங்கடமுடையானைத்தாமும் நெஞ்சுமாய் யதாமநோரத மநுபவித்துத்தேக்கிட்டு நிற்கிறவளவிலே, (௨) * நிலையார நின்ற வழகுக்கு மேலே கிடையழகு கண்டநுபவிக்கவேணுமென்னு மாசைபிறந்து, ஸந்நிஹிதமான திருவெவ்வுளூரிலெம்பெருமானை யநுபவிக்கிறாரென்று ஸங்கதி கண்டு கொள்வது.

பாட்டுக்களில் ப்ரமேயத்தை ஸங்க்ரஹேணவருளிச்செய்கிறார், (ஆஶ்ரிதேத்யாதி). (௩) "இன்னார்தூதனென நின்றான்" என்றத்தால் பலித்தது, (அவர்கள் காலாலே யித்யாதி). (௪) "பாலனாகி என்கிற பாட்டினர்த்தம், (அகடிதங்களையித்யாதி). (இனியராகிறார்) என்றது (௫) "கிடந்தானே" என்கிற ஸ்வரஸஸூசிதார்த்தம்.

மூ.—காஸையாடை மூடி யோடிக்காதல் செய்தா னவனூர்
நாசமாக நம்பவல்ல நம்பி நம்பெருமான்
வேயினன்ன தோள்மடவார் வெண்ணெ யுண்டானிவனென்
றேசநின்ற வெம்பெருமா னெவ்வுள் கிடந்தானே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
காஸைஆடை	காஷாயவஸ்த்ரத்தை யிட்டு	அவன்	அந்தராவணனுடைய
		ஊர்	ஊரானது
மூடி	(உடம்பை) மறைத்து	நாசமாக	நசிக்கும்படிநினைத்து
ஓடி	(பர்ணசாலைக்கு) ஓடி வந்து	நம்பவல்ல	அப்படிசெய்துதலைக் கட்டவல்ல
காதல்செய்தான்	(பிராட்டிபக்கல்) வ்யாமோஹத்தைப் பண்ணின	நம்பி	வீரஸ்ரீயால்பூர்ணனான
		நம்பெருமான்	நம்முடையஸ்வாமியாய்
		வேய் அன்ன	மூங்கிலை ஒத்த

---

(௧) ௧-௧-௩. (௩) ௨-௨-௩. (௫) ௨-௨-௧.
(௨) (௪) ௨-௨-௫.

தோள்	தோள்களையும்	ஏசநின்ற	(கோபிமார்கள்) ஹாஸ்யம்பண்ணும்படி எழுந்தருளியிருக்கிற
மடவார்	மடப்பத்தையுமுடைய கோபிமார்களுடைய	எம்பெருமான்	என் ஸ்வாமியானவன்
வெண்ணெய்	நவநீதத்தை	எவ்வுள்	திருவெவ்வுள் என்கிற திருப்பதியிலே
இவன் உண்டான் என்று	இவன் (திருடி) பக்ஷித்தானென்று	கிடந்தான்	கண் வளர்ந்தருளினான்.

வ்யா.—முதற்பாட்டு. (காசையித்யாதி) காஷாயவஸ்த்ரத்தையிட்டு உடம்பெங்கும் மறையும்படி மூடி, ராமபயத்தாலே பதறி நடந்துபோய், ஜநகி என்று பாராமே † வீதராகவேஷத்தைத்தரித்து வைத்து ராகத்தைப்பண்ணினானையுடைய ஊரானது ஸ்மசாநஸத்ருசமாம்படியாகத் திருவுள்ளத்திலேகொண்டருளி அப்படி செய்து தலைக்கட்டுகைக்கீடான வீரஸ்ரீயால் பூர்ணனானவன். (நம்பெருமான்) அப்படி பிராட்டிதிறத்தில்பண்ணின † ஓரத்தை நம்பக்கலிலேபண்ணினவன். (வேயித்யாதி) † வேயோடொத்த தோள்களையுடையராய் ஆத்மகுணோபேதைகளாயிருக்கிற கோபிகளுடைய ஸ்பர்சமுள்ளதொரு த்ரவ்யத்தாலல்லது செல்லாமையையுடையனாய், அவர்களுடைய வெண்ணெயைக்களவுகண்டு அமுதுசெய்து, அவர்கள் அத்தைச்சொல்லி ஏசும்படிநிற்கிற ஸர்வேஶ்வரன். (எவ்வுள்கிடந்தானே) அறிவுடையார் (க) "రామో రామో రామః - ராமோ ராமோராமः" என்னத், தன்பக்கல் நசையுடையவர்களிப்படியேச, இவை யிரண்டையும் கேட்டுத்திருவெவ்வுளிலே கண்வளர்ந்தானாயிற்று. .... (க)

அரு—முதற்பாட்டு (காசையித்யாதி) கீழ்த்திருமொழியிலே (உ) "துவரியாடையர்" என்று - வேஷதாரிகள் ப்ரஸ்துதராகையாலே, அப்படிப்பட்ட வேஷதாரிகள் * தலையையறுப்பதே கருமங்கண்டாய் என்னுமர்த்தத்தை யநுஷ்டாநபர்யந்த மாக்கின சக்ரவர்த்தித்திருமகன்படியை யநுஸந்திக்கிறாரென்று அவதாரிகை கண்டுகொள்வது.

"செய்தானூர்" என்னாதே, "அவன்" என்றதுக்குத்தாத்பர்யம், (வீதராகரித்யாதி). (ஓரத்தை) - பக்ஷபாதத்தை. "இன்" சாரியையாய், அதினர்த்தம், (வேயோடொத்த) என்றது. ... ... (க)

(க) ரா - யு - கநக. (உ) உ - க - ச.

மூ.—தையலாள்மேல் காதல் செய்த தானவன் வாளரக்கன்
பொய்யிலாத பொன்முடிக ளொன்பதோ டொன்றுமன்று
செய்த வெம்போர் தன்னிலங்கோர் செஞ்சரத்தாலுருள
எய்தவெந்தை யெம்பெருமா னெவ்வுள் கிடந்தானே. (உ)

பதம்.	உரை.
தையலாள்மேல்	நிருபாதிகஸ்த்ரீத்வத்தையுடையளான பிராட்டிபக்கல்
காதல்செய்த	அபிநிவேசத்தைப்பண்ணினவனாய்
தானவன்	ஆஸுரப்ரக்ருதியாய்
வாள்	வாளை (த்தனக்குரக்ஷகமாக)உடையனான
அரக்கன்	ராவணாஸுரனுடைய
பொய்யிலாத	வாஸ்தவாகாரமான
பொன்முடிகள்	ஸ்வர்ணகிரீடங்கள்தரித்ததலைகள்
ஒன்பதோடொன்றும்	பத்தும்,
அன்று	பிராட்டியைராவணன்சிறைவைத்தஅக்காலத்தில்

பதம்.	உரை.
செய்த	பண்ணின
வெம்	க்ரூரமான
போர்தன்னில்	செவ்வைப்பூசலிலே
ஓர்	ஒப்பற்றதாய்
செம்	(நெருப்பை யுமிழ்ந்து கொடுவருகையாலே) சிவந்த
சரத்தால்	கொலையம்பாலே
உருள	சிதறிவிழும்படியாக
எய்த	ப்ரயோகம்பண்ணினவனாய்
எந்தை	என்பிதாவாய்
எம்பெருமான்	எனக்கு ஸ்வாமியான
எவ்வுள்	திருஎவ்வுளிலே
கிடந்தான்	[வன்பள்ளி கொண்டருளினான். (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (தையலித்யாதி). † திரியட்டும் ராமாவதாரம்அநுவர்த்தித்தபடி. பட்டரோபாதியும்போருமாயிற்று இவர்க்கு † அவ்வவதாரத்தில்பக்ஷபாதம். † சிறியாத்தான்,பட்டர்ராமாவதாரத்திலே பக்ஷபதித்திருப்பரென்றருளிச்செய்யும் வார்த்தை கேட்கைக்காகப்“பெருமாளுக்குஎல்லாவேற்றமுமுண்டாகிலும்ஆஶ்ரிதார்த்தமாகக் கழுத்திலே ஓலைகட்டித்தூதுபோன இவ்வேற்றமில்லையே” என்ன,†“அவர்போகாமையல்ல, பிறப்பில்குற்றங்காணும்” என்றருளிச்செய்தார். இக்ஷ்வாகுவம்ஶ்யர்கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோக விடுவாரைக்கிடையாதே. † அவ்வவதாரத்திலே திருவடி அங்கேபோவது இங்கேவருவதாய்க்கொண்டு வார்த்தைசொல்லித் திரிந்த ஏற்றத்தைக்கண்டு “நாமுமிப்படி ஆஶ்ரிதர்க்காகத்தூது போகப்பெற்றிலோம்” என்று செவிசீபாய்ந்தது; அதுக்காகவிறே பின்னைவந்தவதரித்துஆஶ்ரிதர்க்காகத்தூதுபோயிற்றது. † க்ஷத்ரியனென்றால் நிஶ்சயிக்கில் தூதுபோக விடுவாரில்லையென்று அத்தை மறைத்திறேவளர்ந்தது. † அபிஷித்த க்ஷத்ரியவம்சத்திற் பிறக்கில் தூதுபோகவிடுவாரைக் கிடையாதே.

(தையலித்யாதி) நிருபாதிகஸ்த்ரீத்வத்தையுடையவள் பக்கலிலே ஜநகி என்று பாராதே அப்ராப்தமான ஸங்கத்தைப்பண்ணினனாயிற்று. அதுக்கடி ஆஸுரப்ரக்ருதியாகையாலேயாயிற்று. (வாளரக்கன்) †தேவதைகொடுத்தவாளை விஶ்வஸித்திருந்தானாயிற்று பெருமாள் மிடுக்கைப்பார்க்கவறியாதே. (பொய்யிலாத) ஆஸுரஸ்வபாவத்துக்குச் சேருமிடத்தில்பொய்யின்றிக்கேயிருக்கிற முடிகளென்னுதல். †அன்றிக்கே,திக்விஜயம்பண்ணிவீராபிஷேகம்,விஜயாபிஷேகம் என்று சில உண்டிறே பண்ணுவன, அவற்றுக்குறுப்பான அத்புதங்களில் பொய்யின்றிக்கே யிருக்கையென்னுதல். (செய்தவெம்போர்தன்னில்) †ப்ரஹ்மாதிகளைப்போலேஇருந்த விடத்திலேயிருந்து† தபோபலத்தாலே ஸங்கல்பித்தல்,அந்தராவணனைப்போலே களவுபூசல் செய்தல்செய்கையன்றிக்கே நேரே பொருதபோரிலே, (ஓர்செஞ்சரத்தால்)(க)"దీప్తపావకసఙ్కాశైః-தீப்தபாவகஸங்காசை:" என்கிறபடியே நெருப்பெரிந்து கொடுசெல்லுகிறபடியாதல், திண்ணியமார்பிலேபட்ட அம்பால் ரக்தஸ்பர்சத்தாலேவந்த சிவப்பைச்சொல்லுதல். வரபலத்தாலே பூண்கட்டின தலைகள் பனங்காய்போலே உருளும்படியாக எய்த. (எந்தை) எனக்கு ஜநகனானவன், எனக்குஸ்வாமியானவன். (எவ்வுள்கிடந்தானே) எழுப்பிக்கார்யங்கொள்வார் தாழ்வேயுள்ளது, அவன்வந்து சாய்ந்தான். (௨)

அந.—இரண்டாம்பாட்டு (தையலாளித்யாதி), கீழ்ப்பாட்டிலும் ராமவ்ருத்தாந்தம் ப்ரஸ்துதமாய், இப்பாட்டிலும் அதுவேயானபடியைக் கண்டு வ்யாக்யாதாக்கள்படுகிறார், (திரியட்டுமித்யாதி). (திரியட்டும்) - புந:. அநுவர்த்திக்கைக்கடி யென்னென்ன, (அவ்வவதாரத்திலித்யாதி). (பட்டரோபாதி) என்கைக்கு - பட்டர் ராமபக்ஷபாதியாயிருப்பரோவென்ன, (சிறியாத்தானித்யாதி). இல்லையென்னக்கூடுமோ, பண்டு தூதநடவாமைக்கு ஹேதுவேறேயென்று பரிஹரித்தருளுகிறார், (அவரித்யாதி வாக்யத்வயத்தாலே). இவ்வாஶ்ரிதபாரதந்த்ர்ய முண்டென்கைக்கு நியாமகமென்னென்ன; அருளிச்செய்கிறார், (அவ்வவதாரத்திலேயித்யாதி). அவர் இக்ஷ்வாகுவம்ஶ்யரானல், க்ருஷ்ணன் யதுவம்ஶ்யனன்றோவென்ன; அருளிச்செய்கிறார், (க்ஷத்ரியனென்றித்யாதி). தூதுபோகவிடச்செய்தே அறியார்களோவென்ன, (அபிஷிக்தக்ஷத்ரியேத்யாதி). ஆக இப்படி கக்ஷ்யாக்ரமத்திலேயாகிலும் சக்ரவர்த்தித் திருமகனிடத்தில் ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்தை ஸாதிக்கும் பட்டரைப்போலே இவரும் வீரவாசியறியுமவராகையாலே ராவணவதத்தை மாறி மாறி யருளிச்செ

(க) ரா - யு.

ய்வரென்ற தாயிற்று. (தேவதை) என்றது - ருத்ரனை. "பொய்யிலாத" என்றதுக்கு "தானவன்" என்றபதத்திலே நோக்காக ஒருதாத்பர்யமருளிச்செய்து, "வாளரக்கன்" என்றதிலே நோக்காகத்தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார், (அன்றிக்கேயித்யாதி). "செய்தபோர்" என்றுவிசேஷிக்கைக்குச் செய்யாதபோருண்டோ, போரானபோதே வெவ்விதாயிராதோ, விசேஷிக்கவேணுமோ வென்ன, அருளிச்செய்கிறார், (ப்ரஹ்மாதிகளையித்யாதி). (தபோபலத்தாலே) - ஆலோசநா ஸாமர்த்யத்தாலே. ராவணவதார்த்திகளாயிறே போரை ஸங்கல்பித்தார்கள். களவூசலாகில் தன்மேல் அம்பு தையாதிறே ந்யாயயுத்தமேயிறேவெம்போரென்று திருவுள்ளம், ... (உ)

மூ.—முன்னோர்தூது வானரத்தின் வாயில் மொழிந்துஅரக்கன்
மன்னூர் தன்னைவாளியினால் மாளமுனிந்து அவனே
பின்னோர் தூதாதி மன்னர்க்காகிப் பெருநிலத்தார்
இன்னார்தூத னென நின்றா னெவ்வுள் கிடந்தானே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முன்	ராமாவதாரத்திலே	அவனே	அந்தச்சக்ரவர்த்தித்திருமகன்றானே
ஓர்	அத்விதீயமான	பின்	க்ருஷ்ணாவதாரத்தில்
தூது	தூதவாக்யத்தை	ஆதிமன்னர்க்கு	ப்ரதாநராஜாக்களான பாண்டவர்க்கு
வாநரத்தின்	திருவடியினுடைய	ஓர்தூதாகி	ஓர்தூதனாய்
வாயில்	வாயாலே	பெருநிலத்தார்	பெரியபூமியிலுள்ளார்
மொழிந்து	சொல்லியனுப்பி	இன்னார்தூதன் என	இவன் பாண்டவதூதன் என்னும்படி
அரக்கன்	ராக்ஷஸனான ராவணன்	நின்றான்	(அர்ஜுநனுடைய தேர்முன்னே) நின்றவன்
மன்னு	பொருந்திவர்த்திக்கிற		
ஊர் தன்னை	லங்கையை		
வாளியினால்	அம்பாலே		
மாள	நசிக்கும்படியாக		
முனிந்து	சீறியருளினவனாய்,		

எவ்வுள்கிடந்தான். (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (முன்னித்யாதி) †"ஏசநின்ற" என்றது அநுவர்த்திக்கிறது. †உதிதாநுதிதஹோமநிந்தைபோலே யிருப்பதொன்றிறே இது. †புக்கபுக்க துறைதோறும் பகவத்விஷயத்திலே கால்தாழவல்லராயிற்று. (முன்) †த்வாபரத்தினுடைய ஆதியிலே, †பிராட்டியைப்பிரிந்த ஆற்றாமை மீதூர்ந்து கடலிலே புக்கு முடியுமளவானவாறே ஒரு குரங்கின்வாயிலே வார்த்தையைச்சொல்லிவிட்டான். (அரக்கன் மன்னூர்தன்னை) †அரக்கனுடைய வராதிகளாலே பூண்கட்டின ஊரை. (வாளியினால்) ப்ரஹ்மாஸ்த்ராதிகளுக்குக்கேளாத ஊரை மனிச்சுக்கு ஏகாந்தமான அம்பாலே அழியும்படி சீறினாயிற்று, (அவனே இத்யாதி) கடலில்நீரே நெய்

யாகப்பற்றி எரியவல்ல அம்புடையனாயிருக்கச்செய்தே, ஓர் †இயற்றியில்லாதாரைப்போலே கழுத்திலே ஓலைகட்டித்தூது போனானாயிற்று. (ஆதிமன்னர்க்காகி) †துர்யோதநாதிகள் ராஜ்யம்பண்ணாநிற்கச் செய்தேயும் பாண்டவர்களை "ஆதிமன்னர்" என்கிறாராயிற்று, ராஜ்ய ப்ராப்தி இவர்களது, அவர்கள் § கிடந்தானை கண்டேறின வித்தனையென்று. †பள்ளிகளும் கள்ளரும் க்ஷேத்ர மாளாநிற்க ப்ராஹ்மணன் ப்ரமாணங்களைக் காட்டிவைக்குமாபோலே, அவர்கள் ஆதிமன்னரென்கிறாராயிற்று இவர் ஈஸ்வராபிப்ராயத்தாலே. சிறியார்பெரியாரென்று வாசியின்றிக்கே எல்லாருமொக்க (இன்னார்தூதனென நின்றான்). "பாண்டவதூதன்" என்றவத்தாலே தரித்துநின்றானாயிற்று. ஒருபிறப்பாதல் வ்ருத்தமாதல் இட்டுச்சொல்லவொண்ணாதாரைப் போலே தனக்கென்ன இட்டுச்சொல்லலாவதொன்றின்றிக்கே, "பாண்டவர்களுக்குத்தூதன்"என்றவத்தாலே தரித்து நின்றானாயிற்று. ஒரு ஜந்மவ்ருத்தாதிகளாலே நிரூபியாதே அதுவே நிரூபகமாயிற்று "இன்னான் சோற்றாலே தரித்தான்" "சுவர்மண்ணாலே நின்றது" என்னுமாபோலே. ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்தை யிட்டுச்சொல்லுவாரைப் பெறில் உண்ணாதே தடிக்குமாயிற்று. (எவ்வுள்கிடந்தானை) இவ்விடம்நல்லநீர்வாய்ப்பாயிருந்தது - †பூமியிலே ஏவிக்கார்யங் கொள்வாரைப்பெற்றது, இனிஇவ்விடம்விட்டுப்போவோமல்லோமென்று சாய்ந்தானாயிற்று. ... ... (௩)

அ௩—மூன்றாம்பாட்டு (முன்னோரித்யாதி). முதற்பாட்டோடு ஸங்கதி ப்ரதர்சகம்(ஏ சவித்யாதி).§இப்படி எசும்விஷயத்தை இவராசைப்பட்டு ஆத

---

§நிந்திதமானது அநிந்திதமாகக்கூடுமோ வென்ன; (உதிதாநுதித) என்றது. உதிதாநுதிதஹோமநிந்தையாவது (க) - "உதிதே ஜுஹோதி - உதிதே ஜுஹோதி" (க) "அநுதிதே ஜுஹோதி- அநுதிதே ஜுஹோத" என்று இரண்டையும் விதித்துவைத்து (உ) "ப்ராதர் ப்ராதரந்ருதந்தே வதந்தி புரோதயாஜ்ஜுஹ்வதி யேऽக்நிஹோத்ரம்" என்றது அநுதிதஹோமப்ரசம்ஸார்த்தமாகவென்றபடி. அதாவது - "ஏசநின்ற" என்றது - ஏச்சாகையன்றிக்கே குணமாமென்றபடி. இவ்விடத்தில் "உதிதாநுதிதத்ருஷ்டாந்தம் ப்ரசம்ஸாமாத்ரஸ்யத்ருஷ்டாந்தம்" என்றருளிச்செய்வர். இல்லையாகில் நிந்திதமான க்ருஷ்ணாவதார சேஷ்டிதத்துக்கே குணதிக்யத்துக்கு இது உதாஹரண மாகமாட்டாது. அப்போது ராமாவதார ப்ரசம்ஸையிலேயாமென்று கண்டுகொள்ளவேணும்.

---

§ கிடந்தானைகண்டேறுகை-படுத்துக்கொண்டிருக்கிற ஆனையைத்தானேயேறுகை. (க) யஜு-அஷ்-௩-அ-௬௧. (உ) யஜு.

ரம்பசன்னுவானென்னென்ன, (உதிதேத்யாதி). உதிதாநுதித ஹோமவிதி ப்ரகாரணத்தால், (க) "ప్రాతర్యజుషా జుహ్వతి యోగ్నిహోత్రం ప్రాతరనృతం తేవదన్తి - "ப்ராதர்யாஜுஷாஜுஹ்வதியோக்நிஹோத்ரம் ப்ராதரந்ருதம் தேவதந்தி" இத்யத்திந்தை ப்ரசம்ஸாதாத்பர்யகமானதுபோலே, கோபிமாருடைய நவநீத சௌர்யத்தில் எச்சுக்கும் ஸௌலப்யகுணப்ரசம்ஸையிலே தாத்பர்யமென்று இருவுள்ளம். கீழ்ப்பாட்டில் ராம பக்ஷபாதம் போய், க்ருஷ்ணபக்ஷபாதமெங்கே வந்ததென்ன; அருளிச்செய்கிறார், (புக்கவித்யாதி). (த்வாபரத்தினுடைய ஆதியிலே) என்றது - த்வாபரத்துக்கு ஆதி த்ரேதாயுகமென்று கொள்ளவேணும், இத்தால் - வ்யவஹிதபௌர்வாபர்யம் தோற்றிற்றாயிற்று. இங்ஙனன்றாகில் "முன்னோர்" என்றும், "பின்னோர்" என்றும் விசேஷிக்கவேண்டாவிறே. "ஓர்" என்றபதத்தாலே ஸூசிதமானதாத்பர்யம், (பிராட்டியையித்யாதி). ஓர் "தூது -" அத்விதீயமான தூதவாக்யத்தை, வானரத்தினுடைய வாயாலே, மொழிந்து - சொல்லியனுப்பியென்று சப்தார்த்தம். "மன்னூர்" ஸ்த்திரமானஊர் என்று ஹேது பூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார், (அரக்கனுடையவித்யாதி). (இயற்றி) - பரிகரம், "ஆதி" ப்ரதாநரான, மன்னரென்று சப்தார்த்தம் விவக்ஷித்துத்தாத்பர்யம், (ஆர்யோதநாதிகளித்யாதி). ஸத்ருஷ்டாந்தம் விவரணம், (பள்ளிகளுமித்யாதி,). "இவ்விடம்" இத்யாதிக்கு விவரணம், (பூமியிலேயித்யாதி). ... ... (௩)

மூ.—பந்தணைந்த மெல்விரலாள் பாவைதன் காரணத்தால்
வெந்திறலேறேழும் வென்றவேந்தன் விரிபுகழ்சேர்
நந்தன் மைந்தனாகவாகும் நம்பி நம்பெருமான்
எந்தைதந்தை தம்பெருமா னெவ்வுள் கிடந்தானே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பந்து	கந்துகம்	புகழ்சேர்	புகழையுடைய
அணைந்த	பொருந்திய	நந்தன் மைந்தனாக	ஸ்ரீநந்தகோபர்திருமகனாக,
மெல்	ம்ருதுவான [ய்	ஆகும்	தன்னைஅமைத்துக் கொண்டவனாய்,
விரலாள்	விரல்களையுடையளா	நம்பி	ஸமஸ்தகல்யாணகுணபரிபூர்ணனான
பாவைதன் காரணத்தால்	நிருபாதிகஸ்த்ரீத்வத்தையுடையளான நப்பின்னைப்பிராட்டியைப்பெறுகைக்	நம்பெருமான்	நம்ஸ்வாமியாய்
வெம்	க்ரூரமாய் [காக	எந்தை தந்தை தம்பெருமான்	நான் என்தகப்பன் அவன் தகப்பன் முதலான நம்குலத்துக்கு நாதனானவன்
திறல்	மிடுக்கையுடைய		எவ்வுள்கிடந்தானே. (௪)
ஏறுஏழும்	ருஷபங்கள்ஏழையும்		
வென்ற	நிரஸித்த		
வேந்தன்	அரசனாய்,		
விரி	ப்ரஸித்தமான		

(க) யஜு॰.

வ்யா.—நாலாம்பாட்டு. (பந்தித்யாதி) † திரியவும் க்ருஷ்ணாவதாரமே பின்னாட்டிற்று. † க்ருஷ்ணனுக்கு ஆகர்ஷகமாம்படி கையிலே பந்தைப்பிடித்து அதுதானும்பொருந்த மார்த்தவத்தையுடைய விரலையுடையளாய். நிருபாதிகஸ்த்ரீத்வத்தையுடைய நப்பின்னைப் பிராட்டியை லபிக்கைக்காக, (வெந்திறலித்யாதி)† கணக்காலே, அம்பாலே பூசல்செய்யலாம் ஜந்மமன்றே. அஜ்ஜாதிக்கடுத்த வெற்றியைக்கொண்டானாயிற்று. ருஷபங்களையடர்த்து அஜ்ஜாதிக்கு ராஜாவானவன். (விரிபுகழ்சேர்நந்தன்) † ஆமேனும்பிள்ளைபெறவேணுமென்று நோன்புநோற்க (க) "எடுத்தபேராளன்" என்று பல(ஶ்ல)த்திலே அந்வயித்துநிற்கப் பெற்ற புகழையுடையனாயிற்று. (ஆகும்) ஒருபிதாவின்றிக்கே தான்தோன்றியான எளிமைநீர ஸ்ரீநந்தகோபர் திருமகனானபின்பாயிற்று (௨) "ஸத்யம் ஜ்ஞாநம் - ஸந்தமேநம்" என்னுமாம்போலே உளனாயிற்று. (மைந்தனாகவாகும்) (௩) †[உந்தமடிகள்முனிவர்] †யசோதைப்பிராட்டி அவனை அச்சமுறுத்துகைக்காகச் சொல்லும் வார்த்தையாயிற்று; தான் தாயானவெளிமையாலே பொடியமாட்டாளே; அதுக்காக உங்கள் தமப்பனார் பொடிவர்கிடீர். [உன்னை] † செய்ததெல்லாம் பொறுக்கும்படியன்றிறே தீம்பிலே கைவளர்ந்து நிற்கிறது. [நாணித்யாதி] கையில் கோலைக்காட்டி "இதிருக்கிறபடிகண்டாயே, † இது உன்பேர்" என்னும்; இத்தாலே உன்னை நோம்படி அடிக்கலாமின்றே; அதுக்கெனக்குக் கையெழுகிறதில்லை. (நம்பி) ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் ஸ்ரீவைகுண்டத்திலிருந்த இருப்பிலும் இங்கே வந்தவதரித்துத் தான்தாழநின்றபின்பாயிற்றுப் பூர்ணனாயிற்று. (நம்பெருமான்) நமக்குநாதன். † நம்குலநாதனானவன். (எவ்வுள்கிடந்தானே) ஸர்வவிதபந்துவானவனைக்காணலாவது பரமபதத்திலே என்று அவ்விடத்திற்போகப் பொதிசோறு கட்டவேண்டாதே பந்துக்ருத்யம்பண்ணலாம்படி திருவெவ்வுளிலே வந்து சாய்ந்தானாயிற்று. ... (௪)

அரு—நாலாம்பாட்டு (பந்தித்யாதி) (௪) "எத்திறம்" என்று ஆழங்கால் படுத்தும் விஷயமாகையாலே க்ருஷ்ணனிடத்தில் இளமணல் பாய்ந்து அநுபவிக்கிறாரென்கிறார், (திரியவுமித்யாதி). க்ருஷ்ணன் வந்தணையும்படி பந்தணைந்தாளென்று ப்ரக்ருதோபயோகம் காட்டாநின்றுகொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார், (க்ருஷ்ணனுக்கித்யாதி). (கணக்காலே) என்றனந்தரம்,

---

(க) தி-வாய்- (௨) தைத்தி-ஆந- (௩) ௧௦-௪-அ- (௪) தி-வாய்-௧-௩-௧.

கொள்ளப்போகாதேயென்று சேஷம், கணக்கு - மைத்துனமைமுறை. இத்தால்-நப்பின்னையைக் கைக்கொள்ளப்போகாது ஏறுகளைக் கந்யாசுல்கமாக வைக்கையாலே, கேவலக்ஷத்ரியஜந்மமாகில் பூசலிலேயென்று கைக்கொள்ளலாம், இரண்டு வழியும் கூடாதே எருதுகளைத் தழுவிக்கொண்ருலாயிற்று அவளைத் தழுவிக்கொள்ளுவதென்று இவ்வாக்யத்துக்குத் தாத்பர்யம். (ஆனேறும்) என்றது-வஸுதேவதேவகிகளை. § எடுத்து வளர்த்த *அசோதை தன் சிங்கத்தை நந்தன் மைந்தனுகச் சொல்லுவானென்னென்ன ; அருளிச்செய்கிருர், (உந்தமடிகளித்யாதி). எடுத்த பாசுரத்தை வ்யாக்யாநம் பண்ணுகிருர், (யசோதையித்யாதி). "உன்னை" என்ற பதப்ரயோகத்துக்குத் தாத்பர்யம், (செய்ததெல்லாமித்யாதி). (இது உன்பேர்) என்று - கோலினபேரைச் சொல்லும். அதாவது-க்ருஷ்ணனெங்கே ? க்ருஷ்ணனெங்கெ? என்று உன்னைத் தேடித் திரியுமென்கை, இது, "என்னையில்" என்றவிசேஷணலப்தார்த்தம். "எந்தை தந்தை தம்பெருமான்" என்றதுக்கர்த்தம், (நம்குலேத்யாதி). (பொதிசோறு) பாக்குப்பாளையிலே பொதிந்தசோறு, பாதேயமென்றபடி. ... (௪)

மூ.—பாலனுகி ஞாலமேழுமுண்டு பண்டாலிலைமேல்
சாலநாளும் பள்ளிகொள்ளுந் தாமரைக்கண்ணனெண்ணில்
நீலமார் வண்டுண்டுவாழும் நெய்தலந்தண்கழனி
ஏலநாறும் பைம்புறவி லெவ்வுள்கிடந்தானே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பாலனுகி	சிறுபிள்ளையாய்	நெய்தல்	ஆம்பலில்
ஞாலம்ஏழும்	ஏழுலோகங்களையும்	ஆர்	படிந்து
உண்டு	அமுதுசெய்து	உண்டு	(அவற்றிலுண்டான தேனைப்) பானம்பண்ணி
பண்டு	ப்ரளயகாலத்திலே	வாழும்	வாழுகிற
ஆலிலைமேல்	ஓராலந்தளிரிலே	அம்	அழகியதாய்
சாலநாளும்	அநேககாலம்	தண்	குளிர்ந்த
பள்ளிகொள்ளும்	கண்வளர்ந்தருளின	கழனி	கழனியையும்
எண்இல்	அப்ரமேயனுய்	ஏலம்	பரிமளம்
தாமரைக்கண்ணன்	புண்டரீகாக்ஷனுனஸர்வேஸ்வரன்,	நாறும்	கமழாநின்ற
நீலம்	நீலவர்ணங்களான	பை	பரந்த
வண்டு	வண்டுகளானவை	புறவில்	புறச்சோலையையுமுடைய
		எவ்வுள்கிடந்தான்.	(ரு)

§ இதுக்கு நியாமகமேதென்ன; (உந்தமடிகள்) என்றது. அதாவது - அடிகள்முனிவர் என்னுதே "உந்தமடிகள்" என்றது - அவனிவரைத்தமப்பனுராகப்பெற்றவிது பெருப்பேருகநினைத்திருக்கையாலே என்றபடி. வஸுதேவனுக்குமகனுயிருக்க நந்தன்மைந்த னென்பானென்னென்ன, (உந்தமடிகள்) என்றது.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பாலனாகி) அத்யந்தம் † செம்பால் பாய்கிற பருவத்தையுடைய பாலனாய், அப்பருவத்திலே ஸகல லோகங்களையுமெடுத்து வயிற்றிலே வைத்து. (பண்டு) தனக்கொரு பரிவரில்லாத ப்ரளயகாலத்திலே,ஒருபவனான ஆலந்தளிரிலே.(சால) பிள்ளை அகாலத்திலே உறங்காநின்றான், என்செய்தானென்று எழுப் புகைக்கு ஒரு யசோதாதிகளுமில்லையே.(எண்ணில்) † அகடிதங்களை கடிப்பிக்கும்படி. †அது ஆராயப்புக்கால் † இருக்கும்படி. (நீலமித் யாதி) நெய்தற்பூவிலேபடிந்த வண்டுகளானவை மதுபானம்பண்ணி வாழாநின்றுள்ள நெய்தல் நிலமென்னவுமாம். அன்றிக்கே, (நெய் தல்) என்று ஆம்பலாய்,†நீலப்பூவிலேபடிந்த வண்டுகள்†ஆம்பலிலே மதுபானம்பண்ணா நின்றுள்ள என்னவுமாம். அன்றிக்கே,நீலநிறத்தை யுடைய வண்டுகள் நெய்தற்பூவிலே மதுபானம்பண்ணுகிற அழகிய குளிர்ந்த கழனியை உடைத்தாயிருக்குமென்னவுமாம். (ஏலமித் யாதி) பரிமளப்ரசுரமான பர்யந்தத்தை யுடைத்தான தேசத்திலே அரியது செய்யவல்லவனாயிற்றுக் கண்வளர்ந்தருளுகிறான்;எழுப்பிக் கார்யங்கொள்வார்குறையே. ... ... (ரு)

அரு—அஞ்சாம்பாட்டு (பாலனாகியித்யாதி). நந்தன்மைந்தனைப்போலே பெற்றாரும் வளர்த்தாருமின்றிக்கே முற்றாக்குழவியானவனை அடியோத்து கிறாரென்று ஸங்கதி கண்டு கொள்வது.

(செம்பால்) - தொட்டால் ரக்தம் பொசிகை. “எண்ணில்” - எண்ண மில்லாதவன். அதாவது - எண்ணமுடியாதவனென்று சப்தார்த்தமாய், பலி தார்த்தம், (அகடிதேத்யாதி). விவரணம், (அதித்யாதி.) - (இருக்கும்படி) என்றவநந்தரம், எண்ணமுடியாது என்று சேஷம். கொண்டது பிள்ளைத்த னம், உண்டது - உலகேழும், உறங்குவது ஆலிலைமேல், எங்ஙனே எண்ணு ம்படிஎன்று இவ்வாக்யத்துக்குத்தாத்பர்யம், (நீலப்பூ) என்று - கருநெய்தல்; (ஆம்பல்) வெளுத்தது. ... ... (ரு)

மூ.—சோத்தநம்பி யென்றுதொண்டர்மிண்டித் தொடர்ந்தழைக்கும்
ஆத்தநம்பி செங்கணம்பி யாகிலும் தேவர்க்கெல்லாம்
மூத்தநம்பி முக்கணம்பியென்று முனிவர்தொழு
தேத்தும் நம்பி யெம்பெருமா னெவ்வுள் கிடந்தானே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொண்டர்	அநந்யப்ரயோஜநரான ஸ்ரீவைஷ்ணவர்	தேவர்க்கெல்லாம்	தேவர்களுக்கெல்லாம்
மிண்டி-	நெருங்கி [கள்	மூத்தநம்பி	முன்னேபிறந்தப்ரஹ்மாவுக்கும்
நம்பி	ஸமஸ்தகல்யாணகுணபரிபூர்ணனே!	மூக்கண்நம்பி	மூன்றுகண்களையுடையருத்ரனுக்கும் அந்தர்யாமியாய்நின்றவனேஎன்று
சோத்தம்என்று	உன்னைஸேவிக்கிறோம்என்றுசொல்லி	முனிவர்	ஸநகாதிமுநிவர்கள்
தொடர்ந்து	இடைவிடாமல்	தொழுது	ஆஶ்ரயித்து
அழைக்கும்	ஸ்தோத்ரம்பண்ணுகிற [ஞனவன்,	ஏத்தும்	ஸ்தோத்ரம்பண்ணும்
ஆத்தன்நம்பி	பரமஆப்தனாய் பூர்ண	நம்பி	பூர்ணனை [படி
செங்கண்நம்பி	சிவந்தகண்ணழகால் பூர்ணனாயிராநின்றான்;	எம்பெருமான்	என்ஸ்வாமி
ஆகிலும்	இப்படியிருந்தானேயாகிலும்	எவ்வுள்கிடந்தானே. (சு)	

வ்யா.—ஆறும்பாட்டு. (சோத்தம்) அவன் நெஞ்சிரங்கும்படி சரணவரணம் பண்ணுமாபோலே தாழ்ந்தார் சொல்லுவதொரு பாசுரம். ஸமஸ்தகல்யாணகுணாத்மகனே! சோத்தம்என்றுகொண்டு வைஷ்ணவர்கள் † ஒருவர்க்கொருவர் முற்பட்டு மேல் விழுந்து மாறாதேஅழைக்கும் ஆப்தன். (நம்பி) பரமாப்தியால்குறைவறநிற்குமவன். இப்படி யிருக்கிறவன்தானாரென்னில்; (செங்கணமபி) (க) †“యజ్ఞేశో యజ్ఞపురుషః పుణ్డరీకాక్షసంజ్ఞితః-யஜ்ஞேசோயஜ்ஞபுருஷ꞉புண்டரீகாக்ஷஸம்ஜ்ஞித꞉” என்று புண்டரீகாக்ஷனாக ப்ரமாணஸித்தனானவன். (ஆகிலும்) இப்படியிருந்தானேயாகிலும். (தேவரித்யாதி) தேவதைகளுக்கெல்லாம் முன்னே பிறந்தானாயிருக்கிற சதுர்முகனுக்கும் லலாடநேத்ரனானருத்ரனுக்கும் அந்தர்யாமியாய் ஸ்ருஷ்ட்யாதிகள் நடத்துகிறவனென்றுகொண்டு ஸநகாதிகளேத்தும்படியிருக்கிற பூர்ணனானஎன்நாதன். † ஆக இப்படி அஸாதாரண திவ்ய விக்ரஹயுக்தனாய் இதரவிஸஜாதீயனா யிருக்கச்செய்தேயும் ப்ரஹ்மாவுக்கந்தராத்மாவாய் நின்று ஸ்ருஷ்ட்யாதிகளை நடத்துகிறானென்று ஸநகாதிகளேத்தும்படியாயிருக்கிறவன் இங்கே சாய்ந்தானென்றபடி. ... ... (சு)

அரு—ஆறும்பாட்டு (சோத்தநம்பியித்யாதி). ப்ரிவரில்லாத பாலனென்று நீர் பரியவேண்டியிருந்ததோ? என்னுடைய ஸர்வாத்மகத்வத்தை மறந்

(க)

தீரோவென்ன ; அவற்றை மேல் மூன்றுபாட்டாலே அநுஸந்தித்துக்கொண்டு ஸ்துதிக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

"மிண்டி" என்றதினர்த்தம், (ஒருவர்க்கொருவர் முற்பட்டு) என்றது. "श्रूयतान्तु नरव्याघ्र वेदवेदान्तनिश्चयः-ஶ்ரூயதாந்துநரவ்யாக்ர வேதவேதாந்தநிஶ்சய:" எடுத்த ப்ரமாணத்துக்கு உத்தரார்த்தம். பாட்டுக்கெல்லாம் தொகுத்தபாவம், (ஆகவித்யாதி). ... ... (௬)

மூ.—திங்களப்பு வானெரிகாலாகித் திசைமுகனார்
தங்களப்பன் சாமியப்பன் பாகத்திருந்த வண்டுண்
தொங்கலப்பு நீண்முடியான் சூழ்கழல் சூடநின்ற
எங்களப்ப னெம்பெருமா னெவ்வுள்கிடந்தானே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
திங்கள்	சந்த்ரனையும்	அப்பு	கங்காஜலத்தையும்
அப்பு	ஜலம்	நீள்	நீண்ட
வான்	ஆகாசம்	முடி	ஜடையிலேயுடையனாய்
எரி	அக்நி [ங்களையும்		
கால்	காற்றுஆகிய நாலுபூத	பாகத்து	திருமேனியினொரு பார்ஶ்வத்திலே
ஆகி	சரீரமாகக் கொண்டு (தான் சரீரியாய்),	இருந்தான்	இருக்குமவனான ருத்ரனானவன், [ன
திசைமுகனார்தங்கள்	நான்கு முகங்களையுடைய ப்ரஹ்மாவுக்கு	சூழ்	பூமியெங்கும்பரம்பி
		கழல்	திருவடிகளை
அப்பன்	ஜநகனாய், [னாய்	சூட	(தன்தலையிலே)சூடும்படி
சாமி	ஸாமவேதப்ரதிபாத்ய		
அப்பன்	காரணபூதனாய்,	நின்ற	நின்றவனாய்,
வண்டு	வண்டுகள்	எங்கள்அப்பன்	எங்கள்ஜநகனாய்,
உண்	மதுபாநம் பண்ணிநின்றுள்ள [யும்	எம்பெருமான்	எங்கள் ஸ்வாமியுமானவன்
தொங்கல்	கொன்றை மாலையை	எவ்வுள்கிடந்தானே. (எ)	

வ்யா.—ஏழாம்பாட்டு.—(திங்களித்யாதி) கார்யவர்க்கத்துக்கு உபலக்ஷணமாக சந்த்ரனையும், காரணமான பூதபஞ்சகத்துக்குமுபலக்ஷணமாக நாலையுஞ்சொல்லி இவற்றுக்கு அந்தராத்மாவாய்நிற்கிறவென்றபடி. சதுர்முகனுக்கும் ஜநகனானவன். (சாமியப்பன்) †ஸாமவேதப்ரதிபாத்யனான காரணபூதன். (பாகத்தித்யாதி) வண்டுகள் மதுபாநம் பண்ணுநின்றுள்ள † கொன்றைமாலையையும் கங்காஜலத்தையும் ஜடையிலேயுடையனாய் திருமேனியில். ஏகதேசத்திலேயிருக்கிற ருத்ரன், விஸ்த்ருதமான திருவடிகளைத்தலையாலே சுமக்கும்படிநிற்கிறவன். (எங்களித்யாதி) எங்களுக்கு ஜநகனுமாய் ஸ்வாமியுமானவன். ... ... (எ)

அரு—எழாம்பாட்டு (திங்களித்யாதி). ஸாமத்தையுடையவன் ஸாமியென்றாய், பலிதார்த்தம், (ஸாமவேதேத்யாதி). "தொங்கல்" என்றதினர்த்தம், (கொன்றைமாலையையும்) என்றது. ... ... (எ)

மூ.—முனிவன் மூர்த்தி மூவராகி வேதம் விரித்துரைத்த
புனிதன் பூவைவண்ணனண்ணல் புண்ணியன் விண்ணவர்கோன்
தனியன்சேயன் தானொருவனாகிலும் தன்னடியார்க்கு
இனியனெந்தை யெம்பெருமா னெவ்வுள்கிடந்தானே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முனிவன்	ஸ்ருஷ்டிக்க ஸங்கல்பித்தவனாய்,	விண்ணவர்	நித்யஸூரிகளுக்கு
மூர்த்திமூவராகி	ப்ரஹ்மவிஷ்ணுருத்ரர்களாகிய மூவராக இருக்குமவனாய்	கோன்	தலைவனாய்
வேதம்	வேதார்த்தத்தை	தனியன்	ஒப்பற்றவனாய்
விரித்து	எல்லாருமறியும்படி	சேயன்	யோகிகளாலுமறியவொண்ணாதவனாய்
உரைத்த	ஸ்ரீகீதையிலே யருளிச்செய்தவனாய்	தான்ஒருவனாகிலும்	(இப்படி) தான் அத்விதீயனா யிருந்தானே யாகிலும்
புனிதன்	சுத்தியையுடையனாய்	தன்அடியார்க்கு	தன்னைஆஸ்ரயித்தவர்களுக்கு
பூவை	காயாம்பூப்போன்ற	இனியன்	நல்லவனாய்
வண்ணன்	திருநிறத்தை யுடையனாய்	எந்தை	எனக்கு ஜநகனாய்
அண்ணல்	ஸ்வாமியாய்	எம்பெருமான்	என் ஸ்வாமியுமானவன்
புண்ணியன்	பரமதார்மிகனாய்	எவ்வுள்கிடந்தானே.	(அ)

வ்யா.—எட்டாம்பாட்டு (முனிவன்) இதடையக் கரணகளேபரங்களை யிழந்து போகமோக்ஷசூந்யமாய் கார்யாகாரமழிந்து கிடந்தவன்று (க) "𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂-பஹுஸ்யாம்" என்று மநநம் பண்ணினவன், பின்பு ப்ரஹ்மாதிகளுக்கந்தராத்மாவாயும் ஸ்வேநரூபேணவும் நின்று ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுகிறவன். வேதார்த்தத்தை வ்யக்தமாம்படிவெளியிட்டுச்சொன்னவன். அதாவது-வேதோபப்ருஂஹணமான ஸ்ரீகீதையை அருளிச்செய்தபடி. (புனிதன்)(உ) "𑌸𑍁𑌹𑍃𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂-ஸுஹ்ருதம்ஸர்வபூதாநாம்" என்கிறபடியேஸ்வப்ரயோஜநநிரபேக்ஷமாகப்பரஹிதமே சொல்லுகையால்வந்த சுத்தியைச் சொல்லுகிறது. (பூவைவண்ணன்) உபதேசித்தஹிதங்கிடக்க அஹிதத்தைச்சொல்லிலும் விடவொண்ணாத வடிவை யுடையவன். (அண்ணல்) ஸ்வாமி. (புண்ணியன்) பரமதார்மிகன். (விண்ணவர்கோன்) *அயர்வறுமமரர்களதிபதி. (தனியன்) அவர்களில் வ்யாவ்ருத்தனானவன். (சேயன்) அவர்களில் நெடுவாசியையுடையவன். இப்படி தான்அத்விதீயனா யிருந்தானேயாகிலும் தன்னை ஆஸ்ரயித்தவர்களுக்கு இனியவன். எனக்கு ஜநகனுமாய் ஸ்வாமியுமானவன். (அ)

(க) சாந்தோ. (உ) கீதை.

அரு—எட்டாம்பாட்டு (முனிவனித்யாதி). (இது)-இந்த சேதநவஸ்து. "மூவராகி" என்றது-ல்யபந்தமன்று, மூவரானவரென்றபடி. நெய்யுண்ணி யென்றாற்போலே என்றருளிச் செய்கிறார், (பின்பித்யாதி). "விண்ணவர் கோன்" என்றதுக்கர்த்தம், (அயர்வித்யாதி) ... ... (அ)

மூ.—பந்திருக்கும் மெல்விரலாள் பாவை பனி மலராள்
வந்திருக்கும் மார்வன் நீலமேனி மணிவண்ணன்
அந்தரத்தில் வாழும் வானோர் நாயகனாயமைந்த
இந்திரற்கும் தம்பெருமா னெவ்வுள்கிடந்தானே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பந்து	பந்தானது	மார்வன்	திருமார்வையுடையனாய்
இருக்கும்	தங்கிய	நீலம்	கருங்குவளை போன்ற
மெல்	ம்ருதுவான	மேனி	வடிவழகையுடையனாய்
விரலாள்	விரல்களை யுடையளாய்	மணி	மணிபோலே
பனி	குளிர்ந்த	வண்ணன்	ஸௌலப்யஸ்வபாவத்தையுடையனாய்
மலராள்	தாமரைப்பூவைப் பிறந்தகமாகவுடையளாய்	அந்தரத்தில்	ஸ்வர்க்கத்தில்
பாவை	நாண்மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் ஸ்த்ரீத்வகுணங்கள்நிறைந்த பெரியபிராட்டியார்	வாழும்	வாழுகிற
வந்து	அப்பூவில்நின்றும்வந்து	வானோர்	தேவர்களுக்கு
இருக்கும்	நித்யவாஸம்பண்ணுகிற	நாயகனாய்	நிர்வாஹகனாக
		அமைந்த	சமைந்த
		இந்திரற்கும்	இந்த்ரனுக்கும்கூட
		பெருமான்	ஸ்வாமியானவன்

எவ்வுள்கிடந்தானே. (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. †(பந்திருக்கும்)† ஒருநாளும் பிரிவால் வரும்வ்யஸநமின்றிக்கே நித்யஸம்ஸ்லேஷத்தாலே கையும்பந்துமாய், அதுதான்பொறுமைசிவந்து ஸுகுமாரமானவிரலையுடையவள், நிருபாதிகஸ்த்ரீத்வத்தை யுடையவள், குளிர்ந்ததாமரைப்பூவைப் பிறந்தகமாகவுடையவள். (வந்திருக்கும்) அப்பூ நெரிஞ்சி முள்ளாய் அடிக்கொதித்து வந்து (க) "அகலகில்லேன்" என்றிருக்கும்படி மார்வு படைத்தவன். நீலமானநிறத்தையுடையமணிபோன்றவடிவையுடையவன். (அந்தரத்திலித்யாதி) இதுஸர்வேஸ்வரனுக்கு விசேஷணமாதல்; அன்றிக்கே, தேவர்களுக்கு நாதனாய்ச்சமைந்த இந்த்ரனுக்கென்னவுமாம். † அவனுங்கூடத்தன்னைப்பற்றித் தன்னை ஸ்வர்யத்தை நடத்தும்படி யிருக்கிறவன். ... ... (கூ)

(க) தி - வாய் - கூ - கO - கO.

அநு—ஒன்பதாம்பாட்டு (பந்தித்யாதி). இப்படி ஸர்வாத்மதயாவந்த ஸர்வாதிகத்வத்துக்கு நிரூபகையான லக்ஷ்மீபதித்வத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

லீலாபரதையும், ஸௌகுமார்யமும், கர்மக்ருதஸ்த்ரீத்வமன்றிக்கே யிருக்கையும் பிறந்தகத்திலே சீர்மையுமுடையவள் "வந்திருக்கும் மார்வுடையவன்" என்று சொல்லுகையால் ஸர்வாதிகத்வம் ஸூசிதமென்று திருவுள்ளம் பற்றி வாக்யதாத்பர்யார்த்தங்களை யருளிச்செய்கிறார், (ஒருநாளுமித்யாதிகளாலே). §(அவனுங்கூட) என்றது-(௧)"స బ్రహ్మా స శివస్సేంద్రః-ஸப்ரஹ்மாஸசிவஸ்ஸேந்த்ர:" என்று கூடவெடுக்க முட்டுப்பொறுத்தவனுங்கூட வென்றபடி.(௯)

மூ.—இண்டை கொண்டு தொண்டரேத்த வெவ்வுள் கிடந்தானை
வண்டுபாடும் பைம்புறவில் மங்கையர்கோன் கலியன்
கொண்டசீரால் தண்டமிழ் செய் மாலை யீரைந்தும்வல்லார்
அண்டமாள்வதாணை யன்றே லாள்வ ரமருலகே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
இண்டை	பூமாலைகளை [பித்து	கொண்ட	நெஞ்சிலேகொண்ட
கொண்டு	திருவடிகளில் ஸமர்ப்	சீர்	(அவன்) கல்யாணகுணங்களை
தொண்டர்	ஸ்ரீவைஷ்ணவர்கள்	தண்	ஈரமான
ஏத்த	ஸ்தோத்ரம்பண்ணும்படி	தமிழால்	தமிழ்பாஷையாலே
எவ்வுள்	திருவெவ்வுளிலே	செய்	அருளிச்செய்ததாய்
கிடந்தானை	கண்வளர்ந்தருளினவன்விஷயமாக,	மாலை	மாலாரூபமான [யும்
		ஈரைந்தும்	இப்பத்துப்பாட்டை
வண்டு	வண்டுகள்	வல்லார்	கற்கவல்லவர்கள்
பாடும்	பாடுகிற	அண்டம்	ப்ரஹ்மாண்டத்தை
பை	பரந்த	ஆள்வது	ஆளுமது
புறவில்	பர்யந்தத்தையுடைய	ஆணை	நிஸ்சிதம்;
மங்கையர் கோன்	திருமங்கையிலுள்ளார்க்கு ராஜாவான	அன்றேல்	அதுவேண்டாமாகில்
		அமருலகு	பரமபதத்தை
கலியன்	ஆழ்வார்,	ஆள்வர்	ஆளப்பெறுவர். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (இண்டையித்யாதி) பூமாலைகளைப் †பணிமாறி ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இங்கே அடிமை செய்து வாழ

§ ஸர்வேஸ்வரனுக்கு விசேஷணமான பக்ஷத்தில் (அந்தரத்தில்வாழும் வானோர் நாயகனாய்) அதாவது - நித்யஸூரிகளுக்கு நாயகனாய், சமைவையுடையனான இந்திரனும் தம்பெருமானென்றர்த்தம். (௯)

(௧) புருஷஸூ -

லாம்படி திருவெவ்வுளிலே கிடந்தவனைக் கவிபாடிற்று. முக்தர் ஸாமகாநம்பண்ணுமாபோலே மதுபாநமத்தமாய் வண்டுகள் பாடா நின்றுள்ள †பரந்தபர்யந்தத்தையுடைத்தான திருமங்கைக்கு ராஜாவான ஆழ்வார். (கொண்டசீரால்)"சீர்"என்று-கவிக்கு அலங்காரமாயிருப்பதொன்றுண்டு, அத்தைச்சொல்லிற்றாகவுமாம். †அன்றிக்கே, இங்கேவந்துசாய்ந்தபடியாலே பகவத்குணங்கள்நெஞ்சிலே ஊற்றிருந்து சொல்லி யல்லது நிற்கவொண்ணாதபடி அவை ப்ரேரிக்கப் பாடினமாலை என்னவுமாம். இதுகற்றார் † அண்டத்தையாளுகை நிஸ்சிதம். (அன்றேல்) "அவனைப்பற்றியுமித்தைப்|·பெறுமத்தனையோ" என்று விரக்தரானார்களாகில், |அவர்களாளுமது பரமபதம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அரு—பத்தாம்பாட்டு (இண்டைகொண்டித்யாதி). (பணிமாறி)-ஸமர்ப்பித்து. "பைம்புறவில்" என்றதினர்த்தம், (பர்யந்தத்தையுடைத்தான) என்றது. நெஞ்சிலேகொண்டசீரால் என்றர்த்தாந்தரம், (அன்றிக்கேயித்யாதி). (அண்டத்தை) ப்ரஹ்மாண்டத்தை, ஐஸ்வர்யத்தை யென்றபடி. ... (௧௦)

ஜீயர்திருவடிகளேசரணம்.

இரண்டாம்பத்தில் இரண்டாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி - உ-ம் பத்து, ௩-ம் திருமொழி விற்பெரு விழவும் ப்ரவேசம்.

வ்யா.—†ஆஶ்ரித விரோதி நிரஸந சீலனாய், ஆஶ்ரித ஸம்ஶ்லேஷைக ஸ்வபாவனாய், ஆஶ்ரிதஸுலபனாய், இதர விஸஜாதீயனாயிருக்கிற †ஸர்வேஶ்வரன், † இக்குணங்கள் தான் தர்மியநுவர்த்திக்கிறவோபாதி எங்கு மநுவர்த்திக்கு மவையிறே. †இப்படியிருக்கிறவன், மநுஷ்யராயிருப்பார் புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டாஶ்ரயிக்கலாம்படி வந்து கிடந்தமாத்ர மன்றிக்கே, ஒருதிர்யக்கு இப்பூவிற் செவ்வியழியாதபடி திருவடிகளிலே பணிமாறவேணு மென்றிடர்பட அவ்விடரைத் தீர்க்கைக்காக அதிடர்பட்ட மடுவின்கரையிலே அரைகுலையத் தலைகுலையவந்து விழுந்து அத்தையாற்றி இன்னமுமிப்படி இடர்படுவாருண்டோ! என்று சாய்ந்தருளினான், கண்டேனென்கிறார். ... ... *

அநு—விற்பெருவிழவின் ப்ரவேசம்— கீழ்த்திருமொழியில் இவரை வசீகரித்த ராமக்ருஷ்ணாவதாரங்களும், திருவெவ்வுள் கிடையழகுதானும், சிங்கவேழ்குன்றத்தில் பரிபூர்ணமாக அநுபவித்த அழகிய சிங்கரும், திருவேங்கடத்தில், (க) * திண்கைமாதுயர் தீர்த்தபடியுமாக, இவையைந்தையும், (உ) *தேனும் பாலும் நெய்யும் கன்னலு மமுது மொரு கலத்திலே சேர்ந்தால் பருகுமாபோலே இவர்க்குக் கண்ணாலே பருகலாம்படி திருவல்லிக்கேணியில் ஐவகைப்பட்டிருக்கிற இருப்பை எவ்வுள் கிடந்தவன் ஸர்வஸ்வதானம் பண்ணக் கண்டு அநுபவிக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது. இந்த ஸங்கதி தன்னை ஸூசிப்பிக்கிறார், (ஆஶ்ரிதேத்யாதி) (ஸர்வேஶ்வரன்) என்றவநந்தரம், இக்குணங்களோடே கூடத் திருவல்லிக்கேணியிலிருப்புக்களைக் காட்டிக்கொடுத்தான் என்று பூரிப்பது. இந்த குணங்களைக் கீழ்த்திருமொழியிலநுபவித்தாரே, இங்குமநுபவிக்கவேணுமோ வென்ன: அருளிச்செய்கிறார், (இக்குணங்கள்தானித்யாதி). (௩) "இண்டைகொண்டு" என்கிற பாட்டையும், மேல் (ச) "மீனமர் பொய்கை" என்கிற பாட்டையும் கடாக்ஷித்து ஸங்கத்யந்தர மருளிச்செய்கிறார், (இப்படியித்யாதி). அதாவது - ஐந்து திருப்பதியையும் ப்ராதாந்யேந அநுபவித்தாரென்று கீழ்ஸங்கதியாய், இப்போது திருவெவ்வுளில் கிடையழகையே யநுபவித்தாராகையாலே திருவல்லிக்கேணி

(க) க-அ-டு. (உ) தி-வாய்-உ-௩-க. (௩) உ-௩-கo. (ச) உ-௩-கூ.

யிலே சாய்ந்தருளின, (க) * என்னையாளுடையப்பனை யநுபவிக்கையை ப்ரதாநப்ரமேயமாக்கி, அதுக்கு உத்தரோத்தரம் குணாதிக்யம் தோற்றும்படி மற்றைத் திருப்பதிகளையு மநுபவித்துக்கொண்டு, (உ) * இன்றைகொண்டு தொண்டரேத்தினமையையும் காட்ட (௩) * ஆனையின் துயரம் தீர்த்தபடியை யநுபவிக்கிறாரென்றருளிச் செய்கிறாரென்கை.

மூ.—விற்பெருவிழவும் கஞ்சனும்மல்லும் வேழமும்பாகனும் வீழச்
செற்றவன்றன்னைப்புரமெரிசெய்த சிவனுறுதுயர்களைதேவைப்
பற்றலர்வீயக் கோல்கையிற்கொண்டுபார்த்தன்றன்தேர்முன்நின்றானைச்
சிற்றவைபணியால்முடிதுறந்தானைத்திருவல்லிக்கேணிக்கண்டேனே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
வில்பெருவிழவும்	தநுர்யாகமஹோத்ஸவமும்	கோல்	முட்கோலை
கஞ்சனும்	கம்ஸனும்	கையில்	கையிலே
மல்லும்	சாணூரமுஷ்டிகராகிற மல்லவர்க்கமும்	கொண்டு	பிடித்துக்கொண்டு
வேழமும்	குவலயாபீடமென்னும் யானையும்	பார்த்தன்றன்	அர்ஜுநனுடைய
பாகனும்	யானைக்காரனும்	தேர்முன்	தேர்முன்னே
வீழ	விழும்படி	நின்றானை	ஸாரதியாய் நின்றவனாய்,
செற்றவன்றன்னை	ஸம்ஹரித்தவனாய்,	சிற்றவை	மாற்றுத்தாயான கைகேயியுடைய
புரம்எரிசெய்த	த்ரிபுரதஹநம்பண்ணின	பணியால்	சொல்லைக்கொண்டு
சிவன்	ருத்ரன்	முடி	(பட்டாபிஷேகம்பண்ணிக்கொடுவந்த) கிரீடத்தை
உறு	அடைந்த	துறந்தானை	பரித்யஜித்தவனான ஸ்ரீபார்த்தஸாரதியை
துயர்	குருபாதகபீடையை	திருவல்லிக்கேணி	திருவல்லிக்கேணியிலே
களை	போக்கின	கண்டேன்	காணப்பெற்றேன். ()
தேவை	ஸ்வாமியாய்,		
பற்றலர்	சத்ருக்கள்		
வீய	நசிக்கும்படி		

வ்யா.—முதற்பாட்டு. விற்பெருவிழவாயிற்று-சத்ருநிரஸநம் பண்ண நினைக்கிறானாகையாலே, பெருக்கக் கோலினதாயிற்று; அத்தைக்கோலின கம்ஸனும், அவனுக்கு பலமாய் மலைதுள்ளினாற்போலே பெரிய கிளர்த்தியோடே கூடின மல்லவர்க்கமும், அவர்கள் பார்க்கிலும் கண்பாராதே இடையற வீசும்படி மதிப்பித்து வழியிலே நிறுத்தின ஆனையும், அத்தைத் தள்ளினாலும் அது தன்னை உயிர்ப்புள்ளதுபோலே நடத்தவல்ல பாகனும். (வீழச்செற்றவன்றன்னை) ஏகோத்யோகத்திலே நிரஸித்தாற்போலே வினை செய்த சடக்கு.

(க) உ-௩-உ. (உ) உ-உ-க0. (௩) உ-௩-கூ.

(புரமித்யாதி) † த்ரிபுரதஹநாபதாநத்தாலே ஸஞ்ஜாதாபிமாநனான ருத்ரன், பிதாவுமாய் லோககுருவுமாயிருக்கிறவன்தலையையறுத்துப் பாதகியாயிருக்கும்; "மதிப்பனாயிருக்கிறவன் எளிவரவுபடவொண்ணாது" என்று அத்தைப்போக்கி, அத்தாலே, லோகத்துக்கெல்லாம்தானே ஆஶ்ரயணீயனென்னு மிடத்தை வெளியிட்டவன். (க) "తత్ర నారాయణశ్శ్రీమాన్ మయా భిక్షాం ప్రయాచితః । విష్ణుప్రసాదాత్-தத்ர நாராயணஃ ஶ்ரீமாந் மயாபிக்ஷாம் ப்ரயாசிதஃ। விஷ்ணுப்ரஸாதாத்" - ஸர்வேஶ்வரன்ப்ரஸாதத்தாலே, (க) "సుశ్రోణి-ஸுஶ்ரோணி" - †அவனைக்கிட்டுகையாலே உன்வடிவழகு ஸபலமாகப் பெற்றதிறே என்கிறான். (பற்றலரித்யாதி) பற்றலருண்டு - சத்ருக்கள், அவர்கள் முடிந்துபோம்படி, "ஆயுதமெடுக்கவொட்டோம்" என்றவாறே குதிரைகளைநடத்தும் கோலேக்கையாலே கொண்டு. (பார்த்தன்றன் தேர் முன்னின்றானை) ரதியைச்சிறிதுல் ஸாரதியையிறே அழியச்செய்வது. அவனைப்பின்னே இட்டுத் தன்னை அம்புக்கிலக்காக்கி நின்றவனை. (சிற்றவைபணியால்முடி துறந்தானை) (உ) * மாற்றுத்தாய் சொன்னவார்த்தைக்காக, ப்ராப்தமாய்வருகிறமுடியை ஸங்யஸித்தவனை. †(௩) [నను నమ్మకైకేయి - நநுநம்மகைகேயி] †"சக்ரவர்த்தி வார்த்தை சொல்லமாட்டாமை யிருக்கிறானத்தனை, உம்முடைய தம்பிக்கு ராஜ்யத்தைக் கொடுத்தான், உம்மைக்காடேறப் போகக்காணுமவன் நினைத்திருப்பது" என்று சக்ரவர்த்தி கருத்தைச்சொல்ல; அத்தைக்கேட்டு "நடுவிலாய்ச்சி! திருவடிகளிலே அழகிதாக சுஶ்ரூஷித்தோமென்றிருந்தோம், நம்பக்க லொரு § குணமுண்டாக நினைத்திராமையிறே தாம்போகச்சொல்லாமே அய்யர் கருத்தாக வருளிச்செய்தது" என்று "ஐயரோபாதியாகவோ உம்மை நினைத்திருப்பது. அவரை ஈஶ்வரராகவும் உம்மை ஈஶ்வரதரையாகவுமிறே நினைத்திருப்பது" என்றாரிறே.

(விற்பெரு விழவித்யாதி) விரோதி வர்க்கத்தைக்கிழங்கெடுக்குமவனாய், ஈஶ்வராபி மாநிகளுக்கு மிடர்வந்தால் போக்குமவனுமாய், தனக்கு ஸ்நேஹிதரானார்க்காகத்தன்னை அழியமாறுமவனாய், போலியான ஸ்நேஹிகளுக்கும் எவிற்றுச்செய்யுமவனானவனைத் திருவல்லிக்கேணியிலே காணப்பெற்றேனென்கிறார். ... ... (க)

(க) மத்ஸ்யபுரா-
(உ) பெரி-திரு-௩-௯-௪.
(௩) ரா-அ-உ௯-உ௪.
§ குணமுண்டாக - பாரதந்த்ர்ய முண்டாக.

அ௩—முதற்பாட்டு (வில்லித்யாதி). ஜந்மசத்ருவை நிரஸித்திறே பார்த்தஸாரதியாகப் புகுருகிறதென்று அத்தையநுஸந்திக்கிருரென்று அவதாரிகை கண்டுகொள்வது.

மேலே “ பார்த்தன் றன்தேர்முன்னின்ருனை ” என்று ஸௌலப்யமநுஸந்திக்கப் புகுகிருராகையாலே, அது மஹாகுணமாகைக்காக த்ரிபுராந்தக ஸம்ரக்ஷணமநுஸந்திக்கிருரென்று திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச் செய்கிருர், (த்ரிபுரேத்யாதி). இவ்விடத்திலே (க) “ తతఃకోప పరీతేన సంరక్త నయనేనచ। వామాఙ్గుష్ఠనఖాగ్రేణ ఛిన్నంతస్య శిరో మయా । యస్మాదనపరాధస్య శిరశ్ఛిన్నంత్వయా మమ । తస్మాచ్ఛాపసమావిష్టః కపాలీత్వంభవిష్యసి । బ్రహ్మహాకులితోభూత్వా చరంస్తీర్థానిభూతలే । తతోహంగతవాన్ దేవి హిమవన్తంశిలోచ్చయమ్ । తత్రనారాయణశ్శ్రీమాన్మయాభిక్షాంప్రయాచితః । తతస్తేనస్వకంపార్శ్వం నఖాగ్రేణవిదారితమ్ । మహతీస్రవతీధారా తస్య రక్తస్య నిస్సృతా । విష్ణుప్రసాదాత్సుశ్రోణి కపాలం తత్సహస్రధా । స్ఫుటితంబహుధాయాతం స్వప్నలబ్ధంధనంయథా - ததஃகோபபரீதேந ஸம்ரக்தநயநேநச | வாமாங்குஷ்டநகாக்ரேண சிந்நம்தஸ்ய சிரோமயா | யஸ்மாதநபராதஸ்ய சிரஶ்சிந்நம் த்வயாமம | தஸ்மாச் சாபஸமாவிஷ்டஃ கபாலீ த்வம் பவிஷ்யஸி | ப்ரஹ்மஹாகுலிதோபூத்வா சரம்ஸ்தீர்த்தாநிபூதலே | ததோஹம் கதவாந்தேவி ஹிமவந்தம் சிலோச்சயம் | தத்ர நாராயணஶ்ஶ்ரீமாந் மயாபிக்ஷாம்ப்ரயாசிதஃ | ததஸ் ஸ்வேந ஸ்வகம் பார்ஶ்வம் நகாக்ரேண விதாரிதம் | மஹதீ ஸ்ரவதீதாரா தஸ்ய ரக்தஸ்ய நிஸ்ஸ்ருதா | விஷ்ணுப்ரஸாதாத் ஸுஶ்ரோணிகபாலம் தத்ஸஹஸ்ரதா | ஸ்ப்புடிதம் பஹுதாயாதம் ஸ்வப்நலப்த்தம் தநம்யதா” என்கிற மத்ஸ்ய புராணவசநங்கள் அடைவே அநுஸந்தேயங்கள். கீழ் “தேவி” என்று ஸம்போதித்திருக்கவும், “ஸுஶ்ரோணி” என்றது பாவகர்ப்பமென்று தாத்பர்யமருளிச்செய்கிருர், (அவனையித்யாதி). இத்தால் விஷயாதுரனென்னுமது ஸூசிதமென்று திருவுள்ளம். (உ) “పితుర్వచననిర్దేశాత్ - பிதுர்வசநநிர்த்தேசாத்” என்றிருக்க, “சிற்றவை பணியால்” என்றுசொல்லக்கூடுமோவென்ன ; பெருமாளுடைய அபிப்ராயத்தைக் கண்டருளிச்செய்கிருரென்று விவக்ஷித்து, அதுக்குப்ரமாணம், (நநூநமித்யாதி). “ననూనం మమ కైకేయి కశ్చిదాశంససేగుణమ్ । యద్రాజానమవోచస్త్వం మమేశ్వరతరాసతీ - நநூநம் மமகைகேயி கஞ்சிதாசம்ஸஸேகுணம் | யத்ராஜாநமவோசஸ்த்வம் மமேஶ்வரதராஸதீ” என்று. இந்தஶ்லோகத்தை ஸப்ரகாரமாக வ்யாக்யாநம்பண்ணுகிருர், (சக்ரவர்த்தியித்யாதி).

புநஃ ப்ரதீகக்ரஹணபூர்வகம் பாட்டின்தொகுத்த தாத்பர்யமருளிச்செய்கிருர், (வில்லித்யாதி). ... ... (க)

(க) மத்ஸ்யபுரா- (உ) ரா-பா-க-உச.

மூ.—வேதத்தைவேதத்தின்சுவைப்பயனைவிழுமியமுனிவர்விழுங்கும்
கோதிலின்கனியை நந்தனார்களிற்றைக் குவலயத்தோர்தொழுதேத்தும்
ஆதியையமுதையென்னையாளுடை யப்பனையொப்பவரில்லா
மாதர்கள்வாழும் மாடமாமயிலைத் திருவல்லிக்கேணிக்கண்டேனே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேதத்தை	வேதத்தை விபூதியாகவுடையனாய்,	குவலயத்தோர்	பூமியிலுள்ளவர்கள்
சுவை	(ஆஶ்ரயித்தவர்களுடைய) ருசிக்குத்தக்கபடியாக	தொழுது	ஆஶ்ரயித்து
வேதத்தின்	வேதோக்தகர்மாநுஷ்ட்டாநத்தினுடைய	ஏத்தும்	ஸ்தோத்ரம்பண்ணுகிற
பயனை	பலத்தைக் கொடுக்குமவனாய்,	ஆதியை	ஜகத்காரணபூதனாய்,
விழுமிய	ஶ்லாக்யரான	அமுதை	அம்ருதம்போலே போக்யனாய்,
முனிவர்	ஸநகாதிமுனிவர்கள்	என்னை ஆளுடை	என்னை அடிமைகொண்ட
விழுங்கும்	அநுபவிக்கிற	அப்பனை	உபகாரகனானவனை,
கோதுஇல்	கோது இல்லாத	ஒப்பவர்	(தங்களுக்கு) ஸத்ருசரானவர்கள்
இன்	இனிய	இல்லா	இல்லாத
கனியை	பலம்போலே நிரதிசயபோக்யனாய்,	மாதர்கள்	ஸ்த்ரீகள்
நந்தனார்	ஶ்ரீநந்தகோபர்க்கு	வாழும்	வாழுமதாய்
களிற்றை	ஆனைக்கன்றுபோலேயினியனாயிருக்குமவனாய்,	மாடம்	மாடங்களையுடைத்தாய்
		மா	செல்வம்நிறைந்த
		மயிலை	மயிலாப்பூரைப்படைவீடாகவுடைய
		திருவல்லிக்கேணிக்கண்டேன். (உ)	

வ்யா.—இரண்டாம்பாட்டு. (வேதத்தை) (க) "त्रैगुण्यविषया वेदाः - த்ரைகுண்யவிஷயாவேதா:" என்கிறபடியே எல்லார்க்கும் ஹிதஞ்சொல்லப்போந்த வேதத்தைத் தனக்கு விபூதியாக வுடையவன். (வேதத்தின் சுவைப்பயனை) வேதோக்தமான கர்மங்களையநுஷ்டித்து ராஜஸராயும் தாமஸராயும் ஸாத்விகராயுமுள்ளார்க்கு அவ்வவருடைய ருச்யநுகூலமாக பல(ஃல)ப்ரதாநம்பண்ணுமவன். †கர்மபாவனையாதல்உபயபாவனையாதலன்றிக்கேகேவலம்ப்ரஹ்மபாவனையேயாயிருக்கும் ஸநகாதிகளுக்கு நிரதிசயபோக்யனாயுள்ளவனை. (நந்தனார்களிற்றை) ஶ்ரீநந்தகோபர்க்குத் தன்னுடைய அதிமாநுஷசேஷ்டிதங்களாலே எப்போதுமொக்க இனியனானவனை. (குவலயத்தோரித்யாதி) பூமியிலுள்ளார் (உ) "कारणं तु ध्येयः - காரணந்துத்யேய:" என்கிறபடியே தன்னையே ஆஶ்ரயிக்கும்படி ஜகத்காரணபூதனாயுள்ள

(க) கீதை-உ-சரு. (உ) அதர்வசிகை.

வனை. (அமுதை) அவர்களுக்கு ப்ராப்யனுயுள்ளவனை. அவர்களுக்குமெல்லாம் புறம்பாயிருக்கிறவென்னை அடிமைகொண்ட உபகாரகனை. (ஒப்பவரில்லாவித்யாதி) (க) † "ஒருவல்லித்தாமரையாளொன்றிய சீர்மார்பன்" என்று பிராட்டி ப்ராதாந்யமேயான ஊராகையாலே பிராட்டிபரிகரமேயாயிற்று. (உ) † "నానయోర్విద్యతేపరమ్-நாநயோர்வித்யதேபரம்" என்று அவள் விபூதியும் ஈஶ்வரவிபூதியுமாய் இரண்டுகூருயிறே யிருப்பது. "மயிலாப்பூர்" என்று படைவீட்டுக்குப்பேர். ... ... (உ)

அ௩.—இரண்டாம்பாட்டு. (வேதத்தையித்யாதி). (௩) * கஞ்சன் குஞ்சிபிடித்தடிப்பதற்கு முன்னம் தன்மைந்தனுயிருந்தமையை யநுஸந்தித்துக்கொண்டு திருத்தேர்த்தட்டில் காட்டின வைஶ்வரூப்யப்ரதர்சநாதிமுகத்தாலே வெளியிட்ட பரத்வத்தையுமநுபவித்துக் கொண்டாடுகிருரென்று ஸங்கதி கண்டுகொள்வது,

"விழுமியமுனிவர்" ஶ்லாக்யரான முனிவரென்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிருர், (கர்மேத்யாதி). விழுப்பு - ஶ்லாக்யதை. "மாதர்கள் வாழும்" என்று விசேஷிக்கைக்கு ஹேதுகதநபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிருர், (ஒருவல்லியித்யாதி). §பிராட்டி பரிகரமென்கைக்கு ஜ்ஞாபகம், (நாநயோரித்யாதி). (உ) "దేవతిర్యఙ్మనుష్యేషు పున్నామా భగవాన్ హరిః। స్త్రీనామ్నీ లక్ష్మీర్మైత్రేయ నానయోర్విద్యతేపరమ్ - தேவதிர்யங்மநுஷ்யேஷு புந்நாமாபகவாந்ஹரிః। ஸ்த்ரீநாம்நீ லக்ஷ்மீர் மைத்ரேய நாநயோர் வித்யதேபரம்" என்று ஶ்லோகசேஷம். ... ... (உ)

மூ.—வஞ்சனைசெய்யத் தாயுருவாகி வந்தபேயலறி மண்சேர
நஞ்சமர் முலையூடுயிர் செகவுண்ட நாதனைத்தானவர் கூற்றை
விஞ்சைவானவர்சாரணர்சித்தர்வியந்துதிசெய்யப்பெண்ணுருவாகி
அஞ்சுவையமுதமன்றளித்தானைத்திருவல்லிக்கேணிக்கண்டேனே.()

பதம்.	உரை.	பதம்.	உரை.
வஞ்சனைசெய்ய	(க்ருஷ்ணனை) வஞ்சிக்கைக்காக	சேர	விழும்படியாக,
தாயுருவாகிவந்த	தாய்வடிவுகொண்டு வந்த	நஞ்சுஅமர்	விஷம்நிறைந்த
		முலைஊடு	முலைவழியே
		உயிர்	(அவள்) ப்ராணன்
பேய்	பூதனையானவள்	செக	போம்படி
அலறி	கதறிக்கொண்டு	உண்ட	அமுதுசெய்தருளின
மண்	பூமியிலே	நாதனை	ஸர்வசேஷியாய்,

(க) ௩-திரு-கக. (உ) வி-பு-க-அ-௩டு. (௩) ௩-கO-௩.

§ அல்லாதபும்வ்யக்திகளிவள் பரிகரமன்ருேவென்ன; (நாநயோః). என்றது.

தானவர்	அஸுரர்களுக்கு	அன்று	இந்த்ரன் ப்ரஷ்டை-
கூற்றை	ம்ருத்யுவாய்,		ஶ்வர்யனான காலத்
விஞ்சை வான வர்	வித்யாதரர்	அம்	அழகிய [திலே
		சுவை	ரஸத்தையுடைய
சாரணர்	சாரணர் [வர்கள்)	அமுதம்	அம்ருதத்தை
சித்தர்	ஸித்தர்(முதலானதே	அளித்தானை	தேவதைகளுக்குக்
வியந்து	ஆஶ்சர்யப்பட்டு		கொடுத்தவனை
துதிசெய்ய	ஸ்தோத்ரம்பண்ணும் படி [ண்டு	திருவல்லிக்கேணிக்கண்டேன்.	
		விஞ்சை	வித்யை.
பெண்உருவுஆகி	பெண்வடிவைக்கொ	வியந்து	கடைக்குறை (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (வஞ்சனையித்யாதி) தாய்வடிவுகொண்டு வஞ்சிக்கவந்த பூதனை கதறிக்கொண்டுபோய் பூமியிலே விழும்படியாக, விஷம்கிரம்பின முலைவழியே அவளுடைய ப்ராணன்கள் போம்படி அமுதுசெய்த. (நாதனை) † தனக்குச்சேராதவடிவுகொண்டு ஜகத்துக்கு ப்ராணனான தன்னை நலியவந்தவளை முடித்துத்தன்னைத்தந்தவன். (க) "స్తన్యం తత్ - ஸ்தந்யம்தத்" (தானவர்கூற்றை) ஆஸுரவர்க்கத்துக்கு ம்ருத்யுவானவனை. வித்யாதரர் சாரணர் ஸித்தர் உள்ளிட்ட தேவவர்க்கமடைய விஸ்மிதராய் ஸ்தோத்ரம்பண்ணும்படி †புருஷோத்தமனான தனக்குச்சேராதவடிவைக்கொண்டு அம்ருதத்தை அநுகூலரை புஜிக்கும்படி பண்ணினவனை. ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு (வஞ்சனையித்யாதி). * நந்தனார்களிற்றினுடைய பிள்ளைச்சேவகத்தைச் சொல்லாநின்றுகொண்டு கிட்டி யநுபவிக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

பெண்ணுருவாகி யமுதமளித்ததுக்கு ப்ரதிகோடித்வேந, தாயுருவாய் நஞ்சிட்டவளைக்கொன்றதுக்கு ரஸோக்திதோன்றத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (தனக்கித்யாதி). பேய்க்குச்சேராதவடிவிறே தாயுருவாகை என்று திருவுள்ளம். "తస్యాః స్తనం పపౌ కృష్ణః ప్రాణైస్సహ వినాయచ । స్తన్యం తద్విషసంమిశ్రం రస్యమాసీజ్జగద్గురోః - தஸ்யாஸ்தநம் பபௌக்ருஷ்ண: ப்ராணைஸ் ஸஹவிநாயச | ஸ்தந்யம்தத்விஷஸம்மிஶ்ரம் ரஸ்யமாஸீத் ஜகத்குரோ:" என்று வசநசேஷம். (புருஷோத்தமனானதனக்குச்சேராதவடிவைக்கொண்டு)- "பெண்ணுருவாகி" என்றதினர்த்தம். "அம்" ஸுந்தரமான, "சுவை" ரஸ்யமான, அமுதமென்று சப்தார்த்தம். ஆக, தன்னுருவையழித்து வேறுவேஷங்கொண்டாகிலும் விஷமிட்டு (உ) * உலகங்களுக்கெல்லா மோருயிரை நலியவந்தவளை நலிந்து, தன்னையழியமாறியாகிலும் அநுகூலர்க்கு அம்ருதங்கொடுத்தும் உயிர்களைத் தரிப்பித்தவனென்று சொல்லிற்றாயிற்று. ... (௩)

(க) வி-பு-டு- (உ) தி-வாய்-அ-க-டு.

மூ.—இந்திரனுக்கென்றாயர்களெடுத்தவெழில்விழவில்பழநடைசெ [ய்
மந்திரவிதியில்பூசனைபெறாது மழைபொழிந்திடத்தளர்ந்தாயர்
எந்தம்மோடினவாநிரைதளராமலெம்பெருமானருளென்ன
அந்தமில்வரையால்மழைதடுத்தானைத்திருவல்லிக்கேணிக்கண்டேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
இந்திரனுக்குஎன்று	இந்த்ரனுக்கு விருந்திடக்கடவோமென்று	தளர்ந்து	மிகவும்நொந்து,
ஆயர்கள்	இடையர்கள்	எம்பெருமான்	எமக்கு ஸ்வாமியானவனே!
எடுத்த	ஸங்கல்பித்த	எந்தம்மோடு	எங்களுடன்
எழில்	அழகிய	இனம்	இனமினமான
விழவில்	யாகோத்ஸவத்திலே	ஆநிரை	பசுத்திரளும்
பழநடைசெய்	முன்பு செய்துபோரும் க்ரமத்தில்	தளராமல்	நோவுபடாதபடி
		அருள்	ரக்ஷித்தருளவேணும்
மந்திரவிதியில்	மந்த்ரோக்தமான படியே	என்ன	என்றுஅர்த்திக்க,
		அந்தம்இல்	அளவிடவொண்ணாதபடியான
பூசனைபெறாது	பூஜையை(அவன்)பெறாமையாலே	வரையால்	கோவர்த்தந மலையாலே
மழை	கல்வர்ஷத்தை	மழை	அம்மழையை
பொழிந்திட	வர்ஷிப்பிக்க,	தடுத்தானை	பரிஹரித்தவனை
ஆயர்	இடையர்	திருவல்லிக்கேணிக்கண்டேன்.	(ச)

வ்யா—நாலாம்பாட்டு. (இந்திரனித்யாதி) †திருவாய்ப்பாடியிலுள்ளார், த்ரைலோக்யேஶ்வரனான இந்த்ரனுக்கு வர்ஷார்த்தமாக ஆட்டைக்கொருவிருந்திடக்†கடவர்களாய், "நாம் பிறந்துவளருகிற ஊரிலே புரோடாசத்தை நாய் தின்றாற்போலே ஒரு தேவதைவந்து புஜிக்கையாவதென்" என்று, "நீங்கள் செய்யப்புகுகிறதுதானென்!" என்றுகேட்டான்; "நாங்களிந்த்ரனுக்கு வர்ஷார்த்தமாக விருந்திடப்புகுகிறோம்" என்றார்கள்; "இந்தமலையன்றோ நமக்கும் பசுக்களுக்கும் ஒதுங்கவிடமுந்தந்து புல்லுந்தருகிறது, ஆரேனுக்குமோ ப்ரத்யுபகாரம்பண்ணுவது, இம்மலைக்கிடுங்கோள்" என்றான்; முகத்தைப்பார்த்து ஒன்றைச்சொன்னால் மறுக்கலாம்படியன்றே யிருப்பது; ஒன்றாகக்கொடுவந்து குவித்தார்கள். (இந்திரனித்யாதி) இந்த்ரனுக்கென்று இடையரெடுத்த வெழிலுடைத்தானவிழவில், முன்புசெய்துபோரும்படியிலே மந்த்ரோக்தமானபடியே பண்ணுகிற அநுஷ்டாநரூபமான பூஜையைப்பெறாமையாலே அவன் †பசிக்ராஹத்தாலே கோபித்து மஹாவர்ஷமாக வர்ஷிப்பிக்க; அத்தாலே இடையரானவர்கள் தளர்ந்து, "ரக்ஷகரானவெங்களோடே எங்களுடைய ரக்ஷ்யமான பசுக்களுந்தளராதபடி நோக்கியருளவேணும்"

என்ன. † இத்தால் - புறம்புண்டான ரக்ஷ்யரக்ஷகபாவமும் அப்ரயோஜகமென்றபடி. (அந்தமில்) அந்தமழையினளவல்லாத பெரிய மலையாலே மழையைத்தடுத்தது. † அப்படியே (க) "𑌸𑌨𑍍𑌤𑌤𑌦𑍁𑌃𑌖𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑍀 - ஸந்ததது:கவர்ஷிணி" என்கிற என்னுடைய ஸம்ஸாரமாகிற வர்ஷத்தைப்பரிஹரிக்கவந்தவன். ... ... (ச)

அரு.—நாலாம்பாட்டு (இந்திரனித்யாதி). ஒருபேய்ப் பெண்ணைப் பிணமாக்கிவிட்டவளவேயோ, த்ரிலோகாதிபனென்று இறுமாந்திருக்கும் இந்த்ரனிறுமாப்பை யறுத்தபடியும் கண்டோமிறே! என்று, அத்தையருளிச்செய்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

புத்திஸௌகர்யார்த்தம் கதாபாகத்தை உபந்யஸிக்கிறார், (திருவாய்ப்பாடியிலித்யாதி). (கடவர்களாய்) என்றவநந்தரம் உத்யோகிக்க என்று பூரிப்பது. (பசிக்ராஹத்தாலே) என்றது- "𑌗𑍍𑌰𑌾𑌹𑌾 𑌏𑌵 𑌗𑍍𑌰𑌾𑌹𑌾𑌃 - க்ரஹாஏவக்ராஹா:" என்று க்ரஹசப்தத்திலே வந்த ப்ரத்யயம் ஸ்வார்த்தத்திலேயாய் க்ரஹிக்கையாலென்கை. இவ்வளவால் பலித்த ஸ்வாபதேசம், (இத்தாலித்யாதி). "அந்தமில்" இத்யாதிக்கு ஸ்வாபதேசம். (அப்படியேயித்யாதி). ... (ச)

மூ—இன்துணைப்பதுமத்தலர்மகள்தனக்குமின்பன்நல்புவிதனக்கிறைவன்
தன்துணையாயர்பாவைநப்பின்னைதனக்கிறைமற்றையோர்க்கெல்லாம்
வன்துணைபஞ்சபாண்டவர்க்காகிவாயுரைதூதுசென்றியங்கு
மென்துணைஎந்தைதந்தைதம்மானைத்திருவல்லிக்கேணிக்கண்டேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
இன்	(தன்மநஸ்ஸுக்கு) இனிய	வல்துணை	வலியதுணையாய்
துணை	துணையாய்	பஞ்சபாண்டவர்க்கு	பஞ்சபாண்டவர்களுக்கு
பதுமம்	தாமரைப்பூவைப்பிறப்பிடமாகவுடைய	ஆகி	எல்லாவுறவுமுறையும் தானேயாய்க்கொண்டு
அலர்மகள்தனக்கும்	பெரிய பிராட்டியார்க்கும்	வாய்உரை	அவர்கள்சொன்னவார்த்தைகளை
இன்பன்	போக்யனாய்,	சென்று	துர்யோதநாதிகள்பக்கலிலேபோயறிவித்து
நல்	எல்லாவற்றையும் பொறுக்கும் தன்மையளான	தூதுஇயங்கும்	ஸ்ரீதூதுஎழுந்தருளினவனாய்,
புவிதனக்கு	ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு	என்துணை	என்னைப்போல்வார்க்கெல்லாம் ஸஹாயபூதனாய்
இறைவன்	வல்லபனாய்,	எந்தைதந்தைதம்மானை	என்குலநாதனானவனை
தன்துணை	தன்னையே துணையாகவுடையளாய்	திருவல்லிக்கேணிக்கண்டேனே. (ரு)	
ஆயர்பாவை	இடைப்பெண்ணான		
நப்பின்னைதனக்கு	நப்பின்னைப்பிராட்டிக்கு		
இறை	ஸ்வாமியாய்,		
மற்றையோர்க்குஎல்லாம்	அல்லாதாரெல்லார்க்கும்		

(க) ஸ்தோ - ர - சக.

வ்யா.—அஞ்சாம்பாட்டு (இன்துணையித்யாதி) நெஞ்சுக்கினிய துணையாயிருக்கிற, பதுமத்தலர்மகளுண்டு - தாமரைப்பூவை உத்பத்திஸ்த்தாநமாகவுடைய பெரிய பிராட்டியார், அவளுக்கின்பனானவன். (தனக்கும்) எல்லார்க்கும் ஸ்ப்ருஹணீயையாயிருக்கிற பெரியபிராட்டியார் தான் "அகலகில்லேன்" என்றுவிரும்பி வர்த்திக்கும்படி அவளுக்கு ஸ்ப்ருஹணீயனானவன். †ஸர்வேஸ்வரனான தனக்கும் கூடப் பொறைக்கு உவாத்தாயிருக்கிற பூமிப் பிராட்டியார்க்கு வல்லபனானவன். (தன்துணையித்யாதி) † தன்னையே துணையாகவுடையளான, ஆயர்பாவையுண்டு-நப்பின்னைப் பிராட்டி, அவளுக்கு ஸ்வாமியானவன். (மற்றையோரித்யாதி) இப்படி யிருக்கையாலே அல்லாதா ரெல்லார்க்கும் வலிய துணையானவன். (பஞ்ச) ஆஸ்ரிதரான பாண்டவர்களுக்காக, அவர்கள் வாயிற்சொல்லி விட்ட வார்த்தையை அங்கேசென்று சொல்லுவது, ‡ இங்கேவந்தறிவிப்பதாய், இப்படி ஆஸ்ரிதவிஷயத்தில் தாழநின்ற நிலையாலே தானே துணையென்னு மிடத்தை எனக்கறிவித்தவன். (எந்தை) எனக்கு ஸ்வாமியாய் என்குலத்துக்கு நாதனானவன். ... ... (ரு)

அரு.—அஞ்சாம்பாட்டு (இன்துணைஇத்யாதி). இப்படி ப்ரஸக்தாநுப்ரஸக்தமான அதிமாநுஷ சேஷ்டிதங்களை யநுபவித்தாராய் * பார்த்தன்றன் தேர்முன் நிற்கைக்கு பூர்வரங்கமான தௌத்யத்தை யநுஸந்தியா, ஸ்ரீபூமிநீளாவல்லபன்செய்த செயலென்னென்றநுஸந்திக்கிறாரென்று ஸங்கதிகண்டு கொள்வது.

"பதுமத்து" - பத்மத்திலேயிருக்கிறவென்றபடி. * நல்பதப்ரயோக தாத்பர்யம், (ஸர்வேஸ்வரனித்யாதி). "தனக்கு" என்றதின் கருத்தாகவுமாம். ஸ்ரீபூமிகளை ஒருவன் நீர்வார்த்துக் கொடுக்கவேண்டாமையாலே விசேஷிக்க வேண்டா, நப்பின்னையாகில் ஸாமாந்யேந எருத்தை முறித்தவனுக்குக் கொடுக்கக்கடவோமென்று நினைப்பிட்டவளாகையாலே க்ருஷ்ணனைத் துணையாக விஸ்வஸித்திருந்தாளென்று இவ்வர்த்தம்தோன்ற விசேஷிக்கிறாரென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (தன்னையேயித்யாதி). "இயங்கும்" ஸஞ்சரிக்கிறவென்றாய், இதினர்த்தம், (இங்கேவந்தறிவிப்பதாய்) என்றது. ... (ரு)

மூ.—அந்தகன்சிறுவனரசர்தம்மரசற்கிளையவனணியிழையைச்செ
ன்றெந்தமக்குரிமைசெய்யெனத்தரியாதெம்பெருமானருளென்னச்[ன்று
சந்தமல்குழலாளலக்கணூற்றுவர் தம்பெண்டிருமெய்திநூலிழப்ப
இந்திரன்சிறுவன்தேர்முன்நின்றானைத்திருவல்லிக்கேணிக்கண்டேனே.

பதம்.	உரை.
அந்தகன்	குருடனான த்ருதராஷ்ட்ரனுடைய
சிறுவன்	பிள்ளையாய்
அரசர்தம்அரசற்கு	ராஜராஜனான துர்யோதனனுக்கு
இளையவன்	தம்பியான துஸ்ஸாஸநன்,
அணி	அலங்கரிக்கப்பட்ட
இழையை	ஆபரணங்களையுடையளான த்ரௌபதி பக்கலிலே
சென்று	போய், (சூதிலே உன்னையுந் தோற்றார்கள் ஆகையாலே)
எந்தமக்கு	எங்களுக்கு
உரிமைசெய்	அடிமைசெய்
என	என்ன,
தரியாது	(அவள் அந்யசேஷத்வத்தைப்)பொறாமல்
எம்பெருமான்!	என்ஸ்வாமீ!
அருள்	என்பக்கல் க்ருபைபண்ணி ரக்ஷிக்கவேணும்
என்ன	என்று அர்த்திக்க;
அல்	இருண்ட
சந்தம்	நிறத்தையுடைய
குழலாள்	குழலை யுடைய ளான த்ரௌபதிபட்ட
அலக்கண்	துக்கத்தை
நூற்றுவர்தம்	துர்யோதனன் ப்ராதாக்களான நூற்றுவருடைய
பெண்டிரும்	பார்யைகளும்
எய்தி	அடைந்து
நூல்	மங்கள ஸூத்ரத்தையும்
இழப்ப	இழக்கும்படியாக
இந்திரன் சிறுவன்	இந்த்ரபுத்ரனான அர்ஜுநனுடைய
தேர்முன்	தேரின்முன்னே
நின்றானை	நின்று ஸாரத்யம்பண்ணினவனை
திருவல்லிக்கேணிக்கண்டேன். (௬)	

வ்யா.—ஆறாம்பாட்டு (அந்தகன்சிறுவன்) குருடன் பெற்றபிள்ளையாயிற்று. § இத்தால் - அறிவுகேடு வழி வழி வருகிறதென்கை. †பிதாவானவன் † கண்ணஞ்ச வளர்க்க வளருகையன்றிக்கே தான் கண்டபடி மூலையடியே திரிந்தவன். (அரசரித்யாதி) ராஜ ராஜனான துர்யோதநனுக்குப் பின்பிறந்தவன், துஸ்ஸாஸந னென்றபடி. †அவன்கொண்டாடி வளர்க்கச்செருக்காலே வளர்ந்தவனென்று தீம்புக்குறுப்பாகச் சொல்லுகிறது. (அணியிழையை) † மஹோத்ஸவமாகையாலே ஆபரணங்களாலே அலங்க்ருதையாய் நின்றவள் பக்கலிலே கிட்டி. (எந்தமக்குரிமை செய்யென) சூதிலே உன்னையுந் தோற்றார்கள், நீ போந்து எங்களுக்கு இழிதொழில் செய்யென்ன. (தரியாது) அவள் அந்யசேஷத்வத்தைப் பொறுத்திலளாயிற்று, இவ்வளவிலே, ஸ்வாமியான நீ என்பக்கலிலே க்ருபைபண்ண வேணுமென்ன. "ஆண்பிள்ளைகளான பர்த்தாக்கள் ஸந்நிஹிதராயிருக்க தூரஸ்தனான க்ருஷ்ணன் பேரைச் சொல்லுவானென்" என்று எம்பாரைக்கேட்க, "அறிந்தோமே! முன்பே சில † ஸூருஸூரு

கேட்டு வைத்தாள் போலேகாணும். (க) "మహాత్యాపది సంప్రాప్తే స్మర్తవ్యో భగవాన్హరిః - மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவாந்ஹரி:" என்று. இதுதன்னை பட்டரைக்கேட்க, "பர்த்தாவின் கையைப்பிடித்துப் போகாநின்றாலும் இடறினால் அம்மே! என்னக் கடவது காண்" என்றருளிச்செய்தார். அர்த்தம்† அதாயிருக்கச்செய்தே †விசைப்புக் கிடந்தபடிகாணும். (சந்தமல்குழலாள்) †"சந்தம்" என்று நிறம். "அல்" என்கிறவித்தாலே இருளைலக்ஷித்து, நிறமிருண்ட குழலையுடையவளென்னுதல்; அன்றிக்கே, § (சந்தமர்குழலாள்) சந்தநப்பூமாறாத குழலையுடையவளென்னுதல். அவள்பட்ட, அலக்கணுண்டு - து:கம், அத்தை துர்யோதநாதிகளுடைய ஸ்த்ரீகள்பட்டு. † அதில் தன்னேற்றமாக நாலுமிழந்தார்களாயிற்று. †அவர்களுக்கு து:கம் நிலைநிற்கும்படி பண்ணினானாயிற்று.

(இந்திரனித்யாதி) வலியார்சிலரை அபாஶ்ரயமாகப் பற்றினாலும் தானேதாழநின்று ரக்ஷகனாகவல்லனென்னுமிடத்தைச் சொல்லுகிறது. † த்ரௌபதிக்கு பர்த்தாக்களுதவிற்றிலர், அர்ஜுநனுக்கு இந்த்ரனுதவிற்றிலன். ... ... (௬)

அரு.—ஆரும்பாட்டு (அந்தகனித்யாதி). (உ) "அர்ஜுநனுக்கு தௌத்ய ஸாரத்யங்கள் பண்ணிற்றும் த்ரௌபதியினுடைய மங்களஸூத்ரத்துக்காக" என்கிறபடியே இவன் பார்த்தஸாரதியானமைக்கும், கீழ்ப்பாட்டிற் சொன்ன தௌத்யத்துக்கும் ப்ரதாநஹேதுவை யநுஸந்திக்கிறாரென்று அவதாரிகை கண்டுகொள்வது.

§ "அந்தகன்" என்றதுக்குத் தாத்பர்யாந்தரம், (பிதாவானவனித்யாதி). (கண்ணஞ்ச) - கண்ணாலேயஞ்ச. துஶ்ஶாஸநனை இப்படி வர்ணிப்பானென்னென்ன; அருளிச்செய்கிறார், (அவனித்யாதி). (௩) "యౌవనం ధనసంపత్తిః ప్రభుత్వమవివేకితా । ఏకైకమప్యనర్థాయ కిము యత్ర చతుష్టయమ్ - யௌவநம் தநஸம்பத்தி: ப்ரபுத்வ மவிவேகிதா | ஏகைகமப்யநர்த்தாய கிமு யத்ர சதுஷ்டயம்|" என்கிற நாலு மிவனுக்கு புஷ்கலமென்று திருவுள்ளம். அணியப்பட்ட - அலங்கரிக்கப்பட்ட, இழையையுடையவளென்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார், (மஹோத்ஸவமித்யாதி). (ஸூருஸூரு)-காதிலே ஸூருஸூருவென்கை; அதாவது - உபதேசமென்றபடி. "జ్ఞాతం మయా వసిష్ఠేన పురాగీతం మహాత్మనా-ஜ்ஞாதம்மயா வஸிஷ்டேநபுராகீதம் மஹாத்மநா"

---

§ "அந்தகன்" என்றது - ஆந்த்யம் - ஜ்ஞாநதோத்ருஷ்டிதஶ்ச என்று விவக்ஷித்து, இதையிரண்டையுமருளிச்செய்கிறார், (இத்தாலித்யாதி வாக்யத்வயத்தாலே).

(க) பார- (உ) ஸ்ரீவசநபூ- (௩) § குண்டலிதம் க்வாசித்கம்.

என்று பூர்வார்த்தம். "எம்பெருமான்! அருள்" என்று இவள் ஒரு நூற்புடைவையை அர்த்தித்தால், அவ்வளவைக் கொடுத்துவிட்டாலாகாதோ, நூற்றுவர் பெண்டிரையும் நூலிழக்கும்படி பண்ணுவானென்னென்ன; அருளிச்செய்கிறூர், (அதாயிருக்கவித்யாதி). §(விசைப்பு) - ஸ்நேஹாதிக்யம். "அல்" என்று ராத்ரியாய், அப்படியிருப்பதானகுழலென்றும்; "சந்தமர்" என்று பாடாந்தரமாய், அப்போது, சந்து-சந்த்ரஸுஸதமாய், அமருகை - பொருந்துகையாய், அப்படிப்பட்ட குழலையுடையவளென்று விவக்ஷித்தருளிச்செய்கிறூர், (சந்தமென்றித்யாதி வாக்யத்ரயத்தாலே). (அதில் தன்னேற்றமாக) என்றதுக்கு-"கோவிந்தா" என்ற நாக்கு வேளுன்றின கழுத்துக்கொரு குணஹானியின்றிக்கே, ப்ரதிஜ்ஞையாலே குழல்விரித்திருந்த விவளைக் குழல் முடிப்பித்தவாறே, அவர்கள் குழல்விரித்தார்கள்; நூல்வாசி இவளுக்குண்டாயிற்று. அவர்களுக்கு அதின்றிக்கேயொழிந்தது தன்னேற்றமென்று கருத்து. இவளை "சந்தமர்" என்று விசேஷித்து, அவர்களைக் கேவலம், "பெண்டிர்" என்றத்தாலே பலித்த உட்கருத்து, (அவர்களுக்கித்யாதி). சரணுகதையானவளைக் கைப்பிடித்து பர்த்தாக்கள் போக்யஸுகங்களைப்பெற்றூர்கள்; அவர்களுக்கு விரோதிகளைக் கைப்பிடித்த பார்யைகள் த்யாஜ்யதுஃகங்களைப்பெற்றூர்கள், இவ்விரண்டுக்கு மிவனேயடியென்று கருத்து. இப்பாட்டில் பலித்த ஸ்வாபதேசம், (த்ரௌபதிக்கித்யாதி). ... ... (௬)

மூ.—பரதனும் தம்பி சத்துருக்கனு மிலக்குமனேடுமைதிலியும்
இரவுநன்பகலும் துதிசெய்ய நின்ற விராவணுந்தகனையெம்மானைக்
குரவமேகமழும்குளிர்பொழிலூடுகுயிலொடு மயில்கள்நின்றூல[னே
இரவியின்கதிர்கள் நுழைதல்செய்தறியாத்திருவல்லிக் கேணிக்கண்டே

பதம்.	உரை.	பதம்.	உரை.
பரதனும்	ஸ்ரீபரதாழ்வானும்[ன	குரவம்	குராமலர்கள்
தம்பி	அவனுக்குத்தம்பியா	கமழும்	பரிமளிக்கிற
சத்துருக்கனும்	ஸ்ரீசத்ருக்நாழ்வானும்	குளிர்	குளிர்ந்த
இலக்குமனேடு	இளைய பெருமாளோடு (கூட)	பொழிலூடு	சோலைக்குள்ளே
மைதிலியும்	பிராட்டியாரும்	குயிலொடு	(பாடுகிற) குயில்களோடு)
இரவும்	ராத்ரியிலும்	மயில்கள்	மயில்களானவை
நல்	(பபதார்த்த ப்ரகாசகமாய்) விலக்ஷணமான	நின்று	ஒருபடிப்படநின்று
		ஆல	ஆடுமதாய்
பகலும்	பகலிலும் [படி	இரவியின்கதிர்கள்	ஸூர்யகிரணங்கள் (சோலைச்செறிவாலே)
துதிசெய்ய	ஸ்தோத்ரம்பண்ணும்		
நின்ற	எழுந்தருளியிருக்குமவனுய்,	நுழைதல்செய்தறியா	ஒருகாலும் நுழைந்தறியாத
எம்மான்	எனக்குஸ்வாமியாய்,	திருவல்லிக்கேணிக்கண்டேன்.	(எ)
இராவணுந்தகனை	ராவணனை ஸம்ஹரித்த சக்ரவர்த்தித் திருமகனை,		

§ (விசைப்பு) துடிப்பு.

வ்யா.—ஏழாம்பாட்டு. (பரதனும் தம்பி சத்ருக்கனும்) பரதாழ்வானும் †அவனோடு கையடைப்பான ஸ்ரீசத்ருக் நாழ்வானும். (இலக்குமனோடு மைதிலியும்) இதுவு †மிங்ஙனே யொருசேர்த்தி. (இரவு நன்பகலும்) † ஸமர காலத்திலே கண்டநுபவித்தவர்களோடு †கேட்டார் வாய்கேட்டாரோடு வாசியற ஏத்தா நிற்பர்களாயிற்று. †தேசிக †ரடங்கலும் திரள்திரளாக நின்றாயிற்று ஏத்துவது. (இரவுநன்பகலும்) †நமக்குமோர் காலம் நெஞ்சொழிந்த போது ஏத்துவ தொன்றுண்டன்றோ. அங்ஙனன்றிக்கே நிவாராத்ர விபாகமறக் †கிட்டினதனையு மாழங்கால்படுகைக்குடலானவித்தனை. (இராவணந்தகனை) இப்படி ஏத்துவதுதான் ராவணவதம் பண்ணின அபதாந மொன்றுமே யாயிற்று; †அவர்களோபாதி நானும் தோற்று ஏத்தும்படிபண்ணினவனை. (குரவமித்யாதி) குரவம் கமழா நிற்பதாய் ஸ்ரமஹரமான பொழிலினூடே குயில்களோடேகூட மயில்கள் ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ண. (இரவியித்யாதி) ஈஸ்வராஜ்ஞைநடையாடாத தேசமாயிற்று. (க)“ஞீஷ்ஃதேஷ - பீஷோதேதி” என்றது அவ்விடத்தை யொழியவாயிற்று. ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (பரதனுமித்யாதி). முதற்பாட்டிலே - *பார்த்தன் றன் தேர்முன் நின்றானுடைய குணஜிதராய்ப் போகாநிற்க நடுவே வழிபறிப்பாரைப்போலே, (உ)*பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரியான வடிவைக்கொண்டு நிற்கையாலே அங்கேகண்ணோடி, (ந) “சிற்றவைபணியால் முடிதுறந்தானை” என்று ஒரு பாசுரமிட்டுப் போந்தாராயிருந்தார்; அவர்நெஞ்சிலே யுறைத்து நெஞ்சைப்பறிக்கையாலே வந்தேத்துகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

“தம்பி”என்றது-பரதனுக்குத்தம்பியென்றாய்தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனோடித்யாதி). (இங்ஙனேயொருசேர்த்தி) என்றது-(ச) “ஸீதேஃலக்ஷ்மண ஸ ஹிதேசலக்ஷ்மணனும்” என்கிறபடியே தாயும்பிள்ளையுமாயிருக்குமொருசேர்த்தியென்றுமாம்;(ரு) ‘நசஸீதா த்வயா ஹீநா நசாஹமபி-நசஸீதாத்வயாஹீநாநசாஹமபி” என்கிறபடியே பெருமாளைப் பிரியில் தரியாமையிலுண்டான சேர்த்தியாகவுமாம்: ராவணவதத்தினன்று ஜ்யாகோஷத்தின் சடக்குக்கேட்டிருக்கையிலுள்ளசேர்த்தியாகவுமாம். (ஸமரம்). யுத்தம்.(கேட்டார்வாய்கேட்டார்) பரதசத்ருக்நர்கள். இந்நால்வரையும் சொன்னது - வாநரமுதலிகளுக்கும், ப்ரஹ்மாதிகளுக்கும், ருஷிகளுக்கும், அயோத்யாவாஸிகளுக்கும், ஆழ்வார்களுக்கும், ஆசார்யர்களுக்கு முபலக்ஷணமென்று விவரிக்கிறார்(தேசிகரித்யாதி). (அடங்கலும்) என்றது - கண்டறிவாரும் கேட்டறிவாருமெல்லாமென்றபடி.

(க) தை-ஆ-எ. (ந) உ-ங-க- (ரு) ரா-அயோ-ருங-ஙக.
(உ) ரா-அ-ங-உக. (ச) ரா-ஆ-கo-கக.

நிலவர்க்கெல்லா மொருகாலேத்தினுல் போராதோ, திவாராத்ர விபாகமற எத்தவேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிருர், (நமக்குமித்யாதி) கிட்டினதனையும்) - எத்தனைகிட்டினுலத்தனையும் என்றபடி. "எம்மானை" என்றதுக்குத் தாத்பர்யம்,(அவர்களோபாதியித்யாதி). குரவம் - புஷ்பவிசேஷம். பரதாதிகள்(ஞ)பட்டரைப்போலேயேத்த, குயில்பாட, மயிகளாட, பரிமளிதமாய் ஸ்ரமஹரமான உத்யாநத்திலே ராமதிவாகரன் எதிரியான கதிரவனஞ்சும்படி யிருக்கக்கண்டேனென்று இப்பாட்டுக்குத் தாத்பர்யம். ராவணனுக்கஞ்சின ஸூர்யன் ராவணுந்தகனுக்கஞ்சச் சொல்லவேண்டாவிறேயென்று திருவுள்ளம். ... ... (எ)

மூ:—பள்ளியிலோதி வந்த தன் சிறுவன் வாயிலோராயிரநாமம்
ஒள்ளியவாகிப் போதவாங்கதனுக் கொன்று மோர்பொறுப்பிலனுகிப்
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண்புடைப்பப் பிறையெயிற்ற னல்
விழிப் பேழ்வாய்த்
தெள்ளிய சிங்கமாகிய தேவைத்திருவல்லிக்கேணிக்கண்டேனே (அ)

பதம்.	உரை.
பள்ளியில்	வித்யாசாலையிலே
ஓதி	படித்துவிட்டு
வந்த	தன்னருகேவந்த
தன்சிறுவன்	தன்பிள்ளையானப்ரஹ்லாதாழ்வானுடைய
வாயில்	திருப்பவளத்தில்
ஓராயிரநாமம்	(ஸர்வேஶ்வரனுடைய) ஒருஆயிரம்திருநாமங்கள்
ஒள்ளியவாகி	அழகாக
போத	தன்னடையேவர,
ஆங்கு	அவ்விடத்திலே
அதனுக்கு	அப்படியெம்பெருமான்திருநாமங்களைச் சொல்லியதற்கு
ஒன்றும்ஓர்	சற்றுயினும்
பொறுப்புஇலனாகி	பொறுமையில்லாதவனுப்க்கொண்டு

பதம்.	உரை.
பிள்ளையை	தன்புத்ரனை
சீறிவெகுண்டு	மிகக்கோபித்து
தூண்	(அவன்நட்ட) தூணை
புடைப்ப	அடிக்க(அதிலே),
பிறை	மூன்றும்பிறைபோன்ற
எயிறு	பற்களையும்
அனல்	நெருப்புப்பொறிகள்சிந்தாநின்றுள்ள
விழி	கண்களையும்
பேழ்வாய்	பெரியவாயையுமுடைத்தாய்,
தெள்ளிய	தெளிந்திருந்துள்ள
சிங்கமாகிய	ந்ருஸிம்ஹாவதாரஞ்செய்தருளின
தேவை	தேவனை
திருவல்லிக்கேணிக்கண்டேன். (அ)	

வ்யா.—எட்டாம்பாட்டு. (பள்ளியிலோதி வந்ததன்சிறுவன்) பள்ளிபோதும் பருவத்தில் சொன்னவை யடங்கலும் சிரஸாவஹிக்கவேண்டும்படி யிருக்கும். இதாயிற்றுப்பருவ மிருந்தபடி. அதுக்கு

மேலே தன்வயிற்றில் பிறந்தப்ரஜை சொன்னவை யடையப் பொறுக்கவேணும். (வாயிலித்யாதி) அவனப்போது சொல்லிற்று † நாலிரண்டாகிலும் பருவத்துக்குத்தக்கவளவல்லாதபடி யிருக்கையாலே குவாலாகச் சொல்லுகிறார். (ஒள்ளியவாகிப் போத) †வயிற்றில் பிறந்தவன் சொல்லுகையாலே இனிதாயிருக்குமிறே. •(ஆங்கு) அவ்விடத்தில். (அதனுக் கொன்றுமோர் பொறுப்பிலனாகி) பள்ளியோதும் பருவத்திற் சொல்லுவதெல்லாம் ப்ரியமாயிருக்கும், தன்வயிற்றிற் பிறந்தவன் சொல்லிற்றெல்லாம் இனிதாயிருக்கும்; சத்ருவே சொல்லிலும் சிரஸாவஹிக்க வேண்டு மத்தைச்சொல்லிற்று. † அஸஹ்யாபசாரப்ராசுர்யத்தாலே திருநாமம்கேட்டுப் பொறுக்க மாட்டாமையாலே முனிந்தானாயிற்று. (பிள்ளையை) திருநாமம் சொன்னதுவே ஹேதுவாக வயிற்றில் பிறந்தவனைக் கைவிட்டானவன். †திருநாமம் சொன்னாரோடே தமக்கு ஸம்பந்தமாக நினைத்திருந்த படியாலே "பிள்ளை" என்கிறார். (வெகுண்டு தூண்புடைப்ப) † கோபத்தாலே செய்வதறியாதே தூணைத்தட்ட. (பிறையித்யாதி) பிறைபோலே யிருந்த எயிற்றையும், அக்நிபோலேயிருந்த கண்களையும் †புறப்படவிடா நின்றுள்ள பெரியவாயையு முடைய. (தெள்ளியசிங்கம்) †ஹிரண்யனுடைய முரட்டுவடிவைக்கண்டுபிற்காலியாதே நரஸிம்ஹமாய் அவ்வழியாலே தானே ஆஸ்ரயணீயனென்னுமிடத்தை வெளியிட்டவன். ... ... (௮)

அரு.—எட்டாம்பாட்டு. (பள்ளியிலித்யாதி). ராவணாந்தகனான புருஷஸிம்ஹத்தைக்கண்டு புக்ழா நிற்கச் செய்தே, ராவணனுடைய பூர்வஜந்மத்தின் ப்ராதிகூல்யத்தை யநுஸந்தித்து, அவனுக்கும் அந்தகனான புருஷஸிம்ஹத்தைக்கண்டு புகழப் புக்காரென்று ஸங்கதிகண்டு கொள்வது.

(நாலிரண்டேயாகிலும்)என்றது-திருமந்த்ர மெட்டெழுத்தேயாகிலுமென்றுமாம் (௧)"నారాయణేతిశబ్దోస్తి-நாராயணேதி சப்தோஸ்தி" என்கிறநாலும்;(௨)*ஹரிரித்யக்ஷரத்வயமும்இரண்டுமேயென்றுமாம்;விஷ்ணுஷடக்ஷரியாகவுமாம். (௩)"ప్రాతర్దేవేతికృష్ణేతిగోవిన్దేతిచజల్పతామ్। మధ్యాహ్నేచాపరాహ్ణేచ యోవసాద స్సఉచ్యతామ్-ப்ராதர்தேவேதிக்ருஷ்ணேதி கோவிந்தேதிச ஜல்பதாம்। மத்யாஹ்னே சாபராஹ்ணேசயோவஸாதஸ்ஸ உச்யதாம்" என்று அவன் சொன்ன சிலதிருநாமங்களென்றுமாம். தமஃப்ரசுரனுக்குத் திருநாமங்கள் ஒள்ளியவாயிருக்குமோவென்ன ;। அருளிச்செய்கிறார், (வயிற்றிலித்யாதி). "ஒன்று-

(௧) (௨) (௩)

ஓர்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (பள்ளியோது மித்யாதி). அறால் பொறுப்பிலனாகைக்கு ஹேதுவென்னென்ன; அருளிச்செய்கிறார், (அஸஹ்யேத்யாதி). பொறுப்பிலனானபின்பு அவனுக்குப்பிள்ளையென்னுமதுவிருத்தமாகையாலே, ஆழ்வார் தமக்குப்பிள்ளையாக அத்யவஸித்தாரென்கிறார், (திருநாமமித்யாதி). (௧) "𑌯𑍁𑌵𑌤𑌯𑌸𑍍𑌤𑌨𑌯𑌾𑌃 - யுவதயஸ்தநயா:" என்று ப்ரீதி விஷயதயா அத்யவஸிக்கலாமிறே. சிறுக்கன்வார்த்தை பொறுக்கமாட்டாவிட்டால், தூணைப்புடைக்கத் தூண் செய்தகுற்ற மென்னென்ன; அருளிச்செய்கிறார், (கோபத்தாலேயித்யாதி). (புறப்படவிடாநின்றுள்ள) நாக்கைப்புறப்பட விடாநின்றுள்ள வென்றபடி. இது"பேழ்"என்றத்தால் அர்த்தஸித்தம்; சிங்கபதலப்ய மாகவுமாம். "தெள்ளிய" பயலேசமின்றிக்கே தெளிந்தவென்றும், "தேவு" என்றும் சொன்னதுக்குத் தாத்பர்யம், (ஹிரண்யனுடைய வித்யாதி). ... ... (௮)

மூ.—மீனமர்பொய்கைநாண்மலர்கொய்வான்வேட்கையினோடுசென்
றிழிந்த கானமர்வேழம்கையெடுத்தலறக்கராவதன்காலினைக்கதுவ
ஆனையின்துயரந்தீரப்புள்ளூர்ந்துசென்றுநின்றாழிதொட்டானைத்
தேனமர்சோலைமாடமாமயிலைத்திருவல்லிக்கேணிக்கண்டேனே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மீன்அமர்பொய்கை	மீன்கள்பொருந்திய மடுவிலே	காலினை	காலை
நாள்	அப்போதலர்ந்த	கதுவ	கவ்வ(அந்தஸமயத்திலே),
மலர்	புஷ்பங்களை	ஆனையின்	ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய
கொய்வான்	பறிக்கவேணுமென்கிற	துயரம்	து:கம்
வேட்கையினோடு	ஆசையோடே	தீர	தொலையும்படி
சென்றுஇழிந்த	வந்திழிந்ததாய்	புள்ஊர்ந்து	பெரியதிருவடியை மேற்கொண்டு
கான்	காட்டிலே	சென்று	விரைந்துவந்து
அமர்	ஸ்வைரஸஞ்சாரம்பண்ணக்கடவதான	நின்று	அப்பொய்கைக்கரையிலேநின்று
வேழம்	யானையானது	ஆழிதொட்டானை	திருவாழியைவிடுத்த ஸ்வாமியை
கை	தன்தும்பிக்கையை	தேன்அமர்	தேன்மாறாத
எடுத்து	உயரவெடுத்து	சோலை	சோலைகளாலேசூழப்பட்ட
அலற	பிளிறும்படி	மாடமாமயிலைத் திருவல்லிக் கேணிக் கண்டேன். (௯)	
கரா	முதலையானது		
அதன்	அதினுடைய		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (மீனமரித்யாதி) நெடுநாள் பூத்தேடிப்பெருமையாலே இடர்பட்டுத் திரிந்தவிது பூத்த தடாகத்தைக்

(௪) ஸ்தோ-ர.

கண்டு,†க்ஷுத்ரமத்ஸ்யத்துக்குமேற்பட துஷ்டஸத்வமுண்டென்று மதியாதேவந்து செவ்விப்பூவைப் பறிக்கைக்காகப்பெரிய அபிநிவேசத்தோடேவந்திழிந்த. (கானமர்வேழம்) காட்டிலே ஸ்வைர ஸஞ்சாரம் பண்ணக்கடவ யானையானது கையெடுத்துக் கூப்பிடும்படியாக †முதலையானது இதின்காலைக்கதுவ. †முதலைக்குத்தன்னிலமாய் இதுக்கு வேற்றுநிலமாயிற்று. ஆனை நெடுநாள்பட்ட இடரெல்லாம் போம்படியாகப்பெரியதிருவடியை மேற்கொண்டு வந்து, ஆனைக்கிடரின்றிக்கே முதலைக்கே இடராம்படி திருவாழியை ஏவினானாயிற்று. வண்டுகளமர்ந்தசோலையையும் மாடங்களையுமுடைத்தான மயிலாப்பூரில் திருவல்லிக் கேணிக்கண்டேனே. ... ... (௯)

அ௫—ஒன்பதாம்பாட்டு. (மீனமரித்யாதி). ஆண்பிள்ளைகளான ஐவருக்கும், பெண்பிள்ளைகளான த்ரௌபதி ஸ்ரீஜநகராஜன் திருமகள் இவர்களுக்கும், பள்ளியிற்பிள்ளையான சிறுக்கனுக்கு முதவினவளவன்றிக்கே, ஒரு திர்யக்காலே ஒருதிர்யக்குக்கு வந்தநோவையும் பொறாமே அரைகுலையத் தலைகுலைய வந்து உதவின மஹாகுணத்திலே கட்டுண்டு போயநுபவிக்கிறாரென்று ஸங்கதி கண்டு கொள்வது.

"மீனமர்" என்று விசேஷித்ததுக்கு பாவம், (க்ஷுத்ரேத்யாதி). "சரா" என்றதினர்த்தம், (முதலை)என்றது. ஆனையாயிருந்து நீர்ப்புழுவுக்ககப்பட்டுக் கையெடுத்தலறுவானேனென்னென்ன; அருளிச்செய்கிறார், (முதலைக்கித்யாதி)(௯)

டபமும்

மூ.—மன்னு தண்பொழிலும் வாவியும்மதிளும்மாடமாளிகையும்மண்
தென்னன்தொண்டையர்கோன்செய்தநன்மயிலைத்திருவல்லிக்கேணி
கன்னிநன்மாடமங்கையர்தலைவன்காமருசீர்க்கலிகன்றி [நின்றானைக்
சொன்னசொல்மாலைபத்துடன் வல்லார் சுகமினிதாள்வர்வானுலகே.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

பதம்.	உரை.
மன்னு	நித்யமாய்
தண்	குளிர்ந்திருந்துள்ள
பொழிலும்	சோலைகளையும்
வாவியும்	நீர்நிலங்களையும்
மதிளும்	ப்ராகாரங்களையும்
மாடம்	மாடங்களையும்
மாளிகையும்	மேல்மச்சுள்ளக்ருஹங்களையும்
மண்டபமும்	மண்டபங்களையுமுடைத்தாம்படி
தென்னன்	பாண்டிமஹாராஜாவின்வம்சஸ்த்தனாய்

பதம்.	உரை.
தொண்டையர்	தொண்டைநாட்டிலுள்ளவர்களுக்கு
கோன்	தலைவனானதொண்டைமான்சக்ரவர்த்தி
செய்த	ப்ரதிஷ்டிப்பித்த
நல்	அழகாயிருந்துள்ள
மயிலைத்திருவல்லிக்கேணி	மயிலாப்பூரைப்படைவீடாகவுடையதிருவல்லிக்கேணியில்
நின்றானை	நின்றவன்விஷயமாக,

கன்னி	அரணாகப்போரும்படியாய்
நல்	நன்றாயிருந்துள்ள
மாடம்	மாடங்களையுடைத்தான
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு
தலைவன்	ப்ரதாநராய்
காமர்	அழகிய
சீர்	ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயையுடையரான
கலிகன்றி	ஆழ்வார்
சொன்ன	அருளிச்செய்ததாய்
சொல்மாலை	சப்தஸந்தர்ப்பமான
பத்துடன்	பத்துப்பாட்டுக்களையும்
வல்லார்	அப்யஸிக்கவல்லவர்கள்
இனிதுசுகம்	நித்யாநுபவம்பண்ணும்படியான
வானுலகு	பரமபதத்தை
ஆள்வர்	கிட்டப்பெறுவர்கள்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (மன்னுதண் பொழிலுமித்யாதி) நித்யமாய்க்குளிர்ந்திருந்துள்ள பொழிலும், நீர்நிலங்களும், அரணாகப் போரும்படியான மதிள்களும், மாடங்களும், மாளிகைகளும், மண்டபங்களும், இன்னமும் † சொல்லிச்சொல்லாத நன்மைகளுமெல்லாமுண்டாம்படியாயிற்றுத் தொண்டைமான் சக்ரவர்த்தி யேற்றிற்று. (கன்னி) அரணாகப் போரும்படியாய் நன்றாயிருக்கிற மாடங்களையுடைய திருமங்கைக்கு ப்ரதாநர். (காமருசீர்க்கலிகன்றி) ஸ்ப்ருஹணீயமான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயையுடைய ஆழ்வாரருளிச் செய்தபத்தையும் அப்யஸிக்கவல்லார்கள். (சுகமினிதாள்வர்வானுலகே) நித்யாநுபவம் பண்ணலாம் படியான நித்யவிபூதியை ப்ராபிக்கப்பெறுவர் ()

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு—பத்தாம்பாட்டு.(மன்னுதண் பொழிலுமித்யாதி). (சொல்லிச்சொல்லாத நன்மைகளுமெல்லாம்)என்றது, "நன்மயிலை" என்றுவிசேஷித்ததின் தாத்பர்யம். அதுவும் இதுவும் என்கிற சகாரத்தாலே பலித்ததென்றமாம். "கன்னி" என்று-அழியாதபதார்த்தத்தைக் காட்டுகையாலே, (அரணாகப் போரும்படி) என்றது. (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்தில் - மூன்றாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி - உ - பத்து - ச - திருமொழி - அன்றுயர் ப்ரவேசம்.

வ்யா.—பிராட்டிமாரோடு கூடவந்து விரோதிநிரஸநசீலனாய், ப்ரபலவிரோதி பாபங்களை அநாயாஸேந போக்கவல்லனாய், ஸர்வ ஸ்வாமியான ஸர்வேஸ்வரன், உகந்தருளின நிலங்களெங்கும் பண்ணும்விருப்பத்தைத் திருநீர்மலையிலே பண்ணிக்கொடுவந்து ஸந்நிஹிதனானன்;†அநவஹிதராயிருப்பார்வார்த்தையைக்கேட்டு அநர்த்தப்பட்டுப்போகாதே அவனை ஆஸ்ரயித்து க்ருதார்த்தராய்ப்போங்கோளென்று பரோபதேச ப்ரவ்ருத்தராகிறார்.

அரு.—அன்றுயர்ப்ரவேசம்—சிங்கவேழ் குன்றத்திலிருந்தவாறும், திருவேங்கடத்தில் நின்றவாறும், திருவெவ்வுளில்கிடந்தவாறுமானவிவற்றைத்திருவல்லிக்கேணியிலே யொருமுகம் செய்து அநுபவியாநிற்க, கரிமகரங்களுக்குண்டான வைரம்தீரக்கடுநடையிட்டு நடந்தவாறு மநுபவித்தாராயிருந்தார்; இவ்வநுபவப்ரகர்ஷத்தாலே, இன்னுமிப்படி யநுபவிக்கலா மிடங்களுண்டோவென்று திருவுள்ளத்திலே யாராயாநிற்க, திரு நறையூர் முதலானவை தோற்றி, அவையெல்லாவற்றிலுமுண்டான விருப்பத்தைத்திருநீர்மலையிலே பண்ணினபடியை யநுஸந்திக்கிறுரென்று ஸங்கதிகண்டுகொள்வது §(க)"அவர் செய்கை வெறுத்து" என்றதையும், (உ) "பேசுமளவன்றிதுவம்மின்,"என்ற பாட்டையும் உட்கொண்டருளிச்செய்கிறார், (அநவஹிதராயித்யாதி).

மூ.—அன்றுயர்குலக்கொடியோடணிமாமலர்மங்கையொடன்பளவியவுணர்க்
கென்றுனுமிரக்கமிலாதவனுக்குறையுமிடமாவதிரும்பொழில்சூழ் [ர்க்
நன்றுயபுனல்நறையூர்திருவாலிகுடந்தைதடந்திகழ்கோவல்நகர்
நின்றுனிருந்தான்கிடந்தான்நடந்தாற்கிடம்மாமலையாவதுநீர்மலையே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	க்ருஷ்ணவதாரத்தில்	மலர்மங்கையொடு	தாமரைப்பூவைப் பிறந்தகமாகவுடைய பெரியபிராட்டியாரம்சமான ருக்மணிப்பிராட்டியுடனும்
ஆயர்குலக்கொடியோடு	இடைக்குலத்துக்குக் கொடிபோன்ற நப்பின்னைப் பிராட்டியுடனும்		[லந்து
அணி	அழகியதாய்	அன்புஅளவி	ஸ்நேஹந்தோற்றக்க
மா	ஸ்லாக்யமான		

§ (பிச்சச்சிறுபீலி) இத்யாதியைப்பற்ற (அநவஹிதராய்) என்றது.
(க) உ-ச-அ- (உ) உ-ச-கூ-

என்றானும்	எக்காலத்திலும்	குடந்தை	திருக்குடந்தையிலே
அவுணர்க்கு	அஸுரர்கள்பக்கல்	கிடந்தான்	சாய்ந்தவனாய்,
இரக்கம் இலாதவனுக்கு	தயையில்லாதவனாய்;	தடம்	தடாகங்களாலே
		திகழ்	ஒளிவிடாநின்றுள்ள
இரு	பெரிய	கோவல்நகர்	திருக்கோவலூரிலே
பொழில்	சோலைகளாலே	நடந்தாற்கு	நடந்தவனான ஸர்வேஶ்வரனுக்கு
சூழ்	சூழப்பட்டு		
நன்றாயபுனல்	நல்லஜலஸம்ருத்தியையுடைத்தான	உறையும்	நித்யவாஸம்பண்ணும்
		இடம்ஆவது	ஸ்த்தாநமாவது
நறையூர்	திருநறையூரிலே	மா	ஶ்லாக்யமான
நின்றான்	நின்றவனாய்,	மலை	மலையான
திருவாலி	திருவாலியிலே	நீர்மலை	திருநீர்மலையாம். (க)
இருந்தான்	இருந்தவனாய்,		

வ்யா.—முதற்பாட்டு. (அன்றாயர்) † முன்பு-பண்டொருநாள், நப்பின்னைப்பிராட்டியோடும், அழகிய தாமரைப்பூவை இருப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியாரோடும் † விரும்பிக்கலந்து. (அவுணர்க்கித்யாதி) †அவர்களுடன்கூட விருந்தபோதுமகப்பட அஸுரவர்க்கத்துக்கு ஒருகாலு மிரக்கமில்லாதவனுக்கு நித்யவாஸம் பண்ணுகைக்கு ஸ்த்தாநமாவது;—பரந்தபொழிலாலே சூழப்பட்ட நல்ல ஜலஸம்ருத்தியை யுடைத்தான திருநறையூர், இப்படிப்பட்ட நன்மைகளையுடைய திருவாலி, திருக்குடந்தை, தடாகங்கள் திகழாநின்றுள்ள திருக்கோவலூர்; இவை தொடக்கமானவற்றில். (நின்றாணித்யாதி) திருநறையூரிலே நின்றான், திருவாலியிலே இருந்தான், திருக்குடந்தையிலே சாய்ந்தான், திருக்கோவலூரிலே நடந்தான். (இடம்மாமலையாவது)†மலையாயிருக்கச்செய்தே அல்லாதவை வாஸஸ்த்தாநமாகிறதில்லையிறே. உகந்தருளின நிலங்க †ளெங்கும் பண்ணக்கடவ விருப்பத்தைப்பண்ணிக்கொடுவந்து ஸங்கிஹிதனான தேசம் திருநீர்மலை. ... ... (க)

அரு—முதற்பாட்டு. (அன்றாயரித்யாதி) "அன்பளவி" என்றதினர்த்தம், (விரும்பிக்கலந்து) என்றது. அளாவி என்றது, "அளவி" என்று குறுகிக்கிடக்கிறது, "என்றானும்"-என்றாகிலுமென்றர்த்தமாய், தாத்பர்யம், (அவர்களுடனித்யாதி). மூலத்திலே, "கோவல்நகர்" என்றவநந்தரம், இவற்றிலேயென்று அத்யாஹரித்துக்கொள்வது. வ்யாக்யையிலேயும், (திருக்கோவலூர் இவை) என்றுவாக்யத்தைநிறுத்தி, அநந்தரம், திருநறையூர் என்று ஒருபதம் அத்யாஹரிப்பது. இவ்வாக்யத்தை மேலுக்கு சேஷமாக்கிக்கொள்வது. "இடம் ஆவது மாமலையான நீர்மலை" என்று அந்வயித்துக்கொள்வது. நீர்மலையை "மாமலை" என்று விசேஷிக்கவேணுமோவென்ன, (மலையாயிருக்கவித்யாதி). (எங்கும் பண்ணக்கடவவிருப்பத்தை) என்றது-நின்றதும் இருந்ததும் கிடந்ததும், நடந்ததுமான விவற்றையென்றபடி. ... ... (க)

மூ.—காண்டாவனமென்பதோர்காடமரர்க்கரையனதுகண்டவனிற்கமுனே
மூண்டாரழலுண்ணமுனிந்ததுவுமதுவன்றியுமுன்னுலகம்பொறைதீர்த்
தாண்டானவுணனவன்மார்பகலமுகிரால்வகிராகமுனிந்தரியாய்
நீண்டான்குறளாகிநிமிர்ந்தவனுக்கிடம்மாமலையாவதுநீர்மலையே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அமரர்க்குஅரையனது	தேவர்களுக்குத் தலைவனான இந்த்ரனுடையதாய்	தீர்த்து	போக்கி
ஓர்	ஒருவராலுமழிக்கவொண்ணாத	ஆண்டான்	லோகத்தை ரக்ஷித்தவனாய்
காண்டாவனம் என்பது	காண்டவவநம் என்னும்	அவுணனவன்	ராக்ஷஸனான ஹிரண்யனுடைய
காடு	காட்டை	அகலம்	பரந்த
அவன்	அந்த இந்த்ரன்றானே	மார்பு	மார்வை
கண்டுநிற்க	பார்த்துக்கொண்டிருக்க	உகிரால்	நகங்களாலே
முனே	அவன்முன்பே	வகிராக	இரண்டு கூறும்படி
ஆர்	பூர்ணமான	முனிந்து	சீறியருளி
அழல்	அக்நியானது	அரியாய்	ஸிம்ஹரூபியாய்
மூண்டு	மேல்விழுந்து	நீண்டான்	வளர்ந்திட்டவனாய்,
உண்ண	புஜிக்கும்படி	குறளாகி	வாமநரூபியாய்க்கொண்டு (மஹாபலிபக்கலிலே சென்று நீரேற்றபின்பு)
முனிந்ததுவும்	சீறியருளியும்,	நிமிர்ந்தவனுக்கு	த்ரிவிக்ரமாவதாரம் செய்தருளினஸர்வேஸ்வரனுக்கு
அதுவன்றியும்	அதுக்குமேலே,	இடம்ஆவது	வாஸஸ்த்தாநமாவது
முன்	பாரதயுத்தத்தில்		மாமலையானநீர்மலை. (உ.)
உலகம்	பூமியின்		
பொறை	பாரத்தை		

வ்யா.—இரண்டாம்பாட்டு. (காண்டாவனம்)†காண்டவவநமென்று - இந்த்ரனுடைய காவற்காடாய், அதுதான் ஒருவர்க்கு மழிக்கவொண்ணாதபடியிருக்குமாயிற்று. † அர்ஜுநனும் க்ருஷ்ணனும் பூம்பந்தேறிட்டு விளையாடாநிற்கச்செய்தே அக்நிபகவான் "எனக்கு விருந்திடவேணும்" என்றபேக்ஷிக்க, "நீ இந்த்ரனுடைய காவற்காட்டைபுஜி" என்றுவிட்டானாயிற்று, அங்கே ஆஸுரப்ரக்ருதிகள்புக்கு ஒதுங்கினவாறே அவர்களைநிரஸிக்கவேணுமென்று; அத்தைச்சொல்லுகிறது. அமரர்க்கரையனுண்டு - இந்த்ரன், அவன் கண்டுநிற்க; அவன் †முன்பே.(மூண்டாரழலுண்ண முனிந்ததுவுமதுவன்றியும்)†பேகணித்துப் பிற்காலித்துப் போகக்கடவ அக்நியானது மேல்விழுந்து புஜிக்கும்படியாகச்சீறி, அதுக்குமேலே.†அன்றிக்கே, மூண்டாரென்று - எதிரிட்டவர்களாய், சத்ருக்களைச்சொல்லவுமாம். (முன்னுலகமித்யாதி) முன்பு பூபாரத்தைப்போக்கி நிர்வஹித்தூப்

போந்தவன். ஆஸுரப்ரக்ருதியான ஹிரண்யனுடைய பரந்த மார்வைத்திருவுகிராலே இரண்டுகூறும்படிசீறியருளி. (அரியாய் நீண்டான்)† அவனுடையப்ரதிஜ்ஞாகாலத்திலே வந்து உதவிற்றிலனாகில் குணங்கள் ஸாவதியாம்போலே. (குறளித்யாதி) ஸர்வாதிகனான தான் வாமநவேஷத்தைப்பரிக்ரஹித்து நிற்கச்செய்தே மஹாபலி பக்கலிலே சென்றிரந்து, திருக்கையிலே நீர் விழுந்தவாறே ஆகாசாவகாசமிடமடையும்படிவளர்ந்துஅளந்துகொண்டவனுக்கு வாஸஸ்தாநம். ... ... (உ)

அரு—இரண்டாம்பாட்டு. (காண்டாவனமித்யாதி).கீழ்த்திருமொழியிலே (க)"இந்திரன் சிறுவன்தேர்முன்நின்றானை" என்று ப்ரஸ்துதனான இந்த்ரனும், அவனுத்யாநத்தையழித்தபிள்ளையும், அவனைக்கொண்டுபூபாரத்தைநீக்கினபடியையும், அத்தோடு தோள்நீண்டியான பிதாபுத்ரர்களுடைய பாத்யபாதகபாவஸம்பந்தமும் திருவுள்ளத்தில்தோற்றி, அவற்றையநுஸந்தியா, நடந்தானுடைய அபதாநத்திலீடுபடுகிறாரென்று ஸங்கதி.

"காண்டா" என்று நீட்டலாய், வகரம் கடைக்குறைத்தலாய்க்கிடக்கிறதென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (காண்டவவநமென்றித்யாதி). இந்த்ரனநுகூலனன்றோ, அவன் காட்டைஅழலுண்ணமுனிந்ததுக்கு ப்ரஸக்தியென்னென்ன; அருளிச்செய்கிறார், (அர்ஜுநனுமித்யாதி). "முனே" என்றதினர்த்தம், (முன்பே) என்றது. மூண்டு-ஆர்-பூர்ணமாக, அழல்-அக்நி, உண்ணவென்றுசப்தார்த்தமாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார், (பேகணித்தித்யாதி). பேகணிப்பு-வைவர்ண்யம். இத்தால்-இதுக்குஹேதுவான இந்த்ரனிடத்தில் நின்றும்வந்த லஜ்ஜாபயங்களைச்சொல்லிற்றாயிற்று. அக்காட்டிலிருக்கிறமூண்டாரைமுனிந்ததுவும் என்று த்விதீயையாக்கியருளிச்செய்கிறார், (அன்றிக்கேயித்யாதி). "நீண்டான்" என்றது - உத்க்ருஷ்டனென்றாய் அருளிச்செய்கிறார், (அவனுடையவித்யாதி). ப்ரஹ்லாதனுடையவென்றபடி. ... (உ)

மூ.—அலமன்னுமடல்சுரிசங்கமெடுத்தடலாழியினாலணியாருருவில் [ல்
புலமன்னுவடம்புனைகொங்கையினாள்பொறைதீரமுனாளடுவாளமரி
பலமன்னர்படச்சுடராழியினைப்பகலோன்மறையப்பணிகொண்டணிசேர்
நிலமன்னனுமாயுலகாண்டவனுக்கிடம்மாமலையாவதுநீர்மலையே. (உ)

(க) உ - ரு - சு -

பதம்.	உரை.
ஆர் அணி	மிகவுமழகிய
உருவில்	திருமேனியிலே
அடல்	யுத்தோந்முகமான
ஆழியினுல்	திருவாழியோடே
அலம்	கலப்பையையும்
மன்னும்	பொருந்தியும்
அடல்	யுத்தோந்முகமாயும்
சுரி	சுரியையுடைய துமான
சங்கம்	ஸ்ரீபாஞ்சஜந்யத்தை
எடுத்து	தரித்து, [யும்
மூன்	துர்யோதநாதிகள் பொருந்தாதவன்று,
புலம்	(ஸர்வேஸ்வரனுடைய) சக்ஷுராதி இந்த்ரியங்கள்
மன்னு	ஸர்வகாலமும்ப்ரவணமாய்க்கிடக்கும்படியாய்
வடம்	ஆரம்முதலிய ஆபரணங்களாலே
புனை	அலங்கரிக்கப்பட்ட
கொங்கையினுள்	முலையையுடைத்தான ஸ்ரீபூமிப் பிராட்டியுடைய
பொறை	பாரத்தை
தீர	போக்குகைக்காக
ஆள் அடு	மநுஷ்யரைமுடிக்கவல்ல
வாள்	ஒளியையுடைத்தான
அமரில்	பாரதயுத்தத்திலே
பலமன்னர்	அநேகராஜாக்கள்
பட	நசிக்கும்படி [டைய
சுடர்	மிக்கதேஜஸ்ஸையு
ஆழியினை	திருவாழியை
பகலோன்	ஆதித்யன்
மறைய	மறையும்படியாக
பணிகொண்டு	கார்யங்கொண்டு
அணிசேர்	அழகுபொருந்திய
நிலமன்னனுமாய்	பூபதியுமாய்
உலகுஆண்டவனுக்கு	லோகபாலநம்பண்ணினவனுக்கு

இடமாவதுமாமலையானநீர்மலை. (௩)

வ்யா.—மூன்றும்பாட்டு. (அலம்)ஹலம், நித்யமாய்†யுத்தோந்முகமாய் சுரியையுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யம், இவற்றைத்தரித்து, (அடலாழியினுலணியாருருவில்) † யுத்தோந்முகமான திருவாழியோடே, நன்றாயிருக்கிற திருமேனியிலே; கலப்பை, ஸ்ரீபாஞ்சஜந்யமென்கிற இவற்றைத் தரித்தென்னுதல். (அடுத்து) என்று பாடமாகில், †அழகியவடிவோடே, திருவாழியோடே மற்றைதிவ்யாயுதங்களையும் சேர்த்து, அதாவது-(க) "ஃப஁ஸ஁ஂஹ஁ர -உபஸம்ஹர" என்ன மறைத்தபடி. ஆக, வெளியிடினும் மறைக்கினும் ஆஸ்ரிதார்த்தமாயிருந்தபடி. (புலமன்னுஇத்யாதி) †ஸர்வேஸ்வரனுடைய ஸர்வகரணங்களும் தன் பக்கலிலே ப்ரவணமாம்படி ஸர்வாபரணங்களாலும் அலங்க்ருதமான திருமுலைத்தடத்தையுடைய ஸ்ரீபூமிப்பிராட்டியாருடைய பாரமானது போம்படியாக முன்பு, ஆள்களைமுடிக்கிற ஒளியையுடைத்தான பூசலிலே யென்னுதல். †ஆண்பிள்ளைகளாயிருப்பாரை முடிக்கக்கடவ மதிப்புடைத்தான பூசலிலே. (பலமன்னர்பட)

(க) வி-பு-ரு-௩-௧௩.

நாளொன்றுக்குப் பதினாயிரம் ராஜாக்கள் படும்படியாக, நிரவதிக தேஜோரூபமான திருவாழியை ஆதித்யன் மறையும்படியாகக் கார்யங்கொண்டு. †"அணிசேர் நிலம்" என்னுதல், "அணிசேர்நிலமன்னனுமாய்" என்னுதல். (நிலமன்னனுமாயுலகாண்டவனுக்கு) சக்ரவர்த்தித் திருமகனைச்சொல்லுதல்; அன்றிக்கே; பூபாரநிர்ஹரணம் பண்ணினபடியைச் சொல்லுகையாலே க்ருஷ்ணனைச்சொல்லுதல். ... ... (௩)

அரு—மூன்றாம்பாட்டு. (அலமித்யாதி). "முன்னுலகம் பொறைதீர்த்தாண்டான்" என்னுமது, க்ருஷ்ணாவதாரத்துக்கு ப்ரதாநப்ரயோஜநமாகையாலே அத்தை ஸப்ரகாரமாக வநுபவிக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"அடல்" என்றதினர்த்தம், (யுத்தோந்முகமாய்) என்றது. "உருவில்" என்றது - ஸப்தமியாக்கி, "அணியாருருவில் - அடலாழியினால் - அலமன்னுமடல்சுரிசங்கமெடுத்து" என்று அந்வயம் விவக்ஷித்து அருளிச்செய்கிறார், (யுத்தேத்யாதி). "உருவில்" என்றத்தைத்ருதீயையாக்கி பாடாந்தரத்தி லந்வயமப்படியேயாய், தாத்பர்யம்,(அழகியவித்யாதி). "வடம்" என்றுஹாரமாய், இது ஸகலாபரணங்களுக்கு முபலக்ஷணம், புனைகை-பூணுகையாய் அருளிச்செய்கிறார், (ஸர்வேத்யாதி). "வாள்" மதிப்பென்று யோஜநாந்தரம். (ஆண்பிள்ளை யித்யாதி). "அணிசேர்" என்றது - நிலத்துக்கு விசேஷணமாதல், மன்னனுக்கு விசேஷணமாதலென்று யோஜநாத்வய மருளிச்செய்கிறார், (அணிசேரித்யாதி வாக்யத்வயத்தாலே.) ... ... (௩)

மூ.—தாங்காததோராளரியாயவுணன்றனை வீடமுனிந்தவனாலமரும் பூங்கோதையர்பொங்கெரிமூழ்கவிளைத்ததுவன்றியும்வென்றிகொள்வாளமரில் பாங்காகமுனைவரொடன்பளவிப்பதிற்றைந்திரட்டிப்படைவேந்தர்பட நீங்காச்செருவில்நிறைகாத்தவனுக்கிடம்மாமலையாவதுநீர்மலையே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாங்காதது	(எதிரிகளால்)தடுக்க வொண்ணாதபடி	கோதையர்	மாலைகளையுடையரானஸ்த்ரீகள்
ஓர்	ஒப்பற்ற	பொங்குஎரி	கிளருகிறஅக்நியிலே
ஆளரியாய்	நரஸிம்ஹமாய்	மூழ்க	புகும்படி
அவுணன்றனை	ஹிரண்யாஸுரனை	விளைத்து	பண்ணினவனாய்,
வீட	(ப்ராணன்)விடும்படி	அதுவன்றியும்	அதுவேயன்றிக்கே,
முனிந்து	சீறியருளி, [லே	முன்	முன்னே
அவனால்	அவன்பரிக்ரஹத்தா	வென்றிகொள்	வெற்றியையுடைத்தாய்
அமரும்	தரித்திருக்குமவர்களாய் [பட்ட	வாள்	மதிப்புடைத்தான
பூ	பூவால்அலங்கரிக்கப்	அமரில்	யுத்தத்திலே

ஐவரொடு	பஞ்சபாண்டவர்களோடே
பாங்காக	(அவர்களுக்குத்)தக்கபடி
அன்புஅளவி	ஸ்நேஹம்தோற்றக் கலந்து
படை	ஆயுதங்களையுடைய
பதிற்றைந்திரட்டிவேந்தர்	இரண்டைம்பது பேரான துர்யோதநாதிகளும்
பட	முடிந்துபோம்படி
செருவில்	பாரதயுத்தத்தில்
நிறை	த்ரௌபதியினுடைய ஸ்த்ரீத்வத்தை
நீங்கா	நீங்காதபடி
காத்தவனுக்கு	ரக்ஷித்தவனானஸர்வேஸ்வரனுக்கு

இடமாவதுமாமலையானநீர்மலை. (ச)

வ்யா—நாலாம்பாட்டு. (தாங்காதித்யாதி) எதிரிகளால் தாங்கவொண்ணாத நரஸிம்ஹமாய், ஹிரண்யன் † முடியும்படியாகச்சீறி, அவனாலே] தரிக்கிற, பூங்கோதையருண்டு - ஸ்த்ரீகள், அவர்கள் கிளர்ந்தெரிகிற நெருப்பிலே புக்கு முடிந்துபோம்படிபண்ணி; அதுவே யன்றிக்கே, (வென்றி யித்யாதி) வெற்றிகொண்டல்லது மீளக்கடவதல்லாத மதிப்பையுடைய பூசலிலே. (பாங்காக) தான் ஸ்வாமியானமுறை தோற்ற இருக்குமாகில் †அவர்களோடும் பொருந்தவொண்ணாதிறே. அதுக்காகத்தன்னைத்தாழவிட்டு அவர்களோடே உறவு பண்ணிக் † கலந்து, அற்றைக்கு நூறு ராஜாக்களை வெற்றிகொண்டல்லது மீளாத பூசலிலே, †த்ரௌபதியுடைய ஸ்த்ரீத்வத்தைப்பரிஹரித்தவனுக்கு. ... ... (ச)

அரு—நாலாம்பாட்டு. (தாங்காததித்யாதி). *தெள்ளிய சிங்கத்தையும் *தேவகிசிங்கத்தையும் "பொறைதீர்த்தாண்டான், அரியாய் நீண்டான்" என்றநுபவித்ததன்றியே, தட்டுமாற்றி யநுபவிக்கிறார் ஆராமையாலே யென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"வீட" என்றது - நீட்டலாய், விட-ப்ராணம்விடும்படியென்று சப்தார்த்தமாய், பலிதம், (முடியும்படி) என்றது. (அவர்களோடும்) - ஐவரோடுமென்றபடி. அன்பளவிபதார்த்தம், (கலந்து) என்றது. "பதிற்றைந்து-" ஐம்பது, "இரட்டி" அதிரட்டி, நூறென்றபடி. "படைவேந்தர்" ஆயுதஸஹிதரான ராஜாக்களென்று கண்டுகொள்வது. "நிறைகாத்தவன்" என்றது - வீரபத்நீத்வ ப்ரயுக்தபூர்த்தியை ரக்ஷித்தவனென்று சப்தார்த்தமாய், பலிதார்த்தமருளிச்செய்கிறார், (த்ரௌபதியித்யாதி). ஸ்த்ரீத்வநிபந்தநமான அச்சத்தையென்றபடி. அச்சம் - ஸ்த்ரீத்வதர்மமிறே. ... ... (ச)

மூ.—மாலுங்கடலாரமலைக்குவடிட்டணைகட்டிவரம்புருவமதிசேர்
கோலமதிளாயவிலங்கைகெடப்படைதொட்டொருகாலமரிலதிரக்
காலமிதுவென்றயன்வாளியினல்கதிர்நீண்முடிபத்துமறுத்தமரும்
நீலமுகில்வண்ணனெமக்கிறைவற்கிடம்மாமலையாவதுநீர்மலையே. ()

பதம்.	உரை.
ஒருகால்	ராவணன் கைவிஞ்சின வன்று
மாலும்	திரைக் கிளர்த்தியை [யுடைய
கடல்	கடலானது
ஆர	நிறையும்படி
மலைக்குவடிட்டு	மலையின் சிகரங்களைப் பொகட்டு
வரம்புருவ	அக்கரையிலே சென்று தட்டும்படி
அணைகட்டி	ஸேது பந்தநம் பண்[ணி
மதிசேர்	சந்த்ரனை அளாவும்படி ஓங்கியிருப்பதாய்
கோலம்	அழகிதான
மதிளாய	மதிள்களையுடைய
இலங்கை	லங்கையானது
கெட	அழியும்படியாக
படை	ஆயுதங்களை
தொட்டு	பிடித்து (ப்ரயோகித்[து)
அமரில்	யுத்தத்திலே
அதிர	அதிரும் படி பண்ணி

பதம்.	உரை.
இதுகாலம்என்று	இவனை முடிக்கைக்கு இதுநல்லகாலம்என்று
அயன்வாளியினால்	ப்ரஹ்மாஸ்த்ரத்தாலே
கதிர்	ஒளியுடைத்தான
நீள்முடிபத்தும்	பெரிய கிரீடங்கள் தரித்த பத்துத் தலைகளையும்
அறுத்து	சேதித்து
அமரும்	திருவயோத்யையில் எழுந்தருளியிருந்தவனாய்
நீலமுகில்	காளமேகம் போன்ற
வண்ணன்	திருநிறத்தை யுடையவனான
எமக்கு இறைவற்கு	நமக்குஸ்வாமியானவனுக்கு
இடமாவது	மாமலையான நீர்மலை. (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (மாலுங்கடல்) ஜலஸம்ருத்தியாலே பிச்சேறினகடலானது;† திரைக்கிளர்த்தியை யுடைத்தான கடலென்றபடி. (ஆர்) நீரிலாழக்கடவ மலையினுடைய சிகரங்களைமுறித்து அணைகட்டி. (வரம்புருவ) அக்கரையிலே சென்று தட்டும்படி. (மதியித்யாதி) சந்த்ர பதத்தளவும் செல்லவோங்கி தர்சநீயமாயிருக்கிற மதிளையுடைத்தான லங்கையானது அழியும்படியாக திவ்யாயுதங்களைப்பிடித்து யுத்தத்திலே அதிரும்படியாக. அதாவது- கடலை அணைசெய்து எடுத்துவிட்டு அடைமதிட் படுத்தி முதல்நாளைப் பூசலிலே கெடும்படியாகப் பண்ணி "பையல் தானே இனி அநுதாபம்பண்ணி இளைத்துவருகிறான்" என்று விட்டிருந்த விடத்தும், பின்னையும் மிகைக்கையாலே, "இனி இவனைவைத்துக் கொண்டு நின்று லீலாரஸமநுபவிக்கையாவது - தேவஜாதியை அச்சமுறுத்துகை, இனியிவனைவைப்போமல்லோம், நல்லகாலம்" என்று ப்ரஹ்

மாஸ்த்ரத்தாலே ஒளியையுடைத்தாயிருக்கிற பெரியமுடிகள் பத்தையுமறுத்து. (அமரும்நீலமுகில்வண்ணன்) ராவணவதம் பண்ணின வநந்தரம் திருமேனியில் பிறந்த பௌஷ்கல்யமிருக்கிறபடி. நீலமானது அமர்ந்திருக்கிற முகில் போலே ஶ்ரமஹரமான வடிவையுடையவன். (எமக்கிறைவற்கு) அவ்வடிவழகாலே என்னை அநந்யார்ஹனாக்கினவனுக்கு ... ... (ரு)

அ௫—அஞ்சாம்பாட்டு. (மாலுமித்யாதி). ப்ரதோஷாதிதஞான, *பேழ்வாயன் ப்ரபாவத்தையும், பகலையிரவாக்கின பொய்வாயன் பூசலையும், மாறிமாறிப்பேசி யநுபவியாநின்றீர், மஹத்தத்வமான கடலையணைசெய்தும் லங்கையையடைமதிள்படுத்தியும், ராவணனைக்கொன்ற வீரத்தை மறந்தீரோ வென்று தான் ஜயஸ்ரீயோடேநின்ற நிலையைக்காட்டக் கண்டநுபவிக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

பலிதம் (திரைக்கிளர்த்தியையித்யாதி). ஆர - நிறையவென்று சப்தார்த்தமாய், "மாலுங்கடலார மலைக்குவடிட்டு-வரம்புருவ-அணைகட்டி" என்றந்வயமாக்கிக்கொள்வது. அமர்ந்திருக்கிற - த்ருஷ்டாந்தமாகப்பொருந்தியிருக்கிற வென்று திருமேனிக்கு விசேஷணம். ... ... (ரு)

மூ.—பாராருலகும்பனிமால்வரையுங்கடலும்சுடருமிவையுண்டுமெனக்
காராதெனநின்றவனெம்பெருமானலைநீருலகுக்கரசாகியவப்
பேரானைமுனிந்தமுனிக்கரையன்பிறரில்லைநுனக்கெனுமெல்லையினான்
நீரார்பேரான்நெடுமாலவனுக்கிடம்மாமலையாவதுநீர்மலையே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	(ப்ரளயகாலத்திலே)	அரசுஆகிய	ராஜாக்கள்என்கிற
ஆர்	பரந்த	அப்பேரானை	அந்தப்பேரையுடையக்ஷத்ரியகுலத்தை
பாருலகும்	பூலோகமும்	முனிந்த	சீறியருளின
பனி	குளிர்ந்து	முனிக்குஅரையன்	முநிஶ்ரேஷ்டனான ஸ்ரீபரசுராமாழ்வானாய்
மால்	பெரிதான	நுனக்கு	உனக்கு
வரையும்	பர்வதங்களும்	பிறர்இல்லை	புறம்பானொருவருமில்லை
கடலும்	ஸமுத்ரங்களும்	எனும்	என்னும்படி
சுடரும்	சந்த்ரஸூர்யர்களும் ஆகிய	எல்லையினான்	ப்ரகாரியான எல்லையிலேநிற்குமவனாய்
இவை	இவற்றை	நீரார்பேரான்	நீர்வண்ணனென்னும் திருநாமத்தையுடையவனாய்
உண்டும்	அமுதுசெய்தும்	நெடுமாலவனுக்கு	மிக்கவ்யாமோஹத்தையுடையனான ஸர்வேஶ்வரனுக்கு
எனக்கு	எனக்கு	இடமாவதுமாமலையான நீர்மலை. (சு)	
ஆராதுஎன	போராதுஎன்று		
நின்றவன்	எழுந்தருளியிருக்குமவனாய்		
எம்பெருமான்	எனக்குஸ்வாமியாய்		
அலைநீர்	அலைமோதுகிறகடலாலே சூழப்பட்ட		
உலகுக்கு	பூமிக்கு		

வ்யா — ஆறும்பாட்டு. (பாராருலகும்) மண்மிக்கபூமியும். (பனியால்வரையும்) † அந்த பூமிக்கு ஆணியடித்தாற்போலே யிருப்பதுமாய், மேகங்கள்படிந்து வர்த்திக்கிற குலபர்வதங்களும், ஸமுத்ரங்களும், தேஜ꞉பதார்த்தங்களும், இவற்றையடங்க வயிற்றிலே யெடுத்துவைத்துப், பின்னையும், இவை எனக்குப் போராதென்று தான் கொண்ட † கோட்பாடு மாறாதே ரக்ஷ்யமளவுபட்டு ரக்ஷகத்வமே விஞ்சி யிருக்கிறவன். அதாவது - ப்ரஜைகள் விஷயமாக எல்லாம் செய்து பின்னையுமொன்றும் செய்யாதானாயிருக்கிறபடி. †பின்பு ப்ரளயத்தில் நின்று மெடுத்து வயிற்றிலே வைத்து நோக்கினதை நினையாதே, முன்பு ப்ரளயத்தில் நோவுபடவிட்டத்தையே நினைக்கை. (எம்பெருமான்) † இப்படிதான் ஸர்வரக்ஷகனாயிருக்கிற விருப்பைக் காட்டி என்னை யெழுதிக்கொண்டவன். (அலையித்யாதி) † இவ்விடத்துக்குப் பொருள் அழகப்பெருமாளரையர் பலரையுங் கேட்டுக் கொடுதிரிந்தாராய், நம்முடையவர்களிலே சிலர் "ஸர்வேஶ்வரனைச் சொல்லுகிறது காணும்" என்று விட்டார்கள். † கடல் சூழ்ந்த பூமிக்கு ராஜாக்களாய்ப் போருகிறவர்களை அப்பேருங்கூடநடையாடாதபடியாக அழியச்செய்த (முனிகரையன்) ஶ்ரீபரசுராமாழ்வான் இருபத்தொருபடிகால் க்ஷத்ரியவம்சங்களைப் பேரும்நடையாடாதபடி அறுத்துப் பொகட்டானிறே. (பிறரில்லைநுனக்கெனுமெல்லையினான்) † உனக்குப் புறம்பாயுன்னோடொக்கச் சொல்லலாவதொரு ப்ரபுவில்லை யென்னும்படி, தன்னையொழிந்ததடைய ப்ரகாரமாய்த் தான்ப்ரகாரியாய்க்கொண்டு எல்லையிலே நிற்கிறவன். (நீரார்பேரான்) (க) "ஆபோ நாரா இதி ப்ரோக்தா꞉ - ஆபோநாரா இதிப்ரோக்தா꞉" என்கிறபடியே ஜலத்திலே கண்வளர்ந்தருளுகையாலே நாராயணனென்னும் திருநாமத்தை யுடையவனென்னுதல்; அன்றிக்கே, "நீர்" என்று - நீர்மையாய், அத்தால் ஸ்வபாவமாய், அதாகிறது - சேஷித்வமாய், ஆக ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துவும் தனக்கு ப்ரகாரமாகத் தான்ப்ரகாரியாயிருக்கையாலே நாராயணனென்னும் திருநாமத்தை யுடையவனென்னுதல். ஆக, † ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரனுக்கு † நீர்வண்ணனென்று திருநாமம். ... ... (கூ)

ரு(க) மநுஸ்ம்ருதி.

அரு.—ஆரும்பாட்டு. (பாராரித்யாதி). (க) * குரக்கினப்படைகொடு குரைகடலடைத்ததும், ராவணன்தலை யறுத்தது மொருதன்னேற்றமோ, (உ) "எல்லாவுலகுமோர் துற்ருற்ரு" என்கிறபடியே மஹத்தத்வத்தை விளாக்கொலை கொண்டதையும், ராவணனைப் பத்துத்தலைப்பூச்சியாக்கின ஸஹஸ்ரபாஹுதுடக்கமானாரையும் வென்று (ரு) * இருபத்தொருகால் அரசு களை கட்டின வீரசரிதத்தையும் காணீரோவென்ன; அத்தைப்பேசுகிருரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

"மால்" பெருமையாய், ஸமபிவ்யாஹார தாத்பர்யம், (அந்தவித்யாதி). (கோட்பாடு) - உத்யோகம். "ஆராது" என்றதுக்குத் தாத்பர்யம், (பின்பித்யாதி). "காணீர்" என்று ஸர்வேஸ்வரன் காட்டிக்கொடுத்தானென்கைக்கு ஸூசகம் இப்பதமென்னுமத்தை யருளிச்செய்கிருர், (இப்படியித்யாதி). § தாமருளிச்செய்யப்போகிற அர்த்தத்தின் சீர்மைதோற்றும்படி ஒரை திஹ்யமருளிச்செய்கிருர், (இவ்விடத்துக்கித்யாதி). "அப்பேரானை" அந்தப் பேரிட்டுக்கொண்டவனையென்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிருர், (கடலித்யாதி). "நுனக்குப் பிறரில்லையெனுமெல்லையினன்" என்று அந்வயமாக்கி அருளிச்செய்கிருர், (உனக்கித்யாதி). எல்லையினன் - எல்லைநிலத்திலே வர்த்திப்பானென்றத்தாலே, ப்ரபுவென்றது பலிதம். இரண்டாமர்த்தத்தைப்பற்ற, "நெடுமால்" என்றதுக்கர்த்தம், (ஸர்வாதிகனித்யாதி). ஸர்வாதிகத்வம் சொல்லுகைக்கு "நீரார்பேரான்" என்று விசேஷிக்கவேணுமோவென்ன, (நீரித்யாதி). ஸ்வாபாவிகசேஷித்வத்துக்குத் தகுதியானபேருடையவனென்று சப்தார்த்தம். நீர்வண்ணன் - ஸ்வாபாவிக சேஷித்வ ஸூசக விக்ரஹவானென்று இதுக்கு சப்தார்த்தம். ... ... (சு)

மூ—புகராருருவாகிமுனிந்தவனைப்புகழ்வீடமுனிந்துயிருண்டசுரன்
நகராயினபாழ்படநாமமெறிந்ததுவன்றியும்வென்றிகொள்வாளவுண
பகராதவனுயிரநாமமடிப்பணியாதவனைப்பணியாலமரில் [ன்
நிகராயவன்நெஞ்சிடந்தானவனுக்கிடம்மாமலையாவதுநீர்மலையே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆர்	மிக்க [தான	உண்டு	முடித்து [டைய
புகர்	தேஜஸ்ஸையுடைத்	அசுரன்	அஸுரனை அவனு
உருவாகி	வடிவை யுடையனாய்க்கொண்டு	நகராயின	படைவீடுகளானவை
		பாழ்பட	பாழடைந்து போம்படியாகவும்
முனிந்தவனை	(என்னைக் காட்டிலும் மேலானவன் யார் என்று) கோபித்த ஹிரண்யாக்ஷனை	நாமமெறிந்து	அவன்பேருங்கூடத் தெரியாதேபோம்படியாகவும் (அழியச்செய்து);
புகழ்வீட	(அவன்) புகழ்நசிக்கு		
முனிந்து	சீறியருளி [ம்படி	அதுவன்றியும்	அதுக்குமேலே
உயிர்	(அவன்) ப்ராணனை	வென்றிகொள்	ஜயத்தையுடையனாய்

§ (இவ்விடத்துக்கு) என்றது - "முனிக்கரையன்" என்ற விடத்துக்கு என்றபடி. (முனிக்கரையன்) முனிராஜா. (சூ)

(க) தி-ச-வி-ரு௨. (உ) தி-வாய். (ரு) தி-வாய்-சு-உ-கo.

வாள்	வாளையேதனக்குத் துணையாகவுடையனாய்	நிகராயவன்	எதிரான
		அவுணனை	ஹிரண்யாஸுரனை
		நெஞ்சு	மார்வை
ஆயிரம்நாமம்	(எம்பெருமானுடைய)	பணியால்	ப்ரஹ்லாதன்சொல்லாலே (அவனுக்கு ஹிதத்தைச் செய்யவேணுமென்று)
பகராதவன்	ஸஹஸ்ரநாமங்களில்ஒன்றையும் சொல்லப்பெறாதவனாய்		
அடி	திருவடிகளிலே	இடந்தானவனுக்கு	பிளந்துபொகட்டவனுக்கு
பணியாதவன்	வணங்காதவனாய்		
அமரில்	யுத்தத்தில்		

இடமாவது மாமலையானநீர்மலை. (எ)

வ்யா—ஏழாம்பாட்டு. (புகரித்யாதி) பௌண்ட்ரகன் தன்னைச் சொல்லிற்றாதல்; ஹிரண்யாக்ஷனைச்சொல்லிற்றாதல். † சுத்தஸத்வமயமாய் நிரவதிகதேஜோரூபமான திவ்யவிக்ரஹத்தோடு போலியாகத்தன் வடிவைப்பண்ணிக் கொடுதிரிந்தானென்று சொல்லக்கடவது. ஹிரண்யாக்ஷனைபோது † தானே சொல்லலாமிறே. † புகர்த்தவடிவையுடையனாயிருக்கிறவனை, இன்னானென்று சொல்லுகிற ப்ரமம் போம்படியாகச்சிறி. பலநகரங்களையும் பண்ணிவைத்தானாயிற்று; § அந்நகரங்களுந்தானும் பாழ்பட்டுப் போம்படியாக,, இன்னானென்கிறவார்த்தைப்பாடும் போம்படியாக அழியச்செய்து. அதுக்குமேலே, (வென்றியித்யாதி) வெற்றியுண்டானாலல்லது மீளாதானாய், தைவங்கள் கொடுத்த § வரங்களையே தனக்குபலமாகநினைத்திருப்பானாய். பகருகை - சொல்லுகையாய், ஆயிரந் திருநாமங்களிலொன்றையும் சொல்லாதவன்; † என்றதென் - சொல்லப்பெறாதவனென்றபடி. அதுக்குமேலே திருவடிகளிலே விழுந்தாஶ்ரயியாதே யிருக்கிறவனை. (பணியால்) ஶ்ரீப்ரஹ்லாதாழ்வானுடைய வார்த்தையாலே. (க) 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 -ஸுக்ரீவவசநாத்" என்னுமாபோலே பணிந்து பகர்ந்தவனுடைய வார்த்தையாலே. †(உ)†[𑌮𑌤𑍍𑌪𑌿𑌤𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌤𑍍𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌦𑍇𑌵 𑌤𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑍁 - மத்பிது ஸ்த்வத்க்ருதம் பாபம் தேவதஸ்யப்ரணஶ்யது] முன்பு அவன் பண்ணினப்ராதிகூல்யத்தையெல்லாம் பொறுக்கவேணுமென்னப் பொறுத்துப் போந்தான். இனி இவனிருக்கில் † இவனுக்குஅநர்த்தமென்னுமளவில்பின்னையழியச்செய்துவிட்டானாயிற்று. அமரிலே - யுத்தத்திலே, நானெதிரி என்று தோற்றினவனுடைய மார்வை இரண்டு கூறும்படி பிளந்து பொகட்டவனுக்கு. ... ... (எ)

---

§(பா) அவன தானநகரங்களானவை. §(பா) வாளையே. (க) ரா-பா-க. (உ) வி-பு-க.

அரு—ஏழாம்பாட்டு. (புகராரித்யாதி). பகலை யிரவாக்கினதும் ப்ரதோஷ காலத்திலே * பேழ்வாயனாய்ப் பிறந்ததும் ஆஸ்ரிதார்த்தமாகையாலே, அது தானே நெஞ்சிலூற்றிருந்து அசோதையிளஞ்சிங்கத்தையும் சிங்கப்பிரானை யும் மீளஅநுபவிக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

ஹிரண்யாக்ஷனென்றபக்ஷத்திலே, ஹிரண்யனுக்கு ப்ராதாவாகையாலே அவனுடைய நிரஸநமும் ப்ரஸ்துதமாயிற்றென்று கொள்வது. "ஆகி" என்கிற அபூததத்பாவனுக்கு ஸ்வாரஸ்யமுண்டென்று விவக்ஷித்து, பௌண்ட்ரக னான பக்ஷத்திலே சப்தார்த்தம், (சுத்தேத்யாதி). போலியுமாகாதவன் போலி யானனென்று கருத்து. (தானேசொல்லலாமிறே) என்றது - ஹிரண்யாக்ஷ னும் ஹிரண்யனைப்போலே தேஜோரூபவானாயிருக்கையாலே, புகரார்ந்த வருவென்று சொல்லலாமென்றபடி. புகராலே ஆர்ந்த வடிவையுடையனாய்க் கொண்டு (க) "கோயம் விஷ்ணு: -கோயம் விஷ்ணு:" என்றுமுனிந்தவனை, அவன் புகழ்போம்படிசீறி, ப்ராணன்களைக்கொண்டென்று சப்தார்த்தமாய், தாத்பர் யமருளிச்செய்கிறார் (புகர்த்தவித்யாதி). "அசுரன்" இத்யாதிக்குத்தாத்பர்யம், (பலவித்யாதி).) (என்றதென்) என்றது - அதாவதென்றபடி. பலிதார்த்தம், (பணிந்தித்யாதி). ஸமுத்ரத்திலே தன்னைக்கட்டிப்போகட்டபோது ஸர்வேஶ் வரன் ப்ரஸந்நனாய், "வரங்கொள்" என்ன, என்னுடைய தமப்பனுடைய அபராதத்தைப் பொறுத்தருளவேணுமென்றவன் இப்போது கொல்லச்சொ ல்லுவனோவென்ன; அருளிச்செய்கிறார், (மத்பிதுரித்யாதி). (இவன்) ஹிரண் யன் - (இவனுக்கு) - இந்தஹிரண்யனுக்கு. அதிப்ராதிகூல்யத்தாலே யென் றபடி. "நிகராயவன்" என்றதுக்கர்த்தம், (நானெதிரியித்யாதி). ... (எ)

மூ.—பிச்சச்சிறுபீலிபிடித்துலகில்பிணந்தின்மடவாரவர்போலங்ஙனே அச்சமிலர்நாணிலராதன்மையாலவர்செய்கைவெறுத்தணிமாமலர்தூய் நச்சிநமனாரடையாமைநமக்கருள்செய்யெனவுள்குழைந்தார்வமொடு நிச்சம்நினைவார்க்கருள்செய்யுமவற்கிடம்மாமலையாவதுநீர்மலையே.()

பதம்.	உரை.	பதம்.	உரை.
பிச்சம்	பிச்சங்களையுடைத்தா[ய்	அங்ஙனே	அப்படியே
சிறு	சிறிதான	அச்சம் இலர்	பயமில்லாதவர்களாய்
பீலி	மயிலிறகை	நாண் இலர்	லஜ்ஜை யில்லாதவர்க ளாய்
பிடித்து	கையில்பிடித்துக் கொண்டு	ஆதன்மையால்	இப்படியிருக்கையா[லே
உலகில்	லோகத்தில்	அவர்செய்கை	அந்தலௌகிகர் செய் துபோரு மவற்றை க்கண்டு
பிணம்	பிணங்களை		
தின்	தின்கிற		
மடவாரவர்போல்	பிசாசஸ்த்ரீகளைப்போலே,	வெறுத்து	ஜுகுப்ஸித்து
		அணி	அழகியதாய்

(க)

மா	ஶ்லாக்யமான
மலர்	புஷ்பங்களை
தூய்	பணிமாறி
நச்சி	(ஸர்வேஶ்வரனை) ஆசைப்பட்டு,
நமனார்	யமாதிகள்
அடையாமை	கிட்டாதபடி
நமக்கருள்செய்என	எங்களுக்குக் க்ருபை செய்தருளவேணுமென்று
உள்குழைந்து	நெஞ்சுநெகிழ்ந்து
ஆர்வமொடு	ப்ரீதியுடனே
நிச்சம்	நித்யமாக
நினைவார்க்கு	அநுஸந்திக்குமவர்களுக்கு
அருள்செய்யுமவற்கு	க்ருபைசெய்தருளுமவனுக்கு
இடமாவது மாமலையானநீர்மலை. (௮)	

வ்யா.—எட்டாம்பாட்டு. (பிச்சச்சிறுபீலிபிடித்து) † பிச்சமாயிருக்கிற சிறுபீலித்தழையைக்கையிலே பிடித்து, லோகத்திலே பிணந்தின்னிகளைப்போலே வஸ்த்ரத்தைப் பொகட்டுத் திரியாநிற்பர்களாயிற்று; †அவர்களைப்போலே, அப்படியேபிறர்முன்னே நாமிங்ஙனே நிற்கும்படி யெங்ஙனே யென்னுமச்சமாதல், இத்தைப் பிறர் காணில் செய்வதென்னென்கிறலஜ்ஜையாதலின்றிக்கே திரியாநிற்பர்கள்; இப்படி யிருக்கையாலே, (அவர் செய்கை வெறுத்து) வைதிகமர்யாதையும் பகவதுபாஸநமும் வேதோக்தமான அநுஷ்டாநமுமின்றிக்கே தாங்கள் நினைத்தபடி செய்து திரியுமவற்றை யநுஸந்தித்துவெறுத்து;†அழகிய புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு அவனை நச்சி - ஆசைப்பட்டு, யமாதிகள் கிட்டாதபடி நிச்சம்நினைவார் என்னுதல்; நச்சிநமனார் என்னுதல்; - இவர்கள் பாபகர்மாக்களாயிருந்தார்கள், நாம் நினைத்தபடி கார்யம் கொள்ளலாமென்று யமாதிகள் கிட்டாதபடியாக வென்னுதல். (நமக்கு) எங்கள் பக்கலிலே அருளைப்பண்ணவேணுமென்று நெஞ்சு நெகிழ்ந்து ப்ரேமயுக்தராய்க்கொண்டு நாள்தோறு மநுஸந்திக்குமவர்களென்னுதல், நிச்சமருள் செய்யுமவற் கென்னுதல். ... ... (௮)

அரு.—எட்டாம்பாட்டு.(பிச்சச்சிறுபீலியித்யாதி)(௧) "என்னெஞ்சமென்பாய் தணிந்துகேள்" என்று தந்திருவுள்ளத்துக்குச்சொன்ன உபதேசம் பலித்து விட்டபடி கைகண்டவராகையாலே, இப்படி ஆஶ்ரிதன் சொல்வழி பரதந்த்ரனானபின்பு நீங்கள் துர்மதங்களைக் காற்கடைகொண்டு ஆஶ்ரயியுங்கோளென்று பரோபதேசப்ரவ்ருத்தராகிறாரென்று மேலிரண்டு பாட்டுக்கும் ஸங்கதிகண்டுகொள்வது.

நிர்வாணிகளாய் பிணம்தின்கிற பிசாசஸ்த்ரீகளைப்போலே லஜ்ஜாபயமின்றிக்கே நிர்வாணிகளாய், ஜந்துஹிம்ஸையுமாகாதென்று கையிலே வழி

---

§ "பிச்சம்" நமனாருக்குவிசேஷணமானபக்ஷத்தில்.நச்சுதல்-வ்யவஸாயம்.

(௧) ௨-௧-௯.

சேர்க்கைக்காசப் பிடித்தத்தைப்பிடித்துக்கொண்டு திரிகிற க்ஷமண ரென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (பிச்சமாயித்யாதி). பிச்சாய் - சிறிதாயிருக்கிற மயிலிறகைப் பிடித்துக்கொண்டென்று சப்தார்த்தம். கீழ்வாக்யவிவரணம் (அவர்களைப்போலேயித்யாதி). "நச்சி" என்றத்தை "தூய்" என்றத்தோடேகூட்டி ஆஸ்ரிதர்க்கு விசேஷணமாகவும், "நச்சிநமனார்" என்று மேல்பதத்துக்கு விசேஷணமாகவும், இரண்டுயோஜநை யருளிச்செய்கிறார், (அழகியவித்யாதி வாக்யத்வயத்தாலே.) "நிச்சம்" என்றது - "நினைவார்க்கு" என்றதுக்காதல். "அருள்செய்யுமவர்க்கு" என்றதுக்காதல் சேஷம். (அ)

மூ.—பேசுமளவன்றிதுவம்மின்நமர்பிறர்கேட்பதன்முன்பணிவார்வினைகள்
நாசமதுசெய்திடுமாதன்மையாலதுவேநமதுய்விடம்நாண்மலர்மேல் [ல்
வாசம்மணிவண்டறைபைம்புறவில்மனமைந்தொடுநைந்துழல்வார்மதியி
நீசரவர்சென்றடையாதவனுக்கிடம்மாமலையாவதுநீர்மலையே. (கூ)

பதம்.	உரை.
இது	இந்தபகவத்விஷயத்தின்சீர்மை
பேசுமளவுஅன்று	நம்மால்சொல்லிமுடிக்கப்போகாது
நமர்	நம்முடையவர்களே! (இந்தச்சீரிய அர்த்தத்தை)
பிறர்	நாஸ்திகரானவர்கள்
கேட்பதன்முன்	கேட்கிறதற்குமுன்
வம்மின்	வாருங்கள்; [பே
அது	அந்தபகவத்விஷயம்
பணிவார்	தன்னைவணங்கினவர்
வினைகள்	பாபங்களை[களுடைய
நாசம்செய்திடும்	நசிப்பிக்கும்;
ஆதன்மையால்	ஆகையாலே
அதுவே	அந்தபகவத்விஷயமே
நமது	நமக்கு [தாநம்;
உய்வுஇடம்	உஜ்ஜீவிக்கைக்குஸ்த்

பதம்.	உரை.
மனம்	நெஞ்சு
ஐந்தொடு	சப்தஸ்பர்சரூபரஸகந்தங்களிலே சென்
நைந்து	சிதிலராய், [று
உழல்வார்	க்லேசப்படுமவர்களா
மதியில்	அறிவுகேடரான [ய்
நீசரவர்	தண்ணியர்க்கு
சென்றுஅடையாதவனுக்கு	கிட்டஅரியனானவனுக்கு
இடமாவது	வாஸஸ்த்தாநமாவது,
நாள்	அப்போதுஅலர்ந்த
மலர்மேல்	பூவிலேபடிகையாலே
வாசம்	பரிமளத்தையுடைத்
அணி	அழகியதான [தாய்
வண்டு	வண்டுகள்
அறை	சப்தியாநின்றுள்ள
பை	பரந்த
புறவில்	பர்யந்தங்களையுடைய

மாமலையானநீர்மலை. (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பேசுமளவன்றிது) †பகவத்வ்யதிரிக்தவிஷயங்களிற் சொல்லலாவதொன்றில்லாமையாலே சொல்லப்போகாது; பகவத்விஷயத்தில் இயத்தாராஹித்யத்தாலே பேசப்போகாது. (வம்மின்நமர்) நம்மோடொரு குடல்துடக்குடையாரடங்கலும் வாருங்கோள். (பிறர்கேட்பதன்முன்) இதுக்குப் புறம்பானார் செவிப்படுவதற்கு முன்பே. (க) † "ய இதம்பரமம்குஹ்யம் -

(க) கீதை - கஅ - சுஎ.

யஇதம்பரமம் குஹ்யம்" என்றும், (க) "இதந்தேநாதபஸ்காய - இதந் தேநாதபஸ்காய" என்றும்அநதிகாரிகள் கேட்கவுமாகாது, அதிகாரி களுக்குச் சொல்லாதொழியவுமாகாது என்றிரண்டு முண்டிறே. (பணிவார்) திருவடிகளிலே விழுந்து ஆஶ்ரயிப்பாருடைய பாபங் களை வாஸநையோடே நசிப்பிக்கும். (அது)† அவ்வரியத்தையும் செய்யும்; (உ) தார்வ்யாதிரிவநஶ்யதி - தார்வ்யாதிரிவநஶ்யதி" என்கிறபடி யே. இப்படியிருக்கையால் அதுவே நமக்கு உஜ்ஜீவிக்கைக்கு ஸ்த் தாநம். (நாண்மலர்தூய்) என்று பாடமாகில் செவ்விப் பூக்களைத்தூ விப் பணிவார் என்கிறது. (நாண்மலர்மேல்) என்றதாகில், செவ் விப்பூக்களின்மேலேபடிந்து பரிமளிதமானவண்டுகள் த்வநியாநின் றுள்ள பர்யந்தத்தை யுடைத்தான மாமலையாவது. (மனமித்யாதி) (ஐந்தொடு - மனம் - நைந்துழல்வார்) சப்தாதிகளிலே நெஞ்சு ப்ரவ ணமாய் நைந்து க்லேசப்படுமவர்கள் அறிவுகேடரான நீசர் சென்ற டையாதவனுக்கு. ... ... (௯)

அ௫.—ஒன்பதாம்பாட்டு. (பேசுமளவித்யாதி)· "இது" என்றது-மேல் சொல்லப்புகுகிற பகவத்ப்ரபாவமென்று விவக்ஷித்து அத்தை ஸத்ருஷ்டாந்த முபபாதிக்கிறார், (பகவத்வ்யதிரிக்தேத்யாதி). "வம்மின்" என்று சிலரை அழைத்து, "பிறர்" என்று சிலரைக்கழிக்கிற தெப்படியிருக்கிறதென்ன; (யஇமமித்யாதி). "நாசம்" என்னுதே, "அது" என்றத்தால் பலிதம், (அவ்வரி யத்தையித்யாதி). அப்படிப்பட்ட அநர்த்தத்தையென்று சப்தார்த்தம். "புறவில்" என்றதுக்கு, "மாமலை" என்றத்தோடு விசேஷண விசேஷ்ய பாவஜ்ஞாபநார்த்தம், (பர்யந்தத்தை யுடைத்தான மாமலையாவது) என்றது. "இடம் ஆவது மாமலையான நீர்மலையே, இது பேசுமளவன்று, பிறர்கேட்ப தன்முன் - வம்மின்" என்றந்வயம். ... ... (௯)

மூ —நெடுமாலவன்மேவியநீர்மலைமேல்நிலவும்புகழ்மங்கையர்கோனமரில் கடமாகளியானைவல்லான்கலியனொலிசெய்தமிழ்மாலைவல்லார்க்குடனே விடுமால்வினைவேண்டிடில்மேலுலகுமெளிதாயிடுமென்றியலங்கொலிசேர் கொடுமாகடல்வையகமாண்டுமதிக்குடைமன்னவராயடிகூடுவரே. ()

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
நீர்மலை	திருநீர்மலையிலே	நிலவும்	நித்யமான
மேவிய	பொருந்திய	புகழ்	புகழையுடையராய்
நெடுமாலவன்	ஸர்வேஶ்வரன் விஷ	மங்கையர்	திருமங்கையிலுள்ளா
மேல்	யமாக,	கோன்	தலைவராய் [ர்க்கு

(க) கீதை-௧அ-௬அ. (௨)

அமரில்	யுத்தத்திலே	மேல்உலகும்	ஸ்வர்க்கம் தொடக்கமான மேல்லோகங்களும்
கடம்	மதத்தாலே	எளிதாயிடும்	ஸுலபமாம்;
மா	மிகவும்	அன்றி	அன்றிக்கே
களி	களித்த	இலங்கு	விளங்காநிற்பதாய்
யானை	யானையை	ஒலிசேர்	த்வநியையுடைத்தாய்
வல்லான்	நடத்தவல்லாரான	கொடு	வளைந்திருந்துள்ள
கலியன்	ஆழ்வார்	மா	பெரிய
ஒலிசெய்	ஒலியுடைத்தாம்படி அருளிச்செய்த	கடல்	கடலால்சூழப்பட்ட
தமிழ்மாலை	இத்தமிழ்த்தொடையை	வையகம்	பூமியை
வல்லார்க்கு	அப்யஸிக்கவல்லவர்களுக்கு	மதிக்குடை	சந்த்ரனையொத்தவெண்கொற்றக்குடைநிழலின்கீழே
மால்	மஹத்தான	மன்னவராய்	ராஜாக்களாய்
வினை	கர்மங்கள்	ஆண்டு	அரசாண்டு (பின்பு)
உடனே	அப்போதே	அடி	அவன்திருவடிகளை
விடும்	விட்டொழிப்போம்;	கூடுவர்	கிட்டப்பெறுவர்கள்.
வேண்டிடில்	வேணுமாகில்		

வ்யா.—பத்தாம்பாட்டு. (நெடுமாலித்யாதி) ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரன்வந்து நித்யவாஸம்பண்ணுகிற திருநீர்மலைமேலே, நித்யமான புகழையுடையருமாய், திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநராயிருப்பாருமாய், யுத்தத்திலே மத்தகஜத்தை நடத்தவல்லருமான ஆழ்வார், ஒலியுடைத்தாம்படி செய்த தமிழ்த்தொடைவல்லார்க்கு. (உடனே) ஆஶ்ரயணகாலத்திலே † கர்மங்களடைய விட்டோடிப்போம். அதுக்குமேலே † ப்ராப்தியும் வேண்டியிருக்கில் அதுவுமவர்க்கு ஸுலபமாம். †அன்றிக்கே, ஐஹிகமான ஸம்பத்து வேண்டியிருப்பர்களாகில், விளங்கா நிற்பதாய் த்வநியை யுடைத்தாய், வளைந்திருந்துள்ள கடல் சூழ்ந்த பூமிக் கெல்லாம் தாங்களே நிர்வாஹகராய், சந்த்ரனைப்போலே யிருக்கிற வெண்கொற்றக்குடைக்கீழே யிருந்து ஐஶ்வர்யத்தை அநுபவித்துப் பின்னையும் திருவடிகளிலே கூடப்பெறுவர். ... ... (ω)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (நெடுமாலவனித்யாதி). "மால்வினை" மாலென்று-பெருமையாய், அதினர்த்தம், (கர்மங்களடைய) என்றது. (ப்ராப்தியும்) தேசவிசேஷப்ராப்தியும். "அன்றி" என்றவநந்தரம், "வேண்டிடில்" என்றத்தை அநுஷங்கித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார், (அன்றிக்கேயித்யாதி). அதிகார்யாநுகுணமாக ஸகல பலப்ரதமென்று கருத்து. ... (கo)

ஜீயர் திருவடிகளே சரணம்

இரண்டாம்பத்தில் நாலாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி - ௨ - பத்து - ரு - திருமொழி - பாராயது ப்ரவேசம்.

வ்யா.—ஆஶ்ரித விரோதி நிரஸநஶீலனாய், † ஆஶ்ரிதவத்ஸலனாய், § ஆஶ்ரித ஸௌலப்யனாய், ஸ்வப்ராப்திக்கு † உபாயமும் தானேயாயிருக்கிற ஸர்வேஶ்வரனைத் திருக்கடல் மல்லையிலே காணகப்படக் காணப் பெற்றேன், † அவனரியனென்று கைவாங்காதே அவனையொழிந்த தடங்கலும் படுகுழி, அவற்றில்புக்கு ஆகர்த்தப்பட்டுப் போகாதே அவனை ஆஶ்ரயித்து உஜ்ஜீவித்துப் போகப்பாருங்கோளென்கிறார்.

அரு.—பாராயது ப்ரவேசம் - திருநீர்மலையிலே திருவுள்ளமானபடி பேசி யநுபவித்துக்கொண்டு, "பேசுமளவன்றிது" என்று ப்ரஸ்துதமான பரோப தேசத்திலே, "அணிமாமலர் நச்சி - நாய் - நீர்மொடு - நினைவார்க்கருள் செய்யுமவன்" என்று உபதேசித்தாராயிருந்தார்; இப்படி பூவிடக்கோவிருரிடத்தில் அருள்செய்த விடமெங்கேயென்று விசாரியா, ஸ்ரீபுண்டரீகர் கையில் பூவிடுவித்துக்கொண்டு திருக்கடல் மல்லையிலே, இன்னுமிங்ஙன் போல்வார் கிடைக்குமோவென்னும் நோயாசையாலே தலைக்கிடைகிடக்கிற கிடையழகை நான் கண்டுகொண்டேன், நீங்களும் காணவாருங்கோளென்றழைக்கிறுரென்று ஸங்கதி கண்டுகொள்வது. இத்திருமொழியில் பலித்த ப்ரமேயோபந்யாஸம், (ஆஶ்ரிதேத்யாதி). (௧) "தவநெறிக்கோர் பெருநெறியை" என்றதைப்பற்ற, (உபாயமும் தானேயாய்) என்றது. (௨) "பூண்டவத்தம்" என்கிறபாட்டைக்கடாக்ஷித் தருளிச்செய்கிறார், (அவனரியனித்யாதி). (௩) "எந்தையென் வணங்கப்படுவானை" என்றதாலே - ஸௌஶீல்யம் தோற்றுகிறதிறே.

மூ.—பாராயதுண்டுமிழ்ந்தபவளத் தூணைப்
படுகடலிலமுதத்தைப் பரிவாய்கீண்ட
சீரானையெம்மானைத் தொண்டர்தங்கள்
சிந்தையுள்ளேமுளைத்தெழுந்த தீங்கரும்பினைப்
போரானைக்கொம்பொசித்த போரேற்றினைப்
புணர்மருதமிறநடந்த பொற்குன்றினைக்
காரானையிடர்கடிந்த கற்பகத்தைக்
கண்டதுநான்கடல்மல்லைத் தலசயனத்தே. (௧)

§ (கன்று மேய்த்து விளையாட வல்லானை, கருமுகிலே,) என்றதைப் பற்ற (ஆஶ்ரித ஸௌலப்யனாய்) என்றது. (௧) ௨-௫-௧. (௨) ௨-௫-௨.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பார்ஆயது	பூமியையெல்லாம் (ப்ரளயகாலத்தில்)	ஆனை	குவலயாபீடமென்னும்யானையின்
உண்டு	அமுதுசெய்து [ண	கொம்புஒசித்த	கொம்பை முறித்த
உமிழ்ந்த	புறப்படவிட்டருளி	போர்ஏற்றினை	யுத்தத்தில்ஸிம்ஹம்போலேயிருக்குமவனுய் [ன்ற
பவளம்	பவளம்போலேஎல்லார்க்கும்ஸ்ப்ருஹணீ	புணர்	ஒன்றுய்ப்பொருந்திநி
தூணை	தாரகனுமாய், [யனும்	மருதம்	இரண்டுமருதமரங்க
படு	முத்துமுதலியனஉண்	இற	முறிந்துவிழும்படி [ள்
கடலில்	கடலிலே [டாகிற	நடந்த	நடுவேபோன
அமுதத்தை	அம்ருதம்போலேபோக்யனுய்க்கொண்டு கண்வளர்ந்தருளுமவனுய்,	பொன்குன்றினை	பொன்மலை போலே அழகியானுய்
		கார்	பெரிய
பரி	கேசியென்னும் குதி	ஆனை	ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய
வாய்	வாயை [ரையின்		
கீண்ட	கிழித்த	இடர்	ஆபத்தை
சீரான்	வீரஸ்ரீயையுடையனுய்,(அச்செயலாலே)	கடிந்த	போக்கின
எம்மானை	எனக்குஸ்வாமியாய்,	கற்பகத்தை	கற்பகம்போலே வேண்டிற்றுத் தரக்கடவ பரமோதாரனுனவனை
தொண்டர்தங்கள்	தன்னையாஸ்ரயித்தவர்களுடைய		
சிந்தையுள்ளே	ஹ்ருதயங்களிலே	தலசயனம்	ஸ்த்தலசயநமான
முளைத்து	உண்டாய்	கடல்மல்லை	திருக்கடல்மல்லையிலே [ன்.
எழுந்த	வளருகிற		
தீம்	போக்யமான [யனுய்,	நான்கண்டது	நான் காணப்பெற்றே
கரும்பினை	கரும்புபோலேயினி		
போர்	யுத்தோந்முகமான		

வ்யா.—முதற்பாட்டு. (பாராயது) பாரென்று பேர்பெற்றதெல்லாம். பூமி யென்று பேர்பெற்ற தெல்லாவற்றையும் ப்ரளயத்திலே எடுத்து வயிற்றிலே வைத்துப், பின்னை உள்ளேகிடந்து தளராதபடி வெளிநாடுகாணவுமிழ்ந்து. இப்படி ஸர்வவிதரக்ஷணம் பண்ணுமவன் ஞுறென்னில்; (பவளத்தூணை) ஸர்வர்க்கும் ஸ்ப்ருஹணீயமாய் தானே †தாரகனுமா யிருக்குமாயிற்று. (படுகடலி லமுதத்தை) ரத்நாதிகள் படுகிற கடலென்னுதல்; ஆழத்தையுடைத்தான கடலென்னுதல்; "மடுப்பட்டது" என்றுற்போலே ஆழத்தைச்சொல்லக்கடவதிறே. இவ்விசேஷணத்தின் கருத்தென்னென்னில்; நல்லதெல்லாம் படுகிறவிடத்திலே போக்யனுனவனு மென்கை, ஆழமானபோது † பெறுதற்கரிய வஸ்துவென்கை. (பரிவாய்கீண்ட) ப்ரபல ப்ரதிபந்தகங்களைக் கேசிவாயைக் கிழித்தாற்போலே அநாயாஸேந

போக்கவல்லவனை. பரியுண்டு - குதிரை, அதின் வாயைக் கிழித்த வீரஸ்ரீயையுடையவனை. (எம்மானை) †ஸப்ரமாதமான செயலையிறே செய்தது. அதின்கையிலே யகப்பட்டுத் தன்னைத் தப்புவித்த செயலாலே என்னை அநந்யார்ஹனுக்கினவனை. (தொண்டரித்யாதி) † பரிணமாதிகளில்லை யென்ன வொண்ணுது இவ்வஸ்துவுக்கு; † நித்யவஸ்துவென்னவொண்ணுது; (க)†"ஸந்தமேநம்-ஸந்தமேநம்'' என்னுமாபோலே யாயிற்று. † வஸ்து நித்யமாயிருக்கச் செய்தேயிறே, (க) "அஸந்நேவ - அஸந்நேவ'' என்கிறதும், (க) "ஸந்தமேநம்-ஸந்தமேநம்'' என்கிறதும் - அவனை யறியாதவன்று தானிலனாய் அறிந்தவன்று உளனாயிருக்குமாபோலே, அவனும், தன்னை இவனறிந்தவன்று தானுளனாய், அறியாதவன்று இலனாயிருக்குமாயிற்று. †இவனவனுக்கு இத்தனை ஸ்ப்ருஹணீயனுமாயிற்றிலனாகில், இவன் சேஷபூதனாய் அவன் சேஷியாய், இவனைத்தலைக்கு அதிசயத்தைப்பண்ண அவனுகக்கக்கடவனாய், இது பின்னை இவனுக்குப் புருஷார்த்தமாகிற இந்த ப்ராப்திகளெல்லாம் குலையுமிறே. †உத்பத்தி (வ்ருத்தி) வ்ருத்திகளெல்லா §மங்கே யாயிற்று. †அதுக்கடி யென்னென்னில்; (கரும்பினை) †கட்டிஸ்த்தாநத்திலே "கரும்பு" என்னில் மிகுமிறே. †பெருக்க வினிதாயிருக்கை. (தொண்டர்) †நிலமிதியாலேயு மொருநன்மையுண்டிறே. (போரானை) யுத்தோந்முகமா யிருந்தாள்ள குவலயாபீடத்தினுடைய கொம்பை அநாயாஸேந முறித்துப்பொகட்டு யுத்தத்திலே ஸிம்ஹம்போலேயிருக்கிறவனை. "ஏறு" என்றால் - ஸிம்ஹத்தையும் ருஷபத்தையும்காட்டுமிறே. இங்கு கீழே ஆனையைச் சொல்லுகையாலே ஸிம்ஹத்தைச் சொல்லிற்றாகவமையுமிறே. யுத்தத்தில் சௌர்ய மிருக்கிறபடி. (புணரித்யாதி) பருவம் நிரம்பின பின்பு செய்தத்தையோ சொல்லுவது; இரண்டு மொன்றே யென்னலாம்படி தன்னிலே பொருந்தி நின்ற மருது முறிந்து விழும்படிக் கிடாக நடைகற்றானாயிற்று. நலிவதாகக் கோலிவந்த அபிஸந்தியும் குலையாதேயிருக்கச்செய்தே நடுவே போனாயிற்று. (பொற்குன்றினை) †அந்த ஸிம்ஹம் வர்த்திக்கும்மேரு வென்று சொல்லலாம்படி யிருக்கை. †தன்னிலேபொருந்தி நிற்கும் மருதுகள் விழுகிறபோதை த்வநியைக் கேட்டுப்புரிந்து பார்த்தபோதிருந்தபடி சொல்லுகிறது. (க) "ததஃகடகடாசப்தஸமாகர்ணந தத் - ததஃகடகடாசப்தஸமாகர்ணந தத்

§ (அங்கேயாயிற்று) என்றது - சிந்தையுள்ளே என்றபடி.

(க) தை - ஆந - ௬. (உ) வி - பு - ௫ - ௬ - ௧௮.

பர:". (காரித்யாதி) ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆபந்நிவாரணத்தைப்பண்ணி அவனுக்குத் தன்னை முற்றாட்டாக்கிக்கொண்டு நின்றவனை. "கார்" என்று பெருமை. (கண்டதித்யாதி) † இடர் பட்டு †வரவும், பிற்பாடாகை யன்றிக்கே இவனிடர்பட்ட மடுவின் கரையிலே வந்து உதவினாற்போலே, நான் நோவுபடுகிற ஸம்ஸாரத்திலே ஸமகாலத்தில் காணப்பெற்றேனென்கிறார். ... ... (க)

அ௩ —முதற்பாட்டு. (பாராயதித்யாதி) தலசயனத்துறைவாருடைய போக்யதையை யநுஸந்திக்கவே, வடதளசாயி, க்ஷீராப்திசாயி, இவர்களின் போக்யதையும் நெஞ்சிற்பட்டு, அங்குநின்றும் விரோதிகள் மண்ணுண்ணும்படி க்ருஷ்ணனாய் வந்து நடமாடி ஆனையின்கையில் பூவிடுவித்துக்கொண்டாற்போலே, இங்கேவந்து ஸ்ரீபுண்டரீகர் பூவிட நெஞ்சுக்கினியனாய்க் கண்வளர்ந்தவனை நான் காணப்பெற்றேனென்கிறாரென்று அவதாரிகை.

"தூண்" என்ற பதவாஸனை, (தாரகனுமாய்) என்றது. (பெறுதற்கரிய) என்றத்தாலே, க்ஷீராப்திநாதனைக் காண்கைக்காகக் கடலை யிறைக்கத்துடங்கின ஸ்ரீபுண்டரீகர்க்கு அபேக்ஷித்தபோதே போகக்கூடாமை ஸூசிதமாயிற்று; அப்படி பெறுதற்கரியவஸ்து கிடீர் இங்கேகண்காணச் சாய்ந்தருளிற்றென்று கருத்து. "பரிவாய்கீண்டசீரானை" என்றதுக்குத் தாத்பர்யாந்தரத்தைக்காட்டாநின்றுகொண்டு, "எம்மானை" என்றதுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார், (ஸப்ரமாதேத்யாதி). "எழுந்த" என்றத்தைப்பற்ற வருளிச்செய்கிறார், (பரிணாமேத்யாதி). "முளைத்து" என்றபதத்திலே நோக்காக வருளிச்செய்கிறார், (நித்யேத்யாதி). (க) "ஸவிகாராய ஶுத்தாய நித்யாய - அவிகாராய நித்யாய" என்னப்படுகிற வஸ்துவுக்கு இங்ஙன் சொல்லப்போமோவென்ன; அருளிச்செய்கிறார், (ஸத்தமித்யாதி). விவரிக்கிறார், (வஸ்துவித்யாதி). ஸர்வேஸ்வரன் சேஷியாகையாலே தத்ஜ்ஞாநாஜ்ஞாநங்கள் சேதநனுடைய ஸத்பாவாஸத்பாவங்களுக்குறுப்பாம்படி அவன் ஸ்ப்ருஹணீயனாகிறான், சேஷபூதனுக்கு ஸ்ப்ருஹாவிஷயத்வமித்தனை சொல்லக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (இவனவனுக்கித்யாதி). "முளைத்தெழுந்த" என்றதுக்கு சப்தார்த்தம் (உத்பத்தியித்யாதி). (அங்கே) தொண்டர்ஹ்ருதயத்திலே. (அதுக்கு) உத்பத்திவ்ருத்திகளுண்டாகைக்கு. (கரும்பினை) என்றவநந்தரம், கரும்பென்கிற ஸமாதியென்றுசேஷம். கட்டியை, தேனை, என்றாற்போலே சொல்லாதே "கரும்பு" என்றத்தாலே போக்யதாதிசயம் தோற்றுமோவென்ன வருளிச்செய்கிறார் (கட்டியித்யாதி). "தீங்கரும்பு" என்று விசேஷிக்கையாலே, கட்டி ஸ்த்தாநாபிஷிக்தமானதென்றுகருத்து. மிகும்

(க) வி - பு - க - உ - கூ.

படி யென்னென்ன (பெருக்கவித்யாதி). இத்தால்கட்டியேயாயிருக்கும் கரும்புண்டாகில் அதுஉத்தரோத்தரம் ரஸாதிக்யத்தோடே யிருக்குமென்றதாயிற்று. (நிலம்) தொண்டர்சிந்தை. "போரேற்றினை" என்றத்தாலே ஆத்மகுணமான சௌர்யகுணயோகம் சொல்லுகையாலே, அந்த குணவிசிஷ்டன் திருமேனியைப் பொற்குன்றின் ஸ்த்தாநத்திலேயாக்கி யருளிச்செய்கிறார் (அந்த ஸிம்ஹமித்யாதி). "குன்று" என்கையாலே - நிஶ்சலதையும் தோற்றுகிறதென்றதுக்கு ப்ரஸக்தி பூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னிலேயித்யாதி). (க)"వ్యగ్రాయామథతస్యాంస కర్షమాణ ఉలూఖలమ్। యమళార్జునయోర్మధ్యే తిర్యగ్గత ములూఖలమ్। భగ్నావుత్తుఙ్గ శాఖాగ్రౌ తేన తౌ యమళార్జునౌ। తతః కటకటాశబ్ద సమాకర్ణనతత్పరః। ఆజగామ వ్రజజనో దదర్శచ మహాద్రుమౌ। భగ్నస్కన్ధౌ నిపతితౌ భగ్నశాఖౌ మహీతలే। నవోద్గతస్వదన్తాంశుస్మితహాసంచ బాలకమ్। வ்யக்ராயாமததஸ்யாம்ஸ கர்ஷமாண உலூகலம் | யமளார்ஜுநயோர்மத்யே திர்யக்கதமுலூகலம் | பக்நாவுத்துங்கசாகாக்ரௌ தேநதௌயமளார்ஜுநௌ | ததஃகடகடாசப்த ஸமாகர்ணநதத்பரஃ! ஆஜகாம வ்ரஜஜநோ தகர்சச மஹாத்ருமௌ | பக்நஸ்கந்தௌ நிபதிதௌ பக்நசாகௌமஹீதலே | நவோத்கத ஸ்வதந்தாம்சு ஸ்மிதஹாஸஞ்ச பாலகம்" என்று சொல்லுகிற இவ்வசநங்களில் "కటకటాశబ్దసమాకర్ణనతత్పరః - கடகடாசப்த ஸமாகர்ணநதத்பரஃ" என்றது வ்ரஜஜநத்துக்கு விசேஷணமாயிருந்ததேயாகிலும் கிட்டவிருந்த க்ருஷ்ணனுக்கு மிதொக்குமென்று திருவுள்ளம். அன்றிக்கே, "ஸஃ" உலூகலம் - கர்ஷமாணஃ - ததஃகடகடாசப்தஸமாகர்ணந தத்பரஸ்ஸந் - மஹாத்ருமௌ - ததர்ச - வ்ரஜஜநஶ்சதாத்ருஶஃ ஆஜகாமததர்சச." இத்யந்வயோவிவக்ஷிதஃ. (இடர்பட்டு) ஆஶ்ரிதரிடர்பட்டென்றபடி. (வரவும்) தானிருக்குமிடத்திலே வரவு மென்றபடி. (வரவும்) என்றவநந்தரம், ரக்ஷணம் என்றுசேஷம். (இவன்) ஸ்ரீகஜேந்த்ராழ்வான் ... ... (க)

மூ.—பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப்
பொய்ந்நூலைமெய்ந் நூலென்றென்றுமோதி
மாண்டவத்தம் போகாதே வம்மினெந்தை
யென்வணங்கப் படுவானைக் கணங்களேத்தும்
நீண்டவத்தைக் கருமுகிலை யெம்மான்றன்னை
நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார்சோலைக்
காண்டவத்தைக் கனலெரிவாய் பெய்வித்தானைக்
கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே. (உ)

(க) வி - பு - ரு - சு - கஅ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
அவத்தம்	வ்யர்த்தமானசிலகார்யங்களை	நீண்டஅத்தை	அபரிச்சேத்யனான அவ்வஸ்துவாய்
பூண்டு	ஏறிட்டுக்கொண்டு	கருமுகிலை	காளமேகம்போன்ற திருநிறத்தை யுடையனாய்,
பிறர்க்கு	தண்ணியர்க்கு	நின்றவூர்	திருநின்றவூரில்
அடைந்து	(அவர்களைப்)பற்றி	நித்திலத்தை	முத்துத்திரள்போலே குளிர்ந்தவடிவை யுடையனாய்,
தொண்டுபட்டு	அடிமைகள்செய்தும்	தொத்து	பூங்கொத்துக்கள்
பொய்	மித்யையான	ஆர்	மிக்கிருந்துள்ள
நூலை	பாஹ்யசாஸ்த்ரங்களை	சோலை	சோலையையுடைத்தான
ஓதி	கற்று (அவற்றை)	காண்டவத்தை	காண்டவவநத்தை
மெய்நூலென்றும்	மெய்யான அர்த்தங்களென்றுநம்பி	கனல்	ஜ்வலிக்கிற
மாண்டு	முடிந்து	எரி	அக்நியினுடைய
அவத்தம்	வ்யர்த்தமே	வாய்	வாயிலே
போகாதே	போகாமல்	பெய்வித்தானை	ப்ரவேசிப்பித்த
வம்மின்	(உஜ்ஜீவிக்கும்படி) வாருங்கள்;	எம்மான்றன்னை	ஸர்வேஸ்வரனை
எந்தை	எனக்கு ஜநகனாய்,		
என்	என்போல்வார்க்கு		
வணங்கப்படுவானை	ஆஸ்ரயிக்கலாம்படியெளியனாய்,		
கணங்கள்	அறிவுடையாரின் திரள்களாலே		
ஏத்தும்	ஏத்தப்படுமவனாய்,		

கடல்மல்லைத்தலசயநத்து நான்கண்டது. (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (பூண்டவத்தம்) (அவத்தம் பூண்டு) வ்யர்த்தமான கார்யங்களை ஏறிட்டுக்கொண்டு. † ஸாத்விகரோட்டை ஸஹவாஸமும் வைதிக புருஷார்த்தங்களைப் பெறவேணு மென்னு மதுவும் தவிர்ந்து வ்யர்த்தமானவற்றை யேறிட்டுக்கொண்டு. (பிறர்க்கடைந்துதொண்டுபட்டு) †அப்ராப்த விஷயங்களிலே ப்ராப்த விஷயத்திற்போலே யிருக்கத்தாழ்வு செய்து. அஸேவ்யரை ஸேவித்து. (பொய்ந் நூலையித்யாதி) விப்ரலம்பகரராயும் ப்ராந்தராயுமுள்ளவர்கள் தந்தாமுடைய புத்தியாலே வரைந்த சாஸ்த்ரங்களை வைதிக சாஸ்த்ரம்போலே யிருக்க †ஆதரித்தப்யஸித்து, பின்னை அவற்றினுடைய ஸ்வரூபமிருந்தபடியை ஆராய்ந்து மீளுகைக்கு அவகாசமில்லாதபடி முடிந்து. (அவத்தம் போகாதே) இஹலோக பரலோகங்களிரண்டிலும் வ்யர்த்தமே போகாதே (வம்மின்) கெடுவிகாள்! கடுக வந்து நில்லுங்கோள். (எந்தையென் வணங்கப் படுவானை) எனக்கு ஜநகனாய் எனக்குச் சென்று ஆஸ்ரயிக்கலாம்படி சீலவானாயுமுள்ளவனை. (கணங்களித்யாதி) அறிவுடையார் திரள நின்றேத்து

கிற அபரிச்சேத்யமான அந்தவஸ்துவை. †அன்றிக்கே, (நீண்டவத்தக் கருமுகிலை) என்றாய், நீண்ட ஹஸ்தத்தையுடைய வென்னுதல். (எம்மான்றன்னை) திருவடிதோற்ற துறையிலே யாயிற்று இவரும் தோற்றது. (க) "ஸ்த்ரீபுஂஸயோர் மூர்த்தம் நவிபூஷிதா:". (நின்றவூரித்யாதி) திருநின்றவூரிலே நிற்கிற ஶ்ரமஹரமான † முத்துத்திரள் போலே யிருக்கிறவனை. (தொத்தாரித்யாதி) † தொத்தார்ந்திருந்துள்ள சோலையை யுடைத்தான காண்டவவநத்தைக் † கனன்று கொண்டுவருகிற அக்நியின்வாயிலே ப்ரவேசிப்பித்தவனை. அர்ஜுநனும் க்ருஷ்ணனுமாய்ப் பூம்பந்தேறிட்டு விளையாடாநிற்க, அக்நிபகவான் "பசித்தேன்" என்ன, பின்னை அக்காட்டை அவனுக்கு விருந்தாக விட்டுக் கூடநின்றுபுஜிப்பித்தானிறே. இந்த்ரன் கோபத்தாலே வர்ஷிப்பிக்க, அர்ஜுநன் சரக்கூடமாகக்கட்ட மேலே வழிந்து போயிற்றிறே.(கண்டது) †காட்டுத்தீயிலே வர்ஷித்தாற்போலே, நோவுபடுகிற ஸம்ஸாரத்திலே காணப்பெற்றேன். ... ... (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (பூண்டவத்த மித்யாதி). கீழ்ப்பாட்டால், எம்பெருமானுடைய நிரதிசயபோக்யதையையும் விரோதி நிரஸநசீலதையையும் சொல்லாநிற்கச்செய்தே, ஸம்ஸாரிகள் அப்ராப்த விஷயங்களிலே தொண்டுபட்டுப் போகாநின்றார்கள், ஆகிலும் விடமாட்டாதகாருண்யத்தாலே யழைக்கிறார் முக்தகண்டமாகவென்று ஸங்கதிகண்டுகொள்வது.

(விவரணம்). (ஸாத்விகரோடித்யாதி). "பிறர்க்குத்தொண்டுபட்டு, பிறரை அடைந்து" என்றநவயித்துத்தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அப்ராப்தேத்யாதி). "என்றென்று" என்கிற வீப்ஸையாலே பலிதம் (ஆதரித்து) என்றது. பாடாந்தரத்தை த்யோதநம்பண்ணுகிறார் (அன்றிக்கேயித்யாதி). "நித்திலம்" நிஸ்தலமாய், (முத்து) என்றது. (கொத்து) - பூங்கொத்து. (கனன்று) ஜ்வலித்துக்கொண்டு. முன்புகாட்டுத்தீயை விளைத்தவன்றானே இப்போது காட்டுத்தீயை யணைக்கைக்குக் கருமுகிலாய்க்கிடக்கிறான், நான் கண்டேன் என்னும் ப்ரக்ருதோபயோகத்தை ஸூசிப்பிக்கிறார் (காட்டுத்தீயித்யாதி). ()

மூ.—உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்திவேறா
யுலகுய்ய நின்றானை யன்றுபேய்ச்சி
விடம்பருகுவித்தகனைக் கன்றுமேய்த்து
விளையாட வல்லானை வரைமீகானில்

(க) ரா - கி - ௩ - ௪ரு.

தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக்கோயில்
தவநெறிக்கோர் பெருநெறியை வையங்காக்கும்
கடும்பரிமேல் கற்கியைநான் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. (௩)

பதம்	உரை.	பதம்.	உரை.
உடம்பு	சரீரத்தினுடைய	பருகு	தண்ணீர் அமுதுசெய்யுமவனாய்,
உருவில்	ப்ரகாரத்திலே	கருமுகிலை	காளமேகஸத்ருசனாய்,
மூன்று	மூன்றும் [க	தஞ்சைக்கோயில்	தஞ்சைமாமணிக்கோயிலில் எழுந்தருளிநிற்குமவனாய்,
உலகுஉய்ய	லோகரக்ஷணார்த்தமா		
ஒன்றாய்	ஒருபடியாய்		
மூர்த்தி	ஸ்வரூபம்		
வேறாய்	வேறுபட்டு		
நின்றானை	நிற்குமவனாய்,		
அன்று	க்ருஷ்ணாவதாரத்தில்	தவநெறிக்கு	(தன்னைக் கிட்டுகைக்குச்செய்யும்) உபாயங்களுக்குள்
பேய்ச்சி	பூதனையுடைய		
விடம்	விஷங்கலந்தபாலை		
பருகு	குடித்த	ஓர்பெருநெறியை	ஒருபெரிதான நெறியாயிருப்பவனுமாய்,
வித்தகனை	விஸ்மயநீயனாய்,		
கன்று	கன்றுகளை	வையம்	ஸகலலோகங்களையும்
மேய்த்து	மேய்த்து	காக்கும்	ரக்ஷிக்கைக்காக
விளையாடவல்லானை	விளையாடுகைக்காகவுந்தவதரித்தவனாய்,	கடு	மிக்கவேகத்தையுடைய
வரைமீ	மலைமேலுள்ள	பரிமேல்	குதிரையின்மேலே
கானில்	காடுகளிலே	கற்கியை	கல்க்யவதாரம் செய்தருளினவனை,
தடம்	தடாகங்களில்		
	கன்றுகள் இறங்கிநீர் குடிக்கும்படி தான்முன்னே யிறங்கி கையை முதுகி வேகட்டிக் கொண்டு)	கடி	சாவலையுடைய
		பொழில்	பொழிலாலே
		சூழ்	சூழப்பட்ட
		கடல்மல்லைத்தலசயனத்து நான் கண்டுகொண்டேன். (௩)	

வ்யா.—மூன்றாம்பாட்டு. (உடம்புருவில் மூன்றொன்றாய்) உடம்பினுடைய படியில் - உடம்பினுடைய ப்ரகாரத்தில், மூன்றுமொன்றாம்படியை யுடைத்தாய். †ஸ்வேந ரூபேண நின்றும் ப்ரஹ்மாதிகளுக்கு அந்தராத்மாவாய்நின்றும் இப்படிகளால் இதுவே சரீரமாமிடத்தில் †ஒருபடிப்பட்டிருக்கும்.†(மூர்த்திவேறாய்)† ஆனால் மூன்றுமொக்குமிறே; (க)[𑌯𑍇𑌷𑌾𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌮𑌨𑌃 - யேஷாம் ஸாம்யே ஸ்த்தி

(க)

தம்மநஃ] முன்பே ஐக்யம் சொல்லிவைத்துப் பின்னை ஸாம்யம் சொன்னானிறே. † இப்படி நிற்கிறதுதா னெதுக்காக வென்னில்; ஸ்ருஷ்டி ஸ்த்திதி ஸம்ஹாரங்களாலே ஜகத்ரக்ஷணத்துக்காக வாயிற்று இப்படி நிற்கிறது. (அன்றுபேய்ச்சிவிடம் பருகுவித்தகனை) ஸ்ருஷ்டமான ஜகத்திலே க்ருஷ்ணனாய் வந்தவதரித்துப் பூதனையுடைய விஷத்தைப் பருகின விஸ்மயநீயனானவனை. இங்கு விஸ்மய மென்னென்றால்; முலைவழியே ப்ராணனும் மாளும்படியாக விஷத்தைப் பருகினபடியைச் சொல்லுதல்; அன்றிக்கே, அவள் தாய்வடிவுகொண்டு வரச்செய்தேயும் முலைப்பால் விசேஷத்தாலே வேற்று முலை யென்றறிந்து புஜித்தபடியைச் சொல்லுதல். (கன்றித்யாதி) (க) †" ஸர்வஸ்யஜகதஃபாலௌ வத்ஸபாலௌபபூவதுஃ ஸர்வஸ்யஜகதஃபாலௌ வத்ஸபாலௌ பபூவதுஃ". (வரையித்யாதி) இவ்விடத்துக்கு பட்டருளிச்செய்தா ரென்று ப்ரஸித்தமிறே. †இவ்விடத்துக்கு ஜீயரருளிச் செய்யாநிற்க, பிள்ளை அழகிய மணவாளப்பெருமாளரையர் ஸ்மரிப்பித்தருளின வார்த்தையாயிற்று;-†"மலைமேல் †காட்டிலே யுண்டான தடாகங்களிலே கன்றுகள் பின்னேபோயிளைத்துவந்து தண்ணீர் குடிக்கப் புக்கால் இளங்கன்றுகளாகையாலே நீரிலே முன்னே யிறங்கிக்குடிக்க பயப்படுமே, அத்தை நீரூட்டுகைக்குத், தான் பின்னே கையைக்கட்டிக் கவிழ்ந்து நின்று தண்ணீரமுதுசெய்யுமாயிற்று". †ஜாதிப்ரயுக்தமான ஸ்வபாவத்தைச் சொன்னபடி. (தஞ்சையித்யாதி) ஜகத்தை யடைய நோக்குகைக்காகப் பெரிய ஏற்றத்தை யுடைய தஞ்சைமாமணிக் கோயிலிலே நிற்கிற. (தவநெறிக்கோர் பெருநெறியை) ஸ்வப்ராப்த்யுபாயங்களில் பெருநெறியா யுள்ளவனை. † வழிதப்பி (௨) * சிறுகானெறியே போனாலும்தன்பக்கலிலே கூட ப்ரவேசிக்கும்படி யிருக்கை.†வ்யபிசரியாத ஸாதநமென்றபடி.(வையமித்யாதி)†ஜகத்தை யடைய நோக்குகைக்காகப்,பெரிய வேகத்தை யுடைய குதிரையின் மேலேயேறி அக்குதிரைக்காலிலே ப்ரதிபக்ஷத்தைத் துகைத்துப் பொகடும் வடிவையுடையவனை. பரி - செலவு; கடிதான செலவை யுடைத்தாய் மேலானபரியை. (கடியித்யாதி) † ஜகத்தையடைய ரக்ஷிக்கக்கடவனா யிருக்கிறவனுடைய ரக்ஷணத்துக்கு நானிப்போது விஷயபூதனானே னென்கிறார். ... (௩)

(க) வி - பு - ௫ - ௬ - ௩௫. (௨) பெரி - திரு - ௪ - ௨ - அ.

அரு.—மூன்றாம்பாட்டு. (உடம்பித்யாதி). கீழ்ப்பாட்டிலே "வம்மின்" என்று ஸாமாந்யேந அழையாநிற்கச்செய்தேயும், அவர்கள் பரதத்வ நிர்ணயம் பிறவாதார் சிலரும், விரோதிக்கஞ்சிக்கிடப்பாரும், பசுப்ராயரான எங்களை ரக்ஷிப்பனோ! என்றிருப்பாரும், உபாயநிர்ணயம் பிறவாதாரும், கலிகால ஆஷிதருமா யிருப்பாருமாகையாலே பேசாதிருந்தார்களென்று, அவனுடைய படிகளை அவர்களறிய வருளிச்செய்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

விவரணம் (ஸ்வேச்சேத்யாதி). (ஒருபடிப்பட்டிருக்கும்) என்றது - தன்னுடைய திருமேனி தனக்கு விதேயமானாற்போலே, ப்ரஹ்மருத்ரர்களும் தனக்கு விதேயராயிருப்பார்களென்கை. இத்தால், (க) 'బ్రహ్మవిష్ణుశివాత్మికాం సంజ్ఞాం జనార్దనః ఏక ఏవ యాతి - ப்ரஹ்மவிஷ்ணுசிவாத்மிகாம் ஸம்ஜ்ஞாம் ஜநார்த்தந: ஏகஏவ யாதி" என்னும்படியே மூன்றுவடிவுமவனுக்கே சரீரமாகையாலே, ஐக்யம்சொல்லிற்றாயிற்று. ஆனால் த்ரிமூர்த்யைக்யவாதம் ப்ரஸங்கியாதோவென்ன; (மூர்த்திவேறாய்) என்று மூலத்துக்கவதாரிகை யிட்டுக்கொள்வது. மூர்த்திசப்தம், ஸ்வரூபபரம், ஆக ப்ரஹ்மருத்ரர்களுடைய ஜீவஸ்வரூபங்களும், எம்பெருமானுடைய திவ்யாத்மஸ்வரூபமும் வெவ்வேறாயிருக்கச்செய்தேயும் அவனுக்கிவர்கள் சரீரபூதரென்றதாயிற்று. ஸ்வரூபங்கள் வெவ்வேறாகில் சரீராத்மபாவம் சொல்லுவானென், ஸாம்யம்சொல்லலாமிறேயென்று த்ரிமூர்த்தி ஸாம்யவாதியினுடைய வார்த்தையைக் கிளப்புகிறார் (ஆனாலித்யாதி). த்ருஷ்டாந்த கதநமுகேந பரிஹரிக்கிறார் (யேஷாமித்யாதி). ஐக்யத்தையும் ஸாம்யத்தையும் ருஷிசொன்னால், இரண்டும் முக்யமாகக்கிடைக்கும்படி ஸ்வரூபபேதமும் சரீரசரீரி பாவத்தால் ஐக்யமும்கொள்ள வேணுமென்று கருத்து. ஆக, ஸாம்யம்சொன்னத்தாலே ஸ்வரூபைக்யவாதமும், ஐக்யம்சொல்லுகையாலே கேவலஸாம்யவாதமும், அர்த்தாத் அதிக்ராந்தவாதமும் நிரஸ்தமாயிற்று. ஆனால் ஸாம்யந்தோன்ற நிற்கைக்கு ப்ரயோஜநமேது? என்று ஜிஜ்ஞாஸு ப்ரஶ்நாநுவாத பூர்வகம் ப்ரயோஜநந்தன்னையருளிச்செய்கிறார் (இப்படியித்யாதி). கார்யத்வாரா வந்த ஸாம்யமித்தனை போக்கி ஸ்வரூபஸாம்யமில்லையென்று கருத்து. இத்தால் - "உலகுய்யநின்றானை" என்றதுக்குத் தாத்பர்யம்சொல்லிற்றாயிற்று. "உலகுய்யநின்றானை" என்றதைக் கடாக்ஷித்து "கன்று" இத்யாதிக்குத் தாத்பர்யம் (ஸர்வஸ்யேத்யாதி). இத்தால், அகிலஜகத்ரக்ஷணார்த்தம் ப்ராஹ்மாதிகள்நடுவே ஸஜாதீயனானவன் கன்றுமேய்க்க இடையனாய் வந்தானென்றதாயிற்று. கன்றுமேய்க்கையோடு ஸ்ருஷ்ட்யாதிகளோடு வாசியற இவனுக்கு விளையாட்டென்று திருவுள்ளம். ப்ரஸித்திதா னெங்ஙனேயென்ன; (இவ்விடத்துக்கு ஜீயரித்யாதி). பட்டர் ஸ்ரீஸூக்தியை நஞ்சீயருக்கு அரையர் ஸ்மரிப்பிக்கையாலே, அநேகம் முதலிகளும் கேட்டிருப்பர்களென்று கருத்து. அந்த ஸ்ரீஸூக்திதன்னை

(க) வி - பு - க - உ - சுஅ.

யருளிச்செய்கிறார், (மலைமேலித்யாதி). "கானில்" என்றதினர்த்தம் (காட்டிலே) என்றது. "பருகு" என்றால் கையாலே தானேபருகலாமே, "பின்னே கையைக்கட்டிக்கொண்டு" என்னுமது தோற்றும்படி யென்னென்னில்; "கருமுகிலை" என்றத்தால் - படிந்து வருகைதோற்றும், அத்தாலே இவ்வர்த்தம் ஸூசிதமென்று திருவுள்ளம். இவ்வர்த்தத்தாலே பலித்ததென்னென்ன, (ஜாதியித்யாதி). "பெரு" என்றதுக்கு வாஸனை (வழிதப்பியித்யாதி). (கானெறி) - காட்டுவழி. உபாயாந்தரம். "ஓர்" என்றதுக்கு பாவம் (வ்யபிசரியாதவித்யாதி). (கடுமையை) - வேகத்தையுடைத்தான, பரி-குதிரைமேலே யிருக்கிற, கல்கியென்றும்; கடுமையானநடையையுடைய, மேலான, பரி-குதிரையாயிருக்கிற கல்கியென்றும்; த்விவிதமர்த்த மருளிச்செய்கிறார் (ஜகத்தையித்யாதி வாக்யத்ரயத்தாலே). இனிமேல் செய்தருளுகிற வவதாரமன்றோவது, "கற்கியைநான் கண்டுகொண்டேன்" என்னும்படி யெங்ஙனேயென்ன; (ஜகத்தையடையவித்யாதி). ... ... (௩)

மூ.—பேய்த்தாயைமுலையுண்டபிள்ளைதன்னைப்
பிணைமருப்பில்கருங்களிற்றைப்பிணைமாநோக்கில்
ஆய்த்தாயர்தயிர்வெண்ணெயமர்ந்தகோவை
யந்தணர்தமமுதத்தைக்குரவைமுன்னே
கோத்தானைக்குடமாடுகூத்தன்தன்னைக்
கோகுலங்கள்தளராமல்குன்றமேந்திக்
காத்தானையெம்மானைக்கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ்கடல்மல்லைத்தலசயனத்தே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாய்	தாய்வடிவு கொண்டு	அமர்ந்த	தரித்திருந்த
பேயை	பூதனையுடைய [வந்த	கோவை	நிர்வாஹகனாய்,
முலை	ஸ்தநத்தை	அந்தணர்தம்	ப்ராஹ்மணர்களுக்கு
உண்ட	அமுது செய்தருளின	அமுதத்தை	அம்ருதம்போலே போக்யனாய்,
பிள்ளைதன்னை	பாலனாய், [ணைந்த		
பிணை	ஒன்றோடொன்று பி	முன்னே	முன்பொருகால்
மருப்பில்	கொம்புகளையுடைய	குரவைகோத்தானை	பெண்களோடு கைகோத்துவிளையாடினவனாய், (பின்பு)
கரு	கறுத்த		
களிற்றை	யானையோடொத்தவனாய்	குடம்ஆடு	குடக்கூத்தாடின
மான்பிணை	மான்பேடைபோன்ற	கூத்தன்றன்னை	விலாஸசேஷ்டிதங்களையுடையனாய், (இந்த்ரன் பசிக்கோபத்தாலே வர்ஷிப்பித்தவன்று)
நோக்கில்	விழியையுடைய		
ஆய்த்தாயர்	இடைத்தாயாரான யசோதை யுடைய		
தயிர்	தயிரையும்		
வெண்ணெய்	வெண்ணெயையும் அமுதுசெய்து	கோகுலங்கள்	பசுத்திரள்கள்
		தளராமல்	நோவுபடாதபடி

குன்றம்	சோவர்த்தநமென்னும்மலையை	கடி	பரிமளம்மிக்க
ஏந்தி	தரித்து	பொழில்	சோலையாலே
காத்தானை	ரக்ஷித்தவனாய்,	சூழ்	சூழப்பட்ட
எம்மானை	என்னை அடிமைகொண்டவனான ஸர்வேஶ்வரனை	கடல்மல்லைத் தலசயனத்துக் கண்டுகொண்டேன். (௪)	

வ்யா.—நாலாம்பாட்டு. (பேய்த்தாயைமுலையுண்ட பிள்ளைதன்னை) †பேயானவள் தாய்வடிவுகொண்டுவரத் தாய்பக்கல் பண்ணக்கடவ விருப்பத்தை அவள் பக்கலிலேபண்ணி, அவள் முலையையுண்ட மௌக்த்யத்தை யுடையவனை. (பிணையித்யாதி) பிணைத்த மருப்பையுடைய கருங்களிறுபோலே இனியசேஷ்டிதங்களை யுடையவனை. "பிணைமருப்பு" என்கிறவித்தால் - செருக்காலே மிகைத்துத் திரியும்படியைச்சொல்லுகிறது. (பிணையித்யாதி) மான்பேடைபோலேயிருக்கிற நோக்கையுடைய, ஆய்த்தாயருண்டு - இடைத்தாயர் - யசோதைப்பிராட்டி, அவள் ஸ்பர்சித்த வெண்ணெயையும் தயிரையும் அமுதுசெய்து ஆஶ்ரிதஸ்பர்சமுடைய த்ரவ்யமே தனக்கு தாரகமாக விருந்தசெயலாலே †லோகத்தையடைய எழுதிக்கொண்டவனை. (அந்தணர்தமமுதத்தை) அச்செயலாலே ப்ராஹ்மணஜாதிக்குத் தாரகனானவனை. (குரவையித்யாதி) †சிலர்காணக்கடவ தன்றிக்கேயிருக்கிறவித்தை எல்லார்கண்முகப்பே திருக்குரவை கோத்தவனை. (குடமாடியித்யாதி) † இப்படி சிலர்கண்டு போகையன்றிக்கே கண்டுகொணாதாரும் காணும்படியாகக் காட்டினவனை. பசுத்திரள்களானவை வர்ஷத்திலே நோவுபடாதபடி தோற்றிற்றொரு மலையைப் பிடுங்கி நோக்கினவனை. (எம்மானை) தன்னுடைய ரக்ஷணத்தைக்காட்டி என்னை அநந்யார்ஹனாக எழுதிக்கொண்டவனை.†(கண்டித்யாதி) அவன் ரக்ஷகனென்றறியப்பெற்றேன், எனக்கொருகுறை யுண்டோவென்கிறார். ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு, (பேயித்யாதி). உலகுய்ய ப்ரஹ்மருத்ரர்கள் நடுவே விஷ்ணுவாயிருந்தவனே இடையர்நடுவேயும் கன்றுமேய்க்க க்ருஷ்ணனாய்வந்தான் என்றுநின்றீர், அதுக்கடையாளமென்னென்ன; அவனுடைய அதிமாநுஷசேஷ்டிதங்களைக் கேளீர் என்று அவற்றை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது. பேய்த்தாய்முலையில் விஷத்தோடு ஆய்த்தாய்கையில்வெண்ணெயோடு வாசியில்லாமல் உண்டபடியும்ப்ரஹ்மவித்துக்க

ளோடும் இடைப்பெண்களோடும் ஒருநீராக வாசியின்றிக்கே கலந்து போக்யனாகையும், குடமெடுத்தத்தோடு குன்றமெடுத்தத்தோடு வைஷம்யமில்லாதே செய்த செயல்கள் அதிமாநுஷங்களிறேயென்று திருவுள்ளம்.

பிள்ளையென்னாதே, "தன்னை" என்று பிள்ளைத்தனத்தில் தானான தன்மையைத்திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார், (பேயாணவளித்யாதி). "கோவை" என்றதின் தாத்பர்யம் (லோகத்தையடையவெழுதிக்கொண்டவனை)என்றது. முன்னேயென்ற பதப்ரயோகதாத்பர்யம் (சிலரித்யாதி). "தன்னை" என்றபதத்தாலே குடக்கூத்தில் அத்விதீயத்வம் தோற்றுகையாலே, ஊராகக் காணவருகை நிஸ்சிதமென்றருளிச்செய்கிறார் (அப்படியித்யாதி). கண்டேன் என்னாதே "கண்டுகொண்டேன்" என்றதுக்கு வாஸனை (அவனித்யாதி). ... ... (௪)

மூ.—பாய்ந்தானைத்திரிசகடம்பாறிவீழப்
பாலகனாயாலிலையில்பள்ளியின்ப
மேய்ந்தானையிலங்கொளிசேர்மணிக்குன்றன்ன
வீரிரண்டுமால்வரைத்தோளம்மான்தன்னைத்
தோய்ந்தானைநிலமகள்தோள்தூதில்சென்றப்
பொய்யறைவாய்புகப்பெய்தமல்லர்மங்கக்
காய்ந்தானையெம்மானைக்கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ்கடல்மல்லைத்தலசயனத்தே. (௫)

பதம்.	உரை.
திரி	உருளுகிற
சகடம்	சகடாஸுரன்
பாறி	சிந்நம் பிந்நமாய்
வீழ	விழும்படி (திருவடிகளாலே)
பாய்ந்தானை	உதைத்தவனாய்,
பாலகனாய்	சிறுபிள்ளையாய்
ஆலிலையில்	வடதளத்திலே
பள்ளியின்பம்	நித்ராஸுகத்தை
எய்ந்தானை	அநுபவித்தவனாய்,
இலங்கு ஒளி	மிக்க ஒளியை
சேர்	உடைத்தான
மணிக்குன்று அன்ன	ரத்நபர்வதம்போன்ற வடிவழகையும்
மால்	பெரிதாய்
வரை	மலைபோலே த்ருடமான
ஈரிரண்டுதோள்	நான்குதிருத்தோள்களையுமுடைய
அம்மான்றன்னை	ஸர்வசேஷியாய்;
நிலமகள்தோள்	ஸ்ரீபூமிப்பிராட்டியின் திருத்தோளோடே
தோய்ந்தானை	கலந்தவனாய்,
தூதில்சென்று	பாண்டவர்களுக்குத் தூதனாய்ச்சென்று
பொய்	துர்யோதநன்பொய்யாஸநமிட்ட
அவ்வறைவாய்	அந்தநிலவறையிலே
புக	க்ருஷ்ணனைப்ரவேசிப்பித்துநலியவேணுமென்று வைத்த
பெய்த	க்ருதஸங்கேதராக்கி
மல்லர்	மல்லவர்க்கத்தை
மங்க	முடியும்படி
காய்ந்தானை	சீறியருளினவனாய்,
எம்மானை	எனக்குஸ்வாமியானவனை

கடிபொழில்சூழ்கடல்மல்லைத் தலசயனத்துக் கண்டுகொண்டேன். (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பாய்ந்தானையித்யாதி) பிள்ளையைத் தொட்டிலிலே வளர்த்திச் சகடத்தை வரவிழுத்துவைத்துப் போனார்கள். அதிலே அஸுரர்களாவேசித்து வந்து நலியப்புக, (க) "స్తన్యార్థీప్రరురోదహ - 'ஸ்தந்யார்த்திப்ரருரோதஹ'' என்கிற படியே முலைவரவு தாழ்த்துச்சீறித் திருவடிகளாலே பாய்ந்தான். அதுக்கிலக்காய் முடிந்துபோனார்கள். † ஊருகிற சகடமானது பாறிப்போம்படியாகப் பாய்ந்தவனை. (பாலகனித்யாதி) அத்யந்த முக்தனாய் ஒருபவனுன வாலிலையிலே விழுக்காடுபாராதே நித்ராஸுகமநுபவித்தவனை. (இலங்கொளியித்யாதி) மிக்க வொளியை யுடைய நீலகிரிபோலே யிருக்கிற திருத்தோள்கள் நாலையு முடையவனை. (அம்மான்தன்னை) அந்தசதுர்ப்புஜனிறே ஸர்வேஶ்வரனுவான். (தோய்ந்தானை நிலமகள்தோள்) ஶ்ரீபூமிப்பிராட்டி திருத்தோள்களிலே அவகாஹித்தவனை. (தூதித்யாதி) பாண்டவர்களுக்குத் தூதனுய்ச்சென்று, "நிலவறையிலே ப்ரவேசிப்பித்து நலியவேணும்'' என்று † பதிபடைகிடந்தமல்லர் முடிந்துபோம்படிச் சீறினவனை. (எம்மானையித்யாதி) அந்தக்ருத்ரிமத்தைத்தப்பி என்னை யெழுதிக்கொண்டவனை. (ரு)

அரு.—அஞ்சாம்பாட்டு. (பாய்ந்தானையித்யாதி). தாயைப்போலே வந்த பேயைப்போலன்றிக்கே, தாய்தானே காவலாக வைத்த சகடத்தைக் காலாலே தள்ளின பிள்ளைகிடீர்! உலகை யெல்லாம் வயிற்றடக்கிப் பள்ளி கொள்ளும் பிள்ளை, அவன் ஆஶ்ரிதர்க்குக் கையாளாய் விரோதிகளைக் காணில் சீறும் ஸ்வபாவன், அவனை நான் கண்டேன், நீங்களும் கண்டு ஆஶ்ரயியுங்கோளென்கிருரென்று அவதாரிகை கண்டு கொள்வது.

(க) "కదాచిచ్ఛకటస్యాధశ్శయానో మధుసూదనః। చిక్షేపచరణా వూర్ధ్వమ్ స్తన్యార్థీప్రరురోదహ। తస్యపాదప్రహారేణశకటం పరివర్తితమ్। విధ్వస్తకుంభభాణ్డం తద్విపరీతం పపాతవై-கதாசிச்சகடஸ்யாதஶ்ஶயாநோ மதுஸூதநः| சிக்ஷேபசரணாவூர்த்த்வம்ஸ்தந்யார்த்திப்ரருரோதஹ | தஸ்யபாதப்ரஹாரேணசகடம் பரிவர்த்திதம் | வித்வஸ்தகும்ப பாண்டம் தத்விபரீதம் பபாதவை'' என்று ப்ரமாணசேஷம். தாத்பர்ய மருளிச்செய்து, சப்தார்த்த மருளிச்செய்கிருர். (ஊருகிறவித்யாதி). (பதிபடை) அந்த ஸ்த்தாநத்திலே கிடந்த ஸேனை. துர்யோதநன் பொய்யாஸநமிட்டு க்ருஷ்ணனைப்பிடிப்பதாக அநேகம் மல்லவர்க்கத்தை க்ருதஸங்கேதராக்கி வைத்தானென்று கருத்து. ... ... (ரு)

(க) வி - பு - ரு - கூ - க.

மூ.—கிடந்தானைத்தடங்கடலுள்பணங்கள்மேவிக்
கிளர்பொறியமறிதிரியவதனின்பின்னே
படர்ந்தானைப்படுமதத்தகளிற்றின்கொம்பு
பறித்தானைப்பாரிடத்தையெயிறுகீற
விடந்தானைவளைமருப்பினேனமாகி
யிருநிலனும்பெருவிசும்புமெய்தாவண்ணம்
கடந்தானையெம்மானைக்கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ்கடல்மல்லைத்தலசயனத்தே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தடம்	பரந்த	வளை	வளைந்த
கடலுள்	திருப்பாற்கடலிலே	மருப்பின்	கொம்பையுடைத்தான
பணங்கள்	திருவனந்தாழ்வான் படத்தின்கீழே	ஏனமாகி	வராஹமாய்
மேவி	பொருந்தி	இடம்பாரை	பரந்தபூமியை
கிடந்தானை	கண்வளர்ந்தருளினவனாய்,	எயிறு	திருவெயிற்றாலே
கிளர்	கிளர்ந்த	கீற	கிழியும்படி
பொறிய	நாநாவர்ணமான புள்ளிகளையுடைய	இடந்தானை	ஒட்டுவிடுவித்தவனாய்,
மறி	மான்குட்டியானது	இருநிலனும்	மஹத்தானபூமியும்
திரிய	அங்கேயிங்கேஸஞ்சரிக்க	பெருவிசும்பும்	பெரியஆகாசமும்
அதனின்பின்னே	அதின்பின்னே	எய்தாவண்ணம்	போராதபடியாக வளர்ந்து
படர்ந்தானை	தொடர்ந்துபோனவனாய்,	கடந்தானை	லோகத்தைத்திருவடிகளாலே அளந்துகொண்டவனாய்,
படு	ஒழுகாநின்றுள்ள	எம்மானை	என்னையடிமைகொண்டவனானஸர்வேஶ்வரனை
மதத்த	மதஜலத்தையுடைய		
களிற்றின்	குவலயாபீடத்தின்		
கொம்பு	கொம்பை		
பறித்தானை	பிடுங்கிப்போகட்டவனாய்,		

கடிபொழில்சூழ் கடல்மல்லைத்தலசயனத்துக் கண்டுகொண்டேன். (௬)

வ்யா.—ஆறாம்பாட்டு. (கிடந்தானை) † கண்வளர்ந்தருளுகைக்கீடான பரப்பையுடைத்தான கடலிலே திருவனந்தாழ்வான் மேலே (மேவி) பிராட்டிமார் திருமுலைத்தடத்தாலும் கிளப்பவொண்ணாதபடி கண்வளர்ந்தருளினவனை. (கிளரித்யாதி) கிளர்ந்து நாநாவர்ணமான பொறியையுடைத்தான மான்குட்டியைப், பிராட்டி "பிடித்துத்தரவேணும்" என்ன; துஷ்டம்ருகமாகையாலே அது அங்கேயிங்கே ஸஞ்சரிக்க, அதின்பின்னே † அடிதீயப்போனவனை. †பிராட்டிபிரிவு விளையும்படியாகவிறே கைகழியப்போனபடி. பெரிய மத்தகஜத்தினுடைய கொம்பைக் ‡ குப்பைக்கீரைபோலே அநாயாஸேந

பிடுங்கினவனை. (பாரிடத்தையித்யாதி)† வளைந்த கொம்பையுடைய மஹாவராஹமாய், பரப்பையுடைத்தான பூமியைத்திருவெயிற்றாலே கிழியும்படி யிடந்தவனை. உடம்புநோவ வ்யாபரித்தபடி சொல்லுகிறது. (இருநிலனித்யாதி) பூம்யந்தரிக்ஷாதிகள் போராதபடியாக வளர்ந்து லோகத்தை யளந்துகொண்டவனை. (எம்மானை) எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்த நீர்மையாலே என்னை யெழுதிக்கொண்டவனை. (கண்டுகொண்டேன்) அவன்றானே திருவடிகளைக் கொண்டுவந்து வைத்தவன்று தப்பினநான் இன்று இங்கே காணப் பெற்றேனென்கிறார். ... ... (௬)

அரு. ஆறும்பாட்டு. (கிடந்தானையித்யாதி). * பாலகனாயாலிலையிற் பள்ளிகொண்டவனே யன்றிக்கே, *(க) பாற்கடலுள் பாம்பணைமேல் பள்ளியமர்ந்து பல அவதாரங்கள் செய்துவந்து பள்ளிகொண்டருளக் கண்டேனென்று ஸங்கதி கண்டு கொள்வது.

"பணங்கள்" என்றது - லக்ஷணயா திருவனந்தாழ்வானைச் சொல்லுகிறதென்றதாய், "தடங்கடலுள் பணங்கள் மேவிக்கிடந்தானை" என்று அந்வயித்துத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (கண்வளர்ந் தித்யாதி). பொறி - புள்ளிகள். மறி - மான்குட்டி. (அடிநீய) அடிதெரியாதபடியென்கை. அதனின் பின் படர்ந்தானையென்னுதே, "பின்னே" என்றதுக்குத்தாத்பர்யம் (பிராட்டியித்யாதி). (குப்பைக்கீரைபோலே) என்றது-"பறித்தானை" என்றபத வாஸனை. "வளைமருப்பினேனமாகி - பாரிடத்தையெயிறு கீறவிடந்தானை." என்று அந்வயாநுகுண மர்த்தமருளிச் செய்கிறார் (வளைந்தவித்யாதி). ஆக இப்பாட்டில் திருவனந்தாழ்வானோடு பிராட்டியாரோடு மதுரையிற் பெண்களோடு, ஸ்ரீ பூமிப்பிராட்டியாரோடு, பூமியிலுள்ளாரோடு வாசியற வெல்லார்க்கும் தன்னைக்கையடைப்பாக்கினவனை நான் கண்டேனென்று, அவனுடைய பரார்த்ததையைச் சொல்லுகிறாரென்றதாயிற்று. ... ... (௬)

மூ.—பேணுதவலியரக்கர்மெலியவன்று
பெருவரைத்தோளிறநெரித்தன்றவுணர்கோனைப்
பூணுகம்பிளவெடுத்தபோர்வல்லோனைப்
பொருகடலுள் துயிலமர்ந்தபுள்ளூர்தியை
ஊணுகப் பேய்முலை நஞ்சுண்டான்றன்னை
யுள்ளுவாருள்ளத்தேயுறைகின்றானைக்
காணுதுதிரிதருவேன்கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ்கடல்மல்லைத்தலசயனத்தே. (எ)

(க) தி - வாய் -உ-ரு-எ.

பதம்	உரை.
அன்று	ராவணன் கைவிஞ்சினவன்று
பேணுத	ஸர்வேஸ்வரனென்று ஆதரியாத
வலி	பலத்தையுடைய
அரக்கர்	ராக்ஷஸர்
மெலிய	இளைக்கும்படியாக
பெரு	பெரிய
வரை	மலைபோன்ற
தோள்	தோள்கள்
இற	முறியும்படி
நெரித்து	கட்டிக்கொண்டு
அன்று	ஆஸ்ரிதனனப்ரஹ்லாதனை நலிந்தவன்று
அவுணர்கோனை	அஸுரர்கள்தலைவனை ஹிரண்யனுடைய
பூண்	ஆபரணங்களணிந்த
ஆகம்	மார்பை
போர்	யுத்தத்தில்
பிளவெடுத்த	பிளந்துபொகட்ட
வல்லோனை	ஸமர்த்தனனவனை,
பொரு	திரைக்கிளப்பத்தையுடைய
கடலுள்	திருப்பாற்கடலிலே
துயிலமர்ந்த	கண்வளர்ந்தருளின
புள்ளூர்தியை	கருடவாஹநனை,
பேய்முலை	பூதனையின் முலையிலு
நஞ்சு	விஷத்தை [ண்டான
ஊணாக	தாரகமாக
உண்டான்றன்னை	அமுதுசெய்தருளினவனை
உள்ளுவார்	பூதநாநிரஸநத்தைநினைத்து ஈடுபடுமவர்களுடைய
உள்ளத்து	நெஞ்சில் [னை
உறைகின்றானை	பொருத்தமுடையவ
காணாது	நெடுநாள்காணமல்
திரிதருவேன்	தேடித்திரிகிற

நான், கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்துக் கண்டு கொண்டேன். (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (பேணுதவித்யாதி) † ஸர்வேஸ்வரனென்று கொண்டு பேணவறியாதே முன்கைமிடுக்காலே தோற்றின படி நடந்துதிரிகிற ராக்ஷஸ ஜாதியானது மெலியும்படியாக. (க)"எங்ஙனேயுய்வர் தானவர் நினைந்தால்" என்கிறபடியே அச்சிறுக்கனைப் போலே சீற்றமின்றிக்கேயிருப்பார் பிழைக்குமித்தனையல்லது ஆஸுர ப்ரக்ருதிகள் எங்ஙனே உஜ்ஜீவிக்கும்படி என்னக்கடவதிறே; அப்படியேராக்ஷஸஜாதியானது மெலியும்படியாகப்பண்ணி; அன்று பெரியவரைபோலே யிருக்கிறதோள்களானவை † இறும்படியாகக் †கட்டிக்கொண்டு;† ஆஸுரவர்க்கத்துக்கு நிர்வாஹகனனவனை, ஆபரணங்களாலே அலங்க்ருதமான சரீரமிருபிளவாம்படி கிழித்துப்பொகட்டு யுத்தத்திலே ஸமர்த்தனனவனை. (பொரு) † அதுக்குறுப்பாகத் திருப்பாற்கடலிலே வந்து கண்வளர்ந்தவனை. (புள்ளூர்தியை) ப்ரஹ்மாதிகள்கூக்குரல்கேட்டு அங்குநின்றும் பெரியதிருவடிதோளிலேயேறி அவர்களுக்குக் காட்சிகொடுக்கும்படி சொல்லுகிறது. (ஊணாகவித்யாதி) பூதனை தாய்வடிவு கொண்டுவந்து முலைகொடுக்க,

(க) ரு - எ - ரு,

அவள் முலைகொடாவிடில் தரியாதாளாய்க் கொடுத்தாற்போலே, தானும் முலை யுண்ணாவிடில் தரியாதானாய் முலையுண்டபடி சொல்லு கிறது. (உள்ளுவாரித்யாதி) செவ்வியார்க்ருத்தான் செவ்வியனாய் பரிமாறும்படியும் துஷ்டர்க்ருத்தானும் அப்படி யிருக்கும்படியும் சொல்லுகிறது. † பருவம் நிரம்பாதிருக்கச் செய்தேயும் பூதனை கை யிலேயகப்பட்டு அத்தைத்தப்பிப்போகப்பெற்ற அதொன்றுமே யா யிற்று இவர்கள் நெஞ்சில் கிடப்பது. (காணுதவித்யாதி) † யாதநா சரீரம்போலே காணவேணுமென்று ஆசைப்பட்டுத் தட்டித் திரிகிற நான், பசித்தவன் ஜீவிக்கப்பெற்றாற் போலே காணப் பெற்றேன். (கடியித்யாதி) சாஸ்த்ரங்களிலே கேட்டு ஒரு தேசவிசேஷத்திலே சென்றால் காணவிருக்கையன்றிக்கே விடாய்த்த இக்கிலத்திலே காணப்பெற்றேனென்கிறார். ... ... (எ)

அரு.—எழாம்பாட்டு. (பேணுதவித்யாதி) இப்படி ஆஸ்ரிதார்த்தமாக இவன் அநேகாவதாரங்களைப்பண்ணினானென்னச் செய்தேயும்,வாஸநாபலத் தாலே நெஞ்சுநெகிழாதேயிருக்கு மவர்களைக்குறித்து அச்சமுறுத்துகைக்காக, நீங்களவனைப்பேணாவிடில் கேவலம் ஆஸுரப்ரக்ருதிகளாய்ப் பேயராய்ப்போ கிறீர்களென்னுமதுதோற்ற, ராவண ஹிரண்ய பூதநாநிரஸநங்களை யநுஸந்திக் கிறாரென்று ஸங்கதி கண்டு கொள்வது.

பேணுகை ஆதரிக்கையாய் தாத்பர்யம் (ஸர்வேஸ்வரனித்யாதி). (இறும் படியாக) முறியும்படியாக. "நெரித்து" என்றதினர்த்தம் (கட்டிக்கொண்டு) என்றது; ஸேநையாலே நெருக்கியென்றபடி. இவ்வளவும் ராவணவிஜயம்பண் ணின ராமாவதாரவ்ருத்தாந்தம்; "அன்றவுணர்" இத்யாதிக்கு-ஹிரண்யநிரஸ நம் பண்ணினபடியாக விவக்ஷித்தருளிச் செய்கிறார், (ஆஸுரேத்யாதி). இங்ங னன்றாகில் பாட்டிலே இரண்டு "அன்று" என்றபதம் வேண்டாவிறே, ராம நரஸிம்ஹர்களுடையவும் ராவணஹிரண்யர்களுடையவும் தர்மைக்யத்தா லே ஏகமாக உபந்யஸித்தருளினாரென்று கொள்வது. (அதுக்கு) என்றது-ரா வணநிரஸநத்துக் கென்றபடி.யத்வா - "மெலிய வன்று" என்று கீழேகூட்டி, ராமாவதார பரமாகவும், "பெருவரை" இத்யாதியையெல்லாம் அழகிய சிங்கர் விஷயமாகவும் யோஜிக்கவுமாம். இப்போது (கட்டிக்கொண்டு) என்றது, (ஙூஜ்ஞ ஸ்யுட) த்வந்த்வயுத்தபரம். (அதுக்கு) ஸாமாந்யேந விரோதிநிரஸநத்துக் கென்றபடி. இத்திருமொழியில், "பேய்ச்சிவிடம்பருகுவித்தகனை" என்றும் "பேய்த்தாயை முலையுண்டபிள்ளைதன்னை" என்றும், "ஊனாகப் பேய்முலை நஞ்சுண்டான்றன்னை" என்றும் முக்காலும் அநுஸந்திக்கும்படியிருக்குமே தொன்றாகையாலே, "உள்ளுவார்" என்றதுக்கும் இத்தை யநுஸந்திப்பாராக வே தாத்பர்யம்விவக்ஷித்து, அதுக்கு ஹேதுமுகேநவருளிச் செய்கிறார் (பருவ

மித்யாதி). தட்டித்திரிகைக்கு த்ருஷ்டாந்தம். (யாதநாசரீரம்போலே) என்றது. அதாவது - து:காநுபவம் பண்ணுகைக்கு எடுத்த சரீரமாகையாலே இஷ்டஸாதகங்கள் கிடையாதிறேயென்கை. ... ... (எ)

மூ.—பெண்ணாகி யின்னமுதம் வஞ்சித்தானைப்
பிறையெயிற்றன்றடலரியாய்ப் பெருகினானைத்
தண்ணார்ந்த வார்புனல் சூழ் மெய்ய மென்னும்
தடவரைமேல் கிடந்தானைப் பணங்கள்மேவி
எண்ணானை யெண்ணிறந்த புகழினானை
யிலங்கொளிசேரரவிந்தம் போன்றுநீண்ட
கண்ணானைக் கண்ணாரக் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத்தலசயனத்தே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இன்	இனிதான	தடவரைமேல்	பெரியமலையிலே
அமுதம்	அம்ருதத்தை (அஸுரர்கள் புஜியாதபடி)	பணங்கள்	திருவனந்தாழ்வான் மேலே
பெண் ஆகி	ஸ்த்ரீவடிவைக் கொண்டு	மேவி	பொருந்தி
வஞ்சித்தானை	அவர்களைவஞ்சித்தவனாய்,	கிடந்தானை	சாய்ந்தருளுமவனாய்,
		எண்ணானை	எல்லாராலும் எண்ணப்படுமவனாய்,
அன்று	ஹிரண்யனாலே ப்ரஹ்லாதன் நோவுபட்டவன்று	எண் இறந்த	அளவில்லாத
		புகழினானை	கல்யாணகுணங்களையுடையனாய்,
பிறை	சந்த்ரனையொத்த	இலங்கு ஒளிசேர்	மிக்கஒளியையுடைய
எயிறு	பற்களையும்		
அடல்	மிடுக்கையுமுடைய	அரவிந்தம் போன்று	தாமரையிதழ்போலேபரந்து
அரியாய்	நரஸிம்ஹமாய்		
பெருகினானை	வளர்ந்தவனாய்,	நீண்ட	நீண்டிருக்கிற
தண் ஆர்ந்த	குளிர்த்தியையுடைத்தாய்	கண்ணானை	திருக்கண்களையுடையவனானவனை
வார்	ஒழுகாநின்றுள்ள		
புனல்	ஜலத்தாலே	கண் ஆர	கண்களின்விடாய் தீரும்படி
சூழ்	சூழப்பட்ட		
மெய்யம்என்னும்	திருமெய்யமென்கிற	கடிபொழில்சூழ் கடல் மல்லைத் தலசயனத்துக்கண்டுகொண்டேன். (அ)	

வ்யா —எட்டாம்பாட்டு. † "ஸர்வேஸ்வரனாகிறான்-தன்னை ஆஸ்ரயித்தார்க்குத் தன்னோடொத்த வரிசையைக் கொடுப்பானொருவனென்று கொண்டு அவனுடைய நீர்மையைச் சொல்லுகைக்காக, † அல்லாதார்க்கு உத்கர்ஷத்தைச் சொல்லாநிற்கும் ப்ரமாணங்கள்; அவர்கள் தாங்களும் புழுக்குறித்த தெழுத்தாமாபோலே †சில வற்றைத் தோற்றச்செய்யும்; அவற்றைக்கண்டு † இவர்கள் பக்கலிலே

யும்† குவாலுண்டு, என்றுநாட்டார் ப்ரமிக்கைக்கு† உடலாயிருக்கும், ஆக, ப்ரமாணகதி யிருந்தபடியாலும், சேதநர் மந்தமதிகளாயிருந்த படியாலும், இவற்றின் தாதபர்யமறியாதே (க) 'ஸம்ஸார ஸாகரம்' என்று சொல்லுகிற கடலிலே புக்குப் போமித்தனையிறே. அவற்றை யநுஸந்தித்துச்சொன்ன இவ்வாழ்வார்க† ளீரச் சொல்லின்றாகில்" என்று பட்டரருளிச்செய்தார்.

(பெண்ணுகியித்யாதி) † தனக்குச் சேராத செயலைச் செய்தும் ஆஸ்ரிதகார்யம் செய்யுமவனை. புருஷசப்தத்தாலும் புருஷோத்தம சப்தத்தாலும் சொல்லப்படுகிறவனிறே தன்படிக்குச்சேராத ஸ்த்ரீ வேஷத்தைக்கொண்டு "இனியவஸ்து ஆஸுரப்ரக்ருதிகள்பக்கல் சேரவொண்ணாது" என்றுவஞ்சித்தவனை. (பிறையித்யாதி)† முரட்டு ஹிரண்யனாலே சிறுக்கன் நோவுபடுகிறவன்று, பிறைபோலே யிருக் கிற எயிற்றையுடைய; (அடலரியாய்) யுத்தமென்றால் பணைக்கும்படி யான நரஸிம்ஹமாய்க்கொண்டு. (பெருகினானை) அவனுடைய ப்ரதி ஜ்ஞாஸமகாலத்திலே அவ்வடிவைக்கொண்டு தோற்றிலனாகில்† சுருங் கிக்† கையற்றானாயிற்று† தன்னுடைய ரக்ஷகத்வமிழந்து† கையிலான். (தண்ணார்ந்தவித்யாதி)† பித்ராதிகள் ரக்ஷகராகைதவிர்ந்துபாதகராக ப்புக்க பின்பு "இனி அவர்கள்கையில் காட்டிக்கொடுப்போ மல் லோம்" என்று ரக்ஷகன்தான்வந்து சாய்ந்தானாயிற்று. †"வத்ஸல ராய் உபகாரகராய் நோக்குகைக்குப் பித்ராதிகளென்று சிலரைச் சொல்லிவிட்டோம், அவர்கள் பாதகராய்த் தாங்களேயாய்நின்ற பின்பு நாம் அஸந்நிஹிதராவோ மல்லோம்" என்றுநேரேபிதாவான வன்வந்துசாய்ந்தருளினானாயிற்று. †ஸ்ரமஹரதைமிக்கு ஒழுகாநின் றுள்ளபுனலையுடைத்தான திருமெய்யத்திலேதிருவனந்தாழ்வான்மே லேவந்துசாய்ந்தருளினவனை. (எண்ணானை)† அப்படிக்கையில்சாய்ந்த ருளினாற் பண்ணும்† ஜகத்ரக்ஷணசிந்தையைச் சொல்லுதல்; அன் றிக்கே ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரிகள் பரியவிருக்கிறவன் இங் கேவந்து சாய்ந்தருளுவதே! இதென்னநீர்மை! என்று எப்போது மெண்ணப்படுமவனென்னுதல். (எண்ணிறந்தபுகழினானை) † ஜகத் ரக்ஷணசிந்தைபண்ணுகையால் வந்த புகழுக்கெல்லை யில்லையென்னு தல்; குணாநுஸந்தானம்பண்ணுவார்க்கு அநுஸந்தித்துத்தலைக்கட்ட வொண்ணாத குணப்ராசுர்யத்தைச் சொல்லுதல். (இலங்கித்யாதி)

(க) ஜி - ஸ்தோ - ச.

அக்குணங்களை யொழியவே விடவொண்ணுதபடியாயிருக்குமா யிற்று வடிவழகு; மிக்கவொளியையுடைத்தாய் விகாஸாதிகளுக்குத் தாமரையை ஒப்பாகச்சொல்லலாயிற்று. அது† வட்டணித்திருக்கு மிறே. அங்ஙனன்றிக்கே, ஒழுநீண்டிருக்குமாயிற்று. †அன்றிக்கே, போக்யதைஅளவிறந்திருக்குமென்னுதல். (கண்ணார்)†படபாமுகாக்கி †நிறைந்தாற்போலே "காணவேணும்" என்று உருவிப்†பட்டினிவிட்ட கண்களினுடைய உருவுதல்தீரக்காணப்பெற்றேன். விலக்ஷணசரீரத் தைப் பரிக்ரஹித்து ஒருதேச விசேஷத்தேபோய்க் காண்கையாகி றது, ஆரேனும் பசிக்க ஆரேனும் ஜீவித்தாற்போலே யிருப்பதொன் றிறே; காணவேணுமென்று உருவினகண்களோடே காணப்பெற் றேன். (க) "[illegible] - காத்ரைச் சோகாபிகர்சிதை". (அ)

அரு.—எட்டாம்பாட்டு (பெண்ணுகியித்யாதி) ராவணுதி நிரஸநத்தில் [illegible]வனுடைய ஆண்பிள்ளைத்தனத்தைத்திரளச் சொல்லாகின்றீர், இவன்றுனே [illegible]னுடையுடுத்ததில்லையோ? என்னுமத்தைக்கொண்டு சைவஸமயத்திலே [illegible]ாநின்றீர் எ[illegible]று ஸம்ஸாரிக[illegible]க்குக் கருத்தாக, அப்படிபெண்ணுனதும் [illegible]க விஸஜாத்யமான நரஸிம்ஹத்தோபாதி ஆஸ்ரிதார்த்தமென்றருளிச் செய்கிறுரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

§ "பெண்ணுகி" என்றத்தாலே - அம்ருதமதநவ்ருத்தாந்தம் ப்ரஸ்துத மாகையால், தேவதாந்தரத்தினுடைய விஷபக்ஷண ப்ரயுக்தஸாமர்த்யமும் ஸர் வேஶ்வரனுக்கு ஸ்த்ரீத்வமும் தோன்ற ப்ரமாணங்களிருக்கைக்கு ப்ரயோஜந கதநபூர்வகம், பெண்ணுகைக்கு ப்ரயோஜநத்தையும் ஒரு ஸம்வாதமுகேந வருளிச்செய்கிருர், (ஸர்வேஶ்வரனித்யாதி). (அல்லாதார்க்கு)ருத்ராதிகளுக்கு. (சிலவற்றை) விஷதாரண வர ப்ரதாநாதிகளை. (குவால்) ஆதிக்யம். (உடலா யிருக்கும்) ப்ரமாணகதியென்றுகருத்து. (ஈரச்சொல்லின்றுகில்) என்றதுக்கு (போமித்தனையிறே) என்று கீழ்வாக்யத்தோடு அந்வயம்.

(தனச்கு) என்றது - புருஷோத்தமனுன தனக்கென்றபடி. விவரணம், ([illegible]ஷேத்யாதி). "அன்று பிறையெயிற்று - அடலரியாய்ப் பெருகினுனை" [illegible]று அந்வயித்து அர்த்தமருளிச் செய்கிருர், (முாட்டித்யாதி). (சுருங்கி) [illegible]குகையில்லாதவளவன்றிக்கே [illegible]றைந்து. ([illegible]சயற்றுன்) அசக்தனுனன். [illegible]ந்தை உபபாதிக்கிருர், (த[illegible]னுடையவித்யாதி). (கையிலான்) கைம்முதலில்

(க) ரா-ஸு-

[illegible]யும் மேன்மையையும் சொல் லுகிற ப்ரகரணத்திலே "பெண்ணுகி யின்னமுதம் வஞ்சித்தானை" என்கை யாலே இதுவுமவற்றுக் குடலென்று விவக்ஷித்து இதுக்காசார்யஸம்வாதம் (ஸர்வேஶ்வரனுகிருன்) என்று.

லாதான், அசக்தனென்றபடி. நாஸிம்ஹத்தை யநுஸந்தித்த உடனே திருமெய்யத்தில் கிடையை யநுஸந்திக்கைக்கு ப்ரயோஜநத்தை யருளிச்செய்கிறார் (பித்ராதிரக்ஷித்யாதி). விவரணம் (வத்ஸலராயித்யாதி). சப்தார்த்தம் (ஸ்ரமஹரதையித்யாதி). என்னுக்கு ஆஸ்ரயபூதனென்றும், விஷயபூதனென்றும் இரண்டர்த்தமருளிச்செய்கிறார் (அப்படுக்கையிலித்யாதி). "புகழ்" என்றது - யஸஸ்ஸாதல், ஸகல கல்யாணகுணங்களாதல் என்று விவக்ஷித்து, கீழ் பதத்துக்குச் சொன்ன அர்த்த த்வயாநுகுணம் அர்த்தத்வயமருளிச்செய்கிறார் (ஜகத்ரக்ஷண சிந்தையித்யாதி). (வட்டணித்திருக்கும்) என்றது - அரவிந்தம் வட்டணித்திருக்குமென்கை. "நீண்ட" என்றதுக்கு அர்த்தாந்தரம் (அன்றிக்கேயித்யாதி). "கண்டுகொண்டேன்" என்றதே அமைந்திருக்க, "கண்ணார" என்று விசேஷித்ததுக்கு "பிள்ளைகள் வயிறு நிறையப்பெற்றேன்" என்னுமாபோலே, கண்கள்வயிறு நிறையப்பெற்றேன் என்று சப்தார்த்தம் விவக்ஷித்துத்தாத்பர்யமருளிச் செய்கிறார் (படபேத்யாதி) (நிறைந்தாற்போலே - பட்டினிவிட) என்று அந்வயம், (பட்டினிவிடுகை) ஜாடராக்நிமிருகை. கண்ணாரக்காண்கை (க) "సదా పశ్యన్తి - ஸதாபஸ்யந்தி" என்று பரமபதத்திலேயன்றோவென்ன, அருளிச்செய்கிறார் (காத்ரைரித்யாதி). "இவ்வாக்யந்வயமும், ஒன்பதாம்பாட்டிலே சில ஸ்ரீகோசங்களிலேயுண்டாகில், அப்போது இப்பாட்டோடே கூட்டுவது" என்று சொல்லுவர்கள். "యథాతం పురుషవ్యాఘ్రం గాత్రైశ్శోకాభికర్శితైః । సంస్పృశేయం సకామాహం తథాకురు దయాం మయి- யதாதம் புருஷவ்யாக்ரம் காத்ரைச் சோகாபிகர்சிதை: | ஸம்ஸ்ப்ருசேயம் ஸகாமாஹம் ததாகுருதயாம் மயி." ... ... (அ)

கூ—தொண்டாயார்தாம்பரவு மடியிணைப்
படிகடந்த தாளாளற் காளாயுய்தல்
விண்டானைத் தென்னிலங்கை யரக்கர்வேந்தை
விலங்குண்ண வலங்கைவாய்ச் சரங்களாண்டு
பண்டாய வேதங்கள் நான்குமைந்து
வேள்விகளுங் கேள்வியோ டங்கமாறும்
கண்டானைத் தொண்டனேன் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொண்டுஆயார்	சேஷபூதரானவிசே	அடியிணை	திருவடிகளையுடைய
தாம்	ஷஜ்ஞர்	படி	பூமியை [ஞய்,
பரவும்	ஸ்தோத்ரம்பண்ணும்	கடந்த	அளந்த [வனுக்கு
	படியான	தாள்ஆளர்க்கு	திருவடிகளையுடைய

(க) பு-ஸா-௭.

ஆளாய்	அடிமைசெய்து
உய்தல்	உஜ்ஜீவிப்போமென்னுமர்த்தத்தில்நின்றும்
விண்டானை	வேறுபட்டவனாய்
தென்	தெற்குத்திக்கிலுள்ள
இலங்கை	லங்கையில்
அரக்கர்	ராக்ஷஸர்களுக்கு
வேந்தை	ராஜாவானராவணனை
விலங்கு	ம்ருகங்கள்
உண்ண	தின்னும்படி
வலங்கைவாய்	வலத்திருக்கையாலே
சரங்கள்	அம்பை
ஆண்டு	ப்ரயோகித்தருளினவனாய்,
பண்டுஆய	நித்யமான

நான்குவேதங்களும்	நாலுவேதங்களையும்
ஐந்துவேள்விகளும்	பஞ்சமஹாயஜ்ஞங்களையும்
கேள்வியோடு	ஆசார்யோபதேசத்தோடு
ஆறுஅங்கமும்	ஆறுஅங்கங்களையும்
கண்டானை	(சாஸ்த்ரீயஜ்ஞாநத்தாலேதன்னைக்கிட்டும்வழியாகக்)கண்டுவைத்தவனை
தொண்டனேன்	சேஷபூதனானநான்

கடிபொழில்சூழ்கடல்மல்லைத் தலசயனத்துக்கண்டுகொண்டேன். (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (தொண்டாயார்) (க) "வழுவிலா வடிமைசெய்யவேண்டும்" என்றிருப்பாரைச் சொன்னபடி. ஆயாரென்றது-ஆனரென்றபடி. † அவர்கள்(உ)"[illegible]-ஜாமதக்ந்யஸ்யஜல்பதஃ" என்கிறபடியே அடைவுகெட்டு ஏத்தும்படியான திருவடிகளையுடையவனை. (படியித்யாதி) † நம்முடைமை ஒன்றுந் தவறவொண்ணாதென்று தான் கொடுவந்து திருவடிகளைத்தலையிலே வைத்தஸ்வபாவத்தையுடையவனுடைய நீர்மையிலேதோற்று "இனி நாமும்அவனுகந்த வடிமைசெய்து உளோமாவோம்" என்கிற இவ்வர்த்தத்திலே விண்டவனுண்டு - (ங) "[illegible] - நநமேயம்" என்றிருக்குமவனை. †ஆளாயுய்தல்விண்டார்க்கெல்லாம்ப்ரபுவாயிருக்கிறவனை. (விலங்குண்ண) அவனை நாயும் நரியும் கழுகும் பருந்தும் பற்றிபிசிக்கும்படியாக. (வலங்கைவாய்ச்சரங்களாண்டு)†ப்ரதிகூல நிரஸநத்துக்கும் அநுகூலர்க்கு தர்சநீயமாயிருக்கைக்கும் கையும் வில்லுமான விருப்பேயமையும். (பண்டித்யாதி) அபௌருஷேயமாகையாலே நித்யமாய், நிர்த்தோஷமாய், பூர்வபூர்வோச்சாரண க்ரமத்தைப்பற்ற உத்தரோத்தரோச்சார்யமாணமான வேதாக்ஷரராசியும் தன்னுடைய ஸமாராதநரூபமான வைதிக கர்மங்களுக்கு உபலக்ஷணங்களான பஞ்சமஹாயஜ்ஞங்களும், இந்த வைதிகக்ரியைகள் தன்னை ஸமாராதநரூபமென்னுமிடத்தைச்சொல்லுகிற அங்கங்களாறும்,†கேழ்வியாலேஅநுஸந்திக்கப்†படுவதான. (கண்டானை)†சா

(க)தி-வாய்-ரு-ரு-க. (உ) (ங) ரா-யு-ருகூ-கக.

ஸ்த்ரீயஜ்ஞாநத்தாலே தன்னை ப்ராபிக்கைக்கீடான வழியைக்கண்டு வைத்தவனை. (தொண்டனேனித்யாதி) அப்பெருவழியான சாஸ்த்ரீயஜ்ஞாநத்தாலே யன்றிக்கே இக்கண்ணாலே காணப் பெற்றேன்.

௮௫.—ஒன்பதாம்பாட்டு(தொண்டாயாரித்யாதி)பெண்ணும் புருஷஸிம்ஹமாயும் ஆஶ்ரிதரை ரக்ஷிக்கும் புண்டரீகாக்ஷனையே மிகவும் புகழாநின்றீர், அவனுடைய ஸர்வாதிசாயித்வத்திலே ப்ரமாணங்களென் என்னும் ஜிஜ்ஞாஸாப்ரஶ்நத்திலே, திருவாய்மொழியென்ன, ஸ்ரீராமாயணமென்ன, வேதவேதாந்தங்களென்ன, இவையெல்லாமவனையே ப்ரதிபாதிக்கிறதென்னும் கருத்தாலே உத்தரமருளிச் செய்கிறாரென்று ஸங்கதிகண்டு கொள்வது.

“பரவும்” என்கையாலே பக்திபலாத்காரத்தாலே பிறந்தஸூக்திகளென்று விவக்ஷித்து, ஸத்ருஷ்டாந்தம் தாத்பர்யமருளிச் செய்கிறார் (அவர்களித்யாதி) “𑌶𑍍𑌰𑍁𑌤𑍋𑌽𑌯𑌮𑌰𑍍𑌥𑍋 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌜𑌲𑍍𑌪𑌤𑌃 । 𑌨𑌾𑌰𑌦𑌸𑍍𑌯 𑌚 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑍇𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑍍𑌵𑍈𑌪𑌾𑌯𑌨𑌸𑍍𑌯 𑌚-ஶ்ருதோயமர்த்தோ ராமஸ்ய ஜாம தக்ந்யஸ்ய ஜல்பத꞉ । நாரதஸ்யசதேவர்ஷே꞉க்ருஷ்ணத்வைபாயநஸ்யச” என்று வசநசேஷ꞉. ஆக, “தொண்டாயார்” இத்யாதியாலே(௧)“𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑍋 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿-ப்ரஹ்மவாதிநோவதந்தி”என்கிறபடியே ஆழ்வார்கள்திவ்யஸூக்திகள் ப்ரமாணங்களென்று தர்ஶிப்பித்தாராயிற்று. படியை - பூமியை, கடந்த - அளந்த, தாள்களை ஆண்டவற்கு, ஆளாய்உய்தலைத்தன்னிடத்தில் நின்று விண்டு போகட்டவனாய், அரக்கர்க்கு ராஜாவான ராவணனைத் திர்யக்குக்களுண்ண, வலங்கையில் சரங்களை ஆண்டவனென்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச் செய்கிறார், (நம்முடைமையித்யாதி). “உய்தல் விண்டானை” என்று ராவணனுக்கு விசேஷணமிடுகையாலே(௨)“𑌯𑌥𑌾 𑌰𑌾𑌜𑌾 𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 - யதாராஜாததாப்ரஜா꞉” என்கிறந்யாயத்தாலே பலிதார்த்தமருளிச் செய்கிறார், (ஆளாயித்யாதி) “சரங்களாண்டு” என்றால்போராதோ,“வலங்கைவாய்”என்றதுக்குக்கருத்தென்னென்ன, அருளிச்செய்கிறார், (ப்ரதிகூலேத்யாதி வாக்யத்தாலே). “வாய்” என்று இடமாய் ஸப்தம்யர்த்தம். ஆக - இவ்வளவால் இதிஹாஸபுராணங்களை ப்ரமாணீகரித்தாராயிற்று. ஸமாராதநரூபமென்னு மிடத்தைச் சொல்லுகிற, “அங்கங்களாறும்”என்றது-வேதம் இவ்வர்த்தத்தையறிவிக்கும்போது அங்கங்கள் ஸஹகாரிகளாகையாலே இவையும் சொல்லுகிறனவென்கை. (கேள்வியாலே) என்றது-ஆசார்யோபதேசத்தாலேயென்கை. (படுவதான) என்றதனந்தரம், வேதாதிகளுண்டு என்று சேஷம். “கண்டானை” என்றதுக்கு பாவம் (சாஸ்த்ரீயேத்யாதி). இத்தால் - சேதநலாபத்துக்கு ஈஶ்வரன் வழியாகக்கண்டானென்று அவனுடைய உபகாரத்வம் தோற்றிற்றாயிற்று. ... ... (௯)

---

(௧) (௨) யஜு -

மூ.—படநாகத் தணைக்கிடந்தன் றவுணர் கோனைப்
படவெகுண்டு மருதிடைபோய்ப்பழனவேலித்
தடமார்ந்த கடல்மல்லைத் தலசயனத்துத்
தாமரைக்கண் துயிலமர்ந்த தலைவர் தம்மைக்
கடமாருங் கருங்களிறு வல்லான் வெல்போர்க்
கலிகன்றி யொலிசெய்த வின்பப்பாடல்
திடமாக விவையைந்து மைந்தும் வல்லார்
தீவினையை முதலரிய வல்லார்தாமே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
படம்	படங்களையுடைய
நாகம்	திருவனந்தாழ்வானை
அணை	படுக்கையாகக்கொண்டு
கிடந்து	சாய்ந்தருளினவனாய்,
அன்று	ப்ரஹ்லாதஸ்ப்ரதிஜ்ஞாஸமயத்திலே
அவுணர்கோனை	அஸுரர்கள்தலைவனான ஹிரண்யனை
பட	முடியும்படி
வெகுண்டு	சீறியருளினவனாய்,
மருது இடை	இரண்டுமருதமரங்களின்நடுவே
போய்	தவழ்ந்தேபோனவ
பழனம்	நீர்நிலங்களை [னாய்,
வேலி	சுற்றிலுமுடைத்தாய்
தடம்	தடாகங்களாலே
ஆர்ந்த	நிறைந்த [லே
கடல்மல்லை	திருக்கடல்மல்லையி
தலசயனத்து	நிலத்தைப்படுக்கையாகக்கொண்டு
தாமரைக்கண் துயிலமர்ந்த	புண்டரீகாக்ஷனென்னுமதுதோற்றக்கண்வளர்ந்தருளின

பதம்.	உரை.
தலைவர்தம்மை	ஸர்வேஶ்வரன்விஷ
கடம்ஆரும்	மதம்மிக்க [யமாக,
கருங்களிறு	பெரியயானையை
வல்லான்	நடத்தவல்லராய்
போர்	யுத்தத்தில் [ல்லராய்
வெல்	சத்ருக்களைவெல்லவ
கலிகன்றி	கலிதோஷத்தைப்போக்கின ஆழ்வார்
ஒலிசெய்த	சப்தஸந்தர்ப்பங்களையுடைத்தாம்படியருளிச்செய்ததாய்
இன்பம்	இனிமையைவிளைவிப்பதான
இவையைந்துமைந்து பாடலும்	இப்பத்துப்பாட்டையும்
வல்லார்	அர்த்தத்துடன்கற்கவல்லவர்கள்
தீவினையை	பாபங்களை
தாமே	தாங்களே
திடமாக	நிஶ்சயமாக
முதல் அரிய	வாஸனையோடேபோக்க
வல்லார்	வல்லராவர்கள். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (படமித்யாதி) தன்னோட்டைச் சேர்த்தியாலே விகஸிதமான பணங்களையுடைய திருவனந்தாழ்வான்மேலே சாய்ந்தருளி, அப்படுக்கையும் விட்டுப்போயழியச்செய்யும் ஆஶ்ரித விரோதிக †னுண்டானால். (மருதிடைபோய்) †ஒன்றென்னலாம்படி

பொருந்திநின்ற மருதமுறிந்து விழும்படி நடைகற்று; நீர் நிலங்களாலே சூழப்பட்டு † அழகிய தடாகங்களை யுடைத்தான திருக்கடல் மல்லை ஸ்த்தலசயநத்திலே (க)† "யஜ்ஞோ யஜ்ஞ புருஷ:-யஜ்ஞேசோயஜ்ஞ புருஷ:" என்கிறபடியே ஸர்வாதிகனான புண்டரீகாக்ஷனென்று தோற்றும்படி கண்வளர்ந்தருளினவனையாயிற்றுக் கவிபாடிற்று. (கடமித்யாதி)† மத்தகஜத்தைத் தம்வினையிலே நடத்தவல்லவராயும், யுத்தத்திலே வெற்றிகொண்டல்லது மீளாத ஆழ்வார் ஒலியுடைத்தாக அருளிச்செய்த விப்பத்தையும் அப்யஸிக்கவல்லவர்கள். (தீவினையை முதலரியவல்லார்தாமே) ப்ராக்தநமான கர்மங்களைத் தாங்களே வாஸனையோடே போக்கவல்லராவர்கள். † பாபங்களைக் கூடு பூரித்துக்கொள்ளு மித்தனைபோக்கி † எலியெலும்பனான இவனுவிது போக்கிக்கொள்ளலாமென்றால் இதுகூடுமோ வென்னில், அதிலொருதட்டில்லை; இது த்ருடம். ... ... (கo)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (படமித்யாதி) (உண்டானால்) என்றதுக்கு (அழியச்செய்யும்) என்று கீழே அந்வயம். "அவுணர்கோன்" என்று - ஹிரண்யனுய், அவன் உபலக்ஷணமென்று திருவுள்ளம். 'வெகுண்டு" கோபித்து. ப்ரச்சந்ந விரோதிநிரஸநத்துக்கு உபலக்ஷணம் மருதிடைபோனதென்று திருவுள்ளம்பற்றி, "மருது" என்ற ஏகவசநதாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஒன்றித்யாதி). * ஆர்தலாலேபலிதம் (அழகிய) என்றது. "யஜ்ஞோ யஜ்ஞபுருஷ: புண்டரீகாக்ஷ ஸம்ஜ்ஞித:- யஜ்ஞேசோயஜ்ஞபுருஷ: புண்டரீகாக்ஷ ஸம்ஜ்ஞித:" என்று இவ்வளவும் விவக்ஷிதம். (மத்தகஜம்) இத்யாதிக்கு அபிஜநவித்யாவ்ருத்தங்களாலே மத்தகஜங்கள் போன்ற ஸம்ஸாரிகளைத் திருத்தவல்லருமாய், புத்தர் நோன்பியர் முதலானாரை வெல்லவும் வல்லரானவ ரென்று வ்யங்க்யார்த்தம் கண்டுகொள்வது. இப்படி க்ருதார்த்தாநுஸந்தாநம் பண்ணுகை யன்றாகில், ஐஶ்வர்யத்தைக் காற்கடை கொண்டபடி சொல்லிக்கொள்ள வொண்ணாதிறே. "திடமாக" என்றதுக்கு - "அறியவல்லார்" என்றத்தோடு அந்வயமாக்கி, தாத்பர்யத்தையருளிச்செய்கிறார் (பாபங்களையித்யாதி). (எலியெலும்பன்)- அசக்தனென்றபடி ... ... (கo)

ஜீயர்திருவடிகளே சரணம்.

முதற்பத்தில் ஐந்தாந்திருமொழி முடிந்தது.

(க)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி - உ - பத்து - சு - திருமொழி - நண்ணாத ப்ரவேசம்.

வ்யா.—(க) † “𑌅𑌹𑌮𑌸𑍍𑌮𑍍𑌯𑌪𑌰𑌾𑌧𑌾𑌨𑌾𑌮𑍍 - அஹமஸ்ம்யபராதாநாம்” இத்யாதி “𑌸𑍋𑌽𑌤𑍇𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍍𑌰𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 - ஸாதேவேஸ்மிந் ப்ரயுஜ்யதாம்” என்று சரணாகதிக்கு லக்ஷணம் சொல்லிற்று. அதுதன்னை (உ)*வாணிலாமுறுவலிலும் (ந) *தாயெ தந்தையிலுமாக அநுஸந்தித்தார். அதுதன்னை(ச)“காணாதுதிரிதருவேன் கண்டுகொண்டேன்” என்றும், (ரு) “தொண்டனேன் கண்டுகொண்டேன்” என்றும் அதுதன்னை யநுபாஷித்தார். (சு) “𑌆𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌃 𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍂𑌲𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌰𑍍𑌜𑌨𑌮𑍍 - ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்” என்று அவனுக்கு § ஸம்பாவிதமாய் அநந்தரம் வரும் ஸ்வபாவங்களைச் ‡ சொல்லுகிறது. அவை தமக்குப் பிறந்தபடி சொல்லிற்றாயிற்றிதில். †அவைதானிரண்டும் லக்ஷணமாக வேண்டிற்றில்லை, பரஸ்பர விரோதத்தாலே, (எ) † “𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 - த்வமேவ” என்று உபாயநைரபேக்ஷ்யத்தைச் சொல்லுகையாலும், இதில் அங்கங்களோடேகூடியிருப்பதாகச் சொல்லுகையாலும். † ஆகையால் அது லக்ஷணமாய் இது அவனுக்கு ஸம்பாவித ஸ்வபாவமாமித்தனை. (அ)† “𑌪𑌶𑍁𑌰𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌃 𑌪𑌕𑍍𑌷𑍀 𑌵𑌾 𑌯𑍇 𑌚 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌃 । 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌯𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍 - பசுர்மநுஷ்ய: பக்ஷீவா யேசவைஷ்ணவஸம்ஶ்ரயா: । தேநைவதேப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம்பதம்” என்று பாகவத ஸமாஶ்ரயணத்தை, ஜ்ஞாநமும் ஜ்ஞாநாநுரூபமான வ்ருத்தமுமொழியவேயும் பகவத்ப்ராப்திக்கு ஸாதநமாகச் சொல்லாகின்றதிறே. ம்ருகபக்ஷ்யாதிகளையுங்கூட வெடுக்கிறதிறே. † இவைதான் பின்னை † இரண்டோ? பாகவத ஸமாஶ்ரயணமாவது, பகவத்ஸமாஶ்ரயணத்தினுடைய காஷ்டையன்றோ வென்னில்; அவ்யவதாநேந பகவத் ஸமாஶ்ரயணம் பண்ணுகிறோமென்றிருப்பதொன்றுண்டு, பாகவத ஸமாஶ்ரயணத்தாலே பகவத்ஸமாஶ்ரயணம் பண்ணுவது மொன்றுண்டு, இந்த

§ ஸம்பாவிதமான அநந்தரஸ்வபாவங்களை. ‡ சொல்லுகிறதாயிற்று.

(க) பாஞ்ச-
(உ) க-சு-
(ந) க-கூ-
(ச) உ-ரு-எ
(ரு) உ-ரு-கூ
(சு) பாஞ்ச-
(எ) பாஞ்ச-
(அ)

†முகபேதத்தைப்பற்றச்சொல்லுகிறது. பாகவத †ஸமாஶ்ரயணமொழிய பகவத்விஷயத்திலிழியுந் துறையில்லை. (க) † [மாறுயவித்யாதி] வேறாகவேத்தி யிருப்பாராகிறாரார்? மற்றவரைச் சாத்தியிருப்பாராகிறாரார்? இத்தை ஒருதாஹரணநிஷ்டமாகக் காட்டலாமோ வென்னில்; வேறாக வேத்தியிருப்பாராகிறார் - ஸர்வேஶ்வரனைக்கண்டவநந்தரம் தம்மைப்பேணாதே பகவத்ஸம்ருத்திக்கு மங்களாசாஸநம் பண்ணும் பெரியாழ்வார்போல்வார்; மற்றவரைச் சாத்தியிருப்பாராகிறார், (உ) "வல்லபரிசுவருவிப்பரேலது காண்டுமே" என்றிருக்குமாண்டாள்போல்வார். †இனி இவர்தாம் பாகவதராக நினைத்திருப்பது - உகந்தருளின நிலங்களில் நீர்மையிலே ஈடுபட்டிருக்குமவர்களை. அபாகவதராக நினைத்திருப்பது - அங்குத்தை வாசியறியாதவர்களை. (௩) †"ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப:- ஆநுகூல்யஸ்யஸங்கல்ப:" என்கிறது - ஒன்று செய்து தலைக்கட்டிற்றாய் ஓரளவில் மீளுமதல்லாமையாலே ப்ராப்திதசையிலும் அநுவர்த்திக்குமது இங்கோரளவில் மீளாதிறே. "ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்- ப்ராதிகூல்யஸ்யவர்ஜநம்" ப்ராப்தியளவுமிறேநிற்பது. ப்ராதிகூல்ய நிவ்ருத்தி பிறந்தாலுண்டாமதாகையாலே ஆநுகூல்யம்பிற்பட்டதிறே. அந்த ப்ராதிகூல்ய நிவ்ருத்தி தமக்குண்டானபடியைச் சொல்லுகிறார் முதற்பாட்டில். †இது தானுண்டாக வமையுமிறே; ஸம்பந்தமின்றாக வுண்டாக்க வேண்டாவே. தானேறிட்டுக்கொண்டத்தைத் தவிருமித்தனைவேண்டுவது.

அநு.—நண்ணாதப்ரவேசம் - ஆழ்வார் தம்முடைய பூர்வவ்ருத்தாநுஸந்தாநபூர்வகம் திருமந்த்ரலாபத்தை யநுஸந்தித்துத் தம்திருவுள்ளத்துக்குப் பல திருமொழிகளிலேயு முபதேசித்து, நெஞ்சு இசைந்தவாறே ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே சரணம்புக்கு இஷ்டமான கைங்கர்யத்தைப்ப்ரார்த்தித்து அநிஷ்ட நிவ்ருத்தியையு மர்த்தித்துக் கைங்கர்யவர்த்தகமான புத்தியையு முபேக்ஷித்துத் தம் நெஞ்சைக்கொண்டாடி அநந்தரம் அவன் நின்றுமிருந்தும் கிடந்தும் நடந்தும், ஆஶ்ரிதார்த்தமாக விருக்கும்படியைப் பலதிருப்பதிகளிலே யநுபவித்துக்கொண்டுவந்து, கீழ்த்திருமொழியிலே, ஸம்ஸாரிகளை வந்தாஶ்ரயிக்கச்சொல்லி நின்றார்; இத்திருமொழியிலே, (௪) "நின் திருவெட்டெழுத்தும்கற்று, நானுற்றது முன்னடியார்க்கடிமை" என்கிறபடியே உட்பொருளான பாகவத சேஷத்வத்தை யநுஸந்தித்து, அத்தைத் தம்திருவுள்ளத்துக்குப் பலபடி உபதேசிக்கிறாரென்று மஹாவாக்ய ஸங்கதியை யுட்கொண்டு, "எண்ணாதேயிருப்பாரை யிறைப்பொழுது மெண்ணோமே" என்

(க) ச-திரு-   (உ) நா-திரு-௧௦-௧௦-   (௩) பாஞ்சரா-
(௪) அ - ௧௦ - ௩ -

றும், "ஆரெண்ணும் நெஞ்சுடையா ரவரெம்மையாள்வாரே," என்றும்,ப்ராதிகூல்யவர்ஜநாநுகூல்ய ஸங்கல்பங்களை யநுஸந்திக்கைக்கு ஸங்கதி யருளிச்செய்கிறார் (அஹமஸ்மீத்யாதி வாக்யபஞ்சகத்தாலே). "நான் கண்டுகொண்டேன்" என்று மதுதன்னை அநுபாஷித்தார் என்றதுக்கு - ஸித்தோபாயத்தைக் கண்டே னென்றாய், அத்தை ஆஶ்ரயித்தேன் நான், நீங்களுமாஶ்ரயியுங்கோளென்றுபரார்த்த மநுபாஷித்தா ரென்றுகருத்து. ஆக, தன்னுடைய அபராதங்களை யநுஸந்தித்துக்கொண்டு, ரக்ஷகாந்தரோபாயாந்தரஶூந்யனாய் அவன் றன்னையே உபாயமாக அநுஸந்திக்கை ப்ரபத்திக்குலக்ஷணம், இப்படி ப்ரபந்நனானவனுக்கு அவகாத ஸ்வேதம்போலே ஸம்பாவித ஸ்வபாவங்கள் ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளென்றதாயிற்று. § "అహమస్మ్యపరాధానామాలయో౽కిఞ్చనో౽గతిః। త్వమేవోపాయభూతో మే భవేతి ప్రార్థనామతిః। శరణాగతిరిత్యుక్తా సా దేవే౽స్మిన్ప్రయుజ్యతామ్ - அஹமஸ்ம்யபராதாநா மாலயோகிஞ்சநோகதிః। த்வமேவோபாயபூதோமே பவேதி ப்ரார்த்தநாமதிః। சரணாகதிரித்யுக்தா ஸாதேவேஸ்மிந் ப்ரயுஜ்யதாம்" என்றும் - "ఆనుకూల్యస్యసఙ్కల్పః ప్రాతికూల్యస్యవర్జనమ్ - రక్షిష్యతీతివిశ్వాసో గోప్తృత్వవరణంతథా। ఆత్మనిక్షేపకార్పణ్యే షడ్విధా శరణాగతిః - ஆநுகூல்யஸ்யஸங்கல்பః ப்ராதிகூல்யஸ்யவர்ஜநம்। ரக்ஷிஷ்யதீதி விஶ்வாஸோ கோப்த்ருத்வவரணம்ததா। ஆத்ம நிக்ஷேபகார்பண்யே ஷட்விதா சரணாகதிః" என்றும் சொல்லுகிற விவையிரண்டும் லக்ஷணமென்னவொண்ணாதோவென்ன, அருளிச்செய்கிறார் (அவைதா னிரண்டுமித்யாதி). பரஸ்பரவிரோதந் தன்னைக்காட்டுகிறார் (த்வமேவேத்யாதி). அதாவது - "త్వమే వోపాయభూతో మేభవ - த்வமேவோபாய பூதோமேபவ" என்கிற ப்ரார்த்தனையானது சைதந்யகார்யமான உபாய பரிக்ரஹரூபமாகையால் உபாய மல்லாமையாலே, யாகாதி பலஸாதநங்களுக்குப்போல ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளை அங்கமாக வசநம் விதிக்கமாட்டாதாகையால், (பூ) பலோபாயமான அவன் றனக்கே யிவற்றை அங்கமாகச்சொல்லுகிற தென்னு

---

§ சரணாகதி லக்ஷணமாவது - ஸ்வாபராதத்தையும் ஆகிஞ்சந்யாநந்ய கதித்வங்களையும் முன்னிட்டுக்கொண்டு சரணம்புகுருகை. "கண்டுகொண்டேன்" என்று ஜ்ஞாநஸாக்ஷாத்காரமாகையாலே ப்ரபத்தியைச்சொல்லுகிறது. "సుసుఖం కర్తుమ్ - ஸுஸுகம்கர்தும்" என்று ப்ரபத்தியினுடைய ஸுகரூபத்வம் கிம்புநர்ந்யாயஸித்தமாகையாலே "கண்டுகொண்டேன்" என்ற ஸாக்ஷாத்காரரூபஜ்ஞாநத்தை ப்ரபத்தியாகச் சொல்லுகிறதென்றருளிச்செய்வர். "అహమస్మ్యపరాధానామాలయః - அஹமஸ்ம்யபராதாநாமாலயః" என்கிற ஶ்லோகத்திற் சொன்னது ப்ரபத்தி லக்ஷணமாகவேணுமோ? "ఆనుకూల్యస్య - ஆநுகூல்யஸ்ய" என்று சொன்னது ப்ரபத்திலக்ஷணமானுலோ வென்ன; (அவைதானிரண்டும்) என்றது.

மளவில்; ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாயிருக்குமவனுக்கு அங்காபேக்ஷையில்லாமையாலும், அவன் நிரபேக்ஷோபாயமாகையாலும், அவை அங்கமென்னு மதுக்கும் ஸர்வஜ்ஞத்வாதிகுணாகரன் நிரபேக்ஷோபாய மென்கைக்கும் சேராதென்கை. "ஆநுகூல்யஸ்ய" இத்யாதியே லக்ஷணமாய், "அஹமஸ்மி" இத்யாதி ஸம்பாவித ஸ்வபாவபரமென்ன வொண்ணாது; ஸாங்கப்ரபத்யநுஷ்டாதாவுக்கு ததேகோபாயத்வ புத்திபிறவாமையாலும், உபாயாந்தர சூந்யதை யில்லாமையாலும், ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம் ப்ரஸங்கிக்கையாலே; ரக்ஷகாந்தர ப்ரஸங்கமுண்டாகையாலும் ஸ்லோகார்த்தம் தட்டுகையாலே; இனி அதிகாரிபேதத்தாலே லக்ஷண மென்னவொண்ணாதோவென்னில், ஓரதிகாரிக்கே அவையெல்லாம் ஸம்பாவிதங்களாயிருக்க கல்பநாகௌரவம் ப்ரஸங்கிக்குமென்று இவ்வர்த்தங்களையெல்லாம் திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டு, உக்தார்த்தத்தை ஸ்த்ரீகரிக்கிறார், (ஆகையாலித்யாதி). இவ்வாக்யத்துக்குக்கீழே விரோதம் ஸ்பஷ்டமிறேயென்று கூட்டிக்கொள்வது. §பகவத்ப்ரபந்நனுடைய ஸம்பாவித ஸ்வபாவங்களையருளிச்செய்கிறாராகில், "நினைவாரென்நாயகரே" "எங்கள்குலதெய்வமே" என்று பாகவதர்களை சேஷிகளாகவும், அவர்களை, "நச்சென்றன் நன்னெஞ்சே" இத்யாதிகளாலே ஆஶ்ரயிக்கச்சொல்லி விதிக்கிறதென்னென்ன வருளிச்செய்கிறார் (பசுரித்யாதி வாக்யத்வயத்தாலே). பகவத்ப்ரபந்நனுக்கு பாகவதர்களே உபாயமென்கிறவதுவும் ஸம்பாவிதமென்று திருவுள்ளம். ஆனால் அவனே உபாயமென்றத்தோடு ததீயரே உபாயமென்கை விரோதியாதோவென்னும் சங்காநுவாதம் பண்ணி, பரிஹரிக்கிறார், (இவைதானித்யாதி). (இரண்டோ) என்றதுக்கு - இரண்டானால் விரோதியாதோவென்று கருத்து. (முகபேதத்தைப்பற்ற) என்றதுக்கு-ப்ரகாரபேதமொழிய ஸ்வரூபபேதமில்லை யாகையாலே விரோதியாதென்றுகருத்து. ஆக, பாகவதர்களைப் புருஷகாரமாக்கி பகவானே உபாயமென்றிருக்கையும், பாகவதரை உபாய மென்றுகொண்டு பகவானை உபாயமென்றிருக்கையுமே முகபேதமென்றதாயிற்று. ஸ்வரூபபேத மின்றிக்கே இரண்டிலும் உபாயத்வம் பகவானுக்கேயானால், இந்த முகபேதத்துக்கு ப்ரயோஜநமென்னென்ன வருளிச்

---

§ ஸங்கத்யந்தரம் (பசுர்மநுஷ்யஃ)என்றது. அதாவது - கீழெல்லாவற்றாலும் ப்ரபத்திபண்ணினபடியாய், ப்ரபந்நனானவனுக்கு ஸம்பாவிதமான ஆநுகூல்யாதிகளைச் சொல்லுகிறது இத்திருமொழி என்று ப்ரதமஸங்கதி. அன்றிக்கே, கீழெல்லாம் பகவத்விஷயத்திலே ப்ரபத்திபண்ணி இத்திருமொழியிலே பாகவதர்களே உத்தேஶ்யரென்று அவர்களைப்பற்றுகிறாரென்று த்விதீயஸங்கதி. அவ்யவதாநேந பாகவதஸமாஶ்ரயணம் பண்ணுவதுமுண்டென்றால் ஸங்கதமாயிருக்குமென்றருளிச்செய்வர்.

செய்கிறார் (பாகவதேத்யாதி). (துறையில்லை) என்றதுக்கு - பாகவதர்களைப் புருஷகாரமாக்கிக்கொண்டு பகவானே உபாயமென்றிருக்கும் அதிகாரிக்கு பகவந்நிரங்குசஸ்வாதந்த்ர்யத்தைக்கண்டு அஞ்ச ப்ரஸக்தியுண்டாகையாலே, பாகவதர்களை உபாயமென்று கொண்டிருக்கை யொழிய வேறு வழியில்லை யென்றுகருத்து. § இப்படி யிருந்தவர்க்குத்தான் ஈஸ்வரஸ்வாதந்த்ர்யத்துக்கு அஞ்சவேண்டாவோவென்ன; வேண்டா, இதுகார்யகரமென்று விவக்ஷித்து ப்ரமாணம் காட்டுகிறார் (மாருயவித்யாதி). தங்களைப்பேணாதே, பகவத் ஸம்ருத்திக்கே மங்களாசாஸநம் பண்ணுமவர்களையே தன்பேற்றுக்கு உபாயம் என்றிருக்குமவனிடத்திலே ஈஸ்வரஸ்வாதந்த்ர்யம் ஜீவியாதே, இவர்களிடத்திலே ப்ரேமாதிசயத்தாலே இவர்களபேக்ஷிதம், (க) * "கையிலங்கு நெல்லிக்கனியாமென்று திருவுள்ளம். "கடல்மல்லைத் தலசயனம் நச்சித்தொழுவாரை" என்று விசேஷிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (இனியித்யாதி). ஸம்பாவிதஸ்வபாவங்களைச் சொல்லுகிற ஶ்லோகத்திற்சொன்ன க்ரமம்தவிர, ப்ராதிகூல்யவர்ஜநத்தை முந்துற அநுஸந்திப்பானென்னென்ன; இரண்டு விதமாகப் பரிஹார மருளிச்செய்கிறார் (ஆநுகூல்யஸ்யேத்யாதி, வேண்டுவது) என்னுமளவும். அதிலிரண்டாம் பரிஹாரம் (இதுதாணித்யாதி).

மூ.—நண்ணாத வாளவுண ரிடைப்புக்கு வானவரைப்
பெண்ணாகி யமுதூட்டும் பெருமானார் மருவினிய
தண்ணார்ந்த கடல்மல்லைத் தலசயனத் துறைவாரை
எண்ணாதே யிருப்பாரை யிறைப்பொழுது மெண்ணோமே.

---

§ பாகவத ஸமாஶ்ரயணம் பகவல்லாப ஸாதநமென்றதுக்கு "பசுர் மநுஷ்யஃ" என்கிற ஶ்லோகத்தை ப்ரமாணமாக அருளிச்செய்து, ஆழ்வாருடைய ஸூக்தியையுங் காட்டுகிறார் (மாருயஇத்யாதி) என்று. ப்ரதமஸங்கதியில், ஸம்பாவிதஸ்வபாவமான ஆநுகூல்யஸங்கல்பமும் ப்ராதிகூல்யவர்ஜநமும் பாகவதப்ராவண்யமும் அபாகவதபரித்யாகமும் என்றுவிவக்ஷித்து, ஆனால் கேவலம் பாகவதாபாகவதர்கள் உபாதேயரும் த்யாஜ்யருமென்று ஸாமாந்யேந சொல்லாமல் "தலசயநத்துறைவாரை எண்ணாதே யிருப்பாரை" என்றும் "தலசயநமாரெண்ணும் நெஞ்சுடையார்" என்றும் விவக்ஷிக்கவேணுமோ என்ன; அருளிச்செய்கிறார் (இனி இவர்தாம்) என்று துடங்கி. ஆனால் ப்ராதிகூல்ய நிவ்ருத்தியை முற்படச்சொல்லுவானென்னென்ன; (ஆநுகூல்யஸ்ய) என்று. ஹேத்வந்தரம் (ப்ராதிகூல்யநிவ்ருத்தி) என்றது.

(க) உபதேசரத்னமாலை -

பதம்.	உரை.	பதம்.	உரை.
நண்ணாத	தன்னைக்கிட்டாதவர்களாய்	கடல்	கடற்கரையிலேயுள்ள
வாள்	வாளையுடையரான	மல்லை	ஸ்ரீமல்லாபுரியிலே
அவுணரிடை	அஸுரர்கள்நடுவே	தலசயனத்து	பூமியாகிறதிருப்பள்ளியிலே
பெண்ணாகிப்புக்கு	ஸ்த்ரீவேஷங்கொண்டுபுக்கு	உறைவாரை	பள்ளிகொண்டருளுமவரை
வானவரை	தேவர்களை	எண்ணாது	நினையாமல்
அமுது ஊட்டும்	அம்ருதத்தைபுஜிப்பிக்கும்	இருப்பாரை	அந்தக்ஷேத்ரத்திலே நித்யவாஸம்பண்ணுமவர்களை
பெருமானார்	பெருமையையுடையவனாய்,		
மருவ	பொருந்திவர்த்திப்பதற்கு		
இனிய	இனியதேசமாய்	இறைப்பொழுதும்	க்ஷணகாலமும்
தண் ஆர்ந்த	குளிர்த்திமாறாததாய்	எண்ணோம்	நினையோம். (க)

வ்யா.—முதற்பாட்டு (நண்ணாத வித்யாதி) † ப்ரயோஜநாந்தரபரராய்த் தன்னை உகவாதே யிருப்பார்க்குங்கூட அபேக்ஷித ஸம்விதானம் பண்ணுமவன்; நம்மை யுகப்பாரையும் கிடைக்கவற்றோவென்று அவஸர ப்ரதீக்ஷனாய் இங்கேவந்து கிடக்கிற இந்நீர்மையை யநுஸந்தியாதே புறம்பே உண்டுடுத்துப் போதுபோக்குவாரை ஒரு வஸ்துவாக நினைத்திரோ மென்கிறார்.

(நண்ணாத)† ஶ்ரீவிதுரர்பட்டது படுகிறாராயிற்று † நடுவே இவர்; (ச) "సంస్పృశన్నాసనం శౌరేర్మహామతిరుపావిశత్ - ஸம்ஸ்ப்ருசந்நாஸநம்சௌரேர்மஹாமதிருபாவிசத்'' என்றதிறே - † கடல் கலங்கினாற்போலே கலங்கும்போலே காணும் மஹாமதிக†ளென்று. துர்யோதந க்ருஹத்திலே எழுந்தருளினபோது பொய்யாஸநமும் வஞ்சநமுமாய்ப் புகுந்த ப்ரமாதத்தை நினைத்தஞ்சினபடியாலே, "நாமுமொரு குலையில் காயன்றோ, நாமும் ஸம்ஸாரிகளிலேயொருவரானபின்பு நம்மைத்தான் விஶ்வஸிக்க வேணுமோ''என்று †தம்மை யதிசங்கை பண்ணினபடியாலே தாம்படுத்த படுக்கையையும் தடவிப்பார்த்தாரிறே. பிள்ளையுறங்கா வில்லிதாஸர் பெருமாளெழுந்தருளப் புக்கால் சொட்டை†முட்டியிலே கையைவைத்துக்கொடு ஸேவிப்பராம், † ஒருவரிடறுதல் பேர்தல்செய்ததாகில் தம்மை முடித்துக்கொள்வராக. † அத்தை யநுஸந்தித்து நம்முதலிகளிவரை மஹாமதிகளென்றும். அழைப்பது. † கலங்குகைபோலேகாணும் மஹாமதிகளாவது.

(ச) வி - பு - ரு -

அஸ்த்தாநே பயசங்கை பண்ணுவார்க்கெல்லாம் பேராய்க்கொள்ளீர் மஹாமதிகளென்று. (நண்ணாத) பகவத்விஷயத்திலே த்வேஷம் ப்ரக்ருதியாயாயிற்றிருப்பது. †மநுஷ்ய ஜந்மமா யிருக்கச்செய்தே அஸுராவேசத்தாலே பொருந்தாதேயிருப்பாருண்டு, அங்ஙனன்றிக்கே பிறப்பே ஆஸுர ப்ரக்ருதிகளா யிருக்குமவர்கள். அதுக்கு மேலே ஸாயுதருமா யிருக்குமவர்கள் நடுவே போய்ப்புக்கு. †இப்படிபோய்ப் புகுவது ஒருப்ரஹ்லாதன்போல்வார்க்கோவென்னில், (வானவரை) அம்ருதங்கொண்டவநந்தரம் "உன்னோபாதி நாங்களும் நித்யர்" என்று ஒக்கவபிமாநித்திருக்கும்படியான தேவர்களுக்காக வாயிற்று. (பெண்ணாகி)†புருஷோத்தமனை தன்படிக்குச் சேராத ஸ்த்ரீவேஷத்தை யேறிட்டுக்கொண்டு. (அமுதூட்டும்).† அவன்றன்னை யுகந்து "நீ யெங்களுக்கு வேணும்" என்கை யன்றிக்கே, "உப்புச்சாறமையும்" என்றிருப்பார்க்கு மத்தைக் கொடுக்கு மவனாயிற்று. † அம்ருதபாநத்திலே யாயிற்று அவர்களுக்கந்வயம். கடல்கடைகை துடக்கமான வ்யாபாரங்களையடையத் தன்தலையிலே யேறிட்டுக்கொண்டு. (பெருமானார்) † உறங்குகிற ப்ரஜையை எழுப்பியூட்டும் தாயைப்போலே. இதென்ன நிருபாதிக ஸம்பந்தந்தான்.

(மருவினிய) † ரஸவஸ்துவை ஆதரிப்பாரைப் பெற்றது. (க) "ஸர்வரஸ: - ஸர்வரஸ:" என்கிற நம்மையு மாதரிப்பாரைக்கிடைக்குமோ என்று படுகாடுகிடந்தானாயிற்று. (மருவினிய வித்யாதி) † மருவவினிய தேசமாய் ஶ்ரமஹரதை விஞ்சி யிருப்பதாய்ச் சிறுதிவலை திருமேனியிலேவந்து ஸ்பர்சிக்கும்படியாயிருக்கிற திருக்கடல்மல்லையிலே † ஆஶ்ரிதனை யுகந்து ஸ்த்தலசயநத்திலே நித்யவாஸம்பண்ணுகிறவனை. (எண்ணாதே) † "நித்யஸூரிகள் நடுவேயிருக்கக்கடவ வஸ்து இப்படி ஸம்ஸாரத்திலே புகுந்து தரைக்கிடை கிடப்பதே! இதென்ன நீர்மையிருக்கும்படியே" என்று அநவரதம் பாவித்தல் † சொல்லுதல் செய்கையாயிற்றுச் சேதநர்க்குச்செய்யவடுப்பது; இதுசெய்யாதே யிருப்பாரை. † அவனிடையாட்டங்கொண்டு கார்யமற்று கேவல தேஹபோஷண பரராயிருப்பாரை. (இறைப்பொழுது மெண்ணோமே) † "எண்ணப்பெற்றிலோம்" என்ற அநுதாபமுமின்றிக்கே யிருப்பாரை. அவஸ்துக்களை எண்ணும்போது ஒருகால விசேஷமுண்டிறே, † வஸ்து ப்ரதியோகியாக வெண்ணுமதுண்டிறே, அவ்வளவிலு மெண்ணோ மென்கிறார். ... ... (க)

(க) சாந்தோ -

அரு.—முதற்பாட்டு. (நண்ணாதவாளித்யாதி) "பெண்ணாகி யின்னமுதம் வஞ்சித்தானை" என்ற அவ்வபதாநத்திலே நெஞ்சு மூண்டிருக்கையாலே அத்தை ஸப்ரகாரமாக அநுஸந்திக்கிறாரென்று விவக்ஷித்து இப்பாட்டுக்குத் தொகுத்த தாத்பர்யமருளிச்செய்கிறார், (ப்ரயோஜநேத்யாதி).

"அவுணரிடைப்புக்கு" என்று சொல்லுகையாலே தோற்றின பயத்தையருளிச்செய்கிறார் (ஸ்ரீவிதுரரித்யாதி). (நடுவேயிவர்) என்றதுக்கு - மோஹநாஸ்த்ரத்தை அவுணர்மேலே ப்ரயோகித்து விட்டான், வானவர் அமுதுண்டு களித்தார்கள், இவ்வாழ்வார் அஸ்த்தானே பயசங்கிகளாகையாலே அஞ்சுகிறாரென்று கருத்து. மஹாமதிகளானால் கலங்கக் கூடுமோவென்ன, (கடலித்யாதி). "ஆனைக்கும் தனக்குத்தக்கவாதம்" என்னுமாம்பாலே மதியுள்ளவனையும் கலக்கத்துக்கூடலென்றபடி. (என்று) என்றவநந்தரம், கருத்து என்று சேஷம். (தம்மை அதிசங்கைபண்ணி) என்றதுக்கும்-"மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்று தன்னிழலையும் தானதிசங்கை பண்ணுமாபோலே பண்ணினாரென்று கருத்து. (முட்டி) - ஆசு-பிடியென்றபடி. சொட்டை முட்டியில் கையிட்டாராகில் பகவத்பரிகரங்களிலாரை யென்செய்யப்போமென்ன வருளிச்செய்கிறார் (ஒருவரித்யாதி). ஆனால் ப்ரக்ருதத்திலே யென்னென்ன, (அத்தையித்யாதி). இவ்வதிஷயத்தாலே பகவத்விஷயத்தில் கலங்கும்படி ப்ரேமம்வருகையே மஹாமதித்வமென்று பெரியோர்களுக்குத் திருவுள்ளமென்றதாயிற்று, எத்தனை சொன்னாலும் மதிபதம் கலக்கத்தைச்சொல்லுமோ, விபரீத லக்ஷணையாலே சொன்னால் சொல்லலாமென்ன வருளிச்செய்கிறார் (கலங்குகையித்யாதி வாக்யத்வயத்தாலே). இத்தால் ஜ்ஞாநவிபாக கார்யமான கலக்கமாகையாலே சொல்லலாமென்கை "அவுணர்" என்றபோதே நண்ணாதது ஸித்தமன்றோ, விசேஷணமிடவேணுமோவென்ன, அருளிச்செய்கிறார் (மநுஷ்யேத்யாதி). கர்மாநுகுணமாக வானிலிருப்பு ஸாவதியாயிருக்கச்செய்தேயும் அத்தை ஸ்த்திரமென்றே நினைத்திருக்குமவர்கள் கருத்தை அநுஸரித்து "வானவர்" என்று நிரூபகமாக வருளிச்செய்ததுக்கு ப்ரஶ்நப்ரதிவசந முகத்தாலே யருளிச்செய்கிறார் (இப்படியித்யாதி வாக்யத்ரயத்தாலே). "ஆகி" என்கிற அபூததத்பாவனுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (புருஷோத்தமனித்யாதி). "தலசயனத்துறைவாரை யெண்ணாதேயிருப்பாரை - எண்ணோம்" என்னுமவர், "அமுதூட்டும்" என்று இத்தை ஒருபுருஷார்த்தமாக வெண்ணாதே என்று விவக்ஷித்து, ததநுகுணமாக, அமுதுபதத்துக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அவனித்யாதி). கொடுக்கும் என்னாதே, "ஊட்டும்" என்கையாலே பலித்தவர்த்தம் (அம்ருதேத்யாதி). "ஊட்டும்" என்கிற பதத்துக்குத் தாத்பர்யாநுகுணமாக "பெருமான்" என்ற ஸ்வாமித்வ ஸம்பந்தாநுஸந்தாநத்துக்கு உட்கருத்து உறங்குகிறவித்யாதி),

ஈ ிற்பதங்களிலே நோக்காக, "தலசயனத்துறைவாரை" என்னுமள ..க் .. ாத்பர்யமருளிச்செய்கிறார் (ரஸேத்யாதி). மருவ என்ற வகரம் கடை .. றைத்தலாயிருக்கிறதென்று விவக்ஷித்து, சப்தார்த்தம் (மருவவித்யாதி). (ஆஶ்ரிதனை) - புண்டரீகனை. "பெருமானார் தலசயனத்துறைவார்" என்ற பதங்களிலே நோக்காகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நித்யேத்யாதி). (சொல்லுதல்) என்றது - அர்த்தஸித்தார்த்தம். ஏவகாரதாத்பர்யம் (அவனித்யாதி) § "இருப்பார்" என்றபதத்துக்குத் தாத்பர்யகதநமுகேந "இறைப்பொழுதும்" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (எண்ணவித்யாதி). அவன் தரைக்கிடையை யெண்ணாதேபோனால் தரைக்கிடை கிடக்கவிருப்பது அநுதாபமில்லாமையிறே யென்று திருவுள்ளம். இத்தால் - எண்ணாதேயிருக்கை இறைப்பொழுது மெண்ணாமைக்கு ஹேது வென்றதாயிற்று. §(வஸ்து ப்ரதியோகியாக வெண்ணுமதுண்டிறே) என்றதுக்கு "𑌉𑌦𑍍𑌵𑍇𑌜𑌨𑌾𑌰𑍍𑌥𑌤𑌯𑌾 𑌚 𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑍍𑌯𑌤𑌯𑌾 𑌚 𑌸𑍍𑌮𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 - உத்வேஜநார்த்ததயாசபரிஹார்யதயாசஸ்மர்த்தவ்ய:" என்கிறந்யாயத்தாலே அவர்களைக்கண்டு நடுங்குகைக்கும் பரிஹரிக்கைக்குமாக அஸத்துக்களை நினைக்கவேண்டிவருமே, அப்படியும் நினைக்கைக்கு க்ஷமனாகிறிலேனென்றருளிச்செய்கிறாரென்று கருத்து. ... ... (க)

மூ.—பார்வண்ணமடமங்கை பனிநன்மாமலர்க்கிழத்தி
நீர்வண்ணன் மார்வகத்தி லிருக்கையை முன்னினைந்தவனூர்
கார்வண்ண முதுமுந்நீர் கடல்மல்லைத்தலசயனம்
ஆரெண்ணும் நெஞ்சுடையா ரவரெம்மை யாள்வாரே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பார்வண்ணம்	பூமியைத்தனக்குப்ரகாரமாகவுடையளாய்	மலர்க்கிழத்தி	செந்தாமரைமலரைப்பிறந்தகமாகவுடையபெரியபிராட்டி
மடம்	ஆத்மகுணங்களையுடையளான	மார்வகத்திலிருக்கையை	வலத்திருமார்விலிருக்கையையும்
மங்கை	ஸ்ரீ பூமிப்பிராட்டி	முன்	முதலிலே
நீர்வண்ணன்	நீர்வண்ணனுடைய	நினைந்து	நினைத்து
இருக்கையை	(இடவருகில்) இருக்கையையும்,	அவன்	புருஷகாரமும்மிகையான அவனுடைய
பனி	குளிர்ந்து	ஊர்	ஊராய்
நல்	அழகியதாய்	கார்வண்ணம்	கறுத்தநிறத்தையுடைத்தாய்
மா	ஶ்லாக்யமான		

---

§ "இருப்பாரை" என்றதுக்கர்த்தாந்தரம் (எண்ணப்பெற்றிலோம்) என்றது. § "இறைப்பொழுதும்" என்றதுக்கு அர்த்தாந்தரம் (வஸ்துப்ரதியோகியாக) என்றது. விவரணமாதல்.

முது	பழையதாயிருந்துள்ள	எண்ணும் நெஞ்சுடையார்	அநுஸந்திக்கும்மநஸ்ஸ[illegible]களோ,
முந்நீர்	கடலினருகேயுள்ள	அவர்	அவர்கள்
கடல்மல்லை	திருக்கடல்மல்லையில்	எம்மை	எங்களை
தலசயனம்	ஸ்த்தலசயநத்தில் பள்ளிகொண்டிருக்கையை	ஆள்வார்	அடிமைகொள்ளத்தக்கவர்கள். (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு (பாரித்யாதி) †முதல் தன்[illegible] † குற்றம் அவன் திருவுள்ளத்தில் படாதபடிபண்ணும் ஸ்ரீபூமி[illegible] பிராட்டியும், அவன் தன் ஸர்வஜ்ஞத்வத்தாலே நம்குற்றத்தைக் †கண்டானேயாகிலும் அவன்றன்னை (க) "[illegible]-நகஶ்சிந்நாபராத்யதி" என்று † பொறுப்பிக்கும் பெரியபிராட்டியாரும், அவன் பக்கலிலே கிட்டவிருக்கையாலே நமக்கினி இழக்கவேண்டாதபடி ஸுலபனென்று அவன் நித்யவாஸம் பண்ணுகிற தேசத்தை ஹ்ருதயத்தாலே அநுஸந்திக்கு மவர்கள் என்னை † அடிமை கொள்ளும்வர்களென்கிறார்.

பாரைவண்ணமாக வுடையளாய் - பூமியைத்தனக்கு ப்ரகாரமாக வுடையளாய், ஆத்மகுணத்தை யுடையளா யிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டி. பூமிக்கபிமாநியா யிருக்குமவளிறே; † அவன்றனக்குங் கூடப் பொறைக்கு உவாத்தாயிறே இவளிருப்பது. தன்பக்கலிலே எல்லாப்ராதிகூல்யத்தையும் பண்ணிக்காலிட்டுத்துகையாநின்றாலும் "துகையாநின்றேம்" என்று கூசவேண்டாதேயிறே யிருப்பது; க்ஷமை என்றேயிறே பேர். (பனிநன்மாமலர்க்கிழத்தி) † பிறர் குற்றம்நெஞ்சில் படாதபடியான † மார்த்தவத்தை யுடையதலைவி. (உ) "[illegible] - ஸர்வகந்தஃ" என்கிற வஸ்துவையும் தன்னுடைய போக்யதையாலே துவக்கி ஆஶ்ரிதர் குற்றம் நெஞ்சில் படாதபடி பண்ணுமவள்; † அழகிய தாமரைப்பூவில் பரிமள முபாதாநமாகப் பிறந்தவள். இத்தால், ஸர்வேஶ்வரனுக்குத் தன்னோடே பணிபோரும்படியான போக்யதையை யுடையவளென்கை. இவர்கள் (நீர்வண்ணன் மார்வகத்திலிருக்கையை முன்நினைந்து)†கடல்போலே யிருக்கிற குளிர்ந்த வடிவில் இடவருகிலும் திருமார்விலுமெழுந்தருளி யிருக்கிறவிருப்பை யநுஸந்தித்து, †"நமக்குப் புருஷகாரபூதைக

(க) ரா - யு - ககசு - சச. (உ) சாந்தோ - ௩ - கச.

ளான நாய்ச்சிமார்களங்கேசேர விருந்தார்கள்" என்று அநுஸந்தித்தால் பின்னை நமக்குக்கிட்டுகைக் கொரு குறை யில்லையிறே, §மாதாபிதாக்கள் சேரவிருந்தவிடத்தில் ப்ரஜைகளுக்குச் சென்று கிட்டுகையில் ஒரு அருமை யில்லை, (க) [యత్రకృష్ణౌచకృష్ణాచ సత్యభామా చభామినీ - யத்ரக்ருஷ்ணௌச க்ருஷ்ணாச ஸத்யபாமாச பாமிநீ] க்ருஷ்ணனும் ஸ்ரீஸத்யபாமைப் பிராட்டியும் அர்ஜுநனும் த்ரௌபதியுமாகக் கால்மேல் காலேறிட்டு ஒருவர்க்கும் சென்று கிட்டவொண்ணாதபடி ஏகாந்தமாக விருக்கிறவிடத்திலே, "ஸஞ்ஜயன்வந்தான்" என்றறிவிக்க, "இவ்விருப்புக்காண உகப்பானொருத்தன், இது தன்னையு மூகவாதார் மண்ணுண்ணும்படி சொல்லவல்லா னொருவன், புகுரவிடு" என்றானிறே. (உ) [నాభిమన్యుర్నయమౌ తందేశమభిజగ్ముః - நசாபிமந்யுர்நயமௌ தம்தேச மபிஜக்மது:" மாதாபிதாக்க ளிருந்தவிடத்தில் ப்ரஜைகள் சென்று கிட்டுகையி லொரு அருமையில்லையிறே, ஆயிருக்கச்செய்தே அந்த ப்ரஜைகளுங் கிட்டவொண்ணாதபடி யிருக்கிற ஸமயத்திலே யாயிற்று இவனை யழைத்துக் காட்சி கொடுத்தது. ... ... *

அரு.—இரண்டாம்பாட்டு. (பார்வண்ணமித்யாதி) பூமிப்பிராட்டியையும் பெரியபிராட்டியையும் பாகவதரிப்போது அநுஸந்திப்பது, பூர்வகண்டத்திற்போலே புருஷகாரத்வேநவும், அவனை ப்ராபகத்வேநவும் என்று விவக்ஷித்துப் பாட்டுக்குத் தொகுத்த பாவத்தையருளிச்செய்கிறார் (முதலித்யாதி). ஆக, இத்தால் பிராட்டிமாரைப் புருஷகாரமாகவும், எம்பெருமானை ப்ராபகனாகவும் அத்யவஸித்திருக்குமவர்களே தமக்கும் ப்ராபகர்களென்று அநுஸந்திக்கிறாரென்று கருத்து. (குற்றம்) என்றது - குற்றத்தின் கார்யமான தண்டநமென்றபடி. இங்ஙனன்றாகில், "குற்றம் திருவுள்ளத்திற்படாமை" என்றத்தோடும் "பூமிப்பிராட்டியைப் பொறைக்கு உவாத்தாய்" என்று மேல் சொன்னத்தோடும் விரோதிக்குமிறே. (கண்டானேயாகிலும்) என்றது - கண்டு தண்டிக்க நினைத்தானேயாகிலுமென்றபடி. (பொறுப்பிக்கும்) என்றது - பொறுக்குமதுக்கு ஹேதுவான க்ருபையையுண்டாக்குமென்றபடி. (அடிமைகொள்ளுமவர்கள்) என்றது - (ఫల) பலஸாதந சிஶ்ருஷையைக் கொள்வர்களென்கை.

அவனுக்கு ஸ்வதந்த்ரமையுண்டாயிருக்குமே, இவளுண்டாக்குகையென்னென்ன வருளிச்செய்கிறார், (அவனித்யாதி வாக்யத்ரயத்தாலே). இத்தால் ஸ்வாதந்த்ர்யத்தில் அவன்பொறை தலைமடங்கினால் இவளுண்டாக்

(க) பார - (உ) பார -

குவளென்று கருத்து. "பனி" என்றத்தாலே குளிர்த்தியைச்சொல்லி, அத்தால் பலிதார்த்தம் (பிறரித்யாதி). (மார்த்தவத்தை)-நெஞ்சில்மார்த்தவத்தை. ‡ "மாமலர்" என்றத்தால் பலிதார்த்தம் (ஸர்வேத்யாதி). நல்பதத்துக்கு அர்த்தமருளிச்செய்துகொண்டு அவனைத் துவக்கும்படியான போக்யதை தானும் ஸ்வாபாவிக பரிமளவத்வத்தைப்பற்ற என்றருளிச்செய்கிறார் (அழகியவித்யாதி). "நீர்வண்ணன்" என்றவநந்தரம், இடவருகும் என்று அத்யாஹரித்தருளிச்செய்கிறார் (கடலித்யாதி). "நினைந்து எண்ணும் நெஞ்சுடையார்" என்னும்போது பௌர்வாபர்யம் தோற்றியிருக்க, "முன்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நமக்கித்யாதி). (க) "த்வயத்தில் பெரியபிராட்டியாராலே பேறு" என்கிறபடியே இதுவே ப்ரதாநமென்று கருத்து. (கிட்டுகை) என்றவநந்தரம், இல்லையென்றுசேஷம். § "அருமையில்லை" என்றதுக்கு உதாஹரணம் (யத்ரேத்யாதி). " అర్జునాఙ్కగతౌ పాదౌ కేశవస్యోపలక్షయే । అర్జునస్య చ కృష్ణాయాః శ్యామాయాశ్చాఙ్కగావుభౌ - அர்ஜுநாங்கதௌபாதௌ கேசவஸ்யோபலக்ஷயே। அர்ஜுநஸ்யச க்ருஷ்ணயாஶ் ஶ்யாமாயாஶ்சாங்ககாவுபௌ" என்கிற வசநத்தையு முட்கொண்டருளிச்செய்கிறார் (க்ருஷ்ணனுமித்யாதி). ... ... *

வ்யா-† அவ.-அநாதிகாலம் ஸம்ஸரித்துப் போருகிற இச்சேதநர்விஷயமாக ஸர்வேஶ்வரன் திருவுள்ளத்தாலே, (உ) "సుహృదం సర్వభూతానాం - ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்" என்கிறபடியே பண்ணுவித்ததொரு ஸௌஹார்த்தமுண்டிறே. இவனுடைய † ஸத்க்ரியைக்கு (ఫల) பலவ்யாப்தி யுண்டாகாநின்றால் அவனுடைய அநுக்ரஹத்துக்கு (ఫల) பலவ்யாப்தி யின்றிக்கேயிராதிறே; ஆகையாலே, அதுதானொருநாள் வரையிலே ஓரவகாசத்திலே பலிக்கவுங்கடவதா யிருக்குமிறே. அத்தாலே இவனுக்கீஶ்வரன் பக்கலிலே ஆபிமுக்யம்பிறந்து அதடியாக அவன் † விசேஷகடாக்ஷம்பண்ண, அநந்தரமிவனுக்கு அவன்பக்கலிலே ருசிவிஶ்வாஸங்கள் பிறந்து ப்ராபகனும் ப்ராப்யனு மவனேயென்று அத்யவஸித்தால் பின்பிவ † னிருக்கக் கடவபடியைச் சொல்லுகிறது.

† இனி உபாயத்திலேவந்தால், ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் உபயவிபூதியுக்தனாய் அவாப்தஸமஸ்தகாமனாயிருக்கிற ஸர்வேஶ்வரனை

---

‡ கீழ்வாக்ய விவரணம் (ஸர்வசந்த:) என்று பங்க்யந்தரேண விவரணம், (மாதாபிதாக்கள்) என்று. இப்படி இவருமவருமான சேர்த்தியிலே கிட்டின பேருண்டோ? என்ன; (யத்ரக்ருஷ்ணௌச) என்றது.

(க) முமுக்ஷுப்படி - உ - (உ) கீதை -

இஸ்ஸம்ஸாரிசேதநன் உபாயமாக வரித்தால், பின்னை அவனிவனுடைய ஸர்வபரங்களையும் தானே ஏறிட்டுக்கொண்டு நிர்வஹிப்பானாகில், அவன் செய்யுமதுக்கிவன்றானுமொருதலைப்பற்றவேண்டும்படியா யிராமையாலே பின்னை ஹிதசேஷத்தில் தனக்குச் செய்யவேண்டுவதொன்றில்லை, உபேயமாகிறது, கர்மநிபந்தநமாகப்பரிக்ரஹித்த இத்தேஹ ஸம்பந்தமற்று ஒருகதிவிசேஷத்தாலே போய் ஒருதேச விசேஷத்திலே புக்கால் பண்ணுவதொரு வ்ருத்தி விசேஷமாகையாலே, அது இதுவாகக்கூடாது; ப்ராபகாம்சத்தில் கர்தவ்யாம்ச மில்லையாகில் ப்ராப்யாம்சத்திலிது அந்வயியாதாகில்; பின்னை இதுவாவது பழைய விஷயப்ராவண்யமே ஸித்தித்துவிடுகிறதோவென்னில்; கூடாதிறே, ப்ராப்யம் இன்னதென்றுநிஷ்கர்ஷித்து ப்ராபக ஸ்வீகாரம் பண்ணுகையாலே. அதாவது - ப்ராப்யாபாஸங்களில் ருசி நிவ்ருத்தி பூர்வகமாகவிறே ப்ராப்ய ப்ரதிபத்தி, ஆகையாலே தூரதோ நிரஸ்தமிறே அது. (க) † "ஸர்வ்வധർമ്മാൻ പരിത്യജ്യ-ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்கிற விடத்தில் விஹிதகர்மங்களும் நிஷித்த பரிஹாரார்த்தமாகச் செய்யுமவையு மெல்லாம், தர்மசப்தவாச்யமாகையாலே, இவையும் த்யாகவிஷயமாய் அந்வயிக்குமென்று, அர்த்த ப்ராப்தமாய் பழைய பாபங்களையே சொல்லிற்றாய் வாராதோ? வென்னில்; வாராதிறே. †உபாயஸ்வரூபத்தாலும் அதிகாரி ஸ்வரூபத்தாலும்; அப்படியே யிருக்கிறதிதுவும், †சரீர ஸமநந்தரத்திலே ப்ராப்ய ஸித்தியா யிருக்கையாலும். இனி, ஸமஸ்த கல்யாண குணாத்மகனை உபாயமாக வரிக்கையாலும், இவன்தான் விதிபரதந்த்ரனாய் ஸாதநபுத்யா இங்கே அநுஷ்ட்டிப்ப தொன்றில்லாமையாலும், ஜ்ஞாநம் பிறந்த பின்பு செய்யுமவை யெல்லாம் தான் ஸ்வீகரித்த ப்ராப்யத்தோடும் ப்ராபகத்தோடும் சேர்ந்தல்லதிராது. †நினைத்தார் நினைத்தபடி மூலையடியே திரிகிற அஜ்ஞரிற் காட்டில் இவனுக்கொரு வ்யாவ்ருத்தி வேணுமிறே.

†இன்று நாளை நீர்வருமாறு அங்கே யிங்கே §சினையாறுபட்டுக் காட்டுமாபோலே; மேல்தான் (உ) "யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா:-யத்ர பூர்வேஸாத்யாஸ் ஸந்திதேவா:" என்றும், (௩) அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்தமை" என்றும் அவர்களோடுகூடி அநுபவிக்கு

(க) கீதை - ௧௮ - ௬௬ - (உ) பு - ஸூ - (௩) தி - வாய் - ௧௦ - ௧௦ - ௧௧-
§ சினை - கர்ப்பம். வெள்ளம் வருவதற்குமுன் கீழே நீர்பொசிந்து காட்டுமென்றபடி.

மத்தைப் பேருகச் சொல்லுகையாலே இவனுக்கிது சரமசரீரமான பின்பு இவை இங்கேபிறக்கக் காணவேணுமிறே. அவையாகிற வைதானெவை யென்னில்; அபாகவதர்களோடு பொருந்தாமையும் பாகவதர்களை யொழியச்செல்லாமையுமிறே. அவையிரண்டும் தம்க்குண்டானபடியை யருளிச்செய்கிருர். † பார்யைக்கறிவு பிறக்கப் பிறக்க பர்த்தாவின்பக்கல் பாவபந்தமுண்டாம்,பர்த்ரந்தரபரிக்ரஹம் பண்ணுமதிறே இவளவனுக்காகா தொழிகையாகிறது. (க)" திருவடி தன்நாமம் மறந்தும் புறந்தொழாமாந்தர் " என்ற நின்றதிறே; †ப்ரபந்நருடைய லக்ஷணம் சொல்லுகிறபோது †இப்படிஸர்வேஸ்வரன் உத்தேஶ்யனென்னும் ஜ்ஞாநம் பிறக்கப்பிறக்க பாகவதர் பக்கல் பாவ பந்தமுண்டாகலாம். இந்த ஜ்ஞாநார்த்தமாக விடவேணு மிறே அபாகவதஸம்பந்தம். † இனி, பாகவதராகிருர் - ப்ரதமதசையி லீஶ்வரனுடைய உபாயபாவத்தையறிவித்து, அவ்வழியாலே புருஷகார பூதராமவர்கள். இவன்ருன் சேதநனாய் உபகாரங்கொண்டவனாகை யாலே க்ருதஜ்ஞனாயிருக்கக்கடவன். இனி, சரமதசையில் வந்தால் ப்ராப்யத்திலெல்லை இவர்களாகையாலே, அவன் றன்னோபாதியும் உத்தேஶ்யராயிருக்கக்கடவர். இனி நடுவுபட்டநாள் இவனுக்கு, (உ) "போதயந்தঃ பரஸ்பரம் பண்ணுகைக்குடலாயிருப் பார்களாகையாலே, ஸர்வாவஸ்த்தைகளிலும் இவர்களுத்தேஶ்யரென்னுமிடம் சொல்லிற்று.

(ந)†"ఆనుకూల్యస్య సఙ్కల్పః- ஆநுகூல்யஸ்யஸங்கல்பঃ" இத்யாதிகளாலே ஆறுவகையாயிருக்கும் சரணாகதி யென்று சொல்லாநின்றது, (ச)"అహమస్మ్యపరాధానామాలయోऽకిఞ్చనోऽగతిః। త్వమేవోపాయభూతో మేభవ- அஹமஸ்ம்யபராதாநாமாலயோகிஞ்சநோகதிঃ। த்வமேவோபாயபூதோமேபவ" என்று தன்னாகிஞ்சந்யத்தை முன்னிட்டு நீயே உபாயமாகவேணுமென்று அபேக்ஷிக்குமத்தைச் சரணாகதியாகச் சொல்லாநின்றது,†இதிலொன்றைவிட்டு ஒன்றை ஸ்வீகரிக்கு மன்று மற்றையதுக்கு அப்ராமாண்யம் ஸித்திக்குமாயிருந்தது, ஆனால் இவையிரண்டும் அவிருத்தமாக நயிக்கும்படி யெங்ஙனேயென்னில்; "త్వమేవ - த்வமேவ" என்கிற விடத்திலே § உபாயாந்தர நைரபேக்ஷ்யந்தோற்றி யிருக்கையாலே சரணாகதியினுடைய ஸ்வரூபம்

(க) ச - தி - சுஅ. (உ) கீதை - ச. (ந) பாஞ்ச. (ச) பாஞ்ச.
§ (பா) ஸாதநாந்தர.

சொல்லுகிறது அந்த ஶ்லோகத்தாலே; அஶ்ஶரணாகதி புக்கவிடத்திலே புகக்கடவதாய், சரணாகதனானவனுக்கு ஸம்பாவிதஸ்வபாவங்களைச்சொல்லுகிற திந்தஶ்லோகத்தாலே. †சரணாகதியினுடைய ஸ்வரூபத்தைப்பார்த்தால் வேறொன்றைப் பொறாதபடியா யிருக்கும்; இனி ஒதுங்கின ஆஶ்ரயத்தைப்பார்த்தால் இஸ்ஸ்வபாவங்களோடு கூடியல்லதிராது. † “-ஷட்விதாசரணாகதி:” என்று கொண்டு இக்குணங்களைச் சரணாகதிக்கங்கமாகச்சொல்லாநிற்க இவனுக்கு ஸம்பாவித ஸ்வபாவமென்னும்படி யெங்ஙனேயென்னில்; †“-ப்ரார்த்தநாமதி: சரணாகதி:” என்கிறவிடத்திலே ப்ரார்த்தநாபுத்தி இச்சேதநன்கையிலே கிடக்கச்செய்தே எங்ஙனே சரணாகதிலக்ஷணவிஷயமாய்க்கிடக்கிறபடி.†“-ஆநுகூல்யஸ்ய” என்கிற ஶ்லோகம் விதிபரதந்த்ரமாய்ச் செய்யு மன்று (ஃ) பலாபேக்ஷை யில்லாதபோது தவிரலுமாயிருக்கும், ஸ்வரூபநிவேசியாமன்று செய்யாதபோது ஸ்வரூபஹாநியே விளைக்குமிறே. †ஸ்வர்க்ககாமனை யில்லாதபோது ஜ்யோதிஷ்டோமம் தவிரலாயிருக்கும், அங்ஙனே செய்யவொண்ணாதபடியாயிருக்குமிறே இத்தலையாலொரு(ஃ)பலம் சொல்லாத நித்யாநுஷ்டானம் விதிக்கும். ... *

அரு —§பிராட்டிமார்களைப் புருஷகாரமாகவும், எம்பெருமானை ப்ராபகமாகவுமெண்ணியிருக்கும் பாகவதர்களே தமக்கு ப்ராபகமென்றநுஸந்திக்கிறாரென்று இத்திருமொழிக்கு பூர்வகண்டாநுகுணமாக மஹாவாக்யதாத்பர்யத்தைத் திருவுள்ளம்பற்றி இப்ப்ரவேசம் துடங்கி இவ்வளவும் வ்யாக்யாநம்செய்தருளி, இனி “பிராட்டிமார்களும் அவனுமாகவிருக்கிற விருப்பே ப்ராப்யம்” என்ற உத்தரகண்டார்த்தத்தை யெண்ணியிருக்குமவர்களே தமக்கு ப்ராப்யபூதரென்று இத்திருமொழிக்கு மஹாதாத்பர்யபேதத்தை யருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, ப்ரவேசமுமருளிச்செய்து, மீளவும் இப்பாட்டுக்களை வ்யாக்யாநம்செய்தருளுகிறார் (அநாதிகாலமித்யாதியாலே). இரண்டாம்பாட்டிலே நடுவே நிறுத்தினதுக்குக்கருத்து - இப்பாட்டில் உத்தரார்த்தம் துடங்கி மேலிற்பாட்டுகளெல்லாம் இந்த மஹாதாத்பர்யத்துக்கு அவாந்தரதாத்பர்யம் ஸாதாரணமாயிருக்குமென்னுமது. ஆக, “முன்னினைந்து” என்றதுக்கு - புருஷகாரமாக நினைந்தென்றும், ப்ராப்யத்வேந நினைந்தென்றும் நிர்கர்ஷித்தால்,

§ புநஶ்சப்ரவேசே. அத்யவஸாயரூபப்ரபத்தியு மீஶ்வர ஸௌஹார்த்தபலமென்ன, ஆநுகூல்யாதிநாம் ஸம்பாவிதஸ்வபாவத்வம் ப்ரஸித்தமாமென்று விவக்ஷித்து இவ்வத்யவஸாய ரூபப்ரபத்தி அவன் ஸௌஹார்த்தகார்யமென்று அருளிச்செய்கிறார் (அநாதிகாலம்) என்று. (விசேஷகடாக்ஷம்) * மயர்வற மதிநல மருளுகை.

"என்னும்" "நினைவார்" இத்யாதிபதங்களுக்கு - உபயாநுகுணமாக யோஜித்துக்கொள்ளலாமிறே யென்று திருவுள்ளம். (க) "నాసౌపురుషకారేణ నచాప్యన్యేన హేతునా। కేవలం స్వేచ్ఛయైవాహం ప్రేక్షే కంచిత్కదాచన-நாஸௌபுருஷகாரேண நசாப்யந்யேநஹேதுநா! கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித்கதாசந" என்கிற வசநத்தையுட்கொண்டு, இவ்வாழ்வார்தாம் கேவலேஶ்வர ஸௌஹார்த்த (ஐ) பலாயத்தமான ஆபிமுக்யாதிகளைப் பெற்றவராகையாலே, (உ) * வாடினேன் வாடி துடங்கி தமக்குப்பிறந்த தசாவிசேஷங்களை யநுஸந்தித்துக்கொண்டு அவனை ப்ராய ப்ராபகத்வேந அநுஸந்தித்து, அநந்தரம் தமக்குப் பிறந்ததான "பாகவதர்களே ப்ராப்யம்" என்கிற தசையை யநுஸந்திக்கிறு ரித்திருமொழியிலென்றருளிச்செய்கிறார் (அநாதிகாலம்) என்று துடங்கி, (படியைச்சொல்லுகிறது) என்னுமளவும். இத்தால் அஜ்ஞாத ஸுக்ருதம் மூலமாக ஆபிமுக்யாதிகள் பிறந்து புருஷகாரத்தை முன்னிட்டுக்கொண்டு ஈஶ்வரனை ப்ராபகமென்னும் அதிகாரிக்கு ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்துக்கு அஞ்ச ஸம்பாவனையுண்டாகையாலே தச்சாந்த்யர்த்தம் பாகவதர்களே ப்ராபகமென்கிற ஜ்ஞாநம் அஸம்பாவிதமாம்; அங்ஙனன்றி, கேவலம் ஸௌஹார்த்தத்தாலே தனக்குத்தானே உபாயமாகுமென்று அநுஸந்திக்குமதிகாரிக்கு அஞ்ச ப்ரஸக்தியில்லாமையாலே, அநந்தரம் இருக்கும்நாள் பாகவதரை ப்ராப்யத்வேந அநுஸந்திக்கை ஸம்பாவிதமென்றும் சொல்லிற்றாயிற்று. (ஸத்க்ரியைக்கு) யாத்ருச்சிகாதிகளுக்கு. §(இருக்கக்கடவபடியை) என்றது - அபாகவதஸஹவாஸம் அப்ராப்யமென்றும் பாகவதஸம்ஶ்லேஷமே ப்ராப்யமென்றுமிருக்கையென்றபடி.

§ பாகவதஸம்ஶ்லேஷத்தைப்ராப்யமென்னவொண்ணாது என்னும் சங்கையைப் பரக்கவநுவதிக்கிறார் (இனியித்யாதி வாக்யத்ரயத்தாலே). தூரதோநிரஸ்தமானபடிக்கு த்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார் (ஸர்வதர்மாநித்யாதி). (உபாயஸ்வரூபத்தாலும்) என்றவநந்தரம், உபேயஸ்வரூபத்தாலும் என்றுகூட்டுவது. பழையவிஷய ப்ராவண்யமாய்த் தலைக்கட்டாது என்னுமர்த்தத்தைப் பல ஹேதுக்களாலே நிகமிக்கிறார் (சரீரேத்யாதி). ஜ்ஞாநிக்கு அஜ்ஞவ்யாவ்ருத்தியுண்டாகையாலும், விஷயப்ராவண்யம் வாராதென்றும் ஹேத்வந்தரமருளிச்செய்கிறார் (நினைத்தாரித்யாதி). இத்தால் அதிகாரிஸ்வரூபத்தாலும் ஸம்பவியாதென்கை.

---

§ (இருக்கக்கடவபடி) ஆநுகூல்யாதிவிசிஷ்டனாயிருக்கக்கடவபடி.

§ இந்த ஆநுகூல்யாதிகள் ஸம்பாவிதஸ்வபாவங்களென்னுமதுக்குப் பின்னையுமொரு த்ருஷ்டாந்தமும் சிலஉபபத்திகளுமருளிச்செய்கிறார்; அதில் முற்பட இந்த ஆநுகூல்யாதிகளுபாயோபயோகிகளுமன்று, உபேயகோடிகடிதமுமன்றென்கிறார் (இனி உபாயத்திலே) என்று. ப்ராப்யாபாஸங்களில் ருசிநிவ்ருத்திபூர்வமாகவிறே என்றவளவே போருமென்றருளிச்செய்வர்.

(க) பாஞ்ச.　　　　(உ) க - க - க.

சரீரஸமநந்தரத்தில்வரும் ப்ராப்யத்தோடு இதுசேரும்படிதானெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (இன்றுநாளையித்யாதி). (ஸாத்யா:) ப்ராப்யா:. § அபாகவதரோடு பொருந்தாமையை முந்துறவருளிச்செய்வானென்னென்ன வருளிச்செய்கிறார் (பார்யைக்கித்யாதி வாக்யத்ரயத்தாலே). எடுத்த பாசுரத்துக்கு பாவம் (ப்ரபந்நரித்யாதி). ப்ரதாநமாகையாலே முந்துறவருளிச்செய்தார் என்றொரு பரிஹாரமருளிச்செய்து, பாகவத ப்ராவண்யவர்த்தகமாகையாலும் ஆவஶ்யகமென்று பரிஹாராந்தரமருளிச்செய்கிறார் (இப்படியித்யாதி). (ஜ்ஞாநார்த்தமாக) பாவபந்தம் நிலைநிற்கைக்காக. இந்த பாகவதர்கள் ப்ராப்யராமிடத்தில், பிராட்டிமாரும் எம்பெருமானும் நித்யமாயிருக்குமிவர்களோபாதியன்றியே ப்ராப்யதமத்வமுண்டென்னுமர்த்தத்தை உபபாதிக்கிறார் (இனிபாகவதராகிறாரித்யாதி வாக்யபஞ்சகத்தாலே). உசாத்துணையாகிற அதிகாரம் அதிகமாகவிருக்கையாலே ப்ராப்யதமரென்று இவனுக்குப் பிறந்ததசையைச்சொல்லுகிறது.

விஹிதாம்சத்திலிவனுக்குச் செய்யவேண்டிற்றில்லாமையாலே என்று நின்றீர், ஸர்வமுக்தி ப்ரஸங்க பரிஹாரார்த்தமாக ஸாங்கப்ரபத்தியை விதித்திருக்கிறதே, அவற்றைச்செய்யவேண்டாவோவென்னில்; அருளிச்செய்கிறார் (ஆநுகூல்யஸ்யேத்யாதி). ஆக. இத்தால்-"த்வமேவ" இத்யாதியோடு விரோதிக்கையால், அங்கு அங்கமென்றுசொல்லாமையாலே செய்யவேண்டும் ஹிதசேஷமில்லையென்று கருத்து. அங்கு சாஸ்த்ரத்துக்கு அப்ராமாண்யம் வாராதோ வென்னும் சங்கையை யநுவதிக்கிறார் (இதிலித்யாதி வாக்யத்வயத்தாலே). § அங்கமென்று சொல்லுகையெங்ஙனே யென்ன வருளிச்செய்கிறார் (சரணாதீத்யாதி). அவர்ஜநீயமாய்வருகையைப் பற்ற அங்கமென்றதென்று கருத்து. சாஸ்த்ரங்களங்கங்களென்று சொல்லச்செய்தே அத்தை ஸம்பாவித ஸ்வபாவங்களென்று கல்பிக்கும்படி சாஸ்த்ரம் சொன்னத்தை அந்யதாகல்பித்தது கண்டதுண்டோ வென்னும் சங்கையை

---

§ பாகவதரை யொழியப்பொருந்தாமையைச்சொன்னால் போராதோ? அபாகவதர்களோடு பொருந்தாமையும் சொல்லவேணுமோ வென்ன, (பார்யைக்கு) என்றது. அதாவது - இதில்லாவிட்டாலும் அதுவே அத்யந்தாபேக்ஷிதமென்றபடி. இத்தால் - பாகவதர்களுடைய த்யாகம் ஸ்வரூபநாசகரமான ஆகாரத்தாலும், பாகவதோத்தேஶ்யதாஜ்ஞாநஸித்யர்த்தமாகவும் அவஶ்யம் வேணுமென்றதாயிற்று.

§கீழ்வாக்யவிவரணம் (சரணாகதியினுடைய) என்றது. "ప్రార్థనామతిశ్శర ణాగతిః - ப்ரார்த்தநாமதிஶ்ஶரணாகதி:" என்கிற பரிஹாரவாக்யத்துக்கு அர்த்தம் - ப்ரார்த்தநாபுத்திரூப சரணாகதி அதிகாரிவிசேஷணமாய்க்கிடக்கிற வழியாலே இதனுபாயமாயிருக்க இதெங்ஙனே சரணாகதி லக்ஷணவிஷயமாகிறதென்றபடி.

யநுவதிக்கிறார் (ஷட்விதேத்யாதி). ப்ரார்த்தநாமதியை "ப்ரயுஜ்யதாம்" என்று விதிக்கச்செய்தே, அத்தை உபாயமன்றென்று ஸித்தோபாய நைரபேக்ஷ்யபலாத் தள்ளினது கண்டிருக்க, அதுக்குஅங்கங்களைச்சொல்லுகிற அங்க விதிஸ்யத் தள்ளுகையில் அருமையில்லையென்று விவக்ஷித்துப் பரிஹரிக்கிறார் (ப்ரார்த்தநேத்யாதி). உபாயநைரபேக்ஷ்யபலத்தாலே இவற்றை அங்கங்களென்ன வொண்ணாதென்று கீழே யருளிச்செய்து, (ஃல) பலஸித்யநந்தரம் (ஃலா) பலாபேக்ஷையில்லாமையாலே அப்போது தவிரலாயிருக்குமது அங்கங்களாமித்தனையாகையால் (ஃல) பலதசையிலும் அநுவர்த்திக்கும் ஆநுகூல்யாதிகள் அங்கங்களென்னக்கூடாதென்கிறார் (ஆநுகூல்யஸ்யேத்யாதி). இவ்வாக்யத்துக்கும் அடைவே த்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார் (ஸ்வர்க்கேத்யாதி). இத்தால், ஸ்வர்க்ககாமனையில்லாதபோது தத்ஸாதந ததங்கங்கள் தவிரலாயிருக்கக்கண்டோமிறே, ஆநுகூல்யஸங்கல்பாதிகளும் அங்கங்களாகில் பலாபேக்ஷையில்லாத தசையில் தவிரலாயிருக்கவேணும் அப்படியிராமையால் அங்கங்களன்றென்று கருத்து. ... ... *

வ்யா.—இதில், முதற்பாட்டில்-அபாகவதரோடு பொருந்தாமை †சொல்லுகிறது.† இவையிரண்டுமுத்தேஶ்யமானால் க்ரமவிவக்ஷைக்குக்கருத்தென்னென்னில்; †ஆநுகூல்யத்துக்கு அவதியில்லாமையாலே ஸங்கல்பமேயமைந்தது; இதில் முதலடியிட்டானுவதும் இஸ்ஸ்வபாவமுண்டானாலாகையாலே இத்தை முந்துறச்சொல்லுகிறது. †விரோதித்யாகபூர்வகமாகவிறே உபாயஸ்வீகாரத்தை விதிக்கிறது. (க) "పరిత్యక్తామయాలఙ్కా - பரித்யக்தாமயாலங்கா" என்றும் (உ) "త్యక్త్వాపుత్రాంశ్చదారాంశ్చ - த்யக்த்வாபுத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச" என்றுமிறே (உ) "రాఘవంశరణంగతః - ராகவம் சரணம்கத:" என்கிறது. †தன்னைப்பேணாதே ப்ரயோஜநாந்தரபரருக்காக உடம்புநோவக்கடல் கடைந்து அமுதத்தைக்கொடுத்த ஸர்வேஶ்வரன், "அந்த அம்ருதத்தோபாதியாகிலும் நம்மைவிரும்புவார் சிலரைக்கிடைக்கவற்றோ?" என்று அவஸர ப்ரதீக்ஷையைக்கொண்டு சாய்ந்தருள, அவனைவிட்டுப் புறம்பே போதுபோக்குகிறவர்களை நானொருவராக புத்திபண்ணியிரேனென்கிறார்.

(நண்ணாத வாளவுணரிடைப்புக்கு) ஆஸுரப்ரக்ருதிகள் நடுவே ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்காகப்போய்ப்புக்கு †ஸர்வேஶ்வரன் தேவாஸுர விபாகம் பண்ணுகிறவிடத்தில் இவ்விரண்டாகா

(விதிக்கிறது) சரமஶ்லோகத்திலே யென்றபடி. இப்படிக்கநுஷ்டானமும் காட்டுகிறார் (பரித்யக்தா) என்று.

(க) ரா-யு-கக-சு. (உ) ரா-யு-கஎ-கச.

ரமுமெங்குமொக்க உண்டாம்படி பண்ணிஞயிற்று. அப்போது அர்ஜுநன் "நானெக்கோடியிலே யாகிறேனே" என்று சோகிக்க (க) "மாசுச:ஸம்பதம் தைவீமபிஜாதோஸி பாண்டவ - மாசுச:ஸம்பதம் தைவீமபிஜாதோஸிபாண்டவ" என்று-உனக்கென், நீஸத்ப்ரக்ருதி யல்லையோ? என்ருனிறே. மநுஷ்யராயிருந்து வைத்து ஆஸுரப்ரக்ருதிகளாயிருப்பார் கோடியிலன்றிக்கே இவர்களுடைய ஆஸுரத்வம் ஜந்மப்ரப்ருதியுண்டாயிருக்கை. க்ஷத்ரிய ஜந்மத்திலே பிறந்துவைத்து உக்ரஸேநன் நிலையல்லவாம்படியிறே, கம்ஸனுக்குண்டான ஆஸுரத்வம். †ஈஶ்வரனோடு பொருந்தாமை ஸ்வபாவமாகவுடையராய்த், தாங்களதுக்குமேலே ஸாயுதருமாயிருப்பர்கள். (வாளவுணரிடைப்புக்கு) (உ)*தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் கண்டிபுகுகிறதோ? பரஹிம்ஸை பண்ணுகைக்காகப்பரிகரங்கொண்டிருக்கிறவர்கள் நடுவேயிறே போய்ப் புக்கது.

†இப்படிபோய்ப் புக்காலுமாமிறே தன்வாசியறிவார் சிலர்க்குச் செய்யப்பெற்றதாகில்; (வானவரை) †கார்யகாலத்தில் பற்காட்டி அநந்தரமவனைத்தள்ளி (௩) "ஈஶ்வரோஹம் - ஈஶ்வரோஹம்" என்றிருப்பார்க்காகவாயிற்று. †இவனைத் தங்களோடு ஸஜாதீயனாக புத்திபண்ணுகல், அன்றிக்கே, இவனொரு §மூங்கில்வளைத்த போதாக நம்மில் அதிகனென்றிருத்தல் செய்யுமவர்களிறே. †இதில்இன்னும் அந்த ஸஜாதீயபுத்திதானே நன்றிறே. †அவ்வவுணரிலிவர்களுக்கு வ்யாவ்ருத்தி பெரிதல்லவாயிற்று. அவர்கள் இவனுடைய ரக்ஷ்யவர்க்கத்தை அழியச்செய்து கொடுதிரியப் புக்கார்கள், இவர்கள் அவன் பக்கலிலே [illegible] க்ஷித்தார்களித்தனையாயிற்றுவாசி. † இவர்களுக்குக்கார்யம் [illegible] லுமாமிறே தன்ஸ்வரூபமழியாதபடி கார்யம் செய்யப்பெற்[illegible]கில், (பெண்ணுகி) †தன்னை அழியமாறி நிற்கச்செய்தேயும் [illegible]போவது ஸாரத்யம் பண்ணுவதானுனிறே. அவ்வளவல்லவாயிற்று. (ச) "அஹமஸ்மி மஹாபாஹோ - அஹமஸ்மி மஹாபாஹோ" என்றும் (ரு) "இமௌஸ்ம முநிசார்தூல - இமௌஸ்ம முநிசார்த்தூல கிங்கரௌஸமுபஸ்த்திதௌ" என்றும் ருஷிகளேவிற்றுச் செய்வானுகத் தன்னைத்தாழவிட்டுத் திரிந்தவனுயிற்று. புருஷோத்தமனுன தன்னையிறே தன்ஸ்வரூபத்துக்குப் போராதபடி அழியமாறிற்று.

(க) கீதை - ௧௬ - ௫.   (௩) கீதை-௧௬-௧௪.   (ரு) ரா - அ -
(உ) திருப்பள்ளியெழுச்சி-௧௦- (ச)
§ மூங்கில் - தநுஸ்ஸு.

†"கிழக்கே ஐயாற்றிலே யாதவராயர் வந்திருக்க, ஜீயர் என்னை † இறையிலிக்காரியத்துக்காக அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்களோடே கூடப்போகவிட்டார், நானவன் கூடத்திலேவந்து அவஸரம் பார்த்திருக்கச்செய்தே பலரும் வந்தென்னை யநுவர்த்திக்கக்கண்டவாறே, அங்கே மஹாமஹேஸ்வரனாயிருப்பானொருபையல், 'பிள்ளாய்! நீர் பொருளுக்குக் கடவீர்' என்று கேட்டோம், 'எங்களுடையவத்திலே அரியல்லால் தேவியில்லை' என்றுண்டாயிருந்தது, அதுக்குப் பொருள் சொல்லவேணும்' என்ன; 'நானிதுக்கு அதிகரித்தேனொருவனல்லேன்' என்ன; 'ஆகிலும் எல்லாந் தெரிந்திராதோ? உமக்கு' என்ன, 'நீ தான் தேவர்க்கொரு உத்கர்ஷத்தையும் ஈஶ்வரனுக்கொரு அபகர்ஷத்தையும் நினைத்துக்கேட்கிறாயாகில் புருஷோத்தமனென்று, புராணங்களிற் சொல்லாநிற்க, ஆஶ்ரிதார்த்தமாக அவன்தன்னை அழிய மாறினானென்றால் இது அவனுக்கு ருணையவா மித்தனை யல்லது தோஷாய வாகாது. இனி ஆண்பிள்ளைச்†சோறுள்விஜய ஸ்த்ரீ என்று தொடர்ந்து திரிவாரைப்போலே தொடர்ந்து திரியாநின்றார்' என்று தேவரை அஜ்ஞராக்குவதிற் காட்டில் இது சொன்னவன் அநாப்தன் அஜ்ஞன் என்றிருக்க வமையாதோ?' என்று சொன்னேன்" என்றருளிச்செய்தார். (அமுதூட்டும்) இப்படி யழியமாறினானுமாமிறே தன்னையேவிரும்பப்பெற்றதாகில், சரீரத்தைப் பூண்கட்டிக் கொடுப்பதானத்தையிறே விரும்புகிறது. (ஊட்டும்) †கடல் கடைகையும் யத்னிக்கையு மெல்லாம் தனக்குப் பணியாய் இவர்களுக்கந்வயம் புஜிக்கையிலேயாய், இவர்கள் மிடற்றுக்குக் கீழிழிச்சுமது தனக்கு உபகரித்தார்களாயிருக்கும். "எங்களுக்குஅம்ருதம்வேணும்" என்றால் அத்தை உத்பாதித்துக் கொடுத்து விடுமத்தனையிறே; அது க்கீடாயிருப்பதொருவடிவைக்கொண்டு நின்று புஜிப்பிக்கிறதுதான் நீர்மையிறே. உறங்குகிற ப்ரஜையை எழுப்பி யூட்டும் தாயைப்போலே இது தான் தன்பேறாக வாயிறறுச்செய்தது. இப்படி செய்கைக்கு நிபந்தநமென்னென்னில், (பெருமானார்) சேஷித்வப்ரயுக்தமான ஸம்பந்தமாயிற்று.

(மருவினியவித்யாதி) மருவவினியதேசமாயிற்று. (தண்ணார்ந்த) ஶ்ரமஹரதை விஞ்சியிருக்கை. அதாகிறது-ஸ்ரீவைகுண்டத்திற்போலே ரக்ஷ்யம்பெற்றிலோமென்னும் குறை தீரும்படியாயிருக்கை. (கடல்மல்லைத்தலசயனம்) ஆஶ்ரிதன் ஓக்கப்பணிசெய்தானென்று

அவனுக்காகவந்து காற்கடைதலைமாடாகவந்து தரையிலே சாய்ந்தருளினவிடமிறே. (உறைவாரை) ஆஸ்ரிதர் விரும்பினவிடமென்று விட்டுப்போகமாட்டாதே நித்யவாஸம்பண்ணுகிறவிடம். அவ்வாஸுர ப்ரக்ருதிகளில் குறையாதார் நடுவேயிறே வந்துகிடக்கிறது. (எண்ணாதேயிருப்பாரை)†திருப்பாற்கடலிலேவந்து சாய்ந்தருளினவன் ஸ்ரீவைகுண்டத்திலே குறைவறவிருக்கக்கடவவவன், ஸம்ஸாரிகள்நடுவே தன்னைப்பேணாதே சாய்ந்தருளினவிது நமக்காகச்செய்தான். (க)"நின்றிருந்துவெஃகணைக்கிடந்ததென்னநீர்மையே" என்று இத்தை அநுஸந்திக்கவேண்டியிருக்க, இதில் நினைவின்றிக்கே புறம்பே யுண்டுடுத்து காலக்ஷேபம்பண்ணித்திரியுமவர்களை. (இருப்பாரை) †எண்ணாதேயிருக்கையாவதும் ஒழியலாவதும் அதுக்கடியான கர்மக்ஷயம் பிறவாமையாலே; சைதந்யகார்யமிறே †"இப்படிசெய்திலோம்" என்னு மநுதாபம்பிறக்குமது; அதுவுமின்றிக்கே யிருக்குமவர்களை. (இறைப்பொழுதுமெண்ணோமே) †சேதநராயிருந்துவைத்து அஜ்ஞராயிருப்பாரை எண்ணுவதொரு†போதுண்டிறே, அப்போது மெண்ணக்கடவோமல்லோம். †அவஸ்துக்களைப் பரிகணிப்பது மொரு†போதுண்டிறே, அப்போதுமெண்ணோம். அவர்கள் தாங்கள் தங்களைக் கனக்க நினைத்திருந்தார்களாகிலும் அவர்களை ஒன்றாக நினைத்திரோம். †இவர்தாம் நினைக்கிற்போலே அவர்களுக்கு வஸ்துத்வமுண்டாவது. (உ) "மானிடவரல்லரென்றென் மனத்தேவைத்தேன்" என்னக்கடவதிறே. "கல்லிலும்†செம்பிலும் வெட்டிற்று" என்னுமாபோலே. (௩) †"அடிகளடியேநினையுமடியவர்கள்தம்மடியான்" என்றிறே தம்மைச்சொல்லுகிறது. †ஜ்ஞாநாநந்தங்களன்று காணுமிவர்க்கு நிரூபகம்; பாகவதசேஷத்வமாயிற்று. ... (க)

அரு.—முதற்பாட்டு (சொல்லுகிறது) என்றவநந்தரம், . என்று கொள்வது என்றுசேஷம். (பார்யைக்கு) இத்யாதி வாக்யங்களாலே கீழே க்ரம விவக்ஷைக்கு ஹேதுக்களருளிச்செய்தாரேயாகிலும், ஹேத்வந்தரங்களருளிச்செய்கைக்கு ப்ரஸ்நத்தைக் கிளப்புகிறார் (இவையித்யாதி). ப்ராதிகூல்யப்ரஸக்தியுள்ளவளவும் ப்ராதிகூல்யவர்ஜநமாகையாலே சரீராவதிகமென்று அல்பகாலஸாத்யத்வத்தைப்பற்ற முற்பட்டதென்றொரு ஹேதுவருளிச்செய்கிறார் (ஆநுகூல்யத்துக்கித்யாதி). ஹேத்வந்தரம் (இதிலித்யாதி). ப்ராதிகூல்ய வர்ஜநம் பிறந்தாலிறே ஆநுகூல்ய ஸங்கல்பந்தானுண்டாவதென்று கருத்து. இந்த இரண்டாம் ஹேதுவுக்கு த்ருஷ்டாந்தம் (விரோதீத்யாதி வாக்யத்வய

(க) தி - ச - வி - ௬௩. (உ) கக - எ - ௬. (௩) உ - ௫ - க௦.

(மும்) இந்த ப்ராப்யபர ப்ரயோஜநாநுகுணம் பாட்டுக்குத்தொகுத்த பாவம் (தன்னையித்யாதி).

§ அவுணரை "நண்ணாத" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (ஸர்வேஶ்வரனித்யாதி ஆஸுரத்வமென்னுமளவும்). வாக்யார்த்தம் (ஈஶ்வரனோடித்யாதி).

மேலுக்கவதாரிகை (இப்படியித்யாதி). வானோர் என்னாதே, "வானவர்" என்றத்தாலே - வானிலிருக்குமவர் அப்படிப்பட்டவரென்று சப்தார்த்தம் விவக்ஷித்து, தாத்பர்யமருளிச்செய்கிறார் (கார்யேத்யாதி). "அவர்" என்றால்-அப்படி "ஈஶ்வரோஹம்" என்றிருப்பாரென்னுமத்தைக்காட்டும்படி ப்ரஸித்தியுண்டோவென்ன; (க) "జృమ్భితంతుధను ర్దృష్ట్వా శైవం విష్ణుపరాక్రమైః । అధికం మేనిరే విష్ణుం దేవాస్సర్షిగణాస్తదా - ஜ்ரும்பிதந்து தநுர்த்ருஷ்ட்வா சைவம் விஷ்ணுபராக்ரமைஃ। அதிகம் மேநிரே விஷ்ணும் தேவாஸ்ஸர்ஷிகணாஸ்ததா" என்கிற வசநத்தையுட்கொண்டு அருளிச்செய்கிறார் (இவனையித்யாதி வாக்யத்ரயத்தாலே). நம்மிலதிகன் என்னும் ஜ்ஞாநம்பிறந்தபோது ஸஜாதீயபுத்தியுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (இதிலித்யாதி). விபரீத ஜ்ஞாந நிவர்த்தகமல்லாமையால் ஆதிக்யஜ்ஞாநம் நல்லதன்றென்று கருத்து. இப்படி விபரீத ஜ்ஞாநபூயிஷ்டரானால் அஸுரர்களிலிவர்க்கு வ்யாவ்ருத்தியில்லாமையாலே இவர்களுக்குக் கார்யம்செய்வானேனென்னென்ன வருளிச்செய்கிறார் (அவ்வவுணரிலித்யாதிவாக்யத்ரயத்தாலே). மேலிதற்கு ஈடுபாடாகத் தாத்பர்யம் (இவர்களுக்கித்யாதி). ஆஶ்ரிதர்க்காகத் தன்னை யழியமாறுகை அவனுக்கு ஸ்வபாவமாயிருக்க இதுக்கு ஈடுபடவேணுமோவென்ன வருளிச்செய்கிறார் (தன்னையித்யாதி).

§ (இறையிலி) மாந்யம். (சோறுள்வி) சோறுக்குமவள். ஸ்த்ரீவேஷங்கொண்டிருக்கும் புருஷனென்றபடி. கொடுக்குமென்னாதே, "ஊட்டும்" என்றதுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (கடலென்றுதுடங்கி, ஸம்பந்தமாயிற்று என்னு மளவும்).

"பெருமானார் தலசயனத்துறைவாரை" என்றபதங்களில் பலிதார்த்தங்களையுமுட்கொண்டு, எண்ணாது என்னாதே "எண்ணாதே" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருப்பாற்கடலிலேயித்யாதி). "எண்ணாதே" என்ற ஏவகாரத்துக்கு ஸஹேதுகமாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எண்ணாதேயித்யாதி). "இருப்பார்" என்ற அம்சத்துக்கு (இப்படியித்யாதி). "இறைப்பொழுதும்" என்றதுக்கு உட்கருத்து (சேதநரித்யாதி). (போதுண்டிறே). என்று ஸஹவாஸ வர்ஜநார்த்தமநகவெண்ணும்போதுண்டென்றபடி. "எண்ணேமே"

---

§ (நண்ணாத) "நண்ணாத" என்றபோதே இவ்வர்த்தம் ஸித்தமாயிருக்க "அவுணர்" என்னவேண்டுவானேனென்னில்; (ஸர்வேஶ்வரன்) என்று.
§ இப்படி யழியமாறினால் புருஷோத்தமத்வத்துக்கு அழிவுவாராதோ வென்ன; (கிழக்கே) என்று. அநுதாபம்பிறக்கிறது சைதந்யகார்யமிறே என்றபடி.

(க)

என்ற எவகாரத்துக்கு வ்யாவர்த்யம் காட்டுகிறார் (அவஸ்துங்களையித்யாதி). "எண்ணேம்" என்று உத்தமனுக்குபாவம். (அவர்களித்யாதி). எண்ணே னேயென்னுதே பூஜ்யதை தோற்ற பஹுவசந ப்ரயோகம் பண்ணினதுக்கு ஹ்ருதயமருளிச்செய்கிறார் (இவர்தாமித்யாதி). (செம்பிலும்) தாம்ரசாஸநத்தி லும். §இனி யெண்ணுகைக்கு விஷயந்தானென்னென்ன, அருளிச்செய்கிறார் (அடிகளித்யாதி). பாசுரார்த்தம் (ஜ்ஞாநேத்யாதி). ... ... (க)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (பார்வண்ணமித்யாதி) †நீர்பொருந் தாதாரை †இன்னாரென்றறிந்தோம், நீர் பொருந்துவாரும் † § சிலரு ண்டோவென்ன; அவர்கள் ஜந்மவ்ருத்தாதிகளைக்கொண்டு கார்ய மில்லை, அவர்கள் தாங்களாரேனுமாகவமையும், † இதுண்டாமித்த னையே அவர்கள் நம்மை நிர்வஹிக்கைக்கென்கிறார். †நீர் ப்ரதிகூலர் விஷயத்தி†லிருக்கும்படி யறிந்தோம், அநுகூலர்விஷயத்திலிருக்கும் படி யென்னென்ன; †அங்கு †நமக்கெண்ணுகைக்கும் எண்ணுமைக் கும் ப்ராப்தியில்லை, †இதுக்கெல்லாம் †கடவாரவர்களென்கிறார்.

(பார்வண்ணமடமங்கை) பூமியைத் தனக்கு ப்ரகாரமாகவுடை யளாய், க்ஷமாதிகுணங்களாலே குறைவற்றிருந்துள்ள ஶ்ரீபூமிப் பிராட்டி. (பனிநன்மாமலர்க்கிழத்தி) ஶ்ரமஹரமாய் விகஸிதமாய் அழகிதாயிருந்துள்ள தாமரைப்பூவை ஜந்மமாகவுடையவள். இவர் கள் (நீர்வண்ணன்மார்வகத்திலிருக்கையைமுன்கினைந்து) ஶ்ரமஹர மானதிருமேனியில் இடவருகைப்பற்றவும் அத்திருமார்வைப்பற்ற வுமிருக்கிறவிருப்பையுமநுஸந்தித்து. [நீர்வண்ணன் மார்வகத்தில் பனிநன்மாமலர்க்கிழத்தி] என்றந்வயமாகவுமாம். மாதாபிதாக்கள் சேரவிருந்தால் ப்ரஜைகளுக்குக் கடுகச்சென்று கிட்டலாயிருக்கு மிறே. (அவனூரித்யாதி) †அவன் பரமபதத்தைவிட்டு நித்யவாஸம் பண்ணுகிற ஶ்ரமஹரமான திருக்கடல்மல்லையை. கறுத்தநிறத்தை யுடைத்தாய்ப் †பழையதாயிருந்துள்ள †மூத்துமுதிர்ந்துள்ள †மூந்நீ ருண்டு - கடல், அதினருகேயிறே. (ஆரெண்ணும்நெஞ்சுடையார்) ஏதேனும் ஜந்மமாகவுமாம், ஏதேனும் வ்ருத்தமாகவுமாம், ஏதேனும் ஜ்ஞாநமாகவுமாம், இவ்விடத்தை எண்ணும் நெஞ்சுடையாராமித் தனையே வேண்டுவது. (அவரித்யாதி) அவர்கள் நின்றநிலைகளிலே, †ப்ரமாணங்காட்டாதே. நம்மைக் கார்யங்கொள்ளவுரியார். ...(௨)

---

§ ஆனால் என்று மவர்களை ஆதரிப்பர்களோ வென்ன; (அடிகள்) என்று.
§ (பா) சிலருண்டே.

அரு.—இரண்டாம்பாட்டு. "கடல்மல்லைத்தலசயனம் எண்ணும் நெஞ்சுடையார்" என்னவமைந்திருக்க, "ஆரெண்ணும்" என்கையாலே-ஜந்மவ்ருத்தங்களில் எவ்வகைப்பட்டாரேயாகிலும் அவர்கள் என்று சப்தார்த்தமாய் அத்தைப்பற்ற ப்ரஶ்நப்ரதிவசநமுகத்தாலே தாத்பர்யமருளிச்செய்கிறார் (நீர் பொருந்தாதாரை யித்யாதி). (இன்றென்றறிந்தோம்) என்றதுக்கு-எத்தனை தேஹாநுபந்திகளாகிலும் எண்ணுதாராகில் அவர்களையெண்ணேம் என்னு நின்றீர் என்றறிந்தோமென்று கருத்து. §(சிலருண்டோ) என்றதுக்கு - எண்ணுமவர்களான திருமேனிஸம்பந்திகளுண்டோவென்று கருத்து. (இது) என்றது-இச்சேர்த்தியே உத்தேஶ்யமென்றபடி. §"எண்ணுதாரையெண்ணேமே" என்றவோபாதி எண்ணும்நெஞ்சுடையாரையெண்ணுவோமே என்னவேண்டாவோ, "ஆள்வாரே" என்றதேதென்ன; அதுக்கு ப்ரஶ்நப்ரதிவசநமுகேந பாவமருளிச்செய்கிறார் (நீர் ப்ரதிகூலவிஷயத்திலித்யாதி). (இருக்கும்படியென்னென்ன) என்றது - எண்ணும்படியென்றபடி. அவர்களை ஸத்துக்களாக எண்ணியிருப்பீரோவென்றுகருத்து. (அங்கு) அந்த பாகவதவிஷயத்திலே என்றபடி. (நமக்கென் [illegible] என்னுகைக்கும் ப்ராப்தியில்லை) என்றதுக்கு - அவர்களை ஸத்துக்களென்று எண்ணுகையும் எண்ணுமையும் நமக்குக்கூடுமோ, அவர்களுடைய வெண்ணுகையாலும், எண்ணுமையாலும் நம்முடைய ஸத்வாஸத்வங்களென்று கருத்து. (இதுக்கெல்லாம்) எண்ணுகைக்கும் எண்ணுமைக்குமென்கை. (கடவர்கள்) என்றது - நம்மை ஆட்கொண்டு ஸத்தையை நடத்துமவர்கள் என்கை,

"அவன்" என்றதுக்கு - வேதாந்தப்ரஸித்தனே பரமவ்யோமநிலயனென்று தாத்பர்யம்விவக்ஷித்து, "அவனூர்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனித்யாதி). (பழையதாயிருந்துள்ள) என்றது-"முது" என்றதின்பலிதார்த்தம். (மூத்துமுதிர்ந்த) என்றது - சப்தார்த்தகதநம். (மூந்நீருண்டு) என்றது - ஆற்றுநீர், ஊற்றுநீர், வர்ஷஜலம், ஆக மூன்று வகைப்பட்ட நீரென்றபடி. (ப்ரமாணம் காட்டாதே) கைங்கர்யத்திலிவ்வளவு இவ்வளவு என்னும்படிதானேயென்கை. ... ... (௨)

மூ.—ஏனத்தினுருவாகி நிலமங்கை யெழில்கொண்டான்
வானத்திலவர் முறையால்மகிழ்ந்தேத்திவலங்கொள்ளக்
கானத்தின் கடல்மல்லைத் தலசயனத்துறைகின்ற
ஞானத்தினொளியுருவை நினைவாரென்நாயகரே. (௩)

---

§ (சிலருண்டே) அவர்கள் உத்க்ருஷ்ட ஜந்மவ்ருத்தவான்களாகவேணுமோவென்ன என்று பூரித்துக்கொள்வது. ஸங்கத்யந்தரம் (நீர்ப்ரதிகூலர்) என்றது. (இருக்கும்படி யென்னென்ன) என்றதுக்குத்தாத்பர்யம் - நீரவர்களை எண்ணுவீரோவென்றபடி. இதுக்கெல்லாங்கடவர்கள் என்று ஸத்தைக்கெல்லாங்கடவர்களவர்களென்றபடி. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏனத்துருவாகி	வராஹரூபியாய்	கானத்தின்	(மேற்புறத்திலே)காட்டையும்
நிலமங்கை	ஸ்ரீபூமிப்பிராட்டியுடைய	கடல்	(கீழ்ப்புறத்திலே) கடலையுமுடைத்தான
எழில்	அழகு (அழியாதபடி)	மல்லை	மல்லாபுரியிலே
கொண்டான்	(அண்டத்தில் நின்றும்) ஒட்டுவிடுவித்து எடுத்துக்கொண்டவனாய்,	தலசயனத்து	ஸ்த்தலசயநத்திலே
		உறைகின்ற	கண்வளர்ந்தருளுமவனாய்,
வானத்திலவர்	ப்ரஹ்மாதிதேவர்கள்	ஞானத்தினொளியுருவை	ஜ்ஞாநப்ரகாசகமான விக்ரஹத்தையுடையவனை
முறையால்	தங்கள்தங்களுடைய அதிகாராநுகுணமாக	நினைவார்	நினைப்பவர்கள்
மகிழ்ந்து	ஸந்துஷ்டசித்தராய்க்கொண்டு	என்	எனக்கு
ஏத்தி	ஸ்தோத்ரம்பண்ணி	நாயகர்	ஸ்வாமிகளாவர். (௩)
வலம்கொள்ள	அநுகூலவ்ருத்திகளைப்பண்ணும்படிக்கீடாக		

வ்யா.—மூன்றாம்பாட்டு. (ஏனமித்யாதி) †அப்போதேறிட்டுக்கொண்ட வடிவைக் காட்டிப் பழைய வடிவை யழித்தான், அபிமதவிஷயத்தோடே கலக்கைக்காக அவர்களுகக்கும் படியே ஒப்பிப்பாரைப்போலே. †படுக்கைப் பற்றை நோக்கி ப்ரதாநமஹிஷிகள் பக்கல் முகம்பெறுவாரைப் போலே, மஹாவராஹமான வடிவிலெழிலைக்காட்டி இவளெழிலைக் கொண்டான். †பூமிப்பிராட்டியுடைய விபூதியை ப்ரளயங் கொள்ள, அத்தை எடுக்கைக்காக நீருக்கும் சேற்றுக்கு மிறாயாத வடிவைக் கொண்டு வந்து எடுத்து ‡நோக்கி, "நித்யஸூரிகள் நடுவே ஓலக்க மிருக்கக் கடவவன் இவ்வடிவைக் கொண்டது நமக்காகவிறே" என்று அந்நீர்மையிலே தோற்று எழிலிழந்தாளாயிற்று. (வானத்திலவர்) பரமபதத்தில் நித்யஸூரிகள். (முறையால் மகிழ்ந்தேத்தி) "இது நன்று" என்னும் புத்தியாலேயிறே இங்குள்ளாரேத்துவது, ப்ரீதிபூர்வகமாக ஏத்துவாரவர்களிறே. (முறையால்) எங்கேனும் புகுரிலும் முறைதப்பாமலேத்துமவர்களிறே அவர்கள். பரமபதத்தி லடிமைசெய்யும் க்ரமத்திலே ஏத்தி †அநுகூலவ்ருத்தி பண்ண. (கானத்து இத்யாதி) ஸ்ரீபூமிப்பிராட்டி எழிலிழக்க, நித்யஸூரிகளேத்தாநிற்க, இவற்றையடையக் காற்கடைகொண்டு தன் ஜாதிக்கநுரூபமாகக் காட்டை விரும்பினானாயிற்று. ஏனமானதுக்கநுரூபமாகக் காட்டைவிரும்பினான். (கடல்மல்லைத்தல

சயனத்து) †"ப்ரளயம்வந்தால் உதவப்பார்த்திருக்க வொண்ணுது" என்று ஏற்கவே இவற்றை ரக்ஷிக்கும்படியை யநுஸந்தித்துக் கொண்டிருக்கிறவனை. (ஞானத்தினொளியுருவை) †ஜ்ஞாந†ஸ்வரூபனாயுள்ளவனை. (நினைவாரென்நாயகரே) ஒருதலைக் காமமாய்ப் போகாமே "இவன்வந்து கிடக்கிறது நமக்காக" என்று தாங்களும் நினைக்குமவர்கள் எனக்கு ஸ்வாமிகள். †அவர்களாளாத்போது வேறு சிலர்க்கு சேஷபூதரல்லோம். ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (எனத்தினித்யாதி) (க) * அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்குமவன் என்று சொல்லுகையாலே - பெரிய பிராட்டியார்க்குப் புருஷகாரத்வமும் கைங்கர்யவர்த்தகத்வமும் கூடிற்றேயாகிலும், (உ) * பார்வண்ணமடமங்கைக்கு அவையுண்டென்கைக்கு பதிவால்லப்யம்கண்டதுண்டோவென்ன வருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

§ "ஆகி" என்ற அபூததத்பாவனுக்கு பாவம் (அப்போதித்யாதி). (படுக்கைப்பற்று) ஸ்த்ரீகளுடைய மஞ்சள்காணி. கீழ்வாக்யவிவரணம். (பூமியித்யாதி). (நோக்கி) என்றவநந்தரம், இருக்க என்றுசேஷம். §"வலங்கொள்ள" என்றதினர்த்தம் (அநுகூலவ்ருத்திபண்ண) என்றது. இப்போது "ஞானத்தினொளியுருவை" என்றதுக்குத்தாத்பர்ய கதநமுகேநவருளிச்செய்கிறார் (ப்ரளயமித்யாதி). சப்தார்த்தம் (ஜ்ஞாநேத்யாதி). (ஸ்வரூபன்) என்றது - ஸ்வமமான அஸாதாரணதர்மமாகவுடையவனென்கை. §"நாயகரே" என்ற ஏவகாரதாத்பர்யம் (அவர்களித்யாதி) ... ... (௩)

மூ—விண்டாரை வென்றாவி விலங்குண்ண மெல்லியலார்
கொண்டாடு மல்லகல மழலேற வெஞ்சமத்துக்
கண்டாரைக் கடல்மல்லைத் தலசயனத் துறைவாரைக்
கொண்டாடும் நெஞ்சுடையா ரவரெங்கள் குலதெய்வமே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
விண்டாரை	சத்ருக்களை	உண்ண	[ம் உண்ணும்படியாகவு
வென்று	நிரஸித்து, (அவர்களுடைய)	மெல்இயலார்	ம்ருதுஸ்வபாவைகளான்ஸ்த்ரீகள்
ஆவி	சரீரத்தை [ங்கள்	கொண்டு	விரும்பி
விலங்கு	நாய்நரிமுதலிய ம்ருக		

---

§ (பழையவடிவை யழித்தான்) என்றது - "நிலமங்கையெழில் கொண்டான்" என்றத்தைப்பற்ற. § ஆகையாலே பரமபதத்திலடிமை என்று கூட்டுவது. §கீழ்ப்பாட்டில் வ்யாவ்ருத்தி (அவர்களாளாதபோது) என்றது. ...(௩)

(க) தி - வாய் - ௩ - ௧௦ - ௧அ. (உ) தி - நெ - ௧அ.

ஆடும்	அணைக்கத்தக்க	கடல்மல்லைத்தலசயனத்துறைவாரை	திருக்கடல்மல்லையில் ஸ்தலசயநத்திலே பள்ளிகொண்டருளுமவரை
மல்	மிடுக்கையுடைய	சொண்டாடும்நெஞ்சுடையார்	நெஞ்சுடனேகொண்டாடுமவர்கள்யாவர்சிலர்
அகலம்	(ராவணனுடைய) மார்வத்தை	அவர்	அவர்கள்
அழல்	அக்நியானது	எங்கள்குலதெய்வம்	எங்கள்குலத்துக்குத் தெய்வங்களாவர்.
ஏற	ஏறி (புஜிக்கும்படியாகவும்)		
வெஞ்சமத்து	க்ரூரமானயுத்தத்திலே		
கண்டாரை	பார்த்தவராய், (அந்த ஸ்ரமமாறும்படி.		

வ்யா.—நாலாம்பாட்டு. (விண்டாரைவென்று) †அவன் ப்ரதிபக்ஷநிரஸந ஸமர்த்தனாயிருக்கச்செய்தே ஆநுகூல்யத்தாலே கார்யங்கொள்வானாக நினைத்துவந்து கிடக்கிறபடியை அநுஸந்தித்து ஈடுபடுமவர்கள் என்னொருவனளவன்றிக்கே என்குலத்துக்காக நாதராவர்களென்கிறார்.

(விண்டாரைவென்று) †நல்லவார்த்தை சொல்லச்செய்தேயும் (க) "[illegible], நநமேயம்" என்றிருப்பாரையாயிற்று வெல்லுவது. †வாலியை நிரஸித்து, கடலை யணைசெய்து, ஊரைச்சூழப் போந்து, லங்கையை அடைமதிட்படுத்தி, "இனித்தான் அநுகூலிக்குமோ?" என்று அங்கதப்பெருமாளைப் போகவிட்டு, நல்வார்த்தை சொல்லுவித்து, அதுவுங்கேளாதொழிய, பையல் கண்முகப்பே பரிகரத்தையடைய நிரஸித்து, அதுக்குப் பொருந்தாதே வந்தெதிரிட, நிராயுதனாக மிடுக்கறுத்துப் பண்ணிவிடச் செய்தேயும் பிற்றைநாளும்வந்து "என்னைக்கொல்லவமையும்"என்னப்பின்னையிறேகொன்றது. †விண்டாரையாயிற்று வெல்லவல்லது. அநுகூலசங்கை யுள்ளவிடங்களில் (உ) "[illegible], ஸுக்ரீவம்சரணங்கதஃ" (௩) "[illegible] - ஸுக்ரீவம்நாதமிச்சதி" என்றுதான் சரணம்புகாநிற்கும். †"பெருமாள் (௪) '[illegible] - நத்யஜேயம் கதஞ்சந' (௫) '[illegible] - ஏதத்வ்ரதம்மம" என்று நின்றார்; மஹாராஜர் (௬) '[illegible] - வத்யதாம்' என்றே நின்றார் என்று இவ்விடத்துக்கு பட்டரருளிச் செய்யும்படி. இருவரும் சரணாகத ரக்ஷணத்துக்குப் †பிணங்குகிறார்கள். (ஆவிவிலக்குண்ண) †அவர்கள்பேணிப் போந்த ப்ராணன்களைக் கழுகும் பருந்தும் பற்றிமுடிக்க, †அதாவதென்னெ

(க) ரா-யு-௩௬-கக. (௩) ரா-கி-௪-கஅ. (௫) ரா-யு-கஅ-௩௩-
(உ) ரா-கி-௪-கஅ. (௪) ரா-யு-கஅ-௩- (௬) ரா-யு-கஎ-உ௬.

ணில்; †குற்றுயிராகக்கிடக்கிற ஸமயத்திலே இவை வந்து மேலிட்டபடியாலே சேஷித்த ப்ராணங்களவற்றோடே போகையைச் சொல்லுகிறது. (மெல்லியலாரித்யாதி)†ஸ்த்ரீகளாதரிக்க அத்தாலேபேணி வளர்ந்து போந்தமார்விலே, † துஷ்டஸத்வங்களைக்கண்ட நாய்கள் மேல்விழப் பிற்காலிக்குமாபோலே பிற்காலித்துப்போந்த அக்நிதத்வமானது வந்து ப்ரவேசிக்க. (வெஞ்சமத்து மல்லகல மழலேறக்கண்டவாரை) தனியிடத்திலே அநுகூலவேஷத்தோடேவந்து தோற்றி வஞ்சகரான பையல்களைக் கூட்டிக்கொடுவந்து ராஜபுத்ரர்களையகற்றிக் களவிலே பிடித்துக்கொண்டுபோன பையல்களைப் போலன்றிக்கே நேரே செவ்வைப்பூசலிலே. பிராட்டிதானும் "†உடோ! வாராய்! வீரர்கள் வர்த்திக்கும் வழியல்லகாண் நீ செய்தது" என்றாள். (அழலேறக்கண்டாரை) (க) † [అద్యవైనిర్బహుళాలంకాం ప్రవిష్టాస్సూర్యరశ్మయః - அத்யவைகிர்ப்பபாலங்காம் ப்ரவிஷ்டாஸ்ஸூர்யரஶ்மய:] என்கிறபடியே - அவன் பட்டுக்கிடக்கத் "துணுக்கென்றெழுந் திருக்கும்" என்றுபார்த்து "உன்னெல்லைக்குள்ளே ஆதித்யகிரணங்கள் வந்து புகுராநின்றனகிடாய்" என்றாளிறே. அப்படி மதிப்பனாயிருக்கிற அவனுடைய மார்விலே அக்நியை ப்ரவேசிப்பித்து. (கடல் மல்லைத் தலசயனத்துறைவாரை) "ஸாமத்துக்குச் செல்லாதாகி லன்றோ தண்டத்துக் கிழியவேண்டுவது" என்று வளைப்புக்கிடக்கிறவரை. (கொண்டாடும் நெஞ்சுடையார்) "இவரென்ன அபேக்ஷையாலே வந்துகிடக்கிறார், நமக்காகவிறே" என்று (உ) "நின்றிருந்து வெஃகணைக்கிடந்த தென்னநீர்மையே" என்று இதிலே ஈடுபடுவர்கள். (எங்கள் குலதெய்வம்) (கூ) †"కులదైవతన్తత్పాదారవిన్దమ్ - குலதைவதம்தத்பாதாரவிந்தம்" என்னுமளவிலல்ல எங்களது. ... ... (ச)

அரு.—நாலாம்பாட்டு. (விண்டாரையித்யாதி) நிலமங்கைக்காகச்செய்த செயல்மாத்ரமன்றிக்கே, நிலமகளான மலர்மங்கைக்காகச்செய்த ராவண நிரஸநத்தை யநுஸந்திக்கைக்கு ப்ரச்ருதோபயோகம் காட்டாநின்றுகொண்டு, தொகுத்ததாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் (அவன் ப்ரதிபக்ஷேத்யாதி).

விள்ளுகை - ஒட்டற்றுப்போகையாய், அதுவே நிரூபகமாகச்சொல்லுகையாலே, எத்தனைஸமாதானம்பண்ணினாலும் நெஞ்சில்கலவாதேவிண்டே

(க) ரா-யு-ககச-அரு. (உ) தி-ச-வி-சூரு. (ரு) ஸ்தோ-ர-சூ.

போகை தோற்றுகையாலே, அத்தையருளிச்செய்கிறார் (நல்லவித்யாதி). இவர்தாம் நல்லவார்த்தைசொன்னதுண்டோ, ராவணன் நல்வார்த்தைக்கு சைவனோவென்ன, (வாலியையித்யாதி). "விண்டாரைவென்று" என்றதிலே தானே விள்ளாதார்க்குத் தோற்பன் என்று தோற்றுகையால், அத்தையருளிச்செய்கிறார் (விண்டாரையாயிற்றித்யாதி). பெருமாளும் சரணம்புகுந்தார் என்கைக்கு ஐதிஹ்யம் (பெருமாளித்யாதி). (பிணங்குகை) விவாதம் பண்ணுகை. (பிணங்குகிறார்கள்) என்றவநந்தரம், என்று - என்றுசேஷம். "விலங்கு" - திர்யக்காய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவர்களித்யாதி). சரீரத்தையுண்ணுமதொழிய ப்ராணனையுண்ணுமோ வென்னும் சங்கையை அநுவதிக்கிறார் (அதாவதித்யாதி). (குற்றுயிர்) குறுகினவுயிர். "மெல்லியலார்" ம்ருதுவாயிருக்கிறவார்த்தையுடையாரென்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்த்ரீகளித்யாதி). (துஷ்டஸத்வம்) வ்யாக்ராதிகள். "வெஞ்சமம்" யுத்தமாய், இப்படி விசேஷணத்துக்கு வ்யாவ்ருத்திபூர்வகம் பாவமருளிச்செய்கிறார் (தனியிடத்திலேயித்யாதி). (உடோ) ஸம்போதநம், "கண்டாரை" என்கையாலே - காணுததுகண்டாரென்று தோற்றுகையாலே, ஸத்ருஷ்டாந்தமுபபாதிக்கிறார் (அத்யேத்யாதி). "எங்கள்" என்றபதவாஸனை (குலதைவதமித்யாதி). ... ... (ச)

மூ—பிச்சச்சிறுபீலிச்சமண் குண்டர் முதலாயோர்
விச்சைக் கிறையென்னு மவ்விறையைப் பணியாதே
கச்சிக்கிடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்
நச்சித் தொழுவாரை நச்சென்றன் நன்னெஞ்சே. (ரு)

பதம்.	உரை.
பிச்சம்	திரளானமயிலிறகையும்
சிறு	சிறிய
பீலி	மயில்தோகையையுமுடைய
சமண்குண்டர்	அமணரானநீசர்
முதலாயோர்	முதலானவர்கள்
விச்சைக்கு	ஸகலவித்யைகளுக்கும்
இறையென்னும்	நிர்வாஹகனென்று ஒருவனைக்கைக்கொள்ளுவர்கள்;
அவ்விறையை	அவர்களால் ஏற்படுத்தப்பட்டவனை
பணியாது	ஆஸ்ரயியாமல், (ஆஸ்ரிதர்க்காக)
கச்சி	திருவெஃகாவிலே
கிடந்தவன்	கண்வளர்ந்தருளுமவன்
ஊர்	(ஆஸ்ரிதனானபுண்டரீகருஷிக்காக எழுந்தருளின) ஊரான
கடல்மல்லைத்தலசயனம்	திருக்கடல்மல்லையில் ஸ்த்தலசயநத்திலே (பள்ளிகொண்டருளுகையை)
நச்சி	ஆசைப்பட்டு
தொழுவாரை	தொழுமவர்களை
என்றன்	என்னுடைய
நல்	விலக்ஷணமான
நெஞ்சே	மநஸ்ஸே!
நச்சு	(நீயும்) ஆசைப்பட்டுத்தொழு. (ரு)

வ்யா. — அஞ்சாம்பாட்டு. (பிச்சச்சிறுபீலிச்சமண் குண்டர்) கிழலுக்கிடாகக் கையிலேபிச்சத்தைப்பிடித்து ஒருகையிலே †பீலித்தழையைப்பிடித்துக், கண்டார்க்கு "இவர்களும் சில†தார்மிகரோ" என்று தோற்றும்படி அநுகூலவேஷத்தைப்பரிக்ரஹித்து. (சமண் குண்டர்) அமணதர்சநத்தைத் தரித்துக்கொண்டுநிற்கிறநீசர். குண்டு என்று-ஆழமாய், அத்தால் தாழ்ச்சியைச்சொல்லிற்றாய், நீசரென்றபடி. வேதபாஹ்யரானநீசர். (முதலாயோர்) முதலானோரென்றபடி. அவர்கள் துடக்கமான பௌத்தரையும், லோகாயதிகரையும் நினைக்கிறது. (விச்சைக்கிறையென்னும்) †வைதிகஸமதிகம்யனான ஈஶ்வரனை இல்லையென்று ஸர்வஜ்ஞனென்றொருவனைக்கல்பிப்பர்கள்; பின்னை அவனுடைய ஸர்வஜ்ஞத்வத்துக்கு ப்ரமாணம்தேடவேண்டிவரும்; அது தன்னைத்தந்தாமுடைய உக்திகளாலே ஸாதிக்கப்பார்ப்பர்கள், அதுபின்னை அப்ரமாணமாய் அது இல்லையாய்க்காட்டும்; வித்யைக்கு நிர்வாஹகனென்றொருவனைக்கொள்வர்கள். (அவ்விறையைப் பணியாதே) அவ்விறையென்று முகத்தைத் திரியவைத்துச்சொல்லுகிறார். (பணியாதே) ஆப்தனென்றுகொண்டு அவர்கள் சொல்லுகிறவற்றை ஆஶ்ரயித்துவர்த்தியாதே. (கச்சியித்யாதி) †ஆஶ்ரிதர்க்காகத் திருவெஃகாவிலே படுக்கைமாறிக் கைமாறிக்கிடந்தவனை. †ஓராஶ்ரிதனுக்காகத்தரைக்கிடைகிடக்கிறதேசம். அவன் தனக்குப் பரமப்ராப்யமாகக்கொண்டுவந்துநிற்கிறதேசத்தை. (நச்சித்தொழுவாரை) கர்த்தவ்யமென்றுதொழாநிற்கச்செய்தே புறம்பே நெஞ்சு அந்யபரமாயிருக்கையன்றிக்கே, ஆசையின்கார்யம்தொழுகை என்று தோற்றும்படியிருக்கை. திருக்கடல்மல்லையைத் தொழுகிறவர்களுடைய †அவ்வேற்றமெல்லாம் நமக்குடலாக அவர்களை ஸ்நேஹி. (என்றன்நன்னெஞ்சே) †இதுசொல்லுகிறது என்சாபலமிறே. என்னுடைய உபதேசநிரபேக்ஷமாக முன்னே ப்ராவண்யத்தையுடையையாயிருக்கிற உனக்குச்சொல்லவேண்டாவிறே. எனக்குங்கூடவழிகாட்டுகிற உனக்கு நான் வழிகாட்டுகிறேனோ. (க) "𑌮𑌨 𑌏𑌵 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌬𑌨𑍍𑌧𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑍋𑌃. மநஏவமநுஷ்யாணாம்காரணம்பந்தமோக்ஷயோ:" என்னக்கடவதிறே. (ரு)

அரு.—அஞ்சாம்பாட்டு (பிச்சச்சிறுபீலியித்யாதி) "கொண்டாடும் நெஞ்சுடையார் எங்கள்குலதெய்வம்" என்று தம்முடைய ஸித்தாந்தத்தைத் தா

(க) வி - பு - ௬

மநுஸந்திக்கவே; (௧) "சஞ்சலம்ஹிமந:-சஞ்சலம்ஹிமந:" (௨) * நின்றவாநில்லா நெஞ்சன்றோ, நமக்கு இவ்விபூதியிலே இது நிலைநிற்கவற்றோ, அவைதிகஸமயங்கள் பல நடமாடாநிற்கிறதே" என்று தம்நெஞ்சைச் சேரப்பிடித்துக்கொண்டு உபதேசிக்கிறாரென்று ஸங்கதி.

பிச்சத்தை - திரளானமயிலிறகை. அல்பமான மயிலிறகு - (பீலித்தழை) என்றது. (தார்மிகரோ) என்றது, ஜந்துக்களைமிதிக்கவொண்ணாது என்று வழிபொறுக்கிக்கொண்டு போருகையைப்பற்ற. "விச்சைக்கு" வித்யைக்கு. "இறையென்னும்" என்றத்தாலே - அவர்களிலொருவனைச்சொல்லுமத்தனை, போக்கி வேறில்லையென்றுதோற்றுகையாலே, அதுக்கு ப்ரஸக்திபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வேதைகேத்யாதி). (ஆஸ்ரிதர்க்கு) என்றது - திருமழிசைப்பிரான், கணிகண்ணனென்பான் இவர்களுக்கென்றபடி. (ஓராஸ்ரிதனுக்காக) ஸ்ரீபுண்டரீகனுக்காக. (அவ்வேற்றமெல்லாம் நமக்குடலாக) என்றது - அவர்கள் பகவத்விஷயத்திலே பண்ணுமவையெல்லாம் நமக்காகப் பண்ணுகிறார்களென்று ஸ்நேஹியென்னுதல், அவையெல்லாம் நமக்கு அவர்கள்விஷயத்திலே யுண்டாம்படி ஸ்நேஹியென்னுதல். முந்துற்றநெஞ்சான தம்முடையநெஞ்சை அதிசங்கைபண்ணி "அவ்விறையைப்பணியாதே" என்றும் "நச்சு" என்றும் சொல்லுகை யெங்ஙனே சேருமது? ஒருபடிசேர்ந்தாலும் இப்போது, "நெஞ்சே" என்றது சேருமோவென்ன; அத்தைப்பரிஹரிக்கிறார் (இதுவித்யாதி). இத்தால் - நன்னெஞ்சாகையாலேதானே த்ருடீகரணத்துக்காகச்சொன்னதும் சாபல்யப்ரயுக்தமென்றதாயிற்று. ... (௫)

௬ —புலன்கொள்நிதிக்குவையோடுபுழைக்கைமாகளிற்றினமும்
நலங்கொள்நவமணிக்குவையுஞ்சுமந்தெங்குநான்றொசிந்து
கலங்களியங்குமல்லைக்கடல்மல்லைத்தலசயனம்
வலங்கொள்மனத்தாரவரைவலங்கொள்ளென்மடநெஞ்சே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
புலன்	இந்த்ரியங்களை [ளுகிற	நலங்கொள்	நன்றான
கொள்	தன்வசமாக்கிக்கொள்	நவமணிக்குவையும்	நவரத்நத்திரளையும்
நிதிக்குவையோடு	பொற்குவியலோடு	சுமந்து	தாங்கி
புழை	துளையையுடைத்தான	எங்கும்	பார்த்தவிடமெங்கும் (ஏறினசரக்கின் கனத்தாலே)
கை	கையையுடைத்தாய்	நான்று	தாழ்ந்து
மா	பெரிதாயிருந்துள்ள	ஒசிந்து	அலையாநின்றுள்ள
களிற்றினமும்	யானைத்திரளையும்	கலங்கள்	ஓடங்கள்

(௧) கீதை - ௬ - ௩௪. (௨) ௧ - ௧ - ௭ -

இயங்கும்	ஸஞ்சரிக்கிற	வலங்கொள்மன த்தாரவரை	ப்ரதக்ஷிணம்பண்ணு கைஸ்வரூபப்ராப்த மென்றுநினைத்திரு க்குமவர்களை
மல்லை	பெருமையையுடைத் தான	என்மடநெஞ் சே	எனக்குக்கீழ்ப்பட்டி ருக்கும்மநஸ்ஸே!
கடல்மல்லைத்த லசயனம்	கடல்மல்லையில்ஸ்த்த லசயநத்திலே பள் ளிகொண்டிருக்கு மவனை	வலங்கொள்	வலம்வந்துஉஜ்ஜீவிக் கப்பாராய். (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (புலன்கொள் நிதிக்குவையோடு) †கண்டார்க்கு "மமேதம் - மமேதம்" என்னவேண்டும்படி யிருக்கிற பொற் †குவையோடே.(புழைக்கைமாகளிற்றினமும்) துளையையுடைத்தான கையையுடைய பெரிய மத்தகஜங்களுடையதிரளும். (நலமிக்யாதி) நவரத்நத்திரளும். (நலங்கொள்) என்கிறது - இக்கரையிலே கொடுவந்து ஒருவர்கையிலே யிட்டு நன்மை பார்க்கவேண்டாதபடியாயிருக்கை. (சுமந்து) † நற்சரக்காகையாலே "பொறுக்கும், பொறுது" என்றுபாராதே ஏறிநிவர்களாயிற்று. (சுமந்தெங்கும் நான்றசிந்து) † ஏறின சரக்கின்பெருமையாலே எங்கும் தாழ்ந்தொசிந்து,"அங்கே இற்றது, இங்கேமுறிந்தது"என்னும்படி பயத்தோடே மரக்கலங்களானவை ஸஞ்சரியாநின்றுள்ள † பெருமையையுடைத்தான கடல்மல்லைத் தலசயனம். †இதுகொண்டுதாம் விநியோகங்கொள்ளுகைக்காகச்சொல்லுகிறாரன்றிறே. அச்சோலையோபாதி அங்குத்தைக்கலங்காரமென்றிவராதரிக்கிறது. (வலங்கொள் மனத்தாரவரை) திருக்கடல்மல்லையிலே சுழிக்கும் நெஞ்சுடையவர்களை. †"பிள்ளைதிருநறையூரரையரும் பட்டருமாக ப்ரதக்ஷிணம் பண்ணும்போது நான்பின்னேபோனேன்,நம்மைப்போலே†தேவைக்குப்பரகுபரகென்று வருகையன்றிக்கே திருமாளிகைகளையும் திருக்கோபுரங்களையும் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்துக்கொடுபோகும்படிகாண்" என்று நஞ்சீயரருளிச்செய்வர். (அவரைவலங்கொள்) நமக்கு†அவர்கள் நின்றநிலை போராது, அவர்கள்பக்கல் அநுவர்த்தநத்திலே அந்வயிக்கவேணும். (என்மடநெஞ்சே) என்னோடொருமிடறாய் எனக்கு பவ்யமான நெஞ்சென்கிறார். ... ... (௬)

அரு. — ஆறும்பாட்டு (புலன்கொளித்யாதி) நன்னெஞ்சாகையாலே இவர்சொன்ன உபதேசம்பலித்தது, ஆகையாலே, பொன்னும்மணியும் கொழிக்கும்படியும் கஜாந்தைஶ்வர்யம் குறைவறும்படியுமாகக் கலங்கள்நடமாடு

கிற திருக்கடல்மல்லையில் போக்யதையையநுஸந்தியாநின்றுகொண்டு, பாகவதவிஷயத்திலநுகூலவ்ருத்தியைச் செய்யச்சொல்லிவிடுகிறாரென்றுஸங்கதி.

"புலன்-" இந்த்ரியங்களை, "கொள்ளுகை-" க்ரஹிக்கையாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (கண்டார்க்கித்யாதி). (குவை) குவியல், ராசியென்கை. (நற்சரக்கு) ஸத்வஸ்துக்கள். "நான்று" தாழ்ந்து என்றாய், அதினர்த்தம் (எறிவவித்யாதி). "ஒசிந்து" என்றதுக்குத்தாத்பர்யகதநமுகேந மேலுக்கர்த்தம் (அங்கேறித்யாதி). "மல்லை" என்றதுக்கர்த்தம் (பெருமை) என்றது. திருக்கடல்மல்லையை யிப்படிவர்ணித்தவர்க்கு உட்கருத்தையருளிச்செய்கிறார் (இதித்யாதி). நெஞ்சு சுழிக்கும்படிக்கு ஒருஸம்வாதமருளிச்செய்கிறார் (பிள்ளையித்யாதி). (தேவைக்கு) கர்த்தவ்யத்துக்கு. (அவர்கள்நின்றநிலை) நெஞ்சுசுழிக்குமளவு. இத்தால் - நான் காயிகபர்யந்தமாக அநுகூலவ்ருத்தியைப் பண்ணும்படி ஆசைப்படவேணுமென்றதாயிற்று. ... ... (௬)

மூ—பஞ்சிச்சிறு கூழை யுருவாகி மருவாத
வஞ்சப்பெண் நஞ்சுண்டவண்ணல் முன்நண்ணாத
கஞ்சைக்கடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்
நெஞ்சில்தொழுவாரைத் தொழுவாயென்தூய் நெஞ்சே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பஞ்சி	பஞ்சுபோலேம்ருது	கஞ்சை	கம்ஸனுடையகருத்
	வாய்		தை [டைய
சிறு	சிறிதாயிருந்துள்ள	கடந்தவன்	கடந்தக்ருஷ்ணனு
கூழை	மயிர்முடியையுடைத்	ஊர்	ஊரான
	தான	கடல்மல்லைத்த	கடல்மல்லையில்ஸ்த்த
உருவாகி	வடிவையுடையனாய்,	லசயனம்	லசயநத்தில்பள்ளி
மருவாத	பொருந்தாத		கொண்டிருக்கை
வஞ்சம்	வஞ்சனையையுடைய		யை
	ளான	நெஞ்சில்	நெஞ்சோடேகூட
பெண்	பூதனையுடைய	தொழுவாரை	தொழுமவர்களை
நஞ்சு	முலையில்விஷத்தை	என்	எனக்குபவ்யமாய்
உண்ட	அமுதுசெய்த	தூய்	பரிசுத்தமான
அண்ணல்	ஸர்வஸ்வாமியாய்,		
முன்	முன்னே [யியாத	நெஞ்சே	மநஸ்ஸே !
நண்ணாத	தன்னைக்கிட்டியாஸ்ர	தொழுவாய்	தொழப்பாராய். (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (பஞ்சிச்சிறுகூழையுருவாகி) பஞ்சுபோலே ம்ருதுவாய்க்†குழன்று பிடித்துக்கட்டவொண்ணாதபடியான † மயிர்முடியையுடைய பாலருடைய வடிவையுடையனாய். (௧)"பெய்யும் பூங்குழல்-பிள்ளை" என்னக்கடவதிறே. அன்றிக்கே, கூழை

(௧) தி - வாய் - ௫ - ௧௦ -

என்றால் ஸ்த்ரீகளுடைய குழலுக்குப் பேராகையாலே ம்ருதுவாய்க்
குழன்றுபிடித்துக் கட்டவொண்ணாதபடியான மயிர்முடியையுடைய
பூதனையுடைய மயிர்முடியைச் சொல்லிற்றாகவுமாம். யசோதைப்
பிராட்டி வடிவழகைக் கொடுவருகிறாளாகையாலே தன்னைப்பேணி
க்கொண்டுவருமிறே. †(சிறுகூழை) என்றதுக்குச் செய்வதென்னென்
றால், †எல்லாம் செய்தாலும் பின்னையும் பாறிப்பறந்து கிடக்குமிறே.
(மருவாதவஞ்சப்பெண்) ஹ்ருதயத்தில் ப்ராதிகூல்யத்தையுடைய
ளாய், அதுதன்னை ஆநுகூல்யபாவத்தாலே பேணிக்கொடு வருமிறே.
சமைந்துவந்த பூதனையுடைய.. (நஞ்சுண்டவண்ணல்) அவளு
டைய விஷத்தை அமுதுசெய்த ஸ்வாமி. (௨) "𑌸𑍍𑌤𑌨𑍍𑌯𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌸𑌮𑍍𑌮𑌿𑌶𑍍𑌰𑌂 𑌰𑌸𑍍𑌯𑌮𑌾𑌸𑍀𑌜𑍍𑌜𑌗𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌃 -ஸ்தந்யந்தத்விஷஸம்மிஶ்ரம்ரஸ்யமாஸீஜ்ஜகத்குரோ:"
என்னக்கடவதிறே.†ஜகச்சேஷியான தன்னையிறே நோக்கித்தந்தது.
(முன்னண்ணாத வித்யாதி) † முன்பு கம்ஸன்விட்ட விரோதிகளை நிர
ஸித்தபடியைச் சொல்லிற்று; விரோதிவர்க்கத்துக்கு வேர்ப்பற்றான
இப்பையல் தன்னைக் கிழங்கெடுத்தபடியைச் சொல்லுகிறது. "ஒரு
படியாலும் கிட்டோம்" என்றிருந்தகம்ஸனை நிரஸித்துஅநுகூலர்க்கு
த் துணையாகவேணுமென்று வந்துகிடக்கிறவனுடைய திருக்கடல்
மல்லையை. (நெஞ்சில் தொழுவாரை) †வாய்விடக்ஷமரன்றிக்கே யிரு
க்குமவர்களை. (தொழுவாய்) அந்தத் திருக்கடல்மல்லையையும் அங்கு
க்கிடக்கிற நாயனாரையும் தேடியிராதே தொழுவார்கள் உத்தேஸ்
யராய்த்தொழு. (என்தூய்நெஞ்சே) † ததீயசேஷத்வத்தளவிலே நிற்
கும்படியான சுத்தியை யுடையையிறே நீ. ... (௭)

அ௫.—எழாம்பாட்டு (பஞ்சியித்யாதி) நீர் "மடநெஞ்சே!" என்று மிக
வும்கொண்டாடி, பகவத்விஷயத்தில் காயிகபர்யந்தமாக அநுகூலவ்ருத்திகளை
ப்பண்ணச்சொல்லாநின்றீர், சொல்லும்போது மெய்யென்றுதோற்றுகையும்,
அநந்தரம் அந்தருசி நிலைநில்லாதேபோகையுமாய் வருகைக்கு ஹேதுவான
விரோதிவர்க்கம் கழியக்காணேனென்ன; அதுக்குக் கம்ஸாரியிருக்கிறான்,
நீ அவர்களைத்தொழாயென்கிறாரென்றுஸங்கதி.

(குழன்று) கூட்டி. இது - சிறுமையின்தாத்பர்யம். கூழை, ஐம்பால்,
ஓதி, கூந்தல், கோதை என்று - மயிர்முடிக்குப்பேராகையாலே, அருளிச்செய்
கிறார் (மயிர்முடியை) என்று. யசோதையைப்போலே பேணிவருகிறாளாகில்
"சிறுகூழை" என்னப்போமோ வென்னும்சங்கையை அநுவதித்துப் பரிஹரி

---

(௨) வி - பு - ௫ -

க்கிறூர் (சிறுகூழையித்யாதி). (எல்லாம்செய்தாலும்) எத்தனையெண்ணெய் தடவிக்கோதிமுடித்தாளேயாகிலும். "அண்ணல்" என்று விசேஷித்தவருடைய ஹ்ருதயத்தையருளிச்செய்கிறூர் (ஜகதித்யாதி). முன் - முந்துற முன்னம், நண்ணுத, கஞ்சை - கம்ஸனை என்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறூர் (முன்பித்யாதி). "நெஞ்சில்" என்று விசேஷித்ததுக்குக்கருத்து (வாயித்யாதி). தூய்மையாவது - ப்ராக்ருதாநுகுணமாக பாகவதவைபவமறிகையென்றருளிச்செய்கிறூர் (ததீயேத்யாதி). ... ... (எ)

மூ.—செழுநீர் மலர்க்கமலம் திரையுந்து வன் பகட்டால்
உழுநீர்வய லுழவருழப் பின்முன் பிழைத்தெழுந்த
கழுநீர் கடி கமழும் கடல்மல்லைத் தலசயனம்
தொழுநீர் மனத்தவரைத் தொழுவாயென் தூய் நெஞ்சே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உழுநீர்	உழுகையேஸ்வபாவமாகவுடையரான	பிழைத்தெழுந்த	தப்பியெழுந்த
உழவர்	உழவரானவர்கள்,	கழுநீர்	செங்கழுநீரும்தாமரையும்
செழு	அழகிய	கடிகமழும்	நறுநாற்றம்கமழாநின்றுள்ள
நீர்திரை	நீரின் அலைகளையும்	கடல்மல்லைத்தலசயனம்	கடல்மல்லைஸ்த்தலசயநத்தை
மலர்	அலர்ந்த	தொழு	தொழுகிற
கமலம்	தாமரைகளையும்	நீர்	நீர்மையையுடைத்தான
உந்து	தள்ளுகிற	மனத்தவரை	மநஸ்ஸையுடையவர்களை
வன்	வலிய	என் தூய்	நெஞ்சே!
பகட்டால்	எருதுகளைப்பூட்டி	தொழுவாய்	தொழப்பாராய். (அ)
வயல்உழ	வயலைஉழ		
பின்முன்	பின்னும்முன்னும்		

வ்யா.—எட்டாம்பாட்டு. (செழுநீரித்யாதி) † மலர்ந்ததாமரைகளையும் ஜலஸம்ருத்திகளையுமுடைத்தாயாயிற்று வயலிருக்கும்படி. இவ்வயலைத்தரைகண்டு உழுகைக்காக அத்திரைகளையும் தாமரைகளையும் காலாலே தள்ளுவர்கள். (வன்பகட்டால்) † ப்ரளயத்திலேயும் உழவற்றுயாயிற்று அவ்வெருதுகளிருப்பது. (உழுநீர்வயலுழவருழ) எப்போதும் நடுவது உழுவதாய்ப் போருகையாலே உழுவதே ஸ்வபாவமாக வுடைத்தானவயலைக் கர்ஷகரானவர்களுழ. (பின்முன் பிழைத்தெழுந்த கழுநீர்கடிகமழும்) இவர்களுழாநிற்கப் பின்னும் முன்னும் தப்பிநின்ற செங்கழுநீரானது இவர்கள் ஶ்ரமத்தையாற்றுகைக்குறுப்பாகப் பரிமளத்தை ப்ரவஹியாநிற்கும். † அன்றிக்கே, இவர்கள் முன்னே உழுதுகொடுபோகாநிற்கப் பின்னே தப்பிநின்ற கழுநீர் கடிகமழுமென்றுமாம். ஆங்ஙனன்றிக்கே,

(வயலுழவருழப் பின்முன் பிழைத்தெழுந்த) முன்பே ஒருகால் உழுதுவைப்பர்களிறே, அப்போது தப்பிகின்ற செங்கழுநீர் அலருகைக்கொரு †ஸஞ்சாரம்பண்ணினாற்போலேயிருக்கும். (கடல் மல்லையித்யாதி) திருக்கடல் மல்லையைத்தொழுகை காதாசித்கமாகை தவிர்ந்து ஸ்வபாவமாம்படியான நெஞ்சையுடையாரை. (தொழுவா யென்தூய்நெஞ்சே) அவர்களுக்கு ஊரைத்தொழுகை யாத்ரையான வோபாதி அவர்கள்தங்களைத்தொழுகைகிடாய் உனக்கு யாத்ரை. பாகவதசேஷத்வம் நன்றென்று உபதேசிக்கலாம்படியிறே உன் சுத்தியிருக்கிறது. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு (செழுநீரித்யாதி) பூதநாகம்ஸநிரஸநமாத்ரமன் றிக்கே புண்டரீகருடைய அபேக்ஷிதம்செய்து பூவிடுவித்துக்கொண்டவன் வர்த்திக்கிற வூரில் ஸமாராதநோபகரணங்களான புஷ்பஸம்ருத்திதன்னை அநுஸந்தியாநின்றுகொண்டு, அவ்வூரைத்தொழுமவர்களைத் தொழச்சொல்லி விடுகிறாரென்றுஸங்கதி.

"மலர்க்கமலம்-செழுநீர்-திரையுந்து" என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (மலர்ந்தவித்யாதி). "பகடு" என்று - வ்ருஷபங்களாய், அதின்வன்மையையருளிச்செய்கிறார் (ப்ரளயத்திலேயுமித்யாதி). உழவர்களு டைய முன்ப்ரதேசமும் பின்ப்ரதேசமும் பிழைத்தென்று தாத்பர்யமருளிச் செய்து, முன் - உழ, பின் - பிழைத்து, என்று அந்வயம் விவக்ஷித்து, ஸ்த்தல பரமாகவும் காலபரமாகவும் இரண்டுதாத்பர்யமருளிச்செய்கிறார் (அன்றிக்கே யித்யாதி வாக்யத்வயத்தாலே). (ஸஞ்சாரம்பண்ணினாற்போலே) களை கொத்தினாற்போலேயென்கை. செங்கழுநீர் ஸம்ருத்தமாய்வருகைக்காக உழ வாகிற ஸஞ்சாரம்பண்ணினாற்போலே என்று வாக்யார்த்தம். ... (அ)

மூ.—பிணங்களிடு காடதனுள்நடமாடு பிஞ்ஞகனோடு
இணங்குதிருச்சக்கரத் தெம்பெருமானார்க் கிடம் விசும்பில்
கணங்களியங்கும் மல்லைக்கடல்மல்லைத் தலசயனம்
வணங்குமனத்தாரவரை வணங்கென்றன் மடநெஞ்சே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பிணங்கள்	பிணங்களைச்சுடுகிற	இணங்கு	பொருந்திய
இடுகாடதனுள்	சுடுகாட்டிலே [ணாய்	திருச்சக்கரத்து	திருவாழியாழ்வானை யுடைய [கு
நடமாடு	நர்த்தநம்பண்ணுமவ		
பிஞ்ஞகனோடு	ஸம்ஹாரகர்த்தாவா ன ருத்ரனோடே கூட	எம்பெருமானார்க்கு	என்னுடையநாதனுக்
		இடம்	இடமாய்,

விசும்பில்	ஸ்வர்க்காதிலோகங்களிலுள்ள	கடல்மல்லைத்தலசயனம்	கடல்மல்லைத்தலசயனத்தை
கணங்கள்	தேவகணங்கள்	வணங்குமனத்தாரவரை	வணங்கும்நெஞ்சையாரவரை
இயங்கும்	வந்துஆஶ்ரயியாநின்றுள்ள	என்றன்மடநெஞ்சே! வணங்கு.(௯)	
மல்லை	பெருமையையுடைய		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பிணங்களித்யாதி) † மனிச்சுக்கலவாத நெஞ்சையுடைய ருத்ரனோடேகூட;-†ஶ்மசாநபூமியிலே ஆடாநின்றுள்ள ருத்ரனோடேகூட. † அபிமாநோபஹதரானவர்களுக்கும் நித்யஸூரிகளுக்கு மொக்கத் திருமேனியிலே இடங்கொடுத்து நிற்கும் நீர்மையைச் சொல்லுகிறது. திருவாழியாழ்வானைச் சொல்லுகிறவிடம் நித்யஸூரிகளுக்கு முபலக்ஷணம். (விசும்பில்கணங்களியங்கும்மல்லை) இங்கேவந்து சாய்ந்தருளின நீர்மையை யநுஸந்தித்து நித்யஸூரிகள் ஸஞ்சரிக்கிறபடியைச் சொல்லிற்றாகவுமாம். அன்றிக்கே, ஆகாசத்தில் போகப்ரதாநரான யக்ஷகந்தர்வர்கள் சஞ்சரியாநின்றுள்ள †பெருமையையுடைய திருக்கடல்மல்லையை. (வணங்கும்மனத்தாரவரை) தொழும் நெஞ்சுடையாரை. (வணங்கு - மடநெஞ்சே) அவர்கள் தொழும்விஷயத்தைத்தேடி யிராதே உனக்குத் தொழுகைக்கு விஷயம் அவர்கள் தாங்கள் கிடாய். ... (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு (பிணங்களித்யாதி) கீழ்ப்பாட்டில் சொல்லப்பட்ட புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு ஆஶ்ரயிப்பார்க்கு உறுப்பானவன் ஸௌசீல்யத்தையநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

சுடுகாட்டில் பேயாய் மநுஷ்யருடைய வ்யாபாரமில்லாமையால்(மனிச்சுக்கலவாதநெஞ்சையுடைய) என்கிறது. வாக்யார்த்தம் (ஶ்மசாநேத்யாதி). பிஞ்ஞகன் - பிநாகியென்றாய், அவன் உபலக்ஷணமாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அபிமாநேத்யாதி). "மல்லை" என்றதினர்த்தம் (பெருமை) என்றது. ... ... (௯

மூ.—கடிகமழுநெடுமறுகில் கடல்மல்லைத் தலசயனத்
தடிகளடியேநினையு மடியவர்கள்தம் மடியான்
வடிகொள் நெடு வேல்வலவன் கலிகன்றியொலிவல்லார்
முடிகொள்நெடு மன்னவர்தம்முதல்வர் முதலாவாரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கடி	நறுநாற்றம்	வடிகொள்	கூர்மையையுடைத்தாய்
கமழும்	கமழாநின்றுள்ள	நெடு	பெரிய
நெடு	பெரிய	வேல்வலவன்	வேலால்பொரவல்லரான
மறுகில்	வீதிகளையுடைத்தான	கலிகன்றி	ஆழ்வார்
கடல்மல்லை	திருக்கடல்மல்லையிலே	ஒலி	அருளிச்செய்த திருமொழியை
தலசயனத்து	ஸ்த்தலசயநத்திலேபள்ளிகொண்ட	வல்லார்	கற்கவல்லவர்கள்
அடிகள்	ஸ்வாமியுடைய	முடிகொள்	கிரீடதாரிகளான
அடி	திருவடிகளை	நெடுமன்னவர் தம்முதல்வர்	ராஜாதிராஜாக்களுக்கும்
நினையும் அடியவர்கள்தம்	நினைக்கும் சேஷபூதருடைய	முதலாவார்	ப்ரதாநராவர்கள்(க0)
அடியான்	அடியாராய்		

வ்யா.—பத்தாம்பாட்டு. (கடிகமழுமித்யாதி) பரிமளம் ப்ரவஹியாநின்றுள்ள †பெரிய வீதிகளையுடைத்தான திருக்கடல் மல்லையிலே வந்து கண்வளர்ந்தருளுகிற ஸர்வஸ்வாமியுடைய திருவடிகளையே அநுஸந்திக்கும் சேஷபூதர் சேஷத்வத்திலே நின்றவன். ஜ்ஞாநாநந்தங்களல்ல நிரூபகம், பாகவதசேஷத்வமென்கிறார். (வடிகொள்நெடு வேல்வலவன்)†காக்கைக்குக் கையிலே வேல்பிடித்தாற்போலே யாயிற்று சேஷத்வத்திலும் † பாகவதசேஷத்வத்திலே நின்றபடி. கூர்மையையும் ஒழுகுநீட்சியையுமுடைத்தான வேலையுடையராய் ப்ரதிபக்ஷநிரஸந ஸமர்த்தராயிருந்துள்ள ஆழ்வாருடைய இத்திருமொழியை அப்யஸிக்கவல்லார். (முடிகொளித்யாதி) முடியையுடையராய் நாட்டுக்கு அநந்யப்ரதாநராயிருந்துள்ள † க்ஷத்ரியர்க்கு ப்ரதாநரான ப்ரஹ்மாதிகளுக்கும் நிர்வாஹகரான நித்யஸூரிகளோடு ஸத்ருசராகப்பெறுவர். ... ... (க0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு (கடியித்யாதி) "மறுகில்" என்றதினர்த்தம் (வீதிகளையுடைத்தான) என்றது. (காக்கைக்கு) ரக்ஷிக்கைக்கு. (பாகவதசேஷத்திலேநின்றபடி) என்றதுக்கு - பிற்காலியாதேநின்றபடி என்று கருத்து. (க்ஷத்ரியர்க்கு) மநு மாந்தாதாபோல்வார்க்கென்றபடி. ... ... (க0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்தில் ஆறும்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி - உ - ம் பத்து - எ - ம் திருமொழி - திவளும் ப்ரவேசம்.

வ்யா.—†ததீயசேஷத்வபர்யந்தமாக பகவதநுபவம் பண்ணுகையாலே தம்முடைய அநந்யார்ஹசேஷத்வத்தை அநுஸந்தித்தாராய் நின்றார்; † அநந்யார்ஹ சேஷத்வத்துக்கு லக்ஷணம் சொல்லுகிறவிடத்திலே (க) "நின்திருவெட்டெழுத்துங் கற்று நான் உற்றது முன்னடியார்க்கடிமை"என்றாரிறே. †தம்முடைய சேஷத்வத்துக்கு எதிர்த்தலையான அவனுடைய சேஷித்வத்தை அநுஸந்தித்த விடத்திலே, அது தமக்கு †ரஸித்திருக்கும்படியாலே, அவனை அநுஸந்திப்பதாகப்பாரித்தார்; அப்போதே நினைத்தபடி அநுபவிக்கப்பெற்றிலர்; அவ்விழவாலே தாமானதன்மைபோய் பிரிவாற்றாமையாலே நோவுபடுகிறாளொருபிராட்டிதசையை ப்ராப்தராய் அந்நிலைதானும் போய்க்குலைந்தது. அதாவது - தன்னாற்றாமையைத் தானே வாய்விட்டாற்றுகை யன்றிக்கே, பிறர்வாயாலே சொல்லுகையிறே. ஆக நாயகனோடு நினைத்தபடிகளைப் பரிமாறாமையாலே † நம்முடைய கோயில்திருவாய் மொழிப்படியாலே ஸ்த்திதி கமந சயநாதிகளிலே ஒருநிலையின்றிக்கே அரதியாய் நோவுபடுகிற பெண்பிள்ளையுடைய தசையை அநுஸந்தித்த திருத்தாயார், இவளுக்குண்டான † செல்லாமையையும் அவனிவ்வளவில்வந்து முகங்காட்டாதேயிருக்கிற விருப்பையும், இவளுடைய தசைக்குத் †தன்னாலொரு பரிஹாரமின்றிக்கே யிருக்கிறபடியையும், அவனையிட்டே பரிஹரித்துக்கொள்ள வேண்டும்படியாயிருக்கிற விருப்பையு மநுஸந்தித்து,"இதுக்குநேரே நிதாநபூதராயிருக்கிற வவரிருக்க வழியேபோவாரோபாதியான †நமக்கு இதுதெரியுமோ? ஆனபின்பு அவர்தம்மையே இதுக்கொரு போக்கடிகேட்போம்"என்றத்யவஸித்துத் திருவிடவெந்தை நாயனார் † திருவடிகளிலே இவளைக்கொடுபோய்ப்பொகட்டு, †எங்களைக்காற்கடைகொண்டு உம்முடைய ஸௌந்தர்ய சீலாதிகளிலே துவக்குண்ட இவள் உம்மை நினைத்தபடி யநுபவிக்கப் பெறாமையாலே † மிகவும்

(க) அ - ௯௦ - ௩ -

நோவுபடா நின்றாள்; நீரிவளுடைய திறத்துச் செய்ய நினைத்திருக்கிறதென்? என்று கேட்கிற திருத்தாயார் பாசுரத்தாலே தமக்குப் பிறந்ததசையைப் பேசுகிறாராயிற்று. ... ...*

அரு.—திவளும்வெண்மதிப்ரவேசம்.—கீழ்த்திருமொழியிலே - பாகவதர்களே ப்ராபகரென்று அநுஸந்தித்த ஆழ்வார்தமக்குநிரூபகத்வேந திருவடிகள் ப்ரஸ்துதமாயிற்று; தாய்முலையைநினைத்த ப்ரஜையோபாதி ப்ரவணமாய் இவர் திருவுள்ளம் அவர்களுக்கு உத்தேஸ்யமானதிருவடிகளில் பிணியுண்டது; நினைத்தபோதே ஸாக்ஷாத்கரிக்கப்பெற்றிலர்; அத்தால் கடற்கரையெல்லாம் ஆராயத்துடங்கினார்;அங்ஙனேயொருபெண்பித்தனாயிருக்கக்கண்டு திருவிடவெந்தையெம்பெருமான்றாள்நயந்தாராயிற்று; அதுதானும் நினைத்தபோதேபெறாமை பெண்ணுடையுடுத்து ஆர்த்தியோடிருக்க, கீழ்த்திருமொழியில் ததீயர் இவ்வர்த்தத்தை அவனுக்கு விண்ணப்பஞ்செய்யும்படியை அந்யாபதேசத்தாலே அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி ஸ்பஷ்டமாகக் கண்டுகொள்வது.

(ததியசேஷத்வபர்யந்தமாக பகவதநுபவம்பண்ணுகையாலே), என்றது - (க) "அடிகளடியே நினையுமடியவர்கள் தம்மடியான்" என்றத்தைப் பற்ற. ததீயசேஷத்வம் பகவதநந்யார்ஹசேஷத்வமாகிறபடி யெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (அநந்யேத்யாதி). (தம்முடைய சேஷத்வத்துக்கு எதிர்த்தலையான அவனுடைய சேஷித்வத்தை யநுஸந்தித்தவிடத்தில்) என்றதுக்கு - தமக்கு சேஷிகளான ததீயர்க்குமவனே சேஷியென்று அநுஸந்தித்தவிடத்திலென்றபடி. (ரஸித்திருக்கும்படியாலே) என்றதுக்கு - தமக்கு உத்தேஸ்யரான பாகவதர்க்கு உத்தேஸ்யதமமாகையாலே பகவதநுபவம் தமக்கு மிகவும் ரஸித்ததென்றுகருத்து. (நம்முடையகோயில் திருவாய்மொழி) (உ) "கங்குலும் பகலும்" என்கிற திருவாய்மொழி, (செல்லாமை) என்கிறது - (௩) "ஆசைவிடாளால்" இத்யாதியைப்பற்ற. "பேதையேன்" என்றத்தைப் பற்ற (தன்னாலொருவித்யாதி). (ச) "இவ்வணங்கினுக்குற்ற நோயறியேன்" என்றத்தைநினைத்து (நமக்கிதுதெரியுமோ) என்றது. (௫) "தாள்நயந்திருந்த" என்றத்தாலே (திருவடிகளிலே - பொகட்டு) என்றது. (௬) "எனக்கன்பொன்றிலள்" என்றத்தைக் கடாக்ஷித்து (எங்களைக் காற்கடைகொண்டு) என்றது, (௭) "ஊழியில்பெரிதால்" இத்யாதியைத் திருவுள்ளம்பற்றி (மிகவும் நோவுபடாநின்றாள்) என்றது. ... ... *

மூ.—திவளும்வெண்மதிபோல் திருமுகத்தரிவை
செழுங்கடலமுதினில் பிறந்த
வவளும் நின்னாகத் திருப்பதுமறிந்து
மாகிலுமாசை விடாளால்

(க) உ-௬-௰.
(உ) தி-வாய்-எ-உ.
(௩) உ-எ-க.
(ச) உ-எ-௬.
(௫) உ-எ-எ.
(௬) உ-எ-ச.

குவளையங்கண்ணி கொல்லியம்பாவை
சொல்லு நின் றாள்நயந்திருந்த
இவளை யுன்மனத்தா லென்நினைந்திருந்தா
யிடவெந்தையெந்தைபிரானே. (௧)

பதம்.	உரை.
திவளும்	ஒளிவிடாநின்றுள்ள
வெள்	வெளுத்த
மதிபோல்	சந்த்ரனைப்போன்ற
திரு	அழகிய
முகத்து	திருமுகத்தையுடையளாய்,
அரிவை	அரிவைப்பருவத்தளாய்,
செழு	பெரிய
கடல்	கடலில்பிறந்த
அமுதினில்	அம்ருதத்திலே
பிறந்த	அவதரித்தவளான
அவளும்	அந்தபெரியபிராட்டியாரும்
நின்	தேவரீருடைய
ஆகத்து	திருமார்பிலே
இருப்பதும்	எழுந்தருளியிருக்குமதையும்
அறிந்தும்	அறிந்திருக்கச்செய்தேயும்
ஆகிலும்	ஆகிலும்
ஆசை	தேவரீர்பக்கல் ஆசையை, (என்பெண்பிள்ளை)
விடாள்	விடுகிறிலள்;
அம்	அழகிய
குவளை	குவளைப்பூப்போன்ற
கண்ணி	கண்ணழகையுடையளாய்
கொல்லி	கொல்லிமலையிலெழுதப்பட்ட
அம்	அழகிய
பாவை	ப்ரதிமைபோன்ற வடிவழகையுடையளாய்
நின்	தேவரீருடைய
தாள்	திருவடிகளை
நயந்து இருந்த	ஆசைப்பட்டிருக்கிற
இவளை	இவள்திறத்தில்
உன் மனத்தால்	தேவரீர் திருவுள்ளத்தாலே
என்நினைந்திருந்தாய்	நினைத்திருந்ததென்? (பரமபதத்தைவிட்டு)
இடவெந்தை	திருவிடவெந்தையில் வந்துநிற்கிற
எந்தைபிரானே!	என்குலநாதனே!
சொல்லு	ஒருவார்த்தை யருளிச்செய்யவேணும்.

வ்யா.—முதற்பாட்டு.(திவளுமித்யாதி)† இவளுடைய ஆசைக்கு அளவில்லாமைசொல்லுகிறது. †தன்னில் அளவுடையார் ஆழங்கால் படக்கண்டால் கரையிலே நின்றார்க்குத்தப்பவிறே யடுப்பது. (திவளும் வெண்மதிபோல்) † ஆழங்காலேயாகிலும் முழுகி†மண்கொள்ளுகைக்கீடான அளவுடைமையைச் சொல்லுகிறது. (திவளும்) ஒளிவிடுகையாதல், ஒளியின் மிகுதியாலே பளபளத்திருக்கிறபடியைச் சொல்லுதல். (வெண்மதிபோல்)யௌவநத்தாலேபாண்டரமாயிருக்கை. †நித்யாநுபவம் பண்ணாநிற்கச்செய்தேயும் அத்ருப்தி மாறாதேயிருக்கையைச்சொன்னபடி. (திருமுகத்து) முககாந்திக்கு நேர்கொடு நேர் சந்த்ரன் ஒப்பாகப் போராமையாலே (திருமுகம்) என்று அது

தன்னையேசொல்லுகிறது. (க) †“చన్ద్రకాన్తాననం రామమతీవ ప్రియదర్శనమ్-சந்த்ரகாந்தாநநம் ராம மதீவ ப்ரியதர்சநம்” என்னக் கடவதிறே. †மறுவும் குறைகையுமின்றிக்கேயிருக்கை. †எப்போது மேகரூபனாய், தன்பக்கலுள்ளதெல்லாம் அநுபாவ்யமா யிருப்பானொரு சந்த்ரன் போலேயிருக்கை. (அரிவை) முகத்தில் காந்தியொழியவேயும் துவக்கவற்றாயிற்றுப் பருவமிருப்பது. இது பருவமிருந்தபடி. மேல் பிறப்பிருக்கிறபடி சொல்லுகிறது. (செழுங்கட லமுதினில் பிறந்த) முதலிலே பாற்கடலாய், அதுதன்னைக்கோதாக்கி அம்ருதமாய், அவ்வம்ருதந்தானே கோதாம்படி பிறந்தவளாயிற்று. (உ) “விண்ணவரமுதுண வமுதில்வரும் பெண்ணமுது” என்னக் கடவதிறே. †பரார்த்தமாகக் கடல்கடைந்தானென்று †ஔதார்யங்கொண்டாடினதடையப்போய், தனக்கு நல்லதுபெற வ்யாபரித்தானித்தனை. (அவளும்) வடிவழகாலும் பருவத்தாலும் பிறப்பாலும் வந்த ஏற்றத்தையுடையளானவளும்.

(நின்னாகத்து) †அவளுக்குங்கூட ஸ்ப்ருஹணீயமான மார்பாயிற்று. (உ)†“அகலகில்லேனிறையும்” என்கிறபடியே †இம்மார்பிலிருப்புக்கு ஏதேனும் இழவுவரில் செய்வதென்னென்று துணுக்குத்துணுக்கென்றாயிற்று வர்த்திப்பது. (இருப்பதும்) †இருந்தால் கலந்தாளாய், பின்னைபிரிவும் பொறுக்கமாட்டாள். (அறிந்தும்) அவள் மார்விலே யிருக்கிறதறியாமை பற்றினானென்ன வொண்ணாதே. அவளிருக்கிற விருப்பு தனக்குப் பற்றுகைக்குப் பற்றாசென்று பற்றினவனை; (ஆகிலுமாசைவிடாளால்) †“அவளு மங்கேயிருக்கச் செய்தே எனக்கிழக்கவேண்டுகிறதென்” என்று அதுதானே இவளுக்கு ஆசைக்குடலாயிற்று; அதுவாயிற்று இவளுக்கு ஆசைப்படுகைக்கு ஆலம்பநம்.

(குவளையங்கண்ணி)†அவளில் இவளுக்குண்டான ஏற்றம்சொல்லுகிறது. திருமுகமென்று ஸமுதாயசோபையிறே அவளுக்குச் சொல்லுகிறது. “குவளையங்கண்ணி” என்று அவயவசோபையிலுண்டான ஏற்றஞ்சொல்லுகிற திவளுக்கு. †அவன்றன்னிற்காட்டில் (ச) * அஸிதேக்ஷணை யென்று அவள்கண்ணுக்குண்டான ஏற்றத்தோபாதியும் போருமாயிற்று அவளிற்காட்டில் இவள்கண்ணுக்

க) ரா-அ-௩-உஅ. (உ கு-௪-உ. (௩) தி-வாய்-கு-௧0-௧0. (௪ ரா.

குண்டான ஏற்றமும். (கொல்லியம்பாவை) கொல்லிமலையிலே ஒரு †பாவையுண்டு - எல்லாரும் உருவகுப்புக்குத் தமிழர் சொல்லுவதொன்று.†பிறப்பாலொப்புச் சொல்லவொண்ணாது,ஒன்றிலே யெழுதிக்காணில் காணுமித்தனை. (சொல்லு)† இதுக்கொரு போக்கடி நீர் நினைத்திராமை யில்லையிறே, அவ்வளவும்போராது, எங்களுக்கு பயந்தீரும்படி (௧) "மாஶுச:-மாசுச:" என்கிறப்போலே ஒருவார்த்தை யருளிச் செய்யவேணும்.

(நின்தாள்நயந்திருந்த) இதுவுமவளிற்காட்டிலிவளுக்குண்டான ஏற்றம்; அவள் மார்வை ஆசைப்பட்டாள், இவள் திருவடிகளை யாசைப்பட்டாள். அவன்வாசி யறிந்தார் அவன் மார்வை யாசைப்படுவர்கள்; அவளோடேகூடினவன் வாசியறிந்தார் அவன் திருவடிகளைப்பற்று மித்தனையிறே. (இவளை) சொன்ன ஏற்ற மெல்லாம் போராதபடி யிருக்கையாலே கையாலேகாட்டி "இவளை" என்கிறார். (உன்மனத்தால்)†கைகழிந்தவற்றுக்கு மொருபோக்கடி பார்த்திருக்கக்கடவ உன்திருவுள்ளத்தாலே நினைத்திருந்ததென்? †(உன்மனத்தால்) என்நெஞ்சால் இதுக்கொரு போக்கடி தேடுமதுண்டு என்கைவிட்டேன். இனி உன்நெஞ்சால் நினைத்திருந்ததென்? (இடவெந்தையெந்தைபிரானே)*கலங்காப் பெருநகரத்தில் புகப்பெறுதே கைகழியப்போனாரும் பிழைக்கைக்காகத் திருவிடவெந்தையிலே வந்து நிற்கிற என்குலநாதனானவனே! (௨) "பின்னானார்வணங்கும்" என்கிறபடியே. (சொல்லு) என்று †க்ரியை. ... ... *

அந.—முதற்பாட்டு. (திவளுமித்யாதி) "ஆகிலும் ஆசைவிடாளால்" என்றதைக் கடாக்ஷித்துத் தொகுத்த பாவத்தை யருளிச்செய்கிறார் (இவளுடையவித்யாதி). இத்தை உபபாதிக்கிறார் (தன்னிலித்யாதி). அவன் ஸௌந்தர்யத்திலாழங்கால்பட்ட பிராட்டியை வர்ணிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (ஆழங்காலேயித்யாதி). (மண்கொள்ளுகையாவது) - கரைகாண்கையாய், அத்தால் தன்னுடைய ஸௌந்தர்யாதிகளாலே அவனுடைய ஸௌந்தர்யத்தையும் அல்பமாக்கி யநுபவிக்க வல்லவளென்றபடி. யௌவநத்திலே வெளுக்கைக்கு ஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார் (நித்யாநுபவமித்யாதி). உபமாநத்தைச்சொல்லிக்கொண்டு வர்ணித்து, அதுபோராமை, "திரு," என்று விசேஷித்தாற்போலே விசேஷித்த விடமுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (சந்த்ரேத்யாதி). ஆஹ்லாதகத்வே "சந்த்ரகாந்த-சந்த்ரகாந்தம்" என்று சொல்லிவைத்து, போராமை, அதில் "ப்ரியதர்சநம்"

(௧) கீ-௧௮-௬௬. (௨) தி-நெ-௧௦.

என்றானிறே என்று கருத்து. உபமாநம் நேர்நில்லாமைக்கு உபமாநத்துக்குக் குற்றந்தானென்னென்ன வருளிச்செய்கிறார் (மறுவுமித்யாதி). நேர்நிற்க மாட்டாதத்தை முந்துறச்சொல்லுவானென்? கழிப்பானென்னென்ன; இவ்விரண்டாலும் பலித்தது - அபூதோபமையென்கிறார் (எப்போதும் ஏகரூபனாயித்யாதி). பாசுரத்துக்குத் தாத்பர்யம் (பரார்த்தமாகவித்யாதி). (ஔதார்யம் கொண்டாடினது) என்றது, (க) "வானவரைப் பெண்ணாகியமுதூட்டும்" என்றத்தைப்பற்ற-

பிராட்டியினுடைய ஸௌந்தர்யாதிகளைச்சொல்லி, கேவலம், "நின்" என்றத்தால் - இவளுடைய ஸௌந்தர்யாதிகள் வாசாமகோசரங்களென்று தோற்றுகையாலே, பலிதத்தை யருளிச்செய்கிறார்(அவளுக்குங்கூடவித்யாதி). இதுக்கு ப்ரமாணம் (அகலவித்யாதி). ப்ரமாணத்துக்குத் தாத்பர்யம் (இம்மார்பிலித்யாதி). "இருப்பதும்" என்கிற சகாரம் - விரோதியாய், இருப்புக்கு ப்ரத்யநீகாகாரமான பிரிவால்வந்த வ்யஸநத்தைக் காட்டுகிறதென்று விவக்ஷித்து அதுக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் (இருந்தாலித்யாதி). இருந்தத்தாலே கலவிவந்ததாய், அதுதானும் விஶ்லேஷாந்தமாயல்லதிராதென்று விஶ்லேஷித்துளளாகவெண்ணி, அவ்வழியாலே அவள் படுகிறபாடுதான் வாசாமகோசரமென்று கருத்து. "அறிந்தும்" என்கிற சகாரம், பிராட்டியுடைய விஶ்லேஷ பீருத்வத்தை யறியாதிருந்தாளாகில் ஆசைப்படக்கூடும், ஸுகிக்கலாமென்கிற நினைவாலே யறிந்தாளாகில், கலவியிலும் பிரிந்திருக்கையே நன்றென்று ஆசைவிடவேண்டியிருக்கும். அதிசங்கையே விஷயமாகையாலேயென்று இவ்வர்த்தத்துக்கு ஸூசகமென்று திருவுள்ளம்பற்றி, இப்பெண்பிள்ளை யறிந்ததுக்கு ஹேதுவையருளிச்செய்கிறாள் (அவளுமித்யாதி). நித்யாநபாயிநியும், நித்யாதிசங்கையோடே நித்யாதிசங்கைபண்ணாநிற்க அவளோட்டை ஸாம்யாபந்நையான நானிழந்திருக்கையாவதேதென்று தாத்பர்யமாகவுமாம்; அன்றிக்கே, பிராட்டிக்கு வேறொரு கடகரில்லாமையாலே அதிசங்கைபண்ணுகிறாளத்தனை, எனக்கு அவளே கடகையாயிருக்கையால் அதிசங்கையும் பண்ணவேண்டுவதில்லையென்று ஆசைப்படுகிறாளென்று தாத்பர்யமாகவுமாம்.

குவளைக்கண்ணியென்னாதே, "அம்" என்றதுக்குத் தாத்பர்யம் (அவளிலித்யாதி). இப்பாட்டினடியிலே, (தன்னிலளவுடையார்)என்று பிராட்டியை இப்பெண்பிள்ளையேற்றமாகச் சொன்னாளாயிருக்கிறது, இங்கே இப்பெண்பிள்ளைக் கேற்றம்சொல்லுகிறான், இது சேரும்படியென்னென்னில்; அப்போது அவள்முகத்தைப்பார்த்தவாறே விலக்ஷணவிஷயங்களிப்படி பேசுவிக்கும், ஆகையால் விரோதமில்லையென்றதாயிற்று. அவள்தானும் (உ) * மையார்கருங்கண்ணி யன்றோவென்ன வருளிச்செய்கிறார் (அவன்றன்னிலித்யாதி). அவனொருவனை உத்தேஶ்யமாகக்கொண்டு உகக்கும் ஸௌபாக்ய

(க) உ-சூ-க.   (உ) தி-வாய்-

மவளது, இருவரையும் உத்தேஶ்யமாகக்கொண்டு உகக்கும் ஸௌபாக்ய மிவளது; ஸௌபாக்யாதிசய ஸூசகமான நேத்ரலக்ஷணம் விஞ்சியிருக்குமென்று கருத்து. (பாவையுண்டு) என்றது - ஸ்த்ரீ ப்ரதிமை யெழுதியிருக்குமென்றபடி. அப்ஸரஸ்ஸுக்களோபாதி அமுதிற்பிறந்தாளென்னலாயிற்று அவளை, என்வயிற்றிற்பிறந்தாளென்னவொண்ணாது, "ஒரு சித்ரத்தோபாதி யிவள்வடிவு" என்னுமத்தனை என்னுமபிப்ராயத்தை யருளிச்செய்கிறார் (பிறப்பாலித்யாதி). "என்னினைந்திருந்தாய்?" என்று கேட்குமதுக்குமுன்னே "சொல்லு" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இதுக்கித்யாதி).

(கைகழிந்தவற்றுக்கும்) துர்வ்ருத்தத்தாலே ஸ்வரூபம்குலைந்த சேதநவஸ்துவுக்குமென்றபடி. அப்ரபுத்தர்க்குமாகவிறே அர்ச்சாவதாரமென்று திருவுள்ளம். தாத்பர்யாந்தரம் (உன்மனத்தாலித்யாதி). (க்ரியை) என்றது - இத்திருமொழிக்கெல்லாம் பொதுவான க்ரியையென்றபடி. ... ... (க)

மூ.—துளம்படு முறுவல் தோழியர்க் கருளாள்
துணைமுலை சாந்துகொண் டணியாள்
குளம்படு குவளைக்கண்ணிணை யெழுதாள்
கோலநன்மலர் குழற் கணியாள்
வளம்படு முந்நீர் வைய முன்னளந்த
மாலென்னும் மாலின மொழியாள்
இளம்படி யிவளுக்கென்னினைந் திருந்தாய்
இடவெந்தை யெந்தை பிரானே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துளம்படு	மாதுளவிரைதோற்கும்படியான	குழற்கு	குழலில்
முறுவல்	தந்தபங்க்தியைக் கொண்டு	அணியாள்	அணிகிறிலள்;
தோழியர்க்கு	தன்தோழிமார் முன்பே	வளம்	(ரத்நம்துடக்கமான) நல்லவஸ்துக்கள்
அருளாள்	ஸ்மிதம்பண்ணுகிறிலள்;	படு	உண்டாகிற
துணை	சேர்த்தியழகையுடைய	முந்நீர்	கடல் (சூழ்ந்த)
முலை	முலைகளை	வையம்	பூமியை
சாந்துகொண்டு	சந்தநத்தாலே	முன்	மஹாபலிபக்கல் நீரேற்றவன்று
அணியாள்	அலங்கரிக்கிறிலள்;	அளந்த	அளந்துகொண்ட
குளம்	தடாகத்தில்	மாலென்னும்	பெரியோன் என்னாநின்றாள்;
படு	உண்டான	மால்	தன் வ்யாமோஹத்துக்கு
குவளை	குவளைமலர்போன்ற	இனம்	சேர்ந்த
கண்ணிணை	இரண்டு கண்களிலும்	மொழியாள்	பேச்சையுடையளாய்
எழுதாள்	அஞ்சநமெழுதுகிறிலள்;	இளம்படி	ம்ருதுஸ்வபாவையான
கோலம்	அழகியதாய்	இவளுக்கு	இவள் திறத்தில்
நல்	விலக்ஷணமான		என்னினைந்திருந்தாய் இடவெந்தையெந்தைபிரானே! சொல்லு. (உ)
மலர்	புஷ்பங்களை		

வ்யா.—இரண்டாம்பாட்டு. (துளம்படுமுறுவல்) துளமென்று †மாதுளமாய், அத்தைதந்தபங்க்திக்குஒப்பாகச்சொல்லக்கடவதிறே' அத்தைச்சொல்லிற்றுதல்; "'துளம்என்று பீலிக்காம்பைச் சொல்லுகிறது' என்று ஒருதமிழன் சொன்னனாக ஜீயரருளிச் செய்வர்" என்றருளிச்செய்வர். வெண்மையைப்பற்றச்சொல்லலாமிறே. படுகையாவது- †உண்டாகையாய், துளம்தோற்றும் முறுவல்; - †இத்தைக் கண்டவாறே அது ஸ்ம்ருதிவிஷயமாகை. அன்றிக்கே, படுகையாவது- அழிகையாய், இம்முறுவலுக்குத் தோற்கும்படியைச் சொல்லிற்று தல். இரண்டுவகையாலும் உபமாநம் சொல்லுவர்களிறே. (தோழியர்க்கருளாள்) †தாய்மார்முன்பு தன்வெறுப்பாலே ஸ்மிதம்பண்ணுளே. †இனிநாயகனுக்கு ஸர்வஸ்வம்மாயிருப்பதும் இதுதானேயிறே. (க) †"ஈ ஷத் ஸ்மிதா, காந்தஸ்மிதா" என்று அவனீடுபடுமதிறே. †அதுவேயிறே தோழிமார்க்கு ஜீவநம். ஆக, தன்னைபார்த்திருக்கிற தோழிமாரைப் பட்டினிகொள்ளாகின்றுள். †§இவள் நாயகனோட்டை ஸம்ஶ்லேஷத்தால் வந்த ஹர்ஷந்தோற்ற ஸ்மிதம்பண்ணினல் அதுவே தாரகமாக வாயிற்று அவர்களிருப்பது.

(துணைமுலையித்யாதி)†நாயகனையும் பட்டினிகொள்ளாகின்றுள். (துணைமுலை) புறம்பு உபமாநமின்றிக்கே தன்னில்தானொப்பாகச் சொல்லவேண்டும்படியிருக்கிறமுலைகள். (சாந்துகொண்டணியாள்) † இவள் அவன்வரவையுத்தேசித்து முலைகளைச் சாந்துகொண்டு அலங்கரிக்கப்புக்காலிறே "இவளுக்கு இது அபேக்ஷித மாகாதே" என்று அவனுக்குக் கிஞ்சித்கரிக்கைக்கு அவகாசமுள்ளது. ஆகையாலே அவனுக்கு அவகாச ப்ரதாநம்பண்ணுகிறிலள்.

(குளமித்யாதி)†அருக்கயத்திலே நின்றுஅலர்ந்த குவளைபோன்ற கண்களை மங்களார்த்தமாக அஞ்ஜநங்கொண்டு அலங்கரிக்கிறிலள். †ரத்நாகரம்போலே குணகரமான வஸ்துவை அநுபவிக்கிற கண்ணுகையாலே ஒன்றுகொண்டலங்கரிக்கவேண்டாவிறே. இனி அஞ்ஜநங்கொண்டலங்கரிப்பது மங்களார்த்தமாகவிறே. இவள் அஞ்ஜநத்தாலே அலங்கரிக்கப்புகுமன்றிறே அவனுக்கு கிஞ்சித்கரித்தானாக அவகாசமுள்ளது, அது செய்கிறிலள்.

(க) ரா-ஆர-கூரு-கஉ.

(கோலமித்யாதி) கலம்பகனல்லது தனிப்பூச்சூட்டப் பொருந குழலைப் புஷ்பங்கொண் டலங்கரிக்கிறிலள். (௧) *வாசஞ் செய் பூங் குழலாளாகையாலே புஷ்பங்கொண்டு அலங்கரிக்கவேண்டாவிறே. மங்களார்த்தமாகப் புஷ்பங்கொண்டு அலங்கரிக்கிறிலள். நாயகன் விரும்பி யிருக்குமிடங்களை இவள் அலங்கரியா தொழிகையாவது - அவனுடைய தாரகத்ரவ்யத்தை விலக்குகையிறே.

(வளமித்யாதி) †ஸர்வஸாதாரணமான ரக்ஷணத்தைப் பண்ணு மவன் என்னளவிலே நெகிழ இராநின்றான். (வளம்படுமுந்நீர்) ரத் நாகரமென்னுதல். (வளம்படுவையம்) என்று வஸுமதி யென்னு தல். (மாலென்னும்) தன்னுடைய ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷ ணத்தில் பிச்சேறி யிருக்குமவன். இவ்வ்யக்தி யொன்றையு முபே க்ஷித்திராநின்றான். (மாலினமொழியாள்) தன்னுடைய வ்யாமோஹ த்துக்குச்†சேர்ந்த பேச்சையுடையவள். வ்யாமோஹம் வழிந்து புற ப்பட்டு அது சொல்லாறுப்போலே யிருக்கை.

(இளம்படியிவளுக்கு) இளைதானபடியையுடைய இவளுக்கு. †ம்ருதுஸ்வபாவையான இவளுக்கு; †உம்முடையபக்கல்நின்றும்பிரி த்துப்பத்துமாஸம் அசோகவநிகையிலேவைத்தவிடத்திலும் பின்னை (௨) "ஜீவிதஂ, தத்தஸ்ய" என்றிருந்த அவள்படியல்லாத மார்த்தவத் தையுடைய இவளுக்கு. † பட்டரருளிச்செய்தாராக ப்ரஸித்தமிறே. "உண்ணவும் பொறுதே பட்டினிவிடவும் பொறுதேயிருக்கும் ஸுகுமாரரைப்போலே, அதிகமான ஸம்ஶ்லேஷ விஶ்லேஷம் பொறுக்க மாட்டாதபடியான திருமங்கையாழ்வார் மார்த்தவ மிருக் கும்படி"என்று. (இவளுக்கித்யாதி) †இவளுடைய ப்ரக்ருதி யறிந்து கலக்கைக்காகத் திருவிடவெந்தையிலே வந்து எழுந்தருளியிருக்கிற நீ உன்னுடைய திருவுள்ளத்தாலே நினைத்திருக்கிறதென்? (௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (துளம்படுமித்யாதி). அளவில்லாத ஆசை யுடைய பெண்பிள்ளைக்கு ஆசைப்பட்டபோதே கிடையாமையால் பிறந்த வெறுப்பின்கார்யத்தைச் சொல்லுகிறாரென்று ஸங்கதி.

(மாதுளம்) மாதுளவிரை. (உண்டாகையாய்) என்றவிடத்திலே - கட லில் முத்துப்பட்டது என்றமது கண்டுகொள்வது. விவரணம் - (இத்தை யித்யாதி). செய்திலள் என்னுதே "அருளாள்" என்று விசேஷித்ததுக்குக் கருத்து (தாய்மாரித்யாதி). "படிகடந்து புறப்படுகை குலமர்யாதைக்குப்போ

(௧) தி - வாய் - ௬௦ - ௬௦ - ௨.
(௨) ரா - ஸு-௩௧-௩௦.

ராதுகாண்'' என்று ஹிதஞ்சொல்லுமவர்களாகையாலே வெறுத்து ஸ்மிதம் பண்ணுளென்று கருத்து. முந்துற இத்தையருளிச்செய்ததுக்கு ஹார்த்த பாவம் (இனியித்யாதி). ''ஸர்வஸ்வம்'' என்னுமதுக்கு ஸூசகப்ரமாணம் (காந்தேத்யாதி). ''అస్మిన్మయాసార్ధముదారశీలా శిలాతలే పూర్వముపోపవిష్టా। కాన్తస్మితాలక్ష్మణజాతహాసా త్వామాహ సీతాబహువాక్యజాతమ్-அஸ்மிந்மயாஸார்த்தமுதார சீலா சிலாதலே பூர்வமுபோபவிஷ்டா। காந்தஸ்மிதா லக்ஷ்மண ஜாதஹாஸா த்வாமாஹ ஸீதா பஹு வாக்யஜாதம்''. ''அருளாள்'' என்ற பதவாஸனை (அதுவேயித்யாதி). ஜீவநமானபடியை உபபாதிக்கிறார் (இவளித்யாதி).

''தோழியர்க்கருளாள்'' என்று தோழிமாருடைய தாரகத்தையழித்தா ளென்னும் ப்ரகரணத்துக்குச்சேர, ''குழற்கணியாள்'' என்னுமளவுக்கும் தொகுத்தபாவம் (நாயகனித்யாதி). விஶ்லேஷதசையிலே சாந்துகொண்டு அலங்கரிக்க ப்ரஸக்தியுண்டோ? அதவனுக்கு தாரகமாய் அத்தை யழிக்கைக் கென்ன வருளிச்செய்கிறார் (இவளவன் வரவையித்யாதி). (க) ''கொங்கை மேல் குங்குமத்தின் குழம்பழியப்புகுந்தொருநாள் தங்குமேலென்னுவிதங் கும்'' என்றுளிறே சூடிக்கொடுத்தாள் என்று திருவுள்ளம். இத்தால் இவ ளலங்கரித்திருந்தால் அவனுதரித்திருப்பனென்றதாயிற்று.

(அருக்கயம்) - ஜலஸம்ருத்திமாருத ஹ்ரதம். ''குளம்படுகுவளை'' என்று த்ருஷ்டாந்த(ஜ்ஞ)கத விசேஷணத்தாலே பலித்த அர்த்தத்தை விவரியாநின்று கொண்டு, ''மங்களார்த்தமாக'' என்றத்தை ஸ்த்திரீகரிக்கிறார் (ரத்நேத்யாதி).

நாயகனிடத்தில் அவள் ''அளந்தமால்'' என்னக்கூடுமோவென்ன வரு ளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதி). ''இனம்'' என்றது - ஒப்பாய், அதினர்த்தம் (சேர்ந்த) என்றது.

''படி'' என்று-சரீரமென்று கீழருளிச்செய்து, அர்த்தாந்தரம்(ம்ருதுஸ்வ பாவையானவித்யாதி). இத்தை விவரிக்கிறார் (உம்முடையவித்யாதி). மார்த் தவம் இவளுக்கு ஸ்வாபாவிகமென்னுமத்தை ஆப்தஸம்வாதத்தாலே ஸ்த்திரீ கரிக்கிறார் (பட்டரித்யாதி). இத்தால் - ஸ்ரீஜநகராஜன்திருமகள், விஶ்லே ஷத்திலாறியிருக்கவும் ஸம்ஶ்லேஷத்திலநுபவிக்கவும் வல்லள், ஸ்ரீபராங்குச நாயகியார், விஶ்லேஷத்தில், (௨) ''கடியன்கொடியன்'' என்னவும், ஸம்ஶ் லேஷத்தில் க்ரமப்ராப்தி பொறுக்கமாட்டாதே பதறவும் வல்லராயிருப்பர், ஸ்ரீகுலசேகரர் பிராட்டியார், தன் ராஜகுலத்தாலே அடைவுவிஷயத்தில் விஶ் லேஷத்தில் துணிவின்றிக்கேயிருக்கவும் வல்லார், பெரியாழ்வார் பெண்பிள்ளை யாகில், விஶ்லேஷத்தில் தன்னை அலங்கரித்துக்கொண்டிருந்தும், ஸம்ஶ் லேஷத்தில் அவனைக் கண்டகாட்சியிலே தணியுமவளாயிருப்பள். திருமங்கை நங்கை, கலக்கவும்பொறாது பிரியவும்பொறாது, மார்த்தவமே ப்ரக்ருதியா யிருக்குமென்றதாயிற்று. ''பிரான்'' என்றதுக்கு ப்ரயோகோபயோகம் காட் டாநின்றுகொண்டு, தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவளுடையவித்யாதி). (௨)

(க) நா - தி - அ - ௭. (௨) திரு - வாய் - ௫ - ௯ - ௪.

மூ.—சாந்தமும் பூணும் சந்தநக் குழம்பும்
தடமுலைக் கணியிலும் தழலாம்
போந்தவெண் டிங்கள் கதிர்சுட மெலியும்
பொருகடல் புலம்பிலும் புலம்பும்
மாந்தளிர் மேனி வண்ணமும் பொன்னும்
வளைகளு மிறைநில்லா வென்ற
னேந்திழை யிவளுக்கென் னினைந்திருந்தா
யிடவெந்தை யெந்தை பிரானே. (௩)

பதம்.	உரை.
சாந்தமும்	கலப்புசேர்ந்த சந்தந [மும்
பூணும்	முத்துமாலையும்
சந்தநக்குழம்பும்	சந்தநபங்கமும்
தடம்முலைக்கு	பெரியமுலையிலே
அணியிலும்	அணிந்தாலும்
தழலாம்	நெருப்பாகாநின்றது;
போந்த	தோற்றின
வெள்	வெளுத்த
திங்கள்	சந்த்ரனுடைய
கதிர்சுட	கிரணங்கள்தஹிக்க
மெலியும்	(அத்தாலே) நோவுபடாநின்றாள்;
பொரு	அலையெறிகிற
கடல்	ஸமுத்ரமானது
புலம்பில்	கோஷிக்கப்புக்கால்
புலம்பும்	(இவளும்) கூப்பிடாநின்றாள்;
மாந்தளிர்	மாந்தளிர்போன்ற
மேனி	திருமேனியின்
வண்ணமும்	நிறமும் [து;
பொன்னும்	விவர்ணமாகாநின்ற
வளைகளும்	கங்கணங்களும்
இறை	சற்றேனும் [ல்லை;
நில்லா	நிலைதொங்குகிறன வி
என்றன்	என்னுடைய
ஏந்து	தரிக்கப்பட்ட
இழை	ஆபரணத்தையுடைய
இவளுக்கு என்நினைந்திருந்தாய் இடவெந்தை யெந்தைபிரானே! (௩)	

வ்யா.—மூன்றாம்பாட்டு. (சாந்தமுமித்யாதி) †எங்களால் நோக்கலாமெல்லைகழிந்தது. பழகப்புதைத்து ஆறிக்குளிர்ந்த சாந்தும், முத்தாரமும், சந்தநக்குழம்பும். (தடமுலைக்கணியிலும்) † "நிதாநமறியாதே நாமிருந்து பரிஹாரம்பண்ணுகையாவதென்" என்று முன்பெல்லாரும் கைவாங்கியிருப்பர்கள்; பின்னையும், இவள்பக்கலொருவாசியின்றிக்கே நோவுபடக்காண்கையாலே "இனிநாட்டார் செய்யுமவற்றையாகிலும் செய்துபார்ப்போம்" என்று இவற்றைக் கொண்டு சிசிரோபசாரம்பண்ணப் புகுவர்கள்; புக்கால், அவைதானே இந்தந(ஜ்வல) மாக வேவாநிற்கும். (பூண்) என்ன - முத்தாரமென்று தோற்றுமோவென்னில்; ஆஶ்வாஸகரமாகப்பண்ணுகிறதாகையாலே முத்தாரமாயிருக்குமிறே. சாந்து †வெவ்விபதார்த்தமன்றோவென்னில; அதுக்காகவிறே ஆறிக்குளிர்ந்த வென்றது. சாந்தென்னுங்

காட்டில் †இஸ் §†ஸம்ஸாரங்களோடே கூடினதென்று தோற்றுமோவென்னில்; சிசிரோபசாரத்துக்குச் சொல்லுகிறதாகையாலே வரும், பூணென்றவிடத்தில் முத்தாரமென்றாப்போலே.†(சாந்தமுமித்யாதி) வயிரமும் வயிரத்தோலும் ஒன்றாக வேமாபோலேயாயிற்று இவையெல்லாமொன்றாக வேகிறபடி. † உலர்ந்தவிறகிலே நெருப்பைக் கொளுத்தினாற்போலே விரஹக்ருஶமான சரீரத்திலே இவை பட்டவாறே பற்றி யெரியாநின்றதாயிற்று.

(போந்தவித்யாதி)†அப்போது தோற்றின சந்த்ரனுடைய இளநிலாவானதுபட, அத்தாலே மெலியாநின்றாள்.†நிலாச்சுடப்புக்கால் விலக்கலாவதொன்றில்லையே. இனித்தான் கூடியிருந்தபோது (க) "முன்னம்முகிழ்த்தமுகிழ்நிலா" என்று அநுகூலமாமிறே. (பொருகடல்) † திரையோடு திரை பொராநின்றுள்ள கடல் கோஷிக்கப்புக்கவாறே எதிரே ஒருகடல் † ஸ்பர்த்தித்துக் கூப்பிடுமாபோலே தானுமொக்கக் கூப்பிடாநிற்கும். (மாந்தளிரித்யாதி) மாந்தளிரினுடைய நிறம்போலேயிருக்கிற நிறமும் விவர்ணமாகாநின்றது. (வளைகளுமிறைநில்லா) ஆகாசத்திலே நிற்பது ஒருவளையில்லையே. (உ)† [శైథిల్యముపయాన్త్యాశుకరేషు వలయాన్యపి - சைதில்யமுபயாந்த்யாசுகரேஷு வலயாந்யபி]† க்ருஷ்ணனே யன்றிக்கே, இன்னமிவற்றில் அவனுக்குவாசியுண்டு-அவன் "பிரியேன்" என்று பிரிகையுணர்த்தியாகிலும் போமிறே; இவை சடக்கெனப்போய்க் கொடுநின்றது.

(என்றனேந்திழை) என்னுடைய, தரிக்கப்பட்ட ஆபரணத்தையுடையவள்.†இவளாபரணங்களாலே அலங்க்ருதையாயிருக்குமிருப்பைக் கண்டுகொண்டிருக்குமிதுவே தாரகமாகக் காணுமிவள்தான் நினைத்திருப்பது. †இவளாபரணம் பூண்டிருக்கு மிருப்பைக்கண்டு அநுபவிக்கை, எனக்கிவ்வளவோடே பர்யவஸிக்குமாபோலே யிருந்தது. (இடவெந்தை) (௩) "నైవార్తైర్నచభూషణైః-நைவார்த்தைர்நசபூஷணை:" என்னும்படி பண்ணுகைக்கோ நீ இங்கேவந்திருக்கிறது; † ராமாவதாரத்திலிழவு தீர்க்கைக்காகவன்றோ இங்குவந்திருக்கிறது. ... ... (௩)

§ (பா) ஸம்ஸ்காரங்களோடே

(க) பெரியதிருமடல் (உ) (௩)

அ௩.—மூன்றாம்பாட்டு. (சாந்தமுமித்யாதி) கடகனிடத்திலும் வெறுப் போடிருந்தவளவன்றிக்கே, [விரஹஜ்வரம் கிளர்ந்து கார்ஶ்யமடையாநின்ற ளென்கிறாளென்று ஸங்கதி.

"அணியிலும்தழலாம்" என்கைக்கு ஹார்த்தபாவம் (எங்களாலித்யாதி). சாந்து - குங்குமம், கஸ்தூரிமுதலான பரிமளவஸ்துவோடே மர்த்தித்ததென் றும், சந்தனக்குழம்பு - கேவலசந்தநபங்கமென்றும் பேதம்கொள்ளுவது. தோழிமார்களித்தனைபோதும் சாந்துகொண்டணியாதிருக்கத் தாங்களாறி யிருந்தவநந்தரம் அணியவந்ததுக்குக்கருத்தென்னென்னவருளிச்செய்கிறார் (திாநமித்யாதி). (வெவ்வியபதார்த்தமன்றோ) என்றதுக்கு - குங்குமகஸ் தூரிகளின் ஔஷ்ண்யம் கலந்திராதோவென்றபடி. (ஸம்ஸாரங்கள்) என்ற துக்கு - நஞ்சும் குட்டியுமாயிருக்கும் ஸம்ஸாரத்தைப்போலே அநேக விசே ஷங்களென்றபடி. ப்ரதீக க்ரஹணபூர்வகம் ஒரு த்ருஷ்டாந்தமருளிச்செய் கிறார் (சாந்தமுமித்யாதி). அஜ்ஞாதமானத்தை யுருவாதே தானேயுதறினல் அதிலேபிறந்த நெருப்புப்பொறியாலே எல்லாம் வெந்துபோமாபோலே, இவளுடம்பில் பிறந்த விரஹாக்நிதானே இவளுடைய சாந்துமுதலானவற் றையும் எரிக்கிறதென்று தாத்பர்யம். அன்றிக்கே, வயிரமும் அதின்தோலுங் கூடப் பச்சையாயிருக்கச்செய்தேயும் மரத்திலேயுலர்ந்த கொம்பிழைந்து பிறந்த அக்நியாலே எல்லாம் வேகுமாபோலேயென்று யோஜிக்கவுமாம்; இத்தை விவரிக்கிறார் (உலர்ந்தவித்யாதி).

இப்பெண்பிள்ளை தாபமாற்றுகைக்காக அம்ருதஹஸ்தனான ஓஷதீசன் வந்து கையாலே குளிரத்தடவப்புக்கான், அதுதானும் ஒருநெருப்பாய் அது க்கு மெலியாநின்றாளென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (அப்போதித்யாதி). "அப்போதுதோற்றின" என்கிற விசேஷணத்துக்கு - இப்படி தாத்பர்யம் கொள்ளவேணுமிறே. அநுகூலமே ப்ரதிகூலமானல் செய்யத்தக்கதுண்டோ என்னுமிடுபாட்டை யருளிச்செய்கிறார் (நிலாவித்யாதி). சந்த்ரனைக்கண்ட வாறே கடல் முழங்கத்தொடங்கிற்று, அதுதானும் நெருப்பையுருக்கி வார்த்தாற்போலேயிருக்கையாலே புலம்பப் புக்காளென்னும் பாவத்தை ஸூ சிப்பிக்கிறார் (திரையோடித்யாதி). (ஸ்பர்த்தித்து) என்றத்தால் இவ்வர்த்தம் ஸூசிதமிறே. (க) "கடலுமாலுமாலோ" என்று பாதககோடிகடிதமிறே. "வளைகளுமிறைநில்லா"என்றதுக்கு ஸம்வாதம் (சைதில்யமித்யாதி). "ஆசு" என்றத்துக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (க்ருஷ்ணனேயித்யாதி).

இப்போது ஆபரணங்களுண்டோவென்ன (இவளித்யாதி). "என்னி னைந்திருந்தாய்" என்றத்துக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (இவளாபரணம் பூண்டித்யாதி). "பிரானே" என்றதுக்குக் கருத்து (ராமாவதாரத்தி லித்யாதி). ... ... (௩)

(க) தி - வாய் - ௯ - ௬ -

மூ.—ஊழியில்பெரிதால் நாழிகையென்னு
மொண்சுடர் துயின்றதாலென்னும்
ஆழியும் புலம்பு மன்றிலு முறங்கா
தென்றலும்தீயினில் கொடிதாம்
தோழியோவென்னும் துணைமுலையரக்கும்
சொல்லுமி னென்செய்கேனென்னும்
ஏழையென்பொன்னுக் கென்னினைந்திருந்தா
யிடவெந்தை யெந்தைபிரானே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நாழிகை	ஒருநாழிகைப்பொழுது	தோழீ	பாங்கீ!
ஊழியில்	ஒருகல்பத்தைக்காட்டிலும்	ஓ! என்னும்	ஓ! என்றுகூப்பிடாநிற்கும்;
பெரிது	மிகநெடுகாநின்றது	துணைமுலை	இரண்டுமுலைக்கண்களையும்
என்னும்	என்றுசொல்லாநின்றுள்;	அரக்கும்	அரக்காநின்றுள்;
ஒண்	மிக்கதேஜஸ்ஸையுடையனுன்	என்செய்கேன்	என்னசெய்வேன்
சுடர்	ஆதித்யன்	சொல்லுமின் என்னும்	சொல்லுங்கோள் என்னும்
துயின்றதுஎன்னும்	அஸ்தமித்தானென்பாள்;	ஏழை	அதிசபலையான
ஆழியும்	ஸமுத்ரமும்	என்	என்னுடையவயிற்றில்பிறந்தவளாய்
புலம்பும்	கோஷியாநின்றது;	பொன்னுக்கு	ப்லாக்யையானஇப்பெண்விஷயத்தில்,
அன்றிலும்	அன்றில்பறவையும்		
உறங்கா	உறங்குகிறதில்லை;		
தென்றலும்	தென்றல்காற்றும்		
தீயினில்	நெருப்பைக்காட்டிலும்		
கொடிதாம்	கொடிதாகவீசாநின்றது;		

இடவெந்தை யெந்தைபிரானே! என்னினைந்திருந்தாய் சொல்லு. (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. (ஊழியில்பெரிதால் நாழிகையென்னும்) †ஒருகல்பமாகிலும் ஸம்ஹ்ருதமாய்க் கிடக்கிறதுபாடாற்றலாம், அந்நாழிகைகளைக் காணலாயிருக்கிறதில்லை. (க)† "నేతి నేతి - நேதிநேதி" என்கையொழிய இன்னத்தோடொக்குமென்று சொல்லவொண்ணுது.†ஊழி பெருத்து நாழிகை சிறுத்திருக்கக்கடவதான மர்யாதை குலைந்தது. (ஒண்சுடர்துயின்றதாலென்னும்)†நாழிகையை அளந்துதருகிற ஆதித்யனும்போய் †முடிந்தானென்னுநின்றுள். †கல்பத்திலும் உபஸம்ஹ்ருதமாம் பதார்த்தங்களோடே ஸம்ஹார்யனுமவனிறே ஆதித்யன்; இப்போது அங்ஙனன்றிக்கே, உளனுய் ஸஞ்சரியா

(க) ப்ருஹதா -

நிற்கச்செய்தேயும் கார்யம்பிறக்கக்காண்கிறிலோம். † தன்னுடைய ஸந்நிதியாலே ராத்ரிவ்யஸநத்தை யடையப் போக்கிக்கொடுவந்து தோற்றக்கடவஆதித்யனும்வந்துதோற்றுகிறிலன். (க) † "பீஷோதேதி ஸூர்ய:" என்கிற ஈஸ்வராஜ்ஞை குலைந்ததுபோலே. நித்ரையை நினைத்தல், † தீர்க்கநித்ரையை நினைத்தல்.

(ஆழியும் புலம்பும்) "நம்மில் † சிறியவன் பாதக மாகாநிற்க நாம் தான் பேசாதிருக்கிறதென்" என்று கடலானது பாதகமாகப்புக்கது. † பேரளவுடைய கடலானது தைர்யபங்கம் பிறந்து புலம்புகிறபடி, பேரளவுடையவன் தன்னளவிலே தைர்யபங்கம்பிறந்து பேசும் பேச்சுக்கு ஸ்மாரகமாய் நலியாநின்றதாயிற்று. (அன்றிலு முறங்கா) அன்றிலினுடைய உறங்காமை ஸம்ஶ்லேஷ ஸமயத்தில் நாயகனுடைய நித்ராவிரஹத்துக்கு ஸ்மாரக மாகாநின்றதாயிற்று. (தென்றலும் தீயினிற் கொடிதாம்) † தென்றலினுடைய குளிர்த்தியானது, காந்தனுடைய கரஸ்பர்சத்துக்கு ஸ்மாரகமாய் பாதகமாகாநின்றது. தென்றலினுடைய வெம்மை ஆற்றவேண்டில் கேவலாக்நியிலே பொகட்டு ஆற்றவேண்டும்படியிரா நின்றது.

(தோழியோவென்னும்) † தனக்கொன்று பாதகமானால் "அம்மே!" என்கைக்கு நான் பாக்யம் பண்ணிற்றிலேன். † "அவனோடே சேரவே ஸகலபதார்த்தங்களும் மநுகூலமாய்க் † குடநீர்வார்க்குங் காண்" என்று சொன்னாயே பாவீ! நீ, † ஊர் பகையாம்படி பண்ணினாயே. † இவள் "தோழியோ" என்னப் பார்த்திராதே பருவம். (துணைமுலையரக்கும்) முலைகளானவை "எனக்கடைத்த விஷயத்தை நீ காட்டு" என்று நலியப்புக்கவாறே, க்ஷாமகாலத்தில் ப்ரஜைகள் "சோறு, சோறு" என்றால் † "வாய்வாய்" என்பாரைப்போலே, முலைகளை † அரக்கா நிற்குமாயிற்று. (உ) † [முன்னிருந்து மூக்கின்று] † காணக்காணப் பருவங்கழியா நின்றதாயிற்று. பருவங்கழிவதானால் பின்னை இவை முதுகிலேயானாலாகாதோ? (சொல்லுமினென் செய்கேனென்னும்) † தென்றல் துடக்கமான பதார்த்தங்கள் போலுமன்றிறே முலைகள் நெருக்கப்புக்காலுண்டான நலிவு. அவை பாதகமாகிறபோது "தோழியோ" என்றாள், இவை பாதகமாகப் புக்கவாறே தோழிமாரோடு தாய்மாரோடு வாசியற எல்லாரையும் சேர்

(க) தை - ஆந - (உ) பெரியதிருமடல் -

த்துச் சொல்லுங்கோளென்கிறாள். (ஏழை) "கிடையாதுகாண்" என்றால் கிடைக்குமதிற்போலே சாபலத்தைப்பண்ணுமவளாயிற்று.

(என்பொன்னுக்கு) "இவளும் தன் சாபலமும் பட்டதுபடுகிறாள்" என்று கைவாங்கியிருக்க வொண்ணாதபடி ஶ்லாக்யையாயிருக்குமவள். (இடவெந்தை) உக்தியாலே தன் சாபலந்தோற்றவிருக்கிற இவளைப்போலன்றிக்கே †க்ரியையாலே சாபலந்தோற்ற விருக்கிற நீ, நினைத்திருக்கிறதென்?. ... ... (௪)

அரு.——நாலாம்பாட்டு. (ஊழியிலித்யாதி) கீழ்ப்பாட்டில் புலம்புதலை முக்தகண்டமாகக் காட்டுகிறாரென்று ஸங்கதி.

"ஊழி" ப்ரளயகாலமாய், அப்போது நாயகனையறிய யோக்யதையில்லாமையாலும், பாதக பதார்த்தங்களில்லாமையாலும் பாடாற்றலாம்; அதிலும் க்ரூரம் இந்த நாழிகையென்னுமபிப்ராயத்தை யருளிச்செய்கிறார் (ஒருகல்பமித்யாதி). "பெரிது" என்கையாலே, "இப்படியன்று, இப்படியன்று" என்று சொல்லுகையால், ஸத்ருசமாகச் சொல்லப்போகாதென்னுமது தோற்றுகிறதென்கிறார், (நேதீத்யாதி). "ஆல்!" என்ற ஆஶ்சர்யத்துக்கு பாவம் (ஊழிபெருத்தித்யாதி). விஷாதஸூசகமாய், அத்தாலே ஸூசிதமர்கவுமாம். "பெரிதால்நாழிகை" என்றவநந்தரம் சொன்னதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (நாழிகையையித்யாதி). (முடிந்தான்) என்றது - (தீர்க்கநித்ரை) என்னும்பக்ஷத்திலே, "முடிந்தான்" என்கைக்கு ஜ்ஞாபகமென்னென்னவருளிச்செய்கிறார் (கல்பத்திலுமித்யாதி). கேவலநித்ரையானபக்ஷத்திலே தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னுடையவித்யாதி). அன்றிக்கே, கீழ்வாக்யம் கேவலநித்ராபக்ஷத்துக்கு உபபா(த)தகமாய், இவ்வாக்யம் உண்மையைச்சொன்னதுக்குத் தாத்பர்யத்தைச்சொல்லுகிறதாகவுமாம். "ஆல்" என்றதின் கருத்து (பீஷோதேதீத்யாதி).

(சிறியவன்) ஸூர்யன். (வாத்ஸ) பாதகமாம் வழியைக்காட்டுகிறார் (பேரளவுடையவித்யாதி). "தீயினிற்கொடிதாம்" என்றதுக்குத் தாத்பர்யம் (தென்றலினுடையவித்யாதி).

லோகத்திலே இடறினால் "அம்மே!" என்னக்கண்டோமே, இத்தனை பாதகங்கள் நலிந்தால், இவள் "தோழீ" என்கிறதென்னென்னவருளிச்செய்கிறார் (தனக்கித்யாதி). அவனைத்தான் ஸந்தோஷிக்கைக்குக் கருதின முறுவல் தோழியர்க்கருளாதவளவன்றேவென்ன (அவனோடேயித்யாதி). (குடநீர்வார்க்கும்) குளிரப்பண்ணும். "ஓ" என்றதுக்குத் தாத்பர்யம் (ஊர்பகையித்யாதி). மேலுக்கவதாரிகை (இவளித்யாதி). இவள் க்லேசத்தைப்பார்த்து நில்லாதே முலைகளென்று கருத்து. (வாய்வாய் என்கை) கபோலதாடநம்

பண்ணுகை. (அரக்காநிற்கும்) அடக்காநிற்கும். இவளடக்கும்படி முலைகள் வளருமோவென்ன (முன்னித்யாதி). "மூக்கின்று, என்றதுக்குத்தாத்பர்யம் (காணவித்யாதி)."முன்னிருந்து" என்றதுக்கு ஹார்த்தபாவம்(பருவமித்யாதி). "தோழி" என்று ஏகவசநமாகச் சொல்லியிருக்க, இங்கே "சொல்லுமின்" என்று பஹுவசநப்ரயோகம்பண்ணுகைக்கு ஹேதுபூர்வகம் பாவமருளிச்செய்கிறார் (தென்றலித்யாதி).

(க்ரியையாலே) என்றது - திருமுலைத்தடத்தில் திருமுகத்தை வைத்துக் கொண்டே யிருக்கையாலேயென்கை, ... (௪)

மூ.—ஓதிலுமுன்பேரன்றி மற்றோதாள்
உருகும் நின்திருவுரு நினைந்து
காதன்மைபெரிது கையறவுடையள்
கயல் நெடுங் கண் துயில்மறந்தாள்
பேதையேன்பேதை பிள்ளைமைபெரிது
தெள்ளியள் வள்ளி நுண்மருங்குல்
ஏதலர்முன்னா வென் நினைந்திருந்தா
யிடவெந்தை யெந்தைபிரானே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இடவெந்தையெந்தை பிரானே!		கண்	கண்களில் [யை
ஓதிலும்	வார்த்தைசொல்லும் போது	துயில்	நித்ரைகொள்ளுகை
உன்பேரன்றி	உன்பேரையொழிய	மறந்தாள்	மறந்துவிட்டாள்
மற்று	மற்றொருவர்பேரை	பேதையேன் பேதை	மிகவும்சபலையான என்பெண்ணினுடைய
ஓதாள்	சொல்லுகிறிலள்;		
நின்	உன்னுடைய	பிள்ளைமை	பிள்ளைத்தனம்
திருவுரு	வடிவழகை	பெரிது	பெரிதாயிராநின்றது; (உம்மளவில்வந்தால்)
நினைந்து	நினைத்து		
உருகும்	உருகாநின்றாள்;		
காதன்மை	(உன்விஷயத்தில்) ஆசையானது	தெள்ளியள்	மிகத்தெளிவுடையளாயிராநின்றாள்;
பெரிது	மேன்மேலெனப்பெருகாநின்றது;(அத்தாலே)	வள்ளி	வள்ளிக்கொடிபோன்று [ள
		நுண்	நுண்ணிதாயிருந்துள்
கையறவுடையள்	கைப்பொருளிழந்தாரைப்போலே வருத்தமுறாநின்றாள்;	மருங்குல்	இடையையுடையளானவிவளை
		ஏதலர்முன்னா	உகவாதார்முன்னே
கயல்	கயல்போன்று	என்நினைந்திருந்தாய்	என்செய்ய நினைத்திருக்கிறாய். (ரு)
நெடு	நீண்டிருந்துள்ள		

வ்யா.—அஞ்சாம்பாட்டு.(ஓதிலும்)† முதல்தன்னிலே வார்த்தை சொல்லாதே யிருக்கும்போதே † பெரியது; சொன்னாலோ (உன்

பேரன்றிமற்றேதாள்) "ஐயர், ஆச்சி" என்னத்தவிர்ந்தாள். (உருகும் நின்திருவுரு நினைந்து)நாமத்வாரா †தர்மியை அநுஸந்தியா, நீர்ப்பண்டம்போலே மங்கியிருக்கும். (காதன்மைபெரிது)†வடிவழகினளவல்லவாயிற்று ஆசையின்பெருமை. (கையறவுடையள்)†ஆசையினளவல்லவாயிற்று இழவின்கனம். இழவுக்கவதி யென்னென்னில்; (கயலித்யாதி) கயல்போலே முக்த்தமாய்ப் பரப்புடைத்தாயிருக்கிற கண். பெரிய ஊர்கள் குடிவாங்கினாற்போலே, கண்ணிற் பரப்படங்கலும் நித்ராதத்வம் குடிவாங்கிற்று.

(பேதையேன்பேதை) அறிவுகேடியான என்பெண்பிள்ளை. விளைவதறியாதே இவளைப் பெற நோன்புநோற்கும்படியான அறிவுகேட்டையுடைய; (க) "நெடுங்காலமுங் கண்ணன் நீண்மலர்ப்பாதம்" என்கிறபடியே. (பிள்ளைமைபெரிது)†பருவத்தினளவல்லவாயிற்று மௌக்த்யத்தின் பெருமை. †லோகயாத்ரையில் வந்தால் தன் பருவத்திலுள்ளார்க்குள்ள அறிவு போராது. (தெள்ளியள்) உம்மளவில் வந்தால் ஶ்ருதோபநிஷத்கரளவிலுமல்லள் (வள்ளிநுண் மருங்குல்)†இவள் ஸ்வபாவத்தை †யநுஸந்தித்துக் கைவிடவொண்ணாதபடியாயிற்று வடிவிற்பசை. பிள்ளைத்தனமும் தெள்ளிமையும் அப்ரயோஜகம், வடிவுபோருமாயிற்று உமக்குக் கைவிடவொண்ணாமைக்கு. (ஏதலர்முன்னா) "ஆசைப்பட்டாயிறே, அழகிதாகவுண்டாயிறே" என்று ஏசுகிற சத்ருக்கள் முன்பே. (என்நினைந்திருந்தாய்) (உ) [త్వదగ్రేశరణాగతానాంపరాభవః - த்வதக்ரேசரணாகதாநாம் பராபவ:] உகவாதார்முன்பே நம்முடையார் நோவுபட்டுவிட்டுப் பார்த்திருக்குமது நமக்குப்போராது" என்றிருக்கக்கடவநீர், இவளிடையாட்டத்தில் நினைந்திருந்ததென்? [నతేనురూపః - நதேநுரூப:]†ஶ்ரீவைகுண்டநாதனுக்காகில் போரும்மென்னவுமாம். இப்படி கைவிட்டிருக்குமது உமக்குப்போராது. ... ... (ரு)

அந.—அஞ்சாம்பாட்டு. (ஓதிலுமித்யாதி) "சொல்லுமினென்செய்கேன்" என்று அவள்கேட்டவாறே, நீங்களெல்லாருங்கூடிப் போதுபோக்காகில் க்ரியாவிசேஷங்களைச் சொல்லிக்கொண்டு நெஞ்சை அந்யபரமாக்கியும் தாங்கப்பண்ணினாலாமே! என்னுமாகாங்க்ஷையிலே சொல்லுகிறாளென்கிறாரென்று ஸங்கதி.

(க) தி - வி - ௩எ.　　　　(உ) ஸ்தோ - ர - உகூ.

ஒதுகையாவது - சொல்லுகையாய். அதுதானும் பெண்பிள்ளைக்கு சிசுத்வாவஸ்த்தையில் வார்த்தைகற்கையாய், அத்தசையிலும் உன்பேரன்றி மற்றறியாளென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (முதல்தன்னிலேயித்யாதி). பெரியது) தெரியாதது. ஒதும்போதிலுமென்று சப்தார்த்தம். (தர்மியை) விக்ரஹவிசிஷ்டனான நாமாஶ்ரயனை. (வடிவு) என்றது-ஈஶ்வரன்வடிவென்றபடி. "கை" என்று - கையில் பொருளைச்சொல்லிற்றாய், "அறவு" என்று - இழக்கையைச்சொல்லிற்றாய், "உடை" என்கிறது - பூமாவிலேயாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆசையித்யாதி).

"பேதை" என்று சொல்லிவைத்து, "பிள்ளைமை" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (பருவத்தினித்யாதி). இப்படி மௌக்த்யத்தைச்சொன்னால், "தெள்ளியள்" என்று மேலே சொல்லுமத்தோடு விரோதியாதோவென வருளிச்செய்கிறார் (லோகேத்யாதி). வள்ளிக்கொடிபோலே நுண்ணிதான இடையையுடையவளென்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் ([illegible]வளித்யாதி). (அநுஸந்தித்து) என்றவநந்தரம், கைவிடநினைத்தாலும் என்று கூட்டிவ[illegible]. "நாத! ந-அநுரூபஃ" என்னவேயமைந்திருக்கவும், "தே" என்கையாலே - அர்ச்சாவதாரமாகவிருக்கும் தேவர்க்கு என்று தாத்பர்யமாகையாலே அருளிச்செய்கிறார் (ஸ்ரீவைகுண்டேத்யாதி). (என்னவுமாம்) என்றது - சொல்லலாமென்றபடி ; பக்ஷாந்தரஸூசகமன்று: ... ... (௫)

மூ.—தன்குடிக்கேதும் தக்கவாநினையாள்
தடங்கடல்நுடங்கெயி லிலங்கை
வன்குடிமடங்க வாளமர் தொலைத்த
வார்த்தைகேட் டின்புறும் மயங்கும்
மின்கொடிமருங்குல் சுருங்க மேல் நெருங்கி
மென்முலை பொன்பயந்திருந்த
வென்கொடியிவளுக் கென்நினைந்திருந்தா
யிடவெந்தை யெந்தைபிரானே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தன்	தன்னுடைய	வன்	வலியராக்ஷஸருடைய
குடிக்கு	குலத்துக்கு	குடி	குலமானது
தக்கவா	தகுந்தமார்க்கம்	மடங்க	அழியும்படி
ஏதும்	ஒன்றும்	வாள் அமர்	கொடியயுத்தத்திலே
நினையாள்	ஆராய்ந்தறிகிலள்;	தொலைத்த	நிரஸித்த
தடம்	பெரிய	வார்த்தை	வ்ருத்தாந்தத்தை
கடல்	கடலையும்	கேட்டு	கேட்டு
நுடங்கு	விளைந்திருந்துள்ள	இன்புறும்	ஆநந்திக்கும்; (திரியட்டும்)
எயில்	மதிளையுமுடைய		
இலங்கை	லங்கையிலுள்ள	மயங்கும்	மயங்காநிற்கும்;

மின்	மின்னலையும்	பொன்பயந்திருந்த	பொன்நிறமான பசலைபூத்துக்கிடக்கிற
கொடி	வஞ்சிக்கொடியையு மொத்த	மெல்	மெல்லிய [ளான
மருங்குல்	இடையானது	முலை	ஸ்தநங்களையுடைய
சுருங்க	நுடங்கும்படி	என்கொடி இவளுக்கு	என்பெண்ணான இவள்விஷயத்தில்
மேல்	மேலே	இடவெந்தைஎந்தைபிரானே!	என்நினைந்திருந்தாய் சொல்லு. (௬)
நெருங்கி	நெருக்கமாக		

வ்யா.—ஆறும்பாட்டு. (தன்குடிக்கேதும்) நம்குடி என்னாதே "தன்குடி" என்கிறாளாயிற்று, "எம்பெருமானார் தர்சநம்" என்னுமாபோலே. †நம்ப்ரதிபத்தியாலே சொன்னோமாகை யன்றிக்கே பெருமாள் "இராமாநுசனுடையார்" என்றே யருளிச்செய்வர். †"பெருவிலையனான ரத்நத்தை நடுவே இட்டுக்கோத்தால் முன்னும் பின்னுமொக்க விலைபோமாபோலேகாண்" என்று பிள்ளான். (தன் குடிக்கேதும் தக்கவா நினையாள்) இவள் நிலையிருந்தபடியிது, நீரினி †உம்முடைய மர்யாதைநோக்கிக்கொள்ளப்பார்த்தீரோ? இல்லையோ? என்கிறாள். †இவளைத்துடங்கிக்காணு மிக்குல மர்யாதை நடத்துவதாக நினைத்திருந்தது. தன்னைத்தொடங்கிக் குலமர்யாதை நடத்துவதாக †நினைத்திருக்கத் தானித்தைக் கடலிலே கவிழ்க்கப்பார்க்கிறாள். †(தன்குடிக்கு) (க) "జనకానాంకులే - ஜநகாநாம்குலே" என்கிறபடியே - இவள் பிறந்தபின்பாயிற்று இக்குடியில் முன்பில்லாத ஏற்றமெல்லா முண்டாயிற்று. ஒருநாள் பட்டர் இனிதாக வாசித்தபடியைக் கேட்டருளி எம்பாரெழுந்திருந்து நின்று கண்ணநீரை விழவிட்டு சிதிலாந்தஃகரணராய் பட்டரைக்காட்டி, (க) "జనకానాం కులే కీర్తిమాహరిష్యతి మే సుతా - ஜநகாநாம்குலேகீர்த்தி மாஹரிஷ்யதி மே ஸுதா" என்றருளிச்செய்தாராம். (உ)†"తత్తస్య-தத்தஸ்ய" என்கிறபடியே நம்முடைய பேற்றுக்கு நமக்கு வருந்துகைக்கு ப்ராப்தியில்லை, "அவனாலேபேறு" என்றிருக்கும்படி யாயிற்று. †"பெறுவதவனையாகில் இக்க்ரமங்கொண்டு கார்யமென்" என்றிராநின்றாள் அவள்; "முகத்திலே விழித்துக்கொண்டு நின்று க்ரமம் பார்க்கவமையாதோ?" என்றிராநின்றாளிவள். (ஏதும் தக்கவா நினையாள்) †மடலெக்கடைக் கணிப்பது,வேண்யுத்க்ரதநத்தி லொருப்படுவதாகாநின்றாள். (நினையாள்) †திருத்தாயார்தான் இவள் நினைவையும் அடியொத்துகிறாள் காணும் இவளை இழக்கமாட்டாமையாலே.

(க) ரா - பா - (உ) ரா - ஸு -

(தடங்கடலித்யாதி) வேண்யுத்க்ரதநத்திலொருப்பட வேண்டாத படி வந்துஉதவும்படியை யநுஸந்தித்து இனியளாகாநிற்கும்; †அதிலேயொருப்பட்டவளவிலேவந்து உதவினவனிறே.பரப்புடைத்தான கடலை அகழாக வுடைத்தாய், சத்ருக்கள் கேட்டபோதே † நுடங்கும்படியான †மதிளையுடைத்தாய். அன்றிக்கே,†புரிப்புடைத்தான மதிளென்னுதல். (இலங்கை வன்குடிமடங்க) ஊரில் அரணேயன்றிக்கே வரபலத்தாலே பல்கிப்பரந்திருந்துள்ள குடியானது திரியட்டும் முடிந்துபோம்படியாக. †ராக்ஷஸரைப்போலே மாயையாலன்றிக்கே, நிறமுடைத்தான பூசலிலே வன்குடி மடங்கத் துளைத்தவார்த்தை யுண்டு-ஸ்ரீராமாயண வ்ருத்தாந்தம், அத்தைக்கேட்டு. (இன்புறும்) "நம்மவஸ்த்தை யுடையளா யிருப்பாளொருத்திக்கு உதவினபோதே எனக்கு முதவினவனன்றோ" என்று அத்தாலே இனியளாம்.(மயங்கும்) "உதவாதவ னுதவாதொழிகை யன்றிக்கே உதவும் ஸ்வபாவனுயிருந்து வைத்து, நம்தசை இதுவாயிருக்க உதவாதொழிவதே!" என்று மோஹிக்கும். †"நம்தசையை யுடையா ளொருத்திக்கு உதவினவனன்றோ" என்று அந்த அண்ணிமையைஅநுஸந்தித்து இனியளாம். "அணித்தாக உதவினவன் நமக்கு உதவவாராதொழிவதே" என்று மயங்கும்.

(மின்கொடி யித்யாதி) மயங்கினு விழக்கலாமவளோ? இவள். மின்கொடிபோலே யிருக்கு மிடையானது சுருங்கும்படியாகமேலே நெருங்காநிற்குமாயிற்று. †மேலே யிருந்து கீழே வெட்டுவாரைப் போலே தன்குடியிருப்பை யழியாநின்றதாயிற்று. (மென்முலை) முலைக்குக் காடிந்யம் ஸ்வபாவமாயிருக்கச்செய்தே "மென்முலை" என்கிறது - விரஹஸஹ மல்லாமையாலே. (பொன்பயந்திருந்த) இதுடைய மண்ணீடாய்க் கழிந்ததாயிற்று. (என்கொடி)இவளுடைய வைலக்ஷண்யத்துக்கு உதவாதொழியிலும் தன்வயிற்றில் பிறப்புக்கு உதவாதொழிய வொண்ணு தென்றிருக்கிறுள். (இவளுக்கென் நினைந்திருந்தாய்) இவளுடைய வைவர்ண்யமும், அத்யவஸாயமும், செல்லாமையும், வடிவழகும், பிறப்பிருந்தபடியாலும் உமக்கு உதவாதொழியப்போமோ? (இடவெந்தை யெந்தைபிரானே) இவளைக்காட்டி லுமக்குண்டான வைவர்ண்ய த்யோதகமிறே திருவிடவெந்தையிலிருப்பு. உடம்பு வெளுப்பன்றுகில் ஸ்ரீவைகுண்டத்திலிருக்க வமையுமிறே. உம்முடைய வைவர்ண்யத் தோற்றத் திரு

விடவெந்தையிலேவந்து எழுந்தருளியிருக்கிற நீர் இவளிடையாட்டத்தில் நினைத்திருந்ததென் ?... ... ...(௬)

அரு.—அரும்பாட்டு. (தன்குடிக்கித்யாதி) துரும்புநறுக்கில் ஸாதநமாமென்று துணிந்திருக்குமுங்கள் வயிற்றில்பிறந்த பெண்பிள்ளை யென்பேரையோதுகிறதும், என்னுருவை நினைத்து உருகுகிறதும் செய்தாளென்றால் இது மெய்கொள்ளப்போமோ வென்று அவனுக்குக்கருத்தாக; சொல்லுகிறாளென்கிறாரென்று ஸங்கதி.

திருக்கோட்டியூர்நம்பி, "எம்பெருமானார் தர்சநம்" என்று எல்லார்க்கும் ப்ரதிபத்திபிறக்கும்படி தம்ப்ரதிபத்தியாலே யருளிச்செய்தமாத்ரமன்றோவென்ன (நம்ப்ரதிபத்தியாலேயித்யாதி). முன்புள்ளாரும் பின்புள்ளாருமிருக்க, இவரையிட்டே நிரூபிக்கைக்கு ஹேதுவென்னென்னவருளிச்செய்கிறார் (பெருவிலையனித்யாதி). (உம்முடையமர்யாதை) என்றது - இவள் ஸ்வயத்நத்திலே மூளுவதற்குமுன்னே முகங்காட்டுகையென்கை. தன்குடியின் மர்யாதைகளைச்செய்ய நினையாளென்னுதே, "குடிக்குத்தக்கவா" என்றதுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (இவளையித்யாதி வாக்யத்வயத்தாலே). (நினைத்திருக்க) திருத்தாயார் நினைத்திருக்க. குலமர்யாதைமுன்புதானே நடந்துகொண்டுவாராதோ? இவளைத் துடங்கி நடத்துவதெத்தாலேயென்னும் சங்காபரிஹாரார்த்தம் ப்ரதீகக்ரஹணம் (தன்குடிக்கு) என்று. இந்தத்திருத்தாயாரைப்போலே சொன்னார்தானுண்டோவென்னவருளிச்செய்கிறார் (தத்தஸ்யேத்யாதி). ஆனால் த்வரிக்கவேண்டுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (பெறுவதித்யாதி). இதுஸம்சயம். "எதும்" என்கைக்குத் தாத்பர்யம் (மடலையித்யாதி). "நினையாள்" என்கைக்கு - அவள்நினைவுதெரியுமோவென்ன வருளிச்செய்கிறார் (திருத்தாயாரித்யாதி).

(அதிலே) வேண்டியுத்க்ரதநத்திலே. (நுடங்கும்படியான) நடுங்கும்படியானவென்றபடி. "எயில்" என்றதினர்த்தம். (மதிள்) என்றது. (புரிப்புடைத்தான) கோணமாகவளைப்புடைத்தான. "வாள்"என்று-ஒளியாய், அதாவது-செவ்வையானபூசலென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (ராக்ஷஸரைப்போலேயித்யாதி). வார்த்தைகேட்கை இரண்டுக்கும் ஹேதுவாமோவென்ன வருளிச்செய்கிறார் (நம்தசையையித்யாதி).

சுருங்கமேல்நெருங்குகை - இடையொடியும்படி முலை மேலே பணைக்கை என்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (மேலேயிருந்தித்யாதி). ... (௬)

மூ.—உளங்கனிந்திருக்கு முன்னேபே பிதற்றி
முனக்கன்றி யெனக்கன்பொன் றிலளால்
வளங்கனி பொழில் சூழ் மாலிருஞ்சோலை
மாயனேயென்று வாய் வெருவும்

களங்கனி முறுவல் காரிகை பெரிது
கவலையோடவலம் சேர்ந்திருந்த
இளங்கனி யிவளுக் கென் னினைந்திருத்தா
யிடவெந்தை யெந்தைபிரானே. (௭)

பதம்.	உரை.
	(இப்பெண்பிள்ளை உன்னையேயெப்பொழுதும் நினைக்கையாலே)
உளங்கனிந்திருக்கும்	ஸந்துஷ்ட சித்தையாயிராநின்றாள்; (பேசப்புகில்)
உன்னையே	ஸம்ஶ்லேஷத்துக்கு விஷயபூதனான உன்னையே
பிதற்றும்	அடைவுகெடப்பேசாநின்றாள்; [லாமல்
உனக்கன்றி	உன்விஷயத்திலல்
எனக்கு	நெடுங்காலம்நோற்றுப்பெற்ற என்விஷயத்திலே
ஒன்று	அல்பமும்
அன்பிலள்	ஸ்நேஹமில்லாதவளாயிராநின்றாள்;
வளம்	மிக்கஇனிமையான
கனி	கனிகளையுடைய
பொழில்	சோலைகளாலே

பதம்.	உரை.
சூழ்	சூழப்பட்ட
மாலிருஞ்சோலை	திருமாலிருஞ்சோலையிலெழுந்தருளியிருக்கிற
மாயனேஎன்று	ஆஶ்சர்யசக்தியுக்தனேயென்று
வாய்வெருவும்	வாய்பிதற்றாநின்றாள்;
களங்கனி	களங்கனிபோலே யினிதான
முறுவல்	புன்சிரிப்பையும் [ய்,
காரிகை	அழகையுமுடையளா
பெரிது கவலையோடு	மிக்கமனவருத்தத்தோடே
அவலம்சேர்ந்திருந்த	வைவர்ண்யம் சேர்ந்திருக்குமவளாய்,
இளம்கன்னி	சிறுபெண்பிள்ளையா
இவளுக்கு	இவள்விஷயத்தில்[ன
இடவெந்தையெந்தைபிரானே! என்	
	நினைந்திருந்தாய், சொல்லு. (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (உளங்கனிந்திருக்கும்) †உள்ளமானது இங்ஙனே பக்வமாய், அகவாயிலோடுகிறது வாய்விடமாட்டாதேயிருக்கும். ஹ்ருதயம் பரிபக்வ மாகையாவதென்னென்னில்; புஜிக்கக்கடவவன் புஜித்ததில்லையாகில் † ஆஶ்ரயமில்லையா யிருக்கை. (உன்னையேபிதற்றும்) † "இதுதான் பா(ஓ)வபந்தத்தாலேயோ?" என்றிருந்தாள் இவள் வாய்விடுமளவுந்திருத்தாயார்; உம்முடையபக்கலிலுமொரு அபிஸந்தியின்றிக்கே, (க) "𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌜𑌲𑍍𑌪𑌤𑌃 - ஜாமதக்ந்யஸ்ய ஜல்பத:" என்கிறபடியே அடைவு கேடாகச் சொல்லாநின்றாள். ஒரு அபிஸந்தி பூர்வகமாக வந்ததாகில் அடைவுபட்டிருக்குமிறே. (உனக்கித்யாதி) †"நம்மையுமொருகால் சொல்லாளோ?" என்னும் நசையறுத்தாள். †அவனுக்காம்படி இவ்வளவாக்கினார் பக்கலிலே யாதல், அவன் பக்கலிலே யாதலிறே பாவபந்தமிவளுக்கு.

(க)

(வளமித்யாதி) இவ்வளவான ப்ரேமத்துக்கு அவன் க்ருஷி பண்ணினபடியைச் சொல்லி வாய்வெருவும். ஸம்ருத்தமான பலங்களை யுடைத்தான பொழிலாலே சூழப்பட்ட திருமலையிலே, ஆர்யர்களிருந்த ம்லேச்சபூமியிலுள்ளார்க்கு முகங்கொடுத்து நிற்கிற ஆஶ்சர்ய குணசேஷ்டிதங்களை யநுஸந்தித்துப், பின்னை வாஸனையே உபாத்யாயராகச் சொல்லுமதொழிய உணர்த்தியுடன் சொல்லுவதொரு வார்த்தையில்லை. (வாய்வெருவும்), (க) [விசிந்த்ய வாசா ப்ருஶதீதமேவ] † முற்பட வநுஸந்தியா, பின்னை அது தானும் மாட்டாதே வாஸனையாலே சில சொல்லுமத்தனை.

(களங்கனி முறுவல்)† பிள்ளாய்! ஆர்வாய்வெருவக்கடவத்தை ஆர்வாய் வெருவுகிறார். (உ) "ஸீதேதி சாருததீம்" என்று அவனிறே வாய்வெருவுவான்† "எதிர்த்தலையைத் †தோற்பித்தோமாக வேணும்" என்றிருக்கிறவர்களகவாய் இப்படி விலக்ஷணமாய் பக்வமாய்த் தோற்றினதுபோலே யாயிற்று முறுவலிருப்பது.

(ங) †[அஸ்மிந்] முன்பு தாமும் பிராட்டியுமாய் ஜலக்ரீடாதிகள் பண்ணி ஸரஸமாகப் பரிமாறிற்றோரிடத்திலே, பிராட்டியைப்பிரிந்து தாமுமிளைய பெருமாளுமாய்த் தேடிக்கொடுவாராநிற்கச்செய்தே அவ்விடத்தைக்கண்டு இளையபெருமாளைப் பார்த்தருளிச்செய்கிறார். [அஸ்மிந் - அஸ்மிந்] இப்படி வெறுந்தரையாயிருக்கிறவிடத்திலே காண் அன்று நா†மெடுப்பெடுத்தது. [மயாஸார்த்தம்] ப்ரணயதாரையில் தம்மைத்தாம் சால மதித்திறேயிருப்பது. †நாமுங்கூடக் †காணவந்த சோழரோபாதியாகக் கடக்க நிற்கும்படி அவளுடைய அளவுடைமையும் விதக்த்தமாகப்பரிமாறினபடியுங்காண். [உதாரசிலா] படைவீட்டி லிருந்தநாள் மாமனார் மாமியார்க்குக்கூசி §(ச்சிறிது)படி விடுவாரோபாதி அளவுபட வாயிற்று போகம் செல்லுவது; இப்போது அவ்வளவன்றிக்கே ஏகாந்தஸ்த்தலமாகையாலே தன்னை முற்றாட்டாக ஸர்வஸ்வதாநம் பண்ணிக்கொண்டிருந்தாளாயிற்று. [சிலாதலே பூர்வம்]†ஜலக்ரீடை பண்ணுகிறதோரிடத்திலே சிலாதலமாய், இளை

(க) ரா - ஸு -   (உ)   (ங) ரா - ஆ - ௯௩ - ௧௨.

§ குண்டலிதம் க்வாசித்தம்.

த்தவிடத்திலே அதிலே யேறுவதாகப் பெருமாள் முற்கோலிக்கணி சிக்க, (க) "ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்துகோஸலா:- ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்துகோஸலா:''' என்கிற அதிலேயு மொருஸம்பந்த முண்டிறே இவளுக்கு;† அத்தை இவருடைய இங்கிதாதிகளைக் கொண்டறிந்து இவரை இளைப்பிக்கவேணுமென்று பார்த்து, பெருமாளேறுவதாகக் கணிசித்த துறையையடைத்துக்கொண்டிருந்தாள். [உபோபவிஷ்டா - உபோபவிஷ்டா] அப்படியா யிருக்குமிறே எங்கும். [காந்தஸ்மிதா - காந்தஸ்மிதா] † வெறும்புறத்திலே தானே துவக்கவல்லவள்; முறுவலைச் சேர்த்தாற்போலேயாயிற்று முகந்தானிருப்பது. அதுக்குமேலே அப்போது பிறந்த வெற்றியாலே ஜாதஹாஸை யானாளாயிற்று. [த்வாமாஹ-த்வாமாஹ] †இதுக்கு முன்பு துடங்கின கார்யத்தில் தலைக்கட்டாதே மீளுமதிலையிறே பெருமாள்; இதொன்றுந்தலைக்கட்டப் பெற்றதில்லை; அத்தாலே லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டார் பெருமாள்; அவரைவிடா, இவரைப்போரப் பொலியக் கொண்டாடுகிற இளையபெருமாள் முகத்தைப் பார்த்தாள்; "பாரீரோ தம்பியார்! நீங்கள் நினைத்ததெல்லாந் தலைக்கட்டினிகோளிறே, நீங்கள் வல்லவலிய ஆண்பிள்ளைகள், நாங்கள் பெண்பெண்டுகள், நீங்கள் வேட்டைக்கும் வினைக்கும் போய் வ்யாபரிக்குமவர்கள்; நாங்கள் வீடுவிட்டுப் புறப்பட்டறியோம், உங்களுக்கு நினைத்த வகைகளெல்லாம் தலைக்கட்டலாமிறே, உங்கள் தமயனார் வென்றாரிறே" என்று பஹுமுகமாகக்கொண்டு வார்த்தை அருளிச்செய்தாளாயிற்று.

(காரிகை) நிருபாதிகஸ்த்ரீத்வத்தை யுடையவள். (பெரிதித்யாதி) கவலையும் அவலமுமாகிறது-மாநஸமாயும் சாரீரமாயும் வரும் வ்யஸநத. கவலையாகிறது-நெஞ்சில் தடுமாற்றம், அவலமாகிறது-வடிவைப்பேணாமை. (இளங்கனி) நீர் வில்லை முறித்துச்சென்று கைப்பிடித்த ஸ்ரீஜநகராஜன் திருமகளிலு மிளையவளிவள்; உம்மைப்பிரிந்தால் அவளைப்போலே (௨) "ஸமா த்வாதச - ஸமா த்வாதச தத்ராஹம்" என்று ஆசையிட்டுத் தரிக்க வல்லவளன்று. இப்படி பருவமிளையளாகில் முன்பே ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாகிலன்றோ இப்படி படக்கடவதென்னில்;† இயற்கையிலே அவள்கலந்து வைக்குமே, அத்தைத் §தாயாரறியாளே. (என்னித்யாதி) ஸ்ரீஜநகராஜன்

(க) ரா - ஆ - (௨) ரா - ஸு - § (பா) தானறியாளே.

திருமகளைக் கைப்பிடிக்கைக்காக ஸ்ரீமிதிலையில் புறச்சோலையிலே விட்டுக்கொண்டிருந்தாற் போலே, இவளைப் பெறுகைக்காகத் திருவிடவெந்தையிலே விட்டுக்கொண்டிருக்கிற நீர் இவளிடையாட்டத்திலென்ன நினைத்திருந்தீர். ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (உளங்கனிந்தித்யாதி) உங்கள்குல மர்யாதைகளைப் பேணச்சொல்லி நீங்கள் பெண்பிள்ளையை மிரட்டி நிறுத்தினீகோளாகில், அவள்தானே அறியிராளோ,என்னைக்கேட்கிறதென்னென்ன; அங்ஙன்செய்யவொண்ணாதபடியிறே அவள்தசையென்கிறாளென்கிறாரென்று ஸங்கதி.

பெண்பிள்ளையை "என்நினைந்திருந்தாய்" என்று நாங்கள் கணச்சமறுமாற்றம்சொல்ல, நினைந்து உன்னையேத்துமென்ன வமைந்திருக்கவும், "இருக்கும்" என்கையாலே - வாய்விடமாட்டாதே திருவுள்ளம் கனிந்திருக்குமென்று தாத்பர்யம் விவக்ஷித்தருளிச்செய்கிறார் (உள்ளமானதித்யாதி).(ஆஶ்ரயமில்லையாயிருக்கை) என்றது - பழமானது புஜியாதபோது அழிந்துபோமாபோலே ஈஶ்வரன் அநுபவியாதபோது அழியும்படியிருக்கையென்கை. (இதுதான்) என்றது - உளங்கனிந்திருக்கைதானென்றபடி. தான் "என்நினைந்திருந்தாய்" என்றதுக்கு வாய்விடாதேயிருந்தது, அவனிடத்தில் ஸ்நேஹத்தாலே என்றிருந்தாள் திருத்தாயார், நெஞ்சழிந்து வாய்புலத்தப்புக்காள் பெண்பிள்ளை, அத்தைவிட்டு, "உன்னையேபிதற்றும்" என்கிறாளென்னும் பாவத்தையருளிச்செய்கிறார் (இதுதானித்யாதி). உட்கருத்தையருளிச்செய்கிறார் (நம்மையுமித்யாதி). பின்னையுமொருகால் சொல்லாளோவென்னுமாசை. "எனக்கன்பொன்றிலள்" என்ன ப்ரஸக்தியெங்ஙனேயென்ன (அவனுக்கித்யாதி).

"రామేతి రామేతి సదైవ బుద్ధ్యా విచిన్త్య వాచా బ్రువతీ తమేవ - ராமேதிராமேதி ஸதைவபுத்யா விசிந்த்யவாசா ப்ருவதீதமேவ" இதுக்கர்த்தமருளிச்செய்கிறார் (முற்படவித்யாதி).

"வாய்வெருவும் களங்கனிமுறுவல்" என்ற ஸமபிவ்யாஹார தாத்பர்யம் (பிள்ளாயித்யாதி). பிள்ளாயென்னுமது - பூஜ்யவாசகமாகையாலே, இடவெந்தைபிரானை யங்ஙனே ஸம்போதிக்கிறாளென்றுகருத்து. வாய்வெருவும்படியான பாகம்முடுகினவிவளை குலமர்யாதையிலே நிறுத்துகை துஷ்கரமென்று கருத்து. "களங்கனிமுறுவல்" என்றவளவுக்குத்தாத்பர்யம் (எதிர்த்தலையித்யாதி). களாப்பழம்போன்றமுறுவல் என்று போக்யதாமாத்ரத்திலே த்ருஷ்டாந்தமென்று திருவுள்ளம்."களம்"என்று சலமென்றதாய், அவ்யக்தமதுரமென்றபடி; இது வ்யாக்யாநாந்தரத்திலர்த்தம். (சாருததீம்) என்றது-அழகியதந்தங்களையுடையவளென்றபடி. (தோற்பித்தோமாகவேணுமென்றிருக்கிறவர்கள்) - பிராட்டிமார்.

அவன் பிராட்டிமுறுவலுக்குத் தோற்றமைக்கு ப்ரமாணாந்தரம் காட்டிக்கொண்டு வ்யாக்யாநம்பண்ணுகிறார் (அஸ்மிந் இத்யாதி). (எடுப்பு) நிக்ஷேபம். அஸ்மச்சப்த தாத்பர்யமருளிச்செய்து, த்ருதீயை அப்ராதாந்யேயாய், ஜலக்ரீடா ரஸாநுபவத்திலிருக்கும் ப்ராதாந்யத்தையருளிச்செய்கிறார் (நாமுங்கூடவித்யாதி). (காணவந்தசோழரோபாதி) மல்லயுத்தம் பார்க்கவந்தசோழராஜாக்களோபாதி யென்றபடி. "பூர்வம்" என்னுமது - இதுக்குப்பூர்வம் என்னவேண்டுகையாலே, அத்தையருளிச்செய்கிறார் (ஜலக்ரீடையித்யாதி). உப உப - என்கிற த்விருக்தியாலே-ஸமீபத்தில் துறைதுறைதோறுமிருந்தாளென்ற விவக்ஷித்தருளிச்செய்கிறார் (அத்தையித்யாதி). "ஜாதஹாஸா" என்று கதாசித்ஹாஸம்போலன்றிக்கே, "காந்தஸ்மிதா" என்று சொன்னதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வெறும்புறத்திலேயித்யாதி வாக்யத்வயத்தாலே). ப்ரணயதாரையில் பெருமாளோடே வார்த்தைசொல்ல ப்ரஸக்தியுண்டாயிருக்க, இளைய பெருமாளோடு வார்த்தையருளிச்செய்கைக்குக் கருத்தருளிச்செய்கிறார் (இதுக்குமுன்பித்யாதி). வாக்யஜாதந்தானென்னென்ன (பாரீரோவித்யாதி).

(இயற்கையிலே) உத்யாநாதிஸ்த்தலங்களிலே யாத்ருச்சிகஸம்ஶ்லேஷத்திலே. ... ... (எ)

மூ—அலங்கெழு தடக்கை யாயன் வாயாம்பற்
கழியுமா லென்னுள்ள மென்னும்
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும்
போதுமோ நீர்மலைக் கென்னும்
குலங்கெழு கொல்விக் கோமளவல்லி
கொடியிடை நெடுமழைக் கண்ணி
இலங்கெழில் தோளிக் கென்னினைந் திருந்தா
யிடவெந்தை யெந்தை பிரானே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	(என்பெண்ணானவள்)	என்னும்	என்றுசொல்லாநின்றாள்; [வற்றையும்
அலம்	ஹலம் என்னும் ஆயுதம்	புலம்	இந்த்ரியங்களெல்லா
கெழு	விளங்காநின்றுள்ள	கெழு	தன்பக்கல் சேர்த்துக் கொள்ளும்படியா
தடம்	பருத்த [ய		
கை	திருக்கைகளையுடை	பொரு	அலைபொருகிற [ன
ஆயன்	இடையனான க்ருஷ்ணனுடைய	நீர்	நீரையுடைய
		புட்குழி	திருப்புட்குழி விஜய்ராகவன் விஷயமானகாதைகளை
வாய்	திருப்பவளத்தில் வைத்தூதுகிற [கு		
ஆம்பற்கு	இலைக்குழலோசைக்	பாடும்	பாடாநின்றாள்;
என்னுள்ளம்	என்மநஸ்ஸானது	நீர்மலைக்கு	திருநீர்மலைக்கு
அழியும்	அழியாநின்றது	போதுமோ	போவோம்

என்னும்	என்றுசொல்லாநின்ருள்;	நெடுமழை	பெருமழைபோலே நீர்த்தாரைகள் இடைவிடாமல் ப்ரவஹிக்கிற[ய்
கொல்லி	கொல்லிமலையிலுண்டான பாவைபோன்று	கண்ணி	கண்களையுடையளா
கெழு	ஶ்லாக்யமான [ய்	இலங்கு	விளங்காநின்றுள்ள
குலம்	குலத்தில்பிறந்தவளா	எழில்	அழகிய
கோமளம்	அழகிதான	தோளிக்கு	தோள்களையுடையளான இப்பெண் விஷயத்தில்
வல்லி	கொடிபோல் மென்மைத்தன்மையளாய் [யொத்த		
கொடி	வஞ்சிக்கொடியை		
இடை	இடையையுடையளாய்		

இடவெந்தையெந்தைபிரானே! என்நினைந்திருந்தாய், சொல்லு. (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (அலமித்யாதி) †நெஞ்சிலழிவை மறைக்க ப்ராப்தமாயிருக்க, நெஞ்சிலழிவைத்தாயான என்முன்னே சொல்லாநின்ருள். "அலம்" என்று ஹலம். கலப்பை† சேர்ந்திருந்துள்ள சுற்றுடைத்தான கையையுடைய க்ருஷ்ணனுடைய வாயில் குழலோசையிலே, ஒன்றுக்கழியாத என்னெஞ்சழியாநின்றதென்னுநின்ருள். †வயிரமுமுருக்குங்காணும் வாயில் குழலோசை. †இலைக்குழலென்று நிர்ப்பந்திக்கிறருமுண்டு. ஹலத்தையுடைய என்கிற இதுக்குக் கருத்தென்னென்னில்; கையிலாயுதத்துக் கெதிரிகளழியுமாபோலே குழலோசைக்கு இவளழியாநின்ருளென்கை.†"தாய் தமப்பனுக்குப் பரதந்த்ரனுகையாலே ருறித்தகாலத்திலே வரப்பெற்றிலேன்" என்ருற்போலே சிலவற்றைக் குழலோசையிலே தோற்ற வைத்திறேஊதாவது.(க) †"𑌜𑌗𑍌 𑌕𑌲𑌪𑌦𑌂 𑌶𑍌𑌰𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑌦𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 । 𑌰𑌮𑍍𑌯𑌂 𑌗𑍀𑌤𑌧𑍍𑌵𑌨𑌿𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌸𑌨𑍍𑌤𑍍𑌯𑌜𑍍𑌯𑌾𑌵𑌸𑌥𑌾𑌂𑌸𑍍𑌤𑌦𑌾 - ஜகௌகலபதம் ஶௌரிஸ் ஸ்தாரமந்த்ரபதக்ரமம்| ரம்யம் கீதத்வநிம் ஶ்ருத்வா ஸந்த்யஜ்யாவஸதாம்ஸ்ததா" என்று சொல்லுகிறபடியே. அன்றிக்கே, ஆறு நீர்வர முன்னே சிணையாறுபடுமாபோலே க்ருஷ்ணன்வரவுக் குறப்பாக முன்னேவரும் நம்பி மூத்தபிரான் குழலோசையாகவுமாம்.

†அதிற் காட்டிலுமழிக்கும் போலேகாணும் அதுக்கிவ்வருகிலுகந்தருளின நிலத்தில் நிலை. "புலம்" என்று விளைநிலத்தைச் சொல்லிற்ருகவுமாம். அன்றிக்கே, கண்டாருடைய இந்த்ரியங்கள் † பிணியுண்ணும்படியாய், தன்னில்தான் பொராநின்றுள்ள ஜலஸம்ருத்தி

(க) வி - பு - ரு -

யையுடைய திருப்புட் குழியிலே நிற்கிறநிலையை யநுஸந்தித்தவாறே நான் தாயென்றுபாராதே வாய்விட்டுப் பாடாநின்றாள். (போதுமோ நீர்மலைக் கென்னும்) "நம்தசை யிருந்தபடியால் திருநீர்மலையிலே போய்ப்புக்கே விடுவோம்போலே யிருந்தது" என்று விலக்க நினைக் கிற † தாயாரோடே தோழிமார்க்குச் சொல்லுமாபோலே சொல்லா நின்றாள்.

(குலமித்யாதி)†கொல்லிமலையிலே ஒருபாவையுண்டு†வகுப்பழகி தாயிருப்பது,அதுபோலே யாயிற்று இவளுக்குண்டான†எற்றமும், பிறப்பும்,†அதுகூலரும்அடித்துப்பார்க்கவொண்ணாத ஸௌகுமார்ய மும். (க) "என்னுடைக் கோமளக்கொழுந்து" என்னக்கடவதிறே. (கொடியித்யாதி) கொடிபோலே யிருந்துள்ள இடையை யுடைய ளாய், ஒரு கால் கண்ணாலே நோக்கில் ஒருபாட்டம் மழைவிழுந்தாற் போலே இலக்காணர் திமிர்க்கும்படியான நோக்கையுடையளாய், உஜ்ஜ்வலமாகா நிற்பதாய் கீழ்ச்சொன்னதுக் கெல்லாம் மேலே அழ கிதான தோள்களையுடையளான இவளுக்கு. (என்னித்யாதி) (உ) "ராக⁴வோऽர்ஹதி வைதே³ஹீம் - ராகவோர்ஹதி வைதேஹீம்" என்னும்படியே உமக்குத் தகுதியாம்படி யிருக்கிற இவளிடையாட்டத்தில் நீர் நினைத்திருக்கிறதென் ? ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (அலமித்யாதி). "உனக்கன்றி எனக்கன்பொன்றிலள்" என்று நீசொல்லும்படியாக முதிர்ந்து என்னைவாய் வெருவினாளேயாகிலும், தாயானஉன்னைக் கண்டபோதே அஞ்சி உனக்கு மறைக்க அவளுக்கு ப்ராப்தமாகாதோ, ஆகையாலே குலமர்யாதையிலே நிறுத்தலாமேயென்று பகவதபிப்ராயமாக; என்னைத்தாயென்றுமறியாதே தோழியோபாதியாகவெண்ணி என்முன்னேதானே வாய்விட்டாளென்கிறாளென்று ஸங்கதி.

பூர்வார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நெஞ்சிலித்யாதி). "கெழு" என்றதினர்த்தம் (சேர்ந்திருந்துள்ள) என்றது. (வயிரமுமுருக்கும்) என்றது - வஜ்ரத்தையுமுருக்குமென்றபடி. "ஆம்பல்" என்றதுக்கு மூங்கில் குழலென்றருளிச்செய்து, இலைக்குழலென்றர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (இலையித்யாதி). குழலோசைக்கிவளழிவாளென்னென்ன வருளிச்செய்கிறார் (தாயித்யாதி). குழலோசைக்கு ஈடுபட்டிருப்பர்களோவென்ன வருளிச்செய்கிறார் (ஜகாவித்யாதி). தாரமென்றும் மந்த்ரமென்றும்சொல்லுகிற ஸ்வர விசேஷங்களையுடைய பதங்களினுடைய க்ரமத்தையுடையவென்றபடி.

(க) தி-வாய் - எ - உ. (உ) ரா - ஸு -

மேலுக்கவதாரிகை (அதிலித்யாதி). (அதிற்காட்டிலும்) விபவாவதாரங்களிற்காட்டிலும். கெழுகை-சேருகையாய், அதினர்த்தம் (பிணிப்புண்ணும்படியாய்) என்று. (தாயாரோடே) என்றது - தாயாரானவென்னோடேயென்றபடி.

நல்லகுலத்திலே சேர்ந்தவளாய் சொல்லிப்பாவைபோலே யானவளென்று சப்தார்த்தமாய், வ்யுத்க்ரமேண அர்த்தமருளிச்செய்கிறார் (கொல்லியித்யாதி).(வகுப்பு) அவயவஸம்ஸ்தாநம்.(எற்றமும்)ஸௌகுமார்யாதிசயமும்.(க) '[illegible]-சேடீப்ருசாலோகிதைரங்கம்லாநி" என்னுமத்தையுட்கொண்டு, "கோமளவல்லி" என்றதுக்குத் தாத்பர்யம் (அநுகூலருமித்யாதி). (பிறப்பும் ஸௌகுமார்யமும் அதுபோலேயாயிற்று) என்று அந்வயம். கொல்லிமலைப் பாவைக்கு மலை உத்க்ருஷ்டதேசமாகையால் ஆபிஜாத்யமும் கூடும்; பாவையிலேயும் ஸௌகுமார்யந்தோற்றும்படியிருக்கையால் ஸௌகுமார்யமுண்டென்று திருவுள்ளம். ... ... (அ)

மூ.—பொன்குலாம்பயலை பூத்தன மென்தோள்
பொருகயல் கண் துயில்மறந்தாள்
அன்பினாலுன்மே லாதரம்பெரிதிவ்
வணங்கினுக் குற்ற நோயறியேன்
மின்குலா மருங்குல் சுருங்க மேல்நெருங்கி
வீங்கிய வனமுலையாளுக்
கென்கொலாங்குறிப்பி லென்னினைந்திருந்தா
யிடவெந்தை யெந்தைபிரானே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மெல்	மெல்லிய	அன்பினால்	ஸ்நேஹத்தாலே
தோள்	தோள்களானவை	ஆதரம்	அபிநிவேசமானது
பொன்	பொன்நிறத்தை	பெரிது	மேன்மேலெனப்பெருகாநின்றது;
குலாவும்	கொண்டாடாநின்றுள்ள [றன;	இவ்வணங்கினுக்கு	அழகையுடையளான இப்பெண்பிள்ளைக்கு
பயலைபூத்தன	வைவர்ண்யத்தையுற்		
பொரு	தம்மில்ஒன்றோடொன்றுபொராநின்றுள்ள [ன்ற	உற்ற	நேர்பட்ட
		நோய்	வ்யாதியை
கயல்	கயல்மத்ஸ்யம்போ	அறியேன்	அறிகிலேன்;
கண்	கண்களில் [யை	மின்	மின்னை
துயில்	நித்ரைகொள்ளுகை	குலாம்	கொண்டாடுகிற (வளையாநின்றுள்ள)
மறந்தாள்	மறந்துவிட்டாள்;		
உன்மேல்	உன்விஷயத்திலுண்டான	மருங்குல்	இடையானது
		சுருங்க	சுருங்கும்படியாக

(க) ஸ்ரீகுணரத்நகோசம் .

மேல்	மேலே [பொருந்தி	என்னும்சொல் யாதாய்முடியும்;
நெருங்கி	ஒன்றோடொன்று	இடவெந்தையெந்தைபிரானே!
வீங்கிய	வளராநின்றுள்ள	குறிப்பில் திருவுள்ளத்திலே,
வனம்	அழகிய [க்கு	என்நினைந்திருந்தாய், சொல்லு. (௯)
முலையாளுக்கு	முலைகளையுடையவளு	

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பொன்குலாமித்யாதி) பொன்னை, குலாவா நின்றுள்ள - கொண்டாடாநின்றுள்ள, வைவர்ண்யத்தை பஜித்தன விரஹஸஹமல்லாததோள். (பொருகயலித்யாதி) †பொரா நின்றுள்ள கயல்போலேமுக்த்தமாயிருந்துள்ள கண்ணில்நித்ராதத்வ மடியேபிடித்து வ்யுத்பத்திபண்ணவேண்டும்படியாக வாஸனையோடே மறந்தாள். (அன்பினலித்யாதி) ஸங்கமடியாக உம்முடைய பக்கல் பிறந்த காமமானது அறப்பெரிது. (இவ்வணங்கினுக்கு) †பிறர்க்கிப்படி தன்பக்கலிலே ஆதரம்பிறக்கும்படி அழகையுடைய விலக்ஷணையான இவளுக்கு.(உற்றநோயறியேன்) இவளுக்கு †முருடு †கொளுந்தும்படி பிறந்தநோய் இன்னதென்றறிகிறிலேன். பயலே பூத்தாள், கண்டுயில்மறந்தாள், அன்பினுலுன்மேலாதரம்பெரிது, என்று நோவுஞ்சொல்லி நோவுக்கு †நிதானமும் சொல்லாநிற்க, அறியேன் என்கிறது - இவ்விஷயந்தன்னில் நிதானவிசேஷத்தைப்பற்ற. அதாகிறது - முறுவலிலேயோ? நோக்கிலேயோ? வடிவிலேயோ? சீலத்திலேயோ? அகப்பட்டதுவிசேஷ மறிகிறிலேன்.

(மின்குலாமித்யாதி) மின்போலே வளையாநின்றுள்ள இடையானது சுருங்கும்படியாக மேலேநெருங்கி வளராநின்றுள்ள.†முன்பே "இற்றது, முறிந்தது" என்னும்படியாயிற்று இடையிருப்பது; அதுக்குமேலே ஆஶ்ரயத்தைப் பாராதே நெருங்கி வளராநின்றுள்ள †அழகிய முலையையுடைய இவளுக்கு. (என்கொலாம்) தான்கைவிட்டமைதோற்றச் சொல்லுகிற வார்த்தை. இவளுக்கெவ்வளவாய்த் தலைக்கட்டக்கடவதோ?(குறிப்பித்யாதி) தாய்கைவிடுதல், †தான் கைவிடுதல் செய்தால் அதைக்கொண்டு நோக்குகைக்கிடாகத் திருவிடவெந்தையிலே வந்திருக்கிற நீர் உம்முடைய திருவுள்ளத்தால் நினைத்திருக்கிறதென்? வாலிபக்கலிலே கண்டோமிறே ப்ராதாக்களுதவாதபடி; ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே கண்டோமிறே தமப்பனுதவாதபடி; தான் தன்னை அநுஸந்தித்தஞ்சின அர்ஜுநனுக்கு (க) "மாமேகம்சரணம்வ்ரஜ - மாமேகம்சரணம்வ்ரஜ" என்னக்கண்டோமிறே அவனுதவும்படி. ... ... (௯)

(க) கீதை - ௧அ - ௬௬ -

அரு.—ஒன்பதாம்பாட்டு. (பொன்னித்யாதி) "நான் ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைச்செய்ததும், திருமாலிருஞ்சோலை, திருப்பட்குழி, திருநீர்மலை, திருவிடவெந்தை, இவற்றிலே முகங்கொடுத்துக்கொண்டிருந்தது மிவளுக்காகவன்றோ? இங்ஙனேயிருக்கச்செய்தேயும் இப்படி வாய்வெருவிக்கொண்டு விரஹக்லேசம் தலையெடுக்கைக்கு நிதாநமேது? அத்தைச்சொல்லில் அதுசெய்கிறோம்" என்று எம்பெருமானுக்குக் கருத்தாக; அவளிப்படி விவர்ணையாகுள், எதிலே ஈடுபட்டாளோ எனக்குத் தெரிகிறதில்லை, நீரே திருவுள்ளத்தில் விசாரித்துத் தீர்த்தருளவேணுமென்று தான் கைவிட்டுநிற்கிறாள் திருத்தாயாரென்கிறுரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

(பொராநின்றுள்ள கயல்போலே) என்றது - யுத்தோந்முகமான இரண்டுமத்ஸ்யங்கள் ஒன்றுக்கொன்று நேரேயிருக்குமாபோலே யிருக்கிற ஸந்நிவேச ஸௌந்தர்யத்தைப்பற்ற. "அணங்கு" தெய்வப்பெண் என்ற சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பிறர்க்கித்யாதி). (பிறர்க்கு) நாயகனுக்கு. "உற்ற" என்றதுக்குத் தாத்பர்யம் (முருடித்யாதி). (முருடு) காடிந்யம். (கொளுந்தும்படி) ப்ராபிக்கும்படி. துஷ்பரிஹாரமான நோயென்றபடி. (நிதாநம்) என்றது - அவனிடத்திலன்பை.

முலையானபோதே இடைக்கு மேலேயாயிருக்க, "மேல்நெருங்கி" என்ன வேணுமோவென்ன வருளிச்செய்கிறார் (முன்பேயித்யாதி). "வனம்" என்றதினர்த்தம் (அழகிய) என்றது. (தான்கைவிடுதல்) ஸ்வயத்நம்விடுதல். (௯)

மூ.—அன்னமு மீனு மாமையு மரியு
மாய வெம்மாயனே யருளாய்
என்னுமின் தொண்டர்க் கின்னருள் புரியு
மிடவெந்தை யெந்தைபிரானை
மன்னு மா மாட மங்கையர் தலைவன்
மானவேல் கலியன் வா யொலிகள்
பன்னிய பனுவல் பாடுவார் நாளும்
பழவினை பற்றறுப்பாரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

—oo✻oo—

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்னமும்	ஹம்ஸாவதாரமும்	எம்மாயனே	ஆஶ்சர்யசக்தியுக்தனான என்னுடையஸ்வாமீ!
மீனும்	மத்ஸ்யாவதாரமும்		
ஆமையும்	கூர்மாவதாரமும்		
அரியுமாய	ந்ருஸிம்ஹாவதாரமும்செய்தருளின	அருளாய்	க்ருபைசெய்தருளவேணும்

என்னும்	என்றுப்ரார்த்திக்கிற	வேல்	வேலேத்தரித்த
இன்	விலக்ஷணரான	கலியன்	ஆழ்வாருடைய
தொண்டர்க்கு	தாஸபூதருக்கு	வாய்	திருப்பவளத்திலுண்டாய்
இன் அருள்புரியும்	பரமக்ருபைசெய்தருளுமவனை	ஒலி	ப்ரஸித்தமாம்படி
இடவெந்தை யெந்தைபிரானை	திருவிடவெந்தையில் நித்யவாஸம் பண்ணுகிற நித்யகல்யாணன்விஷயமாக,	பன்னிய	விஸ்தரித்தருளிச்செய்த
		பனுவல்	பாட்டுக்களை
		பாடுவார்	ப்ரீதிப்ரேரிதராய் அப்யஸிக்கவல்லவர்கள்
மன்னும்	(ப்ரளயத்திலுமழியாதபடி) நித்யமாய்	நாளும்	எந்நாளும்
மா	பெரிய	பழவினை	தங்களுடையபூர்வகர்மங்களினுடைய
மாடம்	மாடங்களையுடைத்தான		
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு	பற்று	ஸம்பந்தத்தை
		அறுப்பார்	ஸவாஸநமாகப்போக்கப்பெறுவர்கள்.
தலைவன்	நிர்வாஹகராய்		
மானம்	அகன்றஇலையையுடைத்தான		

வ்யா.—பத்தாம்பாட்டு. (அன்னமுமித்யாதி) † அறிவுகுடிபோய் நோவுபட தமக்கறிவு கொடுத்த அவதாரங்களை நினைக்கிறார். (இன் தொண்டர்க் கின்னருள்புரியும்) † இப்படிப்பட்ட ருசியுடையராய், அவதாரங்களுக்குப் பிற்பட்டவர்களுடைய இழவு தீர்க்கைக்காகத் திருவிடவெந்தையிலே வந்து நிற்கிற † உபகாரகனையாயிற்றுக் கவி பாடிற்று. மன்னுமாமாடமங்கையர் தலைவனாயிற்றுக் கவிபாடினார்; ப்ரளயத்துக்குங்கூட அழியாதமாடங்களையுடைய திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வார். (மானவேற்கலியன்) † வேலைப்பிடித்தவர்களுக்குத் தம்மோடொக்க ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயை யுண்டாக்கும் வேலென்னுதல்; † இலை அகலிய வேலென்னுதல். ஆழ்வார் ஒலியையுடைத்தாகச் செய்தவை. (பன்னியபனுவல்) † லக்ஷணங்களிலொன்றும் குறையாதபடி விஸ்த்ருதமாகப்பாடின இப்பத்தையும் அப்யஸிக்கவல்லவர்கள். (நாளும்பழவினை பற்றறுப்பாரே) ப்ராக்தநகர்மங்களை வாஸநையோடே போக்கப் பெறுவர்கள். தாம் மோஹிப்பது உணர்வதாகத் திருத்தாயார் கூப்பிடுவதாக வேண்டாதபடி பகவதநுபவமே யாத்ரையான தேசத்திலே புக்கு அநுபவிக்கப் பெறுவர்கள். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (அன்னமுமித்யாதி) இப்போது வேறுசில அவதாரங்களை யருளிச்செய்யலாகாதோவென்ன, கருத்தருளிச்செய்கிறார் (அறிவித்யாதி). "அன்னமும் மீனுமாமையுமரியுமாய வெம்மாயனே யருளாய்" என்னும் தம்மைப்போலேயிருக்கிற இனியதொண்டர்க்கினிதான அருளைக்கொடுக்குமென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படியித்யாதி). (இப்படிப்பட்டருசியுடையராய்) என்றது-தம்மைப்போலே ருசியுடையராயென்றபடி. "எந்தைபிரானை - உள்ளீடாகச்சொன்ன" என்றுகூட்டி ஆழ்வார் விசேஷணமாகத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (உபகாரகனையாயிற்றுக் கவிபாடிற்று) என்று. "மானம்" என்று "தாஸோஹம்" என்கிற வைஷ்ணவாபிமாநமாய் அத்தைக்கொடுக்குமவராய், வேலையுடைய கலியனென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (வேலையித்யாதி). "மானம்" என்று அளவாய், அர்த்தாந்தரம் (இலையித்யாதி). "பன்னிய" - விஸ்தரிக்கப்பட்ட, "பனுவல்" ஸ்ரீஸூக்தியென்று சப்தார்த்தமாயருளிச்செய்கிறார் (லக்ஷணங்களித்யாதி). ... ... (க0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்தில் ஏழாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி - உ - ம் பத்து - அ - ம் திருமொழி - திரிபுரம் ப்ரவேசம்.

—oo☙oo—

வ்யா.—(க)†"ஹ்ரீரேஷாஹிமமாதுலா - ஹ்ரீரேஷாஹிமமாதுலா" என்னவும் மாட்டாதே நிற்கிற விடமிறே †இவ்விடம்; †அவனப்படி பிரானுகில் ஆஸ்ரயணீயனுக†மாட்டானே.

†தான் †யுக்தாயுக்தங்களறியாதே†நிற்பது இருப்பது விழுவது எழுவதாய்க்கொண்டு மோஹித்துக்கொண்டு கிடந்த தசையை யநுஸந்தித்த திருத்தாயார் அவன்படிகளைச் சொல்லிக்கூப்பிடக் கேட்டும், தான்வாய்வெருவியும், அவ்வழியாலே அல்பம் தெளிவு பிறந்தது; அவன் குணங்கள் நெஞ்சிலே ஊற்றிருந்தது. அறிவு கலங்குமாபத்திலே வந்து உதவும் ஸ்வபாவனென்று அவன்படிகளை யநுஸந்திந்து ஆஶ்வஸ்தையாய், பின்பு திருவட்டபுயகரத்துநாயனுரை அநுஸந்தித்து அவரையே பாவித்து, அந்த பாவநாப்ரகர்ஷத்தாலே, †ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாய் †உருவுவெளிப்பாடு போலேயாய் அவர்க்குச் சிலவார்த்தைகள் தான் சொல்லுகிருளாகவும், அவரதுக்குச் சிலமறுமாற்றங்கள் சொல்லுகிறாாகவும் சிலவற்றைச் சொல்ல; இதைக்கேட்ட பந்துவர்க்கமெல்லாம் "நீ ப்ரமித்தாயோ? சொல்லுகிறதென்னென்பது" என்ன; திருவட்ட புயகரத்து நாயனுரை நானிங்ஙனே சிலவார்த்தைகளைக் கேட்டேன், அவரெனக்குச் சில மறுமாற்றங்களருளிச் செய்தாரென்று, அவ்வார்த்தையைத் தாய்மார் தோழிமார்க்குச் சொல்லுகிருளாய்ச் செல்லுகிறது.

அந.—திரிபுரம் ப்ரவேசம்.—(உ) * திவளும் வெண்மதியிலே நாயகி பட்ட அவஸாதாதிசயத்தைக்கண்டு, ஸர்வேஶ்வரன் திருவட்டபுயகரத்தே முந்துறவே தான் ஆஶ்ரிதார்த்தமாகவிருக்கும் நிலையைக்காட்டக்கண்டு, தனக்கவனேடேபிறந்த உக்திப்ரத்யுக்திபர்யந்தமான அநுபவத்தை யநுபவிக்கிறுரென்று ஸங்க்ரஹஸங்கதி கூட்டிக்கொள்வது.

முந்துறவே ஆஶ்ரிதார்த்தமாக இருக்கவேணுமோ, ஆபத்துக்களிலே தோற்றியுதவி, பிற்பாட்டுக்கு "ஹ்ரீரேஷா" என்னுமாபோலே வினவலாகாதோவென்ன வருளிச்செய்கிறுர் (ஹ்ரீரேஷேத்யாதி). பிற்பாடனுகையும்

(க) ரா - ஆர -

(உ) உ - எ -

வினவுகையும் அவத்யமென்னும்நினைவாலே அதுசெய்யமாட்டாதே முந்தற வந்துநின்ருனென்று கருத்து. (இவ்விடம்) என்றது-திருவட்டபுயகரம். இப்படி அவன் முற்பாடனுயிருக்கவேண்டுவானென்னென்ன வருளிச்செய்கிருர் (அவனித்யாதி).

கீழ்த்திருமொழியில் மோஹித்துக்கிடந்த பெண்பிள்ளை இத்திருமொழியில் தெளிந்து உக்திப்ரத்யுக்திரூபேண அநுபவிக்கக்கூடுமோவென்னும் சங்கையைப்பரிஹரியாநின்றுகொண்டு விஸ்தரஸங்கதியருளிச்செய்கிருர், (தான் யுக்தேத்யாதி). (யுக்தாயுக்தங்கள்) என்றது - ஸ்ரீபூமிப்பிராட்டியிடத்தில் வ்யாமுக்தனுய் இடவெந்தையிலிருக்குமவன் நமக்குமிடங்கொடுப்பனென்றுறியிருக்கை யுக்தம். இப்படி தடிக்கை அயுக்தமென்றபடி. யத்வா - கீழ்த்திருமொழியில் மோஹித்துக்கிடந்த பெண்பிள்ளை இத்திருமொழியில் கிடந்து அநுபவிக்கைக்கு ஸங்கதியருளிச்செய்கிருர் (ஹ்ரீரித்யாதி). “உன்மனத்தால் என்நினைந்திருந்தாய்?” என்று கேட்ட திருத்தாயார்க்கு மறுமாற்றமும் சொல்லமாட்டாதே நாணியிருந்து அத்தாலே ஸர்வஸமாஶ்ரயணீயனுய் இடவெந்தை பிரானிருக்க இவளாறியிராதே இப்படிபடுவதே என்று திருத்தாயார் அநுஸந்தித்தாளாய், அவன்படிகள் சொல்லக்கேட்டுத் தெளிவுபிறந்ததென்று கருத்து. (மாட்டானே) என்றவநந்தரம், ஆகையாலே என்று சேஷம். அவன்படியிதுவாகையாலே ஆறியிருக்கையுக்தம், இப்படிபடுகை அயுக்தமென்று ஹேதுவாக்கிக்கொள்வது. “இன்புறும் - மயங்கும்” என்று மோஹம்மாத்ரம்சொல்லிற்றேயாகிலும், (க) * கங்குலும்பகலில், (உ) “எழுந்துலாமயங்கும்” என்று திருத்தாயார்சொன்ன மயக்கமே யிங்குமாகையால், அங்குச்சொன்ன ஸ்த்திதிகதிசயநாதிகள் இங்கும் விவக்ஷிதமென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிருர் (நிற்பதிருப்பது விழுவதெழுவதாய்) என்று. (ப்ரத்யக்ஷஸமாநாகாரமாய்) என்றது - மாநஸப்ரத்யக்ஷஸமாநாகாரமாயென்றபடி. (உருவு வெளிப்பாடுபோலேயாய்) என்றது - சாக்ஷுஷப்ரத்யக்ஷம்போலேயுமாயென்றபடி. ... ... *

மூ.—திரிபுர மூன்றெரித்தானும்
மற்றைமலர்மிசை மேலயனும்வியப்ப
முரிதிரை மா கடல்போல் முழங்கி
மூவுலகும் முறையால் வணங்க
எரியன கேசரிவாளெயிற்றொ
டிரணியனுக மிரண்டுகூறு
அரியுருவா மிவரார்கொலென்ன
வட்டபுயகரத்தே னென்றுரே. (க)

(க) தி-வாய்-எ-உ. (உ) தி-வாய்-எ-உ-ச.

பதம்.	உரை.	பதம்.	உரை.
திரி	(ஆகாசத்திலே)ஸஞ்சரிக்கிற [யும்	முறையால்	ப்ராப்தமானபடியே
மூன்றுபுரம்	மூன்றுபடைவீட்டை	வணங்க	காலிலேவிழவும்
எரித்தானும்	தஹித்தருத்ரனும்	இரணியன்	ஹிரண்யனுடைய
மற்றை	இன்னும்	ஆகம்	சரீரமானது [யாக
மேல்	விலக்ஷணனாய்	இரண்டுகூறு	இரண்டுகூறும்படி
மலர்மிசைஅயனும்	திருநாபிகமலத்திற் பிறந்த ப்ரஹ்மாவும்	எரிஅ(ன்)ன	நெருப்புப்போன்ற
		கேசரி	உளைமயிரையும்
		வாள்	ஒளியையுடைத்தான
வியப்ப	விஸ்மயப்படவும்	எயிற்றோடு	எயிற்றையுமுடைய
மூரி	உலாவாநின்றுள்ள	அரியுருவாம்	நரஸிம்ஹரூபியான
திரை	அலைகளையுடைய	இவர்ஆர்கொல்? என்ன	இவரார்? என்று கேட்க
மா	பெரிய		
கடல்போல்	கடல்போலே	அட்டபுயகரத்தேன்	நான் திருவட்டபுயகரத்துநாயனார்
முழங்கி	இரைத்துக்கொண்டு		
மூவுலகும்	மூன்றுலோகத்திலுள்ளாரும்	என்றார்	என்றருளிச்செய்தார்.

வ்யா.—முதற்பாட்டு. (திரிபுரமித்யாதி) †அவர்வந்து †தோற்றினபோதிருந்தபடி.

† (திரிபுரமூன்றெரித்தானும்) திரிபுரம் - ஸஞ்சரிக்கிறபுரம்; அதாவது - ஆகாசத்திலே † ஸஞ்சரிப்பனவுமாய், ஒரோவிடங்களிலே போயிருந்தவாறே கீழ்ப்பட்டதடைய நசிக்கக்கடவதாயிருப்பது மூன்று படைவீடுண்டிறே; அப்படியாகவுமாம். அன்றிக்கே, த்ரிபுரம் என்று (க) † “𑌪𑌞𑍍𑌚𑌪𑌞𑍍𑌚𑌜𑌨𑌾𑌃 - பஞ்சபஞ்சஜநா:” (உ) †“𑌸𑌪𑍍𑌤𑌸𑌪𑍍𑌤𑌰𑍍𑌷𑌯𑌃 - ஸப்தஸப்தர்ஷய:” என்று தனித்தனியே நாமதேயமாகவுமாம். த்ரிபுரதஹநத்தாலே ஸஞ்ஜாத வீரனான ருத்ரனும். (மற்றையித்யாதி)†ஸம்ஹாரத்துக்கு இவன் கடவனானால்தான்†ஸ்ருஷ்டிக்கக் கடவனாய், †இவனுக்கும் ஜநகனாய், திருநாபீகமலத்திலே அவ்யவதாநேந பிறந்து இதர விஸஜாதீயமான ஜந்மத்தையுடையனாகையாலே அஜனென்று சொல்லப்படுகிற ப்ரஹ்மாவும். (வியப்ப) †தாந்தாம் சில அத்புதகர்மங்களைப் பண்ணிப் பிறர் விஸ்மயப்படவிருக்கிற தாங்கள், கொக்குக்கடலைக் கண்டாற்போலே விஸ்மயப்பட.

(மூரியித்யாதி) ப்ரஹ்மாதிகளை யொழிந்தாரடைய, - உலாவாநின்றுள்ள திரைகளையுடைய பெருங்கடல்போலே கோஷித்துக்கொண்டு. (மூவுலகும் - வணங்க) “𑌮𑌞𑍍𑌚𑌾𑌃𑌕𑍍𑌰𑍋𑌶𑌨𑍍𑌤𑌿 - மஞ்சா:க்ரோ

(க) ப்ருஹதா - (உ)

சந்தி" போலே. (முறையால்) ஹிரண்யனுடைய அநீதியாலே முறை கெட்டு அவன்காலிலே விழுந்து திரிந்தவர்கள், அவன் பட்டுப் போகையாலே †அவன் சேஷியான ஸ்வபாவத்திலே வணங்கவென்னுதல்; பர்யாயேண வென்னுதல்.

(எரியித்யாதி) அக்நிகல்பமான உளைமயிரையும், ஒளியையுடைத்தான எயிற்றையு முடையனாய், †சிலபதார்த்தங்களினுடைய தோற்றரவிலே ஸஹஜசாத்ரவத்தாலே முடிந்துபோம் பதார்த்தங்கள்போலே, ஹிரண்யனுடைய சரீரமானது இரண்டு கூறும்படியான நரஸிம்ஹமான. (இவரார்கொலென்ன) ஒரு சிறுக்கனுக்குத் தமப்பன்பகையாக, அவனிலும் அண்ணியனாய் உதவி நோக்கினவனைப்போலே யிராநின்றார்; இவரார்தானென்கிறாள். †அடையாளம் சொல்லாநிற்கச்செய்தே நிஶ்சயிக்கவொண்ணாதபடியிறே விஷயஸ்வபாவம். (அட்டபுயகரத்தேனென்றாரே) † ஒரு சிறுக்கனுக்காகவந்துதவின அவ்வளவோ? உனக்கு உதவுகைக்காக இங்கேவந்து அவஸரப்ரதீக்ஷனாய் வந்து நிற்கிறவனன்றோ? நானென்கிறார். ... (க)

அரு.—முதற்பாட்டு. (திரிபுரமித்யாதி) இவளுக்கு அரியுருவாயவன் தோற்றினதுவும், அப்போது ப்ரஹ்மாதிகள் கொண்டாடினதுவுமோ இங்குச்சொல்லுகிறதென்ன வருளிச்செய்கிறார் (அவர்வந்தித்யாதி). (தோற்றினபோது) என்றது - தூணிலேவந்துதோன்றினபோதென்றபடி.

மேலே த்ரிபுரதஹநத்தாலே என்று வாக்யார்த்தமருளிச்செய்வதாக ப்ரதீகம் (திரிபுரமூன்றெரித்தானும்) என்றது. "திரிபுரம்" என்றும் "மூன்று" என்றும் புநருக்தமன்றோவென்னும் சங்கையிலே, இரண்டுவிதமாக வருளிச்செய்கிறார் (ஸஞ்சரிக்கிறவித்யாதி). த்ரிபுரமென்று - திரிபுரமென்றுசொன்னது. (பஞ்சபஞ்சஜநா꞉) என்றது, "యస్మిన్ పఞ్చపఞ్చజనాః ఆకాశశ్చ ప్రతిష్ఠితః - யஸ்மிந்பஞ்ச பஞ்சஜநா ஆகாசஶ்சப்ரதிஷ்ட்டித꞉" என்ற வாஜஸநேயிசாகா வாக்யத்திலோதப்பட்டது. பஞ்சஜநசப்தம், (க)"ప్రాణస్య ప్రాణః ఉత చక్షుషశ్చక్షుః శ్రోత్రస్య శ్రోత్రమన్నస్యాన్నం మనసో మనో యే విదుః - ப்ராணஸ்யப்ராண உதசக்ஷுஷஶ்சக்ஷு꞉ | ஶ்ரோத்ரஸ்யஶ்ரோத்ரம் அந்நஸ்யாந்நம் மநஸோ மந்வியேவிது꞉" என்ற வாக்யசேஷத்திற்சொல்லப்பட்ட ப்ராணசக்ஷுஶ்ஶ்ரோத்ராந்நமநஸ்ஸுக்கள் அஞ்சுக்கும்பேராக ஸ்ரீபாஷ்யத்தில் நிர்வஹிக்கப்பட்டது. (ஸப்தர்ஷய꞉ என்று) "ஸப்தர்ஷய꞉" என்றாற்போலே. "மற்றை - மேல் மலர்மிசை அயனும்" என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (ஸம்ஹாரத்துக்கித்யாதி). "மற்றை" விலக்ஷணனென்று

(க) ப்ருஹதார-

சப்தார்த்தமாய், அதுதானும் ருத்ரனுக்கில்லாத வைலக்ஷண்யமென்கிறார் ஸ்ருஷ்டிக்கக்கடவனாய்) என்று. "மேல்" என்று - மேலான அஜனென்றாய், அத்தையருளிச்செய்கிறார் (இவனுக்கும் ஜநகனாய்) என்று. சிவனும் பிரமனும் வியப்ப என்னாதே, அவர்களுக்கு விசேஷணமிட்டுக்கொண்டு "வியப்ப" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (தாந்தாமித்யாதி).

"முரி" என்றதினர்த்தம் (உலாவாநின்றுள்ள) என்றது. (அவன்சேஷியான) என்றது - ஸர்வேஶ்வரன் சேஷியானவென்றபடி.

ஸிம்ஹத்தைக்கனாவிலேகண்ட ஆனை முடியுமாபோலேயென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (சிலபதார்த்தங்களித்யாதி). "ஆர்கொல்" என்று ஸம்சயிக்கிறாளாகையன்றிக்கே, ஈடுபடுகிறாளாக வ்யாக்யாநம்செய்ததுக்கு நியாமகமருளிச்செய்கிறார் (அடையாளமித்யாதி). இயத்தயா நிஶ்சயிக்க வொண்ணாதபடியான ஸ்வபாவத்தை யநுஸந்தித்து ஈடுபட்டு, "ஆர்கொல்?" என்கிறாளென்று கருத்து. சிறக்கனுக்குதவினமையிலே ஈடுபட்டிருக்குமிவள் தனக்குச் சடக்கென உதவினமைசொல்லாதே, "இவர்" என்று படர்க்கையாகச்சொன்னதுக்கு ப்ரத்யுத்தரமாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒரு சிறுக்கனுக்கித்யாதி). ... ... (௧)

௨—வெந்திறல் வீரரில் வீரரொப்பார்
வேதமுரைத் திமையோர் வணங்கும்
செந்தமிழ் பாடுவார்தாம் வணங்கும்
தேவரிவர் கொல் தெரிக்க மாட்டேன்
வந்து குறளுருவாய் நிமிர்ந்து
மாவலி வேள்வியில் மண்ணளந்த
அந்தணர்போன் றிவரார்கொ லென்ன
வட்டபுயகரத்தே னென்றாரே. (உ)

பதம்.	உரை.
இமையோர்	ப்ரஹ்மாதிகள்
வேதம் உரைத்து	வேதாத்யயநம்பண்ணிக்கொண்டுவந்து
வணங்கும்	ஆஶ்ரயிக்குமவராய்
வெம்திறல்	வெவ்வியமிடுக்கையுடைய
வீரரில்	சூரர்கள் ஈடுபடும்படியான
வீரர்ஒப்பார்	ஆண்பிள்ளைத்தனத்தையுடைய சக்ரவர்த்தித் திருமகனைப்போலே மேன்மையையுடையராய்
செம்தமிழ் பாடுவார்தாம் வணங்கும்	அழகியதமிழை [ள் பாடும்முதலாழ்வார்க ஆஶ்ரயிக்கிற

தேவர்	திருவேங்கடமுடையானைப்போலே சீலத்தையுடையராயிராநின்றார்;	குறளுருவாய் வந்து	வாமநவேஷத்தைக் கொண்டுவந்து (திருக்கையில்நீர்விழுந்தவாறே)
இவர்கொல்	இவர்இன்னாரென்று	நிமிர்ந்து	வளர்ந்து
தெரிக்கமாட்டேன்	அறிகிலேன்;	மண்	பூமியை
		அளந்த	அளந்துகொண்ட
மாவலி	மஹாபலியின்	அந்தணர்போன்ற	ப்ரஹ்மசாரியைப்போலேயுமிராநிற்கிற
வேள்வியில்	யஜ்ஞவாடத்திலே	இவர்ஆர்கொல்? என்ன அட்டபுயகரத்தேன் என்றார். (உ)	

வ்யா—இரண்டாம்பாட்டு. (வெந்திறலித்யாதி) வெவ்வியதிறலுண்டு- பராபிபவநஸாமர்த்யம்; அத்தையுடையரானவீரர்கள் தாங்கள் †மடலெடுக்கும்படியான ஆண்பிள்ளைத்தனமுடையவர் - சக்ரவர்த்தித்திருமகனார். (க) [𑌶𑌤𑍍𑌰𑍋𑌃-சத்ரோ:] †கெடுவாய்! என்னுடைய சத்ருவை ஆரென்று நினைத்துத் தேரை மீட்டுக்கொடு போந்தாய். [𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌾𑌤𑌵𑍀𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 - ப்ரக்யாதவீர்யஸ்ய]†எதிரிகளான நம் படைவீட்டிலும் ப்ரஸித்தமாயன்றோ அவருடைய ஆண்பிள்ளைத்தனமிருப்பது, நீ கேட்டறியாயோ? அது எறிப்பாயாதமேடில்லைகாண். [𑌰𑌞𑍍𑌜𑌨𑍀𑌯𑌸𑍍𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑍈𑌃- ரஞ்ஜநீயஸ்யவிக்ரமை:] கண்டுபராக்ரமிக்க வொண்ணாதபடி அளவற எதிரி†முடுகினால் அது நிலமாக்கிக்கொண்டு பராக்ரமிக்கும்படியைப் பார்த்தால், காந்தனைவிரும்புமாபோலே எதிரிகளுக்கு விரும்பவேண்டும் படிகாண் அவராண்பிள்ளைத் தனமிருப்பது. (வேதமித்யாதி) †ராவணவதஸமநந்தரம்ப்ரஹ்மாதிகள் நாராயணனுவாக ஸித்தமான பதங்களைக்கொண்டு ஸ்தோத்ரம் பண்ணும். (வெந்திறல் வீரரில் வீரரொப்பார்) இது மேன்மை யிருக்கும்படி.

(செந்தமிழித்யாதி) சீலத்தைப்பார்த்தால் அநுகூலரா யிருப்பாரெல்லாரும் ஏத்தும்படியிருப்பர். (உ) † "பெருகுமதவேழம்" என்கிறபடியே கலப்பற்ற பசுந்தமிழ்பாடும் முதலாழ்வார்கள். அவர்களுக் காஶ்ரயணீயனான திருவேங்கடமுடையானைப் போலேயுமிராநின்றார். (தெரிக்கமாட்டேன்) வீரத்தைப் பார்த்தவாறே சத்ருக்களுமேத்தும்படியா யிருந்தது, மேன்மையைப் பார்த்தவாறே ப்ரஹ்மாதிகளுமேத்தும்படியா யிருந்தது, சீலத்தைப் பார்த்தவாறே அநுகூலரடைய ஏத்தும்படியாயிருந்தது. இவரை இன்னாரென்று நிஶ்ச

(க) ரா-யு-௧௦௯-௯. (க) உ-திரு-௭௫.

யிக்கப்போகிறதில்லையீ. ஆக, மேன்மையும் தரைகாண வொண்ணு தாயிருந்தது. சீலமும் தரைகாணலாயிருந்ததில்லை.

(வந்தித்யாதி) மஹாபலி யஜ்ஞ வாடத்திலே வாமநவேஷத்தைக்கொண்டுவந்து திருக்கையிலே நீர்விழுந்தவாறே வளர்ந்து பூமியை அளந்துகொண்ட இந்த வேஷத்தையுடைய †ஸ்ரீவாமநனைப்போலேயுமிராநின்றார். † சுக்ராதிகள், "ஈஶ்வரன்கிடாய், உன்னைவஞ்சிக்க வருகிறான்'' என்னச்செய்தேயும் "விநீதவேஷத்தைக்கண்டுவைத்து எங்ஙனே கொடாதொழியும்படி" என்றானிறே. (இவரார்கொலென்ன வட்டபுயகரத்தே னென்றாரே) கழஞ்சுமண்ணிரந்துவந்தவனல்லேன், உன்னையிரந்து வந்தவன்நானென்கிறார். பிறர்க்காக இரந்தவனல்லேன், எனக்காக இரந்தவனென்கிறார். ... (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (வெந்திறலித்யாதி) கீழ்ப்பாட்டிலே, ஒரு சிறுக்கனுக்காக வந்தீரென்றதுக்கு ப்ரத்யுத்தரமாக, "உனக்குதவவேணும் என்றவஸரப்ரதீக்ஷனாயிருக்கிறேன்" என்னச்செய்தேயும், மெய்க்கொள்ளாதே அவருடைய மேன்மையையும் ஸௌசீல்யத்தையுங்கண்டு ஈடுபடாநின்றுகொண்டு, "நீர் பிறர்க்காக மண்ணாசையாலே வந்தீரித்தனை" என்ன, நான் எனக்காகப் பெண்ணாசையாலே வந்தேனென்கிறாரென்று ஸங்கதி.

(மடலெடுக்கும்படியான) ஈடுபடும்படியான. ஶ்லோகத்துக்குத் தொகுத்த தாத்பர்யம் (கெடுவாயித்யாதி). நம்மாலே ஜயிக்கத்தக்கவனென்றோ, நாலுபேர்க்கும், "ஜயித்துவந்தான்" என்று தோற்றும்படியோ நீமீட்டுக்கொண்டுவந்தாயென்று தாத்பர்யம். ப்ரோபஸர்க்கார்த்தம் (எதிரிகளித்யாதி). (முடுகினால்) மேலிட்டால், (க) "ഭവാന്നാരായണോ ദേവഃ - பவாந்நாராயணோ தேவஃ" என்றத்தையுட்கொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார் (ராவணேத்யாதி). "வேதம்" இத்யாதி - தேவர்க்கு விசேஷணமாக ஸ்வரஸமாக அந்வயிக்கச்செய்தேயும், வீரர்க்கு விசேஷணமாக இங்ஙனந்வயித்தது, (உ) "ஈசன் வானவர்க்கென்பனென்றால் அதுதேசமோ திருவேங்கடத்தானுக்கு" என்று தேஜஸ்கரமாகாமையாலேயென்று கண்டுகொள்வது.

(ந) "இருந்தமிழ்நன்மாலையிணையடிக்கே சொன்னேன் பெருந்தமிழனல்லேன் பெரிது" என்று சொன்னபாசுரத்தை "செந்தமிழ்பாடுவார்" என்றதுக்கு ப்ரமாணமாக எடுக்கவேண்டியிருக்க, "பெருகுமதவேழம்" என்று மேல்பாட்டையெடுத்தது-எம்பெருமான், "ஆழ்வீர்,! நீர்பெருந்தமிழனல்லேன் என்றீர், வல்லீராகில் ஒருகவிசொல்லிக்காணும்" என்ன; அவனு

(க) ரா - யு -ககக-கரு. (ந) உ - திரு - எச.
(உ) தி-வாய் - ரு - ரு - ச.

க்கும்படி இப்பாட்டைப்பாடி, மேல் நெஞ்சைப்பார்த்து, ஸ்வாநுபவம் பண்ணினாராகையாலே அவனுகந்தபாட்டே ப்ரமாணமாகவேணுமென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (டெருகித்யாதி).

(ஸ்ரீவாமநனைப்போலேயும்) என்கையாலே-மேன்மையும் சீலமும் தனை காணாதிருந்தாலும் அந்யார்த்தமாய் வந்தவரைப்போலேயிருக்கிறதென்கை ஸூசிதம். "போன்று" என்றது - போன்றவரென்று விவக்ஷித்து, அத்தால் பலித்தவிநீதவேஷத்தை யருளிச்செய்ததுக்கு ப்ரக்ருதோபயோகம்காட்டுகிறார் (சுக்ராதிகளித்யாதி). வேதாத்யயநாதிவிநீத வேஷத்தைக்காட்டி மாவலியை வாய்மாளப்பண்ணினானென்று கருத்து. ... ... (௨)

மூ.—செம்பொனிலங்கு வலங்கை வாளி
திண்சிலை தண்டொடு சங்கமொள்வாள்
உம்பரிருசுட ராழியோடு
கேடகமொண்மலர் பற்றியெற்றே
வெம்பு சினத்தடல் வேழம்வீழ
வெண்மருப்பொன்று பறித்திருண்ட
அம்புதம்போன்றிவரார்கொலென்ன
வட்டபுயகரத்தேனென்றாரே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வலங்கை	வலத்திருக்கையில்	ஒள்	அழகிய
இலங்கு	ப்ரகாசியாநின்றுள்ள	மலர்	புஷ்பத்தையும்
செம்பொன்	பசும்பொன்னால் செய்யப்பட்ட	பற்றி	தரித்துக்கொண்டு
		எற்றே!	என்னே!
வாளி	பாணங்களையும்	வெம்புசினம்	மிக்ககோபத்தையும்
திண்	த்ருடமான	அடல்	மிடுக்கையுமுடைய
சிலை	வில்லையும்	வேழம்	குவலயாபீடமென்னும்யானை
தண்டொடு	கதையையும் [யும்		
சங்கம்	ஸ்ரீபாஞ்சஜந்யத்தை	வீழ	முடியும்படி
ஒள்	விளங்காநின்றுள்ள	வெள்மருப்பு ஒன்று	வெளுத்ததந்தமொன்றினை
வாள்	திருக்குற்றுடைவாளையும்	பறித்து	முறித்து
உம்பர்	(ஆயுதங்களுக்கெல்லாம்) மேலாய் [ய	இருண்ட	ஜலஸம்ருத்தியாலே கறுத்திருந்துள்ள
இருசுடர்	மிக்ககாந்தியையுடை	அம்புதம்போன்ற	மேகம்போலேயிருக்கிற
ஆழியொடு	திருவாழியாழ்வானையும்	இவர் ஆர்கொல்என்ன;	அட்டபுயகரத்தேனென்றார். (௩)
கேடகம்	கடகையும்		

வ்யா.—மூன்றாம்பாட்டு. (செம்பொனித்யாதி)†எதிரிகள்மேலே சினத்தெழும்போதைக்கும் அபலைகளை வசீகரிக்கைக்கும் இவை

யிரண்டுக்கும் பரிகரமாயிற்று திவ்யாயுதங்கள். (செம்பொனிலங்கு வலங்கைவாளி) (க) †[𑌦𑍀𑌪𑍍𑌤𑌪𑌾𑌵𑌕𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑍈𑌃 - தீப்தபாவகஸங்காசை:] கையிலிருக்கும்போது இருக்குமாபோலன்றுகிடாய் விட்டாலிருக்கும்படி; எரித்துக்கொண்டாயிற்று வருவது. [𑌶𑌿𑌤𑍈𑌃 - சிதை:] அல்லாத அம்புகளோபாதியாக நினைத்திராதே, பட்டால் எரித்தல் பொறுக்கவொண்ணாதபடியாய்க்கிடாயிருப்பது. [𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌭𑍂𑌷𑌣𑍈𑌃 - காஞ்சநபூஷணை:] அநுகூலரான என்போல்வாரையும் தோற்பிக்குந் துறையுண்டுகிடாய். [𑌨𑌤𑍍𑌵𑌾𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑍍𑌯𑌹𑌂𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑍍 - நத்வாமிச்சாம்யஹம் த்ரஷ்டும்] † ஸௌப்ராத்ரம் பின்னாட்டுகையாலே சொல்லுகிறேன். [𑌰𑌾𑌮𑍇𑌣𑌨𑌿𑌹𑌤𑌂𑌶𑌰𑍈𑌃 - ராமேணநிஹதம்சரை:] † புக்குமுடிகைக்கும் விடாய் தீருகைக்குமுடலாயிருக்குமிறே மடு; அதுபோலேயிருக்கிற அவ்வழகை அநுபவிக்குமதொழிய அவ்வம்புக்கிலக்காய் நீமுடிந்து போக † நானிச்சிக்கிறிலேன்.

(செம்பொனித்யாதி) †வெறும்புறத்திலே ஆகர்ஷகமாயாயிற்று திருக்கைதானிருப்பது; அதுக்குமேலே பொற்பகழியையுடைய அம்புகளையுமுடைத்தாயாயிற்றிருப்பது. †ஸ்வத:ஸ்ப்ருஹணீயமுமாய்ப் † பிடியாலு மாகர்ஷகமாயாயிற்று அம்புகள்தானிருப்பது. (திண்சிலை) எதிரிகள்மேலே †நாலிரண்டுபண்ணேவலித்தாலும் §மெல்காத வில். (தண்டு) அப்படியிருக்கிறதண்டு. (சங்கம்) (ஒள்வாள்) பிடித்த பிடியாலே அழகிதாயிருக்கிறவாள். (உம்பரித்யாதி) ஆயுதங்களுக்கெல்லாம் ப்ரதாநமாயிருக்கையாலே மிக்கபுகழையுடைத்தாயிருக்கிற திருவாழியோடே. (கேடகம்) ‡கடகு. (ஒண்மலர்) காமனைப்போலே அபலைகளையழிக்கைக்கு உபகரணமானமலர். (எற்றே) என்னே!

(வெம்பித்யாதி) மிக்கசினத்தையுடைத்தாய் யுத்தோந்முகமாயிருக்கிற குவலயாபீடத்தை முடியும்படியாக, நிறத்துக்குப் பரபாகமான வெண்மையையுடைய கொம்பைப்பறித்து, இருண்டமேகம்போலே யிருக்கிற இவரார்தானென்ன; மேல்வார்த்தை (அட்டபுயகரத்தேன்) கம்ஸப்ரேரிதமான குவலயாபீடத்தை நிரஸித்து கம்ஸன்படைவீட்டில் பெண்கள் பயத்தைப்போக்கின அவ்வளவேயல்ல, உன்பயம் தீர்க்கைக்காகவந்து நிற்கிறவன்நானென்கிறார் (௫)

(க) ரா-யு-௧௬-௨௨. § மெல்காத-இளகாத. ‡ கடகு-ரக்ஷகம்.

அரு.—மூன்றும்பாட்டு. (செம்பொனித்யாதி). கீழ்ப்பாட்டில், எனக்காக நான்பெண்பித்தனுய்வந்தேன். பிறர்க்காக மண்ணுசையால் வந்தேனல்லேன் என்றுனிறே; அத்தை அங்கீகரித்து, "நீர் உமக்காகப் பெண்ணுசையாலேவந்தீராகிலும், ஸ்ரீமதுரையில் பெண்களிடத்தில் பித்தனுய் அவர்களுக்கு அச்சம் தீர்க்கவும் வசீகரிக்கைக்கும் பரிகரமான திவ்யாயுதச்சேர்த்தியோடு வந்தீராகவேணும்'' என்ன, அங்ஙனன்று, உன்பயம் தீர்க்கவந்தேனென்கிருரென்று ஸங்கதி.

இப்போது திவ்யாயுதங்களைச் சொன்னதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிருர் (எதிரிகளித்யாதி). திருச்சரங்கள் ப்ரதிகூலரை வெல்லுகைக்கும் அநுகூலரை வசீகரிக்கைக்கு முடலாயிருக்குமோவென்ன (தீப்தபாவகேத்யாதி). "ஸூஷி - த்வாம் - ப்ராதாவானவுன்னை'' என்றதின்கருத்தருளிச்செய்கிருர் (ஸௌப்ராத்ரமித்யாதி). இவன் துர்வ்ருத்தனுகையாலே ஸௌப்ராத்ரம் தமக்கற்றதென்று கருத்து. ராகவேண என்னுதே, "ராமேண'' என்று அவர் ஸௌந்தர்யம்சொன்னதுக்குக் கருத்தருளிச்செய்கிருர் (புக்கித்யாதி). (நான்) என்றது - ஸ்ரீவிபீஷணுழ்வானை. திருச்சரங்கள்போலே மற்றை ஆயுதங்களும் இங்ஙனிருக்குமென்று திருவுள்ளம்.

இலங்கு வலங்கையில் செம்பொனுடைத்தான வாளியென்று சப்தார்த்தமாயருளிச்செய்கிருர் (வெறும்புறத்திலேயித்யாதி வாக்யத்வயத்தாலே). செம்பொன்போலேயுமாய், இலங்காநின்றுள்ள வாளியென்று அர்த்தாந்தரமருளிச்செய்கிருர் (ஸ்வதஇத்யாதி). (பிடி) கைப்பிடி, (நாலிரண்டு பண்ணை) நாலிரண்டு ப்ரகாரம். இது உபலக்ஷணம். எத்தனைவட்டமிழுத்தாலுமென்றபடி. ... ... (ங)

மூ.—மஞ்சுயர் மாமணிக் குன்றமேந்தி
மாமழை காத்தொரு மாயவானை
அஞ்ச வதன் மருப்பொன்றுவாங்கு
மாயர்கொல் மாயமறியமாட்டேன்
வெஞ்சுடராழியும் சங்குமேந்தி
வேதமுனோதுவர் நீதிவானத்
தஞ்சுடர்போன்றிவரார்கொலென்ன
வட்டபுய கரத்தேனென்றுரே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஞ்சு	மேகமண்டலத்தளவும்	ஏந்தி	தூக்கி
உயர்	உயர்ந்த	மாமழை	பெருமழையை
மாமணி	ஶ்லாக்யமான ரத்நங்களையுடைத்தான	காத்து	தடுத்து,
		ஒரு	ஒப்பற்ற
குன்றம்	கோவர்த்தநகிரியை.	மாயம்	ஆஶ்சர்யமான

ஆனை	குவலயாபீடம்	சங்கும்	ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்
அஞ்ச	நடுங்க	ஏந்தி	தரித்து;
அதன்மருப்பு ஒன்று	அதின் தந்தமொன்றினை	வேதம்முன்	வேதம்போலே
வாங்கும்	பறிக்கும்	ஓதுவர்	வார்த்தைசொல்லாநின்றார்;
ஆயர்கொல்	க்ருஷ்ணனோ!	நீதி	முறைதப்பாத
மாயம்	ஆஶ்சர்யமானசெயல்களை	வானத்து	பரமபதத்திலே நித்யவாஸம்பண்ணுகிற
அறியமாட்டேன்	அறிகிலேன்;	அஞ்சுடர்போன்ற	பரஞ்சோதிபோலேயிராநின்றுள்ள
வெம்சுடர்	உக்ரதேஜஸ்ஸையுடைய		
ஆழியும்	திருவாழியாழ்வானையும்		

இவர் ஆர்கொல்என்ன; அட்டபுயகரத்தேனென்றாரே. (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (மஞ்சுயரித்யாதி) † க்ருஷ்ணாவதாரம் பின்னாட்டுகிறபடி.

† மேகபதத்தளவும் செல்ல ஓங்கி ரத்நங்களையுடைத்தாயிருக்கிற கோவர்த்தநகிரியைத்தரித்து. (க) † [கடுவாய்ச்சின வெங்கண் களிற்றினுக்குக் கவளமெடுத்துக்கொடுப்பானவன்போல்] மத்தகஜங்கள்போலேயாயிற்று மேகங்கள்; அவற்றுக்குக் கவளங்கொடுப்பாரைப்போலேயாயிற்று மலையையெடுத்துக்கொடு நின்றபோதிருந்தபடி. (மாமழைகாத்து) விநாசத்தைப்பண்ணுவதாய், பரிஹரிக்கவரிதான மழையைப்பரிஹரித்து. (ஒருமாயவானை) அகப்படிலுமகப்பட்டுத் தப்பிலும்தப்பலாம்படி யிருக்கும் கேவலமானையன்றிக்கே, புத்திபூர்வகமாக நலியவேணுமென்று நிறுத்தினதாயிற்று. (அஞ்ச) இதுக்குமுன் பயம் வ்யுத்பத்திபண்ணியறியாதது பயப்பட. (அதன் மருப்பொன்றுவாங்கும்) அதினுடைய கொம்பைக் குப்பைக்கீரை பிடுங்குமாபோலே அநாயாஸேந வாங்கும். (ஆயர்கொல்) § ஆனைவாசியறியாமையாலே † பலித்துக்கொண்டுநின்றதித்தனை. (மாயமறியமாட்டேன்) அவனுடைய ஆஶ்சர்யமான செயல்கள் எனக்கொன்றும் தெரிகிறதில்லை.

(வெஞ்சுடராழியும்சங்குமேந்தி) திவ்யாயுதங்களைத்தரித்து. (வேதமுனோதுவர்) அருளிச்செய்கிறவார்த்தை யடைய வேதம் போலே யிராநின்றது. (நீதிவானத்து) முறைகெடாதபடி பரிமாறக்கடவ பரமபதத்திலே. (அஞ்சுடர்போன்று)(௨) †“அத யததஃபரோதிவோஜ்யோதிர்தீப்யதே”; (அட்ட

(க) பெரி-திரு-ரு-கு-௪. (௨) சாந்தோ-

§ இடையனாகையாலே ஆனைவாசியறியான்.

புயகரத்தேன்) அத்தனை தூரஸ்த்தனென்று கைவாங்கவேண்டா, உனக்காகக் கிட்டவந்திருக்கிறவன் காணென்றார்.... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (மஞ்சுயரித்யாதி) கீழ்ப்பாட்டில் ஸ்ரீமதுரைப் பெண்களுக்காகவன்று, உனக்காகவந்தேன் என்னச்செய்தேயும், (க) "கரு மலர்க் கூந்தலொருத்திதன்னை" என்கிறபாட்டில் சொல்லுகிறபடியே ஒரு வர்க்கும் மெய்யனல்லனென்றெண்ணி அவர்வார்த்தை மெய்கொள்ளாதே, இடைச்சிகளுக்காக மலையெடுத்தும், மதுரைப்பெண்களுக்காக யானைகொன் றும், தன்னுடைச்சோதியில் விருப்பத்துடனிருந்தும், எனக்காகவிருக்கிறே னென்றும், வேதவாக்யம்போலே சொல்லாநின்றார் என்றுகொண்டு ஈடு பட "நானுனக்காகவே ஸந்நிஹிதனாயிருக்கிறேன்" என்றாராக ஸங்கதி ஹ்ரு தீகரித்து ஸூசிப்பிக்கிறார் (க்ருஷ்ணேத்யாதி).

"மா" என்றதுக்கு - ஶ்லாக்யமென்று அர்த்தமாய் *மணிக்காதல், பெரு மை என்று அர்த்தமாய் * குன்றத்துக்காதல் விசேஷணமாகை ஸ்பஷ்டமெ ன்று வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (மேகேத்யாதி). "எந்தி" என்று - பூவேந்தி என்றாற்போலே சொன்னதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (கடுவாயித்யாதி). (பலித்துக்கொண்டு) முன்னே தோற்றிக்கொண்டு.

பரமபதநாதனை தேஜஸ்ஸாகச் சொல்லுவாருண்டோவென்ன வருளிச் செய்கிறார் (அதேத்யாதி). ... ... (௪)

மூ.—கலைகளும் வேதமும் நீதிநூலும்
கற்பமும் சொல்பொருள்தானும் மற்றை
நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும்
நீர்மையினாலருள் செய்து நீண்ட
மலைகளும் மாமணியும் மலர்மேல்
மங்கையும் சங்கமும் தங்குகின்ற
அலைகடல்போன்றிவ ரார்கொலென்ன
வட்டபுய கரத்தேனென்றாரே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கலைகளும்	வேதத்தில் மேல்பாகத்தையும் வேதாந்த ஸூத்ரங்களையும்	பொருளும்	மீமாம்ஸையையும்
		மற்றை	இன்னமும்
		நிலைகளும்	(இவற்றில் சொன்னபடியநுஷ்ட்டிப்பாரடையும்) பூமிகளையும்
வேதமும்	முன்பாகத்தையும்		
நீதிநூலும்	இதிஹாஸாதிகளையும்		[தாலே
	[ம்	நீர்மையினால்	சேஷித்வஸ்வபாவத்
கற்பமும்	கல்பஸூத்ரங்களையு	வானவர்க்கும்	தேவர்களுக்கும்
சொல்லும்	வ்யாகரணத்தையும்		

(க) பெரு - திரு - ௬ - ௫.

பிறர்க்கும்	மநுஷ்யர்களுக்கும்	சங்கமும்	ஸ்ரீபாஞ்சஜந்யமும்
அருள்செய்து	தந்து,	தங்குகின்ற	எப்போதும்நிலைபெற்றுநிற்கிற
நீண்டமலைகளும்	உயர்ந்தமேருபர்வதம்போன்றதிருத்தோள்களும்	அலைகடல்போன்ற	அலையெறியும்கடல்போன்ற
மாமணியும்	ஸ்ரீகௌஸ்துபமும்	இவரார்கொலென்ன; அட்டபுயகரத்தேனென்றார். (ரு)	
மலர்மேல்மங்கையும்	தாமரைப்பூவைப்பிறந்தகமாகவுடைய பெரியபிராட்டியாரும்		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (கலைகளும்) †வேதத்திலுபரிதநபாகத்தையும், வேதாந்த ஸூத்ரங்களையும். (வேதமும்) பூர்வபாகமும். (நீதிநூலும்) அவற்றை உபப்ரும்ஹிக்கக்கடவ இதிஹாஸாதிகளும். (கற்பமும்) கல்பஸூத்ரமும். (சொல்) பதங்களை நிர்வஹித்துக்கொடுக்கக்கடவ வ்யாகரணமும். (பொருளும்) †அர்த்தவிசாரம்பண்ணக்கடவ மீமாம்ஸையும். (நிலைகளும்)இவற்றில்சொல்லுகிற ஸாதநங்களை அநுஷ்டித்தார்க்கு ப்ராப்யமாகச்சொல்லுகிற பூமிகளும். ப்ரஹ்மாதிகளுக்கும் மநுஷ்யர்களுக்கும். (நீர்மையினலருள்செய்து) சேஷித்வஸ்வபாவத்தாலே கொடுத்து.

(நீண்டவித்யாதி) மேருபோலேயிருக்கிற தோள்களும் †ரத்நங்களுக்குத்†தானே, கௌஸ்துபமுண்டாயிருக்குமே; பெரியபிராட்டியாரும் ஸ்ரீபாஞ்சஜந்யமும். (தங்குகின்ற) †இவை ஒருகாலுண்டாய் ஒருகாலில்லையாம் கடல்போலன்றிக்கே, தங்குகின்றகடல்போலேயிருக்கிற இவரார்தான். (அட்டபுயகரத்தேன்) கடல்போலே இழியவொண்ணாதபடி அபரிச்சிந்நனென்றிருக்கவேண்டா, உனக்கு நெஞ்சால் பரிச்சேதிக்கலாம்படிவந்து நிற்கிறவனென்றார். ... ...(ரு)

அரு —அஞ்சாம்பாட்டு. (கலைகளுமித்யாதி) நானுனக்காகவே ஸந்நிஹிதனாயிருக்கச்செய்தேயும், சேஷித்வமுறையாலே பஹுவிதோபகாரங்களைப் பண்ணிப் பெருமையாலும் கடல்போலிருக்கையால் பரிச்சேதிக்கப்போகாதே யிருக்கிறாரென்று நினைத்து, “உம்மை அவகாஹித்து அநுபவிக்கப்போகிறதில்லை” என்று பிற்காலிக்க; நீ அநுபவிக்கலாம்படியன்றோ இங்கே வந்திருக்கிறேனென்று சொல்லுகிறாரென்று ஸங்கதி.

“கலைகளும்” என்னுமிடத்தில் - வேதம்முதலானவற்றையெல்லாம்சொல்லும்போது, மேல் தனித்தெடுக்கிறவற்றுக்கு வையர்த்யம் ப்ரஸங்கிக்கையால் ஸங்கோசிக்குமளவில், ஆராத்யமான பகவத்ஸ்வரூபபரங்களும், ஆராதநஸ்வரூபப்ரதிபாதகங்களும், அந்த உபயோபப்ரும்ஹணங்களும், ஆராதந

ப்ரகாரபோதகங்களும், இவையித்தனைக்கும் சப்தநிர்வாஹகங்களும், அர்த்தநிர்வாஹகங்களுமாக ஒருசேர்த்தி திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (வேதத்திலித்யாதி). ஆராத்யஸ்வரூபமாகையால் கீழ் ப்ரஹ்மஸூத்ரம் சொல்லப்பட்டாலும், இங்கே ததர்த்தவிசாரபரங்களும் விவக்ஷிதங்களென்றருளிச் செய்கிறார் (அர்த்தவிசாரமித்யாதி).

கடலில் மலைகளுக்கு த்ருஷ்டாந்தமாகத் தோள்களைச் சொல்லிற்றேயாகிலும், கடலில் ரத்நங்களுக்கு த்ருஷ்டாந்தமேதென்னும் சங்கையை யநுவதிக்கிறார் (ரத்நங்களுக்கித்யாதி). (தானே) என்றவநந்தரம், த்ருஷ்டாந்தமேதென்ன என்று கூட்டுவது, வர்த்தமாநார்த்தம் (இவையொருகாலித்யாதி).

மூ —எங்ஙனும் நாமிவர் வண்ணமெண்ணி
ஏதுமறிகில மேந்திழையார்
சங்குமனமும் நிறைவுமெல்லாம்
தம்மனவாகப் புகுந்து தாமும்
பொங்கு கருங்கடல் பூவை காயா
போதவிழ் நீலம் புனைந்த மேகம்
அங்ஙனம்போன் றிவரார்கொலென்ன
வட்டபுய கரத்தேனென்றாரே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நாம்	நாம்	புகுந்து	வந்து ப்ரவேசித்து,
இவர்வண்ணம்	இவர்படிகளை	பொங்கு	பெரியகிளர்த்தியையுடைய
எங்ஙன்	எந்தப்ரகாரத்தாலே	கரும்	கறுத்த
எண்ணிலும்	அறியப்புகிலும்	கடல்	ஸமுத்ரம்
ஏதும்	ஒன்றும்	பூவை	பச்சிலைமரம்
அறிகிலம்	அறியப்போகிறதில்லை;	காயா	காசாம்பூ
ஏந்து	தரிக்கப்பட்ட	போது அவிழ்	காலத்திலேஅலர்ந்த
இழையார்	ஆபரணங்களையுடையஅபலைகளது	நீலம்	கருநெய்தல்
சங்கும்	வளையும்	புனைந்த	இவற்றுடனேசொல்லப்பட்ட
மனமும்	மநஸ்ஸும்	மேகம்	மேகஸமூஹம்
நிறைவும்	அடக்கமும்	அங்ஙனம்போன்ற	அப்படியிருக்கிற
எல்லாம்	இவையெல்லாம்	இவர்தாமும் ஆர்கொல்என்ன; அட்டபுயகரத்தேன் என்றாரே. (சு)	
தம்மனவாக	தம்மதாக அபிமாநித்துக்கொண்டு		

வ்யா.—ஆறாம்பாட்டு. (எங்ஙனுமித்யாதி) †ஆபாதப்ரதீதிமாத்ரமன்றிக்கே நம்முடைய †இயற்றியெல்லாங்கொண்டு இவரையுள்ளவளவெல்லா மறியவேணுமென்று பார்த்தால் ஒன்றுமறியப்போகிறதில்லை. (ஏந்திழையித்யாதி) "பிறருடைய பாஹ்யபரிகரங்களோடு

ஆந்தரபரிகரங்களோடு வாசியறத் தம்முடையதாக்கவேணும்" என்று அதுக்காக ஆபரணம்பூண்டிருக்கக்கடவ அபலைகளுண்டு, அவர்களுடைய வளையும், மநஸ்ஸும், அகவாயிலடக்கமும், இவையெல்லாம் (தம்மனவாகப்புகுந்து) நம்மதென்றிருந்தவையெல்லாம் கண்டபோதே தம்மதாம்படியாகவாயிற்று வந்தது.

(தாமுமித்யாதி) † தம்மதாக்கின பரிகரத்தைச்சொல்லுகிறது. ஒ று உபமாநமாகப் போராமையாலே அங்குமிங்குமாகக் கதிர் பொறுக்குகிறுர். பெரியகிளர்த்தியையுடைத்தாயிருக்கிற கருங் கடல், பூவை, காயா, †செவ்வியிலே யலர்ந்தநீலம், இவற்றோடொக்க த்தொடுத்தமேகம். (அங்ஙனம்போன்று) சொன்ன உபமாநந்தான் உபமேயத்துக்குப் போராமையாலே அங்ஙனம்போன்றிவரார்கொ லென்ன. (அட்டபுயகரம்) உனக்கறியாமைக்குடலாகச் சொல்லா நின்றுய், நீ அறிகைக்காகவந்து நிற்கிறவனன்றோ நானென்றுர். ()

அரு.—ஆரும்பாட்டு. (எங்ஙனுமித்யாதி). "பரிச்சேதித்து அநுபவிக்க லாம்படி இங்கேவந்திருக்கிறேன் என்றீர், எனக்குக்கண்டகாட்சிதன்னிலே ஸர்வஸ்வாபஹாரக்ஷமமானவடிவை அநுபவிக்கப்போகிறதில்லையே" என்ன; எல்லாரும் கண்ணுல்கண்டநுபவிக்கலாம்படியன்றோ நான்வந்ததென்றரு ளிச்செய்கிருரென்று ஸங்கதி.

"எங்ஙனும்" எந்தயத்நத்தாலும், நாமிவர்படியெல்லாம் எண்ணப்புகில் என்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறுர் (ஆபாதேத்யாதி). (இயற்றியெல்லாம்) யத்நமெல்லாம்.

"பொங்கு" இத்யாதி - "அங்ஙனம்போன்றிவர் - தாமும் - ஆர்கொல்" என்று அந்வயித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறுர் (தம்மதாக்கினவித்யாதி). போதிலே - உசிதகாலத்திலே, விகஸிக்கிற - நீலம் - கருநெய்தலென்று சப் தார்த்தமாய், பலிதார்த்தம் (செவ்வியிலேயித்யாதி). ... ... (சு)

மூ.—முழுசி வண்டாடிய தண்டுழாயின்
மொய்ம்மலர்க் கண்ணியும் மேனியம் சாந்
திழிசிய கோலமிருந்தவா
றெங்ஙனஞ் சொல்லுகேனோவிநல்லார்
எழுதியதாமரை யன்ன கண்ணு
மேந்தெழிலாகமும் தோளும் வாயு
மழகியதா மிவரார்கொலென்ன
வட்டபுய கரத்தேனென்றுரே. (எ)

பதம்.	உரை.
வண்டு	வண்டுகள்
முழுசி	(தேனிலே)முழுகி
ஆடிய	ஸஸம்ப்ரமநர்த்தம் பண்ணநின்றுள்ள
தண்	குளிர்ந்த
துழாயின்	திருத்துழாயினுடைய
மொய்	செறியத்தொடுத்த
மலர்க்கண்ணியும்	பூமாலை (சாத்தியருளின) ப்ரகாரத்தையும்
மேனி	திருமேனியிலே
அம்	அழகிதான
சாந்துஇழுசிய	சந்தநத்தாலே யெழுதப்பட்ட
கோலமிருந்தவாறும்	அலங்காரமிருந்த ப்ரகாரத்தையும்
எங்ஙனம்	எப்படி
சொல்லுகேன்	சொல்லித்தலைக்கட்டப்போகிறேன்;
ஓவி	சித்ரமெழுதுவதில்
நல்லார்	வல்லவர்கள்
எழுதிய	எழுதின
தாமரையன்ன	தாமரையிதழ்போன்ற
கண்ணும்	திருக்கண்களும்
எந்துஎழில்	மிக்ககாந்தியையுடைத்தான
ஆகமும்	திருமார்வும்
தோளும்	திருத்தோள்களும்
வாயும்	திருப்பவளமும்
அழகியதாம்	அழகாயிராநின்றது;
இவர்	இப்படிப்பட்ட அழகையுடைய இவர்

ஆர்கொல் என்ன, அட்டபுயகரத்தேன் என்றாரே. (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (முழுசியித்யாதி) கிண்ணகத்தி †விழிவாரைப்போலே வண்டுகளானவை மதுபாநமத்தமாய்க் களித்தாடாநின்றுள்ள திருத்துழாயினுடைய செறியத்தொடுத்த மாலையும். (மேனியித்யாதி) (க) "ஆவயோர்காத்ரஸத்ருசம்" என்கிறபடியே ஸ்வதః நன்றான திருமேனியிலே †பழகப்புதைத்து ஆறின சாந்தை அங்கேயிங்கே †இளிம்பாகப் பூசுகை யன்றிக்கே வேண்டுமிடங்களிலே சாத்தின கோலமிருந்தபடியும். (எங்ஙனம் சொல்லுகேன்) வாசகசப்தமில்லாததுக்கு என்றால் வாசகமிட்டுச் சொல்லப்போமோ?

(ஓவியித்யாதி) சித்ரமெழுதுகையில் குசலராயிருக்குமவர்கள் எழுதின தாமரைப்பூப்போலேயிருக்கிற கண்களும்; அதாகிறது - கண்டபின்பு † இமையாதேயிருந்தபடி. (ஏந்தெழிலித்யாதி) மிக்க வெழிலையுடைத்தாயிருக்கிற திருமார்வும், தோள்களும், வாயுமழகியராயிருந்தார்; இவரார்கொலென்ன; (அட்டபுயகரம்) இவ்வொப்பனை யழகைக்கொண்டு பரமபதத்திலேயிருக்கிறவனென்று கூசவேண்டா, உனக்காக வந்து நிற்கிறவன்நானென்றார். ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (முழுசியித்யாதி) "எல்லாரும் கண்ணாலே யநுபவிக்கலாம்படிவந்து நிற்கிறேன்" என்னநின்றீர், உம்முடைய கோலமும்,

---

(க) வி - பு - ரு - உ௦ - சு.

இமைகொட்டாமல் பார்க்கிறகண்களும், திருமார்வும், தோள்களும், வாயும், ஸூரிபோக்யமாயிருக்கிறதென்று கூசினவளை, கூசவேண்டாவென்கிறாரென்று ஸங்கதி.

(இழிவாரைப்போலே) என்றவநந்தரம், ஒன்றுக்கொன்று துணைதேடி யிழிந்த என்று கூட்டுவது. "அஞ்சாந்து" என்கைக்கு, சாந்துக்கழகேதென்ன; (பழகவித்யாதி). (இளிம்பாக) அசாதுர்யமாக.

(இமையாதே) இமைகொட்டாதே. ... ... (௭)

மூ.—மேவி யெப்பாலும் விண்ணோர் வணங்க
வேதமுரைப்பர் முந்நீர்மடந்தை
தேவி யப்பாலதிர் சங்க மிப்பால்
சக்கரம்மற்றிவர் வண்ணமெண்ணில்
காவியொப்பார் கடலேயுமொப்பார்
கண்ணும் வடிவும் நெடியராயென்
ஆவியொப்பா ரிவரார்கொலென்ன
வட்டபுயகரத்தேனென்றாரே. (௮)

பதம்.	உரை.
விண்ணோர்	நித்யஸூரிகள் [ளும்
எப்பாலும்	எல்லாத்திக்குக்களி
மேவி	பொருந்திநின்று
வணங்க	வணங்கி
வேதம்	வேதங்களாலே
உரைப்பர்	ஸ்தோத்ரம்பண்ணுநிற்பர்கள்;
முந்நீர்	திருப்பாற்கடலிலே திருவவதரித்த
மடந்தை	பெரியபிராட்டியார்
தேவி	இவருக்குப்பட்டமஹிஷியாயிராநின்றாள்;
அதிர்	முழங்காநின்றுள்ள
சங்கம்	ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வான் [றான்;
அப்பால்	இடவருகேயிராநின்
சக்கரம்	திருவாழியாழ்வான்
இப்பால்	வலவருகேயிராநின்றான்;

பதம்.	உரை.
மற்று	அதற்குப்பின்பு
இவர்	இவருடைய
வண்ணம்	நிறத்தை
எண்ணில்	ஆராய்ந்துசொல்லப்புக்கால் [தை
காவி	கருநெய்தல்பூநிறத்
ஒப்பார்	ஒப்பவரும் [தை
கடல்	ஸமுத்ரத்தின்நிறத்
ஒப்பார்	ஒப்பவரும் [லும்
கண்ணும்	திருக்கண்களினழகி
வடிவும்	வடிவழகிலும்
நெடியராய்	இப்படிப்பட்டவரென்று அளவிடக்கூ
என்	எனக்கு [டாதவரும்
ஆவியொப்பார்	ப்ராணனையொத்தவருமாயிராநின்றார்;

இவர்ஆர்கொலென்ன அட்டபுயகரத்தேன் என்றாரே. (௮)

வ்யா.—எட்டாம்பாட்டு. (மேவியித்யாதி). § ப்ரஹ்மாதிகள் தரையில் கால்பாவாதேயிறே யிருப்பது. அவர்கள் கந்தத்தையும்

§ (பா) இந்த்ராதிகள்.

அருவருத்திருக்கக்கடவ நித்யஸூரிகள் பார்த்தபார்த்தவிடமெங்கும் †அங்குப்போலேபரிமாற. (வேதமுரைப்பர்) இவர்வாயால் சொல்லுகிறது வேதமாயிராநின்றது. (மூந்நீர்மடந்தைதேவி) †மூந்நீர்மடந்தையென்று - பெரியபிராட்டியாராகவுமாம், ஸ்ரீபூமிப்பிராட்டியாராகவுமாம். (அப்பாலதிர்சங்கம்) †ஸ்ரீபூமிப்பிராட்டியாரானபோது அவ்விடத்திலே அதிருகிற சங்கமென்றுகிறது; பெரியபிராட்டியாரானபோது, அவரிருக்கிறவிடத்துக்கு மற்றையிடத்திலே யதிருகிற சங்கம். (இப்பால்சக்கரம்) ஓரிடத்திலேநின்றால் மற்றையிடத்தை இப்பால் என்னக்கடவதிறே.

(மற்றித்யாதி) இவருடைய நிறத்தைப்பார்க்கில் காவிபோலேயும் கடல்போலேயுமிராநின்றார். (கண்ணித்யாதி) கண்ணுக்கும் வடிவுக்கும் உபமாநமில்லை, கண்ணுக்கெல்லையுண்டாகிலாயிற்று வடிவுக்கெல்லையுள்ளது. (என்னுவியித்யாதி) வ்யதிரேகத்தில் ஜீவிக்கவரிதாம்படியிராநின்றார், இவரார்தானென்ன; (அட்டபுயகரம்) சொன்னபடி †பொல்லாது, (க) "జ్ఞానీత్వాత్మైవ మే మతమ్-ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" கேட்டறியாயோ? என்றார். உன்னை யொழிய ஜீவியாதவன்காண் நானென்கிறார். ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (மேவியித்யாதி) நித்யஸூரிபோக்யராயிருந்தீரென்றது பொய்யோ, ஸூரிகள் வணங்க நாய்ச்சிமாரும் நீருமாய், (உ) "తమసః పరమో ధాతా శఙ్ఖచక్రగదాధరః - தமஸ:பரமோதாதா சங்கசக்ரகதாதர:" என்கிறபடி ஆயுதச்சேர்த்தியும் பரமபுருஷலக்ஷணமானகண்ணும் வடிவுமாயிருந்தீரே, கிட்டியநுபவிக்கமாட்டேனென்னுநின்றுகொண்டு, உம்மைப்பிரிந்தால் பிழைக்கவும்மாட்டேனென்ன; நீ இங்ஙன்படுகிறதென், உன்னைவிட்டுப் பிரியக்ஷமனன்றுகாண் நானென்றாரென்று ஸங்கதி.

(அங்குப்போலே) பரமபதத்திற்போலே. மூன்றுவகைப்பட்ட நீரையுடைய இந்தஸமுத்ரம்போலேயிருக்கிற க்ஷீராப்த்தியிற்பிறந்த மடந்தையென்று சப்தார்த்தம் விவக்ஷித்தருளிச்செய்கிறார் (மூந்நீரித்யாதி). மூந்நீர்சூழ்ந்த மடந்தையென்று அர்த்தாந்தரம் (ஸ்ரீபூமியித்யாதி).

(சொன்னபடிபொல்லாது) என்றது - நீயெனக்கு ஆத்மாவாயிருக்க நம்மை உனக்கு ஆத்மாவாகச்சொன்னபடி பொல்லாதென்றபடி. ... (அ)

(க) கீதை - ௭-௧௮. (உ) ரா - யு - ககச - கரு.

மூ.—தஞ்சமிவர்க்கென் வளையும்நில்லா
நெஞ்சமும் தம்மதே சிந்தித்தேற்கு
வஞ்சி மருங்குல் நெருங்க நோக்கி
வாய்திறந்தொன்று பணித்ததுண்டு
நஞ்சமுடைத்திவர் நோக்கும் நோக்கம்
நாணிவர்தம்மை யறியமாட்டேன்
அஞ்சுவன் மற்றிவரார்கொலென்ன
வட்டபுயகரத்தேனென்றாரே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்	என்னுடைய	ஒன்று உண்டு	மிகவும் ரஹஸ்யமான
வளையும்	வளைகளும்		ஓரர்த்தமுண்டு,
தஞ்சம்	நிஸ்சிதமாக	நோக்கும்நோக்	பார்க்கிறபார்வை
இவர்க்கு	இவர்க்காக	கம்	
நில்லா	தங்குகிறதில்லை (கழ	நஞ்சம்உடைத்	விஷத்தோடுகூடியது
	லாநின்றன)	து	போலே யிராநின்
சிந்தித்தேற்கு	ஆராய்ந்தவென்னு		றது;
நெஞ்சமும்	மநஸ்ஸும் [டைய	நான்	நான்
தம்மதே	அவரதாயிருந்தது;	இவர்தம்மை	இவரை
வஞ்சி	நீர்வஞ்சிக்கொம்பு	அறியமாட்டே	ஒன்றுமறிகிலேன்;
	போன்ற	ன்	
மருங்குல்	இடையானது	மற்று	அதுக்குமேலே (இவ
நெருங்க	துவளும்படியாக		ரைப்பார்த்தவாறே)
நோக்கி	பார்த்து [றந்து	அஞ்சுவன்	அஞ்சாநின்றேன்;
வாய்திறந்து	திருப்பவளத்தைத்தி	இவரார்கொல்என்ன; அட்டபுயகரத்	
பணித்தது	அருளிச்செய்தது	தேன் என்றாரே.	(கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (தஞ்சமித்யாதி) நிஸ்சிதமாக இவர்க்கென்வளைநிற்கிறதில்லை. †இங்கே குடியிருப்பாய் அவர்க்காக வர்த்திக்கிறனவாயிருந்தன. (க) “[illegible]-சைதில்யம்” இத்யாதி. † அவரைப்போலேவளையும் நிற்கிறனவில்லை. †இவருடைய பூர்வவ்ருத்தத்தோடு ஸாம்யமுண்டாயிற்று இவற்றுக்குமிருப்பது. (என்வளையும்) † “என்னுடையவை” என்று ப்ரமித்தவளவேயாய், கிட்டினவாறே அவரதாயிராநின்றது. பாஹ்யபரிகரங்களிப்படியேயாறுலும் உள்ளுண்டானவைதானும் நமக்குத்தொங்குமோ? என்றிருந்தேன், (நெஞ்சமும்தம்மதேசிந்தித்தேற்கு) (உ) [உற்றெண்ணிலதுவுமற்றங்கவன்றன்னதே] ஆபாதப்ரதீதியில் நம்மதென்றிருந்தவித்தனையாய் ஆராய்ந்தவாறே அகவாயில் ஆபரணமும் அவரதாயிருந்தது. (வஞ்சி

(க) (உ) தி - வாய் -

யித்யாதி) †பண்டே தொட்டார்மேலே தோஷமாய் "இற்றது, முறிந்தது" என்னும்படியாயிற்று இடைதானிருப்பது, இதிலே தயை பண்ணுதே இது துவளும்படி நோக்கினுயிற்று. (வாயித்யாதி) †உருவு வெளிப்பாட்டில்சொன்னவார்த்தை இப்போதென்னுல் உங்களுக்குச்சொல்லப்போகாது. †அப்போது சொன்னபாசுரங்கிடக்கச்செய்தேயும் அதரஸ்ப்புரணத்திலே துவக்குண்டமைதோற்ற (வாய்திறந்து) என்கிருள். (ஒன்று) † இன்னமும் அவன்சொல்லில் சொல்லுமித்தனை; என்னுலது அநுபாஷிக்கப்போகாது.†அதுக்குக் கருத்து - இடை ஒடிவதுபோலேயிராநின்றது, ஒடியாதபடி என் தோளாலே அணைப்பேனே? என்றுபோலே.

(நஞ்சமித்யாதி) † இவர்பார்க்கிறபார்வை, விபாகத்தில் நம்மை முடிக்கும்போலே யிராநின்றது. † சொன்ன வார்த்தையை க்ரயம் செலுத்துவாரைப்போலே யிராநின்ருர். † அதொரு உக்திமாத்ரமாகாமே அத்தை அர்த்த க்ரியாகாரியாக்கி, நினைக்கிருர்போலே யிராநின்றது. (நாணித்யாதி) இவர் ரக்ஷகராயிருக்கிருரோ? நம்மை முடித்தேவிட விருக்கிருரோ? அறிகிறிலேன். (அஞ்சுவன்) இவர் சொல்லுகிற வார்த்தைதான் பொல்லாதல்லவிறே; ஆகிலும் அவரையும் நம்மையும் பார்த்தவாறே அஞ்சாநின்றேன். அப்பெரியவனுக்கு இவ்வாற்ருமை யுண்டாகக் கூடுமோ? என்றஞ்சாநின்றேன்; இவரார்தான்? என்ன. (அட்டபுயகரம்) ஒருவசநங்கொண்டு ஈஶ்வரனென்றஞ்சவேண்டா; நீ, அஞ்சாமைக்கு உன்னோடு †ஸஜாதீயனுய்வந்து நிற்கிறவனன்ருே நானென்ருர். ... ... (கூ)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (தஞ்சமித்யாதி) "நானுன்னைவிட்டுப்பிரியக்ஷமனன்று என்றுநின்றுகொண்டு தாமிவளோடு கலந்து பரிமாற; இவளந்தசையில் மேல்வரப்புகுகிற விஶ்லேஷத்தையெண்ணி அஞ்ச, இவளச்சம் அவர் தீர்த்தாராக உருவு வெளிப்பாட்டிலநுபவத்தைச் சொல்லுகிருளென்று ஸங்கதி.

வளைநில்லாவிட்டால், "என்வளை" என்பானென்னென்ன வருளிச்செய்கிருர் (இங்கேயித்யாதி). "வளையும்" என்ற சகாரதாத்பர்யம் (அவரைப்போலேயித்யாதி). இப்போது அவர் பிரியமாட்டேனென்றிருக்கிருரோவென்ன வருளிச்செய்கிருர் (இவருடையவித்யாதி). அதாவது (க) *பேதை நின்னைப் பிரியேன் என்றகன்றவரன்ருேவென்கை. அன்றிக்கே, வ்யாக்யாத்ரு வாக்யமாய், ஆழ்வாருடைய பூர்வவ்ருத்தம்போலே வளையும் சழலுகிறதென்னவு

(க) கூ - ௩ - ௩.

மாம்; அதாவது - எம்பெருமான் கிட்டினவாறே பிற்காலிக்கிற ஆழ்வாரைப் போலே யென்கை. (க) * வளவேழுலகுதலையெடுக்கை எல்லார்க்கு மொக்குமிறே. "என்" என்றதுக்கு யோஜநாந்தரம் (என்னுடையவித்யாதி). நீர் வஞ்சிக்கொம்புபோலேயிருக்கிற, மருங்குலுண்டு-இடை, அது நெருங்க-துவளும்படியாக, நோக்கி-ஸம்ஶ்லேஷித்து என்று சப்தார்த்தமாய் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பண்டேயித்யாதி). "ஒன்று" என்ற ஸாமாந்யோக்திக்குத் தாத்பர்யம் (உருவுவெளிப்பாட்டிலித்யாதி). "ஒன்றுபணித்ததுண்டு" என்றளவு அமைந்திருக்க "வாய்திறந்து" என்றதுக்குத் தாத்பர்யம் (அப்போதித்யாத). "ஒன்று" என்றது - அத்விதீயமென்றாய், அதிரஹஸ்யமென்றாய், தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (இன்னமுமித்யாதி). "வஞ்சிமருங்குல்நெருங்க" என்றவாக்யத்தையும், மேல் "அட்டபுயகரத்தேன்" என்ற பதத்தில் தோற்றின எட்டுத்தோள்களையும் திருவுள்ளம்பற்றி அந்தபரமரஹஸ்யந்தன்னை வெளியிடுகிறார் (அதுக்கித்யாதி). மத்யமபதமானநமஸ்ஸில் பிறந்த துணிவும் மிகவும் ஸூக்ஷ்மமாயிராநின்றது, ரக்ஷகத்வபாரிப்பாலே நானே ரக்ஷிக்கிறேனென்ற சரமரஹஸ்யமென்று இதுக்கு ஸ்வாபதேசம்.

(இவர் ஸம்ஶ்லேஷிக்கிற ஸம்ஶ்லேஷம் விஷமிஶ்ரமாயிருக்கிறது) என்றதுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (இவரித்யாதி). இப்போது ஆநந்த(ஞ்ஞா) கந்தாவஹமாயிருக்கையால் இத்தனையும் விஶ்லேஷகாலத்தில் பாதகமாய் முடிக்குமென்று கருத்து. கீழே "நெருங்கநோக்கி" என்றாளே, மீளவும் "நோக்கும் நோக்கம்" என்கிறதென்னென்ன வருளிச்செய்கிறார் (சொன்னவித்யாதி). விவரணம் (அதொருவித்யாதி). இடையொடியாமை தோள்களாலே அணைத்த ஸம்ஶ்லேஷத்தைச் சொல்லுகிறதென்றுகருத்து. (சொல்லுகிறவார்த்தை) என்றது - ஸ்வாபதேசத்தில் சரமஶ்லோகம். (ஸஜாதீயனாய்) என்றது - "மாம்" என்றதில் ஸாரதியாய் ஸஜாதீயனானாற்போலே இவளுடன்கலந்து பரிமாறினமையைப்பற்ற. ... ... (கூ)

மூ.—மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும்
நீண் முடிமாலை வயிர மேகன்
தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி
யட்டபுயகரத்தாதி தன்னை
கன்னி நன்மா மதிள் மங்கைவேந்தன்
காமருசீர்க் கலிகன்றி குன்றா
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை
யேத்த வல்லார்க்கிடம் வைகுந்தமே. (கO)

திருமங்கை யாழ்வார் திருவடிகளே சரணம்.

(க) தி-வாய் - க - கு -

பதம்.	உரை.
வயிரமேகன்	வயிரமேகனென்னும்
மன்னவன்	ராஜாவான
தொண்டையர் கோன்	தொண்டைமான் சக்ரவர்த்தியாலே
வணங்கும்	ஸேவிக்கப்படுமவராய் (அத்தாலே) [ய
நீள்	நீண்டமுடியையுடை
மால்	ஸர்வேஸ்வரனாய்,
தன்	அந்தராஜாவினது
வலி	மிடுக்காலும்
தன்புகழ்	அவன்யசஸ்ஸாலும்
சூழ்ந்த	விஞ்சின
கச்சி	கச்சிநகரில்
அட்டபுயகரத்து	திருவட்டபுயகரத்திலே எழுந்தருளியிருக்கிற [ஷயமாக,
ஆதிதன்னை	ஸர்வகாரணபூதன் வி
கன்னி	ஒருவராலும் அழிக்கவொண்ணாத
நல்	நன்றான
மா	பெரிய
மதிள்	மதிளாலே சூழப்பட்
மங்கை	திருமங்கைக்கு [ட
வேந்தன்	ராஜாவாய்
காமரு	எல்லாரும்விரும்பும்படியான [ரான
சீர்	குணங்களையுடைய
கலிகன்றி	ஆழ்வார்
குன்றா	குறைவில்லாத
இன்	இனிய
இசையால்	இசையுடனே
சொன்ன	அருளிச்செய்த
செம்	அழகிய
சொல்மாலை	சப்தஸந்தர்ப்பத்தையுடைய இத்திருமொழியைக் கொண்டு
ஏத்தவல்லார்க்கு	ஸ்தோத்ரம் பண்ணுகிறவர்களுக்கு
இடம்	வாஸஸ்தாநம்
வைகுந்தம்	பரமபதமாம். (க0)

வ்யா.—பத்தாம்பாட்டு. (மன்னவனித்யாதி) ராஜா தொண்டைமான் சக்ரவர்த்தி; அவன் பக்நாபிமாநியாய் வணங்கின பின்பாயிற்று ஈஸ்வரன் முடி நல்தரித்ததும் ஸர்வேஸ்வரத்வம்நிலைநின்றதும். முன்பெல்லாம் † ஈரரசுபட்டிறே போந்தது. (வயிரமேகன்) வயிரமேகனென்று †அவற்கு§(க்குடி)ப்பேர் (தன்வலி) எதிரிகளை யழியச்செய்கைக்கீடான அவன்மிடுக்கும், ரக்ஷணத்தால் வந்த புகழும் விஞ்சியாயிற்றிருப்பது. திருவட்டபுயகரத்தில் நிற்கிற ஜகத்காரணபூதனைக்கவிபாடிற்று. (கன்னியித்யாதி) அரணாகப் போரும்படியாய், புதிசாயிருக்கிற மதிளையுடைய திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநராய் எல்லார்க்கும் ஸ்ப்ருஹை பண்ணவேண்டும்படியான ஸ்ரீவைஷ்ணவ லக்ஷ்மியையுடைய ஆழ்வார். (குன்றா) தான்குறையக் கடவதன்றிக்கே, கேட்டார் செவிக்கும் ஆகர்ஷகமாம்படியான இசையையுடைத்தாய், † ஆஸ்ரயந்தான் செவ்விதா யிருக்கிற இவற்றைக் கொண்டு. (ஏத்தவல்லார்க்கிடம் வைகுந்தமே) உருவு வெளிப்பாட்

§ குண்டலிதாக்ஷரம் க்வாசித்கம்; அரும்பதத்துக்கு பாடமில்லை.

டாலே அநுபவித்துப் பிறர்க்கிருந்து சொல்லவேண்டாதே (க) "𑌦𑍇𑌵𑍈𑌸𑍍𑌸𑌹 𑌮𑌾𑌦𑌮𑍍𑌮𑌦𑍇𑌮 - தேவைஸ்ஸஹ மாதம்மதேம" என்கிறபடியே நித்யாநுபவம் பண்ணிக் களிக்கலாம் தேசத்திலே புகப் பெறுவர். ... ... (கO)

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (மன்னவனித்யாதி) (ஈரரசுபட்டிறே) என்று - வணங்குகைக்குமுன், (உ) "𑌤𑍍𑌵𑌂 𑌮𑍇𑌽𑌹𑌂 𑌮𑍇 - த்வம்மேஹம்மே" என்றிறே போந்தது, (ங) "𑌯𑌥𑌾𑌰𑌾𑌜𑌾𑌤𑌥𑌾𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 - யதாராஜாததாப்ரஜா:" என்று எல்லாரும் வணங்கினார்களென்று கருத்து. (அவற்குப்பேர்) சக்ரவர்த்திக்குப் பேர். (ஆஶ்ரயந்தான்) என்றது - (𑌕𑌾𑌨𑌾)காநாஶ்ரயமானது செஞ்சொல்லாயிருக்குமென்கை. ... ... (கO)

ஜீயர் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து எட்டாந்திருமொழி முடிந்தது.

(க) (உ) பட்டர்முக்தகம். (ங) முக்தகம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி - உ - ம் பத்து கூ - ம் திருமொழி - சொல்லு ப்ரவேசம்.

வ்யா—(க)†"மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும்நீண் முடிமாலை" என்று தொண்டைமான் சக்ரவர்த்தி திருவட்டபுயகரத்திலே அநுகூலித்தபடியை அநுஸந்தித்தார், அந்த ப்ரஸங்கத்தாலே "பல்லவன்" என்பானொருத்தன் பரமேஶ்வர விண்ணகரத்திலே அதிமாத்ரமான ஆநுகூல்யங்களைப்பண்ணி†ஓரோவொன்றை எடுத்தது ஆயிரமாம்படி பண்ணினானாயிற்று. †பின்பு சோழன்கண்டு அது தான் பொறுக்க மாட்டாமையாலே அவைதன்னை †அமைத்தவித்தனை. †இனித்தான் பகவத்விஷயத்தில் ஓரடிவர நின்றார், தமக்கு உத்தேஶ்யராகவிறே இவர் நினைத்திருப்பது; அத்தாலே அவன்படிகளெல்லாம் தமக்கினிதா யிருக்கையாலே அவற்றை அநுபவித்துப் பேசுகிறார். ... ... *

அரு.—சொல்லு ப்ரவேசம். கீழ்த்திருமொழியில், உருவு வெளிப்பாட்டிலே தாய்மாரோடு சொல்லிக்கொண்டிருந்தவிவளுக்கு பரமேச்சுரவிண்ணகரத்திலிருப்பைக் காட்டக்கண்டு தாமானதன்மையாலே அவன்படிகளெல்லாம்பேசி, அங்குத்தைக்குக் கிஞ்சித்கரித்தார்படியில் திருவுள்ளமூன்றி யநுபவிக்கிறாரென்று ஸங்கதி திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (மன்னவனித்யாதி). (ஓரோவொன்றையெடுத்தது) என்றதுக்கு, ஒரொரு ஆபரணங்களாயிரம்பண்ணிவைத்தானென்று கருத்து. இப்போது காணோமேயென்ன (பின்பு சோழனித்யாதி). (அமைத்து) சேமத்திலேயமைத்து. அநுகூலனாகிலித்தனை கொண்டாடவேணுமோவென்ன (இனியித்யாதி). ... ... *

மூ.—சொல்லுவன் சொல்பொருள் தானவையாய்ச்
சுவையூறொலி நாற்றமும் தோற்றமுமாய்
நல்லரன் §நாரணன் நான்முகனுக்
கிடந்தான் தடம்சூழ்ந் தழகாயகச்சி
பல்லவன் வில்லவனென் றுலகில்
பலராய்ப் பலவேந்தர் வணங்குகழல்
பல்லவன் மல்லையர் கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகர மதுவே. (க)

(க) உ - அ - ௧௦ - § (பா) நான்முகன் நாரணனுக்கு.

பதம்.	உரை.
சொல்லு	சப்தம்
வன்சொல்	(அதுதன்னிலும்) அருமையானவேதம்
பொருள்	வேதார்த்தம்
அவை	ஆகியஅவற்றுக்கு
தான்ஆய்	நிர்வாஹகனாய்,
சுவையும்	ரஸமும்
ஊறும்	ஸ்பர்சமும்
ஒலியும்	சப்தமும்
நாற்றமும்	கந்தமும்
தோற்றமும்	கண்ணால் காண்கிற ரூபமுமாகிற விவற்றுக்கு
ஆய்	நிர்வாஹகனுமாய்,
நல்	உபகாரகனாய்
அரன்	ஸம்ஹர்த்தாவான ருத்ராந்தர்யாமியாய்
நாரணன்	(தன்னுடைய நிஜரூபத்தைக்கொண்டு பாலநத்தைப் பண்ணியருளுகிற) நாராயணனாய்
நான்முகனுக்கு	ஸ்ரஷ்டாவான ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய்நின்ற ஸர்வேஸ்வரனுக்கு

பதம்.	உரை.
இடந்தான்	வாஸஸ்தாநமாவது,
தடம்	தடாகங்களாலே
சூழ்ந்து	சூழப்பட்டு
அழகாய	அழகிதாயிருந்துள்ள
கச்சி	கச்சிநகரிலே
பல்லவன்என்று	பல்லவனென்றும்
வில்லவன்என்று	வில்லவன்என்றும்
பலராய்	அநேகராய்
உலகில்	இந்தப்பூமியை அரசாண்ட
பலவேந்தர்	பலராஜாக்கள்
வணங்கு	வணங்குகிற
கழல்	வீரக்கழலையுடையனாய்
மல்லையர்	மல்லாபுரியென்னும் திருக்கடல்மல்லையிலுள்ளவர்களுக்கு
கோன்	அரசனான
பல்லவன்	பல்லவனென்பவன்
பணிந்த	ஆஸ்ரயித்த
பரமேச்சுரவிண்ணகரம்	பரமேஸ்வரவிண்ணகரமாம். (க)

வ்யா.—முதற்பாட்டு. (சொல்லு) †ப்ரத்யக்ஷாதிகளுக்கு அவிஷயமான அர்த்தத்தையும் சொல்லக் கடவதான சப்தம். (வன்சொல்) இது தன்னிலும் நித்யமான வேதம். (பொருள்) துரவகாஹமான வேதார்த்தம். (தானவையாய்) அவற்றுக்கு நிர்வாஹகனாய். (சுவையித்யாதி) அதிற்சொல்லுகிற புருஷார்த்தங்களில் ஐஶ்வர்யத்தை அபேக்ஷித்திருப்பார்க்கு உபாதேயமான சப்தாதிகளுக்கும் நிர்வாஹகனாய். (சுவையித்யாதி) ரஸம், ஸ்பர்சம், சப்தம், கந்தம், சக்ஷுர் விஷயமான ரூபம்.

(நல்லரனித்யாதி) † முமுக்ஷுக்களுக்கு உபாஸ்ய வஸ்துவான ஜகஜ்ஜந்மாதிஹேதுவும் தானே யென்கிறது. (நல்லரன்) †தந்தாம் கர்மத்தாலே க்லேசப்படுகிற ப்ராணிகளைத், தீம்பிலே கைவளர்ந்த ப்ரஜையைக் காலிலுங் கழுத்திலும் விலங்கிட்டு வைக்கும் பித்ராதிகளைப்போலே, இவற்றுக்கு ஹிதரூபமாக உபஸம்ஹாரத்தைப் பண்

னும் ருத்ரனுக்கு அந்தர்யாமியாயும்,§ †ஸ்வேநரூபேண நின்று பாலநத்தைப்பண்ணியும், (௧) "த்வமாவிஶ்யப்ரஜாபதே - த்வாமாவிஶ்யப்ரஜாபதே" என்கிறபடியே ப்ரஜாபதிக்கு அந்தர்யாமியாய் நின்று ஸ்ருஷ்டித்தும் போருகிற †ஸர்வேஶ்வரனுக்கு வாஸஸ்த்தாநமாகிறது.

(தடமித்யாதி) நல்ல நீர்நிலம் சூழ்ந்து அழகிதாயிருக்கிற கச்சியில். (பல்லவன்) பல்லவனென்றும் வில்லவனென்றும் சிலராஜாக்களுண்டாயிற்று அக்காலத்திலே; அவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களு மடைய வணங்கும் கழலையுடையனாயிருக்கு மாயிற்று அவன். (மல்லையரித்யாதி) திருக்கடல் மல்லையாயிற்றுப் படைவீடு; அவனுஶ்ரயிக்கிற பரமேஶ்வரவிண்ணகரம். ... ... (௧)

அ௫.—முதற்பாட்டு. (சொல்லித்யாதி) ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களையுட்கொண்டருளிச்செய்கிறார் (ப்ரத்யக்ஷாதிகளுக்கித்யாதி).

புபுக்ஷூபாஸ்யத்வம் சொன்னதாய், மேல்முமுக்ஷூபாஸ்யத்வம் சொல்லுகிறதாக உட்கருத்தருளிச்செய்கிறார் (முமுக்ஷுக்களுக்குமித்யாதி). ஸம்ஹர்த்தாவுக்கு நன்மையேதென்ன வருளிச்செய்கிறார் (தந்தாமித்யாதி). ஸம்ஹர்த்தாவையும் ஸ்ரஷ்டாவையும் சொன்னபோதே நடுவே பாலநகர்த்தாவையும் சொல்லவேண்டுமென்றருளிச்செய்கிறார் (ஸ்வேநேத்யாதி). நாராயணபதார்த்தம் (ஸர்வேஶ்வரனுக்கு) என்றது. "இடந்தான் பரமேச்சுரவிண்ணகரமதுவே" என்று அந்வயம். ... ... (௧)

மூ.—கார்மன்னு நீள்விசும்பும் கடலும்
சுடரும் நிலனும் மலையும் தன்னுந்தித்
தார்மன்னு தாமரைக் கண்ணனிடம்
தடமாமதிள் சூழ்ந்தழகாயகச்சி
தேர்மன்னு தென்னவனை முனையில்
செருவில் திறல்வாட்டிய திண்சிலையோன்
பார்மன்னு பல்லவர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகர மதுவே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கார்மன்னு	மேகங்கள் பொருந்தி [ய	தன்உந்தித்தார்	தன்திருநாபியில்தாமரைப்பூவிலே [ற
நீள்விசும்பும்	பெரியஆகாசமும்	மன்னு	உண்டாம்படியிருக்கி
கடலும்	ஸமுத்ரங்களும்	தாமரைக்கண்ணன்	புண்டரீகாக்ஷனுக்கு
சுடரும்	சந்த்ரஸூர்யர்களும்		
நிலனும்	பூமியும்		
மலையும்	குலபர்வதங்களும்	இடம்	வாஸஸ்த்தாநமாவது,

§ (பா) பாசுரத்தில் பாடாந்தராநுகுணமாக இவ்வாக்யம் "ஸ்ருஷ்டித்தும்" என்றவநந்தரம் சில ஸ்ரீகோசங்களில் காண்கிறது.

(௧)

தடம்	தடாகங்களாலும்	வாட்டிய	அழித்த
மா	உயர்ந்திருந்துள்ள	திண்	த்ருடமான
மதிள்	ப்ராகாரங்களாலும்	சிலையோன்	வில்லையுடையனாய்
சூழ்ந்து	சூழப்பட்டு	பார்	(தன்வீரஸ்ரீயை) பூமியில்
அழகாய	அழகிதாயிருந்துள்ள	மன்னு	நிலைநிற்கச்செய்த
கச்சி	கச்சிநகரிலே,	பல்லவர்கோன்	பல்லவராஜாவானவன்
தேர்மன்னு	மஹாரதனான	பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே.	(உ)
தென்னவனை	பாண்டியனை		
செருவில்முனையில்	யுத்தமுகத்தில்		
திறல்	மிடுக்கை		

வ்யா.—இரண்டாம்பாட்டு. (காரித்யாதி) †சக்ரவர்த்தித் திருமகன் ராவணவதம் பண்ணினத்தோடு, இவன் சத்ருவதம் பண்ணினத்தோடு வாசியற்றிருக்கிறதாயிற்று இவருடைய ஆதரம். (காரித்யாதி) மேகங்கள் ஸஞ்சரிக்கிற ஆகாசமும், அவ்வாகாசவர்த்திகளான சந்த்ரஸூர்யர்களும், பூமியைச் சூழ்ந்தகடலும், அதுக்குட்பட்ட பூமியும், அதுக்கு ஆணியடித்தாற்போலே யிருக்கிற மலையும், இவையடையத் †திருநாபீகமலத்திலே யுண்டாம்படியிருக்கிற புண்டரீகாக்ஷனுக்கு வாஸஸ்த்தாநம்.

தடாகங்களாலும் மதிள்களாலும் சூழ்ந்து தர்சநீயமான கச்சியில். (தேரித்யாதி) மஹாரதனாய்த்தேரிலே ஏறிப்போகக் கடவனாயிருக்கிற பாண்டியனை. (செருவில்) யுத்தத்தில். (முனையில்) தூசித்தலையிலே, மிடுக்கையழித்த திண்ணிய வில்வலியையுடையவன். (பாரித்யாதி) தானில்லையானாலும் தன்னுடைய வீரஸ்ரீ நிற்கும்படி வாழ்ந்தவன். ... ... (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (காரித்யாதி) கீழ்ப்பாட்டில் - "நல்லரன் நாரணன்நான்முகன்" என்று - ஸம்ஹர்த்தாவுக்கும் அந்தர்யாமியாய், பாலநதர்மம் தானேநடத்தி ஸ்ரஷ்ட்டாவுக்கும் அந்தர்யாமியாயிருக்கும்படியையருளிச்செய்தாரிறே; அதில், நான்முகனுக்குங்கூட ஸ்ரஷ்டாவாகையாலே வந்தவனுடைய ஸ்ரஷ்ட்ருத்வத்தை முந்துற இப்பாட்டிலே யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

உகந்தருளின நிலத்துக்கநுகூலித்தானுகையால் அவனுடையவிஜயமும் உத்தேஶ்யமாயிற்றென்கிறார் (சக்ரவர்த்தித்திருமகனித்யாதி), "உந்தித்தார்" என்றதினர்த்தம் (திருநாபீகமலத்திலே) என்றது. ... ... (உ)

மூ.—உரந்தருமெல்லணைப் பள்ளிகொண்டா
ஞெருகால்முன்னம் மாவுருவாய்க்கடலுள்
வரந்தரு மா மணிவண்ணனிடம்
மணி மாடங்கள் சூழ்ந்தழகாயகச்சி

நிரந்தவர் மண்ணையில் புண்ணுகர்வேல்
நெடுவாயிலுகச் செருவில் முனநாள்
பரந்தவன் பல்லவர்கோன்பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முன்னம்ஒருகால்	முன்பொருநாளிலே	மணி	ரத்நமயமான
மாஉருவாய்	விலக்ஷணமானவடிவோடே	மாடங்கள்சூழ்ந்து	மாடங்களால்சூழப்பட்டு
கடலுள்	திருப்பாற்கடலிலே	அழகாயகச்சி	அழகிதான கச்சிநகரில்.
உரம்தரும்	பலத்தையுடைய	மண்ணையில்	மண்ணையென்னும்படைவீட்டிலுள்ள
மெல்	ம்ருதுவான		
அணை	திருவனந்தாழ்வான் மேலே	நிரந்தவர்	சத்ருக்களுடைய
பள்ளிகொண்டான்	கண்வளர்ந்தருளினவனாய்	புண்	மாம்ஸத்தை
		நுகர்	புஜிக்கிற
வரம்தரும்	(எல்லாருடைய) அபேக்ஷிதங்களையும் தலைக்கட்டிக்கொடுக்கிற	வேல்	வேலின்
		நெடுவாயில்	பெரியவாயிலே
		உக	(அவர்கள்) முடியும்படியாக
		முனநாள்	முன்பு
மாமணி	சிந்தாமணிபோன்ற	செருவில்	யுத்தத்தில்
வண்ணன்	ஸ்வபாவத்தையுடையவனுக்கு	பரந்தவன்	வ்யாபித்தவனுடைய
இடம்	வாஸஸ்தாநமாவது,	பல்லவர்கோன்பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே. (ரு)	

வ்யா.—மூன்றாம்பாட்டு. (உரமித்யாதி) (க) †"ப்ரக்ருஷ்டவிஜ்ஞாநபலைகதாமநி-ப்ரக்ருஷ்ட விஜ்ஞாநபலைகதாமநி" என்கிறபடியே பிராட்டிமாரும் தானுங்கூட ஏறித்துகையாநின்றால் பொறுக்கைக்கீடான தாரணஸாமர்த்யத்தையும், வேண்டின இடங்களிலே திருவுள்ளக்கருத்தறிந்து † குழைந்துகொடுக்கைக்கீடான மென்மையையுமுடைய திருவநந்தாழ்வான் மேலே, முன்பொரு நாளிலே ஶ்லாக்யமான வடிவை யுடையனாய்க்கொண்டு கடலிலே கண்வளர்ந்தருளினான். (வரமித்யாதி) † அருளாளப் பெருமாளாய் நின்று ஸர்வாபேக்ஷிதங்களையும் தருகிறவனுக்கு வாஸஸ்தாநம்.

ரத்நமயமான மாடங்கள் சூழ்ந்த தர்சநீயமாயிருக்கிற கச்சியில். (நிரந்தித்யாதி) "மண்ணை" என்று ஆற்றுக்கும், படைவீட்டுக்கும் பேர்; "திருச்சிற்றாறு" என்று ஆற்றுக்கும் திருப்பதிக்கும் பேராகிறாப்போலே. அப்படை வீட்டிலுண்டான, நிரந்தவருண்டு-சத்ருக்கள், அவர்களுடைய, புண்ணுண்டு-மாம்ஸம், அத்தை நுகர

(க) ஸ்தோ - ர - ருகூ.

க்கடவதாய் - புஜிக்கக்கடவதாயிருக்கிற வேலினுடைய பெரிய வாயிலே அந்தசத்ருக்கள், உக - அவர்கள் முடிய. திருமங்கையாழ்வார் மதிக்கும்படியான ஆண்பிள்ளைத்தனமிறே அவரதும். (க) †"கடமாகளியானை வல்லான்" என்றும், (உ) "ஆடல்மாவலவன்" என்றும், (௩) "மருவலர்தமுடல் துணிய வாள்வீசும் பரகாலன்" என்றும் †துறைதோறும் தலையாயிருக்கிற திருமங்கையாழ்வாரிறே மதிக்கிறார். (ச) †*ரஞ்ஜநீயஸ்ய போலேயிருக்கிறதிறே. (செருவிலித்யாதி) இவன் யுத்தத்திலே சத்ருக்களடங்கலும் அழிந்து தானேயாம்படி விஸ்த்ருதனானவன். ... ... (௩)

அரு.—மூன்றாம்பாட்டு. (உரமித்யாதி)முதற்பாட்டில் ஆர்த்த(ஶ்ரு)மான பாலநதர்மத்தை, திருப்பாற்கடலில் கண்வளர்ந்தும், ஹஸ்திகிரியில் அருளாளராயும் நடத்தினபடியை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

உரத்தை - பலத்தை, தரும் - உடையவனென்று லக்ஷணயா சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார், (ப்ரக்ருஷ்டேத்யாதி). (குழைந்து கொடுக்கை) என்றது - திருமுடிபக்க முயர்ந்து கொடுக்கையும், மற்றையிடம் தாழ்ந்து கொடுக்கையும். [கடலிலே திருவநந்தாழ்வான் மேலே - கண் வளர்ந்தருளினான்] என்றந்வயித்து, இதுக்கீடாக மூலத்தையும் அந்வயித்துக் கொள்வது. வரந்தருமவனாய் - (ரு) "వరదస్సర్వభూతానామద్యాపిపరిదృశ్యతే - வரதஸ்ஸர்வ பூதாநாமத்யாபி பரித்ருஶ்யதே" என்கிறவரதனாய், மாமணி - சிந்தாமணிபோலே ஸர்வாபேக்ஷிதங்களையும் தருகையே ஸ்வபாவமாக வுடையவனென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (அருளாளப் பெருமாளாயித்யாதி). அருளாளப் பெருமாளென்று - தேப்பெருமாளுக்கு ப்ரஸித்தமான திருநாமமிறே. எம்பெருமானார், யஜ்ஞமூர்த்திக்கு, அருளாளப் பெருமாளென்று தேப்பெருமாளுடைய திருநாமம் சாத்திற்றும் ப்ரஸித்தமிறே.

"திருமங்கையாழ்வார் வீரரென்று ப்ரஸித்தர், என்கைக்கு ஸம்வாதம் காட்டுகிறார் (கடமாவித்யாதி). (துறைதோறும்) என்றது - ஆனையாளுகையும், குதிரை நடத்துகையும், வாள்வீசுகையுமாகிற துறைதோறுமென்றபடி. தாம் வீரசிகாமணியாயிருந்து, ஒருவன் வீரத்தைக்கொண்டாடக் கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (ரஞ்ஜநீயஸ்யேத்யாதி). இத்தால் - சத்ருவாய் வீரனாயிருந்த ராவணன் பெருமானைக் கொண்டாடினால், அநுகூலன் விஷயத்திலே கேட்கவேணுமோ வென்றதாயிற்று. ... ... (௩)

(க) உ - ச - கo.
(உ) ரு - அ - கo.
(௩) ௩ - கூ - கo.
(ச) ரா - யு -
(ரு) ஹஸ்திகிரிமாஹாத்ம்யம்.

மூ.—அண்டமு மெண்டிசையும் நிலனு
மலைநீரொடு வானெரிகால் முதலா
உண்டவ னெந்தைபிரானதிட
மொளிமாடங்கள் சூழ்ந்தழகாயகச்சி
விண்டவ ரிண்டைக் குழாமுடனே
விரைந்தாரிரியச் செருவில்முனிந்து
பண்டொருகால் வளைத்தான்பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (ச)

பதம்.	உரை.
அண்டமும்	அண்டங்களும்
எண்திசையும்	எட்டுத்திக்குக்களும்
நிலனும்	பூமியும் [ள
அலை	அலையெறியாநின்றுள்
நீரொடு	ஸமுத்ரங்களும்
வான்	ஆகாசமும்
எரி	அக்நியும்
கால்	காற்றும்
முதலா	முதலாக [வனாய்
உண்டவன்	அமுதுசெய்தருளின
எந்தைபிரானது	என்குலநாதனானவனுக்கு
இடம்	இடமாவது,
ஒளி	விளங்காநின்றுள்ள
மாடங்கள்	மாடங்களால்
சூழ்ந்து	சூழப்பட்டு
அழகாய	அழகிய
கச்சி	காஞ்சீநகரத்தில்,
செருவில்	யுத்தத்தில்
விரைந்தாருடனே	விரைந்துவந்தவர்களோடு
விண்டவர்	சத்ருக்களுடைய
இண்டை	திரண்ட
குழாம்	கூட்டமானது [க
இரிய	சிதறியோடும்படியா
முனிந்து	சீறி, [லே
பண்டு ஒருகால்	முன்பொருகாலத்தி
வளைத்தான்	வில்லைவளைத்த பல்லவராஜா
பணிந்த பரமேச்சுர விண்ணகரமதுவே. (ச)	

வ்யா.—நாலாம்பாட்டு. † (அண்டமுமித்யாதி) அண்டமும், அஷ்டதிக்குக்களும், பூமியும், †காரணமாயும் கார்யமாயு முள்ளவை யடையத்திருவயிற்றிலே வைத்து நோக்கினவன். (எந்தைபிரானதிடம்) எனக்கு ஜநகனானவனுக்கு †ஸ்வாமி. என்குலநாதன் என்றபடி.

(ஒளி) ரத்நங்களினுடைய ஒளியையுடைத்தான மாடங்கள் சூழ்ந்து தர்சநீயமான கச்சியில். (விண்டவரித்யாதி) செருவிலே - யுத்தத்திலே, விரைந்தவருண்டு - பெரிய கிளர்த்தியோடே "காட்டு, காட்டு" என்று தூசி யேறிவருகிறவர்கள்; அவர்களோடே. (விண்டவரிண்டைக்குழாம் - இரிய) சத்ருக்களுடைய செறிந்த குழாமானது சிதறியோட. (முனிந்து) சீறி. (பண்டித்யாதி) முன்பொருநாளிலே கையில் வில்வளைத்தவன்பணிந்த. ... ... (ச)

அரு.—நாலாம்பாட்டு. (அண்டமுமித்யாதி) முதற்பாட்டில், "நல்லரண்" என்று சொன்ன ஸம்ஹர்த்ருத்வத்தை ஸப்ரகாரமாக அநுஸந்திக்கிருரென்று ஸங்கதி.

"அண்டமும்" இத்யாதிக்கெல்லாம் தொகுத்தபாவம் (காரணமாயுமித்யாதி) "பிரான்" என்றதுக்கு பலிதார்த்தம் (ஸ்வாமி) என்றது. ... ... (ச)

மூ.—தூம்புடைத் திண்கை வன்தாள்களிற்றின்
துயர்தீர்த்தரவம் வெருவ முனநாள்
பூம்புனல்பொய்கை புக்கானவனுக்
கிடந்தான் தடம்சூழ்ந்தழகாயகச்சி
தேம்பொழில் குன்றெயில் தென்னவனைத்
திசைப்பச் செருமேல் வியந்தன்றுசென்ற
பாம்புடைப் பல்லவர்கோன் பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தூம்புஉடை	துளையையுடைய	சூழ்ந்து	சூழப்பட்டு
திண்	த்ருடமான	அழகாயகச்சி	அழகியகச்சியில்,
கை	துதிக்கையையும்	தேன்	தேனையுடைய
வல்	வலிய	பொழில்	சோலையையும்
தாள்	தாளையுமுடையனை	குன்று	மலைபோன்ற
களிற்றின்	ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய	எயில்	மதிளையுமுடைய
துயர்	து:கத்தை	தென்னவன்	பாண்டியன்
தீர்த்து	போக்கி,	திசைப்ப	அறிவுகெடும்படி
அரவம்	காளியனைவன்	அன்று	முன்பு
வெருவ	அஞ்சும்படியாக	செருமேல்	யுத்தத்தில்
முனநாள்	முன்பு	வியந்து	பெரிய ஆதரத்தோடே
பூம்புனல்பொய்கை	அழகிய நீர்நிறைந்த மடுவிலே	சென்ற	வந்துகிட்டினவனாய்
புக்கானவனுக்கு	பாய்ந்தவனுக்கு	பாம்புஉடை	ஸர்ப்பத்தைக் கொடியாகவுடைய
இடம்	இடமாவது,	பல்லவர்கோன்பணிந்த பரமேச்சுரவிண்ணகரமதுவே. (ரு)	
தடம்	தடாகங்களாலே		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (தூம்புடையித்யாதி) துளையையுடைய திண்ணிய கையையுடைத்தாய், வலிதானதாளையுமுடைய ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு ஜலசரஸத்வத்தால் வந்த து:கத்தைப் போக்கி. (அரவமித்யாதி) †காளியனைவன் ஒருதடாகத்தை விஷத்தாலே தூஷிக்க, அவனஞ்சி ஓடும்படியாகத் தானதிலே போய்ப் புக்கானாயிற்று.

(தேம்பொழிலித்யாதி) தேனையுடைத்தான சுற்றில் சோலையையும், மலைபோலே யிருக்கிற †மதிளையுமுடைய தென்னவனானவன் அறிவுகெடும்படியாக யுத்தத்திலே பெரிய ஆதரத்தோடே சென்றிட்டின. (பாம்புடை) நாகலோகத்தை வென்று ஸர்ப்பத்தை த்வஜமாக எடுத்தானாகச் சொல்லக்கடவது; அவன்பணிந்த. (௫)

அ௫.—அஞ்சாம்பாட்டு. (தாம்புடையித்யாதி) முதற்பாட்டில்சொன்ன காரணத்வத்தை மூன்றுபாட்டிலும் விஸ்தரித்தநுபவித்து, அத்தால் பலித்த முமுக்ஷுஉபாஸ்யத்வத்தை, ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு அநிஷ்ட நிவர்த்தநமுகேந அருளிச்செய்துகொண்டு, இதுக்குக்கீழ், "சுவையூறொலி நாற்றமும் தோற்றமுமாய்" என்றபதத்தில் தோற்றின புபுக்ஷுஉபாஸ்யத்வத்தை மேலெட்டாம் பாட்டளவு மநுஸந்திக்கிறாராய்; அதில் காளியனுக்கும் இடைச்சேரியில் கோபஜநங்களுக்கும் ஜீவநப்ரதாநோபயுக்தமான அபதாநத்தை யநுஸந்திக்கிறாரென்று இங்ஙனே ஸங்கதி கண்டுகொள்வது.

முனநாள் பூம்புனல்பொய்கையானதில் - அரவம் - வெருவ - புக்கானென்றுதல்; பூம்புனல்பொய்கையாம்படி புக்கானென்றுதல் சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (காளியனானவனித்யாதி).

"எயில்" என்றதினர்த்தம் (மதிள்) என்றது.... ... ... (௫)

மூ.—திண்படைக் கோ ளரியினுருவாய்த்
திறலோனகலம் செருவில் முனநாள்
புண்படப் போழ்ந்தபிரானதிடம்
பொருமாடங்கள் சூழ்ந்தழகாயகச்சி
வெண்குடை நீழல் செங்கோல்நடப்ப
விடைவெல்கொடிவேல் படைமுன்னுயர்த்த
பண்புடைப் பல்லவர்கோன்பணிந்த
பரமேச்சுரவிண்ணகரமதுவே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
திண்	திண்ணிய (திருவுகிரான)	முனநாள்	முன்காலத்திலே
படை	ஆயுதத்தையும்	செருவில்	யுத்தத்திலே
கோள்	மிடுக்கையுமுடைய	புண்பட	புண்படும்படி
அரியின்உருவாய்	நரஸிம்ஹரூபியாய்க் கொண்டு	போழ்ந்த	பிளந்த
திறலோன்	பெருமிடுக்கனான ஹிரண்யனுடைய	பிரானது	உபகாரகனுக்கு
அகலம்	மார்வை	இடம்	இடமாவது,
		பொரு	ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிற,
		மாடங்கள்சூழ்ந்து	அழகாயகச்சி,

திரு

வெண்குடைநீழல்	வெண்கொற்றக்குடைநிழலின்கீழே	படைமுன்	ஸேனைகளின்முன்னே
செங்கோல்நடப்ப	தன் ஆஜ்ஞைசெல்லும்படி	உயர்த்த	உயரவெடுத்தவனாய்
வெல்	ஜயஸூசகமான	பண்புஉடை	அழகிய ஸ்வபாவத்தையுடையனான
விடைக்கொடி	ஸர்ப்பத்வஜத்தையும்	பல்லவர்கோன்பணிந்த பரமேச்சர	
வேல்	வேலாயுதத்தையும்	விண்ணகரமதுவே. (கூ)	

வ்யா.—ஆறும்பாட்டு. (திண்படையித்யாதி) ஹிரண்யனுடைய வுக்கு வளையாத திருவுகிரை ஆயுதமாகவுடைய நரஸிம்ஹமாய், பெருமிடுக்கனான ஹிரண்யனுடைய மார்வை யுத்தத்திலே புண்படும்படி, (போழ்ந்த பிரானதிடம்).

"பொரு" என்று ஒப்பு - †ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிற. (வெண்குடையித்யாதி) †தன் வெண்கொற்றக்குடை ஒன்றுமேயாகத் தன்னுடைய ஆஜ்ஞையை நாட்டிலே நடத்தும்படி மிடுக்கையுடையவனென்னுதல். †விடையாதல், விடமாதல், விறலென்னுதல். (விடை) - என்றபோது இளம்பாம்பாகிறது. (விடம்) என்றபோது விஷத்தை என்றாய், ஸர்ப்பமென்றபடி. (விறல்) என்றபோது - மிடுக்கையுடைத்தாய் வெற்றிக்குப்பரிகரமான கொடியையும் வேலாகிற ஆயுதத்தையும் முன்பே எடுத்தவன். (பண்புடையித்யாதி) அழகிய ஸ்வபாவத்தையுடைய. பல்லவர்கோன்பணிந்த.

அரு.—ஆறும்பாட்டு. (திண்படையித்யாதி) இனி மூன்றுபாட்டால், விரோதிகளைப்போக்கி ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்குக் குடியிருப்புப் பண்ணிக் கொடுத்தமையை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

(ஒப்பு) என்றத்தால் பலிதம் (ஒன்றோடித்யாதி). "விறல்" என்றுபாடமாய், ராஜாவுக்கு விசேஷணமாக ஒருயோஜனை யருளிச்செய்கிறார் (தன் வெண்கொற்றக்குடையித்யாதி). பாடாந்தரங்களையும் காட்டிக்கொண்டு, விறல்பாடத்தில் கொடிக்கு விசேஷணமாக யோஜநாந்தர மருளிச்செய்கிறார் (விடையித்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே). ... ... (கூ)

மூ.—இலகிய நீண்முடி மாவலிதன் பெரு
வேள்வியில் மாணுருவாய் முனநாள்
சலமொடு மாநிலங்கொண்டவனுக்
கிடந்தான் தடம்சூழ்ந்தழகாய கச்சி
உலகுடை மன்னவன் தென்னவனைக்
கன்னி மா மதிள் சூழ் கருவூர் வெருவப்
பலபடைசாய வென்றான்பணிந்த
பரமேச்சுர விண்ணகரமதுவே. (எ

பதம்.	உரை.	பதம்.	உரை.
இலகிய	ஒளிவிடாநின்றுள்ள	தடம்சூழ்ந்தழகாயகச்சி,	
நீள்	நீண்ட [டைய	கன்னி	அழிவில்லாத
முடி	அபிஷேகத்தையு	மாமதிள்	பெரியமதிள்களாலே
மாவலிதன்	மஹாபலியின்	சூழ்	சூழப்பட்ட
பெருவேள்வியில்	பெரியயாகத்திலே [ன்று)	கருவூர்	கருவூரானது
மாணுருவாய்	வாமநரூபியாய் (ச்செ	வெருவ	அஞ்சும்படியாக்வும்
முனநாள்	முன்பொருகால்	பலபடை	சதுரங்கஸேனையானது
மா	பரப்புடைத்தான	சாய	முடியும்படியாகவும்
நிலம்	பூமியை	உலகுடை	லோகத்துக்கெல்லா [ம்
சலமொடு	உதகபூர்வகமாக	மன்னவன்	ராஜாவான
கொண்டவனுக்கு	கொண்டு அளந்தவனுக்கு	தென்னவனை	பாண்டியனை
இடந்தாள்	இடமாவது;	வென்றான்	வென்றவன்
		பணிந்த பரமேச்சுர விண்ணகரம் அதுவே. (எ)	

வ்யா.—ஏழாம்பாட்டு. (இலகியவித்யாதி) உஜ்ஜ்வலமாய் ஆதிராஜ்ய §ஸூசகமான முடியையுடைய மஹாபலியுடைய யஜ்ஞவாடத்திலே, இரப்பிலே தகணேறினவடிவையுடையனாய், முன்பொருநாளிலே கையிலே நீர்விழுந்தபோதே; பரப்பையுடைத்தான பூமியைக் கைக்கொண்டளந்தவனுக்கு.

(உலகுடை) லோகத்துக்கெல்லாம் தானே நியந்தாவான்பாண்ட்யனை, அரணுடைத்தான பெரியமதிளாலே சூழப்பட்ட ‡ கருவூர் அஞ்சும்படியாக ஸேநாஸமூஹமானது சாய வென்றவன் பணிந்த.

அந்.—ஏழாம்பாட்டு. (இலகியவித்யாதி). (பாண்ட்யனை - வென்றவன்) என்றந்வயம். ... ... (எ)

மூ.—குடைத்திறல் மன்னவனா யொருகால்
குரங்கைப் படையா மலையால்கடலை
அடைத்தவ னெந்தைபிரானதிட
மணிமாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி
விடைத்திறல் வில்லவனென்மெலியில்
வெருவச்செருவேல் வலங்கைப்பிடித்த
படைத்திறல் பல்லவர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரமதுவே. (அ)

§ (பா) ப்ரகாசகமான. ‡ கருவூர் - பாண்ட்யன்பட்டணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
குடை	வெண்கொற்றக்கு	விடை	ருஷபம்போன்ற
	டையையும்	திறல்	மிடுக்கையுடையனாய்
திறல்	மிடுக்கையுமுடைய	நென்மெலியில்	நென்மெலியென்கிற
மன்னவனாய்	சக்ரவர்த்தித்திருமக		படைவீட்டையுமு
	னாய்		டையனான [ஜா
ஒருகால்	ராவணன்பிராட்டி	வில்லவன்	வில்லவனென்னும்ரா
	யைப்பிரித்தவன்	வெருவ	அஞ்சும்படி [மான
குரங்கை	வாநரங்களை [று	செரு	யுத்தத்துக்குப்பரிகர
படையா	ஸேனையாகக்கொண்	வேல்	வேலாயுதத்தை
மலையால்	மலைகளாலே [டு	வலங்கைப்பிடி	வலக்கையிலேபிடித்
கடலை	ஸமுத்ரத்தை	த்த	தவனாய்
அடைத்தவன்	அடைத்தவனாய்	படை	ஆயுதங்களைத்தரிப்ப
எந்தைபிரானது	என்குலநாதனானவ	திறல்	மிடுக்கனான [தில்
இடம்	இடமாவது, [னுக்கு		
அணி	அழகிய	பல்லவர்கோன் பணிந்த பரமேச்சுர	
மாடங்கள்சூழ்ந்து அழகாயகச்சி,		விண்ணகரமதுவே. (அ)	

வ்யா.—எட்டாம்பாட்டு. (குடைத்திறலித்யாதி) வெண்கொற்றக்குடையையும், பெருமிடுக்கையுமுடைய சக்ரவர்த்தித்திருமகனாய். (குரங்கைப்படையா) †பூசலென்றால் அஞ்சக்கடவ குரங்குகளைப் படையாகக்கொண்டு, நீரிலே ஆழக்கடவ மலையாலே கடலையடைத்தவன். (எந்தையித்யாதி) எனக்கு ஜநகனாய், உபகாரகனானவனுக்கு இடம்.

அழகிய மாடங்களாலேசூழப்பட்ட அழகியகச்சி; (விடையித்யாதி) ருஷபம்போலேயிருக்கிற மிடுக்கையுடைய வில்லவன், நென்மெலி என்கிற படைவீட்டிலே அஞ்ச, யுத்தத்துக்குப் பரிகரமான வேலைக் கையிலே பிடித்த. (படைத்திறல்) ஆயுததாரண ஸாமர்த்யத்தையுடைய பல்லவர்கோன். ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (குடையித்யாதி) அவதாரப்ரயோஜநமான ராவண நிரஸநத்தைவிட்டு குரங்கால் கடலடைத்தத்தைச்சொன்னதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (பூசலித்யாதி). அதிலுமிது அதிமாநுஷசரித்ரமென்று கருத்து. ... ... (அ)

௯.—பிறையுடைவாணுதல் பின்னைதிறத்து
முன்னேயொருகால் செருவிலுருமின்
மறையுடை மால்விடையேழடர்த்தாற்
கிடந்தான் தடம் சூழ்ந் தழகாய கச்சி

கறையுடை வாள் மற மன்னர்கெடக்
கடல்போல் முழங்கும் குரல் கடுவாய்ப்
பறையுடைப் பல்லவர்கோன்பணிந்த
பரமேச்சுர விண்ணகரமதுவே. (௯)

பதம்.	உரை.
பிறை	பிறைபோலேயாய்
வாள்	ஒளியை
உடை	உடைத்தான
நுதல்	நெற்றியையுடைய
பின்னைதிறத்து	நப்பின்னைப்பிராட்டிக்காக
முன்னே ஒருகால்	முன்பொருநாளிலே
செருவில்	யுத்தத்திலே
உருமின்	இடிபோன்ற குரலையும்
மறை	சாத்ரவத்தையும்
உடை	உடைய
மால்	பெரிய
விடைஏழு	ருஷபங்களேழையும்
அடர்த்தாற்கு	நிரஸித்தவனுக்கு
இடம்தான்	தடம்சூழ்ந்து அழகாயகச்சி
கறைஉடை	கறையையுடைய
வாள்	வாளையும்
மறம்	மிக்ககோபத்தையுமுடையரான
மன்னர்	ராஜாக்கள்
கெட	நசிக்கும்படி
கடல்போல்	ஸமுத்ரம்போலே
முழங்கும்	கோஷிக்கிற
குரல்	த்வநியையும்
கடுவாய்	கடியவாயையுமுடை
பறை	வாத்யத்தை
உடை	உடையனான
பல்லவர்கோன்	பணிந்த பரமேச்சுர விண்ணகரமதுவே. (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பிறையித்யாதி) † பிறைபோலேயிருப்பதாய் ஒளியையுடைத்தான நுதலையுடைய நப்பின்னைப்பிராட்டிக்காக, முன்பொருநாளிலே, யுத்தத்திலே †உருமுபோலேயாய், உருமு - இடி. நெஞ்சிலே க்ருத்ரிமத்தையுடைத்தான; †மாறுய்வரும் என்னவுமாம். பெரியவ்ருஷபங்களை அடர்த்தவனுக்கு.

(கறையித்யாதி) சத்ருசரீரங்களிலே தைச்சுக் கறைகழுவாதேயிருக்கிறவாளையுடையராய், பெரிய சினத்தையுடைய ராஜாக்கள் கெட, கடல்போலே கோஷியாநின்றுள்ள த்வநியையுடைத்தாய், அந்தத்வநியைக்கேட்டபோதே எதிரிகள் கெட்டோடும்படியான கடிய வாயையுடைய. (௧) † "கன்றப்பறைகறங்க" என்று திருவரையிலே கோத்துக்கட்டின பறையோபாதியாய்த் தோற்றுகிறதாயிற்று இவர்க்கிது. ... ... (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (பிறையித்யாதி) புபுக்ஷுக்களான தேவர்களுக்கும் முமுக்ஷுவுக்கும் அநிஷ்டநிவர்த்தநமுகத்தாலே உபாஸ்யனன

(௧) ௧௧ - ௫ - ௬.

தானுபகரித்தபடியை இவ்வளவு மநுஸந்தித்து, இவ்வளவன்றிக்கே, நித்ய ஸூரிகளில் தலையான நீளாதேவியினுடைய அவதாரமான நப்பின்னைபிறத்தில்பண்ணின உபகாரத்தை அநுபவிக்கிருரென்று ஸங்கதி.

"பிறை" என்றது - பிறைஸாதர்ம்யத்தை லக்ஷணயா சொல்லுகிறதென்றருளிச்செய்கிருர் (பிறைபோலே) என்று.(உருமுபோலேயாய்) என்றது-"உருமின்" என்றவிடத்தில், இன் - சாரியையாய், இடியின் த்வநிபோலேயிருக்கிற குரலையொத்ததாயிருக்குமென்கை. "மாறை" மறையென்று குறைந்துகிடக்கிறதாய், சாத்ரவத்தைச்சொல்லுகிற தென்றர்த்தாந்தரம் (மாருயித்யாதி).

பறையை வர்ணிப்பானென்னென்ன வருளிச்செய்கிருர் (கன்றவித்யாதி). ... ... (கூ)

மூ.—பார்மன்னு தொல்புகழ் பல்லவர்கோன்
பணிந்த பரமேச்சுரவிண்ணகர்மேல்
கார்மன்னுநீள்வயல் மங்கையர்தம்
தலைவன்கலிகன்றி குன்றுதுரைத்த
சீர்மன்னு செந்தமிழ் மாலைவல்லார்
திருமாமகள்தன் னருளா லுலகில்
தேர்மன்னரா யொலி மா கடல் சூழ்
செழுநீ ருலகாண்டு திகழ்வர்களே. (கo)

திருமங்கை யாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பார்	பூமியிலே	கலிகன்றி	ஆழ்வார் [யாதப்டி
மன்னு	நிலைநின்ற	குன்றுது	லக்ஷணங்கள் குன்ற
தொல்	பழையதான	உரைத்த	அருளிச்செய்த தாய்
புகழ்	புகழையுடைய	சீர்	பகவத்குணங்கள்
பல்லவர்கோன்	பல்லவராஜா	மன்னு	பொருந்தியிருக்கிற
பணிந்த	ஆஸ்ரயித்த	செம்	அழகிய
பரமேச்சுரவிண்ணகர்மேல்	பரமேஸ்வரவிண்ணகரம்விஷயமாக	தமிழ்மாலை	தமிழ்த்தொடையை
		வல்லார்	அர்த்தத்துடன் அதிகரிக்கவல்லவர்கள்
கார்	கறுப்பு	திருமாமகள்தன்	பெரியபிராட்டியாருடைய
மன்னு	பொருந்திய	அருளால்	கடாக்ஷத்தாலே
நீள்	பெரிய	உலகில்	லோகத்திலே
வயல்	வயலையுடைய	தேர்	மஹாரதரான
மங்கையர்தம்	திருமங்கைக்கு	மன்னராய்	ராஜாக்களாய்
தலைவன்	ராஜாவான		

ஒலி	சப்திக்கிற	நீர்	நீரையுடைய
மாகடல்	பெரியஸமுத்ரத்தால்	உலகு	பூமியை
சூழ்	சூழப்பட்டு	ஆண்டு	பரிபாலநம்பண்ணி
செழு	அழகிய	திகழ்வர்கள்	விளங்குவர்கள். (க0)

வ்யா.—பத்தாம்பாட்டு. (பாரித்யாதி) பூமியிலே நிலைநின்ற பழைதான புகழையுடைய பல்லவர்கோன்பணிந்த பரமேச்சுரவிண்ணகர்மேல். (காரித்யாதி) †சினைகொண்டவயலை யுடைத்தாயிருக்குமாயிற்று. முக்தர் பஞ்சவிம்சதிவார்ஷிகரா யிருக்குமாபோலே. (க) "கருநெல்சூழ் கண்ணமங்கை" என்னக்கடவதிறே. (குன்றுதித்யாதி) கவிக்குச்சொல்லுகிற லக்ஷணங்கள் ஒன்றுங்குறையாதபடி அருளிச்செய்த, பகவத்குணங்கள் நெருங்கத்தொடுத்த செவ்விய தமிழ்த்தொடை வல்லார்; பெரியபிராட்டியாருடைய கடாக்ஷத்தாலே லோகத்திலே மஹாரதராய்க், கடல்சூழ்ந்த பூமியையடைய ஆண்டு; (திகழ்வர்களே)உஜ்ஜ்வலராவர்கள். †இந்த ஐஶ்வர்யமடைய †மலடாய்ப் போகாமே இவரைப்போலே பாகவதசேஷமாக்கப் பெறுவர்.

ஆக, இத்திருமொழியால், ஸர்வேஶ்வரன் விரும்பும் நிலமாகையாலே இத்தேசம் ஆஶ்ரயணீய மென்றும், அதுதான் ஸர்வஸமாஶ்ரயணீய மென்றும் சொல்லிற்றாயிற்று. அதாகிறது - சமதமாத்யுபேதர்க்கிறே ஆஶ்ரயணத்திலதிகார முள்ளது; அவையில்லாதவனும் (ஜந்து) தாந்தனுயாஶ்ரயிக்கும் படியான தேசமிறே. (க0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (பாரித்யாதி) "கார்" என்று கறுப்பாய், கறுத்துத் திரண்டேறுகிற தசாவிசேஷத்தைச் சொல்லுகிறதென்றருளிச்செய்கிறார் (சினைகொண்டவித்யாதி). சினைகொள்ளுகை-செழித்திருக்கை. "செழுநீர்" என்று ஊற்றுநீரைச் சொல்லுகை ஸ்பஷ்டமென்றருளிச்செய்கிறார் (பூமியை) என்று. ஔஜ்ஜ்வல்யந்தன்னை விவரிக்கிறார் (இந்தவித்யாதி). (மலடாய்) - ஸ்வபோகமாத்ரத்துக்குடலாய். ... ... (க0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்தில் ஒன்பதாந்திருமொழி முடிந்தது.

(க க0 - க - க -

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி - உ - ம் பத்து - க௦ - ம் திருமொழி

மஞ்சாடு ப்ரவேசம்.

(*)

வ்யா.—(க) †"𑌯𑍁𑌦𑍍𑌧𑍇𑌚𑌾𑌪𑍍𑌯𑌪𑌲𑌾𑌯𑌨𑌮𑍍-யுத்தேசாப்யபலாயநம்" என்றும், (உ) "𑌈𑌶𑍍𑌵𑌰𑌭𑌾𑌵𑌶𑍍𑌚 - ஈஶ்வரபாவஶ்ச" என்றும் சொல்லும்படியான†வனுங்கூட ஆஶ்ரயித்தபடியை யநுஸந்தித்தார்; †ஸ்வவர்ணத்துக்கும் ஸ்வாஶ்ரமத்துக்கும் உசிதமான கர்மங்களை பலா (𑌫𑌲) பிஸந்திரஹிதமாக பகவத்ஸமாராதந புத்யா அநுஷ்டித்து சமதமாத்யுபேதராயிருக்கிற ப்ராஹ்மணர்க்கு ஆஶ்ரயணீயனைக்கொண்டு பிராட்டிமாரும் தானுமாகத் திருக்கோவலூரிலே வந்துநின்றான், அவை ஒன்றுமில்லாத நான் அவனை அங்கேகண்டு அநுபவிக்கப் பெற்றேனென்கிறார். ... ... *

அரு.—மஞ்சாடு ப்ரவேசம் - வ்ருத்தவர்த்திஷ்ய மாணார்த்தகதந பூர்வகம் ஸங்கதியருளிச்செய்கிறார் (யுத்தேசேத்யாதி). "𑌯𑍁𑌦𑍍𑌧𑍇𑌚𑌾𑌪𑍍𑌯𑌪𑌲𑌾𑌯𑌨𑌮𑍍,-யுத்தேசாப்யபலாயநம்" என்றது-க்ஷத்ரியதர்மமேயாகிலும், (ந.)"தென்னன் கொண்டாடும் தென்திருமாலிருஞ்சோலை" என்கிறபடியே உகந்தருளின நிலத்தில் ப்ரவணனை தென்னவனை வெல்லுகையாலே கேவலமபிமாந கார்யமென்று தோற்றுகையால் ஸாத்விகதர்மமன்றென்று கருத்து. "ஈஶ்வரபாவஶ்ச." என்றது-"ஈஶ்வரோஹம்" என்கிற அபிப்ராயமுண்டென்கை. (அவனுங்கூட) என்கையாலே, தாமங்கே கண்டநுபவித்தது ஆஶ்சர்யமன்றென்று கருத்து. சமதமாத்யுபேதர் ஆஶ்ரயிக்கும் திருக்கோவலூரில் நான்கண்டநுபவிக்கப் பெற்றது ஆஶ்சர்யமென்கிற தென்றருளிச் செய்கிறார் (ஸ்வவர்ணத்துக்கு மித்யாதி) ... ... *

மூ.—மஞ்சாடு வரையேழும் கடல்களேழும்
வானகமும் மண்ணகமும் மற்று மெல்லாம்
எஞ்சாமல் வயிற்றடக்கி யாலின்மேலோ
ரிளந்தளிரில் கண்வளர்ந்த வீசன்றன்னைத்
துஞ்சாநீர்வளம்சுரக்கும் பெண்ணைத்தென்பால்
தூய நான்மறையாளர் சோமுச்செய்யச்
செஞ்சாலி விளை வயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே. (க)

(க) ரா - (உ) (க) பெரி - திரு - ச - உ - ௭.

பதம்.	உரை.
மஞ்சு	மேகங்கள்
ஆடு	ஸஞ்சரிக்கிற
வரையேழும்	ஸப்தகுலபர்வதங்களும்
கடல்களேழும்	ஸப்தஸமுத்ரங்களும்
வானகமும்	ஸ்வர்க்காதிலோகங்களும்
மண்ணகமும்	பூமியும்
மற்றும்	மற்றுமுண்டான
எல்லாம்	எல்லாப்பதார்த்தங்களும்
எஞ்சாமல்	நசியாமல்
வயிறு	திருவயிற்றிலே
அடக்கி	எடுத்துவைத்து
ஓர்	ஒப்பற்ற
ஆலின்	ஆலிலையின்
இளந்தளிரின் மேல்	இளந்தளிரிலே
கண்வளர்ந்த	யோகநித்ரை கொண்டருளின
ஈசன்றன்னை	ஆபத்ஸகனான ஸர்வேஶ்வரனை,
துஞ்சா	மாறாதே
வளம்நீர்	ஸம்ருத்தமானஜலம்

பதம்.	உரை.
சுரக்கும்	பெருகாநின்றுள்ள
பெண்ணைத்தென்பால்	பெண்ணையாற்றுத் தென்கரையிலே
தூய	அநந்யப்ரயோஜநராய்
நான்மறையாளர்	நான்குவேதத்துக்கும் நிர்வாஹகரானவர்கள்
சோமு	ஸோமயாகங்களை
செய்ய	பண்ண (அத்தாலே)
செஞ்சாலி	செந்நெல்
விளை	விளையாநிற்கிற
வயலுள்	வயலிலே
திகழ்ந்து	அழகியதாக
தோன்றும்	தோன்றுகிற
திருக்கோவலூரதனுள்	திருக்கோவலூரிலே
நான்கண்டேன்	நான்காணப்பெற்றேன். (௧)

வ்யா.—முதற்பாட்டு. †ஆபத்ஸகன் என்கிறது. (மஞ்சாடித்யாதி) †மேகங்கள் ஸஞ்சரியாநிற்பதாய், பூமிக்கு ஆணியடித்தாற்போலேயிருக்கிற மலைகளேழும், இதுக்கடைய அகழ்போலே சூழ்ந்து கொடுநிற்கிற கடல்களேழும், இவற்றுக்கடைய அவகாசப்ரதாநம்பண்ணுகிற ஆகாசமும், இவற்றுக்கு ஆதாரமான பூமியும், இவற்றுக்குட்பட்ட அநுக்தமான ஸர்வபதார்த்தங்களும். (எஞ்சாமல்) இவைசுருங்கி அழிந்துபோகாதபடியாகத் திருவயிற்றிலேயெடுத்துவைத்து, †ப்ரளயத்துக்கு அஞ்சவுமறியாதே, ஓராலின்மேலே, அதுதன்னிலும் ஒருபவனான இளந்தளிரிலே யோகநித்ரை கொண்டருளின; †ஆதாராதேயபாவம் தன் புத்த்யதீநமாம்படியிருக்கிற ஸர்வேஶ்வரனை. (௧) †"ஆலன்று வேலை நீருள்ளதோ" †என்கிறபடியே.

(துஞ்சாநீரித்யாதி) நீர்வரவு மாறாதே யிருப்பதாய், பொன், முத்து, மாணிக்கங்களை யடையக் கொழித்து § எறடாநின்றுள்ள பெண்ணைத் தென்கரையிலே. (தூயவித்யாதி) அநந்யப்ரயோஜநரானர் ஸோமயாகங்களைப்பண்ண. (செஞ்சாலியித்யாதி) அவர்கள் (ஃலு) பலாபிஸந்திரஹிதமாகச்செய்தாலும், கிழக்கு நோக்கிப் போ

(௧) ௧ - திரு - ௭௦. § (பா) ஓடாநிற்கிற.

மவனுக்கங்கொரு தேசப்ராப்தியும், மேற்குநோக்கிப்போமவனுக்கு அங்கேயொரு தேசப்ராப்தியும் தவிராதாப்போலே, செய்தவற்றுக்கு பகவதபிப்ராயத்தாலே ஒருபலம் வரத்தவிராதிறே; ஆகையாலே த்ருஷ்டபலங்கள் ஸம்ருத்தமாய்ச் செல்லாநிற்குமாயிற்று. செஞ்சாலியுண்டு - செந்நெல், அதுவிளைகிற வயலிலே திகழ்ந்து தோன்றாநின்றுள்ள திருக்கோவலூரிலே நான் காணப்பெற்றேனென்கிறார். ... ... (௧)

அரு.—முதற்பாட்டு.—(மஞ்சாடித்யாதி) பூர்வார்த்தத்துக்குத் தொகுத்த பாவம் (ஆபத்ஸகனித்யாதி). "வரையேழும்" இத்யாதிகளில் சகாரங்கள் உக்த ஸமுச்சயங்களன்றிக்கே ப்ராதாந்யத்திலேயாக்கி அவ்வவற்றுக்குள்ள ஏற்றங்களை யருளிச்செய்கிறார் (மேகங்களித்யாதி). ஈஸனை என்னாதே "தன்னை" என்றத்தால் தோற்றின தானானதன்மை சைசவம் என்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (ப்ரளயத்துக்கஞ்சவு மறியாதே) என்று. வரைதுடக்கமான குருதர பதார்த்தங்களை அதிகோமளமான தன்வயிற்றில் வைத்ததும், தன்னிலுமிளந்தளிரில் தான்கண் வளர்ந்ததும் உபபந்ந மாகைக்கு ஹேது வீரனாகை யென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (ஆதாரேத்யாதி). இவற்றுக்குத் தன் திருமேனி ஆதாரமாகையும், தன் திருமேனிக்கு ஆலிலை ஆதாரமாகையும், இவை ஆதேயமாகையும், தன்ஸங்கல்பாதீநமென்றுகருத்து. அப்படி அவன் புத்த்யதீநமாயிருக்குமோவென்னவருளிச்செய்கிறார் (ஆலன்றித்யாதி). (என்கிறபடியே) இருக்கும் என்று சேஷம். ... ... (௧)

மூ.—கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம்
தீபங்கொண்டமரர் தொழப் பணங்கொள் பாம்பில்
சந்தணி மென்முலை மலராள் தரணிமங்கை
தாமிருவரடி வருடும்தன்மையானை
வந்தனைசெய் திசையேழாறங்கமைந்து
வளர்வேள்வி நான்மறைகள் மூன்றுதீயும்
சிந்தனைசெய் திருபொழுது மொன்றுஞ்செல்வத்
திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கொந்துஅலர்ந்த	கொத்துக்கொத்தாக அலராநின்றுள்ள	தூபம்	தூபத்தையும்
நறு	பரிமளத்தையுடைய	தீபம்	தீபத்தையும்
துழாய்	திருத்துழாய்மாலையையும்	கொண்டு	கையிலேந்திக்கொண்[டு
சாந்தம்	சந்தத்தையும்	அமரர்	பிரமன்முதலானோர்
		தொழ	ஆஶ்ரயிக்கும்படி [ய
		பணம்கொள்	பரந்தபடத்தையுடை

பாம்பில்	திருவனந்தாழ்வான் மேலே
சந்து	சந்தநத்தாலே
அணி	அலங்கரிக்கப்பட்ட
மெல்	ம்ருதுவான
முலை	முலையையுடையளாய்
மலராள்	தாமரைப்பூவில்பிறந்தபெரியபிராட்டியாரும்
தரணிமங்கை	ஸ்ரீபூமிப்பிராட்டியுமாகிற
இருவர்தாம்	இருவரும்
அடி	திருவடிகளை
வருடும்	திருக்கையாலேஸ்பர்சிக்கவிருக்கிற
தன்மையானை	ஸ்வபாவத்தையுடையஸர்வேஶ்வரனை,
எழுஇசை	ஸப்தஸ்வரங்களையும்
ஆறுஅங்கம்	ஆறுஅங்கங்களையும்
ஐந்துவளர்வேள்வி	பஞ்சமஹாயஜ்ஞங்களையும்
மூன்றுதீயும்	மூன்றுஅக்நிகளையும் கொண்டு
வந்தனைசெய்து	அவனையாஶ்ரயித்து
நால்மறைகள்	நான்குவேதங்களைக்கொண்டு
இருபொழுதும்	இரவும்பகலும்
சிந்தனைசெய்து	அநுஸந்தித்து
ஒன்றும்	ஆஶ்ரயிக்கிற
செல்வம்	ஸம்பத்தையுடைய
திருக்கோவலூரதனுள்நான்கண்டேன்.	

வ்யா—இரண்டாம்பாட்டு. (கொந்தலர்ந்த வித்யாதி) கொந்தலரா நின்றுள்ள செவ்வித்திருத்துழாய் மாலையையும், கந்த தூப தீபங்களையும்கொண்டு ப்ரஹ்மாதிகள் †இக்கரையிலேநின்று ஆஶ்ரயியாநிற்பர்களாயிற்று. (பணமித்யாதி) தன்னோட்டை ஸ்பர்சத்தாலே விகஸிதமாகாநின்றுள்ள திருவநந்தாழ்வான் மேலே, போகயோக்யமாம்படி ஒப்பித்திருக்கிற பெரியபிராட்டியாரும் ஶ்ரீபூமிப்பிராட்டியாருமாகிற இருவரும். ஆஶ்ரயிக்கிற ப்ரஹ்மாதிகளுடைய குற்றமில்லாமை எத்துவாரும், குற்றங்காணுமைக்கு உவாத்தாயிருப்பாருமாயிற்று. (அடிவருடும்) ஸர்வஜ்ஞனைகயாலே அவனறியப்புக்காலும் தங்களுடைய திருக்கை ஸ்பர்சத்தாலே அவன்மயங்கி உறங்கும்படி பண்ணுவர்களாயிற்று.

(வந்தனையித்யாதி) க்ருதப்ரணாமராய், †எழிசையாலும், ஆறங்கங்களாலும், பஞ்ச†மஹாயஜ்ஞங்களாலும், மூன்றக்நிகளாலும், வந்தனைசெய்து-அவனை ஆஶ்ரயித்து. நான்மறைகளைக்கொண்டு; (சிந்தனைசெய்து) (க) "𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍇𑌵 𑌤𑍁 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍-ஆத்மேத்யேவது க்ருஹ்ணீயாத்" (உ) "𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌪𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌗𑍍𑌰𑌾𑌹𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚 - ஆத்மேதிதூபகச்சந்திக்ராஹயந்திச" என்கிறபடியே அவனை ப்ரகாரியாகவும், தங்களை ப்ரகாரமாகவும், காலங்கள்தோறும் ஒருபடிப்பட அநுஸந்தித்துச் செல்லுகிற அந்த†ப்ராஹ்மியான லக்ஷ்மி மாறாதே செல்லுமாயிற்று.

(க) டங்கபாஷ்யம் (உ) சா-மீ-ஸூ-

அந.—இரண்டாம்பாட்டு.—(கொந்தித்யாதி) ப்ரளய காலத்தில் ஆபத்ஸகனாய் ஆலிலையில் கண்வளர்ந்தபடியை யநுஸந்தித்தார் கீழ்ப்பாட்டில்; இதில், ப்ரளயம் கழிந்தபின்பும் ப்ரஹ்மாதிகள் கூக்குரல்கேட்கத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தபடியை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

கொந்தலராநின்றுள்ள - கொத்துக் கொத்தாக அலராநின்றுள்ள. (இக்கரையிலே) - திருப்பாற்கடலுக்கிக்கரையிலே. "அமரர்" என்றது-நித்யஸூரிகளாக நஞ்சீயர்படி. "சந்தணிமென்முலை மலராள்" என்றதுக்கு, "சந்தநமணியப்பட்ட ம்ருதுவான முலையையுடைய அலர்மேல் மங்கை" என்று நஞ்சீயர்படியில் சப்தார்த்தம் கண்டுகொள்வது.

(ஏழிசையாலும்)-ஸப்தஸ்வரத்தாலும். "வளர்" என்றதினர்த்தம் (மஹா) என்றது. (ப்ராஹ்மி) என்றது - ப்ரஹ்மஸம்பந்தியான லக்ஷ்மியென்கை. அதாவது - பகவதுபாஸநரூப ஸம்பத்தென்கை. ... ... (உ)

மூ.—கொழுந்தலரும்மலர்ச்சோலைக் சூழாங்கொள்பொய்கைக்
கோள்முதலைவாளெயிற்றுக் கொண்டற்கெள்கி
அழுந்திய மாகளிற்றினுக் கன்றாழி யேந்தி
யந்தர மேவரத்தோன்றி யருள்செய்தானை
எழுந்த மலர்க்கருநீல மிருந்தில் காட்ட
இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்டச்
செழுந்தடநீர்க்கமலம் தீவிகைபோல்காட்டும்
திருக்கோவலூரதனுள் கண்டேன்நானே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கொழுந்து	தளிர்களையும்	அன்று	ஆதிமூலமேயென்று
அலரும்	விகஸிக்கிற [ய		கூப்பிட்ட அக்கா
மலர்	புஷ்பங்களையுமுடை		லத்தில்
சோலைக்குழாங்	சோலைசூழ்ந்திருந்து	ஆழி	திருவாழியை [ண்டு
கொள்	ள்ள	ஏந்தி	கையிலேந்திக்கொ
பொய்கை	தடாகத்திலே [தலை	அந்தரம்	ஆகாசம்
கோள்முதலை	மிடுக்கையுடைய மு	ஏவர	வெளியடையும்படி
வாள்	வாள்போன்ற	தோன்றி	தோற்றி
எயிறு	பற்களினால்	அருள்செய்தா	(அவ்வானைக்கு) க்ரு
கொண்டற்கு	க்ரஹித்ததற்கு	னை	பைபண்ணினவனை,
எள்கி	மெலிந்து	எழுந்த	நீரிலுண்டான்
அழுந்திய	(மடுவிலே) முழுகின	கருநீலமலர்	கருநெய்தற்பூ
மாகளிற்றினுக்	மதித்தகஜேந்த்ராழ்	இருந்தில்	கரியை
கு	வானுக்காக	காட்ட	காட்டவும்

இரும்புன்னை	பெரியபுன்னைமரங்கள் (மொட்டாலே)	செழுநீர்	நீர்ச்செழிப்பையுடைய
முத்துக்காட்ட	முத்துக்களைக்காட்டவும்	தடம்	தடாகங்களிலே
அரும்பி	மலர்ந்து	கமலம்	தாமரைகள்
செம்பொன்காட்ட	பசும்பொன்னைக்காட்டவும்	தீவிகைபோல்	விளக்குப்போலே
		காட்டும்	தோன்றுகிற

திருக்கோவலூரதனுள் நான் கண்டேன். (ங)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (கொழுந்தித்யாதி) கொழுந்தையும் அலருகிற மலரையுமுடைய சோலைசூழ்ந்த பொய்கையிலே. (கோள் முதலை) ம்ருத்யுபோலே †இத்தையடைய முடிக்கவந்த முதலை, வாள்போலே யிருக்கிற எயிற்றாலே இத்தைக்ரஹித்ததாயிற்று. அதுக்கு, (எள்கி) ஈடுபட்டு. (அழுந்தியவித்யாதி) வாயிலே அகப்பட்ட நீர்புகும்படி யழுந்தின மத்தகஜத்துக்காக. (அன்று) தன் மிடுக்கற்ற அன்று. (ஆழியேந்தி) கையில் திருவாழியையும்விட அறியாதே ஆகாசாவகாசத்தை இடமடைத்துக்கொண்டு தோற்றி. (அருள்செய்தானை). ஏவர - வெளியடைய. †அதினுடைய புண்ணாறும்படியாகத் திருக்கையாலே ஸ்பர்சித்துத் திருப்பரியட்டத் தலையாலே ஒற்றிப்பண்ணின சிசிரோபசாரங்களை நினைக்கிறது.

(எழுந்தவித்யாதி) எழுந்தமலரை யுடைத்தான கறுத்த நீலமானது. (இருந்தில்) கரியைக்காட்ட; பெரியபுன்னைகளானவை மொட்டாலும் அலர்ந்த பூவாலுமாகப் பொன்னையும் முத்தையுங் காட்ட. மிக்கஜலத்தை யுடைத்தான தடாகங்களில் தாமரைகளானவை, தீபிகைகளைக்காட்டாநிற்குமாயிற்று; ஆகக், கரியும் முத்தும் நெருப்பும் பொன்னுமாய்ப் † பொற்களரிபோலேயாயிற்று வயலடைய விருப்பது. ... ... (ங)

அரு.—மூன்றாம்பாட்டு. (கொழுந்தித்யாதி). ப்ரயோஜநாந்தரபரரான ப்ரஹ்மாதிகளுக்கு உதவவந்தமாத்ரமன்றிக்கே ஸ்ரீகஜேந்த்ராழ்வானுபத்தைப்போக்கினனென்று அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(இத்தையடைய) என்றது - காலைத்தண்டித்துக்கொண்டு போகையன்றிக்கே ஆனையெல்லாமென்றபடி. அருள்செய்த ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் (அதினுடையவித்யாதி).

§(பொற்களரி) - ‡கண்வட்டஸ்த்தலம். ... ... (ங)

§ பொற்களரி - பொன்பணிசெய்கிறவிடம்.

‡ கண்வட்டஸ்த்தலம் - டங்கசாலை.

மூ.—தாங்கரும்போர் மாலி படப் பறவையூர்ந்து
தராதலத்தோர் குறைமுடித்த தன்மையானை
ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்புகூரு
மடியவர்கட் காரமுதமானான் றன்னைக்
கோங்கரும்பு சுரபுன்னைக் குரவார்சோலைக்
குழாவரிவண்டிசைபாடும் பாடல்கேட்டுத்
தீங்கரும்பு கண்வளருங் கழனிசூழ்ந்த
திருக்கோவலூரதனுள் கண்டேன்நானே. (௪)

பதம்.	உரை.
தாங்குஅரும்	ஒருவராலும் தாங்கவொண்ணாதபடி
போர்	யுத்தம்பண்ணும்
மாலி	மாலி (துடக்கமான ராக்ஷஸர்கள்)
பட	முடியும்படி
பறவை	பெரியதிருவடியை
ஊர்ந்து	நடத்தி [ய
தராதலத்தோர்	பூமியிலுள்ளாருடை
குறை	குறைகளை
முடித்த	போக்கின [யனாய்,
தன்மையானை	ஸ்வபாவத்தையுடை
ஆங்கு	விரோதியைப்போக்கின ஸமயத்திலே
கண்ணீர்	கண்ணநீர்
அரும்பி	உண்டாய்
சோர்ந்து	பெருகி
அன்புகூரும்	அன்புமிக்க
அடியவர்கட்கு	சேஷபூதர்க்கு
ஆர்	பரிபூர்ணமான
அமுதமானான்றன்னை	அம்ருதம்போலே போக்யனானவனை;
கோங்குஅரும்பு	கோங்கம்பூக்களும்
சுரபுன்னை	ஸுரபுன்னைகளும்
குரவு	குரவுகளும்
ஆர்	செறிந்த
சோலை	பொழில்களிலே
வரி	ரேகைகளையுடைய
வண்டு	வண்டுகளின்
குழாம்	ஸமூஹமானது (மதுபானமத்தமாய்க்கொண்டு)
இசைபாடும்	இசைபாடுகிற
பாடல்கேட்டு	பாட்டைக்கேட்டு
தீம்கரும்பு	இனியகரும்புகள்
கண்வளரும்	ஒருகண்எறிவளருகிற
கழனி	கழனிகளால்
சூழ்ந்த	சூழப்பட்ட
திருக்கோவலூரதனுள் நான் கண்டேன். (௪)	

வ்யா.—நாலாம்பாட்டு. (தாங்கருமித்யாதி) †பழம்புற்று பாம்பாறுதாப்போலே ராவணனுக்கு முன்பு மாலியுள்ளிட்ட துர்வர்க்கம் பாறுதேயாயிற்று லங்கையிருப்பது; அவர்களைநிரஸித்தபடி. †ஒருவரால் தாங்க அரிதாம்படி யுத்தத்தில் வ்யாபாரத்தையுடைய மாலி படும்படியாகப் பெரிய திருவடியை நடத்தி. (தராதலம்) அரைக்ஷணம் பின்னையும் மாலியிருந்தானாகில் ஜகத்தடைய அழியுமாயிற்று. (ஆங்கித்யாதி) †ஸ்வவிஷயத்தில் ப்ரேமத்தாலே கண்ணநீரரும்பி, அதுதான் கண்ணைவிட்டுச்சோர, ப்ரேமபரவசராயிருக்கும் சேஷபூதர்க்கு நிரதிசயபோக்யனானவனை.

(கோங்கித்யாதி) கோங்கம்பூக்களும், ஸாரபுன்னைகளும், †குரவுகளும் மிக்கிருந்துள்ள சோலையிலே திரண்ட வண்டுகளானவை மதுபாநமத்தமாய்ப்பாடுகிற பாட்டைக்கேட்டு; அத்தாலே நீர்பாய்ந்தாற்போலே யிருக்கிற இனிய கரும்பானது ஒரு†கண்ணேறி வாரா நிற்குமாயிற்று. (ச)

அரு.—நாலாம்பாட்டு. (தாங்கருமித்யாதி) ஒருநீர் புழுவைவென்று ஆனைக்கு உதவினவளவன்றிக்கே, புவியிலுள்ளார்க்கெல்லாம் ஆபத்துநீங்கும்படி மாவலியைவென்ற ஆபத்ஸகத்வத்தை யருளிச்செய்கிறாரென்று திருவுள்ளம்பற்றி, மாலி அத்தனை விரோதியோவென்ன வருளிச்செய்கிறார் (பழம்புற்றித்யாதி). வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (ஒருவராலித்யாதி). "ஆங்கு" விரோதி நிரஸநஸமயத்திலேயென்றாய், பலிதார்த்தமருளிச்செய்கிறார் (ஸ்வவிஷயத்திலித்யாதி).

(குரவுகள்) - வ்ருக்ஷவிசேஷங்கள். (கண்ணேறிவருகை) ஒருகணுவானது ஏறிவருமென்கை. ... ... (ச)

ரு —கறைவளர்வேல் கரன்முதலாக்கவந்தன்வாலி
கணையொன்றினால் மடிய விலங்கைதன்னுள்
பிறையெயிற்று வாளரக்கர் சேனையெல்லாம்
பெருந்தகையோடுடன் றுணித்த பெம்மான்றன்னை
மறைவளரப் புகழ்வளர மாடந்தோறும்
மண்டபமொண்டொளியனைத்தும் வாரமோதச்
சிறையணைந்த பொழிலணைந்த தென்றல்வீசும்
திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கறைவளர்	மிக்ககறையையுடை	வாள்	வாளை ஆயுதமாகவுடையரான
வேல்	வேலையுடையரான[ய		
கரன்முதலா	கரன்துடக்கமான	அரக்கர்சேனை யெல்லாம்	ராக்ஷஸஸேனையை யெல்லாம்
கவந்தன்வாலி	கபந்தன் வாலி என்கிறவிவர்கள்		
		பெருந்தகையோடுஉடன்	அவரவர்கள் ஸ்வாமியாரான ராவணனோடேகூட
கணை ஒன்றினால்	ஓரம்பாலே		
மடிய	முடியும்படி	துணித்த	அறுத்துப்பொகட்ட
இலங்கைதன்னுள்	லங்கையில்	பெம்மான்றன்னை	ஸர்வேஶ்வரனை,
பிறை	பிறைபோலேவளைந்த	மாடந்தோறும்	க்ருஹங்கள்தோறும்
எயிறு	எயிற்றையுடையராய்	மறை	வேதகோஷமானது

வளர	மிக்குவரவும்	சிறை	நீரரணை
புகழ்	கீர்த்தி	அணைந்த	அணைந்திருக்கிற
வளர	வளரவும்	பொழில்	சோலையிலே
மண்டபம்	மண்டபங்களிலும்	அணைந்த	படிந்த
ஒண்டு	ஊரைக்கிட்டின	தென்றல்	தென்றல்காற்றானது
ஒளியணைத்தும்	சாவடிகளிலும்	வீசும்	பரிமளத்தை தவீசுகிற
வாரம்[illegible]	ஓதினவிடத்தை உருச்சொல்லவும்	திருக்கோவலூரதனுள் நான் கண்டேன். (ரு)	

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (கறையித்யாதி) பரஹிம்ஸையில் த்வரையாலும், எப்போதுமொக்க சத்ருநிரஸநம் பண்ணுகையாலும், கறைகழுவுகைக்கு அவகாசமின்றிக்கே யிருக்கையாலே மிக்க கறையை யுடைத்தாயிருக்கிற வேலையுடைய கரன்றுடக்கமாக கபந்தன், வாலி, என்கிற இவர்கள். †கரன் விராதன் இவர்கள்வந்து தோற்றுகிறபோது, ஸிம்ஹங்கள் புலிகள் இவற்றைச் சூலத்திலே கோத்துக்கொண்டுவந்திறே தோற்றுவது. (கணையொன்றினால்மடிய) கைக்கெட்டிற்றோர் அம்பாலே முடித்தானிறே. †தலைக்காவலிருந்தவர்கள் பட்ட†திது. (இலங்கையித்யாதி) இலங்கையில் பிறைபோலே யிருக்கிற எயிற்றையுடையருமாய், ஸாயுதருமாயிருக்கிற ராக்ஷஸஸேனையெல்லாம். (பெருந்தகையித்யாதி) "பெருந்தகை" என்றது - பெரியோன் என்றபடி; பெருந்தகை - நிர்வாஹகன், ராஜனிறே. இவர்களுக்கடைய ப்ரபுவாய், அஞ்சினன்புகலிடமாய், அரிதிசெய்த பையல்களுக்குப்புக்கொதுங்குகைக்கு நிழலாயிருக்கிற†ராவணனோடேகூட அழியச்செய்த ஸ்வாமிதன்னை. உடையவனிறே க்ஷேத்ரத்தில் களைபிடுங்குவான்.

ராவணவதாநந்தரத்தில் ஸ்ரீதண்டகாரண்யத்தில் †அத்யயநா†நுவாகங்கள் மாறுதாப்போலேயாயிற்று அவன்பட்டபின்பு திருக்கோவலூரும். (மாடந்தோறும்) க்ருஹங்கள்தோறும், வேதகோஷமானது மிக்குவர, அந்த வேதகோஷத்தினுடைய அவிச்சேதத்தால் வந்த கீர்த்தி மிக்குவர. இதுவாயிற்று க்ருஹங்களிருக்கும்படி. மண்டபங்கள், (ஒண்டொளி) அழகியதோளி. "தோளி" என்கிறத்தைக் குறைத்து தொளியாய், ப்ரதோளி என்றபடி. மண்டபங்களிலும், நாற்சந்திகளிலும், †வட்டக்கிடை ஓதாநிற்பர்கள். (சிறையித்யாதி) †காவல்பட்டிருக்கும்படி. காற்றுப்புகுதல் (க) †*காற்றில்

(க) பெரு - திரு - உ - கo - க.

கடியவன்புகுதல் செய்யுமித்தனை. ஊரரணான அகழை அணைந்திருந் துள்ள சோலையிலேபுக்கு அணைந்த தென்றலானது அந்நீர்நிலத்தில் திவலைகளையும் சோலையில் பரிமளத்தையும் கொண்டுவந்து இவ்வோ இடங்களில் அத்த்யயநம்பண்ணுகிறவர்களுடைய ஶ்ரமமாறும்படி சிசிரோபசாரம்பண்ணுமாயிற்று. †ஒளி - †ஒழுங்கை. †ஊரருகணைந் திருக்கை என்னுதல். †நீர்ச்சிறை. ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (கறையித்யாதி) கீழ்ப்பாட்டில் இலங்கையில் மாலியைவென்றபடி யநுஸந்தித்தார்; இப்பாட்டில் இலங்கையில் துர்வர்க் கத்துக்கெல்லாம் ஒதுங்கநிழலாய், தலைபத்துப் படைத்தானை வென்ற ஆபத் ஸகத்வத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

கறைவளருகைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (கரணித்யாதி). விராதனை இப்பாட்டிலே எடாவிட்டாலும், பெருமாள் அவனையும் வெல்லுகையால் அவனையும் சொல்லலாமென்று திருவுள்ளம். மேலுக்கவதாரிகை (தலைக்கா வலித்யாதி). (இது) என்றவநந்தரம், முதலாளிபட்டபடி யருளிச்செய்கிறார் என்று சேஷம். வாக்யார்த்தந்தன்னை யருளிச்செய்கிறார் (இவர்களுக்கித் யாதி). ஸமபிவ்யாஹாரதாத்பர்ய மருளிச்செய்கிறார் (ராவணேத்யாதி). (அத் த்யயநம்) சொல்லுகை. (அநுவாகம்) - அநூக்தியாய், உருச்சொல்லுகை. (வட்டக்கிடை) ஓதினவிடத்தைச்சொல்லுகை. "வாரமோத" என்றதுக்கு "பரீக்ஷைசொல்ல" என்று நஞ்சீயர்படி. "சிறை" என்றதினர்த்தம் (காவல்) என்றது. காவல்பட்டிருந்ததாகில், மேல் "தென்றல்வீசும்" என்றபடி யெங் ஙனே? அவ்வூருக்குக் காற்றடிக்கப்போமோவென்ன ரஸோக்திமுகத்தால் பரிஹரிக்கிறார் (காற்றித்யாதி). *காற்றில் கடியனாயோடியகம்புகும் ஆயனார்க் கும் அங்குள்ளார்க்கு சிசிரோபசாரம்பண்ணுகிற காற்றுக்குமொழிய, ப்ரதி கூலர்க்கு துஷ்ப்ரவேசத்வம்ஸித்தமென்று கருத்து. "ஒண்தொளி" என்று பதவிபாகம்செய்து, ப்ரதோளி; அதனால் சந்தியாக்கிக் கீழருளிச்செய்து, "ஒண்டு ஒளி" என்று பதவிபாகம் திருவுள்ளம்பற்றி அர்த்தாந்தரமருளிச்செ ய்கிறார் (ஒளியித்யாதி). (ஒழுங்கை) சாவடி, ஒண்டுக்கர்த்தம் (ஊரித்யாதி). ஊரைக்கிட்டின சாவடிகளிலும் வாரமோதவென்றபடி. கீழே "சிறை"என்ற பதத்தாலே அகழைச்சொன்னபடி யெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (நீர்ச்சிறை) என்று. ஜலதுர்க்கமென்று கருத்து. ... ... (௫)

மூ.—உறியார்ந்த நறுவெண்ணெ யொளியால்சென்றங்
குண்டானைக் கண்டாய்ச்சி யுரலோடார்க்கத்
தறியார்ந்த கருங்களிறே போலநின்று
தடங்கண்கள்பனிமல்கும் தன்மையானை

வெறியார்ந்த மலர்மகள்நாமங்கையோடு
வியன்கலை யெண்டோளினள் விளங்குசெல்வச்
செறியார்ந்தமணிமாடம் திகழ்ந்துதோன்றும்
திருக்கோவலூரதனுள் கண்டேன்நானே. (சு)

பதம்	உரை.	பதம்.	உரை·
உறி	உறியிலே	தன்மையானை	ஸ்வபாவத்தையுடையவனை,
ஆர்ந்த	சேமித்துவைத்த	வெறிஆர்ந்த	பரிமளத்தையுடைய
நறு	செவ்விமாறாத	மலர்மகள்	தாமரைப்பூவில்பிறந்த பெரியபிராட்டியாரோடும்
வெண்ணெய்	வெண்ணெயை	நாமங்கையோடு	ஸரஸ்வதியோடும்
ஒளியால்	(ஸ்மிதம் பண்ணும் போது திருமுகத்தில் புறப்படும்) ஒளியாலே	வியன்	விஸ்மயநீயமான
அங்குசென்று	அங்கேகிட்டி	கலை	கலையை வாஹநமாக உடையளாய்
உண்டானை	அமுதுசெய்தவனை	எண்தோளினள்	எட்டுத்தோள்களையுடைய துர்க்கையோடும்
ஆய்ச்சி	யசோதைப்பிராட்டி	விளங்கு	விளங்குகிற
கண்டு	களவோடேகண்டு	செல்வம்	செல்வத்தையும்
உரலோடு	உரலோடே	செறிஆர்ந்த	மிகவும்செறிந்த
ஆர்க்க	சட்ட	மணிமாடம்	ரத்நமயமானமாடங்கள்
தறிஆர்ந்த	கம்பத்திலேசேர்த்துக்கட்டப்பட்ட	திகழ்ந்து	உஜ்ஜ்வலமாய்
கருங்களிறுபோல	கறுத்த ஆனைபோலே	தோன்றும்	தோற்றுகிற ஐஶ்வர்யத்தையுமுடைய
நின்று	கட்டுண்டிருந்து	திருக்கோவலூரதனுள் நான் கண்டேன். (சு)	
தடங்கண்கள்	பெரியதிருக்கண்கள்		
பனிமல்கும்	நீர் அரும்பும்படியான		

வ்யா.—ஆறும்பாட்டு. (உறியித்யாதி) உறியிலே வைத்துச் சிக்கெனக் கள்ளக்கயிறுமுருவி சேமித்துக் கடைந்தபோதைச் செவ்வி மாறாத வெண்ணெயை, †கடைகிறபோதே துடங்கி இதுகொடுபோய் சேமிக்குமிடம் அடியொத்தாகிற்குமாயிற்று. (ஒலியால்சென்றங் குண்டானை) †களவாலே யன்றியே; (க) "நாளிளந்திங்கள்" இத்யாதிப்படியே. †"மநுஷ்யரால் அபஹ்ருதமாயிற்றென்றல்ல, இதுதெய்வங்கொண்டது" என்னும்படியாக வாயிற்று அமுது செய்தது. (கண்டு)†அநுகூலஸ்பர்சமுள்ள த்ரவ்யம் தனக்கு தாரகமாய், அது பெறுதபோது அவன்முடியுமளவாயிருக்குமாபோலே, அவன் வ்யா

(க) தி - வாய் - ரு - அ - ரு.

பாரம் தங்களுக்கு ப்ராணகரமாயிருக்கும்படியாலே அத்தைத் தேடாநிற்பர்களிறே இவர்கள்; ஆகையாலே கொண்டியோடே பிடித்துக்கொண்டு.(ஆய்ச்சி)†பரிவுடையளாகையாலே §†விழுக்காடு அறியாமையாலே. (உரலோடார்க்க) இவனகப்பட்டபோதாக ஒன்றைத்தேடிப்போகில் இவன்தப்புமென்று ஸங்கிஷிதமாய்க்கிடந்ததொரு உரலைக்காலாலேவரஉருட்டி அத்தோடு அநுபந்திக்க. (தறியித்யாதி) மதித்து ஊரிலே மூலையடியே உழற்றிக்கொண்டு திரிகிற ஆனையானது யாத்ருச்சிகமாகப் பிடிபட்டு ஒருகம்பத்திலே சேர்த்துக் கட்டுண்டு நிற்குமாபோலே, தான்கண்டபடி திரிந்தவன் கட்டுண்டு, கண்ணில் பரப்படையப் பரப்புமாறும்படி கண்ணநீர் மல்கி ப்ரதிக்ரியையற்று நின்றவனை.(தன்மையானை) மேன்மை இடுசிவப்பு; இதுவேயாயிற்று இவனுக்கு ஸ்வபாவம். (க) "ஸஜ்ஜீலை - யதிசக்நோஷி"என்றுளிறே.(கருங்களிறேபோல)†தன்னையுணராதே நின்றநிலை. † ப்ரதிகூலரான துர்யோதநாதிகள் கட்டின கட்டாகிலிறே அவிழ்த்துக்கொண்டுபோகவல்லது. அநுகூலர் கட்டினால் அவிழ்த்துக்கொடு போகமாட்டானிறே.

(வெறியார்ந்த மலர்மகள்) இவ்வானைதன்னை † உணரா உழற்றுமை நோக்குவாரைச் சொல்லுகிறது. †தன் ஸந்நிதியாலே பிறர் குற்றம் நெஞ்சில்படாதபடி நுவக்குமாயிற்று. ஆஶ்ரயிப்பார்க்குப் புருஷகாரபூதையான பெரியபிராட்டியார்; ப்ராஹ்மணருடைய நாவிலே நிற்கக்கடவளாய் பெரியபிராட்டியார்க்கு சேஷபூதையான ஸரஸ்வதி;அவள்,†விளைநீராம்படி ஏத்துகைக்குப் பரிகரமாம். (வியன்கலை) விஸ்மயநீயமான கலையை வாஹநமாக உடையளாய் எட்டுத்தோளையுடைய துர்க்கை; †அவளாயிற்று அவ்வூருக்குக்காவல். "பிறந்தவன்று காட்டிக்கொடுத்துப்போனேம்" என்னுமவ் விழவுதீர அவளுணர்ந்து நோக்குகிற தேசமாயிற்று. (செறியித்யாதி) மிகவும் செறிந்திருப்பதாய் ரத்நமயமான மாடங்கள் உஜ்ஜ்வலமாய்த் தோற்றுகிற திருக்கோவலூரிலே காணப்பெற்றேன். (நான்) இதுக்குமுன்பு இங்ஙனே யிருப்பதொரு லாபம் வ்யுத்பத்தி பண்ணியறியாத நான், ஸுரக்ஷிதமான தேசத்திலே காணப்பெற்றேன். ... ... (கூ)

(க) வி - பு - ு.

§ (பா) விழுக்காடு அறியாளிறே.

அரு.—ஆறாம்பாட்டு. (உறியித்யாதி) கீழ்ப்பாட்டில் தேவர்களுக்கு சொல்வழி பரதந்த்ரனாய் ராவணவதம்பண்ணினபடியை யநுஸந்தித்தார்; இதில், அவ்வளவன்றிக்கே இடைச்சிகளுக்குக் கட்டவுமடிக்கவுமாம்படி எளியனானமையை யநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

சேமித்தவெண்ணெயை இவன்கண்டபடி யெங்ஙனேயென்ன (கடைகிறவித்யாதி). "ஒளியால்" திருமுகத்தில் முறுவலொளியால், இருளைநீக்கிக் கொண்டுசென்று, அங்குண்டானையென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி வ்யாவர்த்யபூர்வகம் ஸம்வாதம்காட்டுகிறார் (களவாலேயித்யாதி). ஒளியாலென்றர்த்தம். அன்றிக்கே, (இத்யாதிப்படியே) என்றவநந்தரம, அர்த்தம் கண்டுகொள்வது என்றுசேஷம். "ஒளியால்" என்றதுக்கு உட்கருத்தருளிச் செய்கிறார் (மநுஷ்யராலித்யாதி). இருட்டில்வைத்ததை விளக்கின்றிக்கே மநுஷ்யரால் கொள்ளக்கூடாமையால் ஆய்ச்சியர்க்கு ஆஶ்சர்யமாயிற்றென்று திருவுள்ளம். உண்ணும்போது இவர்கள் காணாமலுண்ணச்செய்தே அவர்கள் கண்டபடி யெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (அநுகூலேத்யாதி). (பரிவுடையாளாகையாலே) என்றது (௧) "வயிறுபிள்ளைபரமன்று" என்று ப்ரீதி தலைக்கொள்ளுகையாலேயென்கை. (விழுக்காடறியாமையாலே) என்றது (௨) "தடங்கண்கள் பனிமல்கும்" என்றறியாமையாலேயென்கை. "களிறே" என்ற ஏவகாரதாத்பர்யம் (தன்னையித்யாதி). "நின்று" என்றதுக்குத் தாத்பர்யம் (ப்ரதிகூலரானவித்யாதி).

(உணராஉழற்றுமை) என்றது - யானை தன்னைத்தானறியாதே மதமேறும்படியும், கண்டவிடமெங்கும் திரியாதபடியும் நோக்கும் ஆனைப்பாகரைப் போலே, தன்னைத்தானறியாதபடியும், ஸ்வைரசாரம்பண்ணுமையும் நோக்குவாரைச்சொல்லுகிறது, "வெறியார்ந்தமலர்மகள்" நாற்றத்தையுடைய மலர்மகளென்று சப்தார்த்தம். அத்தால்தோற்றின போக்யதாதிசயத்துக்கு ப்ரக்ருதோபயோகம்காட்டுகிறார் (தன்னித்யாதி வாக்யத்ரயத்தாலே). நாமங்கையை யிங்குச்சொன்னதுக்கு ப்ரக்ருதோபயோகம் (விளைநீரித்யாதி). விளைநீர்போலே ப்ராஹ்மணர்க்கேத்தப் பரிகரமென்கை. துர்க்கையைச்சொன்னதுக்கு ப்ரக்ருதோபயோகம் (அவளாயிற்றித்யாதி). ... ... (௬)

மூ:—இருங்கை மா கரி முனிந்து பரியைக்கீறி
இனவிடைகளேழடர்த்து மருதம் சாய்த்து
வரும்சகடமிற வுதைத்து மல்லையட்டு
வஞ்சம்செய் கஞ்சனுக்கு நஞ்சானானைக்
கருங்கமுகு பசும்பாளை வெண்முத்தீன்று
காயெல்லாம் மரதகமாய்ப் பவளங்காட்டச்
செருந்திமிக மொட்டலர்த்தும் தேன்கொள்சோலைத்
திருக்கோவலூரதனுள் கண்டேன்நானே. (எ)

(௧) ௧௦ - எ - ௫. (௨) ௨ - ௧௦ - ௬.

பதம்.	உரை.	பதம்.	உரை.
இரு	நீண்ட	கஞ்சனுக்கு	கம்ஸனுக்கு
கை	துதிக்கையையுடைய	நஞ்சானானை	ம்ருத்யுவானவனை;[ய
மா	பெரிய	கரு	கறுத்தநிறத்தையுடை
கரி	குவலயாபீடத்தை	கமுகு	பாக்குமரத்தின்
முனிந்து	சீறியருளி,	பசும்பாளை	பசுமையானபாளையா
பரியை	கேசியென்னும் குதிரையின்வாயை	வெள்	வெளுத்த [னது
கீறி	பிளந்து, [பான	முத்து	முத்துக்களை
இனம்	ஒன்றுக்கொன்றொப்	ஈன்று	தந்து
எழு விடைகள்	எழுருஷபங்களையும்	காயெல்லாம்	அதின்காய்கள்
அடர்த்து	கொன்று,	மரதகமாய்	மரதகத்தைக்காட்டவும் (பழங்கள்)
மருதம்	மருதுகளை	பவளம்காட்ட	ப்ரவாளத்தைக்காட்டவும்
சாய்த்து	முறித்து;		
வரும்	(அஸுராவேசத்தாலே)ஊர்ந்துவருகிற	செருந்தி	ஸுரபுன்னையானது
		மொட்டு	மொட்டுக்களை
சகடம்	சகடமானது	மிக	விசேஷமாக
இற	முறியும்படி [ந்து,	அலர்த்தும்	அலரச்செய்யுமதாய்
உதைத்து	திருவடிகளாலேபாய்	தேன்கொள்	தேனையுடைத்தான
மல்லை	மல்லவர்க்கத்தை	சோலை	சோலைகளையுடைய
அட்டு	முடித்து,	திருக்கோவலூரதனுள் நான் கண்டேன். (எ)	
வஞ்சம் செய்	க்ருத்ரிமத்தாலே இவனை நலியநினைத்த		

வ்யா.—ஏழாம்பாட்டு. (இருங்கையித்யாதி) ஆனையை வழியிலே நிறுத்தினானாயிற்று ப்ரமாதம் புகுந்ததென்கைக்காக; எங்கேனும் போகிலும் நீட்டிப்பிடிக்கைக்கீடான பெரிய துதிக்கையையுடைத்தான குவலயாபீடத்தை†வேண்டோமென்று.(பரியித்யாதி)(க) "வ்யாதிதாஸ்யோ மஹாரௌத்ர:" என்கிறபடியே, பெரியசினத்தோடே வாயை அங்காந்துகொண்டு வந்ததாயிற்றுக் குதிரை; அதின்வாயிலே கையையிட்டுப் †புரித்தான்; இரண்டுகூறாய் விழுந்ததாயிற்று. விரோதியாயே தோற்றின கேசி வாயைக்கிழித்து. (இனமித்யாதி) ஒன்றிரண்டன்றிக்கே ஏழாய் ம்ருத்யுபோலேயிருக்கிற வ்ருஷபங்களை முடித்து, வழிபோகாநிற்கச்செய்தே மருது முறிந்துவிழும்படி தவழ்ந்து, காவலாகவைத்த சகடமே அஸுராவேசத்தாலே ஊர, அது துகளாய்ப்போம்படி திருவடிகளாலே பாய்ந்து; (உ)†"பிளந்துவீய" (மல்லையட்டு)குவலயாபீடம் போனபின்பு மல்லைதுள்ளினாற்போலே துள்ளிக்கொடுவந்த

(க) வி - பு - ௫.
(உ) தி - வாய் - ரு - க - ச.

மல்லவர்க்கத்தை முடித்து. (வஞ்சமித்யாதி) வில்விழவு என்றொரு வ்யாஜத்தையிட்டழைத்து க்ருத்ரிமத்தாலே நலியநினைத்த கம்ஸனை அவன் நினைவை அவன்றன்னோடே போக்கி அவனுக்கு ம்ருத்யுவானவனை.

(கருங்கமுகித்யாதி) யௌவநத்தாலே கறுத்தநிறத்தை யுடைத்தான கமுகினுடைய பசுமையை யுடைத்தான பாளையானது வெண்முத்தை ஈன்று, அது காய்த்தவாறே மரதகமாய், அது பக்வமானவாறே பவளத்தைக்காட்ட.(செருந்திமிகமொட்டலர்த்தும்)"இதோ ராஸ்சர்ய மிருந்தபடி யென்! ஒன்றே எல்லாவற்றையுங்காட்டுவதே" என்று ஸ்மிதம்பண்ணினாற்போலேயிருக்க. (செருந்திமிகமொட்டலர்த்தும்) "கார்யகாரணங்களினுடைய †ஐகலக்ஷண்யநியமமின்றிக்கேயிருந்தபடியே!" என்று ஸ்மிதம் பண்ணுவாரைப்போலேயிருக்கை. (மீதன்கொள்சோலை) வண்டுகளையுடைத்தான சோலையென்னுதல், தேனையுடைத்தான சோலையென்னுதல். ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (இருங்கையித்யாதி) பிள்ளைத்தனத்திலாய்ச்சிக்கெளியனானவனுடைய பிள்ளைச்சேவகத்தையெல்லாம் தோற்றினபடியே யநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

(வேண்டோமென்று) என்றது - "முனிந்து" என்றதினர்த்தம். த்வேஷித்தென்றபடி. (புரித்தான்) - திருப்பினான். சகடநிரஸநத்துக்கு ப்ரமாணம் (பிளந்துவீய) என்று.

(ஐகலக்ஷண்யம்) என்றது - ஐகரூப்யமென்றபடி. ... ... (எ)

மூ.—பாரேறு பெரும்பாரந் தீரப் பண்டு
பாரதத்துத்தூதியங்கிப் பார்த்தன்செல்வத்
தேரேறுசாரதியா யெதிர்ந்தார்சேனை
செருக்களத்துத்திறலழியச் செற்றான்றன்னைப்
போரேற்றொன்றுடையானு மளகைக்கோனும்
புரந்தரனும் நான்முகனும் பொருந்துமூர்போல்
சீரேறுமறையாளர் நிறைந்தசெல்வத்
திருக்கோவலூரதனுள் கண்டேன்நானே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பார்	பூமியிலே	பண்டு	முன்பு [லே
ஏறு	ஏறின	பாரதத்து	மஹாபாரதயுத்தத்தி
பெரும்பாரம்	பெரியசுமையானது	தூதுஇயங்கி	தூதுபோய்
தீர	போம்படி	பார்த்தன்	அர்ஜுநனுடைய

செல்வம்	அழகிய
தேர்	ரதத்திலே
ஏறு	ஸ்ரேஷ்ட்டமான [டு
சாரதியாய்	ஸாரதியாய்க்கொண்
எதிர்ந்தார்சேனை	எதிரிட்டசத்ருக்களுடையஸேனையானது
செருக்களத்து	யுத்தரங்கத்திலே
திறல்அழிய	மிடுக்குஅழியும்படி
செற்றுன்றனை	நிரஸித்தவனை,
போர்	(செருக்காலே)கரைபொருகிற
ஏறுஒன்று	ருஷபம்ஒன்றை
உடையானும்	வாஹநமாகஉடையருத்ரனும்
அளகைக்கோனும்	வைஶ்ரவணனும்
புரந்தரனும்	இந்த்ரனும்
நான்முகனும்	ப்ரஹ்மாவும்
பொருந்தும்	சேர்ந்திருக்கிற
ஊர்போல்	ஊரைப்போல்
ஏறு	மிக்க
சீர்	குணத்தையுடையராய்
மறையாளர்	வேதத்துக்குநிர்வாஹகரான ப்ராஹ்மண[ர்
நிறைந்த	திரண்ட
செல்வம்	ஐஶ்வர்யத்தையுடைய

திருக்கோவலூரதனுள் நான் கண்டேன். (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (பாரேறு பெரும்பாரம்தீர) †க்ஷமையென்றும் பொறையென்றும் பேரிறேபூமிக்கு. பொறையென்றுபேரையுடைத்தான பூமியானது பொறுக்கமாட்டாதபடி ஏறின பெரிய பாரமானது போம்படியாக. †பொறுக்கைக்குப் பேர் கொண்டிருக்கிற அதுதான் பொறுக்கமாட்டாதபடியாயிற்று அஸுராவேசத்தாலே கனத்தபடி. (பண்டு) அவன் தூதக்ருத்யம்பண்ணின வன்றுமொருநாளே! என்கிறுர். (பாரதத்துத்தூதியங்கி) †எங்கள் பந்துக்களும் ஜீவிக்கவேணு மென்றுரிவர்கள், பந்துக்கள் ஜீவிக்கில் நாங்கள் ஜீவியோ மென்றுர்கள் துர்யோதநாதிகள். இரண்டுதலையையும் பொருந்த விடுகைக்காக தூதக்ருத்யத்திலே அதிகரித்துப்போவது வருவதாய்ப், பின்பு அவர்களொரு படியாலும் "நீ சொல்லுகிறவார்த்தைக் கிணங்கோம்" என்ன, பூசலை விளைத்துத், §தன்னை "ஆயுதமெடுக்கவொட்டோம்" என்று அவர்கள் சொல்லத் தேர்க்காலாலே முடித்துப்பொகட்டானுயிற்று. (பார்த்தன் செல்வத்தேர்) †இவனைத் தோழனுகவும், மைத்துனனுகவும், தூதனுகவும், ஸாரதியாகவுமுடைய அர்ஜுநனுடைய தேரிறே. (க)"மஹதிஸ்யந்தநே - மஹதிஸ்யந்தநே" என்னக்கடவதிறே. (சாரதியாய்) ரதியானுனுகில் வெற்றி தன்தலையிலே கிடக்குமே; அதுக்காகத் தான் ஸாரதியாய், வெற்றியும்† அவன் தலையிலேகிடக்கும்படி பண்ணினுனுயிற்று. (எதிர்ந்தாரித்யாதி) அவன்தலையிலே வெற்றிகிடக்கும்படி தன்னைத்தாழவிட்டாலும், அடியறி

(க) கீதை - க - கச, § (பா) உன்னை,

யுமவர் விடாரே. அர்ஜுநனொரு நிமித்த மாத்ரம், அவனை †அப்பராகச் சேமம்சாத்திவைத்து வென்றானிவனே கிடீர் என்கிறார். எதிரிட்டவர் ஸேனையானது செருக்களத்திலே, கங்கையிலே கொடுபோய் மடுவிலே தள்ளுதல், அரக்குமாளிகையிலே ஏறவிட்டு நெருப்பிலே தள்ளுதல், சூதிலே தோற்பிப்பதாய், வஞ்சனையாலே நலியவிறே அவர்கள் பார்ப்பது; அங்ஙனன்றிக்கே, நேர்கொடு நேரே யுத்தபூமியிலே மிடுக்கழியும்படி செற்றவனை.

(போரித்யாதி) அஸுரவர்க்கம் முதலற்றபின்பு தேவஜாதியையடைய ஓரிடத்திலே நெருங்கக் குடியேற்றினாற்போலேயாயிற்று அவ்வூரில் ப்ராஹ்மணர். ருஷபவாஹநனான ருத்ரனும், வைஶ்ரவணனும், இந்த்ரனும், சதுர்முகனும், பொருந்து மூர்போலே. †நினைத்தாரை பஸ்மமாக்க வல்லாராகைக்கும், ஸ்வஸ்த்ரீபக்கலிலே ஸங்கத்தை விளைத்தவனையிறே நேத்ராக்நியாலே தஹித்தது; குறைவரக் கொடுக்கைக்கும், கொடுக்கக்கொடுக்க இரட்டிக்கைக்கும்; ஸ்வவிஷயத்திலுள்ளாரை ஸுகப்ரதாநராக்குகைக்கும்.(நான்முகனும்) (சு நூ) சாந்திக்கும் ஸர்வத்தையு முத்பாதிக்கைக்கும். (சிரித்யாதி) இவ் வோகுணங்களால் பூர்ணரான ப்ராஹ்மணர் திரண்ட ஐஶ்வர்யத்தாலே குறைவற்ற. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (பாரித்யாதி) பிள்ளைத்தனத்திலநுகூலரிட்டவழுக்காய் ப்ரதிகூலரை முடித்தானென்கிறார் கீழிரண்டுபாட்டால்; இதில், பெரியவனானபின்பும், தூத்யஸாரத்யாதிகளை மைத்துனனுக்குச்செய்து தத்விரோதிகளைப் படையறுத்தானென்கிறாரென்று ஸங்கதி.

பெருமையினுடைய எல்லைநிலத்தையருளிச்செய்கிறார்(கூழமையித்யாதி). பொறுக்கப்போகாமைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (பொறுக்கைக்கித்யாதி). தூதியங்கினது அழிக்கைக்கு ஹேதுவானபடி யென்னென்ன வருளிச்செய்கிறார் (எங்களித்யாதி). (தேர்க்காலாலே) - பண்டியாலே. சக்ரத்தாலேயென்று த்வந்யர்த்தம். தேர்க்குச்செல்வமேதென்ன (இவனையித்யாதி). ரதிகனான அர்ஜுநனிருக்க, ஸாரதியென்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (அவன் தலையிலே யித்யாதி). (அப்பராக) - பூஜ்யராக.

அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணர்க்கு ப்ரயோஜநாந்தரபரராய் அஹங்காரக்ரஸ்தரான தேவர்களை த்ருஷ்டாந்தீகரிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (நினைத்தாரையித்யாதி). (அ)

மூ.—தூவடிவில் பார்மகள் பூமங்கையோடு
சுடராழி சங்கிருபால் பொலிந்து தோன்றக்
காவடிவில்கற்பகமே போலநின்று
கலந்தவர்கட் கருள்புரியும் கருத்தினனைச்
சேவடிகை திருவாய் கண் சிவந்தவாடை
செம்பொன்செய் திருவுருவ மானான்றன்னைத்
தீவடிவில் சிவனயனே போல்வார்மன்னு
திருக்கோவலூரதனுள் கண்டேன்நானே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தூ	அழகிய	கருத்தினனை	திருவுள்ளத்தையுடை [யனைய்,
வடிவில்	வடிவையுடைய	சே	சிவந்த
பார்மகளோடு	ஸ்ரீபூமிப்பிராட்டி யோடும்	அடி	திருவடிகள்
		கை	திருக்கைகள்
பூமங்கையோடு	பெரியபிராட்டியா ரோடும்	திருவாய்	திருப்பவளம்
		கண்	திருக்கண்கள்
சுடர்	தேஜோரூபமான	சிவந்தஆடை	திருப்பீதாம்பரம் (இ வற்றையுடைத்தாய்)
ஆழி	திருவாழியாழ்வானும்		
சங்கு	ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வா [னும்	செம்பொன்செய்	அழகியபொன்போன்ற
இருபால்	இரண்டருகும்		
பொலிந்துதோன்ற	விளங்கித்தோற்றும்ப டி [ள்ள	திருவுருவமானான்றன்னை	வடிவழகையுடைய வனாயிருக்கிறவனை
காவடிவில்	சோலைசெய்திருந்து	தீவடிவில்	அக்நிவர்ணனான
கற்பகம்போல நின்று	கல்பகம்போலே நின் று	சிவன்	ருத்ரனையும்
		அயன்போல்வார்	ப்ரஹ்மாவையும்போ லே ஸ்ருஷ்டி ஸம் ஹாரஸமர்த்தர்
கலந்தவர்கட்கு	தன்னையேயெல்லா வுறவுமுறையுமாக ப்பற்றினவர்களுக் கு		
		மன்னு	நித்யவாஸம் பண்ணு கிற
அருள்புரியும்	வேண்டிற்றுத்தரும்	திருக்கோவலூரதனுள் நான் கண்டேன். (கூ)	

வ்யா.—ஒன்பதாம் பாட்டு (தூவடிவித்யாதி) ஹேயப்ரத்யநீக மான விக்ரஹத்தை யுடையளாய், பூமியைத்தனக்கு ப்ரகாரமாக உடையளாய், அதுக்கபிமாநிநியான ஸ்ரீபூமிப்பிராட்டி, தாமரைப் பூவை §இருப்பிடமாக உடைய பெரியபிராட்டியாரோடேகூட; இச் சேர்த்திக்கு ரக்ஷகமாகப் போரும்படியான திவ்யாயுதங்கள், சந்த்ரா

§ (பா) பிறப்பாக.

தித்யர்கள் சேர உதித்தாற்போலே விளங்கித்தோற்ற. (சுடரித்யாதி) †ஒரு கல்பகதரு பணைத்துப் பூத்தாற்போலே யாயிற்று பிராட்டிமாரோடே திவ்யாயுதத்தைதரித்தாலிருக்கும்படி (காவடிவில்கற்பகமே போலநின்று) †தனிக்கற்பக மன்றிக்கே †சோலைசெய்திருப்பதொரு கல்பகம்போலேநின்று; அதாகிறது-ஸர்வாபேக்ஷிதப்ரதனாயிருக்கும்படி. (கலந்தவரித்யாதி) †"நாங்கள் எங்களுடைய ரக்ஷணத்துக்குக் கடவோமல்லோம், நீயே கடவாய்" என்று தன்கைபார்த்திருக்குமவர்கள் பக்கலிலே மிக்க ப்ரஸாதத்தைப் பண்ணும்படியை மநோரதிக்குமவனை.

(சேவடியித்யாதி) †அருள்பண்ணுவிட்டால் தான்விடலாமோ? இவ்வடிவைக்கண்டால்; (தீவடிவிலித்யாதி) அக்நி, கண்ணுக்குத் தோற்ற வடிவு கொண்டாற்போலே யாயிற்று அவர்களிருப்பது. அங்குள்ளார், ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களையும் தாங்களே பண்ணவல்லரென்கை. ... ... (கூ)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (தூவடிவிலித்யாதி) காலவிப்ரக்ருஷ்டங்களான அபதாநங்களில் ஆபத்ஸகத்வமும் ஆஶ்ரிதரிட்டவழக்காயிருக்குமதுவும் தேடிப்போகவேணுமோ, இப்போது திருக்கோவலூரில் நின்றநிலை தன்னிலாஶ்ரித கல்பகமாயிருக்கிறானென்றநுஸந்தித்து, அவன் வடிவழகில் கலந்தநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

பிராட்டிமாரோட்டை சேர்த்தியைக் கடாக்ஷித்து ஆயுதஸமாதியைத் திருவுள்ளம்பற்றிக் கீழொரு தாத்பர்ய மருளிச்செய்து, ஆபரணஸமாதியால் வந்த போக்யதையைத் திருவுள்ளம்பற்றி மேலைக்கடாக்ஷித்துத் தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (ஒருகல்பகதருவித்யாதி). (தனிக்கற்பகம்) - தனிக்கோப்பாயிருக்கும் கல்பகம். (சோலைசெய்து) - சோலைபோலே தழைத்து-ஈஶ்வரன் தன்னை ஸர்வரக்ஷகனாகக் கருதியிருக்க, இவர்களுமதுக்கிசைந்து நெஞ்சு கலந்தவரென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (நாங்களித்யாதி).

சிவந்த திருவடிகள் முதலானவை யுடைத்தாய் (க) "ருக்மாபம்" (உ) பொன்னிவர்மேனி" என்கிறபடியே - அழகிலும் பொன்னிற்புகரை வடிவாக வகுத்தாற்போலே யிருக்கிறவனை என்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அருளித்யாதி). ... (கூ)

(க) மநுஸ். (உ) கூ - உ - க.

மூ.—வாரணங்கொளிடர் கடிந்த மாலை நீல
மரதகத்தை மழைமுகிலே போல்வான்றன்னைச்
சீரணங்கு மறையாளர் நிறைந்த செல்வத்
திருக்கோவலூரதனுள் கண்டேனென்று
வாரணங்கு முலைமடவார் மங்கைவேந்தன்
வாள்கலியனொலியைந்து மைந்தும் வல்லார்
காரணங்களாலுலகம் கலந்தங்கேத்தக்
கரந்தெங்கும் பரந்தானைக் காண்பர்தாமே. (௧0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாரணம்	ஸ்ரீகஜேந்த்ராழ்வா	மங்கை	திருமங்கைக்கு
கொள்	கொண்ட [ன்	வேந்தன்	ராஜாவாய்
இடர்	து:கத்தை	வாள்	வாளையுடைய [ய்த
கடிந்த	போக்கின [ய்	கலியன்	ஆழ்வார் அருளிச்செ
மாலை	ஆஶ்ரிதவ்யாமுக்தனு	ஒலி	சப்தஸந்தர்ப்பங்களை
நீலம்	கருநெய்தலையும்		யுடைய
மரதகம்	மரகதமணியையும்	ஐந்தும்ஐந்தும்	பத்துப்பாட்டையும்
மழை	குளிர்ந்த	வல்லார்	கற்கவல்லவர்கள்,
முகில்	மேகத்தையும்	உலகம்	லோகத்திலுள்ளார்
போல்வான்றன்	போன்றவடிவழகை	காரணங்களால்	ஐஶ்வர்யம் தொடக்க
னை	யுடையனான ஸர்		மான புருஷார்த்த
	வேஶ்வரனை,		ங்கள் பெறுகைக்
அணங்கு	எல்லாரும்விரும்பும்ப		காக
	டியான [டைய	கலந்து	திரண்டுவந்து
சீர்	ஆத்மகுணங்களையு	ஏத்த	ஸ்தோத்ரபூர்வகமாக
மறையாளர்	ப்ராஹ்மணர்		ஆஶ்ரயிக்க (ஸர்வ
நிறைந்த	திரண்ட [ய		வ்யாபியாயிருக்க
செல்வம்	ஐஶ்வர்யத்தையுடை		ச்செய்தேயும்)
திருக்கோவலூர	திருக்கோவலூரிலே	கரந்து	ஒருவருக்குங்கா
தனுள்			ணவொண்ணாதவனா
கண்டேனென்	காணப்பெற்றேன் எ		ய்
று	ன்று	எங்கும்பரந்தா	எங்கும்புக்குவ்யாபித்
வார்	கச்சுஅணிந்த	னை	துநிற்கிறஸர்வேஶ்
அணங்கு	அழகிய		வரனை
முலை	ஸ்தநங்களையுடைய	காண்பர்	காணப்பெறுவர்கள்.
மடவார்	ஸ்த்ரீகள் நிறைந்த		

வ்யா.—பத்தாம்பாட்டு. (வாரணமித்யாதி) †பிறர்க்கு இடரை விளைக்கக்கடவதான அது கொண்ட இடரைப்போக்கி அதின் பக்கலிலே வ்யாமுக்தனானவனை. (நீலமரதகத்தை) அதினுடைய

§ விடாயடங்களும் போம்படி குளிரவர்ஷித்துக் கொடுகின்றபடி. (சிரித்யாதி) ஆத்மகுணங்களாலே தங்களை விரும்பும்படியிருக்கிற ப்ராஹ்மணர் திரண்ட ஐஸ்வர்யத்தை யுடைத்தாயிருக்கிற. (திருக் கோவலூரதனுள் கண்டேனென்று) அறுகாதம் பயணம்போயன் றிக்கே. (வாரணங்கித்யாதி) முலைக்கு ஆபரணமான கச்சுத்தான் நிறம்பெறும்படி முலைபடைத்தவர்கள். "அணங்கு" என்று விரு ப்பத்துக்கும்பேர், அழகுக்கும்பேர். †தன்னழகே யன்றிக்கே முலைக் கச்சால்வந்த அழகையுடைய. (வாள்கலியன்) ப்ரதிபக்ஷ நிரஸந ஸ்வபாவமான வாளையுடைய ஆழ்வார் அருளிச்செய்த இப்பத்தையு மப்யஸிக்க வல்லவர்கள். (காரணங்களால்) ஐஸ்வர்யத்துக்காகவும், ஆத்மப்ராப்திக்காகவும், பகவத்ப்ராப்திக்காகவும், லோகத்திலுள் ளார் திரண்டாஸ்ரயிக்க (கரந்தித்யாதி) ஆஸ்ரயித்தபோதே, ஆஸ்ரி தர்க்கபேக்ஷிதத்தைக் கொடுக்கைக்காக எங்கும் புக்கு வ்யாபித்து அந்யைரத்ருஷ்டனாய், "நம்மை ஆஸ்ரயிப்பாராரோ" என்று †அவ ஸரப்ரதீக்ஷனாய் நிற்கிறவனைக் காணப்பெறுவர். ... ...(கO)

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு (வாரணமித்யாதி) "வாரணம்" என்கையால் பலி த்த வர்த்தமருளிச்செய்கிறார் (பிறர்க்கித்யாதி). வாருக்கு அழகுகொடுக்கிற முலையென்று ஒருயோஜனை யருளிச்செய்து, வாராலேவந்த அழகையு டைய முலையென்று யோஜநாந்தர மருளிச்செய்கிறார் (தன்னழகே யன்றிக் கேயித்யாதி). (அவஸரப்ரதீக்ஷனாய்) என்றது - அந்தர்யாமியை. ... (கல)

இரண்டாம்பத்து பத்தாந்திருமொழி முடிந்தது.

ஜீயர் திருவடிகளே சரணம்.

§ (பா) இடரடங்களும்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

௩ - ம் பத்து, க - ம் திருமொழி, இருந்தண்
ப்ரவேசம்.

வ்யா.—அவ.—†அவ்வோ நிலங்களுக்குச் சிறப்பானவற்றையிட்டுச் சொல்லக்கடவர்களாயிற்றுக் கவிகளானவர்கள்; அப்படியன்றிக்கே, யதாபூதவாதிகளான ஆழ்வார்கள் உகந்தருளின நிலங்கள் விஷயமாகச் சொல்லுமவற்றில் நாம் கண்டு காணுதவை கொள்ளும்படி யெங்ஙனேயென்ருல்; அவர்களுடைய ப்ரேமத்துக்கு அவதியில்லாமையைக் கொள்ளுமித்தனை; தன்புத்ரன் விருபனுயிருக்கச் செய்தேயும் அல்லாதவர்களுடைய புத்ராதிகளிற் காட்டிலும் ரூபவானுய்த் தோற்றுமிறே ப்ரேமத்தாலே; அப்படியே, இவர்களுகப்புக்கு அவதி யில்லாமையாலும், சொன்ன சொன்ன ஏற்றமெல்லாம் பொறுக்கும்படி ஸர்வேஶ்வரன் விஷயமாகச் சொல்லுகையாலும், இப்படியாகையிலொருதட்டில்லை. காரணமான ப்ரேமத்துக்கு அவதியில்லாமையாலே, அதின்கார்யமாய் வருமவையுமெல்லாமுண்டாகைக் கொருகுறையில்லையிறே.

†ரஜோகுண ப்ரசுரனுன பல்லவனுங்கூட ஆஶ்ரயிக்கலாம்படி பரமேச்சுர விண்ணகரிலே ஸந்நிஹிதனுனபடியை யநுஸந்தித்தார், அங்ஙனன்றிக்கே, ஸத்வநிஷ்ட்டராய் ஸ்வவர்ண ஸ்வாஶ்ரமோசிதமானகர்மங்களை பகவத்ஸமாராதந புத்யா மாருதே அநுஷ்ட்டிக்கும் ப்ராஹ்மணர்க்கு உபாஸ்யனுய்க்கொண்டு திருக்கோவலூரிலே ஸந்நிஹிதனுனபடியை யநுஸந்தித்தார்; தேவர்களுக்கு அந்தர்யாமி என்கிற புத்திவிசேஷத்தைப்பண்ணி அவ்வோமுகங்களாலே ஆஶ்ரயிக்கை யன்றிக்கே, அவன்றன்னையே ஆஶ்ரயிக்கும் †அநுகூலர்க்காக, †ஜகத்துக்குக் காதாசித்கமாகவுண்டாம் ப்ரளயத்தைப்போக்கி நோக்குமாபோலேயும், †நித்யஸூரிகளுக்கு ஸதாதர்சநம் பண்ணுகைக்குத் தன்னைக்கொடுத்துக்கொண்டிருக்குமாபோலேயும், அபரிச்சிந்நனுன தன்னை, "இவனிவ்வளவிலுள்ளான்" என்று இவர்களுக்குப் பரிச்சேதித்து ப்ரதிபத்தி பண்ணலாம்படி தனக்குள்ளதடைய

இவர்களுக்குக் காட்டிக்கொடுத்துக்கொடு நிற்கிறவிடமாகையாலே, அவ்விடத்தை ப்ராப்யமென்று புத்திபண்ணி, அத்தைப்பேசி யநுபவிக்கிறார். ... ... *

அரு.—இருந்தண் ப்ரவேசம். கீழ்த்திருமொழிகளிலும் மேல்திருமொழிகளிலும் இத்திருமொழிதன்னிலும் திருப்பதிகளுக்குச் சிறப்பிட்டுச்சொன்னதுக்குக் கருத்தை சங்காபூர்வகமாக வருளிச்செய்கிறார் (அவ்வோநிலங்களுக்கித்யாதி).

கீழிரண்டு திருமொழிகளோடு இத்திருமொழிக்கு ஸங்கதி யருளிச்செய்கிறார்(ரஜோகுணேத்யாதி). ராஜஸராயும் ஸாதநாந்தர நிஷ்டராயுமிருக்கிற இவர்களுக்கு முகங்காட்டிக்கொண்டிருக்கிற ஸ்த்தலங்களிலநுபவத்திற்காட்டிலும் அநுகூலர்க்கு முகங்கொடுக்குமிடத்தில் இவர்களோடு தாமுமநுபவிக்கை பரமப்ராப்யமென்று திருவயிந்திரபுரத்துத் தெய்வநாயகனை யநுபவிக்கிறாரென்று திருவுள்ளம். (அநுகூலர்க்காக) என்றதுக்கு, (நிற்கிறவிடமாகையாலே) என்றத்தோடந்வயம். இங்கு அநுகூலரென்றது - இத்திருமொழியிலநுஸந்திக்கப்படுகிற, வண்டுகள், குரக்கினம், அன்னம், சோலைகள் முதலானவையெல்லாம், ஸ்வாபதேசத்திலே, பாகவதர்களென்று திருவுள்ளம் பற்றி. "இருந்தண்மாநிலம்" இத்யாதியைப்பற்ற வருளிச்செய்கிறார் (ஜகத்துக்கித்யாதி). "மின்னுமாழியங்கையவன்" என்றதைப்பற்ற (நித்யஸூரிகளுக்கித்யாதி). அன்றிக்கே, இத்திருமொழிக்கு உயிர்ப்பாட்டான "வையமேழுமுண்டு" என்கிறபாட்டைக் கடாக்ஷித்தருளிச்செய்தாரென்னவுமாம், "அடியவர்க்கு மெய்யனாகிய" என்றிறே யிருக்கிறது; "தெய்வநாயகன்" என்றிறே அதில்பாசுரம். ... ... *

மூ.—இருந்தண்மாநிலமேனமதாய்வளைமருப்பினிலகத்தொடுக்கிக்
கருந்தண்மாகடல்கண்துயின்றவனிடம்கமலநன்மலர்த்தேற
லருந்தியின்னிசைமுரன்றெழுமளிகுலம்பொதுளியம்பொழிலூடே
செருந்திநாண்மலர்சென்றணைந்துழிதரு திருவயிந்திரபுரமே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இருந்தண்	மிகக்குளிர்ந்த	கருந்தண்மாகடல்	கறுத்துக்குளிர்ந்தபெருங்கடலில்
மாநிலம்	பெரியபூமியை (ப்ரளயங்கொண்டவன்று)	கண்துயின்றவன்	யோகநித்ரைசெய்தருளுமவனுக்கு
ஏனமதாய்	வராஹரூபியாய்	இடம்	வாஸஸ்த்தாநமாவது,
வளைமருப்பகத்தினில்	வளைந்தகொம்பினிடத்திலே	கமலம்	தாமரையினது
		நல்	அழகிய
ஒடுக்கி	அடக்கி, (பின்பு)	மலர்	பூவிலுண்டான

தேறல்	தேனை	செருந்தி	செருந்திமரத்தின்
அருந்தி	பானம்பண்ணி	நாள்மலர்	அப்போதலர்ந்த பூவி [ல்
இன்இசை	இனியராகத்தை	சென்று அணைந்து	போய்க்கிட்டி
முரன்று	பாடி	உழிதரு	ஸஞ்சரிக்கிற
எழும்	கூத்தாடாநின்றுள்ள	திருவயிந்திரபுரமே	திருவயிந்திரபுரமென்னும் திவ்யதேசமாம். (௧)
அளிகுலம்	வண்டுக்கூட்டங்கள்		
பொதுளி	திரண்டு		
அம்	அழகிய		
பொழிலூடே	சோலைநடுவிலே		

வ்யா.—முதற்பாட்டு. (இருந்தண்மாநிலம்) மாநிலமென்று - பூமிப் பரப்பைச் சொல்லுகையாலே, தட்பத்தாலே-போக்யபோகோபகரண போகஸ்த்தாந ப்ரசுரமாயிருக்கும்படியாய், இருமையால்-அதில் பெருமையாய்க்கிடக்கிறது.†இத்தை ப்ரளயங்கொண்டவிடத்தில் சேதநர்க்குறுப்பாமாகாரமேயாயிற்றுத் திருவுள்ளத்தில் பட்டுக்கிடக்கிறது. (ஏனமதாய்) †கார்யம் தெரிந்தவாறே தன்னையழிய மாறினன். †நீருக்கும் சேற்றுக்குமிருயாத வராஹ விக்ரஹத்தைப் பரிக்ரஹித்தான். வளைந்த கொம்பிலகவாயில் ஏகதேசத்திலே யடக்கினன். இத்தால் ரக்ஷ்யத்தி னளவல்லாத ரக்ஷகனுடைய பாரிப்பைச் சொன்னபடி. †இது ஸுரக்ஷிதமென்று திருவுள்ளத்தே பட்டவாறே. (கருந்தணித்யாதி) †கடல்கள்தோறும் கண்வளர்ந்தருளும் என்றொரு ப்ரஸித்தியுண்டு; அத்தாலே, (௧) "உவர்க்கும் கருங்கடல் நீருள்ளான்" என்கிறபடியே சொல்லிற்றாகவுமாம் அன்றிக்கே, திருப்பாற்கடல்தான் மஹாவராஹத்தினுடைய குளம்பிலே துகளாய்க்குழம்பித் தன்னிறம்போயிற்றென்னவுமாம்.

(கமலமித்யாதி) †தாமரையினுடைய செவ்விபெற அலர்ந்த விலக்ஷணமான புஷ்பங்களிலே வண்டுகளானவை புக்கு மதுபானத்தைப்பண்ணும்; கழுத்தே கட்டளையாக மதுபானத்தைப் பண்ணுகையாலுண்டான ப்ரீதிப்ரகர்ஷத்தாலே, இனிய இசையை முரலாநிற்கும் - †செவிப்பாடுடைத்தாக ஆளத்தி வையாநிற்கும். உள்ளுப் புக்கத்ரவ்யம் இருந்தவிடத்தி லிருக்கவொட்டாமையாலே, கொண்டு கிளர்ந்தெழுகிற வண்டுகளினுடைய ஸமூஹமானது, தாமரையிலே மதுபானம் பண்ணச்செய்தே, பின்னையும் சாபலாதிசயத்தாலே செருந்தியிலேபோய் மதுபானம் பண்ணுவதாக நினைத்து அதின் தேன்

(௧) ௩ - திரு - ௩௭.

வெள்ளத்தை யநுஸந்தித்து; கிண்ணகத்தி லிழிவார் கைகோத்துக் கொண்டிழிய ஆள்திரள் பார்த்திருப்பாரைப்போலே; (பொதுளி) வண்டுகள் வந்து செறியுமளவு மிருந்து, அவை திரண்டவாறே தர்சநீயமாகப்பூத்த, பொழிலூடே - சோலையினுள்ளே, செருந்தியினுடைய செவ்விப்பூவிலே சென்று கிட்டும். †(பொதுளி) திரண்டிருந்து உழிதராநிற்கும், †தாமரைப்பூவிலாசையாலே இழிந்து மதுபாநம்பண்ணின வண்டினம், செருந்தியில் மதுவெள்ளத்தை யநுஸந்தித்துவிசாரியாதேயிழிந்து,"அகப்பட்டுக்கொடுநிற்குமது கார்யமல்ல" என்றுபார்த்து கிண்ணகத்திலிழிய அஞ்சிக்கரையிலே உலாவுவாரைப்போலே, செருந்திப்பூவைச் சென்று கிட்டி அதிலிழிய அஞ்சி கரையிலே நின்று இதஸ்ததஃ ஸஞ்சரியா நிற்குமாயிற்று. (பொதுளி) செறிவு. பொழிலுக்கு விசேஷண மாகவுமாம். (க)

அரு.—முதற்பாட்டு. (இருந்தணித்யாதி). அழிந்ததசையில் போக்யாதிகளுண்டாகக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (இத்தையித்யாதி). ப்ரளயத்துக்கு முன்புள்ள ஆகாரம் ஆழ்வார் திருவுள்ளத்தேகிடந்ததென்று திருவுள்ளம். எம்பெருமான் திருவுள்ளத்தில் கிடந்ததென்னவுமாம். (கார்யம் தெரிகையாவது)-ப்ரளயங்கொண்ட பூமியையெடுக்க விசாரிக்கை. "ஏனமாய்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்து, "அதாய்" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (நீருக்குமித்யாதி). மேலுக்கவதாரிகை (இதுவித்யாதி). * கருமை பெருமையாக்கி, நஞ்சீயர் வ்யாக்யாநம்பண்ணியிருந்தாலும், ப்ரஸித்தி ப்ராசுர்யத்தைப்பற்ற கறுப்பையே விவக்ஷித்தருளிச்செய்கிறார் (கடல்கள்தோறுமித்யாதி).

கமலம் - தாமரையுடைய, நல் - விலக்ஷணமான, மலரில், தேறலை - தேனை, அருந்தி - பாநம்பண்ணி, இனிதான இசைமுரன்று எழாநின்றுள்ள அளி-வண்டுகளினுடைய, குலம் - ஸமூஹமானது, பொதுளி - திரண்டு. அழகிய பொழில்நடுவே, செருந்தி என்கிற வ்ருக்ஷவிசேஷத்தின் நாட்பூவில் சென்று கிட்டி ஸஞ்சரியாநிற்கிற திருவயிந்திரபுரமென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தாமரையினுடையவித்யாதி). விவரணம் (செவியித்யாதி). செவிப்பாடு - செவிக்கினிதாகப்பாடுகை. அந்வயம்காட்டுகைக்காக மீளவுமருளிச்செய்கிறார் (பொதுளியித்யாதி). உழிதருகைக்குக் கருத்தருளிச்செய்கிறார் (தாமரைப்பூவிலித்யாதி). ஷட்பதைகநிஷ்ட்டரான ஸ்ரீவைஷ்ணவர்கள் தெய்வநாயகன் திருவடித்தாமரைகளில்தேனைக் குறைவற உண்டு, ஆசையாலே, நித்யஸூரி பரிஷத்கதனான *வாஸுதேவ தருவின் பாதமலரில் தேனை புஜிக்கக்கோலி ஸஞ்சரித்துக்கொண்டிருப்பார்களென்று ஸ்வாபதேசத்தில் பலிதார்த்தம். ... ... (க)

மூ.—மின்னுமாழியங்கையவன்செய்யவளுறைதருதிருமார்வன்
பன்னுநான்மறைப் பல்பொருளாகிய பரனிடம் வரைச்சாரல்
பின்னுமாதவிப் பந்தலில் பெடைவரப் பிணியவிழ் கமலத்துத்
தென்னவென்றுவண்டின்னிசைமுரல்தரு திருவயிந்திரபுரமே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மின்னும்	மின்னுகின்றுள்ள	பரன்	ஸர்வஸ்மாத்பரனுக்கு
ஆழி	திருவாழியை	இடம்	ஸ்தாநமாவது,
அம்	அழகிய [யனாய்,	வரைச்சாரல்	மலைப்பக்கங்களில்
கையவன்	திருக்கையிலேயுடை	பின்னும்	நெருங்கியிருந்துள்ள
செய்யவள்	பெரியபிராட்டியார்	மாதவிப்பந்தலில்	குருக்கத்திப்பந்தலிலே
உறைதரு	நித்யவாஸம்பண்ணுகிற [னாய்,	வண்டு	வண்டுகளானவை
திருமார்வன்	திருமார்வையுடைய	பெடை	தங்கள்பேடைகள்
நான்மறை	நான்குவகைப்பட்ட வேதங்களால்	வர	வருகைக்காக
பன்னு	சொல்லப்படும்	பிணி அவிழ்	கட்டு அவிழுகிற
பல்பொருள்	பதார்த்தங்களையெல்லாம்	கமலத்து	தாமரையிலே (புக்கு)
ஆகிய	தனக்கு ப்ரகாரமாகவுடைய	தென்னஎன்று	தென்னா! தெனா! என்று
		இன்இசைமுரல்தரு	இனியஇசைபாடாநின்றுள்ள
			திருவயிந்திரபுரமே. (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (மின்னுமித்யாதி) ஸர்வேஶ்வரத்வ லக்ஷணமாகிறது - திருவாழியைக் கையிலே சலியாதே பிடித்தல், லக்ஷ்மீபதியாதல், வேதைக ஸமதிகம்யனாதல், இவையாயிற்று; இவை மூன்று முண்டிங்கு. (மின்னுமாழியங்கையவன்) மேகத்திலே மின்னினாற்போலே யிருக்கிற திருவாழியைக் கையிலே யுடையவன். (செய்யவளித்யாதி) அந்த மின்கொடிதான் ப்ரதேசாந்தரத்திலே தழுவினாற்போலேயாயிற்றுப் பெரிய பிராட்டியாரைத் திருமார்பிலே யுடையனாயிருக்கும்படி. (பன்னித்யாதி) பரந்து நாலுவ்வகைப்பட்ட வேதத்தில் அவ்வோ விடங்கள்தோறும் சொல்லப்பட்ட பதார்த்தங்களடங்கத் தனக்கு சரீரதயா ப்ரகாரமாய், தானொருவனுமே ப்ரகாரியா யிருக்கையாலே ஸர்வஸ்மாத்பரனானவன். (௧) †“वेदैश्च सर्वैरहमेव वेद्यः - வேதைஶ்ச ஸர்வை ரஹமேவ வேத்ய:” என்றானிறே. (௨) “ह्रीश्च ते - ஹ்ரீஶ்சதே” (௩) †“अस्येशाना - அஸ்யேசாநா”.

---

(௧) கீதை- (௨) ஸ்ரீஸூக்தம். (௩) ஸ்ரீஸூக்தம்-

(வரையித்யாதி) †பிராட்டியும் தானுமான சேர்த்தியில் ப்ரணய கலஹம் மாறாதே செல்லுமாபோலே யாயிற்று அங்குத்தை திர்யக்குக்களுடைய யாத்ரையும், மலையின பர்யந்தத்தில் நெருங் கப்பட்டிருந்துள்ள மாதவிப் பந்தலிலே மதுபானம்பண்ண விழுந்த வண்டுகளானவை, தன்னில்தான் ப்ரணயரோஷத்தாலே, "நீ, நான்" என்ன, அவ்வளவிலே பேடையானது, "இனி நீ ஜீவிக்கும் படியெல்லாம் நான் காண்கிறேன்" என்று, ப்ரதிஜ்ஞைபண்ணி, மாதவியிலே செறியப்பூத்த பூவிலே புக்கொளித்தது; அத்தை யொழிய அரைக்ஷணம் ஜீவிக்கமாட்டாமையாலே,(௧) "ந ச ஸீதா த்வயா ஹீநா" (உ) "நஜீவேயம் - நஜீவேயம்" என்று படுமிறே சேவல், அப்படி நோவுபட்டு, எல்லா†ஸாதநங்களையு மநுஷ்டித்து, †பல் பன்னிரண்டும் காட்டினவிடத்திலும் அதுக்குக் கேட்டதில்லை யாயிற்று; "இனிச்செய்வதென்?" என்று பார்த்து "கைகழியப்போ கமாட்டாது, நாம்படுவது காண மறைந்த வித்தனை, நம்மிடற்றோ சையாலே முகங்காட்டுவித்துக் கொள்வோம்" என்றுபார்த்து,(பின் னுமாதவிப்பந்தலில்பெடைவர) அதிலே புக்க பேடையானது, ஊடல் தீர்ந்துவந்து முகங்காட்டும்படி †அப்போ தலர்ந்த செவ்வித் தாமரையிலே போய்ப்புக்கு தென்ன! என்று ஆளத்திவைக்கத்துடங் கிற்றாயிற்று. †நக்குண்டார் ‡நாவெழாரிறே. பாடப்பகை தீருமென்ப திறே; (௩)†"பேதை நெஞ்சறவறப் பாடும்பாட்டை" என்னக்கடவ திறே. .... (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (மின்னித்யாதி). கீழ்ப்பாட்டில், ஸ்ரீவராஹ மாய், ஜகத்துக்குவந்த ப்ரளயாபந்நிவ்ருத்தியைச்செய்து கண்ணுறங்கிக்கிடந் தவன் வந்திருக்கிறவிடமாகையாலே ப்ராப்யமென்றநுஸந்தித்தார்; இதில், ஸர்வஸ்மாத்பரன் வர்த்திக்கிறவிடமாகையால் ப்ராப்யமென்றநுஸந்திக்கிறு ரென்று ஸங்கதி.

"மின்னுமாழி" இத்யாதிக்கு வ்யுத்க்ரமேண ப்ரமாண ப்ரதர்சநம் (வேதைரித்யாதி). "வேதை:" என்கிற பன்மையால், பேதஶ்ருதி, அபேத ஶ்ருதி, கடகஶ்ருதி எல்லாம் சொல்லுகையால், "பொருளாகிய" என்றதுக்கு ப்ரமாணமென்று கருத்து. (அஸ்யேசாநா) என்றவநந்தரம், (௪) "ஶ்ரீவத்ஸவக்ஷா நித்யஶ்ரீரஜய்ய ஶாஶ்வதோ த்ருவ:- தமஸ: பரமோ தாதா ஶங்கசக்ரகதாதர:- ஸ்ரீவத்ஸ

(௧) ரா-ஸு-௬௬-௪உ, (௩) தி-வாய்-௯-௯-௯,
(உ) ரா-ஸு-௬௬-௧0, (௪) ரா-யு-௧௧௪-௧௫,

ஸ்ஸோ நித்ய ஸ்ரீரஜேயஸ் ஸாஸ்வதோ த்ருவ:-தமஸ: பரமோதாதா சங்கசக்ர கதாதர:" என்றநுஸந்தேயம்.

(உறைதிருமார்வன்) என்னவமைந்திருக்கவும், "தரு" என்கையாலே; ப்ரணயகலஹம்மாறாதே செல்லுகை ஸித்தமென்று இத்தை த்ருஷ்டாந்தமாக்கி, பெடைவரும்படி இன்னிசைமுரலாநிற்கும் என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பிராட்டியுமித்யாதி). (ஸாதநங்களையும்) என்கிறது - தூதப்ரேஷணாதிகளைப் பண்ணியென்றபடி. (பல்பன்னிரண்டும்காட்டி) என்றது - கெஞ்சியும் என்றபடி. கெஞ்சும்போது பதினாறும் என்னாதே பன்னிரண்டும் என்றது - மந்தஸ்மிததசையிலும் நாலுதோற்றுகிறது ஸித்தமாகையால் அதிகமாகத்தோற்றுவது பன்னிரண்டேயென்கை. (அப்போதலர்ந்த தாமரையிலேபுக்கு) என்றதுக்கு - எங்கும் தேடித்திரிந்து காணாமையால் நாக்கொட்டிக்கிடந்தது, பாடும்போது நாக்கு நனைக்கக்கண்டு அவிழ்தாமரையில் போயிற்றென்றுகருத்து. கெஞ்சினால்வராதது பாடினால்வருமோவென்ன வருளிச்செய்கிறார் (நக்குண்டாரித்யாதி). (நக்குண்டார்) கிஞ்சித்காரம் பெற்றவர்கள். (நாவெழார்) குற்றம்சொல்லமாட்டார். இத்தால் (க) "ஸ்த்ரீணாம் ஸ்த்ரீஸம்ஸ்வந்தே-தஸ்மாத் காயந்தம் ஸ்த்ரிய: காமயந்தே" என்கிறபடியே - கானரஸங் கேட்கில் குற்றஞ்சொல்லமாட்டாதே வருமென்றதாயிற்று. பர்டப்பகைதிருமோவென்ன (பேதையித்யாதி). ... (௨)

௫.—வையமேழுமுண்டாலிலை வைகிய மாயவனடியவர்க்கு
மெய்யனாகியதெய்வ நாயகனிடம் மெய்தகு வரைச்சாரல்
மொய்கொள் மாதவி செண்பகம் முயங்கிய முல்லையங்கொடியாடச்
செய்யதாமரைச் செழும்பணை திகழ்தரு திருவயிந்திரபுரமே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வையம்எழும்	கீழ் ஏழுலோகங்களை[யும்]	வரைச்சாரல்	மலைப்பக்கத்தில்
உண்டு	அமுதுசெய்து	மொய்கொள்	நெருங்கியிருந்துள்ள
ஆலிலை	வடதளத்திலே	மாதவி	குருக்கத்தியானது
வைகிய	போதுபோக்கின	செண்பகம்	செண்பகத்தை
மாயவன்	ஆஸ்சர்யசக்தியுக்தனாய்	முயங்கிய	தழுவின
		முல்லை	நிர்ஜலப்ரதேசத்தில்
அடியவர்க்கு	தனக்கே எல்லாவடிமையும்செய்யுமவர்களுக்கு	அம்	அழகிய
		கொடி	முல்லைக்கொடியானது [னாலே)
மெய்யனாகிய	தன்னை யுள்ளபடிகாட்டுமவனான	ஆட	அசைய, (அதினொல்)
		செழு	செழித்த
தெய்வநாயகன்	தெய்வநாயகனுக்கு	பணை	நீர்நிலங்களிலுள்ள
இடம்	இடமாவது,	செய்யதாமரை	செந்தாமரை (அலர்ந்து)
மெய்தகு	எம்பெருமான் திருமேனியில் மார்த்தவத்துக்குத்தக்க	திகழ்தரு	ஒளிசெய்கிற
			திருவயிந்திரபுரமே. (௩)

வ்யா.—மூன்றும்பாட்டு. (வையமித்யாதி) †பூமிப்பரப்படங்கலும் வயிற்றிலே யெடுத்துவைத்து ஒருபவனுன ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளின ஆஶ்சர்யசக்தியுக்தன்.†அகடிதங்களைச்செய்தும் ஆஶ்ரிதரக்ஷணம்பண்ணுமவன். (அடியவர்க்கித்யாதி) †காதாசித்கமாக ஜகத்துக்குவந்த ப்ரளயத்தைப் பரிஹரித்தாற்போலன்றிக்கே தன்னை நித்யாநுபவம் பண்ணவேணும் என்றிருப்பார்க்கு, அதுக்கொருக்ஷணம் விச்சேதம் வருகையாவது - நித்ய†ப்ரளயமிறே. தனக்கு அஸாதாரணமாயிருப்பார்க்குத் தன்படிகளையெல்லாம்"இவனுக்குள்ள திவ்வளவு" என்று பரிச்சேதித்தநுபவிக்கலாம்படி வெளியிட்டுக்கொண்டுநிற்கிற. (தெய்வநாயகனிடம்) நித்யஸூரிகளுக்குத் தன்படிகளெல்லாம் அநுபவிக்கலாம்படி கொடுத்துக்கொண்டிருக்குமாபோலே, இங்குள்ள ஆஶ்ரிதர்க்கும் தன்னை அநுபவிக்கலாம்படி கொடுத்துக்கொடு நிற்கிறவிடம். (க)†"ಅಹಮೇವಂವಿಧಃ - அஹமேவம்விதঃ" என்றுனிறே - †நான் பக்த்யைகலப்யன் என்றருளிச்செய்தவாறே, (உ) "ಪರಂಬ್ರಹ್ಮ ಪರಂಧಾಮ - பரம்ப்ரஹ்மபரம்தாம" என்று கேட்டிருந்தபடியாலே - நீ ஒருவன் பக்திக்கெளியனுவதென்னென்ன, "ಅಹಮೇವಂವಿಧಃ - அஹமேவம்விதঃ" நாட்டில் பரிமாறுகிறபடி கண்டு சொல்லவொண்ணுதுகாண், அவ்வோ வ்யக்திகளில்கண்டபடி சொல்லவேணுங்காண், எனக்கிதுவே †ப்ரகாரம் என்றுனிறே.

(மெய்தகு)†மெய்க்குத்தக்கிருக்கை - †மென்மையையுடைத்தாயிருக்கை. இதரவிஸஜாதீயமாயிருந்துள்ள மலையில் பர்யந்தத்திலே. (மொய்கொளித்யாதி) †மொய்யென்று - வலிக்கும், செறிவுக்கும் பேர். இங்கு, செறிவாய், நெருங்கியிருந்துள்ள குருக்கத்தியானது, செண்பகத்தைச்சென்று கட்டிக்கொண்டது; முல்லைநிலத்திலே அந்தக் கொடியானது காற்றுலே அசைய, மருதநிலத்திலுண்டான தாமரைகளில் அலருமளவாய்நின்ற பூக்களானவை இக்கொடியசைகிற காற்றுப்பட்டு அலராநிற்குமாயிற்று. †சிவந்த தாமரைகளையுடைத்தான நீர் நிலங்களிலே உஜ்ஜ்வலமாகா நின்றுள்ள. (திருவயிந்திரபுரமே) †அகடிதங்களை கடிப்பித்தும் அவனுஶ்ரிதரக்ஷணம் பண்ணுமாபோலே, †விருத்தமான தேசத்தில் அவையிரண்டையும் ஏககாலத்திலே கிட்டியநுபவிக்கலாம் தேசமாயிற்று. ... (௩)

(க) கீதை - ௧௧ - ௫௪.   (உ) கீதை - ௧௦ - ௧௨.

அரு.—மூன்றும்பாட்டு. (வையமித்யாதி) கீழ்ப்பாட்டில்சொன்ன பரத்வத்தைத் தத்கார்யமான அகடிதகடநாஸாமர்த்யமுகேந அநுபவிக்கிறுரென்று ஸங்கதி.

வையமேழும் - கீழேழுலோகங்களும், உண்டு - ஆலிலையில், வைகிய - போதுபோக்கின, என்று சப்தார்த்தமாயருளிச்செய்கிறுர் (பூமியித்யாதி). (பூமிப்பரப்படங்கலும்) என்றது-கீழில்லோகங்கள் பூவிவரங்களாகையாலே. மேலுக்கவதாரிகை (அகடிதங்களையித்யாதி). அடியவர்க்குமெய்யனுகிறதும் வையமுண்டதுபோல் அகடிதமோவென்ன வருளிச்செய்கிறுர் (காதாசித்கேத்யாதிவாக்யத்தாலே). (ப்ரளயமிறே) என்றவநந்தரம், ஆகையாலே அதுவாராதபடி என்று சேஷபூரணம்பண்ணிக்கொள்வது. அபரிச்சிந்நனதன்னைப் பரிச்சேதித்தநுபவிக்கும்படி பண்ணுகை அகடிதமிறேயென்று திருவுள்ளம். நித்யஸூரிகள் ஸர்வஜ்ஞராகையாலே தன்படிகளெல்லாமநுபவிக்கலாம்படி பண்ணினுனேயாகிலும்,இங்குள்ளார்க்கு அங்ஙனநுபவிக்கை கூடுமோவென்ன வருளிச்செய்கிறுர் (அஹமித்யாதி). விவரணம் (நாணித்யாதி). ஸ்வரூபதோ குணதஸ்ச நிரதிசயப்ருஹத்தாய் நிரவதிகதேஜோரூபமானவஸ்து பக்திக்கு ஸுலபமாயநுபவிக்கலாம்படி பண்ணினுயென்றுல் இது நாட்டில் கண்டதில்லையேயென்ன (நாட்டிலித்யாதி). (ப்ரகாரம்).ஸ்வபாவம்.

(மெய்க்கு) என்றது. தெய்வநாயகன் திருமேனிக்கென்றபடி. (மென்மையையுடைத்தாயிருக்கை) - எம்பெருமான் திருமேனியில் மார்த்தவம்போலே மார்த்தவத்தையுடைத்தாயிருக்கை. மொய்கொள்-நெருங்கியிருந்துள்ள, மாதவியானது, செண்பகத்தை, முயங்கிய - தழுவிய, முல்லை - முல்லைநிலத்திலே - நிர்ஜலப்ரதேசத்திலே, அம்கொடியானது - அக்கொடியானது-முல்லையென்ற சப்தத்தாலே சொல்லப்பட்ட கொடியானது, ஆட, அத்தாலே, செழும்பணையில்-மருதநிலத்தில், நீர்நிலத்தில்-செய்யதாமரை திகழ்தரு திருவயிந்திரபுரமென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறுர் (மெய்யென்றித்யாதிவாக்யத்ரயத்தாலே). முல்லையங்கொடி - அழகியமுல்லைக்கொடி, ஆட, தாமரையுடைய செழும்பணையிலே விளங்குகிற என்று அர்த்தாந்தரமருளிச்செய்கிறுர் (சிவந்தவித்யாதி). முந்தினவர்த்தத்தில், குறிஞ்சி நிலமான மலைச்சாரிலே முல்லைநிலமும் மருதநிலமுமிருக்ககூடுமோ வென்னும் சங்கையிலேயருளிச்செய்கிறுர் (அகடிதங்களை யித்யாதி). (விருத்தமானதேசத்தில்)-அவையிரண்டுக்கும் விருத்தமான மருதநிலத்திலென்றபடி.　…　…　(௩)

மூ.—மாறுகொண்டுடன்றெதிர்ந்தவல்லவுணன்றன்மார்வகமிருபிளவாக்
கூறுகொண்டவன்குலமகற்கின்னருள்கொடுத்தவனிடம்மிடைந்து
சாறுகொண்டமென்கரும்பிளங்கழைதகைவிசும்புறமணிநீழல்
சேறுகொண்ட தண் பழனமதெழிறிகழ் திருவயிந்திரபுரமே.　(௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாறுகொண்டு	(நான்) சத்ரு என்று கொண்டு	கரும்பு	கரும்பினுடைய
உடன்று	கோபித்து	இளங்கழை	குருத்தின் நுனியான
எதிர்ந்த	எதிரிட்டுவந்தவனாய்	விசும்பு	ஆகாசத்தை
வல்	மிக்க பலமுடைய	உற	கிட்ட
அவுணன்றன்	ராக்ஷஸனான ஹிரண்யனது	தகை	(அத்தாலே) தகையப்பட்டிருப்பதாய்(அக்கரும்பினுடைய)
மார்வகம்	மார்வானது		
இருபிளவா	இரண்டுபிளவாம்படி		
கூறுகொண்டு	கூறுசெய்து	மணிநீழல்	அழகியநிழலையுடைத்தாய்
அவன்குலமகற்கு	அவனுடையகுலபுத்ரனான ப்ரஹ்லாதாழ்வானுக்கு	சேறுகொண்ட	(கருப்பஞ்சாற்றாலே வெள்ளமிட்ட) சேற்றையுடைத்தாய்
இன்அருள்கொடுத்தவன்	நல்ல அருள்செய்தவனுக்கு	தண்	குளிர்ந்த
இடம்	இடமாவது,	பழனமது	நீர்நிலங்களின்
மிடைந்து	ஒன்றோடொன்றுநெருங்கி	எழில்	அழகு
சாறுகொண்ட	ஸாரமானதுபெருகாநின்றுள்ள	திகழ்	ஒளிவிடுகிற
மெல்	ம்ருதுவான		திருவயிந்திரபுரமே. (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (மாறுகொண்டித்யாதி). (க) †“𑌸𑍁𑌹𑍃𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍍-ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்” என்றிருக்குமவனோடே, † “நான்மாறு” என்று வந்தானாயிற்று; “நான்சத்ரு” என்று கொண்டு. (உடன்று) “நான்சத்ரு” என்று சொல்லாநிற்கச் செய்தேயும், அகவாயிலின்றிக்கே யிருக்கவுமாமிறே; அங்ஙனன்றிக்கே, அகவாயில் த்வேஷத்தோடே எதிரிட்டு முன்னேவந்த. (வல்லவுணன்). †ஹிரண்யனுடைய. சத்ருவென்று வாயாலே சொல்லுகையும், அதுக்கடியான நெஞ்சில் த்வேஷமும், அதின் கார்யமான முன்னேவந்து நிற்கையும், மூன்றையும் சொன்ன†படி. தேவர்களுடைய வரத்தை ஊட்டியாகவிட்டு வளர்த்த மிக்கபலத்தை யுடையனான ஆஸுரப்ரக்ருதியுடைய. (மார்வித்யாதி). பரந்த மார்வானது இரண்டு பிளவாம்படி கூறுசெய்தவன். †சீற்றத்தோடே நரஸிம்ஹம் வந்து தோற்றின தோற்றங்கண்டவாறே மெல்கினான்; பின்னையிரண்டு கூறுக்கிப் பொகட்டானாயிற்று. குலவிரோதியான ஹிரண்யனைப்போக்கி, அவன் குலபுத்ரனுக்குத் தன்பேறான அருளைப்பண்ணினவன். †ஸர்வேச்வரனன்றோயிறே, பிதாவுக்கு ப்ரஜைபக்கலிலே வாத்ஸல்யமுறைத்து அவனை நோக்கும்படி பண்ணுகிறான்;

(க) கீதை - ௯ - ௨௯.

அதில் அந்த வாத்ஸல்யம்போய் தானே தானும்படி தோற்றிநின்ற வாறே தான் தமப்பனி லண்ணிய வுறவாய்வந்து உதவினானாயிற்று.

(மிடைந்தித்யாதி) †பெற்ற தமப்பன் பகையாக அவனிலண்ணிய உறவாயுதவினவன் றனக்குத் தன்னிலண்ணிய உறவில்லையிறே புறம்பு; இப்படியிருக்கிறதானும் (௧) "ஆத்மைவ ரிபுராத்மநஃ - ஆத்மைவ ரிபுராத்மநஃ" என்கிறபடியே, தனக்குத்தானே பகையாய் தன்னை முடிக்கப்பார்த்தவன்று "உன்னை உன்கையில் காட்டித் தாரேன்" என்று நோக்குகைக்காகவந்து நிற்கிறவிடம்; †பரஸ்பரம் நெருங்கி அந்நெருக்கம் பொறாமையாலே ஸாரமானது ப்ரவஹியா நின்றுள்ள மெல்லிய கரும்பினுடைய, இளங்கழையுண்டு - நுனியானது, ஆகாசத்திலே சென்றுவளர, "இனியிவ்வருகு போகவொட்டோம்" என்று தடுக்குமாயிற்று ஆகாசம். இப்படிவளர்ந்த கரும்பினுடைய †அழகிய நிழலையுடைத்தாய், கருப்பஞ்சாற்றாலே வெள்ளமிட்ட சேறுகளையுடைத்தாயிருந்துள்ள நீர் நிலங்களிலழகு உஜ்ஜ்வலமாகா நின்றுள்ள திருவயிந்திரபுரமே - (௨) †[தழீஇக்கொண்டு போரவுணன்றன்னைச் சுழித்தெங்கும் தாழ்விடங்கள்பற்றி†புலால் வெள்ளம் தானுகள] வ்யாபரித்தபோது ஹிரண்யனுடைய ருதிர வெள்ளத்தாலே பார்த்தபார்த்த விடமெங்கும் சேறு செய்தாற் போலே, கரும்புகளொன்றோடொன்று நெருங்கி ப்ரவஹித்த சாற்று வெள்ளத்தாலே பூமியெல்லாம் சேறாய்க்கிடக்குமாயிற்று. ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (மாறுகொண்டித்யாதி). கீழ்ப்பாட்டில், "அடியவர்க்குமெய்யனாகிய" என்றருளிச்செய்தார்; அவர்களையடியராக்கினபடியை யநுஸந்தித்துக்கொண்டு, அவனிடம் ப்ராப்யமென்கிறாரென்று ஸங்கதி.

"மாறாய்" என்னாதே, "கொண்டு" என்றதால், தோற்றின உட்கருத்தை யருளிச்செய்கிறார் (ஸாஹ்ருதமித்யாதி). "உடன்று" சினத்து என்றாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (நானித்யாதி). கீழ்பலித்தவர்த்தத்தையநுவதித்துக் கொண்டு வன்மையை உபபாதிக்கிறார் (ஹிரண்யனுடையவித்யாதி வாக்யத்வயத்தாலே). (படி) என்றவநந்தரம் அதுக்குடலாக என்றுசேஷம். இருபிளவாக்கினவன் என்னவே அமைந்திருக்க, "கூறுகொண்டவன்" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (சீற்றத்தோடேயித்யாதி). "குலமகன்" என்கைக்கு ஈஶ்வரன் பிதாவோவென்னவருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரன்றானேயித்யாதி).

"அவுணன் குலமகற்கு இன்னருள்கொடுத்தவனிடம்-திருவயிந்திரபுரம்" என்றதுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (பெற்றவித்யாதி). வாக்யார்த்தம்

---

(௧) கீதை - ௬ - ௫. (௨) பெரியதிருவந்தாதி - ௩௭.

(பரஸ்பரமித்யாதி). "மணி" என்றதினர்த்தம் (அழகிய) என்றது. "மார்வகமிருபிளவாக்கூறுகொண்டவன்" என்றத்தை த்ருஷ்டாந்தமாக்கித் தாத்பர்யமருளிச்செய்கிருர் (தழீஇக்கொண்டித்யாதி). (புலால்வெள்ளம்) - ரக்தப்ரவாஹம். ... ... (௪)

மூ.—ஆங்குமாவலிவேள்வியிலிரந்து சென்ற கலிடமளந்தாயர்
பூங்கொடிக்கினவிடை பொருதவனிடம் பொன்மலர்திகழ்வேங்கை
கோங்குசெண்பகக்கொம்பினில் குதிகொடுகுரக்கினமிரைத்தோடித்
தேன்கலந்த தண்பலங்கனி நுகர்தரு திருவயிந்திரபுரமே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாவலி	மஹாபலியின்	இடம்	இடமாவது,
வேள்வியில்	யஜ்ஞவாடத்திலே	குரக்கினம்	குரங்கின் கூட்டமானது
சென்று	கிட்டி	பொன்மலர்	பொற்பூப்போலே
இரந்து	(மூன்றடிமண்ணை) அர்த்தித்து	திகழ்	விளங்காநின்றுள்ள
ஆங்கு	அவ்விடத்திலேயே	வேங்கைகோங்குசெண்பகம்	வேங்கைகோங்கு செண்பகம் என்கிறவி
அகல் இடம்	பரந்தபூமியை	கொம்பினில்	கொம்பிலே [வற்றின்
அளந்து	அளந்துகொண்டவனாய்	குதிகொடு	குதித்துக்கொண்டு
ஆயர்	இடையருடைய	இரைத்து	பெரிய ஆரவாரத்துட
பூங்கொடிக்கு	பூத்தகொடிபோன்ற நப்பின்னைப் பிராட்டிக்காக	ஓடி	ஓடிவந்து, [னே
		தேன்கலந்த	தேன்மிக்க
		தண்	அழகிய
இனவிடை	இனமானஎருஷபங்களையும் [னுக்கு	பலங்கனி	பலாப்பழத்தை
		நுகர்தரு	புஜியாநின்றுள்ள
பொருதவன்	எதிரிட்டு நிரஸித்தவ		திருவயிந்திரபுரமே. (ரு)

வ்யா—அஞ்சாம்பாட்டு. (ஆங்கித்யாதி). †"மஹாபலி தாநம் பண்ணாநின்றான்" என்று கேட்டவாறே, அவனுடைய யஜ்ஞவாடத்திலே தன்னை அர்த்தியாக்கிச்சென்று, அவன்கையில் நீர் தன்கையிலே விழுந்த வநந்தரம் அவ்விடந்தன்னிலே நின்றே பூமிப்பரப்படைய அளந்துகொண்டு, இடையர் பூத்தகொடிபோலே யிருக்கிற நப்பின்னைப் பிராட்டிக்காக. உபக்ரம் தேட்டமான பருவமாயிற்று. (க) "పతిసంయోగ సులభం వయః - பதிஸம்யோக ஸுலபம் வய:" என்கிறபடியே ஒரு கொள்கொம்பிலே கூட்டில் கிடைக்குமளவாய், இல்லையாகில தர்மிலோபம் பிறக்குமளவாயிருக்கை. இனமானருஷபங்களோடே பொருதவனுடைய ஸ்தாநம்.

(க) ரா - அ - ககஅ - ௩௪.

(பொன்னித்யாதி) குரக்கினமானது, பொன்போலே யிருக்கிற மலர்விளங்கா நின்றுள்ள, வேங்கை கோங்கு செண்பகக் கொம்பினில் - இவற்றிலே தாவி பெரிய வேகத்தோடேவந்து ; அவ்வருகு போக்கின்றிக்கே, (தேன் கலந்த) †தேன்மிக்கிருந்துள்ள பலாப் பழத்தை புஜியாநிற்குமாயிற்று. ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு, (ஆங்கித்யாதி) தனக்குத்தானே பகையான இச் சேதநனைநோக்கி அநந்யப்ரயோஜநனுக்குமவனென்றார் - கீழ்ப்பாட்டில்; அத்தாலே அநந்யப்ரயோஜநரான அடியவர்க்கு மெய்யனுகை கேட்கவேணுமோ, ப்ரயோஜநாந்தரபரனுக்குங்கூடத் தன்னையழியமாறிக் கார்யம்செய்தானிறே என்று வாமநாவதாரவ்ருத்தாந்தத்தை யநுஸந்தித்துக்கொண்டு, அடியவர்க்குமெய்யனுகைக்கு த்ருஷ்டாந்தமாகக்கருதி, நப்பின்னையிடத்தில் வ்யாமோஹத்தால்செய்த செயலையுமநுஸந்தித்து, அவனிருந்தவிடம் ப்ராப்யமென்கிறாரென்று ஸங்கதி.

"மாவலிவேள்வியில்சென்று - இரந்து - ஆங்கு - அகலிடமளந்து" என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி பலிதார்த்தமருளிச்செய்கிறார் (மஹாபலியித்யாதி).

"தெட்டபழம் - மதுச்சொரியும்" என்கிறபடியே - பலங்கனியில் தேன் சொரியுமென்றருளிச்செய்கிறார் (தேனித்யாதி). ... ... (௫)

மூ.—கூனுலாவிய மடந்தைதன் கொடுஞ்சொலின்திறத்திளங்கொடி-
யோடும்
கானுலாவிய கருமுகில் திருநிறத்தவனிடம் கவினாரும்
வானுலாவிய மதி தவழ் மால்வரை மாமதிள் புடைசூழத்
தேனுலாவிய செழும் பொழில் தழுவிய திருவயிந்திரபுரமே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கூன் உலாவிய மடந்தைதன்	கூனேறின குப்ஜையினுடைய	வான்	ஆகாசத்திலே
கொடும்சொலின்திறத்து	கடியபேச்சுக்காக	உலாவிய	ஸஞ்சரிக்கிற
இளங்கொடியோடும்	பிராட்டியும் தானுமாய்	மதி	சந்த்ரன்
கான்	காட்டிலே	தவழ்	தவழும்படி
உலாவிய	எழுந்தருளினவனாய்	மால்வரை	உயர்ந்த மலைகளும்
கருமுகில்	கறுத்தமேகம்போன்ற	மாமதிள்	பெரியமதிள்களும்
திருநிறத்தவன்	வடிவழகையுடையவனுக்கு	புடைசூழ	பக்கங்களிலேசூழ்ந்துகிடப்பதாய்
இடம்	இடமாவது,	தேன் உலாவிய	வண்டுகள்ஸஞ்சரிக்கிற
கவின்	அழகு	செழும்பொழில்	அழகிய நீர்நிலங்களால்
ஆரும்	மிருக்கிருந்துள்ள	தழுவிய	சூழப்பட்ட
			திருவயிந்திரபுரமே. (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (கூனித்யாதி). (௧) †“ సర్వాత్మనాన్ధః - ஸர்வாத்மநாந்த:” என்று, கண்ணில் குருடேயன்றிக்கே நெஞ்சும் குருடுபட்டிருக்கு மென்னுமாற்போலே, முதுகில் கூனேயன்றிக்கே நெஞ்சும் க்ரூரமாயாயிற்றிருப்பது. கூனியினுடைய கொடுஞ்சொல்லுண்டு - (௨) “రామే వా భరతే వాஹం విశేషం నోపలక్షయే - ராமேவாபரதே வாஹம்விசேஷம் நோபலக்ஷயே” என்ற கைகேயி (௩) “ఏష మే జీవితస్యాన్తో రామో యద్యభిషిచ్యతే - ஏஷமே ஜீவிதஸ்யாந்தோ ராமோயத்யபிஷிச்யதே” என்று சொல்லும்படி பண்ணின கொடிய சொல்லாயிற்று. (இளங்கொடியோடும்) கொள்கொம்பு தேட்டமாயிருப்பது, அதில் தானே சென்று பற்றமாட்டாதே யிருப்பதான பருவமாயிற்று.(கானுலாவிய) †ஒருஸர்க்கமாக, பெருமாள்தாமே, “உனக்குக் காட்டில் வெம்மை பொறாது” என்றருளிச் செய்தாரிறே. (கருமுகில்) மின்கொடிதழுவ ஒருமேகம் ஸஞ்சரிக்குமாபோலே, காட்டிலே யிருவருமா யுலாவினபடி.

கவினென்று அழகு; அழகு மிக்கிருந்துள்ள ஆகாசத்திலே ஸஞ்சரிக்கிற சந்த்ரனுக்கு, குழவிகள் சுரமேறுமாபோலே தவழ்ந்தேறவேண்டும்படியான ஒக்கத்தையுடைய பெரிய மலைகளையும் பெரியமதிள்களையும் சுற்றிலே யுடைத்தாய், வண்டுகள் ஸஞ்சரியாநின்றுள்ள அழகிய பொழிலாலே சூழப்பட்ட திருவயிந்திரபுரமே. †முன்பு வநவாஸம் பண்ணின சக்ரவர்த்தித்திருமகனுக்குத், திருச்சித்ரகூடத்தையும் தண்டகாரண்யத்தையும் விஸ்மரித்து வர்த்திக்கலாம் தேசமாயிற்று. ... ... (௬)

அரு.—ஆறும்பாட்டு. (கூனித்யாதி) ப்ரயோஜநாந்தரபரனுகிலும் தன்னையாஶ்ரயித்த இந்த்ரனுக்காகத் தன்னையழியமாறினது கேட்கவேணுமோ, க்ரூரையான கூனிசொற்கொண்டு காப்புக்கயிற்றோடே ராஜ்யம்விட்டுக் காட்டுக்கெழுந்தருளினனிறே என்று அந்த அபதாநத்தை யநுஸந்தித்து, அவனிடம் ப்ராப்யமென்கிறாரென்று ஸங்கதி.

கூனல்வந்த அதர்சநீயதையும், “மடந்தைதன்” என்றதாலேசொன்ன தானான தன்மை - நெஞ்சில் க்ரௌர்யமென்னுமத்தையும் திருவுள்ளம்பற்றி, ஸத்ருஷ்டாந்தமுபபாதிக்கிறார் (ஸர்வாத்மநேத்யாதி). ஸர்வாத்மநாந்தன் - த்ருதராஷ்ட்ரன். இளங்கொடியாகில் இவளோடே கானுலாவுவானென்னெ

---

(௧) ப.ர- (௨) ரா-அ-௭-௩௫. (௩) ரா-ஆ-௪௭-௬.

ன்னவருளிச்செய்கிறார் (ஒருஸர்க்கமாகவித்யாதி). ஆயிருக்கச்செய்தேயும் கொடியாகையாலே கூடத்துடர்ந்தாளென்று கருத்து.

திருவயிந்திரபுரத்துக்குத் திருமதிள்களைச்சொல்லுகை புரவர்ணநோபயுக்தமாகிலும், மலைகளையும் மரங்களையும் வர்ணித்ததுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (முன்பித்யாதி). ... ... (௬)

மூ.—மின்னில்நுண்ணிடைமடக்கொடிகாரணம்விலங்கலின்மிசையிலங்கை
மன்னன்நீண்முடிபொடிசெய்த மைந்தனதிடம் மணிவரைநீழல்
அன்னமாமலரரவிந்தத் தமளியில் பெடையொடுமினிதமரச்
செந்நெலார் கவரிக்குலை வீசு தண் திருவயிந்திரபுரமே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மின்னில்	மின்போன்ற	மணிவரை	ரத்நபர்வதத்தின்
நுண்	ஸூக்ஷ்மமான	நீழல்	நிழலிலே
இடை	இடையையும்[யளாய்	அன்னம்	ஹம்ஸங்களானவை
மடம்	மடப்பத்தையுமுடை	மா	பெரிய
கொடிகாரணம்	கொடிபோன்ற பிராட்டிக்காக	அரவிந்தமலர்	தாமரைப்பூவாகிய
		அமளியில்	படுக்கையில்
விலங்கலின்மிசை	ஸுவேலமலையின் மேல் கட்டப்பட்ட	பெடையொடும்	தங்கள்பேடையோ
		இனிது	இனிதாக [டே
இலங்கை	லங்கைக்கு [டைய	அமர	தங்கியிருக்கும்படி
மன்னன்	ராஜாவானராவணனு	செந்நெல்ஆர்குலை	செந்நெல்நிறைந்தகுலையானது [கிற
நீள்முடி	பெரிய முடிகள்பத்தையும்	கவரிவீசு	சாமரம்போலேவீசு
பொடிசெய்த	பொடிபடுத்தின	தண்	குளிர்ந்த
மைந்தனது	மிடுக்கனானவனுக்கு		திருவயிந்திரபுரமே. (௭)
இடம்	இடமாவது,		

வ்யா.—ஏழாம்பாட்டு. (மின்னித்யாதி) † மின்னோடொத்த நுண்ணிய இடையையுடையளாய், ஆத்மகுணங்களுக்கெல்லாந்தானே ஆஶ்ரயமாய், ஒரு உபக்நத்தோடேசேர்க்கவேண்டும்படியான பருவத்தையுடைய ஸ்ரீஜநகராஜன் திருமகள் ஹேதுவாக. †பிரிவில் ரக்ஷகரை இவ்வார்த்தை சொல்லுவிக்கும்படியான அழகிறே. (௧) †[पुरेव मे चारुदतीम्-புரேவமேசாருததீம்] மாயாம்ருகத்தின்பின்னே போவதுக்குமுன்பு, "இம்மானைப்பிடித்துத்தரவேணும்" என்ற மூறுவலோடே †கொடுவந்து காட்டிற்றிலர்களாகில், [अनिन्दिताम्-அநிந்திதாம்] "அவளைப்பெருமையாலே ஜகதுபஸம்ஹாரம்பண்ணினார்" என்றால், "அவளுக்காக இது செய்தவிடம், தப்பச்செய்தார்"

(௧) ரா - ஆ - ௬௪ - ௭௫.

என்னவல்லாருண்டோ? (௧) "ருக்தலக்ஷ்ம ஸேமதிஃ - யுக்தமித்யேவ மேமதிஃ" என்னுமித்தனையாகாதே. †பிராட்டியை உள்ளபடியெல்லாமறியாத வெனக்கு மிருந்தபடியிது; இனி இவனையுள்ளபடியறிவாரென்கினைந்திருப்பார்களோ?(௨) [ஸ்லேகை-ஸதேவேத்யாதி] †இத்தை வருக்கைக்கு நெஞ்சால்பட்ட விடர்படவேணுமே அழிக்கைக்கு. (விலங்கலித்யாதி) ஸுவேலசைலமாய், அதின்மேலே த்ரிகூடமாய், அதின்மேலே படைவீடாயிறேயிருப்பது; இப்படி ஒருவராலழிக்கவொண்ணுத படைவீட்டுக்கு நான் ராஜாவல்லேனோ என்று அபிமாநித்திருக்கிற பையலுடைய, தேவதைகளுடையவராங்களாலே பூண்கட்டியிருக்கிற முடிகள்பத்தும் துகளாம்படி பண்ணின மிடுக்கனானவன் வர்த்திக்கிற ஸ்த்தாநம்.

(மணிவரைநீழல்)ரத்நபர்வதச்சாயையிலே. (அன்னமித்யாதி) அன்னமானது, பெரியமலரான தாமரைப்படுக்கையிலே, †அதாகிறது - குளித்தல், உண்ணுதல், மதுபாநம் †பண்ணுதல், ஊடினல் ஒருவரையொருவரணித்தாகாதபடி கடக்கக் கிடக்கைக்கு வேண்டுமிடம்போரும்படி பரப்புடைத்தான படுக்கையிலே. † ஜாத்யாசண்டாளரைப் பொறுத்தாலும் ப்ரணயாபராத சண்டாளரைப் பொறுப்பாரில்லையிறே; (௩) †"பள்ளிகமலத்திடைப்பட்ட" என்னுமாபோலே. (செந்நெலாரித்யாதி) அப்படுக்கையிலே பேடையோடே இனிதமரும்படியாக, அவ்வநுபவத்துக்குத் †தண்ணீர்த்துரும்பாகையன்றிக்கே இனிதமரவீசுமாயிற்றுச் செந்நெல்; ஒருசேதநனென்று துணுக்கென்னவேண்டாதே, நிறைந்த கவரிக்கொத்தை வீசாநிற்குமாயிற்று. ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (மின்னித்யாதி) "இளங்கொடியோடும் கானுலாவிய" என்றநுஸந்தித்தவாறே அங்குண்டான அபதாநமெல்லாம் திருவுள்ளத்திலோடி அவன் மிடுக்கை அநுபவிக்கிருரென்று ஸங்கதி.

"மின்னில்" என்ற பஞ்சமியை உபமாநார்த்தத்திலே யாக்கியருளிச்செய்கிருர் (மின்னேடித்யாதி). சீதைகாரணமாகவென்னவமைந்திருக்க, இங்ஙன் வர்ணித்துச்சொன்னது - அழகே காரணமென்கைக்காக வென்றருளிச்செய்கிருர் (பிரிவிலித்யாதி). "இவ்வார்த்தை" என்ற வார்த்தைதானேதென்னவருளிச்செய்கிருர் (புரேவேத்யாதி). (கொடுவெந்து) என்றவநந்தரம், ஜகத்திலுள்ளார் என்றுசேஷம். திருவடிபிராட்டியைக்கண்டபின்பு, பெரு

(௧) ரா-ஸு- •(௨) ரா-ஆ-சூச-எரு. (௩) சு-எ-சு-

யாள் பிரிவால்படுகிறபாடெல்லாமுசிதம் என்றிருந்தால் நித்யாநுபவம்பண்ணுகிற நித்யஸூரிகள் கொண்டாடுகை கைமுதிகந்யாயஸித்தமென்கிறுர் (பிராட்டியையித்யாதி). (இத்தை) - ஜகத்தை.

"மா" என்றதுக்குத்தாத்பர்யம் (அதாகிறதித்யாதி). (பண்ணுதல்) என்றவநந்தரம், என்னையொழியச்செய்தாய் என்று இவ்வளவும் கூட்டுவது. ப்ரணயகலஹம் பிறந்தால் தனியேகிடக்கவேணுமோ, பொறுக்கவொண்ணுதோவென்ன வருளிச்செய்கிறுர் (ஜாத்யாசண்டாளரை யித்யாதி). திர்யக்குக்களுக்கு ப்ரணயகலஹப்ரஸக்தியுண்டோவென்ன வருளிச்செய்கிறுர் (பள்ளிகமலத்தித்யாதி). (தண்ணீர்த்துரும்பாகையன்றிக்கே) என்றதுக்கு - கேவலம் தண்ணீரில் பிறந்த ஸஸ்யமாயேபோகாமே சேதநக்ருத்யமான கவரிவீசிற்றென்றும், கேவலசேதநமாய் போகப்ரதிபந்தகமாகாமலிருந்ததென்றும் தாத்பர்யம் கண்டுகொள்வது. ... ... (௭)

மூ.—விரைகமழ்ந்தமென்கருங்குழல்காரணம்வில்லிறுத்தடல்மழைக்
நிரைகலங்கிடவரைகுடையெடுத்தவன்நிலவியவிடம்தடமார் [கு
வரை வளந்திகழ் மதகரி மருப்பொடு மலை வள ரகிலுந்தித்
திரைகொணர்ந்தணைசெழுநதிவயல்புகுதிருவயிந்திரபுரமே. (௮)

பதம்.	உரை.
விரை	நறுநாற்றம்
கமழ்ந்த	கமழாநின்றுள்ள
மெல்	ம்ருதுவான
கருங்குழல்காரணம்	கறுத்த திருக்குழலையுடைய பிராட்டிக்காக
வில்	வில்லை
இறுத்து	முறித்தவனாய்,
அடல்	யுத்தோந்முகமான
மழைக்கு	வர்ஷத்துக்கு
நிரை	பசுக்கூட்டம்
கலங்கிட	நோவுபட
வரை	கோவர்த்தநகிரியை
குடை	குடையாக
எடுத்தவன்	எடுத்துக்காத்தவன்
நிலவிய	நித்யவாஸம்பண்ணுகிற
இடம்	இடமாவது,
தடம்	தடாகங்கள்

பதம்.	உரை.
ஆர்	நிறைந்த
வரை	மலைகளுக்கு
வளம்	அழகாய்க்கொண்டு
திகழ்	விளங்காநின்றுள்ள
மதகரி	மத்தகஜத்தின்
மருப்பொடு	கொம்பையும்
மலைவளர்	மலையில்வளருகிற
அகில்	அகில்மரத்தையும்
உந்தி	தள்ளிக்கொண்டு
திரை	அலையானது
கொணர்ந்து	கொண்டுவந்து
அணை	சேருகிற
செழுநதி	அழகியஆறு
வயல்	வயலில்
புகு	பாய்கிற
	திருவயிந்திரபுரமே. (௮)

வ்யா.—எட்டாம்பாட்டு. (விரையித்யாதி) நறுநாற்றம் கமழாநிற்பதாய் ம்ருதுவான கருங்குழலையுடைய ஸ்ரீஜநகராஜன்திருமகள்ஹேதுவாக வில்லை முறித்து. †(௧)"ஸர்வகந்த:-ஸர்வகந்த:"என்கிறவஸ்து,

(௧) சாந்தோக்யம்- ௩- ௧௪ -

"முடியும், முடியாது" என்றுபாராதே மேல்விழுந்து வில்லைமுறிக்கும்படியாயிற்றுக் குழலின் பரிமளம். † அதாகிறது-அவ்வருகு பெறவிருக்கிறது இவளையாகில் நடுவுண்டான ப்ரதிபந்தகங்கள் கொடு கார்யமென்! என்றிருந்தார். (அடல்மழைக்கு)†அவளழகிலே துவக்குண்டு செய்த செயலேயன்றிக்கே, ஸ்வரக்ஷணத்திலந்வயமில்லாத பசுக்களுக்கும் இடையர்க்குமாக மலையையெடுத்து மழையைப் பரிஹரித்தானாயிற்று. †இந்த்ரனாலே யேவப்பட்ட மேகங்கள் வர்ஷிக்க அதிலே பசுக்களும் இடையரும் நோவுபடப்புக, கோவர்த்தநகிரியைதரித்து ரக்ஷித்தானாயிற்று.(அடல் மழைக்கு)(க) †"போர்க்களத்து"என்னுமாபோலே யுத்தோந்முகமான வர்ஷத்துக்கு.(நிரைகலங்கிட) (உ) "ஶீர்ணவர்ஷம் - அதீவார்த்தம்" என்கிறபடியே நோவுபட. (நிரைகலங்கிட அடல்மழைக்கு-வரைகுடையெடுத்தவன்). †விஶ்வாமித்ராதிகளோடாதல், ஜநகாதிகளோடாதல் கூட்டிச்செய்யும் ஜந்மமன்றே! தோற்றிற்றொரு மலையையெடுத்துப் பரிஹரித்தானாயிற்று.(நிலவியவிடம்) இந்த்ரன் வர்ஷிப்பிக்கப் பிற்பாடராய் நோவுபடவிட்டாற்போலேயாகவொண்ணாதென்று, ஏற்கவே நோவு படாமே நோக்குகைக்காகவந்து நித்யவாஸம்பண்ணுகிறவிடமாயிற்று.

(தடமித்யாதி) †தடமென்று-தாழ்வரையாய், தான்வளரா நின்றுள்ளவரைபோலே அழகு விளங்காநின்றுள்ளமத்தகஜத்தினுடைய வென்னுதல்; அன்றிக்கே, தடமென்று-தடாகமாய், தடங்கள்மிக்கிருந்துள்ளவரைக் கழகாய்க்கொண்டு விளங்காநின்றுள்ள மத்தகஜத்தினுடைய மருப்போடேகூட வென்னுதல். மலைக்குச்சிறப்பாக ஆனைகளைச் சொல்லக்கடவதிறே. (மலைவளரகிலுந்தி) மலையிலே மநுஷ்யாதிகளால்வரும் ஸங்கோசமில்லாமையாலே, ஆகாசாவகாசத்தை இடமடைத்துக்கொண்டு தான்கண்டபடி வளருகிற அகிலை வேரோடேபறித்துத்தள்ளிக்கொண்டு. (திரையித்யாதி) வர்ஷித்தவாறே,மலையருவிகளானவை ஆனைக்கொம்பையும் அகில்மரத்தையும் முறித்துத்தன் திரைகளாகிற கைகளாலேயேந்திக்கொண்டு வயலிலே வந்து புகுருமாயிற்று. அளவுபட்ட வாய்த்தலைகளாலேயாதல், கைவாய்க்காலாலேயாதல் புகுருகையன்றிக்கே, விளைவில்லாக்கடலிலே போய்ப் புகுகையுமன்றிக்கே, ஆறுதானே வயலிலேவந்து புகுருமாயிற்று. ... ... (அ)

(க) பெரி-திரு-௩-ரு-அ.   (உ) வி-பு-கக-க௩.

௮.—எட்டாம்பாட்டு. (விரையித்யாதி) பிராட்டியழகில் துவக்குண்டு ராவணனைவென்ற மைந்தன் என்றார் கீழ்ப்பாட்டில்; அவ்வளவோ, அவளைக் கைப்பிடிக்கப்போனவன்றே பரிமளத்தில் நசையாலே வில்லைமுறித்த மிடுக்கையும், அவ்வளவன்றியே, க்ருஷ்ணனாய் மலையெடுத்தானென்று மநுஸந்தித்து, அந்தமிடுக்கனிருக்குமிடம் ப்ராப்யமென்கிறாரென்றுஸங்கதி.

கமழ்ந்த மென் கருங்குழல் என்றாலமையாதோ, "விரை" என்று விசேஷித்ததுக்குக் கருத்தென்னென்ன வருளிச்செய்கிறார் (ஸர்வகந்த இத்யாதி). (ஐஹ) வித்தவ்யாக்யாத்ரு வாக்யம் (அதாகிறதித்யாதி). ஒருகாமுகன், வ்யாமோஹத்தாலே கார்முகத்தை முறித்தானென்கிறவிது மிடுக்காகவேணுமோவென்ன வருளிச்செய்கிறார் (அவளித்யாதி). மலையெடுக்கும்படி மழைவர ப்ரஸக்தியைக் காட்டாநின்றுகொண்டு விவரிக்கிறார் (இந்த்ரனித்யாதி). மழையை யுத்தோந்முகமானதாகச் சொன்னாருண்டோவென்ன (போர்க்களத்தென்னுமாபோலே) என்கிறார். "சலமாமுகில் பல்கணப்போர்க்களத்துச் சரமாரிபொழிந்து" என்று பெரியாழ்வாரருளிச்செய்தாற்போலே யென்று கருத்து. அர்ஜுநனைப்போலே சரக்கூடமாகக்கட்டாதே, மலையெடுப்பானென்னென்ன; இடையனாகையாலே பெருமாளைப்போலே விசாரியாதே செய்தானென்கிறார் (விஶ்வாமித்ரேத்யாதி).

ஆர்தல் - மிகுதியாய், வளர்த்தியைச் சொல்லுகிறதென்றருளிச்செய்கிறார் (தடமென்றித்யாதி). ... ... (௮)

மூ.—வேல்கொள்கைத்தலத்தரசர்வெம்போரினில்விசயனுக்காய்மணித்தேர்க்
கோல்கொள்கைத்தலத்தெந்தைபெம்மானிடம்குலவுதண்வரைச்சாரல்
கால்கொள்கண்கொடிக்கையெழக்கமுகிளம்பாளைகள்கமழ்சாரல்
சேல்கள் பாய்தரு செழுநதி வயல்புகு திருவயிந்திரபுரமே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கைத்தலத்து	கையில்	கைத்தலத்து	கையில்
வேல்கொள்	வேலையுடையரான	கொள்	கொண்டுநின்ற
அரசர்	துர்யோதநாதிகளு	எந்தை	என்குலநாதனான
வெம்	பயாவஹமான[டைய	பெம்மான்	ஸர்வேஶ்வரனுக்கு
போரினில்	பாரதயுத்தத்தில்	இடம்	இடமாவது,
விசயனுக்குஆய்	அர்ஜுநனுக்கே அநுகூலனாய் (அவனுடைய)	குலவு	எல்லாராலும்கொண்டாடப்படுகிற
		தண்	குளிர்ந்த
மணித்தேர்	அழகியதேர்முன்னே	வரைச்சாரல்	பர்வதபார்ஶ்வத்தில்
கோல்	உழவுகோலை	கால்	வெற்றிலைக்கால்கள்

கண்கொள்	கண்தோறும் கிளைக்கிற	சேல்கள்	சேல்மத்ஸ்யங்கள்
கொடி	கொடியானது	பாய்தரு	பாய்கிற
கையெழ	கையெழாநிற்குமதாய்	செழுநதி	அழகிய ஆறானது
கமுகு	பாக்குமரங்களின்	வயல்புகு	வயலில் பாயாநின்றுள்ள
இளம்பாளைகள்	இளைதானபாளைகள்		திருவயிந்திரபுரமே. (௯)
கமழ்	பரிமளியாநிற்கிற		
சாரல்	பர்யந்தத்தையுடைத்தாய்		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (வேலித்யாதி). †பகதத்தனில்குறைந்தாரில்லையிறே அங்கேறினபேரில்; (க) ஸார்வஸாஹ்ஸ்ரம்-பார்த்தம் ஸஞ்சாத்யபண்ணவேண்டும்படியிறே. (அரசர்)பரிகரம்தூசியேற ராஜாக்கள்கடக்கநிற்கையன்றிக்கே, ராஜாக்களே தூசியேறினபோராயிற்று. (வெம்போர்)பாரதஸமரமென்றால் கேட்டவர்களுக்கும்வயிறெழுக வேண்டும்படியான யுத்தத்திலே. காணவந்தசோழர்க்கும் தங்களை நோக்குகைக்குக் கையிலே ஓராயுதம்பிடித்துக்கொண்டு நிற்கவேண்டும்படி பயாவஹமிறே. (விசயனுக்காய்)†அர்ஜுநனுக்காகத் தன்னை அழிவுக்கிட்டு. †ரதியைச்சீறினவன் ஸாரதியையிறே யழியச்செய்வது.†உடம்புக்கு ஈடு இடாதே தன்னை அழிவுக்கிட்டு நின்றானாயிற்று. †தான்கொண்டவிஜயமும் அர்ஜுநன்தலையிலே கிடக்கும்படி தன்னைத்தாழவிட்டு வைத்தானாயிற்று. (உ)†"மலைபுரைதோள்"இத்யாதி. (மணியித்யாதி) ஶ்லாக்யமான தேரிலே, கையிலே உழவுகோலைக் கொண்டுநின்ற என்குலநாதனுடைய ஸ்தாநம்.

(குலவித்யாதி)†கொண்டாடப்பார்த்தால் தன்னையேகொண்டாடும்படியாயிருக்கிற குளிர்ந்த மலைச்சாரலிலே-பர்யந்தத்திலே. (கால்கொள்கண்கொடி)காலுண்டு-†வெற்றிலைக்கால்; அதுமறையும்படியாகக்கண்தோறும்†பல்லிபற்றுமாயிற்று வெற்றிலைக்கொடி. அக்கொடிகள், கமுகுகளினுடைய இளம்பாளைகள் விரிந்த பரிமளத்தாலே யெருவிட்டாற்போலேயிருக்க, கையெழாநிற்கும். கையென்று-வெற்றிலைக்கிளைகளிறே. இப்படிப்பட்டசோலையையுடைத்தாய், இச்சோலைக்கணித்தாயிறே ஆறுமிருப்பது. அப்பரிமளத்திலே மதுபாநம்பண்ணினாற்போலேகளித்து சேல்கள் பாயாநிற்குமாயிற்று. இப்படியிருக்கிற அழகிய நதியானது வயலிலேபுகுமாயிற்று. அதாவது-இவ்வயலளவுமாயிற்று ஆறாய் வருவது; இங்கேவந்தவாறே வயலிலேபுகுந்தாயிற்றுப்போவது.

(க) பாரத- (உ)

ஆக, தாரகம் தார்யத்துக்குள்ளே மறைந்திருக்கும் தேசமாயிற்று. தான் வெல்லச்செய்தேயும், "அர்ஜுநன்வென்றான்" என்று சொல்லலாம்படி க்ருஷ்ணன் அவனுக்குப் பரிகரமாய் அந்தர்ப்பவித்தாகிற்குமாபோலே, தான் விளைவிக்கச்செய்தே "வயல்விளைந்தது" என்று சொல்லலாம்படியாயிற்று இருப்பது. ... ... (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (வேலித்யாதி). மலையெடுத்து மழைதடுத்தானென்று க்ருஷ்ணாவதாரம் ப்ரஸ்துதமானவாறே, அவனுடைய ஆஶ்ரித பக்ஷபாதத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

போரில்வருமரசர்க்கு ஆயுதங்களநுக்தஸித்தமன்றோ,விசேஷிப்பானென்னென்ன; கருத்தருளிச்செய்கிறார் (பகதத்தனிலித்யாதிவாக்யத்வயத்தாலே). "உரஸா(அ)சாதயாமாஸ பார்த்தம் ஸஞ்சாத்ய மாதவ:- உரஸாச்சாதயாமாஸ பார்த்தம் ஸஞ்ச்சாத்யமாதவ:" என்கிறபடியே பகதத்தன்விட்ட அஸ்த்ரத்தை க்ருஷ்ணன் தன்மார்விலேற்று அர்ஜுநனை ரக்ஷிக்கவேண்டுமானால், அவனிலும் மிகுத்த அரசர்வேல்கள் க்ரூரங்களென்கைக்காக விசேஷித்தாரென்று கருத்து. "விசயன் மணித்தேர்க்கோல்கொள்" என்றத்தாலே - தன்மேன்மையழித்து ஸாரதியாய் தன்னை அம்புக்கிலக்காக்கினமை தோற்றுகிறதென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (அர்ஜுநனுக்காகவித்யாதி). ரதிக்கன்றோ அழிவென்ன வருளிச்செய்கிறார் (ரதியையித்யாதி). "விசயனுக்காய்" என்றது-விஜயனுக்கேயாயென்று ஸாவதாரணமாக்கித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உடம்புக்கித்யாதி). ஸ்வரக்ஷணார்த்தமாக உடம்பிலே கவசம்போடாமலிருந்தானென்று கருத்து. பார்த்தர்க்காயென்னாதே, "விசயன்" என்று அவனை நிரூபித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (தானித்யாதி). தான்கொண்டவிஜயம் அவன்மேலே யேறிட்டதுக்கு ப்ரமாணம் (மலையித்யாதி). "அலைவலை" என்கையாலே - தான்செய்தவிஜயத்தையெல்லாம் அர்ஜுநன்மேலே யேறிட்டுத் தானேகொண்டாடினானென்று கருத்து.

குலவுதல் - குலாவுதலாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (கொண்டாடவித்யாதி). (வெற்றிலைக்கால்) என்றது - வெற்றிலைக்கொடிவளரும்படியான கொள்கொம்பு. (பல்லிபற்றுகை) கிளைக்கை. ... ... (௯)

மூ.—மூவராகியவொருவனை மூவுலகுண்டுமிழ்ந்தளந்தானைத் [த்து
தேவர்தானவர் சென்றுசென்றிறைஞ்சத் தண்திருவயிந்திரபுர
மேவுசோதியைவேல்வலவன் கலிகன்றிவிரித்துரைத்த
பாவுதண்டமிழ் பத்திவை பாடிடப் பாவங்கள்பயிலாவே. (௧0)

திருமங்கை யாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
மூவர்ஆகிய	ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரரூபியான
ஒருவனை	அத்விதீயனாய்,
மூவுலகு	மூன்றுலோகங்களையும்
உண்டு	அமுதுசெய்து
உமிழ்ந்து	வெளியில் புறப்படவிட்டு
அளந்தானை	(மஹாபலிபக்கலில்நின்றும்மீட்டு) அளந்துகொண்டவனாய்,
தேவர்	தேவர்களும்
தானவர்	அஸுரர்களும்
சென்றுசென்று	பலகால்சென்று
இறைஞ்ச	ஆஶ்ரயிக்கலாம்படி
தண்	ஶ்ரமஹரமான
திருவயிந்திரபுரத்து	திருவயிந்திரபுரத்திலே
மேவு	நித்யவாஸம்பண்ணுகிற
சோதியை	தேஜஸ்வியானவன் விஷயமாக
வேல்வலவன்	வேலாலேயெதிரிகளை ஜயிக்கவல்ல
கலிகன்றி	ஆழ்வார்
விரித்து	விஸ்தரித்து
உரைத்த	அருளிச்செய்ததாய்
பாவு	பரந்த
தண்	அழகிய
தமிழ்	தமிழ்பாஷையான
இவைபத்து	இப்பத்துப்பாட்டையும்
பாடிட	பாட
பாவங்கள்	பாபங்கள்
பயிலா	சேரமாட்டா. (க௦)

வ்யா.—பத்தாம்பாட்டு.(மூவரித்யாதி)ப்ரஹ்மருத்ராதிகளுடைய சரீரத்துக்கும் ஆத்மாவுக்கு மந்தராத்மதயாநின்று ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைப்பண்ணுகையாலும், ஸ்வேநரூபேணநின்று பாலநத்தைப் பண்ணுகையாலும்; (மூவராகிய ஒருவனை) (க)†"ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம்"ஆக ஸர்வநியந்தாவாயிற்று.(மூவுலகித்யாதி)ஆபத்ஸகனுமாயிற்று.(தேவரித்யாதி) (உ) "தேவாநாம் தாநவாநாஞ்ச" என்கிறபடியே, தன்னாலே ஸ்ருஜ்யரானவர்களிரண்டு திறத்தார்க்குமொத்திருக்கையாலே, தந்தாமுடைய அபேக்ஷிதஸித்திக்காக தேவர்களுக்கும் அஸுரர்களுக்குமடையச் சென்றாஶ்ரயிக்கலாம்படி திருவயிந்திரபுரத்திலே நித்யவாஸம் பண்ணி, அத்தாலே பரமபதத்திற்காட்டிலு முஜ்ஜ்வலனாயிருக்கிறவனை. †எல்லாமில்லையிறே பரமபதத்தில்; இவர்களுக்கு அபேக்ஷித ஸம்விதாநம் பண்ணுகையால் வந்தவேற்றமுண்டிறேயிங்கு.

(வேல்வலவன்) (௩) "ஆழிவலவன்" என்னுமாபோலே. (விரித்துரைத்த) சொல்லுகிற லக்ஷணங்களுண்டாம்படிசொன்ன.†"விரித்துரைத்த" என்றும்,"தொகுத்துரைத்த" என்றுமுண்டிறே. சிஷ்டர்க்கென்ன நெஞ்சிலே படும்படிபண்ணுகையும், இவர்களுக்குப் பரக்கச் சொல்லுகையும், இவையெல்லாம் வேணுமிறே. (பாவு) பரந்து.

(க) வி-பு-க-உ-சுசு. (உ) ஜி-ஸ்தோ-உ. (௩) ௩-திரு-எக.

ஸபாதலக்ஷமாயிருக்கையன்றிக்கே பத்தாயிற்று. (பாவங்கள் பயிலாவே) பாபாநுபவம் பண்ணுகைக்காகவிறே ஸம்ஸாரத்திலே பிறக்கிறது, அவையநுபவிக்கவந்த வித்தேசத்திலே இத்தையதிகரிக்கில்; அவைதான் "நமக்கிருப்பிடமல்ல" என்று விட்டோடிப்போம். (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அ௩.—பத்தாம்பாட்டு. (மூவரித்யாதி). "ஸ்ருஷ்ட்டி ஸ்த்திதி ஸம்ஹாரங்கள் மூன்றும் விஷ்ணுவேபண்ணுகிறுன்" என்றதுக்கு ப்ரமாணம் (ப்ரஹ்மேத்யாதி). "సృష్టిస్థిత్యన్తకరణీం బ్రహ్మవిష్ణుశివాత్మికామ్ । స సంజ్ఞాం యాతి భగవానేక ఏవ జనార్దనః - ஸ்ருஷ்ட்டி ஸ்த்தித்யந்த கரணீம் ப்ரஹ்மவிஷ்ணு சிவாத்மிகாம் | ஸஸம்ஜ்ஞாம் யாதி பகவானேக ஏவ ஜநார்த்தந:" என்று ப்ரமாண சேஷம். (எல்லாமில்லையிறே) என்றது - அநுகூல ப்ரதிகூலவிபாகமில்லையிறேயென்கை.

நெஞ்சிலேபடும்படி ஸங்க்ரஹமாக உரைக்கவமையாதோ, விரித்துரைப்பானென்னென்ன வருளிச்செய்கிறுர் (விரித்தித்யாதி). அந்திஸங்க்ரஹ விஸ்தரமாகச் சொன்னரென்கை. ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்தில் முதல் திருமொழி முடிந்தது.

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

பெரிய திருமொழி, ௩ - ம் பத்து, உ - ம் திருமொழி

ஊன் வாடப்ரவேசம்.

வ்யா.—(க)†"அடியவர்க்குமெய்யனாகிய தெய்வநாயகன்"என்று †ஆஶ்ரிதர்க்குஸுலபனாகைக்காகத் திருவயிந்திரபுரத்திலே ஸந்நிஹிதனானானென்றார் - கீழ்; அவன்படி இதுவானபின்பு, விரோதியான தேஹத்தைக்கழித்து பகவத்ப்ராப்திபண்ணவேண்டியிருப்பார்க்கு §(சரீரத்தையொறுத்து ஸாதநாநுஷ்டாநம் பண்ணவேண்டா, அவனுகந்து வர்த்திக்கிற திருச்சித்ரகூடத்தை யாஶ்ரயியுங்கோளென்கிறார்). (உ) "மன்னுமழல்நுகர்ந்தும் வண்டடத்தினுட்கிடந்தும்" என்கிறபடியே - கோடைகாலம் பஞ்சாக்நிமத்யஸ்த்தராயும், சீதகாலம் தடாகங்களிலே அகமர்ஷணம்பண்ணியும், அதிலே பாசியேறக்கிடந்தும், இப்படி சரீரத்தையொறுத்து, அப்பக்ஷராயும், வாயுபக்ஷராயும், சாகமூலபலாதிகளை புஜித்தும் தபஸ்ஸுபண்ணி க்லேசிக்கவேண்டா; ப்ரளயாத்யாபத்துக்களில் அபேக்ஷாநிரபேக்ஷமாக ரக்ஷிக்கும் ஸ்வபாவனாய், ராவணஹிரண்யாதிகளாலே நலிவு வந்தகாலத்து ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப்பண்ணி ரக்ஷித்தும், இப்படி ஸர்வப்ரகாரமாக ஸர்வரக்ஷகனான ஸர்வேஶ்வரன், ஸ்ரீயஃபதி, திருச்சித்ரகூடத்திலே ஸந்நிஹிதனானான், அத்தேசத்தைச்சென்று சேரவே ஸகலவிரோதிகளும்போய் அவனைப்பெறலாம். சடக்கென அத்தேசத்திலேசென்று சேருங்கோளென்று பரோபதேசம் பண்ணுகிறார். ... ... *

அ௩.—ஊன்வாடப்ரவேசம்.—திருவயிந்திரபுரத்திலே*அடியவர்க்கு மெய்யனாய் தெய்வநாயகனிருக்கையால் அங்கேதானே ஆஶ்ரயிக்கச்சொல்லலாயிருக்க, "திருச்சித்திரகூடத்தில்சென்று சேர்மின்கள்" என்று உபதேசிப்பானென்னென்கிற சங்கையிலே ஸங்கதியருளிச்செய்கிறார் (அடியவர்க்கித்யாதி). (ஆஶ்ரிதர்க்கு) என்றது - திருமேனியோடிருக்கு மாஶ்ரிதர்க்கென்றபடி.

(க) ௩-க-௩-　　§ குண்டலிதம் க்வாசித்கம்.

(உ) பெரியதிருமடல்.

மூ.—ஊன்வாட வுண்ணாதுயிர் காவலிட்
டுடலில்பிரியாப் புலனைந்தும் நொந்து
தாம் வாடவாடத் தவம் செய்யவேண்டா
தமதாவிமையோ ருலகாளகிற்பீர்
கானாட மஞ்ஞைக் கணமாட மாடே
கயலாடு கானீர்ப் பழனம் புடைபோய்த்
தேனாட மாடக் கொடியாடு தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இமையோருல	பரமபதத்தை	ஆட	அசையும்படியாக
தமதா [கு	தங்களதாக	மஞ்ஞைக்கண	மயில்திரள்கள்
ஆளகிற்பீர்	ஆளவேண்டியிருக்கு மவர்களே!	ஆட [ம்	ஆடவும்
		மாடே	பக்கத்திலே
ஊன்	மாம்ஸமானது	கயல்	கயல்மத்ஸ்யங்கள்
வாட	வற்றியுலரும்படி	ஆடு	ஸஞ்சரிக்கிற
உண்ணாது	போஜநாதிகளைத் தவிர்ந்து	நீர்	நீரோடுகிற [டைய
		கால்	வாய்க்கால்களையு
உயிர்	ப்ராணனை (போகாதபடியாக நீர் காற்றுமுதலானவற்று	பழனம்புடை போய்	நீர்நிலங்களினருகே போய்
		தேன்	வண்டுகள்
காவலிட்டு	சிறையிலிட்டு [ல்)	ஆட	மேலேயெழப்பறக்க (அக்காற்றாலே)
உடலில்பிரியா	சரீரத்தை விட்டுப் போகாத	மாடம்	மாடங்களிலுள்ள
ஐந்துபுலனும்	ஐந்து இந்த்ரியங்களு	கொடி	கொடிகள்
நொந்து	வருந்தி [ம்	ஆடு	அசையாநிற்கிற
தாம்	தாங்கள் [க்கும்படி	தில்லைத்திருச்சி த்திரகூடம்	தில்லைத்திருச்சித்திர கூடத்தை
வாடவாட	மேல்மேலும் க்லேசி		
தவம்செய்யவே ண்டா	தபஸ்ஸு பண்ணவே ண்டாம்;	சென்றுசேர்மி ன்கள்	சென்றுசேருங்கோ ள். (க)
கான்	வநமானது		

வ்யா-முதற்பாட்டு.(ஊன்வாட)மாம்ஸமானது குறைய அசந†வஸநாதிகளைக்குறைத்து, ப்ராணன்களைப்போகாதபடி அப்பக்ஷண வாயுபக்ஷணங்களாலே காற்கட்டி,சரீரத்தை விட்டுப்போகாத இந்த்ரியங்களைந்தும் ஸ்வஸ்வவிஷயங்களைப்பெறாமையாலே நொந்து ஈடுபடும்படி தாங்கள் †மேன்மேலும் க்லேசிக்கும்படி தபஸ்ஸு பண்ணவேண்டா. (தமதாவித்யாதி)†பரமபதத்தைத் தங்களதாக ஆளவேண்டியிருப்பீர்!

(கானூட) சோலையசையும்படியாக † மயிலினங்களாட, அத் தாலே சோலையில்நின்றும் கிளம்பின வண்டுகளானவை, அச்†சோலை யருகே கயல்கள்களித்துப்பாயாநின்றுள்ள†நீரோடு காலையுடைத்தா யிருக்கிற நீர்நிலங்கள் †அருகிட்டுப்போய், தேனுண்டு - வண்டுக ளானவை, மேலேயெழப்பறக்க, அக்காற்றாலே மாடத்திலுண்டான கொடிகளானவை அசையாநிற்குமாயிற்று. ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (ஊனித்யாதி) "உண்ணாது" என்றது - உடாமை க்கு உபலக்ஷணமா யருளிச்செய்கிறார் (வஸ்நாதிகளை) என்று. "வாடவாட" என்ற மீமிசையினர்த்தம் (மேன்மேலும் க்லேசிக்கும்படி) என்றது. "இமையோருலகு - தமதா ஆளகிற்பீர்" என்றங்வயித் தருளிச்செய்கிறார் (பரமபதத்தையித்யாதி).

"மஞ்ஞைக்கணம்" என்றதினர்த்தம் (மயிலினங்கள்) என்றது. "மாடே" என்றதினர்த்தம் (சோலையருகே) என்றது. "நீர் - கால் பழனம்" என்றங் வயித்து அர்த்தமருளிச்செய்கிறார் (நீரோடித்யாதி). "புடை" என்றதினர்த் தம் (அருகிட்டு) என்றது. ... ... (க)

மூ.—காயோடு நீடு கனியுண்டு வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலமைந்து
தீயோடுநின்று தவஞ்செய்யவேண்டா
திருமார்வனைச் சிந்தையுள் வைத்துமென்பீர்
வாயோது வேதம் மல்கின்ற தொல்சீர்
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த
தீயோங்கவோங்கப் புகழோங்கு தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. (உ)

பதம்.	உரை.
திருமார்வனை	ஸ்ரியஃபதியை
சிந்தையுள்	நெஞ்சில்
வைத்தும்என் பீர்	வைத்துக்கொள்ளவே ணுமென்பீர்!
காயோடு	இளங்காய்களையும்
நீடுகனி	நெடுநாளுலர்ந்தபழ ங்களையும்
உண்டு	புஜித்து
வீசு	அடிக்கிற
கடுங்கால்	வெட்டியகாற்றை
நுகர்ந்து	பாநம்பண்ணி
நெடுங்காலம்	நெடுநாள்
ஐந்து தீயோடுநின்று	பஞ்சாக்நிமத்யஸ்த ராய்நின்று
தவம்செய்யவேண்டா	தபஸ்ஸுபண்ணவேண்டா;
வாய்	வாயாலே
ஓது	ஓதப்படுகிற
வேதம்	வேதமானது
மல்கின்ற	குறைவற்றிருக்கிற

தொல்	ஸ்வாபாவிகமான	தீ	அக்நியானது
சீர்	ஸம்பத்தையுடைய	ஓங்கஓங்க	வளரவளர (அத்தா
மறையாளர்	ப்ராஹ்மணர்	ஓங்கு	மிக்குவருகிற [லே)
நாளும்	நாள்தோறும்	புகழ்	புகழையுடைய
முறையால்	க்ரமமாக		தில்லைத்திருச்சித்திரகூடம்சென்று
வளர்த்த	அநுஷ்டித்த		சேர்மின்கள். (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (காயோடித்யாதி)†பருவமிளேதான காய்களேயும், வெய்யிலிலும் காற்றிலுமுலர்ந்து பசையற்றகனிகளே யும் புஜித்து,வீசின†வெட்டிய காற்றைப்பருகி நெடுங்காலம் பஞ்சாக்நிமத்யஸ்த்தராய் நின்று தபஸ்ஸுபண்ணவேண்டா, ஶ்ரிய:பதியை ஹ்ருதயத்திலே பிரியாதபடி வைத்துக்கொள்வோமென்பீர்!

(வாயோதித்யாதி) வாயாலேஓதுகிறவேதம் குறைவறுகையால் வந்த ஸ்வாபாவிகஸம்பத்தையுடைய ப்ராஹ்மணர் என்று மொக்க முறையாலே அநுஷ்டித்த அக்நி வளரவளரப் புகழோங்காநின்றுள்ள தில்லை. ... ... (௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (காயித்யாதி) ஊன்வாடவுண்ணுதார் உயிரைக் காவலிடும்படி யெங்ஙனேயென்ன; அத்தை விவரியாநின்றுகொண்டு தபஸ்ஸினுடைய துஷ்கரதையையும் காட்டுகிருரென்று ஸங்கதி.

நீடுகனி - நெடுநாளுலர்ந்த கனியென்ருய், அங்ஙன்காய்க்கு விசேஷணமிடாமையால், இளங்காயென்று ப்ரகரணத்துக்குச் சேர வருளிச்செய்கிருர் (பருவமித்யாதி). (வெட்டிய) உஷ்ணமான. ... ... (௨)

மூ.—வெம்பும் சினத்துப் புனக்கேழலொன்ருய்
விரிநீர் முதுவெள்ள முள்புக்கழுந்த
வம்புண்பொழில்சூழுலகன்றெடுத்தா
னடிப்போதணைவான் விருப்போடிருப்பீர்
பைம்பொன்னு முத்தும் மணியுங் கொணர்ந்து
படை மன்னவன் பல்லவர்கோன் பணிந்த
செம்பொன் மணிமாடங்கள் சூழ்ந்த தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வம்பு	புதிதாய் [ன	முதுநீர்வெள்ள	மஹாஜலமானகடலி
உண்	ஊணுக்குவிஷயமா	முள்புக்கு	லேப்ரவேசித்து
பொழில்	சோலை	அழுந்த	மக்நையாக
சூழ்	சூழ்ந்த	அன்று	அப்போது
உலகு	பூமியானது	வெம்பும்சினம்	மிக்ககோபத்தையு
விரி	பரந்த		டைத்தாய்

புனம்	காட்டிலேவர்த்திக்கி	மணியும்	மாணிக்கங்களையும்
ஒன்று	ஒப்பற்ற [ற	கொணர்ந்து	கொண்டுவந்து
ஏனமாய்	மஹாவராஹமாய்க் கொண்டு	படை	பரிகரத்தோடேகூட
		மன்னவன்	ராஜாவான்
எடுத்தான்	அத்தை இடந்தெடுத் தவனுடைய [ளை	பல்லவர்கோன்	பல்லவராஜா
		பணிந்த	ஆஶ்ரயித்ததாய்
அடிப்போது	திருவடித்தாமரைக	செம்பொன்	அழகியபொன்னாலும்
அணைவான்	சாரவேணுமென்கிற	மணி	மாணிக்கங்களாலும் செய்யப்பட்ட
விருப்போடு	ஆதரத்தோடு		
இருப்பீர்	வர்த்திக்கிறவர்களே!	மாடங்கள்	மாடங்களால்
பை	அழகிய	சூழ்ந்த	சூழப்பட்ட
பொன்னும்	பொற்பூக்களையும்	தில்லைத்திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்கள். (ங)	
முத்தும்	முத்துக்களையும்		

வ்யா.—மூன்றாம்பாட்டு. (வெம்புமித்யாதி) மிக்கசினத்தை யுடைத்தாய் புனத்திலே வர்த்திக்கும் மஹாவராஹமொன்றாய், பரந் திருந்துள்ளகடலிலே பூமியழுந்த, அப்போது†பல (ஃல) மூலங்களை யுடைத்தான பொழில்சூழ்ந்த பூமியை எடுத்தவனுடைய திருவடித் தாமரைகளை யணையவேணுமென்னும் விருப்பத்தோடே வர்த்திப் பீர்!

(பைம்பொன்னித்யாதி) ரத்நாதிகளைக்கொண்டு பரிகரத்தோ டும் பல்லவர்கோன் பணிவதும்செய்து, செம்பொன்னாலும் மணியா லும்செய்த மாடங்கள் சூழாநின்றுள்ள தில்லை. ... ... (ங)

அரு.—மூன்றாம்பாட்டு. (வெம்புமித்யாதி) "தவம்செய்யவேண்டா, திரு ச்சித்திரகூடம் சேர்மின்கள்" என்றீர், நாங்கள் ஸம்ஸாரப்ரளயத்திலழுந் திக்கிடக்க உத்தரிப்பனேவென்ன; ப்ரளயார்ணவமக்நையான பூமியையெடு த்தாற்போல் உங்களை உத்தரிக்கவல்லவனென்கிறாரென்றுஸங்கதி.

வம்பு - புதிசாய், உண் - ஊணுக்குவிஷயமாய், அவற்றையுடைத்தான பொழிலென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (பலேத்யாதி).

பைம்பொன் - அழகியபொற்பூக்கள். ... ... (ங)

மூ.—அரு மாநில மன்றளப்பான் குறளா
யவுணன் பெருவேள்வியில் சென்றிரந்த
பெருமான் திருநாமம் பிதற்றி நுந்தம்
பிறவித்துயர் நீங்குதுமென்னகிற்பீர்
கரு மா கடலுள் கிடந்தா னுவந்து
கவை நா வரவினணைப் பள்ளியின்மேல்
திருமால் திருமங்கையோடாடு தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	இந்த்ரன் ராஜ்யத்தை இழந்தவன்று	நீங்குதும்	போக்குவோம்
		என்னகிற்பீர்	என்றுசொல்லியிருப்பீர்!
அரு	அளக்கவரிதான	கருமா	கறுத்துப்பெரியதான
மாநிலம்	மஹாப்ருதிவியை	கடலுள்	திருப்பாற்கடலிலே
அளப்பான்	அளக்கைக்காக	கவைநா	இரண்டுநாவையுடைய
குறளாய்	வாமநரூபியாய்		
அவுணன்	அஸுரனான மஹாபலியினுடைய	அரவினணைப்பள்ளியின்மேல்	திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே
பெருவேள்வியில்	மஹாயாகத்தில்	உவந்து	உகந்து
		கிடந்தான்	பள்ளிகொண்டருளின
சென்றுஇரந்த	சென்றுஅர்த்தித்த	திருமால்	ஸ்ரிய:பதி
பெருமான்	ஸர்வேஸ்வரனுடைய	திருமங்கையோடு	பெரியபிராட்டியாரோடே
திருநாமம்	திருநாமத்தை		
பிதற்றி	அடைவுகெடச்சொல்லி	ஆடு	நித்யவாஸம்பண்ணுகிற
நுந்தம்	உங்களுடைய		
பிறவித்துயர்	ஜந்மது:கத்தை	தில்லைத்திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்கள்.	(௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (அருமாவித்யாதி) அளக்கவரிதான மஹாப்ருதிவியை அளக்கைக்காக வாமநனாய், அஸுரனுடைய மஹாயாகத்திலே சென்றர்த்தித்த ஸர்வேஸ்வரனுடைய திருநாமத்தை அடைவுகெடப்பேசி உங்களுடைய ஜந்மது:கத்தைப்போக்குவோமென்று சொல்லியிருப்பீர்!

(கருமாவென்றுதுடங்கி) இரண்டு நாவையுடைய திருவநந்தாழ்வானுகிற படுக்கையிலே, † கறுத்துப் பெருத்த கடலிலே உகந்து கண்வளர்ந்தருளின ஸ்ரிய:பதி பெரியபிராட்டியாரோடே கூடவிடாதே ஸஞ்சரிக்கிற தில்லை. ... ...(௪)

அரு.—நாலாம்பாட்டு. (அருமாவித்யாதி). ஸ்ரீ பூமிப்பிராட்டிக்கு அவன் பரமப்ரணயியாகையாலுதவினனேயாகிலும், அதுகொண்டு நாங்கள் தேறும்படி யெங்ஙனேயென்ன; தன்னை அர்த்தித்தார்க்காகவே தானர்த்தியாய்க் கார்யம்செய்து தலைக்கட்டினவனன்றோ, உங்களபேக்ஷிதமும், செய்வனென்றருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

"கடல்கள்தோறும் கண்வளர்ந்தருளுமென்றொரு ப்ரமாணப்ரஸித்தியுண்டு" என்று முன்னே தாம் நிர்வஹித்தநிர்வாஹத்தைத் திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (கறுத்துப்பெருத்தகடலிலே) என்று. ... (௪)

மூ.—கோமங்க வங்கக் கடல் வையமுய்யக்
குலமன்ன ரங்கம் மழுவில் துணியத்
தாமங்கமருள் படைதொட்ட வென்றித்
தவமா முனியைத் தமக்காக்ககிற்பீர்

பூமங்கை தங்கிப் புலமங்கை மன்னிப்
புகழ் மங்கையெங்கும் திகழப் புகழ்சேர்
சேமங்கொள் பைம் பூம் பொழில் சூழ்ந்த தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர் மின்களே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கோ	ராஜாக்கள்	ஆக்ககிற்பீர்	ஆக்கிக்கொள்ளவே
மங்க	நசிக்கவும் [ந்த)		ண்டியிருப்பீர் !
வங்கம்	மரக்கலங்கள் (நிறை	பூமங்கை	பெரியபிராட்டியார்
கடல்	கடல்சூழ்ந்த	தங்கி	(திருமார்விலே) தங்கி
வையம்	பூமியிலுள்ளார்[கவும்		யும்
உய்ய	உஜ்ஜீவிக்கும்படியா	புலமங்கை	ஸ்ரீபூமிப்பிராட்டி
குலமன்னர்	ராஜாக்களுடைய	மன்னி	(இடவருகே) பொரு
அங்கம்	சரீரமானது		ந்தியும்(அத்தாலே)
மழுவில்	மழுவிலே	புகழ்	கீர்த்தியாகிற
துணிய	துணியும்படியாகவும்	மங்கை	ஸ்த்ரீ
தாம்	தாமே	எங்கும்	எங்குமொக்க
அங்கு	அப்போதுண்டான	திகழ	உஜ்ஜ்வலமாய்விளங்
அமருள்	பூசலிலேபுக்கு		காநிற்க
படைதொட்ட	ஆயுதமெடுத்த [ய்	புகழ்சேர்	புகழையுடைத்தாய்
வென்றி	ஜயத்தையுடையவனு	சேமம்கொள்	அரணையுடைத்தான
தவம்	பின்பு தபஸ்ஸுபண்	பைம்பூம்பொழி	பரந்துபூத்தசோலை
	ணப்புக்க	ல்சூழ்ந்த	யால்சூழப்பட்ட
மாமுனியை	மஹாமுனியான ஸ்ரீ	தில்லைத்திருச்சித்திரகூடம்சென்று	
	பரசுராமாழ்வானை	சேர்மின்கள்.	(ரு)
தமக்கு	தந்தாமுக்கு		

வ்யா—அஞ்சாம்பாட்டு. (கோமங்கவித்யாதி) ராஜாக்களென்று பேர்பெற்றாரடங்கலும் மங்க, கடல்சூழ்ந்தபூமி உய்ய, ராஜாக்களுடையசரீரம் மழுவிலே துணித்தவிடத்திலும் †கோபம்மாறாதே ஆயுதம்தொட்ட அதிமாத்ரமான மஹாவீர்யத்தையுடையனை ஸ்ரீபரசுராமாழ்வானைத்தந்தாமுக்காக்கிக்கொள்ளவேண்டியிருப்பீர்!

(பூமங்கையித்யாதி) பெரியபிராட்டியாரும், ஸ்ரீபூமிப்பிராட்டியாரும், நித்யவாஸம்பண்ணி புகழ் மங்கை யெங்கு முஜ்ஜ்வலமாய் வர்த்திப்பதும் செய்து, புகழையும் காப்பையுமுடைய பொழில் சூழ்ந்த தில்லை. ... ... (ரு)

அரு.—அஞ்சாம்பாட்டு. (கோமங்கவித்யாதி) இந்த்ரனுக்கு விரோதியாய் உதாரனான மஹாபலிபோலேயோ எங்களுடையப்ரபலவிரோதிகள் என்னும் ஜிஜ்ஞாஸுக்களுக்கு விரோதிநிரஸநசீலதையை யருளிச்செய்யக்கோலி, வாமநாவதாரத்துக்கு அநந்தரபாவியான ஸ்ரீபரசுராமாழ்வான் வீரசரிதத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

மழுவில் துணித்தபின்பும் படைதொட்டிருக்கையால் பலித்தவர்த்தம் (கோபம்மாறுதே) என்று. ... ... (௫)

மூ — நெய் வாயழ லம்பு துரந்து முந்நீர்
துணியப் பணிகொண் டணியார்ந் திலங்கும்
மையார் மணிவண்ணனையெண்ணி நுந்தம்
மனத்தே யிருத்தும்படி வாழவல்லீர்
அவ்வாயிளமங்கையர் பேசவுந்தா
னரு மாமறை யந்தணர் சிந்தை புகச்
செவ்வாய்க்கிளி நான்மறை பாடும் தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நெய்	கூரிய	வாழவல்லீர்	வாழவேண்டியிருப்பீர்!
வாய்	வாயையும்	அவ்வாய்	அவ்விடத்தில்
அழல்	அக்நிபோன்றதேஜஸ்ஸையுமுடைய	இளமங்கையர்	சிறுபெண்கள் (தமப்பன்மார் அத்யயநம் பண்ணக்கேட்டிருக்கையாலே,)
அம்பு	அம்பை		
துரந்து	விட்டு		
முந்நீர் துணிய	கடலைவற்றச்செய்து	அருமாமறை	அர்த்தமறிய அருமையான பெரியவேதத்தை
பணிகொண்டு	(அதில்) அணைகட்டினவனாய்		
அணி	ஆபரணத்தாலே	பேசவும்	சொல்லவும், (அப்பெண்களுடனேகூட)
ஆர்ந்து	பூர்ணமாய்		
இலங்கும்	விளங்காநிற்பதாய்	செவ்வாய்க்கிளி	சிவந்தவாயையுடையகிளிகள்
மைஆர்	கருமைமிக்க		
மணிவண்ணனை	மணிபோன்றவடிவழகையுடையவனை	அந்தணர்சிந்தைபுக	ப்ராஹ்மணர் ஹ்ருதயத்திலேபுகும்படி
எண்ணி	அநுஸந்தித்து	நால்மறை	நான்குவேதங்களையும்
நுந்தம்	உங்களுடைய	பாடு	பாடுகிற
மனத்தே	நெஞ்சிலே	தில்லைத்திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்கள்.	
இருத்தும்படி	நித்யவாஸம்பண்ணும்படி		(௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (நெய்வாயித்யாதி) கடைந்து நெய்யிட்ட வாயையுடைத்தாய், நெருப்பையுமிழுகிற அம்பையேவிக் கடலைத்துணித்து, அத்தைப்பணிகொண்டு, †உஜ்ஜ்வலமாய் கருமைமிக்கிருந்துள்ள மணிபோலேயிருக்கிற திருநிறத்தோடே கூடின விக்ரஹத்தை யுடையவனை யநுஸந்தித்து, உங்களுடைய ஹ்ருதயத்திலே நித்யவாஸம்பண்ணும்படி வாழவல்லீர்!.

(அவ்வாயென்றுதுடங்கி)† தன்வாயில் பழுப்புப்போலேயிருக்கிற பாலை(ஞ்ஞ)களானபெண்கள் ஒத்துக்கேட்ட செவியேற்றாலே சொல்லவும் ப்ராஹ்மணருடைய ஹ்ருதயத்துக்கேற, சிவந்தவாயை

யுடைத்தான கிளியானது நல்ல ஸ்வரத்தோடே நாலுவேதத்தையும் பாடாநின்றுள்ள தில்லை. ... ... (சு)

அநு.—அரும்பாட்டு. (செய்வாயித்யாதி) லோகத்தில் எதிரிட்ட ராஜாக்களைவென்றாகிலும் எங்களுடைய அபாரஸம்ஸாரஸமுத்ரத்தை வெல்லவல்லனேவென்ன; அநந்தராவதாரத்தில் கடலைக்கலக்கின அதிமாநுஷசேஷ்டிதத்தையருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

அணி - ஆபரணமாய், அத்தாலே ஆர்ந்து - பூர்ணமாய், இலங்குமதாயென்று விக்ரஹவிசேஷணமென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (உஜ்ஜ்வலமாய்) என்று.

"அவ்வாயிளமங்கையர் - அருமாமறை - பேசவும் அந்தணர்சிந்தைபுக, செவ்வாய்க்கிளி-தான்-நான்மறைபாடு" என்றந்வயம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னித்யாதி). ... ... (சு)

மூ—மௌவல் குழலாய்ச்சி மென்தோள்நயந்து
மகரம்சுழலச் சுழல் நீர்பயந்த
தெய்வத் திருமாமலர் மங்கை தங்கு
திருமார்பனைச் சிந்தையுள் வைத்துமென்பீர்
களவைக்களிற்றின் மருப்பும் பொருப்பில்
கமழ் சந்து முந்தி நிவா வலங்கொள்
தெய்வப்புனல்சூழ்ந் தழகாய தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. (எ)

பதம்.	உரை.
மௌவல்	முல்லைமலரை [ய
குழல்	திருக்குழலிலேயுடை
ஆய்ச்சி	நப்பின்னைப்பிராட்டி
மெல்	ம்ருதுவான [யுடைய
தோள்	திருத்தோளோடே
நயந்து	கலந்து, [மானவை
மகரம்	மத்ஸ்யம்தொடக்க
சுழல	சுழலும்படி
சுழல்	சுழன்றுவருகிற
நீர்பயந்த	கடல்பெற்ற
தெய்வம்	அழகிய
திருமாமலர்மங்கை	பெரியபிராட்டியார்
தங்கு	தங்குகிற
திருமார்பனை	திருமார்வையுடைய
சிந்தையுள்	நெஞ்சில் [வனை

பதம்.	உரை.
வைத்தும் என்பீர்	வைக்கவேண்டியிருப்பீர் !, (ஸிம்ஹத்தோடேபிணங்குகையாலே)
களவை	பிளிறுகிற
களிற்றின்	யானையின்
மருப்பும்	கொம்பையும்
பொருப்பில்	பர்வதத்தில்
கமழ்	நறுநாற்றம்கமழ்கிற
சந்தும்	சந்தநத்தையும்
உந்தி	தள்ளிக்கொண்டுவரு
நிவா	வெள்ளாறு [கிற
வலங்கொள்	வலங்கொள்ளாநிற்கி
தெய்வம்	அழகிய [ற
புனல்சூழ்ந்து	ஜலம்சூழ்ந்து
அழகாய	தர்சநீயமான

தில்லைத்திருச்சித்திரகூடம்சென்று சேர்மின்கள். (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (மௌவலித்யாதி) †மௌவலோடேகூடின திருக்குழலையுடைய நப்பின்னைப் பிராட்டியினுடைய ம்ருதுவான திருத்தோளிலேகலந்து, † அங்குண்டான மத்ஸ்யங்கள் சுழலும்படி சுழன்றுவருகிற கடல் பெற்ற பெரியபிராட்டியார்தங்கும் திருமார்வையுடையவனை ஹ்ருதயத்திலே வைத்துக்கொள்வோமென்பீர்!.

(கௌவையித்யாதி) ஸிம்ஹத்தோடு பிணங்கிப்†பிளிறுகிற ஆனையினுடைய கொம்பும், மலையில் பரிமளிதமான சந்தநத்தையும் தள்ளிவா என்கிற ஆறு வலங்கொள்ளாநிற்கிற விலக்ஷணமான புனல் சூழ்ந்து தர்சநீயமான தில்லை. ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (மௌவலித்யாதி). "ஸம்ஸாரஸமுத்ரத்தைக் கலக்கவல்லவன் வந்திருக்கிறதேசத்தில், சென்று சேர்மின்கள்" என்றுநின்றீர், எங்களால் கிட்டப்போமோவென்ன; புருஷகாரபூதர் அருகேயுண்டு, பிற்காலியாதேசென்று சேருங்கோளென்கிறுரென்று ஸங்கதி.

(மௌவலோடே) என்றது - முல்லைமலரோடே என்றபடி. (அங்குண்டான) என்றது - மேலேசொல்லப்படுகிற ஸமுத்ரத்திலுண்டான என்றபடி. கௌவை - ஆரவாரமாய், (பிளிறுகிற) என்றருளிச்செய்கிருர். ... (எ)

மூ.—மாவாயினங்கம் மதியாது கீறி
மழை மாமுது குன்றெடுத்தாயர்தங்கள்
கோவாய் நிரைமேய்த்துலகுண்டமாயன்
குறை மா கழல் கூடும் குறிப்புடையீர்
மூவாயிர நான்மறையாளர்நாளும்
முறையால் வணங்க வணங்காயசோதித்
தேவாதிதேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாவின்	கேசிஎன்னும்குதிரை	எடுத்து	குடையாகஎடுத்து
வாய்	வாயையும் [யின்	ஆயர்தங்கள்	இடையர்க்குத் தலைவ
அங்கம்	உடலையும் [தே	கோவாய்	னாய்
மதியாது	ஒருசரக்காக நினையா	நிரை	பசுத்திரளை
கீறி	பிளந்துபொகட்டு, (இந்த்ரன் வர்ஷிப்பித்த)	மேய்த்து	மேய்த்து, (ப்ரளயாபத்திலே)
		உலகு	லோகத்தை [த
மழை	கல்வர்ஷத்துக்கு	உண்ட	திருவயிற்றிலேவைத்
மா	பெரிதாய்	மாயன்	ஆஶ்சர்யபூதனுடைய
முது	பழையதான	குறை	ஆபரணங்களால்சப்திக்கிற
குன்று	கோவர்த்தநமென்னும்மலையை		
		மா	பெருமைதங்கிய

கழல்	திருவடிகளை [ம்	வணங்க	ஆஶ்ரயிக்க
கூடும்	சேரவேணுமென்னு	அணங்காய	அப்ராக்ருதமான
குறிப்புடையீர்	நினைவையுடையீர் !	சோதி	தேஜஸ்ஸையுடைய
மூவாயிரம்	மூவாயிரரான	தேவாதிதேவன்	ஸர்வேஶ்வரன்
நான்மறையாளர்	ப்ராஹ்மணர்	திகழ்கின்ற	விளங்குகின்ற
நாளும்	நாள்தோறும் [கபடி	தில்லைத்திருச்சித்திரகூடம்சென்று சேர்மின்கள். (அ)	
முறையால்	ஸ்வரூபத்துக்குத்தக்		

வ்யா.—எட்டாம்பாட்டு. (மாவாயித்யாதி) கேசியுடைய வாயோடே கூடஉடம்பை அநாயாஸேந இரண்டாகக்கிழித்து, இந்த்ரனால்வந்த மழையிலே, பெருத்துப்பழைதான கோவர்த்தநத்தை யெடுத்து ஆயர்தலைவனாய்ப் பசுமேய்த்து, லோகத்தைத் திருவயிற்றிலே வைத்த ஆஶ்சர்யபூதனுடைய, ஆபரண ஒலியை யுடைத்தாய் போக்யதைமிக்க திருவடிகளைக்கூடவேணுமென்று குறிப்புடையீர் !

(முறையால் வணங்க அணங்காயசோதி) சாஸ்த்ரங்களில் சொல்லுகிறபடியே ஆஶ்ரயிக்க, அவர்களுக்காஶ்ரயணீயனாய் † தேஜஸ்ஸையுடைய ஸர்வேஶ்வரன். ... ...(அ)

அரு.—எட்டாம்பாட்டு. (மாவாயித்யாதி) கீழ்ப்பாட்டிற்சொன்ன புருஷகாரபூதரை முன்னிட்டாஶ்ரயித்தார்க்கு, விரோதி பாபங்களைப்போக்கி துக்கவர்ஷத்தை நீக்கித்தன்வயிற்றிலேவைத்து நோக்கவல்லனென்னுமதுக்கு த்ருஷ்டாந்தமான அபதாநங்களை ஸூசிப்பித்து அவனிருக்கும் தேசத்திலே செல்லுங்கோளென்கிறாரென்று ஸங்கதி.

அணங்காய - அப்ராக்ருதமான, சோதி என்றாய், அத்தையருளிச்செய்கிறார் (தேஜஸ்ஸையுடைய) என்று. ... ... (எ)

மூ.—செரு நீல வேற்கண் மடவார்திறத்துச்
சினத்தோடு நின்று மனத்தால்வளர்க்கும்
அரு நீல பாவ மகலப் புகழ்சே
ரமரர்க்குமெய்தாதவண்டத் திருப்பீர்
பெருநீர்நிவா வுந்தி முத்தங்கொணர்ந்தெங்கும்
வித்தும்வயலுள் கயல் பாய்ந்துகளத்
திருநீலநின்று திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. (கூ)

பதம்.	உரை.
செரு	யுத்தத்துக்குப்பரிகரமான [ய்
வேல்	வேல்போலேகூரிதா
நீலம்	நீலம்போலேகுளிர்ந்த [ராய்
கண்	கண்ணழகையுடைய
மடவார்திறத்து	மடப்பத்தையுடைய ஸ்த்ரீகளிடத்தில் (புஜிக்க நினைத்த போசங்களை விலக்குவார்பக்கல்)
சினத்தோடு	கோபத்தோடு
நின்று	இருந்து
மனத்தால்	நெஞ்சிலாசையாலே
வளர்க்கும்	வளர்த்துவருமதாய்
அரு	போக்கவொண்ணாத
நீலம்	தண்ணிய
பாவம்	பாபமானது
அகல	போம்படி

பதம்	உரை.
புகழ்சேர்	புகழையுடைய
அமரர்க்கும்	ப்ரஹ்மாதிகளுக்கும்
எய்தாத	கிட்டவரிதான
அண்டத்து	பரமபதத்தில் [பீர்!
இருப்பீர்	இருக்கவேண்டியிருப்
பெருநீர்	மிக்கநீரையுடைய
நிவா	வெள்ளாறு
முத்தம்கொணர்ந்து	முத்துக்களைக்கொண்டுவந்து
உந்தி	தள்ளி
வித்தும்	விதைக்கிற
வயலுளெங்கும்	வயல்தோறும்
கயல்	கயல்மத்ஸ்யங்கள்
பாய்ந்துஉகள	குதித்துத்தள்ள
திருநீலம்	அழகியநெய்தல்மலர்
நின்று	எங்குமொக்கப்பரந்
திகழ்கின்ற	விளங்குகிற [து

தில்லைத்திருச்சித்திரகூடம்சென்று சேர்மின்கள். (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (செருவித்யாதி) யுத்தத்துக்குப் பரிகரமாய் நீலமான நிறத்தையுடைய வேல்போலேயிருக்கிற கண்ணை யுடைய ஸ்த்ரீகள் திறத்தில், அதுக்கு ப்ரதிபந்தகர்பக்கல் சினத்தோடே நெஞ்சிலாசையாலே வளர்ந்து பரிஹரிக்கவொண்ணாதே †தண்ணிதான பகவத்ப்ரதிபந்தகமான பாபம் போக ப்ரஸித்தரான ப்ரஹ்மாதிகளுக்கும் கிட்டவரிய பரமபதத்திலே யிருக்கவேண்டி யிருப்பீர்!

(பெருநீரென்றுதுடங்கி)மிக்கநீரையுடைய நிவாஎன்கிறஆறுமுத்தைக்கொடுவந்து வித்துகிற வயலிலே †விக்ருதமான கயல்கள் பாய்ந்து தாவித்திரிய தர்சநீயமான நீலம் நின்று திகழாநின்றுள்ளதில்லை.

அரு.—ஒன்பதாம் பாட்டு. (செருவித்யாதி) தாமுபதேசித்த ஆஶ்ரயணத்துக்கு பல(ஃல) ஸ்வரூபந்தான் ப்ராப்யாந்தரநிவ்ருத்திபூர்வக பகவத்ப்ராப்தி என்று பல(ஃல) கௌரவத்தை நெஞ்சில் படுத்துகிறாரென்று ஸங்கதி.

"நீலம்" என்று - கறுப்பாய், அத்தால் தண்ணிமையைச்சொல்லுகிறதென்றருளிச்செய்கிறார் (தண்ணிதான) என்று.

† (விக்ருதமான) என்றது - முத்தை தவித்துகையாலே கல்லிட்டெறிந்தாற்போலே பயப்பட்டிருக்கிறவென்றபடி. நீலம் - நெய்தல். ... (௯)

மூ.—சீரார்பொழில் சூழ்ந்தழகாய தில்லைத்
திருச்சித்திரகூடத் துறை செங்கண்மாலுக்
காராத உள்ளத்தவர் கேட்டுவப்ப
வலை நீ ருலகுக் கருளே புரியும்
காரார்புயற்கைக் கலிகன்றி குன்றா
வொலிமாலையோ ரொன்பதோ டொன்றும்வல்லார்
பாராருலக மளந்தா னடிக்கீழ்ப்
பலகாலம் நிற்கும்படி வாழ்வர்தாமே. (௧0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
சீர்ஆர்	அழகுமிக்க
பொழில்சூழ்ந்து	சோலையால்சூழப்பட்டு
அழகாய	அழகையுடைத்தான
தில்லைத்திருச்சித்திரகூடத்து	
உறை	நித்யவாஸம்பண்ணுகிற
செங்கண்மாலுக்கு	சிவந்தகண்ணழகையுடையஸர்வேஸ்வரன்விஷயமாக
ஆராத	பகவதநுபவத்தில்த்ருப்திபிறவாத
உள்ளத்தவர்	ஸ்நேஹத்தையுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள்
கேட்டு	ஶ்ரவணம்பண்ணி
உவப்ப	ஸந்தோஷிக்கும்படியாக
அலைநீர்	அலையெறிகிறஜலத்தையுடையகடலால்சூழப்பட்ட
உலகுக்கு	பூமியிலுள்ளார்க்கு
அருளே	ப்ரஸாதத்தையே
புரியும்	பண்ணும்ஸ்வபாவத்தையுடையராய்
கார்ஆர்	மிகவும்பெருத்த

பதம்.	உரை.
புயல்	மேகம்போலே
கை	உதாரரான
கலிகன்றி	ஆழ்வார்
குன்றா	குறையாத
ஒலி	ஓசையையுடைத்தாம்படியருளிச்செய்த
மாலை	சப்த ஸந்தர்ப்பத்தையுடைய
ஓரொன்பதோடொன்றும்	பத்துப்பாட்டையும்
வல்லார்	அர்த்தத்துடன்கற்கவல்லவர்கள்
பார்ஆர்உலகம்	பூமியையும்ஸ்வர்க்காதிலோகங்களையும்
அளந்தான்	அளந்துகொண்டவனுடைய
அடிக்கீழ்	திருவடிகளிலே
பலகாலம்	ஸர்வகாலமும்
நிற்கும்படிவாழ்வர்	அடிமைசெய்துவர்த்திக்கும்படியான வாழ்வைப்பெறுவர்கள். (௧0)

வ்யா.—பத்தாம்பாட்டு. (சீராரித்யாதி) அழகுமிக்க பொழில் சூழ்ந்து தர்சநீயமான தில்லையில் நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வேஸ்வரனுக்கு, ஒருநாளும் ஆராத †ஸ்நேஹத்தையுடைய ஸ்ரீவைஷ்ணவர்

கள்கேட்டு ஸந்தோஷிக்க, கடல்சூழ்ந்த பூமிக்கு ப்ரஸாதத்தைப்பண்ணும் †ஸ்வபாவராய், கார்காலத்து மேகம்போலே பரமோதாரரான திருமங்கையாழ்வார் குறையாத வோசையையுடைத்தாக வருளிச்செய்த திருமொழி பத்தும்வல்லார், ப்ருதிவீப்ரசுரமான லோகத்தை யளந்தவன் திருவடிகளின்கீழே காலமெல்லாம் வர்த்திக்கும்படியான வாழ்வைப் பெறுவர். ... ... (கo)

பேரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (சீராரித்யாதி) "உள்ளம்" என்கிறபதம் லக்ஷணயா ஸ்நேஹத்தைச்சொல்லுமென்றருளிச்செய்கிறார் (ஸ்நேஹத்தை) என்று. "அருளேபுரியும்" என்கிற அவதாரணலப்யார்த்தம் (ஸ்வபாவராய்) என்றது. ... ... (கo)

ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்தில் இரண்டாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி - ரு - ம் பத்து - ரு - ம் திருமொழி வாடமருதிடை ப்ரவேசம்.

வ்யா.—†க்ருஷ்ணாவதாராதிகளிலிழவுதீரத் திருச்சித்ரகூடத்திலேவந்து ஸந்நிஹிதனானான், எல்லாருமாஸ்ரயியுங்கோளென்கிறார்.

அரு.—வாடமருதிடைப்ரவேசம். கீழ்த்திருமொழியில் ராமக்ருஷ்ணாதி விபவங்களிலவதாரங்களை யாஸ்ரயிக்கைக்குறுப்பாகச்சொல்லி, "திருச்சித்திரகூடத்தில் சென்று சேர்மின்கள்" என்றார்; இதுகேட்டசேதநர்க்கு, விபவத்தில் நெஞ்சுசென்று அங்கே யாஸ்ரயிக்கையில் ருசிபிறந்து அது காலாதீதமென்று பிற்காலிக்கவும் கூடுமென்று திருவுள்ளம்பற்றி, அந்த விபவங்களில் விரோதிநிரஸநசீலதையை பஹுமுகமாக வருளிச்செய்துகொண்டு, அவனே திருச்சித்திரகூடத்துள்ளானென்று ஸம்ஸாரிகள்நெஞ்சில் படுத்துகிறாரென்னும் ஸங்கதியை ஸங்க்ரஹேண ஸூசிப்பிக்கிறார் (க்ருஷ்ணாவதாரேத்யாதி). ஆதிசப்தத்தாலே ராமாவதாரமும் நரஸிம்ஹாவதாரமும் சொல்லுகிறது.

மூ—வாடமருதிடைபோகி மல்லரைக் கொன்றொக்கலித்திட்
டாடல் நன் மா வுடைத்தாய ராநிரைக்கன்றிடர்தீர்ப்பான்
கூடிய மாமழைகாத்த கூத்தனென வருகின்றான்
சேடுயர் பூம் பொழில் தில்லைச் சித்திரகூடத் துள்ளானே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மருதிடை	இரண்டுமருதமரங்களின்நடுவே	உடைத்து	கொன்று,
வாட	அவைவாடியிருந்த வளவில்	அன்று	இந்த்ரன்வர்ஷிப்பித்தவன்று
போகி	தவழ்ந்துபோய்,	ஆயர்	இடையருடைய [ந்த
மல்லரை	சாணூரமுஷ்டிகாதி மல்லவர்க்கத்தை	ஆநிரைக்கு	பசுக்கூட்டத்துக்குவ
கொன்று	நிரஸித்து,	இடர்	துக்கத்தை
ஒக்கலித்திட்டு	நடைபழகினதாய்	தீர்ப்பான்	தீர்க்கைக்காக
ஆடல்	ஆடிக்கொண்டுவரும	கூடிய	திரண்ட
நல்	அழகிதான [தாய்	மாமழை	பெரியகல்வர்ஷத்தை (மலையையெடுத்து)
மா	குதிரைவடிவுகொண்ட கேசியை	காத்த	ரக்ஷித்த

கூத்தன் என	மநோஹாரிசேஷ்டிதத்தையுடையவன் என்று எல்லாரும் சொல்லும்படி	உயர்	ஓங்கின [டைய
		பூம்பொழில்	அழகியசோலைகளையு
		தில்லைச்சித்திரகூடத்து	தில்லைத்திருச்சித்ரகூடத்திலே
வருகின்றான்	வருமவன்,	உள்ளான்	நித்யவாஸம்பண்ணுகின்றான். (க)
சேடு	இளகிப்பதித்ததாய்		

வ்யா.—முதற்பாட்டு. (வாடவித்யாதி) †அஸுராவேசத்தாலே வந்த மருதாகையாலே இவன்கிட்டக்கிட்ட அவைவாட மருதின் நடுவே போய். (மல்லரைக்கொன்று) சாணூரமுஷ்டிகரை நிரஸித்து. † ஆவாலம் கொட்டி, (ஆடல்) தன் ஸஞ்சாரத்திலே இவன் அந்யபரனும்படி ஆடிக்கொண்டுவந்து தோற்றின கேசியைக்கொன்று, இடையருடைய பசுநிரைக்கு அன்றிடர் தீர்க்கைக்காக, இந்த்ரன் ப்ரேரித்த புஷ்கலாவர்த்தகாதி மேகங்களெல்லாம் கூடி வர்ஷித்த பெருமழையைக்காத்த மநோஹாரிசேஷ்டிதத்தையுடையவன் என்று எல்லாரும் சொல்ல வருகிறவன்.—(சேடு) இளமையும், திரட்சியும். ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (வாடவித்யாதி) (க)"இணைமருதிற்றுவீழ" என்னுமா போலே முறிந்துவிழுகையைச் சொல்லவேண்டியிருக்க, "வாட" என்றதுக்கு வாடும் போதுபோனனென்று விவக்ஷித்து ஹேதுபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அஸுரேத்யாதி). ஒக்கலித்திட்டு - பழகின, ஆடலுடைத்தாய் நல்லதான மா என்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆவாலமித்யாதி). (ஆவாலங்கொட்டுகை) குதிரை நடைபழக்குகைக்குக் கொட்டுகை.

மூ—பேய்மகள் கொங்கை நஞ்சுண்ட பிள்ளை பரிசிதுவென்றால்
மாநில மாமகள் மாதர் கேள்வ னிவனென்றும் வண்டுண்
பூமகள் நாயகனென்றும் புலன் கெழு கோவியர் பாடித்
தேமலர் தூவ வருவான் சித்திரகூடத்துள்ளானே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பேய்மகள்	பேயானபூதனையுடைய	பிள்ளைபரிசுஎன்றால்	பிள்ளையுடையப்ரகாரம் என்னக்கேட்டு,
கொங்கை	முலையில்	இவன்	இந்தக்ருஷ்ணன் (இளம்பிள்ளையல்லன்,
நஞ்சு	விஷத்தை		
உண்ட	அமுதுசெய்தருளின		
இது	ஆஶ்சர்யமானவிச்செயல்	மா	பஞ்சாசத்கோடிவிஸ்தீர்ணையான

(க) கக - ௨ - க.

நிலமாமகள்மாதர்	பூமியை ப்ரகாரமாகவுடைய ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு	புலன்கெழு	கண்டார்நெஞ்சைக் கவரும்வடிவையுடைய
கேள்வன்என்று	வல்லபன்என்றும்,	கோவியர்	இடைப்பெண்கள்
வண்டு [ம்	வண்டுகள் [ழுகிற	பாடி	ஸ்தோத்ரபூர்வகமாகப்பாடி
உண்	மதுபானம்பண்ணவி		
பூமகள்	தாமரைப்பூவைப்பிறந்தகமாகவுடைய	தேன்மலர்	செவ்விகுன்றாதபூவை
		தூவ	பணிமாற
[ம்	பெரியபிராட்டியா	வருவான்	வருமவன்
நாயகன்என்று	பதியென்றும் [ர்க்கு	சித்திரகூடத்துள்ளான். (௨)	

வ்யா.—இரண்டாம்பாட்டு. (பேய்மகளித்யாதி) †(பிள்ளை§யுடைய) படி-பேயாய்வந்த ஸ்த்ரீயினுடைய முலையில் நஞ்சையுண்ட ஆஸ்சர்யமான செயலென்றால், "இவன் கேவலம் பிள்ளையல்லன், ஸ்ரீபூமிப் பிராட்டிக்கு வல்லபன், பெரியபிராட்டியார்க்கு நாயகன்" என்று கண்டாருடைய இந்த்ரியங்களைப் பிணிக்கும் வடிவையுடைய இடைப்பெண்கள்பாடி, செவ்விப்பூவைத் தூவ வருமவன். †(பொலன்கெழு கோவியர்) என்று - பொன்னாலேசெய்த ஆபரணத்தையுடைய கோவியரென்னவுமாம். ... ... (௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (பேயித்யாதி) கோவர்த்தநோத்தரணாதி அதிமாநுஷசேஷ்டிதங்களைச்செய்தவனே சித்ரகூடத்துள்ளானென்றறிந்து நிஸ்சயிக்கும்படி யெங்ஙனே? என்னும் ஜிஜ்ஞாஸையிலே; இடைப்பிள்ளையா யிருக்கச்செய்தே ஸ்ரிய:பதியென்று நிஸ்சயித்தார் இடைப்பெண்கள் கண்டீர்களே, அங்ஙனே நீங்களும்கொள்ளுங்கோளென்கிறாரென்று ஸங்கதி.

"பிள்ளைபரிசு - பேய்மகள் கொங்கைநஞ்சுண்ட - இதுவென்றால், மாநிலம்" இத்யாதி என்றந்வயம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (பிள்ளையித்யாதி). (பிள்ளையுடையபடி) என்று சில ஸ்ரீகோசங்களிலுண்டாயிருக்கும்; அப்போது அந்வயத்திலே திருவுள்ளம். அன்றிக்கே, சில ஸ்ரீகோசங்களில் (பிள்ளையுடையபடியே) என்று முண்டு; அப்போது, பிள்ளையைப்போலே மாநுஷ்யமானபடியே என்றாய், "பேய்" என்றும் "மகள்" என்றும் சொன்ன பதத்வயத்துக்கும் - பேயானது மநுஷ்யவேஷங்கொண்டதென்று கருத்தருளிச்செய்கைக்கு த்ருஷ்டாந்தமென்று கொள்ளவேணும்; இப்போது யதாவஸ்த்திதமே அந்வயம். பொலன் - ஆபரணம், கெழுமுகை - சேருகையாய், அருளிச்செய்கிறார் (பொலனித்யாதி). ... ... (௨)

---

§ குண்டலிதம் அரும்பதத்துக்குப் பாடாந்தரமாயினும், ப்ராசீந வ்யாக்யாந ஸ்ரீகோசங்களிலெங்கும் "பிள்ளையுடைய" என்றே காண்கிறது.

மூ—பண்டிவன் வெண்ணெயுண்டானென் றாய்ச்சியர்கூடி§யிழிப்ப
எண்டிசையோரும் வணங்க விணை மருதூடு நடந்திட்
டண்டரும் வானத் தவரு மாயிர நாமங்களோடு
திண்டிறல் பாட வருவான் சித்திரகூடத் துள்ளானே. (௩)

பதம்.	உரை.	உரை.	பதம்.
இவன்	இச்சிறுப்பிள்ளை	நடந்திட்டு	தவழ்ந்துபோய்
வெண்ணெய் உண்டானென்று	வெண்ணெயைக்களவுகண்டுஅமுதுசெய்தானென்று	அண்டரும்	நித்யஸூரிகளும்
ஆய்ச்சியர்	இடைப்பெண்கள்	வானத்தவரும்	ப்ரஹ்மாதிகளும்
கூடி	திரண்டு	ஆயிரநாமங்களோடு	ஸஹஸ்ரநாமங்களைச் சொல்லி, (அவனுடைய)
இழிப்ப	பழிக்க	திண்	திண்ணிதான [தை
எண்திசையோரும்	எட்டுதிக்கிலுள்ளாரு [ம்	திறல்	ஆண்பிள்ளைத்தனத்
வணங்க	ஸேவிக்கும்படியாக	பண்டு	முற்காலத்திலே
இணைமருதூடு	சேர்ந்துநின்ற இரண்டு மருதமரங்களின் நடுவே	பாட	பாடும்படி
		வருவான்	வருமவன்
		சித்திரகூடத்துள்ளான்.	(௩)

வ்யா.—(பண்டித்யாதி) "இவன் வெண்ணெயுண்டான்" என்று இடைப்பெண்கள் கூடி †யேச, எட்டுதிக்கிலுள்ளாரும் திருவடிகளிலே வணங்கும்படியாக, நிர்விவரமான மருதினுள்ளிட்டுப்போய், இடையர்களும் தேவர்களுமாய் ஆயிரந்திருநாமங்களைச்சொல்லிக்கொண்டு, தன்னுடைய ஆண்பிள்ளைத்தனத்தைப் பண்டு பாடவருவான். ... ... (௩)

அநு.—மூன்றாம்பாட்டு. (பண்டித்யாதி) பேய்முலையுண்டபடியைக்கண்ட இடைப்பெண்கள் மேன்மை பேசினாராகிலும், வெண்ணெயுண்டபோது இடைப்பிள்ளையென்றே ஏசவுங்கண்டோமீ! என்ன; வெண்ணெயுண்டு கட்டுண்டுநின்றபோதே, நின்ற மருதிறுத்து, தேவராலும் இடையராலும் கொண்டாடப்பட்டான் கண்டீர் என்று நெஞ்சிலுறைக்கச் சொல்லுகிறாரென்று ஸங்கதி.

அழைக்கை-கூப்பிடுகையாய், பலித்தவர்த்தம் (ஏச) என்றது. "இவன்" என்றுதுடங்கி, "திண்டிறல் - பண்டு - பாடவருவான்" என்றந்வயம். ... (௩)

மூ.—வளைக்கை நெடுங்கண் மடவா ராய்ச்சிய ரஞ்சி யழைப்பத்
தளைத் தவிழ் தாமரைப்பொய்கைத் தண்டடம் புக்கண்டர்காண
முளைத்த வெயிற்றழல் நாகத் துச்சியில் நின்றதுவாடத்
திளைத்தமர் செய்து வருவான் சித்திரகூடத்துள்ளானே. (௪)

---

§ அழைப்ப என்று இவ்வரும்பதத்துக்குப்பாடம். ஆயினும் "இழிப்ப" என்பதே ப்ராசீந பாடமாகக் காண்கிறது.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வளை	வளைகளாலே அலங்க	புக்கு	போய்
	ரிக்கப்பட்ட	அண்டர்	இடையர்
கை	கைகளையும்	காண	காணும்படியாக
நெடு	நீண்ட	முளைத்தஎயிறு	முளைத்தபற்களையும்
கண்	கண்களையும் [யரான	அழல்	விஷாக்நியையுமு
மடவார்	மடப்பத்தையுமுடை		[டைய
ஆய்ச்சியர்	ஸ்ரீகோபிமார்கள்	நாகத்துஉச்சியி	காளியனுகிறபாம்பி
அஞ்சி	பயப்பட்டு	ல்	ன் தலையிலே
அழைப்ப	கூப்பிட	நின்று	ஒருபடிப்படநின்று
தளை அவிழ்	கட்டு அவிழுகிற	அதுவாட	அது இளைக்கும்படி
தாமரைப்பொ	தாமரைத்தடாகத்தி	திளைத்து	களித்து நர்த்தநம்செ
ய்கை	ன்	அமர்செய்து	பூசல்பண்ணி [ய்து
தண்	குளிர்ந்த	வருவான்	வருமவன்
தடம்	கரையிலே		

சித்திரகூடத்துள்ளான். (௪)

வ்யா.—நாலாம்பாட்டு. (வளைக்கையித்யாதி) வளையாலே அலங்க்ருதமான கையையும், பீதை(பீதி)களாய்ப்பார்க்கும் நோக்கையுமுடைய இடைப்பெண்கள் அஞ்சிக்கூப்பிட, † கட்டவிழ்ந்தலர்ந்த தாமரைப்பொய்கையினுடைய ச்ரமஹரமான கரையிலேசென்று; இடையர்காண, முளைத்தவெயிற்றையுடைய பாம்பினுடைய உச்சியிலே புக்குநின்று அதுவாடும்படி கூடவிளையாடி † அமர்செய்து வருமவன். ... ...(௪)

அரு.—நாலாம்பாட்டு. (வளையித்யாதி) மருதிறுத்த வளவன்றிக்கே, பாம்பின் படத்தில் தானேபோய் நடமாடின அபதாநத்தாலும் அவர்கள் பரனென்றிருந்தார்களென்று நியாமகாந்தர மருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

"தளைத்தவிழ்" என்றவிடத்தில், "அத்து" சாரியைச் சொல்லாய், "தளை அவிழ்" என்றுயருளிச்செய்கிறார் (கட்டவிழ்ந்தலர்ந்த) என்று. (அமர்செய்து) - யுத்தம்பண்ணி. ... ...(௪)

மூ.—பருவக் கருமுகி லொத்து முத்துடை மா கடலொத்து
அருவித் திரடிகழ்கின்ற வாயிரம் பொன்மலை யொத்து
உருவக் கருங்குழலாய்ச்சித் திறத் தினமால் விடைசெற்றுத்
தெருவில் திளைத்து வருவான் சித்திரகூடத்துள்ளானே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பருவம்	கார்காலத்திலுண்டா	மா	பெரிய
	ன [ம்	கடல்ஒத்து	கடல்போலேயும்
கருமுகில்ஒத்து	காளமேகம்போலேயு	அருவித்திரள்	அருவிகளின் ஸமூஹ
முத்துஉடை	முத்துக்களையுடைய		த்தினாலே

திகழ்கின்ற	விளங்காநின்றுள்ள	இனம்	ஒன்றாகத்திரண்ட
ஆயிரம்பொன்	அநேகம்ரத்நபர்வதங்	மால்விடை	பெரிய ருஷபங்களை
மலைஒத்து	கள்போலேயுமாய்	செற்று	நிரஸித்து
உருவம்	அழகியவடிவையும்	தெருவில்	வீதியிலே
கரு	கறுத்த [ய	திளைத்து	(களித்து) விளையாடி
குழல்	திருக்குழலையுமுடை	வருவான்	வருமவன்
ஆய்ச்சிதிறத்து	நப்பின்னைப்பிராட்டிக்காக		சித்திரகூடத்துள்ளான். (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பருவமித்யாதி) † வர்ஷுகவலாஹகம்போலேயும், முத்துடைய பெருங்கடல்போலேயும், அருவித்திரள்களாலே விளங்காநின்றுள்ள †ஆயிரம் பொன்மலைபோலேயுமாய், அழகிய வடிவையும் கறுத்த திருக்குழலையுமுடைய நப்பின்னைப்பிராட்டியிடையாட்டத்துக்காக, திரண்டு பெருமையையுடைய ருஷபங்களைக்கொன்று, தன்பருவத்திற்பிள்ளைகளோடே தெருவிலே கூடி விளையாடி வருமவன். ... ... (ரு)

அரு.—அஞ்சாம்பாட்டு. (பருவமித்யாதி) கீழ் நாலு பாட்டாலும் - அவனதிமாநுஷ சேஷ்டிதங்களைச்சொல்லி, அத்தால் அவன்பரன் என்றாற்போலே நீங்களுமவனை நிர்ணயித்தாஶ்ரயியுங்கோளென்றார்; இனி மேல் பாட்டுக்களில் - நப்பின்னை முதலானார்க்கு விரோதி நிவர்த்தந முகத்தாலே யுதவினாற்போலே உங்களுக்கு முதவுவானென்பாராய், அதில் நப்பின்னைக்குதவினவித்தை இதிலருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

நப்பின்னை க்ருஷ்ணனோடொத்த நிறமுடையவளென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (வர்ஷுகேத்யாதி). (பொன்மலைபோலேயும்) என்றது - ஆபரணச் சேர்த்தியாலே. ... ... (ரு)

மூ.—எய்யச் சிதைந்த திலங்கை மலங்க வரு மழை காப்பான்
உய்யப் பருவரை தாங்கி யாநிரை காத்தானென்றேத்தி
வையத் §தெவரும் வணங்க வணங்கெழு மாமலைபோலே
தெய்வப்புள்ளேறிவருவான் சித்திரகூடத்துள்ளானே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எய்ய	அம்பினாலடித்தபோ [து	வரும்மழை	வருகிறமழையை
இலங்கை	லங்கையானது	காப்பான்	போக்குகைக்காக
சிதைந்தது	அழிந்தது ;	உய்ய	(அவை) உஜ்ஜீவிக்கும்
ஆநிரை	பசுத்திரள்	பருவரை	பெரியமலையை [படி
மலங்க	கலங்கும்படி	தாங்கி	எடுத்து (அவற்றை)

§ தேவரும் என்று அரும்பதத்துக்குப்பாடம்.

காத்தான்என்று	ரக்ஷித்தான்என்று	மா	பெரிய
வையத்து	பூமியிலுள்ள	மலைபோலே	மலையைப்போலே
எவரும்	ஸத்வப்ரக்ருதிகளெல்லாரும்	தெய்வம்	அழகிய
ஏத்தி	ஸ்தோத்ரம்பண்ணி	புள்	பெரியதிருவடிமேலே
வணங்க	ஆஶ்ரயிக்கும்படியாக	ஏறி	ஏறிக்கொண்டு
அணங்குஎழு	தேவாவிஷ்டமான	வருவான்	வருமவன்

சித்திரகூடத்துள்ளான். (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (எய்யவித்யாதி) இவன் பண்டு எய்ய, லங்கையழிந்தது; பசுக்களு மிடையரும் மலங்கும்படியாக வருகிற மழையைக் காக்கைக்காக, அவை உய்யும்படிக் கீடாகப் பெரிய மலையையெடுத்துக்காத்தானென்றேத்தி. †பூமியிலுள்ளாரெல்லாரும் வணங்க, தேவாவிஷ்டமான மலைபோலே, பெரிய திருவடிமேலே யேறி வருமவன். ... ... (௬)

அரு.—ஆறும்பாட்டு. (எய்யவித்யாதி) இதில் - பிராட்டிக்கும் பசுக்களுக்கு முதவினாற்போலே யுதவுமவனென்றருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

(பூமியிலுள்ளாரெல்லாரும்) என்றதுக்கு - "வையத்தேவர்" என்கிறபதத்தாலே பூஸுரர்களைச் சொல்லிற்றேயாகிலும், ஸத்வப்ரசுரரான தைவப்ரக்ருதிகளெல்லாரையும் சொல்லுமென்று திருவுள்ளம். ... ... (௬)

மூ.—ஆவரிவை செய்தறிவா ரஞ்சன மா மலைபோலே
மேவு சினத் தடல் வேழம் வீழ முனிந்தழகாய
காவிமலர் நெடுங்கண்ணார் கைதொழ வீதிவருவான்
தேவர்வணங்கு தண்டில்லைச் சித்திரகூடத்துள்ளானே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இவை	இப்படிப்பட்ட ஆனைத்தொழில்களை	முனிந்து	சீறியருளி
செய்தறிவார் ஆர்	செய்தார் எவர்? ஒருவருமில்லை; (அதாவதென்னென்னில்;)	அழகாய	அழகையுடைத்தாய்
மா	பெரிய	காவிமலர்	நீலோத்பலம்போலே
அஞ்சனமலைபோலே	அஞ்சநகிரிபோலேயாய்	நெடு	நீண்ட [கறுத்து
மேவு	பொருந்திய [தாய்	கண்ணார்	கண்களையுடையஸ்த்ரீகள்
சினம்	கோபத்தை யுடைத்	கைதொழ	ஸேவிக்கும்படியாக
அடல்	மிடுக்கையுடைய	வீதி	திருவீதியிலே
வேழம்	குவலயாபீடம் என்னும்யானை	வருவான்	எழுந்தருளுமவன்,
வீழ	விழும்படி [ம்யானை	தேவர்வணங்கு	தேவர்கள்வந்துஆஶ்ரயிக்குமதாய்
		தண்	ஶ்ரமஹரமான

தில்லைச்சித்திரகூடத்துள்ளான். (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (ஆவரித்யாதி) † எவரிவை செய்தறிவார்? பெரியதொரு† அஞ்சநகிரிபோலே, ஸ்வாபாவிகமான சினத்தையுடைத்தாய் யுத்தோந்முகமான ஆனை குட்டிச் சுவர்போலே விழும்படி சீறி, தர்சநீயங்களாய் காவிமலர்போலே கறுத்து நெடிய கண்ணையுடைய ஸ்த்ரீகள் கைதொழும்படி வீதியிலே வருமவன், தேவர்களாஶ்ரயிக்கும் தில்லைச்சித்திரகூடத்துள்ளானே. ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (ஆவரித்யாதி) ஆநிரை காத்தவளவேயன்றிக்கே ஸ்ரீமதுரையில் பெண்களுக்குக் களிறுதருபுணர்ச்சி கொடுத்தவன் உங்களுக்குதவுவனென்கிறானென்று ஸங்கதி. அதாவது - ஆனையால்வந்த ஆபத்தைப்போக்கித் தன்னைக் கண்ணாரக்கண்டநுபவிக்கக் கொடுத்தானென்கை. க்ருஷ்ணன்மேலே யானைவருமதுவே பெண்களுக்காபத்திறே.

(எவரிவை செய்தறிவார்) என்றதுக்கு மூன்றுயோஜனை. அதாவது - செய்தவிவை - குவலயாபீடநிரஸநாதி வ்யாபாரங்களை, எவரறிவார்? ஒருவருமறிவாரில்லை என்று ஆழ்வார் தம்மிலே தாம்நொந்து, எத்தனை நாமுபதேசித்தாலும் திருந்துவாரரிதாயிருந்ததென்று ஈடுபடுகிறாரென்னுதல்; அன்றிக்கே, ஆஶ்ரிதர்க்காக இவ்வருந்தொழில்களைச் செய்தாரார்? ஒருவருமில்லை என்று எம்பெருமானுடைய சேஷ்டிதத்திலீடுபடுகிறாரென்னுதல்; அங்ஙனுமன்றிக்கே, ஸ்ரீமதுரையில் பெண்களீடுபாடாய், "செய்தறிவார்" என்றவநந்தரம், என்று என்றொருபதத்தை மூலவ்யாக்யாநங்களில் அத்யாஹரித்துக்கொண்டு, (கைதொழும்படி) என்றபதத்தோடந்வயித்துக் கொள்ளவுமாம். (அஞ்சநகிரிபோலே) என்றதுக்கு - (வீதியிலே வருமவன்) என்றத்தோடந்வயம். "அஞ்சநகிரிபோலேயிருக்கிற" என்று - குவலயாபீடத்துக்கு விசேஷணமாகவுமாம். ... ... (எ)

மூ.—பொங்கி யமரிலொருகால் பொன்பெயரோனை வெருவ
அங்கவனுக மளைந்திட் டாயிரந்தோ ளெழுந்தாடப்
பைங்க ணிரண்டெரிகான்ற நீண்ட வெயிற்றொடு பேழ்வாய்ச்
சிங்கவுருவில் வருவான் சித்திரகூடத்துள்ளானே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஒருகால்	ப்ரஹ்லாதனைச் சீறினவன்று	அங்கு	அவ்விடத்திலே
அமரில்	யுத்தத்தில்	அவன் ஆகம்	அவனுடையஉடம்
பொன்பெயரோனை	ஹிரண்யனை	அளைந்திட்டு	பிளந்து [பை
வெருவ	அவன்) அஞ்சும்படி.	ஆயிரந்தோள் எழுந்து ஆட	அநேகம்திருத்தோள்களும்தோற்றவ்யாபரித்து [ன்றுள்ள
பொங்கி	கிளர்ந்து (சீறி)	எரிகான்ற	நெருப்பை யுமிழாநி

பை	பசுத்த	வாய்	வாயையுமுடைய
இரண்டுகண்	இரண்டுகண்களையும்	சிங்கவுருவில்	நரஸிம்ஹரூபியாய்
நீண்ட	தீர்க்கமான	வருவான்	வருமவன்
எயிறு	கோரைப்பற்களையும்	சித்திரகூடத்துள்ளான்.	(அ)
பேழ்	பெரிய		

வ்யா.—எட்டாம்பாட்டு. (பொங்கியித்யாதி)†யுத்தத்திலே பண்டொருகால் ஹிரண்யனை வெருவும்படி †சீறி, அவ்விடத்திலே அவனுடைய உடம்பையளைந்து, ஆயிரந்தோள்தோற்ற வ்யாபரித்த, ஜாத்யுசிதமாக எரிகான்ற பசுமையையுடைய கண்ணும், நீண்ட எயிறும் பெரியவாயுமான ஸிம்ஹரூபத்தை யுடையனாய் வருமவன். பொங்குகை - மிகுதி. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (பொங்கியித்யாதி) கீழ்ப்பாட்டிலே - திருந்தாரொருவருமில்லை என்றபக்ஷத்தில், தம்முடைய க்ருபாதிசயத்தாலே திருந்தாத லோகத்தார்க்கு அச்சம் பிறக்கும்படி, விலங்கிப்போனாரெல்லாரும் ஹிரண்யன்பட்டது படுவரென்கிறாரென்று ஸங்கதி; மற்றைப்பக்ஷங்களில், பெண்களுக்குதவின வளவன்றிக்கே ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு வந்துதோற்றினாற்போலே யுதவுமவனென்கிறாரென்று ஸங்கதி.

"அமரிலொருகால் பொன்பெயரோனை வெருவ - பொங்கி - அங்கு" இத்யாத்யன்வயமுகேநவருளிச்செய்கிறார் (யுத்தத்திலே யித்யாதி). பொங்குகை - மிகுதியாய், கோபத்தால் வந்தமிகுதியாய், பலித்தவர்த்தம் (சீறி) என்றது. கான்ற - உமிழ்ந்த. ... ... (அ)

மூ.—கருமுகில்போல்வதோர்மேனி கையன வாழியும் சங்கும்
பெருவிறல்வானவர்சூழ வேழுலகும் தொழுதேத்த
ஒருமகளாயர்மடந்தை யொருத்தி நிலமகள் மற்றைத்
திருமகளோடும் வருவான் சித்திரகூடத்துள்ளானே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கருமுகில்போல்வது	காளமேகம்போலே கறுத்து	சங்கும்	ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானையும் [னாய்
ஓர்	ஒப்பற்ற	கையன	திருக்கைகளிலுடைய
மேனி	வடிவழகையுடையனாய் [யும்	பெருவிறல்	மிக்கமிடுக்கையுடைய
		வானவர்	தேவர்கள் [ய
ஆழியும்	திருவாழியாழ்வானை	சூழ	சூழ்ந்து ஸேவித்துநிற்கவும்

ஏழ்உலகும்	ஏழுலோகங்களிலுள்ளாரும்	ஒருத்தி நிலமகள்	மற்றொருத்தியான ஸ்ரீ பூமிப்பிராட்டியோடும்
தொழுது	ஸேவித்து	மற்றை திருமகளோடும்	இன்னும் பெரியபிராட்டியாரோடும் கூட
ஏத்த	ஸ்தோத்ரம்பண்ணும்படிக்கீடாக	வருவான்	வருமவன்
ஒருமகள் ஆயர் மடந்தை	ஒருத்தியான நப்பின்னைப்பிராட்டியோடும்		சித்திரகூடத்துள்ளான். (௯)

வ்யா.— ஒன்பதாம்பாட்டு. (கருமுகிலித்யாதி) காளமேகம் போலேயிருக்கும் வடிவையும், கையில் திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுமுடையனாய், பெரிய மிடுக்கையுடைய ப்ரஹ்மாதிகள் சூழ்ந்து ஸேவிக்க, ஸப்தலோகத்திலுள்ளாரும் திருவடிகளிலே விழுந்தேத்த, பிராட்டிமார் மூவரோடுங்கூட வருமவன். (௯)

அநு.—ஒன்பதாம்பாட்டு. (கருமுகிலித்யாதி) கீழ் - எம்பெருமானுடைய அபதாநங்கள் சொல்லிக்கொண்டு மிடுக்கை ஆஶ்ரயணோபயுக்தமாகச்சொல்லி, இவையொன்றுமில்லாவிட்டாலும் விடலாமோ இவனுடைய போக்யதையென்று திருவுள்ளம்பற்றி, வடிவழகும் ஆயுதச்சேர்த்தியழகும் பிராட்டிமாரோட்டைச் சேர்த்தியும் கண்டு தூர்மாநிகளான ப்ரஹ்மாதிகளும் வணங்கும்படி பாரீரென்று உபதேசிக்கிறாரென்று ஸங்கதி. ... (௯)

மூ.—தேனமர் பூம்பொழில் தில்லைச்சித்திரகூடமமர்ந்த
வானவர் தங்கள்பிரானை மங்கையர்கோன்மருவார்
ஊனமர்வேல் கலிகன்றி யொண்டமிழொன்பதோடொன்றும்
தானிவை கற்று வல்லார்மேல் சாரா தீவினைதானே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தேன்	வண்டுகள்	அமர்	பொருந்தித்தைக்கும்படி
அமர்	மொய்த்த	வேல்	வேல்தொழிலில் வல்லரான
பூ	அழகிய	கலிகன்றி	ஆழ்வார் அருளிச்செய்த
பொழில்	சோலையையுடைய	ஒண்தமிழ்	அழகிய தமிழ்ப்பாஷையாலான
தில்லைச்சித்திர கூடம்	தில்லைத் திருச்சித்திரகூடத்திலே	இவை ஒன்பதோடொன்றும்	இப்பத்துப்பாட்டையும்
அமர்ந்த	நித்யவாஸம் பண்ணுகிற	கற்று	அர்த்தத்துடன் அப்யஸித்து
வானவர்தங்கள் பிரானை	அயர்வறுமமரர்களுக்குத் தலைவனானவன்விஷயமாய்	வல்லார் மேல்	அதிகரிக்க வல்லவர்களுக்கு
மங்கையர்கோன்	திருமங்கையிலுள்ளார்க்கு ராஜாவாய்	தீவினை	பாபங்கள்
மருவார்	சத்ருக்களுடைய	சாரா	பக்கலில் கிட்டமாட்டா... (௧௦)
ஊன்	சரீரத்தில்		

வ்யா.— பத்தாம்பாட்டு. (தேனித்யாதி) வண்டுகள்படிந்து பூத்தபொழிலையுடைய தில்லையில் சித்திரகூடத்திலேயமர்ந்த†*அயர்வறுமமரர்களதிபதியை, திருமங்கைக்குராஜாவாய்,†சத்ருக்கள்சரீரமே தனக்கு உறையாகவுடைய வேலையுடைய ஆழ்வாரருளிச்செய்த அழகிய தமிழான விப்பத்துமப்யஸித்தவர்கள்பக்கல், அவர்கள் பண்ணினபாபம் பலாநுபவத்துக்காகச் சாரா. ... ... (௧0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (தேனித்யாதி) கீழ்ப்பாட்டில்,"வானவர்"என்ற பதத்தை, ஆஸ்ரயிப்பார்க்குறுப்பாக, தூர்மாநிகளும் வந்தாஸ்ரயிக்கக்கண்டீர்களேயென்ன வேண்டுகையால், அதுக்காக ப்ரஹ்மாதிகள் பரமாக்கினேரேயாகிலும், இப்பாட்டில் "வானவர்" என்றதுக்கு, "தங்கள்" என்று அஸாதாரண்யம் தோற்றச்சொல்லுகையாலும், ஆழ்வார்க்கு ப்ரஹ்மாதிகளுக்குப் பிரானென்றது-அதிசயமாய்த்தோற்றாமையாலும், (௧) "அமரர்க்குமெய்தாத வண்டத்திருப்பீர்" என்று பல(ஃல)ஸ்வரூபத்தைக் கீழ்த்திருமொழியிலருளிச்செய்தத்தோடு இத்திருமொழிக்கு ஏகவாக்யதையைச்சொல்லுகையாலே ப்ராப்யகோடிகடிதரான நித்யஸூரிகளேயாகவேணுமென்றருளிச்செய்கிறார் (அயர்வறுமமரர்களதிபதியை) என்று. இப்பதத்துக்கு (அருளிச்செய்த) என்றத்தோடந்வயம். "மருவார்" என்றதினர்த்தம் (சத்ருக்கள்) என்றது. (௧0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்தில் மூன்றுந்திருமொழி முடிந்தது.

---

(௧) ௩ - ௨ - ௧.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி ந - ம் பத்து, ச - ம் திருமொழி, ஒருகுறள் ப்ரவேசம்.

வ்யா.—†நீங்கள் அவனைப்பெறுகைக்குறுப்பாகப்பண்ணும் ஸாதநாநுஷ்ட்டாநத்தை அவன்றான் உங்களைப் பெறுகைக்குறுப்பாக அவதாராதிமுகங்களாலே பண்ணிக்கொடு இங்கேவந்து நின்றானென்றார்; அவன்படியிதுவானபின்பு, அர்த்தித்வம் துடக்கமாக மேலுள்ளவற்றையெல்லாம் அவன் கையிலேயேறிட்டு, நீங்க ளவனுகந்த சீராமவிண்ணகரை யாஶ்ரயியுங்கோளென்கிறார். இவன் †பரமபக்தி பர்யந்தமாகப்பண்ணிலும் அதடைய ப்ராதிகூல்யநிவ்ருத்தி மாத்ரத்திலே நிற்கும்படியிறே பேற்றினுடைய வைலக்ஷண்யத்தைப் பார்த்தாலிருப்பது.... ... ... *

அரு.—ஒருகுறளின் ப்ரவேசம். கீழிரண்டு திருமொழியாலுமாக - நீங்களொரு ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணவேண்டா, சித்திரகூடத்துள்ளானை யாஶ்ரயியுங்கோ ளென்னுநின்றீர்; பேற்றின்கனத்தைப்பார்த்தால் இவ்வளவிலே பலம் கைப்படுமென்று நாங்கள் விஶ்வஸிக்கும்படி யெங்ஙனேயென்னும் சங்கையிலே; வகுத்த ஸ்வாமியாகையால் உங்களைப்பெறவேணுமென்று, ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்குகப்பானு மவனாயிருக்கையா லுங்களுக்கு விஶ்வஸிக்கத்தட்டென்? அவனிலும் அவனுகந்த ஊரையாஶ்ரயிக்கையே யமையுமென்றருளிச் செய்கிறாரென்னும் ஸங்கதியை யருளிச்செய்கிறார் (நீங்களித்யாதி). அர்த்தித்வமாத்ரமாகிலும் இவன் பக்கலிலே வேண்டாவோ? இத்தையுமவன்றலையிலே யேறிட்டு நிர்ப்பரனாயிருக்கக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (இவனித்யாதி). பேற்றுக்கு அப்ரதிஷேதமே வேண்டுவது, அதுக்கு மேற்பட்ட அர்த்தித்வம் முதலானவை யெல்லா மிவனுக்கு வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லையென்று கருத்து. ... ... *

மூ.—ஒருகுறளா யிருநிலமூவடிமண் வேண்டி
யுலகனைத்து மீரடியா லொடுக்கி யொன்றும்
தருகவெனா மாவலியைச் சிறையில்வைத்த
தாடாளன் தாளணைவீர் தக்ககீர்த்தி
யருமறையின் திரள் நான்கும் வேள்வியைந்து
மங்கங்களவை யாறு மிசைகளேழும்
தெருவின்மலி விழாவளமும் சிறக்கும்காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஒரு	அத்விதீயமான	கீர்த்தி	பெருமையையுடைத்தாய்
குறளாய்	வாமநவடிவைக்கொண்டு (மஹாபலிபக்கலிலேசென்று)	அரு	அர்த்தமறியஅசக்யமான
		மறையின்	வேதங்களின்
இருநிலம்	பரந்தபூமியில்	திரள்	திரள்கள்
மூவடிமண்	மூன்றுஅடிமண்ணை	நான்கும்	நாலும்
வேண்டி	இரந்து	ஐந்துவேள்வியும்	பஞ்சமஹாயஜ்ஞங்களும்
உலகனைத்தும்	லோகங்களெல்லாவற்றையும்	ஆறுஅங்கங்களும்	வ்யாகரணாதிஅங்கங்களாறும்
ஈரடியால்	இரண்டடியாலே		
ஒடுக்கி	அடக்கி	ஏழுஇசைகளும்	ஸப்தஸ்வரங்களும்
ஒன்றும்	மற்றைஓரடியும்	மலி	மிக்கிருப்பதாய்
தருகென்று	தரவேண்டுமென்று	விழா	உத்ஸவங்களின்
மாவலியை	மஹாபலியை	வளமும்	அழகும்
சிறையில்வைத்த	பாதாளமாகிறசிறையிலேவைத்தவனான	சிறக்கும்	மிகும்படியான
		தெருவின்	வீதிகளையுடைய
தாடாளன்	ஸர்வாதிகனுடைய	காழி	காழியில்
தாள்	திருவடிகளை	சீராமவிண்ணகர்	ஸ்ரீராமவிண்ணகரத்தை
அணைவீர்	கிட்டவேண்டியிருப்பீர்!	நீர்	நீங்கள்
தக்க	அவனுக்குத்தகுதியான	சேர்மின்	ஆஶ்ரயியுங்கோள். ()

வ்யா.—முதற்பாட்டு.--(ஒருகுறளாய்) வடிவைக்கண்டபோதே சொல்லிற்றடையக் கொடுக்கவேண்டும்படியான அத்விதீயவாமநனாய். (இருநிலம்) பரப்பையுடைத்தானபூமியை. (மூவடிமண்வேண்டி) †தனக்கென்னக்கால்பாவுகைக்கு ஓரிடமில்லாதாரைப்போலே, இத்தையவனுக்காக்கி அவன்பக்கலிலேயிரந்து, இந்தலோகங்களடைய இரண்டடியாலே அடக்கி, "மூன்றடிதருகிறோம் என்றாய், மற்றை ஓரடியும் தாராயோ" என்று. (மாவலியைச் சிறையில்வைத்த) அநந்தரம், இந்த்ரபதம் அவன் பெறக்கடவனாக அவனைப் பாதாளத்திலே வைத்த. (தாடாளன் தாளணைவீர்) "ஆஶ்ரிதார்த்தமாகத்தானிரந்தான்" என்னும் மேன்மையையுடையவன் திருவடிகளைக் கிட்டவேண்டியிருப்பீர்!

(தக்கவித்யாதி) அபௌருஷேயத்வ நிபந்தநமான கீர்த்தியையுடைய வேதங்களுடைய திரள்கள்நாலும், பஞ்சமஹாயஜ்ஞங்களும், ஆறங்கங்களும், ஏழிசைகளும், தெருவிலேமிக்கிருந்துள்ள உத்ஸவத்தால்வந்த அழகும், இவையெல்லாமடையச் †சிறக்கும்படியான காழியில் சீராமவிண்ணகரை ஆஶ்ரயியுங்கோள். ... ...(௧)

அரு.—முதற்பாட்டு. (ஒரு குறளித்யாதி) "மூவடிமண்வேணுமென்று இருநிலத்தைவேண்டி" என்றந்வயம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்ய மருளிச் செய்கிறார் (தனக்கென்ன வித்யாதி). தாடாளன் - ஸர்வாதிகள்.

(சிறக்கும்படியான) ஸம்ருத்தமாம்படியான. ... ... (௧)

மூ.—நான்முகனுள் மிகத்தருக்கை யிருக்குவாய்மை
நலமிகுசீ ருரோமசனால் நவிற்று நக்க
னூன்முகமார் தலையோட்டூ னொழித்த வெந்தை
யொளிமலர்ச்சேவடியணைவீ ருழுசேயோடச்
சூல்முகமார் வளையளைவா யுகுத்த முத்தைத்
தொல்குருகு சினையென்னச்சூழ்ந் தியங்க எங்கும்
தேன்முகமார் கமலவயல் சேல்பாய் காழிச்
சீராமவிண்ணகரேசேர்மினீரே. (உ)

பதம்.	உரை.
நான்முகன்	ப்ரஹ்மாவினுடைய
நாள்	ஆயுஸ்ஸை
மிக	அதிசயிக்க (அத்தால வனுக்குண்டான)
தருக்கை	கர்வத்தை,
இருக்கு	வேதத்தை
வாய்மை	உச்சரியாநின்றவனாய்
நலம்மிகுசீர்	மிக்க ஆசாரத்தையுடையனான
உரோமசனால்	ரோமசபகவானால்
நவிற்று	போக்குவித்து
நக்கன்	நக்நனானருத்ரனுடைய (கையிலேஒட்டியதாய்)
ஊன்ஆர்	மாம்ஸளமான
முகன்தலையோட்டு	ப்ரஹ்மாவின்கபாலத்தில்
ஊன்	(இரந்துண்கிற) ஊணை
ஒழித்த	போக்கின
எந்தை	ஸர்வஸ்வாமியினது
ஒளிமலர்	செவ்விமலர்போன்ற
சேவடி	சிவந்ததிருவடிகளை
அணைவீர்	சேரவிரும்புவீர்!

பதம்.	உரை.
உழு	உழுகிற
சே	எருதுகள்
ஓட	(செருக்காலே) ஓட
சூல்முகமார்	ப்ரஸவகாலமாயிருக்கிற
வளை	சங்குகள்
அளைவாய்	வங்குகளில்
உகுத்த	ஈன்ற
முத்தை	முத்துக்களை
தொல்குருகு	பெரியகுருகுகளான
சினையென்ன	தங்களுடையமுட்டையென்று
சூழ்ந்துஇயங்க	சூழப்பறவாநிற்பதாய் (அக்காற்றாலே)
எங்கும்	பார்த்தவிடமெல்லாம்
தேன்	தேன்வெள்ளத்தை
முகமார்	முகத்தாலேசொரிகிற
கமலம்	தாமரைமலர்களையுடைத்தாய்
சேல்	சேல்மத்ஸ்யங்கள்
பாய்	பாயாநின்றுள்ள
வயல்	வயல்களையுடைய

காழிச்சீராம விண்ணகரேசேர்மின் நீரே. (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (நான்முகனித்யாதி) ரோமச பகவான், "ப்ரஹ்மாக்களென்று சிலர் நீர்க்குமிழிபோலே தோற்றுவது மறைவதாய்ப் போகக்கடவது எத்தனைபேர்" என்றானயிற்று.

†சதுர்முகனுடைய ஆயுஸ்ஸின்மிகுதியாலுண்டான துர்மாநத்தை, †வேதங்களைஉச்சரியாநிற்பானாய் ஆசாரப்ராதாந்யத்தால்வந்த வேற்றத்தையுடையனான ரோமசபகவானாலே, †"சதுர்த்தசபுவநங்களுக்கும் கடவேன், என்னோபாதி ஆயுஸ்ஸுடையாருண்டோ" என்கிற துர்மாநத்தைத்தவிர்த்து.(நக்கனித்யாதி)†ருத்ரனுடைய பிதாவுமாய் லோககுருவுமாயிருக்கிறவனைத் தலையையறுத்து, அத்தாலே பாதகியாய் மாம்ஸப்ரசுரமான தலையோட்டிலேயிரந்து அதிலே ஜீவித்துத் திரிகிற எளிவரவைத்தவிர்த்தஸ்வாமி. †ஜகத்துக்கு ஈஶ்வரர்களாக ப்ரஸித்தரிருவருமிறே; அவர்களிருவருடையவும் அபிமாநத்தைக் கழித்தானாயிற்று. (ஒளிமலர்ச்சேவடியணைவீர்) அவனுடைய ஸ்வாபாவிகமான ஈஶ்வரத்வத்தால்வந்த புகரையுடைய திருவடிகளைப் பெறவேண்டியிருப்பீர்.

(உழுசேயித்யாதி) †ஆனைபோலேயாய் பெரியமிடுக்கையுடைய சேக்களையிறே பூட்டியுழுவது. அவைதவறுவோடினவாறே, "அப்போது ப்ரஸவித்தது, இப்போது ப்ரஸவித்தது" என்றுதோன்றும்படி தொட்டார்மேலே தோஷமாம்படியிருக்கிற †சங்குகள், தான் கிடக்கிறவங்குகளினுடையவாசலிலே முத்துக்களையீன்றன; அவற்றை தொல்குருகு - என்று மொக்கப்பழகச்செய்தேயும் "இது முத்து, இதுமுட்டை" என்று வாசியறியமாட்டாதபடி மூத்தகுருகுகள், அவை தன்னுடைய முட்டையாகக்கொண்டு விட்டுப்போகமாட்டாதே சுற்றும் பறவாநிற்குமாயிற்று. அவை பறக்கிறகாற்றாலே, பார்த்தபார்த்தவிடமெல்லாம் பக்வமாய்த் தலையிலே மிக்கதேனையுடைத்தாயிருக்கிற தாமரைப்பூக்களலராநிற்குமாயிற்று, அந்த மதுவைப் பாநம்பண்ணின கயல்களானவை பாயாநிற்குமாயிற்று.*

அரு.—இரண்டாம்பாட்டு. (நான்முகனித்யாதி) தன்னை இரப்பாளனாக்கி ஆஶ்ரிதர்க்கரியன செய்யுமவன் வந்திருக்கும் காழிச்சீராமவிண்ணகரை ஆஶ்ரயியுங்கோளென்னச் செய்தேயும், அறியிருந்தீர்கள், இதுக்கடி உங்களுடைய ஸ்த்திரத்வபுத்தியும், பெருமையுமன்றோ, ப்ரஹ்மாவினாயுஸ்ஸின்படி கேட்டிகோளே. ருத்ரனெளிவரவையும் கண்டிகோளே யென்கிறாரென்று ஸங்கதி.

(என்றானாயிற்று) என்றவநந்தரம், அந்தப்புராணப்ரஸித்தியைக் கொண்டருளிச்செய்கிறாரென்று சேஷம். நான்முகனுடைய நாளானது - ஆயுஸ்ஸானது, மிக - அதிசயிக்க, அத்தாலுண்டான, தருக்கை - கர்வத்தை, என்றுசப்

நார்த்த மருளிச்செய்கிறார் (சதுர்முகனித்யாதி). "இருக்கு" இத்யாதிக்கு சப்தார்த்த மருளிச்செய்கிறார் (வேதங்களை யித்யாதி). "நவிற்று" என்றது-சொல்லுவிக்கையாய், அதுதானும்-நீர்க்குமிழிபோலே எத்தனைபேர் ப்ரஹ்மாதிகளென்ற வார்த்தையாய், அத்தால் பலித்த கர்வநிவ்ருத்தியை யருளிச்செய்கிறார் (சதுர்த்தசேத்யாதி). "முகம்" என்றது - முகன் என்றாய், ப்ரமுகனான ப்ரஹ்மாவாய், நக்கனுடைய முகனார்தலையோட்டிலூணை யொழித்தவெந்தை என்றந்வயமாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ருத்ரனுடையவித்யாதி). மனக்களுழறிவருமிறே. "நக்கனுடைய" என்றதுக்கு, "ஊண்" என்றத்தோடந்வயம். இவ்வளவுக்கு முட்கருத்தையருளிச்செய்கிறார் (ஜகத்துக்கித்யாதி).

ப்ரஹ்ம ருத்ராதிகள்போன்ற சேக்களைக்கொண்டு பத்தியுழவனான வெம்பெருமான் பழம்புனமான ஜகத்தை ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுவிக்க, அவர்கள் "ஈஸ்வரோஹம்" என்று கைகழியவோட, நம்பூர்வர்கள் போன்ற சங்குகள் ஸ்வஸ்வபாவரைப் பெறுவிக்க, ஆதிமூலமான வெம்பெருமான் தனக்கஸாதாரண புத்ரத்வப்ரதிபத்தியாலே இவர்களிடத்தில் வ்யாமுக்தனாயிருக்க, அத்தால் கமலமலர்மேல் பாவை முகக்கமலம் விகஸித்து, அநுராகாதிசயம் வெள்ளமிட, அதிலே துள்ளாநிற்பர் நித்யஸூரிகளென்னும் வ்யங்க்யார்த்தத்துக்கு ஸூசகமாக, திருப்பதிக்குச் சிறப்பையருளிச்செய்கிறாரென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (ஆனைபோலே யித்யாதி). "வளை" என்றதினர்த்தம் (சங்குகள்) என்றது. அளை - வங்குகள். உகுத்த - ஈன்ற. (உ)

மூ.—வையணைந்த நுதிக்கோட்டு வராகமொன்றாய்
மண்ணெல்லா மிடந்தெடுத்து மதங்கள்செய்து
நெய்யணைந்த திகிரியினால் வாணன்திண்டோள்
நேர்த்தவன் தாளணைகிற்பீர் நெய்தலோடு
மையணைந்தகுவளைகள்தங்கண்களென்றும்
மலர்க்குமுதம் வாயென்றும் கடைசிமார்கள்
செய்யணைந்து களைகளையா தேறும் காழிச்
சீராமவிண்ணகரேசேர்மினீரே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வை அணைந்த	கூர்மைபொருந்திய	மதங்கள்	மதகார்யமானவ்யாபாரங்களை
நுதி	முனையையுடைய		
கோடு	கொம்பையுடைத்தான	செய்து	பண்ணி
ஒன்று	ஒப்பற்ற	வாணன்	பாணாஸுரனது
வராகமாய்	பன்றியுருக்கொண்டு	திண்	த்ருடமான
மண்எல்லாம்	பூமிமுழுவதையும்	தோள்	புஜங்களை
இடந்து	பிளந்து [றி)	நெய்அணைந்த	கூர்மையையுடைய
எடுத்து	தூக்கிக்கொண்டு (ஏ	திகிரியினால்	திருவாழியாலே

௬௫

நேர்த்தவன்	துணித்தஎம்பெருமானுடைய
தாள்	திருவடிகளை
அணைகிற்பீர்	சேரவிரும்புமவர்களே!
கடைசிமார்கள்	பள்ளஸ்த்ரீகள்
நெய்தலோடு	நெய்தல்மலரையும்
மைஅணைந்த	கருமைமிகுந்த
குவளைகள்	குவளைமலரையும்
தம்கண்களென்றும்	தங்கள் கண்களாகவும்
குமுதமலர்	சிவந்தஆம்பல்மலரை
தம்வாயென்றும்	தங்கள்வாயாகவும் எண்ணி
செய்	வயல்களில்
அணைந்து	(களைபறிக்க) இழிந்து
களைகளையாது	களைபறியாமல்
ஏறும்	வெறுமனேகரையேறுகின்ற

காழிச்சீராமவிண்ணகரே சேர்மின் நீரே. (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (வையித்யாதி). கூர்மை மிக்கிருந்துள்ள முனையையுடைய கொம்பையுடைத்தான அத்விதீய மஹாவராஹமாய், பூமிப்பரப்படைய இடந்தெடுத்துக்கொண்டேறி. ஈஶ்வரத்வத்தால்வந்த செருக்காலே மதகார்யமான வ்யாபாரங்களைப் பண்ணி. (நெய்) கூர்மை. †கூர்மையுடையதிருவாழி. கடைந்துநெய்யிட்டிருந்துள்ள திருவாழியாலே, தேவதாந்தரபஜநத்தைப்பண்ணி அத்தாலே தனக்கு மிடுக்காக நினைத்திருக்கிற வாணனுடைய திண்ணிய தோள்களைநேர்த்தவன் திருவடிகளைக் கிட்டவேண்டியிருப்பீர்!

நெய்தற்பூவோடேகூட கறுப்பு மிக்கிருந்துள்ள குவளைகளைத் தம்கண்களென்றும், மலரையுடைத்தான †அரக்காம்பலைத் தந்தாமுடையவாயென்றும், †கடைசிமார் களைப்பறிப்பதாக அடுத்து வயலிலேயிழிந்து, கண்ணுக்கும் வாய்க்குமவற்றோடுண்டான ஸர்வதாஸாம்யத்தாலே களைபறியாதே போந்தேறுகிற காழியில். ... (௩)

அரு.—மூன்றும்பாட்டு. (வையணைந்தவித்யாதி). நீங்கள் ப்ரளயாபத்ரக்ஷகனை வவன்படி யறிந்தாஶ்ரயிக்காவிடில் வாணன்பட்டது படுவிகோளென்கிருரென்று ஸங்கதி.

"நெய்" என்றதினர்த்தத்தைத் தந்த்ரேண வருளிச்செய்கிருர் (கூர்மையித்யாதி). "நேர்த்த" என்றது - துணித்தவென்றபடி.

(அரக்காம்பல்) சிவந்த ஆம்பல். (கடைசிமார்) கடைசியான ஜந்மத்தையுடைய பள்ளச்சிகள். ... ... (௩)

மூ.—பஞ்சிய மெல்லடிப் பின்னைதிறத்து முன்னாள்
பாய் விடைக ளேழடர்த்துப் பொன்னன்பைம்பூண்
நெஞ்சிடந்து குருதியுக வுகிர்வேலாண்ட
நின்மலன் தாளணைகிற்பீர் நீலமாலைத்

தஞ்சுடைய விருள் தழைப்பத் தரளமாங்கே
  தண் மதியின் நிலாக் காட்டப் பவளந்தன்னால்
செஞ்சுடர் வெயில் விரிக்கு மழகார் காழிச்
  சீராமவிண்ணகரே சேர்மினீரே. ... ...(௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பஞ்சிய	செம்பஞ்சுபோலே	மாலை	அந்திப்பொழுதை
மெல்அடி	ம்ருதுவானதிருவடிகளையுடைய	தஞ்சுஉடைய	தனக்குத்தஞ்சமாகவுடைய
பின்னைதிறத்து	நப்பின்னைப்பிராட்டிக்காக	இருள்	இருட்டை
முன்நாள்	முற்காலத்தில்	தழைப்ப	அதிசயிப்பிக்கவும்
பாய்	கண்டார்மேலே விழுகிற	ஆங்கு	அவற்றின்நடுவேயழுத்தின
ஏழ்விடைகள்	ஏழுருஷபங்களையும்	தரளம்	முத்துக்கள்
அடர்த்து	அழித்து	தண்	குளிர்ந்த
பொன்னன்	ஹிரண்யனது	மதியின்	சந்த்ரனது
பைம்பூண்	அழகியஆபரணங்கள் நிறைந்த	நிலா	நிலவை
நெஞ்சு	மார்பை	காட்ட	காட்டவும்
இடந்து	பிளந்து	பவளம்	பவழங்கள்
குருதி	ரக்தம்	தன்னால்	இடையிடையேதாங்களழுத்தப்பட்டிருப்பதனால்
உக	பீறிப்புறப்படும்படி		
உகிர்வேல்	நகங்களாகிறவேலை	செஞ்சுடர்	ஸூர்யனது
ஆண்ட	கார்யங்கொண்ட	வெயில்	காந்தியை
நின்மலன்	பரிசுத்தனானஎம்பெருமானது	விரிக்கும்	பரப்பவும்
தாள்	திருவடிகளை	அழகுஆர்	(இவற்றால்வந்த)அழகையுடைய
அணைகிற்பீர்	அணையவிரும்புமவர்களே!	காழிச் சீராமவிண்ணகரே சேர்மின் நீரே. (௪)	
நீலம்	(மாடங்களிற்பதித்த) நீலரத்நங்கள்		

வ்யா.—நாலாம்பாட்டு. (பஞ்சியவித்யாதி) செம்பஞ்சுபோலே ம்ருதுவான திருவடிகளையுடைய நப்பின்னைப்பிராட்டிக்காகப், பண்டொருநாள், கண்டார் மேலேவிழுகிற ருஷபங்களேழையுமழியச்செய்து; ஹிரண்யனுடைய ஆபரணங்களாலே அலங்க்ருதமானநெஞ்சை அநாயாஸேந கிழித்துப்பொகட்டு; ரக்தமானது கொழித்துப் புறப்படும்படியாக, ஆளிட்டுச்செய்தல் ஆயுதத்தாலேயழியச்செய்தல் செய்கையன்றிக்கே, ஆஸ்ரிதவிரோதியைத்தானே கைதொட்டுத் திருவுகிராகிற வேலாலே யழியச்செய்து அத்தால்வந்த சுத்தியையுடையவன் திருவடிகளைக் கிட்டவேண்டியிருப்பீர்!

(நீலமித்யாதி) அவ்வூரில் மாடங்களிலழுத்தின நீலரத்நம், மாலையைத் தனக்குத் தஞ்சமாகவுடைய, அதாவது - ராத்ரியைத்

†தனக்கு அபாஸ்ரயமாகவுடைத்தாயிருக்கிற இருளைத்தழைப்ப, நடுவேயழுத்தின முத்தானது, குளிர்ந்த சந்த்ரனுடைய நிலாவைக் காட்ட, இடையிடையேயழுத்தின பவளமானது, புகரையுடைய ஆதித்யனுடைய ப்ரகாசத்லைதக்காட்டாநின்றது. †ஆக, ஏககாலத்திலே இருளும் சந்த்ரோதயமும் வெயிலுமொக்கக்கண்டநுபவிக்கும்படியான தேசமாயிற்று. ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (பஞ்சியவித்யாதி) வாணனைப்போலே கைகழிகை மாத்ரமன்றிக்கே ஹிரண்யன் பட்டது படுவீர்கள் அவனையாஸ்ரயியாவிடில், ஆஸ்ரயித்தால் நப்பின்னையிடத்தில் போலே வ்யாமுக்த்தனுவனென்கிறரென்று ஸங்கதி.

"தனக்குத் தஞ்சமாக வுடையராத்ரியை" என்றதுக்கு விவரணம் (தனக்கபாஸ்ரயமித்யாதி). "அழகார்" என்றதின் தாத்பர்யமருளிச் செய்கிறார் (ஆகவித்யாதி). ... ... (௪)

மூ.—தெவ்வாய மறமன்னர் குருதிகொண்டு
திருக்குலத்தி லிறந்தோர்க்குத்திருத்திசெய்து
வெவ்வாய மாகீண்டு வேழமட்ட
விண்ணவர்கோன்தாளணைவீர் விகிர்தமாதர்
அவ்வாயவாள்நெடுங்கண் குவளைகாட்ட
அரவிந்தம் முகங்காட்ட வருகே யாம்பல்
செவ்வாயின் திரள் காட்டும் வயல்சூழ் காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தெவ்ஆய	சத்ருக்களாகிய	அட்ட	முடித்த
மறம்மன்னர்	வீரமுள்ளராஜாக்களுடைய	விண்ணவர்கோன்	அமரர்களதிபதியினது
குருதிகொண்டு	ரக்தத்தாலே	தாள்	திருவடித்தாமரைகளை
திருக்குலத்தில்	தன்வம்சத்தில்	அணைவீர்	சேரவிரும்புமவர்களே !
இறந்தோர்க்கு	முடிந்தவர்களுக்கு	விகிர்தம்	வேறுபாடுள்ள
திருத்திசெய்து	(உதகக்ரியையால்) த்ருப்திசெய்வித்து,	மாதர்	ஸ்த்ரீகளுடைய
வெம்	க்ரூரமான	அவ்வாய	அப்படிப்பட்ட
வாய	வாயையுடைய	வாள்	ஒளிபொருந்திய
மா	குதிரையுருவாய்வந்த கேசிஎன்பவனை	நெடு	(காதளவும்) நீண்ட
கீண்டு	கிழித்து	கண்	கண்களை
வேழம்	குவலயாபீடம்என்னும்யானையை	குவளை	நீலோத்பலமலர்கள்

காட்ட	காட்டவும்	செவ்வாயின்	சிவந்தவாயின்
அரவிந்தம்	தாமரைமலர்கள்	திரள்	கூட்டங்களை
முகம்	முகத்தொளியை	காட்டும்	தோற்றுவிக்கிற
காட்ட	காட்டவும்	வயல்சூழ்	கழனிசூழ்ந்த
அருகே	ஸமீபத்திலுள்ள		காழிச்சீராமவிண்ணகரே சேர்மின்
ஆம்பல்	செவ்வல்லிமலர்கள்		நீரே. (௬)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (தெவ்வாயவித்யாதி) சத்ருக்களாய் மறத்தையுடையராயிருக்கிற ராஜாக்களையழியச்செய்து, அவர்களுடைய ருதிரவெள்ளத்தைக்கொண்டு, வம்சத்திலே முடிந்துபோனார்க்கு †உதககிரியைகளைப்பண்ணி. இவ்வளவாலே - ஸ்ரீபரசுராமாழ்வானை நினைக்கிறது. வெவ்விதான வாயையுடைத்தாய்க்கொண்டு பயாவஹமாம்படி-தோற்றின ஆஸ்ரிதவிரோதியான கேசிவாயை அநாயாஸேந கிழித்து, குவலயாபீடத்தை†முடித்து, ✻அயர்வறுமமரர்களதிபதியாயிருந்துவைத்து, இப்படி ஆஸ்ரிதவிரோதிகளைக் கைதொட்டுப்போக்குமவன் திருவடிகளைக் கிட்டவேண்டியிருப்பீர்.

(விகிர்தமாதர்)†விஸஜாதீயஸ்வபாவைகளாயிருந்துள்ள ஸ்த்ரீகளுடைய அப்படிப்பட்ட ஒளியையுடைத்தான பரந்த கண்களைக் குவளைகளானவை காட்ட, தாமரைப்பூவானது முகத்தில் தேஜஸ்ஸைக்காட்ட, அருகே அலர்ந்துநின்ற அரக்காம்பலானது சிவந்த அதரத்தினுடைய திரளைக்காட்டுகிற. ... ... (ரு)

அரு.—அஞ்சாம்பாட்டு. (தெவ்வாயவித்யாதி) ஹிரண்யனைப்போலே தான் பட்டுப்போன வளவன்றிக்கே, (க) "மூவெழுகால் கொன்ற" என்கிறபடியே ப்ரதிகூலரைக்குலமாக அழிக்குமவன் கிடீர், அவன் விஷயத்திலநுகூலித்து ஜீவித்துப்போங்கோ ளென்கிறாரென்று ஸங்கதி.

திருத்தி - த்ருப்தியென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (உதகேத்யாதி). "அட்ட" என்றதினர்த்தம் (முடித்து) என்கிறது.

விகிர்தம் என்றது - விலக்ஷணை விகாரமுடைய என்றாய், பலிதமருளிச் செய்கிறார் (விஸஜாதீயேத்யாதி). ... ... (ரு)

மூ.—பைங்கண்விறல் செம்முகத்து வாலி மாளப்
படர்வனத்துக் கவந்தனொடும் படையார் திண்கை
வெங்கண்விறல் விராதனுக விற்குனித்த
விண்ணவர்கோன் தாளணைவீர் வெற்புப் போலும்

(க) ௫ - ௩ - க.

துங்கமுக மாளிகைமே லாயங் கூறும்
துடியிடையார் முகக்கமலச் சோதி தன்னால்
திங்கள்முகம் பனிபடைக்கு மழகார் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பைங்கண்	பசுமையான கண்களையும்	அணைவீர்	கூடவிரும்புமவர்களே!
விறல்	மிடுக்கையும்	வெற்புப்போலும்	மலைகள்போலே
செம்முகம்	(கோபத்தால்)சிவந்த முகத்தையுமுடைய	துங்கம்	உயர்ந்த
வாலி	வாலியென்னும்வாநரம்	முகம்	முன்ப்ரதேசத்தையுடைய
மாள	முடியும்படியாகவும்	மாளிகை	மாளிகைகளின்
படர்	பரந்த	மேல்	மேல்நிலத்திலேநின்று
வனத்து	காட்டிலுள்ள	ஆயம்கூறும்	தோழமைசொல்லியழைக்கிற
கவந்தனோடும்	கபந்தனென்னும் ராக்ஷஸனும்	துடி	உடுக்கைபோன்ற
திண்	த்ருடமான	இடையார்	மத்யப்ரதேசத்தையுடையஸ்த்ரீகளது
படை	ஆயுதங்கள்	முகக்கமலம்	முகபங்கஜங்களுடைய
ஆர்	நிறைந்த	சோதிதன்னால்	காந்திகளாலே
கை	கைகளையும்	திங்கள்	(ஆகாசத்துலாவும்) சந்த்ரனது
வெங்கண்	உக்ரமானகண்களையும்	முகம்	வதநமானது
விறல்	வெற்றியையுமுடைய	பனி	(துக்கத்தாலுண்டான) கண்ணீரை
விராதன்	விராதனென்னும் ராக்ஷஸனும்	படைக்கும்	இடைவிடாமற்கொண்டிருக்கும்படி
உக	உயிர்விடும்படி	அழகுஆர்	அழகு நிரம்பிய
வில்குனித்த	வில்லைவளைத்த	காழிச் சீராமவிண்ணகரே சேர்மின் நீரே. (௬)	
விண்ணவர்கோன்	தேவசேவனைசக்ரவர்த்தித்திருமகனுடைய		
தாள்	திருவடிகளை		

வ்யா.—ஆறும்பாட்டு. (பைங்கணித்யாதி) ஜாதிப்ரயுக்தமான கண்ணில் பசுமையையும், மிடுக்கையும், சீற்றத்தாலே சிவந்த முகத்தையுமுடைய வாலி முடியும்படியாக, †பரந்த காட்டிலேயுண்டான ஸத்வங்களையடைய இரண்டுகையாலும் வாரி பக்ஷித்துக்கொண்டு வருகிற கபந்தனோடேகூட. (படையார்திண்கை)† திண்ணியபடையார்ந்தகை, வெவ்விய கண்களையும் மிடுக்கையுமுடைய விராதன் முடியும்படியாக, வில்லைவளைத்த. (விண்ணவர்கோன்தாளணைவீர்) விரோதியைபோக்கி தேவஜாதிக்குக் குடியிருப்பைப்பண்ணிக்கொடுத்த சக்ரவர்த்தித்திருமகன் திருவடிகளை ஆஶ்ரயிக்கவேண்டியிருப்பீர்!

(வெற்பித்யாதி) மலைபோலேயோங்கின †முகத்தையுடைத்தாயிருக்கிற மாளிகைகளின்மேல்நிலத்திலேநின்று †தோழமையைச் சொல்லியழைத்து விளையாடுகிறதுடிபோன்ற இடையையுடையரான ஸ்த்ரீகளுடைய முகமாகிற கமலத்திலுண்டான தேஜஸ்ஸாலே சந்த்ரனுடைய முகமானது து:கத்தை ப்ராபியாநிற்கும்- †"நாமென்ன ஜீவநம் ஜீவிக்கிறோம், இவர்களோடொப்புச்சொல்லாநிற்கச்செய்தே ஒப்புப்போராதபடியிருப்பதே" என்று து:கப்படாநிற்குமாயிற்று. †சந்த்ரனுக்குச் சந்த்ரனிவர்கள்; தேஜஸ்ஸைச் சந்த்ரனுக்குண்டாக்குமவர்களென்னவுமாம். ... ... (௬)

அரு.—ஆறும்பாட்டு. (பைங்கணித்யாதி) ராஜலோகத்தை வென்ற வளவேயன்றிக்கே வரபலத்தாலே பெருமிடுக்கனாய் எதிரின்றிக்கேயிருந்த வாலியையும்வென்ற மிடுக்கன் இவரென்று ராமாவதாரத்தில் வீரசரிதத்தை இனி யிரண்டுபாட்டாலே யநுஸந்தித்து, இவனிருந்த தேசத்தைப்பற்றினவாறே உய்யலாமென்கிறாரென்று ஸங்கதி.

"படர்வனத்து" என்று விசேஷிக்கைக்கு வேறு கபந்தனுண்டோவென்ன, அதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பரந்தவித்யாதி). (ஸத்வங்களை)-ஜந்துக்களை. விராதனுக்கு விறலை விசேஷணமிட்டிருக்க, திண்கை" என்னவேணுமோவென்னும் சங்கையிலே அந்வயம்காட்டுகிறார் (திண்ணியவித்யாதி). கபந்தனிடத்தில் வில்குனித்ததில்லையாகிலும், வில் குனித்தது உபலக்ஷணமாய், வாள்பிடித்தமையும் சொல்லக்கடவது. (க) "తతస్తౌ దేశకాలజ్ఞౌ ఖడ్గాభ్యామేవ రాఘవౌ। అచ్ఛిన్దతాం సుసంహృష్టౌ బాహూ తస్యాంసదేశతః-ததஸ்தௌ தேசகாலஜ்ஞௌ கட்காப்யாமேவ ராகவௌ । அச்சிந்ததாம் ஸுஸம்ஹ்ருஷ்டௌ பாஹூ தஸ்யாம்ஸதேசத:" என்றிறே ப்ரமாணகதி.

(முகத்தை) அக்ரப்ரதேசத்தை. "ஆயங்கூறும்" என்றதினர்த்தம் (தோழமையைச் சொல்லியழைத்து) என்றது. "பனி" என்று கண்ணீராய், அத்தால் தோற்றின து:கத்தின் ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் (நாமென்னவித்யாதி). "பனி" என்றத்தால் - குளிர்த்தியாய், ப்ரஸாதத்தை விவக்ஷித்து, அதுபடைக்குமென்றர்த்தாந்தரத்தை யருளிச்செய்கிறார் (சந்த்ரனுக்கித்யாதி வாக்யத்வயத்தாலே). ... ... (௬)

(க) ரா.- ஆர - ௭௦ - ௮.

மூ.—பொருவில் வலம்புரி யரக்கன் முடிகள் பத்தும்
புற்று மறிந்தனபோலப் புவிமேற் சிந்தச்
செருவில் வலம்புரி சிலைக்கை மலைத்தோள் வேந்தன்
திருவடிசேர்ந்துய்கிற்பீர் திரைநீர்த் தெள்கி
மருவி வலம்புரி கைதைக் கழியூ டாடி
வயல்நண்ணி மழைதருநீர்த் தவழ்கால் மன்னித்
தெருவில் வலம்புரி தரள மீனும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொரு இல்	ஒப்பில்லாத	வலம்புரி	சங்கங்கள் [லை
வலம் புரி	பலத்தைக்கொண்ட	திரை	அலையையுடையகட
அரக்கன்	ராவணனது	நீர்த்து	விட்டு
முடிகள்பத்தும்	பத்துத்தலைகளும்	எள்கி	இளைத்து [ழியை
புற்றுமறிந்தன	புற்றைவெட்டித்திரு	கைதைக்கழி	தாழையையுடைய க
போல	ப்பினால்புரைபுரை	மருவி	அடைந்து
	யாய்த்தோற்றுவன	ஊடு	அக்கழிநடுவே
	போல	ஆடி	அங்குமிங்குமுலாவி
புவிமேல்	யுத்தபூமியிலே	வயல்	(பின்பு) கழனிகளில்
சிந்த	சிதறிக்கிடக்க	நண்ணி	ப்ரவேசித்து
செருவில்	யுத்தத்தில்	மழைதருநீர்	மழைஜலம்
வலம்	வெற்றியை	தவழ்	வந்துவிழுகிற
புரி	தரத்தக்க [த்தரித்த	கால்	வாய்க்காலாலே
சிலை	ஸ்ரீகோதண்டத்தை	தெருவில்மன்	தெருக்களில்புக்கு (சீ
கை	கையையும்	ணி	ர்வடிந்தவாறே)
மலை	பர்வதம்போன்ற	வலம்புரி	சங்கங்களையும்
தோள்	புஜங்களையுமுடைய	தரளம்	முத்துக்களையும்
வேந்தன்	ராஜபுத்ரரானபெரு	ஈனும்	பெற்றுத்தருகிற
	மாளது		
திருவடி	சரணம்புஜத்தை	காழிச் சீராமவிண்ணகரே சேர்மின்	
சேர்ந்து	கிட்டி [வர்களே!	நீரே.	(எ)
உய்கிற்பீர்	உஜ்ஜீவிக்கக்கருதும		

வ்யா —ஏழாம்பாட்டு. (பொருவிலித்யாதி)ஒப்பில்லாதபல (ப³ல)த்தைப் பண்ணுகின்றுள்ள ராவணனுடைய தலைகள்பத்தும், †புற்று மறிந்துகிடக்குமாபோலே, தேவதைகளுடைய வரத்தாலே பூண்கட்டினவை பூமியிலே சிதறும்படியாக, அவனைப்போலே வஞ்சநத்தாலன்றிக்கே யுத்தத்திலே பல(ப³ல)த்தைப்பண்ணுகின்றுள்ள வில்லையுடையனாய், சத்ருக்களால் சலிப்பிக்கவரிதான தோளையுடைய சக்ரவர்த்தித்திருமகனைக்கிட்டி, அவன் விரோதியைப்போக்க, அவன் திருவடிகளை யாஸ்ரயித்து உஜ்ஜீவிக்கவேண்டியிருப்பீர்!

(திரைநீரித்யாதி)†கடல்நீரிலே தேங்கிப்போந்தேறினவென்னு தல்; †அன்றிக்கே, திரை, நீத்து - விட்டு, கடலைவிட்டு, வலம்புரி யானது போந்தேறிச்†சற்றிருந்து, தாழையையுடைத்தாயிருக்கிற கழியிலே போய்ப்புக்கு, அங்கே இதஸ்ததஃ ஸஞ்சரித்து, அந்தக் கழிதான் வயல்களளவும் வரவெள்ளம் கோத்தபடியாலே வயலிலே வந்துகிட்டி, அவ்விடந் தன்னிலே வர்ஷஜலம் தேங்கிநின்று, அது வாய்க்காலாலே ஊரிலேவந்து புகுர அவ்வழியாலே தெருவிலேவந் தேறி, அந்நீர்வடிந்தவாறே பின்னை போகமாட்டாதே அவ்விடந் தன்னிலேகிடந்து, வலம்புரியையும் முத்தையும் ஈனுகிற்குமாயிற்று. வலம்புரிவயிற்றிலே வலம்புரிபிறக்கத்தட்டில்லையிறே. ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (பொருவிலித்யாதி) (புற்றுமறிந்து கிடக்குமா போலே) என்றது - புற்றை வெட்டித்திருப்பினால் புரைபுரையா யிருக்குமா போலே யென்கை. புரை - பாழி.

"திரை" என்று - கடலைச்சொல்லிற்றாய், நீரில் "தெள்கி" என்று - தேங்குதலாய், அத்தால் - போந்தேறினமை பலித்ததென்றருளிச்செய்கிறார் (கடலித்யாதி). திரையை, நீத்து - நீங்கியென்றாய், விட்டென்றாய், எள்கி - இளைப்பாலே ஈடுபட்டென்றாய், பாடாந்தரத்தில் இப்படிபதவிபாகம் விவ க்ஷித்தருளிச்செய்கிறார் (அன்றிக்கேயித்யாதி). பாடபேதமில்லாமல், கேவல பதத்தைப்பிரித்து அர்த்தாந்தரம் சொன்னாரென்னலாம்படி, "நீர்த்து" என்று ரேபனோடே கூட சில ஸ்ரீ கோசங்களிலுண்டு. "மருவி" என்றதின் பலிதார்த்தம் (சற்றிருந்து) என்றது. ... ... (எ)

அ.—பட்டரவே ரகலல்குல் பவளச் செவ்வாய்
பணைநெடுந்தோள் பிணைநெடுங்கண் பாலா மின்சொல்
மட்டவிழும் குழலிக்கா வானோர் காவின்
மரங்கொணர்ந்தா னடியணைவீ ரணில்கள் தாவ
நெட்டிலைய கருங்கமுகின் செங்காய் வீழ
நீள்பலவின் தாழ்சினையில் நெருங்கு பீனத்
தெட்டபழம் சிதைந்து மதுச் சொரியும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பட்டு	பட்டுவஸ்த்ரமணிந்து	அகல்	பரந்த [யும்
அரவு	பாம்பின்படத்தை யொத்து	அல்குல்	நிதம்பப்ரதேசத்தை
ஏர்	அழகியதாய்	பவளம்	பவழம்போல்
		செவ்வாய்	சிவந்தவாயையும்

பணை	மூங்கில்போலே	அணைவீர்	சேரவிருப்பவர்களே!
நெடு	நீண்ட	அணில்கள்	அணில்களானவை
தோள்	தோள்களையும்	தாவ	கிளையில்நின்றும்கிளை யில்ஸஞ்சரிக்க
பிணை	பெண்மானின்கண் போலே [யும்	நெடு	நீண்ட
நெடுங்கண்	விசாலமானகண்களை	இலைய	இலைகளையுடைய
பால்ஆம்	அம்ருதஸத்ருசமான	கருங்கமுகின்	கறுத்தபாக்குமரங்க
இன்சொல்	இனியசொற்களையு முடைய,(அப்போ தலர்ந்தபூக்களின் ஸம்ருத்தியாலே)	செங்காய் வீழ நீள்	பழுக்காய்கள் [ளின் உதிர்வதினால் நீர்வளப்பத்தாலோங் கித்தழைத்த
மட்டுஅவிழும்	மதுவெள்ளமிடாநின் றுள்ள	பலவின் தாழ்	பலாமரங்களின் காய்க்கனத்தால்தா
குழலிக்கா	அளகபாரத்தையுடை யஸ்ரீஸத்யபாமை ப்பிராட்டிக்காக	சினையில் நெருங்கு பீனம்	கிளைகளில் [ழ்ந்த நெருங்கியிருந்துள்ள பருத்த
வானோர்	தேவதைகளுடைய	தெட்டபழம்	பக்வபலங்கள்
காவின்	சோலையில்நின்றும்	சிதைந்து	நசுங்கி
மரம்	பாரிஜாதவ்ருக்ஷத்தை	மது	தேனை
கொணர்ந்தான்	பிடுங்கிக்கொணர்ந்த ஸ்ரீக்ருஷ்ணனு	சொரியும்	பொழிகிற
அடி	திருவடிகளை [டைய	காழிச்சீராமவிண்ணகரே சேர்மின் நீரே.	(அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (பட்டித்யாதி) பட்டையுடைத்தாய், அரவுபோலேயாய், அழகிதாய், அகன்றிருந்துள்ள - நிதம்பப்ரதேச த்தையுடையளுமாய், பவளம்போலே சிவந்த அதரத்தையுடையளு மாய், மூங்கில்போலே நெடிய தோள்களையுடையளுமாய், மான்போ லேயிருந்துள்ள நோக்கையுமுடையளாய், பாலென்றுசொல்லலாம் படி இனிய பேச்சையுமுடையளாயிருந்துள்ள, மதுவெள்ளமிடா நின்றுள்ள குழலையுடைய ஶ்ரீ ஸத்யபாமைப்பிராட்டிஹேதுவாக, என்றுமொக்க ஸ்வர்க்கத்திலே நிற்கக்கடவதான வ்ருக்ஷத்தை பூமி யிலே கொடுவந்து நிறுத்தினவனுடைய. இத்தால்-அரியனசெய்தும் ஆஶ்ரிதரக்ஷணம்பண்ணுமவனென்கை.

(அணிலித்யாதி) அணில்களானவை ஸ்வைரமாகத்தாவ, நெடிதான இலையையுடைத்தாய், கறுத்தநிறத்தையுடைத்தான கமுகு களில் சிவந்தகாயானது, தொட்டார்மேலே தோஷமாகவிழ, ஓங்கின பலாவின் தாழ்ந்தபணைகளிலே நெருங்கி வஸிப்பதாய், தசைந்துபக்வ மாய், †தொட்டார்மேலே தோஷமாயிருக்கிறபழமானது, தேங்கி

கிற்கிறதுக்கொருபோக்குக் கண்டுவிட்டாற்போலே மதுவெள்ளமிடாநிற்குமாயிற்று.... ... ...(அ)

அரு.—எட்டாம்பாட்டு. (பட்டித்யாதி). நீங்கள் நான் சொன்னபடி அநுகூலித்திகோளாகில், ஸ்ரீ ஸத்யபாமைப் பிராட்டியிடத்திற்போலே உங்களுக்கு வ்யாமுக்தனாய் அரியனசெய்து கொடுக்குமென்கிறாரென்றுஸங்கதி.

தெட்டபழம் - பக்வபலம், கனியப்பழுத்த பழமென்று தாத்பர்யம் (தொட்டார்மேலேயித்யாதி). ... ... (அ)

மூ.—பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
பிரமனைத்தன் னுந்தியிலே தோற்று வித்துக்
கறைதங்கு வேல்தடங்கண் திருவை மார்பில்
கலந்தவன் தாளணைகிற்பீர் கழுநீர் கூடித்
துறைதங்கு கமலத்துத் துயின்று கைதைத்
தோடாரும் பொதிசோற்றுச் சுண்ணம் நண்ணிச்
சிறைவண்டு களி பாடும் வயல்சூழ் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பிறைதங்குசடையானை	சந்த்ரனைத்தன் ஜடாமகுடத்தில் அணிந்தருத்ரனை	சிறைவண்டு	சிறகையுடையவண்டுகளானவை [ல்
வலத்தேவைத்து	வலவருகேவைத்து	கழுநீர்	செங்கழுநீர்ப்பூக்களி
பிரமனை	ப்ரஹ்மாவை [தில்	கூடி	சேர்ந்திருந்து (அத்தால்வந்தச்ரமமாறும்படி) [ண
தன் உந்தியிலே	தன்திருநாபீகமலத்	துறைதங்கு	துறையிலேயுண்டா
தோற்றுவித்து	உண்டாக்கி	கமலத்து	தாமரைப்பூக்களில்
கறைதங்கு	(சத்ருக்கள்)ருதிரமாம்ஸங்கள் தங்கிய	துயின்று	பள்ளிகொண்டு (பின்பு)
வேல்	வேல்போன்ற	கைதை ஆரும் தோடு	பெரியமடலையுடைய தாழம்பூவிலே
தடம்	விசாலமான [ய	பொதி	அதனுள்நிறைத்த
கண்	திருக்கண்களையுடை	சோறு	தாதுக்களின்
திருவை	பெரியபிராட்டியாரை [து	சுண்ணம்	பொடிகளில்
மார்பில்	தன்மார்பிலேவைத்	நண்ணி	விழுந்துபுரண்டு
கலந்தவன்	அவளோடேநித்யஸம்ஸ்லேஷம்பண்ணுமவனது	களி	(இவற்றாலுண்டான) ஸந்தோஷாதிசயத்தால்
தாள்	திருவடிகளை [ளே!	பாடும்	பாடாநின்றுள்ள
அணைகிற்பீர்	சேரவிரும்புமவர்க	வயல்சூழ்காழிச்சீராமவிண்ணகரே சேர்மின்நீரே. (௯)	

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பிறையித்யாதி) ஸாதகனுமாய், போகப்ரதானனுமாயிருக்கிற ருத்ரனைத் தன் திருமேனியில் வலவருகேவைத்து, ப்ரஹ்மாவைத் தன் திருநாபிகமலத்திலே உத்பாதித்து, †கறைகழுவ அவஸரமில்லாதபடியான வேல்போலேயிருக்கிற பரந்ததிருக்கண்களையுடைய பெரியபிராட்டியாரைத் †தன் திருமார்விலேசேர்த்து அவளோடே நித்யஸம்ஶ்லேஷம்பண்ணுகிறவன் திருவடிகளைக்கிட்டவேண்டியிருப்பீர்! அபிமாநிகளான ப்ரஹ்மருத்ராதிகளோடு, அநந்யபரையான பிராட்டியோடு வாசியறத் திருமேனியிலே யிடங்கொடுத்துக்கொண்டிருக்கிற சீலவானைப் பெறவேண்டியிருப்பீர்!

(கழுநீரித்யாதி) செங்கழுநீரிலேபோய்ப்புக்கு நித்யஸம்ஶ்லேஷத்தைப்பண்ணி, அத்தாலேவந்த ஶ்ரமமாறும்படி துறையிலேயுண்டான தாமரைப்பூவிலேபுகுந்து மதுபாநம்பண்ணிப் பள்ளிகொண்டு, அநந்தரம்†தாழையுடைய பெரியமடலையுடைத்தான பூவிலேபோய்ப்புக்கு, அதிலகவாயிலுண்டான தாதும் சுண்ணமும் பரிமளமுமெல்லாம் தன்னுடம்பிலேயாம்படி அதிலே கிடந்துபுரண்டு, சிறகையுடைத்தான வண்டுகளானவை மதுபாநத்தாலும் பரிமளத்தாலுமாகக் களித்துப்பாடாநின்றுள்ள. ... ... (௯)

அநு.—ஒன்பதாம்பாட்டு. (பிறையித்யாதி) ஸ்ரீ ஸத்யபாமைப்பிராட்டி அகிலக்ஷணையாகையாலே அவளிடத்தில் அரியன செய்தானேயாகிலும் நாங்கள் துர்மாநிகளன்றோ, எங்களுக்கு மவனரியன செய்யப்போமோவென்ன; அவனுடைய ஸௌசீலத்தையைப் பாரீகோள், திருவினிடத்தில் வ்யாமுக்தனுயுடம்பு கொடுத்தாற்போலே கந்தர் காபாலிகளுக்கு முடம்பு கொடுத்தான் கண்டீர்களென்கிறாரென்று ஸங்கதி.

(கறைகழுக அவஸரமில்லாதபடியான) என்றத்தாலே - ஆள்களைவெல்லுகையே ஸ்வபாவமா யிருக்கை பலிக்கையாலே, அநுக்ஷணம் எம்பெருமானை "ஜிதம்" என்னப்பண்ணவல்ல கண்களென்று தாத்பர்யம். "மார்பில்" என்றவநந்தரம் "சேர்த்து" என்று அத்யாஹாரம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (தன்திருமார்விலேயித்யாதி).

கைதை - அரும் - தோடு - பொதிசோறு என்றந்வயம் திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (தாழையுடையவித்யாதி). மடலிலேபொதிந்துகிடந்த சோறு - தாதுகள். ... ... (௯)

மூ.—செங்கமலத் தயனனைய மறையோர் காழிச்
சீராம விண்ணகரென் செங்கண் மாலை
அங்கமலத் தடவயல்சூ ழாலிநாட
னருள்மாரி யரட்டமுக்கி யடையார் சீயம்
கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கை வேந்தன்
கொற்றவேல் பரகாலன் கலியன் சொன்ன
சங்கமுகத் தமிழ்மாலை பத்தும் வல்லார்
தடங்கடல்சூ ழுலகுக்குத் தலைவர் தாமே. (௧0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
செங்கமலம்	அழகியதிருநாபீகமலத்தில்பிறந்த	அரட்டுஅமுக்கி	சத்ருக்கள் (தலையெடாதபடி) அமுங்கச்செய்யுமவராய்
அயன் அனைய	ப்ரஹ்மாவையொத்த		
மறையோர்	ப்ராஹ்மணர்வர்த்திக்கிற	அடையார்	சத்ருக்களுக்கு [ராய்
		சீயம்	ஸிம்ஹம் போன்றவ
காழிச்சீராமவிண்ணகர்	காழிச்சீராமவிண்ணகரில்நித்யவாஸம்பண்ணுநிற்கிற	கொங்கு	தேன்நிறைந்த
		மலர்	பூக்களை [ளுக்கு
		குழலியர்	கூந்தலிலுடையஸ்த்ரீக
என்	என்னுடைய	வேள்	காமன் போன்றவரா
செங்கண்மாலை	புண்டரீகாக்ஷன்விஷயமாக,	மங்கை	திருமங்கைக்கு [ய்
		வேந்தன்	ராஜாவாய்
அம்	அழகிய [றைந்த	பரகாலன்	எதிரிகளுக்கு யமன் போன்றவராய்
கமலம்	தாமரைப்பூக்கள்நி		
தடம்	தடாகங்களும்	கொற்றம்	வெற்றிதரத்தக்க
வயல்	கழனிகளும்	வேல்	வேலைப்பிடித்த
சூழ்	சுற்றுஞ்சூழ்ந்த	கலியன்	ஆழ்வார்
ஆலிநாடன்	திருவாலிநாட்டுக்குத் தலைவராய்	சொன்ன	அருளிச்செய்த
		சங்கம்	புலவர்கூட்டத்தார்
அருள்மாரி	அநுகூலர்க்கு அருள் பொழியும் மேகம் போன்றவராய்	முகம்	எதிர்கொண்டு அநுபவிக்கலாம்படியான

தமிழ்மாலை பத்தும்	தமிழ்த்தொடை பத்தையும்	உலகுக்கு	லோகத்தில்
வல்லார்	அர்த்தத்துடன்கற்க வல்லவர்	தலைவர்	எல்லாருந்தங்களையே ஆஶ்ரயிக்கும்படி மேலாயிருப்பர். ()
தடம்	பரந்த		
கடல்சூழ்	ஸமுத்ரம்சூழ்ந்த		

வ்யா.—பத்தாம்பாட்டு. (செங்கமலமித்யாதி)(௧)†"வால்மீகிர்பகவாந்ருஷி:-வால்மீகிர்பகவாந்ருஷி:" என்னுமாபோலே. †பெருமாளுக்கு வல்லபனாயிருப்பானொரு திருவிளக்குப்பிச்சன் பலரையும் திருமுன்பே க்ஷேபிக்கிற ப்ரகரணத்திலே, ஆழ்வார்களைத் திருவுள்ளமாய், "நம்பக்தர்களுக் கொருகுறை சொல்லிக்காணாய்" என்று திருவுள்ளமானாராய்; இப்பாட்டை விண்ணப்பம்செய்து, "நாயன்தே! தேவரைக்கவிபாட" என்றுதுடங்கி "தம்மைக் கவிபாடிக்கொண்டார்" என்ன; "அதுவும் †நம்மையன்றோசொல்லிற்று" என்று திருவுள்ளமானார். சதுர்முகஸமரான ப்ராஹ்மணர் திரண்டதேசத்தில் சீராம விண்ணகரிலே நித்யவாஸம்பண்ணுகிற புண்டரீகாக்ஷனைக் கவிபாடிற்று; அழகியதாமரைகளாலே அலங்க்ருதமான தடாகங்களையுடைத்தான வயலாலேசூழப்பட்ட திருவாலிநாட்டுக்கு ப்ரதாநரானவர்; அநுகூலவர்க்கத்துக்கு ஸர்வஸ்வதாநம்பண்ணுமவர்; எதிரிட்ட சத்ருக்கள் தலையெடாதே அமுங்கும்படிபண்ணுமவர்; சத்ருக்களுக்கு வந்தணுகவொண்ணாதபடி ஸிம்ஹம்போலே அநபிபவநீயரானவர்; †எல்லார்க்கும் ஸ்ப்ருஹணீயரானவர்; திருமங்கைக்கு ப்ரதாநராயுள்ளவர்; ஸர்வேஶ்வரன் ஆயுதம்பிடித்தாற்போலே ஆஶ்ரிதரக்ஷணத்துக்காகப் பிடித்தவேலையுடையராய், †ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவான ஆழ்வாரருளிச்செய்த; தமிழுக்குக்கடவார் திரளவிருந்தால் இத்தையே யெப்போதுமொக்கக் கொண்டாடவேண்டும்படியிருக்கிற இத்தொடையல்பத்தும்வல்லார். (தடங்கடல்சூழுலகுக்குத் தலைவர்தாமே) ஸர்வேஶ்வரனைப்போலே எல்லார்க்கும் தாங்களே ஆஶ்ரயணீயராவர். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

---

(௧) ரா - பா - ௪ - ௧.

அநு.—நிகமம். (செங்கமலமித்யாதி) எம்பெருமானைக் கவிபாடுகிறவர் தம்மைத்தாமேகொண்டாடுவானென்னென்ன; ஆப்திக்குடலாகக்கொண்டாடினரென்று விவக்ஷித்து, அதுக்கு த்ருஷ்டாந்தமுகத்தால் பரிஹரிக்கிறார் (வால்மீகிரித்யாதி). ஆப்திக்குடலான மாத்ரமன்றிக்கே அதுதானே பகவத்ஸ்துதியென்று பரிஹாராந்தரத்தை ஔசித்யமுகேந வருளிச்செய்கிறார் (பெருமாளுக்கித்யாதி). (நம்மையன்றேசொல்லிற்று) என்றது - நம்மநுபவத்தால்வந்த ஏற்றத்தால் தம்மைக்கொண்டாடினால் அதுநம்மைக் கொண்டாடினபடியன்றேவென்றபடி. "கொங்குமலர்க்குழலியர்வேள்" என்றதுக்கு-தேன் வெள்ளமிடுகிற மலரைக் குழலிலேயுடைய ஸ்த்ரீகளுக்குக் காமனைப்போலே அநுகூலர்க்கெல்லாம் ரூபகுணத்தாலும் த்ரஷ்டவ்யரென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (எல்லார்க்குமித்யாதி). அரட்டமுக்கி அடையார்சீயமாகையாலே பரகாலனென்று பேர்பெற்றாரென்னுமதுதோன்ற யோகார்த்தத்தைக்காட்டுகிறார் (ப்ரதிபக்ஷத்துக்கித்யாதி).... ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்தில் நாலாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி, ௩-ம் பத்து, ௫-ம் திருமொழி வந்துனதடியேன் ப்ரவேசம்.

வ்யா.—†எல்லாருந்தந்தாமுக்கு நன்மைவேண்டியிருக்கில் ஸர்வேஶ்வரன்பக்கலிலே ந்யஸ்தபரராய்க்கொண்டு ஸ்ரீராமவிண்ணகரையாஶ்ரயியுங்கோளென்றார், †அங்ஙனன்றிக்கே †தம்மளவில்வந்தவாறே திருவாலியை யிருப்பிடமாகக்கொண்டு அங்கே எழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரன்தானே ஸ்வயம்வரித்துக்கொண்டு வந்திருக்கிறபடியை யநுஸந்தித்து, "பரமப்ராப்யனாயிருக்கிற நீ என்பக்கலர்த்தித்வமின்றிக்கே யிருக்கச்செய்தே என்ஹ்ருதயத்திலே வந்து புகுந்தாய், எனக்குன்னையொழியச்செல்லாமையைப்பிறப்பித்தாய், உன்†வ்யதிரேகத்திலே நான் பிழையாதபடி பண்ணினாய், இங்ஙனேயிருந்தபின்பு †இனித்தான் நீபோகில் பிழையேன், போகவொட்டேன், உனக்கு என்றனை தயநீயரில்லை, ஆனபின்பு என்னை †நித்யகைங்கர்யத்தைக்கொண்டருளவேணும்" என்று ப்ராப்யனான அவன் திருவடிகளிலே கைங்கர்யத்தை †அபேக்ஷித்து; அப்போதே கிடையாமையாலே அதில் க்ரமப்ராப்தி பற்றாமையாலுண்டான தம் த்வரையை ஆவிஷ்கரித்தாராய்த் தலைக்கட்டுகிறார். ... ... *

அரு.—வந்துனதடியேன்ப்ரவேசம்.—கீழே பரோபதேசத்தில் ப்ரவ்ருத்தரானவர் இப்போது திருவாலியம்மானைக்குறித்துத் தம் த்வரையையறிவிப்பிக்கிறதென்னென்கிறசங்கையிலே ஸங்கதியை யருளிச்செய்கிறார்(எல்லாருமித்யாதி). (அங்ஙனன்றிக்கே) என்றது-தமக்குத்தாம் நன்மைதேடுகையும்,ஒருவருபதேசிக்க ஒரு திவ்யதேசத்தைப்பற்றியிருக்கையுமன்றிக்கேயென்றபடி. (தம்மளவில்வந்தவாறே) தம்மைத்தாமே விசாரித்தவாறே. "ஆருயிரே" என்றத்தைப்பற்ற, (வ்யதிரேகத்திலித்யாதி)."மனம்வாடநீநினையேல்"என்றத்தைப்பற்ற (இனித்தானித்யாதி). "கைதொழுதெழும்புந்தியேன்" என்றத்தைப்பற்ற (நித்யேத்யாதி) "இனிப்போயினாலறையோ உரையாயொருமாற்றமெந்தாய்" என்னுமத்தைப்பற்ற (அப்போதேயித்யாதி). ... ... *

மூ.—வந்துனதடியேன்மனம்புகுந்தாய்புகுந்ததற்பின்வணங்குமென்
சிந்தனைக்கினியாய் திருவேயென்னாருயிரே
அந்தளிரணியாரசோகினிளந்தளிர்கள்கலந்தவையெங்கும்
செந்தழல்புரையும் திருவாலியம்மானே. (க)

பதம்.	உரை.
அம்	அழகிய
தளிர்	தளிர்களால்வந்த
அணிஆர்	அழகுமிக்கிருக்கிற
அசோகின்	அசோகமரத்தினது
இளந்தளிர்களை	இளந்தளிர்களானவை
எங்கும்கலந்து	எங்குமொக்கவ்யாபித்து
செம்	சிவந்த
தழல்புரையும்	அக்நிபோலிருக்கிற
திருவாலியம்மானே	திருவாலியையிருப்பிடமாகவுடையவனே !
திருவே	எனக்குஸம்பத்தானவனே !

பதம்.	உரை,
என் ஆர்உயிரே	எனக்குதாரகனானவனே !
வந்து	நானிருந்தவிடம்வந்து
உனது அடியேன்	உன்னுடையசேஷபூதனனவென்னுடைய
மனம்	நெஞ்சில்
புகுந்தாய்	ப்ரவேசித்தாய் ;
புகுந்ததற்பின்	நீபுகுந்தபின்பு
வணங்கும்	ஆஸ்ரயிக்கிற
என்சிந்தனைக்கு	என்மநஸ்ஸுக்கு
இனியாய்	போக்யனானாய்.

(க)

வ்யா.—முதற்பாட்டு. † (வந்து) நிரதிசயபோக்யமான திருவாலியை இருப்பிடமாகவுடையையாய், நீயிருந்தவிடத்திலே நானே வந்து கிட்டவேண்டியிருக்க என்பக்கல் அபேக்ஷாமாத்ரமுமின்றிக்கேயிருக்கச்செய்தே, நானிருந்தவிடத்திலே நீயேவந்து. † த்வீபாந்தர சரக்குக்களிரண்டும் தன்னிலே ஸங்கதமாமிடத்தில் இரண்டும் பாதி பாதிவழிவந்துகூடுதல், ஒன்றேவருதல் செய்யவேணுமிறே, † அதில் இவருடையபேற்றுக்கு இவ்வளவாக வழிவந்தானிவனாயிற்று. (உனதடியேன்) † வருகிறபோது புகுருகைக்கடியாக அவன் கையோடு கொடுவந்த ப்ரமாணம். (க) "அடியானிவனென்றெனக்காரருள்செய்யும்" என்னுமாபோலே-† நீயோ உன்கார்யத்துக்குக்கடவாய்? நான் காண் என்று, தானே ஸர்வபரங்களையும் நிர்வஹிப்பானாகவாயிற்று ஏறிட்டுக்கொண்டு புகுந்தது, † வந்துபுகுரப்புக்கால், இசையாதே, "அல்லேன்" என்கைக்கு வாய்த்தலையான நெஞ்சிலேவந்து புகுந்தானாயிற்று. † அவன் புகுந்தபின்பு இவர்செய்ததென்னென்னில்; (வணங்கும்) † சத்ருக்ருஹமேயாகிலும், புகுந்தால் ஆஸநமிடுவர்களிறே; அவ்வோபாதி, பின்னை வணங்கினாராயிற்று. (உ) "𑌯𑌥𑌾𑌰𑍍𑌹𑌂 𑌕𑍇𑌶𑌵𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑌵𑌶𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍇𑌦𑌿𑌰𑍇 - யதார்ஹம் கேசவே வ்ருத்திமவசா:ப்ரதிபேதிரே" என்னுமாபோலே. (என்சிந்தனைக்கினியாய்) † இப்படிபுகுந்தவன் தானே, "போவேன்" என்றாலும் விடவொண்ணாதபடியாயிற்று நெஞ்சுக்கினிமையானபடி. (திருவே) (௩) † "திருவுக்குந்திரு" என்கிற

(க) தி-வாய்-கூ-சா-கo. (உ) பார- (௩) எ-எ-க.

படியே இவருடைய ஸம்பத்தாயிற்று இவன். (என்னாருயிரே) ஸம்பத்துத்தானாய் தாரகம் வேறொன்றாயிருக்கையன்றிக்கே, எனக்கு தாரகனானவனே! வ்யதிரேகத்தில் பிழையாதபடியாயிராநின்றானாயிற்று.

(அந்தளிரித்யாதி) எனக்கு தாரகனுமாய் நிரதிசயபோக்யனுமான நீ திருவாலியை யிருப்பிடமாகவுடையையாய்வைத்து, தனக்கென்ன ஓரிடமில்லாதாரைப்போலே, என்னுடைய ஹ்ருதயத்திலே வந்து புகுந்தாயே! †அழகிய தளிர்களாலேவந்த அழகு மிக்கிருக்கிற அசோகவ்ருக்ஷத்தினுடைய இளந்தளிரானவை எங்குமொக்கப் பரப்புமாறி அக்நிகல்பமாயிராநின்றதாயிற்று. † சிவந்த இளந்தளிர் எங்குமொக்கப் பரப்புமாறித் தளிர்த்துநின்றபோது, எங்குமொக்க நெருப்புக்கொளுத்தினாற்போலே தர்சநீயமாயிராநின்றதாயிற்று. இப்படி அந்யதாஜ்ஞாநஜநகமானதேசத்தை யிருப்பிடமாகவுடைய ஸர்வேஶ்வரனா யிருந்துவைத்து என் ஹ்ருதயத்திலே புகுந்திருந்தாயே!. ... ...(௧)

முதற்பாட்டு.—(வந்தித்யாதி) "அந்தளிர்" இத்யாதி "அணியாலியம்மானே வந்து" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி, வருகைக்கொருஹேதுசொல்லாமையால் பலித்தவர்த்தத்தை யருளிச்செய்கிறார் (நிரதிசயேத்யாதி). "அபேக்ஷாமாத்ரமுமின்றிக்கே" என்றத்தை விவரியாநின்றுகொண்டு "புகுந்தாய்" என்னவமைந்திருக்கவும், "வந்து" என்கையாலே வருகையில் துஷ்கரதை தோற்றுகிறதென்று விவக்ஷித்து, திருவாலியம்மானுக்குத் தம்முடைய வைமுக்யத்தால் நெடுந்தூரமாய்த் தோற்றுமென்றும், இப்படியிருக்க வருகைக்கு ப்ரயோஜநத்தையும் காட்டிக்கொண்டு வ்யாக்யாதா ஈடுபடுகிறார் (த்வீபாந்தரேத்யாதி). (அதில்) என்றது - ஒன்றே வருமிடத்திலென்றபடி. "உனதடியேன்" என்று - இவர் ஸ்வரூபஞ்ஜாநம் பிறந்தவராகத் தம்மையநுஸந்திக்க, அபேக்ஷா நிரபேக்ஷமாக வந்தானென்னச் சேருமோவென்ன; வாஸ்தவாகாரத்தைப்பற்றி அவன் நினைத்தபடியை யருளிச்செய்கிறாரென்கிறார் (வருகிறவித்யாதி). "உனதடியேன்" என்ற ஆழ்வாருடைய பாசுரமானது ஸர்வேஶ்வரன் கையதான ப்ரணவார்த்தமாகையாலே அவன் கையிலோலையெழுத்தைத் தாம்கண்டு அர்த்ததஃ அநுஸந்தித்தாரித்தனையாகையால், இந்தப்பாசுரம் ப்ரமாணமென்று கருத்து. "அடியேன்" என்னவேயமைந்திருக்க, "உனது" என்கைக்குக் கருத்தருளிச்செய்கிறார் (நீயோவித்யாதி). "மனம்" என்றதுக்குக் கருத்து (வந்துபுகுரவித்யாதி). "புகுந்ததற்பின் வணங்கும்" என்கையாலே அவ்யவஹிதகாலத்திலே ஸ்வரூபஜ்ஞாந கார்யமான வணக்கமிவருக்குவர ஸம்பாவனையில்லையே என்று ஶ்ரோத்ரு சங்காநு

வாதம்பண்ணுகிறார் (அவனித்யாதி).இதுக்கு உத்தரம் (சத்ருவித்யாதி). "வண ங்கும்" என்கிற ப்ரதீகம் சங்கைக்குமுந்துற அநுஸந்திப்பது. இவர் அவசமாக வணங்கிறாராகிலும்அவன்சிந்தனைக்கினியனானபடியின் எல்லைநிலத்தைக்காட் டுகிறார் (இப்படியித்யாதி). "என்னாருயிரே" என்றவிடத்தில், "என்" என் றத்தை யிங்கும்கூட்டி, "என்திரு" என்று விவக்ஷித்து, ஸத்ருஷ்டாந்தமரு ளிச்செய்கிறார் (திருவுக்குமித்யாதி).

தாத்பர்யமருளிச்செய்து சப்தார்த்தமருளிச்செய்கிறார் (அழகியவித் யாதி). திருவாலிநகரை யிங்ஙன் வர்ணித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய் கிறார் (சிவந்தவித்யாதி வாக்யத்வயத்தாலே). ... ... (௧)

மூ.—நீலத்தடவரை மாமணிநிகழக் கிடந்ததுபோ லரவணை
வேலைத்தலைக் கிடந்தா யடியேன் மனத்திருந்தாய் [தெங்கு
சோலைத்தலைக் கணமாமயில் நடமாடமழைமுகில்போன்றெழுந்
மாலைப் புகை கமழு மணியாலியம்மானே. (உ)

பதம்.	உரை.
ஆலைப்புகை	கருப்பஞ்சாறட்டுப்
எங்கும்	எவ்விடத்தும் [கை
மழைமுகில்	வர்ஷாகாலமேகம்
போன்று	போலே
எழுந்து	மேலெழுவதினால்
கமழும்	பரிமளத்தையுடைத்தான
சோலைத்தலை	சோலையிலே [கள்
மாமயில்கணம்	பெரியமயில்கூட்டங்
நடமாட	ஆடாநின்றுள்ள
அணி	அழகிய
ஆலியம்மானே	திருவாலிநாட்டுக்குஸ்வாமியானவனே!
நீலம்	நீலநிறத்தையுடைய

பதம்.	உரை.
தடவரை	பெரியமலையானது
மாமணி	பெருவிலையனரத்நம்
	[ம்படி
நிகழ	தன்மேல்ப்ரகாசிக்கு
கிடந்ததுபோல்	சாயவிருந்ததுபோலே
வேலைத்தலை	திருப்பாற்கடலில்
அரவணை	திருவநந்தாழ்வான்மேலே(கௌஸ்துபம் விளங்க) [னே!
கிடந்தாய்	பள்ளிகொண்டவ
அடியேன்மனத்து	(இப்பொழுது) சேஷபூதனான என் ஹ்ருதயத்தில்
இருந்தாய்	புகுந்து நீங்காதபடி நின்றாய். (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (நீலமித்யாதி) ஒரு நீலகிரியானது தன்மேலே பெருவிலையனாயிருப்பதொருரத்நம் உஜ்ஜ்வலமாம்படி சாய்ந்தாற்போலேயாயிற்றுத் திருவநந்தாழ்வான்மேலே திருப்பாற் கடலிலே அழகிய திருமேனியிலே ஸ்ரீகௌஸ்துபம்விளங்கக் கண் வளர்ந்தருளும்படி.(அடியேன் மனத்திருந்தாய்)† திருப்பாற்கடலிலே சாய்ந்தருளிற்று இவர் நெஞ்சிலே புகுருகைக்கு, விலக்காமைக்கு அவஸரம் பெறுமளவுமாயிற்று; விலக்காமைபெற்று இவர் ஹ்ரு தயத்திலே புகுந்தபின்பு க்ருதக்ருத்யனாயிருந்தானாயிற்று.

(சோலையித்யாதி) சோலைத்தலையிலே பெரிய மயில்திரளானது நடமாடும்படியாக வர்ஷாகவலாஹகம்போலேதோன்றி எங்குமொக்க ஆலைப்புகை கமழுமாயிற்று. மழைமுகில்போலேயெழுகிற ஆலைப்புகையைக்கண்டு சோலைத்தலை கணமாமயில் நடமாடாநிற்குமாயிற்று. இப்படி விபரீதஜ்ஞாந ஜநகமானதேசத்தை யிருப்பிடமாகவுடையையாயிருந்துவைத்து, என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்திருந்தாயே!. ... ... (உ)

அந —இரண்டாம்பாட்டு. (நீலமித்யாதி). கீழ்ப்பாட்டில் மனம்புகுந்தபடியை யருளிச்செய்தார்; இதில் - ஸூஸ்த்திரனாய் மனத்திருந்தபடியை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

இப்போது திருப்பாற்கடலில் கிடக்கையைச் சொல்லுகைக்குத்தாத்பர்யகதநபூர்வகமாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவித்யாதி). ... (உ)

மூ.--நென்னல்போய்வருமென்றென்றெண்ணியிராமையென்மனத்தேபுகுந்த
இம்மைக்கென்றிருந்தேனெறிநீர்வளம்செறுவில்
செந்நெற்கூழைவரம்பொரீஇயரிவார் முகத்தெழுவாளைபோய்க்கரும்
பன்னல்காடணையு மணியாலியம்மானே. (ந)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எறி	அலைவீசாநின்றுள்ள	அன்னல்	செடிமிக்க
நீர்வளம்	நீர்வளப்பத்தையுடைய	கரும்புக்காடு	கருப்பங்காட்டை
செறுவில்	வயல்களிலுண்டான	அடையும்	சேருகிற
		அணியாலியம்மானே !	
செந்நெற்கூழை	வயிரம்பற்றியசெந்நெற்பயிரை	நென்னல்போய்	நேற்றுப்போய்
		வரும்	நாளைவரும்
வரம்புஒரீஇ	வரப்புகளில்அதின்தலைகளைச்சேர்த்து	என்றென்றுஎண்ணி	என்றுஇப்படியேமநோரதித்து
அரிவார்	அறுக்கிறவர்களுடைய	இராமை	இராதபடி
முகத்து	முகத்திலே	என்மனத்தே	அடியேன்மனதில்
எழு	எழப்பாய்கிற	புகுந்தது	நீவந்திருந்தது
வாளை	வாளைமத்ஸ்யங்கள்	இம்மைக்கு என்றுஇருந்தேன்	இவ்வுலகில்எனக்குஇனிமைவிளைக்ைக்காகஎன்றிருந்தேன். (ந)
போய்	அவ்வயலைவிட்டுப்போய்		

வ்யா.—மூன்றாம்பாட்டு. (நென்னலித்யாதி) "நேற்றுப்போனான், இன்றுவரும்" என்றுகொண்டு† மாறாதே மநோரதித்துக்கொண்டிராதபடியாகவென்னுதல்; "நேற்றுப்போயிற்று, இன்றுவந்தது, நாளையும்வரக்கடவது" என்று மநோரதித்துக்கொண்டு காலம்செல்லவிடவரிதாம்படியிராமேயென்னுதல். (என்னித்யாதி) இப்படிமநோ

ரதத்தாலே நான் காலக்ஷேபம் பண்ணுதபடியாக, என்ஹ்ருதயத்தி லேவந்து புகுந்தது, இஹலோகத்திலே எனக்கினிமைவிளைக்கைக் காக என்றிருந்தேன். (இம்மை) என்றபோது, இஹலோகத்திலே யென்றுகிறது; (இன்மை) என்றபோது, இனிமை என்றுகிறது.

(எறிநீரித்யாதி) அலையெறியாநின்றுள்ள நீரையுடைத்தாய், †அழகியதாயிருந்துள்ள, செறுக்களுண்டு - செய்கள், அவற்றிலுண்டான, செந்நெற்கூழையென்று - செந்நெல்தலையாய், அத்தைவரம்பிலே †ஒருக்கிஅரிகிறவர்களென்னுதல்;(க)"பைங்கூழ்" என்கிறபடியே, கூழையென்றது - கூழென்றாய், செந்நெல்பயிராய், அத்தை அரிவாரென்னுதல். (வரம்பொரீஇ) நேர்கொடுநேர் சென்றிழிந்து அறுக்கவொண்ணுதபடி வயிரம்போலே யிருக்கையாலே வரம்புகளிலே தலைகளைக்கொடுபோந்து ஒதுக்கி, நுனியிலே அரிவர்களாயிற்று; அவர்கள் சேரப்பிடித்தபிடியிலே யகப்பட்ட வாளைகளானவை அவர்கள்முகத்திலே யெழப்பாய்ந்து ஸாபாயமான நிலத்தை விட்டு நிரபாயமாக வர்த்திக்கைக்காகஅருகேயுண்டான †செடிமிக்க கருப்பங்காட்டிலே சென்றடையாநிற்குமாயிற்று; போய், அரணைப் பற்றுமாயிற்று,-†அந்த அழகிய கருப்பங்காட்டிலேயடையும்....(௩)

அந.—மூன்றாம்பாட்டு. (நென்னலித்யாதி) கீழ்ப்பாட்டில் - "அடியேன் மனத்திருந்தாய்" என்றார்; அந்தமனத்திருந்தபடிதானும் அவிச்சிந்நமாகவிருந்தானென்றும், காலவிசேஷம் நெஞ்சில்படாதபடி நிரதிசய போக்யதை தோற்றவிருந்தானென்று மருளிச்செய்கிறார் என்று இரண்டுவிதமாக ஸங்கதி.

வீப்ஸாதாத்பர்யம் (மாறுதேயித்யாதி).

"கூழை" என்றது - கதிராகவும், பயிராகவும் அர்த்தத்வயம் திருவுள்ளம்பற்றி, கதிரறுக்கையும் எழுச்சி கொய்கையுமாக்கி க்ரமேணவருளிச் செய்கிறார் (அழகியதாயித்யாதி). (ஒருக்கி)என்றது - §உறுக்கி என்கை. அன்னல்பதத்துக்கர்த்தம் (செடிமிக்க) என்றது. அந்த நல் என்றர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (அந்தவித்யாதி). ... ... (௩)

மூ.—மின்னின்மன்னுநுடங்கிடைமடவார்தம் சிந்தைமறந்துவந்துநின்
மன்னுசேவடிக்கே மறவாமை வைத்தாயால் [ன்
புன்னைமன்னுசெருந்திவண்பொழில்வாயகன்பணைகள் கலந்தெ
மன்ன மன்னும்வய லணியாலியம்மானே. [ங்கு

(க) பெரு - திரு - ரு - எ. § உறுக்கி - சேர்த்து.

பதம்.	உரை.	பதம்.	உரை.
புன்னை	புன்னைமரங்களும்	மின்னில்மன்னு	மின்னேடொத்த
செருந்தி	ஸுரபுன்னைமரங்களும்	நுடங்கு	ஸூக்ஷ்மமான
மன்னு	நிறைந்திருக்கிற	இடை	இடையையுடைய
வண்	அழகிய	மடவார்தம்	ஸ்த்ரீகள்பக்கலுண்டான [து
பொழில்வாய்அகன்	சோலையின்உள்ளே	சிந்தைமறந்து	வாஞ்சையைத்தவிர்ந்
		வந்து	உன்பக்கலிலேவந்து
பணைகள்	பொய்கைகளில்	மன்னு	எப்போதும் ஏகரூபமான
அன்னம்	ஹம்ஸங்கள்		
எங்குங்கலந்து	எங்குமொக்க ஒன்ரோடொன்று சேர்ந்து [கிற	நின்	உன்னுடைய [யே
		சேவடிக்கே	அழகிய திருவடிகளை
		மறவாமை	நான்மறவாதபடி
மன்னும்	நித்யவாஸம் பண்ணு	வைத்தாய்	செய்தருளினாய் ;
வயல்	கழனிகளையுடைய	ஆல்	இதென்னஆஶ்சர்யம்!

அணிஆலி அம்மானே ! (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. நீரிங்ஙனேகிடந்து நெஞ்சுளுக்குப்படாநிற்கிறதென்னென்ன, †ஸ்த்ரீகளைவிஸ்மரித்து, உன்திருவடிகளைமறவாதபடி பண்ணினையாகில் இனி நீ செய்வதென்னென்கிறார்.

(மின்னித்யாதி) †மின்னேடொத்திருப்பதாய் நுடங்காநின்றுள்ள இடையையுடையரான, மடவாருண்டு - ஸ்த்ரீகள், அவர்கள் விஷயமாகவுண்டான. (சிந்தைமறந்து) †இவனெப்போதுமொக்க அவர்களை போக்யைகளாக அநுஸந்திக்குமித்தனைபோக்கி †அவைதன்னை இவன்தான் லபித்தானைகை †பெரும்பணியிறே.†அப்ராப்தவிஷயங்களிலுண்டான வாஞ்சையைத்தவிர்த்து ப்ராப்தவிஷயத்தையாசைப்படப்பண்ணின விதுதான் போருமிறே உபகாரம். அவற்றை நானே கைவிட்டு, உன் பக்கலிலேவந்து ஸதைகரூபமான உன் திருவடிகளிலே எனக்கு மறவாமையாகிற பேறுண்டாம்படியாக, †நானபேக்ஷிக்கவன்றிக்கே தண்ணீர்ப்பந்தல் வைப்பாரோபாதி நிர்ஹேதுகமாகச் செய்தருளினாய்.

புன்னை, செருந்தி இவை மன்னுகின்றுள்ள அழகிய †பொழிலினுள்ளே† பொய்கைகளிலே அன்னங்களானவை அந்யோந்யம் கலந்து நித்யவாஸம்பண்ணுகிற வயலையுடைத்தாய் தர்சநீயமான திருவாலியில் நிற்கிற ஸர்வேஶ்வரனே! ... ... (ச)

அரு.—நாலாம்பாட்டு, கீழ்ப்பாட்டுக்களோடு ஸங்கதியைத் தாமே காட்டுகிறார் (நீரித்யாதி). அர்த்தித்வாதிகளின்றிக்கே யிருக்க வந்துபுகுந்து ஸ்த்திரமாகவிருந்தாயென்று வெறுமைசொல்லி நிகர்ஷாநுஸந்தாநத்தால் நோவு

படுவானென் ? (க) "எனக்கார் பிறர் நாயகரே" என்று களித்துக்கொண்டு அநுபவித்திருக்கவொண்ணாதோ என்று சங்காதாத்பர்யம். உபகாராதிசயம் என்னை யிப்படி படுத்துகிறதென்கிறாரென்னும் பரிஹாரந்தன்னை யருளிச்செய்கிறார்" (ஸ்த்ரீகளையித்யாதி).

"மின்னின்" என்றவிடத்தில், இன் - சாரியையாய், மின்னை மன்னு - அதின் ஸாதர்ம்யத்தையுடைத்தான என்றுதல், மின்னில் என்று உபமார்த்தத்தில் பஞ்சமியாய், அத்தைப்போலேயிருக்கிற என்றுதல், சப்தார்த்தம் விவக்ஷித்து பலிதார்த்தமருளிச்செய்கிறார் (மின்னோடொத்திருப்பதாய்) என்று. கலவியையமறந்து என்னாதே, "சிந்தைமறந்து" என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (இவனித்யாதி). (அவைதன்னை) அந்தபோகங்கள்தன்னை, (பெரும்பணி) - துர்லபமென்று கருத்து. "அத்தைமறந்து" என்றும், "அடிமறவாமை" என்றும் சொன்னதுக்கு உட்கருத்தையருளிச்செய்கிறார் (அப்ராப்தேத்யாதி வ்வாக்யத்வயத்தாலே). "வைத்தாய்" என்ற பதவாஸனை (நானித்யாதி).

பொழில்வாய்-பொழிலிடமாய், அகன் - அதுக்குள்ளேயிருக்கிற, பணைகள் என்றுசப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (பொழிலினுள்ளே) என்று. "பணைகள்" என்றதினர்த்தம் (பொய்கைகளிலே) என்றது. (ச)

மூ.—நீடுபன்மலர்மாலையிட்டுநின்னிணையடிதொழுதேத்துமென்மனம்
வாடநீநினையேல் மரமெய்த மாமுனிவா
பாடலின்னொலிசங்கினோசைபரந்துபல்பணையால்மலிந்தெங்கும்
ஆடலோசையறா வணியாலியம்மானே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பாடல்	பகவத்கதைகளைப் பாடுகிற	இணை அடி	ஒன்றுக்கொன்றொப்பானதிருவடிகளில்
இன்	இனிய	பல்	பலவகைப்பட்ட
ஒலி	த்வநியும்	மலர்	புஷ்பங்களையும்
சங்கின் ஓசை	சங்கத்வநியும்	மாலை	கலம்பகன்மாலையையும்
பரந்து	எங்கும்பரவி	நீடு	நெடுங்காலம்
பல்பணையால்	பலவகைப்பட்டவாத்யகோஷங்களால்	இட்டு	பணிமாறி
மலிந்து	மிக்கு	தொழுது	ஸேவித்து
எங்கும்	பார்த்தவிடமெங்கும்	ஏத்தும்	ஸ்தோத்ரம்பண்ணுகிற
ஆடல் ஓசை	ந்ருத்தம்பண்ணும்த்வநி	என்	அடியேனுடைய
அறா	மாறாத	மனம்	மநஸ்ஸு
அணியாலி அம்மானே!		வாட	(உன்னைப்பிரிந்துதளிர்போலே)வாடும்படி
மரம்	மராமரங்களேழையும்		
எய்த	ஒருகாலேவிழும்படிஎய்த	நீ	ஆஶ்ரிதவத்ஸலனான நீ
மாமுனிவா	மநநசீலனே!	நினையேல்	நினையாதொழியவேணும்.
நின்	உன்னுடைய		(ரு)

(க) தி - வாய் - ௬ - ௪ - ௧௦.

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (நீடித்யாதி) (க) †"ஒழிவில் காலமெல்லாம்" (உ) "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" †என்கிறபடியே, பலவகைப்பட்ட மலரை யுடைத்தான மாலைகளை யிட்டு, உன்னுடைய ஒன்றுக்கொன்று ஒப்பாயிருக்கிற திருவடிகளைத்தொழுதேத்துகிற என்னுடைய மநஸ்ஸானது தளிர்போலே வாடும்படியாக நீ நினையாதொழியவேணும். (மரமெய்த மாமுனிவா) †ஆஶ்ரிதர்க்கு விஶ்வாஸத்தைப்பண்ணிக்கொடுக்குமவனன்றோ! (மாமுனிவா) †எங்களுடைய நினைவுபோலே தப்பிலும்தப்பி பலி(ஃலி)க்கிலும்பலி(ஃலி)க்கும்படியன்றிறே உன்னினைவிருக்கும்படி.

பாட்டிலினியத்வநி, மற்றுமுண்டான சங்கத்வநி, இவைபரம்பி, பின்னையும் பலவகைப்பட்டிருந்துள்ள வாத்யகோஷங்களும் மிக்கு, பார்த்தவிடமெங்கும் ஆடுகிறவர்களுடைய த்வநிமாறாத. பணை - முரசும், †பல்லியமும். ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (நீடித்யாதி) கீழ்ப்பாட்டில் - அவன்செய்த மஹோபகாரத்தைச்சொல்லுகைக்காக, விஷயாந்தரங்களை மறக்கும்படிபண்ணினாய் என்றார்; அந்தப்ரஸங்கத்திலே, அவை வாஸநாபலத்தாலே மறுவலிடில் செய்வதென் என்று அஞ்சி, "மனம்வாடநினையேல், நினைத்தாயாகில் பிழையேன்" என்று ப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கதி.

நீட்சி - காலக்ருதமான நீட்சியாய், அதுதானும் "இட்டு" என்றதுக்கு விசேஷணமென்று ப்ரமாணம்காட்டுகிறார் (ஒழிவிலித்யாதி). (என்கிறபடியே) என்றபின், காலமெல்லாம் என்றுசேஷம். மரமெய்த, மா - மஹத்தான, மஹத்தையுடையவனே என்று சப்தார்த்தமாய், பலிதார்த்தமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதர்க்கித்யாதி). மஹத்வத்தை விவரிக்கிறார் (எங்களுடைய வித்யாதி).

(பல்லியம்) என்றதும் - வாத்யவிசேஷம். ... ... (௫)

மூ.—கந்தமாமலரெட்டுமிட்டுநின்காமர்சேவடிகைதொழுதெழும்
புந்தியேன்மனத்தே புகுந்தாயைப்போகலொட்டேன்
சந்திவேள்விசடங்குநான்மறையோதியோதுவித்தாதியாய்வரும்
அந்தணாளரறா வணியாலியம்மானே. ... ... (௬)

(க) தி - வாய் - ௩ - ௩ - க. உ) தி - வாய் ௭ - ௭ - அ.

பதம்.	உரை.
சந்தி	ஸந்த்யாவந்தநாதிகளையும்
வேள்வி	(நைமித்திக) யாகாதிகளையும்
சடங்கு	காம்யகர்மங்களையும்
நால்மறை	நாலுவகைப்பட்டவேதங்களையும்
ஆதியாய்	ஸ்ருஷ்டி துடங்கி
ஓதி	முன்புள்ளவர்களிடத்தில்கற்றும்
ஓதுவித்துவரும்	பிறர்க்குக்கற்பித்தும் போருகிற
அந்தணர்	ப்ராஹ்மணர்
அரு	மாருதேவர்த்திக்கிற
அணிஆலிஅம்மானே !	
கந்தம்	பரிமளப்ரசுரமாய்
மா	ஸ்லாக்யமான
எட்டுமலரும்	எண்பகர்பூக்களையும்
நின்	உன்னுடைய
காமர்	அழகிய
சேவடி	சிவந்ததிருவடிகளில்
இட்டு	ஸமர்ப்பித்து
கைதொழுது	கையாலேதொழுது
எழும்	எத்தவேணுமென்கிற
புந்தியேன்மனத்து	அத்யவஸாயத்தையுடையஎன்நெஞ்சில்
புகுந்தாயை	(உன்பேருகவந்து) புகுந்தவுன்னை
போகலொட்டேன்	இனிநான்போகவொட்டேன். (௬)

வ்யா.—ஆறும்பாட்டு.(கந்தமித்யாதி) கந்த(𑌗𑌨𑍍𑌧)வத்தான விலக்ஷணபுஷ்பங்களெட்டையுமிட்டு. அவையாவன - கருமுகை, கற்பகம், நாழல்,மந்தாரம்,ஸௌகந்தி,செங்கழுநீர்,தாமரை, கைதை.†ஸ்வாபதேசம்.†பரமபோக்யமானதிருமந்த்ரத்தாலேப்ரதிபாத்ய:மானவஸ்துவின்பக்கலிலே தன்னை ஸமர்ப்பித்து;(க) †"𑌸𑌰𑍍𑌵𑌗𑌨𑍍𑌧𑌃 - ஸர்வகந்த:" என்கிற வஸ்துவாகையாலே,†உன்னுடையஸ்ப்ருஹணீயமான சிவந்த திருவடிகளைக் கையாலேதொழுது உஜ்ஜீவிக்கவேணுமென்னும் அத்யவஸாயத்தையுடைய வென்னுடைய ஹ்ருதயத்திலே. (புகுந்தாயைப்போகலொட்டேன்) †நானுன்னையபேக்ஷியாதிருக்க நீயேவந்து புகுந்தபின்பு, இனிப்போகலொட்டேன், † நினைவின்றிக்கேயிருக்க வந்த ஸம்பத்தைத் தள்ளுவாருண்டோ?

(சந்தியித்யாதி) நித்யகர்மம், நைமித்திககர்மம், சடங்கு-காம்யகர்மம், நான்மறை - இவற்றினுடைய அநுஷ்ட்டாநப்ரகாரங்களை விதியாநின்றுள்ள நாலுவகைப்பட்டவேதம், இவற்றை முன்புள்ளவர்களோடே தாங்களோதி, பின்புள்ளாரைத் தாங்களோதுவித்து, இப்படி பழையராய்ப்போருகிற ப்ராஹ்மணர் மாருத திருவாலியிலே, அவர்களுக்காஸ்ரயணீயனாய்க்கொண்டு நிற்கிற ஸர்வேஸ்வரனே! அவர்களுமுண்டாயிருக்க நீயேவந்து என் ஹ்ருதயத்திலே புகுந்த பின்பு இனிப் போகலொட்டேன். ... ... (௬)

(க) சாந்தோ - ௩ - ௧௪.

அரு.—ஆரும்பாட்டு. (கந்தமித்யாதி) "என்மனம்வாட நீ நினையேல்" என்று - நம்மைவிட்டு விஷயாந்தர பரராய்ப்போகாமல், நினைப்பிடச்சொன்னீர், நானும்மைப் பெறுகைக்காகவந்து புகுந்திருக்க அதுக்கு ப்ரஸக்திதானுண்டோ! நீர்தானே வாஸநாபலத்தாலே நம்மைவிட்டுமீண்டுபோக நினைத்தீராகில் நாம்செய்வதென் என்னும் சங்கையிலே, நானென்னையுனக்காக்கித்ருடாத்யவஸாய நிஷ்ட்டனாயிருக்கும்படி நீவந்தபின்பு நான் போகவொட்டுவேனோவென்கிறாரென்று ஸங்கதி.

"பன்மலர்மாலையிட்டு" என்று கீழ்ச்சொன்னவர், இப்பாட்டில், "எட்டு" என்று ஒரு ஸங்க்யாவிசேஷம் சொல்லுகைக்கு ப்ரயோஜநமென்னென்னவருளிச்செய்கிறார் (ஸ்வாபதேசம்) என்று. அத்தையருளிச்செய்கிறார் (பரமேத்யாதி). இத்தால் - பரிமள ப்ரசுரமானமலர்போலே ஓரோவெழுத்தே பரமபோக்யமாயிருக்கிற திருவெட்டெழுத்தாலே தத்ப்ரதிபாத்யவஸ்துவில் தன்னை ஸமர்ப்பிக்கை த்வநிக்கைக்காகச் சொன்னாரென்றதாயிற்று. எட்டெழுத்துக்குப் பரிமளப்ரசுரபுஷ்பஸாம்யம் வருகைக்கு மூலமென்னென்ன வருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதி). "நின்" இத்யாதிக்கு சப்தார்த்தம் (உன்னுடையவித்யாதி). "கைதொழுதெழும்புந்தி" என்னும்படி அத்யவஸாய நிஷ்ட்டையுண்டானபின்போ அவன்புகுந்ததென்ன வருளிச்செய்கிறார் (நானுன்னையித்யாதி). மனத்தேபுகுருகையாவது-நெஞ்சுக்கு விஷயமாகையாலே, இவருக்கு அத்யவஸாயம் பிறந்தபின்பு அவன்புகுகையென்றொன்றில்லாமையால், முதற்பாட்டில்சொன்னபடியே முன்னேபுகுந்தத்தை அருளிச்செய்தாரென்று கருத்து. "ஒட்டேன்" என்றதுக்கு உட்கருத்தையருளிச்செய்கிறார் (நினைவின்றிக்கேயித்யாதி).... ... ... (சு)

மூ.—உலவுதிரைக்கடல்பள்ளிகொண்டுவந் துன்னடியேன்மனம்புகுந்தஅப்
புலவபுண்ணியனேபுகுந்தாயைப்போகலொட்டேன் [ந்தஅப்
நிலவுமலர்ப்புன்னைநாழல்நீழல்தண்டாமரைமலரின்மிசைமலி
யலவன் கண்படுக்கு மணியாலியம்மானே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நிலவு	எப்போதும்மலராநின்றுள்ள [டைய	திரைஉலவு	திரைக்கிளப்பத்தையுடைய
மலர்	புஷ்பஸம்ருத்தியையு	கடல்	திருப்பாற்கடலில்
புன்னை	புன்னைமரம்	பள்ளிகொண்டு	கண்வளர்ந்தருளி
நாழல்	பலிநி (இவற்றின்)	உன் அடியேன்	(பின்பு) உனக்குச்சேஷபூதனான என்னுடைய
நீழல்	நிழலில்		
தண்	குளிர்ந்த		
தாமரைமலரின்மிசை	தாமரைமலரின்மேல் [ள்	மனம்	நெஞ்சில் [ந்த
மலிஅலவன்	பெரியஆண்நண்டுக	வந்துபுகுந்த	உன்பேராகவந்துபுகு
கண்படுக்கும்	பள்ளிகொள்ளுகிற	அப்புலவ	அந்தஸர்வஜ்ஞனானவனே! [னவனே!
அணிஆலிஅம்மானே		புண்ணியனே	எனக்குஸாக்ருதமா

புகுந்தாயை நிர்ஹேதுகமாகப்புகுந்த உன்னை	போகவொட்டேன் நான்போகவொட்டேன். (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (உலவித்யாதி) ஸஞ்சரியா நின்றுள்ள திரையையுடைத்தான திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளி; †அங்குச்சாய்ந்தருளிற்று, என்பக்கல் புகுருகைக்கு அவஸரம் பெறுமளவுமாய், பிறகு என்பக்கலிலே விலக்காததொரு அவகாசம் பெற்றவாறே, உனக்குப்புகுருகைக்கு யோக்யமாயிருக்கிற என்ஹ்ருதயத்திலேபுகுந்த. (அப்புலவ) விசேஷஜ்ஞனல்லையோ! அவஸரமறியாயோ புகுருகைக்கு. (புண்ணியனே) உன்னைப் பெறுகைக்கொரு கைம்முதலில்லாதபடியிருக்கிறவெனக்கு ஸுக்ருதமானவனே! (புகுந்தாயைப்போக வொட்டேன்). நீயேவந்து புகுந்த பின்பு, உன்னை நானினிப்போக வொட்டேன்.

(நிலவித்யாதி)நித்யமான மலரையுடைத்தாயிருக்கிற புன்னை,நாழல், இவற்றினுடைய நிழலிலே †பரந்த தாமரைமலரின் மேலே. (மலியலவன் கண்படுக்கும்) அப்பரப்புக்கெல்லாம் போரும்படி பெரிய வடிவையுடையஆண்நண்டானது, மற்றொரு †நியமத்தையறியாதே படுக்கைவாய்ப்பாலே கிடந்து உறங்காநிற்குமாயிற்று. வயலாலிமணவாளனுடைய வ்யாபாரத்தோடு அங்குண்டான திர்யக்குக்களுடைய வ்யாபாரத்தோடு வாசியற்றிருக்கிறதாயிற்று இவர்க்கு அந்நிலத்திலுள்ளவையாகையாலே, ... (௭)

அரு.—ஏழாம்பாட்டு. (உலவித்யாதி) நீர், "போகவொட்டேன்" என்றீர் - நான் நிர்ஹேதுகமாகப்புகுந்தவன், நானேபோகில் நீர்செய்வதென், நீர்என்ன பல(பல)ங்கொண்டு இங்ஙன்சொன்னது என்று இவர் நெஞ்சைச் சோதிக்கைக்காகச்சொல்ல; இரண்டாம்பாட்டிற்சொன்னபடியே திருப்பாற்கடலிலே என்னைப் பெறுகைக்காகவே கிடந்துவந்து நீபுகுந்த பல(பல)ங்கொண்டே "நான்போகவொட்டேன்" என்கிறாரென்று ஸங்கதி.

தாத்பர்யமருளிச்செய்கிறார் (அங்கித்யாதி).

"நாழல்" என்றது - பலிநீ என்கிற வ்ருக்ஷம். தண் - தட்பமாய், பெருமையைச்சொல்லுமென்றருளிச்செய்கிறார் (பரந்த) என்று. (நியமத்தை) ஸம்ஶ்லேஷத்தை. ... ... (௭)

மூ.—சங்கு தங்கு தடங்கடல் கடல்மல்லையுட்கிடந்தாயருள்புரிந்
திங்கென்னுள் புகுந்தா யினிப்போயினு லறையோ
கொங்குசெண்பகம்மல்லிகைமலர்புல்கியின்னிளவண்டுபோயிளந்
தெங்கின்தாதளையும் திருவாலியம்மானே. (அ)

பதம்.	உரை.
இன்னிளவண்டு	இனியஇளம்வண்டுகளானவை
கொங்கு	பரிமளம்மிகுந்த
செண்பகமலர்	செண்பகப்பூவையும்
மல்லிகைமலர்	மல்லிகைப்பூவையும்
புல்கி	(மதுபானத்துக்காகவிழிந்து) தழுவி (அவைகொதித்தவாறே)
இளந்தெங்கின்	இளம்தெங்கிலே
போய்	சென்றுபுக்கு
தாதுஅளையும்	அதின்தாதைஅளையாநின்றுள்ள
திருவாலியம்மானே !	
சங்கு	சங்கங்கள்
தங்கு	மாறாதேயிருப்பதான

பதம்.	உரை.
தடம்	பெரிய
கடலுள்	திருப்பாற்கடலிலும்
கடல்மல்லையுள்	திருக்கடல்மல்லையென்னும்திவ்யதேசத்திலும்
கிடந்தாய்	பள்ளிகொண்டருளினவனே !
இங்கு	இவ்விடத்திலே
என்னுள்	தாஸனானஎன்ஹ்ருதயத்தில்
அருள்புரிந்துபுகுந்தாய்	க்ருபைபண்ணிவந்துப்ரவேசித்தாய்;
இனிப்போயினால்	இனிநீயேவிட்டுப்பிரிந்துபோனாயாகில்
அறையோ	அறையோவறை(ஜயம்). (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (சங்கித்யாதி) சங்குமாறாதே யிருப்பதாய், பரப்பையுடைத்தான திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினாய்; அங்குநின்றும் ஆஶ்ரிதனுக்காகத் திருக்கடல்மல்லையிலே கண்வளர்ந்தருளினாய்; இவ்வோவிடங்களுனக்கு வாஸஸ்த்தானமாயிருக்க என் பக்கலிலே க்ருபைபண்ணி வந்து புகுந்தாய். (இனிப்போயினாலறையோ) உனக்கந்த க்ருபை மாறாதபடி யிருக்கையாலே, இனி நீ போனாயாகில், †அறையோவறை.†ஹேது மாறிலிறே அதின் கார்யமும் மாறுவது. †உன்னாலல்லதுசெல்லாதவென்னைவிட்டு நீயிருக்கவுமாய் போகவுமாயிருப்பார்நெஞ்சிலிருக்க †வொண்ணாது.

(கொங்கித்யாதி) பரிமளத்தையுடைத்தான செண்பகம், மல்லிகைமலர், இவற்றிலே மதுபானார்த்தமாக இழிந்தவண்டுகளானவை அவற்றோடே †தழுவி,அவை கொதித்தவாறே அந்தவெம்மையாற்றுகைக்காக, கோடையிலே நோவுபட்டவர்கள் சந்தந பங்கத்திலே கைவைத்துக்கொண்டு கிடக்குமா போலே, இளந்தெங்கிலே போய் அதின் தாதையளையும் திருவாலியம்மானே. ... ... (அ)

அ௩.—எட்டாம்பாட்டு. (சங்கித்யாதி). "போகலொட்டேன்" என்று சொன்னதைக்கேட்டு எம்பெருமான் "இவரப்போதுசொல்லும் சொலவு கேட்கவேணும்"என்றுபோக்கிலேயொருப்படவே, நீ ஸ்ரீபுண்டரீகர்க்காகத் திருப்பாற்கடலில்நின்றும்வந்து தரைக்கிடைகிடக்கிறுப்போலே என்னெஞ்சி லருளாலே புகுந்தாய், "இனிபோகிறோம்" என்று நீபோனுயாகில் நான் வென்றேன் ; என்னைவிட்டுப் பொறுக்கமாட்டாதே நீயேவருவாயென்கிறு ரென்று ஸங்கதி.

(அறையோவறை) என்றது-நீபோனுல் எனக்கே ஜயமென்று ஜயங்கூறி னபடி, போனுயில் போனவிடத்திலிருக்கமாட்டாமையாலே க்ருபை யாலேவருகை ஸித்தமாகையால், தாம் ஜயித்தமை ஸித்தம்; அவன்போகவே மாட்டானென்று கருத்து, அவன் க்ருபையாலே போகமாட்டாதவனுனல் நான்ஜயித்தேனென்னப்போமோ, இந்த உக்தியாலே அவன்போனுலோ வென்னவருளிச்செய்கிறுர்(ஹேதுவித்யாதி). இவர் எத்தனைவெற்றி தோற்றச் சொன்னுலும், (க) "விதிவாய்க்கின்று காப்பாரார்" என்கிறபடியே க்ருபை அவனைக் கால்கட்டுமென்று கருத்து. க்ருபை கால்கட்டப் போகமாட்டாமை யைக்கண்டு தாமவனைவென்றுராய், அவனை நியாம்யனுக்கி நியமித்தாரோ வென்ன; (உ) "பிறரொருவர் வன்னெஞ்சம்புக்கிருக்கவொட்டேன்" என் றுரென்று விவக்ஷித்து, அந்தப் பாசுரார்த்தத்தை யருளிச்செய்கிறுர் (உன்னு லித்யாதி). (ஒண்ணுது) என்ற வநந்தரம், என்றுரிறே என்றுசேஷம்.

"புல்லி" என்றதினர்த்தம் (தழுவி) என்றது. ... ... (அ)

௬.—ஓதியாயிரநாமமும்பணிந்தேத்தி நின்னடைந்தேற்கொருபொருள்
வேதியாவரையாவுரையா யொருமாற்றமெந்தாய்
நீதியாகியவேதமாமுனியாளர்தோற்றமுரைத்துமற்றவர்க்
காதியாயிருந்தா யணியாலியம்மானே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நீதியாகிய	நாட்டா ரநுஷ்டிக் கும்படியைவிதிக்கக் [கடவதான		அணியாலியம்மானே!
வேதம்	வேதம்	வேதியா	வேதமொன்றிஞலே யேஅறியத்தக்கவ னே!
மாமுனியாளர்	அவ்வேதத்துள்மந்த் ரரூபமானவற்றை க்காணவல்லரான மஹர்ஷிகளுடைய	அரையா	[னே! குறும்புறுத்தாள்பவ
		எந்தாய்	எனக்குஸ்வாமியான வனே!
தோற்றம்	உத்பத்தி, (ஆகியவிவ	ஆயிரநாமமும்	உன்ஸஹஸ்ரநாமங்க ளையுஞ்சொல்லி
உரைத்து	சொல்லி [ற்றை)	ஓதி	
மற்றவர்க்கு	மற்றெல்லார்க்கும்	பணிந்துஏத்தி	திருவடிகளில்விழுந் துஸ்தோத்ரம்பண் ணி
ஆதியாய்இருந் தாய்	காரணபூதனுயிருக்கி றவனே!		

(க) தி - வாய் - ௫ - ௧ - ௧. (உ) ௭ - ௨ - ௭.

பின் அடைந்தேன் உன்னைத்தஞ்சமாகப் பற்றினவெனக்கு	ஒருமாற்றம் உரையாய்
ஒருபொருள் அத்விதீயபுருஷார்த்த ஸாதநமான	ஒருவார்த்தை அருளிச்செய்யவேணும். (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (ஓதியித்யாதி) திருநாமங்களாயிரத்தையும் வாயாலே சொல்லித் திருவடிகளிலே விழுந்து ஸ்தோத்ரத்தைப்பண்ணி உன்னைக்கிட்டின வெனக்கு. (ஒருபொருள்)†"உனக்கென்னைப்பெறுகைக்கு ஸாதந மிதுவே" என்று ஓரர்த்தத்தைச் சொல்லவேணும். (வேதியா) வைதிகஸமதிகம்யனே! (அரையா) என்னை†வன்னியமறுத்து ஆளுகிறவனே! †எனக்கு ஸ்வாமியானவனே!ஒருவார்த்தையருளிச்செய்யவேணும்.(க) "ஸூசு:" "மாசுச:" என்று நானுஜ்ஜீவிக்கும்படி ஒருவார்த்தை யருளிச்செய்யவேணும்.

(நீதியித்யாதி)†நாட்டாரநுஷ்டிக்கும் படியை விதிக்கக்கடவ வேதம். (மாமுனியாளர் தோற்றம்) அதில் மந்த்ர ரூபமானவற்றைக்காணக்கடவராயிருக்கிற ருஷிகளுடைய உத்பத்தி, இவற்றைச் சொல்லி, எல்லார்க்கு மொக்ககாரணபூதனாயிருக்கிறவனே! †வேத சப்தத்தின்படியே பூர்வக்ரமத்திலே ஸ்ருஷ்டியாநிற்கிறவனென்னுதல். அதாகிறது, "பூ: (भूः)" என்று பூமியை ஸ்ருஷ்டித்து, இவ்வகைகளிலே அத்தைச்சொல்லி ஸ்ருஷ்டிக்கை. ... * (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (ஓதியித்யாதி). "இனிப்போயினாலறையோ" என்று தாம் வெற்றிதோற்றச்சொன்னவர் அவன் தம்மைவிட்டுப்போகாமலிருக்கச்செய்தேயும் தமக்குப்பிறந்த ப்ராப்யத்வரையாலே உபாயவிசேஷப்ரஶ்நம் பண்ணுகிறாரென்று ஸங்கதி.

திருநாமஸங்கீர்த்தநாதிகளையெல்லாம் அதிகாரி ஸ்வரூபத்திலே செலவெழுதி ஸித்தோபாயமவனென்றிருக்கச்செய்தேயும் அநுசடக்கென பலியாமையால், உன்வாயாலே, "நானே உபாயம்" என்றொருவார்த்தைசொல்லவேணுமென்று கேட்கிறாரென்றருளிச்செய்கிறார் (உனக்கித்யாதி). (வன்னியம்) குறும்பு. "எந்தாய்" என்றதினர்த்தம் (எனக்கித்யாதி).

(க) கீதை - க௮ - ௬௬ -

வேதமுரைக்கை - நேரே வேதஸ்ருஷ்டியாய், முனிகளுடைய தோற்றத்தையுரைக்கையாவது - ப்ரஹ்மாவுக்கு ஸ்ருஷ்டிக்கும் ப்ரகாரத்தைச் சொல்லுகையாய், அதுவும் பரம்பரயா முனிகளுக்கு ஸ்ருஷ்டியாமென்று தாத்பர்யம் திருவுள்ளம்பற்றி சப்தார்த்தம்காட்டுகிறார் (நாட்டாரித்யாதி). நீதியாகிய வேதமுரைத்து அவ்வழியால் மாமுனியாளர்தோற்றமென்ன, மற்றவரென்ன, இவை யெல்லாவற்றுக்கும் ஆதியானவனே என்று யோஜநாந்தரம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வேதேத்யாதி). ... (௯)

மூ.—புல்லிவண்டறையும்பொழில்புடைசூழ்தென்னாலியிருந்தமாயனைக்
கல்லின்மன்னுதிண்டோள்கலியனொலிசெய்த
நல்லவின்னிசைமாலைநாலுமோரைந்துமொன்றும்நவின்றுதாமுடன்
வல்லராயிருப்பார்க்கிடமாகும்வானுலகே. (க0)

திருமங்கை யாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வண்டு	வண்டுகளானவை	தோள்	தோளையுடைய
புல்லி	ஒன்றுக்கொன்றுஆலிங்கநம்பண்ணிக்கொண்டு	கலியன்	ஆழ்வார்
		ஒலிசெய்த	அருளிச்செய்த
		நல்ல	அழகிய
அறையும்	பாடாநின்றுள்ள	இன்இசை	இனியஇசையையுடைத்தான
பொழில்	சோலை		
புடைசூழ்	சுற்றுஞ்சூழ்ந்து	மாலைநாலும்ஓரைந்தும்ஒன்றும்	பத்துப்பாட்டையும்
தென்	அழகியதான		
ஆலி	திருவாலியென்னும்திவ்யதேசத்திலே	நவின்று	சொல்லி
இருந்த	எழுந்தருளியிருக்கிற	தாம்உடன்வல்லராய்உரைப்பார்க்கு	எப்போதும்அதினர்த்தாநுஸந்தாநம்பண்ணிக்கொண்டேயிருப்பார்க்கு
மாயனை	ஆஸ்சர்யபூதனானஸர்வேஸ்வரன்விஷயமாக		
கல்லின்	மலைபோலே		
திண்	த்ருடமாயும்	வானுலகே	பரமபதமே
மன்னு	நித்யமாயுமிருந்துள்ள	இடமாகும்	இருப்பிடமாகும். ()

வ்யா.—பத்தாம்பாட்டு. (புல்லியித்யாதி) வண்டுகளானவை தழுவி மதுபாநமத்தமாய்க்கொண்டு† அறையாநின்றுள்ளபொழிலைப் பர்யந்தத்திலே யுடைத்தான திருவாலியிலே எழுந்தருளியிருக்கிற ஆஸ்சர்யபூதனைக் கவிபாடிற்று. மலைபோலே திண்ணியதாய் † நித்ய

மாயிருந்துள்ள தோளேயுடைய ஆழ்வாரருளிச்செய்த நல்ல இன்னிசையான தொடை; இதிலுண்டான ஆதராதிசயத்தாலே விடமாட்டாமை பிரித்துப் பிரித்தருளிச்செய்கிறார். ... (௧0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (புல்லியித்யாதி) (அறையாநின்றுள்ள) - பாடாநின்றுள்ள. "மன்னு" என்றதினர்த்தம் (நித்யமாய்) என்றது; சிரகாலஸ்தாயியாயென்றபடி. "தாமுடன் - நவின்று வல்லராயுரைப்பார்க்கு" என்றதுக்கு - தங்கள்மனத்தோடேகூடக் கிட்டிச்சொல்ல வல்லார்க்கென்று சப்தார்த்தம் கண்டுகொள்வது. ... ... (௧0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்தில் ஐந்தாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி, ௩-ம் பத்து, ௬-ம் திருமொழி
தூவிரிய ப்ரவேசம்.

வ்யா.—†நஞ்சீயருடைய கோவிலே †பெற்றி அறிபப்புகுந்து, "இங்குத்தைக்கு வேண்டியிருக்கிறதென்?" என்றுங்கேட்க, "தூவிரிய மலருழக்கிப் பாட்டுக்கேட்கவும், பெருமாளெழுந்தருளப் பின்னும் முன்னும் சுற்றும்வந்து திருவடித்தொழவும் வேண்டியிராநின்றேன்" என்றருளிச்செய்தருளினார்; †அப்போதே வரந்தரும்பெருமாளரையரையழைத்துவிட்டுப் பாட்டுக்கேட்டருளாநிற்க, (௧) "மீறிய கொடிநெடுவேள் வலிசெய்ய மெலிவேனே" என்னுமளவிலே வந்தவாறே, "காமசரங்களாலே ஏவுண்பதுக்கு முன்பே வாராவிட்டால் பட்டபுண் பரிஹரிக்கவாகிலும் வந்தாலாகாதோ!" என்றருளிச்செய்தருளினார்.

(௨) †"வந்துனதடியேன்மனம் புகுந்தாய்" என்றும், (௩) "அடியேன் மனத்திருந்தாய்" என்றும், (௪) "என்மனத்தேபுகுந்ததின்மைக்கென்றிருந்தேன்" என்றும்மாநஸாநுபவமாத்ரயாய் நின்றது கீழ்த்திருமொழி; மாநஸாநுபவமானது முதிர்ந்து, அதுதான் ப்ரத்யக்ஷஸமாநாகாரமாய், அத்தை ப்ரத்யக்ஷஸமாநாகாரமென்றிருக்கையன்றிக்கே ப்ரத்யக்ஷமென்றே ப்ரதிபத்திபண்ணி, அநந்தரம் பாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷைபிறந்து, அதுதான் நினைத்தபடியநுபவிக்கக்கிடையாமையாலே ஆற்றாமை கரைபுரண்டு ஒருபிராட்டிதசையை ப்ராப்தராய், அவள்பேச்சாலே ஸ்வதசையைப்பேசுகிறார். (௫)†[యథాగ్నిసజ్జ్వాలనకమపదోషం ప్రజాయతే। సంశ్లిష్టం వాసుదేవేన మనుష్యాణాం తథా మనః-யதாக்நிஸங்காத்கநகமபதோஷம்ப்ரஜாயதே।ஸம்ஶ்லிஷ்டம் வாஸுதேவேந மநுஷ்யாணும் ததாமந:] பொன் நெருப்பிலேயிடவிட அழுக்கற்றுத் தன்னிறம்பெற்று சுத்தமாமாபோலே பகவத்விஷயத்திலே அவகாஹிக்க அபதோஷனும், பின்னை பிராட்டிமார்படியுண்டாகக் கடவதாயிற்று ஸகலாத்மாக்களுக்கும்†பிராட்டிமார் தசை பிறந்தபடிதானென்னென்னில்; அநந்யார்ஹஶேஷத்வ

(௧) ௩-௬-௪. (௩) ௩-௫-௨. (௫)
(௨) ௩-௫-௧. (௪) ௩-௫-௩.

மென்றொன்றுண்டு, அது இரண்டுதலைக்கு மொத்திருக்கும்; கலந்த போது ப்ரீதி பிறக்கையாலும், பிரிந்தபோது ஆற்றாமை பிறக்கையாலும், ததேகபோகத்தாலும், அவன் நிர்வாஹகனாக இத்தலை நிர்வாஹ்யமாகையாலும், ஸ்வயத்நத்தாலே பேறென்றிருக்கையன்றிக்கே அத்தலையாலே பேறென்றிருக்கையாலும், பிராட்டிமார்படியுண்டாகத் தட்டில்லை. † ஸர்வதா ஸாத்ருஶ்யம் சொல்லுகிறவிடங்களிலே வந்தால், தாமரைபோலே கண் கால் என்னுமத்தைத் தாமரைதானென்று தாமரையென்றே வ்யவஹரிக்குமிறே; (க) "ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி - நச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபி" என்று ஒக்கச் சொன்னாரிறே இளையபெருமாள்; இவ்வோ வழிகளால் பிராட்டிமார் தசையை ப்ராப்தராகத் தட்டில்லை.

†நாயகனோடே இயற்கையிலே கலந்து பிரிந்து பிரிவாற்றாமை நோவுபடுகிறாளொரு பிராட்டி, அவன் வருந்தனையும் பொறுத்திருக்க மாட்டாமையாலே தூதுவிடப் பார்த்து, அதுக்குத் தன் பரிகரத்தில் கால்நடை தந்து போகவல்லாரில்லாமையாலும், இனித்தான் சேதநாசேதநவிபாகமற இரக்கவேண்டும்படியான தசையையுடையளாயிருக்கையாலும், ராமாவதாரத்துக்குப்பின்பு திர்யக்குக்கள் போன கார்யம் தலைக்கட்டிவரக்கண்ட வாஸனையாலும், கண்ணால்கண்ட பக்ஷிகளையடையத் தூதுவிட்டு, தூதர்க்குச் சொல்லுகிற வார்த்தையாலே, தன் நெஞ்சுதான் புண்பட்டிருக்கிற ஸமயத்திலே அவன்றான் ஸந்நிஹிதனாய்க்கொண்டுவர, அவனுக்குத் தன்னிழவுகளைச்சொல்லித் தலைக்கட்டிற்றாய்ச் செல்லுகிறது. ... ... *

அரு.—தூவிரியப்ரவேசம்.—அதிகாரிகளுக்கெல்லா மித்திருமொழியில் மிகவுமாதரமுண்டாகைக்காக அபியுக்தாபிமதமென்னுமத்தை ஐதிஹ்யத்தாலே யருளிச்செய்கிறார் (நஞ்சீயரித்யாதி). (பெற்றி) நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலவர். ஆளவந்தார்க்கு (உ) *அறுக்கும்வினை அபிமதமானாற்போல் இவர்க்கு இது அபிமதம். திருமொழிகளெல்லாவற்றிலும் வைத்துக்கொண்டு இத்திருமொழி அபிமதமாகைக்கு நியாமகமென்னென்ன வருளிச்செய்கிறார் (அப்போதேயித்யாதி). தாம் நோவுபட்டது பின்தசையாகையாலே நோவுப்படுவதற்குமுன்பே யுதவவேணும், இதில்லாவிட்டால் நோவுபட்டபின்பாகிலும் உதவலாகாதோவென்னும் கருத்தாலே அபிமதமாயிற்றென்று கருத்து.

ஸங்கதிகாட்டுகிறார் (வந்தித்யாதி).

(க) ரா-அ-௫௩-௩க. (உ) தி-வாய்-கூ-அ.

பத்ததசையில் பிராட்டிமார்தசை பிறக்கக்கூடுமோவென்ன வருளிச் செய்கிறார் (யதேத்யாதி). அபதோஷனாய்த் தன்னிறம்பெற்றாலும் நித்ய ரோபாதி பேசலாமித்தனைபோக்கி, பிராட்டிமார் தசை பிறக்கக்கூடுமோவென்னும் சங்கையை யநுவதித்துப் பரிஹரிக்கிறார் (பிராட்டிமார்தசையித்யாதி). பிராட்டிமாரோட்டை ஸாதர்ம்யமுண்டானாலும் அவள்தானாகச் சொல்லுகை கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (ஸர்வதாவித்யாதி).

புத்திஸௌகர்யார்த்தம் திருமொழியில் ப்ரமேயத்தை உபந்யஸிக்கிறார் (நாயகனோடேயித்யாதி), ... *

மூ.—தூவிரிய மலருழக்கித் துணையோடும் பிரியாதே
பூவிரிய மதுநுகரும் பொறி வரிய சிறு வண்டே
தீவிரிய மறைவளர்க்கும் புகழாளர் திருவாலி
ஏவரி வெஞ்சிலையானுக்கென்னிலைமையுரையாயே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தூ	சிறகு	தீவிரிய	அக்நிவிஸ்த்ருதமாம்படி
விரிய	விரியும்படியாக	மறை	வைதிகமர்யாதையை
மலர்	கழியமலர்ந்தமலரை	வளர்க்கும்புகழ் ஆளர்	குறைவறநடத்துகையால்வந்தபுகழையுடையவர்களது
உழக்கி	மிதித்து	திருவாலி	திருவாலியிலேநித்யவாஸம்பண்ணுகிற
துணையோடும்	ஸஹசரத்தோடும்	ஏவரிவெஞ்சிலையானுக்கு	அம்பையும்அழகியவில்லையும்கையிலேந்தியஸர்வேஶ்வரனுக்கு
பிரியாதே	பிரியாமலே		
பூ	பூக்களானவை		
விரிய	விகஸிக்க		
மது	அவற்றிலுள்ளதேனை		
நுகரும்	பாநம்பண்ணுகிற		
பொறி	புள்ளிகளையும்		
வரிய	ரேகைகளையுமுடைய	என்நிலைமை	என்தசையை
சிறுவண்டே	சிறுத்தவண்டே!	உரையாய்	சொல்லவேணும். (௧)

வ்யா.—அதில் ஒருவண்டைக்குறித்துத் † தூதுவிடுகிறாள்-முதற்பாட்டில். †உனக்கு உன்கார்யம் குறையற்றிருந்தது, எனக்கென் கார்யம் குறைபட்டிருக்கிறபடி கண்டாயே! என்குறை தீர்க்கைக்காக வந்திருக்கிறவனுக்கு அறிவியாயோ என்கிறாள்.

(தூவிரிய மலருழக்கி) தூவிரிய - தூவிரியும்படியாக - சிறகு விரியும்படியாக, மலரையுழக்கி என்னுதல். அன்றிக்கே, தூய்தாக விரிந்த - கழியவலர்ந்த, மலரையுழக்கியென்னுதல். † பிரிவாலே பூக்காண விறாய்த்து ஒடுங்காநின்றாளிறேதான்; அவை ஸம்ஶ்லேஷத்தால்வந்த ஹர்ஷத்தாலே சிறகை விரியாநின்றனவாயிற்று.

(௧)†[నైషా పశ్యతి రాక్షస్యో నేమాన్ పుష్ప ఫలద్రుమాన్ । ఏకస్థహృదయా నూనం రామమేవానుపశ్యతి-நைஷா பஶ்யதி ராக்ஷஸ்யோ நேமாந்புஷ்பபலத்ருமாந் । ஏகஸ்த்தஹ்ருதயா நூநம் ராமமேவாநுபஶ்யதி] †ராக்ஷஸீதர்சநத்தோடு புஷ்ப பலத்ருமங்களினுடைய தர்சநத்தோடு வாசியற்றிருக்கிறதிறே இவளுக்கு. (௨) † [నగోత్తమం పుష్పితమాససాద - நகோத்தமம் புஷ்பிதமாஸஸாத] எரிகிற நெருப்பைச்சென்று கிட்டுவாரைப் போலே, ஓங்கிப்பரப்படங்கலும் புஷ்பமேயாய்க்கிடக்கை. [ఆససాద- ஆஸஸாத] தன் ஜீவநத்திலே நைராஶ்யம்விளைந்தமை தோற்றியிருக்கிறது. (மலருழக்கி) இவளுக்கு நெருப்பானபூ அவற்றுக்கு †அள்ளல் சேறுபட்டது படாநின்றது. † அல்லியும், தேனும், தாதும், சுண்ணமும் ஒன்றாக உழருகின்றதாயிற்று. † புஷ்பம் என்றால் கூசி அடியிடவேண்டாவே அவற்றுக்கு, (௩) "புன்னைமேலுறை பூங்குயில்காள்" என்னுமாபோலே. நெருப்பிலே அடியிட்டாற் போலே யிருக்குமிறே தனக்கு.

†நம்முடைய நெருப்பிலே யடியிடுகைக்குஹேதுவென்? என்று விசாரித்துப்பார்த்தாள்; அக்நிஸ்தம்பநமந்த்ரம் கையிலே யுண்டாயிருந்தது; அம்மந்த்ரந்தானிருக்கிறபடி - (துணையோடும்) இருவராயிருப்பார்க்குப் பூவும் பொறுக்குமாகாதே!†என்னைப்போலே தூது விடாதே கூடவர்த்திக்கப்பெறுவதே! (துணையோடும்) † தன்வாஸனையிருக்கிறபடி. துணையென்றால் ஒருதலை†கழுத்துக் கட்டியாய் ஒருதலை ரக்ஷகமாயேகாணுமிருப்பது, (௪) †" துணைபிரிந்தார் துயரமும் நினைகிலை" என்னக்கடவதிறே. † சிறியாத்தான், " துணையென்றால் த்விதீஷ்டமன்றுகாண், ஏகாஶ்ரயத்திலே கிடக்கும்" என்னுமாம். †உன்னைப் பிரிந்தார் என்னவேண்டும் ஸ்தாநத்திலே (௪) "துணை பிரிந்தார்" என்கிறதிறே இப்போதும் (துணை) என்கிறது - இங்கு சேவலை. (பிரியாதே) † இவ்வர்த்தம் முன்னம் ஓரிடத்திலே உண்டாகப் பெற்றோமே. † (தூவிரியமலருழக்கித்துணையோடும் பிரியாதே) இதென்ன நோயாசைதான். (௫) † [మయూరస్యవనే నూనం రక్షసాపహృతా ప్రియా - மயூரஸ்யவநே நூநம் ரக்ஷஸாபஹ்ருதா ப்ரியா] இந்த மயில்களிருந்தவிடத்தில் வந்திலளோ அப்பையல் என்கிறார். இருவ

(௧) ரா ஸு-௧௬-௨௫. (௩) தி - வாய்-௬-௧-௬. (௫) ரா-ஆர-௬-௧-௪௦.
(௨) ரா - ஸு-௧௮-௧௭. (௪) தி - வாய்-௧௦-௩-௪.

ராயிருப்பாரெல்லாரையும். தனியாக்கினு னென்றே யாயிற்று இருப்பது.

(தூவிரியமதுநுகரும்) செருக்கராயிருக்கும் ராஜபுத்ரர்கள் முசிந்தபடுக்கையைக் காற்கடைகொண்டு செவ்விப்படுக்கையிலே சென்றேறுமாபோலே, கழியவலர்ந்த பூவில் நின்றும் போய் செவ்விப்பூவிலே படிந்துகாணும் மதுபானம்பண்ணுகிறது; †இவற்றினுடைய ப்ரவேசமும் பூவலருகையுமொத்தாயிற்றிருப்பது.†தென்றலோபாதி ஆதித்யகிரணத்தோபாதி, காலத்தோபாதி, இவற்றின் † ஸந்நிதியும் பூவினுடைய விகாஸத்துக்குறுப்பாயிருக்கை. † க்ருதஸங்கேதராயிருப்பார் உள்ளேநின்று கதவைத்தொட்டவாறே திறக்குமாபோலே, இவற்றின் சிறகின் காற்றாலே அலரும்படியாயிருக்கை. (தூவிரிய) †இவற்றினுடைய வரவு, புஷ்பத்தினுடைய ஸங்கோசஹேதுவாகை யன்றிக்கே விகாஸஹேதுவாகாநின்றதாயிற்று. (மதுநுகரும்) (௧) †[నమాంసంరాఘవోభుఙ్క్తే నచాపిమధుసేవతే- நமாம்ஸம் ராகவோபுங்க்தே நசாபிமது ஸேவதே]உபவாஸக்ருசையாயிருக்கிற என்படிக்கு எதிர்த்தட்டாயிராநின்றதீஉன்படி!,அத்தைப்பழியிடுகிருள்.†ஒன்றுக்கொன்று ஸம்ஶ்லேஷார்த்தமாக பலா(బలా)தாநம்பண்ணுகிறபடி. (நுகரும்) †மதுபாநம்பண்ணிற்றாய் மீளுவதொருபோதில்லை; †தனக்குத்தான் மதுபாநம்பண்ணிலிறே மீளுவது. ஒன்றுக்கொன்று பரார்த்தமாகவிறே புஜிப்பது; †ஒன்றுக்காக †ஒருகலத்திலே யெடுக்குமாபோலே; மிடற்றுக்குக் கீழே இழியிலிறே தெகுட்டிமீளுவது.†இனித்தான் தேன்தாரகமாக விழிந்ததொன்றன்றே; † கூடவொன்றைத்தொட்டுக்கொண்டிருக்கைக்குக் † கைதொடுமானமாகக் கொண்டதொன்றன்றோ! என்னையுமிப்படி புஜிப்பித்து புஜித்தாலன்றோ உங்கள்போகத்துக்குச் † செலவுள்ளது. இராவுண்ணுதாரை யூட்டிஉண்ணவேண்டாவோ; இதென்ன குறையற்றுவர்த்திக்கைதான்!

(பொறிவரிய) †பொறியையும் வரியையுமுடைத்தானவண்டே! ஸம்ஶ்லேஷத்தால்வந்த புகரடங்கலும் வடிவிலே தொடைகொள்ளலாம்படியிருக்கை. †கடகராயிருப்பாருடைய †தேஹகுணத்தோடு ஆத்மகுணத்தோடு வாசியற உத்தேஶ்யமாகக்கடவதிறே.†சேர்ப்பார் பக்கல் ஜாத்யாவரும் தண்மை பார்க்கக்கடவதல்லவாயிற்று. (சிறு

---

(௧) ரா-ஸு-௩௬-௪௧.

வண்டே) †இவள்கார்யம்செய்கைக்கு முன்பேசிரமம் செய்திருப்பாரைப்போலே வடிவு சிறுத்திருந்ததாயிற்று. கார்யகாலத்தில்வந்தவாறே அணுத்வத்தை யேறிட்டுக்கொள்ளவேண்டாதே யிருக்கை. (௧) "ப்ருஷதம்சகமாத்ர:-ப்ருஷதம்சகமாத்ர:" என்று சிறுக்கினானிறே. (௨) "சசார நாநாவித வேஷதாரீ-சசார நாநாவித வேஷதாரீ" என்னவேண்டாவாயிற்று இவற்றுக்கு. (பொறிவரியவித்யாதி) (௩) "ப்ராசம்ஸத மஹாகபிம்- ப்ராசம்ஸத மஹாகபிம்" என்னுமாபோலே (௪) †"ஏத்தவேத்த †வெங்கெய்தும்" என்னும் நிலையிறே இவனது; † கடலைவற்ற இறைக்கக்கோலுவாரோபாதிகிடீரென்கிறார்.(௩)†[ததஸ்ஸா-ததஸ்ஸா] திருவடி ராமவ்ருத்தாந்தத்தைக் சொல்லக்கேட்டவநந்தரம் உளளானாள்.[ஹ்ரீமதீ-ஹ்ரீமதீ](௫) "ஸதிதர்மிணி தர்மாஸ்சிந்த்யந்தே-ஸதிதர்மிணி தர்மாஸ்சிந்த்யந்தே" இதி ந்யாயேந ஸத்தையுண்டாகா உண்டாமது உண்டாயிற்று. [பாலா-பாலா] ஹர்ஷம் பொறுக்கவொண்ணாதவளாயிற்று. [பர்த்துஸ்ஸந்தேசஹர்ஷிதா - பர்த்துஸ்ஸந்தேசஹர்ஷிதா] ரக்ஷகரானவவர் வார்த்தைகேட்டு ஹ்ருஷ்டையானாள். [பரிதுஷ்டா - பரிதுஷ்டா] அந்தஹர்ஷம் புறவெள்ளமிட்டபடி. [விசாலாக்ஷீப்ராசம்ஸத - விசாலாக்ஷீப்ராசம்ஸத] ஏத்தத்தொடங்கினாள். [மஹாகபிம்-மஹாகபிம்] கடலைவற்ற இறைக்கக் கோலுவாரைப்போலே.

† இப்படிசொன்னவாறே வண்டு லஜ்ஜித்து, "நீஏவிற்றுச்செய்ய விருக்கிற வெங்களைக்கிடந்து இங்ஙனே ஸ்தோத்ரம் பண்ணுகிறதென்? உன்னோடே கலந்துபிரிந்து உன்தசையைக்கண்டு மிரங்காதே போனவன் எங்கள் வார்த்தை கேட்குமோ? என்றன்றோ எங்களுக்கு விலம்பம்" என்றனவாகக்கொண்டு, மேல்வார்த்தை சொல்லுகிறாள். (தீவிரியவித்யாதி) நீங்கள் அது நினைக்கவேண்டா, அவ்வூரிலுள்ளார் தார்மிகராயாயிற்றிருப்பது, நீங்களொன்தசையை அங்கேயறிவிக்க அவனைப்புறப்படவிடுவர்கள்;- †"ஸ்த்ரீகாதுகனாயிருக்கிறவன்நடுவேயோ நாம் யஜிக்கிறது" என்று புறப்பட விடுவர்கள், அறிவிக்குமதுவே வேண்டுவதென்கிறாள். நொந்தாரை, "ஐயோ" என்னுமவர்களாய், யுக்தகாரிகளுடங்கலும் திரண்ட தேசங்காணுங்கோள்; புறப்படவிடுவர்கள்; புறப்படவிட்டால், பின்னை அவனுக்கு

(௧) ரா-ஸு-௨-௪௧. (௨) ரா-ஸு. (௩) ரா-ஸு.
(௪) தி-வாய்-௪-௩-௧0. (௫)

நானல்லது கதியில்லை. (தீவிரியவித்யாதி) அலர்ந்த தாமரைபோலே அக்லிஷ்டகர்மமாம்படி வைதிக மர்யாதையைக் குறைவற நடத்துகையால் வந்த புகழையுடையவர்களுடைய திருவாலியில்.

†குணவித்துக்கள் திரண்டவிடமாயிற்று; உங்கள் வடிவைக்காட்டி "ஸ்த்ரீகாதுகன் கிடிகோளிவன்" என்று பழிசொல்லிப்போருங்கோள் நீங்கள்; "நாங்கள் சென்றறிவித்தாலும், அவன்றான் வருவானானாலும், வழியிலே ப்ரபல ப்ரதிபந்தகங்களுண்டாகில் செய்யலாவதில்லையே!" என்ன; "அதுவேண்டாகாண் கையில் வில்லிருக்க" என்கிறாள். வரப்புக்கால் ப்ரதிபந்தகமொன்று கிடவாது அவனுக்கு. (ஏவரிவெஞ்சிலையானுக்கு) †ஆர்த்தத்வநி செவிப்படாமைக்கன்றோ கையிலே விற்பிடித்தது. ஆரேனையுமாகக்கையிலே விற்பிடித்தாரை யுத்தத்திலே மூட்டுமதாய், கட்டையுடைததாகையாலே வரிவரிப்பட்டு தர்சநீயமாய், பிடித்தபிடியிலே எதிரிகள் குடல் குழம்பும்படியான வில்லைக்கையிலே யுடையவனுக்கு. தூது போகிற எங்கள்படி சொன்னாய், நாங்கள்போயறிவிக்கிறவன்படி சொன்னாய், உன்வார்த்தையாக நாங்களவனுக்குச் சொல்லுவதென்னென்ன; (என்நிலைமை) பாசுரமில்லாததுக்கு என்னாலே பாசுரமிடப்போமோ! என் வடிவிருக்கிறபடிகண்டிகோளே; இனி நீங்களே பாசுரமிட்டுச் சொல்லுமித்தனை. தன்னிலும் தன்னைக்கண்டார்க்குப் பாசுரமிட்டுச் சொல்லலாமென்றிருக்கிறாள். ஒரு ஐந்த்ர வ்யாகரணபண்டிதனோபாதியாகக்காணு மிவள்தானித்தை நினைத்திருக்கிறது. (உரையாயே) †ஒருகந்தர்வன் துர்யோதநனைக் கட்டிக்கொண்டு போகாநிற்கச்செய்தே தர்மபுத்ரன் பேரைச்சொல்லிக் கூப்பிட, அவனைப் பின்னை ஆந்ருசம்ஸ்யத்தாலே மீட்டான் என்னாநின்றது; அங்ஙனன்றிக்கே, தன்னையாசைப்பட்டுப் பிரிந்திருந்து நோவுபடுகிறபடியைக் கேட்டால் உதவாத ஸ்வபாவனோ என்கிறாள். (உரையாயே) கொடுவரவேண்டா, அறிவிக்குமித்தனையிறே இத்தலைக்கு வேண்டுவது; வருகை அவன்பணியே; வாராதொழியுமன்று ரக்ஷகனுக்குக் குறையாமே. நீங்களறிவித்தவநந்தரம் உங்கள்பேச்சுக் கேட்டுத் தானே வாராநிற்கும். ... ... (க)

அரு.—முதற்பாட்டு. (தூவிரியவித்யாதி). (தூதுவிடுகிறாள்) என்றது - தூதவாக்யத்தை வாய்விடுகிறாளென்றபடி. பாட்டுக்கெல்லாம் தொகுத்த பாவமருளிச்செய்கிறார் (உனக்கித்யாதி).

"மலருழக்கி" என்னவமைந்திருக்கவும், "தூவிரிய" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (பிரிவாலேயித்யாதி). பிரிவாலே பூக்காண ஒடுங்கினவிடமெங்கேயென்னவருளிச்செய்கிறார் (நைவேஷத்யாதி). "ராக்ஷஸ்யஃ" என்கிற ப்ரதமை - த்விதீயார்த்தேயாக்கி அர்த்தமருளிச்செய்கிறார் (ராக்ஷஸீத்யாதி). "தூய்தாம்படி கழியவலர்ந்த" என்ற இரண்டாமர்த்தத்தில் இவளுக்கு அக்நிஸாத்ருஶ்யம் தோற்றிற்று என்று விவக்ஷித்து, அதுக்கு த்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார் (நகோத்தமமித்யாதி). (அள்ளல்சேறு) குளிர்ந்தசேறு, சந்தநபங்கமென்கை. ஏறி என்னாதே, உழக்கி என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அல்லியுமித்யாதி). தானும் * அலர்மேல் மங்கையன்றோ, இவற்றை "உழக்கி" என்கிறதென்னென்ன வருளிச்செய்கிறார் (புஷ்பமென்றாலித்யாதி).

மேலுக்கவதாரிகை (நம்முடையவித்யாதி) துணையோடிருக்கை மலருழக்குகைக்குறுப்பென்று தாத்பர்யமருளிச்செய்து, தூதுவிடுகைக்கு உபயுக்தமென்று தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (என்னைப்போலேயித்யாதி). சேவலோடென்னாதே, "துணை" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (தன்னித்யாதி).(கழுத்துக்கட்டி)ரக்ஷ்யம். நாயகனே துணையென்னுமதுக்கு ப்ரமாணம் (துணைபிரிந்தாரித்யாதி). துணை மாத்ராதிகளாகவொண்ணாதோ, நாயகனேயாகவேணுமோவென்ன வருளிச்செய்கிறார் (சிறியாத்தானித்யாதி). நாயகனே துணையென்னுமதுக்கு ஜ்ஞாபகமேதென்ன (உன்னையித்யாதி). "துணையோடு" என்றத்தாலே ஸாஹசர்யம் தோற்றியிருக்க, "பிரியாதே" என்றது-தான் பிரிந்திருக்கிறதசையில் முந்துறவிவை பிரியாதிருக்கை அஸம்பாவிதம், இதென்ன ஆஶ்சர்யம்! இது பெற்றோமே! என்றது தன் கார்யத்துக்குடலென்றநுஸந்திக்கிறாரென்றருளிச்செய்கிறார் (இவ்வர்த்தமித்யாதி). ஸம்ஶ்லேஷம் உந்மஸ்தகமானால் அது ஸாத்மிக்கைக்காகவும் பிரியாதேயிருப்பதே! இதென்ன ஆஶ்சர்யம்! என்னும் தாத்பர்யாந்தரம் சொல்லுகைக்காக ப்ரதிக்ரஹணம் (தூவிரியவித்யாதி). தான் பிரிந்திருக்கும்போது எல்லாரும் பிரிந்திருக்கிறதாகவெண்ணின விடமுண்டோவென்ன (மயூரஸ்யேத்யாதி).

"விரிய" என்றவநந்தரம், "நுகரும்" என்கையாலே பலித்த கால ஸாமீப்யத்தைத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (இவற்றினுடைய ப்ரவேஶமுமித்யாதி). இத்தால்-காற்றும் புகுராத நூதநமான தேனை நுகர்ந்ததென்றதாயிற்று. ராஜபுத்ரர்கள் ஸமாதியாலே, முசிந்தபடுக்கையை விட்டுப்போனாற்போலே அலராமலரில்போனால் அது நிசாகாலமாயன்றோவிருப்பது, அப்போது தென்றல்முதலாக இல்லையே, இவற்றினுடைய ப்ரவேசமும் அலருகையும் ஏககாலமாம்படி விகஸிக்கைக்கு ஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார் (தென்றலித்யாதி). (ஸந்நிதி) சிறகின்காற்று. கீழ்வாக்யவிவரணம் (க்ருதேத்யாதி). ஸ்வாபதேசார்த்தத்தை ஸூசிப்பிக்கிறார் (இவற்றினுடைய

வரவித்யாதி). பாகவதர்களுடைய ஸந்நிதி ஹ்ருதயகமலவிகாஸ ஹேதுவா யிற்றென்று கருத்து. என்னைப்பிரிந்து வருமவரைப்பிரிந்து நானுமுண்ணு திருக்க நீயும்துணையோடே மதுநுகருகை உங்களுக்குத்தகுமோ என்கிறு ளென்றருளிச்செய்கிறுர் (நமாம்ஸமித்யாதி). ப்ரமரம் தன்னைப்போலே பண்ணுமென்னும் குணத்துக்கு ஹாநிவரும் என்னிலையை வரையாயாகிலெ ன்று கருத்து. மதுநுகருகை தூதுபோகைக்குடலன்றே, பழியிடுவானென் னென்ன வருளிச்செய்கிறுர் (ஒன்றுக்கொன்று ஸம்ப்லேஷார்த்தமாகவித் யாதி). தூதுபோகைக்குக்கால் நடைதரவேணுமென்றன்றே நீங்கள் மதுநுக ருகையென்று கருத்து. வர்த்தமாநார்த்தம் (மதுபாநமித்யாதி). மீளாதே மதுநுகரக்கூடுமோ, வாய்நோவாதோவென்ன (தனக்குத்தானித்யாதி). ஸ்வார்த்தமாகில் நோவுதெரிவதென்றுகருத்து. பரார்த்தமேயாகிலும் தெகுட் டாதோவென்ன வருளிச்செய்கிறுர் (ஒன்றுக்காகவித்யாதி). (ஒருகலத்திலே யெடுக்கை) ஒருகார்யார்த்தமாக ரஸ்யபதார்த்தங்களை ஒருபாத்ரத்திலேவைத் துக்கொடுக்குமாபோலே, நெஞ்சிலேவைத்துக்கொடுக்கையாலே பரார்த்தமு மாய், கீழிழிச்சாமையாலும் தெகுட்டாதென்று கருத்து. மதுநுகருகை - ஒன்றுக்கொன்று பலா(ஃஶ) தாநார்த்தமாகவென்றுரு தாத்பர்யமருளிச் செய்து, கூடியிருக்கையில் போக்யதயா என்று தாத்பர்யாந்தரமருளிச்செய் கிறுர் (இனித்தானித்யாதி). (கூடவொன்றை) துணையானவண்டை. (கை தொடுமானம்) என்றது - ஆலம்பநமென்றபடி. (செலவு) ப்ரயோஜநமென்ற படி.

(பொறியையும்) என்றது - மாநஸோல்லாஸத்தால்வந்த புகரையுமென் கை. ஸ்வாபதேசம் (கடகரித்யாதி). "வரி" என்றத்தைப்பற்ற (தேஹகுணத் தோடு) என்றது. திர்யக்கானவண்டைச் சொன்னதுக்கு ஸ்வாபதேசம் (சேர் ப்பாரித்யாதி). வண்டுக்குண்டான ஸ்வாபாவிகமான சிறுமையை யிங்குச் சொல்லுகைக்குக் கருத்தருளிச்செய்கிறுர் (இவளித்யாதி). திருவடியைப் போலே கார்யகாலத்தில் சிறுக்கவேண்டாதபடி வ்ருத்த (வ்ருத்த) ஸாமந்தரான ஸேனைமுதலியார் முன்பு போகக்கூசாதே அவன்வலயத்தில் வண்டுகளோடு ஒருவண்டாய்ப்போய், என்னிலைமைசொல்லும்படி யமைந்திருந்தாயேயென் கிறுளென்று கருத்து. (மஹாகபிம்)என்றதுக்குத் தாத்பர்யம் (ஏத்தவித்யாதி). (எங்கெய்தும்) எங்கேகிட்டுவோம். கரைகாணமாட்டோமென்கை. ஆனுல் ப்ரசம்ஸிக்கக்கூடுமோவென்ன (கடலையித்யாதி). எடுத்த ப்ரமாணத்துக் கெல்லாம் வ்யாக்யாநம்பண்ணுகிறுர் (ததஇத்யாதி).

மேலுக்கவதாரிகை (இப்படியித்யாதி). உத்தரார்த்தத்துக்கெல்லாம் தொகுத்ததாத்பர்யத்தை யருளிச்செய்து, அத்தை விவரிக்கிறுர் (ஸ்த்ரீகாதுக னித்யாதி).

மேலுக்கு உக்திப்ரத்யுக்திரூபேண தாத்பர்யமருளிச்செய்கிறுர் (சுலோ த்யாதி, கிடவாது அவனுக்கு இத்யந்தம்). சப்தார்த்தம் (ஆர்த்தத்வநியித் யாதி). உரைகேட்டு உதவுமென்கைக்கு ஸம்வாதம் (ஒருகந்தர்வனித்யாதி).

மூ.—பிணியவிழு நறு நீலமலர் கிழியப் பெடையோடும்
அணிமலர்மேல் மதுநுகரு மறுகால சிறுவண்டே
மணி கழுநீர் மருங்கலரும் வயலாலி மணவாளன்
பணியறியேன் நீசென்றென் பயலைநோயுரையாயே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பிணிஅவிழும்	கட்டவிழாநின்றுள்ள	வயல்	கழனிசூழ்ந்த
நறுநீலமலர்	செவ்வியநீலமலர்கள்	ஆலி	திருவாலியிலேஎழுந்தருளியிருக்கிற
கிழிய	கிழியும்படி	மணவாளன்	ஸ்வாமியினுடைய
பெடையோடும்	பேடையுடனே [ந்து	பணி	க்ரியையை
அணிமலர்மேல்	செறிந்தபூக்களிலிரு	அறியேன்	நானறியமாட்டேன்,
மதுநுகரும்	மதுபாநம்பண்ணுகிற	நீசென்று	நீபோய்
அறுகால	ஆறுகால்களையுடைய	என்பயலைநோய்	என்னுடம்படையவைவர்ண்யம்பரந்திருப்பதை
சிறுவண்டே	சிறுத்தவண்டே!	உரையாய்	அநாதரம்பண்ணுமல்சொல்லவேணும்.
மணி	அழகிய		
கழுநீர்	செங்கழுநீர்		
மருங்கு	நாற்பக்கத்திலும்		
அலரும்	விகஸிக்கிற		

வ்யா.—இரண்டாம்பாட்டு. (பிணியவிழு நறுநீலமலர்கிழிய) †இதினுடைய ப்ரவேசம்பாதியும்†காலம்பாதியுமாகவாயிற்றுப் பூவில்பிணியவிழுவது. †கழியவலர்ந்துபோனவற்றுக்கும், பிஞ்சாய்ப் பருவமிளைதானவற்றுக்கும் வாசியறிந்திருக்கை. †இத்தால்-அவன் வாய்விடும்போதே அவன்கருத்தறிந்து பரிஹரிக்கவற்றென்கை. (பிணியவிழுமித்யாதி) † கட்டவிழாநின்றுள்ள செவ்வியையுடைத்தான நீலமலர் கிழியும்படியாக †வாயிற்று மதுபாநம்பண்ணுகிறது, ஆவதென்னென்னில்; போகவிடுகிறவிடத்தில் அளவறிந்து கார்யம் செய்யவற்றென்கை. (மலர்கிழிய) † பேணிக்கலக்கவறியாவாயிற்று. † தன்செருக்காலே தன்படுக்கையென்றும்பாராதே யழித்துப் பொகடுகிறதாயிற்று. † இவைதானங்கு ஜபிக்கைக்குப் புகுகிறனவன்றே! †கார்யப்பாடற்றுக் கலக்கிறவற்றுக்கு மற்றொன்று தெரியாதிறே. உந்மத்தங்காய் தின்றிருப்பார்க்கு நெஞ்சிருண்டு வேறொன்று தெரியாதிருக்குமிறே. அந்த உந்மத்தங்காய்தானேதென்றால்; (பெடையோடும்) †இவைதனக்கொரு படுக்கைவேண்டா? ஆகாசத்தே கலக்கவற்றுக்காணும், ஒன்றினுடம்பிறே ஒன்றுக்குப்படுக்கை; (க) "[Grantha] - தவாங்கே ஸமுபாவிசம்" என்னுமாபோலே.

(க) ராஸு-௩௮-கச.

(அணிமலர்மேல் மதுநுகரும்) செறிந்தபூவிலேயிருந்து மதுபாநம்பண்ணாநிற்கும். ஒருபூவிலேயிருந்து மதுபாநம்பண்ணுகின்றால், மற்றைப்பூவிலே போம்போது பறந்துபோகவேண்டாதபடியிருக்கை. †பொய்கையடங்கப் பரப்புமாறப்பூத்து ஒன்றோடொன்று நெருங்கிக்கிடக்கையாலே, ஒன்றில் நின்றும் மற்றையதில் போம்போது நடந்துசென்று மதுபாநம்பண்ணலாயிருக்கை. † பூவில் செறிவுதேட்டமாய் மதுபாநம்பண்ணுமிதுவே யாத்ரையாயிருப்பதே! உங்களுக்கு. (அறுகால) † இரண்டுகாலுடையாரைப்போலன்றிக்கே, ஆறுகாலுடையார்க்குக் கடுகப்போய்க் கார்யம் தலைக்கட்டலாமிறே. (க) † "நிதூ௦யஹீயஸசரணௌ ஶரணம் மஹீயஸ்-நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம்" என்று சேர்ப்பார்காலேயிறே இவர்கள் ஜீவநமாக நினைத்திருப்பது, என்ஜீவநம் கூடுபூரித்துக்கிடந்தபடியென்றான்! என்கிறாள். "சரணௌ - சரணௌ" என்று † மிறுக்குப்படவேண்டாதபடியாயிருக்கை. (சிறுவண்டே) † கார்யவாய்ப்புப்பெருத்து எம்பார் திருமேனிபோலே வடிவு சிறுத்திராநின்றனவாயிற்று.

(மணிகழுநீர்மருங்கலரும்) மணிகளும் செங்கழுநீருமாயாயிற்று. பர்யந்தங்களடங்கலுமிருப்பது. அன்றிக்கே, மணியென்று - அழகாய், அழகிய செங்கழுநீர் அலருமென்னுதல். (மணிகழுநீரித்யாதி) †அழகிய செங்கழுநீர்களானவை அலராநின்றுள்ள பர்யந்தங்களையுடைத்தான வயலாலேசூழ்ந்த திருவாலியிலே வந்திருந்தவன். †அன்றிக்கே, நீர்களானவை கொழித்தெறடாநின்றுள்ள மணிகளையும் செங்கழுநீரையுமுடைத்தான பர்யந்தங்களென்றுமாம். (வயலாலிமணவாளன் பணியறியேன்) †என்னையணைக்கையேதொழிலாய் இங்கேற வருகையிலே ஒருப்பட்டிருக்கிறானோ, அன்றிக்கே, ஜாம்பவதிபோல்வார்க்குப் பூப்பறித்துத் தொடாநிற்குமோ, அறியேன். அன்றிக்கே, † பணியென்று - சகுந்தலையையுபேக்ஷித்த துஷ்யந்தனைப்போலே அறியாமை†பாவித்திருக்குமோ, அதுவுமறியேன். அன்றிக்கே, நாவிலும் பல்லிலும் நீரற்று, "என்செய்தாள்?" என்பட்டாள்"? என்று கேட்கிறானோ?. உக்தியிலும் க்ரியையிலும் கொள்ளக்கடவது.

†அவன்படி நிஶ்சயிக்கவொண்ணுவிட்டாலும் நமக்கவனை யொழியச்செல்லாதிறே. (நீசென்று) நமக்கு முன்னம் அவனைப்போலே

(க) ஸ்தோ - ர - ௨.

யிருக்கவொண்ணாதிறே.†அவனுக்கு நம்மையொழியச்செல்லுமென்னு, நமக்குமவனை யொழியச்செல்லாதே. (நீசென்று) முறைகெடவாகிலும் நீமுற்படச்சென்று. அவன்தானே வரப்பெறவிருக்குமதாயிற்று முறை. அங்குப்போனால் சொல்லுமதுதானேதென்னில்; (என்பயலை நோயுரையாயே) (௧)†“తదాలీన్నిష్ప్రబోధార్థం రాఘవగ్రస్త ఇవాంశుమాన్” - ததாலீந்நிஷ்ப்ரபோத்யர்த்தம் ராஹுக்ரஸ்த இவாம்சுமாந்” என்று பெருமாளுடைய ஆர்த்தியை மஹாராஜர்க்கு இளையபெருமாளறிவிக்க,அவ்வார்த்தைசெவிப்பட்டு அழிந்தவழிந்தவளவுதோறு முடம்பு வெளுத்து வந்ததிறே. அப்படியே என்னுடம்பில் வைவர்ண்யமு மவனுடம்பிலே காணும்படி வார்த்தை சொல்லு. (பயலைநோயுரை) † வாசாமகோசரமிறே இவளுடைய வைவர்ண்யந்தான். வாக்குக்கு அவிஷயமானவற்றுக்கும் பாசுரமிட்டுச்சொல்லவற்றுக்காணும் இவைதான். (என்பயலை நோயுரையாயே) †என்னுடம்படைய வைவர்ண்யம் பரந்திருக்கிறபடியைச்சொல்லு. †உன்னுடையசொல்கலந்தவிடமடையவைவர்ண்யம் பரக்கும்படியாகச்சொல்லிப்போரு என்கிறாள். (என்பயலை நோயுரையாயே) †ஸ்வதந்த்ரர் படிகொண்டு கார்யமென் நமக்கு, நீசென்று இத்தனையுமறிவித்துப் போராய். ... ... (௨)

அரு.—இரண்டாம்பாட்டு. (பிணியித்யாதி) என்றும் இவர்கள் பேடையை முன்னிட்டே சேவலைக் கார்யங்கொள்ளுமவர்களாகையாலே, கீழ்ப்பாட்டில் * துணையோடும் பிரியாத பெண்வண்டை முன்னிட்டுத் தூதுரைத்தாள்; இதில்,அத்தோடுகூடின சேவலையே பார்த்துத்தூது விடுகிறாளென்றுஸங்கதி.

பிணிப்பவிழாநின்றுள்ள நறுநீலமாகிற மலர்ந்தபுஷ்பமென்று சப்தார்த்தமாகையால், அவிழாநிற்கைக்கும் மலருகைக்கும் வ்யுத்க்ரமேண ஹேதுத்வயம்காட்டுகிறார் (இதினுடையவித்யாதி). (காலம்) சந்த்ரோதயோபக்ரமம். “நறுநீலமலர்கிழிய” என்னவமைந்திருக்க, “பிணியவிழும்” என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (கழியவித்யாதி). இத்தால்-கழியவலர்ந்தவற்றையும் கேவலயிளைதானவற்றையும்விட்டு, மத்யமாவஸ்தாபந்நமானவற்றில் வாசியறியவல்ல விசேஷஜ்ஞதையுண்டென்றதாயிற்று. இந்த விசேஷஜ்ஞதைசொன்னதுக்கு ப்ரக்ருதோபயோகம்காட்டுகிறார் (இத்தாவித்யாதி). அவ்வூரில் தார்மிகரானவர்கள், “ஸ்த்ரீவதம் பண்ணினான்”என்று புறப்பட விடுவர்கள் என்னாநின்றாய், அதுக்கு அவனுன்னிடத்தில் குற்றங்களைக்காட்டினால் செய்வதென்னென்ன ; அவன்கருத்தை யறியுமுன்விசே

---

(௧) ரா - கி -

ஷஜ்ஞதை கண்டோமே, அதுக்கு நீயே பரிஹரிக்கவல்லை என்கிருளென்று கருத்து. சப்தார்த்த கதநபூர்வகம் தாத்பர்யாந்தர மருளிச்செய்கிருர் (கட்டித்யாதி) (ஆயிற்று) என்ற வநந்தரம், பேடையோடு கலந்து என்று சேஷம். கிழியாதே கலக்கவொண்ணுதோ வென்ன (பேணியித்யாதி). அதுக்குஹேது (தன்னித்யாதி), கலவாதே மதுநுகரலாகாதோ வென்ன (இவை தானித்யாதி). மதுநுகர்ந்தால் அநந்தரம்ஜபிக்கை இதின் கார்யமன்றே என்றுகருத்து. மலர்கிழியப் பெடையோடு கலந்து, அநந்தரம் மதுநுகரும்போது முந்துறச் செருக்குவர ஹேதுவென்னென்ன (கார்யப்பாடித்யாதி.) (கார்யப்பாடு) வேருெரு கார்யம். உந்மத்தங்காயான பேடையோடே கலக்கிற வண்டை "தூது போ" என்ருல் படுக்கையை விட்டுப்போமோ வென்ன; "வண்டு" என்றத்தைப்பற்ற வருளிச்செய்கிருர் (இவைதனக்கித்யாதி).

கீழ்வாக்ய விவரணம் (பொய்கை யித்யாதி). வெறுப்பாகவிதுக்கு ப்ரக்ருதோபயோகம் காட்டுகிருர் (பூவித்யாதி). வண்டானபோதே அறுகாலுமுண்டாயிருக்குமே, இப்படி விசேஷிப்பா னென்னென்ன வருளிச்செய்கிருர் (இரண்டித்யாதி). இறகாலே பறந்தும் போகச்செய்தே இளைப்பானுல் காலாலே நடக்கவும் மும்மடங்காயிருக்கிறதிறே உனக்கு கமநஸாதநமென்று கருத்து. ஸ்வாபதேசத்தில் தாத்பர்யம் (நித்யமித்யாதி). த்விவசந மாகையாலே (மிறுக்கு) என்றது. கீழே விசேஷஜ்ஞதையைச்சொல்லி, சிறுமையைச் சொன்னுல் சேருமோவென்ன வருளிச்செய்கிருர் (கார்யவாய்ப்பித்யாதி).

மணிபதத்துக்கு அர்த்தத்வயங்காட்டி த்விதியார்த்தாநுகுணமாக ஸமுதாயார்த்தமருளிச்செய்கிருர் (அழகியவித்யாதி). முந்தினவர்த்தத்தில் - மணிகள் வருகைக்கு ஹேதுவைக்காட்டா நின்றுகொண்டு தாத்பர்யமருளிச்செய்கிருர் (அன்றிக்கேயித்யாதி). "பிணி" என்று வ்யாபாரமும், உக்தியுமாகையாலே, வ்யாபாரபக்ஷத்தில் மூன்றர்த்தமும், உக்திபக்ஷத்தில் ஓரர்த்தமுமாக வருளிச்செய்கிருர் (என்னையித்யாதி). "மணவாளன்" என்றதுக்கு - தன்மணவாளனென்று விவக்ஷித்து முந்தினவர்த்தமும் நாலாமர்த்தமும் நாயிகாந்தரத்துக்கு மணவாளனென்று - இரண்டர்த்தமுமாகக் கண்டுகொள்வது. (பாவித்திருக்குமோ) என்றது - மாநஸக்ரியையென்று கருத்து. சகுந்தளையென்கிற கண்வர்புத்ரியை துஷ்யந்தனென்கிற ராஜா வேட்டைக்குப் போனவிடத்திலே காந்தர்வவிவாஹம்பண்ணி ஒருபிள்ளைபிறந்தவுடனே "திரும்பிவருகிறேம்" என்று தன்னூரேபோக, அநேகநாள் வாராமையாலே இந்தப்பெண்ணை அங்கேபோகவிட, அப்போது இவளைக்கண்டு அறியாமை பாவித்திருந்தானென்று கதை கண்டுகொள்வது. (சகுந்தளையை) என்ற வாக்யத்துக்குமுன்னே யிருக்கிற (பணியென்று) என்றபதத்தை, (உக்தியிலும்) என்ற வாக்யத்துக்கு அடியிலே கூட்டுவது.

மேலுக்கவதாரிகை (அவ்னித்யாதி). விவரணம் (அவனுக்கித்யாதி). "உரையாய்" என்றது - வருகைக்கு ஹேதுவான உரையாகவேண்டுகையாலே,

அதின்கருத்தை ஸத்ருஷ்டாந்த முபபாதிக்கிறார் (ததாஹீதித்யாதி). வைவர்ண்யத்தில் ப்ரகார விசேஷம் சொல்லாமையால் பலித்தவர்த்தமருளிச் செய்கிறார் (வாசாமித்யாதி). சப்தார்த்தம் (என்னித்யாதி). ஜாம்பவதிபோல் வார்க்குப் பூப்பறித்துக் கொடுத்துக்கொண்டு அயனிருந்தால் அவனுடம்பில் வைவர்ண்ய மேறும்படி சொல்லுகை யெங்ஙனே? அவர்கள் ஸந்நிதியாலே வைவர்ண்யமேறுமோவென்ன வருளிச் செய்கிறார் (உன்னித்யாதி). துஷ்யந்தனைப்போலே உபேக்ஷித்தால் என்செய்வோமென்ன வருளிச்செய்கிறார் (ஸ்வதந்த்ரரித்யாதி). ... ... (உ)

மூ.—நீர்வானம் மண்ணெரிகாலாய் நின்றநெடுமால் தன்
தாராய நறுந்துளவம் பெறுந்தகையேற்கருளானே
சீராரும் வளர்பொழில்சூழ் திருவாலிவயல்வாழும்
கூர்வாய சிறுகுருகே குறிப்பறிந்து கூறாயே. (௩)

பதம்.	உரை.
மண்நீர்எரிகால் வானம்ஆய்	ப்ருதிவ்யப்தேஜோ வாய்வாகாசமாகிய பஞ்ச பூதங்களாய்க்கொண்டு
நின்ற	அவற்றுக்கு அந்தர்யாமியாய் நின்ற
நெடுமால்	ஸர்வேஸ்வரனானவன்
தன்	தன்னுடைய
தாராய	மாலிகையாகிய
நறுந்துளவம்	செவ்வித்திருத்துழாயை
பெறுந்தகையேற்கு	பெறில் ஜீவிக்கும் ஸ்வபாவத்தை யுடைய அடியேனுக்கு
அருளானே	தாரானே ;
சீராரும்	பெருமை மிகுந்த
வளர்பொழில்	வளராநின்றசோலைகளாலே
சூழ்	சுற்றிலுஞ்சூழப்பட்ட
திருவாலி	திருவாலி என்னும்நகரின்
வயல்	கழனியில்
வாழும்	வாழுகிற
கூர்வாயசிறுகுருகே	கூரிய வாயலகையுடைத்தான சிறுத்த பக்ஷியே!
குறிப்புஅறிந்து	அவன்கருத்தை யறிந்துகொண்டுவந்து
கூறாய்	நாம்தரிக்கும்படி அச்சொல்லைச்சொல்ல வேணும். (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு (நீர்வானம்மண்ணெரிகாலாய் நின்ற நெடுமால்) ப்ருதிவ்யாதி பூதபஞ்சகங்களையும் கார்யயோக்யமாம்படி ஒன்றோடொன்றைச்சேர்த்து, அவற்றுக்கொரு வஸ்துத்வமும் நாமமுமுண்டாம்படி தானவற்றுக்குள்ளே புக்குநின்று, பின்னை அவற்றைச்சொன்னசொல் தன்னளவிலேவந்து பர்யவஸிக்கும்படி நிற்கிற பெரும்பிச்சன். †தன்னுடைமையைவிடமாட்டாமையாலேவேறுபடாதே கலந்து நிற்கிறவன். (நீர்வானமித்யாதி) ஆசையில்லாதஜகத்தையும் தானாசைப்படுமவனாயிற்று. †ப்ருதிவ்யாதி பூதபஞ்சகங்களையுமுண்டாக்கி, அவற்றுக்குக் கார்யயோக்யதை யுண்டாம்படி, நீரை

யும் †சதுகையும் மண்ணையுங்கூட்டித் துகைத்து கட†சராவாதி கார்யங்களாக நிர்மிக்குமாபோலே, அத்தோடே சேதநஸமஷ்டியைக் கூட்டி தேவாதி கார்யத்தையடைய உண்டாக்கி, உண்டான விவற்றினுடைய ஸத்தாஹேதுவாகத்தான் அந்தராத்மதயா அநுப்ரவேசித்து, அவற்றைச்சொல்லும் சொல்லு தன்னையே சொல்லிற்றாம்படி நிற்கும் நிலையைச்சொல்லுகிறது. †நாட்டில் கடபடாதிபதார்த்தங்கள் பரமாத்மபர்யந்தாபிதாநம் பண்ணியல்லதிராதிறே. (க) [𑌤𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 - தத்ஸ்ருஷ்ட்வா இத்யாதி] †இவற்றை ஸ்ருஷ்டித்து,இவற்றினுள்ளே அநுப்ரவேசித்து, அந்த அநுப்ரவேசத்தாலே சித்தும் அசித்தும் தானென்று சொல்லலாம்படி நிற்கிறவனாயிற்று. (நெடுமால்) தன்பக்கலாநுகூல்யலேசமில்லாத ஜகத்தின்பக்கலிலும் தான்மிக்க வ்யாமோஹத்தைப்பண்ணி யிருக்குமவன்.

(தன்தாராய நறுந்துளவம் பெறுந்தகையேற்கருளானே) †தன்பக்கலாசையில்லாதாரையும் விடமாட்டாதேயிருக்கிறவனுக்கு நான் பிரிந்திருந்தாசைப்பட்டுத் தூதுவிடுகிறதோ குற்றம். † தான்விஷயீகரிக்கில் உளேனாய், இல்லையாகில் இல்லையாம்படி யிருக்கிறவெனக்கு. †தன்தோளிலிட்ட செவ்விமாலைபெறில் ஜீவித்து, பெறாவிடில் முடியும்படியாயிருக்கிற வெனக்கு. (தன்தாராய நறுந்துளவம் பெறுந்தகையேற்கு) என்று தன் ஸ்வரூபத்தைச் சொன்னபடியென்தான்! (அருளானே) †ப்ரணயிநியார்த்தி பரிஹரிக்குமதுபோனால், நாட்டொப்பான வருளு மின்றிக்கே யொழிய வேணுமோ! (தன்தாராயவித்யாதி) †தனக்கே அஸாதாரணமாய் தாரையுடைத்தா யிருந்துள்ள செவ்வித் திருத்துழாயைப்பெறில் உளேனாய், இல்லையாகில் இல்லையாம்படி யிருக்கிற என்பக்கல் க்ருபை பண்ணானோ? †கந்தல் கழிந்தால் பின்னைத்திருத்துழாயோபாதி,கௌஸ்துபத்தோபாதி ஸ்ப்ருஹணீயமாயாயிற்று வஸ்துஸ்வபாவ மிருப்பது. (அருளானே) †ஸாமாந்ய ரக்ஷணம் தப்பநில்லாதவன் விசேஷ ரக்ஷணநிலை தப்ப நிற்குமோ? †ஆசையில்லாத ஜகத்தையும் ரக்ஷிக்குமவன், தன்னைப் பெறில் உளேனாய் இல்லையாகில் இல்லையாம்படி யிருக்கிற வென் விஷயத்தில் நெகிழ நிற்குமோ? † அவனுடைய ப்ரணயித்வத்துக்கு விஷயமாயிற்றிலோமாகிலும் அவனுடைய க்ருபைக்கு விஷயமாகாதொழிவுதோமோ?

(க) தை - ஆந -

(சீராருமித்யாதி) வாழ்ந்தார்க்குக் கெட்டாரை யெடுக்கவேண்டாவோ?(சீராரும் வளர்பொழில் சூழ்)(௧)"ஊர்வளம் கிளர்சோலை" என்கிறபடியே ஊரில் ஸம்ருத்தியடையச்சோலையே கோட்சொல்லித்தரும்படியாயிருக்கை. (வளர்பொழில்) (௨) "வளரிளம்பொழில்" என்னுமாபோலே வளரவளர முதுமையின்றிக்கே இளகிப்பதித்திருக்கை. † ஐஶ்வர்யத்தினுடையஸம்ருத்தியைத்தெரிவியாநின்றுள்ள வளர்ந்தபொழிலாலே சூழப்பட்ட திருவாலியிலே வாழுகிற சிறுகுருகே! அங்குத்தை வர்த்தநந்தானே வாழ்ச்சியாயிருக்கை; கோயில்வாஸம்போலே. (கூர்வாயசிறுகுருகே) கூரியவாயலகையுடைய சிறுகுருகே யென்னுதல்; அன்றிக்கே, †அறுதிப்பாடுடைத்தான வார்த்தை சொல்லவல்ல குருகே யென்னுதல். ராஜபுத்ரர்களைக் கண்டஞ்சி நாலு மூன்று யோஜனை ஓடிப்போன மஹாராஜர் வந்துகிட்டி, (௩) "𑌏𑌕𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌸𑍁𑌖𑌂 𑌚 𑌨𑍌 - ஏகம் துꞏகம் ஸுகம்ச நௌ" என்று நிற்கும்படிக் கிடாகவிறே வார்த்தை சொல்லிற்று. (குறிப்பறிந்து கூறாயே) அவன் கருத்தறிந்துவந்து எனக்குச் சொல்லென்னுதல்; நாறாற்றாமையாலே கண்ணுஞ்சுழலை யிட்டுச்சொன்னவற்றை யெல்லாம் அங்குச்சொல்லாதே, அவன்தரிக்கும்படி அளவறிந்து வார்த்தை சொல்லென்றுமாம். மிகச்சொல்லி லவனைக்கிடையாது. அவன் நைராஶ்யத்தை யறிந்துவந்து சொல்லென்றதுக்குக் கருத்தென்னென்னில்; நம்தசையை யறிவித்தால் "நமக்கத்தலைவேணும்" என்றானாகில் நம்மாற்றாமை பாராதேயாகிலும் நாம் ஜீவித்துக்கிடக்க, "வேண்டா" என்றானாகில் நாம்முடிந்து பிழைக்கும்படி. ... (௩)

௮௩.—மூன்றாம்பாட்டு. (நீரித்யாதி) வண்டானது, மென்மலர்ப்பள்ளியின் வாய்ப்பாலும், உன்மத்தங்காய்போலே பிச்சேற்றவல்ல பேடையின் மயக்குக்களாலும், மதுநுகருகையாலுண்டான பாரவஶ்யத்தாலும், *ஊமையரோடு செகுடர் வார்த்தைபோலேயாய்ப் போகையாலே, அவற்றைவிட்டு, கூர்வாய்க்குருகைக் கூறச்சொல்லித் தூதுவிடுகிறாளென்று ஸங்கதி.

பிச்சுத்தானென்னென்ன வருளிச்செய்கிறார் (தன்னித்யாதி). ஆசை என்று - திக்காய், கத்யந்தரமில்லாத என்று சாடு. விவரணம் (ப்ருதிவ்யாதீத்யாதி). (சதுகு) கூளம். (சராவம்) மடக்கு. ப்ரமாணங்காட்டுகைக்காக அடிக்கோலுகிறார் (நாட்டிலித்யாதி). ப்ரமாணார்த்தம் (இவற்றையித்யாதி).

---

(௧) தி - வாய் - ௮ - ௯-௪. (௨) தி - வாய் - ௨ - ௧௦ - ௧.
(௩) ரா - கி - ௫ - ௧௮.

அருள நமக்கு ஹேதுவேதென்ன, "கூறாய்" என்றபதத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (தன்பக்கலித்யாதி). இதுபோக்கி வேறுகுற்றம் காணேமென்று கருத்து. வேறுகுற்றமில்லையோவென்ன (தானித்யாதி). கீழ்வாக்யவிவரணம் (தன்தோளிலித்யாதி). வ்யாக்யாதாவினீடுபாடு (தன்தாராயவித்யாதி). நாயிகையானவள், வாரானோ என்னாதே, "அருளானே" என்னக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (ப்ரணயிநி யித்யாதி). வாக்யார்த்தம் (தனக்கே யித்யாதி). துளவத்தைப்பெறுகைக்கு யோக்யமான ஸ்வபாவத்தையுடையவளென்று சப்தார்த்தமாய்க் கீழருளிச்செய்து, துளவத்தினுடைய, பெறும் தகையேற்கு - எம்பெருமான் லபிக்கும்படியான ஸ்வபாவம்போன்ற ஸ்வபாவத்தையுடையவெனக்கு என்று சப்தார்த்தமாக்கித் தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (கந்தலித்யாதி). (வஸ்து) ஆத்மவஸ்து. "அருளானே" என்றது - பிரிநிலையேகாரமாய், அருளும் என்றாக்கி ஒரு தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாமாந்யேத்யாதி). விவரணம் (ஆசையில்லாதவித்யாதி). விசேஷரக்ஷணத்தில் தப்பில்லாதாகில், உன்னை இப்பாடுபடுத்தினவன் நான்போனபின்பு தப்பினாலோவென்ன வருளிச்செய்கிறார் (அவனுடையவித்யாதி). ப்ரணயத்தாலே வாராவிடிலும் தயாளுவாகையாலே என்னார்த்தியைக் கேட்டு வருமென்று கருத்து.

தாத்பர்யத்தை யருளிச்செய்து, சப்தார்த்தம் (ஐஸ்வர்யத்தினித்யாதி).

(அறுதிப்பாடுடைத்தான) தீக்ஷ்ணபுத்தியாலுண்டான. ... (௩)

மூ.—தானாக நினையானேல் தன்னினைந்து நைவேற்கோர்
மீனாய கொடிநெடு வேள் வலி செய்ய மெலிவேனோ
தேன்வாய வரிவண்டே திருவாலி நகராளும்
ஆனாயற் கென்னுறு நோயறியச் சென்றுரையாயே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை,
தான் ஆக	அவன்தானாகவே [ம்	திருவாலிநகர் ஆளும்	திருவாலியென்னும்திவ்யதேசத்திலேவர்த்திக்கிற
நினையானேல்	என்னைநினையானாகிலு	ஆனாயற்கு	ஸ்ரீக்ருஷ்ணனாகத்திருவவதரித்தஸர்வேஶ்வரனுக்கு
தன்நினைந்து	அவனையேநினைத்துக்கொண்டு	என்உறுநோய்	என்சரீராந்தமானநோவை
நைவேற்கு	நையுமென்னை	சென்று	நீபோய்
ஓர்மீனாயகொடி நெடுவேள்	அத்விதீயமகரத்வஜனமன்மதன்	அறியஉரையாய்	அவனறியும்படிசொல்லவேணும். (௪)
வலிசெய்ய	பீடிக்கும்படி		
மெலிவேனோ	நான்இளைத்துப்போவேனோ; [ய		
தேன்வாய	இனியபேச்சையுடை		
வரிவண்டே	ரேகைசிறந்தவண்டே!		

வ்யா.—நாலாம்பாட்டு. (தானாக நினையானேல்) † "வேப்பு" என்பாரைப்போலே. †உடைமையை அவனாக நினைக்கு மதுகிடையாதாகில். முறைசெய்யானாகில். †அவனுக்கு ஆஶ்ரிதரை நினையாமை ஸத்தாப்ரயுக்தமாகில்; தன்ஸத்தை யுண்டாகைக்கிடாக நினையானாகிலென்றாமார். (தன்னினைந்து நைவேற்கு) †நாமவனைப்போலே யாக மாட்டோமே;†நாமும் நினையாமைக்†கொரு நெஞ்சுபடைக்கப் பெற்றிலோம். †பெறவுமாய்த் தவிரவுமாயிருக்கும் விஷயமாகிலிறே அநுஸந்தித்தால் தரித்திருக்கலாவது; இதர விஸஜாதீயமாயிருக்கும் விஷயமாகையாலே அநுஸந்தித்த வநந்தரம் நோவு படுமத்தனையிறே. (ஓர் மீனாய கொடிநெடுவேள் வலிசெய்யமெலிவேனோ) † தன்னையாசைப்பட்டு நைகிற வென்னை மகரத்வஜனே நலிவான். அவஸ்யம் நாங்கள் நோவுபடுகை தவிரோமாகில் (க) "கருளக்கொடியொன்றுடையீர்" என்கிறதான் நோவுபடுத்த நோவுபட்டா லென்செய்ய வேணும்.†ஜீயர் வார்த்தையை நினைப்பது.

(தேன்வாயவரிவண்டே) இனிய பேச்சையுடைய வண்டே! பிராட்டி சிம்சுபா வ்ருக்ஷத்திலே திருக்குழலைக் கொடுபோய்ப் பிணைக்கப்புக்க ஸமயத்திலே அவளுக்குதவி, (உ) "అవగాహ్యార్ణవంస్వప్స్యే - அவகாஹ்யார்ணவம் ஸ்வப்ஸ்யே" என்கிற ஸமயத்திலே இவருக்கு வந்துதவி, இரண்டுதலையு முண்டாம்படிக் கீடாக வார்த்தைசொல்ல வற்றாயிருக்கை. அவனித்தலையில் வர நினைத்திலனாகிலும் உங்கள் பேச்சி னினிமையிலே துவக்குண்டு வரும்படி வார்த்தைசொல்ல வல்லிகோளிறே. (திருவாலி நகராளுமானாயற்கு) †திருவாய்ப்பாடியில் ஸம்பத்தோடே திருவாலியில் ஸம்பத்தையும் கையடைப்பாக்கினால், பின்னை அவனுக்கு நொந்தாரை "ஐயோ" என்ன அவஸரமுண்டோ? (என்னுறு நோயறியச் சென்றுரையாயே) அறியாமை வாராதொழிந்தானத்தனை, நீ போய் அவனறியும்படி சொல்லு. அன்றிக்கே, (அறியச்சென்றுரை) உன்னடையில் தளர்த்தியிலே இத்தலையாற்றாமையுடைய அவனறிந்து நாவிலும் பல்லிலும் நீரற்று உடம்பு வெளுக்கும்படி சென்று சொல்லென்றுமாம். ... (ச)

அரு.—நாலாம்பாட்டு. (தானாகவித்யாதி) கீழ்ப்பாட்டில் குருகைக் குறித்து, "கூறாய்" என்றவாறே வண்டானது வந்து முகங்காட்டி, "நீ யெங்களைத் தூதுவிட நாங்கள் மெய்மறந்திருந்தோமல்லோம், அவன் உன்படி

(க) சுo - அ - ௩. (உ) ரா - யு - ௫ - அ.

யறிந்துவைத்தும் இப்பாடுபடவிட்டு நினையாதிருந்தான், நாம்போறலும் பற்கடிந்திருந்தால் என்செய்வோமென்றிருக்தோமித்தனை" என்று ஸ்ரீநாசச்சொல்லிக்கொண்டேவர, அந்தைப்பார்த்து வார்த்தைசொல்லுகிறுளென்று ஸங்கதி

தாத்பர்யமருளிச்செய்கிறுர் (மேவம்பித்யாதி). (க) "வேம்பின்புழு ... பன்றியுண்ணுது" என்றவிடத்தில், அவன் குற்றத்தையிட்டு வேம்பை ... குறைசொன்னுற்போலே அவன்தன்னை நினையாதிருக்கை குற்றமென்று அவனுக்குக் குறைசொல்லுகிறுளென்று கருத்து. சப்தார்த்தம் (உடைமையையித்யாதி). தானுகவேநினைக்கைமுறை. அதுசெய்யாமல் போனுனுகிலென்று கீழருளிச்செய்து, தானுகையாலேயென்றும், தானுகைக்காகவென்றும், சப்தார்த்தம் விவக்ஷித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறுர் (அவனுக்கித்யாதி வாக்ய த்வயத்தாலே). ஸத்தையுண்டாகைக்காக நினைக்கவேணுமது செய்யாமல்போனுனுகிலென்றும், ஸத்தையுண்டாகைக்காக நினையாதேயிருந்தானுகிலென்றும், மூன்றும் தாத்பர்யத்தை யிரண்டுவிதமாக யோஜித்துக்கொள்வது. நினையாதவனை நாம் நினைப்பானென்னென்ன (நாமித்யாதி). மாட்டாமைக்கு ஹேதுவென்னென்ன (நாமுமித்யாதி). (ஒருநெஞ்சு) பேர்சொல்லப் போகாதகல்நெஞ்சு. நினைத்தால் நைவானென்னென்ன வருளிச்செய்கிறுர் (பெறவுமித்யாதி வாக்யத்வயத்தாலே). விரஹிணிகளை மதநன் வலிசெய்யுமது லோகப்ரஸித்தமாயிருக்க, "மெலிவேனே" என்று, க்லேசிக்கக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறுர் (தன்னையித்யாதி). யத்வா-"வேள்வலிசெய்ய" என்னவமைந்திருக்க, "ஓர்மிறுயகொடி" என்றதுக்குக் கருத்தாகவுமாம். (ஜீயர்வார்த்தை) ப்ரவேசத்தில் வார்த்தை.

அவன் நினையாமைக்கு ஹேதுவைக்காட்டுகிறதாகத் தாத்பர்யமருளிச்செய்கிறுர் (திருவாய்ப்பாடியிலித்யாதி. ... ... (ச)

மூ—வாளாய கண்பனிப்ப மென்முலைகள் பொன்னரும்ப
நாளுநும் நின்னினைந்து நைவேற்கோ மண்ணளந்த
தாளாளா தண்குடந்தை நகராளா வரையெடுத்த
தோளாளா என்றனக்கோர் துணையாளனுகாயே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மண்அளந்த	பூமியையளந்த	வரையெடுத்த	கோவர்த்தநத்தைக் குடையாகவெடுத்துப்பிடித்த
ஓதாளாளா	திருவடிகளையுடையவனே!	ஓ! தோளாளா	திருத்தோள்களையுடையவனே!
ஓ! தண்குடந்தைநகர்ஆளா	ஸ்ரமஹரமான திருக்குடந்தையில்கண் வளர்ந்தருள்பவனே!	வாளாயகண்பனிப்ப	வாள்போன்றகண்களிடைவிடாதுநீர் பெருக்கவும்

(ஞ) கக - அ - எ.

மெல்முலைகள் பொன் அரும்ப	ம்ருதுவானஸ்தநங்களில் வைவர்ண்யம் தோன்றவும்	நைவேற்கு என் தனக்கு	வருந்துகின்ற அடியேனுக்கு
நாள்நாளும்	ப்ரதிதிநமும்	ஓர் துணையாளன் ஆகாய்	ஒப்பற்ற ஸஹாயபூதனாகவேணும். (௫)
நின்நினைந்து	ரக்ஷகனான வுன்னையே நினைத்துக்கொண்டு		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (வாளாயவித்யாதி) †அத்தலை யித்தலையாய்த் தன்னைப்பெற வேணுமென்று நாளாசைப்பட்டு நோவுபடாநிற்கத்தான் தன்னைக் கொண்டருமைப் படுத்தினானென்று சொல்லுங்கோளென்று தூதர்க்கு வார்த்தைசொல்லப்புக்கு, அது தான் போய், பாவநாப்ரகர்ஷத்தாலே அவன் முன்னே நின்றானாகக்கொண்டு அவன்றனக்கு வார்த்தை சொல்லிச் செல்லுகிறது மேலிற் பாட்டுக்கள். ஸ்ரீராமாயணத்திற்படிபோலே யிருக்கிறதாயிற்று இதுவும். தூதர்க்கு வார்த்தை சொல்லாநிற்கச்செய்தே, பாவநா ப்ரகர்ஷத்தாலே அவன்றான் ஸந்நிஹிதனாகக்கொண்டு அவனுக்கு வார்த்தைசொல்லுகிறாளிறே! (க) "க்ஷமஸே தம் மஹீபதே - க்ஷமஸே தம் மஹீபதே" என்னுமாபோலே.

(வாளாய கண்பனிப்ப) †அத்தலை யித்தலையானபடி. எதிர்த்தலையிலே காணக்கடவ கண்ணீரிறே இவள் கண்ணிலே காண்கிறது. † பிறரைத் தோற்பிக்கைக் கீடான பரிகரமுண்டாயிருக்கக் கிடீர் நானிப்படிபட்டது. கையிலே ஆயுத மிருக்க முடிந்து கிடப்பாரைப் போலே. †அவன் போக வொருப்பட்ட ஸமயத்திலே, "போகாதே கொள்" என்று கண்ணாலே விலங்கிட்டு அநுபவிக்கலாயிருக்க, லஜ்ஜையாலே கவிழ்ந்திருந்து, "கெட்டேன்" என்கிறாள். † அப்போது அவனைக் கடாக்ஷித்து விட்டேனாகில் அவன்றான் தூதுவிடவிருக்கலாயிற்றே. (வாளாயகண்பனிப்ப)†ஓராளுமொரு நோக்கும் நேரான கண்கள்படி மெளிவரவே!. புலியாய்வைத்து உகிர்முறிந்தேன் என்கிறாள். †திருத்தாயார் சொல்லுமாபோலே சொன்னாளே தன்னைத் தானே ; †எல்லார்க்கு முள்ளது சொல்லலாயிருக்குமிறே. †அவன்றான் "இதொரு கண்ணழகே" என்று சொல்லக் கேட்டிருக்குமே! †அத்தலைக் குறுப்பான ஸ்வஸ்வரூபமும் ப்ராப்யாந்தர்க்கதமாயிருக்குமிறே. (மென்முலைகள் பொன்னரும்ப) முலைக்குக் காடிந்

(க) ரா - ஸு - ௩௮ - ௩௧.

யம் ஸ்வபாவமா யிருக்கச்செய்தேயும் மென்முலையென்கிறது -விரஹஸஹமல்லாதபடியாலே. விரஹஸஹமல்லாத முலைகள் பயலைமை பூக்க.

(வாளாய கண்பனிப்ப மென்முலைகள் பொன்னரும்ப) †தன்னைக்கண்டு கொண்டிருக்க வமைந்திருக்கிறது காணுமிவள்தனக்கும். இவள்தனக்கு மமையும், அவன்றனக்கு மமையும்.(௧)†"𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌿𑌭𑌿𑌃-ஸர்வதேஹிபி:" இறே.

[𑌆𑌹𑍍𑌲𑌾𑌦𑌶𑍀𑌤𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌃 - ஆஹ்லாதசீத நேத்ராம்பு:] பகவத்குணாநுபவஜநிதஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே குளிர்ந்த கண்ண நீருந் தானுமாயிருக்கை. [𑌪𑍁𑌲𑌕𑍀𑌕𑍃𑌤𑌗𑌾𑌤𑍍𑌰𑌵𑌾𑌨𑍍 - புளகீக்ருதகாத்ரவாந்]†த்ரிஸரமும் பஞ்சஸரமுமிட்டாற்போலே. [𑌪𑌰𑌗𑍁𑌣𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 - பரகுணாவிஷ்ட:] †உள்ளீடுமுண்டாயிருக்கை. [𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌿𑌭𑌿𑌃 - த்ரஷ்டவ்யஸ்ஸர்வதேஹிபி:] இப்படியிருப்பானொருவனுளனானால், அவனைக் காண்கையாயிற்று சரீரபரிக்ரஹம் பண்ணிவைத்தால் ப்ரயோஜநம். [𑌸𑌦𑌾𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃 - ஸதாத்ரஷ்டவ்ய:] இனி ஸதா தர்சநத்துக்கொருதேசவிசேஷந்தேடிச் சோறு பொதிந்துகொண்டு அறுகாதப்பயணம் போகவேண்டா.† அவனுக்குப் †பொருளவையிற் பிரியவேண்டா, பிரிகிறதுதான் பொருளுக்காகவே. "இம்முத்தையும் பொன்னையும் கொள்" என்று பாரித்துக்காட்டினாற்போலேயாயிற்று கண்ணநீரும் உடம்பில் வைவர்ண்யமுமிருக்கிறபடி. (௨) ஒண்முத்தும் பைம்பொன்னுமேந்தி" என்னக்கடவதிறே.

(நாணுளுமித்யாதி) வரவுதாழ்க்கைக்கு உன்னையொருநாள் நினைத்து மற்றொருநாள் மற்றொன்றை நினைக்கிறேனோ? (நாணும்) †ஒருநாள்நோவுபட்டு ஒருநாள் ஸுகித்திருக்கிறேனோ? (நின்னினைந்து நைவேற்கு)†என்னையன்றோ நீயறியாதது,†உம்மைநீரறியீரோ? "நம்மைப் பிரிந்தார் தரித்திருக்கமாட்டார்கள்" என்றிருக்கவேண்டாவோ. உன்னைக் கண்ணுடிப்புறத்திலுங் கண்டறியாயோ. (நின்நினைந்து நைவேற்கு) அநுஸந்தியா மடியேற்குமவளோநான். (௩) †"𑌦𑍇𑌹𑌿𑌮𑍇 - தேஹிமே" என்கிறவிது ஆற்றாமையிலே கிடக்கிறது.

(மண்ணளந்ததாளாளா) † அபேக்ஷையில்லாதார் தலைமேலே வைத்த திருவடிகள் இப்பொன்பூத்த முலைகளுக்கு அரிதாவதே! (ஓ

(௧) விஷ்ணுதத்வம். (௨) தி-வி-௧௧. (௩) யஜு-சாட-௧-அ-அ.

மண்ணளந்ததாளாளா) †ஆரபேக்ஷிக்கத்தான் நீ அன்றெல்லார்தலை மேலும் திருவடிகளைவைத்தது. ஆர்கண்ணில் கண்ணநீரும் ஆருடம்பில் வைவர்ண்யமும் கண்டுதான் திருவடிகளைக் கொண்டுவந்து வைத்தது. உன்னைப்பெறாதே விவர்ணமாயிருக்கிற இம்முலைமேலே திருவடிகளை வைத்தாலாகாதோ. (தண்குடந்தைநகராளா) அதற்குப் பிற்பட்டாருமிழவாமைக்கு வந்திருக்கிற தன்னேற்றந்தான் பெறலாகாதோ. (தண்குடந்தைநகராளா)†"இன்னமெல்லை நடப்பித்துக்கொள்வாரரேனுமுண்டோ" என்று ஶ்ரமஹரமான திருக்குடந்தையிலேவந்து சாய்ந்தபடி. (வரையெடுத்ததோளாளா) அங்ஙன், "பிற்பாடர்" என்கிற பொதுவன்றிக்கே, விசேஷித்து என் பருவத்திற் பெண்களையுமிடையரையும் ரக்ஷித்தவனன்றோ! (வரையெடுத்ததோளாளா) பசுக்களும் இடையரும் வர்ஷத்திலே தொலையப்புக, மலையையெடுத்துப் பரிஹரித்தானாயிற்று. †ஆஶ்ரிதர்க்குப் பணிசெய்த தழும்பாயாயிற்றுத் திருமேனியடையக் கிடப்பது; (க) "தழும்பிருந்த" இத்யாதி.

†"நம்மைச் சிலர் கட்டுகையாவதென்? நாம் சிலர்க்குக் கட்டுண்கையாவதென்? இது பின்னை நாடறிகையாவதென்"? என்று அத்தைமறைக்கப்புக்கான். ஒருதழும்பாகிலன்றோ உன்னால் மறைக்கலாவது, உன்னுடம்படங்கலும் ஆஶ்ரிதர்க்காகக் கார்யம்செய்தத்தால்வந்த தழும்பன்றோ என்கிறாள். (க) [தழும்பிருந்தசார்ங்கநாண் தோய்ந்தவாமங்கை] அழகிய திருக்கையானது ஜ்யாகிணகர்க்கசமாய்க்கிடக்கும்; அழகிய திருக்கையானது, ஸ்ரீசார்ங்கத்தைப் பிடிக்கையால்வந்த தழும்பைச்சுமந்தது; திருவடிகளானவை, சகடாஸுர க்ரஸநம்பண்ணி அத்தால் வந்த தழும்பைச் சுமந்தது. இனி, * வீங்கோதவண்ணர் விரல் செய்ததென்னென்றால், [பூங்கோதையாளித்யாதி] கிளர்த்தியையுடைத்தான ஓதம்போலேயிருந்துள்ள வடிவையுடையரானவருடைய திருவிரலானது, பிராட்டிக்காகவிறே சிறுக்கனுக்கு விரோதியான ஹிரண்யனைப் பிளந்துபொகட்டது; அப்படிப்பட்டவளுங்கூட, விளைவதறியாதே "இதென்னாகப்புகுகிறதோ" என்று அஞ்சும்படி ஹிரண்யன் மார்வைப் பிளந்து பொகட்டதழும்பிருந்த. உன்னையழித்து ஆஶ்ரிதர்க்காகப் பார்த்தநீ.(என்றனக்கோர் துணையாளனாகாயே)†அங்கொய்ய கோவர்

(க) க - திரு - உ௩.

ந்தந கிரியைப்பொகட்டு, என்னுற்றுமையிலே†பாதியைச்சுமக்கவல்லையே! (துணையாளனாகாயே) என்றது - ஆகவேணுமென்றபடி.   ()

அரு.—அஞ்சாம்பாட்டு. (வாளித்யாதி). கீழெல்லாம் தூதுவிட்டவள் இப்போது முன்னிலையாகச்சொல்லி நோவுபடுகையெங்ஙனேயென்ன; பேடிகாஸங்கதி யருளிச்செய்கிறார் (அத்தலையித்யாதி).

வ்யாக்யாதாவினுடைய ஈடுபாடு (அத்தலையித்யாதி வாக்யத்வயம்). தாத்பர்யம் (பிறரையித்யாதி). கண்ணனது ஆயுதமாகிற வழியென்னென்ன வருளிச்செய்கிறார் (அவனித்யாதி). ஹார்த்தபாவமருளிச்செய்கிறார் (அப்போதித்யாதி). சப்தார்த்தம் (ஓராளுமித்யாதி). (க)"குவளையங்கண்ணி" (உ) "பனிநெடுங்கண்ணீர்ததும்ப" என்று திருத்தாயார் சொன்னார்போலே என்று வ்யாக்யாதா அருளிச்செய்கிறார் (திருத்தாயாரித்யாதி). தாய்சொல்விற்றைத் தான்சொல்லலாமோவென்ன வருளிச்செய்கிறார் (எல்லார்க்குமித்யாதி). தன் கண்ணழகு தான் கண்டபடி யெங்ஙனேயென்ன (அவன்றானித்யாதி). தான்சொல்லப்போமோ வென்றதுக்குப் பரிஹாராந்தரம் (அத்தலைக்கித்யாதி).

"பனிப்ப" என்றும், "அரும்ப" என்றும் சொன்னத்தால் பலித்த அழகி னெல்லை நிலத்தை யருளிச்செய்கிறார் (தன்னையித்யாதி). பகவதநுபவபருடைய வடிவு வைத்தகண் வாங்கவொண்ணாதிருக்குமென்கைக்கு ப்ரமாண மருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதி). ஆஹ்லாத சீதநேத்ராம்பு: - பிந்துக்களிரண்டு பார்ஶ்வத்திலும் விழுகையாலும் புளகீக்ருத காத்ரவானானென்று விவக்ஷித்து, த்ருஷ்டாந்தமருளிச் செய்கிறார் (த்ரிஜடமுமித்யாதி). முத்துத்தார்வடங்கள் குளிர்த்தியால் மயிர்க்கூச்சுண்டாகப் பண்ணுமென்று திருவுள்ளம். வெளியிலாபரணம் பூண்டாற்போலே கண்ணீராய், இதுக்கு ஹேதுவான பகவத்குணாநுபவம் உள்ளுக்காபரணமென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (உள்ளீடித்யாதி). வினைமேல் பிரிவென்றும், பொருள்மேல் பிரிவென்றும் சில பிரிவுண்டு; அதில், வினைமேல் பிரிவாவது - ப்ரணயிநியை விட்டுப் போகவேண்டும்படி வேறொரு கார்யத்தைக்குறித்துப் பிரிகை; பொருள்மேல் பிரிவாவது - ப்ரணயிநியோட்டை போகத்துக்குறப்பாக த்ரவ்யார்ஜநம்பண்ணப்போகை; அவற்றில் வினைமேல் பிரிவில்லை என்னுமத்தைக் கீழருளிச்செய்தாராய், பொருள்மேல் பிரிவும்வர ஸம்பாவனையில்லை என்னுமத்தை உபபாதிக்கைக்காக, இரண்டுவிதமான பிரிவுவர ப்ரஸக்தியில்லை என்கிறார் (அவனுக்கித்யாதி). (பொருளவையில்) பொருள்வினையென்று சொல்லப்படுமவையில். '

"நாணாளும்" என்றத்தை "நினைந்து" என்றத்தோடு கூட்டித் தாத்பர்யமருளிச்செய்து, "நைவேற்கு" என்றத்தோடேகூட்டித் தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (ஒருநாளித்யாதி). "நின்" என்றதுக்குக் கருத்து

(க) உ - எ - க.   (உ) தி - ரு - கக.

(என்னையித்யாதி). § ("நைவேற்கு" என்று - நைகிறவெமக்கு என்றாய், எமக்கு என்கிற பஹுவசநத்தால் தோற்றுகிற கௌரவத்தை யருளிச்செய்கிறார் (உம்மையித்யாதி).) (க) * யாசநாந்தம்ஹி கௌரவமன்றோ, நீ "துணையாளனாகாயே" என்று ப்ரார்த்திக்கிறாயேயென்ன வருளிச்செய்கிறார் (தேஹீத்யாதி).

"மண்" என்றபதம் - லக்ஷணயா மநுஷ்யரைச் சொல்லிற்றாய், உட்கருத்தை யருளிச்செய்கிறார் (அபேக்ஷயித்யாதி). "ஓ" என்ற விஷாதத்தின்படியை விவரிக்கிறார் (ஆரித்யாதி). உட்கருத்தை யருளிச்செய்து, கீழ்ப்பதத்தோட்டை ஸமபிவ்யாஹார தாத்பர்ய கதநபூர்வகம் சப்தார்த்தமருளிச்செய்கிறார் (இன்னமித்யாதி). வரையெடுத்தமை தோளாலேயாயிருக்க "தோளாளா" என்று விசேஷிக்கையால், திருமேனியெல்லாம் ஆஸ்ரிதர்க்காகச் செய்தசெயலில் தழும்பேறினமை தோற்றுகையாலே விசேஷித்தாளென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதர்க்கித்யாதி).

எடுத்த பாசுரத்துக்கு வ்யாக்யாநம்பண்ணுவதாகக் கீழ்ப்பாட்டோடு ஸங்கதிகாட்டுகிறார் (நம்மையித்யாதி). (அந்நோய்ய) அந்தநோய்ப்பமான. தன்நோயைப்பார்த்தால் மலை ஸூக்ஷ்மமென்னலாமென்று கருத்து, (பாதி) என்றது - "துணை" என்றத்தைப்பற்ற. ... ... (ரு)

மூ.—தாராயதண்டுளவ வண்டுழுத வரைமார்பன்
போரானைக்கொம் பொசித்த புட்பாகனென்னம்மான்
தேராரும் நெடுவீதித் திருவாலி நகராளும்
காராயனென்னுடைய கனவளையும் கவர்வானே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வண்டு	வண்டுகளானவை		
தாராய	மாலிகையாகிய	தேர் ஆரும்	ரதநிலையையுடைத்
தண்துளவம்	திருத்துழாயிலுள்ள (தேனும்சுண்ணமும்வாஸனையுங்கொண்டு)	நெடு	பெரிதான [தாய்
		வீதி	திருவீதியையுடைய
		திருவாலிநகர்	திருவாலிநகரத்தில்
		ஆளும்	நித்யவாஸம் பண்ணுநிற்பவனாய்
உழுத	சேறாக்கின		
வரைமார்பன்	அகன்றதிருமார்பையுடையனாய்	காராயன்	ஶ்ரமஹரமான திருமேனியையுடையனுமான ஸர்வேஶ்வரன்
போர் ஆனை	யுத்தோந்முகமானகுவலயாபீடத்தின்		
கொம்புஒசித்த	தந்தத்தைமுறித்தவனாய்	என்னுடைய	தன்னையேநினைந்துநையும்அடியேனுடைய
புள்பாகன்	பெரியதிருவடியைவாஹநமாகவுடையவனாய் [வனாய்	கனவளையும்	கையிலிட்டபொன்வளைகளையும்
என் அம்மான்	எனக்குஸ்வாமியான	கவர்வானே	அபஹரியாநிற்பனே.

(க) § குண்டலிதம்பர்யாலோசநீயம்.

வ்யா.—ஆறும்பாட்டு. (தாராயவித்யாதி வரைமார்பன்) †தனக்கஸாதாரணமான திருத்துழாய்மாலையானது மதுவெள்ளமிட்டுச் சேறாயாயிற்றுத் திருமார்விருப்பது. †திருமார்வில் சாத்தின திருத்துழாய்மாலையில் தேனும் சுண்ணமும் பரிமளமும் புறப்பட்டுத் திருமார்வடங்கலும் வண்டலிட்டு வண்டுகளுழுது சேறுசெய்து கிடக்குமாயிற்று. இனி இவள் பொன்னரும்பின முலைகளைக்கொண்டுவந்து நடுகைக்கு நல்லவளவாயிற்று; இனி முலைகளைக்கொண்டுபோய் நடுமத்தனை. † ஆசையில்லாதாரே வேணும்போலே காணும் மார்வுக்கு; எப்போதுமொக்க அணைக்கலாம்படியாயிற்று அம்மார்விருப்பது. (போரானைகொம்பொசித்த) யுத்தோந்முகமான குவலயாபீடத்தின் கொம்பை அநாயாஸேந முறித்தவன். வருமிடத்தில் வழியில் ப்ரதிபந்தகந்தானுண்டோ. (புட்பாகன்) பெரியதிருவடியை வாஹநமாகவுடையவன். விரோதிநிரஸந ஸ்வபாவனுமாய், தான் வரும்போதே தூரத்திலே கண்டு விடாய் தீரலாம்படியான பரிகரத்தையுடையவன். (என்னம்மான்) †சோளேந்த்ரஸிம்ஹனிலிருப்பைக் காட்டியாயிற்று இவளை அநந்யார்ஹையாக்கிற்று.

(தேராரும்நெடுவீதி) தனக்கும் தன் பரிகரத்துக்கும் இணைந்து வருகைக்குவேண்டும் பரப்புப்போருமாயிற்று திருவீதி. (௧)†*தன்னேராயிரம் பிள்ளைகளோடே வரலாமாயிற்று. (காராயன்) ஶ்ரமஹரமான வடிவைக்காட்டி பஞ்சலக்ஷம் குடியிற்பெண்கள் வளை கவர்ந்தவன், என்கையில் வளை பெறுவிடில் உண்டதுநக்காட்டானாயிரா நின்றான். †ஸமகாலத்தில் பிறவாதார் வளையுங் கொள்ளவேணுமோ? † இவனுக்கு ஒரூராக வளைகொண்டதுவும் உண்டதுருக்காட்டுகிறதில்லைகாணும் இவள்கையில் வளை சேஷிக்கில். ... (௬)

அரு.—ஆறும்பாட்டு. (தாரித்யாதி). கீழ்ப்பாட்டில் "துணையாளனாகாயே" என்று முன்னிலையாகச் சொல்லாநிற்கச்செய்தேயும் அது உருவுவெளிப்பாடுமாத்ரமாகையாலே கைவளைகழலக் கண்டபடியாலே, முன்னிருந்தவன் கழற்றிக்கொண்டு மறைந்தானென்று தன்னிலேதான் நொந்துபடுகிறாளென்று ஸங்கதி.

"தண்டுளவவண்டு" என்னவமைந்திருக்க, "தாராய" என்றதாலே - (௨) "மதுவிரிதுழாய்முடி" என்று நிருபகமாயிருக்குமென்றருளிச்செய்கிறார் (தனக்கித்யாதி). சேறாகைக்கு மண்வேண்டாவோவென்ன வருளிச்செய்கி

---

(௧) பெரி-திரு-௩-௧-௧. (௧) தி-வாய்-௧௦-௬-௪.

ருர் (திருமார்விலித்யாதி). இளமுலை நடுமத்தனையாலுல் நடலாகாதோ, "வளைகவர்வானே" என்று நோவுபடவிடுவானென்னென்ன வருளிச்செய்கிருர் (ஆசையித்யாதி). இதுசாடு. ஆசையுடையனுலாகாதோ, ஆசையில்லாதாரே வேணுமோ என்று த்வநி. யத்வா - ஸம்ச்லேஷிக்கவேணுமென்னுமாசையில்லாத வண்டேயாகவேணுமோ என்னும் த்வநியாகவுமாம். "புட்பாகன்" என்ற பதஸமபிவ்யாஹார தாத்பர்யம் (சோளேந்த்ரேத்யாதி). ஸ்ரீசத்ருஞ்ஜயன் என்ருற்போலே, சோளேந்த்ரஸிம்ஹனென்று நம்பெருமாளானக்குத் திருநாமம். (௧) "𑌗𑌜𑍇𑌨 𑌮𑌹𑌤𑌾 𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 - கஜேந மஹதா யாந்தம்" என்று அயோத்யா ஜநங்களை ஈடுபடுத்தினுற்போலே, கோயில்பெருமாளும் அரங்கன் திருமுற்றத்தடியாரை ஈடுபடுத்துவர்; அப்படியே இவளும் பெரிய திருவடிமேலிருப்பி வீடுபட்டாளென்று கருத்து.

ஆயன் என்றபதத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிருர் (தன்னேரித்யாதி). "வளையும்" என்ற சகாரதாத்பர்யம் (ஸமகாலத்திலித்யாதி). வ்யாக்யாதாவினீடுபாடு (இவனுக்கித்யாதி). ... ... (௬)

மூ.—கொண்டரவத் திரையுலவு குரைகடல்மேல் குலவரைபோல்
பண்டரவி னணைக்கிடந்து பாரளந்த பண்பாளா
வண்டமரும் வளர்பொழில்சூழ் வயலாலி மைந்தா என்
கண்டுயில்நீ கொண்டாய்க்கென் கனவளையுங் கடவேனே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பண்டு	மஹாபலிமுதலானவர்களால்இப்பூமிக்குஅநர்த்தமுண்டாவதற்குமுன்னே	பாரளந்த	பூமியைஅளந்த
அரவம்திரைஉலவு	கோஷத்தையும்அலைகளையுமுடைய	பண்பாளா	நீர்மையையுடையவனே!
குரைகடல்மேல்	பரந்ததிருப்பாற்கடலில்	வண்டு அமரும்வளர்பொழில் சூழ்	வண்டுகள்படிந்துஓங்கினமரச்சோலைசூழ்ந்த
அரவினணை	திருவநந்தாழ்வான் மேலே	வயல்	கழனியையுடைய
குலவரைபோல்	ஓர்பெரியகுலபர்வதம் சாய்ந்திருந்தாற்போல்கிடந்து	ஆலி	திருவாலியிலிருக்கிற
கொண்டு	அத்தேசத்தைத் திருவுள்ளத்திலே பாங்காகக்கொண்டு (பின்பு அம்மஹாபலியால் அநர்த்தம்விளைந்தவாறே)	மைந்தா	யுவாவானவனே!
		என்கண் துயில்	என்தூக்கத்தை
		நீகொண்டாய்க்கு	முற்றுமபஹரித்தவனுக்கு
		என்கனவளையும்	என்கையிலுள்ளபொன்வளையும்
		கடவேனே	இழக்கக்கடவேனே.

(௧) ரா-அ-௨-௨௨.

வ்யா.—ஏழாம்பாட்டு. (கொண்டு) ரக்ஷணத்துக்குப் பாங்காய் ஆர்த்தருடைய கூக்குரல் கேட்கும் தேசமிதுவென்று திருவுள்ளத்திலேகொண்டு. †ஆரவாரத்தை யுடைத்தாய்-கோஷியா நிற்பதாய், திரைகளானவை ஸஞ்சரியாநிற்பதாய், பரப்பையுடைத்தான திருப்பாற்கடலிலே ஒருகுலகிரி சாய்ந்தாற்போலேயாயிற்றுத் திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறபடி. குரையென்று-பரப்புக்குப்பேர். அக்கடல் பாழ்திரும்படி ஒருகுலகிரி சாய்ந்தாற்போலே. (பண்டு) மஹாபலிபோல்வாரால் பூமி நோவுபடுவதற்கு முன்பாயிற்று அப்படுக்கையில் கண்ணுறங்குவது. (பாரளந்தபண்பாளா) படுக்கையைவிட்டுவந்து இத்தையடைய அளந்துகொண்டானாயிற்று. ஆக, மஹாபலியாலே அபஹ்ருதமான பூமியைமீட்டு இந்த்ரனுக்குக் கொடுத்த நீர்மையை யுடையவனே!.

(வண்டமருமித்யாதி) அந்நீர்மைக்குப் பிற்பாடரானாரு மிழவாமைக்காகவாயிற்றுத் திருவாலியிலேவந்து நிற்கிறது. பரிமளம் படிந்தாற்போலே வண்டுகள்படிந்து மதுபானம் பண்ணுகின்றுள்ள ஓங்கின பொழிலாலே சூழப்பட்டவயலை யுடைத்தான திருவாலியிலே நிற்கிறவனே! திருப்பாற்கடலில் நின்றும் ஸ்ரீவாமநனாயவதரித்து பூமியை யகப்படுத்திக்கொண்டாற்போலே யாயிற்று திருவாலியிலே வந்து நிற்கிற தன் ஸௌலப்யத்தைக்காட்டி இவரையகப்படுத்தினபடி. (என் கண்டுயில் நீ கொண்டாய்க்கு) திருவாலியிலே உத்தேஸ்ய வஸ்து ஸுலபமாயிற்றென்றவாறே, கண்ணுறக்கம் குடிபோயிற்றாயிற்று. (என்கனவளையுங்கடவேனோ) என்†னுடம் பிலுள்ளது வேணுமாகில் கொள்ளுகிறாய். †நான் பொன்னிட்டுக்கொண்டவளையிலென்னப்ராப்தியுண்டு. †அவனும் †பொன் கொடுத்திறே கொண்டுபோகிறது. † இவனுக்கும் இவளுடம்பிலுள்ளது கொள்ளும்போது இவள் * மேலெழுத்திட வேண்டாகாணும். ஸ்வாபாவிகமானத்தோடு ஔபாதிகமானத்தோடு வாசியின்றிக்கே, என்னதென்னுமித்தனையோ நீ கொள்கைக்கு வேண்டுவது. †அவனித்தை விரும்பப்புக்கவாறே என்னது என்று ஒருதலை தானும் பற்றுகிறாள். (௭)

* "மேலெழுந்தது வேண்டாகாணும்" என்று சில ஸ்ரீகோசங்களில் பாடம். அதுக்கநுகுணமாக, மேலெழுந்தவளையைக்கொள்ளுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (இவனுக்குமித்யாதி வாக்யத்வயத்தாலே). மேலெழுந்தது வேண்டாகாணுமென்றது - ஸாமாந்யமானதாகாது, ஶ்லாக்யமானவளையாகவேணுமென்றபடி" என்று அரும்பதாந்தரம்.

அந.—எழாம்பாட்டு. (கொண்டித்யாதி). கீழ்ப்பாட்டிலே, "கனவளையுங் கவர்வானோ" என்று தன்னிலே நொந்தவாறே, கழற்றிக்கொண்டு போனவளையைக் குலுக்கிக்கொண்டு முன்னே தோற்ற, அவனைப்பார்த்து, என்வளைக்கு நான் கடவளல்லேனோ என்று பறிக்கத் துடங்குகிறாளென்று ஸங்கதி.

விவரணம் (இவ்விடமித்யாதி). "அரவம்" என்றதினர்த்தம் (ஆரவாரத்தை) என்றது.

(உடம்பிலுள்ளது) நித்ரை. கடவளல்லேனோ என்று சப்தார்த்தம் விவக்ஷித்தருளிச்செய்கிறார் (நானித்யாதி). ஸ்த்ரீதநமான பொன்னிட்டுக்கொண்டவளையை அவன் கொள்ளக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (அவனுமித்யாதி). (பொன்கொடுத்து) வைவர்ண்யத்தைக்கொடுத்து. ஆகில், இவளிசைவு வேண்டாவோவென்ன (இவனுக்குமித்யாதி). ப்ராப்தனாகையால் அவன் பொன்னிட்டே அவள் கைவளையைக்கொண்டானென்று கருத்து. அவனப்படி கைக்கொண்டால் இவள் என்னது என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (அவனித்யாதி). ... ... (எ)

மூ.—குயிலாலும் வளர்பொழில்சூழ் தண்குடந்தைக் குடமாடி
துயிலாத கண்ணிணையேன் நின்னினைந்து துயர்வேனோ
முயலாலு மிளமதிக்கே வளையிழந்தேற் கிதுநடுவே
வயலாலி மணவாளா கொள்வாயோ மணிநிறமே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
குயில்ஆலும்	குயில்கள்பாடாநின்ள	இளமதிக்கே	பருவம்நிரம்பாத சந்த்ரனுக்கே
வளர்பொழில் சூழ்	ஓங்கினசோலைசூழ்ந்த	வளையிழந்தேற்கு	வளைகளையிழந்தவடியேனுக்கு
தண்குடந்தை	குளிர்ந்ததிருக்குடந்தையில்வர்த்தியாநிற்கிற	வயலாலிமணவாளா	கழனிசூழ்ந்ததிருவாலியிலுள்ளஸ்வாமியே!
குடமாடி	குடக்கூத்தாடினவனே!	இதுநடுவே	இப்பாதக வர்க்கத்தின்நடுவே (நீயும்வந்து)
துயிலாத	உறக்கங்கொள்ளாத	மணிநிறமேகொள்வாயோ	அழகியநிறத்தையும்கைக்கொண்டுதுன்பத்தைப்பண்ணுவாயோ. (அ)
கண்ணிணையேன்	கண்ணிணையுடையஅடியேன்		
நின்நினைந்து	உன்னையேநினைத்துக்கொண்டு		
துயர்வேனோ	துக்கிக்கக்கடவேனோ;		
முயலாலும்	தன்னுடம்பில்துள்ளுகிறமுயலையுடையனாய்		

வ்யா.—எட்டாம்பாட்டு. (குயிலாலு மித்யாதி)†அவ்வூரில்குயில்கள் ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுகிற்குமாயிற்று. †அவ்வூரில் குயில்களானவை மதுபாநம்பண்ணிக்களித்தாலியா நிற்குமாயிற்று. †இவ்வூரில் குயில்களொன்றுமிறே உருவிக்கிடக்கிறது இடைப்பெண்களடையக் காணலாம்படிமன்றிலே குடக்கூத்தாடி தன்னழகை ஸர்வஸ்வதாநம் பண்ணினவன் பிற்பாடரிழவாமைக்காகத் திருக்குடந்தையிலே ஸுலபனுனென்றவாறே உறக்கம் குடிபோயிற்றுயிற்று. அவன் ப்ரத்யாஸந்நனுனென்றவாறே உறக்கம் குடிபோயிற்றுயிற்றிவளுக்கு. †உறங்காமைக்கு இரண்டு லக்ஷ்மணர்களைப்போலேயாயிற்றுக் கண்களிரண்டும். இளையபெருமாள் பிறந்த முஹூர்த்தத்திலேயாயிற்று இவள் கண்களும் பிறந்தது. (க) † "ஜஹௌ"என்று ஒருநாளாக விடவேண்டாவாயிற்று. †ஆந்தர த்ருஷ்டியுமுறங்காதபடி பண்ணவேணுமோ. இக்கண்ணுக் கிலக்காகாவிட்டால் உட்கண்ணுக்கிலக்காகவேணுமோ. (உ) "நெஞ்சென்னுமுட்கண்" என்னக்கடவதிறே. அணைக்கவொட்டா விட்டால் அகவாய் பெரியதிருநாளாய்ச் செல்லவேணுமோ. (துயர்வேனோ) மறந்து † பிழைத்தாலோ நாங்கள்.

(முயலாலுமித்யாதி)†நீ †கைதொடனுய் நலியவேண்டும்படியோ என்தசை யிருக்கிறபடி.†தன் கறைகழுவவும் மாட்டாதே தன்குறை பரிஹரிக்கவும் மாட்டாத சந்த்ரனுக்கு வளையிழந்தன்றோ நானிருக்கிறது. †தன்னுடம்பிலே துள்ளுகிற †முயலைப்போக்கவும் மாட்டாதே, பருவம் நிரம்பாதேயிருக்கிறவனுக்கு வளையிழந்தேற்கு. (இது நடுவேயித்யாதி) †விபூதியையிட்டு நலிகையன்றிக்கே, நீரும் தூசியேறப் புக்கீரோ; - †போரிலே த்வந்த்வயுத்தம் பண்ணு நிற்கச் செய்தே நடுவேவந்து பொருவாரைப்போலே. †விடுநகமும் சம்மட்டியுமிட்டு நலியாநிற்க "அதுபோராது" என்று உடையவன்தானே நலியுமாபோலே. விபூதியையிட்டு நலிகைதவிர்த்து நீதானே கைதொடனுய் நலியப்பார்த்தாயோ. (கொள்வாயோமணிநிறமே) அவன் கூடவிருந்தபோது, "இதொரு நிறமே!" என்று வாய்புலற்றக்கேட்டிருக்குமே;அல்லது,தன்வடிவைத்தானே ஶ்லாகிக்கிறுள்ன்றே.(அ)

(க) ரா -   (உ) பெரியதிரு வ-உச.

அரு.—எட்டாம்பாட்டு. (குயிலித்யாதி) கீழ்ப்பாட்டில், "என் கனவளையும் கடவேனே" என்று தானுமொருதலைபற்றி மன்றாடாநிற்குமளவிலே, சந்த்ரோதயமாக, அவனிவளுக்கு உத்தீபகனாய் நலியவே கைவளைகழன்று வீழ, அவ்வளவிலும் அவளைக்கொண்டுபோகாதே முன்னிலையாய்த் தோற்றி நின்றபடியைக்கண்டு நிறமிழக்கிறவளவுமாய், அவனைப்பார்த்து, நீ "நிறக்கேடாக்கிக்கொள்வாயோ" என்றுசொல்லுகிறாளென்று ஸங்கதி.

(அவ்வூரில்) திருக்குடந்தையிலென்றபடி. ஹேதுகதநபூர்வகம் விவரிக்கிறார் (அவ்வூரிலித்யாதி). உட்கருத்து (இவ்வூரிலித்யாதி). துயிலாதநான் என்னவமைந்திருக்கவும் கண்ணிணைகள் துயிலாதவென்று விசேஷித்ததுக்கு ஸத்ருஷ்டாந்தம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உறங்காமைக்கித்யாதி). காண்கையிலாசை கண்களுக்கு ஸ்வாதந்த்ர்யேண பிறந்ததென்று கருத்து. இளையபெருமாள் பிறந்த முஹூர்த்தத்திலே பிறந்தனவாகில், பிறந்தநாள் துடங்கி உறங்காதவரன்றிக்கே காட்டுக்கெழுந்தருளின போதன்றோ நித்ரையின்றிக்கே யிருந்ததென்ன; ஆம், இங்கு விசேஷமுண்டென்று விசேஷத்தையருளிச்செய்கிறார் (ஜஹாவித்யாதி). "நினைந்து" என்றபதத்துக்குத் தாத்பர்யம் (ஆந்தரேத்யாதி வாக்யசதுஷ்டயமும்). (பிழைத்தாலோ) பிழைத்தாலாகாதோவென்றபடி.

"இளமதிக்கே" என்கிற அவதாரண தாத்பர்யமருளிச்செய்கிறார் (நீயித்யாதி). (கைதொடனாய்) ஸஹாயமாய், மதிக்கு விசேஷணமிட்டத்தால் பலித்தவர்த்தமருளிச்செய்கிறார் (தன்னித்யாதி). வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (தன்னுடம்பிலேயித்யாதி). (முயலை) சசத்தை. (விமூதி) என்றது - சந்த்ரனை. கீழ்வாக்ய விவரணம் (போரிலேயித்யாதி). (விடுகம்) விரல்கிட்டி. ... (அ)

மூ.—நிலையாளா நின்வணங்க வேண்டாயே யாகிலுமென்
முலையாள வொருநாளுன் னகலத்தா லாளாயே
சிலையாளா மரமெய்த திறலாளா திருமெய்ய
மலையாளா நீயாளவளை யாளமாட்டோமே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சிலையாளா	ஸ்ரீகோதண்டக் கையனே!	என்முலையாள	என்முலைகளாட்செய்யும்படி
மரமெய்ததிறலாளா	மராமரம் வேரோடு விழக்கணையிட வல்லவனே!	ஒருநாள்	ஒருநாளாகிலும்
திருமெய்யமலை ஆளா	திருமெய்யத்தில் கண்வளருமவனே!	உன் அகலத்தால் ஆளாய்	உன் அகன்றமார்பாலணைத்து என்னை நிர்வஹிக்கவேணும்;
நிலையாளாநின் வணங்க	நான் அநந்யப்ரயோஜநனாயுன்னையாஸ்ரயிக்க	நீ ஆள வளையாளமாட்டோமே	நீ பரிக்ரஹித்தபின் வளைகளை நிர்வஹிக்க சக்திதேடமாட்டோமே. (௯)
வேண்டாயேஆகிலும்	வேண்டேனென்றிருந்தாயேயாகிலும்		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (நிலையாளாவித்யாதி) †ஸத்தையுள்ள தனையுமவன்திருவடிகளிலே வணங்கி வர்த்திக்கு மிதுவேயாயிற்று ஸ்வரூபத்தோடு சேர்ந்த செயலாவது. (நின்னித்யாதி)†அதப்படியே யானாலும், "இவனுமிப்பேற்றைப் பெறுவான்" என்று அவன் நினைக்கிலிறே அது ஸித்திப்பது. (நிலையாளா நின்வணங்க §(வேண்டாயேயாகிலும்)) †கிடைக்கில்பெறவேண்டியிருப்பது இதுகாணும். †கடக்கநின்று †ஒரு ப்ரயோஜநங்களைக்கொண்டு போகையன்றிக்கே கிட்டநின்று அவன்திருவடிகளிலே நித்யகைங்கர்யம் பண்ணவாயிற்று ஆசைப்படுவது.†ப்ராஹ்மணர் பிச்சேறினும் ஓத்துச்சொல்லுமாபோலே, தலைமகளான ஸமயத்திலும் சேஷத்வாநுரூப வ்ருத்தியையே யாசைப்படுகிறாளிறே. (நிலையாளாநின்வணங்க) என்றத்தாலே ப்ராப்ய நிஷ்கர்ஷம் பண்ணிற்று; (வேண்டாயேயாகிலும்) என்கையாலே ப்ராபகநிஷ்கர்ஷம் பண்ணிற்று. அவன் வேண்டியிராதவன்று இப்பேறு கிடையாதிறே.†இதுநமக்கு உபேக்ஷாவிஷயம்-†வேம்பென்றிருந்தாயே யாகிலும். (என்முலையாள) நான் ஸத்தைகொண்டு நிர்வ்ஹித்தேனும்படியாக; (க)†"கொங்கைகிளர்ந்துகுமைத்து" என்று க்ஷாமகாலத்தில் ப்ரஜைகள் "சோறு சோறு" என்று அலைக்குமாபோலே இம்முலைகளுக்காற்ற மாட்டாதே நோவுபடுமது தவிர்ந்து என்னுடைய ஸ்த்ரீத்வங்கொண்டு நிர்வஹித்தேனும்படி. (என்முலையாள) மத்தகஜத்தைக்கட்டி ஆள்வாரைப்போலே என் முலையை நான் நிர்வஹிக்கைக்காக. †நமக்கபேக்ஷையின்றிக்கே யிருக்கச்செய்தே உன் ப்ரயோஜநத்துக்காக நம்மையிப்படி செய்யச்சொன்னாலது செய்யப்போமோ வென்ன, (ஒருநாள்) நித்யமாய்வருமது தவிருகிறது; ஒருநாள் பிறருகந்தவகைகளிலே பரிமாறினாலாகாதோ. (ஒருநாள்) பலநாள்வேணுமென்றிருக்கவேண்டா, †ஒருநாளாகிலுமமையும். †அவ்வொருநாள் என்னெஞ்சிலில்லையாகில் செய்யப்போமோவென்ன, (உன்னகலத்தாலாளாயே) உன்நெஞ்சை நீ உகந்தார் பக்கலிலேவைத்து உடம்பைக் கொண்டணையவமையும்.

† நெஞ்சை நினைத்தார்க்கு வைப்பது, வேறு மார்வாலெங்களையணைவது, இப்படிதான் செய்யவேண்டுகிறதென், † வேண்டியிராத விஷயத்திலே †யொருநாள்தான் செய்யவேண்டுவதென்னென்ன, (நிலையாளா) என்†ஆர்த்தத்வநி கேளாமைக்காக. (உ)†"[illegible]-

§ குண்டலிதம் க்வாசித்கம்.   (க) நா-தி-டு-எ.   (உ)

க்ஷத்ரியைர்த்தார்யதே" என்கிறபடியே ஆர்த்தத்வநி கேளாமைக் காக்ரு நீர்விற்பிடித்துக் கொண்டிருக்கிறது. நாம் விற்கொண்டு எங்கே காயங்கொள்ளக்கண்டு வளைக்கிறதென்ன; (மரமெய்ததிறலாளா) உன்னை விஸ்வஸியாதார்க்கும் மழுவேந்திக் கார்யம் செய்யுமவனன்றோ; உன்னையாஸ்ரயித்த மஹாராஜரார்த்தி போக்குகைக்காக மராமரங்களையெய்து மழுவேந்திக் கொடுத்திலையோ. பின்னை நீரும் அவ்வவதாரத்திலே வந்து உதவிற்றிலீரே யென்ன; (திருமெய்யமலையாளா) அவ்விழவு தீர்க்கைக்காக வன்றோ திருமெய்யத்திலே வந்துசாய்ந்தருளிற்று.† இருந்தபடியால் உன்பரிக்ரஹமாகையும் கையில் வளைதொங்குகையு மென்றொரு பொருளுண்டோ? †இப்போது தன்னுற்றாமையாலே யொன்றைச் சொல்லுகிறாளத்தனைபோக்கி, ஒருகாலும் கையில் வளைதொங்குகைக்கு விரகில்லைகாணும். கிட்டினால் தானேஹர்ஷத்தாலே பூரித்து நெரிந்திற்றுப்போம்; பிரிந்தானாகில், தானேகழன்றுபோம். † உன்னுடைய பரிக்ரஹமாய் எங்களுடைய ஸ்த்ரீத்வங்கொண்டு நோக்குகையென்றொரு பொருளுண்டோ? †அம்மங்கியம்மாளுடைய சரமதசையிலே நஞ்சீயரறியவெழுந்தருளினவர், அவர்படுகிற க்லேசங்களைக்கண்டு, "இங்குத்தை ஆசார்யஸேவைகளும் பகவத் குணங்களைக்கொண்டு போதுபோக்கினபடிகளெல்லாங் கிடக்க அல்லாதாரைப்போலே † இப்படிபடவேண்டுவதே!" என்ன, "நீயாளவளையாள மாட்டோமே" என்றன்றோ-பகவத்பரிக்ரஹமானால் க்லேசப்பட்டே போமித்தனைகாணும்" என்றார். †புறப்பட்ட பின்பு நஞ்சீயர் பிள்ளையைப்பார்த்து, "முடிகிற விவ்வளவிலேயு மிவ்வார்த்தை சொல்லுகிறது விஸ்வாஸத்தின் கனமான பாவபந்தத்தி லூற்றமிறே" என்றருளிச்செய்தார்.

ஆக, இப்பாட்டால் - ப்ராப்ய நிஷ்கர்ஷமும், ருசியுடையார் படியையும், சரண்யன்படியையும், அவனுக்கு ரக்ஷகத்வம் கண்ணழிவற்றிருக்கிற படியையும், இத்தலையில் அபேக்ஷை குறைவற்றிருக்கிறபடியையும், இவையெல்லாவற்றையும் சொல்லுகிறது. (நிலையாளா) என்கையாலே - நித்யகைங்கர்யம் பெறுகையே ப்ராப்யமென்னுமிடம்சொல்லுகிறது; (வேண்டாயேயாகிலும்) என்கையாலே - உபாயபாவமு மவன்பக்கலிலே யென்னுமிடம் சொல்லிற்று. (என் முலையாள ஒருநாள்) என்கையாலே-ருசியுடையார் படிசொல்லிற்று; (சிலையாளா) என்கையாலே - சரண்யதைசொல்லிற்று; (மரமெய்த)

என்கையாலே - ரக்ஷகத்வம் கண்ணழிவற்றிருக்கிறபடியையும், இத் தலையிலபேக்ஷை குறைவற்றிருக்கிறபடியையும், இவையெல்லா வற்றையும் சொல்லுகிறது. ... ... (கூ)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (நிலையாளாவித்யாதி) கீழ்ப்பாட்டில், "கொள் வாயோ மணிநிறமே" என்னச்செய்தேயும், அவனிவளுக்கு முன்னிலையாய்த் தோற்றின மாத்ரமாகையாலே ஒருபடியே தோற்றிக்கொண்டுநிற்க, அது முன்னிலையாகத்தோற்றினமாத்ரமென்றறியாதே அவன்றானே தன்னை வேண்டாதிருக்கிறானாகக்கொண்டு, தான் திருமுலைத்தடங்கள் அணைக்கை யிலே கணிசிக்க, செய்வதறியாதே அவனைக் கலவியிரக்கிறாளென்றுஸங்கதி.

நிலைநின்ற ஆளாய்க்கொண்டு நின்னைவணங்கி நித்யகைங்கர்யம்பண்ண உனக்குவேண்டாவிட்டாலும் என்று சப்தார்த்தமாய்த் தாத்பர்யமருளிச்செய் கிறார் (ஸத்தையித்யாதி). கைங்கர்யத்தை வேண்டுமவர் தாமாயிருக்க அவனை "வேண்டாயேயாகிலும்" என்கிறதென்னென்ன வருளிச்செய்கிறார் (அது வித்யாதி). "ஆகிலும்" என்றதுக்குத் தாத்பர்யம் (கிடைக்கிலித்யாதி). நிலை யாளாய் வணங்குகையே பரமபுருஷார்த்தம், அதுகிடையாமையால், "அக லத்தால் ஒருநாள் ஆளாய்" என்கிறாளென்று கருத்து. விவரணம் (கடக்க வித்யாதி). (ஒருப்ரயோஜநம்) என்று - ஸ்வார்த்தமான காதாசித்க ஸம்ஶ்லே ஷமென்றபடி. நாயிகையாயிருக்குமிவளுக்கு ஸம்ஶ்லேஷத்தை ப்ரார்த்திக் கையே புருஷார்த்தமாமித்தனைபோக்கி, சேஷவ்ருத்தியை யபேக்ஷிக்கக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (ப்ராஹ்மணரித்யாதி). ப்ராஸங்கிகமாக ப்ரமேயசிக்ஷைசெய்தருளி, வேண்டாயாகிலுமென்னாதே, "வேண்டாயே" என்கிற எவகாரத்துக்குக் கருத்தருளிச்செய்கிறார் (இதுநமக்கித்யாதி). (வே ம்பு) என்றது - தாத்பர்யாந்தரம். அதாவது - த்யாஜ்யமென்றபடி. கீழ்வாக் யத்தை விவரிக்கிறார் (கொங்கையித்யாதி). மேலுக்கவதாரிகை (நமக்கித் யாதி). (உபேக்ஷாவிஷயம்) என்றத்தைப்பற்ற, "ஒருநாள்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்து, (வேம்பு) என்ற தாத்பர்யாநுகுணமாக, "ஒருநாள்" என்றதுக்கு உக்திப்ரத்யுக்திரூபேண வருளிச்செய்கிறார் (வேண்டியித்யாதி). (வேண்டியிராதவிஷயத்தில்) வேம்பானவிஷயத்தில். (ஒருநாள்தான்) என் றது - ஒருநாளாகிலுமென்றபடி. (ஒருநாளாகிலுமமையும்) என்றது-உனக்கு வேம்பானாலும் வேப்பங்குடிநீர்போலே ஸ்வீகரிக்கலாமென்றபடி. இத்தால் - உனக்குக் கைதவம், எனக்கு இனிதானத்தைச் செய்யவேணுமென்று ப்ரார்த்திக்கிறாளென்றதாயிற்று. பரார்த்தமாகவாகிலும் செய்யவேணும் என் னும் நினைவு வேண்டாவோ என்னும் சங்கையையநுவதித்து, "அகலத்தால்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவ்வொருநாளித்யாதி).

அநுவாதபூர்வகம் மேலுக்கவதாரிகை (நெஞ்சையித்யாதி). கீழ்ப்பண் ணின ப்ரஶ்நத்துக்குத்தரம் (ஆர்த்தத்வநி கேளாமைக்காக) என்றது. இவ்

வர்த்தம் இந்தபதத்தில் பலிக்குமோவென்ன வருளிச்செய்கிறார் (க்ஷத்ரியை ரித்யாதி). "நீயாள" இத்யாதிக்குக்கருத்து (இருந்தபடியாலித்யாதி). (இருந்தபடியால்) என்றது - நீமெய்ய மலையாளனாய்வைத்தும் என்முலையாள ஒரு நாளாளாதே யிருந்தபடியாலென்றபடி. நீ யென்னையாளவும் நான்வளையாளவும் இருவரும் மாட்டோமேயென்று சப்தார்த்தமாகையால், அவனிவளையாளமாட்டினால், அத்தால் இவள் இவ்வளையை ஆளவல்லளோவென்ன; வ்யாக்யாதா பரிஹரிக்கிறார் (இப்போதித்யாதி). ஆற்றாமையால்சொன்ன பாசுரமத்தனையென்று கருத்து. நான் திருமெய்யமலையாளனாய் உன்போல்வார்க்கு வந்திருக்கிறேனென்றறிந்துவைத்து, "உன்னகலத்தாலாளாயே" என்று நாணமற்றுச்சொல்லுகை உன் ஸ்த்ரீத்வத்துக்குச் சேருமோவென்னும் சங்கைக்குப் பரிஹாரமாக, "நீயாள வளையாளமாட்டோம்" என்கிறாளென்று தாத்பர்ய மருளிச்செய்கிறார் (உன்னுடையவித்யாதி). நீயாளுகையாலே நாங்கள் வளை யாண்டிருக்கமாட்டோமென்று சப்தார்த்தம். இத்தால் - குணாதிகவிஷயமாகையால் ஆறியிருக்கமாட்டோமென்கை. "வளையாளமாட்டோமே" என்கிற அவதாரணத்துக்கு - பகவத்பரிக்ரஹமானார்க்கு துஃகமேசேஷிக்குமென்றுகருத்தாய், அதுக்கு ஸம்வாதம்காட்டுகிறார் (அம்மங்கியித்யாதி). (இப்படிபடவேண்டுவதே) என்றது - ஆசார்யஸேவை,பகவத்குணாநுபவம், இவையேகாலக்ஷேபமாயிருக்கிற உமக்கு, அதுக்கவகாசமில்லாதபடி ஸம்ஸாரிகளைப்போலே நோவுபடவேண்டிற்றேயென்கை. "க்லேசப்பட்டேபோமித்தனை" என்னப்போமோவென்ன; பாவபந்தத்திலுறைப்பாலே அங்ஙன்சொன்னாரென்று கருத்தை வெளியிட்டபடியையுங்காட்டுகிறார் (புறப்பட்டவித்யாதி).

மூ.—மையிலங்கு கருங்குவளை மருங்கலரும் வயலாலி
நெய்யிலங்கு சுடராழிப் படையானை நெடுமாலைக்
கையிலங்கு வேற்கலியன் கண்டுரைத்த தமிழ்மாலை
ஐயிரண்டு மிவைவல்லார்க் கருவினைக ளடையாவே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கையிலங்குவேல்கலியன்	கையிலேப்ரகாசிக்கிறவேலையுடையஆழ்வார்	சுடர்	புகரையுடைய
மைஇலங்குகருங்குவளை	அஞ்சநம்போல்விளங்குகிறகறுத்தகுவளைமலர்கள்	ஆழிப்படையானை	திருவாழியைக்கையிலேந்திய
மருங்கு	பர்யந்தத்திலே	நெடுமாலை	ஸர்வேஶ்வரனை
அலரும்	விகஸியாநின்றுள்ள	கண்டு	எதிரில்கண்டு
வயல்	கழனிசூழ்ந்த	உரைத்த	அருளிச்செய்த
ஆலி	திருவாலியிலேயிருக்கிற	தமிழ்மாலைஐயிரண்டும்இவைவல்லார்க்கு	தமிழ்த்தொடைபத்தும்நன்றாக அறியவல்லவர்களுக்கு
நெய்	கூர்மையுடைத்தாய்	அருவினைகள்	துஷ்கர்மங்கள்
இலங்கு	விளங்காநின்ற	அடையாவே	சேரமாட்டா. (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (மையிலங்கித்யாதி) † இதுவாயிற்று பயிரேறுதேதரிசான நிலமிருக்கும்படி. †ஊரில் தரிசுகிடக்கும் நிலமிருக்கும்படியிதுவாயிற்று.†மையானது மிகவும் விளங்காநின்றுள்ள கறுத்த குவளைப்பூக்களலர்ந்து கிடக்குமாயிற்று பர்யந்தங்களடைய. † நாள்செல்ல நாள்செல்லக் குறைந்துவருகையன்றிக்கே நிறமுஜ்ஜ்வலமாகாநின்றுள்ள கருங்குவளைகளானவை அலருகிற பர்யந்தங்களையுடைத்தான வயலையுடைய திருவாலி. (நெய்யிலங்கித்யாதி) † புறம்பு அவையும் உள்ளில் அவனுடையநிறமுமாய் முன்னடிதோற்றுதாயிற்று கையில் திருவாழியன்றாகில். (நெய்யிலங்கித்யாதி) † வடிவிலிருட்சிக்கும், குவளைப்பூவால்வந்த இருட்சிக்கும், கையில் திருவாழியால்வந்தவொளியல்லவாகில்முன்னடிதோற்றுதுகாணும். (நெடுமாலை) தூதுவிடவும் வார்த்தைசொல்லவும்மாட்டாதே நிற்கிறான்போலேகாணும். தூதுவிடமாட்டாதபடியாயிற்று அத்தலை பட்டுக்கிடக்கிறது. இத்தலை (க) "𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌮𑌾𑌸𑌾𑌨𑍍𑌨 𑌜𑌿𑌵𑌿𑌷𑍍𑌯𑍇 - ஊர்த்வம் மாஸாந்நஜீவிஷ்யே" என்றால், (௨) "𑌨 𑌜𑍀𑌵𑍇𑌯𑌮𑍍-நஜீவேயம்" என்னுமத்தனையிறே அத்தலை. (கையிலங்கு) †பட்டர், "ஸர்வேஶ்வரன் திருமங்கையாழ்வார்க்குப் பக்கக்குதிரை யேறிப் போமாகாதே! அவன்கையில் திருவாழி அழகுக்குடலாக ஒப்பித்திருக்குமத்தனை, இவர்கையில் வேல் சத்ருநிரஸநத்தாலே கறைகழுவ அவஸரமின்றிக்கே யிருக்குமாயிற்று". † அவன் சேஷித்வ ஸூசகமாகத் திருவாழியைப்பிடித்தாற்போலேயாயிற்று, இவர் சேஷத்வஸூசகமாகத் திருவேலைப்பிடித்தபடி. (கண்டுரைத்த) † தூதர்க்கு வார்த்தைசொன்னபடிகேட்டு அவன்முன்னேவந்துநிற்கக் கண்டுசொன்ன. (அருவினைகளடையாவே) அவனைப்பிரிந்து நோவுபட்டுத் தூதுவிடுகைக்கு ஹேதுவான பாபங்கள்கிட்டாது. ஸர்வேஶ்வரனைப்பிரிந்து தூதுவிடப்புக்கு அதுதானுங்கூட மாட்டாதே படும் வ்யஸநம் படவேண்டா. இப்பத்தையு மப்யஸித்தார்க்குத், தூதுவிடுவானவன்றானாயிற்று. ... ... (௰)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (மையித்யாதி) உட்கருத்தைமுந்துற வருளிச்செய்கிறார் (இதுவித்யாதி). செங்கமலங்களுண்டாயிருக்கலாமே, இதுவேயென்று சொல்லுகைக்கு நிமித்தமென்னென்ன வருளிச்செய்கிறார் (ஊரி

(க) ரா - ஸு - ௩௮ - ௬௭. (௨) ரா - ஸு - ௬௬ - ௰.

வித்யாதி). தேசவிப்ரக்ருஷ்டமான பரமபதமன்றிக்கே காலவிப்ரக்ருஷ்டங்களான விபவங்களுமன்றிக்கே, கரண விப்ரக்ருஷ்டமான அந்தர்யாமியுமன்றிக்கே, தாமிருந்த திருவாலியிலிருந்தவனைக் குறித்துத் தூதுவிடுகையும்; அவன் முன்னிலையாகத் தோற்றினானாகக்கொண்டு தன்தசையை யறிவிக்கையுமாம்படி ஜ்ஞானவிபாககார்யமான அஜ்ஞானம் விளைந்தமைக்கு த்ருஷ்டாந்தமாகக் குவளைகளின் ஸம்ருத்தியைச் சொல்லுகிறாரென்று கருத்து. ஒருபடிக்கையில் பிரிவு பிறந்தாற்போலே இவர்க்கு இத்திருமொழியிலநுபவம்; அத்தை யுட்கொண்டு வ்யாக்யாதா ஈடுபடுகிறாரென்று கொள்ளுவது. "ஊர்" என்கையாலே - ஆழ்வார் தாருமிப்படி யிருக்கிறாரென்று ஸூசிதமாகிறது; இங்ஙனன்றாகில் இரண்டு வாக்யமும் புநருக்தமாமிறே. இவ்வாழ்வாருடைய பக்திகார்யமான அஜ்ஞானத்தின் சரமாவதிக்குப் போரும்படி குவளைக்குள்ள நிறத்தின் மிகுதியைச் சொன்னத்தை நியாமகமாகக் காட்டுகிறார் (மையான இத்யாதி). "குவளை" என்றபோதே கருமை தோற்றுமே, இங்ஙனிருக்கச் செய்தேயும், "கரும்" என்றும், "மையிலங்கு" என்றும் விசேஷணத்வய மிடுகையாலே, தம்முடைய தசைக்கு த்ருஷ்டாந்தமாகச்சொன்னாரென்னுமிடம் ஸூசிதமிறேயென்று திருவுள்ளம். வாக்யார்த்தமருளிச் செய்கிறார் (நாளித்யாதி). இப்போது சுடராழியையிட்டு விசேஷிக்கைக்கு உட்கருத்தருளிச் செய்கிறார் (புறம்பித்யாதி), இத்தால்-விஶ்லேஷித்தாராக வெண்ணியிருக்கிற தம்படியாலும், அவனும் வ்யாமோஹாதி சயத்தாலே "*மயர்வற மதிநலம்பெற்றவர் இங்ஙன் விஶ்லேஷித்துப் படுகிறபாடு காண்கையாலே நான்றானும் விஶ்லேஷித்தேனாகவேணும்" என்று கலங்கித் தூதுவிடவும் மாட்டாதே உருவுவெளிப்பாட்டால் வாய்விடவும் மாட்டாதே யிருக்கிறதசையிலே, நெஞ்சறியுமவனான திருவாழியாழ்வான் இருவருக்கும் வெளிச்செறிப்பைக் கொடுத்தானென்றநுஸந்திக்கிறாரென்று திருவுள்ளம். கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் (வடிவிலித்யாதி). இவ்வாழ்வார் திருவாலியம்மானை விஶ்லேஷித்தாராகக்கொண்டு நோவு படுகிறவேளையிலே திருவாழியாழ்வான் நெய்யூட்டிப் புகர்படைத்துத் திருவுள்ளத்தைக் குடிகொள்ள, இவர் அவ்வழகில் கண்வைத்து அவனுள்ளத்தையுங்கண்டு க்ருதார்த்தராய், "இச்சேர்த்திக்கென் வருகிறதோ" என்று கையில்வாள்பற்றி யிருக்கிறாரென்று விவக்ஷித்து, "நெய்யிலங்கு" என்று விசேஷணமிடாமையாலே பலித்தகறையைச் சொல்லுகையாலே இப்படி சொல்லலாமென்று ஸம்வாதம் காட்டுகிறார் (பட்டரித்யாதி இருக்குமாயிற்று என்னுமளவும்). சத்ரு நிரஸநத்துக்குடலாக வேலைப்பிடித்தானென்றருளிச்செய்து, சேவகனுக்கு வேல் நிரூபகமென்று ஸத்ருஷ்டாந்தம் தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (அவனித்யாதி). பாட்டுக்களெல்லாம் கண்டு சொன்னதுகளன்றே யென்னவருளிச்செய்கிறார் (தூதர்க்கித்யாதி). (௧0

ஜீயர் திருவடிகளேசரணம்.

மூன்றும்பத்து ஆறாந் திருமொழிமுடிந்தது.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி, ௩-ம் பத்து, எ-ம் திருமொழி, கள்வன்கொல் ப்ரவேசம்.

வ்யா.—†தூதுவிட்டுத் தூதர்க்குச்சொன்ன பாசுரம் நெஞ்சிலே யூற்றிருந்து அத்தை பாவித்து, பாவநாப்ரகர்ஷத்தாலே அவன்றான் முன்னின்றானாகக்கொண்டு அவனுக்கு வார்த்தைசொல்லும்படி பிறந்த தசாவிசேஷம் அவன் திருவுள்ளத்திலேபட்டு, அது பொறுக்க மாட்டாதவனாகையாலே தானேவந்து† முகம்காட்டி, இவளைக்கூடக் கொண்டுபோக;† ஆதிவாஹிகரை வரக்காட்டிக்கொண்டுபோம் சிலரை, பெரியதிருவடியை வரக் காட்டிக் கொண்டுபோம் சிலரை. (க) "நயாமி" என்று தானேகொடுபோம் சிலரை; அப்படியே *தானேவந்து† அந்தவாளத்தலையாலே மறைத்துக்கொண்டுபோக; அந்தரங்கமாகக் காத்துக்கொடுகிடந்த திருத்தாயாருணர்ந்து படுக்கையி லிவளைக்காணாமையாலே, போனவள்படிகளையும், தனக்கவளையொழியச்செல்லாமையையும், எதிர்த்தலை இப்படிபட வேண்டும்படியிருக்கிற இவளுடைய வைலக்ஷண்யத்தையும், தன்னிழவையும் சொல்லிக் கூப்பிடுகிறாளாய்ச் செல்லுகிறது.

அவனிவளைக்கொடுபோகையாவதென் - †ஸ்வாபதேசத்திலோடுகிற தென்னென்னில்; மாநஸாநுபவமாயிருக்கச்செய்தே பாஹ்ய ஸம்ஶ்லேஷம்போலேயிருக்கப் பண்ணிக்கொடுத்ததொரு வைசத்யத்தைச்சொன்னபடியிறே. (க) †[ஸ்திமிதமநஸி - ஸ்த்திம்தமநஸி] (உ)*நின்ற வாநில்லாமனதும் ஓரிடத்திலேநிற்கப்பெற்று, அபசயாத்மகமானசரீரமுமங்கேயிங்கே சிதிலமாகாதே ஒருபடிப்பட்டு, தாது (தாது) க்களுமொன்று முடங்கி ஒன்று நிமிருகையன்றிக்கே ஸாம்யாவஸ்த்தையை பஜித்து, †இப்படி சரீரத்திலே யொரு லாகவம்பிறந்து ஸத்வமுத்ரிக்தமானஸமயத்திலே, ஆரேனுமொருவனாகவுமாம், தான் கீழ் ஸம்ஸாரியாய் நின்றநிலையையும், இத்தைக்கழித்துக்கொள்ளுகைக்கீடாயிருப்பதொரு கைம்முதல் தன்பக்கலின்றிக்கேயிருக்கிறபடியையும், அவனைப்பற்றியே கழிக்கவேண்டும்படியிருக்கிறபடியையும், இதில்நின்றும் கரையேற்றுகைக்கீடான சக்தியும் ப்ராப்தியு மவன்பக்கலிலே

(க) வாராஹசரமம் - (உ) க - க - ச.

யுண்டாயிருக்கிறபடியையு மநுஸந்தித்து அவன்பக்கலிலே பரந்யாஸத்தைப்பண்ணுவது.† பின்னைபேற்றுக்கு இவ்வளவமையுமோவென்னில், சரீரத்தைப்பற்றிவருமவற்றுக்கு ஆத்மா ஸுகதுக்கா நுபவம் பண்ணுமாபோலே இவற்றுக்குவருமவை தன்னதாம்படி விஶ்வசரீரனுமாய், இவன்தன்னை ஒருகாலநுஸந்தித்தால் பின்பிவனைப்போலே மறக்கைக்கடியான ஜந்மஶபந்தநமான கலக்கமின்றிக்கேயிருக்குமவனுமாகையாலே,அவ்வளவமையும்.† இப்படி ஒருநாளநுஸந்தித்தவன் ப்ரக்ருதிவஶ்யனாய், பின்பு தன்தேஹயாத்ரையிலே அந்யபரனாய்த்திரிந்து, பின்பு ஸ்மரிக்கைக்குங்கூட யோக்யதையில்லாதபடி * காஷ்ட்டபாஷாணஸந்நிபனாய்க்கிடக்குமன்று, இவனைப்போலே ஒருகால் ஸ்மரித்தால் பின்பு விஸ்மரிக்குமவனன்றிக்கேயிருக்கிற நான் ஸ்மரித்தபடியே யிருப்பன். [മദ്ഭക്തം - மத்பக்தம்] †ஸ்மரிக்கைக்கு யோக்யதையில்லாதவன்று ஸ்மரித்திலேனென்று கைவிடுந்தனை துராராதனையோ அவன்பற்றிற்று. [அஹம் ஸ்மராமி - அஹம் ஸ்மராமி]† ஐஶ்வர்யகாமனுக்கும்,ஆத்மப்ராப்திகாமனுக்கும், † பக்திகாமனுக்கும், அந்திமஸ்ம்ருதியுண்டு; இவன் முதலிலேதுடங்கி ஸர்வபரந்யாஸம் பண்ணினவனாகையாலே இவனுக்காக நான்நினைப்பன். [நயாமி பரமாம்கதிம் - நயாமிபரமாம்கதிம்] † இப்படிநினைத்து நானே கைதொடனாய்வந்து கொடுபோவன். ஶ்லோகத்வயம் †என்று, எம்பெருமானுடைய ஸர்வஸ்வமுமிறேயிவை. ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலேவர்த்தித்த வைஷ்ணவன் அந்திமஸமயத்தில் பட்ட க்லேசத்தைக்கண்டு பெரியநம்பிக்கு மெம்பெருமானார்க்கும் நடந்த ஸம்வாதத்தைநினைப்பது. "മദ്ഭക്തം - மத்பக்தம்" என்கிறவிடமும் பக்திமானையே சொல்லிற்றாலோ, ப்ரபந்நனைச்சொல்லிற்றென்கைக்கு நியாமகாரென்ன; அவனுக்கு அந்திமஸ்ம்ருதிவிதிக்கிறசாஸ்த்ரம்.*

அரு.—கள்வன்கொல் ப்ரவேசம். கீழ்த்திருமொழியில் பாவநாப்ரகர்ஷத்தாலே,(க) "என்முலையாள-உன்னகலத்தாலாளாயே" என்று ப்ரார்த்திக்கச்செய்தேயும் அவன் செய்யாமலிருக்கையால், "வளை ஆளமாட்டோமே" என்று கிடந்த பெண்பிள்ளை, இத்திருமொழியில் பின்துடர்ந்து போனாளாகக்கொண்டு திருத்தாயார் சொல்லுகைக்கு ஸங்கதியென்னென்ன, வ்ருத்தவர்த்திஷ்யமாண கதநமுகேந வருளிச்செய்கிறார் (தாதுவிட்டித்யாதி). இத்தால்,

---

(க) ௩-௬-௧.

மாநஸாநுபவத்தில் ஒருவைசத்யத்தாலே அவன் வந்தானாகவும், தன்மகளும் வயலாலி மணவாளனும் ஒருபடுக்கையில் சேர்ந்தார்களாகவும், தான்கிட்டக் காத்துக்கொண்டிருந்தாளாகவும், இங்ஙனிருக்கத் தான் கண்ணுறங்க, அப் போது (க) "நிலையாளா நின்வணங்க வேண்டாயேயாகிலும்" என்று இவள் சொன்ன இழவு திருவுள்ளத்திற்பட்டு அதுதீர இப்பெண்பிள்ளையைக்கொ ண்டு புறப்பட, படுக்கையிற்காணாமல் தானும் புறப்பட்டு, கண்டு கொண்டி ருக்கவே கொண்டுநடந்தான் என்று ஒருதசை பிறந்து அநுபவிக்கிறாளெ ன்றதாயிற்று. (முகங்காட்டி) என்றவநந்தரம், ஸம்ஸ்லேஷித்து என்றுசே ஷம். தானேவந்து கொடுபோனபடியை த்ருஷ்டாந்த கதாபூர்வகம் விவரிக் கிறார் (ஆதிவாஹிகரையித்யாதி) "கள்வன்" என்றத்தைப்பற்ற (அத்தவாளத் தலையாலேயித்யாதி). அத்தவாளத்தலை - தலைமுன்தானே.

"இவளைக் கொடுபோகையாவதென்" என்றத்தை விவரிக்கிறார் (ஸ்வா பதேசத்திலித்யாதி). த்ருஷ்டாந்தமாகக் கீழ்ச்சொன்ன ஶ்லோகத்துக்கு வ்யா க்யாநம் (ஸ்த்தித இத்யாதி). மநஸ்ஸ்வாஸ்த்யாதிகளைச்சொன்ன வித்தால் பலித்த வர்த்தத்தை யருளிச்செய்கிறார் (இப்படி சரீரத்திலே யித்யாதி)."ஸ்த்தி தேமநஸி" என்று இப்போது சொல்லுகையால் - முன்பு விஷயப்ரவணமாயிரு ந்தமை தோற்றுகையாலே, அத்தைப்பற்றிவரும் ஸ்மரண விசேஷத்தையும், "சரீரே - ஸுஸ்வஸ்த்தே" என்கையால்தோற்றின பூர்வத்தி லஸ்வஸ்த்ததை யால் பலித்த கர்மயோகோத்யோகத்தைப் பற்றிவரும் ஸ்ம்ருதியையும், "மாம்" என்ற பதத்தில் விவக்ஷிதமான உபாயபாவத்தைப்பற்றிவரும் நினை வையும்* அஜபதத்திலும்* விஶ்வரூப பதத்திலும் ஆர்த்த(ஞ)மான சக்தி ப்ரா ப்திகளைப்பற்றி வருமநுஸந்தாநத்தையும்,"ஸ்மர்த்தா" என்ற பதத்துக்கு அர்த் தமாகத் திருவுள்ளம்பற்றி, அத்தால் பிறந்த நைர்ப்பர்யாநுஸந்தாநத்தளவு மர்த்தமாக வருளிச்செய்கிறார் (பின்னை யித்யாதி அமையுமென்னுமளவும்). "தம்" என்றத்தால், ஸக்ருத்தாக ஒருநாள் ஸ்மரித்துமறந்திருந்தவனென் று அர்த்தமருளிச்செய்கிறார் (இப்படி யொருநாளித்யாதி). "மத்" என்கை யாலே தேவதாந்தரங்களை வ்யாவர்த்திக்கிறானென்றருளிச்செய்கிறார் (ஸ்மரி க்கைக் கித்யாதி). அந்திமஸ்ம்ருதிதானு மிவனுக்குவேண்டா, இவன் பரந்யா ஸம் பண்ணுகையாலே நானே அந்திமஸ்ம்ருதி தன்னையு மேறிட்டுக்கொள் ளுவ னென்கிறானென் றருளிச்செய்கிறார் (ஐஶ்வர்யேத்யாதி). (பக்திகா மன்" என்றது - பக்திஸாத்ய பகவத் ப்ராப்திகாமனென்றபடி. "ததாமி" என்னாதே, "நயாமி" என்கையாலே பலித்த அஸஹாயபாவத்தை யருளிச் செய்கிறார் (இப்படி நினைத்தித்யாதி). (என்று) என்றவநந்தரம், பேராய் என்றுசேஷம். ... ... *

(க) ௩-௬-௯.

மூ.—கள்வன்கொல்யானறியேன் கரியானொருகாளைவந்து
வள்ளிமருங்குலென்றன் மடமானினைப்போதவென்று
வெள்ளிவளைக்கைபற்றப் பெற்றதாயரையிட்டகன்று
அள்ளலம்பூங்கழனி யணியாலிபுகுவர்கொலோ. (௧)

பதம்.	உரை.
கள்வன்கொல்	கள்ளனோ (உடையவனோ)
யான் அறியேன்	நானறியமாட்டேன்,
கரியான்ஒருகாளைவந்து	கறுத்தவனானவொரு யௌவநபுருஷன் வந்து
வள்ளிமருங்குல்	நுண்ணிடையையுடைய
என்தன்மடமானினை	நல்லயுவதியானஎன் பெண்ணை
போதஎன்று	வாவாஎன்றுத்வரைபண்ணி
வெள்ளிவளைக்கைபற்ற	வெள்ளிவளைகளணிந்தகையைப்பிடிக்க (உடனே அவள்)
பெற்றதாயரை	பெற்றதாயானஎன்னை
இட்டுஅகன்று	தனியேகிடக்கவிட்டுப்போய்(ஒன்றுசேர்ந்த அவ்விருவரும்)
அள்ளல்	சேற்றிலுண்டான
அம்பூங்கழனி	அழகியபூக்கள்நிறைந்தநீர்நிலங்களையுடைய
அணிஆலி	பூமிக்குஆபரணமான திருவாலியிலே
புகுவர்கொலோ	புகுவாரோ?. (௧)

வ்யா.—முதற்பாட்டு. (கள்வன்கொல்) (௧) †“𑌚𑍋𑌰𑍇𑌣 - சோரேண” என்று இவனுடைய ஆத்மாபஹாரத்தோபாதியாயிருக்கிறதாயிற்று உடையவன் தன்னுடைமைகொண்டுபோனதும், †என்னதென்றுபோந்தவாஸநையாலே. (கொல்) †உடையவன் உடைமைகொண்டுபோனாகையாலும், காணக்கொடுபோகையாலும், “கள்வன்” என்னப்போகிறதில்லை; ஆகிலும், கள்வன் என்னலுமாயிராநின்றது மமகாரத்தினூற்றத்தாலே. (யானறியேன்) †காத்துக்கிடக்கிற தானறியாளாகில் கொண்டுபோனவனைப்போலே காணும்கேட்பது.

†அறியாயாகிலும் அறிந்த அம்சத்தைச் சொல்லலாகாதோவென்ன, (கரியானித்யாதி) †பிள்ளையமுதனார், “கூடுகிடக்க வாளையுருவிக்கொடுபோவாரைப்போலே, தாயாரணைத்துக்கொடுகிடக்கக் கொண்டுபோனான்”என்று நிர்வஹித்தார்; †அத்தை பட்டர்கேட்டருளி, “அத்தனை†பணிப்படவேண்டாகாண், சிலகள்வர் விளக்குக்களையும் பிடித்து, †‘பிள்ளை, பிள்ளை’ என்கிறவளவிலே கொண்டுபோமாபோலே கொண்டுபோனான்காண்” என்றருளிச்செய்தார். (ஒரு) வாய்

(௧) பார - ஆதி -

புகுநீரிலே புக்காரைப்போலே, நிறத்தைச்சொல்லாநிற்கச்செய்தே யும் இன்னுனென்று நிர்த்தரிக்கமாட்டாதே, "கஶ்சிதஸ்தி - கஶ்சிதஸ்தி" என்னுமத்தனையாயிற்று. (காளை) போனவிடம் அவன் குற்றமன் றென்கிருள்; அவன் பருவத்தின்குற்றம். †இவள்போனவிடம் பழி யென்று குற்றமாகச்சொல்லுகிறவிவள் தனக்கொரு ப்ராப்தியின் றிக்கேயிருக்கச்செய்தே, அப்பருவத்தைச்சொல்லும்படியிறே அது இவள்தன்னையும் துவக்கினபடி. †போன என்மகள்தானும், "இது பழி" என்று நினையாமையில்லை, அநர்த்தம்பார்த்து மீளவொண்ணுத படியான பருவத்திற்குற்றமென்கிருள். †வைரூப்யத்தைத் விளைத்து விட்டார்கள் என்று முறைப்படச்சென்றவளிறே, (க) "தருணௌ தருணௌ" என்ருள். பின்புசொன்னது பூர்வவாஸனையே அநு வர்த்தித்தபடியாலே. †அன்ருகில் தான் பட்டத்தை முறைப்படுகிற துக்கு இது எங்கே உபயோகியாய்ச்சொல்லுகிருள். நடுவு பிறந்த வற்றையும் ஸம்போகத்தில் †நடுவுபிறந்த விமர்த்த (விமர்த்த)த்தோபாதி யாகநினைத்திருந்தாள். (வந்து) நிறமும் பருவமுமிவையானுல்,ஸர்ப்ப யாகத்தில் ஸர்ப்பங்கள்போலே தானிருந்தவிடத்திலே பெண்பிறந்தா ரடையச் சென்று விழவேண்டும்படியிருக்க, வரவுமத்தலையிலே யானுல் இவள்போகாதிருப்பாளோ? †ஆரேனுமாகவுமாம், பகவல்லா பமுண்டாகில் அத்தலையில் வரவல்லதில்லை.

(வள்ளியித்யாதி) †அவனைக்கொடுவந்த விஶ்வாமித்ரனைச் சொல்லுகிறது. இவளுடைய அழகாயிற்று அவனையழைப்பித்தது. †அவனுக்கு அநேகத்தைச் சொல்லிவைத்து இவளுக்கு ஓரழகைச் சொல்ல அமைந்திருக்கிறதிறே; (உ) "மாலுக்கு" என்றுதுடங்கி அவனுக்கு அநேகத்தைச்சொல்லி, இவளை (உ) "கொங்கலரேலக் குழலி" என்னுமாபோலே. (என்றன்மடமானினை) என்மகளாவது, †முக்த்தை(முக்த்தை)யாவது;-†தன் ஸௌகுமார்யத்தையாதல்,ஸ்த்ரீத்வ த்தையாதல்,போகிற வழியிலருமையையாதல், இவையொன்றையும் நினைக்கமாட்டாத முக்த்தை (முக்த்தை) கிடீர். (என்றன்) †அவன்வந்து கொடுபோகப்புக்கவாறே, "என்மகள்" என்று தானுமொருதலை பற்றுகிருள். (போதவென்று) (ந) "உத்தமர்த்தமிம்சர - உக்தமர்த்தமிம்சர" என்ருனுயிற்று. கரியான் காளைவந்து "போத, போத" என்றதா

(உ) ரா-ஆர-கக-கச. (உ) தி-வாய்-சு-சு-க. (ந)

யிற்று. ஸர்வேஶ்வரனைப் பெறுகைக்கு இவன்பண்ணும் கர்மஜ்ஞாநம்போலே அவன்றானிவனைப் பெறுகைக்குப்பண்ணின ஸாதநாநுஷ்டாநமிருக்கிறபடி. (வெள்ளிவளைக்கைப்பற்ற) †உக்தியிலே துவக்குண்டு ஸ்தப்தையாய்நின்றாள்; அவ்வளவிலேவந்து கையைப்பிடித்தான்; (௧) †“న ప్రమాణీకృతః పాణిర్బాల్యే బాలేన పీడితః - நப்ரமாணீக்ருதः பாணிர்பால்யே பாலேந பீடிதः” என்கிறபடியே - பிடித்தபிடியிலே (௨) “அங்கண்ணனுண்டவென்னாருயிர்க்கோதிது” என்னும்படியாயிற்றுப் பிடித்தது. முன்பு நெடுங்காலம் தாய்பக்கல்பண்ணின வாஸநை முதலடியிலேவந்து கழியும்படியாயிற்று பற்றினபற்று. § இடைச்சிகள் பொன்னையும் மாணிக்கத்தையுமழியமாறி வெள்ளிவளையையாயிற்று இடுவது.

பற்றினபற்றினூற்றமெவ்வளவு போருமென்னில், (பெற்றதாயரை) நான் வளர்த்துக்கொண்டதாயோ நினைத்தபோது பொகட்டுப்†போகைக்கு. (இட்டு) †பொகட்டுப்போகாநின்றாலும் பொகட்டோமென்னும் அநுதாபமும் நெஞ்சிலே கிடக்கவுமாமிறே. சில அசேதநங்களைப்பொகட்டுப்போமாபோலே பொகட்டு. (அகன்று) தான்விட்டாலும் நமக்குத் தொடர்ந்துசென்று பற்றவொண்ணாதபடி கைகழியப்போய். (அள்ளலமித்யாதி) †இவ்வூரெல்லை கழிந்தால் பின்னை மாறியிடுமடி பூவின்தலையிலேயாம்படியான தேசமாயிற்று. (௩) †“పాదారుంతుదమేవ పఙ్కజరజః - பாதாருந்துதமேவ பங்கஜ ரஜः” என்னும்படியாலே அதுதானவளுக்கு பாதக (బాధక) மாகிறது. (அணியாலி) ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான திருவாலி. (புகுவர்கொலோ) இருவருமிரண்டுமுக்த்த (ముగ్ధ) ராயிற்று - மாயாம்ருகத்தைப்பிடித்துத் தாவென்பாரும், அதைப்பிடிப்பதாக அதன்பின்னே போவாரும். லங்காத்வாரத்திலேசென்று நிற்கலாகாதோ என்று நில்லாதே உத்தேஶ்யபூமியிலே பகலே புக்கார்களாக வல்லர்களோ. இருவருமொருவர்க்கொருவராழங்காலாயிற்று. ... (௧)

அ௫.—முதற்பாட்டு - வயலாலி மணவாளன்வந்து கலந்து கைக்கொண்டு போனானாகில், அவனை, “கள்வன்” என்பானென்னென்ன வருளிச்செ

---

(௧) (௨) தி-வாய்-௯-௫-௫. (௩) ஸ்ரீகுணரத்ந-௪௧.

§ ஐஶ்வர்யமில்லையோ “வெள்ளி” என்கிறதென்னென்ன வருளிச்செய்கிறார் (இடைச்சிகளித்யாதி). என்று அரும்பதாந்தரம்.

ய்கிருர் (சோரேணேத்யாதி). "என்றன் மடமானினை" என்று திருத்தாயார் பண்ணின மமகாரத்தை யருளிச்செய்கிருர் (என்னதென்றித்யாதி). ஆனல் "கொல்" என்று ஸம்சயிப்பானென்னென்ன வருளிச்செய்கிருர் (உடையவனித்யாதி). "யானறியேன்" என்கைக்கு இனியறியத்தக்காருண்டோ, இது ஆரைக்கேட்கிருளென் றருளிச்செய்கிருர் (காத்நித்யாதி). "யானறியேன்" என்கையால் அறிந்தாரைக்கேட்கை தோற்றுமென்று திருவுள்ளம். இனி அவனைத்தானே கேட்கிருளாகவேணுமென்று ரஸோக்தி.

இப்படி அவனையே கேட்கிருளாய்க்கொண்டு இவள் புறப்பட, அசலகத்து நங்கைவந்து ப்ரஸ்நம் பண்ணுகிருளாக, மேல் "இட்டகன்று" என்னுமளவுக் கவதாரிகை யருளிச்செய்கிருர் (அறியாயாகிலு மித்யாதி). கரியான் காணக்கொடுபோகச்செய்தே இவள் கொடுபோகவொட்டுவானென்னென்ன வருளிச்செய்கிருர் (பிள்ளையமுதனு ரித்யாதி). (கூடு) சத்தியுறை. (அணைத்துக்கொடுகிடக்க) என்றது - பெண்ணிடத்தில் மமதையாலே கொடுபோகவொட்டாமல் கட்டிக்கொண்டிருக்க வென்றபடி. யத்வா - பிள்ளையமுதனுர்க்கு, பெண்ணும் தானுமாய்ப் படுக்கையிலே கிடக்கக் காணுதபடிவந்து அவன் கொடுபோனுனென்று கருத்தாகவுமாம். இப்பக்ஷத்தில், "கரியான்" இத்யாதிகளும், "கைப்பற்ற" என்றதும் திருவாலி மணவாளன்மேல் பித்தேறினவள் தன்னைவிட்டுப் போகையாலே அவனே வந்தானுக வேணுமென்று ஊஹித்துச் சொல்லுகிருளென்று நிர்வஹித்துக்கொள்வது. "இப்படி யருமைப்படவேணுமோ, பஶ்யதோஹரனுய், தானேகொண்டு நடந்தானென்னலாம்" என்னும் பட்டர் நிர்வாஹத்தை யருளிச்செய்கிருர் (அத்தையித்யாதி). (பணிப்படவேண்டா) காணுமல் கொண்டுபோனுனென்று சொல்லி இத்திருமொழியில் பதங்களுக்குப் பொருள்கட்டி அருமைப்பட வேண்டாவென்கை. (பிள்ளை பிள்ளையென்கிற வளவிலே) பிள்ளை பிள்ளையென்று கூப்பிட்டுக்கொண்டு பின்தொடரச்செய்தே யென்றபடி. மாமியாரான தான் பருவத்தைச் சொல்லக்கூடுமோவென்ன வருளிச்செய்கிருர் (இவள் போனவிடமித்யாதி). மகள்தான் தன்னைவிட்டுப்போகை பழியென் றறியாளோவென்ன (போனவித்யாதி). அநர்த்தமுண்டானுலும் விடவேண்டாதபடியா யிருக்குமோ பருவமென்ன வருளிச்செய்கிருர் (வைரூப்யத்தை யித்யாதி). "தருமிணை" என்றவள் பின்பு தன் வைரூப்யத்தைச்சொல்லி முறைப்படுவானென்னென்ன வருளிச்செய்கிருர் (அன்ருகிலித்யாதி). ஆனுலும் நாஸிகாச்சேதத்தை மறந்து இங்ஙன் சொல்லக்கூடுமோவென்ன வருளிச்செய்கிருர் (நடுவித்யாதி). "வந்து" என்கையாலே - ஸ்வாபதேசத்தில் பரகத ஸ்வீகாரமே உத்தேஶ்யமென்று தோற்றுமென்கிருர் (ஆரேனுமித்யாதி).

வல்லி என்றது - "வள்ளி" என்றுகிடக்கிறதாய், அதுபோலேயிருக்கிற இடையை வர்ணிக்கைக்குத் தாத்பர்யமருளிச்செய்கிருர் (அவனையித்யாதி). அழகு அழைப்பித்ததென்கைக்கு நியாமகமென்னென்ன வருளிச்செய்கி

ருர் (அவனுக்கித்யாதி). (முக்த்தையாவது) என்றவநந்தரம், "போத" என்கைக்கு ஹேதுஎன்றுசேஷம். காளையானவன் கருதிவரும்படியான பருவத்தால்பலித்த ஸௌகுமார்யத்தையும், "மடம்" என்றபதத்தால் பலித்த ஸ்த்ரீத்வத்தையும், "அள்ளலம்பூங்கழனி" என்றபதத்தையும் கடாக்ஷித்து முக்த்ததையை விவரிக்கிருர் (தன்னித்யாதி). பிள்ளையமுதஞர் நிர்வாஹத்தில் முந்தின யோஜனையைப்பற்ற வருளிச்செய்கிருர் (அவன்வந்தித்யாதி). "உக்தமர்த்தமிமஞ்சர" என்று - தன்கீழ் ஸ்த்ரீயைத்தானே ஸங்கோசமற வ்யவஹரித்தாற்போலே, தன்கீழ்ப் பெண்பிள்ளையைத்தான் "போத" என்று விதித்தானென்கை. கீழ்தான் ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணியிருக்க கையைப் பற்றுவானென்னென்ன (உக்தியிலேயித்யாதி). கையைப்பிடித்தாளுகிலும் தாய்க்கஞ்சி விடுவித்துக்கொள்ளவொண்ணுதோவென்ன (நப்ரமாணீக்ருத இத்யாதி). இளம்பருவத்தில் பிடித்தபிடியிலே அளவுபடப் பிடிக்கப்பட்டதில்லையாயிற்று. "கை" என்கையாலே - ஸம்ஶ்லேஷரஸமநுபவிக்குமளவும் பற்றினபற்று விட்டானில்லையென்று தோற்றுகையால், அப்படி இவளையுமுண்டு கோதாக்கிஞனென்கிருளென்று திருவுள்ளம்.

(போகைக்கு) என்ற வநந்தரம், க்ருஷ்ணனைப்போலே யென்றுசேஷம். "அகன்று" என்று மேலிருக்கச்செய்தே, "இட்டு" என்றதுக்குக் கருத்து (பொகட்டித்யாதி). "அள்ளல்" என்று சேருய், அதிலேயிருக்கிற அழகிய பூக்களையுடைய கழனியென்று புஷ்பஸம்ருத்திக்குத் தாத்பர்யமருளிச்செய்கிருர் (இவ்வூரித்யாதி). (இவ்வூர்) என்றது - திருமங்கையென்றபடி. தன் பெண்பிள்ளையின் ஸௌகுமார்யத்தையறிந்து அவளுக்குத்தக்கபடி மடிப்புடைவை இவ்வூரிலிடுவித்துவைத்தாளாகக்கொண்டு அவ்வூரில் பூவிலே அடியிடுகைக்குத் தான்ருன் க்லேசிக்கிறதென்னென்ன வருளிச்செய்கிருர் (பாதேத்யாதி).§ ... ... (௧)

மூ.—பண்டிவனுயன் நங்காய் படிறன் புகுந்தென்மகள்தன்
தொண்டையஞ் செங்கனிவாய் நுகர்ந்தானை யுகந்தவன்பின்
கெண்டையொண் கண் மிளிரக் கிளிபோல் மிழற்றிநடந்து
வண்டமர் கானல்மல்கும் வயலாலி புகுவர்கொலோ. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நங்காய்	அசலகத்துப் பெண்களே!	ஆயன்படிறன்	(திருவாய்ப்பாடியில் பெண்களைத் திருடும்) இடையக்கள்ளனுயிருந்தான்; (இப்போது)
இவன்	இந்தயுவாவானவன்		
பண்டு	முன்னெல்லாம்		

§ ஸம்சயமென்னென்ன வருளிச்செய்கிருர் (இருவருமித்யாதி). (முக்த்ததை) ஒருவர்க்கொருவர் வைலக்ஷண்யத்திலேயீடுபட்டு அறிவழிந்திருக்கை. (போவாரும்) ஆயிற்றேஎன்று பூரிப்பது. என்று அரும்பதாந்தரம்.

புகுந்து	(அகத்தில்ப்ரத்யக்ஷமாக) ப்ரவேசித்து	கிளிபோல்	கிளிபோலே
என்மகள்தன்	பருவம்நிறைந்த என் பெண்ணினது	மிழற்றி	சிலவார்த்தைகள் பேசிக்கொண்டு
தொண்டைசெங்கனிஅம்வாய்நுகர்ந்தானை	கோவையின் சிவந்தகனிபோல் அழகிய அதரத்திலம்ருதத்தைப் பாநம்பண்ணின அவனை	அவன்பின்நடந்து	அவனுடையபின்னேயே நடந்துபோய் (சேர்ந்துகொண்ட அவ்விருவரும்)
உகந்து	(என்பெண்ணானவள்) விரும்பிக்கொண்டு	வண்டு அமர்	வண்டுகள்நிறைந்த
கெண்டை	கெண்டைபோலே	கானல்மல்கும்	கடற்சோலைசூழ்ந்த
ஒண்கண்	அழகியதிருக்கண்கள்	வயல்	கழனியையுடைய
மிளிர	(அபூர்வதர்சநத்தாலே) அகன்றொளிவிட	ஆலி	திருவாலியிலே
		புகுவர்கொலோ	புகுவாரோ என்னவோ. (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (பண்டிவனுயன்நங்காய்) †பண்டிவன் சக்ரவர்த்திதிருமகனென்னுமாபோலே இப்போதை அவஸ்த்தை. †வெண்ணெய்களவுகாணப்புக்கு அக்களவு தலைக்கட்டமாட்டாத இளிம்பன்கிடீர் என்மகளை யிப்படிசெய்தான். †அங்ஙனன்றிக்கே, பண்டிவன் (க)*காடுவாழ்சாதி இப்போது நாகரிகனானான். (படிறன் புகுந்து) †பண்டு காணாமல் களவுகாணுமித்தனை; இப்போது பஶ்யதோஹரனானான். (என்மகளித்யாதி) ஸௌந்தர்யாதிகளால் தோற்பிக்கையன்றிக்கே †ப்ரணயஸிரையில் வைதக்த்யத்தாலே தோற்பிப்பதே! (அவன்பின்) (உ) †*பேதைநின்னைப்பிரியேனினியென்றகன்றவன் பின்பு தோற்கும்படி சில வ்யாபாரங்களைப் பண்ணினானத்தனையல்லது, †“போரு”என்றழைத்திலன்.†வாகம்ருதமான அம்மான்பொடியை யிட்டுக்கொண்டுபோனபடி. (கெண்டையொண்கண் மிளிர)அபூர்வதர்சநங்களாலே கண்ட பதார்த்தங்களை. “இவை என்ன.†வினவு” என்று கண்ணாலேகேட்கை. (கிளிபோல்மிழற்றி) கண்ணால் கேட்டுக்கேளாதவற்றை வாயாலேகேட்டு. (நடந்து) †அவனுக்கு முன்னேக்கிப்போகவொண்ணாதபடி அவன்பின்னே நடந்து. (வண்டித்யாதி) (௩)†“ந ச புநராவர்த்ததே - நசபுநராவர்த்ததே” என்று புக்க திர்யக்குக்களுங்கூட மீளாத ஊரிலே புகுவர்கொலோ. தனக்காசைப்பட வேண்டாவென்கிறாள். ... ... (உ)

(க) நா-தி-கஉ-அ. (உ) (௩) சாந்தோ-அ-கடு.

அரு.—இரண்டாம்பாட்டு. (பண்டித்யாதி) கீழ்ப்பாட்டில் தன் ஸௌந்தர்யாதிகளைக்காட்டி வரச்சொல்லிக் கையைப்பிடித்தானுகையாலே என்னையிட்டுப்போனுளென்ருள்; அங்ஙனன்றுகாண், அவன் தூர்த்தவ்யாபாரங்களாகிற அம்மான் பொடிபோட தானேநடந்தாள் கிடாயென்று அசலகத்து நங்கையோடு சொல்லுகிருளென்று ஸங்கதி.

இவன் - இப்போது பெண்பிள்ளையைக்கொண்டு நடந்தசதுரன், பண்டு இடையன்கிடாய் என்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிருர் (பண்டித்யாதி). பண்டுஆயனுனவன் இப்போதை அவஸ்த்தையில் சக்ரவர்த்தித்திருமகனைப்போலே சதுரனுனென்கை. முன்புத்தையில் அசாதுர்யத்தையும் இப்போதையில் சாதுர்யத்தையும்காட்டுகிருர் (வெண்ணெயித்யாதி). இவன்-திருவாலிதிருநகரியில் வஸிக்கும் இவன், பண்டுஆயன் - காடழகர் கிடாயென்று சப்தார்த்தம் விவக்ஷித்துத் தாத்பர்யாந்தரமருளிச்செய்கிருர் (அங்ஙனன்றிக்கேயித்யாதி). படிறன் - தூர்த்தனென்ருய், பட்டர்நிர்வாஹத்தில் தாத்பர்யமருளிச்செய்கிருர் (பண்டுகாணுமலித்யாதி). (ப்ரணயஸிரையில்) ப்ரணயதாரையில், கீழே "இவன்" என்றுசொல்லிவைத்து, இப்போது "அவன்" என்றுசொன்னதுக்கு உட்கருத்தருளிச்செய்கிருர் (பேதையித்யாதி). (போருஎன்று) வாஎன்று. பின்னை என்செய்தானென்ன(வாகித்யாதி). (வினவென்று) சொல்லென்றபடி. இவள் முன் நடந்தாளாகில் உன்மத்தப்ரவ்ருத்திக்கு க்ரமப்ராப்திபோலே ஒருபடி திருவாலியிற்புகலாயிருக்கும், இவள் பின் நடக்கையாலே புகுகையில் ஸம்சயிக்கவேண்டிற்று என்னும் பாவம் ஸ்ப்புரிக்கத் தாத்பர்யமருளிச்செய்கிருர் (அவனுக்கித்யாதி). "கானல்" என்று காடாய், காடுபோலேயிருக்கிற தோப்புகளின் ஸம்நத்தியைச்சொல்லி, அத்தை "வண்டமர்" என்று விசேஷித்ததுக்கு ப்ரக்ருதோபயோகம் காட்டுகிருர் (நசேத்யாதி). ... ... (௨)

மூ —அஞ்சுவன் வெஞ்சொல்நங்கா யரக்கர்குலப் பாவைதன்னை
வெஞ்சின மூக்கரிந்த விறலோன்திறம் கேட்கில் மெய்யே
பஞ்சிய மெல்லடியெம் பணைத்தோளி பரக்கழிந்து
வஞ்சியந்தண் பணைசூழ் வயலாலி புகுவர்கொலோ. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நங்காய்	அசலகத்துப்பெண்ணே!	வெஞ்சினம்	வெவ்விய கோபமடியாக
வெஞ்சொல்	இது கொடுஞ்சொல்லாயிருந்தது.	மூக்கு	அவள்மூக்கினை
அரக்கர்குலப்பாவைதன்னை	ராக்ஷஸகுலத்துக்கெல்லாமொருபெண்ணாய் கொண்டாடப்பட்ட சூர்ப்பணகையினது	அரிந்த	அறுத்த
		விறலோன்	மிடுக்கையுடைய அத்தயுவாவினது
		திறம்	ப்ரகாரத்தை
		கேட்கில்	இப்போதுகேட்டால்

மெய்யேஅஞ்சுவன்	அதை இப்போதாக நினைத்து பயப்படுவேன்; (அப்படியிருக்க)	பரக்குஅழிந்து	அடக்கமின்றி (அவனோடுசேர்ந்துகொள்ள, அவ்விருவரும்)
பஞ்சுமெல்அடி	செம்பஞ்சுட்டிய ம்ருதுவானபாதங்களையும்	வஞ்சி	கொடிக்கூட்டங்களாலும்
		அம்	அழகிய
எம்பணைத்தோளி	மூங்கில்போன்றபுஜங்களையுமுடைய எம்பெண்ணானவள்	தண்பணை	குளிர்ந்தமூங்கில் புதர்களாலும்
		சூழ்	சூழப்பட்ட
		வயல்	கழனியையுடைய
		ஆலி	திருவாலியிலே
		புகுவர்கொலோ	புகுவாரோ? (௩)

வ்யா.—மூன்றும்பாட்டு. (அஞ்சுவனித்யாதி) †(அரக்கர்குலப் பாவை தொடங்கி, மெய்யே - அஞ்சுவன்) †பட்டர் இப்பாட்டையருளிச்செய்து, "ஒருஸ்த்ரீயை விரூபையாக்கினவனுடைய திறம்கேட்கில் அஞ்சுவன் என்கையால், †இத்தலைக்கு குணஹாநியாய்த் தோற்றுகின்றது, இது ஆழ்வாரருளிச்செய்யக்கூடாது, இதெங்ஙனே சேரும்படி?" என்று ஆச்சானைக்கேட்க, "துடுப்பிருக்கக் கை வேகவேணுமோ, எம்பெருமானார் தாமே யருளிச்செய்துவைத்தாரிறே" என்ன, "அருளிச்செய்தபடி யெங்ஙனே" என்றுகேட்க; †"முன்பொரு†புணர்ந்துடன்போக்கிலேபிறந்த ப்ரமாதத்தைக்கேட்டு அத்தை நினைத்து இப்போது பயப்படுகிறாள்" என்றருளிச்செய்தார். (மெய்யே அஞ்சுவன்) அது பூதகாலத்திலே, இது வர்த்தமாநகாலத்திலேயென்று தோற்றுகிறதில்லை, ஏககாலத்திற்போலே பயமாகாநின்றது.(பஞ்சியமெல்லடி)†இது §படுக்கையிலிருக்கிலும் பயப்படவேண்டும்படி ம்ருதுவான காலையுடையவள். (எம்பணைத்தோளி) சுற்றுடைமை, பசுமை, ஒழுகுநீட்சி, இவையெல்லாவற்றாலும் மூங்கில்போன்றிருந்துள்ள தோளையுடையவள். (பரக்கழிந்து) †பழியஞ்சாதே. பரக்கழிவு - †மிகவும் கழிவென்றுமாம். (வஞ்சியித்யாதி) தனக்கு †உபமாநமுள்ள தேசத்தேறப்புகுமோ?. (௩)

அரு.—மூன்றும்பாட்டு. (அஞ்சுவனித்யாதி). கீழ்ப்பாட்டிலே, "அவன்பின் கெண்டையொண் கண்மிளிரக்கிளிபோல் மிழற்றி" என்கையாலே, (௪) "അഗ്രതഃ പ്രയയൌ രാമഃ സീതാമധ്യേ സുമധ്യമാ - அக்ரத꞉ ப்ரயயௌராம꞉ ஸீதாமத்யேஸுமத்யமா" என்று கூடப்போனபோது வழியில்கண்டவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு நடந்தாற்போலேபோனபடி தோற்றுகையால், அநந்தரம் அவ்விடத்திலே சூர்ப்பணகைவந்தது இருவர்க்கும் பிரிவுவருகைக்கு மூலமானபடியை நினைத்துத் திருத்தாயாரஞ்சுகிறாளென்று ஸங்கதி.

§ (பா) கையிலிருக்கிலும். (௪) ரா-அ-௧௧-௪.

அந்வயம்காட்டுகிறார் (அரக்கரித்யாதி). தன்னையாசைப்பட்டுவந்த ஸ்த்ரீயை மூக்கரிந்தாற்போலே இவளையும் செய்துவிடுகிறானோ என்றஞ்சுகிறாளென்றால் கீழ்ச்சொன்ன ப்ரணயித்வத்துக்கு குணஹாநிவாராதோ, இது ப்ரகரணத்தோடு சேரும்படியென்னென்னும் சங்கையை ஸம்வாதமுகத்தாலே யருளிச்செய்கிறார் (பட்டரித்யாதி). (இத்தலைக்கு) பகவத்விஷயத்துக்கு உடன்போக்கிலேபிறந்த ப்ரமாதமாவது - சக்ரவர்த்தித்திருமகனும் பிராட்டியும் கூடப்போகிறபோது சூர்ப்பணகைவந்ததேயாய், அவள்வந்து ப்ரமாதத்தை விளைத்தாற்போலே, இவர்களுடையபோக்கிலு மென்ன ப்ரமாதம்வருமோ என்று பயப்படுகிறாளென்று எம்பெருமானார் நிர்வாஹம்; அத்தையருளிச்செய்கிறார் (முன்பித்யாதி). (புணர்ந்து) திருவயோத்யையிலே, (க) "[illegible] - ஸமாத்வாதசதத்ராஹம்" என்கிறபடியே ஸம்ஶ்லேஷித்து. அரக்கருடையகுலத்துக்கு, கொல்லிமலைப்பாவைபோலே கொண்டாடப்படுமவளான சூர்ப்பணகைதன்னை அவளுடைய வெவ்வியசினமடியாக மூக்கரிந்திட்ட மிடுக்கையுடையவன் விஷயத்தைக்கேட்டால் மெய்யேஅஞ்சுவன், இது வெஞ்சொல்கிடாய், நங்காய்! என்று வாக்யார்த்தம் கண்டுகொள்வது.

"பஞ்சிய" என்று விசேஷித்திருக்கவும், "மெல்" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (இதித்யாதி). (இதுபடுக்கையில்) என்று சில ஸ்ரீகோசங்களில் பாடமுண்டு; (இதுகையில்) என்று சிலவற்றிலுமுண்டு; இப்போது, (இது) இவ்வடி, (கையிலிருக்கிலும்) மடியிலிருக்கிலும், என்றர்த்தம்கொள்வது. "பரக்கு" - பழியாய், அத்தால்வரும்பயமழிந்து என்று சப்தார்த்தமாயருளிச்செய்கிறார் (பழியஞ்சாதே) என்று. பர - மிகவும், கழிந்து என்று பிரித்தருளிச்செய்கிறார் (மிகவுமித்யாதி). (உபமாநம்) என்றது - வஞ்சிக்கொம்பும், மூங்கிலுமென்றபடி. ... ... (௩)

மூ.—ஏதவன்தொல் பிறப்பிளையவன் வளையூதி மன்னர்
தூதுவனாயவனூர் சொல்லுவீர்கள் சொல்லீரறியேன்
மாதவன்றன் துணையாநடந்தாள் தடஞ்சூழ்புறவில்
போதுவண்டாடு செம்மல் புனலாலி புகுவர்கொலோ. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அவன்	அந்தயுவாவின்	வளையூதி	(சத்ருக்களஞ்சும்படி) சங்கநாதம் செய்யுமவனாய்
தொல்பிறப்பு	பூர்வஜந்மமானது	மன்னர்	ராஜாக்களுக்கு
ஏது அறியேன்	க்ஷத்ரியஜந்மமோ இடையர் ஜந்மமோ ஏதென்றுநானறியமாட்டேன்; (ஆகிலும்)	தூதுவனாயவன்	தூதுபோனவனுமான அவனுடைய
இளையவன்	பாலிசன்,	ஊர்	ஜந்மத்தை

(க) ரா-ஸு-கந-கஅ.

சொல்லுவீர்கள் ஈதென்று அறிந்து	சொல்ல வல்லவர்களே!
சொல்லீர்	உண்மையாக இதுவென்றுசொல்லுங்கள்; (ஆனால் என் பெண்ணோ)
மாதவன்	ஸ்ரியঃபதியை
தன் துணையாக நடந்தாள்	தனக்குஸஹாயமாகக் கொண்டுநடந்துபோனாள், (போன அவ்விருவரும்)
வண்டு	வண்டுகளானவை
தடஞ்சூழ்	தடாகங்களால் சூழப்பட்ட
புறவில்	பர்யந்தத்திலே அலர்ந்த
செம்மல்போது	பெரியபூக்களிலே
ஆடு	(மதுபாநத்துக்காகஇழிந்து) ஆடாநின்றுள்ள
புனல்ஆலி	நீர்வளம்நிறைந்த திருவாலியிலே
புகுவர்கொலோ	புகுவாரோ. (௪)

வ்யா—நாலாம்பாட்டு. (ஏது அவன் தொல்பிறப்பு)† க்ஷத்ரிய ஜந்மமோ? இடையர் ஜந்மமோ? அறிகிலேன். (இளையவன்)† பாலிசன். (வளையூதி)† தான் நின்றிருந்தவிடத்தை வெளியிடுமவன். (மன்னர் தூதுவனாயவனூர்)† உகவாதாரிருந்தவிடத்தே வெறுங்கையே செல்லுமவனுடையவூர். (அவனூர் சொல்லுவீர்கள் சொல்லீரறியேன்)† க்ஷத்ரியஜந்மத்திலே பிறந்தானென்றாசைப்படுவார் இடையனாய்ப்பிறந்தானென்றாசைப்படுவாராய், ஆசைப்படாநின்றீகோள்; எனக்கு† இரண்டும் தோற்றுகிறதில்லை.

(மாதவனித்யாதி) "ஆழங்காலே மிதப்பென்று புத்திபண்ணினாள். †அளவுடையவர்களகப்பட்ட விஷயமென்றால், தனக்கு [illegible]மன்றென்று மீளவறியாதே போனாள். (தடஞ்சூழித்யாதி) அவ்வூரில் பூக்களலர்ந்தபோது தேன்வெள்ளத்தாலே வண்டுகளுக்கு இழிந்து பாநம்பண்ணப்போகாது; கழியவலர்ந்து மதுவெள்ளம் அரையாறுபட்டாலாயிற்று வண்டுகளுக்குப் பாநம்பண்ணலாவது. கழியவலர்ந்த பூக்கள்தேடி வண்டுகள் மதுபாநம்பண்ணும் திருவாலியிலே புகுவர்கொலோ. போது - புதுப்பூ. அப்போதலர்ந்தபூ. செம்மல் - பெருமையும், பழமையும், பூவும். ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (ஏதவனித்யாதி). நங்கையானவள், "நீயேனஞ்சுகிறாய், அவன் ரகுகுலத்தில்பிறந்த ஆண்பிள்ளையன்றோ, விரோதிகளைக் கிழங்கெடுக்கவல்லவனன்கிடாய்" என்ன; அதுக்குத்தரமாக, அவன் மிடுக்கனான சக்ரவர்த்தித்திருமகனோ இடையனோ எனக்குத் தெரிகிறதில்லை, நீங்கள் என்னச்சந்தீர அவன் க்ஷத்ரியன் என்றுசொன்னால் சொல்லுங்கோள், எனக்கு நிர்த்தரிக்கப்போகிறதில்லை யென்கிறாளென்று ஸங்கதி.

"அவன் தொல்பிறப்பு-ஏது" என்று அந்வயம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (க்ஷத்ரியேத்யாதி). நீயறிந்தபடிதானேதென்ன, சொ

ல்லுகிறதாகத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (பாலிசன்) என்று. விளைவறியாதே யொன்றைச்செய்யுமவனென்கை. இதெங்கே கண்டாயென்னச் சொல்லுகிறாளாகத் திருவுள்ளம்பற்றி, ஸ்ரீருக்மிணிப் பிராட்டிக்காக, அந்தப்புறச்சோலையிலே சிசுபாலாதிகளறியும்படி சங்கூதவில்லையோ என்னும் பாவத்தை யருளிச்செய்கிறார் (தானித்யாதி). (க)* அதிர்குரல் முரசங்களன்றோ, விரோதிகள் மண்ணுண்ணார்களோவென்ன; ஆயுதங்களைப் பொகட்டுத் தூது போனவனன்றோ என்கிறாளென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (உசவாதாரித்யாதி). வெறுங்கையோடுபோகிலும் (உ) "கஞ்சன் குஞ்சிபிடித்தடித்த பிரான்" என்கிறபடியே - முடிக்கவல்ல குடியிற்பிறந்தவன்கிடாய் யாதவகுலத்தில் பிறந்தானென்ன; நீங்கள் வேண்டினபடிசொல்லுங்கோள்: எனக்கச்சந் திருகைக்குடலல்ல வென்கிறாளென்றருளிச்செய்கிறார் (க்ஷத்ரியேத்யாதி). "ஊர்" என்றது - குடியாய், ஜந்மத்தைச்சொல்லுகிறது. (இரண்டும் தோற்றுகிறதில்லை) என்றது - இடையனானாலும் க்ஷத்ரியனானாலும் நிர்ப்பயமாயிருக்கைக்குடலாகத் தோற்றுகிறதில்லையென்கை.

க்ஷத்ரியனானாலேன்பயம் தீராதென்ன "மாதவனித்யாதி" சொல்லுகிறாளாக உட்கருத்து (ஆழங்காலித்யாதி). பிராட்டி பாஹுபலத்தை விஸ்வஸித்துப்போ யிருக்கச்செய்தேயும் அதுதானே மூக்கரிகைக்குடலாய்ப் பிரிவு விளைத்ததே; அவள், (௩) "ஶீதோ ப⁴வ - சீதோபவ" என்னவல்லவள், "ப⁴ஸ்மீ ப⁴வ - பஸ்மீபவ" என்னவும் வல்லள்; இவள் "மடமான்" என்னும் பாவத்தையுமுட்கொண்டு கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் (அளவித்யாதி). (௪)

மூ.—தாயெனை யென்றிரங்காள் தடந்தோளி தனக்கமைந்த
மாயனை மாதவனை மதித்தென்னை யகன்றவிவள்
வேயன தோள்விசிறிப் பெடையன்ன மென நடந்து
போயின பூங்கொடியாள் புனலாலி புகுவர்கொலோ. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தடம்தோளிஇவள்	பெரியதோள்களையுடையஇவள்,	மாயனைமாதவனை	ஆஶ்சர்ய பூதனான ஸ்ரிய:பதியையே
எனை	[னை	மதித்து	தஞ்சமாகநினைத்து
தாய்என்று இரங்காள்	மனம்வருந்தும் என் பெற்றதாயென்று க்ருபைபண்ணிப் பாராள்-	என்னையகன்று	என்னைத்தனியேவிட்டுநீங்கி
தனக்குஅமைந்த	தன்ஸௌந்தர்யாதி குணங்களுக்குத்தகுந்த ரூபலாவண்யாதிகளையுடையவனாகிய	வேயனதோள் விசிறி	மூங்கில்போன்றதோளைவீசிக்கொண்டு
		பெடைஅன்னம்என	அன்னப்பேடைபோல்
		நடந்துபோயின	அவன்பின்னேயேநடந்துபோன

(க) திரு - வாய் - ௧௦ - ௯ - ௩. (உ) ௩ - ௧௦ - ௩. (௩) ரா - ஸு -

பூங்கொடியாள் அழகியகொடிபோலு மிடையையுடைய என்பெண்ணும்(அவனும்)	புனலாலி நீர்வளம்மிகுந்த திருவாலியிலே புகுவர்கொலோ புகுவாரோ. (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (தாயெனையென்றிரங்காள்) தாய் வயிறெரியும் என்றிரங்குகிறிலள். (தடந்தோளி தனக்கமைந்தமாயனை) அவனுடைய ஸர்வாங்க ஸௌந்தர்யமும், இவளுடைய தோளழகொன்றுக்கும் போருமத்தனை. (மாதவனைமதித்தென்னை யகன்றவிவள்) †ப்ரணயஸிரையில் ஸ்ரோத்ரியனென்னுமித்தை யொன்றையும்நினைத்து என்னைக் கைவிட்டவிவள். (வேயனதோள்விசிறி) மூங்கில்போன்றிருந்துள்ள தோள்வீசி. (பெடையன்னமெனநடந்து) வெறும் அன்னமென்னில்†ஆணுறுமென்று, (பெடையன்னம்) என்றாள். (போயினவித்யாதி) இருவருங்கூட ஜலக்ரீடைபண்ணி வர்த்திக்கலாம் தேசத்திலே புகுவர்கொலோ. ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (தாயெனையித்யாதி). நீ "மாதவன்றன் துணையாநடந்தாள்" என்று வயிறுபிடிக்கிறதென், இப்படிப்பட்ட வுன்னைவிட்டு அவன்பின் போகைக்குஹேதுவென்னென்ன ; அவன் ஸௌந்தர்யத்தையேபார்த்து ப்ரணயித்வத்தைநச்சிநடந்தாள்காணென்கிறாளென்று ஸங்கதி.

"அகன்றவிவள்" என்றும், "அகன்றவன்பின்" என்றும் பாடத்வயமுண்டு ; அதிலே முந்தினபாடாநுகுணமாக வருளிச்செய்கிறார் (ப்ரணயேத்யாதி). மற்றைப்பாடம் - வ்யாக்யாநாந்தரஸித்தம். (ஆணுறும்) என்றது-ஆண்நாறும் என்றாய், பும்ஸ்த்வகந்தமுண்டாமென்று சப்தார்த்தம். ... (௫

மூ—என்துணை யென்றெடுத்தேற் கிறையேனுமிரங்கிற்றிலள்
தன்துணையாயவென்றன் தனிமைக்கு மிரங்கிற்றிலள்
வன்துணை வானவர்க்காய் வரஞ்செற்றரங்கத்துறையும்
இன்துணைவ னொடும் போயெழிலாலி புகுவர்கொலோ. (௬)

பதம்.	உரை:	பதம்.	உரை,
என்துணைஎன்று	எனக்குத்துணையென்று	என்தன் தனிமைக்கும்	நான்தனியேயிருப்பதற்காகவும்
எடுத்தேற்கு	பெற்றெடுத்தவெனக்[காக	இரங்கிற்றிலள்	இரக்கங்கொண்டிலள் (இப்படிப்பட்டவென்பெண்)
இறையேனும்	கொஞ்சமாகிலும்[ள்,		
இரங்கிற்றிலள்	இரக்கங்கொண்டில		
தன்துணைஆய	தனக்குத்துணையான	வானவர்க்கு	தேவஸமூகங்களுக்கு

வன்துணையாய்	வலியதுணையாகப் போய்
வரம்செற்று	இலங்கையிலுள்ளராக்ஷஸர்களின்வரபலத்தைஅடக்கி
அரங்கத்துஉறையும்	கோயிலிலேநித்யவாஸம்பண்ணுகிற
இன்துணைவனொடும்போய்	இஷ்டமானஸஹாயபூதனோடுங்கூடப்போய் (சேர்ந்துகொண்ட அவ்விருவரும்)
எழில்ஆலி	அழகியதிருவாலியிலே
புகுவர்கொலோ	புகுவாரோ. (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (என்துணையித்யாதி)† எனக்குத் தஞ்சமான துணையென்று கொண்டாடிவளர்த்தேன் என்றொருசற்றுமிரங்கிற்றிலள். (தன்துணையித்யாதி)† ஸ்நேஹமில்லையாகிலும்,நோவுபட்டாரை "ஐயோ!" என்று இரங்குவர்களிறே, அதுவும் செய்திலள்.

(வன்துணைவானவர்க்காய்) தேவர்களுக்காகத் தன்னைப்பேணாதே அம்புக்கிலக்காக்குகை வன்துணையாவது. (வரம்செற்று) தேவர்கள்கொடுத்த வரங்களையுமழித்து.† தங்கள் தலையாலுள்ளவையெல்லா மழித்தாலாகாதே அவன்துணையாவது. (அரங்கத்துறையுமித்யாதி)† நிரதிசயபோக்யனுமாய்†ஸுலபனுமாய் ரக்ஷகனுமானவனோடேகூட,† ராவணவதம்பண்ணி மீண்டெழுந்தருளுகிறபோது திருவயோத்யை கோடித்தாற்போலே, திருவாலியுங் கோடிக்கப்பண்ணிப் புகுகிறார்களிறே. ... ... (௬)

அரு.—ஆறும்பாட்டு. (என்னித்யாதி). "தாயெனையென்றிரங்காள்" என்றத்தை விவரிக்கிறதிப்பாட்டென்று ஸங்கதி.

பெண்பிள்ளையானவள் தன்ஸ்நேஹத்தாலே இவளெனக்குத்துணையென்றும் எடுத்துவளர்த்தாளென்றும் இரங்காமல்போனாளென்றும் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எனக்கித்யாதி). தனக்கு ஸ்நேஹமில்லாவிட்டாலும் தன்னையே துணையாகவெண்ணியிருக்கிற என்னுடையதனிமைக்காகிலு மிரங்காமற்போனாளென்னும் பாவத்தை யருளிச்செய்கிறார் (ஸ்நேஹமித்யாதி).

ஸ்வாபதேசம்த்வநிக்கும்படி தாத்பர்யமருளிச்செய்கிறார் (தங்களித்யாதி). "இன்" என்றதினர்த்தம் (நிரதிசயேத்யாதி). "அரங்கத்து" என்றத்தால் பலிதம் (ஸுலபனுமாய்) என்றது. "எழில்" என்றதுக்கு பாவம் (ராவணேத்யாதி). ... ... (௬)

மூ —அன்னையுமத்தனு மென்றடியோமுக்கிரங்கிற்றிலள்
பின்னைதன் காதலன்றன் பெருந்தோள் நலம்பேணினளால்
மின்னையும் வஞ்சியையும் வென்றிலங்கு மிடையாள்நடந்து
புன்னையு மன்னமுஞ்சூழ் புனலாலி புகுவர்கொலோ. (௭)

பதம்.	உரை.
அன்னையும்	தாயும்
அத்தனும்	தமப்பனும்
என்று	என்றுநினைத்து
அடியோமுக்கு	எங்கள்விஷயத்திலே
இரங்கிற்றிலள்	இரக்கங்கொண்டிலள்,
பின்னை தன்	நப்பின்னைப்பிராட்டிக்கு
காதலன் தன்	நாயகனுடைய
பெரும்தோள் நலம்	மஹாபுஜாலிங்கநஸுகத்தை
பேணினள்	விரும்பினவளாய்,
மின்னையும்வஞ்சியையும்	மின்னலையும்வஞ்சிக்கொம்பையும்
வென்று	தோற்பித்து
இலங்கும்	விளங்காநின்றுள்ள
இடையாள்	மத்யதேசத்தையுடையஎன்மகள்
நடந்து	நடந்துபோய் (சேர்ந்துகொண்டஅவ்விருவரும்)
புன்னையும்	புன்னைப்பொழிலும்
அன்னமும்	ஹம்ஸக்கூட்டங்களும்
சூழ்	சூழ்ந்த
புனல் ஆலி	நீர்வளமுள்ளதிருவாலியிலே
புகுவர்கொலோ	புகுவாரோ. (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (அன்னையுமித்யாதி) †போகநினைத்தால் பழியிட்டுப் போகவேணுமோ? †அடியோமான வெங்களைத் தாயும் தமப்பனுமென்று †பேரிட்டு இரங்கிற்றிலள். †நியாம்யரை நியாமகரென்று பேரிட்டுப் போகவேணுமோ? (பின்னையித்யாதி) †இங்கேயிருவரைக்கைவிட்டால் அங்கே யிருவரைப்பற்றவேணுமிறே. †நம்மை விடுகைக்கடி அங்கு அநுபாவ்ய விஷயத்தினுடைய பெருமையாகாதே.

(மின்னையுமித்யாதி) மின்னையும் வஞ்சிக்கொம்பையும் தோற்பிக்குமிடையையுடையவள் நடந்து. (புன்னையித்யாதி) ஸம்போகஸ்தாநங்களும் தன்னினங்களுமுள்ளவூரிலே புகுவர்கொலோ? ()

அரு.—ஏழாம்பாட்டு. (அன்னையுமித்யாதி). கீழிரண்டுபாட்டிலும் - தாயென்றிரங்காமற்போனாளென்றுசொல்ல, (க) "𑌪𑌿𑌤𑌰𑌂𑌮𑌾𑌤𑌰𑌮𑍍 - பிதரம்மாதரம்" என்று - விட்டுப்பற்றவேண்டும் விஷயமாகையாலே உங்களைவிட்டுப் போனாள், இதுக்கு நீ கரையவேணுமோ ? என்று நங்கைக்குக்கருத்தாக ; நானங்ஙன்நினைத்திருக்குமவளோ, வயிற்றில்பிறந்தாரையும் பெண்ணென்று எண்ணுவதுண்டோ, நாங்கள் பரதந்த்ரரன்றோவென்கிறாளென்று ஸங்கதி.

உட்கருத்து (போகவித்யாதி). சப்தார்த்தம் (அடியோமித்யாதி). பேரிடுகை-பழியென்கை. கீழ்வாச்யவிவரணம் (நியாம்யரையித்யாதி). நப்பின்னைப்பிராட்டிக்குப்பித்தனாயிருக்கிறக்ருஷ்ணன் பெரியதோளழகை, பேணினள்-ஆசைப்பட்டாளென்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (இங்கேயித்யாதி). ஆல் - அசை. "பெருந்தோள்" என்று விசேஷித்ததுக்கு பாவம் (நம்மையித்யாதி). ... ... (௭)

(க) கத்யத்ர-க.

மூ.—முற்றிலும்பைங்கிளியும் பந்துமூசலும் பேசுகின்ற
சிற்றில்மென்பூவையும் விட்டகன்ற செழுங்கோதைதன்னைப்
பெற்றிலேன் முற்றிழையைப் பிறப்பிலி பின்னேநடந்து
மற்றெல்லாம் கைதொழப்போய் வயலாலி புகுவர்கொலோ. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
முற்றிலும்	முச்சிலேயும்	பெற்றிலேன்	நான் கண்ணுற்காணப்பெற்றிலேன்; (அவள்)
பைங்கிளியும்	பச்சைக்கிளியையும்		
பந்தும்	கந்துகத்தையும்		
ஊசலும்	உஞ்சலேயும்	மற்றெல்லாம் கைதொழ	ஸ்வவ்யதிரிக்தரெல்லாம் கண்டுஸேவிக்கும்படி
சிற்றில்	சிறுகூட்டிலிருந்து		
பேசுகின்ற	பேசுகிற		
மென்பூவையும்	ம்ருதுஸ்வபாவமான நாகணவாய்ப்பக்ஷியையும்	பிறப்பிலிபின்னே	ஹேயப்ரதிபடனானவன்பின்னே
		நடந்துபோய்	நடந்துசென்று (ஒன்றுசேர்ந்த அவ்விருவரும்)
விட்டு அகன்ற	விட்டுநீங்கிப்புறம்போன		
செழுங்கோதை தன்னை	அழகியமாலேபோன்றவளாய்	வயல்ஆலி	ஸஸ்யஸம்ருத்தியையுடைய திருவாலியிலே
முற்றிழையை	பூர்ண ஆபரணமணிந்த என்பெண்ணை	புகுவர்கொலோ	புகுவாரோ. (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (முற்றிலித்யாதி) †சிறுகூட்டிலே நின்று பேசாநின்ற ம்ருதுஸ்வபாவமான பூவையையும் விட்டகன்ற. (செழுங்கோதைதன்னை) †லீலோபகரணங்களைவிட்டு அவனைப்பற்றினபின்பு உடம்பிலே பிறந்த பௌஷ்கல்யம். (பெற்றிலேன் முற்றிழையை) †முன்னேபோகவிட்டு, கடைப்பணியும் கொக்குவாய்க்கூட்டமும் கண்டு பின்னே போகப்பெற்றிலேன்.

(பிறப்பிலி பின்னேநடந்து) "உனக்கிறுகுணஹாநிகாண்" என்று சொல்லி மீட்கைக்குமொரு பிறப்புடையனன்றிக்கே யிருக்கிறவன்பின்னேநடந்து. (மற்றெல்லாம் கைதொழப்போய்) †தாயான குற்றத்தாலே எனக்கொருத்திக்குமிறே தொழவொண்ணாதது, அல்லாதார்க்கெல்லாம் தொழுதுபின்னே போகலாமிறே. (வயலாலிபுகுவர்கொலோ) தன்னைக்காண்பார்க்குக் காட்சிகொடுக்கவிடமுள்ள தேசத்திலேபுகுமோ? அங்ஙனன்றிக்கே, எல்லாபோகங்களுமுண்டாம்படியான தேசமென்னவுமாம். ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (முற்றிலித்யாதி). நீ இப்போதுவிட்டுப்போன பின்பு, "அடியோமுக்கு" என்றுசொல்லுமதித்தனைபோக்கி, அவள் நாயகனை வேண்டிப்போகவொருப்பட்டபோது "படிகடந்து புறப்படுகை குலமர்யாதைக்குப்போராது காண்" என்று தகைய வில்லேயே, ஆகையால் சொல்லாதே

நடந்தாளென்ன; ஆகில் என்னைப்போலே நியாமககோடிகடிதங்களன்றே லீலோபகரணங்கள், அவற்றையும் விட்டுப்போனாளென்கிறாளென்று ஸங்கதி.

முற்றிலும் - முச்சிலையும், பைங்கிளியும் - பச்சைக்கிளியையும், பந்தையும், ஊசலும் - ஊஞ்சலையுமென்றர்த்தம் கண்டுகொள்வதென்று விவக்ஷித்து, "பேசுகின்ற, இத்யாதிக்கர்த்தமருளிச்செய்கிறார் (சிறுகூட்டிலேயித்யாதி). செழுங்கோதை - அழகியமாலைபோன்ற பெண்பிள்ளையென்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (லீலேத்யாதி). இழைமுற்றமுடையவளைப் பெற்றிலேனென்றால் பெற்றவளான தான் அங்ஙன் சொல்லவொண்ணாதென்று (பின்னேபோக) என்று கூட்டியருளிச்செய்கிறார் (முன்னேயித்யாதி).

கீழ்ப்பாட்டில், "அடியோமுக்கு" என்றவள் இங்கேதாயாகை - தொழக்கூடாமைக்குடலென்று, மற்றெல்லாரும் தொழப்போயினாளென்கிறாள், இதுக்குக்கருத்து - ஸ்வரூபஜ்ஞாநத்தாலே பகவத்விஷயத்தில் கைவைத்தவளென்று எனக்கும் தொழலாயிருந்தாலும், வழிநடையாகையாலே நாட்டார்க்காகத்தாயானமுறையிலே நிற்கவேண்டிற்றே! என்றுசொல்லுகிறாளென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (தாயானவித்யாதி). ... ... (அ)

மூ.—காவியங் கண்ணியெண்ணில் கடிமாமலர்ப் பாவையொப்பாள்
பாவியேன் பெற்றமையால் பணைத்தோளி பரக்கழிந்து
தூவிசேரன்னமன்ன நடையாள் நெடுமாலொடும்போய்
வாவியந்தண்பணைசூழ் வயலாலி புகுவர்கொலோ. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
காவியம்கண்ணி	காவிபோலே அழகிய கண்ணையுடையவளாய்	பணைத்தோளி	மூங்கில்போன்றதிருத்தோள்களையுடையவளாகிய என்பெண்
எண்ணில்	விசாரிக்கப்புகில்	பாவியேன்	பாபிஷ்டையான நான்
கடிமாமலர்	பரிமளம்மிக்க தாமரைப்பூவில் வஸிக்கிற	பெற்றமையால்	பெற்றதோஷத்தினால்
பாவையொப்பாள்	பெரியபிராட்டியாரை ஒப்பவளாய்	பரக்கு அழிந்து	அடக்கம் சிறிதுமில்லாமல்
தூவிசேர்	இறகையுடைய	நெடுமாலொடும்	தீர்க்கவ்யாமோஹமுடையவனோடு
அன்னம்அன்ன	அன்னப்பெடையோடு ஸத்ருசமான	போய்	தனியேபோய் (ஒன்றுசேர்ந்த இருவரும்)
நடையாள்	நடையையுடையவளாய்		
		வாவி	தடாகங்களும்

தண்அம்பணை	குளிர்ந்து அழகியநீர் நிலங்களும்	ஆலி — புகுவர்கொலோ	திருவாலியிலே புகுவாரோ என்னவோ? (கூ)
சூழ்	சுற்றும் சூழ்ந்த		
வயல்	ஸஸ்யஸம்ருத்தியை யுடைய		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (காவியித்யாதி) †ஈஶ்வரனிற்காட்டில் பிராட்டி * அஸிதேக்ஷணையென்னுமேற்றத்தையுடையளானாற்போலே பிராட்டியிலேற்றமுமிவளுக்கு. (காவியங்கண்ணி) என்று இருவரையும் சேர அநுபவிக்கிற கண்ணிறே இவளுடையகண்கள். (பாவியேனித்யாதி)†என்வயிற்றில் பிறக்கையிறே இவளுக்குத் தனியே போக்வேண்டிற்று. (தூவிசேரித்யாதி)† நடையாலே பிச்சேற்ற வல்லவள். (நெடுமாலொடும்போய்) நடைக்குப் பிச்சேறி வ்யாமோஹிக்குமவன். (வாவியித்யாதி)† ஸஂநாஸஂநிக்ரியைபண்ணிவிளையாடலாம் தேசத்திலே புகுவர்கொலோ? ... . (கூ)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (காவியித்யாதி). "இப்படி பெற்றாரையும் உற்றாரையும்விட்டு லீலோபகரணங்களையும் காற்கடைகொண்டு, உன்மகளைப்போலே போருவாருண்டோ" என்று நங்கைபழியிட; அதுக்கு, பிறந்தகத்தையும் திருவயோத்யையில் லீலோபகரணங்களையும்விட்டு. (க) "யஸ்த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்க:-யஸ்த்வயாஸஹ ஸஸ்வர்க்க:" என்று போனவளைப்போலே போனாள், என்செய்கேன், பரக்கழிந்தாளென்கிறாளென்றுஸங்கதி.

காவியிற்காட்டிலும்-கருநெய்தலிற்காட்டிலும், அழகியகண்ணுடையவளென்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஈஶ்வரனித்யாதி). பிராட்டி, தாஸதாஸீஜநங்களைக்கொடுத்தனுப்பவும், இளையபெருமாள் குறைப்பட்டுக்கொண்டு வரவுமிறே தொடர்ந்துபோனாள், உன் பெண்ணைப்போலே ஒருவரோடும் சொல்லாதே தனியே நடந்தாளோவென்ன "பாவியேனித்யாதி"சொல்லுகிறாளென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்வயிற்றிலித்யாதி). போனாளாகில்,நீ"வயலாலிபுகுவர்கொலோ" என்றுபுலம்புவானென்னென்ன, "தூவிசேரித்யாதி" சொல்லுகிறாளென்றுதாத்பர்யமருளிச்செய்கிறார் (நடையாலேயித்யாதி). இத்தால் - அவன் புரிந்துபார்த்து இவள் நடையில் பித்தேறி முன்னடிதோற்றாதேயிருக்கையால் "இனி திருவாலியில் சேர்த்துவிடுவாரில்லை" என்று புலம்புகிறேனென்றபடி, (ஸஂநா ஸஂநிக்ரியை பண்ணி) என்றது - புஷ்பங்களைக்கொண்டு ஒன்றுக்கொன்றெறிந்து ஜலக்ரீடைபண்ணியென்கை. ... ... (கூ)

மூ.—தாய்மனம் நின்றிரங்கத் தனியே நெடுமால்துணையாய்
போயின பூங்கொடியாள் புனலாலி புகுவரென்று
காய்சின வேற் கலியனொலிசெய் தமிழ்மாலைபத்தும்
மேவிய நெஞ்சுடையார் தஞ்சமாவது விண்ணுலகே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
தாய்	தாயானவள்
நின்றுமனம் இரங்க	வயிறெரிந்திரங்கா நிற்க
நெடுமால்	தன்னிலுங்காட்டில் வ்யாமோஹத்தால் கலங்கியிருக்கிறவனை
துணையா	ஸஹாயமாகக்கொண்டு
தனியேபோயின	ஸஜாதியரில்ஒருவரும் துணையின்றிப்போன
பூங்கொடியாள்	அழகியகொடியையொத்தஎன்மகளும்(அவனும்ஆகிய இருவரும்)
புனல்ஆலி	நீர்வளம்மிகுந்த திருவாலியிலே
புகுவரென்று	புகுவரோஎன்னவோ என்று
காய்சினம்	ப்ரதிபக்ஷத்தின்மேல் மிக்ககோபத்தையும்
வேல்	அவற்றைநிரஸிக்கத்தக்கவேலையுமுடைய
கலியன்	ஆழ்வார்
ஒலிசெய்	அருளிச்செய்த
தமிழ்மாலைபத்தும்	தமிழ்த்தொடை பத்தையும்
மேவியநெஞ்சுஉடையார்	ஸஹ்ருதயமாக அப்யஸிக்கவல்லவர்க்கு
விண்ணுலகு	பரமபதத்திலுள்ளார்க்கு நிர்வாஹகனானவன்
தஞ்சமாவது	ரக்ஷகனும்(பரமபதத்தைக்கொடுக்கும்).

வ்யா—(தாய்மனமித்யாதி)தாயார்வயிறெரிந்திரங்காநிற்க,†தன்னிலுங்காட்டில் வ்யாமோஹத்தாலே கலங்கியிருக்கிறவன் துணையாகப்போன†விலக்ஷணையான பெண்பிள்ளை, ஜல ஸம்ருத்தியையுடைத்தான திருவாலியிலே †புகுமென்று. பிராட்டிபேச்சாலேயாகையன்றிக்கே திருத்தாயார் பேச்சாம்படி, பகவத்விஷயத்திலே ப்ரவணராய், †ப்ரதிபக்ஷத்திலே சினத்தையுடையராய், அத்தைத் துணிக்கவல்லவேலையுடையரான திருமங்கையாழ்வாரருளிச்செய்த. (பத்தும்மேவிய நெஞ்சுடையார்க்குத் தஞ்சமாவது விண்ணுலகே) †இப்பத்தும் ஸஹ்ருதயமாகக் கற்கவல்லார்க்குப் பரமபதம் நிஶ்சிதம். †தாயார் தனிவழியேபோனாளென்று பயப்படப்போகவேண்டா,ஆதிவாஹிக கணத்தோடே †தானே வழிகாட்டிக்கொடுபோம்.... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

௮௫.—நிகமம். (தாய்மனமித்யாதி). "கெடு" என்றதினர்த்தம் (தன்னிலுமித்யாதி). அத்தால் - இவன் துணையாகமாட்டானென்றுகருத்து. "பூ" என்று - அழகாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (விலக்ஷணையான) என்று. "புருவர்" என்ற பஹுவசநம் பூஜ்யோக்தியென்று விவக்ஷித்து, (புருஷம்) என்கிறார். காயாநின்றுள்ள சினத்தையுடையாரென்று சப்தார்த்தமாய், அதுக்கு விஷயம் ப்ரதிபக்ஷமாகையாலேயருளிச்செய்கிறார் (ப்ரதிபக்ஷத்திலே) என்று. "விண்ணுலகு" என்று விண்ணிலுள்ளார்க்கு நிர்வாஹகனென்றாய், தஞ்சமாவது - பரமபதத்தைக்கொடுப்பனென்று விவக்ஷித்து பலிதார்த்தமருளிச்செய்கிறார் (இப்பத்துமித்யாதி). தஞ்சமாம் ப்ரகாரத்தையருளிச்செய்கிறார் (தர்யாரித்யாதி வாக்யத்வயத்தாலே). (தானே) எம்பெருமானே.(௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து, ஏழாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி, ௩-ம் பத்து, அ-ம் திருமொழி, நந்தாவிளக்கு ப்ரவேசம்.

வ்யா.—*பகவத்விஷயத்தில் தமக்குப்பிறந்த ப்ராவண்யாதிசயத்தைப் பார்ஶ்வஸ்த்தர்பேச்சாலேயநுபவித்தார்; அதாகிறது - மாதாபிதாக்களுக்காகாதே வயலாலிமணவாளனுக்கேயாயிருக்கிற இருப்பைத் திருத்தாயார்பேச்சாலே அநுபவித்தாராய்நின்றார்கீழ்; இப்படி திருவாலியில்புக்கு அநுபவித்தவிடத்திலும் ஆராமையாலே தமக்குப்பிறந்த ப்ராவண்யம், உகந்தவிஷயத்தைக் கண்ணாலே கண்டு ஸ்பர்சாதிகளை அபேக்ஷிக்குமாபோலே †அநுபவிக்கையிலே மூட்ட, அப்போதே பெருமையாலே திருவுள்ளம்பதற, திருவுள்ளத்தைக்கொண்டாடி, "அப்பேறு பெறுந்தனையும் இங்கேயநுபவிக்கைக்காகவன்றோ உகந்தருளின நிலங்கள்" என்று, ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்குத்தந்தாமபிமதங்களபேக்ஷிக்கலாய், அவ்வோ காலங்களிலிழந்தாரெல்லார்க்கும் எல்லா இழவுகளும் தீர்க்கைக்காகத் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், அங்கேசென்றநுபவி என்று திருவுள்ளத்தை †அநுசாஸிக்கிறார் ... *

அரு.—நந்தாவிளக்கின்ப்ரவேசம். திருவாலியிலெம்பெருமானை யநுபவித்தும் த்ருப்தி பிறவாமையாலே திருமணிமாடக்கோயிலிலே அநுபவிக்கிறாரென்னும் ஸங்கதியை வ்ருத்தவர்த்திஷ்யமாணகதநமுகேந வருளிச்செய்கிறார் (பகவதித்யாதி). (அநுபவிக்கையிலே) தழுவிமுழுசிப்பரிமாறுகையிலே. (அநுசாஸிக்கிறார்) விதிக்கிறார். ... ... *

மூ.—நந்தாவிளக்கே யளத்தற்கரியாய்
நரநாரணனே கருமாமுகில்போ
லெந்தாயெமக்கே யருளாயெனநின்
றிமையோர் பரவுமிடம் எத்திசையும்
கந்தாரமந்தேனிசை பாட மாடே
களிவண்டு மிழற்ற நிழல் துதைந்து
மந்தாரநின்று மணமல்கு நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. (௧)

பதம்.	உரை.
நந்தாவிளக்கே	நித்யமாய் ஸ்வயம்ப்ரகாசமான ஜ்ஞானத்தை ஸ்வரூபமாகவுடையவனே!
அளத்தற்குஅரியாய்	பரிச்சேதிக்க அசக்யனானவனே!
நரநாரணனே	நரநாராயணாவதாரமெடுத்தவனே!
கருமாமுகில் போல்எந்தாய்	கறுத்த மஹாமேகம் போன்ற திருமேனியையுடைய என்ஸ்வாமீ!
எமக்கே	அநுகூலராய் அநந்யசரணரான எங்களுக்கே
அருளாயென	ப்ரஸாதத்தைப் பண்ணியருளவேணுமென்று
இமையோர்	தேவதைகள்
நின்று	பூமியில்வந்துநின்று
பரவும்இடம்	ஸ்தோத்ராதிகளைப் பண்ணி ஆஶ்ரயிக்கிற ஸ்த்தாநமாய்,

பதம்.	உரை.
அம்தேன்	அழகியவண்டுகள்
எத்திசையும்	ஸர்வதிக்குக்களிலும்
கந்தாரம்இசை பாட	தேவகாந்தாரி ராகம் பாடவும்
களிவண்டு	மதுபாநமத்தப்ரமரங்கள்
மாடே	பர்யந்தத்திலே
மிழற்ற	ஆளத்திவைக்கவும்
நிழல்துதைந்து	அவ்வண்டுகளுக்கு நிழலைக்கொடுத்து
மந்தாரம்நின்று மணம்மல்கும்	மந்தார வ்ருக்ஷங்கள் எல்லாக்காலத்திலும் மலர்ந்துநின்று பரிமளம் ஸம்ருத்தமாகாநிற்கிற
நாங்கூர்	திருநாங்கூரிலேயுள்ள
மணிமாடக் கோயில்	திருமணிமாடக்கோயிலை
என்மனனே	என்மநஸ்ஸே!
வணங்கு	ஆஶ்ரயி. (க)

வ்யா.—முதற்பாட்டு. (நந்தாவிளக்கே) †ப்ரஹ்மாதிகள், "எங்களபிமதங்கள் செய்யவேணும்" என்று ப்ரார்த்திக்கிறதிருமணிமாடக்கோயிலிலே நெஞ்சே! நீயும் சென்றநுபவியென்கிறார்.

(நந்தாவிளக்கே)விச்சேதியாதவிளக்கு. ப்ரபா ப்ரபாவான்களாயிருக்கையிறே†விளக்காகிறது.நித்யமாய் ஸ்வயம்ப்ரகாசமான†ஜ்ஞானத்தை ஸ்வரூபமாகவுடையவனென்றபடி. (அளத்தற்கரியாய்)†விபுத்வத்தாலும், மற்றுமுண்டான குணவிபூத்யாதிகளாலும், அபரிச்சேத்யனானவனே!†"(க)'సత్యంజ్ఞానమనన్తంబ్రహ్మ - ஸத்யம்ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்கிறார்காண்"என்று ஆழ்வான்பணிக்கும்.† இப்படியிருக்கிறவன்றான் நரநாராயணப்ராதுர்ப்பாவத்தாலே தன்னை வெளியிட்டபடி. (கருமாமுகில்போலெந்தாய்) அப்போதையநுபவயோக்யமான வடிவு. †அன்றிக்கே, கீழ்ச்சொன்ன ஸ்வபாவங்களிற்காட்டில் ஆகர்ஷகமாய் மேகம்போலே ஶ்ரமஹரமானவடிவைக்காட்டி எங்களை யநந்யார்ஹமாக்கினவனே! (எமக்கேயருளாயித்யாதி). (உ) "దేవానాం దానవానాంచ సామాన్యమధిదైవతమ్ - தேவாநாம்

(க) தை - ஆந -. (உ) ஜி - ஸ்தோ - உ.

தாநவாநாம்ச ஸாமாந்யமதிதைவதம்'' என்கிற ஸம்பந்தஸாமாந்யத்தைப்பார்த்து அஸுரர்களுக்கருள்செய்கை தவிர்ந்து அநுகூலராய் அநந்யசரணரான எங்களுக்கே ப்ரஸாதத்தைப் பண்ணியருளவேணுமென்று தேவர்கள்வந்து ஸ்தோத்ராதிகளைப்பண்ணி யாஶ்ரயிக்கிற ஸ்த்தாநம்.

(எத்திசையுமித்யாதி). பார்த்த பார்த்த விடமெங்கும் கந்தாரம் என்கிறபண்ணை, அந்தேனுண்டு - தர்சநீயமான வடிவையுடைத்தாய் தேனென்று பேரையுடைத்தான வண்டுகளானவை மதுபாநம்பண்ணி யிசைசொல்ல. (மாடேயித்யாதி) அதினுடைய பர்யந்தத்தே, ஸம்ஶ்லேஷத்தாலே ஹ்ருஷ்டமாய்க் களிக்கிற வண்டுகளானவை (மிழற்ற) கிரம்பா மென்சொல்லாலே யாளத்திவைக்க. (நிழல்துதைந்து) அவற்றுக்குபோக (ஞ்சீ) யோக்யமாம்படி நிழலைச்செறியப் பண்ணி; பாடுவார்க்குக்†காவணமிட்டுக் கொடுப்பாரைப்போலே. மந்தாரமென்று - கல்பகவ்ருக்ஷத்திலே யொருவிசேஷம். எல்லாக்காலமும்நின்று மணத்தை மிகவுமுண்டாக்காநின்றுள்ள. (மணம்நல்கும்) என்னவுமாம். பாடுவார்க்குப் பரிசில் கொடுப்பாரைப்போலே கந்தத்ரவ்யங்களைக் கொடாநின்றது. இப்படிப்பட்ட திருநாங்கூரில் திருமணிமாடக்கோயிலே யாஶ்ரயியென்கிறார். ... .(௧)

அரு.—முதற்பாட்டு. (நந்தாவித்யாதி) பாட்டுக்கெல்லாம் தொகுத்த பாவம் (ப்ரஹ்மாதிகளித்யாதி).

(விளக்காகிறது) என்றவநந்தரம், ஆகையால் என்றுசேஷம். (ஜ்ஞாநத்தை) என்றவநந்தரம், குணமாகவும் ஸ்வரூபமாகவும் என்று கூட்டுவது. அளத்தற்கு - அளக்கைக்கு - பரிச்சேதிக்கைக்கு, அரியாய் - அருமைப்படும்படி யிருக்கிறவனேயென்றாய், அர்த்தமருளிச்செய்கிறார் (விபுத்வேத்யாதி). ஆதிசப்தத்தாலே விக்ரஹசேஷ்டிதங்களைச் சொல்லுகிறது. (ஸத்யம்) ஸ்வரூபதோ குணதஸ்ஸதைகரூபம் என்றாய், "நந்தா" என்றதினர்த்தம். ஜ்ஞாநம் - ஸ்வயம்ப்ரகாசம்; இதுவும் ஸ்ரூபதோ குணதஸ்ஸ்வயம்ப்ரகாசம் என்றாய், "விளக்கு" என்றபதார்த்தம். "அநந்தம்" என்றத்தாலும் - ஸ்வரூபதோ குணதோ ரூபாதிதஶ்ச பரிச்சேதராஹித்யமாய், "அளத்தற்கரியாய்" என்றதினர்த்தமென்று விவக்ஷித்து, ஸம்வாதம் காட்டுகிறார் (ஸத்யமித்யாதி). கீழ்ப்பதங்களாலே பரத்வம் பலித்ததாய், இத்தால் ஆஶ்ரயணோபயோகியான ஸௌலப்யம் சொல்லிற்றென்கிறார் (இப்படியித்யாதி). நரநாரணனாயிருக்கும்போதையில் வடிவாகக் கீழருளிச்செய்து, மணிமாடக்கோயிலெம்பெருமான் வடிவாக அர்த்தாந்தரம் (அன்றிக்கேயித்யாதி).

(பண்ணை - இசைசொல்ல) என்றநுவயம். (காவணம்) பந்தல். ... (௧)

ழு — முதலைத் தனிமா முரண்தீர வன்று
முதுநீர் தடத்துச் செங்கண் வேழமுய்ய
விதலைத் தலைச் சென்றதற்கேயுதவி
வினைதீர்த்த வம்மானிடம் விண்ணணவும்
பதலைக்கபோதத்தொளிமாட நெற்றிப்
பவளக்கொழுங்கால பைங்கால்புறவம்
மதலைத்தலை மென் பெடை கூடு நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	அக்காலத்திலே	ஒளி	இழைத்த ரத்நகாந்திகளையுமுடைத்தான
முதுநீர்	பழையநீரையுடைய	மாடநெற்றி	உப்பரிக்கைகள் மேலே
தடத்து	தடாகத்திலே (யானையின்காலைக் கவ்வின)	பவளக்கொழுங்கால்	பவளத்தின் கொழுவிதான காலைப்போன்ற
தனிமாமுதலை	ஒப்பற்றபெரியமுதலையினது	பைங்கால்புறவம்	பசுமையான காலையுடைய புறவானது
முரண்தீர	கரைகாணவொண்ணாதமிடுக்கறும்படியாகவும்,	மதலைத்தலை	பிள்ளைத்தூண்களின் தலையிலே
செங்கண்வேழம்	சீற்றத்தால் சிவந்தகண்களையுடைய அவ்வானை	மென்பெடை	ம்ருதுஸ்வபாவமான தன்பேடையோடே
உய்ய	உஜ்ஜீவிக்கும்படியாகவும்	கூடும்	கூடிக்கலந்திருக்கிற
விதலைத்தலைச் சென்று	வ்யஸநப்படுகிற தசையிலேவந்து	நாங்கூர்	திருநாங்கூரிலேயுள்ள
அதற்கேஉதவி	அந்தயானைக்கு உபகரித்து	மணிமாடக்கோயில்	திருமணிமாடக்கோயிலை
வினைதீர்த்த	அதின் வ்யஸநத்தை நீக்கின	என்மனனே	என்மநஸ்ஸே!
அம்மான்	ஸர்வேஶ்வரனுடைய	வணங்கு	நீபோய் ஆஶ்ரயி. ()
இடம்	ஸ்த்தாநமாய்,		
விண் அணவும்	ஸ்வர்க்கத்தையளாவியும்		
பதலை	கலசங்களையும்		
கபோதம்	கபோத ஒழுங்குகளையும்		

வ்யா.— இரண்டாம்பாட்டு. (முதலையித்யாதி) †ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆபத்துப்போக்கினவன் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், நெஞ்சே! உன் துஃகமெல்லாங்கெட அங்கேசென்றநுபவியென்கிறார்.

(முதலையித்யாதி) முதலையினுடைய, உபமாநரஹிதமாய், கரைகாணவொண்ணாத மிடுக்கறும்படிக்கீடாக. (முதுநீர்த்தடத்து)

பழைதான நீரையுடைத்தென்று ப்ரஸித்தமிறே. (செங்கண்வேழமுய்ய) மிடுக்கையுடைத்தாயிருக்கச்செய்தே தன்னிலமல்லாமையாலே அம்மிடுக்குக்கொண்டு வ்யாபரிக்கவொண்ணாதபடியால் வந்த சீற்றத்தாலே சிவந்த கண்ணையுடைத்தான ஆனை உய்யும்படி. செங்கணென்று - †செயலறுதியாலே சிவந்த கண்ணையுடைய ஆனையென்றுமாம். (சென்று) கைகழிந்ததென்று மீளாதே ஆபத்திலேயுதவி. (விதலைத்தலை) †விதனப்படுகிறவளவிலே. (வினைதீர்த்தவம்மானிடம்) அதினுடைய வ்யஸநத்தைப்போக்கின ஸர்வேஸ்வரனுடைய ஸ்தாநம். வினைதீர்க்கையாகிறது - அது நினைத்தபடியே திருவடிகளிலே பூவைப் பணிமாறலாம்படிசென்று முகங்காட்டுகை.

(விண்ணணவுமித்யாதி). ஸ்வர்க்கத்திலேசென்ற ஓக்கத்தை யுடைத்தாய், †கும்பநிரைகளையும் கபோதவொழுங்குகளையுமுடைத்தாய்,பொன்னாலும் ரத்நங்களாலும் சமைக்கையாலே ஒளியையுடைத்தான மாடத்தினுடைய நெற்றியுண்டு -†புலிமுகங்களில், பதலையென்று- கும்ப நிரை. (பவளக்கொழுங்கால பைங்கால் புறவம்) பவளம் போலே சிவந்து கொழுவிதான காலையுடைத்தாய், பசுமையையுடைத்தான புருவானது. (மதலைத்தலை) †பிள்ளைத்தூண்களின் தலையிலே. (மென்பெடைகூடும்) ஸம்ஸ்லேஷிக்கவும் பொறுத ம்ருதுவான பேடையோடேகூடக் கலந்து வர்த்திக்கிற திருநாங்கூரிலே. (உ)

௮௫.—இரண்டாம்பாட்டு. (முதலையித்யாதி) ஸங்கதி ஸூசிப்பிக்கிறார (ஸ்ரீகஜேந்த்ரேத்யாதி). "ப்ரஹ்மாதிகளான ப்ரயோஜநாந்தரபராஸ்ரயிக்குமளவன்றிக்கே" என்று வாக்யாதியில் கூட்டுவது.

(செயலறுதியாலே) என்றவநந்தரம், வந்ததுக்கத்தாலே என்றுகூட்டுவது. (விதனப்படுகிற) வ்யஸநப்படுகிற.

(கும்பநிரை) மாடங்களின்மேலில் மகுடாகாரங்களான கும்பபங்க்தி. (புலிமுகங்களில்) என்றதுக்கு, (புருவானது) என்றத்தோடு அந்வயம். (பிள்ளைத்தூண்) தூண்மேலேநிற்கிற சிறுதூண். ... ... (உ)

௩.—கொலைப்புண் டலைக் குன்றமொன்றுய்ய வன்று
கொடு மா முதலைக் கிடர்செய்து கொங்கா
ரிலைப் புண்டரீகத் தவளின்பமன்போ
டணைந்திட்டவம்மானிடம் ஆளரியா
லலைப்புண்ட யானை மருப்பு மகிலு
மணிமுத்தும் வெண்சாமரையோடு பொன்னி
மலைப்பண்ட மண்டத் திரையுந்து நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. (௩)

பதம்.	உரை.
அன்று	அக்காலத்தில் [ம்
கொலை	கொலைத்தொழிலையு
புண்தலை	பாகன் தோட்டியால் குத்துண்டபுண் தலையையுமுடைய
குன்றம்ஒன்று	ஓர்பெருமலைபோன்ற கஜேந்த்ராழ்வான்
உய்ய	உஜ்ஜீவிக்கும்படியாக
கொடுமாமுதலைக்கு	(அதின்காலைக் கவ்விண)க்ரௌர்யத்தையும் மிக்கபலத்தையுமுடைத்தான முதலைக்கு
இடர்செய்து	து:கத்தைப்பண்ணி
கொங்குஇலை ஆர்	தேனும் இலைகளும் மிக்கிருந்துள்ள
புண்டரீகத்தவள்	தாமரைப்பூவிலிருக்கும் பெரியபிராட்டியாருடைய
இன்பம்	ஸம்ஶ்லேஷ ஸுகத்தை
அன்போடு அணைந்திட்ட	ஸ்நேஹாதிக்யத்தோடநுபவித்துக் கொடுவர்த்திக்கிற

பதம்.	உரை.
அம்மான்	ஸர்வஸ்வாமியானவ
இடம்	ஸ்த்தாநமாய், [னது
பொன்னி	காவேரியானது
ஆள்அரியால்	பௌருஷமுள்ளஸிம்ஹங்களாலே
அலைப்புண்ட	ஸம்ஹரிக்கப்பட்ட
யானை	யானைகளினுடைய
மருப்பும்	தந்தங்களையும் [யும்
அகிலும்	அகருவ்ருக்ஷங்களை
அணிமுத்தும்	அழகியமுத்துக்களையும்
வெண்சாமரையோடு	வெளுத்த சாமரங்களோடுகூட
மலைப்பண்டம் அண்ட	பர்வதங்களில் மற்றுமுண்டான வஸ்துக்களையெல்லாம்
திரைஉந்து	அலைகளாலே தள்ளிக்கொண்டுவந்து கொடுக்கிற

நாங்கூர் மணிமாடக்கோயில் என்மனனே! வணங்கு. (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. †ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு விரோதியான முதலையைப்போக்க அத்தாலே ப்ரீதையான பிராட்டி கரவதத்திற்போலேயணைக்க, அவளோட்டை ஸம்ஶ்லேஷத்தைப்பெற்ற எம்பெருமான் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், நெஞ்சே! அங்கேசென்றநுபவியென்கிறார்.

(கொலைப்புண்தலைக்குன்றமொன்று) கொலை - கொலைத்தொழிலையும், புண்ணுருத்தலையையுமுடைய, குன்றம்போலேயிருக்கிற ஆனையுண்டு - ஸ்ரீகஜேந்த்ராழ்வான். †துறேட்டியிட்டுக்கொத்துகையாலே புண்ணுமென்னுதல்; காட்டானையாகையாலே ஆனைகளோடேபொருது புண்ணுயிருத்தல்;†ஜாதிப்பண்பாகையாலே சொல்லிற்ருகவுமாம். (உய்ய) †அதிடர்பட்டவன்று அது உஜ்ஜீவிக்கும்படியாக. (கொடுமாமுதலைக்கிடர் செய்து) க்ரௌர்யத்தையும் மிக்கபலத்தையுமுடைத்தான முதலைக்கு து:கத்தைப்பண்ணி. (கொங்காரித்யாதி) ப்ரஜைகளினுடைய து:கத்தைப்போக்கித் தாய் பாடே முகம்

பெறுவாரைப்போலே. (கொங்கார்) கொங்கென்று - தேனுதல், பரிமளமாதல். தேனுலே மிக்கிருப்பதாய். (இலைப்புண்டரீகத்து). ஶ்ரமஹரமான இலையையுடைத்தான தாமரைப்பூவை இருப்பிடமாகவுடைய. (அவளின்பமித்யாதி). பெரிய பிராட்டியாரோட்டை ஸம்ஶ்லேஷஸுகத்தை, தன்னுடைய ப்ரேமமுண்டு - ஸ்நேஹம், அத்தோடேகூட அநுபவித்த ஸர்வேஶ்வரனுடைய ஸ்த்தாநம்.

(ஆளரியித்யாதி). ஆண்பிள்ளைத்தனத்தையுடைத்தான ஸிம்ஹங்களானவை ஆனைகளைப்பிடித்து அலைத்திட்டுவைக்கும்; அலைக்கை-கொல்லுகை. அவ்வளவிலே ஆறுநீர்வந்து கொம்புகளைப்பறித்துக்கொண்டுபோயிற்றது. (அகிலுமணிமுத்தும்) அதின்மஸ்தகத்தில் நின்று முதிர்ந்த அழகிய முத்துக்களும் வெண்சாமரைகளையுங்கொண்டு. (பொன்னியித்யாதி) காவேரியானது †சொல்லிச்சொல்லாத மலைச்சரக்குக்களையும் கொண்டுவந்து, கொள்ளைச்சரக்குக்கொடுப்பாரைப்போலே திரைக்கைகளாலே கொண்டுவந்து கொடாநின்றதாயிற்று; அப்படிப்பட்ட திருநாங்கூர். ... ... (ங)

அரு.—மூன்றும்பாட்டு. (கொலையித்யாதி) கீழ்ப்பாட்டில் ஸ்ரீகஜேந்த்ரரக்ஷணத்தை யநுபவித்துக்கொண்டு, அத்தால் திருமுகம்பெற்றுனென்னும் ஸங்கதியைக்காட்டுகிறுர் (ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கித்யாதி).

(துறுேட்டி) அங்குசம். ஸத்வஸ்த்தரான ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்குப் புண்தலைகூடுமோவென்ன வருளிச்செய்கிறுர் (ஜாதிப்பண்பித்யாதி). "அன்று-உய்ய" என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறுர்(அதித்யாதி).

"அண்ட" என்றதுக்கு - சேரஎன்று அர்த்தம் திருவுள்ளம்பற்றி, அத்தால் எல்லாம் என்றுய், அத்தையருளிச்செய்கிறுர் (சொல்லியித்யாதி). (ங)

மூ.—சிறையா ருவணப்புள் ளொன்றேறி யன்று
திசை நான்கும் நான்கு மிரியச் செருவில்
கறையார் நெடுவேலரக்கர் மடியக்
கடல் சூழிலங்கை கடந்தானிடந்தான்
முறையால் வளர்க்கின்ற முத்தீயர் நால்வேத
ரைவேள்வி யாறங்க ரேழினிசையோர்
மறையோர் வணங்கப் புகழெய்து நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	கொடுமைமிருந்தகாலத்திலே [குகள்	கடந்தான்	ஜயித்தவனானஎம்பெருமானுடைய
சிறை	கமநஸாதநமான சிற	இடம்	ஸ்த்தாநமாய் [லே
ஆர்	குறைவற்றிருந்துள்ள	முறையால்	வேதோக்தக்ரமத்தா
ஒன்று	ஒப்பற்ற	வளர்க்கின்ற	ஹோமம்செய்கிற
உவணப்புள்	கருடனென்னும் பெரிய திருவடியின் மேலே [தருளி	முத்தீயர்	மூன்றுஅக்நியையுடையராய்
		நால்வேதர்	அப்படியேநாலுவேதத்தை உத்தரித்திருப்பாராய்
ஏறி	ஏறிக்கொண்டெழுந்		
செருவில்	யுத்தத்திலெதிர்த்த		
கறையார்	கறையினால் பூர்ணமாய்	ஐவேள்வி ஆறு அங்கர்	பஞ்சமஹாயஜ்ஞ ஷடங்கஸம்பந்நராய்
நெடுவேல்	நெடிதானவேலையு	ஏழிசையோர்	ஸப்தஸ்வரங்களையுமுள்ளபடியேயறிந்திருப்பவருமான
அரக்கர்	ராக்ஷஸர்கள் [டைய		
திசைநான்கும் நான்கும்	எட்டுத்திக்குக்களிலும்	மறையோர்	விலக்ஷணரான ப்ராஹ்மணர்கள்
இரிய	(சிலர்) ஓடிப்போம்படியாகவும் [கவும்	வணங்க	ப்ரணாமபூர்வகமாக ஆச்ரயிப்பதினால்
மடிய	(சிலர்)முடியும்படியா		
கடல்சூழ்	கடலாகிய அகழாற் சூழப்பட்ட	புகழ்எய்தும்	மிக்கபுகழ்பெற்றிருக்கிற
இலங்கை	லங்கையென்னும் ஊரை	நாங்கூர்மணிமாடக்கோயில் என்மனனே! வணங்கு. ... (௪)	

வ்யா.—நாலாம்பாட்டு. (சிறையித்யாதி) †மாலி ஸுமாலிதுடக்கமான ராக்ஷஸரையடையப் பண்டு லங்கையிலேவென்ற ஸர்வேச்வரன் திருமணிமாடக்கோயிலிலேவந்து நின்றருளினான், நெஞ்சே! அங்கேசென்றநுபவியென்கிறார்.

(சிறையாருவணப்புள்) சிறையென்று - சிறகு. கமநஸாதநமான சிறகு குறைவற்றிருந்துள்ள. (உவணப்புள்) உவணமாகிறபுள். உவணமென்று பெரியதிருவடிக்குப்பேர், புள்ளென்று பருந்து ஜாதிக்குப்பேர். (ஒன்றேறி) அத்விதீயமான புள்ளையேறி. (திசைநான்கும் நான்குமிரிய) †எட்டுத்திக்குக்களும் †இரியும்படியாக. (செருவில்) யுத்தத்திலே. (கறையாரித்யாதி) கறை கழுவவொண்ணாதபடியாய் நெடிதானவேலையுடைய ராக்ஷஸஜாதி மடிய. †ஒளித்துப்போவாரும், முடிவாரும்ாகை. (கடல் சூழித்யாதி) கடலாலே சூழப்பட்டிருப்பதாய்,புற்றுக்கள் பாம்பாலுமேயிருக்குமாபோலே துர்வர்க்கங்கள் சேரும்படியான லங்கையைக்கடந்தான். மாலி, ஸுமாலி, மால்யவான் துடக்கமானவரைப் பெரியதிருவடிமேலே யெழுந்தருளி நிரஸித்த

தாகச்சொல்லக்கடவதிறே. (கடந்தானிடந்தான்) அவ்வூரை ஜயித்தவன் வாஸஸ்தாநம்.

(முறையாலித்யாதி) ப்ராப்தமானபடியே யென்னுதல்; வேதோக்தமான க்ரமத்தாலே வளர்க்கின்ற அக்நித்ரயங்களையுமுடையராய், (நால்வேதர்) † அப்படியேநாலுவேதத்தை உத்தரித்திருப்பாராய், பஞ்சமஹாயஜ்ஞாத்யநுஷ்டாநங்களில் வைகல்யமின்றிக்கே அங்கங்களாறும் கைவந்திருப்பாருமாய், ஸப்தஸ்வரங்களையுமுள்ளபடியேயறிந்திருக்கும் ப்ராஹ்மணர். (வணங்கவித்யாதி) இப்படிப்பட்ட விலக்ஷணராச்ரயியாநின்றார்களென்கிற புகழையுடைத்தான திருநாங்கூர். ... ... (௪)

அரு.—நாலாம்பாட்டு. (சிறையித்யாதி) ஒருநீர்ப்புழுவை வென்றவளவன்றிக்கே, ப்ரபலரான மாலிமுதலானாரைவென்றான் கிடாயென்று, வீரவாசியறியுமவராகையாலே அத்தையருளிச் செய்கிறாரென்று ஸங்கதியை ஸூசிப்பிக்கிறார் (மாலியித்யாதி).

(எட்டுதிக்குக்களும்) எட்டுதிக்குக்களிலும். (இரியும்படி) சிதறும்படி. "இரியும்படி" என்றத்தால் பலிதார்த்தமருளிச்செய்கிறார் (ஒளித்தித்யாதி).

"முறையால்" என்றது - மேலெல்லா மநுஷங்கிக்கிறதென்று திருவுள்ளம்பற்றி (அப்படியே) என்றது. ... ... (௪)

மூ.—இழையாடு கொங்கைத்தலை நஞ்சமுண்டிட்
டிளங்கன்றுகொண்டு விளங்காயெறிந்து
தழைவாட வன்தாள் குருந்தமொசித்துத்
தடந்தாமரைப்பொய்கை புக்கானிடந்தான்
குழையாட வல்லிக்குலமாட மாடே
குயில் கூவ நீடு கொடிமாடமல்கு
மழையாடுசோலை மயிலாலுநாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இழை	ஆபரணங்கள்	எறிந்து	அவ்விருவருமிறும் படிமோதி,
ஆடு	ஆடாநின்ற		
கொங்கைத்தலை	பூதனையின் ஸ்தநாக்ர[த்தி லுள்ள	வன்தாள்	வலியதாளையுடைய
நஞ்சம்	விஷத்தை	குருந்தம்	குருந்தமரத்தை
உண்டிட்டு	உண்டு,	தழைவாட	அதின்தழைகளெல்லாம்வாடியுலரும்படி
விளங்காய்	விளங்காயாய்நின்ற அஸுரன்மேல்		
இளங்கன்று கொண்டு	சிறுகன்றாய்வந்த அஸுரனைத்தூக்கி	ஒசித்து தடம்	முறித்து, (பின்பு) பெரிதான

தாமரைப்பொய்கை	பத்மஸரஸ்ஸிலே
புக்கான்	போய்அங்கு க்ரீடை பண்ணும் கோபீஜநவஸ்த்ராபஹாரம் பண்ணின கண்ணனுடைய
இடம்	ஸ்த்தாநமாய், [கள்
குழை	வ்ருக்ஷங்களின் தளிர்
ஆட	(மந்தமாருதத்தால்) அசைந்தாடுவதினால்
வல்லிக்குலம்	(அவைகளின்மேல்படர்ந்த) புஷ்பக்கொடிக்கூட்டங்க [ள்
ஆட	ஆடவும்
மாடு	பர்யந்தங்களில்
குயில்	கோகிலங்கள்
கூவ	கூவவும் [இற
மழைஆடு	மேகங்கள் ஸஞ்சரிக்
சோலை	சோலையிலே
மயில்ஆலும்	மயில்கள்நர்த்தநம்பண்ணப்பெற்றதுமாய்
நீடு	நீண்ட [ட்ட
கொடி	த்வஜங்கள் நாட்டப்ப
மாடம்	ஸௌதங்கள்
மல்கும்	நெருங்கியிருக்கப்பெற்றதுமான

நாங்கூர் மணிமாடக்கோயில் என் மனனே! வணங்கு. (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு.†ப்ரதிகூலவர்க்கத்தைப்போக்கி இடைப்†பெண்களோடே ஸம்ஶ்லேஷித்தவன் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், நெஞ்சே! அத்தேசத்தை யாஶ்ரயியென்கிறார்.

(இழையாடித்யாதி) இழையென்று - ஆபரணம். ஆபரணங்களாடாநின்றுள்ள கொங்கைத்தலை நஞ்சையுண்டு. பூதனை பேய்வடிவைமாற்றி யசோதைப்பிராட்டி வடிவாக ஒப்பித்துவர, அந்த ஆபரணங்களாலே அலங்க்ருதமான முலையில் நஞ்சையுண்டானாயிற்று. (இளங்கன்றித்யாதி) கன்றாய்நின்ற அஸுரனைக்கொண்டு - விளாவாய்நின்ற அஸுரனையெறிந்து, இருவரையும் தங்களிலே முடியும்படிபண்ணி.(தழையித்யாதி) †அஸுராவேசத்தாலே உயிரையுடைத்தாயிருந்த மரமானது இவன்கிட்டச் சென்றவாறே தழைவாடிற்றாயிற்று. வலியதாளையுடைத்தான குருந்தை முறித்து. (தடந்தாமரையித்யாதி) †தனக்கும் பெண்களுக்கும் ஜலக்ரீடைபண்ணுகைக்கு யோக்யமான இடத்தைக் காளியன்புக்கு தூஷித்துக்கிடக்க, அங்கேபோய்ப் புக்கானாயிற்று; † பெண்கள் நீராடப்புக்கவிடத்தையுமுடைத்தாய், தாமரையையுமுடைய பொய்கையிலேபுக்கு அவர்கள் துகிலை வாங்கினபடியாகவுமாம்; அவன் வர்த்திக்கிறதேசம்.

(குழையித்யாதி) தழைகளானவையும் பூங்கொடிகளும் மந்தமாருதத்தாலே அசைந்துவர. (மாடேகுயில்கூவ) பர்யந்தங்களிற் சோலையில் புஷ்பங்களினுடைய பரிமளத்தை ஆக்ராணம்பண்ணி, முக்தர் ஸாமகாநம்பண்ணுமாபோலே குயில்கள் கூவாநின்றனவா

யிற்று. (நீடுகொடிமாடமல்கு) நெடிய கொடிகளையுடைத்தான மாடங்களாலே நெருங்கியிருப்பதாய். (மழையாடுசோலை மயிலாலு நாங்கூர்) உயர்ந்த சோலையின் தலையிலே மேகங்கள் ஸஞ்சரிக்க அவற்றைக்கண்டு †வர்ஷாவாகக்கொண்டு சோலையில் வர்த்திக்கிற மயில்களானவை ஆடத்தொடங்கும். இப்படிப்பட்ட திருநாங்கூரில். (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (இழையித்யாதி) பரத்வப்ரகாசகமான பெரிய திருவடிமேலேறி மாலிமுதலானாரைவென்ற வீரத்திலும் பிள்ளைச்சேவகத்தில் திருவுள்ளம் குடிபோயநுபவிக்கிறாரென்று ஸங்கதி திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (ப்ரதிகூலேத்யாதி). (பெண்களோடே) என்றது, "தாமரைப்பொய்கைபுக்கான்" என்றத்தைப்பற்ற.

"தழைவாட" என்று விசேஷித்ததுக்கு பாவம் (அஸுரேத்யாதி). விரோதி நிரஸநப்ரகரணாநுகுணமாகக் காளியன்பொய்கையாக விவக்ஷித்து, அப்போது "தாமரை" என்று விசேஷிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (தனக்குமித்யாதி); ஸுநாஸுநிக்ரியைக் கநுகுணமாக விசேஷித்தாரென்று கருத்து. அர்த்தாந்தரம் (பெண்களித்யாதி).

(வர்ஷாவாக) வர்ஷர்துவாக. ... ... (௫)

மூ.—பண்ணேர்மொழி யாய்ச்சிய ரஞ்ச வஞ்சப்
பகுவாய்க் கழுதுக் கிரங்கா தவள்தன்
உண்ணாமுலை மற்றவளாவியோடு முடனே
சுவைத்தானிடம் ஓங்கு பைந்தாள்
கண்ணார் கரும்பின் கழை தின்று வைகிக்
கழுநீரில் மூழ்கிச் செழுநீர்த் தடத்து
மண்ணேந்திள மேதிகள்வைகு நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பண்நேர்	காநத்தோடொத்த	உண்ணா	விஷம் தடவியிருப்பதால் அயலாராலுண்ணமுடியாத
மொழி	பேச்சையுடைய	முலை	முலைப்பாலை
ஆய்ச்சியர்	இடைச்சிகள்	மற்று	அதுக்குமேலே
அஞ்ச	பயப்படும்படி	அவள் ஆவியோடும்	அவளுயிருடனேகூட
வஞ்சம்	தாயுருக்கொண்டுவந்த வஞ்சனையையும்	உடனே சுவைத்தான்	ஏககாலத்திலே அமுதுசெய்த க்ருஷ்ணனுடைய
பகுவாய்	பெருத்தவாயையுமுடைய	இடம்	ஸ்தாநமாய்,
கழுதுக்கு	பூதனையிடத்தில்		
இரங்காது	தான்நோவுபடாமல்		
அவள்தன்	அப்பூதனையினது		

இளமேதிகள் எருமைநாகுகள்
ஓங்கு உயர்த்தியையும்
பைந்தாள் பசியதாளையும்
கண் ஆர் குறுகினகணுக்களை யுமுடையன்
கரும்பின் இக்ஷுதண்டங்களி
கழைதின்று குருத்தைத்தின்று
வைகி சிலகாலமவ்விடத்திலேயேகிடந்து (பின் அவ்வெம்மையாற்றுகைக்காக) ல்
கழுநீரில் செங்கழுநீர்ப்பணையில்
மூழ்கி புக்குமுழுகி (அநந்தரம்)
செழுநீர்த்தடத்து அழகிய நீரையுடைய தடாகத்திலே போய்முழுகி
மண்ணேந்து கொம்புகளில் மண்ணைத்தரித்துக்கொண்டு [ற
வைகும் கரையேறுதேகிடக்கி
நாங்கூர் மணிமாடக்கோயில் என்மனனே! வணங்கு. (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. †பூதனையை அப்போதே ப்ராணன்போம்படி முலையுண்ட ஸர்வேஶ்வரன் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினன், நெஞ்சே! அங்கே சென்றநுபவியென்கிறார்.

(பண்ணேர்மொழியாய்ச்சியரஞ்ச) பண்ணோடொத்தமொழியையுடைய இடைச்சிகளஞ்சும்படி. (வஞ்சமித்யாதி) வஞ்சநத்தையுடையளாய், பயாவஹமாம்படி ஜாத்யுசிதமான †பெரியவாயையுடையளான, கழுதுண்டு - பேய், அதுக்கிரங்காதே, இரங்குகையாவது-நோவுபடுகையாய், அதின்கையில்தான் நோவுபடாதே. (அவள் தனுண்ணுமுலை) விஷமாகையாலே வேறு சிலருண்டாரில்லையிறே; அப்படிப்பட்டமுலை, (மற்றவளாவியோடுமுடனே சுவைத்தானிடம்) விஷத்தை வாங்குகையன்றிக்கே † அதுக்காஶ்ரயமான ப்ராணனையுங்கூட ஒருகாலே அமுதுசெய்தவன் வர்த்திக்கிறதேசம்.

(ஓங்குபைந்தாளித்யாதி) உயர்த்தியையுடைத்தாய், பசுமையையுமுடைத்தாய், தாளையுமுடைத்தாய், கண்†குறுகின கரும்பினுடைய கழையுண்டு-†தலையாடி, அத்தைத்தின்று †தன்னளவல்லாதபடி மிகத்தின்கையாலே ஸஞ்சரிக்கமாட்டாமை அவ்விடந்தன்னிலே இடம்வலம்கொண்டு விடாயாறி, பின்னைப்போய் அந்த உஷ்ணமாறும்படி செங்கழுநீர்ப்†பணையிலே புக்கு முழுகி. (செழுநீரித்யாதி) அழகிய நீரையுடைத்தாயிருக்கிற தடாகத்திலே புக்கு முழுகி, கோட்டுமண்கொண்டு அத்தைச் சுமந்து †கிளறுமாயிற்று; மஹாவராஹம் கிளர்ந்தாற்போலே. (வைகுநாங்கூர்) பின்னை அடித்து ஏறவிடவும்போகாதபடி அவ்விடந்தன்னிலே கிடக்குமாயிற்று. அப்படிப்பட்ட திருநாங்கூரில். இவ்விடத்தைப் பிள்ளைவிழுப்பரையரும் ஆப்பானுங்கூட அநுஸந்தித்து, "இரண்டிடத்திலே 'வைகி' என்றுண்டாயிருந்தது,

†இது செய்யும்படியென்?"என்று பட்டரைக்கேட்க; "ஸௌகுமார்யத்தாலே இரண்டிடத்திலும் கிடந்தது" என்றருளிச்செய்தார். (௬)

அரு.—ஆறும்பாட்டு. (பண்ணேரித்யாதி) பிள்ளைச்சேவகங்களில்வைத்துக்கொண்டு கேவலம் பால்யத்தில்செய்த சேவகமாகையாலே பூதநாநிரஸநம் பின்னாட்டிற்றென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (பூதனையையித்யாதி).

"பரு" என்றதினர்த்தம் (பெரிய) என்றது. "மற்று" என்றத்தாலே வைலக்ஷண்யம் தோற்றுகையாலே, அதைப்பற்ற வருளிச்செய்கிறார் (அதுக்காச்ரயமான) என்று.

ஆர்தல் - மிகுதியாய், அதினர்த்தம் (குறுகின) என்றது. (தலையாடி) கொழுந்தாடை. "வைகி" என்றதுக்குத் தாத்பர்யம் (தன்னளவித்யாதி). (பணையிலே) நீர்நிலத்திலே. (கிளருமாயிற்று) என்றவநந்தரம், "இளமேதிகள்" - எருமைநாகுகள் என்று கூட்டுவது. (இதுசெய்யும்படியென்) என்றது-இரண்டிடத்திலும் கிடந்து காலத்தைப்போக்கிற்றென்றத்தால் ப்ரயோஜநமென்னென்னவென்றபடி. ... . (௬)

மூ.—தளைக்கட்டவிழ் தாமரை வைகு பொய்கைத்
தடம் புக் கடங்கா விடங்கா லரவம்
இளைக்கத் திளைத்திட்ட தனுச்சிதன்மே
லடிவைத்த வம்மானிடம் மாமதியம்
திளைக்கும் கொடி மாளிகைசூழ் தெருவில்
செழுமுத்து வெண்ணெற் கெனச்சென்று முன்றில்
வளைக்கை நுளைப்பாவையர் மாறுநாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென் மனனே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தளைத்தாமரை	மொட்டுத்தாமரையும்	இளைக்க	இளைத்துப்போம்படி
கட்டு அவிழ் தாமரை	அலர்ந்ததாமரையும்	திளைத்திட்டு	(அவனோடு) விளையாடி
வைகு	தங்குகிற	அதன்உச்சிதன்மேல்	அதன்சிரஸ்ஸிலே
பொய்கைத்தடம்	ஸரஸ்ஸிலே	அடிவைத்த	திருவடிகளையிட்டு கர்வபங்கம்பண்ணின
புக்கு	ப்ரவேசித்து	அம்மான்	ஸர்வேஶ்வரனுடைய
அடங்கா	(அதனுள்ளே) அடங்காதே கிளர்ந்தெழாநிற்பதாய்	இடம்	ஸ்த்தாநமாய்,
விடம்கால்	விஷத்தைக் கக்குகின்ற	வளைக்கை	வளையணிந்த கையையுடைய
அரவம்	காளியன்	நுளைப்பாவையர்	நுளைச்சிகள்,
		மாமதியம்	சந்த்ரனுனவன்

இளைக்கும்	(தாண்டிப்போகப்பெறாதே) அங்கேவிளையாடும்படி	என	தருகிறோமென்று கூவிக்கொண்டுபோக (ஒருவருங் கேளாமையாலே)
கொடி	கொடிகளையுடைய		
மாளிகைசூழ்	மாளிகைகளாலே சூழப்பட்ட	முன்றில்	ஒவ்வொருவர் வீட்டு வாசல்தோறும்
தெருவில்	வீதிகளிலே	சென்றுமாறும்	தாமே வலியப்போய் மாற்றித்திரிகிற
செழுமுத்து	பெருமுத்துக்களை		
வெண்ணெற்கு	வெளுத்த நெல்லுக்கு	நாங்கூர் மணிமாடக்கோயில் வணங்கென்மனனே! (எ)	

வ்யா.—ஏழாம்பாட்டு. †காளியனால்வந்த ஆபத்தைப்போக்கின எம்பெருமான் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், நெஞ்சே! அங்கே சென்றநுபவி என்கிறார்.

(தளைக்கட்டவிழ் தாமரைவைகுபொய்கைத் தடம்புக்கு) தளைத் தாமரையும் கட்டவிழ் தாமரையும்;-†மொட்டுத்தாமரையும் அலர்ந்த தாமரையும், தங்குகிறபொய்கைக்கரையிலே புக்கென்னுதல்; †பொய்கையினுள்ளேபுக்கென்னுதல். (அடங்காவிடங்காலரவம்) அடங்காதே கிளர்ந்தெழாநிற்பதாய், விஷத்தைக் காலாநின்றுள்ள, அரவமுண்டு-காளியன், அது இளைக்கும்படி வ்யாபரித்து அத்தோடே †விளையாடி, (க) †"அடிச்சியோம் தலைமிசை நீயணியாய்" என்று ப்ரார்த்திக்கும்படியான திருவடிகளை அதின் தலையிலேயாயிற்று வைத்தது. (அம்மானிடம்) †இப்படி ஸர்வரக்ஷணங்களையும் பண்ணும் ஸர்வேஶ்வரன் வர்த்திக்கிற தேசம்.

(மாமதியமித்யாதி) சந்த்ரனானவன் ஜகத்ரக்ஷணத்துக்காக ஸஞ்சரிக்கிறவன் கொடிகளிலே துவக்குண்டு போகப்பெறாதே அவற்றோடே விளையாடுமாயிற்று; இப்படியேயிருக்கிற கொடிகளையுடைத்தான மாளிகைகளாலே சூழப்பட்ட தெருவில். (செழுமுத்து வெண்ணெற்கென) "போகடுகிற நெல்லையும், அழகிய முத்து" என்னுகின்றார்கள். (வெண்ணெற்கென) செந்நெல்வேண்டா, †வெண்ணெல்லையும் என்னுகின்றார்கள். (சென்று) வந்துகொள்வாரில்லை மிகுதியாலே; கொண்டுசென்று விற்குமித்தனையாயிற்று. முன்றில்களிலே - வாசல்களிலே. (வளைக்கைநுளைப் பாவையர்மாறும்) இடைச்சிகள் ஒப்பித்துத் தயிர்கடையுமாபோலே, நுளைச்சி

(க) தி - வாய் - ௧0 - ௩-

களும் ஒப்பித்தாயிற்று முத்துவிற்கப்போவதா; இப்படி அலங்கரு தைகளான நுளைச்சிகள் முத்துவிற்கைக்கு ஸஞ்சரிக்கிற திருநாங் கூரிலே. ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (தளையித்யாதி) கீழ்ச்சொன்ன பூதநாஸ்தந விஷம் அம்ருதமென்னும்படி பஹுமுகமாக விஷத்தைக் கக்குகிற காளியன் தடத்திலே (க) "அபியாதா ப்ரஹர்த்தாச - அபியாதா ப்ரஹர்த்தாச" என்கிறபடி யே தானே போய் நிரஸித்த செயலாகையாலே இவ்வபதானத்திலே நெஞ்சு சென்று அநுபவிக்கிறாரென்னும் ஸங்கதியை ஹ்ருதிகரித்துக்கொண்டு தாத் பர்யமருளிச்செய்கிறார் (காளியனுலித்யாதி).

கீழ்ச்சொன்னவிரண்டையும் க்ரமேண விவரியாநின்றுகொண்டு, "தடம்" என்று - கரையாகவருளிச்செய்கிறார் (தளையித்யாதி). "புக்கு" என்ற பதத்தின் ஸ்வாரஸ்யத்தைப்பற்ற "தடம்" என்றதுக்கு இடம் என்றாய், அத னால் பலித்தது ஸப்தம்யர்த்தமாய், அத்தையருளிச்செய்கிறார் (பொய்கை யித்யாதி.) (காலாநின்றுள்ள) கக்காநின்றுள்ள. "திளைத்திட்டு" என்றதின ர்த்தம் (விளையாடி) என்றது. மிதித்த என்றதே, "அடிவைத்த" என்றத் தால் தோன்றின ஏடுபாட்டையருளிச் செய்கிறார் (அடிச்சியோமித்யாதி). அதிப்ரதிகூலன் தலையிலும் திருவடிகளை வைக்கைக்கு ஹேது அம்மானுகை யென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (இப்படியித்யாதி).

(வெண்ணெல்லமையும்) என்றது - அஶ்லாக்யமான நெல்லமையுமெ ன்கை. ... ... (எ)

மூ.—துளையார் கருமென் குழலாய்ச்சியர்தம்
துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும் முற்றா
விளையார் விளையாட்டொடு காதல் வெள்ளம்
விளைவித்த வம்மானிடம் வேல்நெடுங்கண்
முளைவாளெயிற்று மடவார் பயிற்று
மொழி கேட்டிருந்து முதிராத வின்சொல்
வளைவாய கிள்ளை மறை பாடு நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துளை ஆர்	துளைமிக்கிருந்து	முற்றாவிளையார்	யௌவநம்வாராத
கருமென்குழல்	கறுத்து ம்ருதுவான கூந்தலையுடைய	விளையாட்டொடு	(அந்த) பாலிகை களோடுண்டான பாலக்ரீடையோ டே [ஸாகரத்தை
ஆய்ச்சியர்தம்	கோபஸ்த்ரீகளின்	காதல்வெள்ளம்	(அவர்களுக்கு) ப்ரே
துகில்வாரியும்	வஸ்த்ரங்களை யபஹ ரித்தும்	விளைவித்த	பிறப்பித்த
சிற்றில்சிதைத்தும்	(அவர்கள்) சிற்றில்க ளையழித்தும்	அம்மான் இடம்	ஸாவேஶ்வரனது ஸ்தாநமாய்,

(க) ரா -

முதிராத இன் சொல்	கடினமாகாத இனிய சொல்லையும்
வளை வாய	வளைந்தவாயையுமுடைய
கிள்ளை	கிளிகள்,
வேல்	வேல்போலேகூர்மையுடைத்தாய்
நெடுங்கண்	நெடிதான கண்களையும்
முளை	முளைக்கிறவள வாய்
வாள்	காந்தியையுடைத்தான
எயிறு	தந்தபங்க்தியையுமுடைய
மடவார்	வைதிகஸ்த்ரீகள்
பயிற்று	அப்யஸிப்பிக்கிற
மொழி	வேதபதங்களை
கேட்டுஇருந்து	கேட்டுக்கொண்டிருந்து (பின்பு அவர்கள் சொன்னபடியே)
மறைபாடும்	வேதபாராயணம் பண்ணுகிற

நாங்கூர் மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. (அ)

வ்யா—எட்டாம்பாட்டு. திருவாய்ப்பாடியிற் பெண்களோடே நிரவதிக ஸம்ஶ்லேஷத்தைப்பண்ணின க்ருஷ்ணன் திருமணிமாடக் கோயிலிலே நின்றருளினன், நெஞ்சே! அங்கே சென்றநுபவி யென்கிருர்.

(துளையார் கருமென்குழலாய்ச்சியர்தம்) துளையாரென்று-துளை மிக்கிருக்கை. அதாவது-சுருண்டு கறுத்து ம்ருதுவான குழலையுடையராய், கரையிலே பரியட்டங்களையிட்டுவைத்து முழுகியேறும் பருவமாயிருந்துள்ள இடைப்பெண்களுடைய. †துளையாநிற்கிற என்றுமாம். (துகில்வாரியும் சிற்றில்சிதைத்தும்) அவர்கள் கரையிலே யிட்டுவைத்த பரியட்டங்களை, (க) "மசிமையிலீகூறைதாராய்" என்னும்படி வாரிக்கொண்டுபோய்க் குருந்திலேயேறியும், (உ) "தீமை செய்யும் சிரீதரா எங்கள் சிற்றில்வந்து சிதையேல்" என்னும்படி சிற்றில் சிதைத்தும். (முற்ருவிளையார் விளையாட்டொடு) விளையாட்டுக்கு அவ்வருகு கார்யங்கொள்ளவொண்ணுதபடி பருவத்தையுடையவர்கள். யௌவநம்§ஊசாடாத பருவம்; அவர்களோடேயுண்டான விளையாட்டோடேகூட. (காதலித்யாதி) அவர்களுக்கு ப்ரேமஸாகரத்தை விளைத்த ஸர்வேஶ்வரனுடைய வாஸஸ்த்தாநம்.

(வேல்நெடுங்கணித்யாதி) வேல்போலே கூர்மையையுடைத்தாய் நெடிதான கண்களையுமுடையராய், முளைக்கிறவளவாய் ஒளியையுடைத்தான தந்தபங்க்திகளையுமுடையரான ஸ்த்ரீகளானவர்கள். (பயிற்றும் மொழி கேட்டிருந்தும்) அவர்கள் "முத்தமிடீர்"

(க) நா-தி-௩-க. (உ) நா-தி-உ-க.

§ ஊசாடுதல் - ஊடாடுதல், நடமாடுதல்.

என்றாற்போலே சிலவார்த்தைகள்சொல்லிக் கற்பிப்பர்களே, அவற்றைக் கேட்டிருந்தேயும்; அவை கிடக்கச்செய்தே. (முதிராதவித்யாதி) முற்றாதேயிருக்கையாலே ம்ருதுவாய் இனிதான சொல்லையுடைத்தாய் வளர்ந்த வாயையுமுடைத்தான கிளியானது. (மறைபாடும்) தனக்கு வாஸிதமான வேதத்தைப் பாடாநிற்கும், அவ்வூரிலுள்ளார் வேதபாராயணம் பண்ணிப்போருகையாலே அதுவேயிறே இவற்றுக்கு வாஸிதமாயிருப்பது; ஆகையாலே இவர்கள் சொல்லுகிறது கிடக்க அவற்றைச் சொல்லாநின்றனவென்னுதல். அன்றிக்கே, இவர்கள் தாங்கள் உபாத்யாயருடைய பெண்களாகையாலே வேதபதங்களை அப்யஸிப்பிக்க அவற்றைச் சொல்லாநின்றனவென்னுதல். (முதிராதவின்சொல்) கற்பிக்கிறவர்கள் பேச்சுப் போலேயன்றிறே இவற்றினுடைய பேச்சு; இப்படியிருக்கிற திருநாங்கூர். ... ... (௮)

அரு.—எட்டாம்பாட்டு. (துளையாரித்யாதி) அஞ்சாம்பாட்டில் ப்ரஸ்துதமான "தடந்தாமரைப் பொய்கைபுக்கான்" என்றதுக்கு இரண்டு தாத்பர்யத்தாலே யருளிச்செய்தாராகையாலே முந்தின தாத்பர்யத்தைக் கீழ்ப்பாட்டிலருளிச்செய்தார்; இரண்டாம் தாத்பர்யத்தை இப்பாட்டிலே வெளியிடுகிறாரென்றாதல்; அன்றிக்கே, கீழ்ப்பாட்டில் பொய்கைபுக்கது ப்ரஸ்துதமாகையாலே ஸ்ம்ருத்தமான வஸ்த்ராபஹரணத்தை யநுஸந்திக்கிறாரென்றாதல் ஸங்கதி திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (திருவாய்ப்பாடியிலித்யாதி).

(துளையாநிற்கிற) ஜலத்திலே துளையாநிற்கிறவர்களானவென்றபடி, (௮)

மூ.—விடையோட வென்றாய்ச்சி மென்றோள் நயந்த
விகிர்தா விளங்கு சுடராழி யென்னும்
படையோடு சங்கொன்றுடையாயென நின்
றிமையோர் பரவுமிடம் பைந்தடத்துப்
பெடையோடு செங்கால வன்னம் துகைப்பத்
தொகைப் புண்டரீகத்திடைச் செங்கழுநீர்
மடையோடநின்று மதுவிம்மு நாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
விடை	ஸப்தருஷபங்களும்,	மென்தோள்	ம்ருதுவான புஜங்களில்
ஓட	ஓடிநசிக்கும்படி	நயந்த	விரும்பின [கநத்தை
வென்று	(அவற்றை) ஜயித்து,	விகிர்தா	வ்யாவர்த்தகமானசெயல்களையுடையவனே!
ஆய்ச்சி	நப்பின்னைப்பிராட்டியினது		

விளங்கு	விளங்காநின்றுள்ள
சுடர்	புகரையுடைய
ஆழியென்னும் படையோடு	திருவாழியாகிறஆயுதத்தோடேகூட
ஒன்று சங்குடையாய்	அத்விதீயமாயிருக்கும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுடையவனே!
எனநின்று	என்றுசொல்லாநின்றுகொண்டு
இமையோர்	ப்ரஹ்மாதிதேவர்கள்
பரவும்	இடைவிடாதே ஸ்தோத்ரம்பண்ணுகிற
இடம்	ஸ்த்தாநமாய், [ன
பெடையோடு	பெட்டையோடு கூடி
செங்கால	சிவந்தகாலையுடைய
அன்னம்	ஹம்ஸமானது (மதுபாநத்தால்முன்னடிதோற்றாமையாலே) [யுள்ள
பைந்தடத்து	அழகியதடாகத்திலே
தொகைப்புண்டரீகம்	திரண்டதாமரைப்பூக்களை
துகைப்ப	துகைக்க(அத்தாலே)
இடை	அத்தாமரைகளின்நடுவேயுள்ள
செங்கழுநீர்	செங்கழுநீர்ப் பூக்களானவை
மடை ஓட	மடைகள் நிரம்பியோடினபோதிலும்
நின்றுமதுவிம்மும்	உள்ளேநின்று மதுவெள்ளம்தேங்கும்படியான
நாங்கூர் மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. (௯)	

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. †நப்பின்னைப்பிராட்டிக்காக எருதேழடர்த்த செயலையும் திவ்யாயுதங்களோட்டைச் சேர்த்தியழகையும் சொல்லி தேவர்களேத்தத் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினன், நெஞ்சே! அங்கேசென்றநுபவியென்கிறார்.

(விடையோட) நப்பின்னைப்பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கு ப்ரதிபந்தகமான ருஷபங்கள் †ஓடும்படிவென்று. (ஆய்ச்சி மென்தோள் நயந்தவிகிர்தா) அவளுடைய ம்ருதுவான தோளை விரும்பின வ்யாவ்ருத்தமான செயல்களையுடையவனே! (விளங்கித்யாதி) திருநிறத்துக்குப் †பகைத்தொடையாக விளங்காநின்றுள்ள சுடரையுடைய திருவாழியாகிற ஆயுதத்தோடேகூடின அத்விதீயமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுடையவனே! (எனநின்று) இப்படிசொல்லாநின்றுகொண்டு. (இமையோர்பரவுமிடம்) ப்ரஹ்மாதி தேவர்கள் விடாதே ஸ்தோத்ரம்பண்ணுகிறவிடம்.

(பைந்தடமித்யாதி) அழகிய பொய்கைகளிலே மதுபாநம் பண்ண இழிந்த சிவந்த காலையுடைய அன்னமானது, பேடையோடேகூட இழிகையாலே மதுபாநத்தாலே முன்னடிதோற்றாமையாலே †ஆஶ்ரயத்தைப்பேணிப் பரிமாற வறிகிறனவில்லை; அத்தாலே துகைக்கப்பட்ட. (தொகையித்யாதி) †திரண்ட தாமரைப்பூவின் நடுவே செங்கழுநீரின் மதுவெள்ளமானது மடையாலே போகாநிற்கச்செய்தேயும், அதினுடைய மிகுதியாலே உள்ளே நின்று †விம்மா

கிற்குமாயிற்று. திரண்ட புண்டரீகங்களின்நடுவே அன்னங்கள் துகைக்க, நடுவுநிற்கிற செங்கழுநீரானது மதுவெள்ளமிடாநிற்கும். இப்படியிருக்கிற திருநாங்கூரிலே. ... . (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (விடையித்யாதி) பலகாலும் க்ருஷ்ணாவதாரத்தோடு ஐக்யம்சொல்லாநின்றீர், மணிமாடக்கோயிலிலிருக்குமவன் க்ருஷ்ணனேயோவென்ன; ப்ரஹ்மாதிகள் அவனை ஏத்துகிறார்கள் கேளாயென்கிறாரென்று ஸங்கதியுட்கொண்டருளிச்செய்கிறார் (நப்பின்னையித்யாதி).

(ஓடும்படி) தோற்கும்படி. (பகைத்தொடையாக) பரபாகமாக.

(ஆஶ்ரயத்தை) கமலத்தை. "தொடை" ஸமூஹமாய், அதினர்த்தம் (திரண்ட) என்றது. (விம்மாநிற்கும்) - தேங்காநிற்கும். ... (௯)

மூ.—வண்டார் பொழில்சூழ்ந் தழகாய நாங்கூர்
மணிமாடக்கோயில் நெடுமாலுக் கென்றும்
தொண்டாய தொல்சீர் வயல் மங்கையர்கோன்
கலியனொலிசெய் தமிழ்மாலை வல்லார்
கண்டார்வணங்கக் களியானைமீதே
கடல்சூழுலகுக் கொரு காவலராய்
விண்டோய் நெடு வெண்குடை நீழலின் கீழ்
விரிநீருலகாண்டு விரும்புவரே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
வண்டு ஆர்	வண்டுகள்மிக்கிருந்துள்ள [பட்டு
பொழில்சூழ்ந்து	சோலைகளாலேசூழப்
அழகாய	அழகாயிருக்கும்
நாங்கூர்	திருநாங்கூரில்
மணிமாடக்கோயில்	திருமணிமாடக்கோயிலிலே நித்யவாஸம்பண்ணுகிற
நெடுமாலுக்கு	ஸர்வேச்வரனுக்கு
என்றும் தொண்டாய	நித்யகைங்கர்யத்தில் அதிகரிக்கையாலே வந்த
தொல்சீர்	நிரவதிகஸம்பத்தையுடையராய்
வயல்மங்கையர்கோன்	கழனிசூழ்ந்த திருமங்கைக்குராஜாவான
கலியன்	ஆழ்வார்
ஒலிசெய்	அருளிச்செய்த
தமிழ்மாலைவல்லார்	தமிழ்த்தொடைபத்தையும் ஸஹ்ருதயமாக அப்யஸிக்கவல்லவர்கள்,
கண்டார்வணங்க	கண்டவரெல்லாம் தங்கள்காலிலேவிழுந்துஸேவிக்கும்படி
களியானைமீதே	மத்தகஜத்தின்மேலேறி (நகரிவலம்வந்து)
கடல்சூழுலகுக்கு	சதுஸ்ஸாகரபர்யந்தையானபூமிக்கு
ஒருகாவலராய்	தாங்களே அத்விதீயநிர்வாஹகராய்
விண்தோய்	அப்ரங்கஷமான
நெடுவெண்குடைநீழலின்கீழ்	நெடியமுக்தாதபத்ரச்சாயையின்கீழிருந்து
விரிநீருலகாண்டு	ஆவரணஜலவேஷ்டிதப்ரஹ்மாண்டத்தையாண்டுகொண்டு
விரும்புவர்	நிரவதிகப்ரீதியுக்தர்களாயிருப்பர்கள். ()

வ்யா.—பத்தாம்பாட்டு. இத்திருமொழி கற்றூர்க்கு பலம் சொல்லுகிறது.

(வண்டார்பொழில்சூழ்ந்து) சோலையென்று பேர்மாத்ரமாய் மதுபாநம்பண்ண இழிந்த வண்டேயாய்க் கிடக்குமாயிற்று. (அழகாயவித்யாதி) தர்சநீயமான திருநாங்கூரில் திருமணிமாடக்கோயிலிலே நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வேஸ்வரனுக்கு. (என்றும் தொண்டாயதொல்சீர்) நித்யகைங்கர்யத்திலே அதிகரிக்கையாலேவந்த நிரவதிக ஸம்பத்தையுடையராய். (வயல்மங்கையர்கோன்) நல்ல வயலையுடைய திருமங்கைக்கு ராஜாவான ஆழ்வார். (ஒலிசெய் தமிழ்மாலை வல்லார்) ஒலியையுடைத்தாக வருளிச்செய்த தமிழ்த் தொடையாகிற இத்திருமொழியைக் கற்றவர்கள்.

(கண்டார்வணங்க) அநுகூலப்ரதிகூலோதாஸீநரென்று வாசியின்றிக்கே, லோகமாகத் தங்கள்காலிலேவந்து விழும்படி மத்தகஜத்தின்மேலே யேறி. (கடல்சூழுலகுக்கொரு காவலராய்) க்ஷத்ரிய ஜந்மத்திலே பிறந்து, சதுஸ்ஸாகரபர்யந்தையான பூமிக்குத்தாங்களே நிர்வாஹகராய். (விண்டோயித்யாதி) ஆகாசத்திலே சென்று கிட்டும்படியான முத்துக்குடையின்கீழே கடல்சூழ்ந்த பூமியையாண்டு, விரும்பப்படுவர்; †நிரவதிக ப்ரீதியுக்தராவர்கள்.

"ஐஸ்வர்யத்தைப் புருஷார்த்தமாகச்சொல்லுவானென்?" என்று நஞ்சீயர் பட்டரைக்கேட்க; "ஈஸ்வரனேயாகிலும் ஒருகால் பிறந்து அபிஷேகம்பண்ணவமையும் பாகவதசேஷமாக்கலாமாகில் என்று காணும் திருமங்கையாழ்வார்†ிருப்பது" என்றருளிச்செய்தருளினர்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. நிகமம். (வண்டாரித்யாதி) "விரும்புவர்" என்றதுக்கு எல்லாராலும் விரும்பப்படுவரென் றர்த்தமருளிச்செய்து, விருப்பத்தையுடையராவரென் றர்த்தாந்தரமருளிச்செய்கிறூர் (நிரவதிகேத்யாதி).

(இருப்பது) என்றவநந்தரம், இனி தம்முடைய ப்ரபந்தம் கற்றவர்க்கு பாகவத கைங்கர்யோபயோகியான மண்டலாதிபத்யம்வேண்டா என்றிருப்பரோ என்று இவ்வளவு பூரித்துக்கொள்வது. ... ... (௧௦

ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்து எட்டாந் திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்து ஒன்பதாந்திருமொழி, சலங்கொண்ட ப்ரவேசம்.

†அபிமதவிஷயத்தை யநுபவிக்குமிடத்தில் அவயவங்கள்தோறும் விரும்பியநுபவிக்குமாபோலே, †அங்குள்ளதெல்லாம் †உத்தேஶ்யமாய், †ஆபத்ஸகனாய், ஸர்வஜகத்துக்கும் ரக்ஷகனாயிருக்கிற ஸர்வேஶ்வரன், "ரக்ஷணத்துக்குப் பாங்கானதேசம்" என்று விரும்பி வர்த்திக்கிற தேசமாகையாலே அங்குண்டான திர்யக்குக்களுமகப்பட, முக்தர் பகவதநுபவத்தாலே களிக்குமாபோலே களித்து வர்த்திக்கும் தேசம், ஆனபின்பு நீயுமத்தேசத்தை ப்ராபியென்று திருவுள்ளத்தைக்குறித்தருளிச்செய்கிறார். ... ... *

அரு.—சலங்கொண்டவின் ப்ரவேசம்.—திருநாங்கூரில் திருமணிமாடக்கோயிலை யநுபவித்த ஆழ்வார் அங்குள்ள மற்றைத் திருப்பதிகளையு மநுபவிக்கிறார் இனிப் பத்துத் திருமொழியாலேயென்று திருவுள்ளம்பற்றி, அவையெல்லாவற்றுக்கும் ஸங்கதி யருளிச்செய்கிறார் (அபிமதேத்யாதி). (அங்குள்ளதெல்லாம்) திருநாங்கூர் திருப்பதிகளெல்லாம். (உத்தேஶ்யமாய்) என்றவநந்தரம், தோற்றி என்றுசேஷம். இத்திருமொழியில் ப்ரமேயத்தை யருளிச்செய்கிறார் (ஆபத்ஸகனாயித்யாதி). ... ... *

மூ.—சலங்கொண்ட விரணிய னதகல்மார்வங் கீண்டு
தடங்கடலைக் கடைந்தமுதங் கொண்டுகந்த காளை
நலங்கொண்ட கருமுகில்போல் திருமேனி யம்மான்
நாடோறும் மகிழ்ந்தினிது மருவி யுறை கோயில்
சலங்கொண்டு மலர் சொரியும் மல்லிகை யொண் செருந்தி
செண்பகங்கள் மண நாறும் வண் பொழிலினூடே
வலங்கொண்டு கயலோடி விளையாடு நாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சலம்கொண்ட	(ப்ரஹ்லாதன்பக்கல்) சீற்றத்தையுடைய	அகல்மார்வம்	விசாலவக்ஷஸ்தலத்தை
இரணியன்	ஹிரண்யனுடைய	கீண்டு	அநாயாஸேந கிழித்துப்பொகட்டும், [லீ
அது	அப்படி வரபலத்தாலே பூண்கட்டப்பட்ட	தடம்கடலை கடைந்து	பெரிய திருப்பாற்கடலை மதநம்பண்ணி

அமுதம்	அதிற்பிறந்த அம்ருதத்தை
கொண்டு	தேவதைகளுக்குப் பங்கிட்டுக்கொடுத்தும்
உகந்த	ஸந்தோஷயுக்தனாயிருந்த
காளை	யுவாவாய்,
நலங்கொண்ட கருமுகில் போல்	அழகிய நீலமேகம் போன்ற
திருமேனி அம்மான்	திவ்யதேஹத்தையுடையனான ஸர்வேஶ்வரன்
நாடோறும்	ப்ரதிதினமும்
மகிழ்ந்து	ஸந்தோஷித்துக்கொண்டு
இனிது	ஆஶ்ரிதர்க்கினிதாம்படி
மருவியுறைகோயில்	அநந்ய ப்ரயோஜநனாய்நித்யவாஸம்பண்ணுகிறதேசமாய்,
கயல்	(நீரைவிட்டால் தரிக்கமாட்டாத) கயல் மத்ஸ்யங்கள்
ஓடி	தனக்குவாஸஸ்தானமான நீரைவிட்டு ஓடி
சலங்கொண்டு மலர் சொரியும்	இசலி இசலி மலரைச்சொரிகிற
ஒண் மல்லிகை செருந்தி செண்பகங்கள்	அழகிய மல்லிகைகளும் செருந்திகளும் சம்பகங்களும்
மணம்நாறும்	வாஸனையைப்பரப்பவிடுகிற
வண்	வளமிகுந்த
பொழிலினூடே	சோலையிலே
வளங்கொண்டு விளையாடும்	(அப்புஷ்பவாஸநாக்ராண பலத்தாலே) துள்ளிவிளையாடுகிற

நாங்கூர் வைகுந்தவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே! (க)

வ்யா.—முதற்பாட்டு. (சலங்கொண்ட) †சீற்றத்தையிட்டாயிற்று வகுத்தது. †சீற்றத்தையுடையனாயிருக்கிற ஹிரண்யனுடைய, †வரபலத்தாலே திண்ணியதாய் அகன்றமார்வைத் தன்னுடைய †சீற்றத்தைக்காட்டி வெதுப்பிப் பதஞ்செய்யப்பண்ணி பின்னை அநாயாஸேந கிழித்து, †ஒருவரால் பரிச்சேதிக்கவொண்ணாத கடலை க்ஷுத்ரபதார்த்தங்களைப்போலே பரிச்சேதித்துக்கடைந்து, அதில் நல்லுயிரான அம்ருதத்தைவாங்கி, "நம்மை ஆஶ்ரயித்த தேவஜாதிகார்யம் தலைக்கட்டப்பெற்றோமிறே!" என்று அதுபெற்றால் அவர்களுக்கு வருமுகப்பைத் தானுடையனாய், †அவ்வம்ருதத்தை புஜித்தார்க்குக் கழியக்கடவ ஜராதிகளைத் தானுடையனாயிருக்கிறவன். (நலங்கொண்டவித்யாதி). †அவ்வம்ருதத்தை நாய்க்கிடாய் என்னும்படியான வடிவையுடையவன். (க) "धूमज्योतिः - தூமஜ்யோதி꞉" என்கிறபடியே, உபசயாத்மகமான வடிவையுடைய மேகம் திருமேனிக்கொப்பாகப் போராமையாலே, வ்யாவ்ருத்தமான வடிவையுடைத்தாய் ஶ்ரமஹரமாயிருப்பதொரு மேகம்போலேதிருமேனியையுடையனாய், அத்தாலே

(க) மேகஸந்தேசம்.

"இவனே ஸர்வேஸ்வரன்" என்று தோற்றும்படியிருக்கிறவன். ப்ரமாதங்கள் புகுந்தபோதாக ஹிரண்யனை நிரஸிக்கவும் கடல்கடையவுமொண்ணாது என்று ஏற்கவேவந்து † பெரிய ஹர்ஷத்தோடே நித்யவாஸம்பண்ணுகையாலே ஆஸ்ரிதர்க்கு இனிதான தேசம்.

(சலங்கொண்டித்யாதி) † அதுக்கு ஹேதுவிருக்கிறபடி. (க) "ஸங்கர்ஷாதிவபுஷ்பிதா:-ஸங்கர்ஷாதிவபுஷ்பிதா:" என்கிறபடியே, இசலி இசலி மலரைச்சொரிகிற மல்லிகை, அழகிய செருந்தி, அப்படிப்பட்ட செண்பகம், இவை பரிமளத்தைப் புறப்படவிட. (வண்பொழிலித்யாதி) † நீரிலேகிடந்தால் மிடுக்கையுடைத்தாய்க் கரையிலேயேறினல் அதின்றிக்கே யிருக்கக்கடவ மத்ஸ்யங்களானவை, அந்நீர்தானுறுத்தும்படி அதிற்காட்டிலும் நிலமிதிதானே நன்றாயிருக்கையாலே அச்சோலையில் மணத்தை ஆக்ராணம்பண்ணி ஆத்தாலே மிடுக்குடைத்தாய், முக்தர் பகவதநுபவத்தைப் பண்ணி, (உ) "அஹமந்நமஹமந்நம் - அஹமந்நமஹமந்நம்" என்று களிக்குமாபோலே கயல்களானவை அங்கேயிங்கே துள்ளி விளையாடாநின்றுள்ள திருநாங்கூர். ... ... (க)

அரு—முதற்பாட்டு. (சலமித்யாதி) "சலங்கொண்ட" என்று அவனை விசேஷித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சீற்றத்தையிட்டித்யாதி). வாக்யார்த்தம் (சீற்றத்தையுடையனுயித்யாதி). "அது" என்றதினர்த்தம் (வரபலத்தாலேயித்யாதி). பிளந்து என்னுதே "கீண்டு" என்று - அநாயாஸம் தோற்றச் சொன்னதுக்கு பாவம் (சீற்றத்தைக்காட்டியித்யாதி). தடம் - விஸ்தாரமென்றருளிச்செய்கிறார் (ஒருவராலித்யாதி). "காலை" என்று இப்போது சொல்லுகைக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவ்வம்ருதத்தை புஜித்தார்க்கித்யாதி). ஸமபிவ்யாஹார தாத்பர்யம் (அவ்வம்ருதத்தை நாய்க்கிடாயித்யாதி). "நாடோறும்மகிழ்ந்து - மருவியுறை இனிது கோயில்" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (பெரியவித்யாதி).

(அதுக்கு) எம்பெருமான் பெரியஹர்ஷத்தோடே வர்த்திக்கைக்கு. கயல்கள் பொழிலில் விளையாடக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (நீரிலேயித்யாதி). ... ... (க)

மூ—திண்ணியதோரரியுருவாய்த் திசையனைத்தும் நடுங்கத்
தேவரொடு தானவர்கள் திசைப்ப விரணியனை
நண்ணி யவன்மார்வகலத் துகிர் மடுத்த நாதன்
நாடோறும் மகிழ்ந் தினிது மருவி யுறை கோயில்

(க) (உ) தை - ப்ரு.

எண்ணில்மிகு பெருஞ்செல்வத் தெழில் விளங்கு மறையும்
ஏழிசையும் கேள்விகளு மியன்ற பெருங்குணத்தோர்
மண்ணில்மிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே. (௨)

பதம்.	உரை.
திசையனைத்தும்	எல்லாத்திக்கிலுள்ளவர்களும்
நடுங்க	பயப்படவும்
தேவரொடுதானவர்கள்	தேவதாநவாதிகள்
திசைப்ப	கலங்கவும்
திண்ணியதோர் அரியுருவாய்	த்ருடமாய் அத்விதியமான நரஸிம்ஹரூபியாய்
இரணியனை	ஹிரண்யாஸுரனை
நண்ணி	கிட்டி
அவன்	அவ்வஸுரனது
மார்வகலத்து	விசாலவக்ஷஸ்தலத்தில்
உகிர்மடுத்த	நகங்களை ஊன்றிக்கிழித்த
நாதன்	ஸ்வாமி
நாடோறும்மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில்,	

பதம்.	உரை.
எண்ணில்மிகு பெரும்செல்வத்து	கணநாதீதமான மஹத்ஸம்பத்தையுடைத்தாய்,
எழில்விளங்கு	அழகுவிளங்காநின்றுள்ள
மறையும்	வேதங்களும்
ஏழிசையும்	ஸப்தஸ்வரங்களும்
கேள்விகளும்	(இவற்றின்) அர்த்தச்ரவணங்களும்
இயன்ற	நிறைந்தவராய் (அத்தால்)
பெருங்குணத்தோர்	ஆத்மகுண ஸம்பந்நராய்
மண்ணில்மிகு	பூஸுரருக்குள் சிறந்தவரான
மறையவர்கள்	ப்ராஹ்மணர்கள்
மலிவெய்தும்	நெருங்கிவர்த்திக்கிற
நாங்கூர்வைகுந்தவிண்ணகரம்மடநெஞ்சே! வணங்கு. (௨)	

வ்யா —(திண்ணியதோரரியுருவாய்) ஹிரண்யனுடைய சீற்றமென்றால் பிற்காலியாதபடியான நரஸிம்ஹமாய், திக்குக்களெல்லாமஞ்ச, அநுகூல ப்ரதிகூல விபாகமின்றியே எல்லாருமொக்கக்கலங்க. (இரணியனைநண்ணி) எரிகிறபெருநெருப்பிலே சென்று கிட்டுவாரைப்போலே க்ரூரனான பையலைத்தீண்டி. (அவன்மார்வகலத்துகிர்மடுத்த) போக்குத்தேடி இடங்காணாமையாலே சுழித்துவருகிற ருதிரவெள்ளத்துக்கு ஒருவழிகண்டுவிட்டாற்போலே, அவனுடைய பரந்தமார்பிலே திருவுகிரையூன்றி அவனையழியச்செய்து, தன்னுடைய ஈஶ்வரத்வத்தை நிலைநிறுத்தினவன் நித்யவாஸம்பண்ணுகிறதேசம்.

(எண்ணில்மிகுவித்யாதி) எண்ணிறந்திருப்பதாய், நிர்த்தோஷத்வாதிகளால்வந்த ஶ்ரவதிக ஸம்பத்தையுடைத்தாய், அவ்வழியாலே அழகு விளங்காநின்றுள்ள வேதமும், ஸப்தஸ்வரங்களும், †அங்கங்களும் மற்றும்†உள்ளவற்றால்வரும் கேள்விகளும், இவற்றை †வாஸனைபண்ணி அத்தால்வந்த ஆத்மகுணங்களால் மிக்கிருப்பாராய். (மண்ணில்) பூமியில் "இதுக்கு இவனேகடவான், இதுக்கு இவனேகட-

வான்” என்னும்படி சமைந்த ப்ராஹ்மணர் நெருங்கி வர்த்திக்கிற தேசம். ... ... (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (திண்ணியதோரித்யாதி) கீழ்ப்பாட்டில் ப்ரஸ்துதமான ஹிரண்யநிரஸநத்தை ஸப்ரகாரமாகவநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

“எழிசை” என்றது - ஆறங்கங்களுக்கும் மீமாம்ஸாதிகளுக்கு முபலக்ஷணமென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (அங்கங்க[illegible]). “கேள்வி” அர்த்தச்ரவணமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் ([illegible]வற்றாலித்யாதி). (வாஸநைபண்ணி) என்றது - மநநத்தை; இது, “இயன்” என்றதினர்த்தம். ... ... (உ)

மூ.—அண்டமு மிவ்வுலகடலு மவனிகளு மெல்லாம்
அமுதுசெய்த திருவயிற்ற னரன் கொண்டு திரியும்
முண்டமது நிறைத்தவன்கண் சாபமது நீக்கும்
முதல்வனவன்மகிழ்ந்தினிது மருவி யுறைகோயில்
எண்டிசையும் பெருஞ்செந்நெ லிளந்தெங்கு கதலி
யிலைக்கொடி யொண் குலைக்கமுகோடிசலிவளம்சொரிய
வண்டு பல லிசை பாட மயிலாலு நாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே. (௩)

பதம்.	உரை.
அண்டமும்	அண்டங்களையும்
இவ்வுலகடலும்	இந்த அலையெறிகிறஸமுத்ரங்களையும்
அவனிகளுமெல்லாம்	(ஸப்தத்வீப) பூமிகளெல்லாவற்றையும்
அமுதுசெய்த	கபளீகரித்த [னாய்;
திருவயிற்றன்	திருஉதரமுடையவ
அரன்	(சாபத்தாலுபஹதனான) ருத்ரன் [ண்டு
கொண்டு	பரிக்ரஹித்துக்கொ
திரியும்	திரிகிற
முண்டமது	தலையோட்டை
நிறைத்து	நிறையச்செய்து
அவன்கண்சாபமதுநீக்கும்	அவனையொருநாளும் விடாதேயிருக்கிற சாபத்தைப்போக்கியருளிய [வாமி
முதல்வனவன்	ஸர்வநியந்தாவானஸ்
மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில்,	
எண்டிசையும்	பார்த்தவிடமெங்கும்

பதம்.	உரை.
பெருஞ்செந்நெல்	பெரியசெந்நெற்களும்
இளந்தெங்கு	இளமையையுடைத்தானநாரிகேளங்க
கதலி	வாழைகளும் [ளும்
இலைக்கொடி	வெற்றிலைக்கொடிகளும்
ஒண்குலைக்கமுகோடு	அழகிதாகக்காய்த்த பாக்குமரங்களோடே
இசலி	ஸ்பர்த்தித்துக்கொண்டு
வளம்சொரிய	ஸம்ருத்தியைச்சுரக்க (இவற்றிலேபுக்கு மதுபாநம்பண்ணி)
வண்டு	வண்டுகள்
பலஇசைபாட	அநேகராகங்களைப் பாடாநிற்க (அவற்றைக்கேட்டு)
மயில்ஆலும்	மயூரங்கள் நர்த்தநம் பண்ணுகிற
நாங்கூர்வைகுந்தவிண்ணகரம்மடநெஞ்சே! வணங்கு. (௩)	

வ்யா.—மூன்றாம்பாட்டு. (அண்டமித்யாதி) அண்டமும், இந்த லோகத்தைச் சூழப்போந்து அலையெறிகிற கடலும், த்வீபங்களையு மெல்லாமமுதுசெய்த திருவயிற்றையுடையவன். (அரனித்யாதி) சாபத்தாலே உபஹதனாயிருக்கிற ருத்ரன் கொண்டுதிரிகிற தலையோட்டை நிறைத்து, அவனை யொருநாளும் விடாதேயிருக்கிற சாபத்தைப்போக்கி, இப்படி ஸர்வநியந்தாவானவன் வர்த்திக்கிறகோயில்.

(எண்டிசையித்யாதி)பார்த்த பார்த்தவிடமெங்கும், பெரியசெந்நெல், முக்தர் பஞ்சவிம்சதிவார்ஷிகராயிருக்குமாபோலே இளதாயிருக்கிற தெங்கு, வாழை, வெற்றிலைக்கொடி, அழகிதாகக் காய்த்த கமுகுகளோடேகூடி, ஒன்றுக்கொன்று இசலி ஸம்ருத்தியைச்சுரக்க, இவற்றிலேபுக்கு மதுபாநம்பண்ணி, உள்ளுப்புக்கத்ரவ்யம் இருந்தவிடத்திலிருக்கவொட்டாமையாலே, வண்டுகளானவை பல இசைகளையும்பாட, அவற்றைக்கேட்டு மயில்களானவை ஆடாநின்றுள்ள.()

அரு.—மூன்றாம்பாட்டு. (அண்டமித்யாதி) ஓராஶ்ரிதனான ப்ரஹ்லாதனுக்குதவினவளவன்றிக்கே, ஸகலலோகங்களையும் வயிற்றிலேவைத்து, தன்னாலேதானே யிடர்ப்பட்ட துர்மாநிக்குமுதவினானென்று குணாதிக்யத்தையருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

"அண்டமும்" என்றது - ஆகாசமென்றாய், உபரிதநலோகங்களையெல்லாம் சொல்லுகிறது. ... ... (௩)

மூ.—கலை யிலங்கு மக லல்கு லரக்கர்குலக்கொடியைக்
காதொடு மூக்குட னரியக் கதறி யவளோடித்
தலையி லங்கை வைத்து மலையிலங்கை புகச்செய்த
தடந்தோளன் மகிழ்ந்தினிது மருவி யுறைகோயில்
சிலை யிலங்கு மணி மாடத்துச்சி மிசைச் சூலம்
செழுங் கொண்ட லகடிரியச் சொரிந்த செழுமுத்தம்
மலையிலங்கு மாளிகைமேல் மலிவெய்து நாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இலங்கும்கலை	விளங்காநின்றுள்ளபரியட்டத்தையுடைய	கொடியை	கொடிபோலு மிடையையுடைய சூர்ப்பணகையினது
அகல்அல்குல்	அகன்றநிதம்பப்ரதேசத்தையுடையளாய் [ந்த	காதொடுமூக்கு உடன்அரிய அவள்	கர்ணநாஸிகைகளை [க ஏககாலத்திலே அறுக் அச்சூர்ப்பணகையானவள்
அரக்கர்குலம்	ராக்ஷஸகுலத்திற்பிற		

கதறி — கோவெனக்கூப்பிட்டு
தலையில் — தன்தலைமேலே
அம்கைவைத்து — அழகியகையைவைத்துக்கொண்டு
ஓடி — ஓடோடி
மலை — மலையின்மேலேயிருக்கிற
இலங்கைபுகச்செய்த — லங்கையிலே புகும்படிபண்ணின
தடம்தோளன் — மஹாபாஹுவான சக்ரவர்த்தித்திருமகன்
மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில்,
சிலைஇலங்கு — ஒளிவிளங்குகிற
மணிமாடத்து உச்சிமிசை — ரத்நங்களிழைத்தக்ருஹங்களுடைய சிகரத்தின்மேலேயிருக்கும்
சூலம் — சூலங்கள்
செழுங்கொண்டல் — ஸம்ருத்தமானமேகங்களினுடைய
அகடுஇரிய — கீழ்வயிற்றைபேதிக்க (உடனே)
சொரிந்த — ஸ்ரவித்த
செழுமுத்தம் — அழகியமுத்துக்களானவை
மலையிலங்கு — மலைபோலேவிளங்குகிற
மாளிகைமேல் — மாளிகைகளின்மீது
மலிவெய்து — குவிந்துகிடக்கிற
நாங்கூர்வைகுந்தவிண்ணகரம்மடநெஞ்சே! வணங்கு. (சு)

வ்யா.—நாலாம்பாட்டு. (கலையித்யாதி) விளங்காநின்றுள்ள பரியட்டத்தையுடைத்தான அகன்ற நிதம்பப்ரதேசத்தையுடையளாய்க்கொண்டுதோற்றின, ராக்ஷஸஜாதியாகக்கொண்டாடும்படியிருக்கிற பெண்ணை.†தனக்கொரு பரியட்டமும் பெண்மையுமுடையளாய் வந்துதோற்றினளாயிற்று. (காதித்யாதி)அவள்†ஏறிட்டுக்கொண்டுவந்த வடிவைப்போக்கித் † தானும்படி பண்ணிவிட்டானாயிற்று. (கதறியித்யாதி) அநந்தரம் அவளும் கூப்பிட்டுக்கொடு †தலையிலே கையை வைத்து மலையின்மேலேயான லங்கையிலே புகும்படிபண்ணின தோள்வலியையுடையவன் நித்யவாஸம்பண்ணுகிற கோயில்.

(சிலையித்யாதி) சிலையென்று வில்லுக்குப்பர்யாயசப்தமாய்,வில்லென்று ஒளியாய், ஒளி விளங்காநின்றுள்ள மணிமயமான மாடங்களினுச்சியின்மேலே யுண்டான † சூலமும், இதாயிற்று அவ்வூரில் க்ருஹங்களடைய விருக்கும்படி. மேகங்களானவை கடலிலே போய்ப்புக்கு முத்தையடையவாரிக்கொண்டு§நகழ்ந்து நகழ்ந்து நடக்கமாட்டாதேவரும்; மாளிகைகளின் சூலங்களானவை இவற்றினுடைய கீழ்வயிற்றைப்†போழும்; முன்பே தொட்டார்மேலே தோஷமாயிருக்கிறவவை முத்தைச்சொரியும். (மலையிலங்குமாளிகைமேல் மலிவெய்தும்) அப்போது ஒருமலைமேலே மலைசெய்துவைத்தாற்போலேயாயிற்றுக் குவித்துக்கிடப்பது. ... ... (சு)

அரு.—நாலாம்பாட்டு. (கலையித்யாதி) நாட்டாராபத்தைப்போக்கினவளவன்றிக்கே, நித்யாநபாயிநியான பிராட்டிக்குதவினவனென்றநுஸந்தித்து, அந்தப்பிராட்டி பிரிவு வருகைக்கடியான சூர்ப்பணகையின் மூக்கறுத்த

§ நகழ்ந்து - நகர்ந்து.

தோள்வலியை இப்பாட்டிற்சொல்லி, மேலிற்பாட்டிலே பிராட்டிக்குதவினமையை யருளிச்செய்கிருரென்று ஸங்கதி.

ராக்ஷஸியை இவரிப்படி வர்ணிக்கைக்கு ப்ரக்ருதோபயோக மென்னென்ன வருளிச்செய்கிருர் (தனக்கித்யாதி). (எறிட்டுக்கொண்டுவந்தவடிவை) என்றது - அலங்கரித்துக்கொண்டு ஆபிரூப்யத்தோடு வந்தவடிவையென்றபடி. (சானும்படி) விரூபையாம்படி. ராக்ஷஸிகளுக்கு வைரூப்யம் ஸஹஜமென்று திருவுள்ளம். இத்தால் கள்ளவேஷத்தைக் காதலித்துக்காட்டிவிட்டாரென்றதாயிற்று. அக்கையென்றது - "அங்கை" என்று மெல்லொற்ருகக் கிடக்கிறதாய், சூர்ப்பணகையென்றுபேர்போம்படி கோரமானகையென்ருதல், அம் - என்று. அழகாய், விபரீதலக்ஷணயா, கோரமானகையென்ருதல் சப்தார்த்தம் சண்டுகொள்வதென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிருர் (தலையிலேகையைவைத்து) என்று.

(சூலமும்) க்ருஹாலங்காரமான பொற்குடங்களின் நுனியும். (போழும்) பொதுக்கும்; பீறுமென்றபடி. ... ... (௪)

மூ.—மின்னனைய நுண் மருங்குல் மெல்லியற்கா விலங்கை
வேந்தன் முடி யொருபதும் தோளிருபதும் போயுதிரத்
தன்னிகரில் சிலை வளைத்தன்றிலங்கை பொடிசெய்த
தடந்தோளன் மகிழ்ந் தினிது மருவி யுறை கோயில்
செந்நெலொடு செங்கமலம் சேல் கயல்கள் வாளை
செங்கழுநீரொடு மிடைந்து கழனி திகழ்ந்தெங்கும்
மன்னு புகழ் வேதியர்கள் மலிவெய்து நாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	அக்காலத்திலே	இலங்கை	லங்காநகரத்தை
மின்அனைய	கொடிமின்னலையொத்த	பொடிசெய்த	பொடியாக்கின
நுண்மருங்குல்	சிற்றிடையையும்	தடம்தோளன்	மஹாபாஹுவான சக்ரவர்த்தித்திருமகன்
மெல்லியற்கா	ம்ருதுஸ்வபாவத்தையு முடையளான பிராட்டிக்காக	மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில்,	
இலங்கைவேந்தன்	லங்காதிபனுன ராவணனுடைய	செநநெலொடு	செந்நெற்களும்
முடியொருபதும்	கிரீடமிலகும் பத்துத்தலைகளும்	செங்கமலம்	செந்தாமரைப்பூக்களும்
தோளிருபதும்	இருபதுகைகளும்	சேல்கயல்கள் வாளை	சேல்மீன் கயல்மீன் வாளைமீன்களும் ஆகிய இவைகள்
போய்உதிர	சதசகலங்களாகியுதிர்ந்துபோம்படி	செங்கழுநீரொடு	செங்கழுநீர்ப்பூக்களுடனே
நிகர்இல்	ஒப்பற்ற	மிடைந்து	சேர்ந்துகொண்டு
தன் சிலைவளைத்து	ஓங்கிய தன்கோதண்டத்தை வளைத்து	கழனியெங்கும்	கழனிகளெல்லாம்

திகழ்ந்து	ப்ரகாசிக்கவும்	மலிவெய்தும் வீதியெங்குமநெருங் கிவர்த்திக்கும்படி யாகவுமிருக்கிற
மன்னுபுகழ்	நித்யமானகீர்த்தியை யுடைய	
வேதியர்கள்	ப்ராஹ்மணர்கள்	நாங்கூர்வைகுந்தவிண்ணகரம் மடநெஞ்சே! வணங்கு. (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (மின்னனையவித்யாதி) மின்போலேயிருக்கிற நேரிய இடையையுடையளாய், ம்ருதுஸ்வபாவையாயிருக்கிற பிராட்டிக்காக, லங்கைக்கு நிர்வாஹகனாயிருக்கிற ராவணனுடைய பத்துத்தலையும் இருபதுதோளும் போயுதிரும்படியாக, தனக்கு ஒப்புண்டாகிலும் உபமாநரஹிதமாயிருக்கிற வில்லைவளைத்து அன்று லங்கையைப்பொடிபடுத்தின தோள் மிடுக்கையுடையவன், பிராட்டிக்குப்பண்ணின வ்யாபாரத்தை ஆஶ்ரிதரெல்லார்க்கு பொக்கப்பண்ணிற்றாக அவன் ப்ரீதியோடேவர்த்திக்கிற தேசமாகையாலே, கண்டார்க்கெல்லா மினிதாம்படியிருக்கும் தேசம்.

(செங்நெலித்யாதி) இதுவாயிற்று கழனியான ப்ரதேசமடையவிருக்கும்படி. செந்நெலோடேகூட, தாமரை, சேல், கயல்கள், வாளை, செங்கழுநீரோடு †மிடைந்து விளங்காநிற்குமாயிற்று வயலடங்க. (மன்னுபுகழித்யாதி) இதுவாயிற்று ஸ்த்தலமான ப்ரதேசமிருக்கும்படி. நித்யமானபுகழையுடையராயிருக்கிற ப்ராஹ்மணர்மிக்கிருக்கிற. இதுவாயிற்று ஊரும் †பிடாகையுமிருக்கும்படி. ... (ரு)

அரு.—அஞ்சாம்பாட்டு. (மின்னித்யாதி) மிடைந்து - நெருங்கி. (பிடாகையும்) - வயலும். ... ...(ரு)

மூ.—பெண்மை மிகு வடிவுகொடு வந்தவளைப் பெரிய
பேயினது வுருவுகொடு மாள வுயிருண்டு
திண்மைமிகு மருதொடு நற்சகட மிறுத்தருளும்
தேவனவன் மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
உண்மைமிகு மறையொடு நற்கலைகள் நிறைபொறைகள்
உதவுகொடையென்றிவற்றினொழிவில்லாப் பெரிய
வண்மைமிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே. (சு)

பதம்.	உரை.
பெண்மைமிகு வடிவுகொடு	உத்தமஸ்த்ரீசரீரத்தைத்தரித்துக்கொண்டு
வந்தவளை	வஞ்சிக்கவந்தபூதனையானவளை
பெரியபேயினதுஉருவுகொடு	தன்நிஜமான பெரிய பிசாசத்தினுடைய விக்ருதரூபம்கொண்டு
மாள	மாயும்படி
உயிர்உண்டு	அவள்ப்ராணனைஸ்வீகரித்தும்
திண்மைமிகு	மிக்கதிண்மையையுடைய
மருதொடு	மருதமரத்தையும்
நற்சகடம்	துடங்கினகார்யத்தைமுடியத்தலைக்கட்டவல்ல சக்தியையுடையசகடத்தையும்
இறுத்துஅருளும்	முறித்த
தேவனவன்	ஸ்ரீக்ருஷ்ணன்

மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில்,

பதம்.	உரை.
உண்மைமிகுமறையொடு	யதாபூதவாதிகளான வேதங்களும்
நற்கலைகள்	(அவற்றின்) நல்ல அங்கங்களும்
நிறை	(இவற்றின்வாஸனையால்வந்த) குணபூர்த்தியும்
பொறைகள்	க்ஷமை (முதலியவை)களும்
உதவுகொடையென்றிவற்றின்	கேட்டபோதே உதவும்படியான ஔதார்யமுமென்கிற இவற்றையுடைய
ஒழிவில்லா	ஓயாதே(எப்போதும்) உடையவர்களாய்
பெரியவண்மை	மஹௌதார்யம் (ஆத்மஸமர்ப்பணம்)
மிகு	நிறைந்த
மறையவர்கள்	ப்ராஹ்மணர்கள்
மலிவெய்தும்	நெருங்கிவர்த்திக்கிற

நாங்கூர்வைகுந்தவிண்ணகரம்மடநெஞ்சே! வணங்கு. (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (பெண்மையித்யாதி) நாரீணுமுத்தமையான யசோதைப்பிராட்டி வடிவைக்கொண்டுவந்த பூதனையை, பெரிய பேயின்வடிவையுடையளாய்க்கொண்டுமுடிந்து பிணமாய்க்கிடக்கும்படியாக அவளைமுடித்து, அஸுராவேசத்தாலே மிக்க திண்மையையுடைய மருது, † துடங்கினகார்யத்தைமுடியத் தலைக்கட்டவல்ல சக்தியையுடைய சகடம், இவற்றையிறுத்தருளி "விரோதிபோகப்பெற்றோமிறே!" என்று அத்தாலே தீப்தனான † ஸர்வேஶ்வரன் விரும்பி வர்த்திக்கிற தேசம்.

(உண்மையித்யாதி) யதாபூதவாதியான வேதங்களோடேகூட அவற்றினுடைய நன்றான அங்கங்கள், இவற்றிலுண்டான வாஸனையாலே வரக்கடவ ஆத்மகுணங்களையுடைய, † அடக்கம், க்ஷமை, † அர்த்திகளர்த்தித்தபோதே அபேக்ஷிதங்களைக் கொடுக்கையாகிற ஔதார்யம் என்றாற்போலேசொல்லுகிற இவற்றாலொழிவின்றிக்கேயிருக்கிற உதாரரானவர்களால் மிக்கிருக்கிற. † வண்மை - ஆத்மஸ்மர்ப்பணம். ... ... (௬)

அரு.—ஆறும்பாட்டு. (பெண்மையித்யாதி) கீழே நரஸிம்ஹாவதாரமும், அநந்தரம் ராமாவதாரமுமாகவநுபவித்தார்; அநந்தராவதார

மாய் ஆழ்வார்களை யெல்லாமீடுபடுத்தும் க்ருஷ்ணாவதாரத்தை மேல் மூன்று பாட்டாலுமநுபவிக்கிறார் என்று ஸங்கதி.

சகடத்துக்கு நன்மையேதென்ன, நல்லபாம்பு என்னுமாபோலே க்ரௌர்யாதிசயத்தைச் சொல்லுமென்றருளிச் செய்கிறார் (தொடங்கினவித்யாதி). "அவன்" என்றத்தால் தோற்றின வேதாந்த ப்ரஸித்தியைப்பற்ற வருளிச் செய்கிறார் (ஸர்வேஸ்வரன்) என்று.

"நின்ற" என்றதினர்த்தம் (அடக்கம்) என்றது. உதவுகொடை - உதவும்படியான கொடையென்றர்த்தமருளிச் செய்கிறார் (அர்த்திகளித்யாதி). கீழே ஔதார்யத்தைச் சொல்லி, மீளவும் உதாரரான என்றால் புநருக்தமன்றோவென்ன வருளிச் செய்கிறார் (வண்மையித்யாதி). ... (௬)

மூ.—விளங்கனியை யிளங்கன்று கொண்டுதிர வெறிந்து
வேல்நெடுங்க ணாய்ச்சியர்கள்வைத்ததயிர்வெண்ணெய்
உளங்குளிர வமுதுசெய்திவ்வுலகுண்ட காளை
யுகந்தினிது நாடோறும் மருவியுறைகோயில்
இளம்படி நற்கமுகு குலைத்தெங்கு கொடிச்செந்நெல்
ஈன்கரும்பு கண்வளரக் கால்தடவும் புனலால்
வளங்கொண்ட பெருஞ்செல்வம் வளருமணிநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே. (௭)

பதம்.	உரை.	பதம்	உரை.
இளங்கன்று கொண்டு	இளம்பருவமுடைய வத்ஸாஸுரனைத் தூக்கி	இளம்படிநல் கமுகு	இளமையைஸ்வபாவமாகவுடைய அழகிய பாக்குமரங்களும்
விளங்கனியை உதிரஎறிந்து	விளாவாய்நின்றஅஸுரன்உதிர்ந்து உயிர் மாயும்படிவீசியும்,	குலைத்தெங்கு	குலையையுடைத்தானதென்னைமரங்களும்
வேல்	வேல்போல [டைய	கொடி	வெற்றிலைக்கொடிக[ளும்
நெடுங்கண்	நீண்டகண்களையு	செந்நெல்	செந்நெற்களும்
ஆய்ச்சியர்கள் வைத்த	இடைச்சிகள் (உறிகளிலே) சேமித்து வைத்த	ஈன்கரும்பு	இனியகரும்புகளும் ஆகியஇவைகள்
தயிர்வெண்ணெய்	ததிநவநீதங்களை	கண்வளர	நித்ரைசெய்யும்படி
உளம்குளிர	தந்திருவுள்ளம்குளிரும்படி	கால்தடவும்	அடியிலேபாயாநின்ற
அமுதுசெய்து	உண்டும், (பின்னும்)	புனலால்வளங்கொண்டபெருஞ்செல்வம்	ஜலஸம்ருத்தியால்வந்த நன்மையையுடைய பெரிய ஐஶ்வர்யம்
இவ்வுலகுண்ட	இந்தலோகத்தையடைய வமுதுசெய்	வளரும்	வ்ருத்தியடையாநின்றுள்ள
காளை	நவயௌவநன் [த	அணிநாங்கூர்	வைகுந்தவிண்ணகரம்
உகந்தினிதுநாடோறும்	மருவியுறைகோயில்,	மடநெஞ்சே!	வணங்கு. (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (விளங்கனியித்யாதி) வத்ஸாஸுரனைக் கொண்டு விளாவாய் நிற்கிற அஸுரன்மேலே உதிரும்படியெறிந்து, வேல்போலே †பரந்த கண்ணையுடையராயிருக்கிற இடைச்சிகள் சேமித்துவைத்த தயிரையும் வெண்ணெயையும், †ஆஶ்ரிதஸ்பர்ச முள்ளதொரு த்ரவ்யமாகையாலே திருவுள்ளமானது குளிரும்படியாக வமுதுசெய்து, அநந்தரம், இந்தலோகத்தையடையத் திருவயிற்றிலேவைத்து ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்தைப்பண்ணுகையாலே இளகிப்பதித்திருக்கிறவன்.

(இளம்படி) இளமையை ஸ்வபாவமாக வுடைத்தாயிருக்கிற கமுகு, குலையையுடைத்தாயிருக்கிற தெங்கு; வெற்றிலைக்கொடி, செந்நெல், †இனியகரும்பானது கண்வளரும்படியாகப் புனலானது †கால்தடவா நிற்குமாயிற்று, †கரும்பானது நாள்தோறும் ஒருகண்ணேறி வரும்படி கால் தடவுமாயிற்றுப் புனலானது. †நிரவதிகஸம்பத்தானது மாறாதே செல்லுகிற. ... ... (எ)

அரு.—ஏழாம்பாட்டு. (விளங்கனியித்யாதி) "வேல்" என்றத்தால் நெடுமை ஆர்த்தமாயிருக்க, நெடுமையைச்சொன்னது லக்ஷணயா வைபுல்ய வாசியென்று (பரந்த) என்கிறார். தயிரும் வெண்ணெயு மமுதுசெய்தால் உள்ளம்குளிருகை அர்த்தஸித்தமாயிருக்க, விசேஷித்ததுக்குபாவம் (ஆஶ்ரிதேத்யாதி).

இன்கரும்பு என்றது நீட்டிக்கிடக்கிறதாய், அர்த்தமருளிச்செய்கிறார் (இனியகரும்பு) என்று. (கால்தடவாநிற்கும்) என்றது - சாடு. ஸ்வபாவார்த்தம் - கால்வழிகளாலே பரம்பாநிற்குமென்று, "கண்வளரும்" என்றதுக்கும் சாட்வர்த்தம் ஸ்பஷ்டமென்று திருவுள்ளம்பற்றி, ஸ்வபாவார்த்தத்தை யருளிச்செய்கிறார் (கரும்பானதித்யாதி). அணி நாங்கூராகைக்கு ஹேது கீழ்ச் சொன்னதெல்லாமென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (நிரவதிகேத்யாதி) ... ... (எ)

மூ.—ஆறாத சினத்தின் மிகு நரகனுரமழித்த
அடலாழித் தடக்கைய னலர்மகட்கு மரர்க்கும்
கூறாகக் கொடுத்தருளும் திருவுடம்ப னிமையோர்
குலமுதல்வன் மகிழ்ந்தினிது மருவி யுறை கோயில்
மாறாத மலர்க்கமலம் செங்கழுநீர் ததும்பி
மதுவெள்ள மொழுக வயலுழவர் மடையடைப்ப
மாறாத பெருஞ்செல்வம் வளரு மணிநாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே. (அ)

பதம்.	உரை.
ஆறாத	ஒருகாலாறக்கடவதன்றிக்கேயிருக்கிற [னாய்
சினத்தின்	கோபத்தையுடைய
மிகு	மிகைத்துவாராநின்றுள்ள
நரகன்	நரகாஸுரனது
உரம்	மிடுக்கை
அழித்த	போக்கின
அடல்ஆழி	யுத்தோந்முகமானதிருவாழியை
தடக்கையன்	தன்பெருங்கையிலே யுடையனாய்,
அலர்மகட்கும்	பெரியபிராட்டியாரு
அரர்க்கும்	ருத்ரனுக்கும் [க்கும்
கூறுஆக	என்னதென்றுகூறிட்டநுபவிக்கலாம்படி
கொடுத்தருளும் திருவுடம்பன்	தன்திருமேனியைக் கொடுத்துக்கொண்டிருக்கிற சீலத்தையுடையனாய்,

உரை.	பதம்.
இமையோர்குல முதல்வன்	நித்யஸூரிகள்திரளுக்குநிர்வாஹகனான ஸர்வேஸ்வரன்
மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில்,	
மாறாதமலர்க்கமலம்	இடைவிடாதமலரையுடையதாமரை
செங்கழுநீர்	செங்கழுநீர் (முதலிய பூக்கள்ஆகிய இவைகளில்நின்றும்)
ததும்பி	நெருங்கிப்புறப்பட்ட
மதுவெள்ளமொழுக	தேன்வெள்ளமெங்கும்(தலைதெரியாது)பா
உழவர்	கர்ஷகர் [ய்வதினால்
வயல்மடையடைப்ப	தங்கள்தங்கள்கழனிமடைகளை அடைக்கவும்
மாறாத	மாறாதேவளர்ந்துகொண்டுவருகிற
பெருஞ்செல்வம்வளரும்	மிக்கநீர்ச்செல்வம் நிறைந்த
அணிநாங்கூர்	வைகுந்தவிண்ணகரம்

மடநெஞ்சே! வணங்கு. (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (ஆறாதவித்யாதி)ஒருகா லாறக் கடவதன்றிக்கே யிருக்கிற சினத்தையுடையனாய், மிகைத்து வாராநின்றுள்ள நரகனுடைய†மிடுக்கையழித்த யுத்தோந்முகமான திருவாழியைக் கையிலே யுடையவன், பெரிய பிராட்டியார்க்கும் ருத்ரனுக்கும் என்னதென்று கூறிட்டநுபவிக்கலாம்படி திருமேனியைக் கொடுத்துக்கொண்டிருக்கிற †சீலத்தையுடையவன், நித்யஸூரிகள் திரளுக்கு நாதனானவன்.

(மாறாதவித்யாதி) மாறாதமலரை யுடைத்தான தாமரை, செங்கழுநீர், இவற்றால் †மிக்கு மதுவெள்ளமிட்டுப்பாய, வயலிலுண்டான கர்ஷகரானவர்கள் பயிரழிய வெள்ளம் போமளவானவாறே மடைகளையடைப்பர்கள். (மாறாத பெருஞ்செல்வம் வளரும்) †"அங்கேயுடைந்தது" "இங்கேயுடைந்தது கிடாய்" என்று, "ஸஹ்யப் பெருக்குக் கிடாய்" என்று கூப்பிடுகிற ஆரவாரமேயாய்க் கிடக்குமாயிற்று. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (ஆறாதவித்யாதி) "உரம்" என்றதினர்த்தம் (மிடுக்கை) என்றது. "அலர்மகட்கு" என்றத்தாலே மஹத்வமும் "அரர்க்கு"

என்ற பூஜ்யோக்தியாலே - அவனுடைய ஸ்வோத்கர்ஷாபிமாநமும், "கூருக்" என்கையாலே - மந்தஸம்ஶ்லேஷமும் தோற்றுகையாலே யருளிச்செய்கிறார் (சீலத்தையுடையவன்) என்று.

"ததும்பி" என்றதினர்த்தம் (மிக்கு) என்றது. கீழ்ச்சொன்னதுக் கநுகுணமாக செல்வத்தை விசேஷிக்கிறார் (அங்கேயித்யாதி). ... (அ)

மூ.—வங்கமலி தடங்கடலுள் வானவர்களோடு
மாமுனிவர் பலர்கூடி மாமலர்கள்தூவி
எங்கள்தனி நாயகனே யெமக்கருளா யென்னும்
ஈசனவன் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்
செங்கயலும் வாளைகளும் செந்நெலிடைக் குதிப்பச்
சேலுகளும் செழும்பணைசூழ் வீதிதொறு மிடைந்து
மங்குல்மதி யகடுரிஞ்சு மணிமாட நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே. (௯)

பதம்.	உரை.
வங்கம்மலி	மரக்கலங்களால்நிறைந்திருக்கிற
தடங்கடலுள்	பெரியதிருப்பாற்கடலிலே
வானவர்களோடுமாமுனிவர்பலர்கூடி	தேவர்களோடே ஸநகாதிமஹர்ஷிகள் பலருங் கூடிக்கொண்டுவந்து
மாமலர்கள்தூவி	ஶ்லாக்யமான புஷ்பாத்யுபகரணங் களைத்தூவி
எங்கள்தனிநாயகனே	எங்களுக்குநாதனான ஸர்வேஶ்வரனே!
எமக்கு அருளாய்	எங்கள்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணும்
என்னும்	என்றுப்ரார்த்திக்கும்படியிருக்கிற
ஈசனவன்	ஸ்வாமி
மகிழ்ந்தினிதுமருவியுறை கோயில்,	
செங்கயலும்	செவ்வியகயல்மத்ஸ்யங்களும்
வாளைகளும்	வாளைமத்ஸ்யங்களும்
செந்நெலிடை	செந்நெற்பயிர்களினிடையே
குதிப்ப	துள்ள
சேல்உகளும்	(அப்பயிரினிடையேயிருந்த)சேல்மத்ஸ்யங்களும் (கூடவே) களித்துவர்த்திக்கிற
செழும்பணைசூழ்	பெரியமருதநிலம்சூழ்ந்திருப்பதாய்,
வீதிதொறும்	தெருக்கள்தோறும்
மிடைந்து	நெருங்கியிருப்பதாய்
மங்குல்மதி	ஆகாசத்திலேஸஞ்சரிக்கிறசந்த்ரனுடைய
அகடுஉரிஞ்சும்	கீழ்வயிறுதேயும்படியாயுயர்ந்த
மணிமாடம்	மணிமயமான மாடங்களையுடையதாயிருக்கிற
நாங்கூர்வைகுந்தவிண்ணகரம் மடநெஞ்சே! வணங்கு. (௯)	

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (வங்கமித்யாதி) மரக்கலங்களால் குறைவற்றிருக்கிற பெரிய திருப்பாற்கடலிலே. †மலைக்குச் சிறப்பாக ஆனையயிட்டுச் சொல்லுமாபோலே, கடலுக்குச் சிறப்பாக மரக்க

லங்களையிட்டுச் சொல்லக்கடவது. தேவர்களோடே ஸநகாதிகளுங் கூட புஷ்பாத்யுபகரணங்களைத்தூவி, "எங்களுக்கு நாதனான ஸர்வேஶ்வரனே! எங்கள் பக்கலிலே க்ருபையைப்பண்ணி யருளவேணும்" என்னும் ஸர்வேஶ்வரன் ப்ரீதிபூர்வகமாக நித்யவாஸம் பண்ணுகிற தேசம்.

(செங்கயலித்யாதி) அழகிய கயலும் வாளைகளும் குளிர்த்தியைப்பற்றச் செந்நெலிடையிலே தாவ, சேல்களானவை களித்துவர்த்தியா நின்றுள்ள மருதநிலம் சூழ்ந்திருக்குமாயிற்று. †தெருவுகள் தோறும்,†ஆகாசத்திலே ஸஞ்சரிக்கிற சந்த்ரனுடைய கீழ்வயிறு தேயும்படியான மணிமயமான மாடங்களையுடைய. ... (௯)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (வங்கமித்யாதி) கீழ்ப்பாட்டில் ஸௌசீல்யத்தை யநுஸந்தித்தவுடனே அவனுடைய பரத்வம் திருவுள்ளத்திலூற்றிருந்து அத்தையருளிச் செய்கிருரென்ருதல், கீழ் க்ருஷ்ணாவதாரம் ப்ரஸ்துதமாகையால்(க) "నాగపర్యఙ్కముత్సృజ్యహ్యాగతో మధురాంపురీమ్ - நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்யஹ்யாகதோ மதுராம்புரீம்" என்கிறபடியே அதுக்கடியான திருப்பாற்கடலானை யநுபவிக்கிருரென்ருதல் ஸங்கதி.

வங்கங்களைச்சொன்னதுக்கு ப்ரக்ருதோபயோகமென்னென்ன வருளிச்செய்கிருர் (மலைக்கித்யாதி). கவிஸமாதியாலே சொன்ஞரென்று கருத்து.

(தெருவுகள்தோறும்) என்றவநந்தரம், மிடைந்திருக்கிற-நெருங்கியிருக்கிற என்று கூட்டியநுஸந்திப்பது. "மங்குல்" என்றதினர்த்தம் (ஆகாசத்திலே) என்றது. ... ... (௯)

மூ.—சங்கு மலி தண்டு முதல் சக்கரமு னேந்தும்
தாமரைக் கண்ணெடிய பிரான் தானமருங்கோயில்
வங்கமலி கடலுலகில் மலிவெய்து நாங்கூர்
வைகுந்த விண்ணகர்மேல் வண்டறையும் பொழில்சூழ்
மங்கையர்தம் தலைவன் மருவலர்த முடல்துணிய
வாள்வீசும் பரகாலன் கலிகன்றி சொன்ன
சங்கமலி தமிழ்மாலை பத்திவை வல்லார்கள்
தரணியொடு விசும்பாளும் தன்மை பெறுவாரே. (௧0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

(க) ஹரிவம்சம் - ௧௧௩ - ௬௨.

பதம்.	உரை.	பதம்.	உரை.
சங்கு	சங்கமும்	மலி	த்ருடமான
தண்டு	கதையும்	சக்கரம்	சக்கரமும்
முதல்	இவைமுதலானகட்க சார்ங்கங்களும் ஆகியஇவற்றை	முன்	கண்முன்னே
ஏந்தும்	தரித்துக்கொண்டிருக்கிற	நெடிய	நீண்ட
தாமரைக்கண்	தாமரைபோன்றதிருக்கண்களையுடைய	பிரான்	மஹோபகாரகனான ஸர்வேஶ்வரன்
அமரும்கோயில்	நித்யவாஸம்பண்ணும்திவ்யதேசமாய்,	வங்கம்	மரக்கலங்கள்
மலி	நிறைந்த	கடல்	கடல்சூழ்ந்த
உலகில்	பூமியில்	மலிவுஎய்து	ஸம்ருத்திமிக்கிருக்கிற
நாங்கூர்	திருநாங்கூரில்	வைகுந்தவிண்ணகர்மேல்	வைகுந்தவிண்ணகர் விஷயமாக,
வண்டு	வண்டுகள்	அறையும்	சப்தியாநின்றுள்ள

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொழில்	சோலைகளாலே	சூழ்	சூழப்பட்ட
மங்கையர்தம்	திருமங்கையிலுள்ளார்க்கு	தலைவன்	ப்ரதாநராய்
மருவலர்தம்உடல்	சத்ருக்கள் சரீரங்கள்	துணிய	சிந்நம் பிந்நமாம்படி
வாள்வீசும்	கட்கத்தைவீசுகிற	பரகாலன்	சத்ரும்ருத்யுவாய்
கலிகன்றி	கலிவைரியான ஆழ்வார்	சொன்ன	அருளிச்செய்ததாய்
சங்கம்மலி	கவிஸங்கம்கொண்டாடத்தக்க	தமிழ்மாலை	த்ராவிடசப்தஸந்தர்ப்பத்தையுடைத்தான
இவைபத்து	இப்பத்துப்பாட்டுக்களையும்	வல்லார்கள்	அப்யஸிக்கவல்லவர்கள்,
தரணியொடு	பூமியையும்	விசும்பு	பரமாகாசத்தையும்
ஆளும்	ஆளும்படியான	தன்மை	அதிசயத்தை
பெறுவார்	உடையராகப்பெறுவர்கள். (௧௦)		

வ்யா.—பத்தாம்பாட்டு. (சங்கித்யாதி) †ஆஶ்ரிதார்த்தமாக ஸ்ரீ பஞ்சாயுதங்களையும் தரித்துக்கொண்டிருக்கிற புண்டரீகாக்ஷனான ஸர்வேஶ்வரன் நித்யவாஸம்பண்ணுகிற தேசம். மரக்கலத்தை யுடைத்தான கடல் சூழ்ந்த பூமியில் ஸம்ருத்தி விஞ்சியிருக்கிற திருநாங்கூரிலே வைகுந்த விண்ணகரிலே கவிபாடிற்று. கவிபாடினவர் - மதுபாநமத்தமான வண்டுகள் த்வநியாநின்றுள்ள பொழிலாலே சூழப்பட்ட திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரான ஆழ்வார், சத்ருக்களுடல் துணியும்படியாக வாள்வீசுகிற, பரகாலன் - ஆழ்வாரருளிச்செய்த, † சங்கப்புலவர்கள் திரளவிருந்து தமிழ் கொண்டாடப் புக்கால் இத்தையே கொண்டாடும்படியான தமிழ்த்தொடை

பத்தையும் வல்லவர்கள், உபயவிபூதியும் தாங்களிட்ட வழக்காம்படியான ஸ்வபாவத்தையுடையராகப் பெறுவர். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—பத்தாம்பாட்டு. (சங்கித்யாதி) சங்கும், மலிவுடைய - மிடுக்கின் மிகுதியுடைய, தண்டும், சக்கரமும், முதல் என்றத்தாலே - மற்றை வாளும் வில்லுமான விவற்றைக்கொண்டு கண்முன்னே பூவேந்தினாற்போலே தரித்துக்கொண்டிருக்கிற தாமரைபோன்ற நெடியகண்ணுடைய பிரான்றனென்று வாக்யார்த்தமுட்கொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதேத்யாதி). (சங்கப்புலவர்) என்றது - கவிஸங்கத்தையுடைத்தான சங்கப்பலகையில் வித்வான்களென்றபடி. ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்து ஒன்பதாந்திருமொழி முடிந்தது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி, மூன்றும்பத்து பத்தாந்திருமொழி திருமடந்தைப்ரவேசம்.

வ்யா.—†ஆஶ்ரித †விரோதி நிரஸநசீலனாய், ஆஶ்ரிதர்க்கு †ஆபத்துக்களிலேவந்து உதவும் ஸ்வபாவனுமான ஸர்வேஶ்வரன்,†தான் சரண்யனாமிடத்தில் புருஷகாரமாம் பிராட்டிமாரோடே கூடவந்து நிற்கிறபடியை யநுஸந்தித்து நித்யஸூரிகள் "இதொருசீலகுண ப்ராசுர்யமிருந்தபடியென்!" என்று இதிலே ஈடுபட்டு ஆஶ்ரயிக்கும் படியாக அரிமேய விண்ணகரிலே நித்யவாஸம் பண்ணுகின்றான், ஆனபின்பு நீயுமங்கே சென்று அவனை யாஶ்ரயித்து உன்னுடைய குறைகளெல்லாவற்றையும் தீர்த்துக்கொள்ளப் பாராயென்று திருவுள்ளத்தைக் குறித்தருளிச் செய்கிறார். ... ... *

அரு.—திருமடந்தைப்ரவேசம். கீழ் வைகுந்தவிண்ணகரில் நரஸிம்ஹ ராம க்ருஷ்ணாவதாரசேஷ்டிதங்கள் முதலானவற்றை யநுஸந்தித்த ஆழ்வார், அடுத்த அரிமேயவிண்ணகரிலிருக்கு மவனையு மநுபவிக்கவேணுமென்னுமாசையால் அவ்வபதாநங்களை மாறிமாறிப் பேசாநின்றுகொண்டு அநுபவிக்கிறாரென்னும் ஸங்கதியையுட்கொண்டு, திருமொழியில் ப்ரமேயத்தை உபந்யஸிக்கிறார் (ஆஶ்ரிதவிரோதிநிரஸநேத்யாதி). இத்திருமொழியில் நரகாஸுர ப்ரப்ருதிகளை நிரஸித்தபடிகளைப்பற்ற (விரோதிநிரஸநசீலனாய்) என்றது. (௧) "கடலைக்கடைந்தமுதளிக்கும்" என்றும், (௨) "உண்டபிரான்" என்றும், (௩) "சிறுகுறளாய்" என்றும் சொன்ன அபதாநங்களைப்பற்ற வருளிச்செய்கிறார் (ஆபத்துக்களிலே வந்துதவும் ஸ்வபாவனுமான) என்று. முதற்பாட்டைப்பற்ற வருளிச்செய்கிறார் (தானித்யாதி). ... ... *

மூ.—திருமடந்தை மண்மடந்தை யிருபாலும் திகழத்
தீவினைகள் போயகல வடியவர்கட்கென்றும்
அருள்நடந் திவ்வேழுலகத் தவர் பணிய வானோர்
அமர்ந்தேத்த விருந்தவிடம் பெரும்புகழ் வேதியர்வாழ்
தரு மிடங்கள் மலர்கள் மிகு கைதைகள் செங்கழுநீர்
தாமரைகள் தடங்கடொறு மிடங்கடொறும் திகழ
அருவிடங்கள் பொழில்தழுவி யெழில்திகழு நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே. (௧)

(௧) ௩-௧௦-௨. (௨) ௩-௧௦-௩. (௩) ௩-௧௦-௫.

பதம்.	உரை.	பதம்.	உரை.
திருமடந்தை	பெரியபிராட்டியாரும்	வாழ்தரும்	வர்த்திக்கிற
மண்மடந்தை	ஸ்ரீபூமிப்பிராட்டியும்	இடங்கள்	இடங்களையுடைத்தாய்,
இருபாலும்	இரண்டுபார்ஶ்வங்களிலும்	மலர்கள்மிகு	புஷ்பஸம்ருத்தியையுடைய
திகழ	ப்ரகாசிக்க,	கைதைகள்	தாழைகளும்
அடியவர்கட்கு	ஆஶ்ரிதர்பக்கல்	செங்கழுநீர்	ரக்தோத்பலங்களும்
என்றும்	எப்போதும்	தாமரைகள்	தாமரைகளும்
அருள்நடந்து	க்ருபைபண்ணி	தடங்கள்தொறும்	தடாகங்கள்தோறும்
தீவினைகள்	கொடியபாபங்கள்	இடங்கள்தொறும்	பார்த்தபார்த்தவிடமெல்லாம்
போய்அகல	விட்டோடும்படி	திகழ	விளங்கவும்,
இவ்வேழ்உலகத்தவர்	இந்தஸப்தலோகங்களிலுள்ளாரும்	பொழில்	சோலையானது
பணிய	ஆஶ்ரயிக்கவும்,	அருவிடங்கள்	ஆகாசாவகாசமடைய
வானோர்	நித்யஸூரிகள்	தழுவி	இடமடைத்துக்கொண்டு ஓங்கி
அமர்ந்து	இஸ்ஸம்ஸாரவிபூதியில்கால்பொருந்தி	எழில்திகழும்	அழகுவிளங்காநின்ற
ஏத்த	ஸ்தோத்ரம்பண்ணவும்	நாங்கூர்	திருநாங்கூரிலுள்ள
இருந்த	நித்யவாஸம்பண்ணுகிற	அரிமேயவிண்ணகரம்	அரிமேயவிண்ணகரில் எம்பெருமானை
இடம்	திவ்யதேசமாய்,	மடநெஞ்சே	எனக்குவிதேயமான நெஞ்சே!
பெரும்புகழ்	மஹாப்ரஸித்தரான		
வேதியர்	ப்ராஹ்மணர்	வணங்கு	ஆஶ்ரயி. (௧)

முதற்பாட்டு.—(திருமடந்தை மண்மடந்தை யிருபாலும்திகழ) (௧)†"నకశ్చిన్నాపరాధ్యతి-நகஶ்சிந்நாபராத்யதி" என்று குற்றத்தைப் பொறுப்பிக்கும் பிராட்டியும், "முதலிலே குற்றந்தன்னைக் காண்கிறதென், பின்னைப்பொறுப்பிக்கிறதென்" என்று, குற்றங்கண்டு பொறுக்கையுங்கூட மிகையாம்படி யிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டியும், இரண்டிடத்திலும் விளங்க. †குற்றத்தைப் பொறுப்பிக்கைக்குப் பிராட்டி, குற்றங்கண்டு கைவிடவொண்ணாத விடத்தில், "குற்றம் கணக்கிடுகிற விதுக்கு பலமென்" என்றிருக்கும் ஸ்ரீபூமிப்பிராட்டி. (தீவினைகள் போயகல) இப்படிப்பட்ட பிராட்டிமாருடைய நித்ய ஸந்நிதியாலே, ஸர்வேஶ்வரனுக்கு ஆஶ்ரித விஷயத்து, (௨) "సంసారేషు నరాధమాన్ క్షిపామి-ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாமி" என்கைக்கு விஷயமற்றிருக்குமாயிற்று. † பொறுப்பிக்குமவளும் பொறைக்கு உவாத்தானவளும் எப்போதுமொக்க அருகே யிருக்கையாலே, ஆஶ்ரிதர்பக்கல் எப்போது மவனருளே நடந்து, அத்தாலே கொடிய அபராதங்கள் "இவ்வோவிடங்கள் நமக்கிருப்பிட

(க) ரா-யு-௧௧௬-௪௪. (க) கீதை-௧௬-௧௯.

மல்ல," என்று விட்டோட, "இப்படியிருக்கிற விவனல்லது லோகத்திலே வேறு ஆஸ்ரயணீயரில்லை" என்று ஏழுவகைப்பட்ட லோகங்களிலுள்ளாருமடைய ஆஸ்ரயிக்க, தேவர்களுங்கூடக் கால்பொருந்தவரிதாம்படியான இஸ்ஸம்ஸார விபூதியிலே, அஸ்ப்ருஷ்டஸம்ஸார கந்தரான நித்யஸூரிகள் பொருந்தி ஆஸ்ரயிக்கும்படியாக விருக்கிறதேசம்.

(பெரும்புகழித்யாதி) இவனை யநுபவிக்கையே யாத்ரையாம்படி சமைகையாலே மிக்கபுகழையுடைய ப்ராஹ்மணர்வர்த்திக்கிறவிடங்களையுடைத்தாய், மலர்கள் மிகு கைதைகள் துடக்கமானவற்றையுடைத்தா யிருக்கிற திருநாங்கூரென்னுதல்; வாழ்தருமிடங்களிலே யுண்டாய் † அவர்களுக்குறுப்பாயிருக்கிற மலர்கள் மிகு கைதைகள் துடக்கமானவற்றை யுடைத்தாயிருக்கிற வென்னுதல். பூக்கள் மிக்கிருந்துள்ள, தாழைகள், செங்கழுநீர், தாமரைகள், இவைபரந்த பொய்கைகள் தோறும் அவகாசங்கள்தோறும் விளங்க, இங்கிடமில்லாமையாலே சோலையானது ஆகாசத்தில் †பரப்படைய இடமடைத்துக் கொண்டோங்கி அழகு விளங்கா நின்றுள்ள. † அருமிடமென்று ஸூக்ஷ்மதையைப்பற்ற ஆகாசத்தைச் சொல்லுகிறது.

அரு.—முதற்பாட்டு. (திருவித்யாதி) "தீவினைகள்போயகல" என்ற பதத்தைக்கடாக்ஷித்து, பிராட்டிமாரிருவரையும் சொன்னதுக்கு உட்கருத்தையருளிச்செய்கிறார் (நகஶ்சிதித்யாதி). இவர்களுக்கிவை ஸ்வாபாவிகங்களோவென்ன (குற்றத்தையித்யாதி). "திருமடந்தை மண்மடந்தையிருபாலும் திகழ - அடியவர்கட்கு என்றுமருள்நடந்து - தீவினைகள்போயகல இவ்வேழுலகு" இத்யாதியாலே அந்வயம் திருவுள்ளம்பற்றி, ததநுகுணமாக வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (பொறுப்பிக்குமித்யாதி).

(அவர்களுக்குறுப்பாய்) அவர்கள்பண்ணும் ஸமாராதநங்களுக்குறுப்பாய். "தழுவி" என்றதினர்த்தம் (பரப்படையவித்யாதி). "அத்ரக்ருத்ரஃபததி" என்று தோற்றுகையாலே மூர்த்தமான ஆகாசத்தை "அரு" என்று அமூர்த்தமாகச் சொல்லக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (அருவிடமென்றித்யாதி). ... ... (௧)

மூ.—வென்றி மிகு நரகனுரமது வழிய விசிறும்
விறலாழித் தடக்கையன் விண்ணவர்கட்கன்று
குன்றுகொடு குரைகடலைக் கடைந்தமுத மளிக்கும்
குருமணியென் னாரமுதம் குலவி யுறை கோயில்

என்றுமிகு பெருஞ்செல்வத் தெழில்விளங்கு மறையோர்
ஏழிசையும் கேள்விகளு மியன்ற பெருங் குணத்தோர்
அன்றுலகம் படைத்தவனே யனையவர்கள் நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே. (௨)

பதம்.	உரை.
வென்றிமிகு	ஜயம்மிக்க
நரகன்	நரகாஸுரனுடைய
அது உரம்	அப்படிப்பட்டபலம்
அழிய	நசிக்கும்படி
விசிறும்	வீசாநின்றுள்ள
விறல்	மிடுக்கையுடைய
ஆழி	திருவாழியை
தடம்	பெரிய
கையன்	திருக்கையிலேயுடையவனாய்,
அன்று	தேவஜாதி ஆர்த்தித்த வன்று
விண்ணவர்கட்கு	இந்த்ராதிதேவர்களுக்காக
குன்றுகொடு	மந்தரபர்வதத்தைக்கொண்டு
குரைகடலை	கோஷிக்கிற ஸாகரத்தை
கடைந்து	மத்நம்பண்ணி
அமுதம்	அம்ருதத்தை
அளிக்கும்	(அவர்களுக்கு) க்ருபைபண்ணின
குருமணி	ஶ்லாக்யமான மணிபோன்றவனாய்
என் ஆர்அமுதம்	என்னுடைய அத்ருப்தாம்ருதமானவன்

பதம்.	உரை.
குலவியுறை	விரும்பிவர்த்திக்கிற
கோயில்	திவ்யஸ்தாநமாய்,
என்றும்	ப்ரதிதிநமும்
மிகு	மிகுத்துவருகிற
பெரும்செல்வத்து	நிரவதிகஸம்பத்தையுடையராய்
எழில்விளங்கும்	அழகுவிளங்காநிற்பாராய்
மறையோர்	வேதத்தைக்கரைகண்டிருப்பாராய்
ஏழ்இசையும்	ஸப்தஸ்வரங்களும்
கேள்விகளும்	மற்றுமுண்டான அங்கோபாங்கங்களும்
இயன்ற	அதிகரித்த
பெருங்குணத்தோர்	மஹாகுணப்ரசுரராய்
அன்று	அக்காலத்தில்
உலகம்படைத்தவனே அனையவர்கள்	ஜகத்ஸ்ருஷ்டிபண்ணின ப்ரஹ்மாவைப்போலேஜகத்ஸ்ருஷ்டிபண்ண வல்லரான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற

நாங்கூர் அரிமேயவிண்ணகரம் மடநெஞ்சே! வணங்கு- (௨)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (வென்றி யித்யாதி) புக்க புக்க துறைதோறும் வெற்றிகொள்ளக்கடவனாய், † இந்த்ராதிகள் குடியிருப்பழித்துத் திரிகிற நரகாஸுரனுடைய மிடுக்கழியும்படியாக வீசாநின்றுள்ள மிடுக்கையுடைய திருவாழியைத் திருக்கையிலே யுடையவன். நரகாஸுரனை நிரஸித்து தேவஜாதிக்குக் குடியிருப்புப்பண்ணிக் கொடுத்துவிட்ட வளவன்றிக்கே, அவர்கள் "எங்களுக்குக் கடல்கடைந்து அம்ருதத்தை வாங்கித்தரவேணும்" என்ன; அவர்களுக்காக மந்தரத்தை நட்டு கோஷத்தை யுடைத்தாயிருக்கிற கடலைக்கடைந்து, அவர்களுக்கு அம்ருதத்தைக் கொடுத்தவன். (குருமணி) † அவர்கள். "நீவேண்டா, எங்களுக்கு உப்புச்சாறமையும்"

என்ன; பொருவிலேயனை தன்படி யொன்றும்பாராதே, தன் தோள் நோவும்படி கடலை நெருக்கிக் கடைந்து அவர்களுக்கு அம்ருதத்தை உபகரித்தவன். (என்னாரமுதம்) அவர்களம்ருதம்போலன்றிக்கே தம்முடைய அம்ருதமிருக்கிறபடி. † கொண்டாடிக்கொண்டு வர்த்திக்கிறதேசம்.

(என்றுமித்யாதி) நாள்செல்ல நாள்செல்ல மிக்குவாரா நின்றுள்ள ஸ்ரவதிகஸம்பத்தையுடையராய், அத்தாலே அழகு விளங்காநிற்பாராய், வேதத்தைக் கரைகண்டிருப்பாராய், ஸப்த ஸ்வரங்களையும் மற்றுமுண்டான அங்கங்களையும், "இவர்களில் மேற்பட அதிகரித்தாரில்லை" என்னும்படி அதிலுண்டான வாஸனையாலே ஆத்மகுண ப்ரசுரருமாய், தனித்தனியே ஜகத்ஸ்ருஷ்டி க்ஷமருமானவர்கள் வர்த்திக்கிற திருநாங்கூரில். ... . (உ)

அரு.—இரண்டாம்பாட்டு. (வென்றியித்யாதி) முதற்பாட்டிற் சொன்ன தீவினைகள் போயகலப் பண்ணுகைக்குறுப்பான விரோதிநிரஸநசீலதையையும், எழுலகத்தவர் பணிகைக்கு உபயுக்தமான உதவிகளையும் மேற்பாட்டுக்களிலே அருளிச்செய்யக்கோலி, அதில் கீழ்த்திருமொழியில்(க) "ஆருதசினத்தில்" என்கிறபாட்டிலும் முதற்பாட்டிலும் ப்ரஸ்துதமான நரகநிரஸநத்தையும் அம்ருதமதநத்தையுமருளிச் செய்கிறாரிப்பாட்டிலென்று ஸங்கதி.

"உரமது" என்ற விடத்தில் உத்கர்ஷத்தை யருளிச்செய்கிறார் (இந்த்ராதிகளித்யாதி). குருவானமணி - ஶ்லாக்யமான மணியென்றாய், அர்த்தமருளிச்செய்கிறார் (அவர்களித்யாதி). "குலவி" என்றதுக்கர்த்தம் (கொண்டாடிக்கொண்டு) என்றது. ... ... (உ)

மூ.—உம்பருமிவ் வேழுலகு மேழ்கடலு மெல்லாம்
உண்டபிரா னண்டர்கள் முன் கண்டு மகிழ்வெய்த
கும்பமிகு மதயானை மருப்பொசித்துக் கஞ்சன்
குஞ்சி பிடித்தடித்த பிரான்கோயில் மருங்கெங்கும்
பைம்பொனொடு வெண்முத்தம் பலபுன்னை காட்டப்
பலங்கனிகள் தேன்காட்டப் படவரவேரல்குல்
அம்பனைய கண்மடவார் மகிழ்வெய்து நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
உம்பரும	தேவர்களும்	ஏழ்கடலும்	ஸப்தஸமுத்ரங்களும்
இவ்வேழுலகும்	இந்தஸப்தலோகங்களும்	எல்லாம்	இவையெல்லாவற்றையும்

(க) ௩ - ௯ - அ.

உண்ட — ப்ரளயத்தில்அமுது செய்த
பிரான் — உபகாரகனாய், (க்ருஷ்ணனாய்வந்தவதரித்து)
அண்டர்கள் — இடையர்கள்
கண்டுமகிழ்வெய்த — கண்டுஉகக்கும்படி
முன் — அவர்கள்முன்னே
கும்பமிகு — குடம்போன்றபெரிய மஸ்தகத்தையுடைய
மதயானை — மதமுதிதமானகுவலயாபீடத்தின்
மருப்பு — கொம்பை
ஒசித்து — முறித்து
கஞ்சன் — கம்ஸனுடைய
குஞ்சிபிடித்து — மயிரைப்பிடித்து
அடித்த — அழியச்செய்த
பிரான் — உபகாரகனுடைய
கோயில் — ஸ்த்தானமாய்,
மருங்குஎங்கும் — பக்கமெல்லாம்
பலபுன்னை — பலவானபுன்னைகள் (மொட்டும்பூவுமாய்ப்பூத்துநின்று)
பைம்பொனொடு — அழகியபொன்னையும்
வெள்முத்தம் — வெளுத்தமுத்துக்களையும்கூட்டினாற்போல்
காட்ட — காண்பிக்க,
பலம்கனிகள் — பலாப்பழங்கள்
தேன்காட்ட — மதுசொரிந்துகாட்ட,
படம் — படத்தையுடைய
அரவு — ஸர்ப்பம்போலும்
ஏர் — அழகிய
அல்குல் — நிதம்பத்தையும்
அம்புஅனைய — சரங்கள்போன்ற
கண்மடவார் — கண்களையுமுடைய ஸ்த்ரீகள்
மகிழ்வெய்தும் — ஸந்தோஷிக்கிற

நாங்கூர் அரிமேயவிண்ணகரம் மடநெஞ்சே! வணங்கு. (ங)

வ்யா.—மூன்றும்பாட்டு. (உம்பருமித்யாதி) தேவஜாதியும், இந்த ஏழுவகைப்பட்ட லோகங்களும், இத்தைச்சூழப் போந்திருக்கிற கடல்களேழும், இவையடைய ப்ரளயத்திலே நோவுபடப்புக வயிற்றிலேவைத்து நோக்கின உபகாரகன், க்ருஷ்ணனாய் வந்தவதரித்து, † இடையர்கண்டு ப்ரீதராம்படியாக, குடம்போலே பெரிய மஸ்தகத்தை யுடைத்தாய் மதமுதிதமாயிருந்துள்ள குவலயாபீடத்தினுடைய கொம்பைமுறித்து அநந்தரம் கம்ஸனுடைய மயிரைப் பிடித்துத் தலைகீழாகத்தள்ளி முதுகிலேயறைந்து அவனையழியச் செய்த உபகாரகனுடைய கோயில்.

பரிஸரமடைய. (பைம்பொனொடு வெண்முத்தம் பலபுன்னை காட்ட) புன்னைகளானவை மொட்டும் பூவுமாய்ப்பூத்து நின்றபோது பொன்னிலே முத்தையழுத்தினாற்போலே காட்டாநின்றது; பலாப் பழங்கள் தேன் காட்டாநின்றது; படத்தையுடைத்தான அரவுபோலே † அழகிய அல்குலையுமுடையராய். அம்போடொத்த கண்களையுமுடையரான ஸ்த்ரீகளானவர்கள், †"இன்னபோதின்னது, † இன்னதிலிதின்னதுண்டாம் என்னும் வ்யவஸ்த்தை யின்றிக்கேயிருந்ததீ!" என்று அவற்றைக்கண்டு த்ருப்தைகளாகிற. ... ... (ங)

அ௩.—மூன்ரும்பாட்டு. (உம்பரித்யாதி) கீழ்த்திருமொழியில் (க)"அண்டமும்" என்கிற பாட்டில் ஆபத்ரக்ஷணமும் (உ) "பெண்மைமிகு" என்கிறபாட்டில் ப்ரஸ்துத பூதனா நிரஸநத்தால் அவளையேவின கம்ஸநிரஸநமும் திருவுள்ளத்தில் தோன்றி அவற்றை யிப்பாட்டிலே யருளிச் செய்கிருரென்று முதற்பாட்டோடே ஸங்கதி.

"அண்டர்கள்" என்றதினர்த்தம் (இடையர்) என்றது.

"ஏர்" என்ற தினர்த்தம் (அழகிய) என்றது. "காட்ட-மகிழ்வெய்தும்" என்ற வர்த்தமான நிர்த்தேசத்தால் - எப்போதும் பழுத்து மதுசொரிந்திருக்கு மென்கை பலிக்கையாலே யருளிச்செய்கிருர் (இன்னபோதின்னது) என்று. "புன்னை - பொன் - முத்தம் - காட்ட" என்கையாலே (இன்னதிலின்னது) என்றது. ... ... (௩)

மூ—ஓடாத வாளரியி னுருவமது கொண்டன்
றுலப்பில் மிகு பெருவரத்த விரணியனைப் பற்றி
வாடாத வள்ளுகிரால் பிளந்த வன்றன் மகனுக்
கருள்செய்தான் வாழுமிடம் மல்லிகை செங்கழுநீர்
சேடேறு மலர்ச்செருந்தி செழுங் கமுகம்பாளை
செண்பகங்கள் மணநாறும் வண்பொழிலி னூடே
ஆடேறு வயலாலைப் புகை கமழு நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	ப்ரஹ்லாதனை நிர்ப்பந்திக்கிறகாலத்திலே	உகிரால்	நகங்களால்
ஓடாத	பிற்காலியாத	பிளந்து	(அவன்மார்வை) இருபிளவாம்படி பண்ணி
அது	அப்படிபலிஷ்ட்டமான	அவன்றன்மகனுக்கு	அவன்பிள்ளையான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு
ஆளரியின்உருவம்கொண்டு	நரஸிம்ஹத்தின்வடிவைக்கொண்டு	அருள்செய்தான்	அருளைப்பண்ணின ஸ்வாமி
உலப்புஇல்	ஸங்க்யாரஹிதமான	வாழும்இடம்	வர்த்திக்கிறஸ்தாநமாய்,
மிகுபெருவரத்த	மிகவும்பெரியவரங்களையுடைய	மல்லிகை	மல்லிகைகளும்
இரணியனை	ஹிரண்யனை	செங்கழுநீர்	ரக்தோத்பலங்களும்
பற்றி	பிடித்து	சேடுஏறுமலர்	திரளப்பூத்தபூவையுடைய
வாடாத	வளையாத		
வள்	தீக்ஷ்ணமான		

(க) ௩-௯-௩. (உ) ௩-௯-௬.

செருந்தி	ஸுரபுன்னைகளும்	ஆடுஏறுவயல்	கரும்புஆடுகைக்காக ஏறினவயலில்
செழு	அழகிய	ஆலைப்புகைகமழும்	ஆலைப்புகைபரிமளிக்கிற
கமுகம்பாளை	பாக்குப்பாளைகளும்	நாங்கூர்.—	(௪)
செண்பகங்கள்	செண்பகப்பூக்களும்		
மணம்நாறும்	பரிமளம்கமழுகிற		
வண்பொழிலின்னூடே	அழகியசோலையின் நடுவே		

வ்யா.—நாலாம்பாட்டு. (ஓடாத வித்யாதி) ஹிரண்யனுடைய முருட்டுடலைக் கண்டால் பிற்காஸியாதபடியான நரஸிம்ஹத்தினுடைய வென்னுதல்; அன்றிக்கே, நாட்டில் நடையாடாத நரஸிம்ஹமென்னுதல். (உலப்பில்)அஸங்க்யேயமாய்,†ஓரோவரங்களே முடிவுகாண வொண்ணாதபடியா யிருப்பதாய், வரங்கொடுத்த தேவதைகளுக்குங்கூடக் குடியிருப்பரிதாம்படி பெரியவரத்தையுடைய ஹிரண்யனைப்பற்றி. (வாடாத) †ஹிரண்யனுடைய முருட்டுடலிலே தைத்தால் வளையக்கடவதன்றிக்கே கூர்மை மிக்கிருக்கிற திருவுகிராலே இரண்டுகூறும்படி பிளந்து, † அவன்பக்க லிழவுதீரும்படி "அவன்மகன்" என்று ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே அருளைப் பண்ணினவன் வர்த்திக்கிற தேசம்.

மல்லிகை, செங்கழுநீர், சேடு - திரட்சி. திரளப்பூத்த பூவையுடைத்தான செருந்தி, அழகிய கமுகம்பாளை, செண்பகம். இவை பரிமளத்தைப் புறப்பட விடாநின்றுள்ள அழகிய பொழிலின்நடுவே † ஆடுகைக்காக ஏறின வயலில் ஆலைப்புகையானது கமழுமாயிற்று.

அரு.—நாலாம்பாட்டு. (ஓடாதவித்யாதி) கீழ்த்திருமொழியில் முதற்பாட்டிலும் இரண்டாம்பாட்டிலும் ப்ரஸ்துதமான நரஸிம்ஹாவதாரத்தாலே விரோதிநிரஸநமும் ஆஸ்ரிதனுபத்துக்கு உதவினமையுமருளிச் செய்கிறு ரென்று, இதுக்கும் முதற்பாட்டோடே ஸங்கதி.

"மிகு" என்றதுக்குத்தாத்பர்யம் (ஓரோவித்யாதி). உகிருக்கு வாட்டமாவது - வளைகையென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஹிரண்யனுடைய வித்யாதி). (அவன்பக்கலிழவு தீரும்படி) என்றது - ஹிரண்யன் தன்னருளுக்கு விஷய மாகாமல் முடிந்தானே! என்னும் திருவுள்ளத்தில் குறைதீரும்படியென்றபடி.

(ஆடுகைக்காக) - கரும்பாடுகைக்காக. ... ... (௪)

மூ.—கண்டவர்தம் மனம்மகிழ மாவலிதன் வேள்விக்
களவில்மிகு சிறுகுறளாய் மூவடியென் றிரந்திட்
டண்டமு மிவ்வலைகடலு மவனிகளு மெல்லாம்
அளந்தபிரா னமருமிடம் வளங்கொள் பொழிலயலே
அண்டமுறு முழவொலியும் வண்டினங்க ளொலியும்
அருமறையி னொலியும் மடவார் சிலம்பினொலியும்
அண்டமுறு மலை கடலி னொலி திகழு நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே. (ரு)

பதம்.	உரை.
கண்டவர்தம்மனம்	கண்டவரெல்லாருடையநெஞ்சகம்
மகிழ	ஆநந்திக்கும்படி
மாவலிதன்வேள்வி	மஹாபலியஜ்ஞவாடத்திலே
களவுஇல்	க்ருத்ரிமமில்லையென்றுதோற்றுமவனாய்
மிகுசிறுகுறளாய்	வடிவில் மிகவும் சிறுத்தவாமநனாய்க்கொண்டு
மூவடியென்று	மூன்றுஅடிகள்தரவேணும்என்று
இரந்திட்டு	யாசித்து
அண்டமும்	ஆகாசத்தையும்
இ	இவ்வருகான
அலைகடலும்	அலையெறியாநின்றுள்ளஸாகரங்களையும்
அவனிகளும்	ஸப்தத்வீபமானபூமிகளையும்
எல்லாம்	இவையெல்லாவற்றையும்
அளந்த	அநாயாஸேந அளந்துகொண்ட
பிரான்	உபகாரகன்
அமரும்	நித்யவாஸம்பண்ணுகிற
இடம்	தேசமாய்,
வளங்கொள்	ஸம்ருத்தியையுடைத்தான
பொழில்அயலே	பொழிலின்அருகே
அண்டம்உறும்	ஆகாசத்திலேசென்று வ்யாபரிக்கிற
முழவுஒலியும்	வாத்யகோஷங்களும்
வண்டினங்கள் ஒலியும்	மதுபானம் பண்ணிக்களித்துப்பாடுகிற வண்டுகளின் த்வநியும்
அருமறையின் ஒலியும்	துர்க்ரஹவேதகோஷமும்
மடவார் சிலம்பின்ஒலியும்	(ஆகிற) ஸ்த்ரீகளுடைய நூபுரத்வநியும்
அண்டம்உறும்	அண்டபித்தியிலே சென்று
அலை	அலையெறிகிற
கடலின்ஒலி	ப்ரளயார்ணவ கோஷம்போலே
திகழும்	விளங்குகிற
நாங்கூர்.—	(ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (கண்டவர்தம் மனம்மகிழ) அநுகூல ப்ரதிகூல விபாகமின்றிக்கே கண்டவர்கள் நெஞ்சானது மகிழும்படியாக, மஹாபலியுடைய யஜ்ஞவாடத்திலே, † "இவன் தேவகார்யம் செய்கிறான்" என்று தோற்றுதபடியாக "நாட்டில் வாமநர்கள் திருவுலகளந்தருளின விடம்" என்னும்படியான வாமநவேஷத்தைப் பரிக்ரஹித்து, "எனக்கு மூன்றடிவேணும்" என்று அர்த்தித்து,

ஆகாசத்தையும் அலையெறியா நின்றுள்ள கடலையும் த்வீபங்களையும் எல்லாம் அநாயாஸேந அளந்துகொண்ட உபகாரகன் நித்யவாஸம் பண்ணுகிற தேசம்.

(வளமித்யாதி) ஸம்ருத்தியை யுடைத்தாயிருக்கிற பொழிலி †னருகே, ஆகாசத்தி லவகாசமுள்ள விடமெங்கும்போய் வ்யாபரிக்கிற †வாத்யகோஷமும், மதுபாநம் பண்ணுகிற வண்டுகளினுடைய த்வநியும், வேதகோஷமும், ஆடுகிற ஸ்த்ரீகளினுடைய சிலம்பொலியும் அண்டபித்தியிலே சென்று அலையெறிகிற ப்ரளயார்ணவ கோஷம்போலே விளங்கா நின்றுள்ள. ... ... (௫)

அரு.—அஞ்சாம்பாட்டு. (கண்டவரித்யாதி) கீழ்த்திருமொழியில் நரஸிம்ஹாவதார மநுபவித்தவர் ராமாவதாரத்தில் போயநுபவித்தார், அப்படியே இங்கும் நரஸிம்ஹாவதாராநுஸந்தாநாநந்தரம், ராமாவதாரத்தில் போகவொருப்பட, நடுவே வழிபறிக்காரரைப்போலே களவில் மிக்க குறள் வந்து நெஞ்சை வஞ்சிக்க, அங்கே யகப்பட்டநுபவித்துக்கொண்டு தேவர்க்குதவினதும் எல்லார்க்கு முதவித் திருவடிகளைப் பரப்பினமையும் அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி. ஆகையிறே "கண்டவர்தம் மனம் மகிழ" என்று தன்னெஞ்சு அபஹ்ருதமானத்தையும் ஸூசிப்பித்தது.

களவில் - களவில்லை என்னும்படி தோற்றுமவனாய், மிகவும் சிறிசாய்க் குறளான வேஷத்தையுடையனாய் என்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி பலிதார்த்தமருளிச்செய்கிறார் (இவனித்யாதி). லோகத்தில் வாமநர்களெல்லாரும் த்ரிவிக்ரமனோடொப்பாரென்னும்படி மிகவும் குள்ளே என்றபடி.

"அயல்" என்றதினர்த்தம் (அருகே) என்றது. "முழவொலி" என்றதினர்த்தம் (வாத்யகோஷம்) என்றது. ... ... (௫)

மூ.—வாணெடுங் கண் மலர்க் கூந்தல் மைதிலிக்கா விலங்கை
மன்னன் முடி யொருபதும் தோளிருபதும் போயுதிர
தாணெடுந் திண் சிலைவளைத்த தயரதன்சேயென்றன்
தனிச்சரண் வானவர்க்கரசு கருதுமிடம் தடமார்
சேணிடங்கொள் மலர்க்கமலம் சேல் கயல்கள் வாளை
செந்நெலொடு மடுத்தரிய உதிர்ந்த செழுமுத்தம்
வாணெடுங்கண் கடைசியர்கள் வாருமணிநாங்கூர்
அரிமேயவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை,
வாள்	வாள்போலேகூரியதா[ய்	மலர்	பூஅணிந்த [மையு
நெடு	நீண்ட	கூந்தல்	மயிர்முடியையுமு
கண்	திருக்கண்களையும்	மைதிலிக்கா	பிராட்டிக்காக

இலங்கைமன்னன்	லங்காதிபனான ராவணனுடைய
ஒருபதுமுடியும்	பத்துத்தலைகளும்
இருபதுதோளும்	இருபதுதோள்களும்
போய்உதிர	உதிர்ந்துபோம்படி
தாள்	பூட்டப்பட்டநாணையுடைத்தாய்
நெடு	நீண்ட
திண்	த்ருடமான
சிலை	வில்லை
வளைத்த	வளையப்பண்ணின
தயரதன்சேய்	தசரதன்பெற்றமகனாய்
என்றன்	எனக்கு
தனிச்சரண்	அத்விதீயரக்ஷகனாய்
வானவர்க்கரசு	நித்யஸூரிநிர்வாஹகனானவன்
கருதும்இடம்	விரும்பி வர்த்திக்கிற ஸ்தாநமாய்,
தடம்ஆர்	பொய்கைகள்நிறைந்திருப்பதாய்
சேண்இடம் கொள்	ஆகாசமுள்ளவிடமெங்கும்ஓங்கியிருக்கிற
மலர்	பூக்களையுடைத்தான
கமலம்	தாமரையையும்
சேல்கயல்கள் வாளை	சேல் சயல் வாளை என்னும் மத்ஸ்யங்களையும்
செந்நெலொடும்	செந்நெல்லோடே
அடுத்து அரிய	அடுத்துப்பிடித்து அறுக்க
உதிர்ந்த	அவற்றினின்றுமுதிர்ந்த
செழு	அழகிய
முத்தம்	முத்துக்களை
வாள்	வாள்போலேகூரிய
நெடு	நீண்ட
கண்	கண்களையுடைய
கடைசியர்கள்	கர்ஷகஸ்த்ரீகள்
வாரும்	திரட்டியெடுக்கிற
அணி	ஸுந்தரமான

நாங்கூர். ——— (௬)

வ்யா.—ஆறும்பாட்டு. (வாளித்யாதி) ஒளியைச்சொல்லுதல்; வாள்போலேயிருக்கிற நெடிய திருக்கண்களையும் மலரையுடைத்தான மயிர்முடியையுமுடைய ஸ்ரீஜநகராஜன்திருமகளுக்காக, லங்கைக்கு நிர்வாஹகனாயிருக்கிறவனுடைய பத்துத்தலையும் இருபதுதோளும் உதிரும்படியாகத்,†தாளையுடைத்தாய் நெடிதாய்த் திண்ணிதாயிருக்கிற வில்லை வளைத்த தசரதாத்மஜன். சேய் - பிள்ளை. (என்றன்தனிச்சரண்) (௧) "தயரதற்கு மகன்றன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" என்னுமாபோலேகாணுமிருப்பது. *அயர்வறுமமரர்களதிபதி வர்த்திக்கிற ஸ்தாநம்.

† பொய்கைகள் நிறைந்திருப்பதாய் ஆகாசமுள்ளவிடமெங்கும் வளர்ந்திருக்கிற மலரையுடைத்தான தாமரை, சேல், கயல்கள், வாளை, இவற்றைச் செந்நெலோடே அடுத்தறுக்க, உதிர்ந்த † அழகிய முத்துக்களைக் கதிர்பொறுக்கவிழிந்தவர்கள் வாருவர்களாயிற்று. ()

அரு.—ஆறும்பாட்டு. (வாளித்யாதி). நடுவேவழிபறித்தவர் மாண்வேஷத்தை யநுபவித்தவநந்தரம், "மின்னனையநுண்மருங்குல்" என்கிற பாட்டிலநுபவித்த ராமாவதாரத்தை அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

(௧) தி - வாய் - ௩ - ௬ - அ.

"தாள்" என்று - பூட்டாய், பூட்டப்பட்ட நாணைச்சொல்லுமென்று கொள்வது.

(பொய்கைகள் நிறைந்திருப்பதாய்) என்றது-பொய்கை யெல்லாம் வ்யாபித்திருப்பதாயென்று தாமரைக்கு விசேஷணம். முத்துக்கள் தாமரையிலும் மீன்களிலு முண்டென்னும் ப்ரஸித்தியைப்பற்ற வருளிச் செய்கிறார் (அழகிய வித்யாதி). ... ... (௬)

மூ.—தீமனத்தான்கஞ்சனது வஞ்சனையில் திரியும்
தேனுகனும் பூதனைதன்னாருயிரும் செகுத்தான்
காமனைத்தான் பயந்த கருமேனியுடை யம்மான்
கருதுமிடம் பொருது புனல் துறைதுறை முத்துந்தி
நாமனத்தால் மந்திரங்கள் நால்வேத மைந்து
வேள்வியோடாறங்கம் நவின்று கலை பயின்றங்
காமனத்து மறையவர்கள் பயிலுமணி நாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தீமனத்தான்	பொல்லாதநெஞ்சையுடையனான [லே	முத்துஉந்தி	முத்துக்களைத்தள்ளா நிற்பதாய்,
கஞ்சனது	கம்ஸன் ப்ரேரணையா	நா	நாவாலும்
வஞ்சனையில்	க்ருத்ரிமவேஷங்கொ	மனத்தால்	மநஸ்ஸாலும் [ம்
திரியும்	திரிகிற [ண்டு	மந்திரங்கள்	பகவந்மந்த்ரங்களையு
தேனுகனும்	தேனுகாஸுரனுடையவும்	நால்வேதம்	சதுர்வேதங்களையும்
பூதனைதன்	பூதனையுடையவும்	ஐந்துவேள்வியோடு	பஞ்சமஹாயஜ்ஞங்களையும்
ஆர்உயிர்	நற்சீவனை	ஆறுஅங்கம்	ஷடங்கங்களையும்
செகுத்தான்	முடித்தவனாய்,	நவின்று	அப்யஸித்து
காமனை	ஸர்வலோகஸுந்தரனான மந்மதனை	கலைபயின்று	மற்றுமுள்ளசாஸ்த்ரங்களையும்ஓதி
பயந்த	பெற்ற	அங்குஆம்மனத்து	பகவத் விஷயத்துக்குத் தகுதியான பரிசுத்தாந்தக்கரணத்தையுடையரான
கருமேனிஉடை அம்மான்	கறுத்ததிருமேனியையுடையனான ஸ்வாமி	மறையவர்கள்	வைதிகர்
கருதும்இடம்	விரும்பிவர்த்திக்கிற தேசமாய்	பயிலும்	நெருங்குகையினாலவ [ந்த
பொருதுபுனல்	திரையோடுதிரை பொராநின்றுள்ள புனலானது	அணி	அழகையுடைய
துறைதுறை	ப்ரதிதுறையிலும்	நாங்கூர். ———	(௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (தீமனத்தானித்யாதி) தீதான நெஞ்சையுடையனாய்-†பகவத்தத்வம் ஓரிடத்திலேயுண்டென்னப்பொறாத நெஞ்சையுடைய கம்ஸன்; அவனுக்குறுப்பாய் க்ருத்ரிமத்தாலே நலிவா

ளைகத்திரிந்த தேனுகன், பூதனை, அவர்களைமுடித்துப்பொகட்டவன். அழகில்வந்தால் காமனுக்கு முத்பாதகனாய், அவ்வளவல்லாதபடி ஸ்ரமஹரமான திருமேனியையுடையனாயிருக்கிற ஸர்வேஸ்வரன் விரும்பி வர்த்திக்கிற தேசமாயிற்று.

திரையோடு திரை பொராநின்றுள்ள புனலானது துறைதோறும்துறைதோறும் முத்துக்களைத் தள்ளாநிற்பதாய், நாவாலும் மநஸ்ஸாலும், பகவந்மந்த்ரங்கள், நாலுவகைப்பட்ட வேதம், பஞ்சமஹாயஜ்ஞம், அங்கங்கள் துடக்கமானவற்றைப் பலகாலுமப்யஸித்துப் †பரிசுத்தாந்தஃகரணர் நெருங்குகையால்வந்த அழகையுடைய. (எ)

அநு.—ஏழாம்பாட்டு. (ஸ்ரீமனத்தானித்யாதி) கீழ் ராமாவதாரத்தில் போனவரையும் வசீகரிக்கும்படியான விரோதிநிரஸந பரம்பரையுள்ளது க்ருஷ்ணாவதாரத்திலேயாகையாலே, கீழ் "கஞ்சன் குஞ்சி பிடித்தடித்த பிரான்" என்று சொன்னத்தால் த்ருப்திபிறவாமையாலே, இனி மேற்பாட்டுக்களி லெல்லாம் க்ருஷ்ணாபதாநங்களை வாய்வந்தபடியே பேசியநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

விவரணம் (பகவத்தத்வமித்யாதி.)

அங்கு - ஆமனத்து - பகவத் விஷயத்துக்காயிருக்கிற மனத்தென்றாய், அதினர்த்தமருளிச் செய்கிறார் (பரிசுத்தாந்தஃ கரணர்) என்று. ... (எ)

மூ.—கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்த காளை
காமருசீர் முகில்வண்ணன்காலிகள் முன் காப்பான்
குன்றதனால் மழை தடுத்துக் குடமாடு கூத்தன்
குலவுமிடம் கொடி மதிள்கள் மாளிகை கோபுரங்கள்
துன்றுமணி மண்டபங்கள் சாலைகள் தூமறையோர்
தொக்கீண்டித் தொழுதியொடு மிகப் பயிலும் சோலை
அன்றலர்வாய் மதுவுண்டங் களிமுரலு நாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கன்றதனால்	வத்ஸாஸுரனாலே	முகில்வண்ணன்	காளமேகம்போன்ற வடிவழகையுடையனாய்,
விளவுஎறிந்து	விளாவாய்நின்ற அஸுரனையெறிந்து		
கனி	அதின்பழத்தை	முன்	முன்னே
உதிர்த்த	உதிரும்படிபண்ணின	காலிகள்	பசுக்களை
காளை	ருஷபத்தைப்போன்றவனாய்,	காப்பான்	ரக்ஷிக்கைக்காக
காமரு	எல்லாராலும்விரும்பப்பட்ட	குன்றதனால்	பர்வதத்தாலே
சீர்	அழகிய	மழை	வர்ஷத்தை

தடுத்து	நிரோதித்து	தூ	பரிசுத்தரான
குடமாடுகூத்தன்	குடக்கூத்தாடினவன்	மறையோர்	ப்ராஹ்மணர்
குலவும்இடம்	கொண்டாடிவர்த்திக்கும்தேசமாய்,	தொக்குஈண்டி	கூடித்திரளுகையாலுண்டான
கொடி	த்வஜங்களையுடைத்தான்	தொழுதியொடு	ஆரவாரத்தால்மிக்கிருப்பதாய்
மதிள்கள்	ப்ராகாரங்களையும்	மிகப்பயிலும்	மிகவும்நெருங்கின
மாளிகை	மாளிகைகளையும்	சோலை	சோலையிலுண்டான
கோபுரங்கள்	கோபுரங்களையும்	அன்றுஅலர்வாய்	அப்போதுவிகஸித்தசெவ்விப்பூவில்
துன்று	நெருங்கின	மதுஉண்டு	மதுவைப்பாநம்பண்[ணி
மணி	மணிமயமான	அங்கு	அவ்விடத்தில்
மண்டபங்கள்	மண்டபங்களையும்	அளி	வண்டுகள்
சாலைகள்	யாகசாலைகளையுமுடைத்தாய்	முரலும்	காநம்பண்ணுகிற
		நாங்கூர்.—	(அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (கன்றதனாலித்யாதி) கன்றாய்நின்ற அஸுரனைக்கொண்டு விளாவாய்நின்ற அஸுரனை முடியும்படி பண்ணி லீலாரஸமநுபவித்த செல்வப்பிள்ளை; காமருவப்படுவதாய்- ஆசைபடப்படுவதான, சீருண்டு - குணம், அத்தையும் ஶ்ரமஹரமாயிருக்கிற திருமேனியையுமுடையவன், பசுக்களை ரக்ஷிக்கைக்காக கோவர்த்தநத்தாலே மழைதடுத்து, மன்றிலே ஸர்வாநுபவயோக்யமாம்படி குடக்கூத்தாடினவன் கொண்டாடி வர்த்திக்கிறதேசம்.

கொடியையுடைத்தான மதிள்கள், மாளிகைகள், கோபுரங்கள், நெருங்கினமணிகளையுடைத்தான மண்டபங்கள், † சாலைகள் இவற்றையுடைத்தாய்; ப்ராஹ்மணர்கூடித்திரண்ட ஆரவாரத்தால் மிக்கிருப்பதாய், சோலையிலுண்டான செவ்விப்பூவிலே மதுபாநம்பண்ணி வண்டுகள்பாடாநிற்பதுமான. ... ... (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (கன்றித்யாதி) "விளங்கனியை" என்றது பின்னாட்டி, பின்னும் சில கூட்டியநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

சாலைகள் - யஜ்ஞசாலைகள். ... ... (அ)

மூ.—வஞ்சனையால் வந்தவள்தனுயிருண்டு வாய்த்த
தயிருண்டு வெண்ணெயமுதுண்டு வலிமிக்க
கஞ்சனுயிரதுவுண் டிவ்வுலகுண்ட காளை
கருதுமிடம் காவிரி சந்தகில் கனகமுந்தி
மஞ்சுலவு பொழிலூடும் வயலூடும் வந்து
வளங்கொடுப்ப மாமறையோர் மாமலர்கள்தூவி
அஞ்சலித் தங்கரி சரணென் றிறைஞ்சு மணி நாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்கு மட நெஞ்சே. (கூ)

பதம்.	உரை.
வஞ்சனையால்	க்ருத்ரிமவேஷங்கொண்டு
வந்தவள்தன்	வந்தபூதனையுடைய
உயிர்	ப்ராணனை
உண்டு	க்ரஸித்து,
வாய்த்த	அருகேயிருந்த [ணி,
தயிர்உண்டு	தயிரைப்பானம்பண்
வெண்ணெயமுதுஉண்டு	வெண்ணெயைஅமுதுசெய்து,
வலிமிக்க	மிடுக்குமிக்கிருந்த
கஞ்சன்உயிரது	கம்ஸனுடையப்ராண
உண்டு	பக்ஷித்து [னை
இவ்வுலகு	இந்தலோகத்தை
உண்ட	திருவயிற்றிலேவைத்தருளின
காளை	யுவாவானவன்
கருதும்இடம்	விரும்பிவர்த்திக்குமிடமாய்,
காவிரி	காவேரிநதியானது
சந்து	*சந்தனமரங்களையும்
அகில்	அகருவ்ருக்ஷங்களையு
கனகம்	ஸ்வர்ணத்தையும் [ம்

பதம்.	உரை:
உந்தி	தள்ளிக்கொண்டுவந்து
மஞ்சுஉலவுபொழிலூடும்	மேகத்தளவும்ஓங்கினசோலையிலும்
வயலூடும்	வயலினுள்ளும்
வந்து	ப்ரவேசித்து [க
வளம்கொடுப்ப	ஸம்பத்தையுண்டாக்
மாமறையோர்	மஹாவேதிகளானப்ராஹ்மணர்
மாமலர்கள்தூவி	ஶ்லாக்யமான புஷ்பங்களைஸமர்ப்பித்து
அங்குஅஞ்சலித்து	அங்கேஅஞ்சலிபண்ணிக்கொண்டுநின்று
அரிசரண்என்று	ஹரீ! உன்திருவடிகளேசரணம்என்று
இறைஞ்சும்	ஸ்தோத்ரபூர்வகமாகஆஶ்ரயிக்கிற [ல்
அணிநாங்கூர்	அழகியதிருநாங்கூரி
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே.	(௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (வஞ்சனையித்யாதி) க்ருத்ரிமத்தையுடையளாய்வந்த பூதனையுயிரையுண்டு, கிட்டினதயிரையமுதுசெய்து, வெண்ணெயமுதுண்டு - வெண்ணெயையமுதுசெய்து, பெருமிடுக்கனாயிருக்கிற கம்ஸனுடைய உயிரை உண்டு. †அநுகூலஸ்பர்சமுடைய த்ரவ்யத்தோடு ப்ரதிகூலருடைய ப்ராணன்களோடு வாசியற்றிருந்தபடி. (இவ்வுலகுண்ட) வெண்ணெயமுதுசெய்தவோபாதியாயிற்று, பூமியையெடுத்து வயிற்றிலே வைத்ததுவும்.

(காவிரியித்யாதி) காவிரியானது, சந்தநம், அகில், பொன், இவற்றைக்கொடுவந்துதள்ளி, மேகபதத்தளவும் செல்லவோங்கினபொழிலூடும் வயலுள்ளிட்டும்வந்து நிரவதிகஸம்பத்தையுண்டாக்க, ஆற்றுவரவைக்கண்டு ப்ராஹ்மணர் புஷ்பங்களைத்தூவி அஞ்சலிபண்ணி "ஸர்வேஶ்வரன் நம்முடைய ஜீவநத்துக்குறுப்பாக வரவிட்டான்" என்று அவனை ஆஶ்ரயித்து வர்த்திக்கிற. ... (௯)

அநு.—ஒன்பதாம்பாட்டு. (வஞ்சனையித்யாதி). "ஆய்ச்சியர் வைத்த தயிர் வெண்ணெ யுளங்குளிர வமுதுசெய்து" என்றது பின்னாட்டி உண்ட ஊணையெல்லாம் சொல்லி யநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

தயிர் வெண்ணெய்களோடொக்க உயிர்களை ஊணாகச்சொல்லுகையெங்ஙனே யென்ன வருளிச்செய்கிறார் (அநுகூலேத்யாதி). ... (௬)

மூ.—சென்று சினவிடையேழும் படவடர்த்துப்பின்னை
செவ்வித்தோள் புணர்ந்துகந்த திருமால்தன் கோயில்
அன்றயனுமரன்சேயுமனையவர்கள் நாங்கூர்
அரிமேயவிண்ணகரமமர்ந்த செழுங்குன்றை
கன்றி நெடு வேல்வலவன் மங்கையர்தம் கோமான்
கலிகன்றி யொலிமாலை யைந்தினொடுமூன்றும்
ஒன்றினொடு மொன்றுமிவை கற்று வல்லா ருலகத்
துத்தமர்கட்குத்தமராயும்பருமாவர்களே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
சென்று	தானேசென்று [ய
சினம்	க்ரௌர்யத்தையுடை
ஏழுவிடையும்	ஏழுருஷபங்களையும்
படஅடர்த்து	முடியும்படிபொருது
பின்னை	நப்பின்னைப்பிராட்டியுடைய
செவ்வித்தோள்	அழகியதோளோடே
புணர்ந்து	ஸம்ஶ்லேஷித்து
உகந்த	ஸந்தோஷித்த
திருமால்தன்	ஶ்ரிய:பதிவர்த்திக்கிற
கோயில்	ஸ்த்தாநமாய்,
அயனும்	ப்ரஹ்மாவையும்
அரன்சேயும்	ருத்ரன்பிள்ளையான ஸுப்ரஹ்மண்யனையும்
அனையவர்கள்	ஒத்தசாந்தியையும் அழகையுமுடையவர்கள்வர்த்திக்கிற
நாங்கூர்	திருநாங்கூரில்
அரிமேயவிண்ணகரம்	அரிமேயவிண்ணகரத்தில் [கிற
அமர்ந்த	நித்யவாஸம்பண்ணு
செழுங்குன்றை	அழகியபர்வதம்போன்றஸ்வாமியை,
கன்றிநெடுவேல்வலவன்	கறைமாறுதநெடியவேலைக்கையிலேயுடையராய்
மங்கையர்தம் கோமான்	திருமங்கையிலுள்ளார்க்குத்தலைவராய்

பதம்.	உரை.
கலிகன்றி	கலிவைரியான ஆழ்வார் கவிபாடின
ஒலிமாலை	ஒலியுடையதொடையான
ஐந்தினொடு	(க்ருஷ்ணபதாநங்கள் விஷயமான)ஐந்து பாட்டும்
மூன்றும்	நரஸிம்ஹவாமநராமாபதாநங்கள்விஷயமானமூன்று பாட்டும்
ஒன்றினொடும்	அர்ச்சாவதாரபரமானமுதற்பாட்டும்
ஒன்றும்	பலஶ்ருதியானஇப்பாட்டும்
இவை	ஆகஇப்பத்துப்பாட்டுக்களையும்
கற்று	அப்யஸித்து
வல்லார்	அர்த்ததர்சநம்பண்ணவல்லவர்கள்
உலகத்து	இஹலோகத்திலே
உத்தமர்கட்குஉத்தமராய்	வைஷ்ணவர்களுக்குத்தலைவராய் (பின்பு)
உம்பரும் ஆவர்கள்	நித்யஸூரிகளோடு ஒருகோவையுமாவர்கள். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (சென்றித்யாதி) அவைகின்றவிடத்திலே தானே சென்று, சினத்தையுடைத்தாயிருக்கிற ருஷபங்களேழையும் முடியும்படி அடர்த்து, நப்பின்னைப்பிராட்டியுடைய செவ்வியையுடைத்தான தோளோடே அணைந்துகந்த ஸ்ரீய:பதி வர்த்திக்கிற கோயில். (அன்றித்யாதி) சாந்திக்கு ப்ரஹ்மாவும், அழகுக்கு ஸுப்ரஹ்மண்யனும் ஒப்பாம்படியிருக்கிறவர்கள் வர்த்திக்கிற திருநாங்கூரில் அரிமேயவிண்ணகரமமர்ந்தசெழுங்குன்றைக்கவிபாடிற்று. (கன்றிநெடுவேல்) சத்ருசரீரங்களிலே தைத்துக் கறைகழுவவு மவஸரமின்றிக்கேயிருக்கிற வேலை ஆயுதமாகவுடையராய், திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரான ஆழ்வாரருளிச்செய்த ஒலியையுடைத்தான தொடை†எட்டும்†இரண்டும் பத்தானவிவற்றைஅப்யஸிக்கவல்லவர்கள், இஹலோகத்திலே வைஷ்ணவர்கள்;(க)"பயிலும்திருவுடையார் எவரேலும் - எம்மையாளும் பரமரே" என்னும்படி அவர்களுக்குத் தலைவராய், பின்னை உம்பருமாவர்கள் - திருவடி, திருவநந்தாழ்வானோடே ஒரு கோவையாகப்பெறுவர். ... ... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—நிகமத்தில், தந்திருவுள்ளத்தை முன்னிட்டுச்சொன்ன க்ருஷ்ணாவதாரங்கள் விஷயமான ஐந்துபாட்டையும், நரஸிம்ஹ வாமந ராமாவதாரங்கள் விஷயமான மூன்றுபாட்டையும், விபவவிஷய்த்வாவிசேஷேண க்ரோடீகரித்து, (எட்டும்) என்றது. ப்ரஸ்துதமான அர்ச்சாவதாரபரமான முதற்பாட்டையும் பலஶ்ருதியுமாகப் பிரித்தருளிச் செய்தவற்றை ப்ரதிபாத்ய விஷயப்ரதிபாதகதயா க்ரோடீகரித்து (இரண்டும்) என்றது. இங்ஙனன்றாகில், (பத்தானவிவற்றை) என்றால் மூலஸ்த்தபரிகணநையிலருமை யில்லையிறே. ஆக ஆழ்வாருமிவரும் ஸாபிப்ராயமாக இங்ஙன் ப்ரயோகித்தார்களென்னத் தட்டில்லை. ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்து பத்தாந் திருமொழி முடிந்தது.

ஆக, திருமொழி ௩௦ - க்கு, பாட்டு ௩௦௦.

(க) தி - வாய் - ௩ - எ - க.